N14·4
162059

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

# வைத்திய கலாநிதி

ஒரு மாதாந்தர வைத்திய—சுகாதாரப் பத்திரிகை.

# THE VAIDYA KALANIDHI

**A Tamil Monthly Journal of Medicine, Hygiene and Sanitation.**


EDITED BY

**Ayurveda Bhushan**

**Pandit M DURAISWAMI AIYANGAR,**

Diplomæd Ayurvedic Doctor; Senior Physician, S. K. P. D. Hospital;
Author of Sarngadhara Samhita, Ashtangahridaya,
Kadambari, Meghasa (in Tamil) etc., etc.



நான்காம் புஸ்தகம்.

[நள ௵ ஆவணி ௴ முதல் பிங்கள ௵ ஆடி ௴ வரையில்.]

## Vol. IV.

(From September 1916 to August 1917.

MADRAS:
The "Vaidya Kalanidhi" Office.
1917.



[*All Rights Reserved.*]

162069


## சார்ங்கதர ஸம்ஹிதை.

### பிராசீன ஸம்ஸ்கிருத வைத்தியக் கிரந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

இப்புஸ்தகத்தின் விசேஷங்கள் :—

1. ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேதஸம்பந்தமான விஷயங்களைச் சுருக்கமாக அறிய விரும்புபவருக்கு இப்புஸ்தகம் மிக்க உபயோககரமாயிருக்கும்.

2. முதன்முதல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழில் வெளியான ஆயுர்வேத வைத்தியநூல் இச்சார்ங்கதரஸம்ஹிதையே.

3. இதில் ஆயுர்வேத ஸம்பந்தமான பரிபாஷைகளும், ரோகங்களின் அட்டவணையும், சூர்ணம், லேஹ்யம், தைலம், கிருதம், ஆஸவம், அரிஷ்டம், பஸ்மம், குளிகைகள் முதலிய பலவிதமான ஔஷதமுறைகளைச் செய்யும் விதங்களும், ஸ்நேஹநம், ஸ்வேதநம், விரேசகம், வஸ்தி, வாஜீகரணம் முதலிய அநேக வகையான சிகித்ஸாக்ரமங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

4. ஸம்ஸ்கிருத சார்ங்கதர ஸம்ஹிதையிலுள்ள விஷயங்களில் ஒவ்வொரு பதமும் விடாமல் எளிய தமிழ்வாசகத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

5. ஸம்ஸ்கிருத வைத்திய பரிபாஷைமுதலியவற்றை அனைவரும் அறியுமாறு நன்கு விளக்குவதற்கு ஒவ்வொரு பக்கத்திலும் விரிவாக டிப்பணியும் எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது.

6. ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒவ்வொரு விஷயத்திற்கும் பெரிய எழுத்துக்களில் தலையங்கங்கள் போடப்பட்டிருப்பதுடன், இதிலடங்கிய எவ்விஷயத்தையும் உடனே பார்ப்பதற்கு உபயோகமாகும்படி விஷய அகராதியும் விவரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

7. இதில் அடங்கிய விஷயங்களைக் கொண்டும் அச்சிடப்பட்டுள்ள மாதிரியைக்கொண்டும், பைண்டின் அழகைக்கொண்டும் இதை ஒவ்வொருவரும் தற்காலத்திற்கு இன்றியமையாத புஸ்தகமென்றே மதிப்பார்கள்.

வைத்தியகலாநிதி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 2—8—0.
பிறருக்கு விலை ரூ. 3—0—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேபேரி போஸ்ட், மதராஸ்.


# INDEX

(FOR FOURTH VOLUME).

## ORIGINAL ARTICLES.


| ARTICLES. | | CONTRIBUTORS. | PAGE. |
|---|---|---|---|
| Apples as a Food | ... | M. S. Aiyangar, Medical Practitioner ... | 172 |
| Are Plants Injurious in the Houses? | ... | K. A. Ranganatham, Medical Practitioner ... | 111 |
| Ayurveda is not a Mass of Secret Remedies | ... | A. Lakshmipathi, B.A., M.B. & C.M. ... | 101 |
| Beware of Flies | ... | A. B. Olson, M.D., D.P.H. ... | 188 |
| Cat as a Disease Carrier | ... | R. Narayanan, L.M. & S. ... | 121 |
| Cholera | ... | T. R. Lakshmana Perumal Pillai, District Medical Officer ... | 137 |
| Common Sense and Consumption | ... | R. Narayanan, L. M. & S. ... | 185 |
| Dental Cleanliness | ... | T. K. Kuppuswami Aiyangar, L.M.P. ... | 204 |
| Diagnosis of Diseases | ... | Ayurveda Bhushana N. Madhava Menon | 5 |
| Diet for Brain Workers | ... | D. Somasundaram, Medical Practitioner | 207 |
| Epilepsy | ... | A. Lakshmipathi, B.A., M.B. & C.M. ... | 21 |
| Epilepsy and its Treatment | ... | G. Dakshinamurthi, Medical Practitioner | 48 |
| Fasting and its Therapeutic Uses. | ... | K. Ramaswami, Medical Practitioner ... | 110 |
| German Measles | ... | G. Simmins, M.B., M.R.C.S. ... | 174 |
| Gurjon Oil and its Uses | ... | Sarasi Lal Sarkar, Civil Surgeon .. | 153 |
| Habits and their Effects | ... | T. A. Agastya Sarma, | 1, 26, 44, 63, 84, 139, 169, 186 |
| How to Feed Children | ... | S. Muthulakshmi Ammal, M.B. & C.M. ... | 201 |
| How to Rid the House of Flies | ... | M. Ramakrishnaiyar, Medical Practitioner. | 7 |
| How to Solve the Alcoholic Problem | ... | V. Subrahmanyam, Medical Practitioner. | 143 |
| Medical Registration Act | ... | Y. Narayanaiyar, L.M. & S. ... | 90 |
| Prevention of Consumption | ... | Major, F. F. Elves, C.I.E., I.M.S. ... | 51 |
| Prevention of Infantile Paralysis | ... | R. Narayanan, L.M. & S. ... | 61 |
| The Dietetic Value of Orange | ... | V. Ramanjachari, Medical Practitioner . | 66 |
| The Diet of Students in Japan | ... | M. S. Aiyangar, Medical Practitioner ... | 9 |
| The Government and the Indigenous Systems of Treatment | ... | Parasurama Sarma, Medical Practitioner ... | 29 |
| The Indigenous Drugs of India | ... | Kunj Behari Lal Varma, L. M. P. ... | 41 |
| Theory of Tri-Doshas | ... | T. A. Agastya Sarma, Physician and Surgeon ... | 103, 122 |

| | | |
|---|---|---|
| The Practice of Clean Clothing | K. Srinivasa Aiyar, Ayurvedic Doctor | 31 |
| The Progress of Medicine | T. W. Musgrovee, M.D. | 126 |
| The Pulse | K. A. Ranganatham, Medical Practitioner | 157 |
| The Way of Sound Sleep | W. R. Rilay, M. D. | 155 |
| Why Should Local Boards Encourage Ayurveda | A. Lakshmipathi, B.A., M.B. & C.M. | 81 |


## LEADING ARTICLES.


| | PAGE. |
|---|---|
| Animal Heat | 113 |
| Appendicitis | 145 |
| Ayurvedic System of Theory on Consumption and its Treatment | 32 |
| Captain Russel on Milk Supply | 12 |
| Castor Oil Preparation | 92 |
| Correspondence 17, 38, 57, 77, 98, 118, 134, 150, 166, 183, 199. | |
| Cultivation of Medicinal Plants | 10 |
| Determination of Sex | 162 |
| Drink Our Greatest Enemy | 144 |
| Drugs and Medicines, 16, 37, 56, 79, 96, 177, 133, 148, 165, 181, 197, 213. | |
| First Aid in Accidents 17, 35, 55, 73, 94, 144, 131, 147, 163, 181, 195. | |

| | PAGE. |
|---|---|
| Giddiness | 180 |
| Hæmoptysis | 176 |
| Medical Men and Public Health | 129 |
| Notes and Items of Interest 19, 39, 58, 78, 94, 120, 135, 151, 167, 184, 200. | |
| Prevention and Treatment of Loss of Appetite | 52 |
| Prevention of Tuberculosis | 160 |
| Somnambulism | 193 |
| The Practice of Pharmacy in India | 68 |
| The Right Road to Health | 190 |
| To Our Readers | 211 |
| Uplift Ayurveda | 209 |


# அட்டவணை.

[வைத்திய கலாநிதி— நான்காவது புஸ்தகம்.]

## விசேஷ வியாஸங்கள்.


| வியாஸங்கள். | எழுதியவர்கள். | பக்கம். |
|---|---|---|
| அபஸ்மாரமும் அதன் சிகித்ஸையும் | ஜி. தக்ஷிணாமூர்த்தி, ஆயுர்வேத சிகித்ஸகர் | 48 |
| அபஸ்மாரம் | ஏ. லக்ஷ்மீபதி, பி. ஏ., எம். பி. ஸி. எம். | 21 |
| அமைதியாக நித்திரையுறும் வழி | டப்ளியூ. எச். ரிலே, எம். டி. | 155 |
| ஆயுர்வேதமென்பது இரஹஸ்யௌஷதங்களின் திரட்சியல்ல. | ஏ. லக்ஷ்மீபதி, பி. ஏ., எம். பி. ஸி. எம். | 101 |
| இந்தியாவின் சுதேச ஔஷதங்கள் | குஞ்ஜ பிஹாரி வர்மா, எல். எம். பி. | 41 |
| இராஜாங்கத்தாரும் சுதேச வைத்திய முறைகளும் | பரசுராம சர்மா, மெடிகல் பிராக்டீஷனர் | 29 |
| இலங்கநமும் அதன் வியாதி நிவாரண குணங்களும் | கே. இராமஸ்வாமி, வைத்தியர் | 110 |
| ஈக்கள் விஷயமான எச்சரிக்கை | ஏ. பி. ஓல்ஸன், எம். டி., டி. டி. எச். | 188 |
| உடுக்கும் உடை சுத்தமாயிருக்கப் பழகுதல் | கே. ஸ்ரீநிவாஸ ஐயர், ஆயுர்வேத வைத்தியர் | 30 |
| கமலாக்கிச்சிலியின் ஆஹார ஸம்பந்தமான மேன்மை. | வி. இராமானுஜாசாரியர், மெடிகல் பிராக்டீஷனர் | 66 |
| குழந்தைகளுக்கு உணவூட்டும் வகை | எஸ். முத்துலக்ஷ்மி அம்மாள், எம். பி. ஸி. எம். | 60 |
| குழந்தைகளுக்கு உண்டாகும் பார்ச்வ வாயுவைத் தடுத்தல் | ஆர். நாராயணன், எல். எம். எஸ். | 61 |
| சீமையிலந்தை ஓர் உணவு | எம். எஸ். ஐயங்கார், மெடிகல் பிராக்டீஷனர் | 172 |
| சுவாஸாசயக் கழலையும் ஸாதாரண அறிவும் | ஆர். இராமநாராயணன், எல். எம். எஸ். | 185 |
| சுவாஸாசயக் கழலையைத் தடுத்தல் | மேஜர். எப். எப். எல்விஸ் அவர்களின் ஒரு பிரஸங்கம் | 51 |
| செடிகளை வீட்டில் வளர்ப்பது கெடுதியா ? | கே. ஏ. இரங்கநாதம், வைத்தியர் | 111 |
| தந்தசுத்தி | டி. கே. குப்புஸ்வாமி ஐயங்கார், எல். எம். பி. | 204 |
| திரிதாது தத்துவம் (த்ரிதோஷதத்துவம்) | டி. ஏ. அகஸ்திய சர்மா, பிஸிஷன் அண்ட் ஸர்ஜன் | 103, 122 |
| நாடி நடை | கே. ஏ. இரங்கநாதம், வைத்தியர் | 157 |
| பழக்கத்தின் பயன் | டி. ஏ. அகஸ்திய சர்மா, பிஸிஷன் அண்ட் ஸர்ஜன், 1, 26, 44, 63, 85, 139, 169, 186. | |
| பூனை பிணியைப் பரவச்செய்யும் | ஆர். நாராயணன், எல். எம். எஸ். | 121 |
| மதுபான விஷயத்தைத் தொலைப்பது எப்படி | வி. சுப்பிரம்மணியம், மெடிகல் பிராக்டீஷனர் | 143 |
| மரயெண்ணெயும் அதன் உபயோகமும் | டாக்டர் ஸரஸிலால் ஸாகார் | 153 |
| மூளை யுழைப்பாளிகள் | டி. ஸோமஸுந்தரம், மெடிகல் பிராக்டீஷனர் | 207 |
| ரோக விஞ்ஞானம் | ஆயுர்வேத பூஷணம், என். மாதவமேனன் | 5 |

பக்கம்.

லோகல் போர்டுகள் ஆயுர்வேதத்தை ஆதரிக்க வேண்டுவதேன் ... ஏ. லக்ஷ்மீபதி, பி. ஏ., எம். பி. வி. எம் ... 81
விஷஏசியென்னும் வாந்திபேதி ... டி. ஆர். இலக்ஷ்மணப் பெருமாள் பிள்ளை, டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸர் ... 137
வீட்டிலிருந்து ஈக்களை ஒழிக்கும் வகை ... எம். இராமகிருஷ்ண ஐயர், மெடிகல் பிராக்டீஷனர் ... 7
வைத்திய சாஸ்திராபிவ்ருத்தி ... டப்ளியூ. மஸ்க்ரேவ், எம். டி. ... 126
வைத்தியப் பதிவு சட்டம் ... ஒய். நாராயண ஐயர், எல். எம். எஸ். ... 90
ஜப்பானில் மாணுக்கர்களின் உணவு ... எம். எஸ். ஐயங்கார், மெடிகல் பிராக்டீஷனர்... 9
ஜெர்மன் சிறு மஸூரிகை ... ஏ. ஜி. விம்மன்ஸ், எம். பி., எம். ஆர். வி. எஸ. 174

## பத்திராதிபருடைய வியாஸங்கள்.

பக்கம்.

அபாயங்களில் பிரதம உதவி, 14, 35, 55, 73, 94, 114, 131, 147, 163, 181, 195.
ஆமணக்கெண்ணெய் வடித்தல் ... 92
ஆயுர்வேதத்தின் முன்னேற்றம் ... 209
ஆரோக்கியத்தைக் கடைபிடிக்கும் வழி ... 190
இந்தியர்கள் கையாளும் ஔஷதயோக முறை. 68
கர்ப்பத்தில் ஆண் பெண்கள் உண்டாவதற்கான காரணநிர்ணயம் ... 162
குடியே நமது கொடிய சத்ரு ... 144
தலைச்சுற்றல் ... 180
நமது பத்திரிகையைப் படிக்கும் நேயர்களுக்கு... 212
நித்திரையில் நடந்துச் செல்லுதல் ... 193
பசியின்மையைத் தடுப்பதற்கும் தீர்ப்பதற்குமான சாஸ்த்ரீயமுறை ... 25

பக்கம்.

பரிணும சூலை ... 141
பால் ஸப்ளையைப்பற்றி காப்டன் ரஸ்ஸல் ... 12
பிராணிகளின் உடற்சூடு ... 113
போர்க்களத்தில் அபிகாதப் பட்டவருக்கு போதனை ... 159
மூலிகைகளைப் பயிரிடுதல் ... 10
வைத்தியத் தொழிலாளிகளும் பொதுஜன சுகாதாரமும் ... 129
க்ஷய-காஸம் ... 32
க்ஷய ரோகத்தினுடையவும் அதன் சிகித்ஸையினுடையவும் ஆயுர்வேத ஸம்பந்தமான கோட்பாடுகள் ... 32
க்ஷயரோகத்தைத் தடுத்தல் ... 160

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

பக்கம்.

அக்னிமுக சூர்ணம் ... 165
அடுப்புக்கரி பற்களைச் சுத்தம் செய்ய ... 183
அதிமதுரத்தூள் ... 38
அர்சோரோகத்தில் சீனக்காரம் ... 97
இரத்தபேதியில் தேங்காய்ப்பால் ... 76
இரேவல் சின்னி ... 149
இலைக்கள்ளி ... 117

பக்கம்.

எர்க்காட் என்னும் சரக்கின் விசேஷ குணம் ... 198
எரண்டபாகம் ... 14
ஒற்றைத் தலைவலியில் நாபி ... 17
கஞ்ஜா இருமலுக்கு ... 182
கழுகு ... 117
கல்லீரல் வீக்கத்தில் தும்மட்டிக்காய் ... 199
கறியுப்பால் கீழ்க்குடலிலுள்ள கிருமிகளை அழித்தல் ... 1:8



பக்கம்.

கிரோவினயில் பாம்புகடிக்கு ... 214
குடஜாவலேஹம் ... 165
கோரோசனம் ... 214
க்ளிஸரைன் கால் புண்களை அகற்றும் ... 118
க்ளோரோபாரமும் ஆதப மூர்ச்சையும் ... 17
சந்தனத்தைலம் வடித்தல் ... 76
சர்க்கரை பெரும்பாட்டைப்போக்கும் ... 118
சாரிபாதி கல்கம் .. 197
சிவப்புப்பசளை ... 37
சீமையிலந்தை ... 61
சளுக்குகளில் பனிக்கட்டி ... 97
ச்வாஸகாஸத்தில் அயோடோபாரம் ... 97
டர்பண்டைன் கிருமிஹரம் ... 57
தாளிஸாதி சூர்ணம் ... 182
தாளிஸாதி வடகம் ... 57
தேன்மெழுகு ... 75
நாய்க்கடுகு ... 96
நாளிகேர கண்டம் ... 198
நிமிளை பஸ்மம் ... 96
நிம்பாதி க்வாதம் ... 57
நீலாஞ்ஜனமும் கலாஆஜார் ஜ்வரமும் ... 133
நேத்திரத்தின் தூர்மாம்ஸ வளர்ச்சியில் கொய்னு. 16

பக்கம்.

பப்பாளி ... 16
பலஹீனமான குழந்தைகளுக்கு டிஞ்சர் அயோடைன் ... 214
பழச்சாறு மலபந்தத்திற்கு ... 183
பனிக்கட்டியிட்ட உப்புநீரும் வர்த்ம ரோகமும். 17
புநர்நவாதி க்வாதம் ... 37
பேய்ப்பீர்க்கு ... 197
மங்குஸ்தான் ... 149
மந்தாரை ... 96
முந்திரிகை ... 182
முருங்க மரம் ... 133
மூக்கறட்டை ... 213
வயிற்றுப்பஸத்திற்குக் கைகண்ட மருந்து ... 16
வாதுமை ... 165
வாந்தியைத் தடுக்கும் ஔஷதம் ... 76
விஷமஜ்வரத்திற்கு ஔஷதம் ... 165
வெள்ளை மந்தாரை ... 133
ஜடாமாம்ஸி வேர் ... 37
ஜ்வராங்குசரஸம் ... 97
ஸோடா உப்பின் புதிய உபயோகம் ... 150
ஹரீதகீவடகம் ... 117

## கடிதங்கள்.

பக்கம்.

அஷ்ட சூர்ணம் ... 88
ஆமவாதம் என்னும் கீல்வாயு ... 134
ஆர்த்தவ ரோகம் ... 196
ஆஸவாரிஷ்டங்கள் ... 98
ஈழை இருமல் ... 118
ஒருவயது சென்ற பிணியாளி ... 150
ஒரு வைத்தியக் கிரந்தம் ... 183
ஒற்றைத் தலைவலி ... 18
காலை நேரவாந்தி ... 38
கொய்னு விஷம் ... 77
கோஷ்டபாகம் அல்லது குல்வேக்காடு ... 184
சில சரக்குகளைப்பற்றிய ஸந்தேஹம் ... 150

பக்கம்.

தலைமயிருக்குச் சாயமிடுதல் .. 166
தலைமயிர் உதிர்தல் ... 119
தலைவலி முதலிய கோளாறு ... 214
தூமபானம் செய்தல் ... 166
திராபஞ்சகம் ... 134
நீரிழிவு ரோகசிகித்ஸை ... 57
பரிணுமசூலை ... 215
பல்வலியின் தொந்தரவு ... 151
பிரமேஹம் ... 77
வாய்ப்புண் ... 199
வாற்கோதுமைக் கஞ்சி ... 17
ஜலதோஷம் ... 58

## பலவகைக் குறிப்புகள்.

| | பக்கம். |
|---|---|
| அபராயென்னும் மாயையை எளிதில் வெளிப் படுத்தல் | ... 135 |
| ஆண்கோசவும் பெண் கோசவும் | ... 184 |
| ஆரோக்கியக் குறிப்புகள் | ... 60 |
| இங்கோடைன் | ... 39 |
| இருமலில் உஷ்ணஜலத்தின் உபயோகம் | ... 136 |
| உணவுகளில் எவ்விதத்திலும் எச்சரிக்கை தேவை | ... 167 |
| உணவு ஜீர்ணமாவதைக் கவனித்தல் | ... 120 |
| உஷ்ணதேச வியாதிகளுக்கான கலாசாலை | ... 20 |
| ஒரு புதுமையான நபும்ஸகப் பேர்வழி | ... 100 |
| ஒரு பெரும்புலிக்கு சஸ்திர சிகித்ஸை | ... 184 |
| ஒருவனுக்கு மிதமிஞ்சிய உடற்சூடு | ... 135 |
| ஓர் அறை ஈரமாயிருப்பதை அறியும் உபாயம் | ... 135 |
| ஓர் வருஷாந்தக் கொண்டாட்டம் | ... 89 |
| சக்கிருமலுக்கு அநுபவஸித்தமான ஒரு சிகித்ஸை | ... 136 |
| கவிராஜ கணநாதஸேன் | ... 120 |
| கறியுப்பின் உபயோகங்கள் | ... 152 |
| காதுவலியும் அதைத் தடுத்தலும் | ... 80 |
| கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது | ... 60 |
| குழந்தைகளுடைய அதிஸாரத்திற்கு | ... 136 |
| குளவி கொட்டியதால் நேரிட்ட மரணம் | ... 152 |
| கைகளிலுள்ள இரேகைகளின் உபயோகம் என்ன ? | ... 167 |
| கொழுத்து ஸ்தூலித்தவர்களுக்கு ஹிதமான உணவு | ... 100 |
| கோபம் ஆயுளைக் குறைப்பதேன்? | ... 75 |
| களிஸரைன் என்னும் சரக்குக் கிடைப்பது அரிது | ... 139 |
| சர்க்கரையினால் விரணங்களை ஆற்றுதல் | ... 59 |
| சுகாதாரப் பொருட்காட்சியும் சாஸ்திரப் பொருட்காட்சியும் | ... 40 |
| சுவாஸாசய வியாதிகளில் வெங்காயம் | ... 78 |
| சைனாவில் க்ஷயரோகத்தைத் தடுத்தல் | ... 168 |
| தொண்டைக் கம்மலுக்கு சிகித்ஸை | ... 168 |
| த்ரிதோஷதத்வம் (ஒரு சிறிய புஸ்தகம்) | ... 99 |
| நமது வைத்தியங்களுக்கு நற்காலம் | ... 991 |
| பகந்தரம் அல்லது ஆஸநவெடிப்புக்கு சிகித்ஸை | 200. |
| படுக்கையில் சயனித்தவாறு படிப்பதாலுண்டாகும் தீங்கு | ... 151 |
| பல்லில் துவாரம் விழுதலுக்குப் பரிஹாரம் | ... 20 |
| பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குச் சுகாதாரப்படிப்பு | ... 59 |
| பற்கள் சிதைவுறுவதைத் தடுக்கவும் பரிஹரிக்கவும் தகுந்த உணவுகள் | ... 200 |
| பாலுண்ணியும் பாதரஸமும் | ... 60 |
| பாலுண்ணியைப் போக்க | ... 168 |
| பார்ற் சுறப்பதற்கு | ... 200 |
| பித்தம் உறைவதைத் தடுத்தல் | ... 120 |
| பிரஸன்ன வெங்கடேசராவ் (ஸ்ரீமான் R.K.) அவர்களுக்கு ஆயுர்வேதத்திலுள்ள அபிமானம் | ... 19 |
| பிஷாவாரில் ஓர் ஆயுர்வேத யூனானி ஸங்கம் | ... 208 |
| புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டது | ... 100 |
| புஸ்தக விமர்சம் | ... 10, 99 |
| பெரும்பாடு | ... 152 |
| மதிப்புரை | ... 58 |
| மலபந்தத்தில் கமலாக்ஷிச்சிலியின் புயணி | ... 60 |
| மலபந்தத்திற்கு உஷ்ணஜலம் | ... 1ʋ7 |
| மாம்ஸாஹார விலக்கு | ... 168 |
| மிக்க ஆரோக்கியமும் அநாரோக்கியமுமான மாதங்கள் | ... 20 |
| லெப்டினண்ட் கர்னல் கீர்திகர் காலஞ்சென்றார். | 184 |
| வாலாஜாவில் ஒரு புதிய தர்ம வைத்திய ஸ்தாபகம் | ... 216 |
| விரணங்களுக்கு ஒரு சுலபமான ஔஷதம் | ... 136 |
| விலக்கவேண்டியவை | ... 152 |
| விஷமஜ்வரமும் இளஞ்சூடான ஜலமும் | ... 60 |
| ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன்களின் கான்பரென்ஸ் | ... 10 |
| ஸப் அஸிஸ்டெண் ஸர்ஜன்களின் சம்பளவிகிதம் | ... 40 |
| ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன்களுடைய போதனுமுறை | ... 40 |
| ஸர் பர்டே லூகிஸ் காலஞ்சென்றார் | ... 45 |
| க்ஷயகாஸமுள்ளவன் எச்சிலைத் துப்புதல் | ... 168 |
| க்ஷயரோக விஷம் தேஹத்தில் பரவும் வகை | .. 70 |

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Pandit M. Duraiswami Aiyangar,
*Ayurveda Bhushan.*

பத்திராதிபர் :
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 4. Vol. IV. } நள ஆவணிமீ —SEPTEMBER—1916. { ஸஞ்சிகை 1. No. 1.

## HABITS AND THEIR EFFECTS.

### பழக்கத்தின் பயன்.

By T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

புகையிலையும் இரத்தாசயமும் :—இரத்தாசயமென்பது ஓர் உத்தோலனயந்திரம் ; அதாவது, ஒரு பாத்திரத்திலிருக்கும் திரவ பதார்த்தத்தை உறிஞ்சி வெளியிழுத்து அதை வெறுமையாக்குவதற்கும், பாத்திரத்திலுள்ள திரவ பதார்த்தத்தை மற்றொரு பாத்திரத்திற் பாய்ச்சுவதற்கும் ஏற்ற யந்திரமாம். அது ஆரோக்கியமான ஸ்திதியில் இருந்து, அநுகூலமான ஸந்தர்ப்பங்களில் வேலைசெய்து வருமாயின் ஒருநாளில் அது செய்யக்கூடிய வேலை மிக அதிகமாகும். தேஹம் க்ஷேமமாயிருப்பதற்கும், ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் இரத்தாசயம் ஒழுங்காயும் ஆரோக்கியமாயும் வேலைசெய்து வரவேண்டியது மிக அவசியமாகும். தனக்குத்தானாய் நமது இச்சையின்றி இயலக்கூடிய ஒருவகை பேசியினால் (தசைநாரினால்) இரத்தாசயம் அமைந்திருக்கின்றது ; அந்தப் பேசியைத் தவிர அதில் வேறொன்றுமில்லை. ஆரோக்கியமாக வளர்ந்து அங்கக்கட்டு முதிர்ந்த ஸ்திரீ புருஷர்களுடைய இரத்தாசயம் மிகுந்த வலிமை பொருந்தியிருக்கும். வளரும் வாலிபருக்கோவெனின் அந்த இரத்தாசயம் முதிர்ச்சி அடைந்திராமையின் சிரமம் தாளாமல் அது ஊறுபடுவதும் வேறு வகையில் அபாயத்திற்குள்ளாவதுங் கூடும். ஆதலினாலேயே, முற்றும் அங்க முதிர்ச்சியடையாத வாலிபர்கள் தாராளமாய்ப் புகை குடிக்கும் வழக்கம் மேற்கொண்டிருப்பார்களாயின், அவர்களுடைய இரத்தாசயம் புகையிலைப் பாடம் பற்றுகின்றது. அப்படிப் பட்ட வாலிபர்களுக்குப் புகையிலைப் பாடமேறிய இரத்தாசயமிருப்பதைக் கண்டு வைத்திய சாஸ்திரிகள் அதிசயப் படவேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் வளரும் பிள்ளைகளானதால் அவர்களுடைய இரத்தாசயப் பேசிகள் இன்னும் முதிர்ந்து வலியுறவில்லை. அந்த நிலைமையில் அவர்கள் புகையிலைப் புகையை உட்கொள்வதனால் அதன் விஷம் அந்த இளம் இரத்தாசயங்களை எளிதில் தாக்குகின்றது. மேற்சொல்லியபடி, முதிராத இரத்தாசயங்களுக்கு ஆபத்துக்கள் அதிகமன்றோ ? முதிர்ந்த இரத்தாசயங்களாயின் அந்தப் புகையிலை விஷத்தை ஒருகால் எதிர்த்துத் தாங்கி கெட்டுப்போகாமல் நிலைநிற்கக்கூடும்.

இனி, புகையிலைப் பாடமேறிய இரத்தாசயம் எப்படியிருக்குமெனின், அதன் பேசிச்சுவர்கள் பலவீனப்பட்டிருக்கும், படபடப்பு அதிகமாயிருக்கும், அது அடிக்கும் சீரின் பிரமாணம் (இருதயத்துடிப்பின் தாளப் பிரமாணம்) மாறுபட்டிருக்கும். இருதயத்துடிப்பின் (இரத்தாசயம் குவிதலினாலும் மற்ற காரணங்களினாலும் அதனில் ஏற்படும் சப்தங்கள்)

தாளப் பிரமாணம் தவறிப்போனாலும் போகும்; தாளம் இடையே விட்டுப் போகுமென்பதாம்; அதாவது இடையிடையே ஒவ்வோர் அடி (தாளம்) அடிக்காமல் சும்மா இருந்துவிடும்.

வழக்கமாய்ப் புகையிலை உபயோகிப்பதனால், முக்கியமாக அதிகம் அளவு உபயோகிப்பதனால் இருதயத் தசைநார்கள் சீர்குலைந்து அழிவுறுகின்றனவென்று சில வைத்தியர்கள் நம்புகிறார்கள். அப்பொழுது தசை கெட்டு கொழுப்பாகத் திரிகின்றது. அப்படித் திரிவதற்குத் தக்கபடி இருதயத்தின் பலம் குறைகின்றது. அதிகமாய் புகை குடித்துக்கொல்லுண்டவனொருவனுடைய விஷயத்தைப் பராஜர் (Farager) என்னும் வைத்தியர் எடுத்து எழுதியிருக்கின்றார். அப்படி இறந்தவனுடைய களேபரத்தைச் சோதித்துப் பார்த்ததில் தசைகள் கெட்டுக் கொழுப்பாகத் திரிந்துகொண்டிருக்கும் நிலைமையில் இருதயகோசம் இருந்தது. இப்படி இருதயகோசம் கெட்டுக் கொழுப்பாவது அபூர்வமன்று.

புகையிலை உபயோகிப்பதனால் இருதயத்துடிப்பு நிதானம் தவறிப் படபடத்துக் காட்டுமென்று சொன்னோம். அங்கே படபடப்பென்றால் ஓங்கி அடிக்குமென்று அர்த்தமாகும். அதுவன்றி, புகையிலையை உபயோகிப்பதனால் நாடி விரைவாய் அடிக்கத் தலைப்படுகின்றது; நாடி அடிப்பு பலஹீனமாகின்றது; அது ஒழுங்கு தவறி அடிக்கின்றது, நாடி நிறைந்து காட்டுவதில்லை. அந்தப் புகை குடிப்பவனுக்கு இருதயத்தில் பிடிப்புபோன்ற உணர்ச்சியொன்று உண்டாகின்றது; சிறிது பிரயாசைப்பட்டால் களைப்பு தோன்றுகின்றது; மூச்சு விரைந்து பாய்கின்றது; இருதய மண்டலத்தில் நோவு உண்டாகின்றது; இருதயம் தளர்ச்சியுறுதலும் கூடும். அதன் தசைகள் உப்பி ஊத்தலுங் கூடும்.

புகையிலை உபயோகிப்பதனால் இரத்த ஓட்டத்தின் அதிர்ச்சி அதிகப்படுகின்றது. இரத்த அதிர்ச்சி அதிகரிப்பதனால் நாடிகளில் இசிவு உண்டாகலாம். இரத்தக் குழல்களின் சுவர்கள் சீர்கெட்டு பலங்குன்றலாம். அப்படி அவை பலங்குன்றுவது 'அதிரோமா' (Atheroma) என்னும் வியாதியாகும். புகையிலை அதிகமாய் உபயோகிப்பதே காரணமென்று சொல்லக்கூடிய ஸந்தர்ப்பங்களில் இளைஞர்களும் மத்திம வயதுக்காரர்களும் சடுதியில் மரணமெய்துவதைக் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சாவுகளுக்கு மேற்சொல்லியபடி இரத்த நாடிகளில் உண்டாகும் இசிவே காரணமாகும். இரத்தநாடி இடையே எவ்விடத்திலேனும் தளர்ந்து விரிந்து தடித்துக் காண்பதுண்டு. அந்த வியாதிக்கு 'அனூரிஸம்' (Aneurysm) என்று பெயர். இந்த வியாதியும் புகையிலையினால் இரத்த நாடிகள் கெட்டு உண்டாகக்கூடும்.

அன்ஜினா பெக்டோரிஸ் (Angina Pectoris) என்பதொரு கொடியநோய். அதனால் உண்டாகும் நோ (வலி) மிகக் கடுமையாயும் மரணாவஸ்தையாயுமிருக்கும். அந்த நோய் சடுதியிற்காணும். மனிதன் நெஞ்சடைத்துத் தடுமாறுவான். இந்த நோவும் புகையிலையைத் தாராளமாய் உபயோகிப்பதனால் உண்டாகின்றது. புகையிலையின் வேகம் இருதயத்தின் நிலையைக் குலைக்க இந்தச் சடுதிநோய் தலைகாட்டுகின்றது.

**புகையிலையும் ஜீர்ண உறுப்புக்களும்:**—புகையிலையின் விஷம் எளிதிற் பற்றத்தக்கவர்களும், எளிதிற் பற்றாதவர்களும் உண்டென்று சொன்னோம். அந்த வித்தியாஸம் அவரவர்களுடைய தேஹக் கூற்றைப் பொருத்ததென்று சொன்னோம். அந்த விஷம் எளிதிற் பற்றத்தக்கவர்கள் மட்டாய்க் குடிப்பவர்களானாலும் பெரும்பாலும் பசியின்மையால் வருந்துவார்கள். அவர்களும் அரோசகமும், குமட்டலும், நீடித்த அன்னத்துவேஷமும், வயிற்றுப் பொருமலும், நெஞ்செரிவும், மற்றுமுள்ள ஜீர்ணேந்திரியக் கோளாறுக் குறிகளும் தோன்றும்.



புகையிலையை அதிகமாய் உபயோகிப்பதனால் மற்றுமொரு ஜீர்ணேந்திரியக் கோளாறும் விளைவதுண்டு. அதற்கு காஸ்ட்ரைடிஸ் (Gastritis or Catarrh of the Stomach) என்று பெயர். இரைக்குடலிற் கொதிப்புண்டாவது இந்த வியாதியின் லக்ஷணம். புகையிலையை விபரீதமாய் உபயோகிப்பதனால் நீடித்த இரைக்குடற் கொதிப்புண்டாகும். இரைக்குடற் கொதிப்பு புகையிலையை வாயிற்போட்டு மெல்லுவதாலேயே முக்கியமாய் விளைவதாகும்.

புகையிலைப் புகையினால் தொண்டையில் உண்டாகும் அழற்சியையும் தொண்டைக்குண்டாகும் சேதத்தையும் கவனிக்கவேண்டுமென்று காலஞ்சென்ற ஸர் மோரல் மாகன்ஸி (Sir Morell Mackenzie) என்பவர் வற்புறுத்தினார். அவர் சொல்லியது, "புகை குடிக்கும் வழக்கம் நெடுநாளாய் இல்லாவிட்டால் அந்தப் புகையினால் தொண்டைக்கு உண்டாகிய தீமைகளை எளிதில் அகற்றலாம்; அந்தத் தீமை விளைத்த வழக்கத்தைக் கைவிடுவதே அதற்கு எளிதான பரிஹாரமாம். புகை குடிப்பதனால் விளையும் தீமைகளை எண்ணுமிடத்து, புகையிலைப் புகையில் இரண்டு கெட்ட குணங்கள் இருக்கின்றனவென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். 1. விஷத்தன்மையான நிகோடீன், 2. எரியும் புகையிலையின் அதிக உஷ்ணம்."

வெப்பமான புகையிலைப் புகையில் அடங்கியிருக்கும் பைரிடீன் முதலான வஸ்துக்களின் வேகத்தினால் தொண்டைப்புண்ணும் நாக்குப் புண்ணும் உண்டாகக்கூடும். இந்தப் புண்கள் கடுமையாய் இருந்தாலும் இருக்கலாம், நீடித்திருந்தாலும் இருக்கலாம். புகையிலையின் விஷம் எளிதில் தாக்கக்கூடியவர்களுக்கு இந்தப் புண்கள் உண்டாவது நிச்சயம். "அப்போதைக்கப்போது புகை குடிப்பதனால் உதடுகளில் கொதிப்பெடுத்துப் புண்ணாகும்; இந்தப்புண் நீடித்திருக்கும். இதனால் உதடுகள் பிளவுபடும். இது மிகத் தொந்தரவு படுத்தும், பெரும்பாலும் கொடிய நோயாய் விளையும்" என்று ஸர் மோரல் மாகன்ஸி என்பவர் எழுதியிருக்கிறார்.

நாக்கு, உதடுகள், தொண்டை ஆகிய இவைகளில் விப்புருதி உண்டாகத்தக்க காரணங்களுள் புகையிலையும் ஒன்றெனவே சாதாரணமாய்க் கொள்ளுகின்றார்கள். வெப்பம் வாய்ந்த விஷப்புகை தினந்தோறும் பட்டுக் கொதிப்புண்டாக்குவதனாலும், களிமண்ணினாற்செய்த சுங்கானுடைய சரவை தாக்குவதனாலும் விப்புருதி உண்டாவதற்குக் காரணம் ஏற்படுகின்றது. விப்புருதி வளர்வதற்கு அவையிரண்டுமே போதிய காரணமெனத் தோன்றுகின்றது. வாய்ப் பிரதேசத்தில் ஏற்பட்ட விப்புருதிகள் பலவற்றையும் ஆராய்ந்து பார்க்கையில் அவை பெரும்பாலும் இந்தக் காரணத்தினால் ஏற்பட்டனவென்றே கண்டிருக்கிறார்கள்.

பற்கள் ஊறுபடுவதும், வேறு வகையிற் கெடுவதும், நிலைகுலைந்து வீழ்ந்து போவதும், புகையிலையை உபயோகிப்பதனாலே (அல்லது அதிகமாய் உபயோகிப்பதனாலே) என்று சொல்லுகிறார்கள். சுணைகளைக் காப்பாற்றும் தன்மை புகையிலைக்கு இருக்கின்றதென்பது உண்மையே. ஆனால் அது பல்லிற்படும்பொழுது காப்பாற்றும் தன்மை அதற்குச் சிறிதும் இல்லை. சுணையைக் காப்பாற்றுந் தன்மை புகையிலைக்கு இருப்பதனால் அது பற்களின் சுணையையும் காப்பாற்றிப் பலமாகவைக்குமென்று புகைகுடிப்பவர்கள் எவ்வளவு ஸாதித்தபோதிலும் அந்த வார்த்தை ஒப்புக்கொள்ளத்தக்கதாகாது.

சுங்கானிலாவது சுருட்டிலாவது குடிக்கும் புகையிலைப் புகை நஞ்சு முறிக்குந் தன்மையதென்று, அதாவது ரோகஜனகக் கிருமிகளைத் தொலைக்கும் தன்மையதென்று எவ்விதத்திலாவது கொள்வது அறிவீனமான பிரமையாகும். அப்படிக் கொள்வதற்கு சிறிதும் ஆதாரமேயில்லை. செடிகளை பாதிக்கும் சிற்சில பூச்சிகளினின்றும் அவைகளைக் காப்பதற்குப் பல

மான புகையிலைப் புகை உபயோகிக்கப் படுகின்றதென்பது உண்மையே. ஆனால் மனிதனை பாதிக்கும் ரோக ஜனகக் கிருமிகளினின்றும் மற்றுமுள்ள பீடைகளினின்றும் காக்கும் தன்மை புகையிலைக்கு உண்டென்று நம்புவதற்குச் சிறிதும் ஆதாரமேயில்லை.

உத்தீபனச் சரக்குகளும் லாகிரி வஸ்துக்களும்:—புகையிலையை மதுஸார வர்க்கத்திற் சேர்த்துச் சொல்லுவது வழக்கம். ஏனெனில் மதுஸாரத்தைப்போலவே உத்தீபனம் செய்யும் சக்தியும் மயக்கந்தரும் தன்மையும் அதற்கு உண்டு. உத்தீபனம் செய்தலாவது நரம்புகளுக்கு எழுச்சியும் மனத்திற்குக் குளிர்ச்சியும் உண்டாக்குதலாம். புகையிலையின் முதற்பலன் பெரும்பாலும் அமைதியாகவும் இனிமையாகவும் தோன்றும் கிளர்ச்சியாம். அந்தக் கிளர்ச்சி நீடித்திருப்பதில்லை. சிறிது நேரம் இருந்து ஒழிகின்றது. மேற்சொல்லிய முதற்படி கடந்து இரண்டாம்படியில், தீர்க்கமாகவும் நீடித்தும் இருக்கக்கூடிய மயக்கம் சீக்கிரத்தில் தோன்றுகின்றது.

உத்தீபனச் சரக்கென்பது மேலேசொல்லியபடி எழுச்சியுண்டாக்கும் சரக்காகும்; அது மனிதனைக் குத்திக்கிளறி எழச்செய்வது போல் வேலைசெய்யுந்தன்மையது; மாட்டை வேகமாய் ஓட்டுவதற்கு உபயோகிக்கும் தார்க்கோல் போன்றதாகும். உத்தீபனச் சரக்குகளென்று பன்மையிற் சொல்லுமிடத்து, அவை மயக்கந்தரும் வஸ்துக்களெனப் பொருள்படும். ஆகவே உத்தீபனச் சரக்குகளையும் லாகிரி வஸ்துக்களையும் ஒன்றுகூட்டி இங்கு உரைக்கலானோம்.

புகையிலைக்கு உத்தீபனகுணம் சிறிது இருக்கிறது: முதன்முதலில் இந்தக்குணம் தலைகாட்டுகின்றது. ஆனால், வெகு சீக்கிரத்தில் அது மயக்கமாக மாறுகின்றது. அந்த மயக்கநிலைமை விபரீதமான நிலைமையே யெனத்தகும்; அது இயற்கைக்கு விரோதமானது; ஆரோக்கியத்திற்கு ஹானிவிளைக்கத்தக்கது. அஃதொரு மஸ்துப்பண்டம். மஸ்துப்பண்டமாவது உணர்ச்சியைக் கெடுக்கத் தக்கது, நோவைத் தணிக்கத்தக்கது, உறக்கம் வருவிக்கத் தக்கது.

ஆகையால், மஸ்துப்பண்டமென்பது ஆழ்த்தும் தன்மையுள்ளபண்டம்; மனத்தை ஆழ்த்தி அதன் வலியைக்குறைத்து மனிதனை மரம்போலாக்கும் தன்மையுள்ளதாதலால் அஃது ஆழ்த்துப்பண்டம் என்னப்பட்டது. அதன் பலத்திற்கும் உட்கொள்ளும் அளவிற்கும் தக்கபடி மஸ்துப்பண்டம் மனிதனுடைய ஸ்மாரகத்தைப் போக்கடிக்கின்றது; ஏனெனில், அது புலன்களுக்குள்ள உணர்ச்சியை நசிக்கச் செய்யும் தன்மையுள்ளது.

மேற்சொல்லிய குணங்கள் இரண்டும் புகையிலைக்கு உண்டு. முதன்முதலில் அது உத்தீபனகாரியாய்த் தோன்றுகின்றது. அந்த உத்தீபனத்தன்மை சிறிதுநேரம் இருந்து ஒழிகின்றது. அதனை விரைந்தடுத்து நீடித்த மயக்கம் தோன்றுகின்றது. மயக்கமாவது புலன்களும் மனமும் வலிமைகுன்றி ஆழ்ந்துகிடக்கும் நிலைமையாம். ஊன்றிப் பார்க்கில், புகையிலையானது, உணவைப்போல, உத்தீபனகாரியென்றாவது, பலவர்த்தினியென்றாவது எந்த அர்த்தத்திலும் கொள்ளத்தக்க வஸ்துவன்று. அல்லாமல், நரம்புகளை எழுப்பிவிட்டுப் பிறகு படுகிடையாய்ச் சாய்க்குந் தன்மை வாய்ந்திருத்தலின் அது மதுஸாரத்திற்கு நெருங்கிய பொருத்தமுள்ளதாயிருக்கின்றது.

நிகோடீனின் குணம்:—ஸர் க்ளிபர்ட் ஆல்பட் என்பவர் எழுதியுள்ள மருந்து முறை (System of Medicine) என்னும் கிரந்தத்தில நிகோடீனின் குணம் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கின்றது:—"நிகோடீன்" என்பது க்ஷாரஸம்பந்தமானதொருவஸ்து. தேஹத்திலுள்ள நரம்புகள் இருவகைப்படுமென்று தெரியுமல்லவா? அவை 1. தமக்குத்தாமே இயலுந் தன்மையுள்ளன, 2. நம்முடைய இச்சைக்கு இணங்கி இயல்வன என்பனவாம், நிகோடீன் என்னும் க்ஷாரவஸ்து முதன்முதலில் தமக்குத்தாமே இயலும் நரம்புகளின் சவ்வறைகளுக்கு எழுச்சியுண்டாக்கிப் பின்னர் அவைகளை ஆழ்த்திக் கிடத்துகின்றது.

"இந்த முதற்குணத்தின் பயனாக இருதயத்தின் காரியம் மெதுப்படுகின்றது. இரத்தநாளங்கள் குறுகிப்போகின்றன. அதனால் இரத்த ஓட்டத்தின் அதிர்ச்சி அதிகப்படுகின்றது. பிறகு, மனமும் புலன்களும் மேன்மேலும் அதிகமாய் ஆழ்ந்துபோக, இருதயகோசத்திலுள்ள நரம்புகள் செயலற்றுத் திமிர்த்துப்போவதனால் இருதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. இரத்தநாளங்கள் தளர்வுண்டு இரத்தவோட்டத்தின் அதிர்ச்சி குறைந்துபோகின்றது."



# DIAGNOSIS OF DISEASES.

## ரோக - விஞ்ஞானம்.

By N. MADHAVA MENAN,
*Ayurveda Bhushan,*
*Lecturer, Madras Ayurvedic College.*

ரோகம் என்றால் என்ன? என்கிற கேள்விக்கு ஏதோ ஒருவாறு விடையளிக்க முடியாதவர் இரார். ஆனால் எவரையாவது நாம் இதுவிஷயமாகக் கேட்டால், ரோகம் என்பது ஸுகமின்மை அல்லது ஆரோக்கியக்குறைவு என்றுதான் பெரும்பாலும் பதில்கூறுவதாக நாம் அறிவோம். ஆகவே பொதுவாக ஸாமானிய ஜனங்களுக்கும் ரோகமென்றால் இன்னதென்று ஒருவிதமான ஸாதாரண எண்ணம் உண்டென்பது உண்மையாயினும், அவ்வளவினாலேயே வைத்திய சாஸ்திரப்படி ரோகம் என்பதின் தத்துவம் யாதொன்றுண்டோ அதை அறிவதற்கும், அதை விவஹரிப்பதற்கும், அது விஷயமாக ஸித்தாந்தம் செய்தற்கும் முடியாது. வைத்தியர்கள் ரோகிகளுக்கு ஏற்ற சிகித்ஸையைச் செய்வதற்கு வியாதிகளைப் பற்றிய விசேஷ அறிவு அவர்களுக்கு இன்றியமையாததல்லவா? ரோகவிசேஷங்களைக் குறிப்பிட்டறியாமலே ஏதோ தோன்றியவாறு ஒருவன் ஔஷதங்களைப் பிரயோகிப்பதால், நன்கு இலக்கு வைக்காமல் துப்பாக்கியைக்கொண்டு சுடுவதுபோல் உபயோகம் ஒன்றும் உண்டாகாமற்போவது மாத்திரமல்ல, பலவிதமான அபாயங்களும் ஸம்பவிக்கும். ஆகையினால் வியாதியின் வெவ்வேறு வகையான கூறுபாடுகளை நன்றாக அறிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. முதன்முதலில் ரோகங்களைப்பற்றிய பொதுவான அறிவை ஸம்பாதித்துக்கொண்டு, அதன் பிறகு ஒவ்வொன்றுக்குமுள்ள விசேஷபேதங்களை அறியமுயலவேண்டும். ஆகவே இப்பொழுது "ரோகம்" என்று வழங்கப்படுகிற விஷயத்தின் சுரூபத்தை முன்னதாய் விசாரிப்போம்:—

"ரோகம் என்பது தோஷங்களின் வைஷம்யம்" என்று வாக்படாசாரியர் முதலியவர்கள் கூறியிருக்கின்றனர். அப்படிக்கூறியது ரோகங்களைப்பற்றிய பொதுவான சுரூபத்தைக்குறித்த விஷயமாகும். இதனால் ரோகம் என்றால் தோஷங்கள் (வாத-பித்த-கபங்கள்) விஷமித்தல் என்று தானே பொருள்? இதைக்கொண்டு நாம் ரோக ஸம்பந்தமான அநேகம் தத்துவங்களை அறியக்கூடும். எப்பொழுது வாத-பித்த-கபங்கள் கோளாறடைந்தனவோ அப்பொழுது ரோகம் உண்டாவதாக ஒருவாறு உணர்வதானது நமக்குச் சிகித்ஸையில் எவ்வளவு தூரம் உதவக்கூடும் என்பதை ஆலோசிக்க வேண்டும். இதனால் ஒருவித விசேஷதத்துவமும் பிடிபடவில்லையென்று ஸாதாரண அறிவுள்ளவன் கூறுவன். ஆனால் தோஷங்களுடைய சுரூபத்தைப்பற்றி முதலில் ஒருவாறு விவரித்துவிட்டு, அதன் பிறகு அவற்றின் கோளாறுகளையும் விவரிப்பது யுக்தமாகும்.

வாயு, பித்தம், கபம் என்கிற இம்மூன்று தோஷங்களும் சரீரத்தைத் தாங்குவதற்கு

மூன்று தூண்களைப்போல் இருந்து வருகின்றனவென்று அநேக ஆயுர்வேத புத்தகங்களில் நாம் படித்திருக்கிறோம். ஆனால் தூண்களைப்போல் அவை கண்களால் பார்க்கக்கூடிய பெரிய உருவமுள்ளவைகளல்ல; அவைகளோ சரீரத்தைத் தாங்குவதற்கு ஏற்ற சக்திகளையுடைய மூன்றுதாதுக்கள் என்று அறிக. விஷயதத்துவம் தெரியாமல், ஆயுர்வேத நூல்களையும் போதுமாறு படிக்காமல், தோஷங்களுடைய சுருபத்தைப்பற்றி ஏதேதோ தோன்றியவாறெல்லாம் கூறியும், தேஹத்தில் அநேகம் கலைகள் அமைந்திருக்கின்றனவென்பதையும் புறக்களித்து, வீணில் நமது சாஸ்திரத்தின்மீது குறை கூறுகின்றனர். அவற்றிற்கெல்லாம் இங்கு பூர்வபக்ஷ ஸமாதானங்கள் சொல்வது அவசியமில்லை.

அவற்றுள் "வாதம்" என்பது இலகுத்தன்மை, வறட்சி முதலிய குணங்களால் மூச்சுவிடுதல், மூச்சுவாங்குதல், அசைதல், பரிசவுணர்ச்சி, புலன்களின் அறிவு முதலிய காரியங்களைச்செய்து சரீரத்தைத் தாங்கி வருகிறது. "பித்தம்" என்கிற தோஷமானது சூடு, தீக்ஷ்ணத்தன்மை முதலிய குணங்களால் உணவுகளை ஜீர்ணம் செய்வித்து, தேஹம் பதனழியாமலிருப்பதற்கேற்க உடற்சூட்டையுண்டுபண்ணி சரீரத்தைத் தாங்கி வருகிறது. "கபம்" என்பது ஸ்நிக்த்தம் என்னும் பசை, குருத்வம் முதலிய குணங்களால் தேஹத்தில் அவயவங்களுக்கு அல்லது தாதுக்களுக்குத் திரண்ட உருவத்தையும், சரீரதிடனையும் மற்றும் அவைபோன்ற அநேகம் காரியங்களையும் செய்து உடலைத்தாங்கி வருகின்றது. இவ்விஷயங்கள் "தத்ர ரூக்ஷோ லகுச்சீத + + + உத்ஸாஹோச்சுவாஸ நிச்வாஸசேஷ்டா +.+" என்று ஆரம்பித்து வாக்படாசாரியர் முதலிய பிராசீன வைத்திய வித்வான்களால் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மூன்று தோஷங்களும் தேஹத்தில் பரவியிருந்து அததற்குரிய வேலைகளைச் செய்துவருகையில், சரீரத்திற்குக் கெடுதி யுண்டுபண்ணும் விஷயங்களைப் பரிஹரித்து அதைக்காப்பதற்கு எப்பொழுதும் தயாராயிருந்து வருகின்றன. தோஷங்களுடைய இயற்கைத் தன்மையைப்பற்றி இங்கு சுருக்கமாகக் கூறினேன். தோஷங்களுடைய சுரூபமென்ன, தத்துவமென்ன இவைகள் இப்பத்திரிகைக்கு ஆசிரியரான ஸ்ரீமான் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களாலேயே இப்பத்திரிகையின் முதல்வருஷத்து முதல் ஸஞ்சிகையிலே வெகு நன்றாக விளங்கக் கூறப்பட்டிருப்பதால் இங்கு மறுபடியும் அதையே விஸ்தரிப்பது அவசியமில்லை.

இத்தோஷங்கள் அதனதன் சுபாவசக்தியினால் அந்தந்த அவயவங்களை (அல்லது தாதுக்களை) இயற்கைக்கு ஏற்றவாறு அந்தந்த தொழில்களில் ஏவி வருகின்றன; அவையாவன:— உணவு ஜீர்ணமாதல், இரஸம், இரத்தம் இவை தேஹத்தில் எங்கும் பரவுதல், மூச்சுவாங்கிவிடுதல், மலமூத்திரங்களை விடுதல் முதலியவைகளாம். இக்காரியங்கள் யாவும் அங்கங்குள்ள தோஷங்களுடைய அம்சங்களுக்குள்ள சக்தி விசேஷத்தினாலேயே நிறைவேற்றப்படுகின்றன. அதாவது நாம் உண்ணும் உணவுகள் தோஷங்களுடைய இயற்கையான சக்தியினால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஏவப்பட்டு குடலில் நெளிந்துச் சலிக்கின்றன; அங்கு தோஷங்களுடைய சக்தியினாலேயே ஜீர்ணத்திற்கு அவசியமான சில திரவபதார்த்தங்கள் உற்பத்தியாய் அவற்றால் உணவும் பக்குவப்படுத்தப் படுகின்றது. ஆஹாரம் வாயிலிருந்து குதம்வரையில் செல்லுமளவும், அதை ஸாரமாகவும் கிட்டமாகவும் பிரித்து, ஸாரம் இரத்தமாகப் பக்குவமாய், கிட்டம் மலமாக மாறி, ஒன்று தேஹத்தில் பரவுவதும், மற்றொன்று தேஹத்திற்கு வெளியில் வந்துவிடுவதும் தோஷங்களுடைய செயல்களேயாம். ஆகவே, இங்கு இரைப்பை முதலிய விடங்களிலுள்ள வாதாதிதோஷங்கள் விகாரமடையாமல் இருந்துவந்தால் ஆஹாரமும் தகுந்தவாறு



குடலில் வியாபித்து நன்கு ஜீர்ணமாகும். அந்தந்த அவயவங்களுக்கு அதிகாரியாக ஏற்பட்ட தோஷங்கள் கோளாறடைந்தால், அந்தந்த அவயவங்களும் இயற்கையான வேலைகளைச் செய்ய வல்லமையிழந்து சோம்பிக்கிடக்கும். அறிவைப்புகட்டும் கருவிகள் விஷயத்திலும் இதுதான் தத்துவம்; அறிவைப்புகட்டும் அவயவங்களுக்கு அதிகாரியா யமைந்துள்ள தோஷங்கள் விகற்பப்பட்டால், பரிசவுணர்ச்சியும், கிரஹணதாரண சக்தியும், பார்வை, கேள்வி முதலியவையும் குறைந்துவிடுகின்றன. இவ்வாறு தோஷங்கள் இயற்கைத் தன்மையை இழந்துவருகையில், தேஹத்தினுள் ஒருவிதமான துன்பம் தோன்றிவரும். அவ்வாறு ஸம்பவிக்கும் துன்பமே வியாதியென்று சுருக்கமாகக் கூறலாம். ஆகையால் ரோகவிஞ்ஞானத்தின் பொருட்டு தேஹத்தில் வெளி அவயவங்களென்ன உட்புற அவயவங்களென்ன எல்லாவற்றினுடையவும் சுரூபம், அமைப்பு, இருப்பிடம், காரியம் என்னும் ஒவ்வொன்றையும் தனித்தனியே பகுத்துப்படித் தறியவேண்டும். இதுதான் பிரக்ருதிஞ்ஞானம் என்று கூறப்படும். பிரக்ருதிஞ்ஞானம் இல்லாமல் விக்ருதியென்னும் வியாதியின் ஞானம் உண்டாகமாட்டாதல்லவா ?

ஆகவே தேஹத்தில் ஏதேனும் ஒருவித நோய் காணப்படுமானால், முதலில் வைத்தியன், அந்தநோய் எவ்விடத்தில் உண்டாயிருக்கிறது என்று பரீக்ஷிப்பன்; நோய் காணப்படுமிடத்தில் எங்கெந்த அவயவங்கள் இருக்கின்றனவென்றும், அவற்றுள் எந்த அவயவத்தைப்பற்றி அந்தநோய் ஏற்பட்டிருக்கிறதென்றும், அந்த குறிப்பிட்ட அவயவம் எவ்வாறு கோளாறடைந் திருக்கிறதென்றும் பகுத்தறிய வேண்டி வருகிறது; அவ்வாறு நேர்ந்த கோளாறால் எந்த அவயவத்தின் எவ்வித இயற்கை வேலை தடையுள்ளதென்றும் கவனிக்கவேண்டும். இக்கோளாறுகள் தரிசனத்தினாலும், பரிசத்தியினாலும், பிணியாளியைக் கேட்பதாலும் உணரக்கூடியன. "ப்ரத்யக்ஷதச்ச யத்த்ருஷ்டம் சாஸ்த்ரத்ருஷ்டம் சத்யத்பவேத், ஸமாஸதஸ்ததுபயம் பூயோ ஜ்ஞாந விவர்த்தநம்" என்று ஸுச்ருதர் கூறியிருப்பதுபோல் பிரத்தியக்ஷப் பிரமாணங்களைக்கொண்டு பரீக்ஷிப்பதாலும், சாஸ்திரங்களில் கூறியுள்ள தத்துவார்த்தங்களைக்கொண்டு பரீக்ஷிப்பதாலும் எவ்விஷயம் அறியப்படுகிறதோ, அது ஞானத்தை இன்னும் விசேஷப்படுத்துகிறது.

## HOW TO RID THE HOUSE OF FLIES.

### வீட்டிலிருந்து ஈக்களை ஒழிக்கும் வகை.

BY M. RAMAKRISHNA AIYAR,
*Medical Practitioner.*

இவ்விஷயமாக "ஹெல்த்" என்னும் சுகாதாரப் பத்திரிகையில் நான் ஒரு வியாஸம் படித்தேன். அது மிகவும் பிரயோஜனமுள்ளதென்று எண்ணி "வைத்திய கலாநிதியில்" பிரசுரிப்பது அவசியமென்றும் கருதி இங்ஙனம் அதைத் தமிழில் எழுதலானேன். அவ்வியாஸத்தின் முக்கியமான அம்சங்கள் பின் வருமாறு:—

ஆரோக்கியமாயிருக்க வேண்டுமானால் முதலில் வீட்டிலுள்ள ஈக்களையெல்லாம் அழித்து விடவேண்டும். வீட்டுக்கதவுகளையும் சாளரங்களையும் நன்றாக மூடிவிட்டு, ஒரு சளகில் சிறிது கிலக்கரியைப்போட்டு அதில் தீயிடவும்; அதன்பேரில் கார்பாலிக் ஆஸிட் என்னும் திராவகத்தில் சுமார் இருபது துளிகள் விடவும். அத்திராவகத்திலிருந்து எழும்பும் புகையானது ஓர் அறையிலுள்ள எல்லா ஈக்களையும் கொன்றுவிடும். இதற்கு மற்றொரு உபாயமும் உண்டு: அக்கிராகாரம் என்னும் சரக்கைப் பொடி செய்து எரிப்பது ; இச்சரக்கு சுத்தமாகவும் புதிதாகவும் இருந்தால், இச்சூர்ணத்தை எரிக்கும்போது, இதிலிருந்து கூண்டு கூண்டாகப் புகை கிளம்பும்; இப்புகை ஈக்களின்மேல் படுவதற்கு முன்னமே, இதன் வாஸனையானது எல்லா ஈக்களுக்கும் ஒருவித மயக்கத்தை உண்டு பண்ணுகின்றது; ஆகவே அறையிலிருந்த ஈக்கள்

முழுதும் சோர்ந்து செத்துப்போனதுபோல் தரையில் விழுந்துவிடும். அவற்றை உடனே பெருக்கி யெடுத்து, வீட்டுக்கு வெளியில் சற்றுத் தூரத்தில் எரித்து விடவும்.

அவ்வுபாயங்கள் செய்தபிறகும் ஏதாவது தப்பிப் பிழைத்துள்ள ஈக்களைப் பிடிப்பதற்கு, இதற்கென்று செய்யப்பட்டுள்ள பிசின் தடவிய காகிதங்களை (Sticky-fly papers) உபயோகிக்க வேண்டும். . ஒருவித ஈநி பாதை யெனத்தகும் இந்த ஜந்துக்களையும் இவற்றின் முட்டைகளையும் முற்றிலும் அழிப்பதற்கு மிகவும் உத்தமமான முறை ஹெப்பெள்ஸ் ஆண்டி ப்ளை ஸ்ப்ரே (Heppell's Anti-Fly Spary) என்னும் சிவிறிப் பிரயோகம் செய்வதற்கான ஔஷதமேயாம். கிருமிஹரம் (Germicides), கீடஹரம் (Insecticides) என்னும் குணம் இவ்வௌஷதத்திற்கு உண்டு. விஷ குணமற்ற தாதுவர்க்கங்களாலும் மூலிகைகளாலும் இது தயார் செய்யப்பட்டதாகும். ஸாதாரணமாய் எப்பொழுதுமே உபயோகிப்பதற்கு ஏற்றவாறு இது ஸுகந்தம் ஏற்றப்பட்டவஸ்து; வீட்டிலுள்ள மனிதருக்காவது மிருகங்களுக்காவது இதனால் ஒருவித கெடுதியும் ஸம்பவிப்பதில்லை; ஆனால் ஈக்களுக்கும் குளவிகளுக்கும், எறும்பு முதலிய ஜந்துக்களுக்கும் விஷம் போன்றது. இதை எவரும் எளிதில் பெற்று உபயோகிப்பதற்காக மூன்றுவித அளவுகள் உள்ள சிவிறிகள் (Sprayers) கிடைக்கும். மேற்கூறிய திராவகத்தை இச்சிவிறியின் மூலமாய் வீட்டு வாயிற்படிகளிலும், சாளரங்களிலும், சட்டை முதலியதை மாட்டும் சட்டங்களிலும், மற்றும் அவசியமான இடங்களிலும் தெளிக்கவேண்டும்; இந்த வாஸனையானது ஈக்களுக்கு விரோதியானதால், அவற்றை உள்ளே வராதபடி தடுக்கும்.

ஈக்கள் வந்து உட்காருவதற்கு திரைக்கதவுகள் ரொம்பவும் அனுகூலமான இடம்; திரையின் சட்டத்தைச் சுற்றிலும் இவை தொற்றிக்கொண்டிருக்கும். சுமார் இருபது அவுன்ஸ் அளவான பாராபின் (Paraffin) என்னும் ஔஷதத்துடன் ஒரு தேக்கரண்டியளவு கார்பாலிக் ஆஸிட் என்னும் திராவகத்தைக் கலந்து, திரைக்கதவுகளைச் சுற்றிலும் நன்றாகப் பூசிவிடவும்; இது உடனே ஈக்களைப்பற்றிக்கொண்டுவிடும்.

வீட்டில் குப்பைகளும் அழுக்குகளும் சிறிதும் சேராமல் நிர்மலமாக யிருக்க ஏற்பாடு செய்துவந்தால், ஈக்கள் வரவும் வராது, அவற்றைக் கொல்லவேண்டிய அவசியமும் இராது. அழுக்குகளும் குப்பைகளுமே ஈக்களைப் போஷிப்பதற்கு ஸாதநமாயிருப்பவை. குதிரைச் சாணமும், மாட்டுச் சாணமும், அவற்றின் மூத்திரமும் ஈக்கள் போஷணையடைவதற்கு ஆதாரமானவை. செல்வவான்களுடைய வீட்டிற்கு அருகில் குதிரை லாயங்களும், ஸாதாரண ஜனங்களுடைய வீட்டிற்கு அருகில் மாட்டுத் தொழுவங்களும் இருக்கக் காணலாம்; அநேகம்பேர் தமது வீட்டுக்குள்ளேயே மாடுகளைக்கட்டிக் கொள்கின்றனர். அவ்விதம் செய்யாமல் வீடுகளுக்கு வெகு தூரத்தில் குதிரை லாயத்தையும் மாட்டுத் தொழுவத்தையும் ஏற்படுத்திக் கொள்வதும் அவசியம். மேலும் குதிரைகளையும் மாடுகளையும் கட்டிவைக்கும் இடங்களில் ஹெப்பெள்ஸ் ஆண்டி ப்ளை ஸ்ப்ரே என்னும் திராவகத்தைத் தினந்தோறும் ஒரு முறையாவது தெளித்து வருவது நலம். தோழங்களில் சேரும் குப்பைகளையும் சாணம் முதலியவற்றையும் ஒரு பெரிய தொட்டியில் போட்டு, அதன் வாயை தந்திக் கம்பிகளாலான வலைபோன்ற மூடியினால் மூடிவைக்கவேண்டும். இப்படிச் செய்வதால் ஈக்கள் அத்தொட்டியினுள் போய் வளரவும், முட்டையிட்டு வேறு ஈக்களை விருத்தி செய்யவும் மார்க்க மிராது.

அழுகிப் பதன் கெடக்கூடிய பழத்தோல் முதலிய எல்லாவற்றையும் அப்போதைக்கப்போது ஒரு தொட்டியில் போட்டு வாயை மூடி வைத்திருந்து, தூரத்தில் அதற்கென்று ஏற்பட்டுள்ள குழிகளில் கொட்டி மூடிவிடவேண்டும். அழுக்குகளும் ஈக்களும் எப்பொழுதும் ஒன்றை யொன்று விருத்தி செய்து மனிதவர்க்கத்திற்கு வியாதிகளைப் புகட்டும் கருவிகளென்பதை மறக்கக்கூடாது.

வியாதிக்ரஸ்தர்கள் படுத்திருக்கும் வீடுகளில் ஈக்கள் இராதபடி காப்பதற்கு உபாயங்களை ஒவ்வொரு வைத்தியரும் அறிந்திருக்க வேண்டும். தொற்று வியாதி எவ்வீட்டில் இருக்கிறதோ அவ்வீட்டில் கண்ணால் பார்ப்பதற்கு ஒரு ஈயும் இருக்கக்கூடாது. கொசுக்களும் ஈக்களுமே பெரும்பான்மையான வியாதிகள் ஒரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவுவதற்கு முக்கிய காரணங்களாயிருக்கின்றன.



# THE DIET OF STUDENTS IN JAPAN.

## ஜப்பானில் மாணாக்கர்களின் உணவு.

BY M. S. AIYANGAR,
*Medical Practitioner.*

இந்தியர்களுக்கு, அவர்களிலும் முக்கியமாய் இறைச்சியை விலக்கி சாகபக்ஷணத்தையே உத்தமாஹாரமாகக் கொண்டாடுபவருக்கு நான் எழுதும் இச்சிறிய வியாஸம் உபயோககரமாகவும் உவக்கக்கூடியதாகவும் இருக்குமென்று நம்புகிறேன். இது ஜப்பானியருடைய உணவைப்பற்றிய வெகு சுருக்கமான விஷயமடங்கியது. இந்தியாவில் நமது ஜனங்கள் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவிதமான ஆஹாரப்பொருட்களை உபயோகிக்கின்றார் என்றாலும், நம்மவருக்கு விசேஷமாய் சாகாஹாரத்திலேயே நோக்கமும் விருப்பமும் உண்டென்று நான் அறிவேன். ஜப்பான் தேசத்தியவருடைய உணவுவிஷயத்தைக் கவனிப்போம். அவர்கள் பிரதானமாக சாகவகைராக்கள் ஸம்பந்தமான உணவுப் பொருட்களில் திருப்தியுடையவர்கள். இப்பொழுது இந்த மஹாயுத்தத்தின் பயனாக, மேனாட்டுத் தொழிலாளிகள் மாம்ஸாஹாரங்களைத் தயார்செய்து வியாபாரம் செய்வதைக் குறைத்துவருவதாக நான் கேள்விப்படுகிறேன். தற்காலம் இறைச்சிகளைப் பதனிட்டு வியாபாரம் செய்வதைக் குறைத்திருப்பதானது, பிரிடிஷ் ராஜ்யத்து ஜனங்களுக்கு ஏற்பட்ட மிகச் சிறந்த நன்மைகளில் ஒன்றாகும். இறைச்சியுண்பது குறைவதால் இராஜ்யத்திலுள்ள ஜனங்களுக்கு ஒரு பொழுதும் ஒருவித தீமையும் நேரிடாது; அதற்கு எதிரிடையாக நன்மையுண்டாகுமென்பது மிகப் பிராமாணிகர்களான சாஸ்திரவல்லோரின் அபிப்பிராயம். ஜப்பான் தேசத்தவரில் சாகபக்ஷணம் செய்யும் அரைவாசி ஜனங்களும் பல நூற்றாண்டுகளாக தேஹாரோக்கியவிஷயத்தில் மேலான நிலைமையுள்ளவர்கள் என்பது வெளிப்படை. ஜப்பானிலுள்ள இஷிகாவா (Ishikawa) என்னும் ஒரு உள்நாட்டு ஜில்லாவின் நிர்வாஹ அதிகாரிகளால் நடத்தப்பட்டுவரும் விவஸாயப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும் மாணாக்கர்கள் புசிக்கும் உணவுப்பொருட்களைப்பற்றிய விஷயத்தை நான் இங்கே ஒரு திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பதினைந்து வயதுமுதல் இருபத்தோரு வயதுவரையிலுமுள்ள மாணாக்கர்கள் அங்கு வித்தியாப்பியாஸம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய தேஹ நிறை சராசரி 141 பௌண்ட். அந்த மாணாக்கர்களில் ஒவ்வொருவனும் ஒரு மாதத்தில் சராசரியாக உபயோகிக்கும் உணவுப்பொருட்களின் விவரம் அடியில் வருமாறு :—

| | 1915௵ செப்டம்பர்மீ | | அக்டோபர்மீ | |
|---|---|---|---|---|
| அரிசி | ... 22549 கிரைன். | | 24937 கிரைன் | |
| வாற்கோதுமையும் சோதுமையும் | 754 | ,, ... | — | |
| ஸ்டார்ச் என்னும் மாப்பொருள் | 113 | ,, | ... 10 | ,, |
| சர்க்கரை | ... 206 | ,, | ... 387 | ,, |
| வீட்க்ஞுடீன் | ... 300 | ,, | ... 143 | ,, |
| மொச்சை அல்லது அவரை | 361 | ,, ... | — | |
| டோபூ (tofu) என்னும ஒருவித க்ராமணி | 1523 | ,, | ... 1848 | ,, |
| உருளைக்கிழங்கு, முள்ளங்கி முதலியவை | 5398 | ,, | ... 6043 | ,, |
| சில கீரைகளும் காளான்களும் | 90 | ,, | ... 375 | ,, |
| மிஸோ என்னும் ஒருவித பருப்புணவு | 1102 | ,, | ... 1180 | ,, |
| முட்டைகள் | ... 105 | ,, | ... 106 | ,, |
| மத்ஸியம் | ... 1138 | ,, | ... 1509 | ,, |
| கோழிக்குஞ்சு | ... 37 | ,, | ... 30 | ,, |
| இறைச்சி | ... 42 | ,, ... | — | |

மேற்கூறிய உணவுப் பொருட்களில், ஜீர்ணிக்கக்கூடாத திப்பிகள்போக மனிதரின் தேஹபோஷணைக்கு அவசியமாய் சேர்ந்துள்ள முக்கியமான ஸத்துவங்கள் பின் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| ஜீர்ணமாகக் கூடிய ப்ரோடீன் என்னும் ஸத்து | 71·67 கிரைன் | — | 82·25 கிரைன் |
| கொழுப்பு வகை | ... 9·18 | ,, | ... 11·53 ,, |
| கார்போ ஹைட்ரேட்ஸ் என்னும் கறிவஸ்துக்கள் | 708·94 | | ... 753·61 ,, |

| | | |
|---|---|---|
| காலோரிஸ் | ... 3286 | ... 3538 |
| பிராணிகளிடமிருந்து கிரஹிக்கப்படும் உணவுச்சத்து. | 1·102 | 1·9 |
| ஜங்கம ஜீவர்க்கங்களுடைய தேஹங்களிலிருந்து கிடைக்கும் ப்ரோடீன் | 8·28% ,, | 18·17% |
| சாகவர்க்கங்களிலிருந்து எடுத்த ப்ரோடீன் | 91·72 ,, | 81·83 ,, |

மேலே விவரிக்கப்பட்ட அட்டவணையானது "குட் ஹெல்த்" என்னும் சுகாதாரப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டது. இந்த அட்டவணையில் மாம்ஸாஹாரம் சிறிது கலந்திருந்தாலும், சராசரிக்கணக்கில் அவ்வுணவு மற்றவைகளிலும் அளவில் மிகவும் சொற்பமென்பது நாம் கூறாமலே விளங்கும். இதனால் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில்: ஜப்பானிய மாணாக்கர்கள் சாகாஹாரங்களிலிருந்தே சரீர போஷணைக்கு இன்றியமையாத ப்ரோடீன் என்னும் ஸத்துவத்தைப் போதுமானவளவு பெறுகிறார்கள் என்பதேயாம். இறைச்சியிலிருந்து கிரஹிக்கக்கூடிய அவ்வித ஸத்துவத்தை மத்ஸியங்களிலிருந்தே பெறுகின்றனர். இந்தியாவில் பாலை ஜங்கம ஜீவவர்க்கங்களிடமிருந்து கிரஹிக்கப்பட்டபோதிலும், அதை தோஷமாகக் கருதாததுபோலவே, மற்ற மேல்நாடு கீழ்நாடுகளில் முட்டைகளையும் மத்ஸியங்களையும் தோஷமுள்ளவைகளாகக் கருதுவதில்லை. அவ்விடங்களில் சாகபக்ஷிணிகள் என்று சொல்லிக்கொள்பவருள் சிலர் இவ்விரண்டையும் மட்டும் புசித்து வருவதுண்டு. பதார்த்ததத்துவங்களையும், மனிதருடைய தேஹக்கூறுபாடுகளையும் கசடறக் கற்றறிந்த சாஸ்திர நிபுணர்கள், மத்ஸியத்தைப் புசிப்பதும் தீமை யென்றே கருதுகிறார்கள். ஆகவே ஜங்கமமான ஜீவவர்க்கங்களின் உடலிலிருந்து கிரஹிக்கப்படும் பதார்த்தங்களை, முக்கியமாய் இறைச்சியை உணவாக உபயோகித்தால்தான் தேஹபலம் விருத்தியாகும் என்று கூறுபவருடைய பேச்சுப் பொருளில்லை யென்று நிச்சயிப்பீர்களாக.

# வைத்திய கலாநிதி.

நள௵ ஆவணி௴.

## CULTIVATION OF MEDICINAL PLANTS.

### மூலிகைகளைப் பயிரிடுதல்.

இந்தியாவில் சுதேச வைத்தியர்களில் ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய ஔஷதங்களைத் தாமே தயார் செய்துகொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றனர். ஔஷதங்களுக்கு அவசியமான மூலிகைகளை, அவரவர்கள் வஸிக்குமிடங்களுக்கு ஸமீபமாயுள்ள தோட்டங்களிலிருந்தோ வேலிக் கால்களிலிருந்தோ கிரஹித்து உபயோகிக்கின்றனர். இவ்வாறு செய்வதில் சில குறைகள் உண்டு.

(1) வைத்தியர்களுக்கு எந்த மூலிகைகள் வேண்டுமோ அவை அவசியமான ஸமயங்களில் எங்கும் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. (2) அவை முற்றிலும் சுத்தமானவையாயும், வைத்தியர்கள் குறிப்பிட்ட மூலிகைகள் அவைதான் என்று நிச்சயிக்கக்கூடியவையாகவும் இருப்பது ஸந்தேஹமாகும். (3) அவை வேண்டியவளவு கிடைப்பதும் கஷ்டமாகக்கூடும். (4) வேலிக்கால்களில் அல்லது இதர இடங்களில் தானே முளைத்து வளரும் மூலிகைகள் காலவித்தியாஸத்தினாலும், தகுந்தவாறு போஷணையின்மையினாலும் ஏற்றவாறு வீர்யங்களைப் பெறாமல் குணத்திற் பயனற்றவையாகவும் இருக்கலாம். ஆக இவை முதலிய அநேகம் குறைகளைப் போக்கி வைத்தியர்களுக்கு அல்லது ஔஷதம் தயார் செய்பவருக்கு உதவி செய்ய விரும்புபவர், மூலிகைகளைப் பயிரிடுவதற்கென்று ஒரு விவஸாயப் பண்ணையை ஏற்படுத்துவது முக்கியமான காரியமாகும். தேசாந்தரங்களில்



ஔஷதம் தயார் செய்யும் தொழிலாளிகள் தமக்கு அவசியமான மூலிகைகளைப் பயிர் செய்து வருவதற்காகப் பெரிய பண்ணைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அல்லது பிறராவது அவற்றைப் பயிர்செய்து ஸந்தேஹத்திற்கு இடமில்லாத சுத்தமான மூலிகைகளை வேண்டியவளவு அவசியமான காலங்களில் ஔஷதம் தயார் செய்பவருக்கு ஸப்ளை செய்வதுண்டு. இத்தேசத்தில், மற்றப் பயிர்களை அவசியமாகக் கருதுவதுபோல, ஔஷதங்களுக்கு வேண்டிய மூலிகைகளைப் பயிரிடுவதை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. ஆனால் வாஸ்தவமாய் அதனால் வைத்தியர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் விசேஷ நன்மையுண்டென்றும், அவ்வித விவஸாயத் தொழிலைச் செய்பவனுக்கு இலாபமும் தகுந்தவாறு கிடைக்குமென்றும் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம். இதுவிஷயத்தில் செலவு செய்யக்கூடிய சில மனிதரோ அல்லது சில கூட்டுறவுச் சங்கமோ வேலை செய்ய முன்வந்தால் அது மிகவும் உபயோககரமாயிருக்கும். இது விஷயமாய் இன்னும் சில வார்த்தைகள் இச்சந்தர்ப்பத்திற் கூற விரும்புகிறோம்:

சுதேச வைத்தியர்களுக்கு இதனால் ஸௌகரியங்கள் ஏற்படுமென்பதோடு, மேனாட்டு முறைப்படி ஔஷதம் தயார் செய்பவருக்கும் இவ்விவஸாயத்தினால் இப்பொழுது மிகவும் ஸௌகரியம் ஏற்படும். ஜெர்மனியிலிருந்து இதற்கு முன் ஏராளமான ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும் கிடைத்து வந்தன; இப்பொழுது அதற்குப் பிரஸ்தாபமேயில்லாமல் அவ்வூற்று அடைக்கப்பட்டிருக்கிறது; ஏதாவது சில சரக்குகள் அபூர்வமாய்க் கிடைத்தபோதிலும் அவற்றின் விலை தாங்கக் கூடாதவாறு ஏறியிருக்கிறது. முன்னால் வெகு விசேஷமாக உபயோகிக்கப்பட்டு வந்த ஔஷதங்களும் சரக்குகளும் இனி கிடைப்பது அரிதாகப்போய், அவற்றிற்குப் பதிலாக வேறு வஸ்துக்கள் உபயோகிக்கும்படியாய் விட்டது. ஜெர்மனியைத்தவிர, ஐரோப்பாவின் மற்றப் பிரதேசங்களில் தயார் செய்யப்படுவதாகக் கூறுகிற ஔஷதங்களும் அவற்றிற்கான சரக்குகளுங்கூட ஒன்றுக்குப் பன்மடங்கு அதிகமாக விலை கொடுத்து வாங்க வேண்டியவைகளாயிருக்கின்றன. அவை அவ்வளவு தூரத்திலிருந்து இங்கு வரவேண்டியிருப்பதால் விலை அதிகமாகிறதென்பதற்கில்லை; ஐரோப்பாவிலேயே அவற்றின் விலை மிகவும் அதிகமாய்விட்டது. வியாபாரம் ஒழுங்காக நடக்க முடியாமையோ, வேலை செய்வதற்கு மனிதரில்லாக் குறையோ, பணக்குறைவோ, அல்லது இவை அனைத்துமோ இவ்விலையேற்றத்திற்குக் காரணமாயிற்றென்று நாம் நிச்சயமாகக்கூற முடியவில்லை.

அது விஷயம் எப்படியிருந்தபோதிலும், மூலிகைகளைப் பயிரிடுவதற்கு இது ஏற்ற ஸமயம் என்று அதில் நோக்கமுள்ளவருக்கு நாம் இப்பொழுது அறிவிக்க வேண்டியது நலமென்று கருதுகிறோம். அவ்விதமான ஒரு நூதனத்தொழிலை ஆரம்பிப்பதற்கும், அதைச் சீர்திருத்தி விருத்தி செய்துகொள்வதற்கும், அதனால் நல்ல இலாபம் பெறுவதற்கும் இப்பொழுது வேண்டிய ஸௌகரியமுண்டென்று நமக்குத் தோன்றுகிறது. அவசியமானால், மேனாட்டாருடைய முறைப்படித் தயார் செய்வதற்கான ஔஷதங்களுக்கு வேண்டிய மூலிகைகளுக்கு ஒரு விவஸாயப் பண்ணையும், சுதேசவைத்தியர்களுடைய ஔஷதங்களுக்கு வேண்டிய மூலிகைகளுக்கு மற்றொரு பண்ணையும் ஆக இரண்டுப் பிரத்தியேகமான பண்ணைகளை ஏற்படுத்தலாம். இக்காரியத்தை இத்தேசத்தியவர் இப்பொழுதே ஆரம்பித்தால், பிறகு யுத்தம் முடிவடையும்

காலத்தில் பிறதேச வியாபாரிகளுடன் போட்டியாக வேலை செய்வதற்கும் ஸௌகரியங்கள் ஏற்படும்.

விவஸாய சாஸ்திரத்தில் நிபுணரான அதிகாரிகளிடம் ஆலோசித்து, எந்தெந்த காலங்களில் எந்தெந்த மூலிகைகளை எவ்வித நிலங்களில் பயிரிடலாமென்று தெரிந்துகொண்டும், ஆராய்ச்சி செய்யவும் ஓஷதிஸ்வரூபங்களை யறியவும் தகுந்த சாஸ்திர வல்லோரின் உதவியைக் கொண்டும் இவ்வித கிருஷியை காலக்கிரமத்தில் சீர்திருத்தமடையச் செய்யலாம்.

இவ்வாறு மூலிகைகளைப் பயிர் செய்வதற்கென்று சிலர் முன் வந்து காரியம் நிறைவேறுமானால், நமது தேசத்தில் சுதேச வைத்தியர்கள் ஔஷதம் செய்துவரும் பிராசீன முறை ஒருவித சீர்பாட்டை அடையக்கூடு மென்பதோடு, மேனாட்டு முறைப்படி அவசியமாயுள்ள ஔஷதங்களைத் தயார் செய்வதற்கும் சிலர் முன் வந்து அத்தொழிலும் மற்றொரு புறம் இத்தேசத்தில் விருத்தியாகக் கூடுமென்பது எமது துணிபு.

---

## CAPTAIN RUSSEL ON MILK-SUPPLY.
## பால் ஸப்ளையைப்பற்றி காப்டன் ரஸ்ஸல்.

தென்னிந்திய மாகாண வகுப்பைச்சேர்ந்த ஸெஞ் ஜான் அம்புலென்ஸ் அஸோஸியேஷன் என்னும் ஸங்கத்தாருடைய ஆதரணையில், எச். இ. கவர்னரின் அக்கிராஸனத்தின்கீழ் காப்டன் ரஸ்ஸல் அவர்கள் சென்னையில் பால் ஸப்ளை யென்கிற விஷயமாகச் செய்த உபந்நியாஸம் அனைவராலும் குறிப்பிடக் கூடியதாகும். ஆகவே அவர் செய்த உபந்நியாஸத்தின் ஸாராம்சத்தை இதனடியில் எழுதுகிறோம்:—

குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் ஆஹார வகைகளில் பால் மிகவும் அவசியமான வஸ்து. சென்னையில் பால் ஸப்ளை செய்யப்படுவதைக்கவனியுங்கள். 3587 மாடுகளுக்கு 581 பேர்கள் ஸொந்தக்காரராயிருக்கின்றனர். அதாவது சராசரி ஒவ்வொருவனுக்கு எழு மாடுகள் வீதம் உண்டு. நகரத்தில் 531 மாட்டுத் தோழங்கள் அவ்வவ்விடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. அக்கட்டடங்களும் பூமிகளும் சுகாதாரவிஷயத்தில் திருப்திகரமாயில்லை. மாட்டுத் தொழுவங்களில் சுவருகளைச் சுற்றிலும் வறட்டிகளைத் தட்டி, தரைகளையும் சாணம் மூத்திரங்களால் ஈரமாக்கி, ஈக்களும், கொசுக்களும் மொய்த்துக் கொள்ளும்படி அசுத்தமாக வைத்திருக்கின்றனர். ஜன நெருக்கமுள்ள பிரதேசங்களிலேயே பெரும்பாலும் இத்தோழங்கள் காற்றோட்டத்திற்கும் வகையில்லாதபடி விகாரமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. பசுக்களுக்கும் மனிதரைப்போல் சுவாஸத்திற்கு நல்ல வாயு வேண்டும். பசுக்கள் மண்தரையில் சாணம் முதலியவற்றின்மேல் காட்டப்படுகின்றன. பசுக்களைக் கறக்கப்போகும்போது கூட கழுவிக் குளிப்பாட்டுவதில்லை. அஸஹ்யமான பன்றிகளையும் மாடுகளையும் சில விடங்களில் ஒரே இடத்தில் கட்டி வைக்கிறார்கள். பசுக்களுக்குவேண்டிய வைக்கோல்களையும்புற்களையும் சாணம் முதலிய அழுக்குகள் சேர்ந்துள்ள இடங்களில் சேர்த்து வைக்கிறார்கள். பசுக்கள் சில ஸமயங்களில் மலங்களையும் தின்றுவரும்படி அவற்றை வேணுமென்றே விட்டுவிடுகின்றனர். கன்றுக்குட்டிகளைப் பட்டினிபோட்டு சாக அடிப்பதும் ஸஹஜமாய்விட்டது. பால் கறக்கும் முறையோ மிகக் கேடானது. சென்னையில் பால் கறக்கும் முறையை ஊன்றிக் கவனித்தால், பாலில் அளவற்ற அசுத்தங்கள் எளிதில் சேரும் என்று அறியலாம். பால் கறப்பவன், கறக்கப் போகையில் தன் கைகளைக் கழுவிக்கொள்வதில்லை. பாற்கறக்கும் பாத்திரங்களை வெந்நீர்விட்டுக் கழுவும் வாடிக்கையே கிடையாது; அப்படி அவற்றைக்கழுவுவதாயிருந்தால், மலினமான கிணற்று ஜலத்தினால் ஏதோ ஒருவாறு அலம்பிவிடுகின்றனர்.

கிராமாந்தரங்களிலுள்ள பால்காரர்கள் விஷயம் கேட்கவேண்டியதேயில்லை. அவர்களின்மேல் சுகாதார அதிகாரிகள் அதிகாரத்தைச் செலுத்துவதில்லை; அப்படிப்பட்ட எற்பாடும் கிடையாது. வெகு மலினமான கொட்டகைகளில் மாடுகளை அடைத்து வைக்கின்றார்கள். கிராமங்களிலிருந்து நகரத்திற்குக் கொண்டுவரப்படும் பால் அசுத்தம் நிரம்பியதாயிருக்கும். பாலைக் கொண்டுவருவதற்கென்று ரெயில்வேக்களில் பிரத்தியேகமான வண்டிகளாவது அறையாவது கிடையாது. அசுத்தமான 3-வது வகுப்பு



வண்டிகளில்தான் அவர்கள் பாலைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. பம்பாயில் ஸப்ளை செய்யப்படும் பால்களில், 100 - க்கு 80 பங்கும் கலப்பான அசுத்தப்பால் என்றும், பெங்களூரில் 78-பங்குஅசுத்தமென்றும் பரீக்ஷிக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலோ எப்பொழுதுமே சுத்தமான பாலைப் பெறுவது அஸாத்தியம் என்று தெரியவருகிறது. அதிக விலை கொடுத்தால் கலப்பில்லாத மஹா சுத்தமான பால் கிடைக்குமென்று எண்ணுவது பிரயோஜனமற்ற விஷயம்.

சென்னை நகரில் ஸப்ளைசெய்யப்படும் பால்களில் வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்களை எளிதில் காணலாம். சோதனைகள் செய்துபார்த்ததில், அரைத் தேகரண்டிய யளவான அவ்வளவு சொற்பப் பாலில் சுமார் 12 இலக்ஷம் நுண்ணுயிர்கள் இருப்பதாகவும், அவற்றில் பெரும்பான்மையான உயிர்களும் வியாதிக்குக் காரணமானவை யென்பதாகவும் தெரிய வந்தது. மாடுகளில் அநேகம் க்ஷயரோகமுள்ளவையாகவும், சற்றேறக்குறைய எல்லா மாடுகளுக்குமே ஒன்றில்லாவிட்டால் மற்றொரு வியாதியாவது இருப்பதாகவும் பரீக்ஷித்தறியப்பட்டிருக்கிறது. சிசுமரணங்களில் நூற்றுக்கு இருபத்தைந்து பாசம் சீதபேதியினாலும் அஜீர்ணத்தினாலும் ஸம்பவிக்கிறதென்றும், அவ்வித கோளாறுகள் கலப்பான பால்களைப் போட்டுவதாலேயே உண்டாகின்றனவென்றும் பரீக்ஷித்தறியப்பட்டிருக்கிறது. இந்தியர்கள் பாலைக் காய்ச்சாமல் உபயோகிப்பதில்லை; அது ஒரு மிகவும் சிறந்த எற்பாடு; ஆனால் காய்ச்சுவதற்குமுன் பாலில் கிருமிகள் சேருவது வாஸ்தவமாயினும், காய்ச்சிய பிறகே கிருமிகளுக்கு அவ்வித பால் முதலியவற்றில் அதிக நாட்டம் இருக்குமாகையால், கொதிக்கவைத்த பிறகு அதை நல்ல பாத்திரத்தில் ஊற்றி நன்றாக மூடிவைக்க வேண்டியது அவசியம்.

சென்னையில் பால்ஸப்ளை செய்பவரில் பெரும்பாலோரும் ஏழைகள். அவர்கள் மாடுகளைக் கட்டுவதற்கு எற்றவாறு சுத்தமான தோழங்களைக் கட்டிக் கொடுத்து, அவற்றில் மாடுகளைக் கட்டிவரும்படி எற்பாடு செய்யவேண்டியது கார்பரேஷனுடைய கடமையாகும். சுகாதார அதிகாரிகள் பசுமாடுகளையும் அவற்றினிடமிருந்து கறக்கப்படும் பாலையும், மாட்டுத் தோழங்களையும் சுத்தமாக வைப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய முன்வராதவரையில், எளிய பால்காரர்கள் நிர்மலமும் ஒழுங்குமான முறையில் பால்ஸப்ளை செய்யும்படி சீர்திருத்த மேற்படுவது ஆகாத காரியம். கார்பரேஷனோ, கூட்டுறவுச் சங்கங்களோ மாதிரிக்கு மாட்டுத் தோழங்களை விசாலமான நிலங்களில் அமைத்து, அவற்றிற்கு வெகு சொற்பமான வாடகையை எற்படுத்தி, மாடுகளை அவ்விடங்களில் கட்டிவரும்படி எற்பாடு செய்வது விரும்பக் கூடியதாகும். அத்தோழங்களின் நிர்வாஹத்தில் கார்பரேஷனுக்கு அதிகாரம் இருக்கவேண்டியது அவசியம். கூட்டுறவுச் சங்கங்கள் எற்பட்டு இக்காரியத்தில் முயன்றால் அநேகம் தொழுவங்களைக் கட்டி நிர்வஹித்து, ஜனங்களுக்கு நல்ல ஸௌகரியங்களை இவ்விஷயத்தில் செய்துவரலாம்.

இவ்வாறு காப்டன் ரஸ்ஸல் உபந்நியஸித்த விஷயம, அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேயருக்கு ஒருவாறு விந்தையாகத் தோன்றியது. ஆகிலும், நம்மவர் இவ்விதமான ஸம்பவங்களை நாள்தோறும் கண்ணுறப் பார்த்து வருவதால், அது நமது ஜனங்களுக்கு விசேஷ அருவருப்பான விஷயமாகத்தோற்றாது என்று சொல்லலாம. இவ்விதம அழுக்குகளில் பழகுவது வழக்கத்தில வந்துவிட்டதால், அதை நிவ்ருத்திக்கச் செய்வது எளிதில ஆகக்கூடியதாகத் தோற்றவில்லை. பால்காரர்கள் ஏழைகள் என்றும், ஆகவே அவர்கள் நல்ல இடங்களில் பசுக்களைக் கட்டி, பாலை சுத்தமாக ஸப்ளைசெய்ய முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்றும காப்டன் ரஸ்ஸல் சொல்லுகிறார். ஆனால், பால்காரர்கள் ஏழைகளாயில்லாமல் கூடியவரையில் பணக்காரர்களாயிருந்தபோதிலும் அவர்களைக்கொண்டு சரியாகவும் ஒழுங்காகவும் பால்ஸப்ளை செய்யச்சொல்வது எளிதல்லவென்றே அபிப்பிராயப்படுகிறோம். அவர்களுக்குப் படிப்பில்லை; நாகரீகம தெரியாது. ஆகவே சுகாதாரத்தின அருமை பெருமைகளை அவர்களுக்கு அறிவிப்பது ஸாத்தியமில்லை. இந்தியரில படித்து நாகரிகமுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்பவரிடமே சுகாதார முறைகளைக் காண்பது கஷ்டமாயிருக்கையில் பால்காரர்கள் விஷயத்தில் நாம் என்ன சொல்லக்கூடும்? படித்தறிந்த மனிதர்களில் சிலர் சேர்ந்து, கூட்டுறவுச் சங்கம் எற்படுத்தி, அச்சங்கமே பசுக்களை வைத்துக் காப்பாற்றி பால் ஸப்ளை செய்வதை முற்றிலும நிர்வஹிப்பார்களானால், அப்பொழுதுதான் காப்டன் ரஸ்ஸல் கூறிய விதமாக ஏதேனும் ஒருவித ஒழுங்கான முறை எற்படக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

# FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

காலில் மணிக்கட்டுக்கு அடுத்த மேற்பாகத்து எலும்பு ஒடிதலும் அதன் சிகித்ஸையும்:—இங்கு ஒரு எலும்போ இரண்டு எலும்புகளும் ஒன்ருகவோ ஒடியக்கூடும். இரண்டு எலும்புகளும் ஒடிந்தால் பாதத்தில் குதிகால் ஊன்றமுடியாமல் இரண்டு பாரிசங்களிலும் வீக்கம் உண்டாய் கணுக்கால் துவண்டாற்போல் வளைந்து காணும். ஆனல் ஸாதாரணமாய் சிறிய எலும்புதான், (அதாவது அநுஜங்காஸ்த்தி) அடிக்கடி ஒடிவது வழக்கம்; அப்பொழுது காலில் ஒழுங்கீனம் பார்வைக்கு அவ்வளவாகத் தோற்ருது; முக்கியமாய் ஒரு பக்கம் மாத்திரம் வீங்கியிருக்கும். அந்த அபிகாதத்தை ஸாதாரணமாய் சிலர் சுளுக்கென்றும், கணுக்காலில் எலும்புப் புறட்சியென்றும் பிரமிப்பதுண்டு.

இவ்விதமான அஸ்த்திபங்கத்தில் பக்கம் ஒன்றுக்கு ஒரு சிராய் வீதம் இரண்டு சிராய்களைக் கொண்டு பந்தனம் செய்யவேண்டும். பிணியாளி நிமிர்ந்தாவது படுக்கலாம், அல்லது எலும்பு ஒடிந்த கால் மேலே இருக்குமாறு பக்கவாட்டிலாவது படுக்கலாம், ஜங்காஸ்த்தி யென்னும் காலின் பெரிய எலும்பு அப்பொழுதும் காலைத் தாங்கி உறுத்துவதாகத் தெரிந்தால், ப்ளாஸ்டர் ஆப் பாரிஸ் என்னும் வஸ்துவினல் செய்த சிராயை அப்பக்கத்தில் வைத்துக் கட்டிவிடலாம்; அதனல் பிணியாளிக்குக் காலைப் படுக்கையில் வருத்தமின்றி நீட்டுவதற்கு ஸௌகரியமுண்டாகும். காலில் அநுஜங்காஸ்த்தி யென்னும் சிறிய எலும்பு ஒடிந்துவிட்டால், அல்லது கணுக்காலுக்கு அருகில் எவ்விதமான அபிகாதம் ஏற்பட்டபோதிலும், சிராய்களை ஒரு மாதத்திற்குமேல் உபயோகிக்கக் கூடாது; அவ்விதம் உபயோகித்தால், கணுக்காலின் பூட்டு விறைத்துக்கொண்டு நிற்கும். கடைசியில் கணுக்காலை தினந்தோறும் மெதுவாக அசைத்துவர வேண்டும்.

கால் எலும்பு[1] ஒடிதலும் அதன் சிகித்ஸையும்:—ஜங்காஸ்த்திகள் என்னும் கால் எலும்புகளில் ஒன்றுமட்டுமோ அல்லது இரண்டும் ஒருமிக்கவோ அவற்றின் எந்த பாகத்திலாவது ஒடிந்துவிடலாம். இரண்டு எலும்புகளும் ஒடிந்துவிட்டால், ஒடிந்தவிடத்தில் அவயவம் ஒழுங்கீனமடைந்திருப்பதை நன்ருகக் காணலாம்; அவ்விடத்தில் வீக்கமும், காலை அசைக்கையில் தாங்கமுடியாத வலியும், நிற்பதற்குத் திறமையின்மையும் ஸம்பவிக்கும். சில ஸமயம் மிருதுவான பாகத்தில் வீக்கம் வெகு அதிகமாயுண்டாக, அதனல் எலும்பு ஒடிந்திருப்பது நன்கு விளங்காமல், எலும்புப் புறட்சி யுண்டானதாகவும் பிரமிக்கவேண்டி நேரிடும்.

சிகித்ஸை:—வீக்கம் மிக்க அதிகரித்திருக்கும்போது, எலும்பு ஒடிந்திருப்பது நன்ருக விளங்காமலிருக்குமானல், கூடுமானவரையில் காலை அதற்கு இயற்கையான நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும்; பிறகு மெத்தை அல்லது சும்மாடிடப்பெற்று மிருதுவாயிருக்கும் சிராயின்மேலாவது, தலையணையின் மீதாவது மெதுவாகக் காலை அமர்த்தி, அகன்ற மடிப்பான பந்தனவஸ்திரத்தினல் (broad fold bandage) அல்லது விசாலமான நாடாக்களால் அதிகமாய் அழுத்தாமல் கட்டிவிடவேண்டும். இப்பிணியாளியை ஒருக்களித்துப் படுக்கச்செய்வது உசிதம்; அப்படிச் செய்வதால் முழங்காலை மடித்துக்கொண்டு, பிணியாளி, அபிகாதமுண்ட காலை ஸௌகரியமாய் நீட்டிக்கொண்டிருக்க வகையுண்டு. பிறகு வீங்கியிருக்கிற பாகத்தில் சில நாட்கள் வரையில் நன்ருகச் சூடான ஒற்றிடங்களைக் கொடுத்துவரவேண்டும்; இவ்விதம் ஒற்றடங்கொடுத்து வருகையில், வீக்கம் கிரமமாகக் குறைந்துவரும். அப்பொழுது பரீக்ஷித்து, எலும்பின் ஒடிந்த பாகங்கள் ஏற்கனவே தகுந்தவாறு ஒன்ருகச் சேராத பக்ஷத்தில், அவற்றை நன்ருகக் கூட்டி, அடியிற் கூறப்படுமாறு சிராய் முதலியவற்றை உபயோகித்து பந்தனம் செய்யவேண்டும். இதன் பிறகுக் கூறப்படும் முக்கியமான சிகித்ஸையானது, கைதேர்ந்த சஸ்திர சிகித்ஸகரைக்கொண்டுதான் நிறைவேற்றப்படவேண்டும். பாதத்தையும் கணுக்காலையும் கெட்டியாகவும் நடுக்கமில்லாமலும் பற்றிக்கொள்ளவேண்டும்; இப்படிச் செய்யும்போது உள்ளங்காலில், அதற்கு ஸமகோணமாயுள்ளதும், பாதத்தில் அமருமிடத்தில் மெத்தையுடன் கூடியதுமான

1. கால் எலும்பு என்பதால்—இங்கு முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையிலுள்ள எலும்புகள் குறிக்கப்படுகின்றன.



ஒரு சிராயை (rectongular foot piece) வைத்துப் பிடித்துக்கொள்வது நலம்; பிறகு காலை, இயற்கை நிலைமைக்கு வரும்வரையில், ஜாக்கிரதையாகப் பிடித்து இழுக்கவேண்டும்; காலின் உட்புறத்தில் ஒரு சிராயும், வெளிப்புறத்தில் ஒரு சிராயும் வைத்துக்கட்டவும்; இச்சிராய்கள் முழங்காலுக்கு அப்பாலும், பாதத்தைத் தாண்டியும் நிற்குமாறு அவ்வளவு நீளமுள்ளவைகளா யிருக்கவேண்டும். பந்தனம் செய்கையில் முதலில் (1) ஒடிந்த பாகத்துக்கு மேலே ஒரு கட்டும், (2) கீழே ஒரு கட்டும், (3) முழங்காலுக்கு அடுத்தாற்போல மேலே ஒரு கட்டும், (4) இரண்டு கணுக்கால்களைச் சுற்றிலும் ஒரு கட்டும் இடவேண்டும்; (5) இறுதியில் இரண்டு முழங்கால்களையும் சேர்த்து அகன்ற மடிப்பான பந்தனவஸ்திரத்தினல் ஒரு கட்டும் போட்டுவிடவும். (சென்ற ஸஞ்சிகையில் 264-வது பக்கத்தில் E. என்ற படத்தைக் கவனிக்கவும்.)

இரண்டாவது சிராய் கிடைக்காவிட்டால், அல்லது பிணியாளி ஸ்திரீயாக விருந்தால், அப்பொழுது எலும்பொடிந்த காலில் வெளிப்புறத்தில் மட்டும் ஒரு சிராயை வைத்து, உட்புறத்தில் சிராய் வைப்பதற்குப் பதிலாக, மற்ருெரு காலையும் அபிகாதப்பட்ட காலோடு சேர்த்து பந்தனம்செய்யதுவிடலாம் (சென்ற ஸஞ்சிகையில் 264-வது பக்கத்தில் D. என்கிற படத்தைக் கவனிக்கவும்.)

சென்ற ஸஞ்சிகையில் அச்சிடப்பட்டுள்ள D. என்கிற படமும், E. என்கிற படமும், காலெலும்பு ஒடிந்தவன் மல்லாந்துப் படுத்திருக்கையில் பந்தனம் செய்யப்படு முறையைக்குறிப்பிடுகின்றன. முன்கூறப்பட்டபடிசிலருக்கு ஒருக்களித்துப் படுத்துக்கொள்வது ஸௌகரியமாயிருக்கும்; அப்பொழுது முழங்காலுக்கு மேல் நீண்டிருக்கக்கூடிய சிராய்களை உபயோகிக்கக் கூடாது; மேலும் கால் தரையில் படியக்கூடிய பக்கத்தில் பந்தனமுடிகளையிடாமல் அவற்றை காலின் உட்புறத்தில் கட்டி முடியவேண்டும்.

இக்கட்டுகளைப் பிரயோகித்து மூன்று வாரங்கள் சென்றதும், வீக்கம் முற்றிலும் தணிந்திருக்குமானல், அஸ்த்திபங்கம் உண்டான இடம் கெட்டியாகவும் பலம் பெற்றதாகவும் தெரியவருமானல், பிஷ்டபந்தனத்தைப்[1] பிரயோகிப்பது நலம். இந்த பந்தத்தை அதுமுதல் பதினைந்து நாட்களோ அல்லது மூன்று வாரங்களோ காலில் வைத்துக் கட்டியிருக்கலாம். பிஷ்டபந்தனம் உலர்ந்துவிட்ட பிறகு, கக்ஷதண்டத்தை (crutches) ஊன்றிக்கொண்டு மெதுவாக நடக்க ஆரம்பிக்கலாம்; ஆனல் எலும்பொடிந்த காலில் (குறைந்தது எழெட்டு வாரங்கள் வரையில்) பளுவைப்போட்டு ஊன்றி நடக்கக்கூடாது. காலின் மேல் முன்புறத்திலுள்ள சர்மம் மிகவும் மெல்லிதாயிருப்பதால், ஜங்காஸ்த்தியென்னும் பெரிய காலெலும்பு ஒடிந்திருக்கையில், அதை வெகு ஜாக்கிரதையாகச் சிகித்ஸை செய்யவேண்டும்; ஏனெனில், ஜங்காஸ்த்தியின் ஒடிந்த முனையானது, சிகித்ஸையில் அஜாக்கிரதையாகக் கையாளப்படுமானல், மெல்லிய சர்மத்தைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டு, அதனல் ஸாதாரண அஸ்த்திபங்கமானது ஸந்நிபாதாஸ்திபங்கமாக மாறி மிகுந்த அபாயம் ஸம்பவிக்கும்.

1. பிஷ்டபந்தனம்—இதைப்பற்றி வைத்திய கலாநிதியின் சென்ற ஸஞ்சிகையில் 263-வது பக்கத்தில் விவரம் காண்க.

2. ஸாதாரண அஸ்த்திபங்கத்தைப்பற்றி வைத்திய கலாநிதியின் சென்ற வைகாசிமாத ஸஞ்சிகையில் 225-வது பக்கத்திலும், ஸந்நிபாதாஸ்த்தி பங்கத்தைப் பற்றி சென்ற ஆனிமீ ஸஞ்சிகையில் 242-வது பக்கத்திலும் விவரங்களைக் காண்க.

## DRUGS AND MEDICINES.

### ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

#### பப்பாளி.

இந்த மரம் கப்புக்கிளைகள் இல்லாமல் ஒழுங்காக வளர்ந்து, பனைமுதலியவைகளைப்போல் மட்டைகளையீன்று, கண்டம் கண்டமான இலைகளுடன் கூடியிருப்பதைக் கண்டு அனைவரும் இதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். இது இந்தியாவில் எங்கும் ஸாதாரணமாய் பயிராகும் மரம்.

பழுக்காத பப்பாளிக்காயை நசுக்கிச் சார் பிழிந்தால் அது ஒருவித பாலைப்போலிருக்கும்; இச்சாற்றை வயிற்றிலுண்டானக் கிருமிகளை, முக்கியமாய்க் குண்டு கிருமிகளை அழிப்பதற்கு உபயோகித்தால் நல்லபலன் உண்டாவதுண்டு. ஸாதாரணமான நடுப்பிராயத்தில் இருப்பவர்களுக்கு அரைப் பலம் எடை வீதம் இதை உள்ளுக்குக் கொடுத்துவரலாம். இந்த இரஸமானது அப்பொழுதே புதிதாகப் பிழிந்தெடுக்கப்பட்டதாயிருந்தால், அரைப்பலம் சாறுக்கு ஸமயெடை தேனும் இரண்டு அவுன்ஸ் கொதிக்கிற ஜலமும்சேர்த்து அனைத்தையும் நன்றாகக் கலக்கவேண்டும். ஆறிய பிறகு இதைமுற்றிலும் உட்கொண்டுவிடவும். பிறகு இரண்டுமணிநேரத்திற்கெல்லாம் அரைத் தேக்கரண்டியளவு எலுமிச்சம்பழச்சாறு கலந்த ஆமணக்கெண்ணெயை ஒருபலம் அளவில் உட்கொள்ளவேண்டும். இம்முறைப்படி அடுத்து இரண்டுநாள் அதை உபயோகித்து வருவது அவசியம். மூன்று வயது முதல் ஏழு வயது வரையிலுமுள்ள குழந்தைகளுக்கு முற்கூறியுள்ள அளவில் அரைவாசி கொடுத்தால் போதுமானது. மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டியளவுக்குச் சற்றுக் குறைவாகக் கொடுக்கலாம். இதை உபயோகிக்கையில் சிலருக்கு வயிற்றுவலி உண்டாகக்கூடும்; அப்பொழுது சர்க்கரையும் ஜலமும் கலந்தாவது, சர்க்கரையும் பாலும் கலந்தாவது சாப்பிடலாம்.

---

#### சீமை சோம்பு.

இது வருஷத்திற்கு ஒருமுறை பயிராகும் செடி. இதன் கனிக்காக இதைப் பயிரிடுவது வழக்கம்.

(1) இதன் கனியானது வேதனைகளை அடக்குவதற்காகவும், நறுமணமுண்டாக்குவதற்காகவும் இதர இதர ஔஷதச் சரக்குகளுடன் கூட்டி உபயோகிக்கலாம். வயிற்றுப்பொருமல், வயிற்றுநோய், மற்றும் அனவபோன்ற வேறுவித வயிற்றுக்கோளாறுகள் முதலியவற்றில் உபயோகிக்க இது சிறந்த ஔஷதம் (2) இதிலிருந்து ஒருவித தைலம் இறக்கப்படுவதுண்டு, இத்தைலத்தை இரண்டுமுதல் ஆறு துளிகள் வரையில் சர்க்கரையில் கலந்து முற்கூறிய கோளாறுகளிலேயே உபயோகிக்கலாம். (3) இச்சரக்கைபோட்டு ஒருவித தீனீர் இறக்கலாம். இதை வயிற்றுவலி முதலிய வேதனைகளின் நிவ்ருத்திக்காக நன்கு உபயோகிக்கலாம்; குழந்தைகளுக்கு இதை விசேஷமாய் உபயோகிக்கலாம். (4) விரேசந உப்புகளோடு கலந்து அநுபானமாக உபயோகிக்க இது ஏற்றவஸ்து. இதை ஒன்று அல்லது இரண்டு அவுன்ஸ் அளவில் உட்கொள்ளலாம்.

---

#### வயிற்றுப்பஸத்திற்குக் கைகண்ட மருந்து.

| | | |
|---|---|---|
| முரங்கப்பூ (நிழலில் உலர்த்தியது) | பலம் | ½ |
| வாதகாராண இலை ஷை | ,, | 1 |
| சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு | ,, | ¼ |
| சர்க்கரை. | ,, | 1 |

சர்க்கரையைத் தவிர மற்றச் சரக்குகளை இடித்து வஸ்திர காளநம்செய்து, பிறகு சர்க்கரையைச்சேர்த்துக் கொள்ளவும். இது ஒரு வேளைக்கு உபயோகிக்கக்கூடிய ஔஷதம் இதைப் போதுமானவளவு நெய்விட்டுக் குழைத்து உட்கொள்ளவும். ஒருதடவை நன்றாக விரேசனமாகும். அப்படி ஆகாவிட்டால் காலையிலும், பகலிலும், அவசியமானால் மூன்றாவது தடவையாக மாலையிலும் இதே அளவாக இவ்வௌஷதத்தைச் சாப்பிடலாம். ஒரு தடவை மலம் தாராளமாக வெளியானதும் வயிற்றுப்பஸம் அல்லது பொருமலுடன் கூடிய வேதனை சாந்தமாகும். அஜீர்ணமும் தணியும்.

---

#### நேத்திரத்தின் துர்மாம்ஸ வளர்ச்சியில் கோய்னு.

நேத்திரத்தின் இரைப்பைகளில் உண்டாகும் துர்மாம்ஸ வளர்ச்சியென்று வழங்கப்படும் வர்த்மரோகத்தில் (Conjuntivitis) ஜான் ட்வீடி (John Tweedy) என்பவர் கொய்னுவைக் கரைத்து, அந்த திரவத்தை நேத்திரத்தினுள்விட்டு நாள்தோறும் கழுவிவருவது நலம் என்று கூறுகிறார். முக்கியமாக வெகுவிரைவில் தொற்றுங்குணமுள்ள நேத்திரவியாதிகளில் கொய்னு கரைத்த ஜலம் மிக்க உபயோககரமானது. ஆனால், இதற்கு உபயோகப்படுத்தும் ஜலம் நன்கு வடிக்கட்டி, சொதிக்கவைத்த தாயிருக்கவேண்டும் —New york Medical Journal.

---

#### க்ளோரோபாரமும் ஆதபமூர்ச்சையும்.

இனி ஸாத்தியமில்லையென்று கைவிடப்பட்ட அநேகம் கேஸுகளில் (வெயிலின் உஷ்ணத்தைத் தாங்காமலுண்டான ஸந்நிபாத மூர்ச்சையில்) டாக்டர் ஜி. ஸி. ஹான்ஸன் (Dr Geo. C. Hanson) என்பவர் ஒருவித புதிய சிகித்ஸையைச் செய்து நல்ல பலனைக்கண்டதாக அறிவித்திருக்கிறார். இனி பிராணன் நிற்காது என்று நிச்சயிக்கப்பட்ட நிலைமையில் க்ளோரோபாரத்தைக் கொஞ்சம் உபயோகித்தார்; அப்பொழுது சில நிமிஷத்திற்குள் நாடிநடையும் உடற்சூடும் விருத்தியாகத் தொடங்கின. வெகு சீக்கிரத்தில் திருப்திகரமான குறிகளெல்லாம் காணத்தலைப்பட்டன. இப்படிச்செய்து அரைமணி ஸாவகாசத்திற்கெல்லாம ஸாதாரணமாகச் செய்யக்கூடிய சீதோபசார சிகித்ஸைகளைச் செய்துவந்தார். இந்த சிகித்ஸையைப் பிரயோகித்த ஒவ்வொரு கேஸும் தவறாமல் குணப்பட்டுவிட்டது:—Life and Health.

---

#### ஒற்றைத் தலைவலியில் நாபி.

சுத்திசெய்த நாபியில் ¼-பலம் எடுத்து, 2-பலம் ஆமணக்கெண்ணெயில் சேர்த்து, நாபி முற்றிலும் பொரிந்துவிடும்வரையில் காய்ச்சவும். பிறகு அந்த எண்ணெயை வடிக்கட்டி, அதில் ஒரு குன்றுமணியெடை பச்சைக்கற்பூரம் சேர்த்துக் கலக்கி, மூடியிட்ட ஒரு கண்ணாடிக்குப்பியில் வைத்துக்கொள்ளவும். இந்த எண்ணெயில் சிறிதளவு எடுத்து வாத ஸம்பந்தமான ஒற்றைத் தலைவலியில் (Neuralgia), வலியிருக்குமிடத்தில் தேய்த்துவர, நோய் தணிவடையும் என்று ஒரு வைத்தியர் கூறுகிறார்.

---

#### பனிக்கட்டியிட்ட உப்புநீரும் வர்த்ம ரோகமும்.

வர்த்மரோகம் மேஹஸம்பந்தத்தினால் உண்டாய்* உக்கிரமான நிலைமையை அடைந்திருக்கையில் பனிக்கட்டியிட்ட உப்புநீரை மேலுக்கு உபயோகிப்பது மிகப் பிரயோஜனகரமாயிருக்கிறதென்று டாக்டர் எட்வர்ட் B. ஹெச்குள் (Edward B. Heckel) என்பவர் கூறுகிறார். இந்த வியாதியின் சிகித்ஸையில் பனிக்கட்டியை மெத்தைபோன்ற உபகரணத்தின் (Ice-pad) மூலமாய் உபயோகிக்கும் வழக்கம் வெகுநாட்களாயிருந்துவருகிறது. அதிக குளிர்ச்சியானது நுண்ணுயிர்கள் வளர்வதற்கு இடங்கொடுப்பதில்லை யென்கிற கோட்பாட்டின்படி இச்சிகித்ஸை செய்யப்பட்டு வருகிறது. இக்கோட்பாட்டையும், மேஹக்கிருமிகள்‡ ஆழ்ந்த தாதுக்களில் பிரவேசிக்காமல் ஸாதாரணமாய் மேல்வரிசையிலுள்ள தாதுக்களிலேயே (Superficial tissues) காணப்படுகின்றனவென்றும் கொள்கையையும் ஆதாரமாகக்கொண்டு பனிக்கட்டியிட்ட ஸாதாரண உப்புநீரை இக்கனவான் சில பிணியாளிகளுக்கு உபயோகித்தார். உக்கிரமான மேஹஸம்பந்தமான வர்த்தமரோகத்தில் இது சிலாக்கியமான சிகித்ஸையென்று அவர் சிபார்சு செய்கிறார். பனிக்கட்டியிட்ட உப்புநீர் எவ்வித தீங்கையும் உண்டு பண்ணாதது என்றும், நன்கு உபயோகமாகக்கூடிய கிருமிஹரமானது என்றும், எளிதில் பிரயோகிக்கக் கூடியதென்றும், நன்றாகப் பரிசோதிக்கப்பட்டு ஏற்பட்ட உத்தம சிகித்ஸையென்றும் அவர் கூறுகிறார்:—Medical Times.

---

* கண் இமைகளுக்குள் உண்டாகும் ஒருவித சதை வளர்ச்சி வர்த்மரோகம் எனப்படுகிறது. Gono-coccic Conjunctivitis என்கிற வியாதி மேஹஸம்பந்தமான வர்த்மரோகமாம். ‡ மேஹக் கிருமிகள்-Gono-co-cci.

## CORRESPONDENCE.

### கடிதங்கள்.

> கலாநிதியைப் படிப்பவரில் சிலர் நம்மைக் கேட்டுக் கொண்டதற்கிணங்கி ஸந்தேஹ வினாவிடைகளுக்குப் பதிலாக இத்தலையங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் கீழ் ஸந்தேஹ வினாவிடைகளும், அந்தந்த வைத்தியர்முதலியவர்கள் அனுப்பும் கடிதங்களும் குறிப்புகளும பிரசுரிக்கப்படும்.

#### வினா 55. வாற்கோதுமைக் கஞ்சி.

“ அன்பார்ந்த ஐயா,

வாற்கோதுமைக் கஞ்சியைக் குடித்துவருவதால், தேஹாரோக்கியம் விருத்தியாய், பலமும் செழித்து வரும் என்பது வாஸ்தவந்தானே ? அதற்குள்ள வைத்திய ஸம்பந்தமான குணங்களை வைத்திய கலாநிதியின் மூலமாய் வெளியிடும்படி வேண்டிக் கொள்கிறேன்.

W. வரதையர்.

விடை :—வாற்கோதுமைக் கஞ்சிக்கு ஸந்தர்ப்பணம் (Demulcent) என்னும் குணமிருப்பதால், அது தாதுக்களுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும் நல்ல உணவாகக் கருதப்படுகிறது. மலபந்தத்தினாலாவது, மூத்திரம் அல்லது வியர்வை நன்கு வெளிப்

படாமல் ஏதேனும் சடையுறுவதினாலாவது உடலிற் சேர்ந்துவிடும் தூர்நீரால் வெவ்வேறு வியாதிகள் அல்லது அவக்குறிகள் ஸம்பவிக்கையில், வாற்கோதுமைக் கஞ்சியை உட்கொண்டுவந்தால், மலபந்தத்தையும் நிவ்ருத்திசெய்து, மூத்திரத்தையும் தாராளமாக வெளிப்படுத்திவரலாம். விருக்கங்களைத் தூண்டி அவற்றின் வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்விக்கும் சக்தி இவ்வுணவுக்கு உண்டு. ஆகவே நீர்க்கோவை முதலிய வியாதிகளில் இதை விசேஷமாக உணவாய் உபயோகிக்கச் செய்வது வழக்கம். வியாதியில்லாதவர் கூட இக்கஞ்சியைப் பகற் போஜனத்திற்கும் இராப் போஜனத்திற்கும் இடையில் உட்கொண்டுவருவது ஆரோக்கியத்தை விருத்திசெய்வதற்கு அனுகூலமாயிருக்கும். ப-ர்.

---

## ஒற்றைத் தலைவலி.

'வைத்திய கலாநிதி' பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா, நான் இதன்கீழ் எழுதும் ஒருவியாதிக்ரஸ்தனுக்குச் செய்த சிகித்ஸை விஷயமான கடிதத்தைத் தமது நிகரில்லாப் பெருமை பொருந்திய வைத்தியப் பத்திரிகையில் பிரசுரிக்கக் கோருகிறேன்.

வரதராஜுலு என்கிற சுமார் 43-வயதுள்ள என்னுடைய நண்பர் ஒருவர் ஆறுமாத காலமாய் ஒற்றைத் தலைவலியோடு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் ஆரணியிலும், மற்றும் சில விடங்களிலும் ஆஸ்பத்ரிகளில் சிகித்ஸை செய்துகொண்டார். பிறகு சில நாட்டுவைத்தியர்களிடம் விரேசனௌஷதங்களையும் மற்றும் ஏதேதோ மருந்துகளையும் வாங்கி உபயோகித்தார். அவருக்கு ஒன்றிலும் நிவ்ருத்தியுண்டாகவில்லை. அவர் என்னிடம் சென்ற ஆகஸ்டுமீ 21வ சிகித்ஸை செய்து கொள்ளலாம் என்று வந்தார். முன்னால் நான் அவரைப் பார்த்திருக்கும்போது இருந்த தேஹதார்ட்யம் பெரும்பாலும் குன்றிப்போய் மிகவும் இளைத்திருந்தார். அவருடைய முகம் ஏங்கி விசாரமுற்றிருந்தது. கண்கள் பாழிபோல் ஆழ்ந்துவிட்டன. உதடு கறுத்து, முகம் வெளிறி, நாக்கு வெளுத்துத் தடித்திருந்தது. ஆஹாரத்தில் வெறுப்பு விசேஷித்திருந்தது. இத்தூர்க்குணங்கள் யாவும் பொறுக்கமுடியாமல் தனக்குண்டாயிருக்கும் தலைவலியினாலேயே என்று அவர் சொன்னார். தலைச்சுற்றலும் மயக்கமும் சில ஸமயம் உண்டாவதுண்டு. சிலநாள் மிகவும் கருத்துத் திரிபோலவும், சிலநாள் குழம்பாகவும், சிலஸமயம் தண்ணியும் சக்கையுமாகவும் மலம் வெளியாவது வழக்கம் என்றும் சொன்னார். இதுகளையெல்லாம் நான் கருத்துடன் கவனித்தேன். இவருக்குத் தலைவலி ஒன்று முக்கியமான வியாதியாகக் குறிப்பிடக்கூடிய நிலைமையில் உண்டாயிருந்தபோதிலும், முற்கூறிய மற்றக்குறிகளில் தலைவலியும் ஒரு குறியாக இருக்கவேண்டுமென்றும், இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக வியாதியொன்று பிரத்தியேகமாயிருக்கவேண்டுமென்றும், யோசித்து எனக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். பிறகு முதல்நாள் அடியில் குறிப்பிடப்படும் ஔஷதத்தைக் கொடுத்தேன்.

| | |
|---|---|
| வாய்விடங்க சூர்ணம் குன்றுமணி யெடை | 10 |
| குராஸானி ஓமம் - சூர்ணம்செய்தது. | ஷை 10 |
| பலாசவித்துச் சூர்ணம் | ஷை 5 |
| பூரபஸ்மம் | $\frac{1}{8}$-நெல்லெடை |

இவற்றைக்கலந்து, வேளை ஒன்றுக்கு இதே அளவாக மூன்று வேளை வீதம் உட்கொள்ளச்செய்தேன். மறுநாள் தங்களுடைய சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ள அபயாமோதகம் என்னும் ஔஷதத்தை விரேசநத்திற்குக் கொடுத்தேன். ஏழெட்டு தடவை வெகு நன்றாக பேதியாய்விட்டது. ஒவ்வொரு விரேசநத்தோடும் இரண்டு மூன்று பூச்சிகள் வீதம் 17-அல்லது 18 பூச்சிகள் வயிற்றிலிருந்து விழுந்தனவென்றும், அப்பிணியாளி மிகவும் களைத்துப்போய் பேசவும் முடியாமல் விழுந்திருக்கிறார் என்றும், பேதியை நிறுத்தி அவரைக் களைதீரச் செய்யவேண்டுமென்றும் ஒரு ஆள் என்னிடம் ஓடிவந்துச் சொன்னான். பிறகு அப்பிணியாளியிருக்குமிடம் சென்று, அவரைப் பார்வையிட்டதில் அவ்வளவு பூச்சிகளும் பதனழிந்த மலங்களும் அதிகமாய் வெளியானதால் அவருக்கு மயக்கமுண்டாயிருப்பதாகவும், வேறுவிதத்தில் கெடுதலான குறிகள் ஒன்றுமில்லையென்பதாகவும் உணர்ந்து, அன்னத்தைக் கொஞ்சம் மோரில் கரைத்து மெதுவாக உட்கொள்ளச் செய்தேன். பிறகு உடம்பிலும் நெற்றியிலும் வெந்நீரைத் தெளித்துக் கழுவவும் சொன்னேன். பிணியாளி களைதீர்ந்து கண்விழித்துப் பார்த்தார். பிறகு சற்றுநேரத்திற்கெல்லாம். எழுந்துட்கார்ந்தார். இதற்கு மறுநாள் முதற்கொண்டு அவருக்குத் தலைவலி பெரும்பாலும் குறைந்துவிட்டது. மறுபடியும் இரண்டுநாள் கழித்து முன்கொடுத்த ஔஷதங்களையே பாதி அளவில் கொடுத்து, விரேசநத்திற்கும் கொடுத்தேன். மறுபடி 6-பூச்சிகள் வெளியாய்விட்டன. அவருக்குப் பலம் நன்றாக உண்டாவதற்காக இப்பொழுது கூஷ்மாண்ட லேஹ்யம் கொடுத்து வருகிறேன். தலைவலி முற்றிலும் நீங்கி, முன்னிருந்த எல்லாவித தூர்க்குணங்களும் மறைந்து, அன்னத்தில் விருப்பமும், வேலை செய்வதில் உத்ஸாஹமும் உண்டாய், அவர் மிகவும் ஸௌக்கியமான நிலைமையில் இருந்து வருகிறார்.

இதைக் கலாநிதியில் பிரசுரம் செய்தால், நமது ஸஹோதர வைத்தியர்களில் அநேகம் பேருக்கு சில ஸமயங்களில் உபயோகப்படுமென்று நினைத்துத் தங்களுக்கு எழுதி அனுப்பினேன்.

வி. இராமாநுஜ வைத்தியர்.

மிஸ்டர் வி. இராமாநுஜ வைத்தியர் எழுதியுள்ள இக்கடிதம் மற்ற வைத்தியர்களாலும் சிரத்தையோடு கவனிக்கக்கூடியது.—ப-ர்.



# NOTES AND ITEMS OF INTEREST.
# பலவகைக் குறிப்புகள்.

## ஸ்ரீமான் R. K. பிரஸன்ன வெங்கடேச ராவ் அவர்களுக்கு ஆயுர்வேதத்திலுள்ள அபிமானம்.

முன் ஸஞ்சிகையில் ஸ்ரீமான் தேசபூஷணம் R. K. பிரஸன்ன வெங்கடேசராவ் அவர்கள் சென்ற வருஷத்தில் வைத்தியகலாநிதிக்கும், பிரத்தியேகமாக அப்பத்திராசிரியருக்கும் செய்த உபகாரத்தைப்பற்றி ஒருவாறு குறிப்பிட்டிருந்தோம். நாம் நன்கு விசாரித்தோமானால் இத்தென்னிந்தியாவில் ஆயுர்வேத வைத்தியம் பல வழிகளிலும் முன்னுக்குவரவேண்டும் என்கிற மனப்பூர்வமான கோரிக்கையோடு முயற்சி செய்பவருள் ஸ்ரீமான் ராவ் அவர்கள் என்றே சொல்லவேண்டிவரும். நமக்கு ஏதோ உதவிசெய்தார் என்கிற விஷயத்திற்கும் நாம் இப்பொழுது எழுதுவதற்கும் ஸம்பந்தமில்லை. அவர்களுக்கு இவ்வைத்தியமுறையில் அபிமானம் ஆந்தரமாய் உண்டென்பதை எத்தனவே பல முகாந்தரங்களைக்கொண்டு அனைவரும் அறிந்திருக்கக்கூடும். முதலில் சென்னை ஆயுர்வேத கலாசாலைக்கு 1000-ரூபாய் வெகுதாராளக்கொள்கையுடன் உதவிய விஷயத்தையும், ஸ்ரீரங்கத்தில் முற்றிலும் தமது திரவ்யத்தைக்கொண்டு ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை ஸ்த்தாபித்திருப்பதையும்பற்றி அறியாதார் அரிது. இப்பொழுது மீண்டும் வைத்திய கலாநிதியின் புரோவிருத்தியை உத்தேசித்து ஐம்பது ரூபாய் உதவியிருக்கிறார்கள் என்பதை நாம் மிகவும் ஸந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம்.

---

## அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களின் கான்பரேன்ஸ்.

எல்லா இந்திய ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன்களின் 11-வது வருஷத்தியக் கான்பரென்ஸ் சென்னையில் இவ்வருஷம் டிசம்பர் மாதம் 21-தேதிமுதல் ஆரம்பமாய் தொடர்ந்தாற்போல் மூன்றுநாட்கள் நடந்தேறும். இக்கான்பரென்ஸோடு சுகாதாரப் பொருட்காட்சி ஸபையும், சாஸ்திரப்பொருட்காட்சி ஸபையும் டிசம்பர் மாதம் 22-தேதிமுதல் இரண்டுவாரங்கள் வரையில் நடந்தேறும். பல மாகாணங்களிலும் இதற்குக் கிளையாக ஏற்பட்டுள்ள ஸங்கங்களிலிருந்து டெலிகேட்டுகளை அனுப்புவதைப்பற்றியும், அவ்வாறு அனுப்பப்படுபவர்களுடைய பெயர்களை அடுத்த டிசம்பர் மாதம் 10 - ம் தேதிக்குள்ளாகச் சென்னை லிங்கிச்செட்டித் தெருவிலுள்ள ஜாயண்டு கௌரவக் காரியதர்சியான டாக்டர் டி. வி. வெங்கப்பா அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்பதைப்பற்றியும் கிளைச்சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இக்கான்பரென்ஸோடு நடக்கப்போகிற பொருட்காட்சியில் சுதேச வைத்தியர்களால் அனுப்பப்படும் ஔஷதாதிகளும் காட்சிச்சாலையில் வைக்கப்படுவதற்கு அக்கமிட்டியார் அங்கீகரித்திருக்கின்றனர் என்று அறிய ஸந்தோஷப்படுகிறோம்.

---

## புத்தக விமர்சம்.

சுகாநந்த ஜீவரக்ஷாமிருதம்:—நமது ஆபீசுக்கு விமர்சத்தின் பொருட்டு அனுப்பப்பட்டுள்ள இப்புத்தகம் கும்பகோணம் ம-ா-ா-ஸ்ரீ சே. எஸ். துரைசாமி பண்டிதர் அவர்களால் புதிதாக வரையப்பெற்றதாகும். பிராசீன வைத்திய முறைகளை அனுஸரித்து அநேகம் விஷயங்களையும், தற்காலத்திய சுகாதார ஸம்பந்தமான விஷயங்களையும் ஆத்மதத்துவ முணர்வதில் கருத்துள்ளவருக்குஏற்ற வேதாந்த விஷயங்களையும் ஒருங்கே தொகுத்து இப்புத்தகம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் பஞ்சேந்திரயங்களில் ஒவ்வொன்றும் ஸம்பாஷித்துக் கொள்வதுபோல் அமைக்கப்பட்டுள்ள வினாவிடைகளும், பிறகு திருக்குறள், பிரம்மகீதை, திருமூலர் திருமந்திரம், பிரபுலிங்கலீலை, வாசிஷ்டம், அரிச்சந்திர புராணம், திருவாசகம் முதலியவற்றில் ஆன்றோர் கூறியுள்ள ஆத்மதத்துவம், மனோநிடம், ஆரோக்கியமுறை முதலியவற்றிற்கான விஷயங்களின் உண்மைகளை விளக்குவதற்கென்று அந்த நூல்களிலிருந்தே சிற்சில கவிகளையெடுத்து ஆங்காங்கு மேற்கோளாக அமைத்துப் புஸ்தகத்தை ஒழுங்காக முடித்திருப்பது ஒரு நூதனமான முறையென்பதில் ஸந்தேஹமில்லை. சுருங்கச்சொல்லில் இப்புதிய புத்தகம் வைத்தியருக்கன்றி மற்றவருக்கும் உபயோகமாகக்கூடியது. சிறந்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. விலை 3-ரூபாய்.

மிஸ்டர், கே. எஸ். துரைசாமி பண்டிதர் கும்பேச்வரஸ்வாமி கோயில் வடவண்டைவீதி, கும்பகோணம் என்கிற விலாஸத்திற் கிடைக்கும்.

### மிக்க ஆரோக்கியமும் அநாரோக்கியமுமான மாதங்கள்.

இந்தியாவில் ஒவ்வொரு பிராந்தத்திலும் எந்தெந்த மாதங்கள் மிகவும் ஆரோக்கியமானவை யென்பதைப் பற்றி டைரெக்டர் ஆப் ஸ்டாடிஸ்டிக்ஸ் என்னும் ஜனன-மரணவிகிதங்களை விசாரிக்கும் அதிகாரி அடியில் வருமாறு அறிவிக்கிறார்:—

வங்காளத்தில் 1912-ம் ௵ டிசம்பர் மாதம் மிகவும் அநாரோக்கியமான காலம்; அவ்வருஷம் ஆகஸ்டு மாதம் அவ்விடத்தில் அதிக ஆரோக்கியகரமாயிருந்தது. சென்னையில் மார்ச், ஏப்ரல், மே இந்தமாதங்கள் ஆரோக்கியமாகவும், ஜனவரிமாதம் அதிக அநாரோக்கியமாகவும் இருந்தன. பம்பாய் மாகாணத்தில் நவம்பர் மாதத்தில் மரணவிகிதம் மிக்க அதிகமாகவும், ஜூன்மாதத்தில் மிகக் குறைவாகவும் இருந்தது. ஐக்கிய மாகாணங்களில் ஏப்ரலும் மேயும் மிகவும் அசௌக்கியத்திற்கு ஆஸ்பதமாகவும், அக்டோபர் ஆரோக்கியகரமாகவும் இருந்தன. பீஹாரிலும் ஒரிஸ்ஸாவிலும் ஜூலைமாதம் மரண விகிதத்தில் வெகு விசேஷித்ததாகவும், பிப்ரவரி அவ்விகிதத்தில் மிகக் குறைவுபட்டதாகவும் இருந்தது. பஞ்ஜாப் பிராந்தத்தில் ஜூலை மாதமே ஆரோக்கியத்திற்கு ஆதாரமாகவும், நவம்பரும் டிசம்பரும் அதிக அநாரோக்கியமுண்டுபண்ணுபவையாகவும் இருந்தன. டில்லியில் ஏப்ரல் மாதத்தில் வெகு அதிகமான மரணங்களும், செப்டம்பரில் மிகக்குறைவான மரணங்களும் ஸம்பவித்தன. பர்மாவில் மேமாதம் மிக்க ஆரோக்கியக் குறைவையும், ஆகஸ்டுமாதம் அதிக ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணக்கூடியவைகளாயிருந்தன. மத்திய மாகாணங்கள் ஏப்ரலிலும் மேயிலும் மரணவிகிதத்தில் மிக்க அதிகரித்தவையாகவும், பிப்ரவரியில் மரண விகிதத்தில் மிகக் குறைந்தவையாகவும் இருந்தன. ஆஸாம் மாகாணத்தில் அக்டோபர்மாதம் மிகவும் அநாரோக்கியமாகவும், பிப்ரவரிமாதம் அதிக ஆரோக்கியமாகவும் இருந்தன. அஜ்மீர்-மார்வார் பிராந்தத்தில் மார்ச் மிகவும் அநாரோக்கியம்; அவ்விடத்தில் அக்டோபர் நல்ல சௌக்கியமுண்டுபண்ணக்கூடியதாயிருந்தது. லாகூரில் ஜூன்மாதம் அதிக அசௌக்கியகரமாகவும், டிசம்பர் மிகவும் சௌக்கியத்திற்கு ஆஸ்பதமாகவும் இருந்தன.

### உஷ்ணதேச வியாதிகளுக்கான கலாசாலை.

கல்கத்தாவில் உஷ்ணதேச ஸம்பந்தமான வியாதிகளை ஆராய்ச்சி செய்து போதிப்பதன்பொருட்டு "ஸ்கூல் ஆப் ட்ராபிகல் மெடிஸன்" என்கிற ஒரு வைத்தியஸ்த்தாபநம் ஏற்படுத்தப் படுவதாக நாம் முன்னமே இரண்டொருமுறை குறிப்பிட்டிருக்கிறோம். அந்த ஸ்த்தாபநம் இப்பொழுது அமைக்கப்பட்டு, இதுவிஷயமான சில விதிகளும் இப்பொழுது வெளியிடப்பட்டிருப்பதாக "இண்டியன் மெடிகல் கெஜட்" என்னும் பத்திரிகை கூறுகிறது. ஸாதாரணமாய் வைத்திய கலாசாலைகளில் ப்ரொபஸர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோலவே இதிலும் அதே விகிதப்படி சம்பளங்களும் நகரவாஸத்திற்கான படிகளும் தாராளமாகப் ப்ரொபஸர்களுக்குக் கொடுக்கப்படும். ப்ரொபஸ்ஸர் ஆப் ட்ராபிகல் மெடிஸன் என்கிற அதிகாரி ஒருவரைத்தவிர மற்றவர் ஒருவரும் சொந்தத்தில் வைத்தியத்தொழில்செய்ய ஸ்வாதந்த்ரியம் கொடுக்கப்படமாட்டாது. ப்ரின்ஸிபாலாகவும் டைரெக்டராகவுமுள்ள மேலதிகாரிக்கு மாத்திரம் 1,800 ரூபாய் சம்பளம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### பல்லில் துவாரம் விழுதலுக்குப் பரிஹாரம்.

ஏதேனும் ஒரு பல்லின் அடியில் புண் உண்டாய், அதன் மூலமாய் துவாரம் ஏற்பட்டிருந்தால், அந்தத் துவாரத்தில் வாயுவாவது சீழாவது சேர்ந்து மிகவும் வேதனையை உண்டுபண்ணும்; அவ்விடத்தில் இரத்தக்குழாயும் நரம்பிழைகளும் முகத்துவாரமுடையவைகளாகையால் வலி அதிகமாகத்தான் உண்டாகும். இந்த ஸ்த்தானத்தில் பிணியாளி தனது நாக்கு முனையை வைத்து உறிஞ்சுவதுபோல் அழுத்தினால் வலியின்வேகம் குறைந்துவிடும். நாக்கு முனையினால் அழுத்தும்போது வாயு அல்லது சீழ்தானே பல்லின் வேரிலிருந்து வெளியாய் விடுகிறதாகையால், காலக்கிரமத்தில் அங்குண்டாயிருந்து இரணம் ஆறிப்போய் பல்வலியும் நிவ்ருத்தியாகும். இதனால் தந்தரோக சிகித்ஸகர்களுக்கும் பிணியாளிக்கும் கஷ்டநஷ்டங்கள் ஏற்படாமல் ஸௌகரியமுண்டாம்:-Dental Review.

---

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
**Pandit M. Duraiswami Aiyangar,**
*Ayurveda Bhushan.*

பத்திராதிபர்:
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 4. Vol. IV. | நள ௵ புரட்டாசி மீ—ஐப்பசி மீ. OCTOBER—1916. | ஸஞ்சிகை 2. No. 2.

## EPILEPSY.

## அபஸ்மாரம்.

BY. A. LAKSHMIPATHI, B. A., M. B & C. M.
*Physician & Surgeon.*

இதை சிலர் ஸாதாரணமாய் வழக்கத்தில் காக்கைவலி யென்பார்கள். அபஸ்மாரத்தில் அநேகவிதங்கள் உண்டு. சிலருக்கு இது மிகவும் உக்கிரமாக வரும். திடீரென்று நினைவு தப்பி, கைகால்களை வலவலவென்று அடித்துக்கொண்டு, வாயில் நுரைதப்பி அவஸ்தைப் படுவார்கள். வேறு சிலர் நினைவுதப்பியும் தப்பாமலுமுள்ள நிலைமையில் சில நிமிஷங்கள் இருந்து, கைகால்களை வலித்து அடித்துக்கொள்ளாமலே, ஞாபகசக்தியை மீண்டும் பெற்று விடுவார்கள். சிலர் தாம் செய்யும் வேலையை ஒரு க்ஷணகாலம் நிறுத்திவிட்டு, உலக அறிவெல்லாம் முற்றிலும் ஒழிந்து, உடனே அந்நிலைமையிலிருந்து மாறி தமது வேலைகளைச் செய்ய முயலுவர். ஜ்வரம் முதலிய இதர வியாதிகளோடு ஸம்பந்தமில்லாமல், வேறு விதத்தில் ஆரோக்கிய நிலைமையிலுள்ள மனிதருக்கு திடீரென்று ஒருக்ஷண காலமோ, அல்லது அதிக காலமோ நினைவுதப்பி, உலக அறிவை முற்றிலுமொழிக்குமாறு உண்டாகும் வியாதிக்கு "அபஸ்மாரம்" என்று பெயர். இதில் கைகால்களை அடித்துக்கொள்வதும் அடித்துக்கொள்ளாமலும் இருக்கக்கூடும்.

இவ்வியாதியின் வியாப்தி:—இந்த ரோகம் பிரஜைகளில் எவ்வளவு பேருக்கு உண்டோ அதை நாம் கணக்காக எடுத்துக்கூறுவதற்கு இதுவரையில் ஆதாரங்கள் எவையும் காணவில்லையாகிலும், பொதுவாகத் தெரிந்துகொண்டவரையில், எல்லாத் தேசங்களிலுங் கூடி ஜனஸங்கியையில் ஆயிரத்தில் ஒருவனுக்கு இவ்வியாதி யுண்டென்று ஒருவாறு சொல்லலாம். சில தேசங்களில் இதைக்காட்டிலும் அதிகபேரும் இதனால் பீடிக்கப்படலாம். வம்சபாரம்பரையாகக் குடும்பத்தில் இல்லாமலே இவ்வியாதி அக்குடும்பத்தில் பரவமாட்டாதென்பதற்கு நிதர்சனத்தைக் காணோம். ஆனால் உன்மாதம் என்னும் பித்தவியாதி வியாபித்துள்ள குடும்பங்களில் இவ்வியாதியுள்ளவர்கள் அதிகமாயிருப்பதாகக் கூறலாம். சிறு பிராயத்தில் குழந்தைகளுக்கு வரும் மூர்ச்சை அல்லது வலிக்கும் அபஸ்மாரத்திற்கும் கொஞ்சம் ஸம்பந்தம் காணப்பட்டு வருகிறது. அபஸ்மாரமுள்ள தாய்மார்களுடைய குழந்தைகளில் 58 குழந்தைகளைப் பரிசோதித்துப் பார்க்கையில், 37 குழந்தைகள் இளம்பிராயத்தில் வலிப்பு உண்டாய் இறந்துவிட்டனவென்றும், மிச்சமிருந்த 21-குழந்தைகளுள் 7 பேருக்கு அபஸ்மாரவியாதி உண்டாயிற்றென்றும் தெரியவருகிறது.

வயது விஷயங்களுக்கு ஒட்டிப்பார்த்தால், அபஸ்மாரம் பத்துமுதல் இருபது வயதுக்கு

உட்பட்ட குழந்தைகளுக்கு விசேஷமாய் உண்டாவதாகத் தெரியவருகிறது. அதில் 13 முதல் 17 வயது வரையிலும் இவ்வியாதி மிகவும் விசேஷித் துண்டாவதாகக் கூறுவதற்கு திருஷ்டாந்தங்கள் உண்டு. குடும்பங்களில் இவ்வியாதி வம்சபரம்பரையாக உண்டாகுமாயின், அவர்களுடைய குழந்தைகளுக்கு இளம்பிராயத்திலேயே இந்த ரோகம் முளைத்துக் கிளைப்பதாகச் சிலருடைய அபிப்பிராயம். சிலருக்குச் சிறுவயதிலேயே வலிப்பு வியாதி அப்போதைக்கப்போது ஸம்பவித்து, இறுதியில் அதேவியாதி அபஸ்மாரமாக மாறி விடுவதுமுண்டு.

காரணம்:—அபஸ்மாரத்திற்கு மனக்கவலை, பயம் முதலியவற்றை அநேகர் காரணமாகக் கற்பிக்க முயன்றனர். ஆகிலும் இவ்வித ஸம்பந்தம் நூற்றுக்கு எழுபதுபேருக்கு மேற்பட்ட பிணியாளிகளிடமும் காணக்கூடவில்லை. சிரஸ்ஸின்மீது ஏதேனும் அடிபட்டு, அதனால் தலையெலும்பு உட்புறமாய்வளைந்து மூளையைப் பரிசிப்பதால் அபஸ்மாரம் உண்டாகலாம் என்று சிலருடைய கொள்கை. இருந்தபோதிலும், எவருக்காவது அவ்விதம் அபிகாதம் ஸம்பவித்து இவ்வியாதி நேரிட்டிருந்தாலும், பொதுவில் இவ்வியாதிக்கு அத்தகைய அபிகாதமே காரணமென்று சொல்வதற்கில்லை. அவ்வாறு அபிகாதப்பட்டவருக்கு, சரீரத்தில் ஏதோ ஒரு பாகத்திலேயே வலிப்பு காணலாம். முஷ்டி மைதுனம் என்கிற துர்நடத்தையினால் அபஸ்மாரம் உண்டாகுமென்று சிலரும், அபஸ்மார ரோகிகளுக்கு இது ஒரு குறியேயன்றி அபஸ்மாரத்திற்குக் காரணமாகமாட்டாதென்று வேறு சிலரும் சொல்வதுண்டு. குடி முதலிய விஷயங்களிலேயே வயதைச் செலுத்துபவருக்கு அபஸ்மாரம் விசேஷமாகக் காணக்கூடும். ஆனால் அபஸ்மாரத்திற்குக் குடி காரணமென்று நிச்சயிக்க வழியில்லை. மேற்கூறியவிதமாய் யோசித்தால் குடிக்கும், அபஸ்மாரத்திற்கும், பித்து ரோகத்திற்கும் நரம்புகளுடைய ஸம்பந்தம் ஏதோ இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இதன் இலக்ஷணங்களைக்கொண்டு அபஸ்மாரத்தை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம்:—

1. வலிப்புடன்கூடிய பெரிய மூர்ச்சை.
2. வலிப்பு இல்லாத சிறிய மூர்ச்சை.
3. வலிப்புடன்கூடிய சிறிய மூர்ச்சை.

குறிகள்:—மேலுக்குத் தென்படுவதற்கு சில மணிநேரம் முன்னமோ அல்லது சில நாட்களுக்கு முன்னதாகவோ அபஸ்மாரத்தின் சில குறிகள் ரோகியினிடம் காணப்படும். வேறு சில குறிகள், வியாதி வெளியில் தெரிவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்னதாகக் காணக்கூடும். இக்குறிகளை வியாதியின் பூர்வரூபம் என்பார்கள்.

அபஸ்மார ரோகியோடு வஸித்துவருபவர் ரோகிக்கு எப்பொழுது மூர்ச்சை உண்டாகுமென்பதை ஸாதாரணமாய் சொல்லக்கூடும். சிலர் வியாதி வெளிப்படையாக உண்டாவதற்கு முன்பு சிலகாலம் ஏதேதோ பிதற்றிக்கொண்டு ஸாதாரண சில்லரை விஷயங்களிலும் அதிகமாய் கோபித்துக்கொள்வர். வேறு சிலர், மனக்கவலையுடனிருந்து, வேலையில் புத்தி செல்லாமல், இங்குமங்குமாய் திரிந்துகொண்டிருப்பர். மற்றும் சிலர் ஒரு நாளுமில்லாத சுறுசுறுப்பு தோன்றி உத்ஸாஹமாயிருப்பது போல் காணப்படுவர். இன்னும் சிலர் விசித்திரமாக சித்தப்பிரமை யுள்ளவராயிருப்பர். சிலருக்கு மூர்ச்சையுண்டாவதற்கு முன்பு பசி குறைந்துவிடும்.. தலைவலி, தலைச்சுற்றல் முதலிய குறிகள் காண்பதுண்டு.

மேற்கூறிய குறிகளுடன், ஒவ்வொரு பிணியாளிக்கு ஒவ்வொரு விதமான ஸம்ஞைகள் உண்டாகக்கூடும். ஒருவன் முன்புறமாக ஓடி வீழ்ந்துவிடுவான். ஒருவன் பின்புறமாக ஓடிக்கொண்டே விழுவான். ஒருவன் சுற்றிச்சுற்றி ஓடிக்கொண்டு விழுவான். மூர்ச்சை உண்டாவதற்கு முன்பு ஒவ்வொரு ரோகி, தான் படுத்திருக்கும் மஞ்சத்திலிருந்து ஏதோ வேலையிருப்பவன்போல கீழே குனிந்துத் தேடிப் பார்க்கையில், திடீரென்று வலிப்பு உண்டாய் வீழ்ந்துவிடுவன் என்று ஒரு வைத்தியர். சிலருக்கு ஒரு கை இழுத்துப் பிடித்துக்கொள்ளும்; திமிர்த்துப்போய் விடுவதுமுண்டு. சிலருக்கு வயிற்றுவலி யுண்டாகும். தலைச்சுற்றல் ஸம்பவிக்கும். இப்படி ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு விதமான ஸம்ஞைகள் ஸம்பவிக்கும். சிலர் எவ்வித ஸம்ஞையும் இல்லாமல் திடீரென்று விழுந்துவிடுவர்.



மூர்ச்சை:—உண்மையாகவே ஸம்பவிக்கும் மூர்ச்சையில் மூன்றுவித நிலைமைகள் உண்டென்று வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள். 1. முதல் அவஸ்தை: இதில் சரீரமெங்குமுள்ள தசைநார்களெல்லாம் ஒரே முறுக்காக முரண்பட்டு, நினைவு தடுமாறி, ரோகி வீழ்ந்துவிடுவான். இவ்விதமான இசிவு ஒரு பாரிசத்தினும் மற்றொரு பாரிசத்தில் அதிகமாயிருக்கக்கூடும்; அப்பொழுது தலையும் கண்களும் ஒருபக்கமாகத் திரும்பிவிடும். சரீரமெல்லாம் கொம்பு மாதிரி விரைத்துக்கொண்டு, இடுப்பு வில் வளைவதுபோல் வளைந்து நிற்கும். மார்பின் முன்புறமுள்ள தசைநார்கள் யாவும் விரைத்து இழுத்துக்கொள்வதால் ஒருவாறு விசித்திரமாக வியாதிக்ரஸ்தன் வீரிட்டுக் கூக்குரலிடுவான். முதலில் முகம் வெளுத்துப்போய் உடனே சிவந்துவிடும். இதற்குள்ளாகக் கண்ணிலுள்ள கருவிழியின் நடுவிலிருக்கும் பாபா இயற்கையினும் அளவிற் பெரிதாகும். நாடி நடை மெதுவாகப்போகும். மேற்கூறிய அவஸ்தைகள் யாவும் அரை நிமிஷத்தில் நடக்கும். 2. பிறகு இரண்டாவது அவஸ்தை உடனே ஆரம்பமாகும். இப்பொழுது தசைநார்கள் எல்லாம் வலவலவென்று வேகமாய் இழுத்து அடித்துக்கொள்ளும். பற்களுக்கு இடையில் நாக்கு அகப்பட்டு வெளியிலும் புறப்பட்டு நிற்கும்; ஒவ்வொரு ஸமயம் அது கடிக்கப்பட்டு இரத்தமும் வருவதுண்டு. மலமூத்திர விஸர்ஜனமும் ஆவதுண்டு. கண்விழிகள் விரைவாகச் சுழன்று அசையும். கிரமம் தப்பி ச்வாஸவேலை நடக்கும். முகம் கருக்கும். தோளிலும் அதற்கு மேற்புறமும் உள்ள இரத்தக்குழாய்கள் பருத்துவிடும். உக்கிரமான மூர்ச்சையில், ரோகிக்கு ச்வாஸம் நின்றுபோய் மரணம் நேரிடுமோ வென்று பயப்படவேண்டி வரும். ஆகிலும் இதற்குள்ளாக மூன்றாவது அவஸ்தை ஆரம்பமாகும். 3. இப்பொழுது ரோகிக்குக் கொஞ்சம் நினைவு வருவதுபோல் கைகால்கள் அசங்க ஆரம்பிக்கும். ஒருவாறு இயற்கை ச்வாஸம் உண்டாகும். ஒவ்வொரு பிணியாளி அடுத்தாற்போல நித்திரை யுறுவான். சிலர் பித்துப் பிடித்தமாதிரி கூச்சலிடுவர். சிலர் பக்கத்திலிருப்பவருடன் சண்டையிடுவர். எழுந்து ஓடுவதுமுண்டு. ஆகிலும் சிறிது நேரத்திற்கெல்லாம் எவருமே தூங்கிப்போவர்.

i. முற்கூறியவற்றுள் முதல் அவஸ்தை அரைநிமிஷ நேரமும், இரண்டாவது அவஸ்தை ஒன்று அல்லது இரண்டு நிமிஷ நேரமும், மூன்றாவது அவஸ்தை ஐந்து முதல் பத்துநாட்கள் வரையிலும் நீடிப்பது வழக்கம். மூர்ச்சை தெளிந்த பிறகு உண்டாகும் நித்திரை இரண்டொரு மணிநேரம் வரையில் நீடிக்கும். ஒவ்வொரு ஸமயம் ரோகி ஒரு நாள் முழுவதும் நித்திரை போய்க்கொண்டேயிருக்கலாம். சிலருக்கு மூர்ச்சையின் சேஷ்டைகளெல்லாம் விட்டுப்போன பிறகு மிகவும் உக்கிரமான தலைவலி ஸம்பவிக்கும். மூர்ச்சை உண்டாயிருக்கையில் உடற்சூடு இரண்டொரு டிக்ரி அதிகரித்திருக்கும். மூர்ச்சை அடுத்தாற்போல விட்டுவிட்டு வருமானால் அதிக ஜ்வரம் வரக்கூடும். சிலருக்கு ஒவ்வொரு தடவையும் வாந்தியுண்டாகும். அப்படிப் பட்டவருக்கு வாந்தியில் வரும் பதார்த்தம் தொண்டையில் சிக்கிக்கொண்டு பிராணாபாயம் நேரிடக்கூடும்.

ii. வலிப்பில்லாத சிறிய மூர்ச்சை:—இது ஸாதாரணமாய் ஒரு நிமிஷம் முதற்கொண்டு ஐந்து நிமிஷம் வரையில் இருக்கக்கூடும். இது வரும்போது ரோகியின் முகம் பார்ப்பவருக்கு ஏதோ ஒருவாறு விசித்திரமாயிருப்பதாகத் தோற்றும். ரோகியானவன், தான் ஏதோ விஷயம் மறந்துவிட்டதுபோல் பேசிக்கொண்டவாறே திடீரென்று அப்படியே பேச்சில்லாமல் நின்றுவிடுவான். முகம் வெளுக்கும்; கண்களிலுள்ள பாபாக்கள் பெரிதாகும். க்ஷணத்திற்கெல்லாம் இவ்வனைத்தும் மாறி, ரோகி ஸாதாரணமாய் இயற்கை நிலைமை அடைவான். பிணியாளி நடக்கும்போது கால்கள் கொஞ்சம் தடைபட்டுப்போகும்; இல்லையேல் ஒருகால் ஒருபக்கமாகச் சாய்ந்துவிடும்; ஆகிலும் கீழே விழமாட்டான். கையிலுள்ள வஸ்துவைப் பிடித்து வைத்துக்கொள்ள திராணியில்லாமல் அதை நழுவவிடுவான். இச்சிறிய மூர்ச்சை வரும்போது, ரோகிக்கு முன்னதாக அவ்விஷயமாய் ஒன்றுமே தெரியாது. இது வந்துவிட்டதுங்கூட புத்தி மந்தப்படுவதில்லை.

iii. இசிவுடன் கூடிய சிறிய மூர்ச்சை:—. இதில் சரீரத்தில் ஏதேதோ பாகங்கள் கெட்டியாக வலித்துக்கொள்ளும்; அல்லது அடித்துக்கொள்ளும். ஒரு க்ஷணகாலம் நினைவு தப்பிப்போம். ஒரு க்ஷணகாலம் மட்டும் விழிகள் ஒரு மூலையாகத் திரும்பிக்கொள்ளும். இந்த மூர்ச்சை வந்தபோது ஒவ்வொரு தடவையும் க்ஷணகாலத்திலேயே அநேகந் தடவை அந்த மூர்ச்சை வரும்.

நிதானம்:—அபஸ்மாரரோகத்தை முற்றிலும் நன்றாகக் குறிப்பிட்டு அறிந்துகொள்வது ஒரு கஷ்டமல்ல. ஆகிலும் ரோகியை நன்றாகப் பார்க்காமலே, பிறர் கூறும் வர்ணனைகளைக் கேட்டு வியாதியைத் தெரிந்துகொள்ளப் போனால், அது கஷ்டமாகவே தோன்றும். இதன்கீழ் குறிப்பிடப்படும் மூன்று கேள்விகளுக்கு ஸமாதானம் தெரிந்துகொள்ளும் பக்ஷத்தில் வியாதி நிர்ணயம் செய்வது ஒருவாறு சுலபமாயிருக்கும்:—

(1) ரோகி திடீரென்று நினைவுதப்பி விழுந்தானா?

(2) ரோகி நாக்கைக் கடித்துக்கொண்டானா?

(3) படுக்கையில் தெரியாமலே மூத்திரம் விட்டுக்கொண்டானா?

இம்மூன்று கேள்விகளுக்கும் "ஆம்" என்று பதில் சொல்லும்பக்ஷத்தில், அபஸ்மார ரோகம் என்று நிதான விஷயத்தை நிச்சயித்துக்கொள்ளலாம். அப்படிக்கின்றி "இல்லை" என்று பதில் சொன்னால், அதைக்கொண்டே உண்டாயிருக்கிற வியாதி அபஸ்மாரம் அல்லவென்று சொல்வதற்கில்லை. ஏனெனில், சிறிய மூர்ச்சைகளில் மேற்கூறிய மூன்று கேள்விகளுக்கும் எதிரிடையான பதில் வந்தாலும் வரலாம்; அப்படியிருந்தாலும் வியாதி அபஸ்மாரமாகவே இருக்கக்கூடும். ஆகையால் அவற்றோடு இதர விஷயங்களையும் கவனித்து, அபஸ்மார நிதானங்களை கிரஹிக்கவேண்டும். அபஸ்மாரத்திலும் ஹிஸ்டீரியா (காற்று சங்கை) என்னும் மூர்ச்சையிலும் இதனடியில் குறிப்பிடப்படும் விஷயங்களை ஒன்றோடொன்று ஒற்றுப் பார்த்து கவனிப்பது நலம்.

| அபஸ்மாரத்தில். | ஹிஸ்டீரியாவில். |
|---|---|
| 1. ரோகிகள் தம் நாக்கைக் கடித்துக்கொள்வர். | 1. ரோகிகள் தம் நாக்கைக்கடித்துக்கொள்ளார். தம்மைப் பிடித்துக்கொள்பவரைக் கடித்து விடுவித்துக்கொள்ள முயலுவர். நாக்கைத்தவிர தமது சரீரத்தில் இதர பாகங்களைக் கடித்துக் கொள்வதுண்டு. |
| 2. ரோகிகள் கைகால்களை முன்னுக்கும் பின்னுக்குமாய் வலித்து அடித்துக்கொள்வர். | 2. ரோகிகள் தம் இஷ்டத்தைக்கொண்டு கை கால்களை உதறி தன் பக்கத்திலிருப்பவர்களை அடித்துப்போட பிரயத்தனப் படுவர். |
| 3. அபஸ்மாரத்தில் வலிப்பு சில நிமிஷங்களுக்குமேல் நீடித்திராது. | 3. சில நிமிஷங்கள் முதல் அநேக நாழிகை வரையில் ஹிஸ்டீரியா ஸம்பந்தமான மூர்ச்சை தொடரக் கூடும். |
| 4. அபஸ்மாரரோகிகள் மூர்ச்சைக்குப்பிறகு ஸாதாரணமாய் நித்திரை போவார்கள். | 4. ஹிஸ்டீரியாவில் ரோகிக்கு ஸாதாரணமாய் நித்திரை பிடிக்காமல் மனது கவலையுற்றுத் தவிக்கும். |



ஸாத்தியா ஸாத்தியக் குறிகள்:—மூர்ச்சையினால் மரணம் உண்டாவது ரொம்பவும் அரிது. மூச்சுவிட முடியாமல் பிராணன் போய்விடும் போலத் தோற்றக்கூடுமாயினும், ஸாதாரணமாய் அதற்குள்ளேயே வியாதி குறைந்துபோய் ரோகிக்கு ஞாபகம்வரும். நெருப்பிலாவது நீரிலாவது விழுவதால் ரோகிக்கி பிராணாபாயம் உண்டாகக்கூடும். கற்களின்மேல் விழுந்து தலை யெலும்பு பிளந்து அபாயம் ஸம்பவிக்கலாம். ஒரு ரோகிக்கு தூங்குகிற ஸமயத்தில் மூர்ச்சையுண்டாய் தலை கீழாகத் திரும்பி மூக்கு வஸ்திரங்களுக்குள் அகப்பட்டுக்கொண்டால், மூச்சுவிட முடியாமல் ரோகிக்கு அபாயம் ஸம்பவிக்கலாம். இப்படிக்கின்றி, வியாதியினாலேயே பிராணன்போன பிணியாளி அரிது.

அநேகம் நாள் வரையில் மூர்ச்சை வராமலும், வந்தபோது குறைவாக இருக்கும்படியும், ஒவ்வொரு மூர்ச்சைக்கும் இடையில் அதிக காலம் மூர்ச்சையில்லாமலும் செய்யக்கூடுமேயன்றி, வியாதி முற்றிலும் நிவ்ருத்தியாய் விடுமென்று செல்வதற்கில்லை.

சிகித்ஸை:—இடம் மாற்றுவதாலும் ஜீவனத் தொழிலை மாற்றுவதாலும் இவ்வியாதியில் குணமுண்டாகக்கூடும். அபஸ்மார ரோகிகளுக்குக் கொஞ்சகாலம் புத்தி மழுக்கங்கொண்டுபோய்விடும். சிலருக்குப் பித்துப்பிடிக்கும். பகலில்வரும் மூர்ச்சை நித்திரையில் வருவதைவிட சிகித்ஸைகளுக்கு சுலபமாயிருக்கும். சிறிய மூர்ச்சைகளைவிட பெரிய மூர்ச்சைகள் சிகித்ஸைக்கு வசப்படும். பொடாஸியம் ப்ரோமைட் என்னும் மருந்து இந்த வியாதிக்கு[illegible]கவும் உபயோகமானது. பத்து முதல் இருபது கிரைன் வரையில் தினத்திற்கு மூன்று வேளை வீதம் போஜனத்திற்குப் பிறகு ஒரு மணி நேரத்திற்கெல்லாம் ஜலத்துடன் கொடுக்கலாம். 40-முதல் 60-கிரைன் வரையில், நித்திரையில் மூத்திரவிஸர்க்கம் செய்யும் அப்பிணியாளிகளுக்குக் கொடுத்தால் குணமுண்டாகக்கூடும். ஸோடியம், பொடாஸியம், அமோனியம் இம் மூன்றின் ப்ரோமைடுகளையும் ஸமபாகங்களாகக் கலந்து கொடுத்தாலும் கொடுக்கலாம். மூர்ச்சை இன்ன ஸமயத்தில் வருமென்று நிச்சயமாகத் தெரிந்தால் ஒரு டோஸ் ப்ரோமைடை உட்கொள்ளச் செய்தால் வரப்போகிற மூர்ச்சை நின்றுவிடும். ப்ரோமைடை அதிகமாய் உட்கொண்டால், புத்தி மந்தப்பட்டு, கை கால்கள் குளிர்ந்துபோய், வாயில் நீர் சுரக்கும். வார்த்தை வெகு மந்தமாக வரும். அதிக குணமுண்டான ரோகிகளுக்குக்கூட வியாதி நின்றுபோன இரண்டு வருஷங்கள் வரையில் ப்ரோமைடை நிறுத்தாமல் கொடுத்து வரவேணும் அதன் பிறகுகூட வாரத்திற்கு இருமுறையாவது இரண்டு டோஸ் ப்ரோமைடைக் கொடுத்துக்கொண்டுவந்து கிரமமாக நிறுத்தவேண்டும். இருதயத்தில் வியாதியுள்ளவர்களுக்கு ப்ரோமைடோடு டிஜிடாலிஸ் என்னும் மருந்தையும், இரத்தக் குறைவானவர்களுக்கு அயமருந்தையும், பலஹீனமானவர்களுக்கு காட்லீவர் ஆயில் என்னும் எண்ணெயையும் சேர்த்துக் கொடுக்கலாம். வெங்காரத்தை 10-முதல் 20-கிரைன்ஸ் வரையில் ப்ரோமைடோடு கலந்து கொடுத்துவந்தால் ரொம்ப குணமுண்டாவதாக ஒரு வைத்தியநிபுணர் சொல்லுகிறார். வெங்காரத்தைத் தனியாகவே அதே அளவில் கொடுத்தாலும் குணமுண்டாகுமாம்.

[அடுத்த ஸஞ்சிகையில் அபஸ்மார ரோகத்தைப் பற்றி ஆயுர்வேத சாஸ்திரத்தை அனுஸரித்து ஒரு வியாஸம் பிரசுரிக்கப்படும். பர்.]

# HABITS AND THEIR EFFECTS.

## பழக்கத்தின் பயன்.

BY T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

(முன் தொடர்ச்சி.)

இது ஸம்பந்தமாய் முன் ஸஞ்சிகைகளில் கூறியவிஷயங்கள் உடற் கூற்று விளக்க நூலின் பரிபாஷையில் அமைந்திருக்கின்றன. அந்தப் பரிபாஷையை ஒழித்துப் பேசுமிடத்து, நிகோடீன் என்பது இருதயத்தின் நரம்புகளைத் திமிர்க்கப்பண்ணுகின்றது; புகையிலைப் புகை குடித்து முடிந்தபிறகு இரத்த வோட்டத்தின் அதிர்ச்சி சாமானியமான அளவிற்குக் குறைவு படுகின்றது. 'அதிரோமா' என்னும் வியாதியைப்பற்றி முன்னர் ஒருமுறை சொல்லியிருக்கிறோம். அது இரத்த நாளங்கள் சீர் கெடுவதனால் தோன்றும் வியாதியென்று முன்னரே விவரமாய்ச் சொல்லியிருக்கின்றோம். அது புகையிலையை அதிகமாய் உபயோகிப்பதனால் உண்டாகுமென்றும் குறிப்பிட்டிருக்கிறோம். நூறு பங்கு ஜலத்தில் பத்துப்பங்கு புகையிலைச் சாரமூட்டிய கஷாயத்தைக் குழி முயலின் உடலிற் புகட்டுவதனால் மேற்சொல்லிய 'அதிரோமா' என்னும் வியாதி தோன்றுவதைக் கண்டிருக்கிறோம்.

புகையிலையை அதிகமாய் உபயோகிப்பதனால் மாத்திரமேயன்றி மிதமாய் உபயோகிப்பதனாலும் விளையக்கூடிய வியாதிகள் பலவற்றுள், மண்டைக்குத்து, தலைவலி, தலைச்சுழற்சி, இருதயத்துடிப்பு, பதபதைப்பு, உறக்கமின்மை, நரம்புகளின் சூலை, மாரடைப்பு, அன்னத்துவேஷம், சோகை, குருடு, செவிடு, இரத்த நாளத்தடிப்பு, விப்புருதி (புண்கள்) என்பன சிலவாம்.

'பீடி'ப் பழக்கம்:—குழந்தைகளின் தேகத்திலும், பெரியவர்களின் தேகத்திலும் புகையிலையினால் விளையும் பயன்களை விவரமாய் எடுத்துரைக்குமுன்னர் 'பீடி'களையும், 'பீடி'ப் பழக்கத்தையும்பற்றிச் சிறிது பேசுவோம். இளைஞர்களும், முதியவர்களும் 'பீடி'ப்பழக்கத்தைச் சுருக்கவேண்டும், ஸாத்தியமானால் முற்றும் தவிர்க்கவேண்டும் என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்கிறார்கள்; புகையிலையை முற்றும் மறுக்காதவர்களும் இதற்கு உடன்படுகின்றார்கள். 'பீடி' என்பது சிறு சுருட்டு; புகையிலைத்தூளை ஓலையிற் சுருட்டிக் கட்டியிருப்பது 'நாட்டுப் பீடி' புகையிலைத்தூளைக் கடிதத்திற் சுருட்டி ஒட்டியிருப்பது 'சிகரெட்' என்னும் 'சீமைப்பீடி.'

உலகத்தில் வழங்கிவரும் பலவகைப் 'பீடி'களும் ஏதோ ஒருவிதமாய்ப் பேஷஜப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனதனால் மானிட தேஹத்தில் அவை விளைக்கத்தக்க தீப்பயன்கள் மற்றும் அதிகரிக்கின்றன; அவை விளைக்கும் கேடு அஸாத்தியமானது.

பேஷஜப் படுத்துவதாவது என்ன? ஸாதாரணமாயுள்ள வஸ்துவைப் பாடப்படுத்திப் பக்குவஞ்செய்து அதனை ஒரு மருந்தாக்குதல். அப்படிப் பேஷஜப்படுத்துவதன் உத்தேசமென்னவெனில், ஜனங்களுக்கு அதன்மீது விசேஷமான அபிருசியும் ஆசையும் உண்டாக்கி, அவர்கள் அதன்மீதுள்ள அபிமான மிகுதியினால் மற்றவர்கள் விற்கும் சரக்கைத் தவிர்த்து இதனையே விரும்பும்படி செய்தலாம.

'சிகிரெட்'டுகளில் அபினியும், சில ஸமயங்களில் கோகேனும், புகையிலையும் கலந்திருப்பதாகத் தெரிகிறது. இவைகளில் ஏதாவது ஒன்று சேர்ந்திருந்தாலே தீமை அதிகரிக்கும். 'சிகரெட்' குடிப்பதில் மிகுந்த ஆவலுள்ளவர்களும் அது கெட்டவழக்கமென்று அதனை நிந்திப்பார்கள்; ஸாத்தியமானால், அந்த வழக்கத்தின் ஆட்சியை மீறிச் சந்தோஷமாய்த் தவிர்த்துச் சுகமடையச் சித்தமாயிருப்பார்கள்.



ஸைமூர் டைலர் (Seymour Taylor, F. R. C. O.) என்பவர் "Health for the Middle Aged" என்னும் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதனில் 'சிகரெட்'டைப்பற்றிச் சொல்லுமிடத்து "சிகரெட் நிந்தனீயமானது; சிகரெட் வழக்கம்மிகக் கொடிய தீமை விளைக்கத்தக்கது. புகையிலைக் குருடு என்பது புகையிலையினால் கண்களுக்கு வரும் நோய்களில் ஒன்று, சிகரெட் குடிப்பதனால் இந்த வியாதி விசேஷமாய் உண்டாகின்றதென்று சிறந்த கண்வைத்திய சாஸ்திரி ஒருவர் எனக்கு உறுதியாய்ச் சொல்லியிருக்கிறார்" என்று எழுதியுள்ளார். எந்த விதமான 'சிகரெட்' செய்வதும், விற்பதும், குடிப்பதும் நியாய விரோதமான காரியமென்று பார்லிமெண்ட் மஹா ஸபையார் சட்டமேற்படுத்துவது ஸாத்தியமாகக்கூடும். அப்படி அவர்கள் சட்டமேற்படுத்துவதனால் நாம் ஒருபடி நன்னெறியில் உயர்ந்து தேர்ச்சிபெற்றவர்களாவோம்.

இளைஞர் புகை குடித்தல்:—புகையிலையினால் உண்டாகும் தீர்க்கமான தீமைகளும், நாசகரமான குணங்களும், சிறு பையன்களிடத்தும் முதிர்ச்சிபெறும் வாலிபர்களிடத்தும் தெளிவாய்த் தோன்றுகின்றன. இந்தத் தீப்பயன்கள் அவர்களிடத்து அவ்வாறு விளங்குவது இயல்பே. வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெறும் பருவத்தில் இருப்பவர்கள் புகையிலைப் பழக்கம் மேற்கொள்வதனால் அதன் தீப்பயன்களும் உடனுடன் வளர்ந்து முதிர்ந்து விளங்குகின்றன. புகையிலையில் நிகோடீன் என்றொரு விஷவஸ்து இருக்கிறதென்று சொல்லியிருக்கிறோம். அந்த நச்சுப்பொருளின் கொடிய நஞ்சுத்தன்மைகள் முதிராத உடல்களின்மீது நன்றாய் வியாபித்து வெகுவாய் மேலெடுத்துக் காட்டுகின்றன. முதிர்ந்த உடலில் விஷம் வியாபிப்பதினும் முதிராத உடலில் தாக்குவது எளிதன்றோ? மற்றும், பச்சை மண் போன்ற நெகிழ்ச்சிபொருந்தி வளர்ந்து முதிரும் பக்குவத்திலிருக்கும் நரம்புச் சவ்வறைகள் மூளையிலும் தேஹத்தின் மற்றப் பாகங்களிலும் நிறைந்திருக்கின்றனவல்லவா? அந்த நரம்புச் சவ்வறைகளை மேற்சொல்லிய நிகோடீன் விஷமானது வாட்டி வதக்கி எளிதில் நாசஞ்செய்யக் கூடியதாயிருக்கின்றது.

புகையிலையானது சடுதியில் இரத்தத்தோடு கலக்குந் தன்மையுள்ளது. அதனால் அது இரத்தசோகை என்னும் வியாதிக்கு வழி தோண்டும் தீக்குணமுடையதாகும். வளரும் சிறு பையனுக்கு ஆரோக்கிய மிகுந்த புஷ்டிகரமான இரத்தம் நிரம்பவேண்டுமல்லவா? அப்படிப்பட்டவனுக்கு இரத்தசோகை சிறிது ஏற்பட்டாலும் பெரிதும் தீமைவிளைக்கத்தக்க நிலைமையாகுமென்றோ? அதன் பயன் என்னவெனின் தேஹத்தின் வளர்ச்சியைக் குறைத்து, மூளையின் முதிர்ச்சியைக் தடுப்பதாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏல் யூனிவர்ஸிடி (Yale University)யிலுள்ள மாணவர்களை மூன்று வகுப்பினர்களாகப் பிரித்திருந்தார்கள்:—

1. புகை குடியாதவர்கள்.

2. ஒரு வருஷமாக அல்லது அதிககாலமாகப்புகை குடிப்பவர்கள்.

3. அப்போதைக்கப்போது புகையிலையையுபயோகிப்பவர்கள்.

தேஹத்தின் நிறையைச் சோதித்தபொழுது இரண்டாம் வகுப்பினரைவிட முதல் வகுப்பினர் சராசரி நூற்றுக்குப் பத்து எடை அதிகமாயும், மூன்றும் வகுப்பினரைவிட நூற்றுக்கு 6·6 எடை அதிகமாயும் இருந்தார்கள். இந்தக் கணக்கு ஒரே வயதுள்ள சிறுவர்களின் எடைகளைச் சோதித்தெடுத்ததாகும்.

உயரத்தைச் சோதித்தபொழுது, முதலாம் வகுப்பினரைவிட மூன்றும் வகுப்பினர் நூற்றுக்கு 11 விதமும், இரண்டாம் வகுப்பினர் நூற்றுக்கு 24 விதமும் குட்டையாயிருந்தார்கள்.

மார்பின் சுற்றளவில் வித்தியாஸம் இன்னும் தெளிவாக விருந்தது. முதல் வகுப்பைவிட மூன்றும் வகுப்பில் 22°/₀ குறைவு, இரண்டாம் வகுப்பில் 2·6 7°/₀ குறைவு.

மற்றெல்லாவற்றிலும்விட வித்தியாஸம் அதிகமாய்க் காணப்பட்டது தேஹ வலிமையிலாகும். முதல் வகுப்பைவிட மூன்றும் வகுப்பில் 4·9 5°/₀ வலிமை குன்றியிருந்தது மேற்சொல்லிய அம்சங்களிலெல்லாம் ஒரே வயதுப் பிள்ளைகளையே ஒப்பிட்டுப் பார்த்துக் கணக்கிட்டார்கள்.

இதேமாதிரி வேறு பாடசாலைகளிலும் புகையிலை உபயோகிக்கும் பிள்ளைகளையும் மற்றவர்களையும் சோதித்துப் பார்த்ததில் மேற்சொல்லிய கணக்கு வீதமாகவே எல்லா அம்சங்களிலும் வித்தியாஸம் ஏற்பட்டது. கனம், வளர்ச்சி, பலம் ஆகிய இவைகளில் புகையிலை உபயோகிப்பவர்கள் மிகவும் குறைந்துபோகிறார்களென்பது இந்த ஆராய்ச்சியினால் ஸித்தமாயிற்று. ஸ்தூலதேஹத்தைப்பற்றிச் சொல்லிய இந்த வித்தியாஸம் மனப்பயிற்சியிலும் காணப்பட்டது. புகையிலை யுபயோகிக்காதவர்களே கூரிய புத்தியுள்ளவர்களாய் விளங்கினார்கள். புகையிலை யுபயோகிப்பவர்களுடைய புத்தி மந்தப்படுவதாகவே காணப்பட்டது. புகையிலை குடிப்பவர்களுள் அபூர்வமாய் இரண்டொருவர் மாத்திரமே புகை குடியாதவர்களுக்குள்ள புத்திக் கூர்மைவாய்ந்திருந்தார்கள்.

நிகோடீன் விஷத்தின் கொடுமை:—முதன் முதலிற் புகை குடிப்பவர்கள் அந்தப் புகையிலையின் விஷத்தினால் படும் தீவிரமான கஷ்டங்களும் அதன் இலக்ஷணங்களும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கெல்லாம் தெரிந்தேயிருக்கின்றன. ஆயினும் அவைகளிற் சிலவற்றை இங்கே குறிப்போம்:—

விகாரமான வெளிர்மை, பிசுக்குள்ள வியர்வை, வாய்நீர்ப் பெருக்கு, கொடிய குமட்டல், கிறுகிறுப்பு, வாந்தி, தலைசுழலல், தலைநோய், அடிவயிற்றுநோய்; புகையிலையின் விஷம் அதிகமாய் ஏறினவனுக்குக் கழிச்சல், அதிஸாரபேதி, மூச்சுத்திணறல், வேகமாய்த் துள்ளியொடுங்கி மெதுப்பட்ட நாடித்துடிப்பு, மனக்குழப்பம் ஆகிய இவைகள் உண்டு. புகையிலையை விழுங்கிவிட்டால் மேற்சொல்லிய தீமைகளெல்லாமல் சித்தப்பிரமை, தசைநார்க்கெண்டை, நரம்பிசிவு, மெய்ம்மறதி ஆகிய இவைகள் உண்டாகும், மூச்சுக் கருவிகள் ஒடுங்கிச் செயலற்றுச் சாவு விளைக்கும்.

மேற்சொல்லிய குறிகள் அவரவருடைய உடற் கூற்றுக்கும், நரம்புகளின் வன்மைக்கும் குடித்த புகையின் பரிமாணத்திற்கும் தக்கபடி வித்தியாசமாய்க் காணும்; இந்த நோய்களெல்லாம் ஒருவரிடத்தே கண்டாலும் காணலாம்; இவைகளிற் சில மாத்திரம் கண்டாலும் காணலாம்; இவை கடுமையாயிருந்தாலும் இருக்கலாம், இலகுவாயிருந்தாலும் இருக்கலாம். இந்த வித்தியாசங்களெல்லாம் குடிப்பவனுடைய உடற்கூற்றையும் குடித்தபுகையின் பரிமாணத்தையும் பொருத்திருக்கும். விளையும் நோய்களின் சங்கியையிலும், அவைகளின் கடுமையிலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும் அவையெல்லாம் நமக்குத் தெரிவிப்பது என்ன? விஷவஸ்துவொன்று தேஹத்திற்குள் போய்ச் சேர்ந்திருக்கின்றது என்பதை அவை நேரே சுட்டிக் காட்டுகின்றன; அந்த அன்னிய வஸ்துவை வெளிப்படுத்தி அகற்றுவதற்கு தேஹத்துவம் பிரயத்தனப் படுகின்றதென்பது வியர்வை பொழிவதனாலும், வாய்நீர் பெருகுவதனாலும், வாந்தியினாலும், கழிச்சலினாலும் நமக்குத் தெரிகின்றது.

புகையிலையானது விஷவஸ்துவென்று தேஹத்திலுள்ள ஜீவதத்துவாங்கங்கள் (Living organs of the body) உடனே தெரிந்து கொள்கின்றன; ஆயுளையும் ஆரோக்கியத்தையும் காக்கும்பொருட்டு அந்த விஷத்தைத் தேஹத்தினின்றும் அப்புறப்படுத்தி ஒழிப்பதற்குவேண்டிய முயற்சிகளெல்லாம் செய்கின்றன,

(தொடரும்.)



இப்படியிருக்கச் சிலர் எப்போதும் அழுக்கான உடைகளையே தரித்துக்கொண்டிருக்கிறார்கள்; சிலர் சிறிதும் அழுக்கில்லாத நிர்மலமான உடைகளையே தரிக்கிறார்கள். இதற்குக்காரணம் என்னவென்று சற்று யோசிப்போம். யோசித்தால், அது அவரவர்களுடைய பழக்கமேயன்றி வேறொன்றுமல்லவென்று தெளிவாகிறது.

அப்படியன்று, அது வழக்கமல்ல; அவரவர் செய்யும் தொழிலைப்பற்றியது என்று சிலர் சொல்லுவார்கள்.

நிதானித்துப் பார்த்தால்,தொழிலைப்பற்றியதென்று சொல்வதற்கில்லை; வழக்கமென்றே உறுதியாகச் சொல்லவேண்டியிருக்கிறது.

சில தொழில்களில் உடை சிறிதும் அழுக்கடையாமல் நிர்மலமாகவே யிருக்கும்; உண்மைதான்; மண்வேலைசெய்பவர்களைப் பார்க்கிலும் மரவேலைசெய்பவர்களின் உடை அழுக்கடையாமல் சுத்தமாகவேயிருக்கும்; ஆகிலும் அப்படி ஒரேதொழில் செய்பவர்களுக்குள்ளே ஒருவர்க்கு ஒருவர் வித்தியாஸம் பார்த்தால் எவ்வளவோ வேற்றுமை காணப்படுகிறதே; அதற்கு என்ன காரணம் சொல்லுகிறது?

மண்வேலைசெய்பவன் ஒருவன் வேலையொழிந்திருக்கும் காலத்தில் எப்பொழுது பார்த்தாலும் சிறிதும் அழுக்கில்லாத உடை தரித்து அழகாகவே காணப்படுகிறான்; அதேமாதிரி மற்றொரு மண்வேலைக்காரன் எப்பொழுதுபார்த்தாலும் பார்க்க வழங்காத அழுக்காடையே தரித்துக்கொண்டிருக்கிறான்; வேலையில்லாத விடுமுறை நாளிலேகூட அவன் அதே மாதிரிதான். இந்த இரண்டுபேரும் ஒரே சாரத்தில் வேலை செய்பவர்களே.

இவர்களில் ஒருவன் அழுக்கடைந்தவனாகவும், மற்றொருவன் அழுக்கற்றவனாகவு மிருப்பதேன்? அவர்களுடைய பழக்கந்தவிர இதற்கு வேறென்ன காரணம்.

இதைப்பற்றி நான் மற்றொன்றுகூடக் கண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட தொழிலாளிகள் மாத்திரமேயன்றிச் சாதாரணமாகச் சபைகளுக்குப்போகின்றவர்கள்கூடச் சிலர் எப்பொழுதும் அழுக்கான உடை தரித்தே வெளிப்படுகிறார்கள். இதற்குக்காரணம் கெட்டவழக்கமும் அதனுடன் சோம்பலும் தவிர வேறொன்றுமல்ல.

முதலில் கெட்டவழக்கமொன்று படிந்தால், பிறகு அதன் மூலமாகப் பல கெட்டவழக்கமும் சோம்பலும் உற்பத்தியாகின்றன. ஆதலால் கெட்டவழக்கம் எதுவும் உண்டாகாதபடி முதலிலே விலக்கவேண்டும்.

வஸ்திரங்களை அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்திருப்பது சிறிதும் கடினமன்று, மிகவும் சுலபமானது; அத்தனையும் ஸௌக்கியத்திற் கிடமானது. உடுத்திருக்கும் உடை அழுக்கடைந்துபோனால் அதை அழுக்கில்லாமல் செய்ய எவ்வளவுநேரம் செல்லும்? அரைமணிநேரத்தில் தண்ணீரில் தோய்த்துக் காயவைத்துக்கொள்ளலாம். அங்கி முதலியவை அழுக்கடைந்துபோனால், அவைகளையும் உடனுக்குடனே வண்ணானிடம்போட்டு வெளுக்கச்செய்துகொள்ளலாம். இத்தேசத்தில் பலர் அநேகமாகப் பிரதிதினம் காலையில் ஸ்நானம்செய்து, அப்பொழுதே முதனாள் தரித்திருந்த ஆடையைத் தோய்த்துக் காயப்போட்டுக்கொள்ளுகிறார்களே - அந்த வழக்கம் இத்தேசத்திற்கு மிகவும் அநுகூலமானது. இப்படி அப்போதப்போதே ஆடையைத் தோய்த்து அழுக்கெடுக்கும் வழக்கத்தைக் கையாண்டுவந்தால், இதைப்பார்க்கிலும் சுலபமானது மற்றொன்று மில்லையென்று தோன்றும். உடைகளைத் தோய்த்து வெளுப்பதோடுகூட, பாய் படுக்கை முதலியவைகளை அப்போதைக்கப்போது காற்றுபடும்படி வெளியே எடுத்துப்போடவேண்டும். இது எவர்க்கும் மிகவும் ஆரோக்கியமானது.

அழுக்குடைதரிப்பவனை ஆரோக்கியமென்பது ஒருபோதுமணுகாது.

"வெளிச்சீர் உட்சீரைக்காட்டும் கண்ணாடி" "வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை" என்னும் இந்தப் பழமொழிகள் அநுபவத்தால் ஏற்பட்டவைகளே. புறத்தில் எவன் அழுக்கற்றிருக்கிறானோ, அவன் அகத்திலும் அழுக்கற்றிருப்பான்: அப்படிப்பட்டவனிடத்தில் நற்குணமும் தெய்வபக்தியும் மேலிட்டிருக்குமென்று தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

# வைத்திய கலாநிதி.

நளஹு புரட்டாசி-ஐப்பசிமீ.

## AYURVEDIC SYSTEM OF THEORY ON CONSUMPTION AND ITS TREATMENT.

## க்ஷயரோகத்தினுடையவும் அதன் சிகித்ஸையினுடையவும் ஆயுர்வேத ஸம்பந்தமான கோட்பாடுகள்.

இந்த ரோகத்திற்கு ஆயுர்வேதத்தில் இராஜ யக்ஷ்மா என்றும், யக்ஷ்மா வென்றும், சோஷம் என்றும், ரோகராஜன் என்றும் பெயர்கள் உண்டு. முதலில் சந்திரன் என்கிற தேவதைக்கு இந்த வியாதி உண்டாயிற்று என்றும், சந்திரனுக்கு இராஜா வென்று பெயராகையால் இவ்வியாதிக்கும் இராஜ யக்ஷ்மா வென்கிற பெயர் வந்ததென்றும் ஓர் ஐதிஹ்யம் உண்டு. யக்ஷ்மா வென்றால் வியாதி; வியாதிகளுக்கெல்லாம் அரசன் போன்றதுபற்றி இராஜ யக்ஷ்மா வென்றும் கூறலாம். தேஹதாதுக்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக க்ஷயிக்கச் செய்வதால் க்ஷயம் என்கிற பெயர் வந்தது. ரோகங்களுக்குள் முதன்மையாக விளங்குந் தன்மையுள்ளதால் இதை ரோகராட் என்றும் வழங்குகிறார்கள்.

சந்திரனுக்கு இந்த மஹத்தான வியாதி ஸம்பவிக்க, அப்பால் அச்வினீதேவதைகள் அவனுக்குச் சிகித்ஸைசெய்ய, அதனால் அவன் ஸ்வஸ்ததமடைந்து பழைய நிலைமைப்படி மிகத் தெளிவு பெற்றான். இவ்வாறு சரகர் கூறுகிறார்.

நிதானமும் ஸம்ப்ராப்தியும்:—இரஸ-ரக்தாதி தாதுக்கள க்ஷயமடைவதற்கான காரணங்கள் வாயுவைப் பிரகோபிக்கச் செய்யும். அவ்வாறு பிரகோபமடைந்த வாயுவானது பித்தத்தையும கபத்தையும பிரகோபிக்கச் செய்து சரீரமெங்கும் அவற்றைப் பரவப்பண்ணும். ஆகவே வாதத்தின் பலத்தினால் அதன் இயற்கைப்படி தாதுக்கள் சுஷ்கித்து தேஹம் க்ஷயிக்கிறதென்பது ஸம்ப்ராப்தியின் ஒருவகை. பிரதானமாய் கபம் பிரகோபமடைந்து, அதன் மூலமாய் மற்ற இரண்டு தோஷங்களும் கோளாறடைவதுண்டு; அவற்றால், ஆஹாரப்பொருட்களின் ஸாரமாகிய இரஸம் என்னும் தேஹபோஷணைக்கான திரவரூபமாயுள்ள தாது* ஊறிச் செல்லும் இரஸாயனிகள் என்னும் குழாய்மார்க்கங்கள்† அடைபட்டுப் போக, போஷணையின்மையினால் மற்ற எல்லா வித தாதுக்களும் க்ஷீணித்துவர, கிரமமாக அப்பிணியாளியும் சுஷ்கித்துப் போகிறான். இவ்வியாதி விருத்தியடையும் முறையில் முக்கியமாக ஸௌம்யதாது எனப்படும் சரீர தாதுக்களின் ஸாரமான ஓஜஸ் என்னும் அரும்பொருள்‡ அழிந்து விடுகின்றது. இது விஷயமாய் வாக்படர்

"तैरुदीर्णोऽनिल: पित्तं कफं चोदीर्य सर्वत: ।
शरीरसंधीन् आविश्य तान् सिराश्च प्रपीडयन् ॥
मुखानि स्रोतसां रुध्वा तथैवातिविवृत्य च ।
सर्वान् ऊर्ध्वमधस्तिर्यक् सथास्वं जनयेद्गदान् ॥"

என்று வாதப் பிரதானமான நிதாந ஸம்ப்ராப்திகளையும்,

"कफप्रधानैर्दोषैस्तु रुद्धेषु रसवर्त्मसु ।
क्षीयन्ते धातव: सर्वे तत: शुष्यति मानव: ॥
+ + तत्प्रकोपो हि सौम्यधातुप्रकोपणात् ॥

என்று கபப் பிரதானமான ஸம்ப்ராப்திகளையும் கூறியிருக்கிறார். க்ஷயத்தில் ஓஜஸ் என்கிற தாது க்ஷீணிப்பதாலேயே சரீரம் உலர்ந்துப்போவதுபோல ஸாரமற்றதாய் விடுகிறதென்பதை ஆயுர்வேத ப்ரகாசம் என்னும் நூல் அடியில் வருமாறு விளங்கக் கூறுகின்றது:—

"दोषैरभिहतं चोजः प्राणदेहविधारकम् ।
क्षयमाप्नोति यद्यस्मद्यतः स जायते महान् ॥
जर्झरं जायते देहं यथा शुष्कमलाबुकम्,"

* இரஸம்—Chyle.
† இரஸாயனிகள்—Lacteal vessels.
‡ ஓஜஸ்—Albumen.



பிராணனுக்கும் தேஹத்திற்கும் முக்கியாதாரமான ஓஜஸ் தோஷங்களால் அழிக்கப்படுவதாலே, அந்த க்ஷயரோகம் மஹத்தான வியாதியென்று அறியப்படுகிறது. அப்பொழுது தேஹமானது சுஷ்கமாகப்போன சுரைக்காயைப்போல ஸாரமற்று கலகலத்துப் போகின்றது என்பது மேற்கூறிய பத்தியங்களின் பொருளாம்.

கோளாறடைந்த தோஷங்கள் நாக்கின் அடிப்புறத்திலும், அதன் கீழேயும் உள்ள கிரந்திகள் ஸம்பந்தமான குழல்களில் வரும் சுரப்பையும், க்லோமாவென்னும் வயிற்றிலுள்ள கிரந்தியின் சுரப்பையும், தாடைகளிலுள்ள கிரந்திகளின் சுரப்பையும் வற்றச் செய்து,* ஒருவாறு தேஹத்தில் வீக்கத்தையும் உண்டுபண்ணி க்ஷயரோகத்தையும் இறுதியிற் பிறப்பிக்கலாம் என்று வாக்படாசாரியர் கூறுகிறார்:

"जिह्वामूल-तल-क्लोमतालुतोयवहा : सिरा: ।
संशोष्य शोथमुत्पाद्य कुर्याद्वा शोषमन्तत: ॥

வெவ்வேறு அவயவங்களைப்பற்றி யுண்டாதல்:—பிரகோபமடைந்த வாயுவானது க்ஷய ஸம்பந்தமான தோஷத்தையும் நிலைமைக்குத் தகுந்தவாறு வெவ்வேறு இடத்தில் கிளப்பிச் செலுத்தும். அத்தோஷம் சிரஸ்ஸில் தங்கினால் தலைவலியை விருத்திசெய்யும்;† தொண்டையில் தங்கினால் பேசமுடியாமையையும், இருமலையும், தொண்டைக்கம்மலையும், அரோசகத்தையும் உண்டுபண்ணும்; பாரிசங்களையும் குடல் முதலியவற்றையும் பற்றியிருந்தால் பக்கச்சூலையுண்டாகும்; குதம் அல்லது மலாசயத்தைப்பற்றி யிருந்தால் பேதியாகச் செய்யும்; மார்பைப்பற்றியதானால் மார்வலியுண்டாகும்; அப்பொழுது இருமலுண்டாகும்போதெல்லாம் மார்பினுள்ளிருந்து கபத்தோடு இரத்தமும் கலந்து, மார்பு கிழிந்துவிடுவது போல் வலியை யுண்டுபண்ணிக்கொண்டு வெளிவரும். அத்தோஷம் ஸந்திகள் என்னும் பூட்டுகளில் தங்கினால் கொட்டாவியும் ஜ்வரமும் விசேஷமாய் உண்டாகும்.* இவ்விவரங்கள் சரகஸம்ஹிதையில் ராஜயக்ஷ்ம சிகித்ஸாத்தியாயத்தில் காணக்கூடியன.

ஜாடராக்னி மந்தப்பட்டுவிடுவதால் தோஷங்கள் ஆமவிகாரத்துடன்கூடி, கபதோஷத்தின் ஆதிக்யத்தினால் ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் குழாய்களின் முகங்கள் அடைக்கப்பட்டு விடும்; ஆகவே தாதுக்களின் இயற்கைச் சூடுகளும் அற்பமாய் விடும். இக்காரணத்தினால் இரஸதாது இரத்தமாக மாறுவதற்கே வகையில்லாமற் போவதால், மற்ற தாதுக்களின் போஷணைக்கு வழியில்லாமல் க்ஷயரோகம் முதிர்ச்சி பெறுகின்றது என்று வாக்படர் கூறுகிறார்.

இலக்ஷணங்கள் :—தோள்பட்டைகளிலும் அவற்றின் பாரிசங்களிலும் எரித்தல், கைகால்களில் அதிக எரித்தல், எல்லா அங்கங்களிலும் ஜ்வரம் இவை இராஜயக்ஷ்மாவென்னும் க்ஷயத்தில் ஸாதாரணமாய் முதலில் மேலே தென்படக்கூடிய குறிகளாம். மேலும் பீநஸம், ச்வாஸம், காஸம், தொண்டைக் கம்மல், அரோசகம், வாயால் மலம் கக்குதல், தேஹம் சுஷ்கித்துப்போதல், ஸாதாரண வாந்தி, பக்கவலி, ஜ்வரம், தோள்பட்டையில் எரித்தல் என்னும் இப்பதினொன்று லக்ஷணங்களும் பிறகு பொதுவாகக் காணக்கூடியன.

ஸாத்யாஸாத்தியத் தன்மைகள் :—முற்குறிப்பிட்ட பதினொரு குறிகளும் ஒருமிக்க

*நாக்கின் அடிப்புறத்துக் கிரந்திகள்—Sub lingual glands. க்லோமா—Pancreas.

† சிரஸ்ஸின் உட்புறத்தைப் பற்றிய க்ஷயரோகம் ஆங்கிலத்தில்—Tubercular meningitis எனப்படும்.

* தொண்டை-மார்புகளைப்பற்றிய க்ஷயம் ஆங்கிலத்தில் Consumption என்றும், குடலைப்பற்றிய க்ஷயம் Intestinal tuberculosis என்றும்—இவ்வாறு அவயவங்களுக்குத் தகுந்தவாறு பெயர்கள் வழங்கப்படும்.

ஸம்பவித்தால், அப்பிணியாளி ஸுகம் பெற முடியாது. மிகவும் அதிகமாய் உணவுண்பவன், தினந்தோறும் க்ஷபித்து வருபவன், அதிஸாரத்தினால் வருந்துபவன், பீஜமும் வயிறும் வீங்கி கஷ்டப்படுபவன் இவ்வித நிலைமைகளைப்பெற்ற க்ஷயரோகிகள் சிகித்ஸைசெய்ய முடியாதவர்களாவார். ஜ்வரம் தொடராதவன், பலசாலி, கஷ்டமான சிகித்ஸைகளையும் பொறுமையோடு செய்து கொள்ளக்கூடியவன் என்னும் இவர்கள் சிகித்ஸை செய்துகொள்ளக்கூடிய யோக்யதையுள்ளவராவர். மற்றொரு கிரந்தத்தில் கூறுவதாவது:—மிகவும் க்ஷீணித்து வருபவன், களகண்டம் என்னும் ஒருவித கிரந்தி, பேசும்போது குரல் முற்றிலும் மாறிப்போயிருப்பவன் இவ்வித நிலைமையுள்ள பிணியாளிகளுக்கு சிகித்ஸை செய்வதில் பிரயோஜனமில்லை.

க்ஷயரோகத்தை உற்பத்தி செய்வதற்குக் காரணமான தோஷங்கள், தமக்கு இயற்கையாயமைந்துள்ள சக்தி விசேஷத்தினால் தேஹத்தில் ஏதேனும் ஒரு பாகத்தில் ஒருமிக்கச் சேர்ந்து, ஸ்ரோதஸ்ஸுகளின் முகங்களில் கூடி கட்டியையுண்டாக்கி, அப்பால் தேஹத்தில் சூட்டை (ஜ்வரத்தை) விருத்திசெய்துவிடும்; அந்த ஜ்வரம் ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு மாதிரியாகக் குறைந்தும் மேலெழுந்தும் நிற்கும். இறுதியில் இவ்வியாதி முதிர்ச்சிபெற்று மனிதனைக் கொன்றுவிடும். இவ்வாறு வைத்திய மனோரமையில் விவரம் கூறப்பட்டிருக்கிறது:—

“दोषाः क्षयारम्भकहेतुभूताः
संचीयमानाः क्वचिदात्मशक्त्या ।
स्रोतोमुखेषु श्वयथुं विधाय
संवर्ध्य तापं विषमं च हन्युः” ॥

சிகித்ஸை:—க்ஷயரோகத்திற்கு அநேக விதமான சிகித்ஸாமுறைகள் உண்டு. அவற்றுள் ஸ்வேத சிகித்ஸை ஒன்று: அநேகவித பச்சிலைகளைக் கொண்டு கஷாயம் காய்ச்சி அதை சிரஸில் சுடச்சுட ஊற்றலாம்; இக்கஷாயத்தில் சிற்றுமுட்டி, சீந்தில், அதிமதுரம் முதலியதைச் சேர்த்துக் காய்ச்சவேண்டும். இக்கஷாயத்திலிருந்து எழும்பும் ஆவியை ஒரு குழாயில்விட்டு, அக்குழாயிலிருந்துவரும் ஆவியை அவசியமான அவயவத்தில் செலுத்தி ஸ்வேத சிகித்ஸையைச் செய்வதுண்டு. இவ்விதம் செய்யப்படும் ஸ்வேத சிகித்ஸைக்கு “நாடீ ஸ்வேதம்” எனப்பெயர். பாலை, சதகுப்பி, சிற்றுமுட்டி, அதிமதுரம், வசம்பு இவை முதலியவற்றில் அவசியமானவைகளைச் சேர்த்துக்காய்ச்சிய கஷாயத்தினால் ஒற்றடம் கொடுப்பதும் நலம். அது “உபநாஹ ஸ்வேதம்” என்று கூறப்படும். தண்ணீர் விட்டான்கிழங்கு, அதிமதுரம், சாறடை, நிலப்பனங்கிழங்கு, சிற்றுமுட்டி, சிற்றரத்தை, நெய்தல் இவற்றால் காய்ச்சிய கஷாயத்தில் கிருதம் சேர்த்து பக்குவம் செய்து, அந்த கிருதத்தினால் நஸ்ய சிகித்ஸை, தூமபாநசிகித்ஸை இவற்றைப் பிரயோகித்து வரலாம். இந்த கிருதம் முதலிய ஸ்நேஹங்களை ஆஹாரத்திற்குப் பிறகு உட்கொள்ளச் செய்யலாம். அவ்வாறு ஆஹாரம் உட்கொண்ட பின்பு ஔஷதம் உபயோகித்தால் அது “ஔத்தர பக்திகம்” எனப்படும். அவ்வித முறைகளால் பக்குவம் செய்யப்பட்ட தைலவகைகளைக் குதமார்க்கத்தில் வஸ்தியாகப் பிரயோகிக்கலாம், அல்லது அப்யங்கம் செய்து வரலாம்.

அசுத்தமான ரத்தத்தை வெளிப்படுத்துவதற்கு அட்டைகளை விடுவதும் உண்டு. அது ஜலூகாப்பிரயோகம் எனப்படும். சுரைக் குடுக்கையினுள் சிறிது அனலைக்காட்டி, உள்ளடங்கிய வாயுவை அப்புறப்படுத்தி, அதை வியாதியினால் பிடிக்கப்படும் அவயவத்தில் கவிழ்த்து, இரத்தத்தை உறிஞ்சுவதுமுண்டு. அல்லது சஸ்திரத்தினால் கீறியும் இரத்தம் வெளிப்படுத்தலாம். இவ்வாறு ஏதேனும் ஒருவகையில் இரத்தம் வெளிப்படுத்தப்பட்ட பிறகு, அவ்விடத்தில் தாமரைக்கிழங்கு, வெட்டிவேர், சந்தனம், அறுகு, அதிமதுரம், மஞ்ஜிஷ்டி, நாககேஸரம் இவற்றைச் சேர்த்துக்காய்ச்சிய கஷாயத்தினால் ஒற்றடம் கொடுப்பது நலம். முற்கூறிய சரக்குகளால் பக்குவம் செய்த கஷாயத்தை ஒருபெரிய தொட்டியில் ஊற்றி அதில் இறங்கி உட்கார்ந்து வரலாம். இவ்விதம் செய்தால், ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் இரத்தக்குழாய்களின் அடைபட்டுள்ள முகங்கள் திறக்கப்பட்டு, தாதுக்களுக்குப் போஷணையும் போக வழியுண்டாகும். ஸ்நேஹம் என்னும் எண்ணெய் அல்லது நெய்த்தொட்டியில் செய்ததுபோல் பால் தொட்டியிலும் ஸ்நாநம் செய்யலாம். தைலம் முதலியவற்றை ஸுகமாக உடம்பில் தேய்த்து நன்கு மர்த்தநம் செய்வதும் மிக்க உபயோககரமாம். ஸுகந்தமுள்ள வாஸனைத்திரவ்யங்களை உடம்பில் உபயோகிக்கலாம். நறுமணமும் நற்சுவையுமுள்ள புஷ்டிகரமான உணவுகளை உண்டுவரவேண்டும். ஆஹாரங்களும், ஆசாரங்களும், உடைகளும், மனோஹரமாகவும், நிர்மலமாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு சரகர் சொல்லுகிறார்.

வாக்படாசாரியர் கூறுவதாவது:—வெள்ளாட்டுப்பாலும், வெள்ளாட்டு நெய்யும் கூடிய மிருஷ்டமான அன்னபானங்கள் ரோகிகளுக்கு மிகவும் சிரேஷ்டமான உணவுகளாம். உள்ளும் புறமும் பிணியாளி சுத்தமாயிருக்கவேண்டும். மனம் கவலையற்று ஸுகமாயிருக்கவேண்டும். இரண்டு வேளையும் பற்களைத் துலக்கவேண்டும்.

ஆயுர்வேத ப்ரகாசத்தில் கூறப்பட்டுள்ள சிகித்ஸை மிகவும் கொண்டாடத்தக்கது: எந்த ருதுக்களிலும் ஆரோக்கியமளிக்கக் கூடியதும் அதிக குளிர்ச்சியாவது சூடாவது இல்லாத நடுத்தர நிலைமையுள்ளதுமான பிரதேசத்தில் மனோஹரமான மாளிகையில் க்ஷயரோகி வஸிப்பது நலம்; அவ்விடம் மிகப் பரிசுத்தமாயிருக்கவேண்டும். வெள்ளாட்டு மந்தைகளால் சூழப்பட்டிருக்கும் பிரதேசம் இவ்வியாதிக்கு மிகவும் எதிரிடையானது. ஆட்டுப் பாலையே உட்கொண்டும் வரலாம். நாம் கூறியுள்ள விஷயங்களைக் கவனித்துப் படித்தால், இது ஒன்றைக்கொண்டே ஆயுர்வேதத்தின் மேன்மை இத்தகையதென்று ஒருவாறு உணரலாம்.



## FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

முழங்கால் சிப்பி உடைதலும் அதன் சிகித்ஸையும்:—மெத்தைப்படி முதலியதிலிருந்து கீழே இறங்கிவருகையில் திடீரென்று கால் வழுவி விழும்போது, காலிலுள்ள தசைநார்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு வலித்து இழுப்பதால் ஜாங்வஸ்த்தி யென்னும் முழங்கால் சிப்பி ஸாதாரணமாய் உடைந்து விடுவது வழக்கம். இவ்வாறு நேரிடும்போது சுரீல் என்கிற ஒருவித வலியும் எலும்பு நொறுங்குவதாலான ஒருவித தீவ்ரமான உணர்ச்சியும் உண்டாகும். இது நேர்ந்ததும் அம்மனிதன் நிற்கமுடியாமல் கீழே வீழ்ந்து விடுவான். முழங்கால், வலியற்றுப்போய், உள்ளே எலும்பு முதலியது இல்லாததுபோன்ற உணர்ச்சியேவிட்டிருக்கும். இவ்வுணர்ச்சிகள் முழங்காலுக்குச் சிறிது மேற்புறமாக உடைந்துள்ள எலும்புத்துண்டுகளுக்கு இடையில் உண்டாயிருப்பதாக உணரப்படும்.

இம்மனிதனை உடனே படுக்கையில் படுக்கச்செய்ய வேண்டும். காலை மெதுவாக நன்றாய் நீட்டி, மெத்தையிட்ட மரச்சிராயை அல்லது கெட்டியான காகித அட்டையை பிருஷ்ட பாகத்திலிருந்து குதிகால் வரையில் நெடுக நீண்டிருக்குமாறு வைத்துக்கட்ட வேண்டும். இச்சிராயின் முனையில் ஒரு த்வாரம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்; மேலும் ஒரு மெல்லிய முனை காலுக்கு வெளியில் நீண்டிருக்குமாறு அதில் இருப்பது நலம்; அந்த த்வாரமும் மெல்லிய முனையும் பாதத்திலிருந்து வரும் பந்தனங்களைத் தாங்குவதற்கு உபயோகமாகும். பிறகு சிராயின் குதிகால் பக்கத்து முனையை சுமார் ஒன்றரை அடி உயரம் தூக்கி ஏதேனும் தலையணை முதலியதின்மேல் அமர்த்தி வைக்கவேண்டும்; அப்படிச்செய்தால், அவசியமான தசைநார்கள் சுருங்கிய நிலைமையிலிருந்து நீண்டு, உடைந்துள்ள எலும்புப் பகுதிகளை ஒன்றோடொன்று கூட்டிவைக்கக்கூடிய நிலைமைக்கு வரும். பாதமும், அதற்கு அடுத்தாற்போலுள்ள ஜங்காவென்னும் காலின் பாகமும் சிராயுடன்கூட்டி கொஞ்சம் மெதுவாகக் கட்டப்படவேண்டும். அல்லது குதிகால் முனையை உயர்த்துவதற்குப் பதிலாய், காலை நேராக நீட்டி, உடம்பை நிமிர்த்தி சார்மனைபோன்ற ஆஸனம் அல்லது படுக்கையில் ஒருவாறு சாய்ந்த நிலைமையில் வைத்தாலும் முன்கூறிய பயன் உண்டாகக்கூடும். இவ்விரண்டுவிதமான அமைப்புகளில் ஒன்றை பகலிலும் மற்றொன்றை இரவிலும் பிரயோகித்தால், பிணியாளிக்கு ஸௌகரியமாயிருக்கும். ஆனால் ஒருவகையான அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்புக்குப் பிணியாளியின் சயனநிலைமையை மாற்றும்போது, தசைநார்கள் ஒருமிக்க நீண்டு அல்லது சுருங்கி ஏதேனும் கெடுதியுண்டாக்காமல் இருக்கும்படி உபாயமாய் திருப்பவேண்டும். பாதத்தைத் தாழ்த்துவதற்கு முன்பு உடலை உயர்த்துவதாலும், அதுபோலவே உடலைத் தாழ்த்துவதற்குமுன் பாதத்தை உயர்த்துவதாலும் இவ்வவஸ்த்தை ஸம்பவிக்கலாம். சில சேஸுகளில் குதிகாலையும் உயர்த்தி, பாதி முன்புறமாக நிமிர்ந்திருக்கும்படி உடம்பையும் உயர்த்திவைக்காத வரையில், உடைந்துள்ள முழங்கால் சிப்பியின் பகுதிகள் ஒன்றோடொன்று ஒட்டிச் சேருவதில்லை.

பிணியாளியை எந்த நிலைமையில் நிறுத்தியபோதிலும், முழங்காலில் வீக்கமும் சிதைவும் அதிகமாயிருக்கும்போது முதலில் சூடான ஒற்றடம் கொடுப்பது அவசியமாகும். பிறகு முழங்காலைச் சுற்றிலும், எண்குறி மண்டல பந்தனம்* என்கிற முறையை அநுஸரித்து ஒரு கட்டு கட்டவேண்டும்; இவ்விதம் செய்வதால் உடைந்துள்ள எலும்புத்துண்டுகள் ஒன்றாகச் சேர்ந்துவிடவும், பிறகு அசைந்து விலகிக் கொள்ளாமல் ஸ்த்திரப்படுவதற்கும் ஸௌகரியமுண்டாகும்.

முழங்காலை அசைப்பதற்கு ஒருமாதகாலமாவது செல்லும்; என்றால் குறைந்தது ஒரு மாதமாவது முழங்காலை அசையவொட்டாமல் ஒரு நிலையில் வைத்திருக்கவேண்டும். அசைக்க ஆரம்பிக்கையில் காலை அமைதியாகவும் மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் அசைக்கமுயல வேண்டும். திடீரென்று அதிகமாய் அசைத்துநடக்க முயலக்கூடாது. அஜாக்கிரதையாக அசைத்து நடக்க ஆரம்பித்தால் எலும்பின் ஒடிந்த முனைகள் ஒன்றோடொன்று இணைந்து எலும்பின் அம்சங்கள் விருத்தியாவதற்குப் பதிலாக, ஸ்நாயு என்னும் கெட்டியான வேறொரு பந்தன பதார்த்தம் (Ligament) உற்பத்தியாய் விடும்; பிறகு அது தொந்தரவு அளிக்கும். சில மாதங்கள் வரையில் அம்மனிதன் முழங்காலில் நெகிழ்ந்துழலக்கூடிய ஜாநுகவசம் (Elastic knee-cap) என்னும் பந்தனத்தை முழங்காலில் கட்டிக்கொண்டு கக்ஷதண்டம் ஒன்று ஊன்றிக்கொண்டுதான் சிறிது நடமாடலாம். தகுந்த ஜாக்கிரதையில்லாமல், குணமாய் விட்டதேயென்று எண்ணிக்கொண்டு திடீரென்று அதிகமாய் நடமாட முயன்றால், பிறகு என்றைக்குமே நொண்டிக்கொண்டு நடக்க வேண்டி நேரிடும். இப்பொழுது சஸ்திர சிகித்சையில் நிபுணராயிருப்பவர், உடைந்துவிட்ட முழங்கால் சிப்பியின் துண்டுகளை வெள்ளிக்கம்பிகளால் ஒன்றாகப் பிணைத்துக்கட்டி கெட்டிப்படுத்தி விடுகிறார்கள். இதனால் ஒடிந்துள்ள எலும்பின் பாகங்கள் ஒன்றோடொன்று நன்றாகச் சேர்ந்துவிடுவது நிச்சயம் எனப்படுகிறது.

* எண்குறி மண்டல பந்தனத்தைப்பற்றிய விவரங்கள் சென்ற வருஷத்திய (மூன்றாவது வால்யம்) வைத்திய கலாநிதியில் 161-ம் பக்கத்தில் அபாயங்களில் பிரதம உதவியென்னும் தலையங்கத்தின்கீழ் கூறப்பட்டிருக்கிறது.



## DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### சிவப்புப்பசலை.

இது மிகவும் ஸாரமுள்ள ஒரு ஸாதாரணமான பூண்டு. இது எங்கும் ஏராளமாகக் கிடைக்கக்கூடியது. இதில் சிவப்பான சின்னஞ்சிறிய பழங்கள் பழுப்பதுண்டு. இவற்றைத் தொட்டிகளிலும் சிலர் வைத்துப் பயிர்செய்வது வழக்கம்.

(1) இதன் இலைகளை அரைத்து (சிலர் வெண்ணெயுடன் அரைப்பதுமுண்டு) அக்கி யென்னும் விஸர்ப்பங்களின்மேல் பூசலாம். இவ்விதம் செய்தால், எரித்தல் அடங்கி, விரணமும் துரிதமாய் ஆறிவரும். (2) இதன் வேர்களைக் கஷாயமிட்டு உபயோகித்தால், பித்த ஸம்பந்தமான வாந்தியும் குமட்டலும் நிவர்த்தியாகும். $\frac{1}{2}$-சேர் ஜலத்தில் 3-பலம் வேர்களைப்போட்டு, $\frac{1}{8}$ சேராக வற்றும்படியாகக் காய்ச்சி, வடிகட்டி யெடுத்து உபயோகிக்கவும். வாந்தி அதிகமாக உண்டாயிருந்தால், இக்கஷாயத்தை ஒவ்வொரு தடவையும் வாந்தியான அரை நாழிகைக்குள்ளாகக் கொடுத்து வருவதால் குணமுண்டாகும். (3) சொறி சிரங்குகளாலும் கட்டிகளாலும் துன்பப்பட்டு வருபவருக்கு இப்பசலைக்கீரையை ஸாதாரணமாகச் சமைத்து அன்னத்துடன் கொடுத்து வருவதால் நல்ல பயன் உண்டாவதாகவும் சில வியாபகரான வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

### புநர்நவாதி க்வாதம்.

இவ்வௌஷதத்தைப்பற்றி மிஸ்டர் V. M. ஸ்ரீநிவாஸ ராவ் (நாகப்பட்டணம் வைத்தியர்) அவர்கள் எமக்குப் பின்வருமாறு எழுதுகிறார்:—

"வெள்ளைச் சாறடைமுதலிய எட்டுவித சரக்குகளைச் சேர்த்து பக்குவம் செய்யப்படும் இக்கஷாயம் தமது ஆபீஸிலிருந்து எனக்குக் கிடைத்துள்ள "சார்ங்கதர ஸம்ஹிதையில்"* சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? இரத்தமெல்லாம் வற்றிப்போய், கொஞ்சம் உடல் வீக்கத்துடன் என்னிடம் குப்புசாமி நாயுடு என்கிற இவ்விடத்திய மண்டி வியாபாரி ஒருவர் வைத்தியத்திற்கு வந்தார். அவருக்கு இதற்குமுன் குளிர்க்காய்ச்சல் வந்து சுமார் ஒருமாதகாலம் தொடர்ந்து அடித்துவந்து, இப்பொழுது 2-மாதமாய் ஜ்வரமில்லாமல், உடம்பில் இரத்தம் குறைந்து, சிலநாட்கள் வரையில் முகமும் உடலும் வெளுத்து, பிறகு 15-நாட்களுக்கெல்லாம் காலிலும், முகத்திலும் பூசினாற்போல வீக்கமும் ஏற்பட்டதாக அவ்வியாதிக்காரர் சொன்னார். நான் அவரைக் கவனித்துப் பரீக்ஷிக்கையில், உடம்பெல்லாம் ஒருவிதமாய் நிகிகிப்பாகவும், காலிலும் முகத்திலும் கொஞ்சம் வீக்கமுண்டாய் வெளுப்பாகவும் காணப்பட்டது. சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறியுள்ள புநர்நவாதி க்வாதம் என்கிற கஷாயத்தைத் தொடர்ந்து தினத்திற்கு மூன்று தடவையாக அரைமண்டலம் கொடுத்துவந்தேன். வீக்கம் மாத்திரம் ஏதோ வாடினதாகத் தெரிவந்ததே தவிர, இரத்தமும் விருத்தியாகவில்லை; மலமும் தாராளமாகப் போவதில்லை. பிறகு நானே யோசித்து, அக்கஷாயத்தில் மலத்தைக்கட்டக்கூடிய சரக்கு இன்னதாயிருக்குமென்று நிதானித்துக் கவனித்தேன். அதில் சேர்க்கப்பட்டுவந்த மரமஞ்சளைமட்டும் விலக்கிவிட்டு மற்றச் சரக்குகளையெல்லாம் சேர்த்துக் கஷாயம் பக்குவம் செய்து, மறுபடியும் 15-நாட்கள் விடாமல் கொடுத்துவந்தேன். வீக்கம் வாடிப்போய், வெளுப்பும் மாறி, மலம் முதலியதும் நன்றாகக் கழிந்து பிணியாளி இப்பொழுது வியாதி நீங்கினவனாகத் தோற்றுகிறான். இப்பொழுது, ஆஹாரத்திலும் நல்ல விருப்பம் அடைந்து ஆரோக்யத்தைப் பெற்றுவருவதாய் அறிய எனக்கு மிகவும் ஸந்தோஷமாயிருக்கிறது. நான் செய்த சிகித்சையினால் வியாதிக்கிரஸ்தன் குணப்பட்டுவிட்டான் என்று பெருமைபாராட்ட இவ்விதம் எழுதவில்லை; ஆனால் இவ்வளவு சிலாக்யமான ஔஷத முறைகள் அடங்கிய உச்சிறந்த புஸ்தகத்தை நமது தேசபாஷையில் முதன்முதல் மொழிபெயர்த்துப் பிரசுரித்த தங்களுக்கு அடியேன் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்."

### ஜடாமாம்ஸி வேர்.

இதற்கு ஆங்கிலத்தில் வலீரியன் என்றும், ஹிந்தியிலும் வங்காள பாஷையிலும் பால்ச்ஹர் (Balchar)

* சார்ங்கதர ஸம்ஹிதையில் 78-வது பக்கத்தில் புநர்நவாதி க்வாதம் விவரிக்கப்பட்டிருக்கிறது.

என்றும் பெயர். இது வட-காச்மீரத்தில் உண்டாகின்றது. ஆயுர்வேத வைத்தியர்கள் இச்சரக்கை அநேகம் முறைகளில் உபயோகித்து வருகிறார்கள் என்பது பிரஸித்தம்.

இதை ஜலத்தில் சேர்த்து வாலையிலிட்டுத் தீநீராக இறக்கினால் ஒருவிதமான மணமுள்ள தைலத்தையும், வலீரிக் ஆஸிட் (Valeric acid) என்னும் அமிலச்சத்தையும் இதிலிருந்து ஏராளமாகப் பெறலாம். இது தேஹச்சூட்டைத் தூண்டிக்கொடுக்கவும், ஆக்ஷேபக ஹரமாகவும் (Antispasmodic) உபயோகப்படுகிறது. ஆகவே இது நரம்பு ஸம்பந்தமான கோளாறுகளிலும், ஸூதகக் கோளாறால் உண்டாகும் மூர்ச்சை முதலிய விகாரங்களிலும் உபயோகிக்கத் தகுந்ததாயிருக்கிறது. இப்பொழுது இங்கிலாந்தில் இது மிகச் சொற்பமாகப் பயிரிடப்படுகிறது; ஆகவே அவ்விடத்தில் இச்சரக்குக் கிடைப்பது மிகவும் அரிதாய்விட்டது. நல்ல ஊக்கமும் சுறுசுறுப்புமுள்ள கம்பெனிகள் இச்சரக்கை இங்கிருந்து இங்கிலாந்துக்கு அதிகமாய் ஏற்றுமதி செய்தால், நல்ல இலாபம் கிடைக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. இலையுதிர் காலத்தில், ஜடாமாம்ஸியானது ஏராளமாகப் பயிராகக்கூடியது. மேலும் அப்பொழுது மிகவும் சிறந்த வேர்களை இது உண்டாக்குகின்றது. இது புஷ்பிக்கும்போது, இச்செடி முனைகளைக் கத்தரித்துத் தள்ளிவந்தால், இதன் வேர்கள் வெகு நன்றாகப் படரும். குஜராத்தியர்களும், தென் இந்தியாவிலுள்ளவர்களும் இச்சரக்கை ஜடாமாம்ஸி யென்று வழங்குகிறார்கள். இதன் சுவை ஒருவாறு விறுவிறுப்பாயிருக்கும். சில ஜ்வரங்களிலும், ஜ்வரம் நிவ்ருத்தியான பிறகு ஸாதாரணமாயிருக்கக்கூடிய பலக்குறைவுகளிலும் இச்சரக்கை உத்தீபந காரியாக பிரயோகிப்பதுண்டு.—(Practical Medicine).

---

### அதிமதுரத்தூள்.

நாசியிலிருந்து பல வகைகளில் இரத்தம் கசிந்து வருவதுண்டு. முக்கியமாய் அழற்சி அதிகரித்தோ, பீனஸம் மேலிட்டோ, சில்லிமூக்கு உடைந்தோ இரத்தம் வெளிவரும்போது அதிமதுரத்தூளை இரண்டு மூன்று சுடிக்கை உறிஞ்சினால் இரத்தக்கசிவு நிற்கும். சுமார் ½-கழஞ்சி தேனில் குழைத்தும் தொண்டையினுள் தடவி வரலாம்.

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினா 56. அஷ்ட சூர்ணம்.

“ஐயா,

குடலைப்பற்றிய சில கோளாறுகளில் அஷ்டசூர்ணத்தை உட்கொண்டுவருவது நலம் என்று கேள்விப்படுகிறேன். அதன் விவரம் எனக்குத் தெரியவில்லை. 1. அச்சூர்ணத்தில் எந்தெந்த சரக்குகள் எந்த அளவில் சேருகின்றன? 2. அதை உட்கொள்ளும் அளவு என்ன? 3. வயிற்றுப்பொருமலால் வருந்தும் ரோகிக்கு அதைக் கொடுக்கலாமா? இவற்றிற்குத் தகுந்த விடைகளை வைத்திய கலாநிதியின் மூலமாய் வெளியிடவேண்டும் என்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.” R. கருப்பண்ண வைத்தியர்.

விடை:—1, ஜீரகம், கருஞ்ஜீரகம், திப்பிலி, இந்துப்பு, சுக்கு, ஓமம், மிளகு இவை ஒவ்வொன்றும் ஸமவெடையும், பெருங்காயம் மாத்திரம் எட்டில் ஒரு பங்கு எடையும் சேர்க்கவேணும். 2. ஸாதாரணமாய் ½தோலாமுதல் 1½ தோலாவரையில் உட்கொள்ளலாம். 3. ஆம்; வயிற்றுப்பொருமலில் இச்சூர்ணத்தை அடிக்கடியும் உட்கொண்டு வரலாம். ப-ர்.

---

### வினா 57. காலை நேர வாந்தி.

“ஐயா,

பதினைந்து பதினாறு நாட்களாக நான் காலையில் எழுந்திருக்கையில் வாயில் உமிழ்நீர் அமிதமாய் ஊறி வயிற்றில் ஸங்கடமும், தலைவலியும், குமட்டலும் அதிகரித்து, இறுதியில் பித்தத்தண்ணீர் வாந்தியாகிறது. இதற்குக் காரணமென்ன? 2. இதற்கு நானே செய்துகொள்ளக்கூடிய சிகித்சை எளிதாக ஏதாகிலும் உண்டா? 3, இல்லாவிட்டால் வைத்தியர்களிடம் பரீக்ஷித்துக்கொண்டு அவர்களிடமிருந்தே சிகித்சை செய்துகொள்ளவேண்டுமோ? தயவுசெய்து கலாநிதியின் மூலமாய் அறிவிக்கக்கோருகிறேன்.” M. K. V.



விடை:—தாங்கள் சொல்லுகிற கோளாறைப்பற்றி யோசனைசெய்து பார்த்தோம் 1. தங்களுக்குக் காலாகாலத்தில் மலப்பிரவ்ருத்தி ஆகாமல் இருக்கக்கூடும்; அல்லது கல்லீரல் சுறுசுறுப்பற்றிருக்கலாம்; மேலும் தாங்கள் இரவில் வெகுநேரம் கண்விழித்திருக்கக்கூடும். இரைப்பையில் இயற்கையினும் அதிகமாய் புளிப்பு சேர்ந்தாலும் இவ்விதமான வாந்தி உண்டாகலாம். 2. தினந்தோறும் காலையில் எழுந்திரிந்தவுடனே மலம் வெளியாவது கஷ்டமாயிருந்தால், இரவில் படுக்கைக்குப் போகும்போது இரண்டொரு உத்தரணி ஆமணக்கெண்ணெயைப் பாலில் கலந்து உட்கொண்டு விடலாம்; இதனால் மலப்பிரவ்ருத்தி தாராளமாய் ஆகக்கூடுமாதலால், உமிழ்நீர் அவ்வளவாகச் சுறக்காது. மேலும் பற்களின் சந்துகளில் ஒருவிதமான ஊத்தையும் சேராதபடி கொதித்த ஜலத்தைக் கொண்டு வாயை நன்றாகக் கொப்புளித்து வருவதும் நலம். பல்துலக்கிய க்ஷணமே ஏதாவது புளிப்பும் காரமும் சேராத உணவைச் சிறிதளவு உட்கொண்டு, வெளியில் காற்றோட்டமாகத் திரிந்துவிட்டு வருவது நலம். 3. நல்ல வைத்தியனிடம் நேரில் சென்று இருக்கிறதை வெளிப்படையாகச்சொல்லி தகுந்த சிகித்சையைச் செய்துகொள்வது நல்ல காரியமேயாம். ப-ர்.

---

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### இங்கோடைன்.

இந்தியாவானது நமது பிராசீன ஔஷத நிர்மாண ரீதிகளையும் அவற்றின் உபயோகாதிகளையும் காலக்கிரமத்தில் கைவிட்டு, எல்லாவிதமான ஔஷதங்களுக்கும் பிற நாடுகளையே எதிர்பார்ப்பதுபோல தாதுப்பொருட்களால் முறைப்படி தயார் செய்யக்கூடிய வெகுப் பிரதானமான இதர நிறப்பொருள் முதலியவற்றிற்கும், வெகு ஸாதாரணமான எழுதும் மை முதலியவற்றிற்குங்கூட தேசாந்தரங்களை அண்ணாந்துப் பார்க்கவேண்டிய நிலைமையில் இருப்பது தேசக்ஷேமத்தை விரும்புபவர்களுக்கு விஸனகரமான விஷயம். நிறப்பொருட்களைத் தயார் செய்வதென்றால் அது மிகவும் பிரபலமான முயற்சியினாலும் அளவற்ற திரவ்யத்தினாலும் ஸாதிக்கக்கூடியதாகும். அனைவரும் எழுதுவதற்கு நாள்தோறும் அவசியமான மை அல்லது இங்குகூட இதுவரையில் நம்மவரால் ஏராளமாகத் தயார் செய்யப்படாமலிருப்பது எவ்வளவு ஊக்கக்குறைவைக் காட்டுகிறது? பம்பாயில் மெஸர்ஸ் ரானடே அண்ட் கம்பெனியார் “இங்கோடைன்” என்னும் பெயருடன் ஒருவித சிறந்த மஷியைத் தயார்செய்து, மிகச் சொற்பவிலைக்கு விற்று வருகிறார்கள். நமது பார்வைக்குப் பரீக்ஷார்த்தமாக இரண்டு சிறிய புட்டிகள் அனுப்பப்பட்டன. ஒவ்வொன்றும் ஒரு டிராம் அளவுள்ளது. அதை சுமார் 12 டிராம் ஜலம் விட்டு விளாவினால் மிகச் சிறந்த இங்கியாக ஆகிறது. அவர்கள் இங்கியை வெகு திரவமாகப் பண்ணாமல் குழம்பான முறையில் கனத்திரவமாகப் பக்குவம் செய்து, ஸௌகரியத்தின் பொருட்டுச் சிறிய குப்பிகளில் நிறப்பி விற்பனை செய்கிறார்கள். சீமையிலிருந்து வரும் மிகவும் சிரேஷ்டமாகக் கருதப்படும் இங்கு வகைகளைவிட “இங்கோடைன்” என்னும் இங்கு குணத்தில் மேலானதென்றும், விலையில் மிகக் குறைவானதென்றும் தெரிந்துகொண்டிருப்பதால் அதை நாம் அனைவருக்கும் சிபார்சு செய்கிறோம். சென்னையில் சுதேச ஸாமான்களின் பிரபல வியாபாரிகளான மெஸ்ஸர்ஸ் S. வைத்தியா அண்ட் கம்பெனியார் இதற்கு ஏஜெண்டுகளாவார்.

---

### ஓர் வருஷாந்தக் கொண்டாட்டம்.

தஞ்சாவூர் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் வைத்திய கலாசாலையின் வருஷாந்தக் கொண்டாட்டம் இம்மாதம் 7௳ கனம் ஸர்ஜன் ஜெனரல் பானர்மென் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்று, முடிவுவரையில் அக்கிராஸனாதிபதி தான் வைத்திய இலாகாவில் உத்தியோகத்திலமர்ந்த காலத்திற்கு இப்போது மிகவும் மாறுதலடைந்திருக்கிறதென்றும், வைத்தியர்களுக்கு வியாதியஸ்தர்களின் சரியான நிலைமையைக் கண்டுபிடித்துத் தகுந்த ஔஷதம் பிரயோகம் செய்யவேண்டியிருப்பதால் அதற்கு மிகுந்த அறிவு தேவையென்றும், ஆனால் இக்காலத்திய வைத்திய கலாசாலைகளில் கல்விகற்கும் இந்து மாணவர்கள் புஸ்தகங்களையே ஜாஸ்தியாகப் படித்தும் அனுபோகம் மிகவும் குறைவாயிருக்கிறதென்றும், இக்குறைவு இல்லாமல் நிவ்ருத்தி செய்யவேண்டியது அவசியமென்றும் வற்புறுத்தினர்.

R. K.

## ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களின் சம்பள விகிதம்.

சென்னையில் எல்லா இந்திய ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்டுகளின் கான்பரென்ஸின் அக்கிராஸனம் வகித்தபோது, ஸர்ஜன் ஜெனரல் பானர்மென், ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களுடைய சம்பள விகிதம் அடுத்த மார்ச்சு மாதம் முதல் அடியில் குறிப்பிடப்படும் விதமாக உயர்த்தப்பட்டிருப்பதாய் குறிப்பிட்டார் என்பது அவர்களுக்கு ஸந்தோஷகரமான விஷயம். தற்காலமுள்ள சம்பள விகிதம் 1906-ம் வருஷத்தில் இந்திய கவர்ன்மெண்டாரின் அநுமதியின்பேரில், மாகாண கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டது. சென்னை கவர்ன்மெண்டார் 1906-இல் ரூ. 30-இல் ஆரம்பித்து 80 ரூபாய் வரையில் இவர்களுடைய சம்பளத்தை உயர்த்தலாம் என்றார்கள். பிறகு 1912-இல் 100 ரூபாய் வரையில் உயர்த்தலாம் என்றும் உத்தரவு செய்தார்கள். வாளது மார்ச்சு மாதம் முதற்கொண்டு ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் பின் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 4. வது கிரேட், | 1 முதல் 5-வருஷ | ஸர்வீஸ் | ரூ. 30 |
| 3. ,, | ,, 5 — 10 | ,, | ,, 45 |
| 2. ,, | ,, 11 — 15 | ,, | ,, 55 |
| 1. ,, | ,, 15 வருஷங்களுக்குமேல் | | ,, 65 |
| ஸீனியர் கிரேட் (2-ம் தரம்) | | | 80 |
| ஷை (1-ம் தரம்) | | | 100 |

இவ்விதமாக ஏற்படுத்திய புதிய விகிதம் அவ்வளவு அதிகமல்லவாகிலும், காலக்கிரமத்தில் ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களுடைய முன்னேற்றத்திற்கு அவசியமான முயற்சிகள் கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் என்றும் ஸர்ஜன் ஜெனரல் கூறியிருக்கிறார்.

---

## ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களுடைய போதனைமுறை.

இதுவரையிலும் சென்னை மாகாணத்திலுள்ள வைத்தியப் பள்ளிக்கூடங்களில் ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜென்களுடைய வகுப்புக்கு ஏற்பட்டிருந்த போதனைமுறைகளைத் திருத்தி, அவர்களுக்கு இன்னும் விசாலமான அறிவையும் அநுபவத்தையும் புகட்ட வேண்டியது அவசியமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு இனி எல். எம். பி. என்கிற பட்டப்பெயரும் குறிப்புக்காகவும் கௌரவத்திற்காகவும் அளிக்கப்படுமென்று கூறப்படுகிறது. மிகவும் கீழ்நிலைமையிலிருந்த ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்டுகள் என்னும் வைத்தியர்கள் கூட கவர்ன்மெண்டாருடைய ஆதரவை இவ்வளவு அதிகமாகப் பெற்று நாளுக்கு நாள் மேன்மையடைந்து வர, ஆயுர்வேத வைத்தியர்களுடைய புரோவிருத்தியை மாத்திரம் கவனிப்பாரைக் காணோம்.

---

## சுகாதாரப் பொருட்காட்சியும். சாஸ்திரப் பொருட்காட்சியும்.

இந்தக் கான்பரென்ஸ் 10 வருஷகாலம் கூடின பிறகு இந்த வருஷந்தான் சாஸ்திர ஸம்பந்தமான பொருள்களையும் சுகாதார ஸம்பந்தமான பொருள்களையும் கருவிகளையும் யந்திரங்களையும் இங்கிலாந்து பிரான்ஸ் அமெரிக்கா ஜப்பான் முதலிய இடங்களிலிருந்து வரவழைத்து பொருள்காட்சி ஸபையில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். இந்தியாவிலிருக்கும் பல கம்பெனிகளிலிருந்தும வரவழைத்திருக்கிறார்கள்.

இவைகளுக்கு அடியிற்கண்ட கனவான்கள் பண உதவி செய்திருக்கிறார்கள் :—

மெஸ்ஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கம்பெனியார்.
,, வில்ஸன் அண்டு கம்பெனி.
,, R. மக்ளூர் அண்டு கம்பெனி.
,, ரிச்சார்ட்ஸன் அண்டு க்ருடர்ஸ்.
,, J. மர்ரே அண்டு கம்பெனி.

ஸானிடெரி இஞ்சினீயர் மிஸ்டர் மாடிலே, காப்டன் ரஸ்ஸல், மேஜர் C. H. L. பால்க் ராவ்பகதூர் T. விஜயராகவாச்சாரியார் முதலியவர்கள். இப்பொருட்காட்சி ஸபை பீபில்ஸ்பார்க் மூர் மண்டபத்தின் வடக்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

---


### சார்ங்கதர ஸம்ஹிதை.

மிகப் பிராசீனமான ஸம்ஸ்கிருத ஆயுர்வேதக் கிரந்தத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு வீட்டிலும் ஸாதாரணமான வியாதிகளுக்குத் தாமே சிகித்ஸை செய்துகொள்வதற்கான வழிகளைக் காட்டும் ஆதிகாலத்திய ஆயுர்வேத நூல் இது ஒன்றே. இதன் மற்ற விவரங்களைப்பற்றி இந்த ஸஞ்சிகையின் விளம்பரப் பக்கங்களில் 7-வது (Page vii) பக்கத்தில் அச்சிட்டுள்ள விஷயத்தைப் படிக்கவும்.

'வைத்திய கலாநிதி' ஆபீஸ்,
வேப்பேரி, சென்னை.



# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR: Pandit M. Duraiswami Aiyangar, *Ayurveda Bhushan.*

பத்திராதிபர் : பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 4. Vol. IV. | நளஹ ஐப்பசி௴—கார்த்திகை௴. NOVEMBER—1916. | ஸஞ்சிகை 3. No. 3.


## THE INDIGENOUS DRUGS OF INDIA.*

## இந்தியாவின் சுதேச ஔஷதங்கள்.

BY Dr. KUNJ BEHARI LAL VARMA, L. M. P.

ஐரோப்பிய வைத்தியமுறை அல்லது அலோபதிக் ஸிஸ்டெம் என்று வழங்கப்படுகிற ஒருவித வைத்திய முறையைப் பின்பற்றி நாம் தொழில் நடத்திவருபவர். இந்த முறை இத் தேசத்தில் முன்னேற்றமடைவதற்கு முன்பு, இன்றைக்கும் அநுபவத்தில் இருந்து வருகிற ஆயுர்வேதம் என்ன, யூனானிவைத்தியம் என்ன இவ்விரண்டுவித முறைகளும் வியாதிகளைப் பரிஹாரம் செய்வதற்காக ஏற்பட்டிருந்தன. ஆயுர்வேதவைத்தியமுறையானது இதரதேசங்களிலும் முன்னால் பரவியது ; பெர்ஷியா, அரேபியா, கிரீஸ் இத்தேசங்களில் ஆயுர்வேத வைத்தியமுறை பரவி, யூனானி வைத்தியமாகப் பரிணமம் அடைந்து, பிறகு அவ்விதம் மாறுபட்ட முறையும் முகம்மதிய அரசர்கள் வந்து இங்கு அரசாள முயன்றகாலத்தில் அவர்களுடன் இத்தேசத்திற்கு வந்து சேர்ந்ததாகத் தெரியவருகிறது. ரோமன் தேசத்தவரும், கிரீக்தேசத்தவரும் ஆயுர்வேத வைத்தியத்தைக் கைப்பற்றினார்கள் ; அப்பால் தற்காலத்தில் பிரபலப்பட்டுவரும் அலோபதிக் ஸிஸ்டெம் எனப்படும் ஐரோப்பிய முறையும் கிரீஸும் ரோமன்களும் கைப்பற்றிய ஆயுர்வேத முறையையே ஆதாரமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆயுர்வேதமுறையிலுள்ள அதே ஔஷதச்சரக்குகள் அனேகம் ஐரோப்பியவைத்திய முறையிலும் உபயோகிக்கப்படுகின்றன. ஆயுர்வேதத்திலுள்ள ஔஷதச்சரக்குகள் அத்தேசத்தியவருக்கு அவசியம் தேவையாயிருந்ததால், அவற்றைத் தமது தேசத்து நிலங்களிலேயே இப்பொழுது பயிரிட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று ; அவ்விதம் பயிரிட்டு நமக்கே அவர்கள் அவற்றை அனுப்பிவருகிறார்கள். இந்திய ஔஷதங்கள் அல்லது நாட்டுச்சரக்குகள் என்று வழங்கப்படும் சுக்கு, மிளகு, மோடி, திப்பிலி, கறுப்புப்பு, இலவங்கப்பட்டை முதலிய ஸாதாரணச் சரக்குகளை மட்டும் இந்தியருடைய மருந்துக்கடைகளிலிருந்து இராஜாங்கத்தார் சிறிதளவு விலைக்கு வாங்குகிறார்கள். ஆனால் ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்படும் சரக்குகளுக்குப் பதிலாக அவற்றிற்கு எவ்விதத்திலும் ஏற்ற குணமுள்ள ஔஷதச்சரக்குகள் இங்கேயே விலைக்கு எளிதிற் பெறக்கூடியவை இன்னும் அநேகம் உண்டு ; ஆனால் அவ்விதம் செய்யப்படுவதுதான் இல்லை.

உபயோகமுள்ள அவ்வளவு ஔஷதச் சரக்குகள் இந்தியபூமிகளில் உற்பத்திசெய்யக் கூடியவைகளாயிருக்கையில், அவற்றை அழியச்செய்து உபேக்ஷித்துவிடுவதற்குக் காரண

* Translated specially for the "Vaidya Kalanidhi."

மென்ன என்பதை ஆலோசித்து விஷய விசாரணைசெய்வது முக்கியமான காரியமாகும். நமது வைத்தியத்தொழிலாளிகளில் சில நபர்களே பொது நன்மையைக் கோரி இந்திய ஔஷதச் சரக்குகளையும் ஔஷதங்களையும் விவரிக்கும் நூல்களை யியற்றியிருக்கின்றனர்; அவை எதற்காக? இந்திய ஔஷதங்களைக் கொண்டே வியாதிகளை நிவாரணம் செய்யவேண்டுமென்றும், தேசாந்தரங்களிலிருந்து ஔஷதங்களை வரவழைக்காமல் கூடுமான வரையில் அவற்றிற்குப் பதிலாக இத்தேசத்திய சரக்குகளையே உபயோகிக்கவேண்டுமென்றுமே அவ்வித நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்றறிகிறேன். இப்புஸ்தகங்கள், குறிப்பிடக்கூடிய அநேகவிஷயங்களில் உபயோககரமானவையென்பதில் ஸந்தேஹமில்லை. இதனால் சில வைத்தியத்தொழிலாளிகள் சிற்சில சரக்குகளை உபயோகித்து, அதனால் ஒருவாறு நன்மை விளைவிக்கிறார்கள் என்றாலும், வைத்தியர்களின் அம்முயற்சி திருப்திகரமான நிலைமைக்கு இன்னும் வரவில்லை யென்றே சொல்லவேண்டும்; அவ்வாறு முன்னுக்குக்கொண்டுவரக்கூடியநிலைமை இப்பொழுதுள்ள ஸ்திதியைக்கொண்டு, எதிர்பார்க்கக்கூடியதாகவும் தோற்றவில்லை.

இப்பொழுது நடந்துவரும் ஐரோப்பிய யுத்தமானது, நம் தொழிலாளிகளுக்கு மிகவும் அதிருப்திகரமான நிலைமையை உண்டுபண்ணிவிட்டது. பொதுவாகக் கவனித்தால் எல்லாச் சரக்குகளுக்குமே நாம் இரண்டுமடங்கு விலையைக் கொடுத்து வாங்கவேண்டியவராயிருக்கிறோம். குறிப்பிட்ட சில முக்கியமான சரக்குகளோ 15, 20, 40 அல்லது 50 பங்கு அதிகமான விலையையும் கொர்டுத்துவாங்கவேண்டி நேரிட்டுவிட்டது. யுத்தமானது நமக்கு இப்பொழுது ஒருவாறு ஒரு பாடத்தைக் கற்பிக்கக் காரணமாயிற்று. அது என்ன பாடம்? இவ்வித வஸ்துக்களுக்காகப் பிறரை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது விவேகமல்ல வென்பதேயாம். இவ்வாறு நமக்கு வாய்ந்துள்ள இத்தருணத்திலும் நமது கடமை இன்னதென்பதை நாம் கவனிக்காமல் அலக்ஷியமாயிருந்துவிட்டோமானால், நமது பொருளாதார முறையை முன்னுக்குக் கொண்டுவரவோ, சுதேச ஔஷதத்தை நல்ல நிலைமைக்குத் தூண்டவோ பிறகு நம்மால் ஒன்றுமே செய்யமுடியாமற் போய்விடுவே யென்று பயப்படுகிறேன்.

கவனியுங்கள்! ஸாதாரணமாய் வலிகளுக்குப் போடும் களிம்பு, சென்னிற ஷர்பத்து உட்பட எல்லா ஔஷதங்களுமே ஐரோப்பியர்களிடமிருந்தே நமக்குக் கிடைத்து வருகின்றன. இந்தியாவில் பருத்திப்பஞ்சு ஏராளமாகப் பயிராகின்றது; அது இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அத்தேசங்களில் ஈரம் உறிஞ்சும் பஞ்சாக (absarbent cotton) ஒருவாறு பக்குவம் செய்யப்பட்டு, மறுபடி இந்தியாவுக்கே அனுப்பி சஸ்திர சிகித்ஸை முதலியதற்கு உபயோகிப்பதற்காக மிக்க அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றது. இந்தியச்சரக்குகள் என்றால் அதில் இரண்டு வகுப்புகளான மூலிகைகளைப் பயிரிடுவதைப்பற்றி நாம் குறிப்பிடவேண்டி யிருக்கிறது. அவற்றுள் முதல்வகுப்பைச் சேர்ந்தவை— இந்தியாவிலேயே பயிரிடப்பட்டு வருகிற மூலிகைகளாம்; இவை ஐரோப்பாவிலிருந்து வரும் சரக்குகளோடு குணத்தில் சரிஸமானமாயிருக்கின்றன. ஆகவே ஐரோப்பியச் சரக்குகளுக்குப் பதிலாக அதே குணமுள்ள இந்தியச்சரக்குகளை உபயோகிக்கலாம்; ஆனால் இந்தியச்சரக்குகளில் சில செலவைமட்டுப்படுத்தக்கூடியவையாயில்லை. திருஷ்டாந்தமாக, குராசானி ஓமச்செடி விசேஷமாக இந்தியாவில் பயிராகிறது. இச்செடியின் கனிகளே குராசானியோமமாகப் பரிணமம் அடைகின்றன; குராசானியோமமானது, இந்தியாவில் வெகு மலிவாக விற்கப்படுகிறது; ஆனால் இதன் இலைகள் இங்கே தற்காலம் உபயோகிக்கப்படுவதேயில்லை; அந்த இலைகள் ஐரோப்பாவிலிருந்துவரவேண்டி யிருப்பதால்



அவற்றிற்கு அபரிமிதமான விலையைக்கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவையோ—இப்பொழுது இந்தியாவுக்கு வெளியில் பயிரிடப்பட்டு, அல்லது ஔஷதநிலைமையில் தயார் செய்யப்பட்டு இந்தியாவுக்குள் பிறகு கொண்டுவரப்படுகிறவைகளேயாம். இவ்வாறு தேசாந்தரங்களிலிருந்து வரும் சரக்குகளை இந்தியாவிலேயே பயிரிடவேண்டும்; இந்திய பூமியானது எவ்விதமான மூலிகைகளும் செழித்துப் பயிராவதற்கு ஏற்ற நிலவளங்களையுடையவைகளாயிருப்பதோடு, சீதோஷ்ண நிலைமைகளும் அதற்கு அனுகூலமாய் அமைந்திருக்கின்றன. மேலும் வெளிதேசங்களில் தயார் செய்யப்பட்டுவருகிற ஔஷதாதிகளை இந்தியாவிலேயே தயார் செய்வதற்கும் வேண்டிய ஸௌகரியங்கள் இல்லாமற்போகவில்லை; ஔஷதங்களைத் தயார்செய்யும் வேலையை ஆரம்பித்தால், அதனால் நமது தேசத்தில் புதிதாக ஒரு கைத்தொழிலிலும் அபிவிருத்தி செய்யப்பட்டதாகும். உதாரணமாக, டிஜிடாலிஸ் என்ன, பெல்லடோனா வென்ன இவை போன்ற சரக்குகள் வெளிதேசங்களிலிருந்தே இப்பொழுது வருவதால், அவற்றை இந்தியாவிலேயே பயிரிடவேண்டும். அபினிச்சத்து, எட்டிக் கொட்டைச் சத்து (Morphine and Strychnine) இவை போன்ற ஔஷதங்கள் வெளிதேசங்களிலிருந்தே வருகின்றனவாகையால், அவற்றை இத்தேசத்திலேயே தயார் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்; அபினிச்சத்துக்கும், எட்டிக் கொட்டைச் சத்துக்கும் அவசியமான அபினியும் எட்டியும் இந்தியாவிலேயெ விளைகின்றன. இவ்விதமான கைத்தொழில்களில் இந்தியர் தமது பணத்தைத் தாராளமாய் உபயோகிக்க வேண்டும்; இந்தியாவில் ஔஷதகுணமுள்ள ஊற்று நீர் வஸதிகள் விசேஷமாயுண்டு; அவ்வூற்றுநீர்களை வியாதிநிவாரணத்திற்கு அல்லது ஆரோக்கியப் பாதுகாப்புக்கு உபயோகித்து வரலாம்; இதற்காகவுங்கூட நாம் பிறநாட்டு வியாபாரிகளை எதிர்பார்ப்பது சரியல்ல.

இந்தியாவில் விளைந்து, இந்தியாவில் தயார் செய்யப்பட்டு வருகிற ஔஷதங்களை அல்லது ஔஷதச் சரக்குகளை ஏராளமாக நாம் கையாளவேண்டும். இதற்காக நாம் எல்லோரும் ஒற்றுமையோடு காரியம் நன்கு நிறைவேறக் கூடிய அனுபவமுறையில் முயற்சிகளைச் செய்யவேண்டும். இதில் முதன் முதல் நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்—மேற் குறிப்பிட்ட விஷயங்களில் சிரத்தையும் ஊக்கமுமுள்ள கனவான்கள் ஒன்று கூடி ஒரு ஸங்கம் ஸ்தாபிப்பதேயாம். அக்கூட்டத்தார் தமக்குள் ஔஷத நிர்மாணத்தில் நிபுணராயிருப்பவரைக்கொண்டு அதற்கென்று ஒரு வகுப்பை அமைத்து விடவேண்டும்; அவ்வகுப்பே காலக்கிரமத்தில் இந்திய பேஷஜ ஸங்கமாக (Indian Pharmaceutical Society) விருத்தியாய்விடுவதற்கும் வழியுண்டு. இந்த பேஷஜ ஸங்கத்தினர், தமக்குள் இரஸாயனசாஸ்திரஞ்ஞர் வகுப்பையும் (Chemists), வநௌஷதி சாஸ்திரஞ்ஞர் வகுப்பையும் (Botanists), மற்றும் சில பிரத்தியக்ஷ சாஸ்திரஞ்ஞர்களின் (Scientists) வகுப்பையும் அமைத்துக்கொண்டு, அந்தந்த வகுப்பில் நிபுணராயிருப்பவர் அவரவர்களுக்குத் தெரிந்துள்ள காரியங்களைக் கருத்துடன் செய்துவரவேண்டும். இவ்வாறு சாஸ்திரஞ்ஞர்களைத் தவிர, இந்திய ஔஷதங்களின் அபிவிருத்தியில் சிரத்தையுள்ளவரும் தகுந்தவாறு திரவிய விஷயமாய் உதவிசெய்யக் கூடியவருமான சில நபர்களையும் ஸமயம் வந்தபோது இச்சங்கத்தில் அபிமானமுள்ள அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாம். இந்த ஸங்கத்திலுள்ள அங்கத்தினர்கள் தமக்குள்ளே ஒரு நிர்வாஹ ஸபையை அமைத்துக்கொண்டு, அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தீர ஆலோசிப்பதற்காக அப்போதைக்கப்போது ஒன்றுகூடி விஷய நிர்த்தாரணம செய்யவேண்டும். வருஷ முடிவில் எல்லா அங்கத்தினரும் சேர்ந்து

ஒரு பொதுக்கூட்டம் கூடி, சென்ற வருஷத்தில் செய்த காரியங்களைப்பற்றியும் அடுத்த வருஷத்தில் செய்யவேண்டிய காரியங்களைப் பற்றியும் சர்ச்சைகள் செய்து அவசியமான தீர்மானங்களையும் நடத்தி வரலாம். இவ்வாறு பொதுக்கூட்டம் நடைபெறுகையில் இந்த ஸங்கத்தாரால் தயார் செய்யப்பட்டுள்ள ஔஷதாதிகளைக்கொண்டு ஒரு பொருட்காட்சியும் நடைபெறச் செய்வது நலம். இந்திய ஔஷதச் சரக்குகளைப் பற்றிய விஷயங்களை ஸம்பாதிப்பதும், அவசியமான ஸமயங்களில் இந்தியரால் தயார் செய்யப்பட்ட ஔஷதாதிகளை இரஸாயனவாதமுறையில் பரீக்ஷித்துத் தத்துவத்தைக் குறிப்பிட்டு வருவதும், ஒரு புதிய சரக்கு பரீக்ஷிக்கப்பட்டு ஔஷதவகுப்பில் உபயோகிக்கக்கூடியதென்று நிச்சயிப்பதும், அவ்வாறு நிச்சயிக்கப்பட்டதை ஔஷதயோக நூலிலுள்ள மற்றச் சரக்குகளின் வரிசையில் சேர்ப்பதும் இச்சங்கத்தாருடைய கடமையாகும். இவ்வாறு இந்தியச் சரக்குகளுக்கும் ஔஷதங்களுக்கும் விதிநூலாக ஏற்படுவது "இந்திய வாகடநூல்" (Indian Pharmacopoea) என்று வழக்கப்படவேண்டும்.

கவர்ன்மெண்டார் முதலில் பிரயத்தனம் செய்வதற்கு முன்பு, நாம் இந்தியச்சரக்குகளைத் திருத்தமான வகையில் உபயோகிப்பதற்கான வழிகளைத் தேட ஒன்றும் செய்யக்கூடாதென்று சிலர் நினைத்திருக்கிறார்கள். அந்த அபிப்பிராயத்தை நான் ஒருபொழுதும் ஒப்புக்கொள்ள விரும்பேன். ஜனங்கள் பலர் ஒற்றுமையுடன் உழைத்து இக்காரியத்தை நிறைவேற்ற முன்வந்தாலே யொழிய கவர்ன்மெண்டார் இவ்வித காரியங்களில் தலையிடமாட்டார்கள். கவர்ன்மெண்டாருடைய உதவி இப்பெருங்காரியத்தில் மிகவும் அவசியமென்றாலும், பொது ஜனங்கள் ஒன்றுகூடி, தம்மால் இயன்றவளவு காரியங்களைச் செய்ய முதலில் முயற்சி செய்யவேண்டும்.

தேசாந்தரங்களில் ஔஷத வியாபாரிகள் முன்னுக்கு வந்ததற்கு முக்கியமான காரணம், அவர்களுக்கு இரஸாயன சாஸ்திரத்திலுள்ள அபாரமான அறிவே யென்று சொல்லவேண்டும். ஒரு பேஷஜஸங்கத்திற்கு அல்லது இரஸாயன ஸங்கத்திற்கு இரஸாயன சாஸ்திர ஸம்பந்தமான அறிவைத்தவிர இன்றியமையாத விஷயம் வேறொன்றில்லை. இந்திய ஔஷதங்களைச் சீர்திருத்திய முறையில் முன்னுக்குக் கொண்டுவரும்போது, அவற்றிற்குக் கவர்ன்மெண்டார் எவ்வித வரியையும் விதிக்காமலிருந்தால், அதனாலும் நற்பயன் உண்டு. அகிலபாரத ஆயுர்வேத கான்பரென்ஸானது, போஷக ஸங்கம் அல்லது இரஸாயன ஸங்கம் ஒன்று ஏற்படுத்தி, அந்த ஸங்கத்தின் மூலமாய் நாம் முற்கூறிய காரியங்களை நிறைவேறச் செய்து, இந்திய ஔஷதங்களையும் ஔஷதச் சரக்குகளையும் சேர்த்து ஒரு பொருட்காட்சியையும் நடத்துவது அவசியம்.

---

## HABITS AND THEIR EFFECTS

### பழக்கத்தின் பயன்

By

T. A. AGASTYA SARMA,

*Physician and Surgeon.*

(முன் தொடர்ச்சி)

ஆனால், மேலும் மேலும் புகை குடித்துக் கொண்டேவந்தால் மேற்சொல்லிய கடுமையான நோய்க்குறிகள் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைகின்றன; விஷத்தன்மையான நிகோடீனின் பயன்களைப் போக்கவும், அதனைத் தேஹத்தினின்றகற்றவும் ஜீவாங்கதத்துவங்கள் (Living organs of the body) செய்யும் பிரயத்தனங்கள் வரவரப் பலங்குறைந்து நமக்குப் புலப்பட்டாமற் போகின்றன. அந்த நிலைமையினால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? நாள்தோறும் புகட்டப்படும் விஷத்துடன் இசைந்திருப்பதற்குத் தேஹம் கொஞ்சமாய்ப் பழக்கப்படுகின்றது. முடிவில் அந்த விஷத்தைத் தேஹத்தினின்றும் அகற்றாமல் உள்ளேயே வைத்திருக்கப் பொறுத்துக் கொள்கின்றது; அதனால் மேற்கூறிய கடுமையான நோய்க்குறிகள் அடங்கி அகப்படாமற் போகின்றன; ஆயினும் நீடித்த விஷம் நிலையாய்ப் பெருகி ஊறுகின்றது; பேராபத்து விளைக்கத்தக்க தீமை நிமிஷந்தோறும் உண்டாகிக்கொண்டே யிருக்கின்றது; என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.



புகையிலையின் விஷத்தை அப்புறப்படுத்துவதற்கு முயலாமல் தேஹம் பொறுத்துக் கொள்ளப் பழகிப்போவதனால், புகையிலையானது விஷம் அன்றென்றும், அது தேஹத்திற்குத் தீமைசெய்வதில்லை யென்றும் நினைக்கக் கூடாது. இதுபோலவே, மதுஸாரம், அபினி, கோகோ முதலிய விஷங்களெவைகளையும் ஏற்றுப் பொறுத்துக்கொள்வதற்குத் தேஹம் பழகிப்போகின்றது; எவ்வளவு கொடிய விஷமானாலும் அதனையும் தேஹம் தனக்குப் பழக்கப்படுத்திக்கொள்கின்றது. அப்படிப் பழக்கப்படுத்திக்கொள்வதற்கு உபாயம் என்ன? முதன்முதலில் அந்த விஷத்தை உட்கொள்ளத் தொடங்கும்பொழுது மிகவும் கொஞ்சமாய்க் கொள்ளவேண்டும். பிறகு நாள் ஏற ஏறக் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பரிமாணத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதனால் மிகக் கொடிய விஷமும் தேஹத்திற்குப் பொறுத்துப்போம். உதாரணமாக, அபின் உண்பதில் தேர்ந்தவனொருவன் உட்கொள்ளுமளவு அபினியைக்கொண்டு அனேகம் மனிதர்களைக் கொன்றுவிடலாம்; அவ்வளவு அபினியையும் அவன் சிறிதும் அபாயமேனும் பயமேனுமின்றி விழுங்கிவிட்டுச் சாதாரண மனிதனைப்போல விவகரித்துக் கொண்டிருப்பான்.

தீர்க்கமான விஷம்:—புகையிலையின் விஷம் நீடித்துத் தேஹத்தில் ஊறிப்போவதனால் தோன்றும் குறிகள் அந்த விஷம் கடுமையாய்த்தாக்குவதனால் தோன்றும் குறிகளுக்கு ஏறக்குறைய ஒப்பாகவே இருக்கின்றன. ஆனால் நீடித்து விஷமேறியதன் குணங்கள் அவ்வளவு தெளிவாய் அகப்படுவதில்லை. நாள்தோறுங் கொஞ்சங்கொஞ்சமாய் உட்கொண்டாலும், அதன் வேகமும் தீமையும் புகை குடிப்பவனுக்கு அகப்படாத அளவு இலேசாயிருந்தாலும் விஷம் விஷமேயன்றோ? நிகோடீன் விஷத்தில் கொஞ்சமானாலும் அடிக்கடி உட்கொள்வதனால் அது நரம்புகளையும், புலன்களையும், இரத்தாசயத்தையும், மற்றும் தேஹத்திலுள்ள உறுப்புக்களையும் கெடுக்கின்றது; முடிவில், புகை குடிப்பவர்களில் பெரும்பாலார்க்குத்தீமை விளைக்கின்றது. அதன் தன்மை அப்படி யிருந்தபோதிலும் புகை குடிப்பவர்கள் தங்களுடைய தேஹத்திலுண்டான தீமைக்குக் காரணம் புகையிலையின் விஷமென்று உணராமல் அதுவென்றும் இதுவென்றும் வேறு காரணங்களைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்; இது உண்மையாய்க் குற்றஞ்செய்தவனைவிட்டு மற்றவர்களின்மீது குற்றஞ்சாட்டுவது போலாகும்; பண்டம் ஓரிடத்திருக்கப்பழி பத்திடம் சார்கின்றது; தேஹத்தைக்கெடுத்தது புகையிலையின் விஷமாயிருக்க, மற்றவைகள் காரணங்களாகுமோ? ஆயினும், இப்படி மற்றவைகளின்மீது குறை கூறுவது மானிடர்க்கியற்கையாம்.

மூளையும், நரம்புகளும்:—நிகோடீன் என்பது நரம்புகளைக் கெடுக்கும் விஷம் என்பது திண்ணம்; புகை குடிப்பவர்களனேகருக்கு அது மூளைச் சவ்வறைகளையும் (brain-cells) நரம்புகளையும் மிகவும் கெடுத்துவிடுகின்றது. புகையிலை விஷத்தினால் ஞாபகசக்தி குறைகின்றது; நிகோடீன்விஷம் ஏறினவனுக்கு வன்மையும், வாழ்க்கையில் விருப்பமும் இல்லாமற்போகும். புகை குடிப்பவர்களுக்கு முக்கியமாய், அதிகப்புகை குடிப்பவர்களுக்கு நரம்புகளின் எழுச்சி அதிகம்; அவர்களுடைய நரம்புகளை எளிதில் எழுப்பிவிடலாம், அவர்களுக்கு எளிதிற் கோபமூட்டலாம், மோஹமூட்டலாம், சோகமூட்டலாம்; அவர்

கள் எளிதிற் சலிப்புற்று மனமாழ்ந்து போவார்கள்.

நரம்பின் வன்மை குன்றியிருப்பவனெவனும் புகையிலையை எந்தவகையிலும் உபயோகிக்கக் கூடாதென்பதற்கு ஐயமேயில்லை. எந்த வகையிலும் என்பதனால், புகையாகவும், பொடியாகவும், வாயிலடக்கும் சக்கையாகவும், வேறு மருந்துடன் கலந்த சரக்காகவும் உபயோகிக்கக் கூடாதென்பது கருத்து. நியூராஸ்தீனியா (Neuras-thenia) என்பது நரம்புகளின் சோர்வைக் குறிக்கும் நோயின் பெயர். அந்த நோய் உண்டாவதற்குள்ள முக்கியமான காரணங்களுள் நிகோடீன்விஷமும் ஒன்றாம். இந்த நரம்புச் சோர்வுநோய் சில ஆண்டுகளாக நம்மவர்களில் அதிகமாய்ப் பரவி வருகின்றது. நரம்புகளின் வன்மையைக் கெடுப்பதனால் மாத்திரமே புகையிலையானது நரம்புச் சோர்வுநோய் விளைக்கின்றதென்றெண்ணவேண்டாம். வேறு வகையிலும் அது அந்த நோயை விளைக்கின்றது; புகையிலையானது உறக்கமின்மையை விளைக்கும். உறக்கமின்மை நரம்புச்சோர்வை விளைக்கும். இவ்விஷயமாய் ஸர்மோரல் மெகன்ஸி எனபவர் கூறியது வருமாறு:—புகையிலையானது பொதுவாய்த் தேஹத்திற்குத் தீமை விளைப்பதல்லாமல் தேஹத்திலுள்ள உறுப்புக்கள் சிலவற்றை விசேஷமாய்க் கெடுக்கின்றது. [தேஹத்தில் நரம்பு நிலயங்கள் பலவுள. உதாரணமாக. இரத்தகோச நரம்பு நிலயம் (Cardiac centre), சுவாஸகோச நரம்பு நிலயம் (Respiratory centre), தசைநார் நரம்பு நிலயம் (Motor centre), என்பவைகளைக் காண்க. இந்த நரம்பு நிலயங்கள் மூளையில் அமைந்திருக்கின்றன.] புகையிலையானது இந்த நரம்பு நிலயங்களையும், இரத்தாசயத்தையும், அதன் புகையாவது ரஸமாவது படியும் இடங்களையும் தாக்குகின்றது. இதன் பயன் நோயாய்த்திரிகின்றது. அந்த நோய் இன்னதென்று குறிப்பிட்டு நமக்குச் சொல்லத் தெரியாததனால் அதனை 'நடுக்கல்' (Nervousness) என்று சொல்லுகின்றோம். நாடிகள் படபடத்து அடிக்கின்றன. இதனாலேயே பாகுவீர வியாயாம ஸாஹஸங்களில் (athletic feats), பழகுகிறவர்கள் புகையே குடிக்கக் கூடாதென்று கண்டிதமாய்த் தவிர்க்கப் பட்டிருக்கின்றது. எப்பொழுதாவது ஒரு முறை குழற் புகையாவது சுருட்டுப் புகையாவது கொஞ்சங் குடிப்பதனால் தீமை விளையாதெனினும், மல்லர்களைப் பழக்கும் பாகுவீரர்கள் அந்தப் புகையிலையைத் தொடவே கூடாதென்று ஒரு மனமாய் எல்லாருங் கூடி ஒத்திருக்கிறார்கள்."

புகையிலைத் தாக்கத்தினால் மனநிலை தடுமாறிப்போகின்றது; அது மனத்தைக் கெடுத்து விபரீதமாக்கி விடுகின்றது; அதனால் மனத்திற் குண்டாகும் கேடு திடுக்கிடத்தக்க பயங்கரமாயிருக்கின்றது. இந்த விஷயத்தை ஜெல்பர்க் (Zjellberg) என்பவர் விவரமாய் எடுத்துரைத திருக்கின்றார். "மனத்தின் தன்மை மாறி விகாரப்படுகின்றது. அப்பொழுது மாயத்தோற்றங்களும், மாயச்சத்தங்களும் உண்டாகின்றன. அதாவது, கட்புலனும் செவிப்புலனும் விபரீதத்தன்மை யேற்கின்றன. அந்த நோயாளி ஒருபொழுது மன வெழுச்சியும், மற்றொரு பொழுது மனத்தாழ்ச்சியும் கொண்டுவருந்துகின்றான். அலைகள் போல இவ்வெழுச்சியும் தாழ்ச்சியும் அவன் மனத்தில் மாறி மாறித்தோன்றுகின்றது". இப்படிப் பட்டதன்மை தாத்காலிகப் பைத்தியம்(temporary insanity) என்பதற்கு ஐயமில்லை.

புகையிலைக் குருடு:—புகையிலைப்புகை குடிப்பவர்களுக் கெல்லாம் ஒருவகையான பார்வைக் குறைவு ஏற்படுகின்றது. இது அவர்களில் பெரும்பாலார்க்கும் ஸாமானியமாக இருக்கின்றது; ஆயினும், இதனை ஜனங்கள் கவனித்துத் தெரிந்து கொள்வதில்லை. இதற்குப் புகையிலைக் குருடு (Tobacco Amblyoqia) என்று பெயர். இந்தக் குருடு நமக்குத் தெரியாமல் வஞ்சகமாக உள்ளூறவே வளர்கின்றது; பிறகு கொஞ்சங் கொஞ்சமாக இரண்டு கண்களின் பார்வையும் குறைகின்றது. இந்தப் பார்வைக்குறைவு கோசரப்பிரதேசத்தின் மையத்தை முக்கியமாய்க் கெடுக்கின்றது. கோசரப்பிரதேசமாவது ஒரு கண்ணைமூடிக்கொண்டு மற்றொரு கண்ணினால் தூரத்திலுள்ள வஸ்துவொன்றைப் பார்க்கையில் அந்த வஸ்துவைச் சுற்றிலுமுள்ள அந்தப் பார்வைக்கடங்கிய பிரதேசமாம்; அந்த வஸ்துவே அந்தப் பிரதேசத்தின் மையமாம். கோசரப்பிரதேசமென்பது அங்கிலத்தில் field of vision எனப்படும்; அதன் மையம் Centre of the filed of vision ஆகும்.



கண்ணுக்குள் திருஷ்டித் தகடுகள் (optic dises) என்னும் மண்டலங்கள் இருக்கின்றன; அவைகளினாலே கண்ணுக்குப் பார்க்கும் சக்தி உண்டாகின்றது. புகையிலைப் புகை குடிப்பதனால் அந்த திருஷ்டி மண்டலங்களில் இரத்தம் சுரந்து நிற்கலாகும். ஆனால் எப்பொழுதுமே இப்படி ஆவதில்லை. துவக்கத்தில் கண்ணுக்குள் பார்வைக்கு ஆதாரமாயிருக்கும் யந்திரங்கள் தத்தம் வேலைகளைச் சரியாய்ச் செய்யமாட்டாமற் போகின்றன; புகையிலையை மேலும் மேலும் பிடிவாதமாக உபயோகித்துவந்தால் மேற் சொல்லியபடி சீர்குலைந்த யந்திரங்களில் கெடுதலான விகாரங்கள் (மாறுபாடுகள்) உண்டாகக்கூடும். அதனால் நேத்திரநாடி (திருஷ்டிநரம்பு, optic nerve) பலங்குன்றி மெலிந்துபோகும். நேத்திரநாடி பலங்குன்றுவதனால் பார்வை வரவர அதிகமாக மங்குகின்றது; அதுவே அதிகமாகிப் புகையிலைக் குருடாகவும் திரியலாம்.

இவ்விஷயமாக Dr. டி. டி. சாவில் என்னும் வைத்திய சாஸ்திரி சொல்லுவதைக் கவனிப்போம்:—"வாரமொன்றுக்கு மூன்று நான்கு அவுன்சுகளுக்கதிகமாகப் புகையிலைப் புகை குடிப்பவர்களுக்குச் சிலவேளை புகையிலைக் குருடு வருகின்றது; பலவீனராயிருப்பவர்கள் அதைவிடக் கொஞ்சமாகக் குடித்தாலும் அவர்களுக்குப் புகையிலைக்குருடு வருகின்றது. அவர்கள் முதன் முதலில் நல்ல பகல் வெளிச்சத்தில் நன்றாகப் பார்க்க முடியவில்லையென்று சொல்லுவார்கள்; பகலில் இருப்பதை விட அந்தி வேளையில் கண் நன்றாகத் தெரிகிறது என்பார்கள். இந்தக் குறை வர வர அதிகமாகி மேற்சொல்லிய திருஷ்டி கோசரப்பிரதேச மையத்தைத் தாக்குகின்றது......முதலில் கண்ணுக்கு மூலாதாரமாகவுள்ள யந்திரப் பிரதேசத்தில் மாறுபாடுகள் உண்டாவதில்லை; பிறகு வியாதியின் தொடக்கத்தில் திருஷ்டி மண்டலங்களில் இரத்தம் சிறிது சுரக்கின்றது. வியாதி முதிரவே அவை வெளுத்துப் பலங் குன்றி க்ஷீணிக்கின்றன; முக்கியமாக காதுப் பக்கத்திலுள்ள கண்ணைச் சார்ந்த யந்திரபாகங்கள் கெடுகின்றன."

புகையிலைச் செவிடு:—புகையிலையை உபயோகிப்பதனால் சிலருக்குக் காது மந்தப்படுகின்றது. இதற்குப் புகையிலைச் செவிடு என்று பெயர். இது நிகோடீன் விஷத்தினால் விளையும் தீப்பயன். இந்தத் தீப்பயனை எல்லாரும் ஸாதாரணமாகத் தெரிந்து கொள்ள வில்லையெனினும், இது விசேஷமாகப் பரவியிருக்கின்றது. பார்வைக் குறைவைப்போலவே இந்தச் செவிடும் நமக்குத் தெரியாமல் வஞ்சகமாகத் தொடங்கி மெல்ல மெல்ல வளர்ந்து அதிகரிக்கின்றது. இதற்கு ஆங்கிலத்தில் Orosclerosis என்று பெயர். இதன் விசேஷமான லக்ஷணம் என்ன வெனில்,காதுக்குள்ளிருந்து சீழ் முதலிய திரவமெதுவும் வடிவதில்லை.

இப்படிப்பட்ட செவிடு ஜனங்களுக்குவெகு ஸாமனியமாக இருக்கின்றது; இதற்குக் காரணங்கள் அனேக முண்டு. காதின் மந்தமும் காதுக்குள் பலவகைச் சப்தங்கள் உண்டாகும் உணர்ச்சியும் இந்த வியாதியின் முக்கிய லக்ஷணங்களாம். சில வேளைகளில் காதின் மந்தத்தைவிட காதுக்குள் தோன்றும் சப்தங்கள் மிக்க வருத்தந்தரத்தக்கவைகளாயிருக்கின்றன. அந்தச் சப்தங்களினால் நோயாளி சலிப்புற்று மிக வருந்துகிறான்.

காதுக்குள் சப்தம் நின்று நின்று தோன்றலாகும், தொடர்ச்சியாகவும் இருக்கலாகும்; அதன் தன்மையும் உரமும் அப்போதைக்கப்போது மாறுபடும். சிலவேளை வண்டொலி தோன்றும், சிலவேளை கடலின் அலையோசை தோன்றும், பாடுங்குரல் தொனிக்கும், சீழ்க்கை ஊதும்; இன்னும்பல வகையான துச்சப்தங்களும் உண்டாகும்.

டாக்டர் ஆல்பர்ட் ஏ. கிரே (Dr. Albert A. Grey) என்னும் வைத்திய நூலாசிரியர் இவ்விஷயமாக உரைத்துள்ளது வருமாறு:— "மது ஸாரமும் புகையிலையும், கொஞ்சமாகக் கொள்ளினும் காதுக்குள் சப்தத்தை அதிகரிக்கச்செய்கின்றன. ஆகையால் நோய்பட்டவன் அவையிரண்டையும் முற்றுந்தவிர்ப்பதே தகைமையாம். அந்த அந்த நோய்க்காக மருந்துகளைப் புகட்டுவதைவிட மதுசாரத்தையும் புகையிலையையும் ஒழிப்பதே முக்கியமான சிகித்ஸையாம். நோய்ப்பட்டவர்களுக்கு இவையிரண்டும் மிக்க தீமை விளைக்கின்றன. ஆரோக்கியமாக இருப்பவர்கள் உட்கொண்டால் ஒரு கெடுதியும் செய்யாத அளவு நோய்ப்பட்டவர்களுக்குத் தீமை விளைக்கும்."

புகையிலையைப் பிடிவாதமாக உபயோகித்து வருவதனால் நாக்கு மூக்கு முதலிய மற்றப் புலன்களும் கெட்டும்போகின்றன, சில வேளை முற்றும் அழிகின்றன.

---

## EPILEPSY AND ITS TREATMENT

(ACCORDING TO AYURVEDA.)

## அபஸ்மாரமும் அதன் சிகித்ஸையும்

(ஆயுர்வேத முறைப்படி.)

BY G. DAKSHINÁMURTI,
*Ayurvedic Physician.*

வியாதிஸம்பவிக்கும் வகை:—இவ்வியாதியில் நினைவு தப்பிப்போகுமாகையால் "அபஸ்மாரம்" என்று இதற்குப் பெயர் வந்தது. (ஸம்ஸ்கிருதத்தில் அபஸ்மாரம் என்பதற்கு நினைவுதப்பிப்போதல் எனப்பொருள்.) மனக்கவலை, சோகம், பயம் முதலியவற்றால் சாரீர தோஷங்களான வாத-பித்த-கபங்களும், மானஸிகதோஷங்களான ஸத்வ-ரஜஸ்-தமோகுணங்களும் கோளாறடைந்து, இருதயத்திலும், உணர்ச்சிக்கு ஆதாரமான நரம்புகளிலும் (ஸம்ஜ்ஞாவாஹி ஸ்ரோதஸ்ஸுகள்) வியாபித்து, நினைவுக்குத் தடுமாற்றத்தையுண்டு பண்ணும். இது உண்டானவுடனே ரோகிக்கு அந்தகாரத்தில் பிரவேசிப்பதுபோன்ற விகாரமும், கண்களில் கலக்கமும், கைகால்களில் விறைப்பும் ஸம்பவித்து, மயக்கமுண்டாய், முற்றிலும் ஞாபகமிழந்தவனாய், பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு, வாயில் நுரைதப்ப, நிலத்தில் வீழ்ந்துவிடுவான். தோஷங்கள் கோளாறடைந்த வேகம் குறைந்தவுடனே, பிணியாளி இயற்கை நிலைமையைக் கிரமமாகப் பெறுவான். கொஞ்சகாலம் சென்றபின்பு, மறுபடியும் இப்படியே மூர்ச்சை முதலிய விகாரங்கள் அப்பிணியாளிக்கு ஸம்பவிக்கும்.

முற்குறிகள்:—இருதயத்தில் ஒருவிதமான படபடத்தத் துடிப்பு, இருதயம் சூனியமாயிருப்பதுபோன்ற உணர்ச்சி, விசேஷமான வியர்வை, சிந்தைமேலிடுதல், சித்தப்பிரமை, இந்திரியங்களின் சக்தி மந்தப்படுதல், நித்திரையின்மை இவை அபஸ்மாரரோகத்திற்கு முற்குறிகளாக உண்டாகும்.

அபஸ்மாரம் நான்குவிதம்:—அவையாவன:— வாதாபஸ்மாரம், பித்தாபஸ்மாரம், கபாபஸ்மாரம், ஸந்நிபாதாபஸ்மாரம் என்பனவாம். (1) பற்களைக் கடித்துக்கொள்ளுதல், வாயில் நுரையுண்டாதல், அதிக கொட்டாவி விடுதல், குரூரமாகவும் கறுப்பாகவும் சிவப்பாகவும் உள்ள ஏதேதோ உருவங்கள் கண்களுக்குத் தோற்றுதல் என்னும் இந்த இலக்ஷணங்கள் வாதஸம்பந்தமான அபஸ்மாரத்தில் ஸம்பவிப்பவையாகும். (2) வாயிலிருந்து கக்கப்படும் நுரை, தேஹத்திலுள்ள அவயவங்கள், பிரதானமாய் முகம், நேத்திரம் இவை மஞ்சள்



நிறமாயிருத்தல், பசுமையாகவும் சிவப்பாகவும் உள்ள ஏதோ உருவங்கள் கண்களுக்கு எதிரில் புலப்படுதல், பிரபஞ்சம் தீப்பற்றியெரிவதுபோல் கண்களுக்குத் தோற்றுதல் முதலிய இக்குறிகள் பித்தஸம்பந்தமான அபஸ்மாரத்தில் உண்டாகும். (3) வாயிலிருந்துவரும் நுரையும், பொதுவில் முழு தேஹமும், முக்கியமாய் முகம்-நேத்திரம் இவைகளும் வெண்ணிறமாகப்போதல், சரீரம் மிகவும் குளிர்ந்துபோதல், தேஹம் பளுவாயிருப்பதுபோன்ற உணர்ச்சி அல்லது பளுவாகப்போதல், வெண்மையான ஏதேதோ உருவங்கள் கண்களுக்குத் தென்படுதல் முதலிய இக்குறிகள் கபஸம்பந்தமான அபஸ்மாரத்தில் உண்டாகக்கூடியவையாம். இவற்றுள் கபதோஷத்தினால் உண்டாகும் அபஸ்மாரம் வெகுநேரம் நீடித்திருக்கும். (4) முற்கூறிய வாதஸம்பந்தமான அபஸ்மாரம் முதலிய மூன்றுவித அபஸ்மாரரோகங்களிலும் எவ்வெவ்விதமான குறிகள் ஸம்பவிக்கின்றனவோ அவையனைத்தும் ஸந்நிபாததோஷங்களால் உண்டாகும் அபஸ்மாரத்தில் ஒருமிக்க ஸம்பவிக்கும் என்று அறிக.

ஸாத்தியா ஸாத்தியக் குறிகள்:—ஸந்நிபாதாபஸ்மாரம், பலங்குன்றியவனுக்கு ஸம்பவிக்கும் ஒரு தோஷத்தினால் உண்டாகும் அபஸ்மாரம், வெகு நாட்களாய் வருந்தச் செய்துவரும் அபஸ்மாரம் என்னும் இவை சிகித்ஸைக்கு வசப்படாத அஸாத்திய வியாதிகளாகும்.

வியாதிக்குக் காரணமான கோளாறடைந்த தோஷங்கள் எப்பொழுதும் சரீரத்தில் பற்றுதலுள்ளவைகளாயினும், வியாதியின் வேகங்கள் (Epileptic fits) அப்போதைக்கப்போது தோன்றிக்கொண்டிருக்கும். என்றால், வாதஸம்பந்தமான அபஸ்மாரம் பன்னிரண்டு தினங்களுக்கு ஒரு முறையும், பித்தஸம்பந்தமான அபஸ்மாரம் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையும், கபஸம்பந்தமான அபஸ்மாரம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையும் சற்றேறக்குறைய அதனதன் வேகத்தைக் காட்டும். இது பொதுவான ஸாதாரண விதியாகும். தோஷங்களுடைய தாரதமியங்களை அனுஸரித்து, மேலே குறிப்பிட்ட காலங்களிலேயோ, அதற்குள்ளேயோ, அல்லது அதற்குப்பிறகோ இவ்வியாதி தனது வேகத்தை வெளிப்படுத்தக்கூடும்.

சிகித்ஸா முறை:—மேலே கூறப்பட்டுள்ளபடியே அபஸ்மாரரோக ஸம்பந்தமான குறிகள் ஸம்பவித்திருப்பதாகத் தெரிந்துகொண்ட பிறகு, கோளாறடைந்த தோஷங்களால் சூழப்பட்ட புத்தி, இருதயம், மனது முதலியவற்றின் காரியங்களுக்கு ஆதாரமாயுள்ள ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் நாடிகளை தீக்ஷ்ணகுணமுள்ள வஸ்துக்களால் தூண்டி, வமந-விரேசந கர்மங்களைக்கொண்டு அவற்றைச் சுத்திசெய்விக்கவேண்டும். வாதாபஸ்மாரத்தை வஸ்தி சிகித்ஸையினாலும், பித்தாபஸ்மாரத்தை விரேசந சிகித்ஸையினாலும், கபாபஸ்மாரத்தை வமநங்களாலும் சிகித்ஸை செய்யவேண்டும். பிறகு பேயா, யவாகூ முதலிய திரவமான உணவுகளை (கஞ்சிவகைகளை)க்கொடுத்து போஷணையையும் செய்துவந்து, அப்பால் அவ்வியாதிக்ரஸ்தனுக்கு இதனடியில் விவரிக்கப்படும் கிருதாதிகளைப் பானம் செய்விக்கவேண்டும்.

பஞ்சகவ்ய கிருதம்:—பால், தயிர், நெய், பசுவின் மூத்திரம், அதன் சாணத்தின் இரஸம் இவற்றை ஸமபாகமாகச் சேர்த்து, எட்டில் ஒரு பங்கு நெய் சேர்த்து, ஜலபாகம் முற்றிலும் வற்றிப் போமளவும் காய்ச்சி, கிருதத்தையெடுத்துக்கொள்ளவும். இதை உபயோகிப்பதால் அபஸ்மாரவியாதியின் உக்கிரத்தன்மை குறைவடையும். மேலும் பைத்தியரோகமும், காமாலை முதலிய வேறு சில வியாதிகளும் இதனால் நிவ்ருத்தியாகலாம்,

பிராஹ்மீ கிருதம் :—வல்லாரை யிலைச்சாற்றுக்கு ஸம அளவாகப் பழைய நெய்யைக் கலந்து, வசம்பு, கோஷ்டம் இவற்றைப் பொடித்துச் சேர்த்து கிருதத்தைப் பக்குவம் செய்யவேண்டும். வல்லாரையின் இரஸத்திற்கு ஸமமாகச் சங்கங் குப்பியின் சாற்றையும் சேர்ப்பதுண்டு. இந்த கிருதம் அபஸ்மார ரோகத்தில் மிகவும் நல்ல பலனைத்தருவதாக நம்பிக்கையுண்டு. (சரக-சிகித்-5-வது அத்.)

பால் :—ஞாழல், நிலப்பூசிணி, கோரைக்கிழங்கு, தர்ப்பை இவற்றை ஸமபாகமாகச் சேர்த்து, அனைத்துக்கும் எட்டுப்பங்கு ஜலம் சேர்த்து, அதை நாலில் ஒரு பங்காக வற்றும்படிக் காய்ச்சி, வடிக்கட்டி, அதில் ஸம அளவாகப் பசும்பாலைச் சேர்த்து, நன்றாகப் பக்குவம் செய்து எடுத்து உபயோகித்து வருவதால் அபஸ்மாரம் குணபாகத்திற்கு வருவதுண்டு.

கூஷ்மாண்ட கிருதம் :—சாம்பற்பூசிணிக்காயின் ஸ்வரஸம் 8-படி யெடுத்து, அதில் 1-படி பசுவின் நெய்யைச் சேர்த்து, அதிமதுரத்தூள் சிறிதளவு அதில் சேர்த்து, ஜலபாகம் சுண்டிப்போய், நுரைகிளம்பி அடங்கியதும், கிருதத்தை இறக்கி வடிக்கட்டி யெடுக்கவும். இதை உட்கொண்டு வருவதால் அபஸ்மாரரோகிக்கு வியாதியின் பலம் குறைவடைந்து ஒரு ஸமயம் நன்றாகவும் குணமுண்டாவதுண்டு. புத்தியும், வாக்கும் பிரஸன்னமாகும்.

நஸ்யமிடுதல் :—காறும்பசுவின் வயிற்றிலுண்டான பித்தத்தை (கோரோசனையை) அபஸ்மாரரோகிக்கு நாசியினுள் நஸ்யமாகப் பிரயோகித்தால், வியாதியின் வேகம் நிவ்ருத்தியாகலாம். நல்லெண்ணெயையும் வெள்ளுள்ளிச் சாற்றையுங் கலந்து நஸ்யமிடலாம்.

தண்ணீர் விட்டான்கிழங்கின் ஸ்வரஸத்தையும் பசுவின் பாலையும் ஸமபாகமாகக் கலந்தாவது, வல்லாரையின் ஸ்வரஸத்தையும் தேனையும் கலந்தாவது, கோஷ்டம் வசம்பு இவற்றைப் பாலில் சேர்த்துக் காய்ச்சியாவது அபஸ்மார ரோகி தினந்தோறும் உட்கொண்டு வருவதால் ஸௌக்கியமுண்டாகும்.

கல்யாணகசூர்ணம்:—பஞ்சகோலம்,*மிளகு, த்ரிபலை ‡ கறுப்புப்பு, இந்துப்பு, திப்பிலி, வாய்விடங்கம், ஓமம், கொத்தமல்லி விதை, ஜீரகம் இவற்றை ஸமபாகமாக எடுத்து சூர்ணம் செய்து, வெந்நீருடன் வேளைக்கு அரை தோலா எடை விதம் உபயோகித்து வருவதாலும் குணமுண்டு.

இப்பொழுது குறிப்பிட்டவைகளில் சில அஷ்டாங்க ஹ்ருத்யத்திலும், வேறு சில ப்ருந்த மாதவத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் சரகஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிற மஹாபஞ்சகவ்யக்ருதமும் அபஸ்மாரத்தில் மிகவும் உபயோககரமானது.

ரோகியைப் பாதுகாத்தல் :—அபஸ்மார ரோகியை நெருப்பு ஜலம் இவற்றின் அருகில் ஸாத்தியமானவரையில் அணுகாமலிருக்கச் செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள ஔஷதங்களில் அந்தந்த ரோகியின் தேஹக்கூறுமுதலியதை ஆலோசித்து எந்த ஔஷதத்தையாவது உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்வது வைத்தியனுடைய கடமையாம். அபஸ்மாரமுள்ளவனுக்கு மனவருத்தமாவது கோபமாவது வேறு எவ்வித மனோவிகாரமாவது உண்டாகாமல் அவன் ஆனந்தமாகவும் உத்ஸாஹமாகவும் இருக்கும்படி அவனைப் பாதுகாத்து வரவேண்டும். வாஸஸ்தலமும் குளிர்ச்சிபொருந்தி மனோஹரமாயிருக்கவேண்டும்.

---

* பஞ்சகோலம்—திப்பிலி, சவியம், மோடி, சுக்கு, சித்திரமூலம் இவற்றின் கூட்டு.

‡ த்ரிபலை—கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.



# PREVENTION OF CONSUMPTION *

## சுவாஸாசயக் கழலையைத் தடுத்தல்.

A lecture Delivered

BY MAJOR F. F. ELWES, C.I.E., I.M.S.

---

மிகக் கொடியதானசுவாஸாசயக்கழலை வியாதியினால் இச்சென்னையில் மட்டும் சுமார் பதினாயிரம் ஜனங்கள் துன்பப்படுகிறார்கள். இப்பதினாயிரம் பேரில் 3000 பிணியாளிகளுக்குக் கழலை வியாதி மிகவும் முதிர்ந்துபோயிருப்பதாகவும் தெரியவருகிறது. இவர்களிடமுள்ள வியாதி அக்கம் பக்கத்தாரிடமும் எளிதில் பரவிவிடக்கூடும். சுவாஸாசயத்தில் அநேகம் வியாதிகள் ஸம்பவிக்கலாம். அவற்றுள் முக்கியமான இக்கழலைவியாதி நுண்ணுயிர்களால் உண்டாகின்றது. இவ்வியாதியினால் வருந்துகிறவர்களே இது விசேஷமாகப் பரவுவதற்கும் காரணமாயிருக்கின்றனர். இதனால் கஷ்டப்படும் பிணியாளிகளிடமிருந்து, இவர்கள் துப்பி விடும் கோழை உமிழ்நீர் முதலியவற்றின் மூலமாய் வியாதிக்கு மூலதாரமான நுண்ணுயிர்கள் வெளியிற் பரவி, பிறரிடம் பற்றிக் கொள்கின்றன இவ்வாறு வியாதி பரவுவதைத் தடுப்பதற்கு ஒரு உபாயம் உண்டு; சுவாஸாசயக்கழலை எவரெவருக்கு உண்டாயிருக்கிறதோ அவர்களை ஓரிடத்தில் ஒன்றாகச் சேர்த்து, அவர்களுக்கென்று பிரத்தியேகமான வஸதிகள் ஏற்படுத்திவிட்டால், அவ்வியாதி அவர்களிடமிருந்து மற்றவரிடம் பரவுவதற்கு வழியிராது. ஆனால் அவ்வியாதிக்ரஸ்தர்களையெல்லாம் ஒருமிக்கக் கூட்டுவதும், பிரத்தியேகமான ஓரிடத்தில் இருக்கச்செய்வதும் ஸாத்தியமில்லை. என்றாலும் காற்று அவர்களால் அசுத்தமாகாதபடிக் காப்பது என்னமோ இன்றியமையாத விஷயம்: இந்த ரோகிகள் வெளியில் நடமாடும்போது இங்குமங்கும் காறித்துப்பாமலிருக்கும்படி ஏற்பாடு செய்யலாம். இவர்கள் ஒரு கலயத்தில் எச்சிலைத் துப்பி அதை எப்பொழுதும் மூடியிருக்கவேண்டும். கந்தத்துணியில் துப்பி அதை எரிந்து விடவாவது வேண்டும். நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் இவன் வஸித்துவருவதோடு, இவனிருக்குமிடத்தில் ஜனங்கள் கூடுமானவரையில் போக்குவரத்தை விலக்கிக் கொள்ளவும்வேண்டும்.

கழலை வியாதிக்ரஸ்தர்களுடைய சிகித்ஸைக்கென்று பிரத்தியேகமான வைத்தியசாலை யேற்பட்டிருப்பது நலம். ஆனால் வெகு சொற்பகாலமாய் இந்த நோய்க்கு உட்பட்டவர்களை இவ்வித வைத்தியசாலையில் மற்றவரோடு இருக்கும்படிச்சேர்க்காமல் தனியாக ஆரோக்கியத்திற்கு ஆஸ்பதமான வாஸஸ்தலத்தில் இருக்கச் செய்துவருவது உத்தமம். கழலைவியாதியினால் வருந்துபவருடைய சிகித்ஸை முதலிய தர்மகாரியத்திற்கு உபயோகப்படும் வண்ணம் ஒரு நிதியையும் ஏற்படுத்தவேண்டும். இப்பிணியாளி உபயோகிக்கும் வஸ்துக்களை மற்றவர் உபயோகிப்பது பிசகு. அநேகம் இந்திய காப்பிஹோட்டல்களில் ஒருவர் எச்சிலைப்பண்ணிஉபயோகித்தபாத்திரங்களைப் போதுமாறு கழுவாமலே மற்றவருக்கும் அதே பாத்திரங்களில் காப்பி முதலியது அளிக்கப்படுவதை நாம் ஸாதாரணமாய்க் காணலாம். கழலை ரோகம் பலரிடம் வியாபிப்பதற்கு இதுதான் ஹேதுவாகும்.

இது மேஜர்எல்விஸ் துரை பேசியதன் ஸாராம்சம். பின்பு அவருடைய பிரஸங்கத்திற்காக அக்கிராஸனம் வஹித்த ஆனரபுள் ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் கூறிய சில விஷயங்களும் இங்கு அவசியம் குறிப்பிடக்கூடியவையாம். அதாவது:—இக்கழலை வியாதி தினே தினே விசேஷமாய் விருத்தியாய்வருவதாகவே தெரியவருகிறது. இதைத் தடுப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு இராஜாங்கத்தாரும், வைத்தியர்களும், மற்றப்பிரஜைகளும் கருத்துடன் போதுமாறு உழைக்கவேண்டும். வியாதி பரவுவது அதிகமாயிருக்கிறதென்றால் ஏன் இராது? ஜனங்கள் வாஸம்செய்யும் வீடுகளில் கூட்டம்பெருகியிருக்கிறது; சுகாதாரத்திற்கு அவசியமான ஏற்பாடுகளும் பெரும்பாலும் அவர்களுடைய

வாஸஸ்தலங்களில் இல்லையென்றே சொல்லலாம். மேஜர் எல்லிஸ் சொன்னபடி பிணியாளிகள் போகுமிடங்களிலெல்லாம் எச்சிலைத் துப்புதவற்காகப் பாத்திரத்தைபாவது துணிகளையாவது எடுத்துக்கொண்டுபோவதென்றால் அது முடியாத காரியம். அவ்விதம் செய்வது ஜனங்களுக்கு அருவருப்பாகத் தோற்றும். ஆகிலும் எச்சிலைக்கண்டவிடங்களிலும் துப்பக்கூடாதென்றும், மற்றும் சுகாதார முறைகளை அனுஸரித்து நடக்கவேண்டிய விதம் இன்னின்னதென்றும் ஜனங்களுக்கு அறிவிப்பது அவசியமான காரியம். மேலும் இவ்வியாதிக்ரஸ்தர்களுக்கென்று ஏகாந்தமான ஆரோக்கிய கிருஹங்களை அமைப்பதும், பிரத்யேகமான வைத்தியசாலைகளை ஸ்தாபிப்பதும், வீடுகளில் ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வஸிக்காமலிருப்பதற்கான வஸதிகளை ஏற்படுத்துவம் முக்கியமான விஷயங்களேயாம். இப்பொழுது நமது பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களின் சுகாதாரவஸதிகளைக் கவனித்தோமானால், நமது பண்டைக் காலத்திய திண்ணைப் பள்ளிக்கூடங்களே மேலான நிலைமையிலிருந்ததாக என்னுடைய அபிப்பிராயம். ஏனெனில் திண்ணைப் பள்ளிக் கூடங்களோ இயற்கையாகவே நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளவைகளாயிருந்தன. தற்காலம் ஏற்பட்டுள்ள பாடசாலைகளில் பையன்களுக்குக் கழலைநோய் உண்டாய்ப் பரவுவதுபோல, முற்காலத்திய தெருத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்த மாணாக்கர்களுக்கு அந்த வியாதி இவ்வளவு தீவ்ரமாகப் பரவியதாகத் தெரியவில்லை. இப்பொழுது வேண்டியவளவு காற்றோட்டமில்லாமலும் வெளிச்சக் குறைவானதுமாயுள்ள கட்டடங்களில் பாடசாலைகளை யேற்படுத்துவதை வித்தியா இலாக்காத்தலைவரும் கவனிக்காமல் அவ்விதம் செய்ய அனுமதியளித் திருப்பதாகவும் நான் அறிந்திருக்கிறேன். காப்பிஹோட்டல்களில் ஒருவர் உபயோகித்தப் பாத்திரத்தை நன்றாகச் சுத்தம்செய்து மற்றவருக்குக் கொடுக்கும்படி அங்குப்போகிறவர்களே அங்குள்ள ஹோட்டல் யஜமானனைக்கொண்டு நிர்பந்தப் படுத்தவேண்டும்.

# வைத்திய கலாநிதி.

நள௵ ஐப்பசி-கார்த்திகைமீ.

## PREVENTION AND TREATMENT OF LOSS OF APPETITE.

## பசியின்மையைத் தடுப்பதற்கும் தீர்ப்பதற்குமான சாஸ்த்ரீய முறை.

பசியின்மையென்பது, கவலைக்கிடமான நிலைமையை உண்டுபண்ணுவது அரிதாயினும், அநேகம் ஜனங்கள் அதை மிகத் தொல்லையாகவே கருதுகின்றனர். பசியின்மையென்னும் அக்னிமாந்தியம் அநேகம் வியாதிகளுக்கு ஆதாரமாயிருப்பதாக ஆயுர்வேதம் கூற, “பொதுவாகக் குறிப்பிடுவோமானால் பசியின்மையானது ஒரு வரப்பிரஸாதமேயாகும்” என்று “டாக்டர்” என்னும் பத்திரிகையில் ஒரு வைத்திய நிபுணர் கூறுகிறார்.

பசியின்மையென்பது, தேஹநிலைமையில் மாறுபாடு உண்டாயிருப்பதை அறிவித்து, அத்தருணம் தீனி தீங்கிழைக்குமென்று வாய்மொழியின்றியே கூறும் ஓர் இயற்கை ஸாதநமாகும். ஜீவவர்க்கத்தில் மனிதஜாதியொன்றுதான் இந்த எச்சரிக்கையைக் காது கொடுத்துக் கேளாத பிறவிச் செவிடாயிருக்கிறது. ஒரு குதிரைக்கு வியாதி ஏதேனும் உண்டானால் அது உடனே தீனியெடுப்பதை ஒழித்துவிடுகிறது; ஒரு நாயாவது பூனையாவது நோய்க்கொண்டால், வியாதி நீங்கி மீண்டும் ஆரோக்கிய நிலைமையைப் பெறுமளவும் ஒன்றையும் தின்பதுமில்லை, பெரும்பாலும் தண்ணீரையும் குடிப்பதில்லை.

ஒரு மனிதனுக்கு நோய்வந்தால், அவனுடைய பந்துக்கள் அனைவரும், முக்கியமாய்



வீட்டிலுள்ள ஸ்த்ரீகள், வலுவில் அவனுக்கு இயற்கையிலில்லாத பசியை உத்தீபனம் செய்ய அல்லது எவ்விதமாகவாவது ஆஹாரமெடுத்துக் கொள்வதற்கு இணங்கும்படி அவனை நிர்ப்பந்திப்பது வெகு ஸாதாரணம். அவர்களுடைய பலவந்தமான முயற்சிக்கு நோயாளி ஒரு சிறிது வசமாய்விட்டதாகத் தெரிந்ததும், உணவை அவனுக்கு வைத்து அவன் புஜிப்பதை அவர்கள் சுற்றிலும் நின்றுகொண்டு ஆவலுடன் பார்ப்பார்கள்; அவன் அதை விருப்புடன் உண்டாலும் வெறுப்புடன் உண்டாலும் அது அவர்களுக்கு அவசியமில்லை.

அவ்விதம் அளிக்கப்படும் உணவானது நோயாளிக்கு உண்மையில் தீமையுண்டு பண்ணுகிறதேயன்றி அதனால் எவ்வித நன்மையும் கிடையாது. எப்பொழுது பசியில்லையோ உமிழ்நீராவது, ஆமாசயத்திரவமாவது (Gastric juice) அப்பொழுது வேண்டியவளவு ஊறிப் பொசிவதில்லை; பித்தநீரும் மற்றும் ஜீர்ணத்திற்கு அவசியமாகவேண்டிய திரவங்களும் நன்றாகக் கசிவதில்லை. ஆஹாரம் முற்றிலும் ஜீர்ணமாவதற்கு முடியாது. அப்பொழுது உட்கொள்ளப்பட்ட உணவானது மேலே குடலுக்குள் செல்வதற்கு முன்பு, ஸாதாரணமாய் அநேகம் நாழிகைகள் வரையிலும் இரைப்பையிலேயே தங்கியிருக்க நேரிடுகிறது. சிறிது வெப்பமும் ஈரமுமுள்ள இடத்தில் வைக்கப்பட்ட உணவு சீக்கிரம் கெட்டுப்போய்விடுமென்பது ஒவ்வொருவரும் அறிந்த விஷயமென்றே கருதுகிறோம்; அதாவது அவ்விதமான இடத்தில் வைக்கப்பட்ட உணவு ஒருவாறு புளித்துப் பதனழியும். உணவிற் சேர்ந்துள்ள மிகவும் நுண்மையான அநேகம் சாகவர்க்கங்கள் அவ்விடத்தில் முளைவெடித்து அங்குரிப்பதே அவ்வாறு புளிப்பு உண்டாவதற்குக் காரணமாகின்றது; அவற்றில் பெரும்பான்மையும் ஸூக்ஷ்மமான சாகாம்சங்கள் (Yeasts) ஆகும். இவற்றையும் ஒருவித சாகங்கள் என்றே வியவஹரிக்கலாம். இவை ஸூக்ஷ்மமான நிலைமையில் முளைக்கத் துவக்குவதால் அவற்றிலிருந்து இன்னும் ஸூக்ஷ்மமான பதார்த்தங்களின் அம்சங்களும் உற்பத்தியாகின்றன; அவை பெரும்பாலும் விஷப்பொருட்களேயாம். அவ்விஷப்பொருட்கள் குடலிலுள்ள மெல்லிய ஜவ்வுகளால் உறிஞ்சப்பட்டு, இரத்தத்துடன் சேர்ந்து, சிரோவேதனையையும் அஜீர்ணத்துடன்கூடிய வேறுவிதமான துர்க்குணங்களையும் உண்டுபண்ணுகின்றன.

பசியில்லை யென்று சொல்லும் பிணியாளிக்கு அவனது கல்லீரல் நன்கு வேலைசெய்யாமல் ஒருவேளை மந்தமாயிருக்கலாம். இந்த நிலைமையும் பசியின்மைக்கான முக்கியமான காரணங்களுள் ஒன்றாயிருக்கக்கூடும். உணவானது ஜீர்ணமாய் நன்கு உடலில் ஊறுவதற்கு ஆரம்பித்தவுடனே, இரைப்பையின் உட்புறக் கவசத்தினூடே அல்லது குடலின் உட்புறக் கவசமான ஜவ்வறைகளினூடே பிரவேசித்து, அவ்விடங்களில் ஏராளமாகப் பரவியுள்ள கேசநாளங்கள் எனப்படும் நுண்ணிய இரத்தக் குழாய்களுக்குள் சேர்ந்துவிடுகிறதென்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். இப்பிரதேசத்திலிருந்து இரத்தம் முதன்முதல் கல்லீரலுக்குப் போகின்றது. குடலில் ஜவ்வறைகளின் மூலமாய் இரத்தத்தினால் ஆகர்ஷிக்கப்பட்ட உணவின் ஸாரத்திலடங்கிய சர்க்கரையென்ன, மாப்பொருளின் ஸத்துவமென்ன (Starch) இவற்றின் அம்சங்கள் யாவும் கல்லீரலால் உடலுக்கு உதவுமாறு செம்மைப் படுத்தப்படுகின்றன. நமது உணவில் இப்பதார்த்தங்களே மிகுதியாய் அடங்கியிருக்கின்றன; ஆகவே கல்லீரலின் வேலையானது மிகவும் முக்கியமானதென்பதில் ஸந்தேஹமில்லை. கல்லீரலின் தொழில்கள் ஒழுங்காகவும் மிதமாகவும் நடைபெறுவதானது மனிதருடைய ஆரோக்கியத்தையும் தேஹவன்மையையும் விளைவிப்பதற்கு இன்றிமையாததாகின்றது.

சில வேளை, கல்லீரலானது தகுந்தவளவு பித்தநீரைக் கசியச்செய்வதில்லை. போதுமாறு உத்தீபநமின்மையே இத்திமிர்ப்புக்குக் காரணமாகலாம். இத்தகைய நிலைமையில் இக்கரு

விக்கு அதிக வேலைகளைக் கொடுப்பது, என்றால் அமிதமான உணவுகளைத் திணிப்பதானது, ஏற்கனவே சோர்ந்துபோன குதிரையின்மீது இருமடங்கு சுமையை ஏற்றி அடிப்பதுபோலாகும். கல்லீரலிலிருந்து பித்தநீரைப் பிறப்பிக்கும் அதன் சவ்வறைகள் யாவும் அவற்றிற்கு வேண்டிய வஸ்துக்களால் முற்றிலும் நிரம்பியிருக்கையில், அவை மதப்படைந்து மயக்கங்கொண்டவைபோல் இருக்குமாகையால், பித்தநீர் உண்டாவதற்கு வேண்டிய இரஸாயனச் செயல்கள் வழக்கம்போல் சுறுசுறுப்பாக நடைபெறுவதில்லை. அப்பொழுது கல்லீரல் அபேக்ஷிப்பது என்னவென்றால், அதிக தீக்ஷ்ணமில்லாத உத்தீபன வஸ்துவேயாம். இதற்கு பாஸ்கரலவண சூர்ணமும், அகஸ்திய ஹரீதகீ லேஹ்யமும்* அனுபவத்தில் வந்த சிறந்த ஔஷதங்களாகும். இவ்வௌஷதங்கள் கல்லீரலை மிதமிஞ்சித் தூண்டி பேதியை யுண்டுபண்ணாமல், அதற்கேற்பட்டுள்ள திமிர்ப்பைப் போக்கி, அதன் இயல்புக்கு மிஞ்சாதபடி வேலைசெய்யத் தூண்டும் மிதமான தீக்ஷ்ணத்தன்மையுடையவைகளாயிருக்கின்றன. கல்லீரலில் ஜவ்வறைகள் மிதமிஞ்சி நிண்டிக் கிடப்பது நீங்கி, பித்தநீர் தாராளமாக உற்பத்தியாய் வெளியிற் கசியத்தொடங்கவே, அப்பால் அவசியமான உணவையும் அக்கருவி அபேக்ஷிக்கத் துவக்கின்றது; பழையமாதிரியில்பசியும் தோன்றிவிடுகின்றது.

அக்னிமாந்தியத்திற்கு மலபந்தமும் மற்றொரு ஸாதாரண காரணமாகும். மலம் திரளாகக் குடலில் மலாசயத்தில் சேரச் சேர, அதிலுள்ள மலினமான ஈரப்பசையும் மற்றும் கரையக்கூடிய மலத்திலுள்ள உப்புவகைகளும் கிரமமாக ஊறி இரத்தத்தில் கலந்துவிடுகின்றன. இதனால் தலைவலியும், திமிரும், மனதுக்கு அமைதியின்மையும் ஸம்பவிப்பதோடு, முக்கியமாய் அக்னிமாந்தியமும் உண்டாகின்றது. இத்தருணத்தில், அம்மனிதனுக்கு உணவை பலவந்தமாகக் கொடுத்தால், மலாசயத்தில் மலின பதார்த்தங்கள் மேன்மேலும் திணிக்கப்பட்டு இன்னும் தீமையே விருத்தியாகும் என்பது வெளிப்படையான விஷயமல்லவா? இந்த நிலைமையை நிவ்ருத்தி செய்வதற்குப் பித்தநீர் தடையில்லாமலும் ஒரேசீராகவும் கசிந்து வரவேண்டியது அவசியமாகும். பித்த நீரானது அடிக்குடல்களின் உட்புறச் சுவர்களின் சர்மங்களைத் தூண்டி, மலத்தை இளக்கி வெளிப்படுத்தவும், மலங்கள் குடலுக்குள் தங்கி விளைவிக்காதபடி அப்பாகங்களைச் சுத்தம் செய்யவும் ஏற்ற வஸ்துவாயிருக்கிறது. கல்லீரலைத் தூண்டுவதற்கு ஔஷதம் மட்டும் போதுமானதல்ல; தகுந்தவாறு வியாயாமம் என்னும் பயிற்சியையும் செய்யவேண்டும். மிதமாகவே எப்பொழுதும் உணவுகளை யெடுத்துக் கொண்டுவந்தால் இத்தீமை நேரிடமாட்டாது. சாகவகைகளும், நன்றாகக் கனிந்த பழவகைகளும் கல்லீரலின் வேலையைப் பெரும்பாலும் மந்தப்படுத்துபவையல்ல. மலபந்தமுள்ளவர் நிர்மலமான குளிர்ந்த ஜலத்தை தாராளமாய்ப் பருகுவது நலம். பனிக்கட்டியின் ஜலத்தை இதற்காக உட்கொள்ளக்கூடாது. உணவுண்ணும்போது இடையில் ஜலபானம் செய்வது பிசகு என்று சொல்லும் விஷயம் இக்காலத்திய சாஸ்திர நிபுணராலும் அங்கீகரிக்கப்படவில்லை. பித்தநீரையும், மற்றும் ஜீர்ண வேலைக்கு அவசியமான திரவங்களையும் கசியச்செய்ய ஜலம் தாராளமாய் உடலுக்குத் தேவையென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

* வைத்தியகலாநிதி ஆபீஸில் வெளியாயுள்ள சார்ங்கதர ஸம்ஹிதையில் 104-வது பக்கத்தில் பாஸ்கர லவணத்தையும், 115-ம் பக்கத்தில் அகஸ்திய ஹரீதகீ லேஹ்யத்தையும் பற்றிய முறைகளை விவரமாகப் படித்துத் தெரிந்துகொள்க.



# FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

(முன் தொடர்ச்சி)

துடையெலும்பு மத்தியபாகத்தில் ஒடிதல் :— இவ்வாறு ஸம்பவிக்கும் அபாயத்தின் குறிகளை நன்றாக உடனே அறிந்துகொள்ளலாம்; எப்படியெனில்: கால் நீளத்தில் குறைந்திருக்கும்; வீக்கம் மிகவும் அதிகமாயுண்டாகும்; ஒடிந்த முனைகள் கீழும் மேலும் தசைநார்களின் அசைவால் இழுக்கப்படும்போது அஸாத்தியமான வலியும் உண்டாகும்.

சிறு குழந்தைகளுக்கு இந்த எலும்பு முற்றிலும் ஒடிவதில்லை; ஸாதாரணமாய் அது வளைவதுதான் வழக்கம். இதில் அவ்வளவு அதிகமான வலியிருப்பதில்லை; ஏனெனில், எலும்பு ஒடியவில்லையாகையால் அதைக் கூட்டுவதற்கு காலை மேலும் கீழும் இழுத்துக் கூட்டவேண்டிய அவசியமில்லை. வளைந்த பாகத்தை மறுபடியும் அதற்குப் பின்புறமாக அமுக்கிக் கட்டவேண்டும்.

சிகித்ஸை :— இவ்விதமான எலும்பு முறிவிலும், துடையெலும்பின் மேல் பாகத்திலுண்டாகும் முறிவிலும், நீளமான சிராயை (Long thigh splint) உபயோகிக்கவேண்டும். இந்தச்சிராய் ஸாதாரணமாய் ஒரு கையளவு அகலமுடையதாய் பெரியவர்களுக்கும், குறுகிய அகலமுடையதாய் சிறுவர்களுக்கும் இருக்கவேண்டும். இது நீளத்தில் மேலே அக்குள் வரையில் எட்டும்படியாகவும், கீழே பாதத்திற்குமேல் நான்கு அங்குலம் நீண்டிருக்குமாறும் அமைக்கப்படவேண்டும். இந்தச் சிராயின் மேல்முனையில் ஒரு துளையும், கீழ்முனையில் மூன்று பற்களுள்ள கூறுகளும் அமைக்கப்படவேண்டும். முனையிலுள்ள பற்களுக்கு அடுத்தாற்போல் மேலே ஒரு த்வாரமும் இடப்படவேண்டும்; இந்த த்வாரம் கணுக்காலிலுள்ள எலும்புப் பிதுக்கத்துக்கு மேற்புறத்தில் அமைக்கப்படவேண்டும். சிராயின் காலில் படியும் பாரிசத்தில் நெடுக வஸ்திரங்களாலோ பஞ்சுமுதலியதாலோ மெத்தையொன்று நன்கு அமைக்கப்படவேண்டும். பிறகு பெருவிரல் முதல் முழங்கால் வரையிலும் அந்தந்த இடத்திற்குத் தகுந்தவாறு ஸாதாரண மண்டலபந்தனங்களாலும் புறமாற்று மண்டலபந்தனங்களாலும் முழங்காலுக்கு மேற்புறம் வரையில் கட்டிவிடவேண்டும். அவ்வாறு பந்தனமிடும்போது காலை இயற்கையான நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக அதை மேலுக்கு மெதுவாக இழுத்துத் தள்ளவேண்டியதும் அவசியம். சிராயின்கீழ் முனையைக் கணுக்காலுடன் இணைத்துக் கட்டுவதற்கு, பந்தனவஸ்திரத்தைப் பாதத்தைச் சுற்றிலும் செலுத்தி, சிராய்ப்பலகையின் முனையிலுள்ள பற்களின் இடைகளிலேயும் சுற்றிச் சுற்றிக் கட்டவேண்டும். பிறகு சிராயை நெடுகவும் காலில் அமைத்தாற்போல் சேர்த்து, கீழே ஆரம்பித்து மேல்நோக்கிக் கட்டுகள் முன்போலவே இடவேண்டும். இவ்வாறு பந்தனம்செய்யும் போதெல்லாம், காலை இழுத்து ஒடிந்த பாகத்தை ஒழுங்குபடுத்துவதில் ஸமர்த்தனான ஒருவன் உதவிபுரிந்து வருவது அவசியம். கடைசியில் பெரிய கைக்குட்டையையோ, அல்லது வேறு அவ்வித வஸ்திரத்தையோ மூலைமடிப்பாக இரட்டையாக மடித்துச் சுற்றி, இதன் ஒரு முனையை இரண்டு கால்களுக்கும் இடையில் உட்செலுத்தி வங்க்ஷணமென்னும் துடையிடுக்குக்கு மேலாகக் கொண்டுவந்து, மற்றொரு முனையை அடியில் ப்ருஷ்டபாகத்தின் பக்கமாகவும் கொண்டுவந்து, நாபிக்கு மேற்புறமாக அதற்கு நேர் ரேகையில் பக்க வாட்டில் இரண்டு முனைகளும் புறமாற்றுதல் அடையும்படியாகக் கொண்டுவந்து, அக்குள்பக்கத்தில் சிராயின் மேல் த்வாரத்தில் பந்தன வஸ்திரத்தைக் கட்டிவிடவும். பிறகு அகன்றமடிப்பான பந்தன வஸ்திரமொன்று எடுத்து, சிராயின் மேல் பாகத்தையும் பிணியாளியின் உடம்பையும் சேர்த்துக் கட்டிவிடவேண்டும்; இப்படிச் செய்வதால் சிராய் உடம்புடன் சேர்ந்தாற்போல் அசையாமல் நிற்கும். துடையிடுக்கில் பந்தன வஸ்திரத்தைப் பிரயோகிக்கையில், அது மர்மஸ்த்தானத்தை இறுத்தி அஸௌகரியம் உண்டுபண்ணாமலும், மூத்திரம் விடுவதற்குத் தடையேற்படாமலும் இருக்கும்படி பந்தனம் அமைவதில் கவனம் செலுத்தவேண்டும். கணுக்காலில் சிராய் முதலியவற்றின் அமுக்கத்தினால் சிதைவு நேரிடுவது ஸஹஜமாகையால், அவ்விடத்தில் சிராயின் உட்புறத்தில் மெத்தை அல்லது பஞ்சுகளை வைத்துக் கட்டியிருப்பதும் அவசியம்.

சில ஸமயம் துடையில் ஒடிந்துள்ள எலும்பின் முனைகள், மேற் குறிப்பிட்டவாறு செய்தும் மேலுக்குப் பிதுங்கி நிற்கக்கூடுமாகையால், அப்பொழுது இரண்டு சிறிய சிராய்களை யெடுத்து, துடையின்

உட்புறமாக ஒன்றையும், வெளிப்புறமாக ஒன்றையும் வைத்துக் கட்டுவது அவசியமாகும்.

தடையெலும்பு எவ்விதமாக ஒடிந்தபோதிலும், அநேக ஸமயங்களில் வஸ்தியென்னும் மூத்திரப்பையானது தற்காலம் அதன் வேலையைச் செய்யச் சக்தியற்றதாய் விடுவதுண்டு; அப்பொழுது ஜலம் தாராளமாகவோ முற்றிலுமோ இறங்காமல் தொந்தரவு உண்டுபண்ணுவதுமுண்டு. இவ்விதமாகத் தடையெலும்புக்கு அபாயம் நேரிட்ட சிலமணிநேரத்திற்கெல்லாம், மூத்திரப்பை ஏதேனும் கோளாறடைந்துவிட்டதோ வென்பதையும் கவனித்துப் பரீக்ஷிக்கவேண்டும். மூத்திரம் வெளிவர முடியாமல் பிணியாளி கஷ்டப்பட்டால் நாபிக்குக் கீழேவயிற்றில் சூடாக ஏதாவது ஒற்றடம் கொடுப்பது நலம். அல்லது மெதுவாக சலாகையிட்டாவது மூத்திரத்தை வெளிப்படுத்தவேண்டும்.

தடையெலும்பு மத்தியில் ஒடிந்து, இவ்வாறு சிகித்ஸையில் இருப்பவன், ஐந்து அல்லது ஆறுவாரங்கள் வரையிலும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கக்கூடாது. பிறகு கக்ஷதண்டம் என்னும் ஊன்றுகோல்களை வைத்துக்கொண்டு, ஒடிந்த காலைப் பூமியில் ஊன்றாமல் மெதுவாகக் கொஞ்சம் இங்குமங்கும் உலாவலாம். அநேகம் பேர்களுக்கும் தடையெலும்பு ஒடிந்து சிகித்ஸை செய்துகொண்டும், கால் நீளத்தில் குறுகியிருப்பதாகவே தோற்றுவதுண்டு. ஆனால் பெரும்பான்மையான கேஸுகளில், காலக்கிரமத்தில் அவ்விகாரம் மறைந்துவிடுவதும் வழக்கம்.

---

## DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### பனையின் ஔஷதத்தன்மைகள்.

பனை இந்தியாவில்மட்டுமல்ல உலகமெங்கும் ஏராளமாய் உண்டு. வைத்தியத்தைப் பொருந்தியமட்டிலும் அதன் ஔஷதத் தன்மைகளைக் கவனித்துப் பார்ப்போம்.

(1) புதிதாக அப்பொழுதே இறக்கப்பட்ட பனஞ்சாறு மிகவும் இனிய சுவையுள்ளது. அனைவரும் அதை அதிகமாகக் குடிக்கவேண்டிய அவசியமில்லையாயினும், மலபந்தமுள்ளவருக்குமாத்திரம் அது அமுதமெனத்தகுந்தது. தினந்தோறும் தொடர்ந்தாற்போல அநேகம் நாட்கள் இதைக் குடித்துவந்தால் மலசோதந விஷயத்தில் அது நன்கு உபயோகப்படுகிறது. (2) பனஞ்சாறு மிகவும் குளிர்ச்சி பொருந்தியதும் மூத்திரரேசநம் (Diuretic) செய்யத் தகுந்ததுமான வஸ்து. ஆகவே வெள்ளை மேஹத்தினாலும், சூதகதோஷத்தினாலும் (Syphilis) துன்பப்படுபவருக்கு பனஞ்சாறு மிகவும் உபயோககரமாயிருக்கும். மூத்திரத்தை தாராளமாய் வெளிப்படுத்துங்குணம் இதற்கு இருப்பதால், மஹோதரம் சோகை இவற்றிலும் பனஞ்சாறு மிக்க பலன்தரக்கூடியது. (3) புளித்து கொதித்துப்போன சாறானது (கள்) வெறியை யுண்டுபண்ணும்; விரேசநகுணமும் இதற்கு உண்டு. ஆனால் விரேசநமாவதற்காகக் கட்குடிப்பது விவேகமல்ல. இவ்விஷயத்தில் இதன் ஔஷதத்தன்மை உபயோகமற்றது. (4) பனஞ்சாற்றிலிருந்து ஒருவித வெல்லமும் கற்கண்டும் தயார் செய்யப்படுகிறதல்லவா? இந்தக் கற்கண்டையும் பாதுவங்கொட்டையையும் ஒன்றாகமென்றுத் தின்றால் மிகவும் தொந்தரவு அளிக்கும் இருமலும் மற்றுஞ்சில ச்வாஸாசயக் கோளாறுகளும் குறைவதுண்டு. முக்கியமாய் சிறுவர்களுக்கு இது உபயோகிக்கத் தகுந்தது. (5) கள்ளானது மிகவும் உபயோககரமான பொட்டலிகையாகப் (Toddy poultice) பிரயோகிக்கப்படுவது வழக்கம். அப்பொழுதே இறக்கிய கள்ளை அரிசிமாவில் வார்த்து மிருதுவாக நன்றாய்க் குழையும்வரையில் கலந்து, மந்தாக்னியில் வைத்துக் கிளறவேண்டும்; புளித்த கொதிப்பு காணும்வரையில் காய்ச்சிக் குழைத்து எடுத்துக்கொண்டு, ஒரு வஸ்திரத்துண்டில் இதைப் பரப்பி வீக்கங்களின்மேலும், வித்ரதிகள் என்னும் சீழ்க்கட்டிகளின்மேலும், பிரமேஹ பிடகைகள் என்னும் மேஹக்கட்டிகளின்மேலும் இப்பொட்டலிகையை வைத்துக் கட்டுவதால் நல்ல உபயோகம் உண்டு. (6) நன்றாகக் கனிந்த இதன் பழத்தின் உட்புறமுள்ள கதுப்பு போன்ற வஸ்துவானது (Pulp) சர்மவியாதிகளில் மேலுக்கு உபயோகிக்கப்படுவதுண்டு.



கூந்தற்பனை யென்பது பனைமரத்தில் ஒரு ஜாதி. ஸாதாரண பனையைப்பார்க்கிலும் அது மிகவும் அழகாயிருக்கும். சடைபோன்ற இதன் உட்புறச் சோறு சவ்வரிசிக்கு ஸமானமான குணமுள்ளதென்று கருதப்படுகிறது. இப்பனைமரத்தின் கள்ளைக் காய்ச்சி சிரேஷ்டமான ஒருவித சாராயம் இறக்கப்படுவதுண்டு. இச்சாராயம் மேனாட்டு வைத்திய முறையில் ஔஷதயோகங்களில் நன்கு உபயோகமாகிறது.

---

### தாளிஸாதி வடகம்.

தாளிஸப்பத்திரி, சவ்யம், மிளகு இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் எடை; திப்பிலி, மோடி இவை தனித்தனி இரண்டுபலம் எடை; சுக்கு மூன்றுபலம், இலவங்கப்பட்டை, ஏலக்காய், இலவங்கப்பத்திரி, நாககேஸரம் இவை பிரத்தியேகம் கால்பலம்; இவற்றை வெகு நுண்மையாகச் சூர்ணம் செய்து, சூர்ணத்திற்கு மூன்றுமடங்கு வெல்லத்தைச் சேர்த்து இடித்து, அப்பால் கல்வத்தில் இரண்டு நாட்கள் விடாமல் ஆட்டி யெடுத்துக்கொள்ளவும். வாந்தி, கிரஹணியென்னும் அஜீர்ணபேதி, மார்பிலுண்டாகும் எரித்தல், குன்மம், வாயில் ஜலம் அதிகமாய் ஊறிக்கொண்டிருத்தல், ச்வாஸ-காஸம் இவற்றை நிவ்ருத்தி செய்வதில் இத்தாளிஸாதி வடகம் சிறந்த ஔஷதமாகும். மலபந்தமும் இருந்தால் சுக்குக்குப் பதிலாக அதே அளவில் கடுக்காயை இவ்வடகத்தில் சேர்த்துக் கொள்ளலாம். பித்த ஸம்பந்தமான வாந்தி முதலியவற்றில், இந்த வடகத்திற்கு வெல்லத்திற்குப் பதிலாக நாலுமடங்கு சர்க்கரையைப் பாகுசெய்து, அப்பாகுபதத்தில் முற்கூறிய சரக்குகளின் சூர்ணத்தைக் கொட்டிக் கலந்து வடகங்களைச் செய்து உபயோகிக்கலாம்.

### டர்பண்டைன்-கிருமிஹரம்.

(1) டர்பண்டைன் என்னும் தைலம் எங்கும் எளிதில் கிடைக்கக்கூடியது. அதை ஐந்து முதல் பத்துத் துளிகள்வரையில் பாலிலாவது சர்க்கரையிலாவது கலந்து, வெறும் வயிற்றில் மூன்றுநாட்கள் காலையில் வரிசையாக உபயோகித்து வந்தால், வயிற்றுக்கிருமிகள் நிச்சயமாக மாண்டுபோம். (2) டர்பண்டைன் தைலத்தை ஒரு தேக்கரண்டியளவு வீதம் ஆமணக்கெண்ணெயிலும் பாலிலும் சேர்த்துக் குலுக்கி உட்கொண்டால் நாடாப்பூச்சிகள் செத்துப்போய் விடும்.—The Doctor.

---

### நிம்பாதிக்வாதம்.

இதனடியிற் குறிப்பிட்டுள்ள சரக்குகளைச் சேர்த்து பக்குவம் செய்யப்படுகிற கஷாயம் ஸாதாரணமான பித்தஜ்வரத்திலும், குளிர்க்காய்ச்சலிலும் சிலாக்கியமான ஔஷதமென்று அநுபவத்தில் வந்திருப்பதாக கள்ளிக்கோட்டை, இராமலிங்க வைத்தியர் எழுதுகிறார்:—

| | |
|---|---|
| வேப்பம்பட்டை | பலம்-2 |
| சீந்திற் கொடி | ,, 1 |
| பேய்ப்புடல் | ,, 1 |
| ஆடாதோடை | ,, 1½ |
| கண்டங்கத்திரி | ,, 1½ |

இவற்றை இடித்து, ஒருபடி ஜலம் சேர்த்து, பதினாறில் ஒருபங்காகச் சுண்டக் காய்ச்சி, வடிக்கட்டி, சிறிதளவு வேண்டுமானால் சர்க்கரை சேர்த்து உட்கொள்ளலாம். இது ஒரு வேளைக்கான அளவு. இக்கஷாயத்தை தினத்திற்கு மூன்றுவேளை வீதம் பருகிவரவேண்டும். இவ்வாறு நாலைந்து நாட்கள் தொடர்ந்து உபயோகித்து வரவும். நாட்பட்ட ஜ்வரத்தில் இதை இரண்டு மூன்றுவாரம் உபயோகிக்கவேண்டும்.

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

வினா:—58. நீரிழிவு ரோக சிகித்ஸை.

"ஐயா,

டயபிடிஸ் என்னும் நீரிழிவு ரோகத்திற்கு ஆயுர்வேத சாஸ்திரப்படி சிகித்ஸை எப்படி செய்கிறது என்பதை தாங்கள் தயவுசெய்து தங்களுடைய "வைத்திய கலாநிதி"யின் அடுத்த ஸஞ்சிகையில் விவரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இங்ஙனம்: தங்கள்,
N. Gopaulan, L. M. S.,
*Sub Asst. Surgeon.*

விடை:—(1) நூறுமுறை கஜபுடத்தில் பக்குவம் செய்த "சதபுடாப்ரகம் என்னும் ஔஷதத்தை நீரிழிவு வியாதிக்காரருக்குக் கொடுப்பது ஆயுர்வேத வைத்தியத்தில் ஒரு பொதுவான சிகித்ஸையாகும். (சதபுடம் என்றால் அநேகபுடம் என்றும், நூறுபுடம் என்று கூறவேண்டிய அவசியமில்லையென்றும், அப்ரகத்திலுள்ள மின்மினிப்பு முற்றிலும் ஒழிந்து நிச்சந்திரகமாய் ஆகும்வரையில் புடம்போட்டால் போதுமென்றும் சில சாஸ்திரஞ்ஞர் அபிப்பிராயப்படுகிறார்

கள். அவ்விதமே சார்ங்கதர ஸம்ஹிதையில் இதற்குச் சரியாக நூறுபுடம் சொல்லவில்லை. கஜபுடம் முதலியவற்றின் லக்ஷணங்களைக் குறித்தும் சார்ங்கதர ஸம்ஹிதையில் விவரம் காண்க.) (2) பிரமேஹ பிடகை யென்னும் மேஹக்கட்டிகள் உண்டானால் அப்பொழுது சந்திரப்ரபா குடிகையும் மகரத்வஜமும் (சந்திரப்ரபா குடிகை சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கிறது) இப்பிணியாளிக்குக் கொடுப்பது வழக்கம். (3) இதற்குப் பிரத்தியேகமான ஒரு விசேஷ சிகித்ஸா முறையைப்பற்றி 1915-ம் அக்டோபர்மீ வைத்தியகலாநிதி ஸஞ்சிகையில் "நீரிழிவு ரோகமும் அதன் சிகித்ஸையும்" என்று 31-வது முதல் 33-வது பக்கம்வரையில் நாம் எழுதியிருக்கிற வியாஸத்தையும் தயவுசெய்து ஒருமுறை கவனிப்பீர்களாக.—ப-ர்.

---

வினா 59

ஜலதோஷம்.

"ஐயா,

(1) இதனடியில் குறிப்பிடும் விஷயங்களைக் கூறி, அதற்குத் தகுந்த பதில் எழுதும்படி முன்னால் கேட்டிருந்தேன். தாங்கள் பதில் சடிதம் எழுதவில்லை. (2) என்னுடைய நண்பர் ஒருவர் மழை காலங்களிலும் குளிர்காலங்களிலும் மட்டும் சிரஸ்ஸில் நீர் ஏறிக்கொண்டு, மூக்கினால் வடிகிறதாகவும், ஒவ்வொரு நாளும் அந்த நீர் நெஞ்சில் இறங்கி கபம் அதிகரித்து இருமலுண்டாவதாகவும், கோடைகாலம் வந்ததும் இக்கோளாறுகள் தானே நிவ்ருத்தியாய் விடுவதாகவும் சொல்லுகிறார். இவ்வியாதியின் சுரூபமென்ன? (3) இதற்கு என்ன மருந்து? விவரம் தெரிவிக்கக் கோருகிறேன்."

இப்படிக்கு,

பூ. ப. செல்லத்துமார கவுண்டர்,

வைத்தியர்.

விடை:—(1) தங்களிடமிருந்து இவ்வாறு கடிதம் வந்ததாகத் தெரியவில்லை. மேலும் தாங்கள் எமதிடமிருந்து ஏதாவது பதில் கிடைக்கவேணுமானால் அதற்கு ஸ்டாம்பு அனுப்பியிருக்கவேண்டும். (2) தங்களுடைய நண்பர் ஈரம் தாக்குவதால் உடனே கபம் பிரகோபமடையக்கூடிய நிலைமை உள்ளவராயிருக்கவேண்டும். ஆகவே ஜலதோஷம் எளிதில் தாக்கி கஷ்டப்பட நேரிடுகிறது என்று கருதுகிறோம். ஜலதோஷம் அதிகரித்தால் தாங்கள் குறிப்பிடும் இலக்ஷணங்கள் யாவும் ஸம்பவிப்பது ஸஹஜம். (3) குளிர்காலங்களிலும் மழைகாலங்களிலும் இவர் ஈரத்தில் நடமாடக்கூடாது; அதிக காற்றோட்டமும் ஈரமுமாயுள்ள பிரதேசங்களில் வஸிக்கவுங்கூடாது. உடற்கூட்டுக்கு எவ்வித மாறுபாடும் ஏற்படாவண்ணம் கம்பளத்தினால் உடம்பைப் போர்த்துக்கொண்டிருக்கவேணும். தாளிஸாதி சூர்ணத்தை - முதலிலும், அடுத்தாற்போல் ச்யவனப்ராச லேஹ்யமும் தினத்திற்கு மூன்றுவேளை வீதம் உட்கொண்டு வரலாம். ப-ர்.

---

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### மதிப்புரை.

ஹ்ருதயப்ரிய:— ம-ா-ா-ஸ்ரீ புன்னச்சேரி நம்பி நீலகண்டசர்மா அவர்களால் பரிசோதிக்கப்பட்டு ம-ா-ா-ஸ்ரீ டி. நீலகண்ட சர்மா அவர்களால் வெளியிடப்பட்ட இந்த ஸம்ஸ்கிருத வைத்தியகிரந்தத்தினுடைய முதற்புஸ்தகத்தின் ஒரு ஸஞ்சிகை வரப்பெற்றோம். இந்த நூல் திருவாங்கூரில் வஸித்து காலஞ்சென்ற இராஜவைத்திய பரமேச்வர சர்மா அவர்களால் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதிலுள்ள விஷயங்கள் யாவும் அஷ்டாங்க ஹ்ருதயம், ஸுச்ருத ஸம்ஹிதை, சரகஸம்ஹிதை முதலியவற்றிலிருந்து ஏதோ ஒருவாறு எடுக்கப்பட்டதாயிருப்பதோடு, பத்தியங்கள் கூட அஷ்டாங்கஹ்ருதயம் முதலியவற்றினுடையவையாகவே இருக்கின்றனவேயன்றி, ஆசிரியர் எனப்படுபவரால் இயற்றப்பட்டவைடாயில்லை யென்பதை நாம் குறிப்பிடாமலிருப்பது ஸாத்தியமல்ல. மேலும் மூலிகைகளைப்பற்றி விவரிக்கிற கல்பத்தில் ஒஷதிகளைத் தவிர மற்ற விஷயங்களைச் சேர்ப்பதும், அதற்கு ஔஷதகல்பம் என்று பெயரிடுவதும் யுக்தமென்று நினைக்கமுடியாது. சரீர தத்துவ விஷயமாய் தற்காலத்திய பிரத்தியக்ஷமுறைகளால் அறியப்பட்டுள்ள வாஸ்தவாம்சங்களைப் புறக்கணித்து, பிராசீனக் கிரந்தங்களிலேயே ஸந்தேஹாஸ்பதம் என்று கருதப்படுகிற விஷயங்களையே இன்னும் பின்பற்றுவது தத்துவார்த்தமுணர்ந்தவர்களுக்குப் பிரியப்படாதென்றே சொல்லவேண்டும். இதைப் பிரசுரம் செய்பவர் முற்றிலும் விஷயங்களைக் கவனித்து, எழுத்துப் பிழைமுதலிய ஏராளமான ஒழுங்கீனங்களையும் விலக்கி, உபயோககரமான வகையில் வெளியிட்டிருப்பார்களானால் நன்றாயிருந்திருக்கும்.



காலெண்டர்கள்:—(1) சென்னையில் பிரபல வியாபாரிகளான S. வைத்தியா அண்ட் கம்பெனியார் மிகவும் பிரஸித்தியடைந்துள்ள ஜிண்டான் மாத்திரை ஸம்பந்தமான ஓர் அழகிய ஜப்பான் தேசத்து சித்திரப்படம் அடங்கிய காலெண்டர் அனுப்பியிருக்கிறார்கள். (2) பலவிதமான வர்ணங்கள் பொருந்திய அழகான சித்திரப்படத்துடன்கூடிய காலெண்டர் ஒன்று அமிருதாஞ்ஜனம் டெப்போவிலிருந்து கிடைத்திருக்கிறது. (3) மூர் மார்க்கெட்டில் காகிதம் முதலியவற்றின் வியாபாரியான மிஸ்டர் சூரா நரஸிம்முலுநாயுடு என்பவர் அனுப்பியுள்ள காலெண்டர் மிகவும் சிறந்தது; அதில் அச்சிட்டுள்ள பெரிய சித்திரமானது, மிக்க மனோஹரமாயிருக்கிறது. (4) தஞ்ஜாவூர் ஜில்லா சித்தர்ச்காடு என்னும் ஊரிலிருந்து மிஸ்டர் B. S. A. பிள்ளை, வைத்தியர் அவர்கள் அனுப்பியுள்ள காலெண்டரில் அமாவாஸ்யை, ஏகாதசீ முதலிய அவசியமான விரததினம் முதலானவை குறிப்பிடப்பட்டிருப்பதால் அது ஒருவாறு உபயோககரமானதே. மேற்குறிப்பிட்ட காலெண்டர்கள் வைத்தியம் அல்லது ஔஷத ஸம்பந்தமுள்ள விளம்பரத்திற்கென்று ஏற்பட்டவையாகையால் அவற்றின் வரவை நாம் வைத்திய கலாநிதியில் குறிப்பிடலானோம்.

---

### பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குச் சுகாதாரப் படிப்பு.

இந்தியாவில் படிப்பு முறையே தகுந்தவாறு சீரான நிலைமைக்குக் கொண்டுவரப்படவில்லை யென்றால், சிறுவர்களுடைய ஆரோக்கியாபிவிருத்தி விஷயம் சிறிதும் முன்னுக்கு வரவில்லை யென்பதில் ஆச்சரியமென்ன? அமெரிக்காவிலுள்ள நியூ யார்க் நகரத்துப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணாக்கர்களுடைய ஆரோக்கியாபிவிருத்தியில் சிரத்தையும், சுகாதாரத்திற்கு அவசியமான போதனாமுறையில் விசேஷ கவனமும் இப்பொழுது செலுத்தப்பட்டு வருகிறது. வியாயாமம், ஆரோக்கிய முறை முதலியவற்றைக் கற்பிக்கும் விஷயங்களுக்கெல்லாம் மேலதிகாரியாயுள்ள டாக்டர் ஸி. வார்ட் கிராம்படன் என்பவர் இம்முயற்சியில் மிகவும் சுறு சுறுப்புக்காட்டி வருகிறார். ஸ்நானம் செய்தல், வாயைக்கழுவி நிர்மலமாய் வைத்துக்கொள்ளல், உணவுகளை உட்கொள்வதற்கான ஜாக்கிரதை, வியாயாமம், உடை, நித்திரை முதலியவற்றை தினந்தோறும் ஒழுங்காக நடத்திவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கூறிய டாக்டரால் செய்யப்பட்டிருக்கின்றன. மாணாக்கர்களுக்குத் தகுந்த ஆஸனங்களை அமைப்பதிலும், அவற்றில் மாணாக்கர்களை உட்கார்த்தவேண்டிய நிலைமையைப்பற்றிய விஷயத்திலும், தேஹச்கூடு என்ன அதற்கு ஆதாரமான இரத்தம் முதலிய தாதுக்களென்ன இவற்றைக் தேஹத்திற்கு அனுகூலமான நிலைமையில் காப்பதற்கு வேண்டிய உபாயங்களையும், நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள வாஸஸ்தலங்களில் வஸித்து வருவதின் அவசியத்தையும் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்கும் ஏற்பாடுகள் உண்டு. பள்ளிக்கூடத்திலும், விளையாடுமிடங்களிலும், வஸிக்குமிடத்திற்கு அக்கம் பக்கங்களிலும், வீட்டிலும் சிறுவர்கள் நடந்துகொள்ளவேண்டிய வகைகளும், சுத்தமாயிருப்பதற்கான வழிகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. எல்லா மாணாக்கர்களுடைய நேத்திரங்களும் நன்றாகப் பரீக்ஷிக்கப்படவேண்டுமென்று நியமமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. "குழந்தைகளுடைய ஆரோக்கியமுறை காக்கப்படுவதெப்படி" என்கிற விஷயங்கள் அச்சிடப்பட்டுள்ள சிறு புஸ்தகங்களைப் பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கவேண்டியதும் அவசியமென்று தீர்மானித்து அவ்விதமே காரியமும் நிறைவேறி வருகின்றது— Medical Record of Newyork.

---

### சர்க்கரையினால் விரணங்களை ஆற்றுதல்.

வியாதிகளுடையவும் அவற்றின் சிகித்ஸைகளுடையவும் தத்துவங்களை ஆராய்ச்சி செய்வதற்கென்று ஏற்பட்டுள்ள "ஸொஸைடி ஆப் பாதலாஜிகல் ஸயன்ஸ்" என்னும் ஸங்கத்தில், டாக்டர் லிஹாஸ்ட் என்பவர், தான் அநேக ஸமயங்களில், மிருகங்களுக்கு சஸ்திர சிகித்ஸை செய்கையில், அவற்றின் விரணங்களை உப்பு நீரால் கழுவி, அப்பால் சர்க்கரையை அந்த விரணங்களின்மேல் தூவி, அவற்றை ஆற்றியதாகக் கண்டுபிடித்ததாய் சில விவரங்களைக் கூறினார். சர்க்கரையைத் தூவி வருகையில் சில நாட்களுக்கெல்லாம் விரணம் விரைவாக ஆறிவருவதைக் காணலாம். இதே சிகித்ஸையை மனிதருக்கும் சீழ்ப்பிடிக்கும் விரணங்களில் செய்து பரீக்ஷித்துப் பார்க்கவேண்டுமென்று டாக்டர் கிரோலெட் என்பவர் வற்புறுத்திக் கூறினார். அவ்விதமே மனிதருக்கும் இதையே உபயோகித்துப் பார்த்ததில் நன்றாகப் பிரயோஜனப்படுவதாகத் தெரியவந்தது. சர்க்கரைக்கு பூயாபஹம் (Antiseptic) என்கிற குணம் விசேஷமாய் உண்டென்று வெகுகாலத்திற்கு முன்பே நம்மவருக்குத்

தெரிந்து, அவ்வாறு செய்வது வழக்கத்தில் இருந்து வந்ததென்பதைமட்டும் கவனிக்கவேண்டும். சில நாட்களுக்கு முன்பு மேனாட்டு வைத்தியர்கள் சர்க்கரையை அயோடோபாரத்துடனாவது நாப்தலேனுடனாவது கலந்து விரணங்களுக்கு உபயோகித்து வந்ததுண்டு. மூன்று வருஷங்களுக்கு முன்பாக டாக்டர் G. மாக்னஸ் என்பவர், பரீக்ஷார்த்தமாகச் சர்க்கரையை விரணங்களில் உபயோகித்து நற்குணங் கண்டிருக்கிறார்.

### விஷம ஜ்வரமும் இளஞ்சூடான ஜலமும்.

டாக்டர் தியோடர் ஜாங்கெர் (Theodore Zanger) என்பவர் அடியில் வருமாறு கூறுகிறார். சுமார் 23° C. டிக்ரியுள்ள ஜலத்தில் பாதி உடம்பை ஸ்நானம்செய்து வைத்தால், குழந்தைகளுக்கு கபதோஷம் அதிகரித்து உண்டாகும் அபிந்யாஸஜ்வரத்தில் (Pneumonia) நல்ல பயன் உண்டாகிறது. அவர் மலேரியா வெனப்படும் விஷம ஜ்வரத்தினால் வருந்திய அநேகம் பிணியாளிகளுக்கு இந்த முறையைக்கொண்டே சிகித்சை செய்ததில், அதேமாதிரியாக நல்ல குணம் உண்டாயிற்று. ஒரு நீளமான தொட்டியில் வெந்நீரை வேண்டியவளவு ஊற்றி அந்த ஜலத்தில் பிணியாளியின் முதுகு, கைகள், கால்கள் இவற்றில் பாதி அமிழ்ந்திருக்கும்படி செய்து, சற்றுநேரத்திற்கெல்லாம், மார்பு முதலான மற்றொரு பாதி அமிழும்படி மாற்றிப் படுக்கச் செய்யவேண்டும். இவ்வாறு ஜலத்தில் படுத்திருக்கும் பிணியாளியின்மீது ஜலத்தை மெதுவாக கையில் ஊற்றியூற்றி ஐந்து நிமிஷகாலம் வேகமாகத் தேய்க்கவேண்டும். இவ்வாறு ஸ்நானம் செய்து வைப்பதானது வியாதியின் பலமான தாக்குதலைத் தடைசெய்து அதை நிவ்ருத்தி செய்தும் விடுகின்றது. பிணியாளிக்கு இருந்த பலஹீனமும், இரத்தக்குறைவான நிலைமையும், பாண்டுரோகமும், இருதயத்தின் பலக்குறைவும் வெகு சீக்கிரத்தில் நிவ்ருத்தியாவதைப் பார்த்தால் ஓர் இந்திரஜாலம்போலும் தோற்றும். ஸாதாரணமாய் இப்பிணியாளிகளுக்கு இவ்வாறு வாரத்திற்கு மூன்று முறை ஸ்நானம் செய்துவைப்பது போதுமானது; வியாதி பலமாயிருந்தால் வாரத்தில் ஐந்தாறு தடவையும் ஸ்நானம் செய்துவைக்கலாம்.—Practical Medicine.

### ஆரோக்கியக் குறிப்புகள்.

ஆனந்த ஜீவநமென்றால் ஆரோக்கியமேயாகும்.

தோன்றியவாறு துப்பியுமிழ்தல் பொதுஜனத் தீமையாகும்.

ஆயுளைக் குறைக்கக்கூடிய தொழில் வீண் தொல்லையேயன்றி வேறல்ல.

ஆரோக்கியம் தெம்பை அளிக்கும், வியாதி விஸனத்தைத் தரும்.

கிராம சுகாதாரம் பட்டணவாஸிகளின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாததாம்.

விடியற்காலத்தில் சீத ஜலஸ்நானம் சரீரஸுகத்தைச் சீர்படுத்துந் தன்மையது.

சுத்தமான ஜலம், சுத்தமான உணவு, சுத்தமான வாஸபூமி, நிர்மலமான உடை இவை யனைத்தும் ஆரோக்கியத்திற்கு அவசியமானவை.

### மலபந்தத்தில் கமலாக்கிச்சிலியின் புறணி.

ஸாதாரணமாய் உரித்து எறிந்துவிடப்படுகிற கமலாப்பழத்தோலை பிரெஞ்சு இராணுவஸ்தலங்களில் நாட்பட்ட மலபந்தத்தைப் போக்க வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். இவ்வித கிச்சிலியின் தோலை ஒருமணி ஸாவகாசம் கொதிக்கவைத்து, அக்கஷாயம் சில திரவமான மிச்ரௌஷதங்களுக்கு வாஸனையேற்றுவதற்கும், வாய் அலம்புவதற்கும் உபயோகிக்கப்படுகிறது. கொதிக்கவைத்து எடுத்த அக்கிச்சிலிப் புறணியை தாராளமாய் மென்றுப் புசிக்க உபயோகிக்கிறார்கள். குடலின் உட்புறங்களை இது நன்றாகத் தூண்டி அவற்றின் வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்வதுமல்லாமல், பித்தநீர் சுறப்பதையும் உத்தீபநம் செய்யக்கூடியதாயிருக்கிறது.—Life and Health.

### கிணறுவெட்டப் பூதம் கிளம்பியது.

பனாமா கால்வாயைத் திறந்து வைத்ததானது, உலகத்தில் அனைவராலும் கொண்டாடப்பட்ட விஷயமேயாம்; இது ஏற்பட்டதனால் கீழ்த்தேசங்களுக்குச் செல்வதற்கான வழி ரொம்பவும் குறுகிவிட்டது. ஆனால் இக்கால்வாய் திறக்கப்பட்டதால் இந்தியாவுக்கு அநுகூலங்கள் ஏற்படுவதற்குப் பதிலாக அபாயம் ஒன்று ஸம்பவிக்கக்கூடுமென்று தகுந்த முகாந்தரத்தின் மேல் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அபாயம் ஸ்டெகோமியா (Stegomyia) என்னும் கொசுவின் மூலமாய் கல்கத்தாத் துறைமுகத்தில் பீதஜ்வரம் (Yellow fever) என்கிற ஒரு பொல்லாத விஷஜ்வரம் வந்து சேருவதால் நேரிடக்கூடியது. இப்புதிய அபாயம் ஸம்பவிக்காதபடி முன் ஜாக்கிரதைகளைக் கவனித்து ஏற்ற ஏற்பாடுகளைத் தமக்கு நன்கு சிபார்சு செய்வதற்காக வங்காள கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டியை நியமித்திருப்பதாய் அறிகிறோம்.

### பாலுண்ணியும் பாதரஸமும்.

பாஸ்டன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் சார்லெஸ் ஜே. வொய்ட் என்பவர் அடியில் வருமாறு கூறுகிறார்:—"மஞ்சள் அல்லது பச்சை நிறமான அயோடைட் ஆப் மெர்குரி (Mercurous iodide) என்னும் இரஸங்கலந்த ஔஷதத்தைப் பாலுண்ணியுடைய சிறுபிராயமுள்ளவர்கள் $\frac{1}{8}$ கிரைன் அளவில், தினத்திற்கு மூன்றுவேளை வீதம் உபயோகித்துவரலாம். சில கேஸுகளில் வீரம் எனப்படும் வெள்ளைவீரத்தை 1/16 கிரைன் வீதம் காலையிலும் இரவிலும் உபயோகித்துவந்தால் அதேவிதமான குணம் உண்டாகும். இந்த சிகித்சையைப் பிரயோகித்த பதினொரு பேர்களில் ஒருவனைத் தவிர மற்ற அனைவருக்கும் பாலுண்ணிகள் நிவ்ருத்தியாய் விட்டதானது எனக்கே மிகவும் விந்தையாகத் தோற்றியது."—Practical Medicine.

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Pandit M. Duraiswami Aiyangar,
*Ayurveda Bhushan.*

பத்திராதிபர்:
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 4. Vol IV. | நள ஹு கார்த்திகைமீ—மார்கழிமீ. DECEMBER—1916. | ஸஞ்சிகை 4. No. 4.

## PREVENTION OF INFANTILE PARALYSIS.

### குழந்தைகளுக்குண்டாகும் பார்ச்வ வாயுவைத் தடுத்தல்.

BY R. NARAYAN, L. M. & S.

மிகவும் நுட்பமான சில கிருமிவிசேஷங்கள் குழந்தைகளுக்கு உண்டாகும் பார்ச்வவாயுவுக்குக் காரணமாகின்றன. அவை, அவ்வியாதியினால் வருந்தும் குழந்தைகளுடைய சளியிலும், உமிழ்நீரிலும், மலத்திலும் காணப்படுகின்றன; மேலும் இவ்வியாதியினால் பீடிக்கப்படாத சில குழந்தைகளுடைய உமிழ்நீரிலும், சளியிலுங் கூட இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; இக்குழந்தைகள் இப்பிணியைப் பரவச்செய்வதற்கு மட்டும் காரணங்களாயிருக்கின்றன. இத்தொற்று வியாதி பரவுவதற்கான எல்லா நிலைமைகளும் நன்கு அறியப்படவில்லை; ஆனால் இவ்வியாதியினால் வருந்துகிற குழந்தைகளிடமிருந்து ஆரோக்கிய நிலைமையிலுள்ள வேறு குழந்தைகளிடம் இக்கிருமிகள் பரவாமலிருப்பதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் வியாதி ஸம்பவிக்காமலிருக்கும்.

இக்குழந்தைகளுடைய பார்ச்வ வாயு என்பது ஸமீபகாலத்தில் ஏற்பட்ட நூதனமான வியாதியல்ல; வெகு காலத்திற்கு முன்பே இந்த ரோகம் ஆங்காங்கு ஒவ்வொரு குழந்தைக்கு வருவதுண்டு; ஆனால் இது தொற்றுவியாதி யென்றும், கிருமிகளால் ஸம்பவிக்கிறதென்றும் ஸமீபகாலத்திலேயே நிச்சயமாகத் தெரியவந்தது. இது அபாயகரமான நோய் என்பது என்னமோ வாஸ்தவம்; ஆனால் தகுந்த முன்னெச்சரிக்கையோடு இருந்துவந்தால் இக்கொள்ளை நோய் குறைந்துவிடும்.

இப்பெருவாரி வியாதியைத் தடுப்பதற்கான முறைகள் யாவும் நகரங்களுடையவும், ஸம்ஸ்த்தானங்களுடையவும், உடன்படிக்கை மேற்பட்ட இராஜ்யங்களுடையவும் சுகாதார அதிகாரிகளின் வசத்தில் இருக்கின்றன. தொற்று வியாதிக்காரர்கள் ஏறிச் செல்லும் மரக்கலங்களிலிருந்து பிணியாளிகளைப் பிடித்து, அவர்கள் மற்றவரிடம் சேராதவிதமாய் ஏதேனும் ஏற்பாடுகள் செய்யலாம். ஒரு பிணியாளி ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவுக்கோ ஸம்ஸ்த்தானத்திற்கோ செல்வதாயிருந்தால் அப்பிணியாளி மற்றக்குழந்தைகளோடு சேராமலிருக்கும்படி ஏதேனும் உபாயமொன்று ஏற்படுத்தவேண்டும். மேலும் யாத்திரைசெய்ய வரும் தமது சொந்த நன்மையைக் கருதி தமது வியாதிகொண்ட குழந்தைகள் மற்றக்

குழந்தைகளிடம் சேராதபடி அவற்றை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்வதும் அவசியமாம்.

இந்த வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்கள், தேஹத்திலிருந்து பொசியும் சில திரவங்களின் மூலமாய் நேராகவோ வேறு உபகரணங்களைச் சார்பாகக் கொண்டோ பரவுகிறதென்பது பெரும்பாலும் உண்மையான விஷயம். ஒவ்வொரு ஜாதிக்குழந்தைகளிலும் ஒன்றினிடமிருந்து மற்றொன்றினிடம் அதனதன் சரீரக் கசிவுநீர் எவ்வெவ்வாறு ஸம்பந்திக்கக் கூடுமென்பதைக் கவனித்துக்குறிப்பிடவேண்டும். அவ்வாறு தெரிந்துக் கொண்டால் நோய் கொண்ட அக்கசிவுநீர்களை ஒருவாறு மற்றவரிடம் பற்றிவிடாதபடி தடுத்துவிடலாம். ஒரு குழந்தைக்குப் பால் போட்டுவதற்கு உபயோகிக்கும் பாலாடை அல்லது சுங்கானை மற்றொரு குழந்தைக்கும் உபயோகிப்பது ஸாதாரணமான ஒரு வழக்கம்; அவ்விதமே குடிக்கும் பாத்திரங்களையும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி உபயோகிப்பதும் ஒரு துர்வழக்கமாகும். இவ்வழக்கம் முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும். குழந்தைகளுக்குப் பாலூட்டும் கண்ணாடிப் பாத்திரங்களையும் பாலாடை முதலியவற்றையும் முதலில் உழமண்ணுப்பு அல்லது ஸோடாவைப் போட்டுக் கழுவி, கொதிக்கும் ஜலத்தில் சிறிது நேரம் அமிழ்த்தி வைத்திருக்கவேண்டும் பார்ச்வவாயுவால் வருந்தும் குழந்தைகளுடைய எச்சில் முதலியவற்றில் உட்கார்ந்த ஈக்கள் வியாதியில்லாத குழந்தைகளிடம் ரோகத்திற்கு ஸம்பந்தப்பட்ட கிருமிகளை நேராகக் கொண்டு போய் சேர்ப்பதற்கு ஸாதனங்களாயிருக்கின்றன. ஆகையினால், ஈக்களையும் கொசுக்களையும் ஒழிக்க ஏற்பாடுசெய்வதும் இவ்வியாதியைத் தடுப்பதற்கேற்ற முறைகளில் ஒன்றாகும். அநேகவிதமான தொற்றுவியாதிகளுக்கு ஆதாரமான தெருப்புழுதிகள் வீடுகளுக்குள் வந்து சேர, அதன் மூலமாகவும் குழந்தைகளிடம் இவ்வியாதி பரவக்கூடுமாகையால், அப்புழுதிகள் வீதிகளிலிருந்து கிளம்பாதபடி ஜலம் ஊற்றி வீதிகளைச் சுத்தமாகவைக்கவேண்டும். வீதிகளையும், வாசல்களையும், புறக்கடைகளையும் ஜலம் முதலியதைத் தெளித்து, நன்றாகக் குப்பைகளைக் கூட்டி அப்புறப்படுத்தி, வீடுகளையும் மெழுகிச் சுத்தமாக வைத்துவந்தால் ஈக்களும் விருத்தியாக வழியிராது.

உணவுப் பொருட்களையெல்லாம் பரீக்ஷித்து வரவேண்டும். முக்கியமாய் பால் ஸப்ளையும் அரிசிமுதலிய முக்கியமான சிலவஸ்துக்களின் ஸப்ளையும் சுகாதாரத்திற்குக் கேடுண்டாக்காதநிலைமையில் இருக்கின்றனவாவென்று கவனிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம். தொற்றுவியாதி பரவியுள்ள பிரதேசங்களில் குழந்தைகளை அனுப்பக்கூடாது. ஒரு குழந்தை வியாதியினால் பீடிக்கப்படுவதாகத் தெரிந்தால், அதை மற்றக் குழந்தைகளோடு விளையாட்டிற் பழகும்படி விடக்கூடாது. மேற்கூறிய வியாதியைத் தடுக்கும் முறைகள் குழந்தைகளின் பார்ச்வவாயுவுக்கேயன்றி, இதர தொற்றுவியாதிகளுக்கும் உபயோகமான முறைகளாகும்.

பார்ச்வவாயுவினால் வருந்திய குழந்தைக்கு அந்தநோய் நிவர்த்தியானபிறகு கூட சில வாரங்கள் வரையில் அக்குழந்தையினிடம் வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்கள் பற்றியிருக்கலாம்; ஆகவே அக்குழந்தை வியாதி நிவாரணமான பிறகும் சிலவாரங்கள் வரையில் அந்த வியாதியை வேறு குழந்தைகளிடம் பரவச்செய்யக்கூடும். ஆகையினால் இந்தவியாதி வந்த குழந்தைகள் ஆறு அல்லது எட்டு வாரங்கள் வரையில் வேறு இடங்களுக்குப் போகக் கூடாதென்று சுகாதார அதிகாரிகள் கட்டாயமாய் தடுத்துவிடலாம். குழந்தைக்கு வியாதி நிவ்ருத்தியான சிலவாரங்கள் கழித்து அக்குழந்தையிருந்த வீட்டை கிருமிஹரமான திராவகங்களால் கழுவி சுத்தம் செய்யவேண்டும்.



## HABITS AND THEIR EFFECTS

### பழக்கத்தின் பயன்.

BY T. A. AGASTYA SARMA,
*Physician and Surgeon*

(முன் தொடர்ச்சி)

மற்ற உறுப்புகள்:—“நிகோடீனோடு கூடிய உத்திரேககரமான புகையானது சுவாஸப்பைகளின் உள்ளறைகளுக்கும் நுண்ணிய குழல்களுக்கும் மிக்க தீமை பயக்கததக்கதென்பது திண்ணம்” என்று டாக்டர் ஸீமூர் டெய்லர் (Dr Seymour Taylor) என்பவர் கூறியிருக்கின்றார். அந்தக் கூற்றை நாமெல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதாகவே இருக்கின்றது.

புகையிலைப் புகையிலுள்ள பைரிடீனினாலும் நிகோடீனினாலும் சுவாஸ நாளங்களெல்லாம் கெட்டுப்போகின்றன; தொண்டையிலும் தமரகத்திலும் (Wind-pipe) அழலையேற்படுகின்றது; கடுகரப்புண்டாகின்றது; கோழை கட்டுகின்றது; ச்வாஸக்குழல்களெலலாம் எப்பொழுதும் அழன்று அறுவெறுப்புக் கிடமாகின்றன.

அடிக்கடி அந்தப் புகையினால் உத்திரேகத்திற் கிடங்கொடுத்தால், “மிக்க திடமான தேகமும் கெட்டுப்பாழாகும” எனறு டாக்டர் டெய்லர் சொல்கின்றார். அந்தப் புகையினால் தொண்டையும் மூச்சுப்பைகளும் வறள்கின்றன; அந்த வறட்சியினால் மூச்சுவிடுவது கஷ்டப்படுகின்றது; இருமல் எழுகின்றது; தாஹம் தலை காட்டுகின்றது; மதுபான விருப்பம் மேலிடுகின்றது.

புகையிலைப் பழக்கத்தினால் ஒருவன் சுவாஸகோச வியாதிக்கு ஆஸ்பதமுள்ளவனாகிறான் என்பது ஷ்னீடர் (Dr. Schneider) என்னும் வைத்திய சாஸ்திரியின் மதம். “ஜெர்மானியருக்குச் சுவாஸ கோச வியாதிகள் வருவதற்குக் காரணம் அவர்களுக்குள்ள புகைப்பித்தேயாகும். பதினெட்டுவயதுக்குமேல் இருபத்தைந்து வயதுக்குள் மரிப்பவர்களுள் சரிபாதி புகையிலைப் புகையினால் சரீரத்தைப் பாழாக்கிக் கொண்டவர்களாவார்கள் என்று பிரதான வைத்தியர்களும் தேகதத்துவ சாஸ்திரிகளும் கணக்கிட்டிருக்கிறார்கள். புகையிலையை வழக்கமாக உபயோகிப்பதனால் அனேகமாகக் கண் கெடுகின்றது; இந்தக் காரணத்தினால், அங்கிலேயருக்குத் தொப்பி இன்றியமையாததுபோல ஜர்மானியருக்கு மூக்குக்கண்ணாடி இன்றியமையாத அங்கமாயிருக்கின்றதெனக் கூறலாகும்” என்று அவர் எழுதியிருக்கின்றார்.

புகையிலையின் விஷத்தினால் பலவகையான நரம்பு நோய்கள் உண்டாகின்றன. இதுவன்றி, நெடுநாளாக ஏறிக்கொண்டுவரும் விஷங்களெல்லாம் செய்வதுபோலவே புகையிலையும் இரத்தத்தைச்சோஷிப்பிக்கின்றது. இது புகை குடிப்பவர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமாகும். புகை குடிக்கிறவர்களுக்கு க்ஷயரோகம் வருவதற்கு ஆஸ்பதம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் இதுவே.

“புகையிலையானது தமனி ஜாலத்துச் சக்தியை ஆழ்த்திக் குலைக்கின்றது. அதன் பிரபாவம் மிகப் பெரிதாக இருக்கின்றது. புகை குடிப்பதை யொழித்தவர்கள் சிலர், ஐம்பதுக்குமேல் அறுபதுவயதுக்குட்பட்டவர்கள், காலையில் அவர்களுக்குத் திடனளிக்கும் புகை குடியாதபோது உடம்பெல்லாம் நடுக்கலெடுத்து, நாக்கு உளறுவதைக் கண்டிருக்கின்றேன். அவர்கள் மதுபானிகளைப்போலவும், சித்தப்பிரமை கொண்டவர்களைப் போலவும் உழன்றார்கள்” என்று டாக்டர் நார்மன் கீர் (Dr. Norman Keerr) என்பவர் எழுதியிருக்கின்றார்.

புகையிலை அனுவசியமானது:— புகையிலையினால் ஸந்தான விருத்தி குறைவுபடுகின்றது; பெரும்பாலும் ஸந்தானமில்லாமலே போகின்றது. இடங்காணாமையால் இவ்விஷயத்தை விவரித்துரைக்க முடியவில்லை. புகையிலைப்

பயிரிடுவதிலும், சுருட்டுகள், பீடிகள் முதலியன செய்யும் சாலைகளிலும் வேலையிலமர்ந்திருப்பவர்களுடைய குடும்பங்கள் மிகச் சிறுத்திருக்கின்றன. இவ்விஷயத்தை டாக்டர் ஹெர்பர்ட் H. டிட்ஸ்வெல் (Dr. Herbert H. Tidswell) என்பவர் எழுதியுள்ள "புகையிலைப் பழக்கம்" (The Tobacco Habit) என்னும் புஸ்தகத்தில் தெளிவாகவும் திறமாகவும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

மதுஸாரமும் அபினியும் அனாவசியகமான விஷச்சரக்குகளென்று எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வார்த்தை புகையிலைக்கும் நன்கு அமையும்; ஏனெனில், புகையிலையானது எந்தத் தொழிலாளிக்கும் அவசியமாயிருக்கவில்லை. கைவேலைக்காரனுக்கும் வேண்டாம், குமஸ்தாவுக்கும் வேண்டாம், உழவனுக்கும் வேண்டாம், கடலோடிக்கும் வேண்டாம். ஆரோக்கியமாயிருக்கப்பட்டவனுக்கு எந்தத் துரப்பியாஸமும் அனாவசியகமேயாகும்; அப்படியே புகையிலையும் அனாவசியகமான விஷச்சரக்காகின்றது.

புகையிலையைப் பற்றியுள்ள தீமையான அம்சங்களையெல்லாம் ஒழித்து அதனைச் சிலாகித்துச் சொல்வதெனினும், அது அவசியமான சரக்கென்று சொல்வது இயலாது; அது அதிகப்படியானதென்றே சொல்லவேண்டும். அப்படிப்பட்ட அதிகச் செலவு செய்வது பணம் நெருக்கிடையாயிருக்கும் இந்தக்காலத்தில் நமக்குக் கட்டாது.

சரீரத்திற்கேனும் மனத்திற்கேனும் மதுஸாரம் வலிமையூட்டுகின்றதோ? இல்லையென்பது எல்லாருக்கும் தெரியும். அதுபோலவே புகையிலையும், வேலை செய்பவனுக்கு உடல் வலிமையேனும் உள்வலிமையேனும் ஊட்டத்தக்கதன்று. அவ்விரண்டு சரக்குகளும், அவைகளைச் சேவிப்பவர்களுடைய தேகத்திடனையும், மனத்திடனையும், நீதிநெறியையும் அழித்துப் பாழாக்குகின்றன. புகையிலைப்புகை குடியாதவர்கள் சற்று நீடித்து வாழ்கிறார்களென்று டாக்டர் ஸீமூர் டெய்லர் ஒப்புக்கொள்கிறார்.

புகையிலையானது நோவுகளைத் தணிக்கிறதென்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படித் தோன்றுவது எதனாலெனின், புகையிலையானது நரம்புகளில் சுரணையைக் கெடுத்து விடுகின்றது; அதனால் நோவுதெரிவதில்லை. உண்மை இப்படியிருப்பதனால், புகையிலையானது உபசமனகாரியென்று கொள்ளக் கூடாது; புகையிலையினால் ஏற்படும் நோவின்மையென்பது ஒருவகையான திமிர்ப்பு (Paralysis) என்று கொள்ளல் வேண்டும். தினந்தோறும் அதனை உபயோகிப்பவரின் நரம்புகளின் வன்மை குன்றும், மூளையின ஆட்சி சிதைவுறும். அனேகருக்கு மனச்சக்தி (Will-power) என்பது ஏற்கனவே மிகக் குறைந்திருக்கின்றது; நரம்புகளின் பலத்தைக் கெடுத்து அதனால் மனச்சக்தியை மற்றும்பலவீனப்படுத்துவது தகுதியன்று. நரம்புகள் சுரணையற்றுத்திமிர் கொள்வதனால் மூளைக்குரிய பெரிய சக்திகளெல்லாம் கெட்டுப்போம். மதுஸாரம் உட்கொள்பவனைப் போலப்புகை குடிப்பவனும் அதனால் விளையுந்தீமையை உணர்கிறானில்லை; ஏனெனில், புகையிலை அவனுடைய உணர்ச்சியைக் கெடுத்து விடுகின்றதன்றே? உள்ளதுரைப்பின், அவன் நிகோடீன் மயக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றான்; அந்தமயக்கம் குறைவாகவோ நிறைவாகவோ இருக்தலாம்; எப்படியானும் அவன் நிகோடீன மதத்துக்கொண்டவனென்பது திண்ணம். நிகோடீன் மதத்துக்கும், மது சாரமத்துக்கும், அபினிமத்துக்கும் அதிக வித்தியாஸமில்லை. மதுஸாரம் குடிப்பவர்களுக்கு உண்டாவது போன்ற மயக்கம புகை குடிப்பவாகளுக்கும உண்டாகலாம்.

பரிமிதம்:—பரிமிதமாவது என்ன? அபரிமிதமாவது என்ன? விஷச்சரக்கில் இந்தவித்தியாஸம் வைக்கலாமோ? கண்கெட்டபிறகே சூரிய நமஸ்காரம் செய்யவேண்டுமா? ஜனங்களெல்லாரும் திடனழிந்து நிலை குலைந்து முற்றி



லும் பாழடைந்தபிறகே புகையிலை தீமையான வஸ்துவென்று அதனை நிக்கிரஹிக்க வேண்டுமா? அப்படிப்பட்ட கடும்பயனைக் கண்ணாறக் காணுமாட்டும் காத்திருக்கவேண்டுமா? அந்த விஷ மூலிகையை உபயோகிப்பதற்கு ஆதாரமாக நல்ல காரணமொன்றை எடுத்தோதத் தக்கவர்களை இதுகாறும் கண்டிலேன், கேட்டுமிலேன். புகை குடிக்கப் பழக்கட்டுமாவென அதனிற் பழக்கமுள்ள நண்பர்களை நான் கேட்டபோது, அந்தப் பழக்கம் செய்து கொள்ளவேண்டாமென்று அவர்கள் எனக்குப் புத்தி கூறுகின்றார்கள்; அந்தப்பழக்கத்தைத் தவிர்த்திருக்கவில்லையேயென அவர்களிலனேகர் துக்கிக்கின்றார்கள்.

இவ்விஷயத்தில் புகை குடிக்கும் வழக்கமுள்ள வைத்தியனுடைய புத்திவாதத்தை ஏற்றுக்கொள்வதும் சங்கைக்கிடமானதே. ஏனெனில், அவன் ஒருவாறு புகையிலையினிடத்துப் பக்ஷபாதம் உள்ளவனாவன்; அதன் தீக்குணங்களை புகை குடியாதவன் காண்பது போல, தெளிவாக அவன் காணமாட்டாதவனாகலாம். அன்றியும், என்ன சீர்கேடு நேர்ந்திருப்பினும், அந்தச் சீர் கேட்டை அந்த வைத்தியன, புகையிலையைத் தவிர மற்ற எந்தக் காரணத்திற்கேனும் உரிமையாக்கிப் பேசலாம்.

"புகையிலையை உபயோகிக்கும் வழக்கத்தினால் தேஹத்திலேனும், மனத்திலேனும், நன்னெறியிலேனும் ஊனப்பட்டு உழன்று வருவோர் ஆயிரக்கணக்காக இருக்கின்றார்கள் கண்ணைத் திறந்துகொண்டு உலகத்தில் விவகரிப்பவனெவனும் அவர்களைக் கண்ணுறாதிருக்க முடியாது. அப்படியாயின், புகை குடிக்கும் விஷயத்தைப்பற்றி இந்தச் சாக்ஷியங்களினால் ஏற்படுவது என்ன? புகை குடிப்பது நன்றென்றுரைக்கும் புகைகுடிகாரன் எவனோ ஒருவன் இருக்கலாம்; புகை குடிப்பவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் அந்த வழக்கம் கெட்டதென்று தாங்கள் உண்மையில் நம்புவதாகத்திடமாகக் கூறுகிறார்கள். இந்தத் தீப்பழக்கம் தனக்கு ஏற்பட்டதைப் பற்றித் துக்கிக்காத புகைகுடியன எவனையும் யான் கண்டிலேன்; ஸ்வஸத புத்தியில் இருக்கும்பொழுது புகைகுடியன் அதன் தீமையை உணர்ந்து துக்கிக்கின்றான். விடாப்பிடியாகப் புகைகுடிப்பவாகளுக்கு அங்கக் கூறு சீர் குலைவதும பற்பல ரோகங்கள் உண்டாவதும திண்ணமென்று பிரத்தியக்ஷமாகக் கண்டுளோம்" என்று டேவிட் ஜான்ஸன் (David Johnson M. R. C. S.) சொல்கின்றார்.

ஸால்வேஷன் ஆர்மி என்னும் கிறிஸ்து மதச் சாகையாரில் 80,000 ஜனங்கள் புகையிலைப் புகையையும மதுபானத்தையும விலக்கிச் சுகமாக வாழ்கின்றார்கள. அதுபோலவே ஸெவெந்து டே அட்வெண்டிஸ்ட் (Seventh Day Adventists) எனும ப்ராடெஸடெண் (Protestant) கிறிஸ்துவர்கள 130,000 ஜனங்களும் அவ்விரண்டு கெட்ட வஸ்துக்களையும ஒழித்து ஆனந்தமாக இருக்கிறார்கள்; ருஷ்யாவிலும கானடாவிலும் உள்ள Doukhbors எனும் ஜாதியாரும அவைகளைத் தவிர்த்து ஆரோக்கியமாக இருக்கின்றார்கள.

புகையிலைப்பழக்கம்: அதனை முறிக்கும் முறை:—புகையிலையை அதிகமாய உபயோகப்படுத்துவதனால் மானிடதேகம் சிதைவுறுவது திண்ணமாதலின், அந்தப்பழக்கத்தை ஓரெல்லையில் தவிர்க்கவேண்டியது அவசியமென்று எவரும் ஒத்துக்கொள்வர். ஆனால எம்மட்டும் அந்தப் பழக்கத்தை வளர்க்கலாம, அதில் அபாயமான பரிமாணம யாது, எந்தப பரிமாணத்தைக் கடந்துபோவது பித்தாகும்? கண்பார்வை குன்றுமளவும புகைகுடித்துப் பின்னர் அந்தப பழக்கத்தைத் தவிர்க்க வேண்டுமா? நாடியோட்டம மெலிந்து ஒழுங்கீனப்பட்ட பிறகு புகை குடிப்பதை நிறுத்த வேண்டுமா? வயிறுதப் பொருமுமளவும பொறுத்துப் பின்னர்ப் புகைபொல்லாதென்று

விடவேண்டுமா? தொண்டையழன்று கரகரப்பதைக் கண்டு கைவிடவேண்டுமா? நரம்பு ஜாலங்கள் நெகிழ்ந்து நார்போல் துவண்ட பிறகு நற்புத்தி நாடவேண்டுமா? உறக்க மற்று உழன்று ஒருத்தலைநோய் முதலியவற்றால் வாடி வருந்தியபிறகு அவ்வழக்கத்தை ஒழிக்கவேண்டுமா? அல்லாது, அங்கம் குலைந்து கட்டழியுமுன்னரே, ஆரோக்கியம் குன்றுமுன்னமே நிறுத்தவேண்டுமா? கடைசியிற் சொன்னதுபோல முன்னறிவுகொண்டு அப்பழக்கத்தை முறிக்க வேண்டுமாயின், எப்பொழுது, எந்நிலையில், எவ்விடத்தில் முறிக்க வேண்டும்?

புகைகுடிப்பவன் உள்ளிழுக்கும் மூச்சுடன் அந்தப்புகையின் வேகம், அவன் அறியாமலே, சுவாஸப்பைக்குள் புகுகின்றது; புகை உட்கொள்ளவேண்டுமென்று அவன் விரும்பி உறிஞ்சாவிடினும், அது மூச்சுடன் கலந்து போகின்றது. சுவாஸப்பைக்குள் நுண்ணிய யந்திரஜாலங்கள் மிகுதியும் உண்டு. மூச்சுடன் உள்ளிழுக்கும் பிராணவாயு அந்த நுண்ணிய யந்திரஜாலங்களின் வழியாக இரத்தத்தில் பிரவேசித்து அதனைச் சுத்திசெய்து பிராணனைக் காப்பாற்றுகின்றது. இவ்வற்புதமான யந்திரஜாலங்களில் பொல்லாப்புகையின் பாழ்வேகம் தாக்குவதனால் இரத்தத்திற்குப் பெருந்தீங்கு நேரிடுகின்றது. பிராணாதாரமாயுள்ள இரத்தக்கால் சுத்தப்படாமல் விஷமித்துப் போகின்றது. இவ்வாறு நஞ்சூட்டப்பெற்ற இரத்தக் கால்வாய்களின் வழியாகப் புகையிலையிலுள்ள விஷாம்சங்கள் தேகமெங்கும் வியாபிக்கின்றன.

இரத்தத்தின் இயற்கைக்குணம் மாறிப்போகின்றது; அனுவேதன நாடிகளின் கண்ணறைகள் அந்தப்புகையின் வேகத்தினால் பிரகோபிக்கின்றன; பிறகு அவை அடங்கி ஓய்ந்து ஆழ்கின்றன. இரத்தத்தின் ஆதாரத்தைக்கொண்டு சுத்தியாகி வளர்ச்சியுறும் அங்கங்களெல்லாம் அந்த இரத்தத்தில் ஏற்பட்ட அசுசியின பயனை அனுபவிக்கின்றன. எவரேனும் இவ்வாறு தம்மைத் தாமே கெடுத்துக்கொள்ள இசைவரோ? அதனால் புகையிலைப் பழக்கப் பிரிவினை ஏற்படுவதற்குற்ற காலம் அதனால் தேகம் ஊறுபடும் முன்னரேயாம்.

நெடுநாளாக நான் மிதமாகப் புகைகுடித்து வருகின்றேன்; அதனால் தீமையெதுவும் எனக்கு ஏற்படவில்லை; என்றொருவன் சொல்லக்கூடும். புகையிலையினால் தேகம் கெட்டதா, இல்லையா என்னும் விஷயத்தை நிதானித்தறிந்து கூறுவதற்கேற்ற அதிகாரி அந்தப் புகை குடிப்பவனே யாவனோ? நரம்புகளின் நுண்ணுணர்வைக் கெடுப்பது புகையிலைப் பிரயோகத்தின் பயன்களுள் ஒன்றாம். ஒரு மூச்சுப்புகை இழுப்பதனால் பசியடங்கியதுபோலத் தோற்றுவது இதனாலேயாம்; அலைவுற்ற மனம் அமைவுள்ளதுபோலத் தோற்றுவதும் இதனாலேயாம். புகையிலையின் வேகம் தாக்கிய பரிசநரம்புகள் உண்மைநிலையை நமக்கு உணர்த்தக் கூடாதவைகளாகின்றன. புகைகுடிப்பவனது பரிச நரம்புகள் நம்பத்தக்கவையல்ல; அவை உண்மையை உணர்த்தத்தகுந்த வேவுகாரர்களல்ல: புகையிலைத்தாக்கத்தினால் தன் தேகம் கெடுகின்றதென்று அவன் தெரிந்துகொள்வதில்லை. அதனாற் கெடுதி முதிர்ந்து வெளிப்படுகிறவரையில் அவன் தெரிந்துகொள்வதில்லை. (தொடரும்)

---

## THE DIETETIC VALUE OF ORANGE.

## கமலாக்கிச்சிலியின் ஆஹார ஸம்பந்தமான மேன்மை.

BY V. RAMANUJA CHARI,
*Medical Practitioner,*

கமலாக்கிச்சிலி குணத்திலும் விலையிலும் உயர்ந்த வஸ்து. ஆனால் அதை தினப்படி உணவுகளில் ஒன்றாகப் பாவிப்பது அரிது. எப்பொழுதாவது விசேஷ தினங்களில் அது உபயோகிக்கப்படுகிறது. அல்லது எவரேனும் அந்தஸ்துள்ளவரிடம் போனால் குழந்தைகளைக் கண்டால் அப்பொழுது இக்கனியை அரும்பொருளாக மதித்துக் கொடுக்கிறார்கள்.



நம்மவரில் பெரும்பாலோரும் பதார்த்தங்களுடைய அல்லது காரியங்களுடைய உயர்வு தாழ்வுகளைக் கவனிப்பதில்லை. ஒருவாறு பழக்க வழக்கங்களையே பின்பற்றுவதான ஒரு தாக்ஷிணியத்திற்கு அநேகர் அடிமைகளாயிருக்கின்றனர். கமலாக்கிச்சிலி முதலிய சிறப்பு வாய்ந்த கனிவர்க்கங்களை அன்னம் முதலியதற்குப் பதிலாக நாள்தோறும் உபயோகிக்கலாம் என்றால் எவரேனும் அவ்விதம் செய்ய முன்வருவார்களா? "குட் ஹௌஸ் கீபிங்" என்னும் பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கும் சில குறிப்புகளில் பின்வருமாறு கூறுகிறார்:—"கமலாக்கிச்சிலியை ஆங்கிலேயர் பெரும்பாலும் டிசம்பர்முதல் ஏப்ரல்மாதம் வரையிலுமே அதிக விலையாவது கொடுத்து வாங்குவது வழக்கம். இதரகாலங்களில் அது எவ்வளவு மலிவாகக் கிடைத்தபோதிலும் உபயோகிக்கும் வழக்கமில்லை. அதற்குள்ள சிறப்பையும் உபயோகத்தையும் கவனிப்பார்களானால், அவ்விதம் செய்யாமல் என்றைக்குமே கமலாக்கிச்சிலியை மிகச் சிறந்த உணவுப்பொருளென்று மதித்து, அதிகமாய் உபயோகிப்பார்கள்.

கமலாக்கிச்சிலியில் உணவுப் பொருளுக்கு வேண்டிய எல்லாவிதமான ஸத்துவங்களும் அடங்கியிருக்கின்றன. மேனாட்டு வஸ்துதத்துவஞ்ஞர்களின் பரிசோதனையின்படி விஷயமுணர்ந்தவருக்கு இது நன்றாகத் தெரியும். இக்கனியில் ஸிட்ரிக் ஆஸிட் என்னும் ஒருவித அம்லஸத்துவம் அடங்கியிருக்கிறது; ஸிட்ரிக் ஆஸிட் என்பது கல்லீரலைத்தூண்டி சுறுசுறுப்பாகச் செய்யுமென்பது பிரஸித்தம். இது சுகமாக மலத்தை இளகச்செய்து வெளிப்படுத்தும். இதில் பாஸ்வர ஸம்பந்தமான ஸத்துவங்கள் (Phosphates) விசேஷமாயுண்டு; அதனால் நரம்பு மண்டலங்களுக்கும் மூளைக்கும் போஷணையைத் தருவதில் கமலாக்கிச்சிலி நிகரற்ற வஸ்து; ஆனால் இவ்விஷயம் ஜனங்களால் புறக்கணிக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல. பாஸ்வர ஸத்துவம் அடங்கியிருப்பதால் நரம்புத்தளர்ச்சியிலும், பித்துப்பிடித்த நிலைமையிலும் இப்பழம் மிகவும் பிரயோஜனகரமானதாகும். இவ்வுண்மையைக் குறிப்பிட்டுக் கவனிப்பவர் அரிது. சுருங்கச் சொன்னால், கமலாக்கிச்சிலி தினப்படி உணவாக மதிக்கப்பட்டு அன்னம் முதலியதைப்போலவே வழங்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வரவேண்டும்.

காலைப்போஜனத்திற்கு இதன் உபயோகம் ஒப்பற்றதாகும்; ஆனால் வேறு உணவுகளையும் புஜிக்கவேண்டுமானால், அதற்கு அரைமணி நேரம் முன்னதாக இக்கனியை உபயோகிப்பது நலம்; ஏனெனில், இக்கனியின் சாறானது இனி உபயோகிக்கப்போகிற உணவை ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்தவாறு இரைப்பையைப் பதன்படுத்தி, அங்கிருந்து சிறுகுடலில் விழுந்து, இதன் ஸத்துவங்கள் ஜீர்ணமாவதுடன், பித்தநீரையும் மற்றும் ஜீர்ணவுறுப்புகளிலிருந்து உண்டாகக்கூடிய திரவங்களையும் நன்றாகக் கசியச்செய்து, வரப்போகிற உணவுகளை நன்கு ஜீர்ணம் செய்வதற்கு ஜீர்ணகோசத்தை ஆயத்தமாயிருக்கச்செய்கின்றது. காலையில் கமலாக்கிச்சிலியில் இரண்டொரு கனிகள் உபயோகித்து விட்டு, அப்பால் அரைமணி நேரத்திற்கெல்லாம் ரொட்டியும் வெண்ணெயுமாவது பூரியும்பாலுமாவது உபயோகிக்கலாம். முதலில் கமலாக்கிச்சிலியை உபயோகிப்பதால், சிறுகுடல் முதலியவற்றில் ஏதேனும் அழுக்குகளும் வாயுவும் இருந்தால், அவையும் ஒருவாறு கழுவப்பட்டு, அடுத்து வரும் உணவை நன்றாக ஏற்றுக்கொள்ளும்படி குடலின் உட்புறங்கள் சுத்தமாகவும் ஆகின்றன.

முதலாவது கமலாக்கிச்சிலியானது காண்பதற்கு எவ்வளவு மனோஹரமாயிருக்கிறதோ, உண்பதற்கும் அவ்வளவு நற்சுவையுடையது. கைகளால் எடுப்பதாலும், துணி முதலியவற்றால் மூடுவதாலும், காற்றில் திறந்து வைப்பதாலும் ரொட்டியும் மற்றும் பணியாரங்களும் பதனழிவதுபோல இக்கனியானது எவ்வித

மான கெடுதலையும் அடைவதில்லை. இதன் மேற்போர்வையாயுள்ள சர்மம் கனமாயிருப்பதால், இதற்குள் வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்கள் சிறிதும் பிரவேசிக்கமுடியாது. ரொட்டி முதலியதில் வழக்குப்படிந்தால் அலம்ப முடியாது; இக்கனியின்மேல் அளவற்ற அழுக்குகள் படிந்திருந்தபோதிலும் அவற்றைக் கழுவி கனியை நிர்மலமாகச் செய்வது மிகவும் எளிதல்லவா? இதை வெள்ளைக்காரர்கள் கையால் தொடாமலே நிர்மலமான கத்திகளாலும் சலாகைகளாலும் மேல்தோலையும் உட்புறணிகளையும் விலக்கி உபயோகிப்பது வழக்கம். ரொட்டி, வேறு பணியாரம் முதலியதைப் புஜித்தால், அடுத்தாற்போல் தண்ணீரோ, பாலோ, வேறு குடிவகையோ அவசியம் உபயோகிக்க வேண்டிவரும். கமலாக்கிச்சிலியைப் போதுமாறு புஜித்துவிட்டால், பசியும் தாஹமும் ஒருமிக்க நிவ்ருத்தியடைவதோடு உடலும் உள்ளமும் ஒரே சீராகக் குளிர்ந்துவிடுமென்பது அனைவருக்கும் அநுபவஸித்தமான விஷயம்.

கமலாக்கிச்சிலியில் புறணிகளைக் கழற்றிவிட்டு, அதன் இரஸத்தைப் பிழிந்து, இரண்டொரு சுடிக்கையளவு மிளகுத் தூளைப் போட்டு உபயோகித்தால் அக்னிமாந்தியமும், அரோசகமும் நிவ்ருத்தியாகும்; மலச்சிக்கலிலும் இது சிறந்த உணவாகவும் ஔஷதமாகவும் உபயோகப்படும். இக்கனியின் சாற்றைப் பிழிந்து, அத்துடன் ஸோடா நீரையும் கலந்து ஆங்கிலேயர் வெகு ருசிகரமாகப் பானம்செய்வதுமுண்டு.

பகற்போஜனத்திலும் இராப்போஜனத்திலும் இக்கனியை அன்னம் முதலியதைப் புஜித்த பிறகு இரண்டுமூன்று உபயோகிக்கலாம். பகற்போஜனத்திற்குப் பிறகு உபயோகிப்பதால், ஆஹாரம் நன்கு ஜீர்ணம் செய்யப்பட்டு, இராப்போஜனத்திற்கு முந்தி குடலைச் சுத்தமாகவும் சுறுசுறுப்பாகவும் செய்து, தேஹத்திற்கும் போஷணையை யுண்டுபண்ணும்.

# வைத்திய கலாநிதி.

நள௵ கார்த்திகை-மார்கழி௴.

## THE PRACTICE OF PHARMACY IN INDIA.

## இந்தியர்கள் கையாளும் ஔஷதயோக முறை.

நமது நாட்டார் இதை ஔஷதயோகமுறையென்றும், ஸாதாரணமாய் வாகடவிதியென்றும் வழங்குவர். இப்பொழுது இந்தியாவில் அநுபவத்தில் இருந்துவருகிற ஔஷதயோக முறைக்கு இந்துக்களுடைய பிராசீன வைத்தியசாஸ்திரமே அடிப்படையான ஆதாரமாகும்; அவ்வைத்திய சாஸ்திரமோ, பல்லாயிரம் வருஷங்களுக்குமுன் நாகரீகத்திற் சிறப்புற்று விளங்கிய அறிவிற் பிரமுகர்களாயிருந்த ஆரியர்களால் இயற்றப்பட்டதென்றாலும், அக்காலம்முதல் இக்காலம் வரையில் காலதேசாதிகளின் மாறுபாடுகளுக்கெல்லாம் ஈடு கொடுத்துக்கொண்டு தனது பெருமை முற்றிலும் அழியாமல் ஒருவாறு நிலைத்திருக்கிறது.

"ஆர்ய ஸந்ததிகளைச் சேர்ந்த ஒரு வகுப்பினர் இந்தியாவில் பிரவேசித்துக் குடியேறியபோது, ஜனங்கள் தமது வைத்தியமுறையைத் தேசத்தின் நவீன நிலைமைக்குத் தகுந்தவாறு பரிஷ்காரமான ரீதியில் விருத்திசெய்துகொள்ள வேண்டியது அவசியமென்று நிச்சயிக்க, அவ்விதம் செய்யத் தலைப்பட்டனர்" என்றும், "இச்சாஸ்திரத்திற்கு மூலாதாரமாகவும் அவசியமாகவும் உள்ள கோட்பாடுகளையெல்லாம் வேதங்களென்னும் மிகப்பண்டைக்காலத்திய பிரமாண பத்திரத்தில் பதிவுசெய்து, விஷயத்திற்கு அழிவு நேரிடாவண்ணம் சாச்வதமாகச் செய்துகொண்டனர்" என்றும் மிஸ்டர் வி. ஆர். கோகட்னூர், எம். ஏ. என்கிற வித்வான் அமெரிக்காவில் இவ்வௌஷதயோகமுறையைப்பற்றிய ஒரு பிரஸங்கத்திற் கூறியிருக்கிறார். வேதம் கி.மு. 3,000-வருஷங்களுக்கு முன்போ அல்லது கி. மு. 10,000 வருஷங்களுக்கு முன்போ ஏற்பட்டிருக்குமென்பதைக் கருத்தில் வைத்துக் கூறும் இவர்களுடைய அபிப்பிராயம் எவ்வாறாயினும், வேதம் அநாதிஸித்தம் என்கிற ஆஸ்திகக் கொள்கையை ஆதாரமாகப் பின்பற்றிய நாம் ஆர்யவைத்தியமும் அறியமுடியாத அவ்வளவு நாட்களாக இத்தேசத்தில் செழித்துவந்ததென்றே கூறுவோம். நாம் தெரிந்துகொண்டவரையில், பத்தாவது நூற்றாண்டினீறாக இந்துக்கள் அநேகம் வெளிநாடுகளோடு ஸம்பந்தம் பெற்று, சாஸ்திர பரிசீலனை செய்து, வைத்திய முறையை மிகவும் ஒழுங்குபடுத்தி முன்னுக்குக் கொண்டுவந்தனர் என்றாலும், பிறகு தேசத்தில் அமைதியின்மை ஸம்பவிக்க, அதனால் வைத்தியசாஸ்திராபிவிருத்தியும் தடங்கலுற்றது. இப்பொழுது நாம் எடுத்துக்கொண்டுள்ள ஔஷதயோகமுறையென்கிற விஷயம் வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டு கி. மு. எட்டாவது அல்லது ஒன்பதாவது நூற்றாண்டில் எழுதப்பட்டவையென்று கருதப்படுகிற சரக-ஸுச்ருதாதி நூல்களை ஆதாரமாயுடையதாகும்.

ஔஷதயோகமுறையில் ஆயுர்வேதத்தின் சிறப்பு ஒப்பற்றதென்று பக்ஷபாதமறியாத இக்காலத்திய சாஸ்திரநிபுணர்களிலும் பலர் மிகவும் பாராட்டுகின்றனர். டாக்டர் கிளார்க் (Dr Clark of Philadelphia) என்பவர் கூறும் ஒரு வாக்கியத்தை நாம் இங்கு குறிப்பிட ஸந்தோஷப்படுகிறோம்: "அலோபதிக் முறையென்னும் தற்காலவைத்தியத்தைக் கையாளும் நம்மவர், தமதிடம் இப்பொழுது வாடிக்கையிலுள்ள ஔஷதச் சரக்குகளையெல்லாம் அடியோடு ஒழித்துவிட்டு, சரகர் என்னும் மஹான் இயற்றிய வைத்திய நூலிற்கண்டுள்ள முறையை அடைக்கலம் புகுந்து, தமது தொழிலை நடத்தமுயன்றார்களானால், ஆரோக்கியக்குறைவால் மனஞ்சோர்ந்து மிகத் துன்பமனுபவிக்கும் ஜனங்களைக் காண்பது அரிதாகும்." மேலும் "ஆயுர்வேதத்திலடங்கிய ஔஷதயோகங்களுக்குள்ளமேன்மையைக்கொண்டாடி, முன்னால்-கி. மு. 400-ம் ஆண்டில் ஹிப்பாக்ரடிஸ் என்னும் கிரீஸ் தேசத்து வைத்தியர் இந்தியாவிலிருந்து அநேகம் ஆயுர்வேதக் கிரந்தங்களைக் கைப்பற்றினர்" என்று மேனாட்டு வைத்தியர்களான டாக்டர் ராயல் முதலியவர்கள்கூட கூறியிருக்கிறார்கள். டாக்டர் ஸி. பால் (Dr C. Paul, Bartholomew) என்பவர் "சரகஸம்ஹிதையில் பிரயோகிக்கப்படுகிற ஔஷதயோகாதிகளைப்போல் அவ்வளவு பிரசஸ்தமான முறைகளை இக்காலத்திய வைத்திய நூல்களில் நான் எங்கும் இதுவரையில் கண்டதில்லை" என்கிறார். இவ்வாறு எவ்வளவோ பிரமாணங்கள் இன்னும் உண்டு; அவற்றையெல்லாம் இங்கு எழுதமுடியாதாயினும், சுருக்கமாக மற்றொரு சாஸ்திரஜ்ஞர் மொழிந்துள்ள விஷயத்தைமாத்திரம் இங்கு குறிப்பிட்டால் போதுமானது. அதாவது: "இந்துக்களுடைய வைத்தியசாஸ்திரங்களில் அக்காலத்தியவர் கண்டுபிடித்து எவ்விஷயங்கள் பதியப்பட்டிருக்கின்றனவோ, அதே விஷயங்கள் அல்லது அதுபோன்ற விஷயங்களே இக்காலத்தியவரால் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறலாமேயன்றி வேறல்ல." என்று டாக்டர் கிஸல்மான் கூறுகிறார். "நீர்க்கோவையில் (Dropsy) உப்பில்லாப் பத்தியம் சிறந்த சிகித்ஸையென்றும், க்ஷயரோகத்தில் ஆட்டுச்சாணம் அல்லது ஆட்டுமூத்திரத்தின் வாஸனையை உறிஞ்சுவது நலமென்றும் இக்காலத்தியவர் புதிதாகத் தெரிந்துகொண்டதாகக் கூறும் நம்மவருடைய வார்த்தையே இதற்குப் போதுமான அத்தாட்சியாகும்" என்றும் அவ்வைத்திய கனவான் குறிப்பிடுகிறார்.

அப்பண்டைக் காலத்திலேயே ஆயுர்வேத வைத்தியர்கள் ஆயிரக்கணக்கான ஔஷதிகளு

டையவும், நூற்றுக்கணக்கான தாது-உலோக வர்க்கங்களுடையவும் குணகுணங்களைப் பரீக்ஷித்துப் பரிசீலனை செய்து, ஔஷதயோகங்களில் உபயோகித்துவந்தனர். அயம், முத்து, செம்பு, வெள்ளி, பொன், தகரம், அப்ரகம், லிங்கம், இரஸம், காரீயம், மயில்துத்தம், பவழம், பாஷாணம், கந்தகம், மனச்சிலை முதலியவற்றைப் பக்குவம் செய்து ஔஷதமாக உபயோகித்துவந்தனர். ஔஷதங்களில் அநேகம் இரத்தினங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

வேலம்பட்டையானது பற்பொடிகள் செய்வதற்கும், வேலங்காயின் கஷாயம் சில பல்வியாதிகளில் வாய்க்கொப்புளிப்பதற்கும் உபயோகிக்கப் படுகின்றன.

ஆடாதோடையை நாட்பட்ட காஸத்திலும், ச்வாஸரோகத்திலும், க்ஷயரோகத்திலும், இரத்தம் வெளியாகும் சுவாஸாசய வியாதிகளிலும் உபயோகிப்பது வழக்கம்.

பில்வமானது முறைக் காய்ச்சலில் சிறந்த ஔஷதமாகும்; அதன் பிஞ்சு அதிஸாரத்திலும், இரத்தபேதியிலும் உபயோகிக்கக் கூடியதாம்.

வேம்புக்குள்ள ஔஷதகுணங்கள் யாவும் வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் சிலாக்யமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஜ்வரஹரமாகவும், இரத்தசோதகமாகவும், சர்மதோஷங்களைப் போக்குவதற்காகவும் வேம்பு விசேஷமாய் உபயோகிக்கப்பட்டுவருகிறது.

அகிற் கட்டையும், சந்தனமும், அரசும் கிருமிகளைப் போக்கவும், பூத-பிசாசங்கள் என்னும் விகாரங்களை நிவ்ருத்திசெய்யவும் உபயோகமாகின்றன.

பப்பாளிக்காய் மாந்தக்கட்டி யெனப்படும் கல்லீரல் வீக்கத்திலும், ஜ்வரக்கட்டியெனப்படும் ப்லீஹவீக்கத்திலும் மிகவும் பிரயோஜனமுள்ளது.

சிலவேம்பும், பேய்ப்புடலும் ஜ்வரங்களில் எல்லாவற்றிலும் முக்கியமாய் உபயோகிக்கப்படும் சரக்குகளாம்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான மூலிகைகள் இந்திய வைத்தியர்களால் முற்காலத்தில் பரீக்ஷிக்கப்பட்டு ஔஷதயோகங்களில் சேர்க்கப்பட்டிருப்பதை சாஸ்திரமறிந்த கனவான்கள் தீர விசாரித்துப் பார்த்தால் இச்சாஸ்திரத்தின் பெருமையையும் உபயோகத்தையும் மிகவும் கொண்டாடாமலிருக்க மாட்டார். ஆயுர்வேத வைத்தியம் அநேக சாஸ்திரஞ்ஞர்களுடைய பரீக்ஷைகளாலும் ஆராய்ச்சிகளாலும் தகுந்த அஸ்திவாரத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சாஸ்திரமேயன்றி ஸாதாரணமானதல்ல. தற்காலத்திய மேனாட்டுவைத்தியர்கள் அஸாத்தியமென்று சொல்லும் வியாதிகளுக்கும் ஆயுர்வேதநூல்களில் ஔஷதங்களும், சிகித்ஸாக்ரமங்களும் கூறப்பட்டிருக்கின்றன. மேனாட்டுவைத்தியர்கள், ப்ரிடிஷ் பாரம கோபியா யென்னும் ஔஷதயோகநூலில் குறிப்பிடப்படாத ஔஷதங்களை இலக்ஷியம் செய்வதில்லையென்றால், அது ஆயுர்வேதத்திற்கு மட்டுமல்ல, பொதுவில் வைத்தியசாஸ்திரத்திற்கே பெருத்த துரத்ருஷ்டமாகும்.

செல்வவான்களுடைய அல்லது இராஜாங்கத்தாருடைய உதவியைப்பெறாமல் ஆயுர்வேத வைத்தியர்கள் தமது ஔஷதங்களையும், சிகித்ஸாமுறைகளையும் சீரான நிலைமைக்குக் கொண்டுவருவது முடியாத விஷயம். மேலும் ஆயுர்வேத ஔஷதங்களை இரஸாயன சாஸ்திர முறைப்படி பக்குவம் செய்யவும், ஓஷதிகளை ஏற்றகாலத்தில் தகுந்த பிரதேசத்திலிருந்து கிரஹித்து, அவற்றின் குணதோஷங்களைப் பரீக்ஷித்து ஆராய்ச்சிசெய்யவும் ஓர் ஔஷதசாலை அல்லது இரஸாயனசாலையை ஸ்தாபிப்பது நமது வைத்தியாபிவ்ருத்திவிஷயத்தில் இன்றியமையாததாம். அப்படிச் செய்யாத வரையில் பிராசீன வைத்தியமுறையானது மேனாட்டுவைத்தியத்தைப்போல் முன்னேற்றமடைந்து, தேசத்தில் உபயோகமாகக்கூடிய நிலைமையை அடைவதெங்ஙனம்?



“மிகவும் தீக்ஷ்ணவீர்யமுள்ள பாஷாணம், இரஸம், வத்ஸநாபி முதலிய ஔஷதச் சரக்குகளை தாராளமாகக் கையாண்டுவரும்ஆயுர்வேத வைத்தியர்களுடைய புத்திநுட்பத்தையும், பதார்த்தங்களின் குணபேதங்களைப்பற்றிய பகுத்தறிவையும், தைரியத்தையும் கண்டு நாம் புகழாமலிருக்கக் கூடவில்லை.” என்கிறார் டாக்டர் யு. நாத் என்னும் சாஸ்திரஞ்ஞர். இச்சரக்குகளைச் சுத்திசெய்து இவற்றிற்கு சுறுக்கு ஏற்ற பேற்ற இவற்றின் வீர்யங்கள் இன்னும் வலுக்கின்றன. ஆனால் அநேகம் புடங்களைப் போட்டும், பலவாறு சுறுக்கேற்றியும் இவற்றைப் பக்குவம் செய்வதைவிட இன்னும் ஸுலபமான வகையில் இவற்றைப் பக்குவம் செய்யலாமென்று சில நவீன சாஸ்திரஞ்ஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

எட்டு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற இந்துக்களுடைய வைத்தியசாஸ்திரத்தின் ஒரு பகுதியான அகத தந்திரத்தில் (விஷசிகித்ஸை) விஷங்கள் முக்கியமாய் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன:—

1. தாதுவிஷங்கள் (பாஷாணம், இரஸம், கந்தகம் முதலியது).
2. ஓஷதிவிஷங்கள் (நாபி, அலரிமுதலியது).
3. பிராணிவிஷங்கள் (ஸர்ப்பம், தேள் முதலியவற்றின் விஷம்).

மேற்குறிப்பிட்ட மூன்று விதமான விஷங்களில் ஒவ்வொன்றிலும் அநேக வகையான விஷங்கள் ஆயுர்வேதநூல்களில் உபயோகிக்கத் தகுந்தவைகளென்று கூறப்பட்டிருக்கின்றன. ஊமத்தை, எட்டிக்கொட்டை, நாபி, அலரி முதலியவற்றிற்குள்ள விஷத்தன்மைகளையும், அவற்றைப் பக்குவம்செய்து உபயோகிக்கவேண்டிய வகைகளையும் பரிசீலனைசெய்து அக்காலத்திய வைத்தியர்கள் நன்கு அறிந்திருந்தனர். சில கிருமிகளென்ன, மிக நுட்பமான வேறு ஜந்துக்களென்ன இவற்றுள் எதெதனிடம் எவ்வெவ்விதமான விஷப்பொருட்கள் அடங்கியிருக்கின்றனவென்பதையும் அவ்வைத்தியர்கள் தெரிந்து வரைந்திருக்கிறார்கள். ஐரோப்பிய ஔஷத நிகண்டுக்களில் இருபது முப்பது வருஷங்களுக்குமுன் வரையில் ஸர்ப்பவிஷம் சேர்த்துக் கூறப்படாமலிருக்க, இந்துக்கள் அநேகமாயிரம் வருஷங்களுக்குமுன்பே அவ்விஷத்தை ஔஷதமுறைகளில் உபயோகிக்கும் வகைகளைச் சொல்லியிருக்கிறார்கள். “இத்தேசத்திய அரசர்கள், உணவு முதலியவற்றில் விஷங்கலந்திருந்தால் அவற்றை வாஸனையினால் அறிந்து கொள்ளக் கூடிய குரங்குகளை அரண்மனையினுள் வளர்த்து வந்தார்கள்” என்று ப்ரொபஸ்ஸர் மூர் கூறியிருக்கிறார். “விஷத்தை முகர்ந்ததும் அவற்றிற்கு மலம் கழியும்” என்று வாக்படர் முதலியவர்கள் கூறியிருப்பது ஆயுர்வேதம் கற்றறிந்தவருக்குத் தெரியாததல்ல; இவ்விதமாகவே ஆப்பிரிக்காவில் இருக்கையில் ப்ரொபஸ்ஸர் மூர், சில குரங்குகள் விஷவாஸனையினால் மலங்கழிவதாகக் கண்டு வியப்புற்றதாகச் சொல்லுகிறார். ஆப்பிரிக்காவில் ஜனங்கள் விஷம் வைத்து அவ்விடத்திய குரங்குகளைக் கொன்றுவிடுவதாகப் பிரயத்தனப்பட்டதையும், அவற்றின்வாஸனையை அதிக தூரத்திலிருந்தே உணர்ந்து அக்குரங்குகள் வெகுதூரத்தில் விலகிவிடுவதையும் நேரில் அவர் கண்டிருக்கிறாராம்.

ஸுச்ருதாசார்யர், தமது ஸம்ஹிதையில் 760 ஓஷதிகளைப்பற்றி விவரம் கூறி, அவற்றையெல்லாம், அவ்வவற்றிற்குள்ள குணபேதங்களை அநுஸரித்து, 37 வர்க்கங்கள் அல்லது வகுப்புகளாகப் பிரித்திருக்கிறார். முற்காலத்திய வைத்திய சாஸ்திராதிகாரிகள் ஓஷதிகளைக் கிரஹிப்பதற்கான காலங்களையும், அவைகள் தளிர்த்துச் செழிக்கும் ருதுக்களையும், அவற்றில் குறிப்பிட்ட குணவிசேஷங்கள் குறைவாகும் அல்லது பூர்த்தியாகும் தருணங்களையும், அவைகளைக் கிரஹிப்பதற்கேற்ற பிரதேசங்களையும், எந்தெந்த ஓஷதியிலிருந்து எந்

தெந்த அம்சங்களை எவ்வெவ்வாறு எடுத்துப் பக்குவம் செய்யவேண்டுமென்பதையும் வெகு நன்றாக விளக்கியிருக்கிறார்கள். ஔஷதச் சரக்குகளுக்குள்ள குணங்களையும் செய்கைகளையும் அவ்வநாதி காலத்திலேயே ஆரியர்கள் அறிந்திருந்தனர்; அதனால் அச்செய்கைகளின் தன்மைக்கேற்றவாறு ஜ்வரக்நம், கிருமிக்நம், ரேசநம் (Purgative), ஸ்தம்பநம் (Astringent), பல்யம் (tonic), மூத்ரலம் (Diuretic) தீபநம் (Stomachic) முதலிய நூற்றுக்கணக்கான பாரிபாஷிகப்பெயர்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மூலிகைகளுடைய குணங்களையும், உருவங்களையும், மற்றுமுள்ள விசேஷங்களையும் அநுஸரித்து ஜீவந்தியென்றும் (நீடித்து ஜீவித்திருக்கச்செய்வது), மூஷகபர்ணீ (எலிக்காதுபோன்றது) என்றும் இவ்விதம் பெயர்களும் முற்காலத்திலேயே அவற்றிற்கு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

சுக்ராசாரியர் மூலிகைகளை அவற்றின் உபயோகத்திற்குத் தகுந்தவாறு அடியில் குறிப்பிடும் விதமாகப் பகுத்திருக்கிறார்:

1. உணவுக்கு உபயோகமான மூலிகைகள்.
2. புளிக்கவைத்து, கொதிப்புநீங்கியபிறகு உபயோகிக்கக்கூடிய மூலிகைகள்.
3. தைலம் இறக்குவதற்கான மூலிகைகள்.
4. நிறப்பொருளாக உதவக்கூடிய மூலிகைகள்.
5. பசியும் பாலும் வடியத்தகுந்த மூலிகைகள்.
6. சாறுபிழிவதற்கு ஏற்ற மூலிகைகள்.
7. ஓஷதிவிஷங்கள் எனப்படும் மூலிகைகள்.
8. ஸர்ப்பவிஷம் முதலியதற்கு முறிவான மூலிகைகள்.
9. ஸுகந்தங்கள் எடுக்கக்கூடிய மூலிகைகள்.

இப்பொழுது ஆயுர்வேத வைத்தியர்கள் அநுஷ்டித்துவரும் ஔஷதயோகமுறையானது புராதனகாலத்திய சாஸ்திரஞர் நடத்திவந்த விதமாகத்தான் இருக்கின்றதென்பதில் ஸந்தேஹமில்லை. அவர்கள் சில தாதுப்பொருட்களையும், பிராணிகளின் விஷப்பொருட்களையும் தவிர்த்து மற்றெல்லாச் சரக்குகளையும் பெரும்பாலும் இயற்கைநிலைமையில் ஔஷதமாய் உபயோகித்துவந்தார்கள். வேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி கவனித்தால், மூலிகைகளில் பெரும்பான்மையானவற்றையும் உள்ளது உள்ளபடியே உபயோகித்தால் அவற்றின் குணங்கள் மாறுபடாமல் தேஹத்திற்கு அநுகூலமுண்டாக்குமென்று அவ்வாசிரியர்கள் அபிப்பிராயங்கொண்டிருந்ததாகத் தெரிய வருகிறது. இதற்கு, ஸோமலதையின் சாற்றைப் பிழிந்து அவ்விதமே பானஞ்செய்யும்படி உபதேசிப்பதையும், ஜீவந்தியெனனும் மூலிகையை மென்றுவிழுங்கும்படி மொழிவதையும் உதாரணமாகக்கூறலாம். பிறகு காலம் செல்லச் செல்ல, ஸம்ஹிதைகளும், ஸங்க்ரஹக்ரந்தங்களும் இயற்றப்பட்டு சாஸ்திரம் விருத்தியாகவே, ஆயுர்வேத வைத்தியர்கள் ஓஷதிகளையும், தாதுவர்க்கங்களையும், பிராணி ஸம்பந்தமான இதர பதார்த்தங்களையும் பலவிதமான முறைகளில் பக்குவஞ்செய்து ஸ்வரஸமாகவும், கஷாயமாகவும், ஆஸவாரிஷ்டங்களாகவும், பஸ்மங்களாகவும், மாத்திரை முதலிய உருவங்களுள்ளவையாகவும் செய்து, ஸத்துவங்களைமட்டும் க்ரஹித்து, ஔஷதயோகங்களை விருத்திசெய்துவந்தனர். "மூலிகைகளை இயற்கைநிலைமையிலேயே இந்துக்கள் 3000-வருஷங்களுக்குமுன்பு உபயோகித்து வந்ததுண்டு" என்றும், "அதன்பிறகு அவற்றைப் பதஞ்செய்து, ஸத்துவங்களை அவற்றிலிருந்து அநேக உபாயங்களைக்கொண்டு க்ரஹித்து உபயோகிக்கத்தலைப்பட்டனர்" என்றும் ப்ரொபஸ்ஸர் கோகத்னூர் தமது பிரஸங்கமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஐரோப்பிய ஔஷதச்சரக்குகள் எனப்படும் மருந்துவகைகளில் நூற்றுக்கு எழுபதுபங்கும் இந்துக்களுடைய பிராசீன வைத்திய நூல்களிலிருந்து தான் கையாளப்பட்டன; அதை ஒளிப்பதில் பிரயோஜனமென்ன?" என்று மேற்படி ப்ரொபஸ்ஸர் சொல்லுகிறார்.

தேசாந்தரங்களில் ஜனங்களுக்கு நாகரீகமென்பதே தெரியாமலிருந்த அவ்வநாதிகாலத்தில், இந்தியாவில் ஔஷதஸம்பந்தமாக அநேக நூல்கள் ஏற்பட்டு, அவற்றைப் பக்குவஞ்செய்து உபயோகிக்கும் முறைகளும் பலவிதமான பிரிவுகளுடன் விருத்தியாய் வந்திருப்பதை நாம் ஆச்சரியத்துடன் பாராட்ட வேண்டுமல்லவா?

அலரிவேரின் விஷச்சத்து ½ மாஷப் பிரமாணம் (சுமார் ¼ குன்றுமணி யெடை) தீங்கு செய்யக் கூடியதென்றும், குன்றுமணிவேரிலிருந்து ஸத்துவம் கிரஹித்தோ, அதை மாத்திரையாகச் செய்தோ ஸர்ப்பவிஷத்தை முறிக்க உபயோகிப்பதால் நன்மையுண்டாகுமென்றும், இன்னும் பலவிதமான ஸூக்ஷ்ம தத்துவங்களை ஆராய்ச்சி செய்து அவ்வாசிரியர்கள் விளக்கியிருக்கிறார்கள். பதார்த்தங்களைக் கொதிக்கவைத்தால் அவற்றிலடங்கிய அல்லது சேர்ந்துள்ள விஷப்பொருட்கள் அழிந்துவிடுவதாகவும் கூறியிருக்கிறார்கள். கருவேலம் பிசினை ஆமணக்கெண்ணெயோடு சிறிதளவு கலந்து உட்கொண்டால், மலம் ஸுகமாகக் கழிவதோடு, அதின் துர்நாற்றமும், வயிற்றில் சேர்ந்துள்ள அழுக்குகளும் விலக்கப்படும் என்பது ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டவையேயன்றி ஆங்கிலவைத்தியர்களால் சுயமாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஷயமல்ல.



## FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

(முன் தொடர்ச்சி.)

இதன் கீழ் அச்சிடப்பட்டுள்ள இரண்டு படங்கள் சென்ற ஸஞ்சிகையில் விவரிக்கப்பட்டிருக்கிற துடையெலும்பின் மத்தியபாகம் ஒடிந்துபோனதற்குச் செய்யப்படும் பந்தமுறையையும், அதற்கு வேண்டிய நீளமான சிராயையும் விளக்குகின்றன. சென்ற ஸஞ்சிகையில் 55 - வது பக்கம் பார்க்க.

துடையிலுபயோகிக்கும் நீளமான சிராய்.
(Long Thigh Splint.)





மேலே குறிப்பிட்டுள்ள நீளமான சிராயை வைத்துப் புறமாற்று மண்டலபந்தநம், எண்குறி மண்டலபந்தநம் என்னும் முறைகளைக்கொண்டு, ஒடிந்துபோன துடையெலும்பின் மத்தியபாகம் கூடுவதற்கு இடப்படும் கட்டுகளை விளக்கும் படம்.

துடையெலும்பு மேற்பாகம் ஒடிதல் :— இப்பாகம் பலவகையில் ஒடிவதுண்டு; அவற்றுள் ஒன்று மிக ஸாதாரணமாக ஸம்பவிக்கக்கூடியது. அதில் நிற்பதற்குத் திறமையிராது; கால் உயரத்தில் குறைந்ததாகக் காணப்படும்; பெருவிரல் முதலியவை இயற்கை நிலைமையைவிட்டுத் திரும்பிவிடும்; குதிகால் உட்புறமாக—அதாவது மற்றொரு காலை நோக்கியவாறு நிற்கும். இக்கோளாறுகள் யாவும் இதனடியில் அச்சிட்டுள்ள சித்திரப்படத்தைக் கவனித்தால் தெரியவரும். பாதத்தை அதன் இயற்கையான அளவுக்கு வரும்படி இழுத்து, சரியான நிலைமைக்குத் திருப்பினால், முழங்கை நிற்குமிடத்திற்குப் பெரும்பாலும் நேராக (படத்தில் இடது கையைப் பார்க்க) இடுப்பில் மிகவும் கடுமையான வலி உண்டாகும். இந்த அபாயம் வயது சென்றவர்களுக்கு விசேஷமாய் ஸம்பவிப்பதுண்டு. இதே எலும்பு, சிரோணியஸ்தி யென்னும் இடுப்பெலும்பில் சேர்ந்துள்ள ஸந்தியிலிருந்து இடம் விட்டு நழுவிவிடுவதால் நேரிடும் கோளாறுகளை இனி விவரிக்கப்போகிற விஷயத்தோடு ஒப்பிட்டு ஒற்றுப்பார்ப்பது நலம்.

தடையெலும்பின் மேற்புறம் ஒடிந்திருப்பதைக் குறிப்பிடும் படம்.



இந்தப்படத்தில் இடது துடையின் எலும்புஒடிந்தால், அந்தக் கால் நிற்கும் நிலைமை காட்டப்பட்டிருக்கிறது.

சிகித்ஸை :— இவ்வபாயத்திற்கு உள்ளான மனிதன் வயதுமுதிர்ந்தவனாகவும் பலஹீனனாகவும் இராவிட்டால், துடையெலும்பின் மத்தியபாகம், ஒடிந்ததற்கு விவரிக்கப்பட்டிருப்பதுபோலவே (சென்ற ஸஞ்சிகையில் 55-வது பக்கம் பார்க்க) காலுக்குபந்தனங்களைப் பிரயோகிக்கலாம். மனிதன் மிகவும் பலஹீனமாகவோ வயது முதிர்ந்தவனாகவோ இருந்தால், ஆரோக்கிய நிலைமைக்கு ஒருவாறு கேடு நேரிடும்; சிராய்களோடு கால்சேர்த்துக் கட்டப்பட்டு, படுக்கையிலேயே வெகு நாட்கள்வரையிலும் படுத்துக்கொண்டிருப்பது அவசியமாய்விடுவதால், பெரும்பாலும் படுக்கைப்புண்கள் உண்டாய் விடுகின்றன. கால் எவ்வளவு நீளமோ அவ்வளவு நீளமுள்ள ஒரு தலையணை அல்லது அகலக் குறைவான மெத்தையைக் காலுக்கு அடியில் வைத்து, பிணியாளியை இரண்டு வாரங்கள்வரையில் படுக்கையிலேயே இருக்கச் செய்யவேண்டும். வலியும் நொய்மையும் குறைந்துவருவதற்கு அநேகமாய் இரண்டு வாரங்கள் செல்லும்; அதற்குப் பிறகு பிணியாளியை ஒரு நாற்காலியில் சாய்ந்து உட்காரவும், கக்ஷதண்டத்தை ஊன்றிக்கொண்டு ஒரு சிறிது உலாவவும் செய்யலாம். அப்பொழுது "ஸ்நாயு ஸம்யோகம்" (Ligamentous union) எனப்படும் நிலைமையும் உண்டாகிறது. கால் சிறிது குட்டையாய்விடுகிறது; இருந்தாலும் அது ஸௌகரியக்குறைவை உண்டு பண்ணுவதில்லை; கனமான தோல்களை வைத்து வேண்டியவளவு உயரமாகத் தைத்த பாதரக்ஷையை உபயோகித்தால், குட்டையாயிருப்பதாலான சிறிது அஸௌகரியத்தையும் எளிதில் பரிஹரித்துக்கொள்ளலாம். எலும்பின் ஒடிந்துபோன முனைகளின் கூட்டுப்பாகத்தில் நல்ல உரமுள்ள சர்மம் போன்றதான ஸ்நாயு என்னும் தாதுவானது மறுபடியும் ஒன்று கூடிவருகிறது.

பர்சுகாஸ்திகளின் முறிவு:—கீழே வீழ்ந்தாலும், பலமான அடி தாக்குவதாலும், சக்கிரம முதலிய பாரமான வஸ்துக்களால் நசுக்கப்படுவதாலும், பர்சுகாஸ்திகள் என்னும் விலா எலும்புகள் ஒடிந்துவிடுவதுண்டு. பர்சுகாஸ்திகளில் எந்த ஸ்தானம் பலமாகத் தாக்கப்படுகிறதோ அவ்விடத்திலேயே எலும்பு முறிவு ஸம்பவிப்பதும் ஸஹஜம். எலும்புகள் நசுக்கப்பட்டால் அல்லது தேய்க்கப்பட்டால், எலும்பின் வளைந்த பாகமோ மத்தியபாகமோ ஒடிவது வழக்கம். இழுத்து மூச்சுவிடும்போது வலி அதிகப்படுவதாகப் பிணியாளி கூறுவன்; பக்கவாட்டில் அபரிமிதமான வலியேற்பட்டு உடம்பைத் திரும்பமுடியாது. பிணியாளி அதிசப் பருமனுயில்லாவிட்டால், கையை அகற்றி வலியுள்ளவிடத்தில் வைத்துப் பார்த்தால், ஒடிந்துள்ள பாகம் நன்றாக உணரப்படும். இருமும்போதெல்லாம் கடுமையான வலியுண்டாகும். பளீரென்று சதை அறுபடுவதுபோன்ற உணர்ச்சி யுண்டுபண்ணுவதான சிறிய இரும்பல்கள் அடிக்கடியும் இப்பிணியாளிக்குப் பொதுவாக உண்டாவதுண்டு. இவ்வபாயத்திற்குள்ளானவன் மிகவும் ஸ்தூலித்தவனாயிருந்தாலும், முள்ளந்தண்டுக்கு அருகில் பர்சுகாஸ்தி முறிந்திருந்தாலும், சிதைவுண்ட பாகத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கும். ஆனால் மார்பில் ஏதாவது அடிபட்டு அபாயம் நேரிட்ட ஸமயத்தில், அறுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சியும் உண்டாயிருக்குமானால், பர்சுகாஸ்தி ஒடிந்துபோயிருப்பதாகவே கருதி, சிகித்ஸைசெய்வது நலம். பர்சுகாஸ்தி ஒடிவதால் உண்டாகக்கூடிய முக்கியமான அபாயங்கள் சில அவசியம் கவனிக்கத்தக்கவை. பர்சுகாஸ்தியின் ஒடிந்துபோன முனைகளால் புப்புஸம் என்னும் சுவாஸாசயமாவது அதன் மேல்போர்வையாயுள்ள சுவாஸாசயக் கவசமாவது (Pleura) சிதைவடையும்; அப்பொழுது எச்சில் உமியுங்கால், அத்துடன் இரத்தமும் வெளிவரும்; புப்புஸங்களுக்கு வெளியில் மார்புக்கூண்டினுள் சுவாஸவாயுப் பிரவேசித்துவிடும்; இக்கோளாறுக்கு ஆங்கிலத்தில் எம்பிஸீமா (Emphysema) எனப் பெயர்; அல்லது கபவாதஜ்வரம் என்கிற அபிந்யாஸ ஜ்வரமாவது ஸம்பவிக்கும்.

சிகித்ஸை:—மார்பின் அசைவுகளை ஸாத்தியமான வரையில் குறைத்துவிடவேண்டும். அதற்கு அடியில் வருமாறு பந்தனம்செய்யவும்:--ஆறு அங்குலம் அகலமுடையதும், பன்னிரண்டு அடி நீளமுள்ளதுமான ஒரு வஸ்திரச் சுருளையெடுத்து, மார்பின் அடிக்குழியிலிருந்து அக்குள்வரையிலும் வெகு கெட்டியாகச் சுற்றி பந்தனமிடவும். இந்த பந்தனம் நெகிழாமலிருப்பதற்குத் தோளின் மேற்புறமாக முதுகுப் பக்கமாயிழுத்து ஒரு பந்தனம் கடைசியில் பிரயோகிக்கவேண்டும். (மார்பில் கட்டும் இதற்கு 'உரோபந்தனம்' எனப் பெயர். இதைக் கட்டும்முறையைப்பற்றிய விவரங்களை, வைத்தியகலாநிதி 3-வது வால்யம், 7-வது ஸஞ்சிகை, 162-ம் பக்கத்திற் காணலாம்.) இலகுவான ஆஹாரங்களைக் கொடுத்துக்கொண்டு, படுக்கையிலேயே பிணியாளியைப் படுக்கவைத்திருக்கவேண்டும். தினந்தோறும் மலம் நன்றாக வெளிபாய் குடல் சுத்தமாயிருக்கவேண்டும். இரவில் வலி தெரியாமலிருப்பதற்காக க்ளோரல் (Chloral) என்கிற ஔஷதத்தைக் கொடுக்கலாம். மூன்று வாரங்கள் வரையிலும் இந்த பந்தனத்தை அவிழ்க்காமல் முற்கூறிய நிலைமையிலேயே இருந்துவரச் செய்யவேண்டும். அதன்பிறகு அடிதாக்கியவிடத்தில்மட்டும் தோல்பிளாஸ்டர்போட்டு வைக்கலாம். அபிந்யாஸஜ்வரமாவது (Pneumonia), புப்புஸ கவசத்தின் அழற்சியாவது (Pleurisy) பர்சுகாஸ்தி ஒடிந்ததால் நேரிட்டிருந்தால், தகுந்த வைத்தியரைக்கொண்டு சிகித்ஸை செய்விக்கவேண்டும். விசாலமான ப்ளாஸ்டரை முதுகில் முள்ளந்தண்டில் ஆரம்பித்து, சிதைவுண்ட பர்சுகாஸ்தியின் மேற்புறமாகக் கொண்டுவந்து, பிறகு மார்பெலும்பின் மத்திய பாகத்திற்கொண்டு பிடித்து, முழுதும் நன்றாக இறுக ஒட்டிவிட்டால், அதுவும் மேற்கூறிய பந்தனத்தைப் போலவே பயன் தருவதாகும்.

---

## DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### தேன்மெழுக்கு.

தேனீக்கள் தேனை யுண்டாக்கும்போது, தேன் மெழுகும் உற்பத்தி செய்யப்படுகிறது. சுத்தியாகாத மெழுகானது ஸாதாரணமாய் மஞ்சள் நிறமாயிருக்கும். பற்பல புஷ்பங்களில் தேனுக்காக உட்கார்ந்து வரும்போது, அப்புஷ்பங்களிலுள்ள தூள்கள் ஈக்களின் கால்களில் ஒட்டிக்கொண்டு, பிறகு கூடுகட்டும்போது மெழுகோடு அவை சேர்ந்துவிடுகின்றன. இதனாலேயே தேன்மெழுகு மஞ்சள் நிறமாயிருக்கும். ஈரமும், வெளிச்சமும், காற்றும் மெழுகின்மேல் பட்டுக்கொண்டு வரும்போது அது கிரமமாக வெண்மையாக மாறிவிடும்.

தேன்மெழுகை அநேகம் லேபனம் அல்லது களிம்புகள் செய்யவும், ஒட்டுச்சீலைகளைத் தயார்செய்யவும் அதிகமாய் உபயோகித்து வருகிறார்கள். மெதுவாகவும் நீடித்தும் உத்தீபனம் செய்யக்கூடிய குணம் மெழுகுக்கு உண்டு. இத்தேசத்தில் அநேகர் ஸாதாரணமான இரத்தக்கட்டிகளின்மேல் இதைப் பிரயோகிப்பதும் முறை. இதைப் பிரயோகிப்பதால் இரத்தக் கட்டி சீக்கிரம் பழுக்க ஆரம்பித்து, முகமும் அதற்கு உண்டாகும்.

| | |
|---|---|
| தேன் மெழுகு | 1½ பலம் |
| குங்கிலியம் | 1 ,, |
| மகிழமரப் பிசின் | 1 ,, |
| மயில்துத்தம் | ½ தோலா |
| தேங்காயெண்ணெய் | 1 பலம் |

இவற்றை ஒன்றாக உருக்கி, நன்கு ஒன்று சேரும்படியாய் குழப்பியெடுத்து, பீங்கான் குப்பியில் வைத்துக்கொள்ளவும். ஒரு துணியிலாவது, லிண்டு என்னும் கவலிகையிலாவது இக்களிம்பைத் தடவி, கட்டியின் மேல்வைத்துக் கட்டிவிடவும். சேற்றுப் புண்களுக்கும் இது உபயோகப்படும்.

---

### சந்தனத்தைலம் வடித்தல்.

பெங்களூரில் தொழில் இலாகா அதிகாரிகளால் திராவகமிறக்கும் சாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது சென்ற மே மாதத்தில்தான் ஆரம்பமாயிற்று. இப்பொழுது மாதம் ஒன்றுக்கு 1,00,000 ரூபாய் மதிப்புள்ள சந்தனத் தைலம் அச்சாலையில் இறக்கப்படுவதாய் அறிகிறோம். இது நிற்க, மைசூரில் மற்றொரு சாலை இவ்விதமே ஸ்தாபிக்கப்பட்டு ஏராளமான சந்தனத்தைலம் இறக்கப்படுகிறதென்பதைக் குறிப்பிட நாம் மிகவும் ஸந்தோஷப்படுகிறோம்.

சந்தனத்தைலம் வைத்தியத்தொழிலில் மிகவும் தேவையானதென்பதில் ஸந்தேஹமில்லை. மேலும் இத்தொழில் மிக்க இலாபகரமாகவும் இருக்கின்றது. இதுவரையில் இத்தைல விற்பனையினால் இந்தியாவிலிருந்துமட்டும் பிறநாட்டார், முக்கியமாய் ஜெர்மன் வியாபாரிகள் அடைந்துவந்த இலாபம் அளவிற்கடங்காதது. நம் தாய் நாட்டில் இவ்வித தொழில் ஆரம்பித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இது போன்ற வேறு தொழிற்சாலைகளும் இத்தேசத்தில் ஏற்பட்டு, ஸாத்தியமான வரையில் ஔஷத ஸம்பந்தமான இலாபங்கள் இத்தேசத்திய வியாபாரிகளாலேயே அநுபவிக்கப்படும்படியான காலத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

---

### இரத்தபேதியில் தேங்காய்ப்பால்.

தேங்காயெண்ணெய் விரணங்களை ஆற்றுங் குணமுடையதென்பது இந்தியர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. குடலுக்குள் அழற்சி அதிகரித்தோ, சீதம் என்னும் ஒருவித கபஸம்பந்தமான தோஷம் குடலில் மிகுதியாகச் சேர்ந்தோ, குடலில் விரணம் போன்ற உணர்ச்சி யேற்பட்டு தனியாக இரத்தமாவது, சீதங்கலந்த இரத்தமாவது வெளிவருமானால், அப்பொழுது அடியில் வரும் ஒரு சுலபமான ஔஷதத்தை உபயோகிப்பதால் சிறிதேனும் நன்மையுண்டாவது நிச்சயம். சிலருக்கு மிகவும் தீவ்ரமான நிலைமையிலிருந்த வியாதியைத் தீர்க்கவும் இவ்வௌஷதமுறை உபயோகமாயிருந்ததுண்டு.

முதிர்ந்த தேங்காயை இடித்துப் பிழிந்து வடிகட்டிய பால்போன்ற திரவத்தை தினத்திற்கு மூன்று வேளை வீதம் உட்கொண்டு வரவேண்டும். வேளைக்கு ஒரு அவுன்ஸுக்குக் குறையாமல் தேங்காய்ப்பாலை உட்கொள்ளக் கொடுக்கலாம். இரத்தக் கழிச்சல் அதிகமாயிருந்தால் அதற்கு இதை உபயோகிக்கும் முறையாவது:—

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் | 3-அவுன்ஸ் |
| ஆமணக்கெண்ணெய் | 1 ,, |
| பனங்கற்கண்டு | 2-தோலா |

இவற்றை நன்றாகக் குழப்பிப் பாயஸம்போல் வருகையில் உட்கொள்ளச் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் நன்றாக இரண்டு மூன்று முறை விரேசநம் ஆய்விடும்; அப்பொழுது குடலிற் சேர்ந்துள்ள சீத-இரத்தங்கள் கழுவப்பட்டதுபோல வெளியாய்விட, வயிற்றுக்கடுப்பும் அடுத்தாற்போல நிவ்ருத்தியாகும்.

---

### வாந்தியைத் தடுக்கும் ஔஷதம்.

குடலிற் பித்தம் அதிகரித்தவருக்கும், முக்கியமாய் கர்ப்பிணிகளுக்கும் வாந்தியாவது ஒரு ஸாதாரண குறியாகும். இன்னும் அநேகம் வியாதிகளில் வாந்தி விசேஷமாகவோ ஸாதாரணமாகவோ உண்டாவது வழக்கம். ஒரு டோஸ் கறி யுப்பையும், அரை தேக்கரண்டியளவான நவாசாரத்தின் வாஸனைஜயநீரையும் (Aromatic spirits of ammonia) கலந்து, தினத்திற்கு 3-வேளை வீதம் உட்கொள்ளலாம். இரண்டு மூன்று நிமிஷங்களில் வாந்தி நிற்கும்:—Medical Summary.

---



## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### கொய்னா விஷம்.

"இரண்டு பேருக்குக் கொய்னா விஷமாகப்போன விஷயங்களைப் பத்திரிகையில் தயவுசெய்து பிரசுரம் செய்வதற்காக அனுப்புகிறேன். தமது வைத்தியப் பத்திரிகையைப் படிக்கின்ற நண்பர்களுக்கு இவ்விஷயம்தெரிந்திருப்பது நலமென்று கருதியே இதைப் பிரசுரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1. கேஸ். A. என்பது 4-வயதுள்ள ஒரு குழந்தை. அது தன் தகப்பனாரிடம் விளையாடிக் கொண்டிருந்தது. இரண்டு கொய்னா மாத்திரைகளை அப்பெரியவர் தன் குழந்தையினிடம் கொடுத்து, ஜ்வரத்துடன் வருந்திய அதன் தாயாரிடம் கொடுத்துவரச் சொன்னார். (அந்த மாத்திரை ஒவ்வொன்றும் 5-கிரைன் கொய்னா அடங்கியது) தகப்பனார் பிறகு கொய்னா மாத்திரைகளடங்கிய குப்பியை மேஜையின்மேல் வைத்துப் போனார். தன் பெற்றோர்கள் இல்லாத ஸமயம் பார்த்து, அக்குழந்தை, அக்குப்பியிலிருந்து சுமார் பத்து மாத்திரைகளையெடுத்து விழுங்கிவிட்டது. சில நிமிஷங்களுக்கெல்லாம் பேதியாய், ஜீர்ணமாகாத உணவுகள் அப்படியே வெளிவந்தது; நிற்கமுடியாமல் மயக்கம் வந்து அக்குழந்தை விழுந்துவிட்டது. உடனே ஸல்பேட் ஆப் ஜிங்க் (Sulphate of Zinc) என்னும் சரக்கைக் கொஞ்சம் கொடுத்து வாந்திசெய்யப் பண்ணியும், ஜீர்ணமாகாத ஆஹாரத்தைத் தவிர வேறொன்றும் வெளிவரவில்லை. பிறகு ஒரு மணி ஸாவகாசத்திற்கெல்லாம் அக்குழந்தைக்குக் கொறுக்கு வலியும் இசிவும் (ஆக்ஷேபகம்) பலமாக உண்டாயிற்று. எனக்கு ஆள் அனுப்பினார்கள்; நான் போய்ப் பார்க்கும்போது அதற்கு விக்கல் அதிகமாய் உண்டாயிருந்தது. உத்தீபனத்தின்பொருட்டு ஒரு டோஸ் மருந்தை வாயாலும் டானிக் ஆஸிட் என்பதை குதத்தின்மூலமாயும் உட்செலுத்தியும் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. குழந்தை $1\frac{1}{2}$-மணி ஸாவகாஸத்திற்கெல்லாம் உயிரிழந்துவிட்டது.

2. B. என்பது $2\frac{1}{2}$-வயதுள்ள ஒரு குழந்தை. அது ஒரு கொய்னாமாத்திரைக் குப்பியை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தது. (அதில் இருந்த ஒவ்வொருமாத்திரையும் 2-கிரைன் கொய்னா அடங்கியது.) ஒருவரும் இராமலிருந்த ஸமயம் பார்த்து, அக்கொய்னா மாத்திரையை ஒவ்வொன்றாகப் பதினைந்து மாத்திரைகள் வரையில் எடுத்து விழுங்கிவிட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் அக்குழந்தையின் தகப்பனார் தான் வைத்தவிடத்தில் குப்பியைக் காணாமல் தேடிப் பார்க்கையில், அதில் இரண்டு மாத்திரைகளைத் தவிர மற்றவைகளைக் காணவில்லை. மற்றவைகளைக் குழந்தை விழுங்கிவிட்டதென்று அறிந்து, உடனே வாந்தியாவதற்காக உப்புநீரை உட்கொள்ளக் கொடுத்துவிட்டு, வைத்தியரை அழைத்து வரப்போனார். அவர் திரும்பி வருந்தருணத்தில் குழந்தைக்கு பலமான கொறுக்குவலியுண்டாய், மூச்சுவிடுவதும் வெகு சிரமமாயிருந்தது. ஒரு மருந்தும் உட்செலுத்த முடியவில்லை. 2 மணி ஸாவகாஸத்திற்குமுன் உட்கொண்டிருந்த உணவு அப்படியே ஜீர்ணமாகாமல் வாந்தியாயிற்று. நான் குழந்தையைப் பார்க்கச் சென்றதும், பாவம் இறந்துவிட்டது.

இவ்விஷயம் B. K. தாஸ் என்பவரால் பிராக்டிகல் மெடிஸின் என்கிற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. குழந்தையிருக்கும் குடும்பங்களில் இவ்விஷயமாய் வைத்தியர்கள் எச்சரிக்கை செய்யவேண்டும். என்று வைத்தியகலாநிதிக்கு இதை எழுதலானேன்."

K. விச்வநாத ஐயர்,
மெடிகல் ப்ராக்டிஷனர்.

---

### வினா-60. பிரமேஹம்.

"அன்பார்ந்த ஐயா,

ஐம்பது வயதுள்ள ஒருவருக்கு இப்பொழுது 1-மாதகாலமாய் அடியில் குறிப்பிடப்படும் கோளாறுகள் உண்டாயிருக்கின்றன:— பகலில் 6-தடவையும் இரவில் சுமார் 7-தடவையும நீர் அதிகமாயிறங்குகிறது. மூத்திரத்தில் சர்க்கரையுண்டு. தாஹமும் இயற்கையிலும் அதிகமே. அவருடைய குடும்பத்தில் எவருக்கும் இவ்விதமான வியாதி வந்ததாகத் தெரியவில்லை. அவருக்கு மலம் நன்கு வெளிவருவதில்லை. பேதிக்கு மருந்து உபயோகிக்கும்போது மாத்திரம் பேதியாகிறது. ஆனால் பிறகு மலம் கட்டிவிடுகின்றது. அன்னமாவது கஞ்சியாவது சாப்பிட முடியவில்லை; வாந்தியும் ஆகிறது, இப்பொழுது இருமலும் உண்டாயிருக்கிறது.

இந்த ரோகிக்கு ஆஹாரம் ஏற்றுக்கொள்ளும்படியாகவும், மலம் பிரதிதினமும் வெளிபாகும்படியாகவும், தங்களுடைய "சார்ங்கதரஸம்ஹிதையில்" உள்ள ஒளஷதங்களில் எதை உபயோகப்படுத்தலாம் ? அல்லது வேறு ஏதாவது ஒளஷதம் அவசியமானாலும் "வைத்திய கலாநிதியின்" மூலமாய் அறிவித்து, அது கிடைக்கும் இடத்தையும் எழுதினால், அதையாவது வரவழைத்துக் கொள்கிறேன்."

V. EKANATHIAH.

விடை :—(1) பிரமேஹ விஷயமாக நாம் ஏற்கனவே சென்ற மாதத்திய "வைத்திய கலாநிதியில்" சில விவரங்களை வெளிப்படுத்தியிருக்கிறோம். பிரமேஹம் என்பதே நீரிழிவு ரோகம் என்று விவஹரிக்கப்படும். இது விஷயமாகச் சென்ற ஸஞ்சிகையில் 57-வது பக்கத்தில் பிரசுரித்துள்ள ஒரு கடிதத்தையும், அதற்கு எழுதப்பட்டுள்ள விடையையும் தயவு செய்து கவனிப்பீர்களாக. (2) இருமல் இருந்தால் சார்ங்கதரஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ள ச்யவனப்ராச அவலேஹத்தையும், லோகநாதரஸம் (முதலாவது யோகம்) என்கிற ஒளஷதத்தையும் உபயோகிக்கலாம். (3) மலச்சிக்கலைப் போக்க இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை இரவில் படுக்கப்போகும் ஸமயத்தில் இச்சாபேதிவடியென்கிற மாத்திரை ஒன்றை அல்லது இரண்டை ஒரு முறை பாலுடன் உட்கொள்ளலாம் ; அல்லது காலையில் 5-மணிக்கெல்லாம் ஒரு கோப்பை வெந்நீரை தினப்படி உட்கொள்வது அதினும் மேலாகும்.-ப-ர்.

## NOTES AND ITEMS OF INTEREST.
## பலவகைக் குறிப்புகள்.

### சுவாஸாசய வியாதிகளில் வெங்காயம்.

வெங்காயமானது இதற்குமுன் வைத்தியர்கள் கருதியிருந்ததைவிட இன்னும் விசேஷமான உபயோகங்கள் உடையதென்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. "லான்ஸெட்" (Lancet) என்கிற பிரஸித்தமான வைத்தியப் பத்திரிகையில், டாக்டர் ஜே. பைன் (Dr. J. Bain) என்பவர் அடியில்வருமாறு எழுதுகிறார்:—"நான் சென்ற மூன்று வருஷங்களாக, சுவாஸாசயக் கழலையினால் வருந்திய அநேகம் பிணியாளிகள் வெங்காயச்சாற்றை மூக்கினால் உறிஞ்சும்படியாகச் செய்துவந்தேன். நான் இதற்குமுன் வழக்கமாய் இச்சிகித்ஸையில் உபயோகித்துவந்த விளாவிய பார்மலேன் திராவகத்தைவிட (dilute solution of formaline) வெங்காய ஸ்வரஸம் அதிக அழற்சியைத் தராததாகவும், குணத்திற் சிறந்ததாகவும் இருக்கிறதென்று தெரியவந்தது. ஆங்காங்கு தேஹத்திலுள்ள பூட்டுகளில் உண்டாகும் க்ஷயரோகத்திலும் வெகு நன்மையுண்டாகுமாறு சிகித்ஸை செய்ய வெங்காயம் ஏற்ற ஒளஷதமாகும். லிண்டு என்னும் கவலிகையில் இதன் சாற்றைப் பிழிந்து, அக்கவலிகையைப் பூட்டுகளின் மேல் வைத்து, அதன் ஈரம் உலர்ந்துவிடாமலிருப்பதற்காக, கட்டா பெர்ச்சா என்னும் சீலையை அதன்மேல் சுற்றிவிடவேண்டும். க்ஷயரோகப்பற்றுள்ள ஸந்திகளில் இந்த ஸ்வரஸம் பிரயோகிக்கப்படுகையில், அவ்விடம் கொப்புளித்து ஊனீர் பெரும்பாலும் சுரப்பதுண்டு ; அத்தருணத்தில், அக்கொப்புளமும் நீர் வெளிவருவதும் நிவ்ருத்தியாகிற வரையில் இதை நடுவில் நிறுத்திவைக்கவேண்டும். ஆனால் டப்ளின் நகரத்திலுள்ள டாக்டர் மின்சின் (Dr. Minchin of Dublin) என்பவர், எவர்களுக்கு இதை யுபயோகிக்கையில் கொப்புளம் உண்டாகிறதோ அவர்கள் இவ்வியாதியிலிருந்து சீக்கிரம் நிவ்ருத்தியாவதாகவும், கொப்புளமாவது அழற்சியாவது வெங்காயச்சாற்றால் உண்டாகாதவருக்கு வியாதி அவ்வளவு சீக்கிரம் நீங்குவதில்லையென்பதாகவும் சொல்லுகிறார்."

இத்தேசத்தில், முக்கியமாய் வட இந்தியாவில், சுவாஸகாஸம் முதலிய புப்புஸ ஸம்பந்தமான வியாதியுடையவர்களுக்கு வெங்காயங்களையாவது, வெள்ளைப் பூண்டுகளையாவது நூல்களில் தொடுத்து, மாலையாகப் போட்டு வைப்பதும், அதனால் சுவாஸாசய ஸம்பந்தமான வியாதிகள் நிவ்ருத்தியாவதோடு தடுக்கப்படுமென்று அபிப்பிராயப்படுவதும் வழக்கம்.



### க்ஷயரோக விஷம் தேஹத்திற் பரவும் வகை.

அமெரிகன் மெடிகல் அஸோஸியேஷன் என்னும் வைத்திய ஸங்கத்தாரால் பிரசுரிக்கப்படும் பத்திரிகையில் இவ்வியாதி ஸம்பந்தமாய் எழுதிய ஒரு வியாஸம் வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியில் விருப்பமுள்ளவரால் மிகவும் பாராட்டத்தக்கது. அதிற்கூறியுள்ள சில ஸாராம்சம்மட்டும் இங்கு குறிக்கப்படுகிறன்றன :—

1. "க்ஷயரோக ஸம்பந்தமான விஷக்கிருமிகள் தங்குவதற்கு, சுவாஸாசய உறுப்புகளே ஆதாரமாகும் என்பதற்கு நமதிடம் அநேக அத்தாட்சிகள் உண்டு.

2. குடல் முதலிய ஜீர்ண உறுப்புகள் அடிக்கடியும் க்ஷயரோகக் கிருமிகள் தேஹத்தினுள் பிரவேசிப்பதற்கு முகத்வாரங்களாயிருக்கிறன.

3. குடலுக்குள் மிகவும் ஸ்நிக்த்தமாயுள்ள ஜவ்வுகளில் க்ஷயரோகக் கிருமிகள் ஊடுருவிப் பாய்ந்து, தேஹத்தில் இன்னும் ஆழமான தாதுக்களில் பிரவேசிக்கும் ; இவ்வாறு அவை ஊடுருவிச்செல்லும் போது, ஸ்நிக்த்தமான ஜவ்வுகளில் எவ்வித சிதைவையாவது உணரச்சியையாவது உண்டுபண்ணுவதில்லை ; கொழுப்புள்ள உணவுப் பொருட்கள் ஜீர்ணமாகும்போது, அவற்றுடன் இக்கிருமிகளும் உட்செல்லுகின்றன.

4. இந்த நுண்ணுயிர்கள், கைல் (Chyle) என்கிற ஆஹாரரஸத்தோடு இரஸாயனிகள் (Lacteals) என்னும் ஸ்ரோதஸ்ஸுகளில் பிரவேசித்து, தொராஸிக் டக்ட் என்னும் பெரிய இரஸாயனியின் மூலமாய் இரத்தத்திற்கலக்கின்றன. இரத்தமானது இக்கிருமிகளை சுவாஸாசயங்களுக்குள் கொண்டுவிடுகின்றன. இக்கிருமிகள், வடிக்கட்டும் துணியில் எறும்புகள் தங்குவது போல், சுவாஸாசயங்களில் வடிக்கட்டப்பட்டு தங்கிவிடுகின்றன.

5. க்ஷயரோகக் கிருமிகள், குழந்தைகளின் குடல்களில் சேர்ந்து, உள்ளே ஊடுருவிச் செல்வது வெகு ஸாதாரணமாம்.

6. இத்தொற்றுவியாதி இளங்குழந்தைகளுக்கும் ஸாதாரண சிறுவர்களுக்கும் எளிதில் தேஹத்தில் பற்றிவிடுகின்றது. இவ்வியாதியுள்ளவர்களைப் பரீக்ஷித்ததில், க்ஷயவியாதியில் பெரும்பான்மையும் இளம் பிராயத்தில் நேரிட்ட கேஸுகளாகவே தெரியவந்தது.

7. இவ்வியாதி ஸம்பவிக்காதபடி குழந்தைகளைப் பரிபாலிப்பதற்கு முன்ஜாக்கிரதையெடுத்துக் கொள்ளாதவரையில், வேறு எவ்வித முயற்சியும் இதைத் தடுப்பதற்கு அவ்வளவாகப் பயன்படமாட்டாது.

8. எந்த வயதிலும் க்ஷயரோகம் தேஹத்தில் பற்றுதலடையக் கூடுமாயினும், சிறுவயதுதான் அதற்குமிகவும் ஏற்றதாம்."

மேற்கூறிய அம்சங்கள், இக்கொடிய வியாதியைத் தடுப்பதற்கு முயற்சிப்பவரால் அவசியம் கவனிக்கத்தக்கவை.

### கோபம் ஆயுளைக் குறைப்பதேன் ?

நாம் மனக்களிப்பாயிருக்கையில் நமது நாடிநடை பலமாயிருக்கும் ; நாம் தென்பில்லாமலிருக்கும்போது அது பலஹீனப்படும். இதே விஷயந்தான் சுவாஸவேலையிலும் ஸம்பவிக்கின்றது. சுகானுபவத்தில் நாம் வெகு ஆழ்ந்து பலமாக மூச்சுவிடுகிறோம் ; மனம் திருப்தியடையாமல் சோர்ந்திருக்கையில் மூச்சுவிடுதல் அவ்வளவு பலமாயிராது. ஆனந்தமாயிருக்கையில் எவ்வளவு விசேஷமாகச் சுவாஸவேலை நடைபெறுமோ, அவ்வளவு அதிகமாய் மற்ற ஸமயங்களில் இராததோடு, மனத்துயரம் நேர்ந்திருக்கையில் சுவாஸவேலை மிகவும் குறைந்து விடுகிறதென்றும் சொல்லலாம். ஸந்தோஷமில்லாத ஸமயத்திலிருப்பதைவிட, அதிக ஸந்தோஷத்துடன் இருக்கும்போது தேஹத்தில் தசைநார்களுக்கும், மற்ற தாதுக்களுக்கும் விசேஷமான பலம் உண்டாவது இயல்பு. நமக்குக் கோபம் உண்டாகும்போது மனதிலும் உடலிலும் நமக்கு அதிக துடிப்பும் வேகமும் ஸம்பவிப்பதால், அப்பொழுது நமது தேஹத்தில் பலம் அதிகம் இருப்பதாக ஏதோ ஒருவாறு தோன்றுகிறது. ஆனால் துயரத்தைவிட கோபமே மிகவும் மோசமுண்டுபண்ணும். கோபம் நம்மைப் பகுத்தறிவற்றவராகச் செய்யும் ; மானஸ சக்தியைச் சிதைக்க அதுவே ஹேதுவாகும்; நமது உடற்சக்தியைப் பாழாக்க அதுவே பகையாளியெனத்தகுந்தது. நமக்குக் கோபம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாயுண்டாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஆயுளும் க்ஷயித்து விடும். ஒவ்வொருமுறை உண்டாகும் கோபமும், வெளி வியாஹாரங்களில் தீமையுண்டுபண்ணுவது உண்மையாகவோ அல்லது வேறு விதமாகவோ

இருந்தபோதிலும், உள்ளூற ஒவ்வொரு முறையும் ஆயுளில் ஒவ்வோர் அம்சத்தை அழித்து விடுகிறது என்பது மட்டும் உண்மையாம். சினமற்றுச் சாந்தமாயிருப்பவருக்குப் பாக்கியமும் நற்பெயரும் பெருகுவதுபோல ஆயுளும் விருத்தியடைவது இயல்பு. ஒரு முறையுண்டாகும் சோபமானது அதன் வேகத்திற்கு அல்லது ஆத்திரத்திற்குத் தகுந்தமாதிரி ஆயுளை மாதக்கணக்கில் அல்லது வருஷக்கணக்கில குறைந்துவிடச்செய்யும். கோபம் இயற்கையிலேயே உண்டாகாதவருக்கும், கோபத்தை அடக்குபவருக்கும் உலக விவஹாரங்களில் ஆனந்தமும் இலாபமும் ஏற்படுவது எவ்வளவு வாஸ்தவமோ, ஆயுள் அபிவ்ருத்தியடைவதும் அவ்வளவு வாஸ்தவமென்று பலவித பரிசோதனைகளால் தெரியவருகிறது.—Leeds Hospital Magazine.

[இந்த தத்துவம் நமது வைத்திய சாஸ்திரங்களிலும், தர்மசாஸ்திரங்களிலும் விளக்கப்பட்டிருப்பதுடன், இந்துக்களுக்கு நன்றாகத் தெரிந்த பழைய விஷயம்,]

---

## காதுவலியும் அதைத் தடுத்தலும்.

இந்தியாவில் காது வலியால் வருந்தாத சிறுவராவது பெரியவராவது இல்லையென்றே சொல்லலாம். காது வலியென்பது ஜனங்களால் வெகு ஸாதாரணமான நோவென்றும், வியாதியென்று சொல்லக்கூடிய அவ்வளவு கொடியதல்லவென்றும் பொதுவாகக் கருதப்படுவதாய் நாம் அநுபவத்திற் பார்த்துவருகிறோம். ஆனால், அது மிகக் கொடியதென்றும், அநேக ஸமயங்களில் பிராணாபாயம் விளைவிக்கக் கூடிய அவஸ்தையை உண்டுபண்ணக்கூடியதென்றும் கற்றறிந்த வைத்தியர்களுக்குத் தெரியும். காது வலியென்பது ஒரேவித ரோகமல்ல. காதுக்குள் மிக நுட்பமாய் அமைந்துள்ள சப்தக்கிராஹக யந்திரத்திற்கு முன்பக்கத்திலுள்ள சவ்வு ஒருவாறு வியாதி கொண்டு, அங்கிருந்து சீழ் வெளிவருவதுண்டு. அவ்விடத்தில் சீழ்க்கட்டியும் (கர்ணவித்ரதி) ஸம்பவிப்பதுண்டு. இவ்வாறு சீழ்க்கட்டியுண்டாகிற விடத்திற்கு மூளை வெகு ஸமீபத்திலிருப்பதால், இந்த வித்ரதி அபாயகரமானது; இவ்வியாதி கர்ணஸ்ரோதஸ் என்னும் நாடியின் மூலமாய் மூளைக்கு ஸம்பந்தித்தால், ஸந்நிபாதரோகம் நேரிடுவது நிச்சயம். காது செவிடாகப் போவதும், கர்ணநாடியில் கோளாறுகள் ஏற்பட்டு கர்ணநாதம் என்னும் இரைத்தல் உண்டாவதும், காதுக்குள் உண்டான வியாதியினால் தாங்கமுடியாததலைவலி ஸம்பவிப்பதும், சிலஸமயம் பல்வலியேற்படுவதும் வழக்கம். இவற்றிற்கெல்லாம் முக்கியமாகக் கவனிக்கக்கூடிய மூன்று நான்கு காரணங்கள் உண்டு. ஜலதோஷம் அல்லது சைத்யம் அதிகரித்தல் அக்காரணங்களில் ஒன்றாம்; குளிர்ச்சியானது செவியினுள் அதிகமாகத் தாக்கும்போது காது மந்தப்படுவதுடன், சீழ்முதலியதும் அதனுள் உண்டாகக்கூடும். காது வலி கொஞ்சம் உண்டாயிருப்பதாகத் தெரிந்தவுடனே அதற்குப் பரிஹாரம் செய்விக்கத் தகுந்த வைத்தியரிடம் நமது ஜனங்கள் வைத்தியம் செய்துகொள்ளப் போவது முக்கியமென்று, கவனிக்காமல் அலக்ஷியமாயிருந்துவிடுதலும் அபாயகரமான விசேஷ நோய்களுக்குக் காரணமாகும். சிலருக்குப் பற்களில் அழுக்குகளும் கிருமிகளும் சேருவதாலும் காது வலியுண்டாவது வழக்கம். காதுக்குள் சிறங்கு ஏதாவது உண்டானால், அதைப்பரிஹரிக்க உடனே முயற்சிக்காமல், அதன் தோஷங்கள் கர்ண ஸ்ரோதஸ்ஸுகளில் ஸம்பந்திக்கும் வரையில் உபேக்ஷையாயிருந்து விடுவதும் காது நோய்க்குக் காரணமாகும். விசேஷமான மலபந்தமும், ஸந்நிபாத ஜ்வரம்முதலிய இதர ரோகங்களும் காது நோய்களுக்கு ஹேதுவாவதுண்டு. இவ்விஷயங்களைக் கவனித்து, மேற்கூறிய காரணங்களை ஸாத்தியமான வரையில் விலக்குவது அவசியம்.

---

## நமது புண்ணிய பூமி.

காசியில் பிரபல பட்டுவியாபாரிகளான K. S. முத்தையா கம்பெனியாரால் "நமது புண்ணிய பூமி" அல்லது "காசி" என்னும் பெயருடன் வெளியிடப்பட்டுள்ள இப்புஸ்தகம், காசியாத்திரையாகச் செல்பவருக்கு மிகவும் உபயோககரமானது. காசியென்ன, கயாக்ஷேத்திரமென்ன, ஹரித்வாரமென்ன இவைபோன்ற புண்ணிய க்ஷேத்திரங்களுடைய விவரங்களும், அவற்றிற்கு யாத்திரையாகப் போகுபவர் கவனிக்கவேண்டிய முக்கியமான பிரதேசங்களும், மற்றுமுள்ள அவ்விடத்திய பூர்வோத்தரங்களும் இப்புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அநேக சித்திரப் படங்களோடு உயர்ந்த காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 0-12-0. மேற் குறிப்பிட்ட கம்பெனியாருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.



தைலத்தை வித்துகளிலிருந்து மூன்று வகையான முறைகளைக்கொண்டு வெடித்தெடுக்கிறார்கள். என்றாலும், அவற்றுள் ஒரு முறைதான் அதிகமாக வாடிக்கையில் இருந்து வருகின்றது.

முதலில் வித்துகளைச் சோதித்து, அவற்றின் மேலுள்ள ஓடுபோன்ற கவசங்களை நீக்கி, அவற்றின்மேல் எவ்வித அழுக்கும் ஓட்டின் துண்டுகளும் பற்றியிராதபடி முற்றிலும் நிர்மலமாக எடுப்பார்கள். பிறகு ஆழமில்லாத அகன்ற இரும்பு பாணலியில் போட்டு சூடேற்றி அவை கீழும் மேலுமாக இடைவிடாமல் கிளறப்படும். ஆனால் அந்தச் சூடு, கையை ஒன்றோடொன்று அழுத்தித் தேய்ப்பதால் உண்டாகும் சூட்டைவிட மேலானதாயிராதாகையால், அவ்வித்துகள் அதிகமாய் வாடி வதங்கவும் முடியாமல் ஒருவாறு பக்குவம் செய்யப்படும். அவ்வித்துகளில் அடங்கியுள்ள தைலத்தின் அம்சங்கள் யாவும் திரவமாகப்போய், வெகு ஸாரணமாய் நசுக்கினாலும், அவற்றிலிருந்து எளிதில் பிழியப்படுவதற்கு ஸௌகரியமான பக்குவத்தை உண்டுபண்ணுவதற்கே இவ்வாறு மிகவும் மிருதுவான சூட்டில் அவை வறுக்கப்படும். பிறகு இவ்வித்துகளை, ஒரு பலமான ஆலையில் போட்டுவிடுவார்கள். அந்த ஆலை எண்ணெயையெல்லாம் பிழிந்து, எண்ணெயை ஒரு ஏனத்தில் வடியச்செய்து, சிறிது மிஞ்சியுள்ள பிண்ணாக்கை மற்றொரு பக்கத்தில் தள்ளிவிடும். ஆலையிலிருந்து வடியும்போது எண்ணெய் மிகவும் வெளுப்பாயிருக்கும். சுத்தமான ஒரு இரும்புக் கொப்பரையில் இவ்வெண்மையான எண்ணெயையும் வேண்டியவளவு தண்ணீரையும் கொட்டி சில நேரம் காய்ச்சுவார்கள். அத்தைலத்திலிருந்த அசுத்தமான அம்சங்கள் மேலே நீர்மட்டத்தில் வந்து மிதக்கும். அப்பொழுது அந்த அழுக்குகள் யாவும் அப்புறப்படுத்தப்படும். அப்பால் கொப்பரையில் ஜலத்தின்மேல் நிர்மலமான எண்ணெய் மட்டும் மிதந்து நிற்கும். எண்ணெயில் அடங்கிய வேறு சில பசைகளும் மாப்பண்டமும் ஜலத்தில் கரைந்துவிடும்; அல்ப்யூமென் என்னும் கருப்பொருள் சூட்டினால் ஒருவாறு தோய்ந்து கொள்ளும். இறுதியிற் கூறிய இச்சரக்கு ஜலத்திற்கும் எண்ணெய்க்கும் இடையில் படிந்திருக்கும். அப்பொழுது ஜாக்கிரதையாக மேலே மிதக்கும் சுத்தமான எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டு, மிகச் சொற்ப ஜலத்தை மீண்டும் அவ்வடித்தெடுத்த எண்ணெயுடன் கூட்டி, மற்றொரு சுத்தமான பாத்திரத்தில் காய்ச்சுவார்கள். அதிலிருந்து ஜலபாகம் முடிய ஆவியாகப்போனதும் ஒரு வாயகன்ற பாத்திரத்தில் தைலத்தைச் சேர்த்து வைப்பார்கள். எண்ணெய் ஆறியபிறகு குளிரக் குளிர, பார்ப்பதற்கு மிகவும் தெளிவாகவும், ஒளியூடுறுவக்கூடியதாகவும் ஆய்விடும். கடைசியிற் கூறிய விதமாகப் பக்குவம் செய்வதால், எண்ணெயிற் கலந்திருந்த நுட்பமான அசுத்தங்கள் நீங்கி, எண்ணெய் எவ்விதமான அழற்சியையும் உண்டுபண்ணாமல், குணத்திற் சிறந்ததாகும்; ஒருவிதமான வெகுட்டலையுண்டாக்கும் வாஸனையும் குறையும். ஆனால் தீயை அதிகமாகப் போடாமல் அவ்விஷயத்தில் மட்டும் விசேஷ கவனஞ்செலுத்தவேண்டும். தீ அதிகரித்தால், எண்ணெயில் வெகுட்டும் வாஸனையும், ஒருவித சிவந்த நிறமும் ஏற்பட்டு, பார்ப்பதற்கு நிர்மலமாகவும் தோற்றாது. முற்கூறிய முறைப்படி வடித்தெடுத்த எண்ணெய் புட்டிகளில் ஊற்றப்பட்டு, பிறகு வியாபாரத்திற்கு வெளியில் அனுப்பப்பட்டு வருகிறது.

மற்ற முறைகள் ஒருவாறு கஷ்டஸாத்தியமானவையாதலால் அவற்றை நாம் இங்கு விவரிக்கவேண்டிய அவசியமில்லையென்று விடுத்தோம். இங்கு விவரிக்கப்பட்டுள்ள முறைப்படி இந்தியாவில் ஆமணக்கெண்ணெய் வடிக்கப்பட்டு, சுத்தமான தைலத்தை விற்பனைக்குத் தயாராக்கினால், வெளிநாடுகளிலிருந்து ஆமணக்கெண்ணெய் இறக்குமதியாவது பெரும்பாலும் குறைந்துவிடும்,

# FIRST AID IN ACCIDENTS.
## அபாயங்களில் பிரதம உதவி.

கரதலத்திலும் விரல்களிலுமுள்ள எலும்புகளின் முறிவு:—இந்த அபிகாதங்களை, அவ்விடங்களில் உண்டாகும் வீக்கத்தினாலும், வலியினாலும், உறுத்துகிற தீவ்ரமான வேதனையினாலும் உணரலாம். முறிந்துபோன கரதலாஸ்த்திகளுக்குச் செய்யக்கூடிய சிறந்த சிகித்ஸை பின்வருமாறு: மரத்தினால் அல்லது கட்டாபர்ச்சாவினால் கரதலத்தின் உருவத்திற்கும் அளவுக்கும் ஏற்றவாறு தயார் செய்யப்பட்ட சிராயை இதில் உபயோகிக்கவேண்டும். கரதலாஸ்த்திகளின் உள்ளங்கைப் பக்கமாயுள்ள பாகங்கள் உருவத்தில் உட்கவிந்தவைகளாயிருப்பதால், உள்ளங்கையில் கனமாக மெத்தையை வைத்து, அதன்மேல் சிராய்வைத்து ஒடிந்த எலும்புகளின் முனைகள்ஒன்றோடொன்றுநன்கு இணைவதற்காக ஒரு சிறிய சிராய்த்துண்டைப் புறங்கையிலும் வைத்து அனைத்தையும் சேர்த்து பந்தநம் செய்யவேண்டும். இந்த பந்தநமானது, கரதலத்தையாவது விரல்களையாவது அசைக்கமுடியாதவிதமாய் அவ்வளவு கெட்டியாகவும் ஒழுங்காகவும் கட்டப்படவேண்டும். சில ஸந்தர்ப்பங்களில், கையை மூடிக்கொள்ளச்செய்து பந்தநம் செய்தால், ஒடிந்துபோன முனைகள் இயற்கையாயுள்ள உருவத்தையும் மற்ற நிலைமையையும் பெற்று ஒன்றுகூடுவது ஸுலபமாயிருக்கும். இவ்விதம் செய்யவேண்டிவரும்போது, பெரிய நெல்லிக்காயளவாக மிருதுவான பதார்த்தங்களால் செய்த ஒரு பந்தை உள்ளங்கையில்வைத்து, கையைமூடிக்கொள்ளச்செய்து, அப்படியே நன்கு கட்டு கட்டிவிடவேண்டும். இவ்வாறு மூன்று வாரங்கள் செய்திருக்கவேண்டும். பந்தநம் செய்து சிகித்ஸையில் இருக்கும் வரையிலும் கையை ஒரு ஏந்தானத்தினால் தாங்கியிருக்கச் செய்யவேண்டும்.

ஏதாவது ஒரு விரலின் எலும்பு ஒடிந்துவிட்டால், மரத்தினால் அல்லது கட்டாபெர்ச்சாவினால் விரலின் பருமனுக்குத்தகுந்தவாறு மெல்லியதாகச் செய்த சிராயை அல்லது சிறிது அகன்ற கரண்டிக்காம்பை, கணுக்கை வரையில் நீண்டிருக்குமாறு அமைத்துக் கட்டிவிடவேண்டும். அபிகாதம் அதிகபலமாயிருந்தாலும், அநேகம் விரல்களின் எலும்புகள் முறிந்திருந்தாலும், கணுக்கைக்குக் கீழுள்ள கையை முற்றிலும் சேர்த்து, சிராய்வைத்து பந்தநம் செய்யவேண்டும். விரல்களின் எலும்புகள் உருவத்தில் உட்புறங்கவிந்திருப்பது இயல்பாகையால், சிராயின் கீழே கனமாக மெத்தை யிடவேண்டும். கரதலத்தின் எலும்புகள் முறிந்தாலும், விரல்களின் எலும்புகள் முறிந்தாலும், அவற்றிற்கு முற்கூறியவாறு ஏற்ற பந்தநங்களைச் செய்து, கரம் முழங்கைக்குமேல் உயர்ந்து நிற்குமாறு ஏந்தானத்தில் அமர்த்தி அசையாமல் வைத்திருக்கவேண்டும்.

பிரகோஷ்டாஸ்த்திகளின்[1] முறிவு:—(பிரகோஷ்டாஸ்த்திகளையே கராஸ்த்திகள் என்றும் கூறுவோம்.) பிரகோஷ்டாஸ்த்திகள் இரண்டு(பிரகோஷ்டாஸ்த்தி), அரத்நியஸ்த்தி அல்லது வெளிக்கர எலும்பு, உட்கர எலும்பு) என்று அனைவருக்கும் தெரியும். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றாவது, இரண்டும் ஒரே காலத்திலாவது எந்த பாகத்திலாவது ஒடிந்துவிடலாம். வலி, கரத்தைத் திருப்பமுடியாமற்போதல், சிறிது அசைந்தால் பலமாக உறுத்தும் வேதனை, கரம் இயற்கையுருவம் மாறி ஒழுங்கீனமாய்ப்போதல் என்னும் இவை அறிகுறிகளாம். இரண்டு எலும்புகளும் ஒடிந்தால் முற்கூறிய குறிகளே இன்னும் பலமாய் ஸம்பவித்திருக்கக் காணலாம்.

சிகித்ஸை:—ஒருவன் முழங்கையை ஏந்தி கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும். மற்றொருவன், அபிகாதப்பட்ட கையின் பெருவிரல்மேல்நோக்கி நிற்குமாறு பிடித்துக்கொண்டு ஜாக்கிரதையாகக் கையைஇழுக்கவேண்டும். கரத்தைப்பார்க்கிலும் ஒருசிறிது அகன்ற சிராயை, நன்றாக மெத்தையிட்டு, முழங்கை முதல் விரல்கள் வரையில் நெடுக இரண்டு பக்கங்களிலும் வைத்து, படத்திற்காட்டியவிதமாய் பந்தநமிட்டுவிடவேண்டும். கரங்களைப் பஞ்சுகளால் மெதுவாகத் துடைத்து சுத்தம் செய்வதற்கல்லாமல், மூன்றுவாரங்கள் வரையில் சிராய்களை அவிழ்த்தெடுக்கக்கூடாது. மூன்றுவாரங்களுக்குப்பிறகு, நீளத்திற்குறுகிய சிராய்களை வைத்து, கணுக்கையைமாத்திரம் அசைப்பதற்கு அநுகூலமாயிருக்கும்படி விட்டுவிட்டு, மறுபடியும் கட்டிவிடவும். சிகித்ஸையில் இருக்கவேண்டியகாலம் முழுவதும், கரத்தை ஏந்தானத்தில் தாங்கி நிற்கச் செய்யவேண்டும். சிறிய சிராய்கள் வைத்துக்கட்டிய பிறகு, அப்பந்தநத்தை இரண்டுவாரங்கள் வரையில் அவிழ்க்காமல் வைத்திருந்து, அப்பால் அதையும் எடுத்துவிடலாம். அதன் பிறகுகூட இரண்டொரு வாரங்கள்வரையில், உளுத்தமாவையும் அரிசிமாவையும் கரத்திற் பூசி கரத்தை ஏந்தானத்தில் மாட்டிவைத்திருப்பது நலம்.



பிரகோஷ்டாஸ்த்திகள் என்னும் கராஸ்த்திகளின் பந்தந முறையைக் காட்டும் படம்.

சிறுகுழந்தைகளுடைய பிரகோஷ்டாஸ்த்திகள் அபிகாதங்களால் ஒடிவதற்குப்பதிலாக வளைந்துபோவது வழக்கம். ஒடிந்தமுனைகள், மூங்கிற் கழியை ஒடித்தால் அவற்றின் முனைகள் இருப்பதுபோலவே பல கூறுகளோடு கூடியதாய் ஒழுங்கில்லாமல் ஒடிந்துவிடுவதும் வழக்கம். அப்பொழுது உறுத்தும் வேதனை அதிகமாயிருக்கும். அப்பொழுது சிராய்களைவைத்து மூன்றுவாரங்கள் வரையில் கட்டிவைக்கவேண்டும்.

வயதுசென்றவர்களுக்கு மணிக்கட்டின் பக்கத்தில் பிரகோஷ்டாஸ்த்திகள் ஒடிந்துவிடுவது வழக்கம். இதைச்சரிப்படுத்தி ஸ்வஸ்த்தம் செய்வது மிகவும் கஷ்டஸாத்தியமாகும். எலும்பொடிந்த கையானது வெகு விஷமமாக வளைந்து, வீக்கம் மிகவும் அதிகரித்திருக்கும். கையைச்சிறிது நீட்டும்போது வேதனை பலமாயுண்டாகும். ஒடிந்துபோன எலும்பின் கீழ் முனையிலுள்ள எலும்புத்துண்டானது, மணிக்கட்டுக்கு மேலோடே கையின் பின்புறமாக பிதுங்கிவந்திருப்பதைக் குறிப்பிட்டுக் காணலாம். மணிக்கட்டுக்குச் சற்று மேற்புறத்தில் கையில் பள்ளம் அல்லது வளைவும் ஏற்பட்டிருக்கும். மணிக்சட்டில் அஸ்த்திகள் இடம்விட்டுப் பெயர்வதாலும் (Dislocation) கையில் இவ்விதமான கோணல்கள் ஸம்பவிப்பது வழக்கமானாலும், இந்தவிதமான அஸ்த்திபங்கத்தில், கையை நீட்டும்போது அஸாத்தியமான வேதனையும், சிறிது அசைவும் அவ்விடத்தில் உண்டாவதைக் கொண்டு, பேதத்தைத் தெரிந்துகொள்ளலாம்.



மணிக்கட்டுக்குப் பக்கத்தில் ஒடிந்துபோன பிரகோஷ்டாஸ்த்தியின் நிலைமையைக் குறிக்கும் படம்.

சிகித்ஸை:—பெருவிரல் மேல்நோக்கி நிற்குமாறு கையைப்பிடித்து, முழங்கையை அசையவொட்டாமல் பற்றிக்கொண்டு, இயற்கையான நிலைமை உண்டாகும் வரையில் கையை மெதுவாக இழுக்கவேண்டும். முழங்கைமுதல் விரல்கள்வரையில் நெடுக இரண்டு பக்கங்களிலும் மெத்தையிட்டு, சிராய்களை வைத்து நன்றாக பந்தநமிட்டுவிடவும். உட்புறமாயுள்ள சிராய், உள்ளங்கையில் படியுமிடத்தில், கரதலத்தைப்போன்ற உருவமுள்ளதாயிருக்கும்படி தயார் செய்யப்பட்டதாயிருந்தால், பந்தநத்திற்கு ஸௌகரியமாயிருக்கும். இவ்விதமான அபிகாதம் 30-வயது வரையிலுமுள்ளவர்களுக்கு நேரிட்டால், 3-வாரங்களுக்கு அதிகமாய் பந்தநம் செய்திருக்கவேண்டிய அவசியமில்லை. 30-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கானால் 4-வாரங்களுக்கு அதிகமாய் பந்தநம் அவசியமிராது. அதன்பிறகு கையை மெதுவாக ஆட்டிக்கொடுக்காதபக்ஷத்தில், அவ்விடத்தில் பிடிப்பு உண்டாய் கை நன்கு அசைக்க முடியாமற் போய்விடும்.

1. பிரகோஷடாஸ்த்தி—இதைப்பற்றி வைத்திய கலாநிதி 3-வது வால்யம் 64-வது பக்கம் பார்க்க.

# DRUGS AND MEDICINES.
## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### மந்தாரை.

இது வெள்ளை மந்தாரை, காட்டுமந்தாரை என்று இரண்டு வகைப்படும்.

வெள்ளை மந்தாரை:—(1) இதன் வேரைக் கஷாயமிட்டுக் காய்ச்சி யெடுத்து, அக்கஷாயத்துடன் சிறிது நல்லெண்ணெயைச் சேர்த்துக் கூட்டி சிறிய சீழ்க்கட்டிகளின்மேல் பூசிவருவதால் நல்ல குணமுண்டாகும். (2) இதன் புஷ்பத்தையும் சிறிது மிளகையும்வைத்து ஆட்டியெடுத்து, சிரோவேதனையில் நெற்றிக்கட்டில் பற்றுப்போடலாம். (3) இம்மந்தாரப்பட்டையின் சாற்றை, சர்மவியாதிகளிலும், கண்டமாலை முதலிய கழலைக்கிரந்தி வியாதிகளிலும் உட்கொள்ளக் கொடுக்க நல்லபலன் உண்டாகும்.

காட்டுமந்தாரை:—(1) சீதபேதியைத் தடுப்பதற்கு அல்லது ஸ்வஸ்த்தம் செல்வதற்கு இச்செடி சிறந்த வஸ்து. (2) கிருமிஹரமான குணம் இதற்கு விசேஷமாய் உண்டு. (3) கல்லீரலைப்பற்றிய வியாதிகளில் இச்சரக்கு உபயோககரமாயிருக்கும். (4) இதன் வித்துக்களைக் காடி விட்டு ஆட்டி, விஷகுணமுள்ள ஜந்துக்கள் கடித்துப் புண்ணாகிய விடங்களில் தடவுவதாலும் குணமுண்டாகும்.

---

### நாய்க்கடுகு.

இந்தியாவில் எங்கும் முளைத்துப் பயிராகும் ஒரு ஸாதாரணமான மூலிகை. பார்வையிலும் உபயோகத்திலும் கடுகின் தன்மைகள் இதற்குக் காணப்படும்.

(1) அப்பொழுதே பறித்துவந்த சுத்தமான இலையின் சாற்றை, வாததோஷ ஸம்பந்தமான காதுவலிகளில் உபயோகிக்கலாம்; இரண்டு மூன்று துளிகள் வீதம் 3 அல்லது 4 வேளை உபயோகித்தால் காதுவலி நிவ்ருத்தியாகும் என்பது பல வைத்தியர்களுடைய அனுபவம் (2) இதன் ஸ்வரஸத்தை ஆங்காங்கு உண்டாகும் வலிகளை நிவ்ருத்திசெய்ய பற்றுப்போடுவதற்கும், அவ்விடங்களைச் சிவக்கச்செய்து கொப்புளிக்கப் பண்ணுவதற்கும் உபயோகப்படுத்துவதுண்டு; ஆகவே கடுகுக்குள்ள குணங்கள் அல்லது செய்கைகள் இச்சரக்குக்கும் உண்டென்று அறியப்படுகிறது. (3) இதற்குக் கிருமிஹரம் என்கிற குணம் இருப்பதால், வயிற்றிலுண்டாகும் திமிர்ப்பூச்சிகளையும் குறுகிய நாக்குப்பூச்சிகளையும் வெளிப்படுத்த இச்சரக்கு உபயோகமானது. (4) உத்தீபநம், பாசநம் என்கிற செய்கைகள் இதற்கு இருப்பதால், சில ஸமயங்களில் துவையல் மாதிரியாகப் பக்குவம்செய்து அஜீர்ணரோகங்களிலும், ஆமதோஷம் அதிகரித்திருப்பதால் உண்டாகும் கோளாறுகளிலும் சிறிதளவு அன்னத்துடன் கலந்தும் புஜிப்பது வழக்கம்.

---

### நிமிளை பஸ்மம்.

ஆங்கிலத்தில் பிஸ்மத் ஸப்நைட்ரேட் என்கிற ஔஷதத்தை நிமிளை பஸ்மம் என்போம். மூத்திரநாளத்தின் வீக்கத்தில், டாக்டர் H. W. ஹவார்ட் என்பவர் இதை உபயோகித்து, நல்ல குணம் உண்டானதாகத் தெரியவருகிறது. இதை உபயோகிக்கும் வகை பின்வருமாறு:—முதலில், தினம் ஒன்றுக்கு மூன்று வேளைக்குமேல் மூத்திரத்தை வெளிவிடாதபடி செய்து, மூத்திரநாளத்தை (urethra) அமைதியாக வைக்கவேண்டும். அதாவது காலையில் எழுந்திருக்கையிலும், இரவில் படுக்கப்போகும்போதும், இடையில் டாக்டரிடம் வைத்தியத்திற்குப் போகும்போதும் ஆக மூன்றுவேளை மாத்திரம் மூத்திரம் வெளிவரலாம். நன்றாகக் கொதிக்கவைத்து கிருமிஹரமாகச் செய்த நிர்மலமான ஒரு அவுன்ஸ் ஜலத்தில் ஒரு ட்ராம் நிமிளை பஸ்மத்தைச் சேர்த்து, நன்றாகக்குலிக்கி, ஒரு சிறிய பீச்சாங்குழலில் இந்த திரவத்தை இழுத்தெடுத்து, மூத்திரநாளத்தினுள் பீச்சிடவேண்டும்; பீச்சாங்குழலை மூத்திரத்வாரத்திற்கு மேலாகக் கவிழ்த்துப் பிடித்து (பிணியாளியை மல்லாந்துப் படுக்கச் செய்து இவ்விதம் செய்யவும்), அக்கருவியில் அடங்கிய திரவத்தைப் பீச்சிட்டு, இரண்டு நிமிஷம் வரையில் அப்படியே பிடித்துக்கொண்டிருக்கவேண்டும். இதற்குள் மூத்திரநாளத்தினுள் அளவுக்குமிஞ்சிய ஜலம் வெளியில் வடிந்துவிட, அந்த ஜலத்திலிருந்த நிமிளை மூத்திரமார்க்கத்தில் ஆழமான பிரதேசங்களில் தங்கிவிடும். இவ்விதமாகப் பிணியாளி காலையிலும் மாலையிலும் இந்த திரவத்தைப் பிரயோகித்துக்கொள்ளவேண்டும்.



இதை பிணியாளி தனக்குத்தானே பிரயோகித்துக் கொள்ளலாம்; அல்லது வைத்தியனிடமும் செய்து கொள்ளலாம். இத்துடன் பகலில் வைத்தியரிடம் சென்று, $\frac{5}{100}$ பங்கு கோலார்கால் (Collargol) என்னும் ஔஷதம் கலந்த திரவத்தை மூத்திரநாளத்தினுள் பிரயோகித்துக்கொள்ளவும். மூத்திரநாளத்தின் வீக்கத்திற்கு இது பிரசஸ்தமான சிகித்ஸையாகும்.—Practical Medicine.

---

### ஜ்வராங்குச ரஸம்.

தாட்பத்ரியிலிருந்து வைத்தியம் வி. பரமேச்வர குருக்கள் அடியில் வருமாறு எழுதுகிறார்:—“சார்ங்கதர ஸம்ஹிதையில்” 157-வது பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஜ்வராங்குசரஸம் என்கிற ஔஷதத்தை நான் முறைக்காய்ச்சலால் வருந்திய இரண்டுபேருக்குக் கொடுத்தேன். ஒருவனுக்கு தினம் ஒன்றுக்கு மூன்று வேளை வீதம் பதினைந்துநாட்கள் கொடுத்தேன். மற்றொருவனுக்கு எட்டுநாள் கொடுத்தேன். முதல் பிணியாளிக்கு ஒரு மாஸகாலமாய் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை, சில ஸமயம் மூன்றுநாட்களுக்கு ஒரு தடவையாகப் பீடித்துவந்த ஜ்வரம் இரண்டு வாரத்தில் ஸ்வஸ்த்தமாயிற்று. இரண்டாவது பிணியாளிக்கு ஒவ்வொரு நாளும் பத்துநாட்கள் அடித்த ஜ்வரம், ஜ்வராங்குசரஸம் கொடுத்துவந்த ஒன்பதாவது நாள்முதல் வருவதில்லை. அப்பிணியாளிகள் இப்பொழுது சுகமாயிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இவ்விஷயத்தை “வைத்தியகலாநிதியில்” பிரசுரித்தால், நமது ஸஹோதர வைத்தியர்களில் அநேகர் இவ்விதம்செய்து பலனடையக் கூடுமென்று எண்ணி, இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதியனுப்பலானேன்.

---

### ச்வாஸகாஸத்தில் அயோடோபாரம்.

அயோடோபாரம் என்னும் ஔஷதத்தைப் பொடி செய்து, அதில் ஓர் அரைச் சுடிக்கைக்கும் சிறிது குறைவாக எடுத்து, நாக்கில் தொண்டைப்பக்கமாக வைத்து, அது வெகு மெதுவாக ஊறிக் கரையும்படி செய்யவும். இவ்விதம் செய்தபிறகு ஐந்துமுதல் பதினைந்து நிமிஷங்களுக்குள், உக்கிரமான வேகத்துடன் தொந்தரவு செய்த ச்வாஸகாஸம் தணிவடைந்து பிணியாளிக்கு மிகவும் ஸௌகரியமுண்டாகும். இதனால் தணிவடைந்த ச்வாஸ வேகம், மறுபடியும் ஒருமணிமுதல் ஆறுமணி ஸாவகாசம் வரையில் தொந்தரவு அளிப்பதில்லை —Practical Medicine.

---

### அர்சோரோகத்தில் சீனச்சாரம்.

சீனச்காரம் என்பது படிச்சாரத்திற்கு மற்றொரு பெயர். அர்சஸ் என்கிற மூலரோகத்தில் படிச்சாரக் குச்சியை, குதத்வாரத்தில் குளிகையாக உபயோகிக்கலாம். இரத்தப் பெருக்குண்டாகும்போது, சுண்டுவிரல் பருமனுள்ள ஒரு சீனக்காரக்குச்சியை குதத்தினுள் சுமார் 10-நிமிஷகாலம் வைத்திருக்கவும். காலையிலும் மாலையிலும் இரண்டு நாள் இதைப் பிரயோகித்து வந்தால், பிறகு அநேகநாள் வரையில் இரத்தப்பெருக்கு உண்டாவதில்லை. குறைந்தது ஒருவார காலமாவது இரத்தக் கசிவினால் உண்டாகும் கஷ்டத்தை அனுபவிக்காமல் இருக்கலாம். ஆனால் அழற்சியுண்டாக்கக்கூடிய எவ்வித ஆஹாரங்களையும் உபயோகிக்கக்கூடாது. அதிகமாக வெளியில் நடமாடவும் கூடாது.

---

### சுளுக்குகளில் பனிக்கட்டி.

தேஹத்தில் எங்கேயாவது சுளுக்கு உண்டாயிருந்தால், அவ்விடத்தில் வெந்நீர் ஒற்றடம் கொடுத்து, அடுத்தாற்போல் பனிக்கட்டியை 15-நிமிஷங்களுக்குக் குறையாமல் நாளொன்றுக்கு இரண்டு மூன்று வேளை வீதம் வைத்துவருவதால், சுளுக்கு எளிதில் நிவ்ருத்தியாகும் என்று ஓர் ஆங்கில வைத்தியர் கூறுகிறார்.

## CORRESPONDENCE.
## கடிதங்கள்.

### வினா-61. ஆஸவாரிஷ்டங்கள்.

"அன்பார்ந்த ஐயா,

தங்கள் வைத்தியகலாநிதி ஆபீஸில் பிரசுரமாயிருக்கும் சார்ங்கதர ஸம்ஹிதையின் வியாக்கியானத்தில் ஆஸவ அரிஷ்டங்களின் செய்முறைகள் வரையப்பட்டிருக்கின்றன. அதில் சொல்லியபிரகாரம், ஆஸவங்களுக்கு வேண்டிய ஸாமான்களை அப்படியே ஜலத்தில் போட்டு ஊரவைத்து, பின் ஆரைப்பூ தேன் முதலியவைகள் சேர்த்து, பூமியில் புதைத்து எடுத்தால் கெட்டுவிடுகிறதே. இதேமாதிரி, கஷாயங்கள் செய் முறைப்படி செய்து எடுத்தாலும் வெகுநாள் உபயோகத்துக்குத் தகுந்ததாய் இல்லாமல் போய்விடுகிறதே. ஆனால் வடக்கே இருந்துவரும் ஆயுர்வேத ஆஸவ, அரிஷ்ட, கஷாயங்கள் வெகுநாள்களிருக்கின்றனவே. அதன் காரணமும் தெரிவிப்பதோடு, மேற்படி மருந்துகளில் ஸ்பிரிட் (Spirits) வாஸனையும் ஏற்படுகிறதே அதன் விவரமும், தாங்கள் எவ்விதம் தயார் பண்ணுகிறீர்கள் என்ற விவரமும் தெரிய விரும்புகிறேன். மற்றவர்களைக்கேட்கும் விஷயத்தில் இதன் முறையைத் தெரிவிக்கிறார்களில்லை. தாங்கள் லோகோபகாரார்த்தமாகப் புத்தகங்கள் வெளியிடுவதாலும், அவற்றில் இவ்விஷயங்களைப் பிரசுரம் செய்வதாலும் தங்களைக்கேட்டால்தான் பக்ஷபாதமின்றி உண்மையான செய்முறை கிடைக்குமென்று நம்பி இக்கடிதம் வரையலானேன். தாங்கள் தயவுசெய்து பதில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்."

U. V. Rajaraman, Devakota.

**விடை:**—அரிஷ்டமுறைகளைச் செய்வதென்றால், முதலில் க்வாதம் என்னும் கஷாயத்திற்குத் தேவையான சரக்குகளை அவற்றிற்குப் பதினாறுமடங்கு ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காக வற்றும்படி அதைக் காய்ச்சி யெடுத்து வடிக்கட்டவும். வடிக்கட்டியதும், அதில் சேர்க்கச்சொல்லி விதிக்கப்பட்டிருக்கும் அளவுகளின் வீதம் கல்கத்திரவ்யங்களை இடித்துப் பொடிசெய்து அக்கஷாயத்தில் சேர்த்துவிடுவதோடு, வெல்லம், சர்க்கரை இவற்றில் எதையாவது ஒன்றையும் சில ஸமயம் தேனையும் அதில் கலந்து, ஆரைப்பூ (காட்டாத்திப்பூ) வைச் சேர்த்து, உடனே அந்தப் பாத்திரத்தின் வாயை ஓர் அகலால் மூடி, சீலைமண் செய்து வைத்துவிடவும். இதற்கு உபயோகிக்கப்படும் பாத்திரம் நன்றாகப் பழகிய மட்பாத்திரமாய் (சால்) இருக்கவேண்டும். இவ்விதம் செய்த ஒருமாதம் அல்லது ஒரு மண்டலம் சென்றபிறகு, பாத்திரத்தைத்திறந்து அதிலடங்கியதை வடிக்கட்டிக் கண்ணாடிக் குப்பிகளிலாவது பீங்கான் ஜாடிகளிலாவது ஊற்றி வைத்துக் கொள்ளவும். இப்படிச் செய்து எடுக்கும்போது, சில அரிஷ்டங்களில் (உதாரணமாக அர்ஜுனாரிஷ்டம் முதலியதில்), மேலே காளான்போன்றதாய் அடையைப்போல ஆடையொன்று படிந்திருக்கும். அவ்விதம் இருந்தால், அவ்வௌஷதம் கெட்டுப்போய்விட்டதாக நினைக்கக்கூடாது. மேலுள்ள ஆடையையும் வடிக்கட்டி யெடுத்துவிட்டு, தெளிவான அரிஷ்டத்தைக் கிரஹித்துக்கொள்ளலாம். அரிஷ்டம் செய்வதற்கு ஒரு திருஷ்டாந்தம்: —"திராக்ஷாரிஷ்டம்" செய்வதென்றால்: 100 - பலம் திராக்ஷையை அதற்கு 16-பங்கு ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காய் வற்றும்படி அதைக் காய்ச்சவும். இக்கஷாயத்தை ஒரு பழகிய மட்பாண்டத்தில் ஊற்றி, அடியிற் குறிப்பிடப்படும் கல்கங்களைச் சேர்க்கவும்:—தக்கோலம், இலவங்கம், ஜாதிக்காய், மிளகு, இலவங்கப்பட்டை, நாககேஸரம், திப்பிலி, சித்திரமூலம், சவியம், மோடி, அரேணுகம். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் எடுத்து இடித்து, அக்கஷாயத்தில் சேர்க்கவும்; ஆரைப்பூ (காட்டாத்திப்பூ)வை 16-பலம் சேர்த்து, 200 பலம் வெல்லத்தையும் கரைத்துவிடவும். சிலர் சிறிதளவு நாககேஸரமும் சேர்ப்பார்கள். பிறகு பாத்திரத்தின் வாயை சீலைமண்செய்து மூடி ஒருமாதம் அல்லது 40-நாள் வைத்திருந்து, அப்பால் பானையைத் திறந்து அரிஷ்டத்தை வடிக்கட்டி யெடுத்துக்கொள்ளவும்.

இவ்விதம் செய்தால் அரிஷ்டம் கெட்டுப்போக வேண்டிய அவசியமில்லை. பதார்த்தங்கள் பக்குவமாகாமலோ, பாத்திரம் நன்கு மூடப்படாமல் திறந்து வைக்கப்படுவதாலோ, ஜலம் சுத்தமா யில்லாமையினாலோ தாங்கள் சொல்லும்பிரகாரம் கெட்டுப்போகலாம். நாங்கள் எங்களுடைய வைத்தியசாலைகளில் செய்கிற அரிஷ்டங்கள் ஒன்றும் அவ்வாறு கெட்டுப்போவதைக் காணோம். கல்கத்தா முதலிய விடங்களில் சில வைத்தியர்கள் வேணுமென்று ஸ்பிரிட் முதலியதைக் கலந்து விற்பனை செய்வதாகத் தெரியவருகிறது. அது முற்றிலும் அநாவசியம். அரிஷ்டம் ஆஸவம் இவை, நாள் செல்லச்செல்ல வீர்யத்திலும் குணத்திலும் சிரேஷ்டமாய்க் கொண்டுவரும். அரிஷ்டம் கஷாயம் காய்ச்சி பக்குவம் செய்யப்படுகிறது ஆஸவம் என்பது கஷாயமாகக் காய்ச்சாமலே மற்ற விஷயத்தில் அரிஷ்டம்போலவே தயார் செய்யப்படுகிறது.—ப-ர்.



## NOTES AND ITEMS OF INTEREST.
## பலவகைக் குறிப்புகள்.

### புஸ்தக விமர்சம்.

1. இரத்த ஸம்பந்தமான சில வியாதிகளையும், அவற்றின் சிகித்ஸைகளையும்பற்றி The Denceer Chemical Mfg. Co., என்கிற பிரபல வியாபாரிகள் The Blood less Phlebotomist என்னும் புஸ்தகம் ஒன்று நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்புஸ்தகத்தில் விராவ்யதை (Blood-letting) என்கிற இரத்தத்தை வெளிப்படுத்திச் செய்யப்படும் சிகித்ஸை டாக்டர் லீனார்ட் வில்லியம், M. D. என்பவரால் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தால், ஆயுர்வேதக் கிரந்தங்களில் விவரிக்கப்பட்டுள்ள விராமோக்ஷணம் அல்லது விராவ்யதை யென்கிற சிகித்ஸாமுறையின் மஹிமையும் உபயோகமும் இத்தகையதென்று நன்கு விளங்குகின்றது. விரைகள் என்கிற காரிரத்தக் குழாய்களிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்துவதால் அநேகம் வியாதிகள் வெகு எளிதில் நிவ்ருத்தியாவதாக ஆயுர்வேதக் கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பதை நமது வைத்தியர்களும் பிறரும் அலக்ஷியமாகக் கருதியபோதிலும், அச்சிகித்ஸையின் உண்மையான குணவிசேஷங்களைப்பற்றி இக்காலத்திய சாஸ்திர நிபுணர்களான டாக்டர் L. வில்லியம் கூறியுள்ள விஷயத்தைக் கவனித்தேனும் நமது பண்டைக்காலத்திய வைத்திய சிகாமணிகள் செய்தும் எழுதியுமுள்ள அவ்விஷயத்தில் விச்வாஸமும் கௌரவபுத்தியும் நம்மவருக்கு உண்டாகுமென்று நம்புகிறோம். இப்புஸ்தகத்தில் மாஸேஜ் என்னும் மர்த்தந சிகித்ஸையும், ஸ்வேத சிகித்ஸையும், விவரிக்கப்பட்டுள்ளன. இக்கம்பெனியின் ஏஜெண்டுகள் பம்பாயில் முல்லர், மெக்லீன் அண்ட் கம்பெனியார் ஆவார்கள். இப்புஸ்தகத்தின் விலை விவரம் அதில் குறிக்கப்படவில்லை.

2. **த்ரி - தோஷதத்துவம்:** வாதம்-பித்தம்-கபம் என்கிற மூன்றுக்கும் தோஷங்கள் என்று பெயர். இம்மூன்று தோஷங்களின் இயற்கையான சுரூபங்கள் என்ன? இவற்றின் நிலைமைகள் யாவை? இத்தோஷங்களின் ஸாதாரணமான காரியங்கள் எவை? இவற்றால் தேஹத்திற்கு யாது பயன்? தேஹத்தில் இவை எவ்விடத்தில் எவ்விதம் இருந்துவருகின்றன? என்கிற விஷயங்கள் த்ரிதோஷதத்துவம் என்னும் இச்சிறிய புஸ்தகத்தில் சாஸ்த்ரீய பிரமாணங்களைக் கொண்டு ஸங்கிரஹமாய் இங்கிலீஷிலும் ஸம்ஸ்கிருதத்திலும் தனித்தனியே விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விஷயமாகப் புஸ்தகம் சாஸ்த்ரீயப் பிரமாணங்களைக் கொண்டு வெளிவிடுவதற்கு இதுவே முதல் முயற்சியாகும். புஸ்தகம் சிறியதானாலும் இதிலடங்கிய விஷயம் தற்காலத்திய சாஸ்திரங்களைப் (Sciences) படிப்பதில் ஆவலுள்ளவருக்கும், முற்காலத்திய இந்திய வைத்திய சாஸ்திரங்களில் அபிமானமுள்ள கனவான்களுக்கும் இப்புஸ்தகம் படிப்பதற்கு மிகவும் இன்பமாகவும் உபயோகமுள்ளதாகவும் இருக்கும். இது வைத்தியகலாநிதியின் பத்திராசிரியர் அவர்களால் இயற்றப்பட்டு, சென்னை, வைத்திய கலாநிதி ஆபீஸால் வெளியிடப்பட்டிருக்கிறது. இங்கிலீஷும், தேவநாகர எழுத்தில் ஸம்ஸ்கிருதமும் வெகு அழகாக அச்சிடப்பட்டுளது. வைத்திய கலாநிதி ஆபீஸுக்கு $4\frac{1}{2}$-அணாவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பினால் புஸ்தகம் கிடைக்கும்.

---

### நமது வைத்தியங்களுக்கு நற்காலம்.

தேசமெங்கும் ஆயுர்வேத-யூனானி கான்பரன்ஸ் கூடுவதனால், ஜனங்களுக்கு அதில் சிரத்தையும் கவனமும் செல்லுகின்றன. இது நற்காலத்தின் அடையாளமாகும். நமது பூர்வீக வைத்திய முறையைப்பற்றி விவகரிக்கும்படியானகிரந்தங்களையும் தத்துவங்களையும் நாம் வெகுவாகச் சேகரித்து வைக்கவேண்டும். அதோடு அந்நூல்களின் மதிப்பை நாம் நன்கு கண்டுகொள்ளவேண்டும். நமது பூர்வீக வைத்திய முறைகளைப்பற்றிய நூல்களையும் அருமையான ஏட்டுச்சுவடிகளையும் ஸம்பாதித்து டில்லியிலோ அலஹபாத் நகரிலோ நடுநாயக வைத்திய வாசகசாலை யொன்றை நிர்மாணிக்கவேண்டும் என்று ஆனரபுல் மிஸ்டர் அஸாத் ஆலி கான்பஹதூர் அவர்கள் கூறுகிறார். அந்நூல் பலவும் ஸம்ஸ்கிருதம், அரபி ஆகிய பாஷைகளில் ஏற்பட்டிருப்பதால், அவைகளைப் பலர் படிப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகவே அந்நூல்களை ஆங்கிலத்திலும், முக்கியமான தேசபாஷைகளிலும் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கவேண்டும். ஸமீபத்திலே பூனா நகரில் எல்லா இந்திய ஆயுர்வேத கான்பரன்ஸ் கூடிய பொழுது, ஆயுர்வேத நூல்களைச் சேகரித்துப் பிரசுரிப்பதாகத் தீர்மானமாயிருக்கிறது.

பூர்வீக வைத்தியமுறையை தற்காலத் தேவைக்கு ஏற்றபடி அபிவிருத்தி செய்யவேண்டுமானால், மானிட தத்துவ சாஸ்திரம், ரணவைத்திய சாஸ்திரம் முதலியவைகளையும் படித்தறியவேண்டும். பூர்வீக மருந்துகளையும் மூலிகைகளையும் தயாரித்து வைப்பதற்காகப் பலருக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். ஆயுர்வேத வைத்தியர்களும் ஹக்கீம்களும் வைத்தியம் செய்வதோடு மருந்துகளையும் தாங்களே தயாரிக்கிறார்கள். அவ்விதம் மருந்துகளைத் தயாரிப்பதில் தங்களுக்கு வேண்டிய அளவுதான் தயார் செய்கிறார்கள். மூலிகைகள் பச்சிலைகள் முதலியவைகளை ஒரு கூட்டத்தினர் சேகரித்து வரவேண்டும்; அவைகளைக்கொண்டு மருந்து முதலியனவற்றை மற்றொரு கூட்டத்தினர் தயாரித்து வரவேண்டும். இப்படி மூலிகை முதலியவற்றைச் சேகரிக்கச் சிலரும், மருந்து முதலியவற்றைத் தயாரிக்கச் சிலரும், ஏற்பட்டுவிட்டால் பூர்வீக முறையை அனுஷ்டிக்கும் வைத்தியர்களோ தாங்கள் அவ்வைத்திய சாஸ்திரத்தில் நல்ல தேர்ச்சி பெறுவதற்கு அவகாசம் ஏற்படும்.

---

### புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரான்ஸில், போர்க்களத்தில் பிணங்களை அப்புறப்படுத்தும் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள டாக்டர் ஜேம்ஸ் ஷியரெர் என்பவர்,-வெகுப் பிரகாசமான மத்தியான்னத்து வெயிலின் உதவியைக்கொண்டு மனித தேஹத்தினுள் அடங்கிய அநேகம் அவயவங்களையும், அவ்வவயவங்களில் உண்டாயிருக்கும் கோளாறுகளையும் நன்கு குறிப்பிடக்கூடிய புகைப்படங்களைப் பிடித்து எடுக்க முயன்று, அதில் அவர் பயனடைந்துவிட்டார். மூளை, கல்லீரல், விருக்கங்கள், மண்ணீரல் முதலிய உட்புற அவயவங்களின் உருவங்கள் புகைப்படத்தில் அப்படியே விழுகின்றன. இவ்வவயவங்கள் எவ்விதமான விகாரங்களை அடைந்திருக்கின்றன வென்டதையும், அவற்றில் சீழ்க்கட்டிகள் உண்டாயிருப்பதையும், அவைகளில் குண்டுகளாவது வேறு ஏதாவது பிரவேசித்திருப்பதையும் கண்டுகொள்வதில் இந்த டாக்டர் கண்டுபிடித்துள்ள உபாயம் வெகு உபயோககரமானது. மூளையில் ஓடுகிற இரத்தக்குழாய்களையும் இதனால் கண்ணுறப் பார்க்கலாம். ஆங்காங்கு இரத்தம் அதன் குழாய்களிலிருந்து வெளிப்பட்டு, தோய்ந்திருப்பதும் காணப்படும். இவ்விதம் பரிசோதனைசெய்து கண்டுபிடிப்பதற்காக மின்சாரம் தேஹத்தில் பிரயோகிக்கப்பட்டதாம்.—Practical Medicine.

---

### ஒரு புதுமையான நபும்ஸகப் பேர்வழி.

ஒரு நூதனமான நபும்ஸகப் பேர்வழி, இந்தியானுபாலிஸி (Indianapolis) யைச் சேர்ந்த டாக்டர் இ. டி, க்ளர்க் (Dr. Edmund D. Clerk) என்பவரிடம் ஏதோ சிகித்ஸைக்கு வர நேரிட்டது. அப்பிணியாளியின் வெளியுருவங்களும் ஜாடைகளும் பூர்ணமாய் புருஷனுக்குள்ள குறிகளுடன் கூடியவைகளாகவே காணப்பட்டன. ஆனால், பிறகு நன்றாகப் பரீக்ஷித்ததில், அப்பிணியாளியின் தேஹ அமைப்பிலிருந்த அற்புதம் வெளியாயிற்று. பருத்துத் தொங்கியிருந்த பீஜகோசத்தினுள், கருப்பை (uterus) ஒன்று அடங்கியிருந்தது. அத்துடன் பெரிய லிகமெண்டு என்கிற கண்டரமும், ஆர்த்தவ நாடிகள் என்கிற நாதக்குழல்களும் (Fallopian tubes) அமைந்திருந்தன. இப்பேர்வழி ஒரு ஸ்த்ரீயை ஆறு வருஷங்களுக்குமுன் விவாஹம் செய்துகொண்டும் அவள் கர்ப்பவதியாகவில்லை.—Critic and Guide.

---

### கொழுத்து ஸ்தூலித்தவனுக்கு ஹிதமான உணவு.

டாக்டர் காரன்வால் என்பவர் இவ்வாறு கூறுகிறார்:—கொழுப்பு அதிகரித்து, சதைகள் தடித்துப் பெருத்திருப்பவருக்கு உணவு கொடுக்கும் விஷயத்தில் வைத்தியர் கவனம் செலுத்தவேண்டியது மிகவும் அவசியம். மாம்ஸாஹாரம் அவர்களுக்குக் கொடிய சத்துருவாம். மாப்பண்டங்களும் அவர்களுக்குப் பொருந்திய உணவாகமாட்டா. அரிசியில் மாப்பொருளே மிகுதியாயிருப்பதால், அதை வெகு மிதமாகவே அவர்கள் உபயோகித்து வரவேண்டும். பெரும்பாலும் கனிவர்க்கங்களே அவர்களுக்கு ஏற்ற உணவுப் பொருட்கள் என்று எனது ஆராய்ச்சியினால் தெரிந்துகொண்டிருக்கிறேன். இளைப்பாகத் தோன்றும்போது வேண்டுமானால் சிறிதளவு ஆட்டுப்பாலும் ரொட்டியும் கொடுக்கலாம். ஆட்டுப்பால் கிடைக்காவிட்டால் பசும்பாலை உபயோகிக்கவும். இவ்வித உணவையே உபயோகித்துவந்தால், தேஹம் கனத்திலும் பருமனிலும் குறைந்துவரும். ஒரு வாரத்திற்கு இரண்டு பௌண்டுக்குமேல் கனம் குறையாதபடி வைத்தியர் கவனிக்கவேண்டும். இரண்டு பௌண்டுக்குமேல் குறைவதாகத் தோன்றினால் அரிசியையும் கிழங்குகளையும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கலாம்:—Life and Health.

---


# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Pandit M. Duraiswami Aiyangar,
*Ayurveda Bhushan.*

பத்திராதிபர்:
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 4. Vol. IV. | நளஞு தைமீ—மாசிமீ. FEBRUARY—1917. | ஸஞ்சிகை 6. No. 6.


162069

## AYURVEDA-NOT A MASS OF SECRET REMEDIES.

## ஆயுர்வேதமென்பது இரஹஸ்யௌஷதங்களின் திரட்சியல்ல.

By A. LAKSHMI PATHI, B.A., M.B. & C.M.,
*Physician and Surgeon.*

இந்திய வைத்தியர்கள் தமது சுயநலத்தின் பொருட்டு ஏற்படுத்திக்கொண்ட இரஹஸ்யௌஷதங்களின் ஸமூஹமே ஆயுர்வேதம் என்று அழைக்கப்படுவதாக மேனாட்டு வைத்தியர்களில் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்திய வைத்தியர்களில் அநேகமாய் ஒவ்வொருவரும், தாம் சிகித்ஸை செய்யும்போது உபயோகிக்கும் ஔஷதங்களின் உண்மையை ஒருவருக்கும் வெளிப்படையாகச் சொல்லமாட்டார் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். தத்துவமறியாத மூடவைத்தியர்களின் விஷயத்தில் மேற்கூறியவை எவ்வளவு உண்மையானபோதிலும், நன்றாகக் கற்றறிந்த ஆயுர்வேத வைத்தியர்களின்மீது அக்குறைகளைக் கூறமுடியாது. பூனாவில் நடந்த அகில பாரத ஆயுர்வேத மஹாஸபையில் 'அநுபூதப்பிரயோக விமர்சம்' என்கிற விஷயமாக நடந்தேறிய சர்ச்சைகளை ஒருவன் நேரிலிருந்து கவனித்திருந்தால், அவன், மேற்குறிப்பிட்ட குற்றங்குறைகள் முற்றிலும் ஆதாரமில்லாதவையென்று நிச்சயிப்பான். அக்கூட்டத்தில் படித்தறிந்த வைத்தியர்கள் சுமார் 120 பேருக்குமேல் வந்திருந்தார்கள். அவர்கள் வெவ்வேறு வியாதிகளிலும் பிரயோகித்து தமது அநுபவத்தில் வந்த அநேக வகையான ஔஷதச்சரக்குகளின் குணாகுணங்களைப்பற்றிய உண்மைகளை தாராளமாக விளக்கிச் சொன்னார்கள்.

மலேரியா என்கிற விஷமஜ்வரத்தின் சிகித்ஸையைப்பற்றி முதலில் சர்ச்சை நடந்தது. நமது அலோபதிக் வைத்தியர்கள் (மேனாட்டு வைத்தியர்கள்) அபிப்பிராயப்படும் விதமாய், ஒரு ஆயுர்வேத வைத்தியராவது இது ஸம்பந்தமாகத் தாம் பிரயோகித்துவரும் ஔஷத முறைகளை வெளிப்படையாகச் சொல்வதில் பின் வாங்கவில்லை. விஷமஜ்வர சிகித்ஸைக்காக அநேகம் வைத்தியர்கள் அவரவாது அநுபவப்படி சுமார் 30 முறைகளைக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய சிகித்ஸையில் உபயோகித்த முக்கியமான சரக்குகளில் நான் குறித்துக்கொண்டவை பின் வருபவையாம்:-- பேய்ப்புடல், நிலவேம்பு, வேம்பு, சீந்தில், கடுகரோஹிணீ, கழற்சிக்காய், மிளகரணை என்பனவாம். சென்னையில் சுதேச ஔஷதச் சரக்குகளின் தன்மைகளைக் கற்றறிவதிலேயே சுமார் 25-வருஷ காலத்தைக்கழித்த டாக்டர் மொஹிடீன் ஷெரிப் கான்பஹதூர் அவர்கள்

இறுதியிற் குறிப்பிட்ட சரக்கைப்பற்றி அடியில் வருமாறு கூறுகிறார்:—

“மிகவும் உக்கிரமான விஷமஜ்வரத்தினால் வருந்திய அநேகம் பிணியாளிகளுக்கு முதலில் ஏராளமாய் கொய்னாவும், வெள்ளைப் பாஷாணமும் கொடுத்துவந்தும் ஜ்வரம் நிவ்ருத்தியாகாமலிருந்த ஸமயங்களில், மிளகரணையின் வேரும் பட்டையும் அவ்வியாதியை அநேகம் பேருக்கு ஸ்வஸ்தம் செய்ததுண்டு. இச்சரக்கின் வேர்ப்பட்டைகள் குணத்திலும் உபயோகத்திலும் சிறந்தவையாயிருப்பதோடு, கொய்னா, வார்பர்க்கஷாயம் இவற்றினும் விலையிலும் மிக மலிவானவையாம். ஒரு பவுன் நிறையுள்ள சரக்குக்கின் விலை ரூ. 2—0—0 க்கும் குறைவே. ஜ்வரத்தினால் ஏற்கனவே வாய் மிகவும் கெட்டுப்போயிருக்க, அத்துடன் கொய்னாவைக் கொடுப்பதால் அதன் அபாரமான கசப்புச்சுவையினால் இன்னும் வெகுட்டல் அதிகரிப்பதும், செவி மந்தப்படுவதும் அவக்குறிகளாயிருக்கின்றன. ஆனால் முற்கூறிய சரக்குக்கு இத்துர்க்குணங்கள் கிடையா.”

அச்சபையில் வந்திருந்த வைத்தியர்கள், கொய்னாவைத் தாம் உபயோகிப்பதில்லையென்றும், அதை உபயோகித்த இரண்டு மூன்று பேர் அதனால் பின்னால் சில துர்க்குணங்கள் உண்டாவதைக்கண்டு வெறுத்ததுண்டென்றும், கொய்னா இல்லாமலே தாம் பிரயோகித்த ஔஷதங்களால் விஷமஜ்வரம் நிவ்ருத்தி யடைகிறதென்றும் வற்புறுத்திக் கூறினார்கள். இன்னமும் இந்த நாட்டிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் விஷமஜ்வர நிவாரணத்திற்காக வேண்டியவளவு கொய்னா ஸப்ளைசெய்ய முடியாமலிருப்பதால், நாட்டு வைத்தியர்கள் செய்யும் விஷமஜ்வர சிகித்ஸையினால் இச்சபையில் வந்திருந்தவர் கூறியவாறு அவ்வளவு விசேஷ குணம் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமாயிராதென்று அபிப்பிராயப்பட்டால், விஷம ஜ்வரத்தினால் இப்பொழுதுள்ள மரண விகிதத்திலும் நாட்டுப்புறங்களில் ஜனங்களுடைய மரணவிகிதம் இன்னும் எவ்வளவோ அதிகமாய் விட்டிருக்க வேண்டுமென்பதில் ஸந்தேஹமில்லை.

இதற்கு அடுத்தாற்போல் மதுமேஹம், க்ஷயம், ப்ளேக் இவற்றின் சிகித்ஸாவிஷயம் விவாதத்திற்கு வந்தது. மைசூர், ஹைதராபாக்கம், வட ஸர்க்கார் முதலியவிடங்களில் ப்ளேக் வியாதியின் கொடுமையைக் குறைப்பதற்கு ஜனங்களால் விசேஷமாக உபயோகிக்கப்பட்டு வரும் வைத்தியரத்னம் பண்டிட் டி. கோபாலாசாரியருடைய ப்ளேக் மருந்தில் அடங்கியுள்ள சரக்குகள் என்னவென்று அவர் கேட்கப்பட்டார். இத்தருணத்தில், இரவு 2-மணிக்கு மேலாகவே ஆய்விட்டதால் அவர், ப்ளேக்விஷயமாய் சில விவரங்களைச் சுருக்கிச் சொன்னார். ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டுள்ள விஸர்ப்ப வியாதிக்கும் ப்ளேக்குக்கும் இலக்ஷணங்களில் ஒற்றுமையிருப்பதைக் கவனித்து, அவ்விஸர்ப்பங்களுக்குக் கூறியுள்ள ஔஷதம் ப்ளேகுக்கும் தகுந்ததாயிருக்குமென்று நிச்சயித்து, அவ்விதமே ஒருவித ஔஷதம் தயார் செய்ததாகவும், தன்னுடைய அதிருஷ்டத்தினாலும், ப்ளேக்வியாதியினால் வருந்தும் பிணியாளிகளின் அதிருஷ்டத்தினாலும் அவ்வௌஷதத்திற்குப் பிரஸித்தியேற்பட்டதாகவும் சொல்லி விஷயத்தை ஸங்கிரஹமாய் முடித்தார். தாம் தயார் செய்திருக்கும் ஔஷதம் ஆயுர்வேத சாஸ்திரத்தில் விவரிக்கபட்டுள்ளதேயன்றி, இரஹஸ்யமானதல்லவென்றும், ஆனால் அம்முறைகளில் கொஞ்சம் தாம் வேறுவிதமாக மாறுதல் மாத்திரம் செய்திருப்பதாகவும் சொன்னார். ப்ளேக் விஷயமான தமது கொள்கைகளையும், தம் சிகித்ஸாக்ரமத்தையும் பற்றி மற்றொரு ஸமயம் ஸாவகாசமாய் அச்சபையாருக்கு விவரித்துக் கூறுவதாகவும் சொல்லிமுடித்தார்.

மேற்கூறியவைகளைக்கொண்டும், அச்சபையில் கூடியிருந்த வைத்தியர்களுக் குண்டாயிருந்த ஒற்றுணர்ச்சியைக் கொண்டும், அவர்கள் செய்த சர்ச்சைகளைக் கொண்டும் ஆயுர்



வேத வைத்தியர்கள் தமது ஔஷத முறைகளை மிகவும் கோப்யமாய் வைத்துக்கொள்ளும் சுபாவ முடையவர் என்னும் அபவாதத்தை நான் கண்டிக்க வேண்டியதாயிற்று. வைத்தியர்கள் இன்னும் முன்னுக்கு வரவேண்டுமானால், அவரவர்கள் தமது அநுபவத்தில் வரும் சிறந்த சிகித்ஸா முறைகளை அப்போதைக்கப்போது வைத்தியப் பத்திரிகைகளில் வெளியிடவேண்டும்; இதனால் ஒருவர் அறிந்த விஷயம் மற்றவர்களுக்கும் உபயோகப்பட்டு, பிணியினால் வருந்தும் அளவற்ற ஜனங்களுக்கும் அதனால் உதவி யேற்பட்டு, இத்தேச வைத்தியர்களுக்கும் பெருமை விருத்தியாகும். இது விஷயம் சீரடையவேண்டுமானால், மாகாணந்தோறும் ஆயுர்வேத ஸபைகள் ஏற்பட்டு அவ்வப்பொழுது விஷயவிசாரம் செய்ய வைத்தியஸபைகள் கூடவேண்டுவதும் அவசியம். இதனால் இப்பொழுதுள்ள வைத்தியர்கள் மட்டுமல்ல, பிற்காலத்தில் நமது ஸந்ததியில் வரும் ஆயுர்வேதவைத்தியர்களும் நன்மை யடைவார்கள்.

ஆயுர்வேதம் ஏதோ இரஹஸ்யௌஷதக் களஞ்சியம் என்று தவறுதலாகக் கருதியிருக்கும் ஆங்கில தைத்தியர்கள் ஆயுர்வேத வைத்தியர்களிடமும் அபிமானம் காட்டி ஒற்றுமையுடன் உழைப்பார்களானால், அவ்வைத்தியர்களின் உதவியினால் அநேகம் சிறந்த முறைகளைத் தாமும் தெரிந்துகொண்டு தேசத்திற்கு உதவிசெய்ய ஸௌகரியம் ஏற்படுமென்று நம்புகிறேன். மேலும், ரெஜிஸ்டர் செய்துகொண்ட டாக்டர்கள் ஆயுர்வேத வைத்தியர்களுடன் ஒற்றுழைப்பது ‘அபக்கியாதிக்கு இடமாகும்’ என்றும், ஆகவே அவ்விதம் செய்பவர் குற்றம் செய்தவர் ஆவர் என்றும் இப்பொழுதுள்ள சட்டத்தைத் திருத்தி, ஆயுர்வேத வைத்தியர்களோடு ஒற்றுழைப்பது அவசியமாகும்படி கவர்ன்மெண்டார் தகுந்த ஏற்பாடு செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

# THEORY OF TRI-DOSHAS.

## திரிதாது ஸித்தாந்தம்.

By T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

ஆயுர்வேதத்தில் உடற்கூற்றிலக்கணமும் நோய்க் கூற்றிலக்கணமும் திரிதாது ஸித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் ஸித்தாந்தமென்பது நமக்குத் தெரியாததொரு விஷயத்தைச் சங்கேதமாக ஏற்படுத்திக்கொள்ளும் பிரமேயமாம். அது நாம் உத்தேசித்துக் குறிப்பிடும் வண்ணமேயிருக்கலாம். அதனால் அதனை ஸம்பாவியம் என்றும், சொல்வார்கள். அப்படி ஒரு ஸங்கேதத்தை ஏற்படுத்திக் கொண்டாலன்றி சாஸ்திர விவஹாரங்கள் நடவாவாதலால், அப்படி ஏற்படுத்திக்கொள்வது வழக்கம். விவஹாரங்களில் ஒவ்வொரு ஸந்தர்ப்பத்திற்கும், மேலே சொல்லியபடி நாம் ஏற்படுத்திக் கொண்ட பிரமேயம் இசைந்து வருமானால் அது ஸித்தாந்தமெனப்படும். அப்படி இசைந்துவராமல், எந்தச் சந்தர்ப்பத்திலாவது அந்தப் பிரமேயம் பயன்படாது போமானால், பூர்வபக்ஷம் எனப்படும்.

திரிதாதுக்களாவன: வாயு, பித்தம், சிலேஷ்மம் என்பனவாம். பூர்வத்து ஆரியவைத்தியர்களுடைய நூல்களை யுணர்ந்து கொண்டாடத் தெரியவேண்டுமானால், இந்த ஸித்தாந்தம் இன்னதென்று நாம் தெளிவுறத்தெரியவேண்டியது இன்றியமையாததாகும். பூர்வத்து ஆரியர்களுடைய பாஷை நடைகளையும் சொற்களையும் கருத்துக்களையும் இக்காலத்துப் பாஷைகளில் மொழிபெயர்த்து விளக்குவது எளிதான காரியமன்று. 2500-ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கிவந்த சொற்களுக்கும் சொற்றொகுதிகளுக்கும் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த முதற்பொருள் (அர்த்தம்) காலக்கிரமத்தில் மிக்க மாறுபாடடைந்திருப்பது திண்ணமாதலின், அவைகளை இப்பொழுது விளக்கிச் சொல்வது ஸாமானியமான கஷ்டமன்று, மிகப்

பெருங்கஷ்டமென்பதை நாம் மறக்கலாகாது.

உதாரணமாகமேற்சொல்லிய வாயு, பித்தம், சிலேஷ்மம் என்னும் சொற்களுக்கு அங்கிலக் கிரந்தகர்த்தாக்களும், அவர்களைச் சார்ந்தொழுகும் இந்தியர்களும் சொற்பொருளே பொருளெனக் கொள்கின்றார்கள். அது மிகவும் விஸனிக்கத் தக்ககாரியம். ஏனெனில், அப்படிச் சொற்பொருளையே கொள்வதனால் அம்மூன்று சொற்களினாலும் ஆதியிற் குறிக்கப்பட்ட அர்த்தம் முழுதும் இழிவுபடுகின்றது. அவர்களுடைய மொழிபெயர்ப்பாகிய சொற்பொருளைக் கொண்டு ஆராய்ந்துபார்த்தால் திரிதாது ஸித்தாந்தம் அர்த்தமில்லாமல் அவலமாகின்றது; சிற்சிலவிடங்களில் அந்தச் சொற்பொருள் பொருந்துவதில்லை, அந்தச் சொற்பொருளினால் அர்த்தம் விளங்குவதும் இல்லை.

உண்மையுரைக்கின் ஆராய்ச்சி செய்ய முன்வந்த தீரர்களனேகர் ஆயுர்வேத சாஸ்திரத்திற்குரிய பரிபாஷைகளைக் கண்டு மயங்கிப் பயந்து பின்னடைந்திருக்கிறார்கள். ஆனால், அக்னிவேசர், ஸுச்ருதர் ஆகிய இவர்களுடைய கிரந்தங்களிலுள்ள பரிபாஷைகளுக்குத் தாம் செய்யும் அர்த்தம் பிழைபட்டிருக்கலாமென்றும், அதனால் அந்தக்கிரந்தகர்த்தாக்களுடைய உண்மையான கருத்து தமக்குப் புலப்படாமற் போயிருக்கலாமென்றும் மேற்சொல்லிய ஆராய்ச்சிசெய்ய முன் வந்தவர்களெவரும் நினைத்ததாகத்தெரியவில்லை. அவ்வாறு செய்த விபரீதமான அர்த்தத்தைக் கொண்டு விமர்சனைசெய்து முடிவில் ஆயுர்வேதசாஸ்திரத்தில் அஸம்பாவிதமான பண்டைக்காலத்து அபிப்பிராயங்கள் அடங்கி யிருக்கின்றனவென்றும், அவை பெரும்பாலும் அர்த்தமில்லாதவைகளாகவும், அர்த்தம் விளங்காதவைகளாகவும் இருக்கின்றனவென்றும் அவர்கள் சொல்லத் தலைப்பட்டுவிட்டார்கள். மேற்கூறிய சாஸ்திர பரிபாஷைகள் மாத்திரமேயல்லாமல், நோய்களின் பெயர்களும், தேகபாகங்களின் பெயர்களும், ஓஷதிகளின் பெயர்களுங்கூடப் பற்பலவிதமாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன.

இந்த விஷயவாராய்ச்சியோ மிகப் பெருங்கஷ்டஸாத்தியமானது; இன்னதே அர்த்தமெனத்தீர்மானமாகச் சாதிக்கு முன்னர் மிகப்பாடு வேண்டியதாயிருக்கின்றது. இனி, இங்குயான் எடுத்துரைக்கும் அர்த்தமே திரிதாது ஸித்தாந்தத்திற்குச் சரியான விவரமென்று இப்போதைக்கு (தாத்காலிகமாக) யான் கொண்டிருக்கின்றேன். புராதனவைத்தியக் கிரந்தங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற உடற் கூற்றிலக்கணங்களையும் நோய்க்கூற்றிலக்கணங்களையும் தெரிந்துகொள்வதற்கு இந்த அர்த்தம் எனக்கு மிகப் பயன்பட்டிருக்கின்றது; இதுவன்றி எனது கொள்கைகளுக்கு (யான் சொல்லும் அர்த்தங்களுக்கு) ஆதாரமாகச் சரகஸம்ஹிதையினின்றும, ஸுச்ருத ஸம்ஹிதையினின்றும் மேற்கோள்கள் இதனடியிற் காட்டியிருக்கின்றேன்.

இந்தச் சித்தாந்தத்தின்படி மானிடதேகத்தில் வாயு, பித்தம், சிலேஷ்மம் என்னும் மூல தத்துவங்கள் மூன்று இருக்கின்றன. இவைகளுக்குத் திரிதாது என்பது பொதுப் பெயர்; ஆயினும் இவைகளைத் 'திரிதோஷங்கள்' மூவகை விகிருத தத்துவங்கள், (three morbid principles) என்று அடிக்கடி வைத்திய கிரந்தங்கள் குறிக்கின்றன. இந்தத்தாதுக்கள் ஸஹஜஸ்திதியில் அன்னியோன்னியானுகுணமாய் இருக்கையில், தேகத்தை ஆரோக்கியமாக வைக்கின்றன.

இம்மூன்று தாதுக்களும் (தோஷங்களும்) அல்லாமல் தேகத்தில் வேறு தத்துவங்கள் ஏழு இருக்கின்றன; அவைகளையும் 'தாதுக்கள்' என்கிறார்கள். அப்படிச் சொல்வது அயுக்தம். அவ்வேழு தத்துவங்களாவன:— 1. இரஸம் (lymph), 2 இரத்தம் (blood), 3. தசை (flesh,) 4. கொழுப்பு (fat), 5. எலும்பு (bone) 6. மூளை (மஜ்ஜை, marrow), 7. சுக்லம் (semen) என்னும் இவ்வேழு உபதத்துவங்களும் (secondary principles), உட்



கொள்ளும் உணவின் பரிணாமத்தால் உண்டாகின்றன. தேகத்தில் இவை செய்யுங்காரியம் எல்லாருக்குந் தெரிந்தே யிருக்கின்றது.

இம்மட்டும் உடற்கூற்றிலக்கணத்தைப் பற்றிப் பேசினோம். இனி, மேற்சொல்லிய மூன்று தாதுக்களிற் சலனமேதேனும் உண்டாயின்,—ஏற்றம், இறக்கம், சீர்கேடு உண்டாயின்-உடற்கூற்றுச் சமநிலை குறைகின்றது (loss of the physiological balance). நோய் கூறுதலை காட்டுகின்றது (pathological state is produced), உடற்கூற்றுச் சமநிலைசற்று குறைவுற்றாலும், சிறிது தடுமாறினாலும் உடனே நோய் உண்டாகுமென்று கொள்ளக் கூடாது; நோய் உண்டாகவேண்டுமென்பது ஆவசியகமில்லை; ஆனால் அந்த ஏற்றத்தாழ்வினால் ஏற்படும் தேகமாறுபாடு நோய் கொள்வதற்கு ஆஸ்பதமானதொரு அம்சமாகின்றது. சுருக்கிச் சொல்லின், இதுவே திரிதாது ஸித்தாந்தமாகும்.

ஸம்ஸ்கிருதவைத்தியக்கிரந்தங்களில் 'தாது' என்னும் பதமும், 'தோஷம்' என்னும் பதமும் வித்யாஸமின்றிப் பரியாயபதங்களாக அடிக்கடி உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிப் பொருள்உண்டு: 'தாது' என்பது 'தா' (ஆதரி, to support) என்னும் பகுதியினடியாகப் பிறந்த சொல்லாதலின், தேகத்தை ஆதரிக்கும் ஸஹஜசக்தியாகும்; 'தோஷம்' என்பது 'துஷ்' (கெடு, to vitiate) என்னும் பகுதியினடியாகப் பிறந்த சொல்லாதலின், ரோக ஜனகசக்தியாகும்.

ஆயுர்வேதக் கிரந்தங்களில் இவ்விரு நேர்விரோதமான ஸ்திதிகளைக் குறிப்பதற்குத் 'தோஷம்' என்னும் ஒரே சொல்லை வித்தியாஸமின்றி உபயோகித்திருப்பதன் கருத்து என்னேவெனின், ஆரோக்கிய ஸ்திதியில் தேகத்தில் அமைந்திருக்கும் சக்திகளே அனாரோக்கிய ஸ்திதியில் ரோகாக்ராந்த (விகிருத) தத்துவங்களாகத்திரியுந்தன்மை யுடையன என்னும் உண்மையை மாணவர் மனத்தில் வற்புறுத்துவதேயாம், மூலாதார தத்துவங்களென்பனவும் ரோகஜனகாம்சங்களென்பனவும் வேறல்லவென்பதைக் காட்டும் பொருட்டே வைத்தியநூலாசிரியர்கள் திரிதாதுகளைக் குறிப்பதற்கும் திரிதோஷங்களைக் குறிப்பதற்கும் 'தோஷம்' என்னும் ஒரே சொல்லை வழங்கினார்களென்க. ஆயினும், கலக்கமொழிக்கக் கருதித் 'தாது' வென்னும் சொல்லையும், 'தோஷம்' என்னும் சொல்லையும் அதனதனுக்குரிய இடத்தில் உபயோகிப்பதே தகுதியாகும். இடையிற் குறிக்கப்பட்ட மற்ற ஏழுதாதுக்கள் (உபதத்துவங்கள்)அவ்வளவு முக்கியமானவையல்லவாதலின், அவைகளைத் 'தாதுக்கள்' என்னாமல் அவைகளுக்கு வேறுபெயர் வழங்குவது உசிதமாகும்.

முற்காலத்தில் மாணவர்கள் ஆசார்யனிடத்திருந்து வாய்மொழியாக வித்தை கற்று வந்தார்கள். அப்பொழுது ஆசாரியன் அவ்வவ்வவயத்திற்குரிய விவரங்களையும், உதாரணங்களையும் மேற்கோள்களையும், ஆன்றோர் ஆட்சிகளையும் எடுத்துக்காட்டித் தம் சீடர்களுக்கு அர்த்தத்தை வாய்மொழியாக விளக்கிவந்தான். அப்படிப்பட்ட காலத்தில் குழப்பந் தரத்தக்க இந்தப்பரிபாஷை மயக்கத்திற்குக் காரணமாகாதென்னலாம். ஆனால் புத்தகங்களின் மூலமாகக் கல்விகற்கவேண்டி வந்திருக்கும் இந்நாளிற் சொற்களிற் கலக்கம் சிறிதும் இருக்கலாகாது. ஆகையால் சாஸ்திரவாராய்ச்சி செய்வதிலும், குணதோஷ விமர்சனையிலும் பூர்வத்து நூலாசிரியர்களுடைய அபரிச்சேத பரிபாஷையை நாம் வழங்கலாகாது.

இப்பொழுது, வாயு, பித்தம், சிலேஷ்மம் என்னும் மூன்று சொற்களையுமே தனித்தனி எடுத்துக்கொள்வோம். இவை தேகத்தை ஆதரித்துக் காக்கும் மூன்று முதன்மையான தத்துவங்கள் அல்லது சக்திகளெனப்படும். இந்தச் சொற்கள் இந்த மூலாதாரத் தத்துவங்களைக் குறிப்பதல்லாமல், நோயுண்டாகத்தக்க மூன்றுவஸ்துக்களைக் குறிப்பதற்கும் உபயோகிக்கப்படுகின்றன. இந்த இரண்டுவிதமான

அர்த்தங்களில் இந்தச் சொற்கள் உபயோகப்படுகின்றனவென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். இந்த அர்த்தவித்தியாஸம் நம்மனத்தினாற் கற்பிக்கப்பட்டதன்று, அனாவசியமான வித்தியாசமுமன்று; எப்படியெனில், மலரூபமாய் நம்முடம்பினின்றும் வெளிப்படும் வாயு, பித்தம், சிலேஷ்மம் என்னும் வஸ்துக்களே நமது பிராணனைக் காக்கும் சக்திகளாகுமோ? மலமாய்க்கழிக்கும் வாயு, பித்த-சிலேஷ்மங்கள் வேறு என்பதும், பிராணனுக்காதாரமாயிருக்கும்-வாயு-பித்தசிலேஷ்ம தத்துவங்கள் வெறு என்பதும் நாம் சொல்லாமலேயமையும். இதற்கு நிதர்சனம் வேறு வேண்டியதில்லை.

வைத்தியக் கிரந்தங்களில் இந்த மூன்று சொற்களுக்கும் வெளிப்படையாய் உள்ள அர்த்தத்தையே அடிக்கடி கேட்டிருக்கிறார்கள். அதாவது, தேகத்தினின்று வெளிப்படும் மலங்களைக் குறிப்பதற்கே இம்மூன்று சொற்களும் உபயோகப்படுகின்றனவென்பது மாத்திரமே அவர்களுக்குத் தெரியும். ஆதலால் அந்த அர்த்தத்தையே மனத்திற்கொண்டு அவர்கள் திரிதாது ஸித்தாந்தத்தின் கருத்தைத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப்பட்டும், திரிதாது ஸித்தாந்தம் இன்னதென்பது தெரியாமல் தேங்கித் தடுமாறிப் போகிறார்கள். அப்படி அவர்கள் தடுமாறுவது ஆச்சரியமன்று. ஏனெனில் அந்த வாயு, பித்தம், சிலேஷ்மம் என்னும் சொற்களின் பொருளை அவர்கள் சரியாய்த் தெரிந்துகொள்வதில்லை.

ஸந்தர்ப்பவசத்தினாலாவது வேறு காரணங்களினாலாவது அந்தத் தாதுக்கள் ஏற்றத்தாழ்வுற்று ரோகஜனகதத்துவங்களாத் திரியும்போது, அவை தேகத்திற்குப் பீடையுண்டாக்கும். பீடை தேகமுழுமையும் வாதிக்காவிடினும், தேகத்தில் எந்த பாகத்தில் ஜீவகலை (vitality) குறைவுபட்டிருக்கிறதோ அந்தப் பாகத்தை வாதிக்கும். ஜீவகலை அல்லது பிராணதத்துவமென்பது தேகத்தில் எல்லாப்பாகங்களிலும் நிரம்பியிருக்கின்றது. அந்தப் பிராணதத்துவம் நிரம்பியிருப்பதனாலேயே அந்தந்தப் பாகத்திற்கும் ஒருவிதமான பலமும், தேஜஸ்ஸும் யோக்கியதையும் உண்டாயிருக்கின்றன. பிராணதத்துவம் குறைவுபட்டிருக்கும் இடத்திற்கு அந்த யோக்கியதை குறைந்துபோகின்றது. அப்படி யோக்கியதை குறைவுபட்டிருக்கும். பாகமே ஜீவகலை குன்றிய தேகபாகமென்று மேலே குறிக்கப்பட்டது. தாதுக்களின் ஏற்றத்தாழ்வு அந்தப் பாகங்களில் தாக்கும் அப்பொழுது அந்தப் பாகங்களில் நோய்காணும். அந்தநோயானது, எந்தத் தாது ஏற்றத் தாழ்வினாற் சீர்கெட்டதோ அதற்குத் தக்கலக்ஷணங்கள் பொருந்தியிருக்கும்.

மேற்சொல்லியபடி சீர்கெட்டநிலைமையினால் விளையும் வஸ்துக்களே மலங்களென்னப்படும். ரோகங்கண்ட தேகபாகத்தினின்று வெளிப்படும் கழிவடைப் பண்டங்களே மலங்களாகும். எந்தத் தாது சீர்கெடுவதனால் மலம் கழிகின்றதோ அதற்குத் தக்கபடி அந்த மலத்திற்குப் பெயர் ஏற்படுகின்றது. அதாவது, வாயு தாதுவின் தோஷத்தினால் வெளிப்படும் மலம் வாயுவெனப்படுகின்றது; பித்ததாதுவின் தோஷத்தினால் வெளிப்படும் மலம் பித்தமெனப்படுகின்றது; சிலேஷ்மதாதுவின் தோஷத்தினால் வெளிப்படும் மலம் சிலேஷ்மமெனப்படுகின்றது.

நோய்ப்பட்டதேகபாகங்களினின்றுவெளிப்படும் மேற்சொல்லிய மூவகை மலங்களும் நாம் கண்டறியக்கூடிய பண்டங்களாகும். தாதுக்கள் அல்லது தோஷங்கள் எனப்படுவன சக்திகளாகும் பண்டங்கள், காணக்கூடிய பண்டங்களல்ல. இயற்கையில் அமைந்துள்ள சக்திகளை நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோமோ? இல்லை. இயற்கைச் சக்திகளை அவைகளினால் விளையும் பயன்களைக் கொண்டே தெரிந்து கொள்கின்றோம். அதுபோலவே வாயு, பித்தம், சிலேஷ்மம் என்னும் இயற்கைச் சக்திகளையும் நாம் பிரத்தியக்ஷமாய்க் காணுவதில்லை. அவைகளினால் விளையும் பயன்களைக்கொண்டு தெரிந்துகொள்கின்றோம்.



ஸ்தூலரோகத்தில், அதாவது நோய் விடுவத்தில் அவை ஜடபதார்த்தங்களாய்க் காணப்படுகின்றன.

மேலும் விஷயங்களை விரித்துச் சொல்லுமுன் தாதுவென்பதும் தோஷமென்பதும் இரண்டும் ஒன்றே என்று பூர்வத்து ஆரிய வைத்தியர்கள் பிடிவாதமாய்க் கொண்டிருந்தார்கள் என்பதை மறுபடி நாம் இங்கு எடுத்துச் சொல்லி வற்புறுத்தவேண்டியது அவசியமாய் இருக்கின்றது. ஜீவாதாரமாய் இருந்து பிராணனை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையை நடத்திவருகிற சக்திகளே, சீர்கேடுறுங்கால் வியாதியை யுண்டாக்கும் பெரியசக்திகளாகின்றனவென்பதை மறக்கலாகாது. மானிடதேகமென்பது பிரபஞ்சமென்னும் பிரம்மாண்டத்தின் ஓர் அம்சம் என்பது ஆரியர்களின் கொள்கை. அதாவது மானிடதேகம் என்பது பிரபஞ்சத்தில் ஒருபாகம். பிரபஞ்சமென்பதில் நமது தேகமும் சேர்ந்திருக்கின்றது; பிரபஞ்சத்திற் காணப்படும் லக்ஷணங்களெல்லாம் நமது தேகத்தில் காணப்படும்; பிரபஞ்சத்தின் சக்திகளெல்லாம் நமது தேகத்திலும் உண்டு. அந்தச் சக்திகள் பெரிய உடலாகிய பிரபஞ்சத்திற் பெரிதாயும் பலமாயும் காணப்பட்டால், சிறிய உடலாகிய நமதுதேகத்தில் சிறிதாயும் ஸூக்ஷ்மமாயும் காணப்படும். பிரபஞ்சத்தைப் பெரியஉடல் அல்லது பிரம்மாண்டம் என்போமாயின் நமது தேகத்தைச் சிறிய உடல் அல்லது பிண்டாண்டம் என்கின்றோம். தேகத்தின் அவயவங்கள் அனைத்தும் கருப்பிண்டத்தில் ஸூக்ஷ்மமாய் அமைந்திருப்பதுபோலவும், மரத்தின் அவயவங்களெல்லாம் விதையில் ஸூக்ஷ்மமாய் அமைந்திருப்பது போலவும், பெரிய படத்தின் அங்கங்களெல்லாம் அதையே குறுக்கியெடுத்த சிற்றுருப் படத்திலும் காணப்படுவதுபோலவும், பிரம்மாண்டத்திலுள்ள சக்திகள் பிண்டாண்டத்திலும் காணப்படும் என்று சொல்லலாம்.

நிதானஸ்த்தானம் என்னும் கிரந்தத்தின் முதல் அத்தியாயத்தில் தன்வந்திரியைப் பார்த்து ஸூச்ருதர் "தேகத்தில் வாயு எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்விதமாக எவ்வெக்காரியங்கள் செய்கின்றது, அது ஸஹஜஸ்திதியில் எப்படியிருக்கும், சீர்கெட்ட நிலைமையில் எப்படியிருக்கும்" என்பன வாதியவிஷயங்களையெல்லாம் எனக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்று கேட்கிறார். அதற்குத் தன்வந்திரி கூறும் மறுமொழி வருமாறு:—

"தேகத்தில் ஸஞ்சரிக்கும் பிராணவாயுவானது தனக்குத் தானாய் உண்டானது (மற்றொன்றினால் உண்டாக்கப்பட்டதன்று); என்றென்றைக்கு இடையறாதிருக்கின்ற ஈச்வரசக்தியும் இந்தப்பிராணவாயுவும் ஒன்றேயென்பது நமது கொள்கை. ஈச்வரசக்தியைப் போலவே பிராணவாயுவானது தன்னுடைய விவஹாரங்களிலும் அந்தவிவகாரங்களின் பயன்களிலும் மற்றொன்றினாற் கட்டுப்படாமல் தன்னந் தனியாய்ப் பிறிதொரு சார்பின்றி இருக்கின்றது; சாச்வதமாயும், தான்றோன்றியாயும், ஸூக்ஷ்மமாயும், ஸர்வ வியாபியாயும் இருக்கின்றது; சராசர வஸ்துக்களில் எவ்வுருவத்திலும் காரணகாரிய தத்துவத்தை நிச்சயிப்பதற்கு இந்தப் பிராணவாயுவே முதன்மையான குணங்கமாயிருக்கின்றது. வாயு என்னும் பதம் 'வா' (= அசை) என்னும் தாதுவினின்று பிறந்தது. அது பிரபஞ்சமுழுவதும் அலைந்து அசைந்து வியாபிக்குந் தன்மையுடையதாதலால் அது 'வாயு' எனப்பட்டது; அது ஜீவாங்கக்கட்டுகளின் பிறப்பு, வளர்ப்பு, குலைவு என்னும் மாறுபாடுகள் அனைத்தையும் நிச்சயிக்குந் தன்மையது.

"அது ராஜஸகுணம் நிரம்பியது. அதாவது பிண்டீகரணசக்தி (அனுபந்தனசக்தி) வாய்ந்து முயற்சிகொள்ளுந் தன்மையது; அதன் வீரியம் இவ்வளவு அவ்வளவுஎன்று நம்மால் தெரிந்துகொள்ளமுடியாது; அங்கக்காட்டில் (தேகத்தில்) நிலைகுலைந்த தத்துவங்களையும் குறுக்கிடும் தத்துவங்களையும் துரத்தித்தள்ளு

கின்றது. அது கணப்பொழுதிலே காரியங்களைச் செய்யுந் தன்மையது ; அது தேகம் முழுதும் அடிக்கடி பாய்ந்தோடி பரவி நிற்கின்றது...... சீர்கெட்ட நிலையில் அதுவே வியாதிகளுக்கெல்லாம் ஆதி முக்கிய குணங்கமாகும். ஆகையினாலே அதை ரோகராஜன் என்பார்கள் (ரோகராட்).

“ இனி வாயுவானது தேகத்தினூடே ஸஞ்சரிக்கையில் அதற்குள்ள லக்ஷணங்களை விவரிக்கிறேன் கேள். ஸஹஜஸ்திதியில், அதாவது ஏற்றத் தாழ்வில்லாத நிலைமையில் அந்த வாயுவானது பல்வகைத் தோஷங்களையும் தாதுக்களையும் ஸமநிரையில்வைக்கின்றது; அதுவன்றி தேகத்தில் பல்வகையான ரஸாயன மாறுபாடுகள் நடந்துக்கொண்டிருக்கையில் தேகதத்துவத்தை ஒரு நிலையாய் வைத்துக்காப்பாற்றுகின்றது ; மற்றும் பஞ்சேந்திரியங்கள் தத்தம் காரியங்களைச் செவ்வனேசெய்து முடிப்பதற்குத் துணையாயிருக்கின்றது ”.

இந்த வாயுவானது ‘வாதாவரணம்’ என்று சொல்லத்தக்க வாயுவன்றென்றும், சுவாஸிக்கும் மூச்சன்றென்றும் காட்டும் பொருட்டு மேற்சொல்லிய வாக்கியங்களை விவரமாய் எடுத்துதஹரித்தோம். இனி அது என்னதென்று தர்க்கித்துக் கண்டுபிடிக்க முயலுமுன் அக்னிவேசனுடைய கிரந்தம் அதைப்பற்றி என்ன சொல்லுகின்றதென்று பார்ப்போம்.

ஸூத்திர ஸ்தானத்தின் பன்னிரண்டாம் அத்தியாயம் ஆறும் ச்லேகம் :—

“ அது மனதையடக்கி ஏகாக்கிரப்படுத்துகின்றது; புலன்களெல்லாம் தத்தம் கர்மங்களைச் செய்யும்படிச் செய்கின்றது; இந்திரியகோசரமான விஷயங்களை மனத்திற்கொண்டு போய்ச் சேர்க்கின்றது; தேகத்தின் தத்துவங்களையெல்லாம் ஒன்றாய்ப் பிணைத்துக் கொண்டிருக்கின்றது; தேகத்தின் அணுக்களெல்லாம் ஒன்றோடொன்றுகூடி இறுகி இருப்பதற்குக் காரணமாகிய பிண்டீகரண சக்திக்குச் சாதனமாயிருக்கின்றது; வாக்குக்குக்காரணமாயிருக்கின்றது; சப்தஸ்பரிசங்களுக்கு முதற்காரணமாயிருக்கின்றது; கந்தஸ்பரிசங்களுக்கு மூலமாயிருக்கின்றது. ஹர்ஷோற்சாஹங்களுக்கு ஆதியாயிருக்கின்றது ; ஜீவோஷ்ணத் தீயை மூட்டுகின்றது; தோஷங்களையெல்லாம் சோஷிக்கச்செய்கின்றது; அசுத்தங்களையெல்லாம் அகற்றி அப்புறப்படுத்துகின்றது; தேகத்திற் பெரிதும் சிறிதுமாய் நிறைந்திருக்கும் நாளங்களினூடே புகுந்து செல்கின்றது; கருப்பத்திற் கருவை உருவாக்குகின்றது; ஜீவகலை கொடுக்கின்றது.”

இவ்விரண்டு மேற்கோள்களையும், மேலே உதஹரித்த ஆதிவைத்தியகிரந்தங்கள் இரண்டிலும் அங்கங்கே காணப்படும் பற்பல வாக்கியங்களையுங் கவனித்துப் பார்க்குமிடத்து, வாயுவென்பது இயற்கையின் மூலாதார தத்துவமென்று நாம் கொள்ளவேண்டியதாய் ஏற்படுகின்றது அந்த இயற்கையின் மூலாதார தத்துவத்தைச் ‘சக்தி’ (energy) என்னலாம். மானிடதேகத்தினிடத்து அமைந்திருக்கும் அந்ததத்துவத்தைத் தாதுபலம் (nervous energy or nerve force) என்னலாம். இதை தவிர வேறுவிதமாக அதற்குப் பொருள் கூறுதலியலாது.

இந்தத்தாதுபலம் அதிகப்பட்டாலும், குறைவுற்றாலும், அஸக்தர்ப்பங்களினாலாவது, துஷ்கர்மங்களினாலாவது எவ்வகையிலேனுங் கேடுற்றால், இந்தச் சக்தியே தோஷமாய்ப் பரிணமிக்கின்றது. அதாவது, நோய்க் கூறுகளையுண்டாக்கத்தக்க தத்துவமாய்த் திரிகின்றது.

இயற்கையில் எல்லாவிடத்தும் அமைந்திருக்கும் தத்துவத்தைக் குறிப்பதற்கும், மானிடசரீரத்தில் (பொதுவாய்ப் பிராணிகளின் சரீரங்களில் என்பது பொருந்தும்) மாத்திரம் விவஹரிக்கும் தாதுபலத்தைக் குறிப்பதற்கும் ‘வாயு’ என்னும் ஒரேபதத்தை ஆதி நூலாசிரியர்கள் உபயோகித்தது பெரிய தௌர்ப்பாக்கியமே. மானிடதேகமெனும் பிண்டாண்டமானது பிரபஞ்சமெனும் பிரம்மாண்டத்தைச் சேர்ந்ததொரு அம்சமெனவே தத்துவசாஸ்



திரி கொள்கின்றான் என்பது உண்மையே. ஆனால், வைத்தியர்களிற் பெரும்பாலார்க்குள்ள அற்ப அறிவினாலும், முக்கியமாய் வைத்திய சாஸ்திரத்திற்கும் தத்துவ சாஸ்திர விசாரத்திற்கும் ஸம்பந்தமேயில்லாமற் போன காலமஹிமையினாலும் ‘வாயு’ என்னும் தத்துவத்திற்கு விபரீதார்த்தம் செய்யப்பட்டது. அதுபோலவே ‘பித்தம்’ என்னும் தத்துவத்திற்கும் ‘சிலேஷ்மம்’ என்னும் தத்துவத்திற்கும் விபரீதார்த்தங்கள் செய்யப்பட்டன.

மேற்கூறிய விரித்துரை வெறும் மனோராஜ்ய மன்றென்று காட்டும்பொருட்டு சரகஸம்ஹிதையினின்றும் இன்னுஞ்சில மேற்கோள்கள் காட்டுவோம் :—

“ வாயு வானது தேகத்திற்கு வெளியே தனது இயற்கையான நிலைமையில் இருக்கும்போது அந்தரத்தில் பூமி நிற்பதற்கு ஆதாரமாஇருக்கின்றது; நெருப்புபற்றி யெறியச்செய்கின்றது; சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், கிரஹங்கள் ஆகிய இவைகள் தத்தம் மண்டலத்தில் இடைவிடாமற் சுற்றிச் செல்லச்செய்கின்றது ; மேகங்களை யுண்டாக்குகின்றது; மலர்களுங் காய்களுந் தோன்றச்செய்கின்றது; பயிர் பச்சைகளையெல்லாம் வளரச்செய்கின்றது......... (ஸூத்திரஸ்தானம், அத்தியாயம் 12, ச்லோகம் 8)

பிறகு, ஒன்பதாவது ச்லோகத்தில், அந்த வாயு கிளர்ச்சி யுற்றக்கால் என்னசெய்யுமென்பதை விவரித்துச் சொல்லுகிறார் :—

“ அது மலைச்சிகரங்களை முறிக்கின்றது, மரங்களை வேரோடு பிடுங்குகின்றது, கடல்களைக் கலக்குகின்றது.........” என்று வர்ணித்து “ வாயுவானது தைவிகவஸ்து ” என்று அந்த ச்லோகத்தை முடிக்கின்றார்.

தேகத்தில் வாயுவின் காரியங்கள் இன்னவையென இவ்வாறு விவரிக்கின்றார் : “ தேகத்திற்குச் சலன சக்தியைக் கொடுத்தல் (பிரஸ்பந்தநம்), ஞானேந்திரியங்களில் ஏற்படும் உணர்ச்சிகளை மனதிற்கொண்டுபோய்ச் சேர்த்தல் (உத்வஹநம்), உணவுபோய்ச் சேரவேண்டிய இடத்திற்கு அதனைக் கொண்டு போய்ச் சேர்த்தல் (பூரணம்), ஜீர்ணிக்கப்பெற்ற உணவுப்பொருளினின்றும் மலங்களைப் பிரித்தல் (விவேகம்), மூத்திரமும் விந்துவும் தங்கியிருக்கவும் வெளிப்படவும் செய்தல் (தாரணம்)........” ஸுச்ருத (ஸூத்திரம் XV).

ஆயுர்வேதத்தில் வாயுவெனப்படுவது நரம்பின் சக்தி அல்லது பிராணசக்தி என்று ஒருவாறு விவரித்துச்சொல்வது ஸாத்தியமாயிருக்கக் கண்டோம். ஆனால், பித்தம் என்பதையும் சிலேஷ்மம் என்பதையும் சரியாக விவரித்துச் சொல்லக்கூடிய பதங்கள் நமக்கு இதுவரையில் கிட்டவில்லை.

பித்தமும் சிலேஷ்மமும் மானிடதேகத்தில் நடந்துகொண்டிருக்கும் ரஸாயன மாறுபாடுகளுக்குச் சம்பந்தப்பட்ட தத்துவங்களாகும். அவைகளின் காரியங்களை வாயுவானது இயக்குகின்றது. பித்தத்தின் காரியம் என்னவென்றால், அன்ன ரஸத்தை வேறு வேறு வஸ்துக்களாகத் திரிப்பதாகும் இங்கே பித்தம் என்பது நாம் கண்ணாற் காணத்தக்க பித்தநீரன்று; பித்தம் என்னும் தத்துவத்தைப்பற்றியே இங்கு பேசுகின்றோம். அந்தத் திரிபு படிப்படியாகவும் பல ரூபங்களாகவும் இருக்கின்றது. அந்தத் திரிபுகளின் பரியவஸானம் ஜீவாங்க அணுத்தன்மையான வஸ்து வடிவமாம். ஜீவாங்க அணுதன்மையான வஸ்துவென்பது புருடரில் சுக்கிலமாகவும் ஸ்திரீகளில் சோணிதமாகவும் இருக்கும். தேகத்தில் நடந்தேறிவரும் ரஸாயன மாறுபாடுகளெல்லாம் மேற்சொல்லிய அன்னரஸத்திரிபிற் சேர்ந்தவைகளேயாகும். தேகத்தில் நடக்கும் ரஸாயன மாறுபாடுகளாவன: பசனம், ச்வஸனம், ரக்தவஹனம், மலவிஸர்ஜனம். இந்த மாறுபாடுகள் ஒவ்வொன்றிலும் ஆக்கம் அழிப்பு என்னும் இரண்டு காரியங்களும் உண்டு.

மேற்சொல்லிய காரியங்கள் நடப்பதனால் உஷ்ணம் எழுகின்றது. ஆகையால் பித்தமென்றால் ஸாதாரணமாய் உஷ்ணம் என்று கொள்கிறார்கள், உஷ்ணம் என்பது பசனகாரியத்தை (ஜீரண காரியத்தை) நடப்பிக்கும் முக்கியமான காத்தாவாகும். ஆனால் உண்மையிற்பார்க்குமிடத்து, உஷ்ணோற்பத்தி என்பது பித்தத்திற் குரிய பல காரியங்களுள் ஒன்றேயாகும்.

(தொடரும்.)

## FASTING AND ITS THERAPEUTIC USES.

## இலங்கநமும் அதன் வியாதிநிவாரண குணங்களும்.

BY K. RAMASWAMI,
*Medical Practitioner.*

இந்திய வைத்தியர்கள் அநேகம் வியாதிகளில் ஆமதோஷம் என்கிற ஒருவித விகாரத்தைத் தணிப்பதற்காக இலங்கநம் போடுவது ஸாதாரணமாய் அநேகருக்குத் தெரிந்த விஷயம். அதிலும் முக்கியமாகப் பெரும்பான்மையான ஜ்வரங்களிலும் "இலங்கநம் பரமௌஷதம்" என்கிற பிரமாணத்தின்படி பிணியாளியைப் பட்டினிபோடுவது மிகச் சிறந்த சிகித்ஸையென்று ஆயுர்வேத வைத்தியர்கள் கூறுவர். தெலுங்கு தேசத்தவர் இன்றைக்கும் ஜ்வர சிகித்ஸையில் இலங்கநத்தை மிகவும் முக்கியமானதாகக் கொண்டாடி, அவ்விதமே நிறைவேற்றியும் வருகின்றனர். பொதுவாக எந்த வியாதியிலுமே, தேஹ தாதுக்களில் ஆமம் என்கிற ஒருவித மாந்திய தோஷம் அதிகரித்துவிடுவது இயல்பாகையால், அவ்வித வியாதிகளிலெல்லாம், இரண்டொரு வேளைகளோ, இரண்டொரு நாட்களோ, அல்லது, அதற்கும் அதிகமாகவோ உணவு எடுத்துக்கொள்ளாமலிருக்கும்படி பிணியாளிகளுக்கு உபதேசிப்பது வைத்தியனுடைய கடமையாகும். "நியூ யார்க் மெடிகல் ஜர்னல்" என்கிற வைத்தியப் பத்திரிகையில் இது விஷயமாக டாக்டர் ஸி. டி. ஸ்பிவக் என்பவர் எழுதியிருக்கும் விஷயத்தின் சுருக்கம் அடியில் வருமாறு:—

"ஜீர்ணம் செய்யும் கருவியான குடலில் இலங்கநத்தினால் வியாதி நிவாரணம் செய்யக்கூடியதற்கான பிராதான்யமானது பாராட்டத்தக்கது. வியாதியினால் வருந்தும் இதர அவயவங்கள் வேலையில்லாமல் ஓய்வடைந்து அமைதியாயிருப்பது அவசியமென்பதை, அப்பொழுது பசியில்லாமலிருப்பதைக் கொண்டு அறிந்துகொள்வது ஸாமானிய ஞானமுள்ளவனுக்கும் ஸாத்தியமானதே. ஜீர்ணத்திற்கும் தஹநத்திற்கும் சோஷணத்திற்கும் அவசியமான காரியங்களைச் செய்யும் குடல்களும் மற்ற அவயவங்களும் அமைதியுடன் சும்மாயிருப்பதென்றால், அதை இலங்கநத்தினாலன்றி வேறொன்றாலும் ஸாதிக்கமுடியாது. ஏதேனும் வியாதியினால் வருந்தும் அவயவத்தில் அல்லது அவயவங்களில் மேன்மேலும் (பக்குவம் செய்யமுடியாத நிலைமையில்) உணவுப் பொருட்களைத் திணிப்பதால், அவ்வவயவத்திற்கு அல்லது அவயவங்களுக்கு ஏற்கனவே இருந்த வலிவும், சுறுசுறுப்பும் குன்றிப்போய், வியாதியாகும் சத்துருவுக்கு வசப்பட்டு, மனிதன் தீர்க்கமுடியாத தீமையைத் தானே வரவழைத்துக்கொள்கிறான். வியாதியுண்டான ஸமயத்தில் ஆஹாரத்தைக் குறைத்து, அல்லது முற்றிலும் நிறுத்திவைத்து, அமைதியாகப் படுத்துக்கொண்டிருப்பது அவசியமாம். அப்பொழுது வியாதிகொண்ட அவயவங்களில் சூடாக ஒற்றடமிடுவதும் இலங்கந சிகித்ஸையில் உபயோககரமாயிருக்கும். வியாதி வெகு சொற்பமானதாயிருந்தால், ஒரு தினத்தில் மூன்றுவேளை போஜநம் செய்பவன் ஒருவேளை உணவை ஒழிப்பதுடன் மற்ற இரண்டு வேளை உணவுகளையும் மிகக் குறைவாக எடுத்துக்கொள்ளவேண்டும். வியாதியின் பலத்தை அனுஸரித்து, ஒருநாள் முழுமையுமோ இரண்டு நாட்களோ இலங்கநம் போடுவது, எவ்வௌஷதத்திற்கும் மேலான அவ்வளவு உயர்ந்த சிகித்ஸையாகும். அநேக நாட்கள் ஆஹாரமின்றியே பிணியாளியைச் சும்மாயிருக்கச் செய்தால், அவன் தேஹம் இளைத்து, பலங்குன்றி, அஸாத்தியமான அபாயம் ஸம்பவிக்குமென்று விஷயமுணராமல் நினைப்பதற்குப் பதிலாக, வியாதியின் பலம் ஒடுங்கி, உட்புற வெளிப்புற அவயவங்களுக்கெல்லாம் புதிதாக ஒருவித சுறுசுறுப்பும், வீர்யவிருத்தியும் உண்டாகுமென்றே நிச்சயிக்கவேண்டும். முதலில் இரண்டொரு நாட்களில் பிணியாளிக்கு இலங்கநத்தினால் ஏதோ ஒருவாறு அஸௌகரியமும் அலுப்பும் உண்டாகக்கூடுமாயினும், அதை இலக்ஷியம் செய்யாமல் சிகித்ஸையின் தத்துவாம்சத்தை உணர்ந்து கவலையற்றிருந்தால், தேஹத்திற் சேர்ந்திருந்த தோஷங்கள் அல்லது விஷங்கள் முற்றிலும் விலகிப்போய், அப்பால் ஆஹாரத்தில் விருப்பமும் ஆகவே வியாதி நிவாரணமானதைக் குறிப்பிடுவதற்கான சிறந்த பசியும் உண்டாகும். உணவுப் பொருட்களின் அம்சங்கள் யாவும் தேஹத்திற் பற்றி, உடலுக்கு வேண்டியவளவு ஊட்டம் உண்டுபண்ணவேண்டியது அவசியமென்று தோன்றினால், தினந்தோறும் சில நாட்கள் வரையில் வஸ்திகளைப் (Enemas) பிரயோகித்து வருவது நலம். வியாதி உக்கிரமாயிருந்தாலேயொழிய, பிணியாளி எப்பொழுதும் படுக்கையிலேயே படுத்திருக்க வேண்டிய அவசியமில்லை; வியாதி ஒருவாறு மந்தமாயிருக்கும்போது, இலங்கநமும் எழுந்துட்கார்ந்திருப்பதும் போதுமானவை. வியாதி இரைப்பையையோ குடலையோ பற்றிக்கொண்டு ஸம்பவித்ததாயிருந்தால் அப்பொழுது, வியாதியின் தத்துவத்தை உணர்ந்தும், பசியின் நிலைமைகளைக் கவனித்தும், மலச்சிக்கல் அல்லது மலங்கழிதல் முதலிய அவஸ்தாபேதங்களைப் பரீக்ஷித்தறிந்தும, நாட்கள் கணக்கான இலங்கநமோ, வேளைக்கணக்கான இலங்கநமோ எதையேனும் யோசித்துச் செய்விக்கவேண்டியது வைத்தியனுடைய கடமையாகும்."

ஆமதோஷ முதிர்ச்சியினால் அநேகம் வியாதிகள் ஸம்பவிப்பதாகவும, ஆகவே அவ்வாமதோஷத்தைத் தணிப்பதற்குப் பெரும்பான்மையான வியாதிகளிலும் இலங்கநமே இன்றியமையாத ஔஷதமென்பதாகவும், ஆயுர்வேதக் கிரந்தங்களைப் படித்தவர் கூறுவதற்கு அநுஸரணையாக, மேற் குறிப்பிட்டவாறு மேனாட்டு வைத்திய நிபுணர் ஒருவரும் அபிப்பிராயப்பட்டிருப்பதானது எல்லா வைத்தியர்களாலும் கவனிக்கத்தக்கது.

## ARE PLANTS INJURIOUS IN THE HOUSE.

## செடிகளை வீட்டில் வளர்ப்பது கெடுதியா ?

BY K. A. RANGANATHAM,
*Medical Practitioner.*

வீட்டு வாயில்களிலும், முற்றங்களிலும், படுக்கையறையின பக்கங்களிலும், மற்றும் பொதுவாக வஸிக்குமிடங்களிலும் செடிகொடிகளை வைத்து வளர்ப்பது ஆரோக்கியத்திற்குக் கெடுதியுண்டுபண்ணக்கூடியதாகுமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். காரணம் என்னென்று வினவினேமாயின் மனதுக்கெட்டாத ஏதேதோ யுக்திகளை அவர்கள் கூறுவர். ஆனால் அவ்விதம் ஒன்றும் ஸம்பவிப்பதில்லை. உண்மையை விமர்சம் செய்தோமானால், தீமைக்குப் பதிலாக—அதற்கு நேர் எதிரிடையாக—நன்மையே உண்டாகின்றது. பனையின் இனத்தைச்சேர்ந்த சிறிய செடிகளும், மலைநாட்டு ஓஷதிகளும், மற்றும் அவைபோன்ற பிணியற்ற கொடிமுதலியவைகளும தகுந்த முறைப்படி வைத்துப் பயிர் செய்யப்படுமானால், கிருஹத்தில் வஸிப்பவருக்கு அவை உண்மையில் நன்மை விளைவிக்கும். செடிகளின் இலைகள் ஆகாயத்திலுள்ள கரியமிலவாயுவை உறிஞ்சுவிடுவதால் நமக்கு மிகவும் நல்ல பயன் உண்டு. அத்தருணத்திலேயே அதற்குப் பதிலாக அவற்றிலிருந்து வெளியாகும் பிராண வாயுவால் நாம் போஷிக்கப்படுகிறோம்; இவ்வேற்பாடு முற்றிலும திருப்திகரமாகவும், பரஸ்பரம் உதவியில் பரிவர்த்தநம் செய்துகொள்ளக்கூடிய விதமாகவும் நன்கு அமைந்துளது; இச்செடிகளுக்கும் இவற்றைப் பயிரிடுபவருக்கும் சரிசமமாய் வெகு சிலாக்கியமான கைம்மாறு நடந்தேறுகின்றது. ஆனால் ஒட்டுகள் இட்டுப்பயிராக்கி மிகபபரிமளம் வீசும பூக்களை ஈன்றும் செடிகளைப் பற்றி நாம் சொல்ல வரவில்லை. அவற்றின்

அபரிமிதமான வாஸனையானது அநேகம் ஸமயங்களில் தலைவலியையும் மயக்கத்தையும் தரக்கூடியவையா யிருக்கின்றன. படுக்கையறையில் அல்லது படுக்கையறைக்கு அருகில் இவ்வாஸனையடங்கிய வாயு வீசிவந்தால், அது அநேகம்பேருக்கு, அதிலும் வாதப் பிரக்ருதியான பலஹீனர்களுக்கு மிகவும் கெடுதலையுண்டுபண்ணக் கூடியது.

அதிக வாஸனையில்லாத புஷ்பங்களையுடைய செடிகளா யிருந்தபோதிலும், அவை மிகவும் அடர்த்தியாகப் புதர்களைப்போல வளர்ந்தால் அதுவும் ஆகாது; அவற்றினால் ஈரமும் சதுப்பும் பூமியிலும் காற்றிலும் அதிகமாகப் பரவுகின்றது. அவற்றினடியில் பழைய ஜலமும் ஈரமும் நாளுக்குநாள் சேர்ந்துவரும். படுக்கையறைக்கு அருகில் தொட்டிகளில் செடிகளை வைத்துச் சதுப்பாக வளர்த்து, அவற்றிலிருந்துண்டாகும் புஷ்பங்களின் வாஸனையாலும், ஈரத்தினாலும் தலைவலியும் மற்றும் வாதநோய்களும் ஸம்பவித்து வருந்திய வியாதிக் கிரஸ்தர்களை நாம் பார்த்திருக்கிறோம். ஈரமும் ஓதமுமில்லாதவையும், மணமற்ற மலர்களையுடையவையுமான சிறிய செடிகளை அறைகளுக்கு ஸமீபத்தில் வைத்து வளர்ப்பதால் கெடுதியொன்றுங் கிடையாது.

வீட்டில் செடி கொடிகளை வைத்து, அவற்றை நல்ல நிலைமையில் இருக்கும்படி பாதுகாப்பதற்குக் கொஞ்சம் ஊக்கமும் அவகாசமும் அவசியம் வேண்டும். அவற்றிற்கு வெளிச்சம் மிகவும் முக்கியமாய் வேண்டும்; அவற்றின் வளர்ச்சிக்கு வாயுவும் இன்றியமையாதது. மிகவும் அவசியமான இவ்விரண்டையும் செடிகளுக்குப் போதுமாறு ஸப்ளை செய்யமுடியாத விடங்களில், வீட்டுக்குள் அவற்றை வைத்து வளர்க்காமலிருப்பதே மேல். விஷயமுணர்ந்த ஒரு தோட்டக்காரனைப்போல நீங்களும் சிறந்த செடி கொடிகளை வீட்டுக்குள் வைத்து வளர்த்து, அவற்றின் வளர்ச்சியின் வகைகளையும், புஷ்பிப்பது முதலிய நிலைமைகளையும் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துவந்து, அப்போதைக்கப்போது அவற்றைக் கத்தரித்தும், பழைய மண்களையும் தொட்டிகளையும் மாற்றிப் புதியவைகளை வைத்தும் பாதுகாத்துவந்தால், அச்செடிகள் உங்களுக்கு நன்மையையும் உத்ஸாஹத்தையும் ஊட்டும். தொட்டிகளில் ஜலம் கீழே ஊறிச் சென்று எல்லாத் தொட்டிகளிலிருந்தும் கசியும் நீர் ஒருமிக்க ஒரு வடிகாலில் சேர்ந்து வீட்டுக்கு வெளியில் போய்ச் சேர்ந்துவிடும்படி ஏற்பாடு செய்வதுடன், அச்செடிகளுக்கு அடியில் சில கறித்துண்டுகளையும் போட்டிருப்பது நலம். சிறிய பனஞ்செடிகளுடையவும் அவற்றைப்போன்ற மற்றச் செடிகளுடையவும் இலைகளில் படிந்துள்ள அழுக்கு முதலானதை அடிக்கடியும் கழுவி நிர்மலமாய் வைக்கவேண்டும். அழுக்குகள் சேர்ந்துவிட்டால் இலைகளின் வளர்ச்சியும் அழகும் குறைந்துவிடும். வீட்டின் உட்புறங்களில் வைத்து வளர்க்கப்படும் அழகியசெடிகளின் இலைகளைப் பஞ்சுகளாலும், சவர்க்காரம் கரைத்த நீராலும் அடிக்கடி சுத்தம்செய்வது ஐரோப்பிய வீடுகளில் வழக்கம். அழகிய மலைநாட்டுப் பூண்டுகளை வீட்டின் உட்புறங்களில் வளர்ப்பது ஆரோக்கியத்திற்கு அநுகூலமானது. அப்பூண்டுகளை இளஞ்சூடான ஜலத்தினால் காலையில் நனைத்து வருவது நலம். நீராவி நிரப்பிய ஆகாயமானது இச்சிறிய செடிகளை நனைத்துக் கிளைக்கச் செய்யவல்லது. ஆனால் குளிர் முதலியவற்றைப் போக்குவதற்கு நெருப்பு மூட்டப்பட்டிருக்கும் அறைகளில் செடி கொடிகளை வைத்திருப்பது பிசகு. அவை வாடிவதங்கிக் கெட்டுப்போவதுடன் மனிதருக்கு அநுகூலமாகவும் இராது.

சிலர், செடிகொடிகளை வீட்டில் வளர்ப்பதால், வீட்டில் ஓதம் அதிகரிக்கும் என்று குறை கூறுவர். வாஸ்தவமே; என்றாலும், செடிகளை வைப்பதற்குத் தகுந்த அளவுள்ளவையும், ஒழுக்கு அல்லது கசிவு அற்றவையுமான கெட்டியாயுள்ள தொட்டிகளை உபயோகிப்பதுமல்லாமல், அவற்றில் விளிம்புகளிலிருந்து வழியாமல் தண்ணீரைக் குறைவாகவும் ஊற்றிவந்தால் பூமியில் ஓதமுண்டாக வழியில்லை. மேலும் அத்தொட்டிகளைப் பூமிமட்டத்திற்கு மேல் சிறிது உயரமான பீடங்களின்மீது வைத்திருந்தால், பூமி சற்றும் ஈரமாவதற்குக் காரணமில்லை. ஆனால் வீட்டிற்குள் சிறிய செடிகளை மிதமாக வைத்து வளர்ப்பது உசிதமாகுமேயன்றி அபரிமிதமாக வைப்பது யுக்தமாகாது.



# வைத்திய கலாநிதி.

நள௵ தை—மாசி௴.

## ANIMAL HEAT.

### பிராணிகளின் உடற்சூடு.

ஜீவகணங்கள் உயிருடன் இருக்கையில் அவற்றின் தேஹத்தில் உற்பத்தியாகும் இயற்கையான உஷ்ணம் உடற்சூடு என்று கூறப்படுகிறது. இவ்வுடற்சூடானது பிராணிகளின் தேஹத்தை ஒவ்வோரளவான வெப்பத்தில் அமர்த்திப் பாதுகாத்து வருகின்றது. பிராணிகளைச் சுற்றிலுமுள்ள ஆகாயத்தினுடைய அல்லது வேறு எதனுடையவும் அளவில் ஏற்றக்குறைவான உஷ்ணங்களின் பற்றுதலின்றியே இவ்வுடற்சூடு உயிர் வகைகளுக்கு இயற்கையில் சுதந்திரமாய் அமைந்திருக்கின்றது. உஷ்ணமானது உயிர்த்திருப்பதற்கு அவசியமான விஷயங்களில் ஒன்றாகும்; அது எப்பொழுது தேவையான அளவிலும் குறைவுபடுகின்றதோ, அப்பொழுது ஜீவஸம்பந்தமான சுறுசுறுப்புகளும் உறக்கமடையும். சூரியன் உஷ்ண ஊற்றுகளுக்கு மிகப் பிரதான ஆதாரமாயுளது; விருக்ஷ வர்க்கங்களும், புற்பூண்டு முதலிய இதர ஜீவவர்க்கங்களிற் பெரும்பான்மையும் அதை உஷ்ணத்திற்கு ஆதாரமாகப் பெற்றிருக்கின்றன. சில பறவைகளும் வேறு சில முலையுண்ணும் பிராணிவர்க்கங்களும் தமது ஜீவசக்தியைப் பெறுவதற்குத் தேவையானவளவு உஷ்ணத்தைத் தமக்குத் தாமே உற்பத்தி செய்துகொள்ளும் சக்தியுடையவைகளா யிருக்கின்றன; இச்சூடு, அவற்றின் வெளிப்புறத்து ஆகாயம் முதலியவற்றின் ஸம்பந்தமின்றியே, பெரும்பாலும் சுதந்தரமா யேற்பட்டதென்றே சொல்லவேண்டும். இவ்வாறு உயிர்வாழ்க்கைக்கு அவசியமான உடற்சூட்டை எப்பொழுதும் சுதந்தரமாகப் பெறுவதற்கான சக்தி விசேஷமானது, மனிதஜாதிக்கு அமைந்திருப்பதுபோல அவ்வளவு வலிமையாகவும் விஸ்தாரமாகவும் மற்றெந்த ஜீவஜாதிக்கும் ஏற்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. நமது உணர்ச்சியைக்கொண்டே விஷயத்தை விமர்சம் செய்து பார்த்தோமானால், நமது தேஹம் அப்போதைக்கப்போது வெப்பத்தில் அநேக அளவான மாறுதல்களை அடைந்துவருவதாகத் தெரிந்துகொள்ளலாம். டாக்டர் ஜான் டேவீ என்பவர், ஆண்களிலும் பெண்களிலும் அநேக வகையான வயதினரை, வெவ்வேறு அளவான சீதோஷ்ண ஸ்திதிகளைப் பெற்றப் பிரதேசங்களில் பரீக்ஷித்து, தேசகால பூகாதி ஸம்பந்தமான சூட்டோடு மானிடதேஹச் சூட்டுக்கு ஏதாவது ஸம்பந்தமுண்டாவென்று 114 விதமான பரிசோதனைகளைச் செய்து பார்த்தார். இதன் மூலமாய் அவருக்குப் பலவிதமான வகையில் தெரிய வந்த தத்துவம் பின் வருமாறு :—

மனிதன் வஸித்துவருமிடத்தில் ஆகாயத்தின் உஷ்ணம் 74-டிக்ரியாக இருக்கையில், மனிதனுடைய தேஹச்சூடு 100-டிக்ரியாக இருக்கிறது. ஆகாயச் சூட்டுக்கும் உடற்சூட்டுக்கும் ஸம்பந்தமிருக்குமானால், ஆகாயச் சூட்டிற்கு ஏற்றவாறு உடற்சூடும் அதே அளவிலல்லவோ இருக்கவேண்டும்? ஆகாயச்சூடு 82-டிக்ரியாக அதிகரித்திருக்கையில், தேஹச்சூடு மிகவும் அதிகரித்து 102-டிக்ரியாக உயர்ந்திருந்தது. ஆகாயத்தின் உஷ்ணம் மிகக் குறைவான 60-டிக்ரியில் இருக்கும்போது, மனிதனுடைய மிகக் குறைவான உடற்சூடு 95·5-டிக்ரியாகக் காணப்பட்டது. இவ்வாறு பரீக்ஷிக்கையில் 27-வயது நிறைந்தவர்கள் மத்திம வயதினராகக் கிரஹிக்கப்பட்டனர். நிலைமைகளெல்லாம் அநுகூலமாயிருக்கும்போது, சிசுக்களுடைய உடற்சூடு மத்திம வயதினரின் உடற்சூட்டினும் ஒருவாறு அதிகரித்ததாகவே காணப்படுவது இயல்பு; வெளியிலுள்ள குளிர்ச்சியானது தேஹச்சூட்டைக் குறைப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; முக்கியமாய் வேலையின்றி ஒழிந்திருப்பவனுக்கு வெளிக் குளிர்ச்சியால் தேஹம் விசேஷமாகச் சூட்டை இழந்

துவிடுகின்றது. டாக்டர் டேவியானவர், இவ்விஷயமாய் தன் தேஹத்திலேயே சில பரிசோதனைகளைச் செய்து பார்த்தார். தன்னைச் சுற்றிலுமுள்ள ஆகாயம் சராசரி 37-டிக்ரியாக இருக்கும்போது, அவருடைய உடற்சூடு 96·7-டிக்ரிக்குக் குறைந்துவிட்டது. சுறுசுறுப்பாக வியாயாமம் செய்து உழைத்தபிறகும், போஜனம் செய்தபிறகும் உடற்சூடு மறுபடி தகுந்த அளவுக்கு ஏறிற்று.

வியாதிகளில், தேஹத்தின் இயற்கைச் சூடானது பலவாறு குறைந்து விடுவதுண்டு. ஜ்வரங்களில் மிகவும் அதிகமாக ஏறி, திடீரென்று 106-டிக்ரியாகக் எழும்புவதுண்டு. காலரா எனப்படும் விஷபேதியில் 67-டிக்ரியாகக் குறைந்துவிடும்.

மூலையுண்ணும் பிராணிகளுடைய தேஹத்தின் ஸாதாரண உஷ்ணம் 101-டிக்ரியாம்; பக்ஷிகளுக்கோ ஸாதாரண உடற்சூடு 103-டிக்ரி. பிராணிகளுடைய தேஹத்தில் ஸாதாரண உஷ்ணமானது நிலைமைக்குத் தகுந்தபடி அப்போதைக்கப்போது பலவிதமாய் அளவில் அதிகமாகும். தேஹத்திலுள்ள தாதுக்களின் ஸூக்ஷ்ம பூதங்கள் வேறுவிதமாக மாறிவரும்போது, பிராணவாயுவின் ஸம்பந்தத்தினால் ஒருவாறு அவை தஹிக்கப்பட்டு, தேஹத்தில் சூடு அதிகரிக்கும். தேஹத்திலடங்கிய கறியும் ஜலவாயுவும், ஆகாயத்திலுள்ள பிராணவாயுவோடு பௌதிகக் கூறுபாட்டின்படி ஒன்றாகச் சேர்ந்து தஹநமாகும்போது, உடற்சூடானது வெளியிற் பறந்துபோகும். ஆனால் எரியும் வேலை அதிகமாய் நடப்பதால், சூடு விசேஷமாக விருத்தியாவது ஸஹஜமாகையால், வெளியிற் சிதறிவிடும் சூடானது உற்பத்தியாகும் சூட்டினும் அதிகரிப்பதில்லை. சுற்றிலுமுள்ள வாயு முதலியது தேஹச் சூட்டினும் அதிக உஷ்ணமுள்ளதாயிருந்தபோதிலும், தேஹமானது தன் இயற்கைச்சூட்டை நன்றாக ஒரே சீரில் காத்துக்கொள்ளுமியல்புடையது. சாஸ்திராராய்ச்சி செய்தவர்களான பாங்கு (Bank) என்பவரும், ப்ளாக்டென் (Blagden) என்பவரும், பார்டைஸ் (Fordyce) என்பவரும் 260-டிக்ரி அளவான சூட்டில் இருக்கையிலும், தமது தேஹச்சூடு ஒருவித மாறுதலுமடையாமல் இருந்ததாகக் கூறியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் சர்மத்தின் மூலமாகவும், புப்புஸங்களின் மூலமாகவும் தேஹச்சூடு ஆவியாக வெளியாய்விடுவதேயாம். இதரப் பிராணிகளை அவற்றின் உடற்சூட்டினும் மிக்க அதிகமான உஷ்ணப் பிரதேசத்தில் விட்டிருந்தால், மனிததேஹத்தைப்போல் அவற்றின் உடற்சூட்டை இயற்கையளவில் காத்துக்கொள்வதற்கு அவற்றால் முடிவதில்லை.

## FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

(முன் தொடர்ச்சி.)

**முழங்கை மூளையெலும்பின் முறிவு**:—அரத்னியஸ்த்தியின் (உட்கரவெலும்பின்) முன்னுக்குப் பிதுங்கியுள்ள, முழங்கை முனை யென்னும் பாகத்தின் முறிவு இங்கே குறிக்கப்படுகின்றது. இந்த முறிவில், பூட்டிற்குப் பின்புறத்தில் ஒரு மடிப்பு அல்லது பள்ளம் ஏற்படும்; இப்பள்ளத்திற்குச் சற்று மேலே ஒடிந்துள்ள எலும்பின் முனை சற்று விலகி மேலுக்குக் கிளம்பியிருப்பது கைக்குப் புலப்படும். இதனால், அம்மனிதன், தன் கையை நீட்டுவதற்குத் திறமையற்றவனாவான். கையை நேராக வைத்துக்கொள்ளச் செய்து, இதற்குச் சிகித்ஸை செய்யவேணும். நன்றாக மெத்தையிடப்பட்டு, முழங்கைமுதல் கணுக் கைவரையில் நீண்டிருக்கும் ஒரு சிராயை முழங்கையின் முன்புறத்தில் வைத்து, முறைப்படி பந்தநம் செய்யவேண்டும். இக்கையை ஒரு தலையணையின்மீது அமர்த்தியிருக்கவேண்டும். இல்லையேல் கை வீங்கிவிடும் மேற்கூறியவாறு பந்தநமிட்டிருந்தால் நாலைந்து வாரத்தில் இந்த அஸ்த்திபங்கம் ஸ்வஸ்த்தமாகும்.



முழங்கையில் அஸ்த்தியின் முறிவு அல்லது இடம் விட்டு விலகுவதற்கான இன்னும் அநேகம் குறிகள் ஏற்படுவதுண்டு. இதன் நுட்பமான குறிகளைப் பரிசோதித்து உண்மையறிவது கஷ்ட ஸாத்தியமாயிருக்கும்; அவ்வாறு ஸந்தேஹிக்கக்கூடிய நிலைமையில், கையை மார்புக்குக் குறுக்காக நேர்மையாய் மடித்து, அவ்வித நேர்மையான ஒரு சிராயின்மீது கையைத் தாங்கிக்கொண்டு, கழுத்திற்கட்டிய ஒரு ஏந்தானத்தில் கையை அமர்த்தியவாறு, கைதேர்ந்த சஸ்திர சிகித்ஸகர் வருமளவும் வேறொரு சிகித்ஸையும் செய்யாமலிருப்பது சிறந்த முறையாம்.

**புஜாஸ்த்தியின் கீழ்பாக முறிவு**:—புஜாஸ்த்தியின் (இது ப்ரகண்டாஸ்த்தி) கீழ்பாகம் ஒடிந்துவிடுமானால் முழங்கை ஒருவாறு பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும்; மறுபடியும் கையை முன்னுக்குத் தள்ளினால் சரியான இயற்கை நிலைமையை அடைந்ததாகத் தோற்றும்; அதைத் தள்ளிப் பிடிக்காமலிருந்தால் மீண்டும் சுபாவஸ்திதிக்கு விரோதமான நிலைமையே அவ்வவயவத்திற்கு வந்துவிடும்; அவ்விடத்தில் வலி விசேஷித்திருக்கும்.

சிகித்ஸை:—கரத்தின் பக்கத்திலிருந்து, கோளாறடைந்து தகாதவிடத்திற் பாய்ந்துள்ள பாகங்களை புஜத்தின் பக்கமாக இலகுவாகத் தள்ளி, முழங்கையை மெதுவாக மடித்து, முழங்கை முனையிலிருந்து மேலாகப் புஜத்திற்கும், அவ்விதமே கரத்திற்கும் நெடுக ஒவ்வொரு சிராயை வைத்து பந்தநம் செய்யவேண்டும். இதற்கு உபயோகிக்கும் சிராய்கள் தண்ணீரில் இட்டுப் பதன் செய்யப்பட்ட சர்மத்தினாலாவது, கட்டாபர்ச்சா யென்கிற வஸ்துவினாலாவது ஆக்கப்பட்டிருப்பது நலம். புஜத்தில் ஸாதாரண மண்டல பந்தநமும், கரத்திலும் கரத்தின் முனைவரையிலும் புறமாற்று மண்டல பந்தநமும் பிரயோகிக்கவேண்டும். பிறகு கழுத்திற்கட்டித் தொங்கவிட்ட ஒரு ஏந்தானத்தில் கையைத் தாங்கிக்கொண்டிருக்கச் செய்யவேண்டும். சிராய்களை ஒரு மாதம் வரையில் முற்கூறிய விதமாக வைத்துக் கட்டியிருக்கவேண்டும்; பிறகு முழங்கையை இலகுவாக ஒவ்வொரு ஸமயம் அசையச் செய்து வரவேண்டும்.

**புஜாஸ்த்தியின் மத்திய பாகம் முறிதல்**:—புஜத்தின் எலும்பினுடைய மத்தியபாகம் ஒடிந்து விட்டால் அடியில் குறிப்பிடப்படும் இலக்ஷணங்களால் அதைக் காணலாம்: புஜத்தின் இயற்கை யுருவம் குலைந்துவிடும்; வலி அதிகமாயிருக்கும்; ஒடிந்துபோனவிடம் அதற்கு முன் கெட்டியாயிருந்திருக்க, இப்பொழுது அவ்விடத்திய எலும்பின் ஒடிந்த முனை அசையக்கூடியதாயிருக்கும்; புஜம் காரியங்களில் இஷ்டப்படி உபயோகிக்க முடியாததாய்விடும்.

சிகித்ஸை:—புஜத்தை முன் பக்கமாய் நேராக நிறுத்தித் தோளுக்கு ஸமமாய் உயர்த்தி, பிறகு வளைந்துள்ள முழங்கைப் பக்கத்தை முன்னுக்குத் தள்ளி, கோளாறடைந்துள்ள பாகங்களை இயற்கை நிலைமைக்கு முதலிற் கொண்டுவர வேண்டும்; பிறகு மெத்தைகள் வைத்துக் கட்டிய நான்கு சிராய்களை புஜத்தில் வைத்துக் கட்டவேண்டும். அதாவது முன்புறத்தில் ஒரு சிராயும், பின்புறத்தில் ஒரு சிராயும் இரண்டு பக்கங்களுக்கு இரண்டு சிராயும் ஆக நான்கு சிராய்கள் தேவை. இச்சிராய்கள் புஜத்தில் அடியிலிருந்து நுனிவரையில் எட்டும்படி நீண்டிருக்கவேண்டும்; புஜத்தில் வெளிப்புறமாய் வைத்துக் கட்டவேண்டிய சிராயானது மேலே தோளின் மேற்புறம் வரையிலும், கீழே முழங்கையின் அடிப்புறம் வரையிலும் எட்டவேண்டியிருப்பதால், அது மற்ற மூன்று சிராய்களையும்விட அதிக நீளமானதாயிருக்கவேண்டும் சிராய்கள் முழங்கையின் முனையைத் தாக்காமலிருக்கும்படி அவற்றைத் தயார் செய்வதில் மிகுந்த கருத்தும் கவலையும் வேண்டும். இதற்காக முழங்கை முனையைப் பரிசிக்கக்கூடிய சிராயின் நுனியில் முழங்கைப் பக்கமாயுள்ள பாரிசத்தைச் சிதைத்துத் தள்ளி, மெல்லிதாக நின்ற அச்சிராய் முனையில் மெத்தையை நன்றாக அமைத்துக் கட்டி, அப்பால் அச்சிராயை புஜத்தில் வைத்துக் கட்டவேண்டும். புஜத்தின் முன்புறத்திலும் உட்புறத்திலும் வைத்துக் கட்டப்படும் சிராய்களின் முனைகளால் முறையே முழங்கையின் உட்புறமும் அக்குளும் அழுத்தப்பட்டு அவ்விடத்திய சர்மம் சிதைவுறக்கூடும்; இது விஷயமாகக் கவனம் செலுத்தி, அவ்விடங்களில் தகுந்தவளவு மெத்தையிடவேண்டியது அவசியம். பக்கத்துச் சிராய்களின் கீழ்முனைகளாலும் முழங்கையின் சர்மம் அவ்விதமே சிதைவுறக்கூடியதே. ஆகவே சிராய் முனைகள் தாக்குமிடங்களில் எல்லாம் மெத்தையைப் பிரயோகிக்கவேண்டியது அவசியமாகும். சிராய்களை முறைப்படி புஜத்தில் வைத்து, பந்தந வஸ்திரத்தினால் ஸாதாரண மண்டலபந்தநத்தைப் புஜத்தின் மேல் பிரயோகிக்கவேண்டும். பிறகு கரதலத்திலிருந்து ஆரம்பித்து மேல்நோக்கி புறமாற்றுமண்டல பந்தநத்தைப் பிரயோகிக்க வேண்டும். கரதலமும் மணிக்கட்டும் ஒரு ஏந்தானத்தில் நிற்க, முழங்கை மட்டும் சிறிது கீழே தொங்கியவண்ணம் இருக்கவேண்டும். ஆறு அல்லது ஏழு வாரங்கள் இவ்வித பந்தநத்தோடு, இருந்துவந்து, அப்பால் உளுத்தமாவைப்பூசி

தயார்செய்யப்பட்ட கெட்டி வஸ்திரங்களைக் கட்டி இன்னும் சிலநாட்கள் வரையிலும் கையை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளவேண்டும்.

புஜாஸ்த்தியின் உச்சி அல்லது மேற்பாகம் முறிதல் :—இப்பாகம் பலவகைகளில் ஒடிந்துபோகும் ; ஆனால் ஸாதாரணமாய் ஸம்பவிக்கக்கூடிய ஒருவித முறிவு விஷயத்தை இங்கே விவரிப்போம் : புஜம் சிறிது குட்டையாய்விட்டதாகத் தோற்றும் ; எலும்பின் ஒடிந்த முனையானது அக்குளின் முன்புறத்தில் கைக்குப் புலப்படும். அஸ்த்தியின் பந்துபோன்ற உச்சி அதன் இயற்கை ஸ்தானத்தில் அசையாமல் நிற்கும் ; முழங்கையைத் திருப்பி அசைத்தால், தோளிலுள்ள இந்த புஜாஸ்த்தியின் உச்சி அசைவதுபோல, இப்பொழுது அப்பாகம் அசையாது. மற்றொரு தோளைப்போல இந்த அஸ்த்தி அமைந்துள்ள தோள் அவ்வளவு உருட்சியாயிராததோடு, தோளுக்குக் கீழே இரண்டு அங்குல தூரத்தில் ஒரு பள்ளமும் விழுந்திருக்கும். முழங்கையைப் பிடித்துக் கீழே இழுக்கும் போதும், ஒடிந்துள்ள எலும்பு முனையை அதன் இயற்கை நிலைமைக்குக் கொண்டு சேர்க்கும் போதும் அதிக வலியுண்டாகும் ;அங்குள்ள நரம்புகள் அமுக்கப்படுவதால் தாள முடியாத வலி யேற்படும். அடியிற் குறிப்பிடபடும் விஷயங்கள் தோளில் அஸ்த்திபங்கத்திற்கும் ஸந்திவிச்லேஷத்திற்குமுள்ள பேதங்களை அறிவிக்கின்றன :

தோளானது பந்துபோன்ற வட்டமான உருவத்தை இழந்தபோதிலும், அஸ்த்தி விச்லேஷத்தில் (Dislocation) ஏற்படக்கூடிய கூர்மையான கோணம் அஸ்த்திபங்கத்தில் (எலும்பு முறிவில்) காணக்கூடியதாயிராது ; எலும்பின் சிகரம் அதற்கு இயற்கையான ஸ்த்தானத்திலேயே இருப்பதாகப் பரீக்ஷையினால் பரிசித்தறியலாம்; உறுத்தும் வேதனை இதில் அதிகம் ; எலும்பின் ஒடிந்த முனை அக்குளில் பரிசித்தறியக்கூடியதாயிருக்கும் ; கோளாறடைந்த நிலைமையிலுள்ள பாகங்களை அதனதன் ஸ்த்தானத்தில் தள்ளி அமர்த்தியபிறகு, நமது கையை எடுத்தும் மறுபடி அவை கோளாறடைந்த நிலைமைக்கே திரும்பவும் வந்துவிடும் ; இக்குறிகளில் எதுவும் ஸந்தி விச்லேஷத்திற் காணக்கூடியதல்ல.

தோளின் எலும்புப்பூட்டில் அஸ்த்திபங்கத்தினுடையவும் அஸ்த்திவிசலேஷத்தினுடையவும் ஸந்தேஹங்களைக் கொடுக்கக்கூடிய இன்னும் அநேகம் விதமான அபிகாதங்களும் ஸம்பவிப்பதுண்டு. ஸந்தேஹாஸ்பதமான அத்தருணங்களில் எப்பொழுதும், அக்ஷகாஸ்த்தி முறிவுக்குக் கூறப்படப்போகிற விதமாய் குறுக்கு நெடுக்கான பந்தனத்தைத் தற்காலத்திற்குப் பிரயோகித்து, மற்ற மேற்காரியம் எதையும் கற்றறிந்த சஸ்திர சிகித்ஸகன் வருமளவும் ஒன்றும் செய்யாமல் சும்மாயிருப்பது நலம்.

சிகித்ஸை : —புஜாஸ்த்தியின் மேல்பாகம் ஒடிந்த விஷயத்தில் ஸந்தேஹம் ஒன்றும் இல்லாதபக்ஷத்தில் அடியிற் கூறப்படும் விதமாய் சிகித்ஸை செய்யவேண்டும் : இந்த அபிகாதத்தில் வீக்கம் மிகவும் அதிகமாய் உண்டாவது வழக்கம் ; அப்படியிருக்கையில் பிணியாளியைப் படுக்கையிலேயே அசையாமற் படுத்திருக்கச் செய்வதுடன், அபிகாத முண்டவிடத்தில் சூடான ஒற்றடமும் சிலநாட்கள்வரையில் கொடுத்துவரவேண்டும் ; இவ்விதம் செய்து வீக்கம் குறைந்த பிறகுதான் சிராய்களை வைத்து பந்தநம் செய்யலாம். வீக்கம் உண்டாயிராதபக்ஷத்தில், முதலிலேயே சிராய்களைப் பிரயோகிக்கலாம். சிராய் அக்குளிலிருந்து முழங்கை வரையில் எட்டும்படியான நீளமும், மூன்று அங்குலம் அகலமும் உள்ளதாய், நன்றாக மெத்தையிடப்பட்டதா யிருக்கவேண்டும். கெட்டியான சர்மம் முதலியவற்றை இரட்டையாக மடித்து, வெந்நீரில் நனைத்து மிருதுவாக்கி ஒரு குல்லாயைப்போல்செய்து கொள்ளவும் ; இக்குல்லாயை தோளின்மேல் வைத்து பந்தநமிடவேண்டும் ; குல்லாயைப்போன்ற இச்சிராயின் முன்புறத்தில் வால்போன்ற முனையொன்று தொங்கவேண்டும் ; இந்தவால் மூன்று அங்குலம் அகலமும், முழங்கைவரையில் எட்டும்படியான நீளமும் உள்ளதாயிருக்கவேண்டும் ; முழங்கைப் பக்கத்தில் நன்றாக மெத்தையிட்டு, பிறகு அந்த வால்போன்ற முனையைக் கட்டிவிடவும். இவை யாவும் ஸித்தமாயிருக்கும்போது, தோளுக்கு ஸமரேகையில் புஜத்தை மெதுவாக உயர்த்தி, முதலில் கோளாறடைந்துள்ள பாகத்தை இயற்கையான நிலைமைக்குக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். உடனே சிராய்களை வைத்து, மேலே தோள்பக்கத்திலும், கீழே முழங்கைப் பக்கத்திலும் சில பந்தநங்களை யிடவேண்டும். சிராய்கள் வேண்டியவளவு விசாலமாயிருந்தால், சிராய்களுக்கு இடையிலுள்ள அவயவத்தில் பந்தநவஸ்திரங்கள் இறுகி சிதைவு நேரிடாமலிருக்கும். பிறகு கரதலம் முதற்கொண்டு ஆரம்பித்து கிரமமாக கரத்திலும், பிறகு சிராய்களின் மேலும் பந்தந வஸ்திரத்தினால் புறமாற்று மண்டல பந்தநத்தைப் பிரயோகிக்கவேண்டும். கடைசியில் கரதலமும் மணிக்கட்டும் ஒரு எந்தானத்தில் ஸௌகரியமாய் அமர்த்தப்பட்டு, முழங்கை மாத்திரம் ஒருவாறு எந்தானத்தினால் தாங்கப்படாமல் தொங்கிக்கொண்டிருக்கும்படி செய்யவேண்டும். சிராய்களை ஆறு வாரங்கள் வரையிலும் கட்டியிருந்து, அப்பால் இரண்டொரு வாரங்கள்வரையில் உளுத்தமாவும் வஸ்திரமும் சேர்த்து பந்தநமிட்டு, அப்பால் மெதுவாக புஜத்தை அசைத்துக் கொடுக்கலாம்.



# DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### கமுகு.

கமுகு என்னும் பாக்குமரம் ஸாதாரணமாய் ஆநூபம் எனப்படும் சதுப்பான பிரதேசங்களில் எங்கும் பயிராகக் கூடிய ஒல்லியாய் ஓங்கிவளர்ந்த மரம்.

(1) கமுகுக்கு ஸ்தம்பநம் (astringent) என்னும் குணம் விசேஷமாய்உண்டு. பாக்குப்பிஞ்சுகளை, ஜாதிக்காய், மாம்பருப்பு, அதிமதுரம் முதலிய வேறு சரக்குகளுடன் சேர்த்துச் சூர்ணம் செய்து, வயிற்றுப்போக்கை நிறுத்துவதற்கு அநேகம் வைத்தியர்கள் உபயோகிப்பார்கள். (2) பாக்கில் டானிக் அம்லம் (tonic acid), காலிக் அம்லம் (gallic acid) இவை மிகுதியாயிருப்பதால், ஸ்தம்பந குணத்தோடு, பல்யம் (tonic) என்னும் குணமும் இருப்பதாகக்கூறப்படுகிறது. (3) வெற்றிலையோடு நாம் இதை உபயோகிப்பதால், நாக்கு ஒருவாறு தடித்துத் திமிர்த்துப்போவதையும், சிலருக்கு மாரடைப்பு உண்டாவதையும் நாம் அநுபவத்தில் பார்த்திருக்கிறோம். அச்செய்கை இதற்குள்ள ஸ்தம்பந குணத்தினாலும், மயக்கந் தரக்கூடிய வியவாயி என்னும் குணத்தினாலும் என்று அறியப்படுகின்றது. (4) பாக்கு பல்லீறுகளை பலப்படுத்தும். (5) வெற்றிலையோடு உபயோகிப்பதால் வாயில் துர்நாற்றம் அரோசகம் இவற்றைப் போக்கும். (6) பாக்குகளை உடைத்துக் கறுக வறுத்து, சூர்ணம் செய்து பல் துலக்கி வரலாம். (7) பாக்குக்கு கிருமிக்நம் (anthelmintic) என்னும் குணம் உண்டென்றும் தெரியவருகிறது. அவற்றைப் பாலில் ஊறவைத்து, இரண்டு நாள் சென்றபின் எடுத்து உலர்த்தி, ஸமயெடை வாய்விடங்கம் சேர்த்துப் பொடிசெய்து, 15 முதல் 25 நெல்லெடைவரையில் தினத்திற்கு 3-அல்லது 4-வேளை உபயோகித்து, மறுநாள் விரேசனௌஷதம் ஏதாவது உட்கொள்ளலாம்.

### இலைக்கள்ளி.

தடித்த இலைகளோடும், கொழுத்துக் கதுப்பாக வளர்ந்த தண்டோடும் கூடிய இந்த மரம் எங்கும் பிரஸித்தமானது. இதன் கிளைகளிலிருந்து வடியும் வெளுப்பான பாலை யெடுத்துக் காய்ச்சினால், கட்டாபர்ச்சா என்னும் வஸ்துவுக்கு ஸமானமான பதார்த்தம் உண்டாகும்.

(1) இதன் பால் விரேசன குணமுடையது. (2) சர்மத்தில் எரித்தலைக் கொடுத்து கொப்புளிக்கச் செய்யக்கூடியதென்றும் கூறுகிறார்கள். (3) இதை ஆமணக்கெண்ணெயோடு கலந்து காய்ச்சி, குழந்தைகளுக்குண்டாகும் யக்ருத்தாலீ யென்கிற கல்லீரல் வியாதியிலும் (மாந்தக் கட்டியென்று வழங்கப்படுவதில்), சில ஸமயம் காதுவலியிலும் உபயோகிப்பது சுதேச வைத்தியர்களின் வழக்கம். (4) ஸர்ப்பம் தீண்டியவருக்கு அவ்விஷத்திற்கு முறிவாக இதை உபயோகிக்கலாம். (5) கள்ளியிலையின் ஸ்வரஸம் (சாறு) லேகநம் அல்லது கபஹரம் என்னும் குணத்திற் சிறந்ததென்றும் தெரியவருகிறது. இதன் இலைகளைப் பறித்து, நெருப்புத் தணலில் வாட்டியெடுத்து, அவற்றைக் கசக்கிப் பிழிந்து, அச்சாற்றை ஒரு தேக்கரண்டியளவு குழந்தைகளுக்குக் கொடுத்தால் பேதியும் வாந்தியும் ஆவதோடு, கபமும் அறுபட்டு நன்றாக வெளிவரும். (6) இதன் இலைகளை வதக்கி, வீக்கங்களையும், கட்டிகளையும் கரைப்பதற்காகச் சுடச்சுட ஒற்றடம் கொடுக்கலாம்.

### ஹரீதகீ வடகம்.

கடுக்காய் (கொட்டைநீக்கியது) 2-பங்கு, கோரைக்கிழங்கு 1-பங்கு, சுக்கு 1-பங்கு, அதிமதுரம் $\frac{1}{2}$-பங்கு இவற்றைச் சூர்ணம் செய்து, வஸ்திர காளிதம்பண்ணிக் கொள்ளவும், சூர்ணம் ஒரு வீசை யானால் 10-பலம் வெல்லமும், 5 அல்லது 6 பலம் தேனும் சேர்த்து, கல்லுரலில் நன்றாக இடித்து, பிறகு கால்தோலா வெடையுள்ள உருண்டைகளாக உருட்டி, குப்பியில் வைத்துக் கொள்ளவும், இதை அதிமதுரம் சேர்க்காமலும் செய்வதுண்டு. இந்த வடகம் கபஹரமான (expectorant) குணத்திற் சிறந்தது. இருமல் அதிகமாகத்தொந்தரவுகொடுக்கும்போதெல்லாம் ஒவ்வொரு வடகத்தை வாயில் அடக்கிக்கொண்டு, இரஸத்தை விழுங்கிவரவேண்டும். இதை அடிக்கடி உபயோகித்து வந்தால் இருமலின் வேகமும், ச்வாஸகாஸத்தில் உண்டாகும் மூச்சடைப்புபோன்ற உபத்திரவமும் தணிவடையும். கக்கிருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம்.

## சர்க்கரை பெரும்பாட்டைப் போக்கும்.

டாக்டர் ஸ்வீபெல் (Dr. Zweifel) என்பவர் சர்க்கரையைப் பெரும்பாட்டுவியாதியில் பிரயோகித்த வகையைப்பற்றி "அமெரிகன் ஜர்னல் ஆப் க்ளினிகல் மெடிஸின்" என்னும் வைத்தியப் பத்திரிகை அடியில்வருமாறு கூறுகிறது :—

ஜலத்தில் 100-க்கு 50 பங்கு சர்க்கரை கலந்து, பிசுவென்னும் ஒருவிதமான வர்த்தியில் (tampon) சேர்த்து, 24-மணி ஸாவகாசம் வரையில் பிணியாளிகளின் கர்ப்பாசயத்வாரத்தில் பிரயோகித்து வரும்படி ஏற்பாடு செய்ததாகத் தெரியவருகிறது. இதைப் படுக்கும்போது இரவில் உபயோகித்துக் கொள்வது நலம். இதை உபயோகிப்பதற்கு முன் மர்மஸ்தானத்தையும் கர்ப்பாசயத்தையும் கொதிக்கவைத்து ஆறிய ஜலத்தினால் வஸ்திசெய்து கழுவவேண்டும். இரண்டு தேக்கரண்டி யளவு சர்க்கரையை, இரண்டு தேக்கரண்டியளவான மிகவும் உஷ்ணமாயுள்ள ஜலத்தில் சேர்த்து, சிறிது ஆறிய பிசுவர்த்தியில் உடனே அதை யெடுத்து மர்மஸ்தானத்தில் வைத்துக்கொண்டு படுத்துக்கொள்ளும்படி பிணியாளிகளிடம் சொல்லவேண்டும். இவ்விதமாய் இப்பிணியாளிகள் தமது வீட்டிலேயே எழெட்டு நாள் இச்சிகித்ஸையைத்தாமே செய்துகொண்டு, அப்பால் டாக்டரிடம் வந்து விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்படி 66 கேஸுகளுக்கு சிகித்ஸை செய்யப்பட்டது. இவர்களில் மூன்றில் இரண்டுபங்கு பேர் திரும்பவும் டாக்டரிடம் வந்து சிகித்ஸையின் பலனைத் தெரிவித்துக் கொண்டார்கள். வந்தவர்கள் அனைவரும் வியாதிநிவாரணமாய் ஸ்வஸ்தமாயிருப்பதாகத் தெரியவந்தது. டாக்டர்கள் அடிக்கடி கவனித்துவந்து, இச்சிகித்ஸையை ஒழுங்காக இரண்டொரு வாரம் செய்துவந்தால் பெரும்பாடு எளிதில் நிவாரணமாய்விடும் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

---

## க்ளிஸரைன் கால் புண்களை அகற்றும்.

முழங்காலுக்குக் கீழே உண்டாகும் பலமான சில சிறங்குகளுக்கு ஏதேதோ ஔஷதங்கள் போட்டும் குணமில்லாமற் போகையில் அடியிற்குறிப்பிட்ட சிகித்ஸை இறுதியில் ஆச்சரியகரமான குணத்தைக் கொடுத்தது : ஒரு சல்லாத்துணியை க்ளிஸரைன் என்னும் பாணியில் நனைத்து, சிறங்குகள் உண்டாயிருக்குமிடங்களில் அதைச்சுற்றி, அதன்மேல் வேறொரு மெல்லிய வஸ்திரத்தினால் அல்லது நாடாவினால் இரண்டுமூன்று பந்தனங்களிடவும். இது வெகுசீக்கிரத்தில் குணமுண்டு பண்ணுகிறது என்று "பிராக்டிகல் மெடிஸின்" என்னும் வைத்தியப் பத்திரிகை கூறுகிறது. இதை நமது வைத்தியர்களும் அநுபவத்திற் செய்து பார்க்கலாம்.

---

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினு-62. ஈளை இருமல்.

"அன்பார்ந்த ஐயா,

நான் மூன்று வருஷகாலமாய் தங்களுடைய பத்திரிகையை வெகு ஆவலுடன் படித்துவருகிறவன். இதில் வெளியாகும் விஷயம் ஒவ்வொன்றும் மிகவும் உபயோகமானதாயிருப்பதைப் பார்த்து, நான்அநேகம் ஸமயங்களில் தங்களுடைய இப்பெருமுயற்சியை வாயாற சிலாகித்துவருகிறேன். தங்களுடைய பத்திரிகையில் வரும் அருமையான அநுபவஸித்தமான விஷயங்களைக் கவனித்ததில், இதை எழுதுகிறேன். என் மூன்று பிராயமுள்ள குழந்தையின் பிணிக்குப் பரிஹாரம் ஏதாவது கிடைக்கவேண்டி, வைத்திய கலாநிதியின் மூலமாய் அவ்வித சிகித்ஸாக்ரமத்தைப் பற்றி எவரேனும் படித்தறிந்த சந்தாதாரர்களாவது, தாங்களாவது தயவுசெய்து உபாயம் ஏதேனும் வெளியிடவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன். என் குழந்தைக்கு 4 - மாஸங்களுக்குமுன் ஜலதோஷம் ஸாதாரணமாய் உண்டாயிற்று. நாலைந்து தினங்களில் இருமலும் ஈளையும் உண்டாய் அவை அதிகரித்துவிட்டன. அது முதல் எவ்வளவோ ஔஷதங்கள் கொடுத்தும் குணமாகவில்லை. மத்தியான்னங்களில் விசேஷ பாதகம் இதனால் ஏற்படுவதில்லை, இராக்காலத்தில் தான் தொந்தரவு ஸஹிக்கமுடியாது. இரண்டு பக்கங்களிலும் விலா எலும்புகள் இழுக்கப்படுவதை சில ஸமயம் பார்த்தால், குழந்தையின் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருக்கும். அநேகமாய் ஆஹாரம் வாந்தியாய்விடுகிறது. இதற்குத் தாங்கள் ஏதாவது சீக்கிரம் ஸ்வஸ்தமாகக்கூடிய சிகித்ஸாவிஷயத்தை வைத்திய கலாநிதியின் மூலமாய் அறிவித்தால் நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்."

எம். வி. இரகுநாதையர்.



விடை :— தங்களுடைய குழந்தைக்கு இருமல் அவ்வளவு அதிகமாயிருப்பதற்குக்காரணம், அதற்குச்வாஸாஸயத்தில் கபம் அதிகமாகச் சேர்ந்திருப்பதுதான் என்று நிச்சயிக்கிறோம். கபம் மிகுதியாகச் சேர்ந்துவிட்டதால், விலாப்பக்கங்கள் அவ்வளவு அதிகமாய் இழுக்கின்றன. இதற்குப் பின்வருமாறு சிகித்ஸை செய்வது நலம் :— முதலில் காலையிலும் மாலையிலும் கோதுமைத்தவிட்டை வறுத்து, சுடச்சுட வஸ்திரத்திற்கட்டி மார்பில் ஒற்றிடம் கொடுக்கவேண்டும். எப்பொழுதும் உடம்பை சூடானவஸ்திரம் அல்லது உடுப்பினால் போர்த்திருக்கவும். சீக்கிரம் ஜீர்ணமாகக்கூடியதும் சூடாகவுமுள்ள திரவாஹாரம் எதையாவது அடிக்கடியும் கொடுத்துவரவேண்டும், வாந்தி அதிகமாயிருந்தால் ச்ருங்கபஸ்மம் என்னும் 'மான்கொம்பு பஸ்மத்தை * தினத்திற்கு 3-வேளை வீதம் தேனில் குழைத்துக் கொடுக்கலாம். இருமலையும் கோழையையும் தணிப்பதற்கு ஏற்ற ஔஷதம் தாளிஸாதி சூர்ணமும் ச்யவநப்ராசமுமேயாம். † தாளிஸாதி சூர்ணத்தை ஐந்து முதல் பத்து குன்றுமணியெடைவரையிலும் வென்னீருடன் உட்கொள்ளக் கொடுக்கலாம். இச்சூர்ணம் உபயோகித்தபிறகு, உள்ளே அடங்கியுள்ள கபம் அறுக்கப்பட்டு வெளிவரவேண்டியிருப்பதால், இருமல் முதலில் அதிகமாகும் ; இருமல் அதிகமாயிருக்கும்போதெல்லாம் ச்யவநப்ராசத்தில் அரை தோலா எடை அப்போதைக்கப்போது கொடுத்துவரவேண்டும். ப-ர்.

---

### வினு-63. தலைமயிர் உதிர்தல்.

"ஐயா,

என்னிடம் ராமமூர்த்தி என்கிற சிறுவன் வயிற்றுநோய்க்கு சிகித்ஸை செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு வயது 17-ஆகிறது. வயிற்றுவலிமட்டும் நான் கொடுக்கும் ஔஷதத்தினால் கொஞ்சம் நிவ்ருத்தியாய் வருகிறது. ஆனால் அவனுக்கு மற்றொரு குறை உண்டு. தலையிலிருந்து இச்சிறுவயதில் மயிர்கள் உதிர்ந்து வருகிறது. தலையில் சொறி சிறங்கு ஒன்றும் கிடையாது. இவ்விதம் மயிர் உதிர்ந்துவிடுவது அவனுடைய குடும்பத்தில் பரம்பரையாகவே சிலருக்கு இருந்து வந்ததாம். அவனுடைய அறுபத்தைந்து வயதுள்ள தகப்பனருக்கு 40-வயதுக்கு முன்னமே தலைமுடியவும் பொட்டையாகப் போய்விட்டதாம். இதற்கு ஏதாவது பரிஹாரம் உண்டா ? அப்படியானால் தயவுசெய்து "வைத்திய கலாநிதியில்" எவரேனும் அப்பரிஹாரமுறையை வெளியிடுவார்களா ?"

கா. வி. சொக்கலிங்க வைத்தியர்.

விடை :— பரம்பரையில் வந்துள்ள வியாதி எதுவுமே எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியதல்லவென்பது தங்களைப் போன்றவர்களுக்குத் தெரியாத விஷயமன்று. அதிலும் மயிருதிர்தலுக்குப் பரிஹாரம் செய்வது மிகவும் கஷ்டஸாத்தியம். ஆகிலும் அடியிற்குறிப்பிடப்படும் உபாயத்தைக் கவனித்து அதன்படி செய்து பார்க்கவும். தினந்தோறும் பிருங்கராஜதைலத்தைத் * தடவி, இரண்டு நாழிகைவரையிலும் நன்றாகத் தேய்த்து, நாலைந்து நாழிகைவரையில் ஊறி அப்பால் ஸ்நாநம் செய்துவிடவும். நல்ல வெயில் வேளையில் சிறிதளவு மதூச்சிஷ்டாதி தைலத்தைத்† தடவிக்கொள்ளச் செய்யவும். தலையை எப்பொழுதும் வெயிலில் திறந்துவைத்துக்கொண்டு நடமாடச் செய்யலாகாது. ஒரு வாரத்திற்கு ஒருதடவையாவது, பத்துநாட்களுக்கு ஒரு முறையாவது விடாமல் க்ஷௌரம் செய்துகொள்வது நலம். ப-ர்

---

* ச்ருங்கபஸ்மம் வேணுமானால் வைத்திய கலாநிதி ஆபீஸுக்கு எழுதவும்.

† தாளிஸாதி சூர்ணமும் ச்யவநப்ராச லேஹ்யமும் சாரங்கதர ஸம்ஹிதையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

* பிருங்கராஜதைலம் — இதைப்பற்றி சார்ங்கதர ஸம்ஹிதையில் விவரம் காண்க.

† மதூச்சிஷ்டாதிதைலம் — 10-பலம் தேங்காயெண்ணெயில் $2\frac{1}{2}$-பலம் தேன்மெழுக்கைப்போட்டு காய்ச்சவும் ; மெழுகு உருகி குழம்புபோல் ஆனதும், அதில் பச்சைக் கர்ப்பூரம் 1-தோலாவும், பாதுவம்பிசின் 1-தோலாவும், குங்குமப்பூ 1-தோலாவும் சேர்த்து, நன்றாகக் குழையடச்சுவம் செய்து இறக்கி வைத்துக் கொள்ளவும். இது மதூச்சிஷ்டாதி தைலம்.

## NOTES AND ITEMS OF INTEREST.
## பலவகைக் குறிப்புகள்.

### கவிராஜ் கணநாத ஸேன்

ஸமீபத்தில் பூனாவில் நடந்தேறிய ஆயுர்வேத மஹாமண்டலஸபைக்குச் சென்று, சென்னைக்கு விஜயம் செய்து, ஆயுர்வேத வைத்தியர் விஷயமாய் உபந்யாஸம் செய்துவிட்டுப்போன நமது நண்பராகிய கணநாத ஸேன் என்னும் பிரஸித்திபெற்ற வைத்தியருக்கு மஹா மஹோபாத்தியாய பட்டம் அளிக்கப்பட்ட விஷயத்தை நாம் இங்கே முக்கியமாகக் குறிப்பிட மனதார ஸந்தோஷப்படுகிறோம். இவருக்கு புதுவருஷப்பட்டம் ஜனவரிமாஸம் முதலில் அளிக்கப்பட்டதாக வெளியிடப்பட்டிருந்தாலும், அப்பட்டம் இப்பொழுதுதான் அவருக்கு அதன் நிமித்தமான கௌரவக்குறிகளுடன் சூட்டப்பட்டது. கணநாத ஸேன் அவர்கள் கவிராஜ் என்று வங்காளத்தில் வழக்கப்படுகிற வைத்தியத்தொழில் செய்யும் வகுப்பாருடைய வம்சத்தில் பிறந்தவர். அவருக்கு இப்பொழுது வயது 35-க்கு உட்பட்டுதான் இருக்கும். ஸம்ஸ்கிருதத்தில் மிகவும் நிபுணர். ஆங்கிலபத்தில் எம்.ஏ. பக்ஷையில் தேறி, எல். எம். எஸ். பரீக்ஷையிலும் தேறி, ஆயுர்வேத ஆங்கில வைத்தியங்களில் மிகவும் வியாபகராயிருப்பவர். ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்காக அவர் மிகவும் பாடுபடுகிறவர் என்று இராஜாங்கத்தார் இச்சிறுவயதில் அவருக்கு மஹா மஹோபாத்தியாய என்னும் உத்தமமான பட்டத்தைச் சூட்டினர். கல்கத்தாவில் கவிராஜ் த்வாரகாநாத ஸேன், கவிராஜ் விஜயரத்னஸேன் என்னும் காலஞ்சென்ற இவ்விரண்டு வைத்தியர்களுக்கும் அபரவயதில் தான் இப்பட்டம் கிடைத்தது. இச்சிறுவயதில் இத்தகைய பெருமைகளுக்குப் பாத்திரமான மஹா மஹோபாத்தியாய கணநாத ஸேன் நீண்டகாலம் வாழ்ந்து, ஆயுர்வேதத்தை அபிவிருத்திசெய்ய ஊக்கத்துடன் உழைப்பாராக.

---

### பித்தம் உறைவதைத் தடுத்தல்.

பித்தப்பையில் (பித்தாசயத்தில்) பித்தநீர் உறைந்து சிறிய கற்களைப்போல் ஆய்விடுவதால், கல்லீரலில் ஒருவித சூலை ஏற்பட்டு ஸஹிக்கமுடியாத கஷ்டமுண்டாகும். அவ்விதம் உண்டாகாமல் தடுப்பதற்கு தாமஸ் A. வாட்ஸன் என்னும் வைத்திய நிபுணர் ஓர் உபாயம் கூறுகிறார் :— பித்தப்பையில் பித்தம் உறைந்து விடுவதால் ஸம்பவிக்கும் நோய் மிகக் கடுமையானது. அதைத்தடுப்பது வெகு எளிதான காரியம். பித்தப்பையில் பித்தம் சேராதபடி ஒவ்வொரு நாளும் அப்பையை காலிசெய்து வந்தால் இத்தொந்தரவு ஏற்படாது. இதற்காக சுமார் பன்னிரண்டு பவுண்ட் நிறையுள்ள ஒரு இரும்புக்குண்டை கல்லீரலைச் சார்ந்துள்ள பித்தப்பையானது எந்த ஸ்தானத்தில் இருக்கின்றதோ அதற்கு நேராக வயிற்றின்மேல் மெதுவாக இங்குமங்குமாய் உருட்டவும்; ஒரு ஆளைக் கொண்டு கைகளாலும் அப்பாகத்தை அழுத்திப் பிடிக்கச் செய்யலாம். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து இவ்விதம் செய்தால், பித்தப்பையிலிருந்து பித்தநீர் வெளிப்படுவதை, கொப்புளிப்பதுபோன்ற சப்தத்தினால் உணரலாம்; இப்படி அந்த ஆசயத்திலிருந்து பித்தநீர் வெளிப்படுவதன் பயனாக, அரைமணி நேரத்திற்கெல்லாம் மலம் தாராளமாக வெளியாகும். பித்தம் உறைந்து விடாமல் முன்னெச்சரிக்கையோடு இருப்பதற்கு இது ஏற்ற உபாயமே யன்றி, பித்தம் அதிகரித்து விசேஷமான வலியுண்டானபிறகு இச்சிகித்ஸையைப் பிரயோகிப்பது சரியல்ல.— New York Medical Journal.

---

### உணவு ஜீர்ணமாவதைக் கவனித்தல்

டாக்டர் மாக்ஸ் ஐன்ஹாரன் என்பவர் தினந்தோறும் உணவு நன்கு ஜீர்ணமாகவேண்டியதற்காக அடியில்வரும் நியமத்தைக் குறிப்பிடுகிறார் :— ஆரோக்கியமும் ஆயுளின் அபிவிருத்தியும் நாம் உண்ணும் உணவையும், அது ஜீர்ணமாகும் வகையையும் பொருந்தியதாயிருக்கின்றன. உணவு ஜீர்ணமாவதில் எவ்வித இடையூறு அல்லது கஷ்டமும் நேரிடாதபடி மிகக் கவலையெடுத்துக் கொள்ளவேண்டும். மாம்ஸங்களையும் மதுவகைகளையும் உபயோகிப்பதால் குடல் பலவிதத்திலும் கோளாறடையும் ; அவற்றால் குடலில் அழற்சி அதிகரித்து, போலிப்பசி யென்னும் பொல்லாப்பசி உண்டாய் குடலின் இயற்கை வேலை சீரழிந்து விடுகின்றது அப்படி மாம்ஸபோஜனத்தை முக்கியமாக வைத்துக்கொண்டிருப்பவர் ஸாத்தியமான வரையில் அதை மிதமாக உபயோகித்துவந்தால், உண்டாகும் கெடுதியும் மிதமாயிருக்கும் அரிசி, கோதுமை, மற்றும் பலவிதமான சாகாஹாரங்களையே வேண்டியவளவு தினத்திற்கு இரண்டுவேளை விதம் புஜித்துவருக. ரொட்டியும் வெண்ணெயும் கலந்து உபயோகிப்பதுப் பாலும் பழமும் ஒரேசமயத்தில் உட்கொள்வதும், அன்னத்தையும் காய்கறிகளையும் ஏககாலத்தில் புஜிப்பதும் தேஹாரோக்கியத்திற்கு உத்தமமான உணவுகளாகும். நாவறட்சி யுண்டாகும்போது குளிர்ந்த சுத்த ஜலத்தை உட்கொள்ளலாம. காலையிலும் மாலையிலும் சக்திக்கியன்றவாறு வியாயமங்களைச் செய்துவரவேண்டும். இரவில் பத்து மணிக்குப் படுத்து காலையில் ஐந்துமணிக்கு எழுந்திருக்கவும்.


# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
*Ayurveda Bhushan*
**Pandit M. Duraiswami Aiyangar,**

பத்திராதிபர் :
ஆயுர்வேத பூஷணம்.
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,

புஸ்தகம் 4. Vol. IV. — நளஹு மாசிமீ—பங்குனிமீ. MARCH—1917. — ஸஞ்சிகை 7. No. 7.


## CAT AS A DISEASE CARRIER.
## பூனை பிணியைப் பரவச்செய்யும்.

By R. NARAYAN, L. M. & S.

---

இந்தியாவில் ஜனங்கள், முக்கியமாய் முகம்மதியர்கள் பூனையை அன்புடன் வீடுகளில் வளர்ப்பது வழக்கம். சிறுவர்கள் எப்பொழுதும் பூனையைச் சீராட்டி, அதைக் கட்டியணைத்து, முத்தமிட்டு விளையாடுவதை நாம் பார்க்கிறோம் ; விஷயமுணராத அச்சிறுவர்கள் இருக்கட்டும் ; படித்தறிந்த பெரியவர்கள்கூட தொற்றுவியாதியிலான அபாயங்களைக் கவனிக்காதவர்களாய், ஆரோக்கிய முறைகளின் ஸம்பந்தமான நிபந்தனைகளில் கருத்தும் கௌரவமும் வைக்காதவர்களாய் அப்பிராணிகளோடு ஆவலுடன் பழகுவது பரிதவிக்கத் தகுந்ததாம். இதைப்பற்றி வியாதிக்கு ஸம்பந்தப்பட்டமட்டிலும் இதற்குமுன் ஏதோ சொற்ப விஷயம் சாஸ்திர நிபுணர்களுக்குத் தெரிந்திருந்ததுண்டு ; ஆனால் இப்பொழுது ஸமீபகாலத்தில் சாஸ்திராராய்ச்சியில் மிகப் பிரஸித்தி பெற்றவர்கள், குரல்வளையில் ஸம்பவிக்கக்கூடிய களார்ப்புதம் (diphtheria) என்கிற வியாதிக்கும், வேறு சில தொற்று வியாதிகளுக்கும் காரணமான விஷக்கிருமிகள் பூனைகளின் மூலமாய் வியாபித்துவருவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

“இராயல் ஸொஸைடி ஆப் மெடிஸின்” என்கிற வைத்தியஸங்கம் ஸமீபத்தில் கூட்டிய ஒரு ஸபையில் டாக்டர் ஆர்னல்ட் லாஸன் என்பவர், மனிதர்களுக்கு நேத்திரத்தில் வர்த்மரோகம் உண்டாவதைப்பற்றி ஒரு ரிபோர்டு தயார் செய்து படிக்கையில், அவ்விதமான வியாதி பூனைகளின் மூலமாகவே விசேஷமாகப் பரவிவருவதாக விவரித்திருந்தார். மிகவும் கியாதிபெற்ற மற்றொரு நேத்திரரோக நிபுணர், நேத்திரரோகத்தினால் வருந்திய ஒரு கேஸைப் பரீக்ஷிக்கையில், அது பூனையின் மூலமாக மூன்று வயதுள்ள ஒரு பையனிடமிருந்து தொற்றியதென்று அவர் நன்றாகப் பரீக்ஷித்தறிந்தார் என்று “ஹாஸ்பிடல்” என்னும் வைத்தியப் பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு வியாஸத்தைக் கொண்டு நான் அறிந்தேன். ஒரு வீட்டில் வளர்த்துவந்த பூனையின் கண்ணிலிருந்து ஒருவிதமான தூர்நீர் வடிந்துகொண்டிருந்தது ; அந்தப் பூனையோடு முத்தமிட்டு விளையாடிவந்ததால் மூன்று வயதுள்ள சிறுவனுக்கு மிகக் கடுமையான வர்த்மரோகம் (Conjunctival infection) உண்டாயிற்று ; அப்பையனுடன் பழகிவந்த மற்றொருவனுக்கும் இதே வியாதி ஸம்பவித்தது ; இவ்வியாதிக்ரஸ்தனின் கண்களின் தூர்நீரில் எவ்விதமான நுண்ணிய விஷக்கிருமிகள் காணப்பட்டனவோ, அதேவிதமான கிருமிகள் பூனையின் கண்களிலிருந்து வெளியான தூர்நீரிலும்

இருப்பதாகப் பரீக்ஷித்தறியப்பட்டது. மிகவும் சிரமப்பட்டு பெருமுயற்சிகள் செய்து குழந்தையினுடையவும் மற்றொருவனுடையவும் நேத்திரங்கள் சிகித்ஸை செய்து காப்பாற்றப்பட்டனவாம்.

இயற்கையிலேயே அதிக கடுமையான அநேகம் தொற்றுவியாதிகள், வீட்டில் அன்புடன் வளர்க்கப்படும் பூனைமுதலிய பல ஜந்துக்களின் மூலமாக அவற்றுடன் பழகும் மனிதரிடம் பரவுவதாக ஸந்தேஹமின்றிக் கூறலாம். இதற்கு முற்கூறிய விதமாய் இன்னும் அநேகம் திருஷ்டாந்தங்களையும் எடுத்துச் சொல்லமுடியும். ஆனால், இப்பத்திரிகையைப் படிக்கும் நமது நண்பர்களே அவரவர்களுடைய அநுபவத்தில் பரீக்ஷித்தறிவது நலமென்று வற்புறுத்தி எழுத விரும்புகிறேன். எவரெவர்களுடைய வீட்டில் பூனை முதலிய ஜந்துக்கள் வளர்க்கப்படுகின்றனவோ அவர்களுடைய வீட்டில் இருப்பவருக்கு ஏதாவது தொற்று வியாதி ஸம்பவித்தால், அவ்வியாதிக்கும் வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளுக்கும் ஏதாவது ஸம்பந்தமுண்டாவென்று எளிதிற் பரீக்ஷித்து அறியலாம். "வியாதி வாராமலே தடுப்பது சிகித்ஸை செய்வதினும் மேலான காரியம்" என்னும் பழமொழியை மிகவும் நன்றாகக் கவனித்து வீடுகளில் ஸாத்தியமான வரையில் பூனை, நாய்முதலிய ஜந்துக்களை வளர்க்காமல் இருந்தால், அல்லது வளர்த்து வந்தால் கூடுமான சீக்கிரத்தில் அவற்றை விலக்கிவிட்டால், நமது குழந்தைகளுக்கு அபாயகரமான தொற்றுவியாதிகள் ஸம்பவிக்காமலே இருந்துவிடும்.

---

## THE THEORY OF TRI - DOSHAS.

## த்ரிதோஷ தத்துவம்.

BY T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

---

(முன் தொடர்ச்சி.)

புராதன கிரந்தங்களில் பித்தத்தின் காரியங்கள் ஐந்து தலைப்பின்கீழ் தொகுத்து விரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :—

1. பாசகம்— ஜீர்ணித்தலும் மலங்களை யகற்றலுமாம்.

2. ரஞ்ஜகம்— அன்னரஸத்திற்கு அதற்குரிய விசேஷவர்ணத்தைக் கொடுத்தல்.

3. ஸாதகம்— இருதயத்தில் அமர்ந்திருந்து புலன்கள் தத்தமக்குரிய உணர்ச்சித் தொழில்களை நடத்துவதற்குச் சாதனமாயிருக்கின்றது. இருதயம் காலப்பிரமாணக் கிரமமாய் விரிந்து குவியச் செய்வதனாலே மேற்சொல்லியபடி புலன்களின் உணர்ச்சிக்கு அது ஸாதனமாகின்றது. பண்டைக்காலத்தில் எல்லாத்தேசத்தாரும்புலன்களுக்கு உணருந்தன்மை இருதயத்தினால் உண்டாகின்றதென்று நம்பியிருந்தார்கள்.

4. ஆலோசகம்— தரிசன நரம்புஜாலத்தில் (retina) உண்டாக்கும் மாறுபாடுகளினால் கண்ணுக்குப் பார்வையளித்தல்.

5. பிராஜகம்— தோலின்வழியாய் அசுத்திகளைக் களைதல். (தோலுக்குப் பிரகாசம் அளித்தல்.)

பித்தமானது புளிப்புக்களின் மூலமாய்ப் பெரும்பாலும் தன் காரியங்களைச் செய்கின்றது. இந்த ஸந்தர்ப்பத்தில் அதற்குரிய ஆலோசகத் தொழிலைப்பற்றிச் சொல்லப்படும் விஷயமொன்று கவனிக்கத்தக்கது.

போடோகிராப் என்னும் சாயாபடம் இக்காலத்தில் எடுக்கிறார்களல்லவா? அப்படிப்போலப் பொருள்களின் உருவத்தைக் கிரஹிக்குந்தன்மை கண்ணிலுள்ள தரிசந சவ்வுகளுக்கு இருக்கிறதென்ற இக்காலத்துச் சாஸ்திரிகள் நினைத்து சோதித்துப்பார்த்ததில், போடோகிராப் சூத்திரம் உருவச்சாயையைக் கிரஹிப்பதுபோல நமது கண்ணும் உருவங்களின் சாயையைக் கிரஹித்துத் தெரிந்துகொள்ளுகின்றது என்று சொல்வதற்குப் போதுமான ஏதுக்கள் அகப்படவில்லை. தரிசந சவ்வுகளில் ஏற்படும் மாறுபாடுகளினால் கண்ணுக்குப் பார்வையுண்டாகின்றது என்று சொல்வது ஒருக்கால் பொருந்தலாம் என்று ஷெரிடன் லீ என்னும் சாஸ்திரி, ஜீவாங்கங்களின் ரஸாயனாதாரம்



(The Chemical Basis of Animal Body) என்னும் விஷயமாய் எழுதியுள்ள புஸ்தகத்தில் 262-ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கின்றார்.

### சிலேஷ்மம்.

தேகத்தில் பித்ததாதுஸம்பந்தமான பல வகை ரஸாயன மாறுபாடுகள் நடக்கையில், உஷ்ணம் ஜனிக்கிறதென்றும், இந்த மாறுபாடுகளுக்கும் மற்றுமுள்ள காரியங்களுக்கும் அநுகுணமாயிருக்கும் சவ்வறைகள் அடிக்கடி உழன்றுகொண்டிருப்பதனால் தேய்வுறுகின்றனவென்றும் மேலே சொல்லியிருக்கிறோம். மேற்சொல்லியபடி ஜனிக்கும் உஷ்ணம் அதிகமாய்ப் போகாமல் தடுப்பதற்கான சக்தி வாய்ந்தது சிலேஷ்மதாதுவாகும்; அந்த உஷ்ணத்தின் சிதைவை (Thermolysis) ஒழுங்குபடுத்தி, சவ்வறைகளின் தேய்வழிவுகளை மட்டுப் படுத்துவதும் அந்தச் சிலேஷ்ம தாதுவே.

மானிட தேகத்திலுள்ள சவ்வறை ஒவ்வொன்றும் ஒருவகைத் திரவத்தோடு ஸம்பந்தப்பட்டிருக்கின்றது; அந்த சவ்வறைக்கு ஆதாரம் அந்தத் திரவமேயாகும். 'சிலேஷ்மம்' என்னும் பெயர் ச்லிஷ (=தழுவுதல்) என்னும் தாதுவினின்று பிறந்துள்ளது. சிலேஷ்மமெனனும்பிராணசக்தியானது சவ்வறைகளின் இடைவெளிகளிலுள்ள மேறசொல்லிய திரவவஸ்துவின் அளவையும் தன்மையையும் இயக்குகின்றது; மற்றும் அந்தச்சவ்வறைகளைக் குளிர்ச்சியாய் அணைத்துத் தழுவி அவைகளுக்கு வலிமை யூட்டிவைத்துக் கொண்டிருக்கின்றது. காப்பாற்றுவதும் குளிரச்செய்வதுமே அதன் காரியமாகும; ஸ்தூலவடிவத்தில அது கணுக்குழிகளிலும் கிணநீக் குழிகளிலும் மழமழப்பெண்ணெயாக வாத்திக்கின்றது.

அது ஆக்கம் (anabdism) என்பதற்குச் சற்று ஒத்திருப்பதாய்த் தோன்றுகின்றது; ஆனால், மேற்சொல்லிய விவரத்தைக் கவனித்துப் பார்த்தால், பித்தத்தை அழிவுக்குப் பரியாய மாகவும் (synonymous with Katabolism), சிலேஷ்மத்தை ஆக்கத்திற்குப் பரியாயமாகவும் (synonymous with Anabolism) சொல்லக் கூடாதென்பது தெளிவாகும். பித்தத்திற்கும் சிலேஷ்மத்திற்கும் தனித்தனியே வேறு வேறு அர்த்தங்களிருக்கின்றன. அந்த அர்த்தங்கள் பித்தம், சிலேஷ்மம் என்னும் பதங்களினாலல்லாமல் வேறு சொற்களினால் விளங்கப்பெறா.

ஐவகைச் சிலேஷ்மத்தின் காரியமாவது :—

1. கீல்களின் உட்புறத்திற்கு மழமழப்பு கொடுப்பதாம். (ஸந்திஸம்ச்லேஷணம).

2. தேகத்திற்கு பசையைக் கொடுத்தல் (ஸ்நேஹநம்).

3. ஆரோக்கியமான பருமனல் போன்ற சதைவளர்ச்சிக் குதவுதல் (ரோபணம்).

4. தேகத்தின் பருமனை வளர்த்தல்(பூரணம்)

5. புதிய சவ்வுகள்கட்டுதல் (ப்ரும்ஹணம்).

6. தேகத்திற்கு இனிமையான உணர்ச்சியூட்டுதல் (தார்ப்பணம்)

7. பலத்தை அபிவிருத்திசெய்தல் (பலகிருத்)

8. கைகால்களுக்கு உறுதியூட்டுதல் (ஸ்தைர்யகிருத்)—ஸுச்ருத ஸூத்திரம் XV.

வேதவிஹிதமான திரிதாதுவென்னும் ரோக லக்ஷண ஸித்தாந்தத்தையே மேற்கொண்டவராயினும்ஸுச்ருதர் அந்தவிஷயத்தைப்பற்றி தம் அபிப்பிராயத்தைத் தெளிவாய் வெளியிட்டிருக்கின்றார்; ஒரு ரோகத்திற்கும் சீர்கெட்டதொரு வாதபித்தகபத்திற்கும் அந்த ரோகத்திற்கு ஆதிகாரணமாயுள்ள ரோகஜனக அம்சங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் உண்மையானதன்றென்று அவர் சொல்லுகின்றார்; அவைகளுக்குச் சம்பந்தம் ஒருகால் இருந்தாலும் இருக்கலாம், இல்லாவிடினும் இல்லை என்பது அவருடைய அபிப்பிராயம். இந்த ரோக ஜனக தத்துவங்கள் சிறிதும் இடைஞ்சல் பண்ணாமல் தேகமுழுதும் வியாபிக்கக்கூடும்; அவை தங்குவதற்கு ஏற்றவிடம் ஒன்று ஏற்பட்ட பொழுதுதான், தேகத்தில் தனிமையானதொரு பாகத்திலாவது சவ்விலாவது அவை

அமரும்பொழுதுதான் ரோகத்தைத் தூண்டி வளர்க்கும் அமிசங்களாகின்றன. "மின்னல், புயல், இடி, மழை என்னும் பௌதிகக் காட்சிகள், ஆகாயத்தை (மேகத்தை) விட்டுத் தனியே நிகழாவன்றோ? ஆயினும், மேகம் இருக்கையில் அவை சிலவேளை நிகழ்வதும் நிகழாதிருப்பதும் உண்டன்றோ?"

இரண்டொரு தத்துவங்கள் மேம்பட்டிருப்பதனால் மாத்திரமே அவசியமாய் வியாதியுண்டாக வேண்டுமென்று கொள்ளக்கூடாதென்பதை இந்த ஸித்தாந்தம் நன்கு விளக்குகின்றது. சுற்றுமுள்ள ஸந்தர்ப்பங்கள் பிரதிகூலமாயிருக்கையிலும் தேகத்தைச் சீரான நிலையில் வைத்துக் காப்பதற்குப் போதுமான ஜீவகலை மானிடதேகத்தில் அமைந்திருக்கின்றது. அப்படிப்பட்ட மாறுபாடுகள் அடிக்கடியுங் கடுமையாயும் உண்டானால் வியாதி உற்பத்தியாகின்றது. வியாதியை யேற்கும் குணம் சில தேகங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடுமென்பதையும் இந்த ஸித்தாந்தம்வற்புறுத்துகின்றது. அப்படி வியாதியேற்குந்தன்மை பரம்பரையினால் அந்த தேகத்திற்கு ஏற்பட்டிருக்கலாம். அல்லது அந்த தேகத்தையுடையவன் தானே தன்னுடைய வாழ்நாளில் ஸம்பாதித்துக் கொண்டிருக்கலாம். குடற்பூச்சிகள் ரோகத்தை உண்டுபண்ணுவனவல்ல. அவை குடல்களில் ஏராளமாய் இருக்கின்றன. ஆனால் அவற்றின் குணம் கெடுவதற்கு அனுகூலமான ஸந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது அவை தேகத்தின் சீர்குலைவுக்குள்ள காரணங்களுள் ஒன்றாய் ஏற்படுகின்றன. மற்றுமோர் உதாரணம பாருங்கள்: குளிர்காற்று இருவர் மீது தாக்க, அவர்களுள் ஒருவனுக்கு ஜலதோஷம் பிடிக்கின்றது, மற்றவனுக்குப் பிடிக்கின்றதில்லை. இது அவனவனுடைய தேகம் ரோகத்தை எதிர்த்துத் தள்ளுவதற்கு வாய்ந்திருக்கும் சக்தியைப் பொருத்ததாகும்.

உண்மையில், வாத பித்த சிலேஷ்மமென்னும் மூன்று தாதுக்களின் ஏற்றத் தாழ்வுகளினால் ஆரோக்கியம் கெடாதவாறு எல்லாரும் தேகத்தைப் பழக்கிக்கொள்ளவேண்டுமென்று ஸுச்ருதர் விதித்திருக்கின்றார்.

இதுவரையில் எடுத்துக்காட்டிய விஷயங்களையெல்லாம் கவனிக்குமிடத்து, வாத பித்த சிலேஷ்மமென்னும் மூன்று தாதுக்களையும் மூன்று சக்திகளாகக் கொள்ளவேண்டுமேயல்லாமல், தேகத்து நரம்புகளிலும் இரத்த நாளங்களிலும் நிணநீர்க் குழல்களிலும் பாய்ந்தோடும் திரவ வஸ்துவெனக் கொள்ளக்கூடாதென்பது தெளிவாய் ஏற்பட்டது.

இந்தத் தாதுக்கள் தமக்குரிய வேறுவேறு குழல்களிற் பாய்ந்தோடுவதில்லையென்பதற்கு நிச்சயமான சாக்ஷியம் இருக்கின்றது. சரகரும் ஸுச்ருதரும் பின்வருமாறு கூறுகின்றார்கள். "வாயுவையாவது பித்தத்தையாவது, கபத்தையாவது தனியே கொண்டுசெல்லத்தக்க ஸிரை (நரயபு) தேகத்தில் ஒன்றேனும் இல்லை. ஆகையால ஒவ்வொரு குழலின் வழியேயும் சரீரத்திலுள்ள எல்லாவகை தோஷங்களும் செல்லுவதற்குவேண்டிய அவகாசம் இருக்கிறதென்றே கொள்ளல்வேண்டும். ஆதலின் அவை 'ஸர்வவஹா:' (எல்லாம் செல்லும் வழிகள்) எனப்படுகின்றன."—ஸுச்ருத சாரீரம் VII. 12. ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் இதற்குப்பெயர் என்ன இருந்தபோதிலும், இந்தப்பெயர் தேகத்தில் ஒருவஸ்துவுக்கே பொருந்தும்; அதாவது நரம்புகளுக்கு மாத்திரமே பொருந்தும்.

சரகர் சொல்லுவது இதைவிடத் தெளிவாயும தீர்க்கமாயும் இருக்கின்றது :— "தேகத்தில ஒவ்வொருபாகத்திலும் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் வாத பித்த சிலேஷ்மங்களுக்கு எலொக்குழல்களுங் கால்வாய்களே."— சரக—விமானம VIII. முடிவாகப் பின்வரும் முக்கியமான வாகியம இந்த விஷயத்தைத் தெளிவாய்த் தீர்மானிக்கின்றது :— "தேகத்தில் எல்லாப் பாகங்களிலும் குழல்கள் நிரம்பியிருப்பதினாலும், அந்தக்குழல்கள் தோஷங்களின் ஏற்றத்தாழ்ச்சிகளிரண்டிற்கும் கால்வாய்களாய்இருப்பதனாலும், மனிதனெனப்படுபவன் குழல்களின் தொகுதியே என்று சில முனிவர்கள் கூறுகின்றார்கள்."—சரக-விமானம், VI.



நரம்புத் தொகுதியின் கிளைவகைகள் தேக முழுதும் இருக்கின்றன; அவையே மேற் குறித்த (தோஷங்களின்) 'ஏற்றத்தாழ்ச்சிகளை' ஏற்றுச் செல்லுகின்றன; இவ்விடத்தில் நல்லிரத்தநாளங்களும் மலினரத்தநாளங்களும் குறிக்கப்படவில்லையென்பது திண்ணம்.

அடிக்கடி அங்கங்கே குறிப்பிடப்படும் திரவ 'ஓட்டம்' என்பதற்குச் சுலபமாய்ப் பொருள் கூறுவதரிதாகும். மானிடதேகத்தில் நிணநீர், இரத்தம் முதலிய திரவங்கள் அனேகம் இருக்கின்றன. அவை தத்தமக்குரிய குழல்களின் வழியே செல்லுகின்றன; நரம்பின்வழியே செல்லும் நரம்புச் சக்தியின் செலவை 'ஓட்டம்' என்றல்லாமல் வேறு விதமாய்ச் சொல்லுவதற்காகுமோ? இக்காலத்துச் சாஸ்திர கிரந்தங்களில் மின்சாரத்தைத் 'திரவவஸ்து' வெனக் குறித்துப் பேசி, அது செப்புக் கம்பியின்வழியே 'ஓடுகின்றது' என்கிறோமல்லவா?

'ஸ்ரோதஸ்' என்னும் சொல் நல்லிரத்த நாளங்களையாவது, மலினரத்த நாளங்களையாவது குறிக்குமென்று மொழிபெயர்ப்பவர்கள் சிலர் எண்ணுகிறார்கள். அது கால்வாய் எனவே பொருள்படுமென்று சரக விமானம். V. 3, காட்டும: "பிராண ச்வாஸங்கள், நீர், அன்னரசம, இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, ஜீவவித்து, மூத்திரம், மலம், வியர்வை ஆகிய இவைகளை வகித்துக்கொண்டுபோவதற்குக் குழல்கள் இருக்கின்றன.

இந்த விஷயத்திற் கலக்கந்தரத்தக்க த்வந்த்வார்த்தங்கள் நிரம்பியிருக்கின்றன. பொறுமையாய் ஆராய்ந்து பார்க்கில் உண்மை வெளிப்படுமென்று நம்புகிறோம்.

திரிதாது விஷய ஸம்பந்தமாய் விசித்திரமான ஸங்கதியொன்று சொல்லவேண்டியிருக்கின்றது. அதன் உண்மைப்பொருள் விளங்கின், திரிதாது ஸித்தாந்தம் ஏற்பட்டவகை தெளிவுறக்கூடும். அந்த விஷயத்தை மாத்திரம் இங்கு குறிப்போமேயல்லாமல், அதனின்றும் நாம் அனுமானிக்கத்தக்க விஷயங்களை இங்கே குறிக்கவில்லை. நாம் குறிப்பிடும் விசேஷ விஷயமாவது: இரத்தம் நான்காம் தாதுவென்று ஸுச்ருதத்திற் சில பாகங்களில் ஒவ்வோரிடத்திற் சொல்லப்பட்டிருப்பதேயாம்.

திரிதாது ஸித்தாந்தம் வெகுபுராதனமானது; கி. மு. 800-1000 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட ருக்வேத கீதங்களிலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. முதன் முதலில் அது குறிக்கப்பட்டிருப்பது ருக்வேத ஸம்ஹிதை, 1. 3. 6. "த்ரிதா⁴து ஶர்ம வஹதம் ஶுப⁴ஸ்பதீ." இதற்குப்பொருள் கூறுமிடத்து ஸாயணாசாரியர் எழுதியுள்ள வியாக்கியானமாவது :—

"வாத பித்த ஶ்லேஷ்மதா⁴து த்ரயஶமன விஷயம் ஸுக²ம் வஹதம்"

பிறகு, சரகஸம்ஹிதையில் இந்த ஸித்தாந்தமே கைக்கொள்ளப்பட்டிருக்கிறது; ஸுச்ருத ஸம்ஹிதையிலும் இதுவே கொள்ளப்பட்டிருக்கின்றதென்று நாம் நிச்சயமாக ஊகிக்கலாம். ஆனால் சரகஸம்ஹிதையைப் போலவே ஸுச்ருதமும் பிரகாசக ஸங்கலன பரிச்சேதங்கள் எய்தியிருக்கின்றது. அஃதாவது, அந்தக் கிரந்தத்தைப் பிற்காலத்தவர் திருத்தி ஒழுங்குபடுத்தி அநேக மாறுபாடுகள் செய்து புதுவிஷயங்களையும் சேர்த்து அமைந்திருக்கிறார்களென்பதாம்.

ஸுச்ருதத்தில் ஸூத்திர ஸ்தானத்தில் பதினைன்காவது அத்தியாயம (ஶோணித வர்ணநீயாத்⁴யாயம்) இரத்தத்தைப்பற்றிச் சொல்வதாகும். இங்கே அஃது ஏழு தாதுக்களுள் ஒன்றாக விவரிக்கப்பட்டிருக்கிறது. 'தோஷங்களின' க்ஷீணாபிவிருத்திகளைப்பற்றியும், 'தாதுக்களின்' க்ஷீணாபிவிருத்திகளைப்

பற்றியும் விவரிக்கிற பதினேந்தாம் அத்தியாயத்தில் அவைகளை ஸம்பிரதாய முறைப்படியே கையாண்டிருக்கிறார். தேகத்திலுள்ள தாதுக்களின் தன்மையைப்பற்றி விவரிக்கும் 21-ஆம் அத்தியாயத்தில் ஸுச்ருதர் இரத்தத்தை, 'ஶோணித வ்யூஹம்', என்று நான்காவது 'தோஷமாக'ச் சேர்த்திருக்கின்றார். அந்த ச்லோகம் முழுவதையும் கவனித்துப் பார்ப்போம்.

'தேகாங்க அமைப்பில் வாயு, பித்தம், சிலேஷ்மம் என்பன மூன்றுமே அத்தியாவசியகமான மூலாம்சங்கள் எனக்கொள்ளவேண்டும. பிராணாதாரமான இம்மூன்று தத்துவங்களும தேகத்தில் முறையே அடி-நடு-முடி யென்னும் மூன்றுபாகங்களில் நிலைகொணடு விகற்பமில்லாத சொஸ்த ஸ்திதியைக் காக்கின்றன. மூன்று ஸ்தம்பங்கள் வீட்டைத் தாங்கிக்கொண்டிருப்பதுபோல, இம்மூன்று மூலதாதுக்களும மானிடசரீரத்தைத தாங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தக்காரணத்தினால் சில கிரந்தகர்த்தர்கள் மானிடசரீரததை 'த்ரிஸத்தூணம்' என்கிறார்கள். சரீரத்தின ஜீவதத்துவமானது இம்மூன்று மூலதாதுக்களின் ஸமநிலையைச் சார்ந்திருககின்றனவெனின், அவைகளின் நிலைகுலைவினால் சரீரம் குலைந்து சாவெய்தல் கூடும. இம்மூன்று தாதுக்களும, நான்காவதாகிய இரததமெனனும தத்துவத்தோடுகூடித் தேகத்தை ஆக்கல், காததல், அழித்தல் எனனும் முததொழிலுக்கும் ஆதாரமாகிச் சாவெய்து மட்டும் தததம குணங்களைத் தேகமுழுதும் பரப்பி நிறகின்றன.''

மேலே மொழிபெயர்ததுதகரிதத ச்லோகத்தில மூன்று தாதுக்களையும் ஆராய்ச்சி முறையாக விவரித்துரைத்து, அவைகளை 'த்ரிஸததூணம' எனறு சொலலியும, கடைசி வாக்கியத்தில் நான்காம் அம்சமொன்றைக் கொண்டுவந்து ஸுச்ருதர் புகட்டியிருக்கினறார். நான்காவது முககியாமசமாக இரத்தத்தைக் கொண்டுவந்து சேர்ததபினனும், அந்தக் கொள்கைக்கு இசைந்துபேசாமல் அவர் மூன்றுதாதுக்களைப்பற்றியே மறுபடி பேசுவதனால், இரத்தத்தை நான்காந்தாதுவாகக் கொண்டுவந்து சேர்த்தது இடையிடு (நிவேசிதலேகம், interpolation) என்றுநினைப்பதற்கு இடமேற்படுகின்றது.

---

## THE PROGRESS OF MEDICINE.*

## வைத்திய சாஸ்திராபிவிருத்தி.

BY. T. W. MUSGROVE, M. D.

(*Sultan, Washington.*)

வைத்தியம் என்பது, மனிதரால் தமது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகத் தெரிந்துகொள்ளப்பட்ட விஷயங்களுள் ஒன்றாகும். ஆரோக்கியம் என்றால், ஜீவசக்தியினால் உழன்றசையும் உடல் எனப்படும் இயந்திரமானது இயற்கைக்கு எள்ளளவும் மாறுதலின்றி தனது வேலையைச் செய்துகொண்டு வருவதேயாம். இச்சரீரமாகிய இயந்திரம் ஏதேனும் கோளாறடைந்தால், அதைத் திருத்தியமைத்து மீண்டும் தனது இயற்கை நிலைமையில் உழலும்படியாகச் செய்யுமுபாயமே வைத்தியமாகும். அநுபவ விசேஷங்களும் பரிசோதனை முறைகளும வைத்தியம் என்னும் விஷயததைக் கண்டறிந்தும் விருத்திசெய்தும் வந்திருப்பதாகக கூறவேண்டும். மனிததேஹ அமைப்பானது மிகவும் சிககலானது ; அதன தத்துவத்தை முற்றிலும் தொகுத்தறிந்து விடுவதென்பது எந்த மனிதனுக்கும் ஸாத்தியமில்லை என்பது இதுவரையில் அநுபவத்தில் வந்த விஷயம். தேஹத்தின் சிக்கலான இவ்வித அமைப்பை வியாதிகள் இன்னும் அதிக சிக்கலாகச் செயதுவிடுகின்றன. அமைப்பில் ஏதாவது சீர்குலைவு நேரிட்டால், அதை ஒழுங்குபடுத்துவதற்கு உபாயமொன்று அவசியமாக நேரிடவே அவ்வுபாயவிசேஷமே வைததியம் என்று வழங்கப்படலாயிற்று. ஆகவே வைத்தியம் அநுபவஸித்தமான விஷயமாகும். இவ்விஷயத்தை மேன்மேலும் கவனித்து ஒழுங்குபடுத்துவதற்காக அநேகம் பேர்களுடைய மதியும் மனமும் வேலைசெய்தன ; அவர்களுடைய மனத்தினுடையவும் மதியினுடையவும் போக்குகள் பரிமிதமாகவும் பலவகைப்பட்டவையாகவும் இருப்பதால், அநுபவ விஷயமும் பலவகைப்பட்டவையாகவும், தத்துவங்களைக் கசடற விளக்கமுடியாதவை யாகவும் இருக்கின்றன. ஆனால் நுண்ணறிவும் அநுபவமும் கல்வியும் அமையப்பெற்றுள்ள வைத்தியர் உண்மையறிவதில் ஊக்கமும் உத்ஸாஹமும் உள்ளவராயிருப்பர்.

ஓங்கி உயர்ந்து பெருத்து அழகாய் அமைந்து ஆரோக்கிய நிலைமையிலுள்ள தேஹமும், களங்கமற்ற மூளையும், நல்ல ஞாபகசக்தியும், நிர்மலமான மனதும், தர்மகுணமும், தகுந்த கல்வியும், நல்லொழுக்கமுள்ள ஸாமர்த்தியசாலியான மனைவியும் ஒரு வைத்தியனுக்கு அமைந்திருந்தால், அவனுக்கு எவ்விடத்திலும் நற்பெயரும் தொழிலும் விருத்தியாகும். ஆனால் அவசியமான இவ்வித யோக்யதைகள் சிலருக்கே ஏற்பட்டிருக்கும் ; பெரும்பான்மையோருக்கு முற்கூறிய யோக்யதைகளில் ஒன்றோ அல்லது அநேகமோ குறைவாயிருப்பது ஸஹஜமானதால், அவர்கள் தமது தொழிலை மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமின்றியே நடத்த முடியாதவராகின்றனர்.

பிணியாளிகள் கூட்டமாகப் போய் நிர்ப்பந்திப்பதால் அநேகம் வைத்தியர்கள் அப்பிணியாளிகளை சிகித்ஸைக்கு ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது ; ஏதோ சிற்சில வைத்தியர்கள் மட்டும் வியாதியை நிர்த்தாரணம் செய்து சிகித்ஸையைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதற்கு சில பிணியாளிகளை மாத்திரமே தெரிந்தெடுத்துக் கொள்வார்கள்

ஒரு ஸாதாரண வைத்தியரே ஜனங்களுக்குப் பெரும்பாலும் ஸாதாரண வியாதிகளுக்கு சிகித்ஸகராகவும், சஸ்திரசிகித்ஸகராகவும், ஸ்திரீகளுடைய வியாதிகளுக்கும் அவற்றிலும் முக்கியமாய் கர்ப்பாசய ரோகங்களுக்கும் விசேஷசிகித்ஸகராகவும், நேத்திரரோக வைத்தியர்களாகவும் இருந்துவருவதைக் காணலாம் ; அத்தகைய வைத்தியர் மனஸ்ஸாக்ஷியின்றியே பல தவறுதல்களையும் குற்றங்களையும் செய்து, மனவுறுதியோடு அடாதவகையில் தொழில்புரிபவராவர்.

ஔஷதச் சரக்குகள் அக்னிக்கு ஒப்பானவை—நெருக்கடியான நிலைமையில் மட்டும் உபயோகிக்கத் தகுந்தவை—ஆனால் முறைதவறாமல் விஷயமுணர்ந்து பிரயோகிக்கப்படுமாயின் அடங்கி யொடுங்கி உழைக்கும் உத்தமமான ஊழியர்களுக்குச் சமானமானவையாம். உஷ்ணசூனியமான (கடுங்குளிர்ச்சியுள்ள) பிரதேசத்திலிருந்து முக்காற்பங்கும் விறைத்துப்போன உடலுடன் கொண்டுவரப்பட்ட ஒரு மனிதனை, ஓர் அறையில் காடாக்னியிட்டு அதன் அருகில் சிலநேரம் இருக்கச் செய்தால், அவ்வனலால் தேஹத்தில் இரத்தவோட்டம் எங்கும் ஓராளவாக ஏற்பட்டு, உடலின்மேலுள்ள சூடானது அதன் இயற்கை நிலைமைக்கு வந்துவிடும் ; அம்மனிதனானவன் கோளாறடைந்த உடற்சூட்டினால் ஏற்பட்ட (கடுங்குளிரால் விறைத்துப் போனதினால் ஆன) கஷ்டத்திலிருந்து நிவ்ருத்தியாகிறான். ஆனால் அம்மனிதனை (அவசியமானதற்கும் அதிகமாக) வெகுநேரமளவும் நெருப்புக்கு அருகிலேயே இருக்கச்செய்தால், அவனுடல் அழன்று எரிந்துவிடும், அல்லது சூடுதாங்காமல் அவன் ஏதேனும் ஒருவகையில் பிணியாளியாகவாவது ஆய்விடுவது நிச்சயம். எல்லா ஔஷதங்களும், உணவுகளும், ஸ்நானமுறைகளும், வேலைகளும் மிதமிஞ்சினால் நெருப்பைப் போலவே நன்மைக்குப் பதிலாகத் தீமைகளை விளைவிக்கும்

* Reproduced and translated from Western Medical Times"

தன்மையுள்ளவை யென்று அறிவீர்களாக. ஒரு சிகித்சையை ஆரம்பிப்பதற்கு எது ஸமயம் என்று அறிந்துகொள்வது எவ்வளவு அவசியமோ, அச்சிகித்சையை முடிப்பது எப்பொழுதென்று அறிந்துகொள்வதும் அவ்வளவு முக்கியமாகும்.

கடிகாயந்திரசில்பியானவன் ஒவ்வொரு கடிகாயந்திரத்தின் உள்ளமைப்பு வெளியமைப்புகளையும், அதுகள் வேலைசெய்யும் தன்மையையும் கசடற அறிந்திருப்பதுபோல நாமும் நமது தேஹத்தின் உள்ளமைப்புகளென்ன வெளியமைப்புகளென்ன இவற்றையும், தாதுக்கள் அனைத்தினுடைய இயற்கைவேலைகளென்ன உபயோகங்களென்ன இவற்றையும் உணர வேண்டுமானால் நமக்கு இன்னும் நான்குமடங்கு அதிகமான புத்திவன்மை வேண்டும். நாம் தெரிந்துகொள்ளவேண்டிய சரீரமாகிய இயந்திரத்தின் கட்டட அமைப்பும் அதன் அச்சு ஆணிகள் எனத்தகுந்த வெவ்வேறு அவயவங்களின் வேலைப்பாடுகளும் கடிகாயந்திரம் முதலியவற்றினும் எவ்வளவோ மடங்கு சிக்கலாக இருக்கின்றன. ஆகவே உடற் கூறுபாடு, தாத்வவயவங்களின் கிரியாகுணங்கள், மனஸ்தத்துவம், வியாதிநிதானம், ஔஷதமுறை என்னும் அவ்விஷயங்களின் உண்மைகளை நாம் முற்றிலும் அறிவதற்கு ஆசைகொள்ள முடியாதவரா யிருக்கிறோம். ஆனால் மனித தேஹமாகும் இயந்திரத்தின் அமைப்பு என்ன, அதன் இயற்கையான கிரியாகுணங்களென்ன, அந்த இயந்திரத்தின் அமைப்பின் தன்மையிலோ, இரஸாயனமுறையிலோ, மானஸிகத்தன்மையிலோ கோளாறடையும் வகைகளென்ன இவற்றின் ஸாதாரண தத்துவங்களையாவது நாம் ஸாத்தியமான வரையில் நன்றாகக் கற்றறிந்து தொழிலில் பிரவேசிக்கவேண்டும்.

அநேகம் நூற்றாண்டுகள் நாம் கண்ணும் கருத்துமாகக் கவனித்தும், பல காரணங்களால் வருந்தும் மனிததேஹங்களில் தற்செயலாகவும் வேண்டுமென்றும் ஆயிரக்கணக்கான பரிசோதனைகளைச் செய்தும், இன்னமும் வாகடவிதிகளின் ஸங்க்ஷேபங்களிலும், வியாதிநிவாரணமுறைகளிலும் நாம் அறிந்திருப்பது மிகவும் சொற்பமென்று சொல்லவேண்டிய நிலைமையிலேயே இருந்துவருகிறோம். இப்படி இருக்கையில் வைத்தியத்தில் பல முறைகள் மட்டும் ஏற்பட்டிருக்கின்றன. பலவிதமான முறைகளை ஒற்றுமைப்படுத்தி, உண்மையான சாஸ்திரமுறையில் நோக்கம் வைத்து, உத்தமமான ஒரு முறையை ஸித்தாந்தத்திற்குக் கொண்டுவரவேண்டியது கடமையென்று நினைத்திருப்பவரே வாஸ்தவமான வைத்தியராவார். ஆனால் அநேகம் வைத்தியர்களிடம் குருட்டுத்தனமான பிடிவாதமும் சுயநலம் பாராட்டும் தன்மையும் குடிகொண்டிருப்பதால், இவர்கள் எவ்விதத்திலும் வேற்றுமையின்றி மனமொப்பி ஐகமத்தியமடைய இன்னும் அநேகம் ஆண்டுகள் செல்லும். ஆகிலும் இதுவரையில் முற்போக்குக்கு அவசியமான சிற்சில முயற்சிகள் நடந்தேறியிருக்கின்றன. இந்த நூற்றாண்டில் இன்னும் அதிகமான முயற்சிகள் செய்யப்பட்டு எல்லாத் தேசத்து வைத்தியமுறைகளும் ஒருமிக்கச் சேர்ந்து உலக நன்மைக்கு உபயோகப்படக் கூடியவையாய் அமையும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

## கறியுப்பால் கீழ்க்குடலிலுள்ள கிருமிகளை அழித்தல்.

ஒரு தேக்கரண்டியளவு கறியுப்பை இரண்டு பங்கு வெந்நீரில் கரைத்து, இளஞ்சூடாயிருக்கையில் ஆஸன த்வாரத்தின் மூலமாய் இரவில் படுக்கப் போகையில் உட்செலுத்தி விடவும். இவ்விதமாய் மூன்று அல்லது நான்கு தினங்கள் வரிசையாக அந்த நீரைப் பிரயோகித்தால், கிருமிகள் அழிந்து விடுகின்றன.



வைத்திய கலாநிதி.

நள௵ மாசி—பங்குனி௴.

# MEDICAL MEN AND PUBLIC HEALTH.

## வைத்தியத் தொழிலாளிகளும் பொதுஜன சுகாதாரமும்.

பிணியினால் பெரிதும்வருந்தும் இந்தியாவைப் போன்ற தேசத்தில், வைத்தியத்தொழில்புரிபவருடைய கடமைகள் மிகவும் மேலானவை. பதினோராவது எல்லா இந்திய ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன்ஸ் கான்பரென்ஸ் நடந்தேறுகையில், மிஸ்டர் எ. எம். வி. முதலியார், எல். எம். பி. அவர்கள் “வைத்தியத்தொழிலாளிகள் பொதுஜன சுகாதாரத்தைக் கவனிக்கவேண்டியதின் கடமை” யென்பதைப்பற்றி செய்த பிரஸங்கமானது பொதுஜனநன்மையில் ஊக்கமும் கருணையுமுள்ள ஒவ்வொரு நாகரிகம்வாய்ந்த மனிதனாலும் குறிப்பிடக்கூடிய அபிப்பிராயங்கள் அடங்கியதாம். “ஒவ்வொரு கிராமத்திலும், ஜனங்களுக்கு ஸாத்தியமானவரையில் சுகாதாரமுறைகளில் அறிவையும் ஊக்கத்தையும் ஊட்டவேண்டும்; அவ்விதமே மனஸ்ஸம்ஸ்காரமென்ன, நடத்தைகளைச் சீர்திருத்துவதென்ன, சரீரப்பயிற்சியென்ன இவைகளிலும் ஜனங்களுக்கு நல்ல போதனைகளைச் செய்வதற்கு வைத்தியத்தொழில் செய்பவர் தகுந்த குருமார்களாயிருப்பர்.” என்பது அவருடைய பிரஸங்கத்தின் ஸாராம்சமாகும். டாக்டர் முதலியார் அவர்களின் சிலாகிக்கக்கூடிய உத்தமப்பிரஸங்கத்தின் உபயோகமுள்ள கொள்கையை வைத்தியர்கள் யாவரும் கவனித்து அதன்படி தமது கடமையைச் செலுத்துவார்களானால், அதைவிட உலகத்திற்குச் செய்யக்கூடிய நன்மை வேறொன்றுமில்லை.



வைத்தியத்தை மேனாட்டு முறைப்படி கற்றறிந்தவர்கள் தமது பரீக்ஷையில் தேறியதும் தம்மை தைவப்பிறப்பென்றே பெரும்பாலும் கருதுபவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய மனதில் உடனே பேராவாக்களும், பணம் ஸம்பாதிப்பதில் பேராசையும் குடிகொண்டுவிடுகின்றன. பலவிதமான பிணிகளால் பீடிக்கப்படும் ஏழை ஜனங்களுக்கு வியாதி நிவாரண விஷயத்தில் தம்மால் இயன்றவளவு உதவி செய்வதை இவ்வைத்தியர்கள் கடமையாகப் பாவிப்பதே யில்லை. ஒருவன் உண்மையான வைத்தியனாயிருப்பானானால், அவன், தொழில் புரியும் நோக்கமுள்ளவனாகவாவது, வியாதிக்ரஸ்தர்களைப் பார்த்து பரீக்ஷை செய்பவனாகவாவது, ஔஷதங்களை எழுதிக்கொடுப்பவனாகவாவது மட்டும் இருக்கக்கூடாது; ஆனால் ஆங்காங்கு சுகாதாரமுறைகளைப் பரவச்செய்வதை விரதமாகப் பூண்டவர்களாகவும், இயற்கை நிலைமை தவறாது ஜனங்கள் நீடித்தகாலம் உயிர்வாழ்வதற்குத் தகுந்த உபாயங்களை உபதேசிக்கும் உபாத்தியாயர்களாகவும் இருந்துவரவேண்டியது அவசியம். தேசத்தை ஆரோக்கியநிலைமையில் வைத்துக் காக்கவேண்டியதில் இவ்வைத்தியர்களே பொருப்பாளிகள் ஆவார்கள். தேசத்திலுள்ள புருஷர்களும் ஸ்த்ரீகளும் ஆரோக்கியமும் தேஹவலிமையும் பெற்று சுகமாய் வாழ்வதற்கு அநுகூலமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியதும் அவர்களுடைய கடமையாகும். வைத்தியரல்லாத மற்ற ஜனங்கள் முற்கூறிய உதவிகளை இவ்வைத்தியர்களிடமிருந்து பெறுவதற்கு தாராளமாய் பாத்தியதை கொண்டாடலாம். அனைவருக்குமே தர்மவைத்தியம் செய்யவேண்டுமென்று நாம் வற்புறுத்துவதாக நினைக்கவேண்டாம்; ஆனால் நாம் சொல்லுவதெல்லாம் என்னவென்றால், ஒவ்வொரு வைத்தியரும் அவரவரால் இயன்றவளவு பொதுஜனங்களுடைய சுகாதாரத்தின் அபிவிருத்தி

யில் சிரத்தையுள்ளவரா யிருக்கவேண்டுமென்பதே. சுதந்தரமாக வைத்தியத்தொழில் புரிபவர் பெரும்பாலும் ஏராளமாகத் திரவியம் ஸம்பாதித்து, மனக்கவலையின்றி சுகவாழ்க்கையை அநுபவிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தமது வாழ்நாட்களில் வேறு சில நூதனமான முயற்சிகளையும் கைப்பற்றும்படி அவர்களுக்கு அதிகாரிவர்க்கத்தாரும் அறிவிக்க வேண்டும். இத்தொழிலாளிகள் பொதுஜனங்களுக்கு நன்மை புரியவேண்டிய விஷயங்களை ஆலோசிக்கவும், நிறைவேற்றவும், ஊழியம் செய்யவும் கருத்துள்ளவர்களா யிருக்கவேண்டும்; அவர்கள் பணத்தைப் பெரிதாகப் பாவிக்காமல், தர்ம சிந்தையையும் கௌரவத்தையும் மேலாகப் பாவிக்கவேண்டும். வியாதிக்ரஸ்தர்கள் தமதிடம் ஏராளமாய் வந்து சிகித்ஸை பெறவேண்டுமென்று ஆசைகொள்ளாமல், அனைவரும் ஆரோக்கிய நிலைமை தவறாமல் வியாதிவராத மார்க்கங்களை அநுஸரித்து நடக்கும்படி ஜனங்களுக்கு உபாயங்களைக் கற்பிப்பதிலேயே கருத்துள்ளவர்களாயிருந்துவர வேண்டுமென்பதே எமது வேண்டுகோள். தேசத்தில் அளவற்ற ஜனங்களுடைய உயிர்களைக் கொண்டுபோகும் கொள்ளைநோய்களான விஷூசி, விஷமஜ்வரம், மஸூரிகை, சீதபேதி முதலியவை யாவும் தடுக்கக்கூடிய வியாதிகளேயாகும்.

வியாதிகள் வராமல் தடுக்கும் வேலை வைத்தியர்களுக்குமாத்திரம் ஸாத்தியமானதென்று சொல்லமுடியாது." அது வைத்தியரல்லாதவர்களாலும் ஆகவேண்டிய காரியம். ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதென்பது அவரவருடைய சொந்த காரியமேயன்றி வைத்தியருக்கு மாத்திரம் ஸம்பந்தப்பட்டதாக மாட்டாது. ஒவ்வொரு மனிதனும் அதற்காகச் சிறிது ஊக்கமும் முயற்சியும் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். ஆனால் வைத்தியரல்லாத ஜனம் சுகாதாரமுறைகள் இத்தகையவையென்று அறியார்; வீதியில் செல்லும் ஒவ்வொரு மனிதனும் வியாதியை வெல்லுவதெப்படியென்று அறியவல்லவன் அல்லன். மிஸ்டர் ப்ராங்க்லாண்ட் (Frankland) என்பவர் கூறுவதாவது:—"எப்பொழுது துஷ்ட விலங்குகளிடமிருந்து தன்னைத் தப்புவித்துக் கொள்ள வேண்டுமென்று மனிதன் யோசிக்கிறானோ, அப்பொழுது அவன் மிகவும் நாகரிகமாக வாழ்வதற்கு முதலில் கற்கவேண்டும். இன்றைக்குதான் மனிதன் தன்னை நுண்ணுயிர்களிடமிருந்து (microbes) காப்பாற்றிக்கொள்ளும் உபாயங்களைக் கற்றுவருகிறான். விலங்குகளை வெல்லுவதற்கு நாகரிகம் இன்றியமையாததாயிருப்பதுபோல நுண்ணுயிர்களிடமிருந்து தப்புவதற்கும் நாகரிகம் அவ்வளவு அவசியமானது. இன்றைக்கு பெர்லின், லண்டன், பாரிஸ் இந்த நகரங்களில் ஸர்ப்பவிஷத்தினாலாவது, செந்நாய்களின் பற்களாலாவது, வேறு எந்த துஷ்ட விளங்குகளாலாவது எவரேனும் தீண்டப்படுவதுண்டா? இல்லவே யில்லை. ஏன்? அந்த நகரங்களின் நாகரிகமே அதற்குக் காரணமாயிற்று. அந்த நகரங்களில் களார்புதம் (diphtheria), ஸந்நிபாத ஜ்வரம், விஸர்ப்பஜ்வரம், விஷூசி, க்ஷயம் இந்த வியாதிகளால் மனிதன் ஒருவன்கூட உயிர்துறக்காம லிருக்கக்கூடிய காலமும் வரப்போகிறதென்பதை சாஸ்திரஞ்ஞர்கள் எதிர் பார்க்கிறார்கள்."

கொடிய விபத்துக்களை விளைவிக்கும் நுண்ணுயிர்களுடன் போராடி அவற்றை வெல்லுவதற்கு ஜனங்கள் தயாராயிருந்தால் (நாகரிகமுள்ளவராயிருந்தால்), அப்போர்வீரர்களை ஏற்றவழியில் செலுத்தி, ஜயமுண்டாகச் செய்வதற்கு வைத்தியர்கள் முக்கியமான தளகர்த்தர்களாக அவர்களுக்கு முன்னின்று உபாயங்களையெல்லாம் உபதேசிப்பார்கள். மனிதர்களுடைய சுகாதாரத்தின் நிமித்தம் நுண்ணுயிர்களாகும் கொடிய சத்துருக்களோடு போர்



புரிந்து வெற்றிபெறும் வழிகளைக் காட்டுவதற்கு ஏற்றவர்கள் வைத்தியர்களேயாவர்.

நல்ல ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு அவசியமான விதிகள் வெகு சொற்பம். அவை எளிதில் நிறைவேற்றக் கூடியவை; அவை இயற்கையில அமைந்த அருமையான விஷயங்கள்:—சுத்தமான வாயு, நிர்மலமான ஜலம், நல்ல வெளிச்சம், சுத்தமும் ஸாதாரணமுமான உணவு, தகுந்த வியாயாமம், மனது மகிழ்ச்சியும் அமைதியும் பெற்றிருத்தல்; இவை யாவும் சுகவாழ்க்கைக்கு அவசியமானவை. இந்த விஷயங்களை அடிக்கடியும் ஜனங்களிடம் பிரஸ்தாபிப்பது, வைத்தியசாலைகளை ஸ்தாபிப்பதினும் மேலான உதவி செய்ததாகும். வியாதிகள் உண்டாவதற்குக் காரணங்கள் என்ன? அவைகளை முன்னதாகத்தடுப்பது எப்படி? எப்படி ஜீவிப்பது? ஒவ்வொருவனுடைய வீடும் எவ்விதமாயிருக்கவேண்டும்? அதன் அக்கம்பக்கங்களை எப்படிப் பாதுகாக்கவேண்டும்? எவ்வித உணவை எவ்வெப்பொழுது உபயோகிக்கவேண்டும்? வியாயாமம் செய்வதெப்படி? இவையெல்லாம் வைத்தியர்களால் நிர்த்தாரணம்செய்து உபதேசிக்கப் படவேண்டிய தினசரி சுகாதார விதிகளாகும். ஜனங்கள் வியாதியின்றி, ஆரோக்கிய நிலைமையைப் பெற்று, தேஹவன்மையிலும் மனோவன்மையிலும் மேன்மையடைந்து, மிகவும் தீர்க்காயுளைப் பெற்று வாழ்வதற்கான உபாயங்களை அறிவிப்பதற்கு வைத்தியர்களே உபாத்தியாயர்களாகவும் உபதேசகர்களாகவும் இருக்கிறார்கள்.

வியாதியினால் வருந்தும் இந்தியாவின் ஹிதத்தின் நிமித்தம், அநாகரிகத்தில் ஆழ்ந்த இத்தேசத்திய கிராமங்களின் கஷ்ட நிவ்ருத்தியின் பொருட்டு, அபரிமிதமான ஜனக்கூட்டம் அடர்ந்த இத்தேசத்திய நகரங்களின் நன்மையை உத்தேசித்து, ஆரோக்கியமின்றி ஆறுதலின்றி பரிதவிக்கும் பரம ஏழைகளான இத்தேசத்திய ஸ்த்ரீ புருஷர்களுக்காக - நாம் நமது வைத்திய நண்பர்களை முற்கூறிய முயற்சிகளில் இயன்றவளவு ஊக்கமெடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆவலுடன் வேண்டிக்கொள்கிறோம். வைத்திய வித்வான்களே! நீங்கள் தொழில்புரிந்து திரவ்ய ஸம்பாதனம் செய்வதில் ஆவலுள்ளவராயிருப்பது போலவே நமது தேசத்து ஏழை ஜனங்களுடைய சுகாதாரமுறைகளைக் கவனிக்கும் விஷயத்தில் மேலான சிரத்தையெடுத்துக் கொள்வதற்கு முற்றிலும் கடமைப்பட்டவரா யிருக்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள்.

## FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

(முன் தொடர்ச்சி.)

**அக்ஷகாஸ்த்தியின் முறிவு:**—அக்ஷகாஸ்தி எனப்படும் காறை யெலும்பு ஒடிந்துபோனால் அடியில் வரும் குறிகளைக் காணலாம்: அம்மனிதன் கையை உயர சிரஸ்ஸின பக்கமாகத் தூக்கமுடியாது. எலும்பின் ஒடிந்துபோன பாகம் மேலுக்குக் காணப்படும்; அந்த பாகம் மேலே தூக்கி ஏறகும். தோளை அசைக்கும்போது எலும்பின் ஒடிந்த முனைகளில் அதிகமான வலியுண்டாகும். மனிதன் விழும்போது முழங்கையையும் முழங்கைக்குக் கீழுள்ள கரத்தையும் தரையில் பலமாகத் தாங்கிக்கொள்வது ஸஹஜமாகையால், அப்பொழுது அக்ஷகாஸ்தி ஒடிந்துவிடுகின்றது. இந்த அபாயம் சிறுவர்களுக்கு விசேஷமாய் ஸம்பவிப்பது வழக்கம்.

**சிகித்ஸை:**—முதலில், குவிந்த சிறு தலையணையைப்போன்ற ஒரு மெத்தையை அக்குளில் வைத்து, தோள்களை பந்தனம் செய்யவும்; அப்பொழுது அவ்வவயவங்கள் நன்றாகப் பின்புறமாயிழுக்கப்படும். இந்த பந்தனத்துணியை அநேகந்தடவை இரண்டு தோள்களிலும் குறுக்கும் நெடுக்குமாகவும், அநேகந்தடவை சுற்றிச் சுற்றியும் எண்குறிமண்டலபந்தனத்தைப் (figure of eight bandage) பிரயோகிக்கவேண்டும். பிறகு மற்றொரு வஸ்திரத்தினால் கையை முழங்கைக்கு மேலாகப் பக்கவாட்டில் நன்றாகக் கட்டிவிடவேண்டும். இறுதியில் ஒரு கைக்குட்டையினால் முழங்கைக்கும் கழுத்துக்கும் ஏந்தானம் இட்டு பந்தனம் செய்து முடிக்கவேண்டும். பந்தனங்களை அமைக்கும்போது, அவை ஒவ்வொரு இடத்திலும் நழுவிவிடக்கூடுமாகையால், அவ்விடங்களில் தைத்துவிடுவது நலம். இந்த பந்தனத்தை ஒருமாத காலத்திற்குக் குறையாமல் பிரயோகித்து வைத்திருக்கவேண்டும்.

அதன் பிறகு சிலநாள் வரையிலும் ஒட்டுச் சீலைகளை அவ்விடத்தில் பிரயோகித்துவரவும்.

பிணியாளியானவன் மல்லாந்துப் படுத்துக்கொண்டு, கைகளை தேஹத்தின் பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு, சிரஸ்ஸை அசைக்காமல் ஒரே நிலையில் நிறுத்தி அமைதியாயிருந்தாலேயொழிய, ஒடிந்துபோன அக்ஷகாஸ்த்தியை சரியான நிலையில் சலனமின்றி அமர்த்திவைப்பது மிகவும் கஷ்ட ஸாத்தியம். ஸ்திரீகளுக்கு இவ்வபாயம் நேரிட்டதானால், ஒடிந்துபோன அவ்வெலும்புக்கு ஒழுங்கீனம் உண்டாகாமலிருப்பதற்காக, ஒடிந்த முனைகள் நன்றாக ஒன்றுகூடும்வரையில் மூன்று வாரங்களுக்குக் குறையாமல் சார்மணைபோன்ற மெதுவான படுக்கையில் அவர்கள் சாய்ந்து படுத்திருக்கவேண்டும். ஆனால் இந்த அபாயத்திற்காக அவ்வளவு நாட்கள் வரையில் படுக்கையிலேயே இருந்து வருவதற்கு அநேகமாய் பிணியாளிக்கு மனம்பிடிக்காது. மேலே கூறியபடி பந்தனம் செய்யும் பக்ஷத்தில், ஒடிந்துபோன அக்ஷகாஸ்த்தியானது சீக்கிரமாகவும் உறுதியாகவும் ஒன்றுகூடுமானாலும், சிறிதளவு அவ்விடத்தில் ஒழுங்கீனம் ஏற்படக்கூடும்.

ஹநுவஸ்த்தியின் முறிவு:—முகவாய்க்கட்டை எலும்புக்கு ஹநுவஸ்த்தியெனப் பெயர் என்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது. தவடையின் கீழே ஒரு பாரிசத்தில் இந்த எலும்பு சற்றேறக்குறைய நடுவில் ஒடிந்துபோவது வழக்கம். இந்த எலும்பில் பற்கள் அமைந்திருப்பதால், இது ஒடிந்ததால், பற்களின் வரிசை ஏற்றக் குறைவாகக் காணப்படும்; அதாவது—முன் பற்கள் கீழ்ப்பாகமாகவும், கடைவாய்ப் பற்கள் மேற்புறமாகவும் நிற்கக்காணும்; அப்படி ஒழுங்கீனப்படுவது தசைநார்கள் எலும்பை முன்னுக்குப் பின் முரண்டு இழுப்பதால் ஏற்படுகின்றது. எலும்பு ஒடிந்துள்ள பாகம் கைக்கு எளிதில் புலப்படும்; உமிழ்நீர் துளித்துளியாகப் பெருகும்; முகவாய்க் கட்டையை அசைத்தால் அதிக வலியுண்டாகும். இந்த எலும்பின் முறிவு ஸந்நிபாதாஸ்தி பங்கமாயிருந்தால், ஈறுகள் சிதைவுறுவதால் இரத்தப் பெருக்கும் உண்டாகும்; பெரும்பாலும் சில பற்களும் பெயர்ந்துவிடலாம்.

சிகித்ஸை:—பற்கள் ஸாதாரணமாய் ஆட்டங்கொண்டிருந்தால், அவற்றை அப்படியே விட்டுவிடலாம், அல்லது அவற்றை அதனதன் ஸ்த்தானத்தில் அமைத்து வைத்துவிடலாம்; இவற்றை மெல்லிய வெள்ளிக்கம்பிகளால் பக்கத்துப் பற்களோடு சேர்த்து இணைத்துவிடலாம். பற்கள் இடம் விட்டுப் பெயர்ந்து இருந்தால் அவற்றை விலக்கிவிடுவதே நலம். (இவற்றில் கைதேர்ந்த சாஸ்திர சிகித்ஸகரே அதிகாரியாவர்.) ஒடிந்துபோன எலும்புச் சக்கைகள் அவ்விடங்களில இருந்தால், அவற்றையும் வெளிப்படுத்திவிடவேண்டும். இதன் பிறகு பற்களை ஒரே ஒழுங்கான வரிசையில் இருக்கும்படி, ஒடிந்துபோன எலும்பைச் சரிப்படுத்தி அமைக்கவேண்டும். (இந்த ஸமயத்தில் முகவாய்க்கட்டையில் மயிர்கள் வளர்ந்திருந்தால் அவற்றை க்ஷௌரம் செய்துவிடவும்.) பிறகு ஒரு துண்டு கட்டாபர்ச்சாவையாவது கனமாக மாவைப் பரப்பித்தடவிய வஸ்திரத்தையா (மாச்சீலையையா) வது ஒரு காதிலிருந்து மற்றொரு காதுவரையில் நெடுகவும் வளைவாக வைத்து, எலும்பு ஒழுங்காகக் கூடும்விதமாய் ஒட்டிவிடவும்; முதலில் இவற்றை வெந்நீரால் மிருதுவாக்கவும்; நான்கு முனைகள் உள்ள பந்தன வஸ்திரத்தினால் கட்டாபர்ச்சா அல்லது மாச்சீலையை மூடிக்கட்டவேண்டும். (சுமார் $1\frac{1}{2}$-கஜம் நீளமும், 4-அங்குலம் அகலமும் உள்ள வஸ்திரத்தை நடுவில் 8-அங்குலம் துணியை விட்டுவிட்டு, இரண்டு முனைகளையும் இரண்டு பகுதிகளாகக் கிழிக்கவேண்டும்; இந்தத் துணியின் நடுவில் ஒரு சிறிய த்வாரம் விடவும்; இதில் முகவாய்க்கட்டையின் முனை பிரவேசித்து நிற்கும்; இந்த த்வாரத்தின் முன்பக்கத்து ஓரம் ஒரு அங்குலத்திற்கும் குறைவாக விடப்பட்டால், உதட்டிலாவது வாயிலாவது வஸ்திரம் சேராமல் உதட்டுக்குக் கீழேயே நிற்கும்.) நான்கு வால்களைப்போன்ற முனைகளுள் இரண்டு முனைகளை எடுத்து சிரஸ்ஸின் உச்சியில் முடிந்துவிடவும்; மற்ற இரண்டு முனைகளையும் கழுத்தின் பின்புறத்தில் இழுத்து முடிந்துவிடவேண்டும். தலையின் உச்சியில் மற்றொருபந்தனவஸ்திரத்தின் மத்தியபாகத்தை வைக்கவும்; அதன் ஒரு முனையைக் காதுக்கு மேற்புறமாகக் கொண்டுவந்து, முகவாய்க்கட்டையின் கீழாய் மற்றொரு பக்கத்துக்குக் கொண்டுபோய், கழுத்தின் பின்புறமாகப் போகும் வஸ்திரத்தைக் குறுக்கிடுமிடத்தில் ஊசியினால் தைத்துவிடவும்; இவ்விதமே மற்றொரு முனையை இரண்டாவது காதின் மேற்புறமாகக் கொண்டுவந்து, மற்றொரு பாரிசத்தில் தைத்துவிடவும்; இவ்விதம் செய்வதால் பந்தனம் எளிதில் அசைந்து அவிழ்ந்துவிடாமல் நிற்கும்.

அவ்விதம் முகம் மூடப்பட்டிருக்கிற நிலைமையில, வாயை ஒரு சிறிதும் திறக்கமுடியாதாகையால், ஒரு ரப்பர்க் குழாயை, அடிபடாத தவடையின் பக்கமாய், வாயின் ஓரத்தில் மெதுவாக நாக்கின் அடிப்புறம் வரையில் நுழைத்து, அதன் மூலமாய் முற்றிலும் திரவமான ஆஹாரத்தையே இரண்டு வாரங்கள் வரையில உட்செலுத்தவேண்டும்; அல்லது ஒரு ரப்பர்க் குழாயை, மூக்கின் வழியாகத் தொண்டை வரையில் நுழைத்து அதன் மூலமாகவாவது திரவமான உணவை இரைப்பையினுள் அவ்வளவு நாள்வரையில் செலுத்திவரலாம். இந்த அஸ்திபங்கம் ஸ்வஸ்த்தமாகச் சற்றேறக்குறைய ஐந்து வாரங்கள் செல்லும். வாயில் உமிழ்நீர் சொட்டிக்கொண்டிருப்பதும், வாயில் ஒருவித துர்வாஸனையுடன் கூடிய ஏதோ விகாரமான ருசியும் பிணியாளிக்கு மிகவும் அருவருப்பை யுண்டுபண்ணும். இதற்கு காண்டீஸ் ப்ளூயிட் (condy's fluid) என்னும் திரவத்தையும் இரண்டு மூன்று துளிகள் கார்பலிக் ஆஸிட்டையும் கலந்து, குழாயின் மூலமாகவே வாயைக் கழுவி வரலாம்.



## DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### முருக்சமரம்.

இது மிகப் பெரிதுமல்லாமல் சிறிதுமல்லாமல் நடுத்தரமாயுள்ள மரம்; இது முளைத்த வெகு சீக்கிரத்தில் கொழிசாகப் பெரிதாய் வளர்ந்துவிடும்; சிறிய செடியாயிருக்கும்போது முள்ளுகள் கிளைத்திருக்கும். (1) இதன் இலைகளை இடித்துச் சாறு பிழிந்து, அச்சாற்றை வயிற்றுக்கிருமிகளை அழிக்கவும், மலத்தைக் கழிக்கவும் இரண்டு பலம் அளவாகக் கொடுக்கலாம். (2) நரம்பைப்பற்றிய காதுவலியையும், அதே விதமான பல் வலியையும் நிவ்ருத்தி செய்ய இதன் சாற்றைக் காதில் ஊற்றலாம்; பற்களின் அடியில் தேய்க்கலாம். (3) இதன் இலைகளைக்காலிடுக்கு முதலான இடங்களில் உண்டாகும் கிரந்திவீக்கத்திலும், இரத்தக்கட்டி முதலிய வீக்கங்களிலும் வதக்கி வைத்துக் கட்டலாம். (4) இந்த மரத்தின் பட்டைக்கு விசேஷமாய் பித்தஹரமும் ஜ்வரத்தைத் தணிக்கக்கூடியதுமான குணம் உண்டென்றும் தெரிய வருகிறது. (5) இந்தப் பட்டையின் உட்புறத்தில் நெய்யைத் தடவி, ஆமணக்கெண்ணெய் விட்டு எரியும் விளக்கின் ஜ்வாலைக்குமேல் அதைச் சற்றுநேரம் பிடித்திருந்து, அதிற்படியும் மையை எடுத்து கண்களில் எப்பொழுதும் நீர்வடியும் வியாதியில் இறெப்பையினுள் தடவி வந்தால் குணமுண்டாகும் என்றும் சில வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

---

### வெள்ளை ஊமத்தை.

இச்செடி இந்தியாவில் உஷ்ணப் பிரதேசங்களில் எங்கும் ஏராளமாகப் பயிராகும். இது ஸாதாரணமாய் இரண்டு மூன்று அடி உயரத்திற்குமேல் வளருவதில்லை. புஷ்பம் வெளுப்பாயும் வெளிப்பக்கத்தில மட்டும் சிறிது ஊதா நிறமாகவும் இருக்கும்; இதன் காய்கள் பந்துபோல் வர்த்துளமாயும் முட்கள் அடர்ந்தவையாகவும் இருக்கும்.

இது தேஹத்திற் செய்யும் வேலையானது, பெல்லடோனா என்னும் சரக்கின் வேலைக்குச் சமானமாயிருக்கிறது. இதை சூலப்பிரசமனமாகவும் (anodyne), ஆக்ஷேபகஹரமாகவும் (antispasmodic), நித்திராஜனகமாகவும் உபயோகப்படுத்தலாம். இதை சுவாஸ ரோகத்தில் முக்கியமாய் உபயோகிக்கலாம். இதன் இலைகளையும் காம்புகளையும் நிழலில் உலர்த்தியெடுத்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டி, புகையிலையைப் போலவே, ஒரு ஊது குழலில் வைத்து, அதிலிருந்து வரும் புகையை சுவாஸ ரோகத்தில் உறிஞ்சலாம். இவ்விதம் உபயோகிப்பதால், அநேகம் சுவாஸ ரோகிகளுக்கு வெகு சீக்கிரத்தில் ஸௌக்கியமுண்டாவது அநுபவஸித்தம். சிலருக்கு இதன் இலைகள் உபயோகமில்லாமற்போனால, இதன விதைகளை உலர்த்தியெடுத்து முன்போலவே உபயோகிக்கலாம். உலர்த்தியெடுத்த இச்சரக்கை 10-முதல் 20-நெல்லெடைவரையில் உபயோகித்தால் போதுமானது; அதற்கு மேற்பட்டு உபயோகித்தால், மயக்கம், ஏதோ ஒருவிதமான அநாரோக்கியக்குறி, மற்றும் ஏதாவது திருப்தியில்லாத விகாரங்கள் இவற்றை யுண்டுபண்ணும். நாட்பட்ட இருமலில், அது மிகவும் தீவ்ரமான வேகத்தோடு ஸம்பவிக்கையில், இந்தப் புகையைப் பிடித்தால்உடனே அவக்குறிகள் தணிந்துவிடும். ஆமவாதம் என்னும் கீல்வாயுவில கணுக்களில வலியும் வேதனையும் அதிகமாய்விட, வீக்கமும் அதிகரித்திருந்தால் அந்த நிலைமையிலும், நோக்காடு அதிகமான அர்புதம் என்னும் புரைகுழல் அல்லது வீக்கங்களிலும், மேஹப்புண்களிலும் வெள்ளை ஊமத்தையை மேலுக்கு வதக்கிப்போட விசேஷமாய் ஸௌக்கியமுண்டாகும். ஸ்த்ரீகள் மாதவிடாயாகும் காலத்தில் ஊமத்தையிலையை அல்லது வித்துகளைக்கொண்டு மேலே பற்றுப்போட்டால் வேதனை நிவ்ருத்தியாகும்.

---

### நீலாஞ்ஜனமும் கலா - ஆஸார் ஜ்வரமும்.

நீலாஞ்ஜனத்தை உபயோகித்து கலா - ஆஸார் (கால ஜ்வரம்) என்னும் கொடிய வியாதியினால் வருந்திய அநேகம் பிணியாளிகள் ஸ்வஸ்த்தம் செய்யப்பட்டனர். என்று டாக்டர் உபேந்திரநாத் பிரம்மசாரி, M. A., M. D. P. H. D. என்பவர் கூறுகிறார்.

இவர் தன்னுடைய சிகித்ஸாக்கிரமத்தை நான்கு விதமான வெவ்வேறு முறைகளில் பிரயோகித்தார். ஒரு வகுப்பான கேஸுகளில், அவர், பசையுருவமாகச் செய்த நீலாஞ்ஜனத்தை விரைகளென்னும் காரிரத்தகுழாய்களின் மூலமாய் (intravenously) உட்செலுத்தினார். இரண்டாவது வகுப்பான கேஸுகளில் டார் டார் எமிடிக் என்னும் வாந்தியுப்போடு, ஸோடியம் டார்டரேட் ஸம்பந்தமுள்ள நீலாஞ்ஜனத்தை விரைகளின் மூலமாகவே பிரயோகித்தார். மூன்றாவது வகுப்பில் யூஸால் (eusol) என்னும் தோஷஹரமான சரக்கோடு நீலாஞ்ஜனச சத்தையும் கலந்து உபயோகித்தார். நான்காவது வகுப்பில கொய்னா, நார்காடின் முதலிய வேறு சில சரக்குகளைப் பிரயோகித்தார். ஆனால் இறுதியிற்கூறிய இரண்டுவிதமான சிகித்ஸைகளால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இரண்டாவது வகுப்பு சிகித்ஸை சுலபமாகக் காணப்பட்டது; அதைவிட முதல் வகுப்பு சிகித்ஸையினால் முற்றிலும் திருப்திகரமான குணங்கள் உண்டாயின. உலோஹரூபமான பாதரஸம் கலந்த நீலாஞ்ஜன உப்புகளைப் பிரயோகிப்பதில: (1) உபயோகிக்கப்படும் ஔஷதம் மிகவும் சொற்பம்; (2) குணம் வெகு சீக்கிரத்தில் தெரியும்; (3) விஷ ஸம்பந்தமான குணங்கள் ரொம்பவும குறைந்துவிடும். இந்த சிகித்ஸை மிகவும் பயன் படக்கூடியதாயிருப்பதால, கலா - ஆஸார் அதிகமாய் வியாபித்துள்ள இடங்களில் வைத்தியர்கள் இவ்வாறு செய்து பார்ப்பது அவசியமாகும்.

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினா 64. ஆமவாதம் என்னும் கீல்வாயு.

"பெருமை பொருந்திய பத்திராதிபர் அவர்களுக்கு,
ஐயா,

எனது ஸஹோதரன் ஒருவன் நாலுமாத காலமாய் ஆமவாத ஸம்பந்தமான ஸந்தி வீக்கத்தோடு மிகவும் சிரமப்படுகிறான். அவன் பாயும் படுக்கையுமாயிருக்கிறான். அவனுக்கு வலது முழங்காலில் முதலில் வலியும் வீக்கமும் ஸம்பவித்தது ; பிறகு வலி மாத்திரம் ரொம்பவும் குறைந்தது ; ஆனால் காலை அசைக்கக்கூடிய சக்தியை இழந்துவிட்டான் ; ஆகவே இப்பொழுது அவனுக்கு நடக்கமுடியாது. அவன் வெளியூர்களில் இருந்த வரையில் (15-நாட்களுக்கு முன் வரையில்) ஆங்கிலேய வைத்தியரிடம் பொடாஷ் ஐயோடைட், ஆஸ்பிரைன் முதலிய இங்கிலீஷ் மருந்துகளை உபயோகித்து வந்தான் ; இந்திய வைத்தியர்களிடமும், அநேகவிதமான ஔஷதங்களையும் வாங்கி உபயோகித்தான். ஒன்றும் பயன்படவில்லை. அவன் ஒரு மாதத்திற்கு முன்பு கல்கத்தாவுக்குப் போக நேரிட்டது; அங்கே சில முக்கியமான ஆயுர்வேத-ஆங்கில வைத்தியர்களிடம் எந்த ஔஷதங்களைப் பெற்று உபயோகித்தும் குணமில்லை. கீல்வாயு இவனுக்குக் கொஞ்சம் நாள்பட்டது. தாங்கள் தயவு செய்து ஏதாவது பரிஹார முறையை அறிவிப்பீர்களானால் ரொம்பவும் நன்றி பாராட்டுவேன்."

K. C. மாணிக்கம்.

விடை :—தாங்கள் விவரித்திருப்பதைக் கவனித்தால் பிணியாளிக்கு ஒருவிதமான சிகிச்சையையாவது ஏற்றவளவு தொடர்ந்து நிறைவேற்றவில்லையென்று தெரியவருகிறது. மேலும் வியாபகர்களான வைத்தியர்களிடம் சிகிச்சை செய்துகொண்டும் ஒரு குணமும் உண்டாகவில்லையென்றால், அதற்கு ஒரே வைத்தியரிடம் நிலைத்து சிகிச்சை செய்துகொள்ளாமல், அடிக்கடி வைத்தியர்களை மாற்றியதும், ஊரூராகத் திரிந்ததுமே காரணம் என்றும் கூறலாம். தாங்கள் இதன் அடியில் நாம் குறிப்பிடும் சிகிச்சையை விடாமல் ஒருமாதம் அல்லது நாற்பது நாட்கள் வரையில் தொடர்ந்து செய்யவும் :—பிரதி தினமும் காலையில் மலம் கழியும்படி இரவில் படுக்கைக்குப் போகையில் அரைப் பலம் ஆமணக்கெண்ணெயைப் பாலோடு கலந்து உட்கொள்ளச் செய்யவும். சித்ரகாதி சூர்ணம் என்கிற ஔஷதத்தை வேளைக்கு 10-குன்றுமணி எடை வீதம் த்ரிபலாக்வாதத்தின் அனுபானத்தோடு தினத்திற்கு மூன்று வேளை உட்கொள்ளச் செய்யவும். நாராயண தைலத்தை ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் வீக்கமும் வலியுமுள்ள இடங்களில் வலிவுடன் தேய்த்து, கொச்சி இலையிட்டுக் காய்ச்சிய வெந்நீரால் ஒற்றடம் கொடுக்கவும். நெய்யும் பாலும் அதிகமாகக் கலந்த உணவுகளைப் புஜிக்கச் செய்யவும். ஈரத்தில் நடமாடக்கூடாது. குளிர்ந்த ஜலத்தை ஸ்நானத்திற்காவது குடிக்கவாவது உபயோகிக்கலாகாது. இவ்வித முறையை அநுஸரித்து சிகித்ஸை செய்ததில் அநேகம் பிணியாளிகள் ஸ்வஸ்த்தமாயிருப்பதாய் நாம் அறிவோம்.*—ப-ர்.

---

### வினா 65. நிதாந பஞ்சகம்.

"ஐயா,

நான் தமிழ் வைத்திய நூல்களைப் படித்து வைத்தியம் செய்துவந்த பரம்பரையில் இருந்து வருவதால், எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாது. இப்பொழுது ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய நூல்களைக் கற்க ஆவலிருந்தும் நான் இருக்குமிடத்தில் அதற்கேற்ற ஸௌகரியங்கள் ஒன்றுமில்லை. வைத்தியத்தில் "நிதாந பஞ்சகம்" நன்றாகத் தெரியுமா வென்று ஒரு ஸம்ஸ்கிருத வித்வான் என்னைக் கேட்டார். ஸாவகாசமாய் பதில் சொல்லுவதாக அவரிடம் சொல்லிவிட்டு உடனே தங்களுக்கு இக்கடிதத்தை எழுதினேன். அவரிடம் தெரியாதென்று உண்மையைச் சொல்வதைவிட, தங்களைப்போன்ற தத்துவமறிந்தவரிடம் சொல்லி விஷயம் அறிவது மேல் என்று எனது கருத்து. தயவுசெய்து அதற்கு விவரம் கூறவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்."

ச. கே. மு. வைத்தியர்.

விடை :—ரோக விசேஷங்களைப் பரீக்ஷித்து அறிவதற்கான ஸாதனங்கள் நிதானங்கள் எனப்படும். ஆயுர்வேதத்தில் அந்த நிதானங்கள் ஐந்து விதங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை காரணம், பூர்வ ரூபம், ரூபம், ஸம்ப்ராப்தி, உபசயம் என்பனவாம். அவற்றுள் (1) காரணம் என்பது-வியாதியை பிரத்தியக்ஷமாகவோ பரோக்ஷமாகவோ உண்டுபண்ணும் ஹேது. (2) பூர்வ ரூபம்-என்பது வியாதி பூர்த்தியாய் உண்டாவதற்கு முன் காணப்படும் குறிகள். ரூபம் என்றால் ரோகத்தின் இயற்கைக் குறிகள். (4) ஸம்ப்ராப்தி என்றால்-காரணங்கள் தேஹத்தில் பற்றும் வகையையும், வியாதி தேஹத்தில் பரவும் விதத்தையும் மற்ற உற்பத்திக்கிரமங்களையும் அறிவிக்கும் விசேஷமாம். (5) உபசயம் என்பது-சிகித்ஸை செய்து வியாதி ஸ்வரூபத்தின் தத்துவத்தை நிச்சயிப்பதற்கான ஸாதன விசேஷம். இவற்றுள் முதலிற்கூறிய காரணத்திற்குப் பிரதியேகமாக நிதானம் என்று பெயர் வழங்கப்படும். இந்த ஐந்துக்கும் ஆயுர்வேதத்தில் "பஞ்ச நிதானங்கள்" அல்லது "நிதாந பஞ்சகம்" என்று பெயர்.—ப-ர்.

---

* இங்கு குறிக்கப்பட்டுள்ள சித்ரகாதி சூர்ணம், த்ரிபலாக்வாதம், நாராயண தைலம் இவற்றின் முறைகளைப்பற்றிய விவரங்களை, வைத்தியகலாநிதி ஆபீஸில் வெளியாயுள்ள சார்ங்கதர ஸம்ஹிதையில் காணலாம்.



# NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### க்ளிஸரைன் என்னும் சரக்குக் கிடைப்பது அரிது.

யுத்ததளவாட மந்த்ரியினுள் அடியில் வருமாறு ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது :—யுத்தத்தில் நடந்தேறவேண்டிய வேலைகளுக்கு அதிக அளவாக க்ளிஸரைன் ஸப்ளை செய்யவேண்டியிருப்பதால், ப்ரிடிஷ் பாரமகோபியாவின்படி ஔஷதாதிகளைத் தயார் செய்வதற்கு இனி அச்சரக்கை எவருக்கும் கொடுக்கக்கூடாது. ஆகையினால் இனி வைத்தியர்கள் எந்த ஔஷதத்திலும் க்ளிஸரைனை உபயோகப்படுத்தும்படி எழுதுவதற்கு ஸாத்தியப்படாது. அவரவர்கள் இப்பொழுது தமதிடம் வைத்துக்கொண்டிருக்கிற க்ளிஸரைனை ஸாத்தியமானவரையில் செட்டாக வைத்துக்கொள்வது நலம் :—Prescriber.

---

### ஒருவனுக்கு மிதமிஞ்சிய உடற் சூடு.

ஆரோக்கிய நிலைமையில் 97-முதல் 99-டிக்கிரி வரையிலும் உடற்சூடு உண்டென்றும், ஜ்வரத்தில் அதற்குமேல் சுமார் 106-டிக்கிரி வரையிலும் உயரும் என்றும் அனைவரும் அறிந்த விஷயம். ஒரு இடாலியனுடைய தேஹத்தைப் பரிசோதித்ததில், அவனுக்கு ச்வாஸாசய வியாதியின் காரணமாக உடற்சூடு 138-டிக்கிரி வரையில் உயர்ந்து நின்றது எனப் பதிவு செய்துகொள்ளப்பட்டது :—Practical Medicine.

---

### ஓர் அறை ஈரமாயிருப்பதை அறியும் உபாயம்.

நாம் வாஸம்செய்கிற அறை ஈரமாயிருந்தால், அதனால் தேஹம் ஆரோக்கியக்குறைவை அடையும் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் ஒரு அறை ஈரமாயிருப்பதையும் ஈரமில்லாதிருப்பதையும் கண்களால் பார்த்தே தெரிந்துகொள்வது கஷ்டம் ; பார்ப்பதற்கு உலர்ந்திருப்பதாகத் தோற்றும் அறையில் தரையும் விசேஷமாக ஆகாயமும் ஈரமாயிருக்கக்கூடும். இதை நிச்சயிப்பதற்காக அடியில் வரும் பரிசோதனையைச் செய்து பார்க்கலாம் :—இரண்டு பவுண்டு அளவுள்ள சுண்ணாம்பை அறையினுள் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, சற்றும் காற்றுப் புகா வண்ணம் கதவையும் சாளரங்களையும் நன்றாக மூடிவிட்டு அப்பால் 24-மணி ஸாவகாசம் கழித்து அந்தச் சுண்ணத்தை எடை போட்டுப் பார்க்கவும்; அப்பொழுது அது நிறையில் 10-கிராமுக்கு அதிகமான கனம் அதில் சேர்ந்திருந்தால், அந்த அறை ஈரமாயிருப்பதாகவும், அவ்வளவு ஈரம் ஆரோக்கியத்திற்குத் தகாததாகவும் நிச்சயிக்கப்படவேண்டும். இது ஈரத்தின் அளவைக் குறிப்பிட்டு அறிவிப்பதற்கு எவ்விதத்திலும் ஏற்ற ஸாதனமாயிருக்கின்றது.

---

### அபரா யென்னும் மாயையை எளிதில் வெளிப்படுத்தல்.

ஸ்த்ரீகள் பிரஸவிக்கும்போது, கருப்பையிலிருந்து சிசுவுக்குப் பின்னால் மாயை எனப்படும் ஒரு பிண்டம் வெளிப்படுகிறதல்லவா ! சில ஸமயம் அது தனக்குத்தானே கருப்பையை விட்டுப்பிரிந்து வெளியில் வராமல் ஆசயத்திற்குள்ளேயே தங்கியிருக்கும். அப்பொழுது, பிரஸவ வேலையில் நிபுணராயிருப்பவர், கருப்பைக்குள் கையைச் செலுத்தியாவது சஸ்திரப் பிரயோகம் செய்தாவது அதை வெளிப்படுத்துவது வழக்கம். கொதிக்கவைத்த ஜலத்தில் சுத்தமான உப்பைக் கரைத்து, அந்த நீரை ஒரு பீச்சாங்குழலில் எடுத்து, அபராவிலிருந்து வெளியில் தொங்கும் நாபிக்கொடியின் மூலமாய் அபராவுக்குள் போகும்படி அந்த நீரைப் பீச்சிடவேண்டும். நாபிக்கொடியிலுள்ள ஸிரையின் (காரிரத்தக் குழாயின்) மூலமாய் இவ்வுப்பு நீர் அபராவிற் பிரவேசிக்கும். அபராவானது கிரமமாக இவ்வுப்புநீரால் பருத்து ஊதிவிடும். இறுதியில் அபராவைச்சுற்றிலும் (அதை ஆசயத்துடன் கட்டியிருக்கும்) அமைந்துள்ள சில தாதுக்கள் பற்றற்றுப் போக, அபராவும் கர்ப்பாசயத்தைவிட்டு விலகிவிடும். அபராவுக்குப் பின்னால் திரவபதார்த்தம் சேரச் சேர, அத்திராவகதினால் அபரா மெள்ள மெள்ள வெளியில் தள்ளப்படும் ; இச்சந்தர்ப்பத்தில் உப்புநீரால் கர்ப்பாசயம் தூண்டப்படவே, அவ்வாசயமும் சுருங்கி அபராவை வெளிப்படுத்தும். இவ்விஷயம் க்ரிடிக் அண்ட் கைட் (Critic and Guide) என்னும் பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. இச்சிகித்ஸா முறை எளிதாகத் தோற்றுவதால், நமது கலாநிதியைப் படிக்கும் வைத்திய நண்பர்களும் இதைக் கையாண்டு, தமது அநுப

வத்தை மீண்டும் இப்பத்திரிகையின் வாயிலாக வெளியிடுவது உபயோககரமாயிருக்கும். [அபரா என்பதை தமிழில் மாயை என்றும் ஆங்கிலத்தில் ப்ளஸெண்டா (Plecenta) என்றும் வழங்குவர்.]

---

## விரணங்களுக்கு ஒரு ஸுலபமான ஔஷதம்.

பால்ஸம் ஆப் பெரு (Balsam of Peru) என்பது, சாம்பிராணி வாஸனையுள்ள குங்கிலியத் தைலம் போன்ற ஒருவித ஔஷதம். ஆமணக்கெண்ணெயில் நூற்றுக்குப் பத்துப் பங்கு வீதம் பால்ஸம் ஆப் பெருவைக் கலந்து, அநேகவிதமான புண்களிலும் வெட்டுக் காயங்களிலும் தடவி பந்தநம் செய்வது சிலாக்கியமான முறை. சிறிது சதை வளர்ந்துவரும் விரணங்களை பால்ஸம் ஆப் பெரு என்பது நன்றாக ஆற்றி விரைவில் குணமுண்டுபண்ணுந்தன்மையது. ஆமணக்கெண்ணையும், பால்ஸம் ஆப் பெருவும் கலப்பதால் விரணமானது ஆழமான பாகத்திலிருந்தே சிதைவுண்ட பாகங்கள் மறைந்து மிகவும் திருப்திகரமாக ஆறிவிடும்.—American Medecine.

---

## கக்கிருமலுக்கு அநுபவ ஸித்தமான ஒரு சிகித்ஸை.

சென்ற வருஷம் ஜூலை மாஸம் முதல் தேதி வெளியான பிரிடிஷ் மெடிகல் ஜர்னலில், டாக்டர் T. மார்க்ஹோவெல் என்பவர் கக்கிருமலுக்கு வெள்ளைப்பூண்டு வீடுகளில் ஸாதாரணமாய் உபயோகிக்கக் கூடிய மிகப் பிரயோஜனகரமான ஔஷதச் சரக்கு என்று ஒரு குறிப்பு வெளியிட்டிருக்கிறார். வெள்ளைப்பூண்டின் மேல்புறத்தோல்களை உரித்து, சின்னஞ் சிறிய துண்டுகளாகச்செய்து, பாதங்களில் காலுறையை அணிந்துகொண்டு, அதன்மேல் இப்பூண்டுத் துண்டுகளைப் (பாதங்களின் மேலும் கீழுமாக) பரப்பி, அதற்குமேல் மற்றொரு காலுறையைப் போடவும். (பாதங்களில் சர்மத்தின்மீதே உபயோகித்தால், நடக்கும்போதும் மற்ற ஸமயங்களிலும் எரித்தலுண்டாகும்) இப்பூண்டின் துண்டுகளைப் பாதங்களில் கட்டிக்கொண்ட அரைமணிக்குள்ளாகவே அவற்றிலிருந்து ஒருவித வாஸனை நாசியினால் உறிஞ்சப்படும்; அப்படி உறிஞ்சப்படுவதால், 48-மணி ஸாவகாசத்தில் இழுப்பும் ச்வாஸ வேகமும் தணிந்துவிடும். வியாதியின் நிலைமைக்குத் தகுந்தவாறு வெள்ளைப்பூண்டை ஒருவாரம் அல்லது அதற்கும் மேலாகவே பாதங்களில் முற்கூறிய விதம் பிரயோகித்து வரலாம். வெள்ளைப் பூண்டை ரொட்டியோடு கலந்தும், பாலில் சேர்த்துக் காய்ச்சியும் உட்கொள்ளவும் செய்யலாம்.

---

## இருமலில் உஷ்ண ஜலத்தின் உபயோகம்.

அடிக்கடியும் காஸத்தினால் வருந்துபவருக்கு திடீரென்று உண்டாகும் இருமலைத் தடுப்பதற்கு உஷ்ண ஜலம் சிறந்த ஔஷதம் என்று அறியப்படுகிறது; முக்கியமாக க்ஷயகாஸத்தில் தற்காலம சாந்தி யுண்டுபண்ணுவதற்கு இதை உபயோகிப்பது நலம். திடீரென்று வேகத்துடன் கிளம்பும் இருமல், உஷ்ண ஜலத்தை இரண்டு மூன்று விழுங்குகள் உட்கொண்டவுடனே ஆச்சரியப்படும்படி தணிவடையும். இருமலுக்கு முக்கியமாக உபயோகிக்கப்படும் வேறு ஔஷதங்கள் ஜீர்ணசக்தியையும் பசியையும் கெடுத்து விடுவது வழக்கம். ஆனால் உஷ்ணஜலமோ தேஹத்தில் இயற்கையில் நடந்தேறும் ஜீர்ணவேலை முதலிய எச்செயல்களுக்கும் சிறிதும் விரோதம் செய்யாமல் இருமலைத் தணிக்கச்செய்யுமியல்புடையது. இருமலின் வேகம் தோன்றும்போதெல்லாம் நன்கு கொதிக்கவைத்த ஜலத்தை உட்கொள்ள வேண்டும்.—American Medicine.

---

## குழந்தைகளுடைய அதிஸாரத்திற்கு.

சில குழந்தைகளுக்கு ஸாதாரண அதிஸாரமும் ஒவ்வொரு ஸமயத்தில் அபாயகரமான நிலைமையை உண்டு பண்ணும். ஆகவே அதிஸாரம் ஏற்பட்டவுடனே, வேறு சிகித்ஸைகளுக்காகப் பிரயத்தனப்படுவதற்கு முன்பாக, ஸோடா எனப்படும் உஷாக்ஷார ஸத்துவத்தை ஒரு தேக்கரண்டியளவு வீதம் கொதித்த ஜலத்தில் கரைத்து தினத்திற்கு மூன்று வேளை உபயோகிக்கவும். இது வயிற்றில் சேர்ந்துள்ள புளிப்பைத் தணியச்செய்து அதிஸாரத்தையும் தடுக்கும்.—The Doctor

---

இந்திய வைத்திய சாஸ்திராபிவ்ருத்தியில் அபிமானம் பாராட்டும் டாக்டர் ஜே. வி. இராமஸ்வாமி நாயுடு அவர்கள் "வைத்திய கலாநிதியில்" சிலப் பிரகரணங்களில் அச்சிடுவதற்கு அநேகம் சித்திரப் படங்கள் ஸம்பந்தமான ப்ளாக்குகளை உதவியதற்கு நாம் மிகவும் நன்றிபாராட்டுகிறோம். அல்லாமலும் இக்கனவான் அப்போதைக்கப்போது உபயோககரமான வியாஸங்களை வைத்தியகலாநிதிக்காக எழுதி வருவதையும் மனதாறப் பாராட்டுகிறோம்.


# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
*Ayurveda Bhushan*
**Pandit M. Duraiswami Aiyangar,**
*Senior Physician, S. K. P. D. Hospital.*

பத்திராதிபர்:
ஆயுர்வேத பூஷணம்.
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின்
பிரதான டாக்டர்.

புஸ்தகம் 4. Vol. IV. | நளஹு பங்குனிமீ—பிங்களஹு சித்திரைமீ. APRIL—1917. | ஸஞ்சிகை 8. No. 8.


## CHOLERA

## விஷபேதி என்னும் வாந்திபேதி.


By T. R. LAKSHMANAPERUMAL PILLAI,
*District Medical & Sanitary Officer.*


---

எவ்விதமாயாவது நம்முடைய அவயவங்களில் உட்செல்லும் சிறிய கிருமிகளால் அநேக வியாதிகள் ஏற்படுகின்றனவென்று ஜனங்கள் அறியாத நாட்கள் பல கழிந்துவிட்டன. இக்காலத்தில் சாப்பாட்டைக் கிரகிக்கும் நமது அவயவங்களுக்குள் சிறிய கிருமிகள் பிரவேசிப்பதனால் வாந்திபேதி முதலியவை உண்டாகின்றனவென்று ஸாதாரண உலக நடவடிக்கை தெரிந்த ஜனங்களுக்குத் தெரியும். குடிக்கும் தண்ணீர் மூலமாய் நமது வயிற்றுக்குள் அப்படிப்பட்ட கிருமிகள் பிரவேசிக்கின்றன. இன்னும் சில காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் அசுசியான தின்பண்டங்களை உண்பது ஒன்று. ஒரு கிராமத்தில் ஒருவருக்கு வாந்திபேதி கண்டால் அது மற்றவர்களையும் தொடருகிறது. அநேகர் அதினால் மாண்டுபோகிறார்கள். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் இக்கொடிய வியாதியைத் தடுக்கவேண்டிய முயற்சிகள் செய்யவேண்டியது நம்முடைய கடமை.

இவ்வியாதி முக்கியமாய்த் தண்ணீர் மூலமாய் உண்டாகிறதென்று தெரிகிறபடியால் ஜலாதாரத்தைப் பாதுகாப்பது நம்முடைய முதற்கடமை. மேற்படி நோயுண்டாகும் காலங்களில் சுத்தமான ஜலத்தை உபயோகிக்கவேண்டும். குழாய்த் தண்ணீரும் வடிகட்டின தண்ணீருமிருக்கிற பட்டணங்களில் வீட்டு உபயோகத்திற்கெல்லாம் அவ்விதமான தண்ணீரையே உபயோகிக்கவேண்டும். கிணற்றிலிருந்து எடுக்கிற தண்ணீரைக் கண்டிப்பாய் உபயோகிக்கக் கூடாது. குழாய்த் தண்ணீர் இல்லாவிட்டால் கிணறுகளைத் தவிர வேறு ஆதாரமில்லை. சில கிணறுகள் அதிக ஆழமில்லாமலிருக்கும், சில சுலபமாய்த் தண்ணீர் மட்டத்துக்குப் போகும்படி படி கட்டப்பட்டனவாயிருக்கும். இன்னும் மற்றக் கிணறுகள் எளிதில் அசுத்தம் செய்யப்படக்கூடியவைகளாய் அமைக்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட கிணறுகளின் தண்ணீரைக் கண்டிப்பாய் உபயோகிக்கக் கூடாது. அசுத்தத்துக்கு இடம் கொடாத ஆழமான கிணற்றின் தண்ணீர்தான் வெகு நலமானது. குழாய்த்தண்ணீர் கிடைக்காத இடங்களில் இவ்வித கிணற்று நீரை உபயோகிப்பது நலம். மேற்கண்ட கிணறுகள் இல்லாத இடங்களில் கூடியவரையில் எந்தத் தண்ணீர் சுத்தமாகத்தோன்றுகிறதோ அதை உபயோகிக்கவேண்டும். வாந்திபேதி தண்ணீர் மூலமாய் உற்பத்தியாகிறதென்று முன்வது மேற்படி நோய் கண்டால் அவ்விடத்தினமே தெரிவித்திருக்கிறது, எவ்விடத்திலா

லுள்ள ஜலாதாரத்தைச் சுத்தப்படுத்தவேண்டும். அதாவது அதிலிருக்கும் கிருமிகளைக் கொல்லவேண்டியது தான். அப்படிக்கொன்ருல் அந்நோய் மற்றவர்களைத் தொடராதபடி தடுக்கலாம். இம்முறையை அனுஸரித்து சுகாதார உத்தியோகஸ்தர்கள் ஒரு சிவந்த நிறமுள்ள தூளை (பொடாஸியம் பெர்மாங்கனேட்) ஸந்தேகப்பட்ட தண்ணீரில் தூவுகிருர்கள். உடனே அத்தண்ணீரிலிருக்கும் கிருமிகளெல்லாம் அழிந்துவிடுகின்றன. தண்ணீர் அப்போது உபயோகிக்கக்கூடியதாய் சுத்தமாய் விடுகிறது. நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயமுண்டு; அதாவது நோய்கண்டவர்களுக்கு ஏற்படும் வாந்திபேதிகளுடன் லக்ஷக்கணக்கான கிருமிகள் வெளிவருகின்றன. அக்கிருமிகள் குடித்தண்ணீர் ஆகாரம் இவைகளில் ஸம்பந்தப்படாதபடி நாம் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டு அக் கிருமிகளை எல்லாம் உடனே அழித்துவிடவேண்டும். அப்படிச் செய்தால்மட்டும்தான் நோய் மற்றவர்களைத் தொடராதபடி தடுக்கலாம். இவைகளைச் செய்யத்தான் சுகாதார உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப்படுகிருர்கள். இவ்வுத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் முறையைச் செய்யும் வண்ணம் ஜனங்கள் ஒத்தாசை செய்யவேண்டும். சிலகாலங்களில் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் ஏற்படாமலிருக்கக்கூடும். ஏற்பட்டாலும் அவர்கள் சிகித்ஸையை ஆரம்பிக்கக் காலதாமதமாகக்கூடும். அப்படிப்பட்ட காலங்களில் ஒவ்வொரு மனிதரும் நோயைத் தொலைக்க அடியிற்கூறியபடி முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டிய தவசியம்.

(1) நோய்கண்டமனிதனைத் தனியாய் வைப்பது: அதாவது அவன் இருக்குமிடத்தில் சிகித்ஸைக்கு அவசியமானவர்களைத் தவிர வேறு எவரும் வரக்கூடாது.

(2) ரம்பத்தூள், நெல்லுமி அல்லது சுலபமாய் எரித்துவிடக்கூடிய வேறு எந்த வஸ்துக்களிலாவது வாந்தியையும், பேதியையும் வாரி, வேண்டுமானுல் கிரோஸின் எண்ணெய் சேர்த்து, அவைகளை வீட்டிலோ அல்லது அதன் அருகாமையிலோ எரித்துவிடுவது.

(3) வாந்திபேதியோடு எவ்விதத்திலும் ஸம்பந்தப்பட்ட கந்தைத்துணி முதலியவைகளை எரித்துவிடுவது.

(4) நோயாளிக்கு ஒத்தாசையாய் இருப்பவர்கள் நல்ல சுத்தமாயிருத்தல். சுத்தம் செய்யு மருந்து கிடைக்குமானுல் கைகளை சுத்தம் செய்துகொள்வது.

(5) நோய்கண்ட வீட்டை முடியுமானுல் நன்ருக முழுவதும் சுத்திசெய்வது.

வாந்திபேதி காலத்தில் அல்லது அது நெருங்கின ஸமயத்தில் கீழ்க்கண்ட கர்னல் கிங் அவர்களின் சுலபமான சுகாதார விதிகளை அனுஸரிக்கவேண்டும்:—

### ஏ.—இடம்.

(1) ஒவ்வொரு வீடும் முழுவதும் சுத்திசெய்யப்படவேண்டும். அதாவது எரு, அசுத்த ஜலம், மாட்டுக்கொட்டாயிலுள்ள குப்பை இவைகளை அப்புறப்படுத்தவேண்டும்.

(2) அப்படி அப்புறப்படுத்தியும்கூட நமுராயும், அசுத்தமாயும் இருந்தால் உலர்ந்த சுத்தமான மண் தெரிகிறவரையில் தரையைத் தோண்டவேண்டும்.

(3) அப்படித் தோண்டிய மண்ணை ஊருக்கு வெகுதூரம் எடுத்துச் சென்று வயல்களுக்கு எருவாக உபயோகிக்கலாம். சுத்தமான இடத்திலிருந்து புது மண் கொண்டுவந்து தோண்டின தரையில் போட்டு நிரப்பவேண்டும்.

(4) வீட்டை உள்ளேயும், வெளியேயும் வெள்ளையடிக்க நிர்வாஹமில்லாத பக்ஷத்தில், உள்ளேமட்டுமாவது வெள்ளையடிக்கவேண்டும். படுத்துத்தூங்கும் அறையிலுள்ள தூண்களிலும் உத்தரங்களிலும் தொங்கியிருக்கும் துணி வேறு எல்லா வஸ்துக்களையும் எடுத்து எறிந்துவிடவேண்டும்.



(5) எப்போதும் கூடியவரையில் சுத்த காற்று உலாவும்படி வீட்டுக் கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்து வைத்திருக்கவேண்டும்.

(6) வீட்டுக் கக்கூஸை ஒரு நாளைக்கு இரண்டு தடவை சுத்தம்செய்து, அசுத்தம் கொஞ்சமேனுமில்லாமல் வைத்திருக்கவேண்டும்.

(7) வீட்டுச் சாக்கடையை ஒரு நாளைக்கு இரண்டுதடவை கழுவிவிடவேண்டும்.

(8) ஆடு மாடுகளின் மூத்திரங்கள் தங்க அமைக்கப்பட்டிருக்கும் குழிகளையும் சாக்கடைக் குழிகளையும் அன்றன்று சுத்திசெய்யவேண்டும்.

### பி.—நபர்.

(1) தேஹத்தையும் துணிகளையும் மிகவும் சுத்தியாய்வைத்துக்கொள்ளவேண்டும். மெலிந்திருப்பவர்கள் வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். குளிர்ந்த தண்ணீரை உபயோகிக்கக்கூடாது.

(2) ஆஹாரம் சொற்பமாயும், ஆனுல் பலத்தைக்கொடுக்கக் கூடியதாயும், நல்லதாயுமிருக்கவேண்டும்.

(3) அஜீர்ண முண்டாக்கக்கூடிய பதார்த்தங்கள், கீரைகள், பழங்கள் இவைகளை நீக்கவேண்டும்.

(4) மிதமிஞ்சி மதுபானம் செய்தல், ஸ்திரீ ஸம்போகம், இரவில் அதிகநேரம் விழித்திருத்தல், குளிரிலும் பனியிலும் அடிபடுதல் இவைகளை நீக்கிவிடவேண்டும்.

(5) பழைய சோற்றை ஒருபோதும் உபயோகப்படுத்தக்கூடாது. பூச்சிகள் ஆகாரத்தின்மீது உட்காராமல் ஜாக்கிறதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். வேகவைக்காமல் பதார்த்தங்களைப் புஜிக்கக்கூடாது. வேகவைப்பதற்குமுன் கொதித்த சுத்தியான வெந்நீரில் நன்ருக அவைகளைக் கழுவவேண்டும். வயிற்றுக்குக் கெடுதி உண்டாகாத அளவு சாப்பாட்டில் உப்பை தாராளமாய் உபயோகப்படுத்தவேண்டும்.

(6) வீட்டில் அசுசியான தண்ணீரை வைத்திருக்கவும் கூடாது. சுத்தமான ஜலத்தையே வைத்துக்கொள்ளவேண்டும்.

(7) குடி தண்ணீர் வாய் அலம்பவோ குடிக்கவோ, உபயோகிப்பதற்குமுன் கொதிக்கும்படி நெருப்பில் காய்ச்சப்படவேண்டும்.

(3) பேதிக்கு ஒரு மருந்தும் சாப்பிடக்கூடாது.

(9) அஜீர்ண சின்னங்கள் ஏதாவதிருந்தால் உடனே தக்க மருந்து சாப்பிட்டு அவைகளைத் தடுக்கவேண்டும். 24-மணி நேரத்தில் இரண்டுதரம் பேதியானவர்கள் இந்த முறையை அனுஸரிக்கவேண்டும்.

(10) பயப்படக்கூடாது. வாந்திபேதி ஸமாசாரத்தைப்பற்றி அடிக்கடி நினைப்பதாவது பேசுவதாவது கூடாது.

---

## HABITS AND THEIR EFFECTS

### பழக்கத்தின் பயன்

BY T. A. AGASTYA SARMA,
*Physician & Surgeon.*

(முன் தொடர்ச்சி.)

மதுஸாரம் (Alcohol.)

இனி, பிரபலமான லாகிரி வஸ்துக்களுள் இரண்டாவதான மதுஸாரத்தைப்பற்றிப் பேசுவோம். மதுஸாரம் என்பது புகையிலையைப் போலவே மானிட தேகத்திற்குத் தீங்கு செய்யும் திரவியமேயாகும். கொண்டாடிக் கூறத்தக்க குணமெதுவும் அதனிடத்திற் காணக்கிடையாது; அஃதொரு விஷச்சரக்கு (Drug); உணவுப் பொருளன்று; உத்தீபன காரியுமன்று. இரத்தாசயம் (the heart), ஈரற்குலை (the liver), இரைப்பை (the stomach), விருக்கங்கள் (the Kidneys) ஆகிய இவைகளின் காரியங்களைக் கெடுக்கின்

றது. இரத்த நாளங்களில் அதிகமாக இரத்தத்தைத் திணிக்கின்றது. உஷ்ண பரிமாணத்தை (temperature)க் குறைக்கின்றது. அதிர்ச்சியின் பயனை அதிகரிக்கச்செய்கின்றது. மூளையின் ஆட்சியை முறிக்கின்றது. மனத்தின் திடனைக் குலைக்கின்றது; மானஸிக காரிய கதியைத் தடைப்படுத்துகின்றது; தசைகளையும் ஸிராகேந்திரங்களையும்(muscles and nerve centres) *பாழாக்குகின்றது. இவ்வாறு, சரீரம், மனம் என்னும் ஸ்தூல ஸூக்ஷ்ம வியாபாரங்களில் மதுஸாரம் தீமை விளைவிப்பதல்லாமல் ஸூக்ஷ்மானுகுண்யமாகிய சித்த விகாரங்களில் (in tne emotions) அது மனிதனுக்கு இருக்கத்தக்க உத்தம பாவனைகளை அழிக்கின்றது; ஸதாசாரங்களிற் பற்றில்லாமற் பண்ணுகின்றது; நன்றியறிவை மழுக்குகின்றது; நீதி நெறியைக் குலைக்கின்றது. அன்றியும் அது உலகத்தில் பித்தர்களையும் குற்றவாளிகளையும் அதிகரிக்கச்செய்கின்றது (மதுஸாரத்தினால் மனிதருக்குப் பைத்தியமும் குற்றஞ்செய்யும் மனப்பாங்கும் அதிகரிக்கின்றது). மேற்சொல்லிய அவகுணங்கள் மாத்திரமே யல்லாமல், அதிகத் திறமையும் வலிமையும் உண்டாயிருக்கின்றன வென்னும் மாயத் தோற்றத்தை மதுஸாரம் மனிதனுக்குப் புகட்டுகின்றது. இதுவரையிற் சொல்லிய விஷயங்களனைத்தும் தர்க்கத்திற் கிடமானவையல்ல, மற்றொருவர் மறுத்துக் கூறத்தக்கவைகளுமல்ல. ஐரோப்பாக் கண்டத்தில் நிகழ்ந்துவரும் மகாயுத்த வைபவத்தில் மதுஸாரத்தின் குணக்கேடு நன்கு வெளியாயிற்று.

தேகத்தில் மதுஸாரம் செய்யும் சேஷ்டைகள்:—மதுஸாரத்தில் மயக்கம் உண்டாக்கும் தன்மையிருக்கின்றது. அதனால் அது மூளையிலுள்ள இந்திரிய மூலங்களை ஒருவாறு தாக்கிச் சரீரம் ஸ்வஸ்தஸ்திதியில் இருக்கின்றதென்னும் பிரமையையும், மனத்தொல்லைகளெல்லாம் அகன்றொழிந்தன வென்னும் தப்பெண்ணத்தையும் உண்டாக்குகின்றது. இதனால், மதுஸாரத்தை உட்கொள்பவர்கள் அதனில் கெட்ட குணங்கள் இருக்கின்றனவென்று எளிதில் நம்புகிறதில்லை; மிதமாகக் குடிப்பவர்களே இப்படி நம்பாதிருப்பவர்கள். ஆயினும், அவர்கள் அதைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குடித்துக் கொண்டுவரவர அதன் அவகுணங்கள் சரீரத்தில் நிலை கொள்கின்றன.

மதுஸாரம் அன்னாசயத்திற்போய்ச் சேர்ந்தவுடனே, அன்னாசயத்தின் உட்சவ்வுக்களில் இரத்தம் அதிகரிக்கின்றது. அவைகளில் அழலையேற்படுகின்றது; இதுவே gastritis (அன்னாசயதாபிதம்) *என்னும் வியாதியாகும்; நாளடைவில் அன்னாசயத்தில் விரணங்கள் ஏற்படுகின்றன; இவ்வாறு இரைப்பையில் விப்புருதி ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.

ஜடராக்னியிலுள்ள பெப்ஸின் (Pepsin) என்னும் பாசகத்திரவியத்தை மதுஸாரம் வேறாகப் பிரித்துத் தள்ளுகின்றது; அதனால் ஜீர்ண காரியம்கெடுகின்றது.

மதுஸாரம் மிக்க விரைவில் இரத்தத்தோடு கலக்கின்றது; இவ்வாறு சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் போய்ச் சேருகின்றது. ஈரற்குலை (liver), புப்புஸங்கள் (lungs), விருக்கங்கள் (kidneys), மூளை (brain), இரத்தாசயம் (heart), இரக்த நாளங்கள் (blood-vessels), நரம்புகள், (nerves), ஆகிய இந்த உறுப்புக்களுள் ஏதேனும் ஒன்றேனும் இரண்டு மூன்றேனும் மதுஸாரத்தினால் ஏற்பட்ட அவகுணங்களைக் கூடியசீக்கிரத்திற் காட்டிவிடும்.



சீக்கிர காலத்திலேயே ஈரற்குலை பருத்துப் போகலாம்; பிறகு அதன் கண்ணறைகளில் கொழுப்பு அடையக்கூடும்; அந்தக் கண்ணறைகள் நாசமடையலாம்; அவைகள் இருந்த இடத்தில் மெல்லிய நார்போன்ற இழைகள் தோன்றும். இந்த இழைகள் சுருங்கி 'குமிழாணி' போன்றவடிவ மேற்கின்றன. இது 'Hob-Nail' liver எனப்படும். இப்படி இரத்தக்குழாய்கள் நெருக்குறுவதனால் வயிற்றில் நீர் கோத்துக் கொண்டு மஹோதரம் காணும்; மூளைமூல ரோகம் தோன்றினும் தோன்றும்.

சுவாஸாங்கங்களின்மீது (on the organs of respiration) தாக்கும் மதுஸாரவேகத்தின் பயன்களோவெனின், மார்புச்சளி (bronchitis), இருமல் (cough), நுரையீரற் கொதிப்பு (pneumonia), க்ஷயரோகம் (consumption) ஆகிய இவை தோன்றும். நுரையீரற் கொதிப்பினால் மாண்ட குடிகாரரனேகர்; அந்நோது அவர்களுக்குப் பிராணாந்தகமான வியாதியெனவே சொல்வார்கள். க்ஷயரோகத்தைப் பற்றி நாம் சொல்லவேண்டியதேயில்லை. அது கொஞ்சங் கொஞ்சமாக உடலை உருக்கி உயிரை ஒடுக்கிக் காலக்கிரமத்திற் கொல்லுமென்பது அதன் பெயரினாலேயே விளங்குகின்றது.

ஈரற்குலையைப் போலவே விருக்கங்களும் மதுஸாரத் தாக்கத்தினாற் சீர்கெட்டு நோய்ப்பட்டுத் துன்பம் விளைவிக்கும் — அவைகளில் இரத்தம் அதிகமாகத் தங்கத் தலைப்படுகின்றது. மூத்திராம்சங்களைப் பிரிக்கும் கண்ணறைகள் (secreting cells) நாசமடையும்; அந்தக் கண்ணறைகளின் ஸ்தானத்தில் மெல்லிய இழைகள் தோன்றிச் சுருங்கி, மேலே சொல்லியதுபோல வடுப்படும் (scar tissue). இவ்வாறு நோய்ப்பட்டும் விருக்ககள் நெடுநாள் வரையில் மிகக் கஷ்டப்பட்டுத் தம் வேலையைச் செய்துகொண்டே வரும் முடிவில் மூத்திர பிண்டதாபனரோகம் (Brights disease) உண்டாகும்; மூத்திரத்தோடு சுவேததாது (albumin) வெளிப்படும்; * விஷத் தன்மையுள்ள மூத்திராம்சங்கள் இரத்தத்தினின்றும் வழக்கம்போல மூத்திர பிண்டங்களினாற் பிரிபடமாட்டா; நீர்ப்பாண்டு ரோகம் ஜனிக்கும்; நாளடைவில் பிரஞ்ஞாபங்கமும், (coma) இசிவுகளும், (convulsions) முடிவில் மரணமும் ஸம்பவிக்கும்.

மதுஸாரத் தாக்கத்தினால் இருதயத் துடிப்பு சிறிதுநேரம் அதிகரிக்கின்றது; நாடித்துடிப்பு பலமற்றுப் போகின்றது; பிறகு இருதய கோசம் குன்றி ஆழ்ந்துபோகின்றது. மதுஸாரத்தை நெடுங்காலம் உட்கொள்வதனால் இரத்தாசயத்தின் தசைநாரிழைகள் நாசமடைகின்றன; அவைகளுக்குப் பதிலாகக் கொழுப்புக் கூடுகின்றது; முடிவில் இரத்தாசயம் வேலை செய்யத்திராணியற்றுத் திகைத்துத் தடைப்பட்டு ஓய்ந்து விடுகின்றது.

இனி நரம்பு ஜாலங்களின்மீது மதுஸாரத் தாக்கம் என்ன செய்கின்றதெனப் பார்ப்போம்:—1. மெதுவாய் உள்ள மூளை இறுகிக் கல்லுப்போலாகின்றது. 2. இச்சாசக்தி (will power)யின் பலம் குன்றுகின்றது. 3. நரம்புகள் கொதிப்புறுகின்றன (neuritis). 4. கைகால்களில் நடுக்கமேற்படுகின்றது, 5. கண்பார்வை மந்தப் படுகின்றது, 6. மூளையிலோடும் இரத்தக்குழாய்கள் உடைந்து பக்ஷவாயுரோகம் முதலியன உண்டாகின்றன, 7. இசிவு சன்னி எனத்தக்க நரம்பிழுப்புக்களும் மயக்கப் பிதற்றலும் உண்டாகின்றன, 8. உன்மாதம் (lunacy) விளைகின்றது. உன்மத்த சாலையில் (lunatic asylum) உள்ளவர்கள்

* ஸிரா என்பது காரிரத்தக் குழாய்களுக்குப் பெயர்; நரம்புகளுக்கு நாடியென்று ஆயுர்வேத வைத்தியர்கள் வழங்குவர்; ஆகவே ஸிராகேந்திரங்கள் என்பதைவிட நாடிகேந்திரங்கள் அல்லது நாடிமூலங்கள் என்று கூறுவது பொருந்தும் ப-ர்.

* இந்தவியாதி "அம்லபித்தம்" என்று பாரிபாஷிகமாக வழங்கப்படும். "தாபிதம்" என்பதே சரியானதல்ல; தாபம் என்று சொல்லலாமாகிலும், 'அன்னாசயதாபிதம்' என்று சாஸ்திரமுறைப்படி பாரிபாஷிகமல்ல; மேலும் அன்னாசயம் என்பதைவிட "ஆமசயம்" என்பது சரியான பரிபாஷை. ப-ர்,

* (1) அல்ப்யூமின் (albumin) என்னும் தாதுவுக்கு "ஓஜோதாது" என்று ஆயுர்வேதத்தில் பெயர் வழங்கப்படுவதாக அறிகிறோம். ஓஜஸ்ஸானது இவ்வித கோளாறுகளில் மூத்திரத்துடன் வெளிப்படுவதாகவும் ஆயுர்வேதத்தில் கூறப்படுகிறது. (2) கிட்னீஸ் என்னும் அவயவங்களுக்கு "விருக்கங்கள்" என்பது சாஸ்த்ரீயமான பெயர். விருக்க ஸம்பந்தமான ஸந்நிபாத வியாதியைச் சேர்ந்தது "ப்ரைட்ஸ் டிஸீஸ்." ப-ர்.

பெரும்பாலார்க்குப் பைத்தியம் நேர்ந்த காரணம் மதுஸாரப்பானமே யாகும்.

இரத்தக் குழாய்கல் மதுஸாரம் தாக்கிச் சிதைக்கின்றதென்பது கண்விழிகள் சிவந்து நிற்பதனாலும், மூளையின் இரத்தக் குழாய்கள் உடைந்து மூர்ச்சைரோகம், பாரிசவாயு முதலியன (apoplexy, ரக்தஜ சிரஸ்தாபரோகம்) தோன்றுவதனாலும் விளங்கும்.

மதுஸாரபானமும் மாம்ஸாஹாரமும் தாராளமாக உட்கொள்கிறவர்களுக்குச் சூலைக்கட்டும் கீல்வாயுரோகமும் உண்டாகும்.

சண்டாள பாபிஷ்டியாகிய இந்த மதுஸாரத்தின் கொடிய பயன்கள் அதனை உட்கொள்வோர்களைத் தாக்குவதேயல்லாமல் அவர்களுடைய ஸந்ததியார்களையும் தாக்குகின்றன. குடிகாரரின் மக்கள்கள் பெரும்பாலார் பித்தர்களாகவும், பேதைகளாகவும், காக்காய் வலிப்பு முதலிய மூர்ச்சா ரோகங்களாற் பீடிக்கப் பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

மதுஸாரபானம் செய்யும் தாயின் பாலைக் குடித்து வளரும் சிசுவுக்கு மதுஸாரவிருப்பம் இளமையிலேயே புகட்டப்படுகின்றதாகும்; மதுஸாரவிஷம் அப்படிப்பட்ட தாயின் பாலோடு குழந்தைக்கு ஊட்டப்படுகின்றது; மதுஸார விருப்பம் தாய்தந்தையர்களின் வழக்கத்தை யனுஸரித்துப் பரம்பரை வாஸனையாகப் பிள்ளைகளுக்குத் தோன்றுகின்றது.

மதுஸாரமும் நரம்பு ஜாலங்களும். Alcohol and the Nervous System:—மதுஸாரம் தேஹத்திற்குட் புகுந்தால் தேஹத்திலுள்ள அம்சங்களனைத்தும் அதன் தீப்பயனுக்கு உட்படுகின்றன; அதனால் பாதிக்கப்படாத பாகம் எதுவுமே யிராது. தேஹத்திலுள்ள அம்சங்களுள் சிலவற்றிற்கு அங்கவ்யூஹம் திட்டமாக அமைந்திருக்கின்றது; சிலவற்றிற்கு அங்கவ்யூஹம் சரியாக அமையாமலிருக்கின்றது. அங்கவ்யூஹமாவது ஒவ்வொரு சிறிய காரியத்தையும் ஒவ்வோர் அங்கம் தனித்தனியே திறமையுடன் செய்வதற்கான ஏற்பாடாகும். அங்கவ்யூஹம் நன்றாக அமைந்துள்ள பாகங்களை (highly organized tissues) மதுஸாரம் முதலிய விஷச்சரக்குகள் எளிதில் தாக்குகின்றன. ஆகையால் நரம்பு ஜாலங்களில் அமைந்துள்ள நுண்ணிய கண்ணறைகளை மதுஸாரம் மிகவும் எளிதில் தாக்குகின்றது.

ஒவ்வொரு நுண்ணிய அங்கமும் ஒவ்வொரு முக்கியமான காரியத்தைத் திட்டமாகச் செய்யும் திறமை வாய்ந்துள்ள அங்கவ்யூஹங்கள் தேஹத்திற் பற்பல விடங்களில் இருக்கின்றனவென்று மேலே சொன்னோம். அந்த நுண்ணிய அங்கங்கள் நுட்பமான ஏற்றத்தாழ்வுகளைத் தெளிவாக எடுத்துக் காட்டவல்லன. மதுஸாரத்தின் பயனையும் அவை நன்றாக எடுத்துக் காட்டக்கூடியவைகளாக இருக்கின்றன.

இப்படி நுட்பமாகச் சூசிக்கும் திறமைக்குத் தக்கவாறு மதுஸாரத் தாக்கத்தின் பயன்கள் வெளிப்படுகின்றன. மிகவும் நுட்பமாக வித்தியாஸங்களை எடுத்துக் காட்டும் திறமையுள்ள அங்கங்களினாற் சொற்பமாக மதுஸாரத்தை உட்கொள்வதனால் உண்டாகும் தீப்பயன்களும் நன்கு விளக்கப்பெறுகின்றன. அதிகமாக இல்லாமல் மிதமாகக் குடிப்பதனாலும் தேஹத்திலுள்ள மாம்ஸகோளங்களிலும் (glands, சதைக் கட்டிகள்) *உறுப்புக்களிலும் (organs) விபரீதத் தன்மைகளேற்படுகின்றன, தேஹத்திலுள்ள கண்ணறைகள் (cells) அழன்று க்ஷீணித்துப் போகின்றன என்பன முதலான விஷயங்கள் மேற் சொல்லியவாறு தேஹத்தில் அமைந்துள்ள நுண்ணிய உபகரணங்களினால் வெளிப்படுகின்றன.

* ஆங்கிலத்தில் "க்ளாண்ட்ஸ்" (Glands) என்று கூறப்படுபவைகளுக்கு "கிரந்திகள்" என்பது பாரிபாஷிகமான பெயர். இந்த அவயவங்கள் மாம்ஸகோளங்கள் அல்ல; மாம்ஸங்கள் குழலுருவமான வஸ்துக்களல்ல. கிரந்திகள் (Glands-முடிச்சுகள்) குழலுருவமான ஸ்ரோதஸ்ஸுக்களால் ஆன உறுப்புகள். ப-ர்.



மதுஸாரமும் வாக்விபவமும் :—மதுஸாரத்தை உட்கொண்டவுடனே வாக்கின்வேகம் அதிகரிப்பது பிரத்தியக்ஷமாகத் தெரிவதைக் கொண்டு மதுஸாரமானது மூளையின் நரம்புகளுக்குப் பலமூட்டுகின்றதென்று ஜனங்கள் பிரமிக்கின்றார்கள். மூளையிலுள்ள இந்திரிய மூலங்களுள் நிதானஸ்தானமே முக்கியமானது. அதனையே நிரோதனம் (inhibitory centre) என்பார்கள். அந்த ஸ்தானம் சரியாகத் தன் வேலையைச் செய்துகொண்டிருக்குமானால் மனிதன் பதற்றமற்று எதனையும் நிதானமாகச் சொல்வான், சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்வான், எந்தக் காரியத்திலும் அவஸரப்பட மாட்டான்; அதுவே மனிதனுடைய ஆத்திரத்தைத் தடுத்து அடக்கியாளும் சூத்திரமாகும். மதுஸாரம் முதன் முதலில் தாக்கும் தேகபாகம் இந்த நிரோதஸ்தானமே. அந்த ஸ்தானத்தை அது நிமிர்க்கப் பண்ணிச் செயலற்றதாக்குகின்றது (paralyses the inhibitory centre). ஆனதனால் மதுஸாரம் குடிப்பவனுக்கு விவேசனசக்தி அந்தக்ஷணமே அற்றுப்போகின்றது, நிதானம் குலைகின்றது, தடுமாற்றம் மேலிடுகின்றது, ஆலோசனையும் ஆராய்ச்சியுமின்றி வார்த்தைகள் பொழியலாகின்றன.

ஸ்வஸ்தபுத்தியும் நிதானமும் மதுஸாரம் குடித்தவனுடைய மூளைக்கு அந்நியமான அரும்பொருள்களாகும். பிரொ - குஷ்னி (Professor Cushney) என்பவர் ஒரு சிறந்த பிராமாணிகக் கிரந்தகர்த்தர். அவர் இவ்விஷயமாகச் சொல்லுமிடத்து, "மதுஸாரத்தைச் சிறிது அளவேனும் உட்கொண்டால், அது மூளையின் வியாபார ஊக்கத்தைக் குறைக்கின்றது; மதுஸாரவிஷம் மிகப் பலமாகத் தாக்குகின்றது; வித்தியா வியாஸங்கத்தினாலும் மிக்க உழைப்பினாலும் நீடித்த அனுபவத்தினாலும் வாய்ந்த புத்தித்திறமைகளை மதுஸாரம் ஒரு நொடிப் பொழுதில் நாசஞ்செய்துவிடுகின்றது; இந்திரிய நிக்ரஹம், பொறுப்பு முதலிய நற்குணங்களைப் போக்குகின்றது" என்று எழுதியிருக்கின்றார்.

(தொடரும்.)

## HOW TO SOLVE THE ALCOHOLIC PROBLEM.

## மதுபான விஷயத்தைத் தொலைப்பது எப்படி?

By V. SUBRAHMANYAM,
*Medical Practioner.*

மதுபானத்தைத் தொலைப்பதற்காகச் செய்யப்படும் முயற்சிகளின் பிராதான்யத்தை அறியாத விவேகி இப்பொழுது அரிது. மதுவகைகளை உபயோகிப்பதை வேரறுப்பதற்காகப் பிரயத்தினங்கள் எங்கும் நடந்து வருகின்றன. இதன் உபயோகத்தை ஸாத்தியமானவரையில் குறைப்பதற்காக இராஜாங்கத்தார் மிகவும் அதிகமான வரிகளை யேற்படுத்தி விற்பனை செய்யவேண்டிய நேரங்களையும் குறைத்து, இவற்றில் நிர்ப்பந்தங்களை யேற்படுத்தி சட்டதிட்டங்களையும் செய்திருக்கின்றனர். மதுபான விலக்கு ஸம்பந்தமான ஸங்கங்கள் ஏற்பட்டு, அவையும் மதுவினால் ஏற்படும் தீமைகளைக் குறித்து அநேக வருஷங்களாகப் பிரஸங்கங்கள் செய்துவருகின்றன. லைப் இன்ஷூரென்ஸ் கம்பெனியார், இன்ஷூர் செய்து கொள்ள விரும்புகிறவர்களை அதற்காக ஏற்றுக்கொள்ளும்போது மதுபானம் செய்யாதவர்களாயிருக்கிறார்களா வென்று கவனிப்பதுடன், மதுபானம் செய்யும் வழக்கமுள்ளவர்களுக்கென்று மிகவும் கண்டிப்பான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுகாதார ஸம்பந்தமான விஷயங்களில் அதிகாரம் செலுத்தும் ஹெல்த் போர்டுகள், மதுபானம் அநேகம் வியாதிகளை சுயமாய் உண்டு பண்ணக் கூடியது என்றும், பல வியாதிகளைத் தூண்டும் காரணமாயிருக்கிறதென்றும் பரிசோதித்தறிந்து, அவ்விஷயத்தில் ஜனங்களை எச்சரித்து வருகிறார்கள். இவ்வளவெல்லாம் இருந்தும், விரும்பப்படுகிற பலன் நிறைவேறியதாகத் தெரியவில்லை. மதுவகைகளின் விற்பனை ஒன்றும் குறைந்த பாடில்லை. நம்தேசத்

தில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் இப்பாழும் துர்வழக்கத்திற்கு அடிமைகளாக ஆவதும் குறையவில்லை.

மதுபானத்தினால் உண்டாகும் பலவிதமான விகாரங்களும் பொதுவில் மதாத்யயம்* எனப்படும். அதாவது வெறி பிடித்து அல்லது வெறிமேலிட்டு ஸம்பவிக்கும் கோளாறு. மற்ற வியாதிகளை அல்லது தேஹத்திலுண்டாகும் கோளாறுகளைக் குறிப்பிட்டு அறிவதற்கு இலக்ஷணாதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் மதாத்யய ஸம்பந்தமாய் ஸம்பவிக்கும் அளவற்ற வகையான இலக்ஷணங்களையும் நிலைமைகளையும் தொகுத்துக் கூறுவது அல்லது அறிவது எளிதல்ல. மதாத்யயத்தைத் தடுப்பதற்கு அல்லது போக்குவதற்கு ஏற்ற ஔஷதம் ஏதாகிலும் உண்டோ என்றால், அதுவும் அரிது; ஏனெனில், மதுபானம் செய்தவனுடைய உடலில் எங்கெந்த பூதங்கள் விகாரமடைந்து மதாத்யயமுண்டு பண்ணுவதற்குக் காரணமாகின்றனவென்பதை அறிவதே முதலில் கஷ்டமான பிரச்னையாகும்.

இப்படி மிக ஏராளமாய் மதுவகைகள் உபயோகிக்கும் துர்வழக்கத்தையும் அவ்வழக்கத்தினாலுண்டாகும் தீமைகளையும் தணிப்பதற்கான முயற்சிகள் கைகூடாமற்போக, இத்தருணத்தில் இப்பொல்லா வழக்கத்தை முற்றிலும் வேரறுப்பதற்கு அவசியமான சில ஆராய்ச்சிகளைச் செய்ய முயல்வது விரும்பத்தக்க காரியமாகும். உடலுக்கும், ஆயுளுக்கும், ஆத்மாவுக்கும் கொடிய விரோதியான மதுபானத்தில் மிக்க மேதாவிகளுக்கும் மறுக்கமுடியாத விதமாய் அவ்வளவு வலிவான மனப்போக்கு இருப்பதற்கு முகாந்தரம் என்னவென்று ஆராய்ந்து அறிவது அவசியமான காரியம். மிகவும் படித்தறிந்து விஷயதத்துவங்களுணர்ந்த வைத்தியர்களும், பதார்த்த தத்துவங்களைக் கற்றறிந்த பண்டிதர்களும் இக்காரியத்தில் அவசியம் பேருதவி செய்யக்கூடியவராவர். இவர்கள் செய்யும் ஆராய்ச்சியானது, மதுபானம் செய்வதில் நோக்கமுண்டாவதற்குக் காரணங்களையும், அந்த நோக்கத்தைப் போக்குவதற்கேற்ற நல்ல பரிஹார முறைகளையும் அறிவிக்கக் கூடியதாக மாத்திரம் இல்லாமல், உயிர்வாழ்க்கையையே மிகவும் உத்தமமான நிலைமைக்குக் கொண்டு வருதற்கு உபயோகமான வழிகளையும் விளக்கிக் காட்டக் கூடியதாயிருக்க வேண்டும்.

இந்துக்களுடைய ஸநாதந தர்மங்களைப் பின்பற்றி ஒழுக்கங்களை முறைதவறாமல் நடத்தி வரும் இயல்புடைய வைதிகர்களுக்கும், விசேஷமாக மந்திரஜபங்களை நாள்தோறும் தவறாமல் செய்துவருபவர்களுக்கும் இவ்விதம் மதுபானத்தில் ஒரு சிறிதும் நோக்கமுண்டாகாம லிருப்பதுடன், அவ்விதம் செய்வதில் வெறுப்புண்டாவதும் இயல்பு என்பதை நாம் நேரில் கண்டு வருகிறோமல்லவா? ஆராய்ச்சி செய்து பார்த்தால் இதுதான் அதன் பயனாகத் தேறும் என்பது என் கொள்கை.

*மதாத்யயம்—இதையே ஆங்கிலத்தில் ஆல்கொஹாலிஸம் (Alcoholism) என்பார்கள்.

## DRINK - OUR GREATEST ENEMY.

### குடியே நமது கொடிய சத்ரு.

வேலைக்காரர்களுடைய தேஹபலத்தை மதுபானம் உறிஞ்சு விடுகின்றது.

மதுவானது மனிதனுடைய ஊக்கத்தையும் உத்ஸாஹத்தையும் போக்கிவிடுகின்றது.

குடியானது உடலையும் மனதையும் ஒருமிக்க வென்று நிலை குலையச்செய்யும்.

குடியானது ஜெர்மனியரின் எல்லா ஸப்மெரீன்களைக் காட்டிலும் அதிக நாசத்தை விளைவிக்கக் கூடியது.

ஜெர்மனி, ஆஸ்ட்ரியா இவைகளைவிட குடியே பெரிய சத்ருவாகும்.

நாம் ஜெர்மனியையும், ஆஸ்ட்ரியாவையும், குடியையும் எதிர்த்துப் போராடிவருகிறோம்; இப்போராட்டத்தின் அனுபவத்தினால் மற்றப் பகைவரைவிட குடியை வெல்லுவதே மிகக் கஷ்டஸாத்தியம் என்று தெரியவருகிறது.

மதுபானத்தை வலுவில் எதிர்த்துப் போராடி ஜயிப்பதற்கு முயல்வது நமது முக்கியமான கடமையாகும்.

நமது நாகரிகத்திற்குக் குடி மிகவும் விகாரமான களங்கத்தை யுண்டுபண்ணுகிறது.

குடியானது உலகத்தில் எங்கும் விஷமம் புரியும் கொடிய சத்ரு.

மூளையைக் கெடுக்கும் விஷம் மதுபானம். ஏழ்மையில் 100-க்கு 75 அல்லது 80 பாகமும், பிரத்தியக்ஷமாகவோ பரோக்ஷமாகவோ குடியினால் ஏற்படுகிறது.—Herald of Health.



# வைத்திய கலாநிதி.

நள௵ பங்குனி௴—பிங்கள௵ சித்திரை௴.

## APPENDICITIS.

### பரிணாம சூலை.

சிறுகுடல் பெருங்குடலோடு ஒன்றாகக் கூடுமிடத்தில், நாபிக்குச் சற்றுக் கீழாக வலதுபுறமாய் வர்மியென்னும் ஒரு புழுபோன்ற அவயவம் அமைந்திருப்பதும், அதில் சில கோளாறுகளால் ஒருவித சூலைநோய் உண்டாய் மிகவும் தொந்தரவளிக்கக் கூடுமென்பதும் சரீரதத்துவத்திலும் வைத்தியத்திலும் தேர்ந்த அநுபவமுள்ளவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அந்த வியாதியை ஆங்கிலத்தில் 'அப் பெண்டி ஸைடிஸ்' என்பார்கள். இந்த வியாதியுண்டானால், அப்பிணியாளியின் குடலிலுள்ள வர்மியென்னும் அச் சிறு அவயவத்தை அறுத்துப்போட்டாலே யொழிய அத்தொந்தரவு நீங்காதென்பதும், அதற்கு ஔஷதங்களைக்கொண்டு வேறு பரிஹாரம் ஒன்றும் செய்ய முடியாதென்பதும் தற்காலத்தில் மேனாட்டு வைத்தியர்களின் ஸித்தாந்தம். இந்த சூலை பெரும்பாலும் உணவு ஜீர்ணமாகும் போது உண்டாவது வழக்கம்; அல்லது உணவு ஜீர்ணமாகும் போது அதிகரிப்பது வழக்கம். ஆகவே இதை ஆயுர்வேத வைத்தியர் பரிணாம சூலை (உணவு பக்குவமான ஸமயத்தில் உற்பத்தியாகும் நோய் எனப்பொருள்) என்பார்கள். இந்த சூலையானது வர்மியென்னும் பாகத்தைமட்டும் ஆச்ரயித்து உண்டாகாமல், சிறுகுடலின் கடைசி பாகங்களிலும், முக்கியமாகப் பெருக்குடலில் அநேகம் பாகங்களிலும் தோன்றுவது ஸஹஜம். இதற்காக ஆங்கில வைத்தியர்கள், இயற்கையில் குடலில் அமைந்துள்ள அவயவத்தை (வர்மி யென்னும் பாகத்தை) அறுத்துப்போட்டு விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் வியாதி நிவ்ருத்தியாவதோடு கெடுதியுண்டாவதில்லையென்றும் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் வர்மியென்னும் அவயவத்தை அறுத்து எறிவதால் வியாதி நிவ்ருத்தியாவதில்லை யென்பதோடு, வேறு சில உபத்திரவங்களும் ஸம்பவிக்கும் என்று தெரியவருகிறது. டாக்டர் L. A. மென்றியம், M. D., என்பவர் "ஹெல்த் கல்சர்" என்னும் சுகாதாரப் பத்திரிகையில் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

"வர்மி யென்னும் அவயவத்தை அறுத்து விடுவதால், பிணியாளிக்கு ஜீவசக்தி (vitality) குறைந்துவிடுகிறது; மேலும் இன்னும் அநேகமுறை அவ்விடங்களில் சஸ்திர சிகித்ஸை செய்யவேண்டியதற்கான நிலைமையும் உண்டாய் விடுகிறது. இவ்விதம் சஸ்திர சிகித்ஸை செய்தபிறகு ஸம்பவிக்கும் தொந்தரவுகளும், கஷ்டங்களும் சிகித்ஸைக்கு முன் இருந்ததைவிட அதிகமாய் விடுகின்றன. கத்தியை உபயோகிக்காமலே வேறு விதமான உபாயங்களைக்கொண்டு—ஔஷதப் பிரயோகம், உபவாஸாதிகளால் தேஹசுத்தி செய்தல் முதலியவற்றால்—நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு பேருக்கும் குணமுண்டானதாக நான் அறிவேன்."

வியாதியைப் பரீக்ஷிக்கும்போது, வர்மியென்னும் அவயத்தில் சூலையிருப்பது மாத்திரமல்லாமல், குடலில் அநேகவிடங்களில் அச்சூலை வியாபித்திருப்பதாகத் தெரியவரும்போது, வர்மியென்னும் அவயவத்தில் மாத்திரம் சஸ்திரத்தைப் பிரயோகிப்பதில் என்ன இலாபம்? வியாதிநிதானத்தை நன்கு கவனித்தால், தற்காலத்திய மேனாட்டு முறைப்படி செய்யப்படும் இச்சிகித்ஸையானது, இன்னும் ஆரம்பபரிசோதனைக்கான சிகித்ஸையே தவிர, ஸித்தாந்தத்திற்கு வந்த பரிஹார முறையென்று தோன்றவில்லை. இயற்கையில் கடவுளால் அமைக்கப்பட்டுள்ள வர்மி யென்னும் அவயவத்தை அறுத்து விலக்குவதால் மிகக் கடுமையான மலபந்தம் நீங்குவதில்லை, மலாசய

ஸம்பந்தமான சீதமோ அல்லது கபப்பிரகோபமோ நிவ்ருத்தியாவதுமில்லை. வர்மி யென்னும் அவயவத்தை அறுத்து எறிந்துவிட்டால், மனிதனுக்கு அபாயம் ஒன்றும் உண்டாய் விடுவதில்லை யென்கிறார்கள்; ஒருவனுடைய காலில் சுண்டு விரலை அறுத்து எறிந்து, அவ்விடத்திய இரணத்தை ஆற்றிவிட்டால், அம்மனிதன் இறந்துப் போகமாட்டான்; அதற்குமுன் இருந்ததைப்போலவே அவன் எல்லா வேலைகளையும் செய்துவர யாதொரு தடையும் உண்டாகாது; வாஸ்தவமே; இதற்காக, அவனுக்குப் பல் வலியுண்டானால், கால் சுண்டு விரலை அறுத்துப் போடலாமா? முற்கூறிய டாக்டர் மெறியம் என்பவர், இன்னும் சில குறிப்பிடக்கூடிய விஷயங்களை விளக்கியிருக்கிறார்; அதாவது:—

"ஒரு சஸ்திர சிகித்ஸகன், தனதிடம் சிகித்ஸைசெய்து கொண்டுவந்த அப்பெண்டிசைடிஸ்வியாதியுள்ள நோயாளி யொருவன், அவ்வியாதியால் இறந்துவிட்டதாக ரிபோர்டு செய்தானானால், அது மிகப் பெரிய தவறுதலாகும்; அச்சஸ்திர சிகித்ஸகன் கத்தியை அப்பிணியாளியின் குடலில் பிரயோகிக்காமல் இருந்திருப்பானானால், அவன் குறைந்தது இன்னும் சில நாட்களாவது பிழைத்திருக்கக்கூடும்; சஸ்திரப் பிரயோகம் செய்ததால் மரணம் ஸம்பவித்ததென்று கூறுவதற்குப் பதிலாக, மரணத்திற்கு ஏதோ அப்பெண்டி சைடிஸ் என்னும் வேறொரு காரணத்தை மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமாகக் கூறுகிறான். நியூ யார்க் என்னும் நகரத்திலுள்ள சுகாதார அதிகார ஸங்கத்திற்கு, ஒரு அபமிருத்திய விசாரணை கர்த்தா அனுப்பியிருக்கும் செய்தி கவனிக்கத்தக்கது. வியாபகர்கள் என்று பிரஸித்திபெற்ற வைத்தியர்கள் அப்பெண்டிசைடிஸ் என்று நிர்த்தாரணம் செய்த 42-கேஸுகளிலும், அப்பிணியாளிகளின் வர்மி யென்னும் அவயவம் ஆரோக்கியமாகவும் சுகமாகவும் இயற்கையான நிலைமையிலும் இருப்பதாக ஸந்தேஹமறப் பரீக்ஷிக்கப்பட்டது. ஆகவே வியாதி வர்மியை ஆதாரமாகக் கொண்டு உண்டாயிருப்பதாக அவ்வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டது தவறுதல் என்று நிச்சயிக்கப்பட்டது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நாசி, கண்கள், வாய், காதுகள் முதலிய அவயவங்கள் தோற்றத்தில் ஒருவனுக்கு அமைந்திருப்பதுபோலவே மற்றவருக்கும் அமைந்திருக்கின்றனவா? இல்லையே! ஒவ்வொருவனுக்கும் கண் காது முதலிய அவயவங்களில் சொற்பமாகவோ அதிகமாகவோ பேதம் தோன்றியிருப்பதுபோலவே, ஒவ்வொருவனுடைய குடலிலுள்ள வர்மியென்னும் அவயவத்திலும் இயற்கையமைப்பில் ஏதாவது பேதம் ஏற்பட்டிருக்கக்கூடும்; ஆனால் அந்த பேதங்கள் வியாதியினால் ஏற்பட்டவையல்ல. அப்பெண்டிசைடிஸ் (வர்மியை ஆச்ரயித்த வியாதி) என்று சொல்லப்படும் ரோகமானது பெரும்பாலும் பெருங்குடலை ஆச்ரயித்துண்டான கோளாறாகவே காணப்படுகிறது; தோன்றியவாறு குருபோஜனம் செய்து, மலம் வெளியாக வேண்டிய காலங்களில் மலபாதைக்குப் போகாமல் அதை அடக்கி வந்ததாலும், மற்றும் சில காரணங்களாலும் உண்டான தீராத பலபந்தத்தினால் இச்சூலையேற்படுகின்றது." (ஆகவே ஆயுர்வேத முறைப்படி இதைப் பரிணாமசூலை யென்று வழங்குவது சரியென்றும், வர்மிசூலை முதலிய பெயர் அஸம்பந்தமானது என்றும் நிச்சயிக்க வேண்டிவருகிறது.)

யக்ருத் என்னும் கல்லீரல் முதலிய தேஹத்திற்குள் அமைந்துள்ள அவயவங்களில் ஸம்பவிக்கும் வியாதிகள் சஸ்திரப் பிரயோகமின்றியே சிகித்ஸை செய்யப்படுகின்றன. அவ்விதமே பரிணாம சூலையும் சஸ்திரமின்றியே சிகித்ஸை செய்யத்தகாத அவ்வளவு அஸாத்தியமான வியாதியென்று தீர்மானிப்பதற்கு ஆராய்ச்சிக்குறைவே காரணம் என்று ஒருவாறு கூறலாம். அல்லாமலும், வியாதியானது வர்மியை மாத்திரம் ஆச்ரயிக்காமல், குடலில் அநேகம் பாகங்களை ஆதாரமாகக் கொண்டு



உண்டாவதாயிருந்தால் அப்பெண்டிசைடிஸ் (வர்மியை ஆச்ரயித்து உண்டாகும் கோளாறு) என்று வழங்குவது சரியல்லவே.

காரணம் ஒன்று இருக்க, மற்றொரு விதமாகத் தோன்றியவாறு சிகித்ஸையைச் செய்வதைவிட, இவ்வியாதியின் ஹேதுவை நன்கு ஆராய்ந்துணர்ந்து, அவ்வித ஹேதுக்களுக்கு இடங்கொடுக்காமல் உணவுகளை உண்பதிலும், மல விஸர்ஜனம் செய்வதிலும் ஜனங்களுக்குப் போதுமான அறிவைப் புகட்டி, முன் ஜாக்கிரதையாயிருக்க ஏற்பாடு செய்வது அதிகார வர்க்கத்தினருடையவும், ஆங்காங்குள்ள பிரமுகமான வைத்தியர்களுடையவும் கடமையாகும். பதனழிந்த அல்லது முறைதவறான ஆஹாரம், அசுத்தமான பானவகை, ஆசாரக்குறைவு முதலியவற்றால் மலபந்தமும் அஜீர்ணமும் உண்டாவதும் இயல்பு. பழைய மலங்கள் மலாசயம் எனப்படும் பெருங்குடலின் மடிப்புகளில் வெகுநாட்களாய் நின்று விடுமானால், உடம்பில் வேதனையையும், வர்மிக்குப் பக்கங்களில் சூலையையும் உண்டுபண்ணும். இளஞ்சூடான சுத்த ஜலத்தைக் காலையில் குதத்தின் மூலமாய் வஸ்திசெய்தால் (குதத்தினுள் பீச்சிடுதல்), இந்த மலம் ஸாதாரணமாய் கஷ்டமின்றி வெளியாய்விடும்; ஆனால் ஒருநாள் செய்துவிட்டால் போதாது; அடுத்தாற்போல் இரண்டு வாரமாவது செய்து வருவதுடன், அப்பால் அவசியமான ஸமயங்களிலெல்லாம் இவ்வாறு வஸ்திப் பிரயோகம் செய்துவருவது நலமாகும். டாக்டர் எல்மெர், லீ. M. D. என்பவர் இவ்விஷயமாகக் கூறியுள்ளதை கடைசியில் குறிப்பிட விரும்புகிறோம்:—

"நியூ யார்க் நகரத்தில் மிகப் பிரஸித்திபெற்ற சஸ்திர சிகித்ஸகர் ஒருவர், அப்பெண்டிசைடிஸ் வியாதியில் சஸ்திரப் பிரயோகம் செய்து 50,0000 பவுன் ஸம்பாதித்தார்; இவ்வியாதியினால் வருந்தியவரால் அவ்வளவு திரவ்யத்தைக் குவித்துக்கொண்டதற்குத் தகுந்தாற்போல் அவரிடம் வந்த பிணியாளிகளில் பெரும்பாலோர் சிகித்ஸைக்குப் பிறகும் அதே வியாதியினால் வருந்தினார்கள் என்பது பிரஸித்தம். கடைசியில் அச்சஸ்திர சிகித்ஸகர் தனக்கு உண்டான அப்பெண்டிசைடிஸுக்கு சிகித்ஸைசெய்து கொள்ளமுடியாமலே அவ்வியாதியினாலே இறந்தார்".

## FIRST AID IN ACCIDENTS.

## அபாயங்களில் பிரதம உதவி.

**நாஸாஸ்த்தியின் முறிவு**:—நாசியின் எலும்பு உடைந்துவிடுமானால், மூக்கு தட்டையாய்விடும்; மூக்கை அதன் இயற்கை நிலைமைக்கு உயர்த்த முயன்றால், வலி மிகவும் அதிகரிக்கும். சிகித்ஸை:—உடைந்துபோன எலும்புகளை, அவற்றிற்கு இயற்கையான ஸ்தானத்தில் அமையச் செய்யவேண்டும்; இதற்கு முதலில் மழமழப்பான இரண்டு குச்சிகளை நாசி த்வாரத்தினுள் செலுத்தி, அப்பால் எலும்புகளை மெதுவாக உயர்த்தி அமைக்கவும். அவை சரியானபடி உள்ளே நிற்காவிட்டால், எண்ணெயில் நனைத்த நூற்சிலும்பையை (oiled lint) நாசியினுள் வைக்கலாம். எலும்பு பலவாறாக உடைந்திருந்தால், ஏதாவது எலும்புத்துண்டுகள் இடம் வெட்டு வெளிப்பட்டுவிட்டால், அதை மெல்லிய இடுக்கியால் எடுத்துப்போட்டுவிடவும். நாசியிலிருந்து இரத்தப்பெருக்கு அதிகமாய் உண்டானால், வைத்திய கலாநிதியின் 1916-ம் வருஷத்து ஜூன்மாஸ ஸஞ்சிகையில், 226-ம் பக்கத்தில் "நாசியின் இரத்தப் பெருக்கைத் தடுக்கும் வகை" என்று குறிப்பிட்டுள்ள விஷயத்தைக் கவனித்து, அதன்படி சிகித்ஸையை நிறைவேற்றவும்.

**வம்சாஸ்த்தி முறிவு**:—(முள்ளந்தண்டு முறிவு) இந்த முறிவு ஸாதாரணமாய் ஒரு பார்ச்வத்தில்தான் நேரிடுவது வழக்கம்; முள்ளந்தண்டில் ஒரு எலும்பு உடையும்போது, பெருமபாலும் ஒரு எலும்புப்பூட்டு நெகிழ்ந்துவிடுவதும் கூடவே அநுஸரித்து உண்டாகும்; அல்லது ஒரு எலும்பின் ஒரு பாகமாவது பூட்டிலிருந்து நெகிழ்ந்து விடுவதுண்டு. அபிகாதமானது வம்சாஸ்த்தி மஜ்ஜையில் (spinal marrow) தாக்கப்படுவதால், அவ்வபிகாதத்தின் தன்மைக்குத் தகுந்தவாறு, குறிகள் எலும்பு முதலிய மேல்பாகத்திற்கு ஸம்பந்தப்பட்டவையாகவும், சொற்பமாகவோ அதிகமாகவோ நரம்புக்கு ஸம்பந்தப்பட்டவையாகவும்

காணப்படும். மேல்பாகத்திற்கு ஸம்பந்தமான குறிகளாவன :—தாக்கப்பட்ட இடத்தில் வலியும், ஸ்வாதீனமின்மையும், முள்ளந்தண்டின் எலும்புக்கோவையில் இயற்கைக்கு விரோதமான ஒழுங்கீனமும் உண்டாகும். சில ஸமயங்களில் முதுகின் மத்தியில் கையின் பரிசத்திற்குத் தோன்றுபவையான முள்ளந்தண்டின் எலும்புக் கோவையானது செட்டியாகவும் ஒழுங்காகவும் இருப்பது போலக்காணப்படுமாயினும், ஒன்று அல்லது அநேகம் எலும்புகள் தளமட்டத்திற்கு உட்புறமாய் அமிழ்ந்திருப்பதாகத் தெரியவரும். வம்சாஸ்த்தி மஜ்ஜையில் ஆழமாக அபிகாதம் தாக்கப்பட்டிருக்குமானால், முள்ளந்தண்டுக் கொடியின் வேலைகள் தடைபட்டுப்போகும் ; அபிகாதமுண்டான இடத்திற்குக் கீழே சில பாகங்களாவது அல்லது எல்லாப் பாகங்களுமாவது ஸ்வாதந்த்ரியமற்று, உணர்ச்சியிழந்துப்போகும்.

நடு முதுகுக்குக் கீழே அடுத்தாற்போல் அஸ்த்தி பங்கம் உண்டாயிருந்தால், உடலின் கீழ்ப்பாகங்களும், வஸ்தி யென்னும் மூத்திரப்பையும், குதமார்க்கமும், கால்களும் பார்ச்வவாயு உண்டானவைகளைப்போல சுதந்தரமற்றவைகளாய்விடும். மல மூத்திரங்களை விடுவதற்கோ அடக்குவதற்கோ அவன் முற்றிலும் ஸ்வாதீனமற்றவனாவான் ; ஆனால் மல மூத்திரங்கள் அப்பிணியாளிக்குத் தெரியாமலே தானே வெளியாகும். கைகளும், மற்ற ஊர்த்வாங்கங்களும் எக் கெடுதலுமின்றி யதார்த்தியாயிருந்துவரும். இம் மனிதன் மாஸக்கணக்காகவோ வருஷக்கணக்காகவோ ஜீவித்திருக்கலாம் ; ஆனால் அபரிமிதமான சோர்வினாலாவது, மூத்திரப்பையில் வியாதிகள் உண்டாவதாலாவது, படுக்கைப் புண்களாலாவது அம்மனிதனுக்கு சிலநாட்களில் மரணம் ஸம்பவிக்கலாம்.

இன்னும் சிறிது மேற்புறமாகத் (தோளுக்கு நேராக) தாக்கப்பட்டிருந்தால், மார்பிலுள்ள மாம்ஸபேசிகளும் (தசைநார்கள்) பார்ச்வவாயுவுக்கு உள்ளாகும் ; அதாவது அவை சக்தியற்றவைகளாய்விடும் ; ஆகவே ச்வாஸவேலை வெகு சிரமப்பட்டு நடக்கும். இந்த நிலைமையில், மனிதன் சிலநாள் ஜீவித்திருக்கக் கூடுமானாலும், சுவாஸாசயங்கள் சுருங்கிப்போய், ச்வாஸம் நடைபெற முடியாமல், மூச்சடைப்பு உண்டாய் மனிதன் சீக்கிரம் இறந்துவிட நேரிடும். இன்னும் சிறிது மேலே (அதாவது கழுத்துக்குக் கீழே) அபிகாதம் உண்டாயிருந்தால், கைகளும் ஸ்வாதீனமிழந்துவிடும். அபிகாதமானது இன்னும் மேலே (கழுத்துக்குமேலே) நேர்ந்திருந்தால், உடனே ச்வாஸம் நின்றுபோய் மரணம் ஸம்பவிக்கும். தூக்குப்போட்டு ஸம்பவிக்கும் மரணமெல்லாம் இவ்விதமாகவே நேரிடுகிறது.

சிகித்ஸை :—அபிகாதம் ரொம்பவும் கீழ்ப்பாகத்தை ஆச்ரயித்து உண்டானால், மனிதன் ஸௌகரியமாயிருக்கவும், சிலகாலம் நீடித்துப் பிழைத்திருக்கவும் ஏற்பாடுகள் செய்யலாம். படுக்கைப்புண் முதுகிலும், பிருஷ்டபாகங்களிலும் உண்டாகும் என்பதையும், மல மூத்திரங்கள் தானே வெளியாய்க் கொண்டிருப்பதால் குஹ்யபாகங்களில் அழற்சியும் உண்டாகும் என்பதையும் வைத்தியன் கவனித்துக்கொள்ளவேண்டும்; அநேக உருவமுள்ள தலையணைகள் செய்து, அவற்றை முதுகுப்பக்கமாகவும், பிருஷ்டபாகங்களின் பக்கமாகவும்வைத்து, அவற்றின்மீது பிணியாளியைப் படுக்கச் செய்யவும் ; அத்தலையணையின்மீதும், மெத்தையின் மேலும் எண்ணெயில் நனைத்த பட்டுகள் முதலானவற்றைப் பரப்பவேண்டும். மூத்திரப்பை முற்றிலும் நன்றாக நிரம்புகிறவரையில், மூத்திரம் சொட்டுச் சொட்டாகக் கசிந்துகொண்டிருக்கும் ; (எப்பொழுதுமே துளித்துளியாக வெளிவருவதால், மூத்திரப்பை முற்றிலும் நிரம்பாமலே இருக்கும்.) மூத்திரப்பையின் உட்புறத்தில் எப்பொழுதுமே பழைய மூத்திரம் தங்கிக்கொண்டு, துர்நாற்றத்தையும், உட்புறத்திலுள்ள சவ்வுகளுக்கு அதிக அழற்சியையும் உண்டுபண்ணிக்கொண்டு, வெளிப்புறத்தில் மூத்திரம் பெருகுமிடங்களிலும் எரித்தலும் அதிகமாயுண்டாகும். இதற்காக ஆரம்பத்திலிருந்தே, தினத்திற்கு இரண்டு தடவை சலாகையிட்டு, மூத்திரத்தை நன்றாக வெளிப்படுத்திவிடவும். தகுந்த கருவிகளும், சஸ்திர சிகித்ஸகனும் எப்பொழுதுமே கிடைப்பதாயிருந்தால், மூத்திரப்பையை தினந்தோறும் ஒரு தடவை கழுவி சுத்தம் செய்வது உத்தமம். மூத்திரத்வாரத்தில் ஒரு இரப்பர்க் குழாயை அமைத்து, அக்குழாயை ஒரு வாயகன்ற குப்பியில் விட்டுவைத்து, அக்குப்பியில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேரும் மூத்திரத்தை அப்போதைக்கப்போது வெளியில் கொட்டிவிடலாம். அவசியமானபோது எப்பொழுதாவது ஆமணக்கெண்ணெயைத் தவிர்த்து, வேறு எந்த மருந்தையும் உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. சிறிது சவர்க்காரம் சேர்த்துக் கலந்த ஜலத்தினால் இரண்டுமூன்று நாட்களுக்கு ஒரு தடவை குதத்வாரத்தினுள் வஸ்திப் பிரயோகம் (enema) செய்து, கழுவி வரவேண்டும். அபிகாதம் சற்று மேற்பாகங்களில் (நடு முதுகுக்கு மேலே) தாக்கியிருந்தால் எந்த சிகித்ஸையும் பிரயோஜனப்படாது.

கரோடி உடைதல் (சிரஸ்ஸின் கபாலாஸ்த்திகள் உடைதல் :—ஏதாவது ஒரு அஸ்த்தி ஒரு பிளவாக மட்டும் சிறிதளவு உடைந்திருக்குமானால், வெளிப்புறத்துப் புண்களுக்குச் செய்யப்படும் சிகித்ஸையைவிட மேலான சிகித்ஸையொன்றும் அவசியமிராது. ஆனால் மூளை குலுங்கி பிணியாளியை ஓர் இருட்டு அறையில் படுக்கவைத்து, அபிகாதத்திற்கு ஸம்பந்தப்படாதவிடத்தில் சிரஸ்ஸின்மீது ஏதாவது குளிர்ந்த வஸ்துக்களைப் பிரயோகித்து சிதோபசாரமும் செய்யவேண்டும். மலம் நன்றாகக் கழியும்படி ஒருமுறை விரேசன மருந்தும் கொடுக்கலாம். அபிகாதமானது கொஞ்சம் ஆழமாக (எலும்பு மூளையை அழுத்தும்படியாகத் (தாக்கியிருந்தால், பிராணாபாயம் உடனே நேரிடக்கூடும் ; அப்படி நேரிடாமல், அபிகாதம் பலமாயிருப்பதாகத் தெரிந்தால், உடனே நல்ல சஸ்திர சிகித்ஸகளைக்கொண்டு அவசியமான பரிஹாரங்களைச் செய்யவேண்டும்.

இத்துடன் அஸ்த்திபங்கம் (எலும்பு முறிவு ஸம்பந்தமான விஷயம்) முடிவுபெற்றது.



# DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### இரேவல் சின்னி.

இரேவல் சின்னி யென்னும் ஒருவித குங்கிலியப் பசை நீண்டு சிறிய துண்டுகளாகக் காணப்படும் சரக்கு. ஜலத்தில் கலந்து தேய்த்தால் மஞ்சள் நிறமாக மாறும். இதற்கு ஒருவித மணமும் இல்லை. ஒருவாறு அம்லரஸம் பொருந்தியது.

இச்சரக்கு விசேஷமாக பலத்தை உடைத்து வெளிப்படுத்தவும், நீர் நீராக விரேசநமாவதற்கும், கிருமிகளை வெளிப்படுத்துவதற்கும் உபயோகிக்கக் கூடியது. நீர்க்கோவை வியாதியில் இச்சரக்கின் உபயோகம் மிகச் சிறந்ததென்று விஸ்தாரம் செய்யப்பட்டிருக்கிறது. இதை சில ஸமயம் கடுமையான மலபந்தத்தையும் கிருமிகளையும் போக்குவதற்கு உபயோகிப்பது வழக்கம். ருதுஸ்தம்பம் (மாதவிடாய் நின்று போவது) என்னும் வியாதியிலும் இரேவல் சின்னி நல்ல பயன் தரக்கூடியது. இதை வெகு நுண்மையாகப் பொடிசெய்து ஒரு குன்றுமணி முதல் நான்கு குன்றுமணி யெடைவரையில் உட்கொள்ளக் கொடுக்கலாம். இவ்வாறு உபயோகித்தால், அநேக ஸமயங்களில் இச்சரக்கு வயிற்றில அதிக வேதனையையும், வாந்தியையும் உண்டுபண்ணக்கூடிய குணமுள்ளதாகையால் சர்க்கரை அல்லது உஷாக்ஷாரத்துடன் (ஸாதாரண ஸோடா உப்பு) கலந்து உபயோகிப்பது நலம்.

---

### மங்குஸ்தான்.

மங்குஸ்தான் என்பது ஹிந்தி பாஷையில் வழங்கப்படும் பெயர். இது எப்பொழுதும் பசுமைநிலைமையிலேயே இருக்கும் மரம். ஸ்ட்ரைட்ஸ் ஸெடில்மெண்டு தேசம் முதலானவற்றில் பயிராகிறது. இதன் கனிக்காக இம்மரம் வளர்க்கப்படுகிறது.

நன்றாகக் கனிந்த இப்பழத்தின் புறணியை நிழலில் உலர்த்தி அதிஸாரத்திலும், சீதபேதியிலும் உபயோகித்து, அவற்றில் நல்ல குணந்தருவதாகக் கண்டிருக்கிறார்கள். ஜனனேந்த்ரிய ஸம்பந்தமான அவயவங்களையும், மூத்திரமார்க்கத்தையும் ஆச்ரயித்து ஸம்பவிக்கும் அநேகம வியாதிகளில் இதை உபயோகித்து நற்பயன் உண்டாயிருப்பதாக அநுபவம் உண்டு. இதை ஒருவித ஷர்பத் எனப்படும் இரஸக்ரியையாகப் பக்குவம் செய்து உட்கொள்ளக் கொடுப்பது வழக்கம்.

இச்சரக்கை பதினாறுமடங்கு ஜலத்தில் சேர்த்து, எட்டில் ஒரு பங்காகச் சுண்டக் காய்ச்சி, அதில் சரி பாதி சர்க்கரையைச் சேர்த்துக் கரைத்து, இரண்டொரு கொதிப்பு உண்டானதும் நல்ல வஸ்திரத்தில் வடிக்கட்டி, மறுபடியும் அதே பாத்திரத்தில் சேர்த்துக் காய்ச்சவும். பாகுபதமாக வரும்போது இறக்கி, ஆறி பின்பு குப்பியில் எடுத்து வைத்துக்கொள்ளவும். இதை வியாதியின் பலாபலத்தை அநுஸரித்து இரண்டு தேச்கரண்டி முதல் ஒரு அவுன்ஸ்வரையில் தினத்திற்கு மூன்று அல்லது நான்கு வேளை உட்கொள்ளக் கொடுக்கலாம்.

---

### ஏரண்ட பாகம்.

ஆமணக்கன்வித்து 16-பலம் எடுத்து நன்றாக ஜலத்தில் வேகவைக்கவும். பிறகு அவற்றை யெடுத்து மேற்புறணியை விலக்கிவிட்டு, நான்குபடி பசுவின்பாலில் அவற்றைச் சேர்த்து, கமலாக்னி யிட்டுக் காய்ச்சவும். அரைவாசி வற்றிப்போனதும், எட்டுப் பலம் நெய், 32-பலம் கற்கண்டுப் பொடியையும் சேர்த்து, நன்கு பாகுபதமாக வரும் வரையில் கிளறிக் கொண்டுவரவும். பிறகு அடியில் குறிக்கப்படும் சரக்குகளைப் பொடிசெய்து, வஸ்திரகாளிதம் பண்ணி அதில் சேர்த்துவிடவும் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலவங்கப்பட்டை | ¼ | பலம். | ஜீரகம் | ¼ | பலம். |
| ஏலக்காய் | ,, | ,, | ஓமம் | ⅛ | ,, |
| இலவங்கப்பத்திரி | ,, | ,, | மஞ்சள் | ,, | ,, |
| நாக கேஸரம் | ,, | ,, | மரமஞ்சள் | ,, | ,, |
| திப்பிலி | ,, | ,, | அமுக்கிறங்கிழங்கு | ¼ | ,, |
| சுக்கு | ,, | ,, | சிற்றாமுட்டி | ,, | ,, |
| மிளகு | ,, | ,, | வட்டத்திருப்பி | ,, | ,, |
| கிரந்தி தகரம் | ,, | ,, | கொட்டக்கரந்தை | ,, | ,, |
| சித்திரமூலம் | ⅛ | ,, | வாய்விடங்கம் | ,, | ,, |
| சவ்வியம் | ,, | ,, | தாமரைக்கிழங்கு | ,, | ,, |
| காவட்டம்புல் | ¼ | ,, | நறிஞ்சல் | ,, | ,, |
| ஜடாமாம்ஸி | ,, | ,, | கோஷ்டம் | ⅛ | ,, |
| கிச்சிலிக்கிழங்கு | ,, | ,, | தேவதாரு | ,, | ,, |
| பில்வவேர் | ,, | ,, | வாலுழுவை | ,, | ,, |
| கடுக்காய்த்தோல் | ,, | ,, | தண்ணீர்விட்டான் | ¼ | ,, |
| தான்றிக்காய் | ,, | ,, | நெல்லிக்காய் | ,, | ,, |

இவற்றின் சூர்ணத்தை மேற்கூறிய லேஹ்யம் போன்ற பாகத்துடன் நன்ருகக் கலந்து இறக்கிவைத்துக் கொள்ளவும். இதை ½ முதல் 1½ தோலா எடை வரையில் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

வாத வியாதிகளில் 'ஏரண்டடாகம்' என்கிற இவ்வௌஷதம் மிக்க உபயோககரமானது. வயிற்றில் அநேக காரணங்களால் உண்டாகும் வலி, நீர்க்கோவை, மற்றுப் பொருமல், வஸ்தியென்னும் மூத்திரப்பையிலுண்டாகும் சூலை, குன்மவியாதி, மலபந்தம் முதலியவற்ருல் உண்டாகும் இடுப்புவலி இவைகளை உபசமனம் செய்யவும் இது உபயோகிக்கத்தகுந்தது. ஆமவாதம் என்கிற கீல்வாயுவையும் பரிஹரிக்கும்.

### ஸோடா உப்பின் புதிய உபயோகம்.

கீல்வாயுவால் துன்பப்படுபவருக்கு ஸோடா உத்தமமான ஔஷதமாகும். சில பிணியாளிகளுக்கு அடியில்வருமாறு பிரயோகித்ததில், ஆச்சரியப்படும்படி எதிர் பாராத குணம் உண்டாயிற்று. எவ்வெவ்விடங்களில், வீக்கமும் வலியும் உண்டாயிருக்கின்றனவோ, அவ்விடங்களில், ஸோடா உப்பை ஜலத்தில் கலந்து, மாவைப்போல் பிசைந்து, கனமாகப் பூசிவிடவும். ஈரம் உலர்ந்து போகாதபடி அப்பூச்சைக் கவனித்து வரவேண்டும். அதிகமாகப் பணச்செலவு செய்து சிரமப்பட்டு பண்ணப்படும் இதிர சிகித்ஸைகளைவிட இவ்வெளிய சிகித்ஸையானது மிகவும் மேலானதென்று தெரியவருகிறது:—M. S. Journal.

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினா-66. ஒரு வயது சென்ற பிணியாளி.

" அன்பார்ந்த ஐயா !

இப்பொழுது சுமார் 60-வயதுள்ள ஒருவருக்கு அடியிற் கண்ட வியாதிக்குறிகள் இருக்கின்றன. அதிக தாஹம், கை கால்களில் காந்தல், அதிக நித்திரை, பலஹீனம், சோம்பல், தினம் ஒன்றுக்கு 12-தடவைக்குமேல் ஜலம் இறங்குதல், ஜலத்தில் இனிப்பு, மலபந்தம், ஞாபகசக்தியில்லாமை, வெள்ளை விழுதல், வாயில் துர்நாற்றம் இவைகளேயாம். இத்துர்க்குணங்கள் உண்டாய் சுமார் 12-வருஷங்கள் ஆகின்றன.

இந்த ரோகிக்கு மலசுத்தி நன்ருக ஆவதற்கும், நாவறட்சி அடங்குவதற்கும் உபயோகிக்கக்கூடிய ஔஷதம் ஏதாவது உண்டா? உண்டாளுல் கிடைக்கும் இடம் எது? இவ்விஷயங்களுக்கு ஏற்ற விடைகள் "வைத்திய கலாநிதியின்" மூலமாய் அறிவித்தல் பேருபகாரமாகும்."

ஆ. வேலுப்பிள்ளை,

(யாழ்ப்பாணம்.) வைத்தியர்.

விடை :—தாங்கள் குறிப்பிடும் இலக்ஷணங்கள் எல்லாம் பிரமேஹ ரோகத்தைச் சேர்ந்தவை; இன்னும் வற்புறுத்திச் சொல்வோமாளுல் மதுமேஹ வியாதியென்று கூறலாம்.

இந்த வியாதி க்ரஸ்தர் வயது முதிர்ந்தவர்; வியாதியும் நீடித்தகாலமாய் இருந்து வருகிறது என்கிறீர்கள்; மேலும் வெள்ளை (பூயமேஹம்) விழுவதாகவும் கூறுகிறீர்கள்; இப்படிப்பட்ட நிலைமையில் - அதிலும் மதுமேஹத்திற்கு - சிகித்ஸை செய்வது ரொம்பவும் யோசிக்கவேண்டிய விஷயம். ஆகிலும் இவ்வித வியாதிக்கு (தாங்கள் விரும்பும் மலபந்தாதிகளுக்கும் உட்பட) இவ்வருஷத்திய 4-வது ஸஞ்சிகையில் "பிரமேஹம்" என்கிற தலைப்புடன் 77, 78-வது பக்கங்களிலும், 3-வது ஸஞ்சிகையில் "நீரிழிவு ரோக சிகித்ஸை" என்கிற பெயருடன் 57-வது பக்கத்திலும் நாம் விவரித்துள்ள விஷயங்களே தாங்கள் வினவும் விஷயத்திற்கு ஏற்ற விடையாகும் ப-ர்.

### வினா-67. சில சரக்குகளைப்பற்றிய ஸந்தேஹம்.

"ஐயா,

கீழ்க்கண்ட பதார்த்தங்கள் இன்னவையென்று எனக்குத் தெரியவில்லையாகையால் தயவுசெய்து அவற்றின் விவரத்தைத் தெரியப்படுத்தக் கோருகிறேன்:—

(1) மோடி, (2) வாஸனைப் புல், (3) மஞ்சட்பாவட்டை, (4) நாயுருவி, (5) ஜடாமாம்ஸி, (6) நாட்டு அக்ரோட், (7) காவட்டம் புல், (8) கடற்பாலை, (9) சரக்கொன்றைப் புளி."

K. S. ரங்கப்ப நாயகர்.



விடை :—தாங்கள் கேட்டுள்ள சரக்குகள் அப்பிரஸித்தமான அபூர்வ வஸ்துக்களல்ல. (1) மோடியென்பது திப்பிலியின் வேர். (2) வாஸனைப் புல் - இதையே சுக்கு நார்ப்புல் என்றும், சம்பாரப்புல் என்றுங்கூட வழங்குவர். (3) மஞ்சட்பாவட்டை (4) நாயுருவி, (5) ஜடாமாம்ஸி, (7) காவட்டம்புல் இவை மிகவும் பிரஸித்தமான சரக்குகள். (6) நாட்டு அக்ரோட் - இதற்கு இந்தியன் வால்நட் என்று ஆங்கிலத்தில் பெயர். (8) கடற்பாலை - ஸமுத்திரப் பச்சையென்றும் வழங்கப்படும். ஆர்கிரியா ஸ்பீஸியோஸா (argyria specioso) என்று ஆங்கிலத்தில் பெயர். (9) சரக்கொன்றைப் புளி - கொன்றை அல்லது சரக்கொன்றை மரத்திலிருந்து உண்டாகும் புளிபோன்ற கனி; இதற்கு ஆங்கிலத்தில் காஷியா பல்ப் (Cassiae pulp) என்று பெயர். ப-ர்.

### வினா-68. பல்வலியின் தொந்தரவு.

'அன்புள்ள ஐயா!

எனக்கு இரண்டு மூன்று வருஷங்களாய் அடிக்கடியும் பற்களிலிருந்து இரத்தம் (சிலஸமயம் கொஞ்சமாகவும் சில ஸமயம் அதிகமாகவும்) கசிவது வழக்கம். அதிகமாகக் கசியும்போதெல்லாம், என்னுடைய வைத்தியர் சொல்லியிருப்பதை அனுஸரித்து, வேலம்பட்டையைக் கொதி நீரில் போட்டு மூடிவைத்து, சுமார் பத்து நிமிஷங்கள் சுழித்து, அந்தப் பட்டைகளையெடுத்துப் போட்டுவிட்டு, அந்த ஜலத்திஞல் வாயைக் கொப்புளித்து வந்தேன். இப்பொழுது பல் துலக்கும்போதெல்லாம் இரத்தம் அதிகமாகக் கசிகிறது. பற்களில் கூச்சமும் சிலு சிலுப்பும் பொறுக்கமுடிவதில்லை. இதற்குப் பரிஹாரம் ஏதாவது உண்டாளுல் தமது பெருமை பொருந்திய "கலாநிதியின்" வாயிலாக அதன் விவரத்தைத் தயவுசெய்து வெளியிடுவீர்களாளுல் அடியேன் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்."

எம். கே. இரகுநாதையர்.

விடை:—தாங்கள் பற்களைப் போதுமாறு சுத்தமாக வைத்துக் கொள்ளாமலோ, அல்லது தகாத வஸ்துக்களால் பற்களைத் தோன்றியவாறு துலக்குவதாலோ பற்கள் இவ்விதம் கெட்டுப்போயிருக்கவேண்டும் என்று நிச்சயிக்கிறோம். பற்கள் அசுத்தமாயிருந்தால், இடுக்குகளிலும் தந்த மூலங்களிலும் மலின வஸ்துக்கள் அடைந்துபோய் சின்னஞ்சிறிய விரணங்கள் உண்டாய் அவற்றிலிருந்து இரத்தம் அதிகமாகவோ சொற்பமாகவோ கசியக்கூடும்; அப்பொழுது பற்களில் கூச்சமும் உண்டாவது ஸஹஜம். செங்கற் பொடியிஞலாவது, சாம்பராலாவது பல் துலக்குவீர்களாளுல், அப்பொழுதும் பற்களும், பல்லீறுகளும் தேய்ந்துபோய், பற்களிலிருந்து இரத்தம் வருவதும், பற்களில் கூச்சம் அல்லது சிலிர்க்கை யுண்டாவதும் வழக்கம். இதற்காகச் சாம்பர் மாதிரியான அல்லது செங்கற் பொடி போன்ற வஸ்துக்கள் சேராத ஏதேனும் சிறந்த பொடிகளால் பற்களை உள்ளும் புறமும் நன்ருகத் துலக்கவேண்டும். அல்லது வேலங்குச்சி, வேப்பங்குச்சி முதலியவற்ருல் பற்களைச் சுத்தம் செய்யலாம். பற்கள் தேய்ந்திருந்தால் வேலங்குச்சியிஞல் பல் தேய்ப்பது நலம். பல்லீறுகளில் புண்களும் அவற்றிலிருந்து வரும் இரத்தக் கசிவும் நின்று, பற்கள் ஒருவாறு சுத்தமாகிற வரையில் அடியில் குறிப்பிடப்படும் உப்பு நீரைக் கொண்டு காலையிலும் மாலையிலும் வாய்க்கொப்புளித்து வரவும்.

| | | |
|---|---|---|
| சுறிப்புப்பு | 4-தோலா | எடை |
| இந்துப்பு | 8 | ஷை ஷை |
| படிக்காரம் | 6 | ஷை ஷை |
| கொதித்தஜலம் | ½ | படி |

மேற்கூறிய உப்புகளைப் பொடிசெய்து, கொதித்த ஜலத்தில் சேர்த்து, உப்புகள் கரைந்ததும் வடிக்கட்டி ஒரு கண்ணுடி குப்பியில் போட்டுக் கொள்ளலாம். இந்த ஜலம் இரண்டு வேளை வாய்க்கொப்புளிக்கப் போதுமானது. ப-ர்.

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### படுக்கையில் சயனித்தவாறு படிப்பதாலுண்டாகும் தீங்கு.

ஒரு வைத்திய சாஸ்திர நிபுணர், துரப்யாஸத்திஞல் உண்டாகும் ஒரு வியாதியைப் புதிதாகப் பரிசோதனை செய்து விவரித்திருக்கிருர் ; அவ்வியாதி படுக்கையில் சயனித்துக்கொண்டு வாசிப்பவருக்கு ஸம்பவிப்பதாகக் கூறுகிருர். இவ்வாறு படிப்பவர்கள் ஸாதாரணமாகச் செய்யும் வழக்கம் என்னவென்ருல், வலது முழங்கையைப் படுக்கையில் அல்லது தலையணையில் ஊன்றி, அவ்வலதுகையில் தலையைச் சாய்த்து அமர்த்திக்கொண்டு, இடது கையில் புஸ்தகத்தை யேந்தியவாறு சாய்ந்திருப்பதேயாம். குளிர்ந்த நேரங்களில்—முக்கியமாகக் குளிர்காலங்களில்—வலது தோளும், இடது கையும் மறைத்துப் போர்க்க முடியாதவைகளாய்த் திறந்து வைக்கப்படுகின்றன. பிறகு சிலநேரங்கழித்து, சயனித்துப் படித்தவன் அவ்விரண்டு பிரதேசங்களிலும் வலியும் இசிவும் உண்டாயிருப்பதாக உணர்ந்து அறிவிக்கக்கூடும் ; அக்குறியானது ஆமவாதம் என்னும் வியாதிக்கு ஸம்பந்தப்பட்டதாயிருக்கும். கையின் உட்புறத்திலுள்ள நரம்புகளினூடே அவ்வலி பரவியிருப்பதாகவும், முக்கியமாய் கையின் பூட்டுகளுக்கு எதிரிடையில் அவ்விதமான நோய் ஏற்பட்டிருப்ப

தாகவும் உணரப்படும். நரம்பைப்பற்றியும், பூட்டுகளைப்பற்றியும் இரண்டு விதமாக இந்த நோய் ஸம்பவிக்கும். சில கேஸுகளில் மாம்ஸபேசிகள் இதனால் க்ஷயமடைவதும் உண்டு. தோளின்பூட்டில் இந்த நோயால் கிரமமாக வீக்கமும் வலியும் விருத்தியாகக் கூடும்; கையைத் தூக்கவும் அசைக்கவும் சக்தி குறைந்துவிடும். இவ்வாறு படிப்பவன், அவ்வழக்கத்தை விட்டுவிட்டால் கிரமமாக இவ்விகாரங்கள் குறைந்துவரும்; ஆனால் பெரும்பாலும், இதன்காரணம் இன்னதென்று யோசிக்காமலே, அவ்விதம் படிக்கும் துர்வழக்கத்தை விட்டுவிடமாட்டார். தோளைக் குளிருக்கு வெளிப்படையாகக் காட்டாமல் படித்தால் கெடுதல் உண்டாவதில்லையென்று தெரியவருகிறது. இவ்வலியுண்டானால் சூடான ஒற்றடங்களாலும், பலமாகப் பிடிப்பதனாலும், தொந்தரவுக்கு நிவிருத்தியுண்டாவதுண்டு. படுக்கையில் படிப்பது முதலில் ஸௌகரியமாகத் தோற்றியபோதிலும், அதனால் அடுத்தாற்போல இத்தீங்கு ஸம்பவிப்பதால் படுக்கையில் சயனித்துப் படிப்பதை துர்வழக்கமென்றே சொல்லவேண்டும்.—Science Siftings.

---

## பெரும்பாடு.

ஸ்த்ரீகளுக்கு உண்டாகும் இவ்வியாதிக்கு அநேக விதமான பரிஹார முறைகள் உண்டு; ஆனால் அவற்றுள் முக்கியமானது லாக்டிக் ஆஸிட் (lactic acid) என்னும் மருந்தைப் பிரயோகிப்பதுதான் என்று "பிராக்டிகல் மெடிஸின்" என்னும் வைத்தியப் பத்திரிகை கூறுகிறது. ஸ்தம்பந குணமுள்ள ஔஷதங்கள், தற்காலத்தில் வெள்ளைமுதலிய ஸ்ராவங்களை நிறுத்தக்கூடியன; ஆனால் லாக்டிக் ஆஸிட்டானது, பெரும்பாட்டுக்கு (Leucorrhea)க் காரணமான ஸூக்ஷ்மக்கிருமிகளை அழித்து,வியாதியைப் பற்றறவே ஒழிக்கவல்லது. இதற்கு உபயோகிக்கவேண்டிய லாக்டிக் ஆஸிட்டின் அளவானது 100-க்கு ½ வா● தான் இருக்கவேண்டும்; என்றால் 100-மடங்கு ஜலத்தில் ½ பங்கு இச்சரக்கைச் சேர்க்கவேண்டும். அதிக தொந்தரவளிக்காத கேஸுகளில் 500 பங்குஜலத்தில் ஒரு பங்கு வீதமும், பலமான—தொந்தரவு உண்டு பண்ணும்—கேஸுகளில் 100-க்கு 1-பங்கு வீதமும் லாக்டிக் ஆஸிட்டை உபயோகிக்கலாம். பெரும்பாட்டின் சிகித்ஸையைப்பற்றி "அமெரிகன் ஜர்னல் ஆப் ஸர்ஜரி" என்கிற பத்திரிகை கூறுவதாவது:— பெரும்பாடானது கர்ப்பாசயத்தின் கழுத்து முதல் வெளிப்பக்கமான அவயவத்தையே ஆச்ரயித்து உண்டாவதால், இந்த வியாதியில், ஸர்ப்பமுகம்போன்ற சஸ்திரத்தினால் கர்ப்பாசயத்தைச் சுறண்டி சிகித்ஸை செய்வது (Curettage) அநாவசியகம். கர்ப்பாசயத்தினுள் இவ்வியாதி ஸம்பந்தப்படாமல் அதன்கழுத்திலேயே உண்டாவதால், ஸாதாரண ஔஷதப் பிரயோகமே அதை ஸ்வஸ்த்தம் செய்து விடும்.

## கறியுப்பின் உபயோகங்கள்.

வைத்திய முறையில் கறியுப்பு அநேக வகையில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. விசேஷமாக இதைத் திரவமாக (ஜலத்தில்கரையச்) செய்துதான் முகத்தின் மூலமாய் உள்ளுக்கும் சர்மத்தின் மூலமாய் இரத்தத்திலும் பிரயோகிக்கப்பட்டுவருவதுண்டு. பிராசீன வைத்தியர்கள் உப்பை ஜலத்தில் கரைக்காமல் விரணங்களில் கட்டுவதற்கு மாத்திரம் உபயோகித்து வந்தார்கள். குடலில் உண்டாயிருக்கிற தூர்நீர்களை சோஷணம் செய்யவும், பசியை விருத்திசெய்யவும், ஸாதாரண உப்பை அப்படியே உபயோகிக்கலாம் என்று டாக்டர் கேகரஸாவா என்பவர் கூறுகிறார்.

## விலக்கவேண்டியவை.

ஒருவர் உபயோகித்தத் துணியை மற்றொருவர் எதற்கும் உபயோகிக்கக் கூடாது.

வியாயாமம் (தேஹவுழைப்பு) செய்தபிறகு ஈரமுள்ள இடங்களில் உட்காரக்கூடாது.

பலருக்குப் பொதுவான பாத்திரத்தை எதையும் குடிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது.

பாதங்களை ஈரமாக வைத்திருக்கக் கூடாது (அதனால் சபஜ்வரம் உண்டாகும்.)

ஜலதோஷத்திற்கு ஆரம்பத்திலேயே ஏற்ற சிகித்ஸை செய்யத் தவறக்கூடாது.

சூடான அறையில் மிகவும் கனமான உடைகளைத் தரித்துக்கொண்டு இருக்கக்கூடாது.

சிறுவர்கள் அஸௌக்கியமாயிருக்கையில் அவர்களைப் பள்ளிக்கு அனுப்பக்கூடாது.

தொண்டைப்புண் எவ்வளவு சொற்பமாயிருந்த போதிலும், சீக்கிரத்தில் அதற்குச் சிகித்ஸை செய்யாமலிருக்கக்கூடாது.

குழந்தை அஸௌக்கியமானால், உடனே வைத்தியரை அழைத்து ஏற்ற பரிஹாரம் செய்வதில் தவறக் கூடாது.—Family Doctor.

---

## குளவி கொட்டியதால் நேரிட்ட மரணம்.

இங்கிலாந்தில், போர்ட்ஸ் மௌத் என்னுமிடத்தில் ஒரு யந்திரசாலையில் வேலை செய்யும் ஒரு மாலுமி, கப்பலின் மேல் தளவாடத்தில் படுத்துத் தூங்கும்போது, ஒரு குளவி அவனைக்கொட்டிவிட்டது. அடுத்த நிமிஷம் முதல் வீக்கமும் வலியும் அதிகமாய் விருத்தியாகவே, ஹாஸ்லர் ஆஸ்பத்ரிக்கு அவன் அனுப்பப்பட்டான்; அங்கே அவன் அடுத்த நாளே இறந்துவிட்டான். அவனைப் பரீக்ஷை செய்ததில், கார்ட்வெல் ஸ்மித் என்கிற சஸ்திர சிகித்ஸகர், 'குளவி கொட்டியதால் நுண்ணுயிர் ஸம்பந்தமான விஷம் இரத்தத்திற் பரவி மரணம் ஸம்பவித்தது' என்று தீர்மானம் செய்தார். இறந்துபோன மனிதன் நல்ல ஆரோக்கிய நிலைமையில் திடசரீரியாயிருந்தான். குளவியினால் நேரிட்ட விஷப்பற்றானது மிகவும் உக்கிரமான வீர்யமுள்ளதென்று தெரியவந்தது. ஆகவே குளவியென்று அலக்ஷியம் பாராட்டுவது அபாயகரமாகும்.—Doctor.


# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
*Ayurveda Bhushan*
**Pandit M. Duraiswami Aiyangar,**
*Senior Physician, S. K. P. D. Hospital.*

பத்திராதிபர்:
ஆயுர்வேத பூஷணம்.
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின்
பிரதான டாக்டர்.

புஸ்தகம் 4. Vol. IV. | பிங்களஹு சித்திரை-வைகாசிமீ. MAY—1917. | ஸஞ்சிகை 9. No. 9.


## GURJAN OIL AND ITS USES.*

## மரவெண்ணெயும் அதன் உபயோகமும்.

By Dr. SARASI LAL SARKAR, *Civil Surgeon,*
*(Chittagong Hill Tracts.)*

சிட்டகாங் பர்வதப் பிராந்தங்களில் மரவெண்ணெய் மரங்கள் விஸ்தாரமாய் வளர்ந்திருக்கின்றன. இந்த மரங்களிலிருந்து வடித்தெடுக்கப்படும் எண்ணெயை இப்பொழுதுகூட அந்த ஜில்லாவிலும் அதைச் சுற்றிலும் வஸிக்கும் ஜனங்கள் கிருஹத்தில் அநேக காரியங்களுக்கு உபயோகித்து வருகிறார்கள். வைத்தியமுறையிலும், மிகப் பிரஸித்திபெற்ற சிகித்ஸகர்களால் 1811-ம் ஆண்டுக்குப் பிறகுகூட இத்தைலம் மிக்க உபயோககரமானது என்று கொண்டாடப்பட்டிருக்கிறது. பூயமேஹத்திலும், கபமேஹத்திலும் (Gonorrhoea and Gleat), மற்றும் அநேக சர்ம வியாதிகளிலும் இத்தைலம் உபயோகிக்கப்பட்டு சிறந்த குணம் தருவதாக அறிந்திருக்கிறேன். இச்சரக்கின் உபயோகம் இத்தகையதென்று முதன் முதலில் ஐரோப்பிய வைத்தியர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தவர் மிஸ்டர் ஓ'ஷாப்னெஸி என்பவரேயாம். பிறகு அதுமுதற்கொண்டு டாக்டர் T. B. ஹாண்டெர்ஸன், டாக்டர் H. B. மாண்ட்காமெரி, டாக்டர் மொஹிடீன் ஷெரிப் இவர்கள் அப்போதைக்கப்போது தாம் எழுதிப் பிரசுரித்த புஸ்தகங்களிலும் இதன் குணங்களைப்பற்றியும் பலன்களைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மரவெண்ணெயானது, அதன் இரஸாயனச் சேர்க்கையிலும், குண விசேஷங்களிலும் குங்கிலியத் தைலத்திற்கு ஸமானமாயிருக்கின்றது. ஆனால் அதிக அளவாக உபயோகித்தாலேயொழிய அவசியமான பலனைத் தருவதில்லையென்று கூறப்படுகிறது. இக்காரணத்திற்காகவே, தென் அமெரிக்காவில் இத்தைலத்திற்கு குங்கிலியத்தைலத்திற்கு இருப்பது போல அவ்வளவு பிரஸித்தி இல்லையென்றும் நான் அறிகிறேன். இச்சரக்கைப் பரிசோதனை செய்து, அதன் உண்மையான ஸத்துவங்களைப் பரீக்ஷித்துப் பார்த்த சாஸ்திரஞ்ஞர்கள் இதை அலக்ஷியம் செய்யமாட்டார்கள் என்பது என் கொள்கை. இச்சரக்கில் அநேக வகையுண்டு; அவற்றுள் சிறந்த வகையான தைலத்தைத் தேடி உபயோகிக்காமல், ஏதோ ஸாதாரண இனத்தை ஔஷத காரியங்களில்

* Translated from English specially for the "Vaidya Kalanidhi."

பிரயோகிப்பதே இச்சரக்குக்கு வேண்டிய வளவு பிராதான்யம் வராததற்கு ஹேதுவாயிருக்கலாமென்றும் எண்ணுகிறேன்.

இப்பொழுது, ஐரோப்பிய யுத்தமானது, தேசாந்தரங்களிலிருந்து நமக்கு வரக்கூடிய அநேகம் ஔஷதச் சரக்குகளுக்கு மிகவும் பிரதிபந்தகமாக ஏற்பட்டிருக்கையில், நம் தேசத்தில் உண்டாகும் இவ்விதமான ஔஷத வஸ்துக்களைப் பரீக்ஷித்து, அவற்றின் உபயோகங்களைக் கண்டறிவது முற்றிலும் இன்றியமையாத காரியமாகும்.

டாக்டர் மொஹமேன் ஷெரிப் அவர்களுடைய கொள்கைப்படி, இந்தச் சரக்கிலிருந்து உண்மையில் மிகவும் உபயோககரமான க்ளேகுரானிக் ஆஸிட் (Glycuronic acid) என்கிற சரக்கை பல அளவாகக் கிரஹிக்கலாம். அநேகவிதமான மரயெண்ணெய்களில், ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு விதமான அளவில் இந்த ஆஸிட் அல்லது அம்லமே முக்கியமாய் அடங்கியிருக்கின்றது. இவ்வாறு அடங்கியுள்ள அம்ல ஸத்துவமானது, கிருமிஹரமாக (antiseptic) வேலைசெய்து, மூத்திரத்தைச் சுத்திசெய்கின்றது; நுண்ணுயிர்களின் வளர்ச்சியையும் தடுத்துவிடும் இயல்புடையது. இம்முறையில் இன்னும் விசேஷமான ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்தால், மரயெண்ணெயிலிருந்து பௌதிகரீதியாய் (chemically) இந்த அம்லத்தை நன்றாகப் பிரித்துவிடலாமென்றும், அந்த அம்லம் ஒருவித உப்பாகக் கிரஹிக்கப்படக் கூடுமென்றும், அது முற்றிய மேஹ வியாதிகளில் மிகவும் சிலாக்கியமான வேலையைச் செய்யக்கூடியதாயிருக்குமென்றும் சில பலமான முகாந்தரங்களைக் கொண்டு நான் ஊஹிக்கிறேன். சுருங்கச் சொன்னால் உத்ஸாஹமுள்ள சில பௌதிக சாஸ்திர நிபுணர்கள் (chemists), இத்தைலத்தை யிறக்கி, இதிலிருந்து அவ்வித அம்ல ஸத்வத்தைக் கிரஹிப்பதற்கு ஊக்கத்தோடு முயற்சி செய்வாராகில், இத்தைலமானது மிகவும் இலாபகரமான கைத்தொழிலுக்கு உபயோகமானதாகவும் ஆய்விடும். குங்கிலியத் தைலத்திற்குப் பதிலாக மரயெண்ணெய் மிகவும் பிரயோஜனகரமாய் உபயோகிக்கத் தகுந்தது என்பதில் ஸந்தேஹமில்லை; குங்கிலியத் தைலம் இத்தேசத்தில் வெகு விசேஷமாய் உபயோகிக்கப்படுவதையும், அதற்காக நாம் தேசாந்தரங்களையே எதிர்பார்க்க வேண்டியதாயிருப்பதையும் யோசித்தால், குங்கிலியத் தைலத்தை விலக்கி விடுவதும், அதன் ஸ்தானத்தில் மரயெண்ணெயின் ஸத்துவத்தையே உபயோகிக்கப் பார்ப்பதும் மிக்க அவசியமாகும்.

ஸ்திரீகளுக்கு உண்டாகும் பெரும்பாடு என்கிற ச்வேத ப்ரதர வியாதியிலும், மற்றுமுள்ள யோனி ஸ்ராவங்களிலும் மரயெண்ணெய் உபயோகிக்கத் தகுந்த சிறந்த ஔஷதமென்று வைத்தியப் பத்திரிகைகளும் நம்பத் தகுந்த ஆதாரங்களைக் காட்டி சிபார்சு செய்திருக்கின்றன. டாக்டர் ஜே. டௌகால் என்பவர் 1874 இல் இத்தைலத்தை குஷ்டரோகத்தில் உபயோகித்துப் பரீக்ஷித்துப் பார்த்தார். அவர் உபயோகித்ததிலிருந்து இத்தைலம் குஷ்டரோகத்தில் எப்பலனையும் உண்டுபண்ணுதாகக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியவில்லை. ஆகினும், சர்மதளம் (Psoriasis) என்கிற வியாதியிலும், வேறு சில நாட்பட்ட சர்ம ரோகங்களிலும் மரயெண்ணெயை உபயோகித்து வந்ததில், குறிப்பிடக்கூடிய குணம் உண்டானதாகத் தெரியவந்தது; உத்தீபனத் தன்மை (Stimulant) இதற்கு இருப்பதாலேயே, சில வேலைகளைச் செய்வதற்கு அச்சரக்குக்கு வேண்டிய சக்தியும் இருக்கிறது. மரயெண்ணெயை அதன் மரங்களிலிருந்து வடித்தெடுப்பதற்கான முறை பின்வருமாறு:—

உஷ்ண காலங்களின் முடிவு நாட்களில், நன்கு செழித்து வளர்ந்துள்ள மரத்தின் அடித்தண்டை வெட்டி, அதின் உட்புறத்துச் சதையுள்ள பாகத்தை யெடுத்துக் கொள்ளவும். அது நன்றாக வாடி வதங்கிப் போகுமளவும் அக்னியிற் காய்ச்சவேண்டும். அப்பால் அதிலிருந்து வெகு தாராளமாகப் பெருகும் தைலத்தை ஏந்திக்கொள்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதே மரத்தின் கட்டையினுடைய உட்சதையை மீண்டும் மறு வருஷங்களிலும் வெட்டி யெடுத்து இத்தைலத்தை இறக்கிவரலாம். மிஸ்டர் ராக்ஸ்பர்க் என்பவர் கூறுகிற விதமாகக் கவனித்து சிரத்தையோடு வேலை செய்தால், நன்றாக வளர்ந்த ஒரு மரத்திலிருந்து வருஷத்தில் 30 முதல் 40 காலன் அளவுள்ள தைலம் இறக்கக்கூடும். உட்சதையின் அடிப்புறங்களை நன்றாக வெட்டியெடுத்து, மீண்டும் காய்ச்சி எண்ணெய் இறக்கக்கூடும்.

தோணி முதலியவற்றின் தளவரிசைக் கட்டைகளைக் கறையான் முதலிய பூச்சிகள் அரிக்காமலிருப்பதற்காக, இத்தைலம் விசேஷமாய் உபயோகிப்பது இன்றைக்கும் வழக்கமாயிருக்கிறது.



## THE WAY OF SOUND SLEEP.*

## அமைதியாக நித்திரையுறும் வழி.

By W. H. RILAY, M. D.

நித்திரா காலம்:— அமைதியாகவும் மனதுக்கு இரம்யமாகவும் நித்திரை செய்வது அவசியமாகையால், நித்திரைக்கு அநுகூலமான நிலைமைகளையெல்லாம் முதலில் ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். நித்திரைக்காக நாம் தெரிந்து காலநிர்ணயம் செய்துகொள்வது அவற்றுள் முக்கியமானது. இரவில் வேலை செய்வதும், பகலில் படுத்து உறங்குவதும் இயற்கைக்குத் தகுந்தவை யல்ல. பிரகாசமின்மையும், சப்தங்கள் அடங்கி உலகம் சாந்த நிலைமையில் இருப்பதும் இரவில் ஆகையால், அவை தேஹத்திற்கு மிகவும் மேலான விச்ராந்தியைக் கொடுக்கின்றன. இரவில் தகுந்தவாறு நித்திரை யுண்டாகாமல் கஷ்டப்படும் இயல்புள்ள மனிதன், பகல் நேரத்தில் நித்திரை யுறுவதற்கு அநுகூலமான எந்த வேலையையும் செய்யக்கூடாது.

நித்திரையில் பரிசுத்த வாயுவின் தேவை:— வஸிப்பது மாடிவீடாக இருந்தால், அதில் படுக்கையறையை மெத்தையிலேயே ஏற்படுத்திக்கொள்வது அவசியமாகும். நகரங்களில் விஷ வாயுக்கள் அதிகமாகப் பரவியிருப்பதும், அவ்வாயுக்கள் பூமிமட்டத்திற்கு ஸமீபத்திலேயே செறிந்து நிற்பதும் இயல்பாகையால், முக்கியமாய் நகரங்களில் மெத்தையிலேயே சயன கிருஹத்தை அமைப்பது மிகவும் முக்கியம்.

படுக்கையறை எவ்விடத்தில் அமைக்கப்பட்டிருந்த போதிலும், தாராளமாய் வாயு ஸஞ்சாரத்திற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஒரு சாளரம் இருந்தாலும், அல்லது ஒரு சாளரமும் அறைக்குள் செல்வதற்கான வாயிலும் அமைக்கப்பட்டிருந்தாலும் அவை அப்போதைக்கப்போது நூதன காற்று உலாவுவதற்குப் போதுமானவையல்ல. ஒன்றுக்கு ஒன்று எதிராக இரண்டு சாளரங்களை வேண்டியவளவு விசாலமாய் அமைப்பதே சிறந்த முறையாகும். இவ்விரண்டு சாளரங்களுக்கும் இடையில் படுக்கையைப் போட்டுக்கொண்டால், படுத்திருக்கும் இடத்தில் பழைய காற்று ஒரு சிறிதும் தங்காமல், எப்பொழுதும் புதிய வாயுவே படுத்திருப்பவனுக்கு வேண்டியவளவு கிடைக்கும். ஆனால் அறையில் உலாவும் காற்று ஈரம் நிரம்பியதாயில்லாமலிருக்கப் பார்ப்பதிலும், அப்படி ஈரம் நிரம்பியதானால் அந்த ஈரம் தேஹத்தைத் தாக்காமலிருப்பதிலும் முன் ஜாக்கிரதையோடு இருப்பது அவசியமாகும்.

* Reproduced and translated from "Good Health."

எல்லாவற்றிலும் சிறந்தது வீட்டுக்கு வெளியில் தகுந்த பிரதேசத்தில் சயன ஸ்தலத்தை அமைத்துக்கொள்வதேயாம். ஒரு சிறிய அளிந்தத்தையாவது (balcony), தாழ்வாரத்தையாவது கெட்டியான தப்பட்டிகளைக் கொண்டு எளிதில் அமைத்துக்கொண்டு அதில் நித்திரைசெய்வது உத்தமம்.

குளிர்ந்த பிரதேசத்தில் சிரமபரிஹாரம் செய்வது நலம்:—நல்ல நித்திரையை அநுபவிப்பதற்கு, சயன கிருஹம் குளிர்ந்து (வெப்பம் நீங்கி) இருப்பது அவசியம் கவனிக்கவேண்டியவைகளுள் அடுத்தபடியாகும். சீதளமான காலங்களில், படுக்கையறையில் அநேகம் ஜனங்களுக்கு 30 முதல் 40 டிக்ரி (Fahr.) உஷ்ணம் போதுமானது. பிணியாளி படுக்கும் அறையில் 50 டிக்ரி உஷ்ணம் இருப்பது நலம்.

படுக்கையைக் கருத்துடன் பராமரியுங்கள்:—சயனிக்கும் படுக்கையும், நல்ல நித்திரை வருவதற்குக் கவனிக்கக்கூடிய முக்கியமான ஸாதனங்களுள் ஒன்று. மெதுவான இறகுகளின் தூலிகைகளால் ஆக்கிய படுக்கையில் சயனிப்பது விஷயதத்துவமுணர்ந்தவர்களால் விரும்பப்படமாட்டாது; மெத்தையானது தளர்ந்து வழவழப்பாயில்லாமல் உரப்பாகவும் அழுத்தமாகவும் இருக்கவேண்டும். மேலும் அவனவனுடைய இஷ்டத்திற்குத் தகுந்தவாறும் அது அமைக்கப்பட்டிருக்கவேண்டும். சிலருக்குத் தளர்ந்துள்ள மெதுவான படுக்கையில் விருப்பமும், வேறு சிலருக்கு கெட்டியான படுக்கையில் விருப்பமும் உண்டு. படுக்கை ஸௌகரியமாய் அமையாமையாலும், அதன் மேல்விரிப்புகள் தகுந்தவாறு பரப்பி அமைக்கப்படாததாலும் அநேகம் பெயர்கள் இரவில் அமைதியாகத் தூங்க முடியாமலே கஷ்டப்படுவது வழக்கம். ஆனால் தமக்கு நித்திரை வாராததற்குக் காரணம் சரிவர அமைக்கப்படாத படுக்கையே யென்று அவர்களில் பெரும்பாலோர் கவனிப்பதில்லை. படுக்கையின்மேல் கனமானதும் உஷ்ணமுள்ளதுமான நல்ல விரிப்பைப் போட்டு வைக்கவேண்டும்; ஆனால் உடம்பில் மிதமிஞ்சிய உஷ்ணத்தைக் கொடுக்காததும், தேஹத்தை சைத்திய பாதை தாக்காமலிருப்பதற்குப் போதுமானதுமாயுள்ள மேல்விரிப்பு அவசியமானது.

காலையில் எழுந்ததும் படுக்கையைச் சுற்றி ஒரு மூலையில் கட்டி வைத்துவிடக் கூடாது; அதை நன்றாகப் பிரித்து நல்ல காற்றோட்டத்தில் விரித்தபடியே போட்டிருக்கவேண்டும். குளிர்காலங்களில் அடிக்கடி படுக்கையை வெயிலில் உலர்த்தி யெடுப்பதும் அவசியமாம். படுக்கையின்மேல் கனமான தப்பட்டியைப் போட்டுக்கொண்டு படுப்பதுதான் சரியான முறையாகும். ஸௌகரியமிருந்தால், மேல்விரிப்பான தப்பட்டியை மட்டும் தினந்தோறும் அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை வெயிலில் உலர்த்தி உபயோகிக்கலாம்.

நித்திராபங்கம் என்பது ஸுகக்கேட்டின் ஒரு குறியாகும்:—நித்திரையின்மை யென்பது ஒரு வியாதியல்ல; அது ஏதோ ஒன்றின் குறியாகும். சரீரத்தில் ஏதோ இயற்கைக்கு விரோதமான நிலைமை உண்டாயிருப்பதை அது குறிப்பிடுகின்றது; அதாவது தேஹத்தில் ஏதோ அவயவம் கோளாறடைந்ததாகவோ, மூளை அல்லது நரம்புமண்டலம் கலவரமடைந்திருப்பதாகவோ அக்குறியினால் அறியலாம்; அக்கோளாறுகள் மனிதனுக்குத் தெரிந்தும் அல்லது உணர்ச்சிக்கு எட்டாமலும் உண்டாயிருக்கக்கூடும். மனக் கவலையோ, மனோரதபங்கமோ, துயரமோ இவற்றில் ஏதேனும் மனிதனுடைய மனதைக் கஷ்டப்படுத்தி, மூளை ஸம்பந்தமான கலவரத்தை உண்டுபண்ணலாம். இவை அப்பொழுதே ஏற்பட்டவையாயிருக்கவேண்டுமென்பது அவசியமல்ல; அக்கலவரத்திற்குக் காரணங்கள் சில மாதங்களுக்கு முன்பாகவே ஏற்பட்டிருந்தாலும், திடீரென்று மனதைத் தாக்கி மூளைக்கு அமைதியின்மையையும் அஸௌக்கியத்தையும் உண்டுபண்ணக்கூடும். தூங்காமல் அநேக நேரம் இரவில் கண்விழிப்பதால் தாங்கமுடியாத சில தலைவலிகளும் வேறு பித்த விகாரங்களும் ஸம்பவிப்பதாக அநேக முறை பரீக்ஷித்து அறிந்திருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சயனத்தில் படுக்கப் போகாமலும், பிரதிதினமும் ஒரே சீராக ஏற்ற ஸமயத்தில் நித்திரை செய்யாமலும் வலுவில் கண் விழிப்பவர் பலவிதமான மானஸிக சாரீர ஸம்பந்தமான கோளாறுகளுக்கு உட்படுவதுடன், அவர்களுக்கு அநேகமாய் எப்பொழுதுமே அமைதியாகத் தூக்கமும் உண்டாகாமல் நித்திராபங்கம் என்கிற துன்பத்திற்கு அவர்கள் ஆளாகிறார்கள்.

காப்பி தேயிலை முதலிய சரக்குகள் நல்ல நித்திரைக்கு விரோதிகள்:—காப்பி, தேயிலை, மத்யம், மற்றுமுள்ள அபினி முதலிய சரக்குகள் இவைகளை உபயோகிப்பதும் நித்திராபங்கத்திற்குக் காரணங்களாகும். தூக்கத்தைத் தடுப்பதற்காகப் பரீக்ஷைக்குப் படிக்கும் மாணாக்கர்கள் தேயிலைப்பானகம் அருந்துவது அநேகருக்குத் தெரிந்திருக்கும். இந்த துர்வழக்கம் பரீக்ஷையில் தவறிவிடுவதைவிட மேலான கெடுதியை உண்டுபண்ணக்கூடியது. மத்யபானம் செய்ய ஆரம்பிப்பவருக்கு, முதலில், அதனால் நல்ல நித்திரை வருவது வாஸ்தவம்; ஆனால் அதை வழக்கமாய் உபயோகித்து வரும்போது, தூக்கம் வருவது நாளுக்கு நாள் மிகவும் கஷ்டஸாத்தியமாய் விடுகிறதென்பதும் உண்மையென்பதை கவனிக்கவேண்டும். நித்திரை உண்டாவதற்கென்று சில ஔஷதச் சரக்குகளை உபயோகிப்பதாலும் மதுபானத்தினால் உண்டாகும் பலனை ஸம்பவிக்குமென்று நிச்சயிப்பீர்களாக.

சில வியாதிகளும் காரணமாம்:—அஜீர்ணம், மலபந்தம், அதிஸாரம், இருதய ரோகங்கள், விருக்கங்களைப்பற்றிய கோளாறுகள், யக்ருத் என்னும் கல்லீரலின் விகாரம், மற்றுமுள்ள இதர அவயவங்களின் சீர்கேடு இவைகளாலும் அமைதியாக நித்திரை யுண்டாவதில்லை. மனக்கோளாறால் அஜீர்ணம் முதலிய கெடுதிகள் ஸம்பவிப்பதும், இவை அனைத்தாலும் நித்திரை சீர்கெடுவதும் உண்டு. ஆகவே பொதுவில் சரீரத்தில் எந்த அவயவத்திற்கும் இயற்கைக்கு விரோதமான மாறுபாடு உண்டாகாமல், தேஹத்தையும் மனதையும் முற்றிலும் ஆரோக்கிய நிலைமையிலும், இன்பமான ஸ்திதியிலும் அமைத்து வைக்கவேண்டியது ஸுகமாக நித்திரை யுறுவதற்கு இன்றியமையாத விஷயங்களாகும்.

## THE PULSE.

### நாடி நடை

By K. A. Ranganatham,
*Medical Practitioner.*

இங்கே நாடி நடை யென்பது தமனி யென்னும் செவ்விரத்தக் குழாய்களின் துடிப்பே யன்றி வேறல்ல; ஆனால் தமனிகளுக்கு நாடி யென்று பெயர் வழங்குவது பொருத்தமல்லவாகிலும், தமனியின் நடைக்கு நாடி நடை யென்கிற விவஹாரம் வெகு நாட்களாகவே வழக்கத்தில் வந்துவிட்டதுபற்றி நாம் அதை "நாடி நடை" யென்றே குறிப்பிடவேண்டியிருக்கிறது.*

* ஆங்கிலத்தில் "ஆர்டரி" எனப்படும் இரத்தக் குழாய்க்கு ஆயுர்வேத முறைப்படி "தமனி" என்று பெயர் என்பதை பத்திராதிபர் அவர்களே அநேக முறை விளக்கக் கூறியிருக்கிறார்கள்.

தமனிகள் (artery) நெகிழ்ந்துழலக்கூடிய குழல்களாயிருப்பதால் (elastic tubes), இருதயம் சுருங்கும்போதெல்லாம் இக்குழல்களின் மூலக்குழாயான மஹாதமனியில் புதிது புதிதாக இரத்தம் வலிவுடன் இறைக்கப்படுகிறது; அவ்விதம் அதிகமாய் வரும் திரவத்திற்கு இடம் கொடுப்பதற்காக, அப்பெரிய குழாய் விம்மிக்கொள்ளும் அல்லது விசாலமாகும். ஆனால் இவ்விதம் விசாலமாகப் பருப்பது ஒவ்வோரிடத்திலும் தாத்காலிகமாய் ஏற்படுவதாயிருக்குமேயல்லாது, குழலின் ஒவ்வொரு பாகத்திலும் நிரந்தரமாய் நிலைத்து நிற்காது; ஒருபாகம் விம்மியவுடனே, மறுபடியும் அப்பாகம்இயற்கையான பருமனுக்கு வந்துவிடும். (குழாய் நெகிழ்ந்துழலக்கூடியதாயிருப்பதால் இவ்விதம் நடைபெறுகிறது.) இந்தவிம்மல் முதலில் எந்த பாகத்தில் ஏற்பட்டதோ அதற்கு அடுத்த பாகத்தில் உடனே உண்டாய், மறுபடியும் அவ்விடத்தில் குறைந்து, மீண்டும் அதற்கு அடுத்த பாகத்தில் ஏற்பட்டு மறையும்; இவ்வாறு இரத்தக்குழாய் விம்முவது, அக்குழாய் நெடுக அலையைப்போல அசைந்து ஓடிக்கொண்டிருக்கும். இருதயத்துடிப்பைப் பின்தொடர்ந்து, அத்துடிப்பை அநுசரணம் செய்துகொண்டு, தமனியில் அலையைப்போல மேன்மேலும் உண்டாகும் இந்த விம்மல் அல்லது விரிந்துழலுதலே "நாடி நடை" யென்று கூறப்படுகிறது; தமனியானது, தேஹத்தில் எவ்வெவ்விடங்களில் எலும்பு முதலிய கடினமான பிரதேசத்தில் சர்மத்திற்கு அடுத்தாற்போல ஓடுகிறதோ அவ்விடங்களிலெல்லாம் இந்த நாடி நடையை விரல்களால் பரிசித்து உணரலாம். தமனியின் விம்மல் அல்லது விசாலிப்பு என்றுசொல்லக்கூடிய இந்த நாடியானது, மஹாதமனியின் மூலபாகத்தில் ஆரம்பித்து, தமனி ஓடுகிறதை அநுஸரித்து, அதையும் அதன் கிளைகளையும் ஊடுருவிச் சென்று, குழாய் கனத்தில் குறையக்குறைய நாடியும் வேகத்தில் குறைந்து, கடைசியில் கேசநாளங்கள் என்கிற மிக நுண்ணிய வலைகளைப்போன்ற குழாய்களில் நாடியே முற்றிலும் மறைந்துவிடுகின்றது. நாடி நடையின் அலையானது ஸெகண்டு ஒன்றுக்கு முப்பது அடி தூரம் வீதம் பாய்ந்தோடும். ஆனால் இரத்தக் குழாய்க்குள் ஓடுகிற இரத்தப் பிரவாஹ வேகமும், நாடி நடையின் வேகமும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வித்தியாஸப்பட்டவையாகையால், இரத்தப் பிரவாஹ கதியோடு நாடியின் கதியும் ஸம்பந்தமுள்ளதாகக் கருதி ஸந்தேஹத்தை உண்டுபண்ணிக் கொள்ளக் கூடாது.

தேஹத்தில் மிகவும் விளக்கமாகக் காணக்கூடிய நாடி நடை கன்னத்தில் ஓடுகிற சங்கதமனியில் (temporal artery) கையினால் பரிசிக்கவும் கண்களால் பார்க்கவும் தகுந்தவாறு அவ்வளவு மேலே அமைந்திருக்கிறது. சஸ்திர சிகித்ஸை செய்யும்போது மயக்கந்தரும் சிகித்ஸகர்கள் சங்கதமனியை அடிக்கடியும் கவனிப்பதுண்டு. ஆனால் எப்பொழுதுமே எல்லா வைத்தியர்களும் கணுக்கையில் அரத்னி தமனியில் (radial artery) மட்டுமே நாடி நடையைப் பரிசித்துப் பார்ப்பது வழக்கம். இந்த தமனியானது அரத்னியஸ்த்தியின் (radius) மீது அதைச் சேர்ந்தாற்போல் அமைந்து ஓடுகிறது. இந்த தமனியானது நாடியைப் பரிசித்து நன்குணருவதற்குப் போதுமாறு பெரிதாகவும் மேற்புறமாகவும் அமைந்திருக்கிறது; பெருவிரலுக்கு அடிப்புறத்தில் இந்த நாடி துடிப்பது பெரும்பாலும் கண்ணுக்கும் தெரியும்.

நாடி நடையின் அலைகளை உணருவதற்குப் போதுமாறு, அரத்னிதமனியின்மீது மூன்று விரல்களை வைத்து மெதுவாக அழுத்தி நாடியை எண்ணிக் குறிப்பிடலாம். நாடியைப் பரிசித்து, அதன் துடிப்புகளை யுணர்ந்து, நிமிஷத்திற்கு இத்தனைத் துடிப்பென்று எண்ணலாம். நல்ல அநுபவசாலியான வைத்தியன், நாடி நடையின் தன்மையைப் பரிசித்துப் பரீக்ஷிப்பதற்கு அரை நிமிஷத்திற்குமேல் அவசியமிராது; ஆனால் ஏதாவது ஸந்தேஹ மிருந்தால், முக்கியமாய் நாடி நடை ஒழுங்கினப்பட்டதாகத் தோற்றுமானால், ஒருநிமிஷமாவது நிதானித்துப் பரீக்ஷிப்பது நலம். ஸாதாரணமான இயற்கை நிலைமையில் வாலிப வயதிலுள்ள புருஷருக்கு நிமிஷம் ஒன்றுக்கு 70 முதல் 74 முறை துடிக்கும்; யௌவன வயதிலுள்ள ஸ்த்ரீகளுக்கு ஒரு நிமிஷத்தில் 76 முதல் 80 தடவை வரையில் துடிப்பது வழக்கம்; புருஷரைவிட ஸ்த்ரீகளுக்கு நாடியானது எண்ணிக்கையில் சிறிது அதிகமாகவே துடிக்குமென்பது பிரஸித்தமான விஷயம். மேலும் உட்கார்ந்து அல்லது நின்றுகொண்டிருக்கும் நிலைமையைவிட சாய்ந்து அல்லது படுத்திருக்கும் ஸ்திதியில் நாடி நடை ஒரு சிறிது மெதுவாக இருக்குமென்பதும் கவனிக்கத் தக்கது.



சில மனிதர்கள் சுபாவமாகவே மிகவும் மெதுவான நாடி நடையுள்ளவர்களாயிருக்கிறார்கள்; அவர்களுக்கு நிமிஷத்திற்கு 60 அல்லது அதற்கும் குறைவான (சுமார் 50 துடிப்புகள் உள்ள) நாடியைப் பரிசித்துணரலாம்; இருந்தபோதிலும் அவர்களுடைய ஆரோக்கிய நிலைமை சீர்கெட்டதாயிராது. ஆனால், நிமிஷத்திற்கு 50 தடவைக்குக் குறைந்த அளவில் நாடி அடித்துக் கொண்டால், அவனுக்கு ஏதோ ஒருவிதத்தில் ஆரோக்கியம் நிலை குலைந்திருக்கும் என்று கருதவேண்டும். அல்லாமலும், சில மனிதருக்கு மிகவும் அதிகவேகமாகவும் நாடி நடை துடித்துக்கொள்வதுண்டு; அதாவது நிமிஷத்திற்கு 80 தடவை வரையில் அதிகப்படுவதாகக் கண்டிருக்கிறோம்; ஆனால் அந்த நிலைமையில் அடித்துக்கொள்வது அரிதாகவேயிருக்கும். ஆரோக்கிய நிலைமையில் இருந்துவரும் ஒரு புருஷனுக்கு அல்லது ஸ்த்ரீக்கு நாடி நடை குறிப்பிடக்கூடியவாறு ஏதேனும் மாறுதலடைந்தால், ஏதோ தேஹத்தில் விஷமமான நிலைமை ஸம்பவித்திருப்பதாகவே தீர்மானித்து, அதன் தத்துவத்தைத் தெரிந்துகொள்ள முயல்வது அவசியமாகும். இப்பொழுது ஸாதாரண நிலைமையில் பரீக்ஷித்துணரப்படும் நாடி நடையின் தன்மை ஒருவாறு சுருங்கக் கூறப்பட்டது. அடிக்கடி நாடி நடை மறைவதும், ஒரு முறை அடித்தவேகம் போலின்றி வெவ்வேறு அளவான வேகத்தில் அடிப்பதாக உணரப்படுவதும், இருதயத்தின் மாம்ஸபேசியினுடைய பலஹீனத்தன்மையைக் குறிப்பிடுகின்றனவாகையால், அவ்விதமாக ஒழுங்கினப்பட்ட நாடியானது இன்னும் அதிக அபாயகரமானதென்று அறியவேண்டும்.

---

## போர்க்களத்தில் அபிகாதப்பட்டவருக்கு போதனை.

"பாரிஸ் மெடிகல்" என்னும் வைத்தியப்பத்திரிகையின் 1915-ம் ௵ ஜூன் ௴ வெளியான ஒரு ஸஞ்சிகையில் அடியில் கூறப்படும் விஷயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது:—பிரான்ஸில் கீழ் ஜில்லாக்களிலுள்ள காயம்பட்ட போர்வீரர்கள் இருக்கும் ஒரு ஆஸ்பத்ரியில், அதன் பிரதான சிகித்ஸகரால், வைத்தியசாலையின் உட்புறச்சுவர்களில் இதன்கீழ் குறிக்கப்பட்டுள்ள விதமாய் பெரிய எழுத்துக்களில் பத்து விஷயங்கள் வரையப்பட்டிருந்தன:—

1. மதுபானம் சரீரவன்மையை ஒழிக்கும்.
2. போர்வீரன் தனது தலை மயிர்களை மிகச்சிறிதாகக் கத்தரித்து வைத்திருக்கவேண்டும்.
3. ஜனநெருக்கமும் அழுக்கு முள்ளதான பிரதேசங்களில் வஸிப்பதைவிட வீட்டுக்கு வெளியில் விசாலமான நிர்மலப்பிரதேசங்களில் இருப்பது நலம்.
4. அடுப்புச் சாம்பல்களால் உங்களுடைய உண்ணும் கலங்களைக் கழுவிக் கொள்ளுங்கள்.
5. கைகளை நன்றாகக் கழுவாதவர்களுக்கு ஸந்நிபாத ஜ்வரம் உண்டாவது ஒரு ஆச்சரியமல்ல.
6. ஜனம் நடமாடும் இடங்களில் கோழைமுதலியதை ஒரு பொழுதும் துப்பக்கூடாது.
7. தேஹத்தை நிர்மலமாக வைத்துக்கொண்டால், தேஹபலமும் மானஸிக பலமும் மேன்மையடையும்.
8. மனம் சோர்ந்து விடுவதானது பகைவரின் பீரங்கி முனைகளைவிட அதிக தீமையை விளைவிக்கும்.
9. விஸர்ப்பஜ்வரம் முதலியதை அநேகரிடம் பரவச்செய்யும் ஸாதனங்கள் பேன்களும் ஈக்களுமாம்.
10. ஒழிவு கிடைக்கும்போது உன்னுடைய ஆப்தபந்துக்களுக் கடிதம் எழுதுவதற்கு மறவாதே.

வைத்திய கலாநிதி.

பிங்கள௵ சித்திரை-வைகாசி௴.

## PREVENTION OF TUBERCULOSIS.

### க்ஷயரோகத்தைத் தடுத்தல்.

தேஹ தாதுக்களை க்ஷயிக்கச்செய்யும் இவ்வியாதி நுண்ணுயிர்களால் உற்பத்தியாகின்றது. இந்தியாவில் அநேகமாயிரம் ஜனங்கள் இக்கொடிய வியாதியினால் விசேஷமாய் பீடிக்கப்படுகின்றனர். இவ்வாறு வருந்துபவர்களுடைய தேஹஸ்திதியின் மிகவும் எளிதான தன்மையைச் சீர்படுத்துவதற்கு இக்காலத்திய வைத்திய நிபுணர்கள் ஏதேதோ உபாயங்களைத் தேடி பிரயாஸப்படுவதும், அம்முயற்சிகள் யாவும் பயனற்ற வீண்காரியங்களாய் முடிவதும் பெரும்பான்மையோருக்குத் தெரிந்த விஷயமேயாம். இவ்வியாதி பரவாபலிருக்கச் செய்யப்படும் ஏற்பாடுகளும் அவ்வளவு பெரிய முயற்சிகளுக்குத் தகுந்த பலனைக் கொடுப்பதாகத் தெரியவில்லை. மேனாட்டு வைத்தியர்கள் இவ்வியாதியைத் தடுப்பதற்காக அரை நூற்றாண்டுக்கு மேலாகவே மஹாப் பிரயத்தினங்கள் செய்து, கிருமிசாஸ்திரங்களை யெல்லாம் பலமுறை பரிசோதனைசெய்து பார்த்து வந்து, அதன் மூலமாகத் தோன்றிய யோசனையின்பேரில் ஜனங்களுடைய தேஹத்தில் பிரயோகித்த ஔஷதங்கள் பொதுவாகப் பெரும்பாலும் திருப்தியுண்டுபண்ணியதாக அவ்வைத்தியர்களே சொல்லமுடியாதவர்களா யிருக்கிறார்கள். சுகாதார முறைகளையும் ஆரோக்கிய மார்க்கங்களையும் நிலைநிறுத்த அல்லது அபிவிருத்தி செய்ய இச்சிகித்ஸாக்ரமம் உபயோகமானதென்று நிரூபிக்க முடியாமலேயிருந்து வருகிறது. ஆயுர்வேத நூல்களில் விசேஷமாக வியாதி நிதானங்களைப் பற்றியும் சிகித்ஸா க்ரமங்களைப்பற்றியும் விஷயங்கள் விவரிக்கப்பட்டிருப்பதற்குப் பிறகும், அக்காலத்தில் மிகப் பிரஸித்தி பெற்றிருந்த ஹிபாக்ரிடிஸ் என்னும் கிரீஸ் தேசத்திய வைத்தியனுடைய காலத்திற்குப் பிற்பாடும், அநேகம் வியாதிகள் ஸம்பந்தமாய் வெவ்வேறு வகையான ஆராய்ச்சிகள் ஆயிரக்கணக்காகச் செய்யப்பட்டு அளவற்ற சாஸ்திர தத்துவங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தத்துவ விசேஷங்களுள் 1882-ம் ஆண்டில் ராபர்ட் காச் என்பவர் க்ஷயரோகத்திற்குக் காரணம் ஒருவித நுண்ணுயிர் என்றும், அந்த நுண்ணுயிர் இவ்விதமானது என்றும் பரிசோதித்து நிர்த்தாரணம் செய்ததும் முக்கியமான தத்துவ பரிசோதனையாகும். க்ஷயரோகத்தினால் உலகத்தில் ஜனங்கள் பெரிதும் வருந்துவதை ஸாத்தியமான வரையில் தடுப்பதற்கு காச் என்பவர் பரிசோதனை செய்து விஷய நிர்த்தாரணம் செய்த காலத்திலிருந்தும், லவெரன் என்கிற சாஸ்திர நிபுணர் விஷமஜ்வரத்திற்குக் காரணமான நுண்ணுயிர்களைப் பரீக்ஷித்து அறிந்து அதன் உண்மையை வெளியிட்ட நாள் முதற்கொண்டும், மேனாட்டு வைத்திய முறையில் நூற்றுக்கணக்கான வியாதிகளுடைய தத்துவங்கள் சாஸ்திர பரிசோதகர்களால் நன்கு நிர்த்தாரணம் செய்யப்பட்டு அவ்வைத்தியமே மேன்மையடையத் துவக்கிற்று.

ஆகிலும் க்ஷயரோகம் உலகத்தில் பரவாமல் நின்றபாடில்லை. "இந்தியாவில் ஜனங்கள் மேனாட்டாரைப் போல ஆஹாரங்களை உண்பதற்கும், ஆசாரங்களைச் செய்வதற்கும், நடையுடை பாவனைகளில் மாறுபடுவதற்கும் ஆரம்பித்த பிறகுதான் க்ஷயரோகம் இத்தேசத்தில் வெகு மும்மரமாகப் பரவத்தொடங்கிற்று" என்று லாஹுரிலுள்ள டாக்டர் பாடியா, B. A., M. B., B. C. (Cantab)



என்பவர் ஸமீபத்தில் ஒரு பிரஸங்கத்தில் கூறியிருக்கிறார். "நகரங்களில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் போய் வாஸம் செய்வதில் உண்டான நோக்கமென்ன, மலினமாகவும் வெளிச்சக் குறைவாகவுமுள்ள ஸ்தலங்களில் குடியிருப்பதென்ன, ஆசாரங்களோடு மதுபானம் செய்யும் துர்வழக்கம் அதிகரிப்பதென்ன, ஜனங்களின் ஏழ்மையான நிலைமையென்ன இவை யாவும் க்ஷயரோகத்திற்குத் தூண்டும் காரணங்களாயிருக்கின்றன. இந்தேசத்தில் இந்த ரோகம் அதிகமாகப் பரவியதற்கு, முற்கூறிய தீய வழக்கங்கள் நமது ஜனங்களிடம் அகற்ற முடியாமல் அமைந்திருப்பதே முக்கிய ஹேதுவாகும்" என்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். ச்வாஸாசயக்கழலை (புப்புஸ ஸம்பந்தமான க்ஷய) வியாதியினால் வருந்தியவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அந்த வியாதிக்கு விசேஷமாக வசப்படக்கூடிய தேஹமனோ நிலைமைகளைப் பெற்றிருந்த போதிலும், இவ்வியாதியானது ஒருவனுக்கு ஸம்பவித்தால் அவ்வம்சத்தில் பரம்பரையாக அனேகருக்கு உண்டாகும் பாரம்பரிக ரோகமல்லவென்றும் தெரியவருகிறது. வியாதியின் முகாந்தரங்களையெல்லாம் பரிசீலனைசெய்து பார்த்ததில், மனிதருக்கு உண்டாகும் க்ஷய வியாதியானது குழந்தைப் பருவத்தில் தேஹத்திலுள் எங்கேயாவது கிரந்தியில் (Gland) ஸூக்ஷ்மமாக மறைந்திருந்து, பிறகு வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்குப் பொருத்தமான காலதேசாதிகளுடைய ஸம்பந்தம் போதுமாறு நேர்ந்த ஸமயத்தில் வியாதி பிரபலமாய் தன் சுரூபங்களை வெளிப்படுத்தும். க்ஷயரோக ஸம்பந்தமான நுண்ணுயிர்கள், அவ்வியாதிக்ரஸ்தர்கள் துப்பிவிடும் கோழை முதலியவற்றில் அடங்கியிருப்பதால், அக்கோழை முதலிய திரவக்கழிவுகள் நன்கு உலர்ந்துபோன பிறகு, அவை நுண்மையான தூம்பு தூசுகளோடு கலந்து ஆகாயத்தில் பறந்து, அக்கம் பக்கங்களிலுள்ள மனிதர்கள் ச்வஸிக்கும் மூச்சுக்காற்றோடு அவர்களுடைய தேஹத்தினுள் பிரவேசித்து விடுவதுண்டு. பொவின் ட்யுபெர்கல் (Boveine tubercle) என்னும் ஒருவித க்ஷய வியாதியே ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுடைய மரணத்திற்குக் காரணம் என்று இக்காலத்திய சாஸ்திரநிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். கசாப்புக்காரன்களுக்கும், வியாதிகொண்ட தேஹத்தின் தத்துவங்களைப் பிணிகளால் வருந்தும் பிராணி சரீரங்களை அறுத்துப் பரிசோதனை செய்பவர்களுக்கும், பலவிதமான சர்மங்களை அடிக்கடியும் கையாளுபவருக்கும், க்ஷய வியாதி யுள்ளவர்களுடைய உடைகளைக் கழுவித் தோய்ப்பவருக்கும் சர்மத்தைப்பற்றிய க்ஷயவியாதி உண்டாவது வழக்கம்; க்ஷயரோகமுள்ளவர் கடித்தாலும், அவ்வாறு கடியுண்டவருக்கும் அவ்வியாதி ஸம்பவிக்கலாம்.

ச்வாஸாசயக் கழலையெனப்படும் புப்புஸ ஸம்பந்தமான க்ஷயத்தைத் தடுப்பதற்கு இதர தேசங்களில் அநேகவிதமான முறைகள் கையாளப்படுகின்றன; (1) ஜனங்கள் அடிக்கடியும் வியாதிக்ரஸ்தர்களோடு கூட்டுறவுகள் வைத்துக் கொள்வதைக் குறைத்தல் அல்லது முற்றிலும் நீக்குதல்; ஆரோக்கியத்திற்குக் கெடுதி யுண்டுபண்ணாத வீடுகளில் வஸித்தல்; சுத்தமும் போஷணையைத் தருபவையுமான உணவுகளைப் புஜித்தல்; அநுஷ்டானங்களிலும் ஆசாரங்களிலும் சிறந்த வழிகளை அநுஸரித்து வருதல். (2) ஜனங்களுக்குக் கல்வி கற்பித்தல்; நல்ல ஆரோக்கிய மார்க்கங்களைத் தெரிந்துகொண்டு வாழ்வதற்கு ஜனங்களுக்குக் கல்வியே முக்கிய ஸாதநம் என்பது ஸர்வ ஸம்மதமான விஷயம். (3) வியாதிக்ரஸ்தர்களில் எவரையும் ஆரோக்கிய நிலைமையில் இருப்பவருடைய மத்தியில் இருக்கச்செய்யாமல், வியாதி

க்ரஸ்தர்களை வைத்தியசாலைகளில் தனித் தனியே வஸிக்கச்செய்தல்; இதனால் பிணியாளிகளுக்கும் அதிக ஜன நெருக்கத்தில் இல்லாமல் வியாதி சீக்கிரம் நிவ்ருத்தியாக அல்லது குறைய வழியுண்டு; இப்பிணியாளியின் ஸம்பந்தம் நீங்கியதால், மற்ற ஜனங்களிடம் இவ்வியாதிகள் பரவாமலுமிருக்கும். (4) ஒருவனுக்கு வியாதி ஏதாவது உண்டாயிருக்கக் கூடும் என்கிற ஸந்தேஹம் சிறிதளவு ஏற்பட்ட சீக்கிரத்திலேயே, அவனுடைய தேஹத்தை முற்றிலும் பலவித உபாயங்களாலும் பரீக்ஷித்து, வியாதி நிர்த்தாரணம் செய்து, அதற்குத் தகுந்த பரிஹாரமுறையையும் தாமதமின்றியே நிறைவேற்றுதல்.

பொதுவான வியாதிகளைத் தடுப்பதற்கு ஏற்ற முறைகளையெல்லாம் கண்டிப்பாய் நிறைவேற்றிவந்தால் க்ஷயரோகமும் தேசத்தில் அவ்வளவு அதிகமாகப் பரவாமலிருக்கும். முக்கியமாய் விசேஷ தீமையை விளைவித்து வருவது ச்வாஸாசயக் கழலையேயாம். இது ஏழை ஜனங்களையே அதிகமாக வருத்தி வருகின்றது. தேசத்தில் ஏழை ஜனங்களுக்கு ஸாத்தியமான வரையில் வஸிக்கும் வீடுகளைச் சீர்திருத்தித் தருவதும், கண்டவிடங்களிலும் எச்சிலைத் துப்புவது முதலிய துராசாரங்களைச் செய்யாமல் ஒழிப்பது அவசியமென்பதைப் போதிப்பதும், க்ஷயரோகிகள் வஸித்த வீடுகளைப் பற்றறவே சுத்தி செய்வதும், கசாப்புக்கடைகளை ஊருக்கு வெளியில் வெகுதூரத்தில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்வதும், கறவை மாடுகளையும் பால் கறப்பதையும் சுகாதார முறைகளுக்கு இயன்றவாறு கண்டிப்பான நியமங்களுக்கு உட்படுத்தி தகுந்த அதிகாரிகளைக்கொண்டு அவற்றை மேற்பார்வை பார்ப்பதும், நகரங்களுக்கு வெகு விலக்கான பிரதேசங்களில் சிறந்த நீரும் காற்றோட்டமும் வெளிச்சமுமுள்ளதான வைத்தியசாலைகளில் க்ஷயரோகிகளை வஸிக்கச் செய்வதும், சாக்கடை அல்லது ஜலதாரைகளை வெகு ஒழுங்காய் அமைத்து ஊர்களின் அல்லது நகரங்களின் கழிவு நீர்கள் எங்கும் தங்காதபடி கழுவப்படுமாறு ஏற்பாடுகளைச் செய்வதும், மிகவும் நிர்மலமான குடிநீர் வஸதிகளை வேண்டியவளவு அமைப்பதும் க்ஷயரோகத்தைத் தடுப்பதற்கு ஸாதாரணமான உபாயங்களாகும். சுகாதாரத்திலும் ஆரோக்கிய மார்க்கத்திலும் பொது ஜனங்களுக்கு அறிவைப் புகட்டுவது இக்கொடிய வியாதியை வெல்லுவதற்கு மிகவும் முக்கிய ஸாதகமாகும். சென்னையில், சில சாஸ்திர நிபுணர்களுடைய கொள்கையின்படி இவ்விடத்திற்கு ஒவ்வாத க்ஷயரோக வைத்தியசாலை அல்லது ஆராய்ச்சி சாலையைக் கட்டியமைப்பதற்கான முயற்சியை நிறுத்திக்கொண்டு, அதற்கு உத்தேசித்திருக்கும் இலக்ஷக்கணக்கான திரவியங்களை முற்கூறிய காரியங்களில் எதையாவது சிலவற்றை நிறைவேற்ற உபயோகித்தால் பொதுஜனங்கள் எவ்வளவோ நன்மையடையக்கூடும்.

---

## DETERMINATION OF SEX.

### கர்ப்பத்தில் ஆண்-பெண்கள் உண்டாவதற்கான காரண நிர்ணயம்.

டாக்டர் ஜெ. எஸ். ப்ரீபாரன் என்பவர், சர்ப்பத்தில் ஆண் சிசுவாவது பெண்சிசுவாவது உண்டாவதற்குக் காரணம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். அவருடைய ஸித்தாந்தத்திற்கு ஆதாரமாக 1,000 கேஸுகளில் பரிசோதனைகள்செய்து பார்த்து, கடைசியில் தத்துவத்தை வெளிப்படுத்தினார். இந்த 1,000 கேஸுகளில் நூற்றுக்கு 98 வீதம் வெகு நுட்பமான பரீக்ஷைகள் செய்யப்பட்டன. ஸ்திரீக்கு மாதவிடாய் உண்டான தேதிமுதல் மற்றொரு மாதவிடாய் உண்டாக வேண்டிய நாள் வரையிலுள்ள தினங்களின் மொத்தத்தை இரண்டு சரிபாதியாகப் பங்கிட்டு, அவற்றுள் முதற்பாதி நாட்களில் எந்த தினத்தில் கர்ப்பம் ஸம்பவித்ததென்பதும், இரண்டாவது பாதி நாட்களில் எந்த தினத்தில் கர்ப்பதாரணம் நேரிட்டதென்பதும் குறித்துக் கொள்ளப்பட்டது. மாதவிடாய் உண்டான தேதி முதல் 15 நாட்கள் வரையில், அதாவது மாதவிடாயான முதற்பகுதியைச்சேர்ந்த நாட்களில் ஆர்த்தவ பீஜங்கள் (ovum) பெண் சிசுவுக்கு ஸம்பந்தப்பட்டவையாகவும், இரண்டாவது பகுதியான நாட்களில் முக்கியமாய் மற்றொரு ருதுகாலத்திற்கு முந்திய 10 நாட்களில் புருஷப் பிரஜைக்கு ஸம்பந்தப்பட்டவையாகவும் உண்டாவது வழக்கம் என்று அவருடைய பரிசோதனையினால் தெரிய வந்தது. சுக்ரமும் ஆர்த்தவ பீஜமும் எந்த தினத்தில் ஒன்றாகக் கலந்துவிடுமோ அந்த நிலைமே ஸ்திரீ புருஷப்பிரஜைகளின் நிர்ணயம் செய்வதற்கும் அவசியமானதாம். ஸ்திரீகளுடைய ஆர்த்தவ பீஜமே ஸ்திரீப் பிரஜைகளாவது புருஷப் பிரஜைகளாவது சுதந்தரமாகக் காரணமாகும்; இது விஷயத்தில் (ஆண் பெண் உற்பத்தி விஷயத்தில்) புருஷருடைய சுக்ரதாதுவின் குணாகுணங்கள் ஒருவித ஸாதக பாதகங்களையும் உண்டுபண்ணக் கூடியவை யல்லவென்பது அவ்வாராய்ச்சிக் காரருடைய ஸித்தாந்தமாகும். ஆர்த்தவபீஜங்கள், ருதுவான முதற்பகுதி நாட்களுக்கு ஸம்மந்தப்பட்டவையானால் (13 நாட்களுக்கு முற்பட்டவையானால்) அவை பெண் சிசுக்களையும், ருதுகாலத்தின் பிற்பகுதி நாட்களைச் சேர்ந்தவையானால் ஆண் சிசுக்களையும் உண்டாக்கக் கூடியவை. அல்லது ருதுவான தினத்திற்குப் பிறகு 10 அல்லது 12 நாட்கள் வரையில் பெண் சிசு உண்டாவதற்கும், மற்றொரு மாதவிடாய் உண்டாகக்கூடிய தினத்திற்கு முந்திய 10 நாட்களும் வரிசையாக ஆண் சிசு உண்டாவதற்கும் தகுந்தவையென்று நிச்சயிக்கப்படுகிறது. இவ்விஷயம் மெடிகல் ரிகார்ட் (Medical Record) என்னும் வைத்தியப்பத்திரிகையில் வெளியாயிருக்கிறது.



---

## FIRST AID IN ACCIDENTS.

### அபாயங்களில் பிரதம உதவி.

அஸ்த்திப்ரம்சம்:—இது ஆங்கிலத்தில் டிஸ்லொகேஷன் (Dislocation) என்று கூறப்படும். எலும்பு நெகிழ்ச்சியென்றும் இதைக் கூறலாம். சில எலும்புகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு எலும்புப் பூட்டுகள் அல்லது ஸந்திகள் என்று வழங்கப்படும் பிரதேசங்களில் அவற்றிற்கு இயற்கையாய் அமைந்துள்ள இணைப்பு தளர்ச்சியுற்று, அவ்வெலும்பு முனைகள் இடம் மாறி விலகிப்போவதே 'அஸ்த்திப்ரம்சம்' அல்லது எலும்புநெகிழ்ச்சி யென்று வழங்கப்படும். ஸாதாரணமாய் வெளியிலிருந்து ஏதாவது தாக்குதல் உண்டாவதாலே அஸ்த்திப்ரம்சம் ஸம்பவிப்பது வழக்கம்; ஆனால் எப்போதா சில ஸமயத்தில் எலும்புப் பூட்டுகளில் வியாதியுண்டானால் அஸ்த்தகளின் இணைப்பு விட்டுப் போய் அஸ்த்திப்ரம்சம் அரிதாய் ஏற்படுவது உண்டு. அஸ்த்திகள் ஸந்திகளிலிருந்து நெகிழ்வது ஸம்பூர்ணமாய் நேரிட்டாலும் நேரிடலாம், ஒரு பகுதியில் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஸம்பூர்ணமான அஸ்த்திப்ரம்சத்தில் எலும்பானது இணைக்கப்பட்ட ஸ்தானத்திலிருந்து முற்றிலும் வெளிவந்திருக்கும்; அஸம்பூர்ணமாக (ஒரு பகுதியில்) ஏற்பட்ட ப்ரம்சத்தில், எலும்பு இணைப்பிலிருந்து கொஞ்சம் நெகிழ்ந்ததாக மாத்திரம் காணப்படுமேயன்றி, முற்றிலும் அந்த ஸ்தானத்தை விட்டு வெளியில் வந்திருக்காது. இரணமாவது சர்மம் முதலியவற்றில் வேறுவித சிதைவாவது உண்டாகாமலிருந்தால், அது 'ஸாதாரண அஸ்த்திப்ரம்சம்' (Simple dislocation) எனப்படும்; இரணம் அல்லது சிதைவு ஏதாவது உண்டாயிருந்தால் அது 'ஸந்நிபாதாஸ்த்தி ப்ரம்சம்' (Compound dislocation) என்று சொல்லப்படும்; இவ்விதம் சிதைவு நேரிடவே, அதன் வழியாக வெளியிலிருந்து

வாயு ஸந்தியினுள் பிரவேசித்துவிடக் கூடும். அஸ்திப்ரம்சங்களில் ஸந்திகளின் பெயர்களைக் கொண்டோ, எலும்புகளின் பெயர்களைக் கொண்டோ—எது முக்கியமாகக் காணப்படுகிறதோ அதன்பெயரால்—அஸ்திப்ரம்சத்தின் பெயரும் விவஹரிக்கப்படும்.

மனித தேஹத்தில் பெரும்பாலும் எல்லா எலும்புகளுமே அபிகாதாதிகளால் இடம் விட்டுப் பெயர்ந்துவிடக் கூடியவையேயாம்; ஆகிலும் சில ஸந்திகள் மற்றவைகளைவிட அம்ஸஸந்தியென்னும் தோள் எலும்புப் பூட்டு, வங்க்ஷண ஸந்தியென்னும் இடுப்புப் பூட்டு, கூர்ப்பர ஸந்தியென்னும் முழங்கைப் பூட்டு முதலியவை அடிக்கடியும் அஸ்திப்ரம்சத்திற்கு உள்ளாகின்றன. அதிக தாராளமாய் உழன்றசையக் கூடிய ஸந்திகள் யாவும் பொதுவாக பூட்டு நெகிழ்ச்சிக்குப் பாத்திரமாகின்றன.

எல்லாக் கேஸுகளிலுமே ஸந்திப்ரம்சம் வெகு எளிதில் கண்டறியக்கூடியது; ஆனால் சில பிரதேசங்களில் அதைக் கண்டுபிடிப்பது கஷ்ட ஸாத்தியமாயிருக்கும். தேஹத்தில் எவ்விடத்தில் அஸ்திப்ரம்சம் உண்டாயிற்றோ, அவ்விடத்தில் அந்த அவயவம் அசைக்க முடியாமல் தனது சக்தியை இழந்துவிடும்; அந்த ஸந்தியில் அதிகமாகவோ குறைவாகவோ வீக்கமும் வலியும் உண்டாயிருக்கும்; அந்த பாகத்தை அசைத்துக்கொடுத்தால் அச்சமயத்தில் வீக்கமும் வலியும் அதிகரிக்கும். அம்மனிதன் வியாதிக்ரஸ்தனைப் போல் தோற்றுவன்; மயக்கமுண்டாகலாம்; அவ்விடம் மரத்துப்போயிருப்பது போன்ற உணர்ச்சியுண்டாகும்.

அஸ்திப்ரம்சங்கள் ஸம்பவித்த பிறகு, அடுத்தாற்போல் கூடுமான சீக்கிரத்தில் அவற்றைக் குறைப்பதற்கு அல்லது மேன்மேலும் அதிக கெடுதிகள் உண்டாகாமலிருப்பதற்குத் தகுந்த முயற்சி உடனே செய்யவேண்டும். இதற்குப் பரிஹாரம் செய்வதற்கு எவ்வளவு தாமதம் நேரிடுகிறதோ அவ்வளவும் அது சஸ்திரப்ரயோகம் முதலிய கஷ்டங்களுக்கு அதிக இடங்கொடுப்பதாய் விடும். அபாயம் நேர்ந்ததனால் அப்பொழுது ஸம்பவித்த நரம்பு முதலியவற்றின் அதிர்ச்சியிலிருந்தும் மயக்கத்திலிருந்தும் சீக்கிரத்தில் அம்மனிதன் தெளிவடைவான்; அவ்விடத்திய தசைநார்கள், முதலில் அதிர்ச்சியின் வேகத்தினால் தளர்வுற்று, அப்பால் மறுபடியும் பழைய நிலைமைக்கு வந்து விறைத்துக்கொண்டு, எலும்பை சரியான நிலைமைக்குக் கொண்டுவருவதில் அதிக கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியவைகளாய் விடும். இடம் விட்டுப் பெயர்ந்த எலும்பை வலிவுடன் பிடித்து கைசலிக்காமல் ஜடிதியில் இழுத்து, அதன் சிரம் அமையவேண்டிய ஸ்தானத்தில் தள்ளி, தசைநார்கள் சற்றுத் தளர்வடைந்து அமைதியடையும் வரையில் சிறிது நேரம் அப்படியே பிடித்திருக்கவேண்டும். நழுவிய எலும்பை அதன் ஸ்தானத்தில் தள்ளுவதற்குக் கைவிசைதான் அதிகம் தேவை. வேண்டியவளவு விசையுடன் தள்ள முடியாவிட்டால் வாரங்கம் என்கிற பாரச்சாம்பிகளை (Pulleys)க் கொண்டு இழுத்துத் தள்ளலாம். இவ்வாறு தள்ளப்பட்டு, எலும்பு அதன் இயற்கை ஸ்தானத்தில் சேர்ந்துவிட்டதாகத் தெரிந்ததும், அந்த அவயவம் சிலநாள் வரையில் அசையாமல் அமைதியாயிருக்கும்படி பந்தனம் செய்து வைப்பது மிகவும் அவசியம்; இல்லாவிடில் பூட்டில் எலும்பு முற்றிலும் நன்றாக அமையாமல், மறுபடி அது இடம் விட்டுப் பெயர்ந்துவிடக்கூடும். அஸ்திப்ரம்சம் சேர்ந்ததும் அதை சரியான ஸ்திதிக்குக் கொண்டுவராமல் விட்டுவிட்டால், நழுவிய எலும்பின் தலை எவ்விடத்தில் இருக்கின்றதோ அவ்விடத்திலேயே அதற்குக் காலக்கிரமத்தில் பதிவுக்கேற்ற புதிய சார்பிடம் ஏற்பட்டு, இவ்வெலும்பின் சிரம் அமைந்திருந்த பழைய குழியும் பலவித தாதுக்களால் தூர்க்கப்பட்டுவிடும்.

அஸ்திப்ரம்சம் ஸங்கிபாத ஸம்பந்தமாக அல்லது பலவாறு உடைந்து திரிபடைந்திருந்தால், அதனால் அபாயம் நேரிடுவதும், சில ஸமயம் எலும்பையே அறுத்து எறிந்து விடும்படி ஸம்பவிப்பதும் உண்டு. இடம்விட்டு நழுவிய எலும்பை மீண்டும் அதே ஸ்தானத்தில் தள்ளாமல் வேறோர் இடத்தில் இணைத்திருப்பதாகத் தெரிந்தால், உடனே தாமதம் செய்யாமல் அதை சரியான இடத்தில் தள்ளி பந்தனமிட வேண்டும்.



# DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### வாதுமை.

இந்த மரம், மேல் ஆசியாவில் ஆதியில் உற்பத்தியாய் வந்தது. இப்பொழுது பஞ்சாப் பிராந்தங்களில் இது பயிரிடப்படுகிறது; காச்மீரத்திலும், ஆப்கனிஸ்தானத்திலும் விசேஷமாய் வளர்க்கப்பட்டு வருகிறது. இதில் இரண்டுவகைகளுண்டு; ஒன்று இனிய சுவையுடையது, மற்றொன்று கைப்பு; ஆனால் விருக்ஷசாஸ்திர தத்துவப்படி இவ்விரண்டுக்கும் வித்தியாஸம் காணப்படுவதில்லை.

மதுரரஸமுள்ள வாதுமை மிகவும் ஸ்நிக்த குணமுள்ளதும், தேஹத்தைப் போஷிக்கக் கூடிய குணமுடையதுமாயிருக்கும். இதைச் சேர்த்து அடியில் குறிப்பிடப்படுமாறு தயார் செய்யப்படும் சூர்ணத்தை பலஹீனங்களில் கொடுத்துவரலாம்.

ஓடு நீக்கிய வாதுமைப் பருப்பு எட்டு பலம், சுத்தி செய்த சர்க்கரை 4-பலம், உயர்ந்த வேலம் பிசின் ஒரு பலம் இவற்றைத் தனித்தனியே சூர்ணம் செய்து, அப்பால் ஒன்றாகக் கலந்துவிடவும். இந்த சூர்ணத்தை வேளைக்கு இரண்டுதோலா வீதம் தினம் ஒன்றுக்கு மூன்று வேளை வீதம் உட்கொள்ளவும். வாதுமையிலிருந்து எடுக்கப்படும் தைலம் மிகவும் நறுமணம் வீசும். இதன் தைலம் மேஹரோகங்களில் நல்ல பயன் தரக்கூடியது என்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். வாதுமையின் மேல் ஓடுகளை எரித்துச் சாம்பராகச் செய்து, சிறிது உப்புக்கற்களையும் கலந்து இடித்து, வஸ்திரகாளிதம் செய்து சிலவிதமான பல்வலிகளைப் போக்க தந்த சூர்ணமாய் உபயோகிக்கலாம். கைப்பான வாதுமையை ஆமவாதம் என்னும் கீல்வாயுவில் மேலுக்குப் பற்றுப்போடுவதற்கு வடதேசங்களில் உபயோகிப்பது வழக்கம்.

---

### குடஜாவலேஹம்.

குடஜம் என்பது கொடிசப்பாலை. கொடிசப்பாலையின் பட்டை முதலியவற்றால் பக்குவம் செய்யப்படும் லேஹ்யம் குடஜாவலேஹம் எனப்படுகிறது. அதைப் பக்குவம் செய்யுமுறை பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| கொடிசப்பாலை வேரின் பட்டை | பலம் | 100 |
| சுத்த ஜலம் | சேர் | 64 |

இவற்றை எட்டில் ஒரு பங்காகக் காய்ச்சி எடுத்து வடிக்கட்டிக்கொண்டு, அடியில் வரும் சரக்குகளையும் சேர்க்கவும்.

| | | |
|---|---|---|
| இந்துப்பு | பலம் | 1 |
| சறியுப்பு | ,, | 2 |
| காட்டாத்திப்பூ | ,, | 8 |
| சார்ப்போகரசி | ,, | 8 |
| ஓமம் | ,, | 2 |

மேற்குறிப்பிட்ட ஐந்து சரக்குகளையும் சூர்ணம் செய்து வைத்துக்கொள்ளவும். வடிக்கட்டிய கஷாயத்தில் 8-பலம் கற்கண்டைப் பொடித்துச் சேர்த்து, பாகுபதமாய் வரும் வரையில் காய்ச்சி, இச்சூர்ணத்தையும் சேர்த்துக் கிளறி, அதில் 16-பலம் தேன் சேர்த்துக் கலந்து, ஒரு பீங்கான் பாத்திரத்தில் எடுத்துவைத்துக் கொள்ளவும்.

அஜீர்ணாதிகளால் உண்டாகும் அதிஸாரத்திலும், சீதபேதியிலும், இரத்தப் பெருக்குடன் கூடிய அர்சஸ் என்கிற மூலரோகத்திலும் இந்த லேஹ்யம் உபயோகிக்கத் தகுந்தது. 1 அல்லது 2 தோலா அளவில் தினத்திற்கு 3-வேளை உபயோகிக்கலாம். குழந்தைகளுக்கு $\frac{1}{2}$ தோலா வீதம் கொடுக்கலாம்.

---

### அக்னிமுக சூர்ணம்.

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | தோலா | 2 |
| வசம்பு | ,, | 2 |
| திப்பிலி | ,, | 6 |
| சுக்கு | ,, | 8 |
| ஓமம் | ,, | 8 |
| கடுக்காய் | ,, | 12 |
| சித்திரமூலம் | ,, | 14 |
| கோஷ்டம் | ,, | 16 |

இவற்றைப் பொடித்து வஸ்திரகாளிதம் செய்து வைத்துக்கொள்ளவும்.

நீர்க்கோவையிலும், அஜீர்ணத்திலும், வயிற்றுப் பொருமலிலும் இந்த சூர்ணத்தை வேளைக்கு ½-தோலா வீதம் தினத்திற்கு மூன்று வேளை உபயோகிக்கலாம்.

### விஷம ஜ்வரத்திற்கு ஔஷதம்.

மேனாட்டு வைத்திய முறையில் விஷம ஜ்வரத்திற்குக் கொய்னாவைத் தவிர இதர ஔஷதம் ஒன்றும் பயனில்லையென்பது இது வரையில் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் கொய்னாவினால் இரத்தத்திலுள்ள சோணித பரமாணுக்கள் விசேஷமாய் கெட்டுப் போவதாகத் தெரியவருகிறது. மேலும் கொய்னா சிலகாலம் காதடைப்பையும் தலையில் பாரம் அல்லது திமிர்ப்பையும் உண்டாக்குகின்றது. கொய்னாவை உபயோகித்து பலருக்கு விஷம ஜ்வரம் நிவ்ருத்தியாகிறதுமில்லை. கொய்னாவில் இக்குறைகள் இருப்பதைக் கவனித்து, டாக்டர் ஹொரேஸ் வில்லிஸ் என்பவர் வெகு நாட்கள் பரிசோதனை செய்து ஒரு புதிய ஔஷத முறை இதற்காகக் கண்டு பிடித்திருப்பதாய் தினசரிப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விஷயம் பலருக்குத் தெரிந்திருக்கும். உருது பாஷையிலுள்ள ஒரு யவன வைத்திய நூலைப் படித்து, அதில் கூறப்பட்டிருந்த ஔஷத முறை ஒன்றை தன்னுடைய 23 பிணியாளிகளுக்குக் கொடுத்ததாகவும், அதனால் விஷம ஜ்வரத்தினால் வருந்திய அப்பிணியாளிகள் அனைவரும் ஸ்வஸ்தமானதாகவும் அவர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இது ஒரு கஷாய முறையாம். இது எவ்வித சரக்குகளால் எவ்வாறு தயார் செய்யப்படுகிறதென்கிற விஷயத்தை நாம் நன்கு விசாரித்துப் பிறகு எழுதுவோம்.

# CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினு 69. தலைமயிருக்குச் சாயமிடுதல்.

"ஐயா,

என் குமாரன் 15 வயதுள்ளவன். அவனுக்கு மூன்று வருஷங்களுக்கு முன்பு தலைமயிர் நரைக்கத் தொடங்கி, இப்பொழுது தலையில் கொஞ்சம் ஏறக்குறைய முக்கால்வாசி மயிர்களும் நரைத்துவிட்டன. இதற்கு ஏதாவது பரிஹாரம் உண்டா? பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ள "ஹேர்டை" என்கிற மயிர்களைக் கறுப்பாகச் செய்யும் ஔஷதம் ஏதாவது வாங்கி உபயோகிக்கலாம் என்று யோசித்தேன். ஆகிலும் தங்களைப்போன்ற வைத்திய சாஸ்திர வல்லோருடைய அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டு, தாங்கள் சிபார்சு செய்தால் அதன் பிறகு அவ்விதமான மருந்துகளை வாங்கி உபயோகிப்பது நலம் என்று நிச்சயித்து இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுத நேரிட்டது. தயவுசெய்து பதில் கடிதம் மூலமாகவோ, கலாநிதியின் மூலமாகவோ கூடிய சீக்கிரத்தில் அறிவித்தீர்களானால் மிகவும் நன்றி பாராட்டுவேனுக."

M. தியாகராஜ முதலியார்.

விடை:—நரைத்துள்ள தலைமயிர்களை மீண்டும் முற்றிலும் கறுநிறமாகச் செய்ய வேண்டுமானல், அவற்றிற்குச் சாயமிடுவது ஒன்றுதான் பரிஹார முறையாகும்; ஆனல் நாங்கள் அவ்விதம் செய்யக் கூடாதென்று காம வற்புறுத்திக் கூறுவோம். தங்கள் குமாரனுடைய தலைமயிர் தற்காலம் எவ்விதமான நிறமுடையதாயிருந்தாலும், அந்த நிறமே முகப் பொலிவுக்குப் போதுமானது என்றும், இதரமான எந்த நிறமும் அவனுடைய முகத்திற்குப் பொருத்தமாயிராது என்றும் தீர்மானித்துக் கொள்வதுதான் உத்தம முறையாகும். நமக்கு இயற்கையின் செயலை அநுஸரித்துத் தலைமயிர்கள் கறுப்பாக இருந்தாலும், வெண்மையாயானலும், செம்பட்டையாயிருந்தாலும் அவ்விதமான எந்த நிறத்தையும் நாம் அழகாகவே கருதவேண்டுமே யன்றி, வேறுவிதமான நிறத்தை உண்டுபண்ணிக் கொள்வது தரமல்ல. மேலும், மயிர்களுக்குச் சாயமிடுவதாலேயே, அது சுபாவமான கறுப்பென்று ஒருவரையும் பிரமிக்கச் செய்துவிட முடியாது; அநேக நாட்கள் வரையில் முகத்தின் இயற்கைப் பொலிவு மலினமாய் விட்டதாகவே நன்றாகப் புலப்படும். நரைத்த மயிர்களுக்கு மிருதுத் தன்மை அதிகமாயுண்டு. நரைத்த மயிர்கள் பார்வைக்கு வெகு ரம்யமாகத் தோற்றுதபோதிலும், சாயமிடுவதால் உண்டாகும் தோற்றம் அதிலும் மிக்க விகாரமாகவே இருக்கும் என்பதை மறவாதீர்கள். அப்படி அவசியமாகத் தோற்றினல், "பிருங்காமலகை தைலம்" என்கிற ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த தைலத்தை உபயோகித்துவந்தால், ஒருவிதத்தி லில்லாவிட்டால் மற்றொரு விதத்திலாவது ஏதேனும் குணமுண்டாகும்.—ப-ர்.

---

### வினு-70. தூமபானம் செய்தல்.

"ஐயா,

தாங்கள் என்மீது தயவுசெய்து நான் விரும்புகிற செய்திக்கு விடையளிக்க வேண்டும் என்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்:— நான் கொஞ்சநாட்களாய் ஸிகார்ஸ் என்கிற பெரிய சுருட்டுகளைப் புகைபிடிப்பது வழக்கம். அதில் எனக்கு பலமான விருப்பம் உண்டாய்விட்டது. "வைத்தியகலாநிதியில்" டாக்டர் அகஸ்திய சர்மாவில் எழுதப்பட்டு வரும் "பழக்கத்தின் பயன்" என்கிற விஷயங்களைக் கவனித்து வந்ததில், எனது பழக்கம் துரப்யாஸம் என்று நிச்சயித்து, அதை விட்டுவிட இரண்டொரு ஸமயம் முயற்சித்தேன். தினத்திற்கு மூன்று தட்வையாவது புகையிலைச் சுருட்டு உபயோகிக்காவிட்டால், எனக்குப் பித்தம் அதிகரித்து, தலைச்சுற்றல் மாதிரி உண்டாகிறது. பெரிய சுருட்டுக்குப் பதிலாகச் சிறிய சுருட்டுகள் (ஸிகரெட்டுகள்) உபயோகித்தால் அவ்வளவு கஷ்டம் தெரிகிறதில்லை. ஸிகரெட்டை உபயோகிப்பதும் ஸிகாரைப்போலவே அவ்வளவு தீங்கு உண்டுபண்ணுமா?

V. J. N.

விடை:—ஸிகார் என்கிற பெரிய சுருட்டுகளையோ, ஸிகரெட் என்னும் சிறிய சுருட்டுகளையோ எதை உபயோகித்தாலும் அது துரப்யாஸமேயாகும். சுருட்டுக் குடிப்பதை விட்டால் பித்தம் அதிகரிப்பதாகச் சொல்லுகிறீர்கள்; அது முற்றிலும் தவறுதலான எண்ணம். சுருட்டுக் குடிப்பதாலேயே பித்தம் அதிகரித்து விடுகிறது. பெரிய சுருட்டுக்கும் ஸிகரெட்டுக்கும் குணத்தில் வித்தியாஸம் அவ்வளவு அதிகமானதல்ல. துர்வழக்கத்தை விடுவதென்றால் அவை அனைத்தையுமே பற்றற ஒழிக்க வேண்டும். புகையிலை யில்லாமல் வேறு சில சரக்குகளைச் சேர்த்து சிறிய சுருட்டுகளை (ஸிகரெட்ஸ்) ச் செய்வதுண்டு; அவை பெரிய சுருட்டுகளினும் (ஸிகார்ஸ்) இன்னும் அதிகமாகக் கேடு விளைவிக்கக் கூடியவையாம். இவ்வித வஸ்துக்களிலிருந்து வரும் தூமத்தை உறிஞ்சுவதால் காலக்கிரமத்தில் இருதயத்திற்கும், நரம்பு மண்டலத்திற்கும், தொண்டைக்கும், கண்களுக்கும் கோளாறுகள் ஸம்பவிக்கும். டாக்டர் அகஸ்திய சர்மா அவர்களால் எழுதப்பட்டு இவ்வருஷத்திய முதல் சஞ்சிகையிலிருந்து ஐந்தாவது ஸஞ்சிகை வரையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பழக்கத்தின்பயன் என்னும் சிலாக்கியமான வியாஸங்களைக் கவனத்துடன் மற்றொரு முறை படிப்பீர்களானல், இவ்வித ஸந்தேஹத்திற்கு இடமேயிராது.—ப-ர்.



# NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### மலபந்தத்திற்கு உஷ்ணஜலம்.

அநேகருக்கு குதமார்க்கத்தின் பித்திகைகளை ஆச்ரயித்த இரத்தஸ்ரோதஸ்ஸுகள் ஸங்கோசமடைவதால், அன்றன்றைக்கு மலம் நன்றாகக் கழியாமல் மலபந்தம் ஸம்பவிப்பது ஸாதாரண வழக்கம், இரவில் படுக்கும்போது, ஒரு கோப்பை வெந்நீரைக் குடித்தால் குதமார்க்கத்து ஸ்ரோதஸ்ஸுகள் சுருக்கமடைவது கிரமமாகக் குறைந்து வரும். டாக்டர் H. ஸிப்பெர்ட் என்பவர் இது ஸம்பந்தமாக வரைந்துள்ள வியாஸத்தில், மலபந்தமுள்ளவன், இரவில் வெந்நீரை உட்கொள்வதோடு மறுபடி படுக்கையிலிருந்து எழுந்திருந்த பிறகு, மூத்திரப்பை என்கிற வஸ்தியானது முற்றிலும் நிரைந்து கட்டாயமாய் மூத்திர விஸர்க்கம் செய்யவேண்டிய அவ்வளவு நிர்ப்பந்தமான நிலைமை வருமளவும் சிறுநீரை அடக்கியிருந்து, அப்பால் அதை விஸர்க்கம் செய்தால், அதற்கு அடுத்தாற் போல மலமும் வெளிப்படுவது எளிதாகும்; ஏனெனில், அவ்விதம் முற்றிலும் விம்மிப்போன மூத்திரவஸ்தியானது மலாசயத்தையும் சுறுசுறுப்படையும்படி தூண்டக் கூடியதாயிருக்கிறது; வெந்நீரை உட்கொள்வதால், அந்த ஜலமே நேரில் ஒருவாறு மலாசயத்தை மெதுப்படுத்தி, மலத்தையும் இளக்கி மலம் வெளிப்படுவதற்கு அநுகூலமாயிருப்பதோடு, சிறுநீரையும் தாராளமாக ஸ்ரவிக்கச் செய்து, அதன் மூலமாய் மூத்திரவஸ்தியையும் விம்மும்படி பெரிதாக்கி அருகிலுள்ள மலாசயத்தை அழுத்தி மலத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாகின்றது." என்கிறார்:—(Journal of American Medicine.)

---

### கைகளிலுள்ள இரேகைகளின் உபயோகம் என்ன?

கைகளிலும், விரல்களிலும், உள்ளங்கால்களிலும் பலவகையான கோடுகள் ஏற்பட்டிருப்பதற்கு இக்காலத்தியசாஸ்திரஞ்ஞர்கள் ஏதேதோ காரணங்களையும் உபயோகங்களையும் கூறிவருகின்றனர். கைகளையும், பாதங்களையும், விரல்களையும் மடிக்கும்போது அவற்றின் சர்மங்கள் சிதைவுறுமல் எளிதில் மடிவதற்காக இந்த இரேகைகள் அமைந்திருக்கின்றன வென்று சில வித்தாந்தாபாஸம் உண்டு. இவ்விதமான கோடுகள் மனிதருக்கு மாத்திரமல்ல, குரங்குகளுக்கும் வாலில்லாக் குரங்குக்களுக்குங்கூட அவற்றின் உள்ளங்கால்களிலும் உள்ளங்கைகளிலும் இக்கோடுகள் காணப்படுகின்றன. ஆகையினல் மனிதருடைய பாக்கியங்களையும் துர்ப்பாக்கியங்களையும் குறிப்பிடுவதற்காக இரேகைகள் கைகால்களில் அமைந்திருக்கின்றன வென்று வழங்குவதற்குப் பொருளில்லை யென்றே சொல்லவேண்டியிருக்கிறது, அமெரிக்காவிலுள்ள ஒபோஸம் என்கிற மிருகத்திற்கும், முள்ளம் பன்றிக்கும், ஆஸ்ட்ரேலியாவிலுள்ள பாலெஞ்ஜெர்ஸ் என்னும் மிருகங்களுக்கும், தென்னுப்பிரிக்காக்குரங்குகளுக்கும் வால்களில் இதேமாதிரியான இரேகைகள் இருக்கின்றன. இதன் தத்துவம் பின்வருமாறு:—இரேகைகளின் விளிம்புகளிலெல்லாம் ஸ்வேதக்கிரந்தங்களின் (Sweat Glands) முகத்வாரங்கள் நெடுக அமைந்திருக்கின்றன. நெடுக ஏற்பட்டிருக்கும் மிகவும் ஸூக்ஷ்மமான இந்த முகத்வாரங்களுக்கு இடையிலுள்ள வாய்க்கால்களைப் போன்ற இரேகைகளின் மூலமாய் வியர்வையின் ஈரம் சிறிதளவு வெளிப்பட்டு எப்பொழுதும் கைகால்களை கொஞ்சம் பசையுள்ளவைகளாகவே வைத்திருக்கின்றது; இதனல் வஸ்துக்களைக் கிரஹிப்பதற்கு ஸௌகரியம் உண்டாகிறது. காகிதங்களை எண்ணியெடுப்பவர் கைகளை ஈரமாக்கிக்கொள்வது வழக்கம்; ஆனல் எந்த வஸ்துக்களைப்பிடிப்பதற்கும் கைகளில் ஈரம்பசை எப்பொழுதுமே அவசியமாகையால், இயற்கையமைப்பு இங்ஙனம் ஏற்பட்டிருக்கிறது.

---

### உணவுகளில் எவ்விதத்திலும் எச்சரிக்கை தேவை.

மிஸ்டர் ப்ளெட்செர் என்கிற சுகாதார சாஸ்திரஞ்ஞர் லண்டனில் ஒரு நண்பருக்கு அடியில் வருமாறு எழுதுகிறார்:—"இங்கிலாந்தில் யுத்தம் காரணமாக ஆஹாரக்குறைவு அனைவருக்கும் நேரிட்டு விடுமே யென்பதில் எனக்குச் சிறிதும் கவலையில்லை. இதெல்லாம் நன்மைக்காகவே ஸம்பவிக்கின்றது. உணவுப் பொருட்களுக்குக் குறைவு நேரிடுவதானது, ஜனங்கள் மிதமாக உண்ணவேண்டும் என்பதையும், சிக்கனமாகச் செலவிட்டுப் பிழைப்பதே தன்னுடையவும் உலகத்தினுடையவும் புரோவிருத்திக்கு அடிப்படையாகும் என்பதையும் போதிக்கக் கூடியதாயிருக்கிறது. இதுவரையிலும் உண்ணக்கூடிய அளவு இவ்வளவுதான் என்பதையும், உண்ணப்படுகிற உணவுப்

பொருட்களின் அருமை இப்படிப்பட்டதென்பதையும் கவனிக்காமலே மனம்போனபடியெல்லாம் செலவுசெய்து உண்டும் குடித்தும் கொழுத்துத் திரிந்தவருக்கு அனைத்திலும் மிதமாயிருக்க வேண்டுமென்று ஓர் நிர்ப்பந்தம் ஏற்படுவதற்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையே போதனாசிரியன் எனத்தகுந்தது. இரத்தக்கொதிப்பும், கொழுப்பின் அதிகரிப்பும் மேன்மேலும் உண்டாகும்படி வீணில் குடிப்பதற்கு அநேகவிதமான பானவகைகளும் உண்பதிற்கு உணவுப்பொருட்களும் வெகு தாராளமாகக் கிடைக்கக் கிடைக்க, ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் காப்பதற்கு ஒருசிறிதும் நமது ஜனங்களில் பெரும்பாலோருக்கு யோசனையே இல்லாமற் போய்விட்டது. கலத்தில் மிதமான உணவுகளையே யிட்டு அதில் சிறிதும் வீணுக்கு எறியாதபடி முழுமையையும் புஜித்து உடலையும் உடைமையையும் உற்றாரையும் காப்பதற்கு ஏற்ற நிபந்தனைகள் அதிகார வர்க்கத்தினால் ஏற்படுத்தப்படுவது மிகவும் இன்றியமையாத விஷயம்:—The Doctor.

---

### மாம்ஸாஹார விலக்கு.

சாகாஹாரமுண்பது (Vegetarianism) துரிதமாய் மேம்பாடு அடைந்து வருகின்றது. இங்கிலாந்தில் இப்பொழுது முக்கியமான போஜன சாலைகளிலும் (Hotels), சிற்றுண்டிச் சாலைகளிலும் (Restaurants), உல்லாஸ மண்டபங்களிலும் தட்டுகளில் சாகாஹாரங்களை மட்டும் இடும் நல்லவழக்கம் நாளுக்குநாள் மிகவும் அதிகரித்து வருகிறது. இறைச்சியுண்பது உயிருடன் ஜீவிப்பதற்கும் சுகமாக வாழ்வதற்கும் அவசியமானது என்று முன்னால் ஜனங்கள் அபிப்பிராயப்பட்டது போல, இப்பொழுது அதை அவசியமானதென்று அபிப்பிராயப்படுவதில்லை. உடம்பில் தாது போஷணைக்கு சாகாஹாரம் ஒன்றே போதுமானதென்று அனுபவத்திலும் பரீக்ஷிக்கப்பட்டு விஷயம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பரிசோதனைகளால் தெரியவந்தது யாதெனில்—மாம்ஸத்தைக் குறைவாக உபயோகிப்பது நலம்; அதை முற்றிலும் விலக்கி சாகாஹாரத்தை மட்டும் புஜிப்பது அனைத்திலும் சிலாக்கியம் என்பதேயாம். இறைச்சிக்குப்பதிலாக தாராளமாய் கனிவர்க்கங்களை போஜனசாலை முதலியவற்றில் ஸப்ளை செய்வது மிகவும் விரும்பத்தக்கது.-Good Health.

---

### பாலுண்ணியைப் போக்க.

படுத்துக்கொள்வதற்குப் போகுமுன் இரவில் பாலுண்ணியின்மேல் ஒரு ஸாதாரண பஞ்சுநூலைச் சுற்றிக்கட்டிவிடவும். ஒரு ஈர்க்கு முனையினால் டர்பண்டைன் என்னும் தைலத்தையெடுத்து விட்டு பஞ்சை நனைக்கவும். இவ்விதமே நாலைந்து தடவை பிரயோகித்தால் பாலுண்ணி விலகிப் போய்விடும் என்று கூறப்படுகிறது.— Family Doctor.

---

### தொண்டைக் கம்மலுக்கு சிகித்ஸை.

வெகு நாட்களாக வைத்தியத் தொழிலில் அநுபவம் வாய்ந்த பூண்டி நரஸிம்ம வைத்தியர் என்பவர் அடியில் வருமாறு நமக்கு எழுதுகிறார்:—மிகச் சிவப்பாயுள்ள வேப்பந்தளிர்களில் பத்துத்தளிர் எடுத்து, அத்துடன் மூன்று நான்கு மிளகுகளையும், பத்துப்பதினைந்து ஜீரகத்தையும் சேர்த்து வாயிலிட்டு நன்குமென்று விழுங்கிவிடவும். இவ்விதமாய் காலையிலும் மாலையிலும் தினத்திற்கு இரண்டுவேளை வீதம் மூன்றுநாள் உபயோகித்தால் ஸாதாரணமான தொண்டைக்கம்மலும், சில ஸமயம் வயிற்றுப் பொருமலும் நிவர்த்தியாகும்.

---

### க்ஷயகாஸமுள்ளவன் எச்சிலைத்துப்புதல்.

க்ஷயகாஸம் அல்லது ச்வாஸாசயக்கழலையால் வருந்துகிறவன் இருமுவதும் வெளியில் எச்சில் அல்லது கோழையைத் துப்புவதுமாயிருந்தால், அவ்வொருவனால் உண்டாகும் கெடுதியானது சுமார் நூறு குஷ்டரோகிகளுக்கு இடையில் இருந்து வருவதைவிட அதிகமாகவே இருக்கும்:—Medical World.

---

### சைனாவில் க்ஷயரோகத்தைத் தடுத்தல்.

சைனாவின் மேற்குப் பிராந்தங்களில், ஜனங்களுக்கு க்ஷயரோகத்தினால் நேரிடக்கூடிய அபாயங்களை அப்போதைக்கப்போது அறிவிப்பதற்காக ஒரு பிரபலமான ஸ்தாபனம் ஸமீபகாலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக எண்ணிறந்த காலெண்டர்களும் சுற்றுக்கடிதங்களும் அச்சிட்டு பிரசுரம் செய்து வருகிறார்கள். என்று "ஹெரால்ட் ஆப் ஹெல்த்' என்னும் பத்திரிகை கூறுகிறது. இந்தியாவைவிட படிப்பு முதலானதில் பின்தங்கியிருப்பதான சைனாதேசத்தில் முக்கியமான இவ்வித விஷயங்கள் முன்னேற்ற மடைவது கவனிக்கத் தகுந்ததாகும்.

---


# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Ayurveda Bhushan
Pandit M. Duraiswami Aiyangar,
Senior Physician,
S. K. P. D. Hospital.

பத்திராதிபர் :
ஆயுர்வேத பூஷணம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின்
பிரதான டாக்டர்.

புஸ்தகம் 4. Vol. IV. | பிங்களஹு வைகாசி-ஆனிமீ. JUNE—1917. | ஸஞ்சிகை 10. No. 10.


## HABITS AND THEIR EFFECTS.

### பழக்கத்தின் பயன்.

BY. T. A. AGASTYA SARMA,
*Physician and Surgeon.*

(143-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மதுஸாரம் (Alcohol):—"கொஞ்சம் கொஞ்சமாக உட்கொண்டாலும் மதுஸாரமானது மூளையிலுள்ள மானஸிக தத்துவாதாரங்களைத் துர்ப்பலமாக்குகின்றது. மூளையிலமைந்துள்ள நிரோதன சக்தி (Power of inhibition) குலைந்துபோகின்றது. அதன் பரிணாமங்களாகிய விவேகம், நாணம், அடக்கம், வெட்கம், முன்யோசனை ஆகிய இவை பலவீனப்பட்டு செயலற்றுப் போகின்றன. 'நினைவு தோன்றிய உடனே செய்கை சடிதியில் நிகழ்ந்தபோதிலும், ஆலோசனை யென்னும் அம்சம் அவ்விடத்தில்லையாகும்' என்று டாக்டர் டான்ஸி (Dr. Tanci) என்பவர் சொல்லுகிறார்.

ப்ரொபஸர் கிரிபிலின் (Professor Krepaelin) என்பவர் மானிட தேகத்தில் மதுஸாரம் விளைக்கும் பயன்களை நெடுநாளாய் சோதித்துப் பார்த்துத் தெரிந்தவர். ஸாதாரணமாக வழங்கப்படுகிற ஓயின் (wine) சீசாவில் மதுஸாரம் 80 கிராம் (gramme) இருக்கின்றது. இவ்வளவு ஓயின் தினந்தோறும் பன்னிரண்டு நாள் வரையில் உட்கொண்டால்-தினந்தோறும் 80 கிராம் வீதம் பன்னிரண்டு நாள் சேருமாயின் - மனத்தின் வலிமை கால்வாசி முதல் சுமார் அரைவாசி வரையில் (25 to 40 %) குறைகின்றது என்று அவர் (Professor Krepaelin) கண்டுபிடித்திருக்கின்றார். மேலே சொல்லிய மனத்தின் வலிமை யென்பது காரியஞ்செய்யும் திறமையை மாத்திரமே கணிக்கும். ஞாபக சக்தியோ வெனின் முற்கணித்த அளவு மதுஸாரத்தின் பயனாகக் கிட்டமுட்ட முக்கால்வாசி (70%) குறைகின்றதென்று அவர் சோதித்து அறிந்துள்ளார்.

நரம்புகளின்மீது கோடுந்தாக்கம் :—மேலே விவரித்துள்ள ஆராய்ச்சிப் பயன்களை ஆதாரமாகக்கொண்டு Professor E. Schaffenburg என்பவர், 'ஜனங்கள் பெரும்பாலார் மிதபானிகளாக இருக்கிறோமென்று எண்ணுகிறார்கள். அவர்கள் தினந்தோறும் உணவருந்தும் வேளைகளில் கொஞ்சங் கொஞ்சமாக ஓயினைக் குடித்து வருகிறார்கள். அவர்கள் புட்டிபுட்டியாக வேளைதோறும் குடியாவிடினும் சிறிது

சிறிதாகக் குடித்து புட்டியை ஒழிக்கிறார்கள். ஒருவாரத்திற்குள் ஒரு புட்டி (wine) ஒயினும் அவர்கள் தேகத்தில் புகுகின்றது; அதனால் அவர்களுடைய ஸ்வஸ்த்த ஸ்திதி தப்பிப்போகின்றது. புத்தி தடுமாறிப் போகின்றது, மனத்திடன் குன்றுகின்றது. இவ்வாறு மிதபானிகளென்பாரும் மதுமயக்கங் கொண்டவர்களே யாவார்கள்" என்று சொல்லியிருக்கிறார். மிதபானி யென்பவன் குடிமயக்கத்தினால் சீர்கலையவில்லை என்று பிரமைகொண்டிருக்கிறானே யொழிய, உண்மையில் அவனுடைய சரீரத்தின் வலிமையும், மனத்தின் வலிமையும் கிரமமான நிலை தப்பிக் குன்றிப்போயிருக்கின்றன.

மதுஸாரமானது நரம்புகளைக் கெடுத்துப் பாழாக்குகின்றதென்பது அதனுடைய தாக்கத்தினால் மூளை சீர்குலைந்து உன்மாதம் மேலிடுவதினாற் காண்க. உலகத்தின் பற்பல தேசங்களிலுள்ள உன்மத்தர்களையும் அவர்களுடைய உன்மாதத்திற்கான காரணங்களையும் ஆய்ந்து தேர்ந்து கணக்கிட்டுப் பார்க்குமளவில், அவர்களுள் அரைவாசிப் பேர் உன்மாதங்கொண்டதற்குக் காரணம் மதுஸாரமே யென்று கண்டறிந்திருக்கிறார்கள்.

மதுஸாரமும் மனத்திடனில்லா மக்களும்:—மதுஸாரம் செய்யும் மஹாகோரமான கொடுமைகளுள் உத்தரோத்தரவாதை மிகக் கொடியது. அதாவது, மதுஸாரம், அதனை குடிப்பவர்களின் உடலையும் உள்ளத்தையும் தாக்குவதன்றி அவர்களுடைய மக்களையும் மக்களின் மக்களையும் பரம்பரையாகத் தாக்கி வதைக்கின்றது. அதன் தாக்கம் அவர்களுடைய மக்களின் நரம்பு பலத்தை அடியோடு அழிக்கின்றது. அதனால் உன்மாதம், புத்திப் பிரமை, நடுக்கம், குழந்தைகளுக்குண்டாகும் இசிவுகள் (வலிப்புகள்), கொறுக்கு வலிப்பு இவை உண்டாகின்றன. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கெனச் சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சாலைகளில் புத்தி பலம் குன்றிய குழந்தைகள் 1,25,000 பேர் அடைபட்டிருக்கிறார்கள். இவர்களுள் மனதிடனும் சரீர வலிமையும் குன்றியவர்கள் 85,000 பேர். பிரான்ஸ்தேசத்திலுள்ள இப்படிப்பட்ட உன்மத்தர் சாலையொன்றில் 2,552 பேரை சோதித்துப்பார்த்ததில் அநேகமாய் 40% மதுஸாரத்தினால் உன்மாதம் நேர்ந்திருந்ததாகக் கண்டார்கள். Dr. Forbes Inslow என்பவர் நரம்புவியாதிகளிலும் மனோவியாதிகளிலும் ஆராய்ச்சி மிகுந்து தேர்ந்தவரென விளங்கினார். "தாயுந் தந்தையும் குடிப்பழக்க முள்ளவர்களாயின் அவர்களுடைய மக்கள்கள் குடிகாரராவார்கள், அல்லது பித்தர்களாவார்கள், அல்லது நீதிகெட்ட குற்றவாளிகளாவார்கள்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

நேர் எதிரிடை:—மதுபானம்செய்யும் பத்து குடும்பங்களை பரிசீலனை செய்து கண்டறிந்த விஷயங்களாவன:—அந்த குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் 57. அவர்களுள் குரூபிகள் 10, பித்தர் 6, கொறுக்கு வலிப்பு முதலிய மூர்ச்சை ரோகம் கொண்டவர்கள் 6, மரித்துப்பிறந்த சிசுக்கள் 25, ஆரோக்யமாயிருந்தவர்கள் பத்து குழந்தைகளே.

அதே மாதிரியாக மதுபான விரோதிகளான (மதுபானம் செய்யாத) பத்துக் குடும்பங்களை ஆராய்ந்து கணக்கெடுத்ததில், அவைகளிற் பிறந்த குழந்தைகள் 61. அவர்களுள் குரூபிகள் 2, நோயொன்றுமில்லையெனினும் கழிகடையிற் சேர்க்கத்தக்க குழந்தைகள் 2, மரித்துப் பிறந்த சிசுக்கள் 3, ஆரோக்யம் பொருந்தியவர்கள் 54. அஃதாவது மதுவிரோதிகளின் குழந்தைகளில் நூற்றுக்கு 88½ பேர் ஆரோக்யமாயிருப்பது இயல்பு என்பதாம்.



ஓரியல்புள்ள ஜனங்களின் தோகுதி:—"ஜனபதம்" எனப்படும். இவ்வாறு "அங்கில ஜனபதம்" என்பது English Nation எனவும் "இந்தியஜனபதம்" என்பது Indian Nation எனவும் பொருள்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கு ஆஸ்தி இருப்பதுபோலவே ஒவ்வொரு ஜனபதத்திற்கும் ஆஸ்தி உண்டு. அதுவே National Assistant (ஜனபதநிதி) எனப்படும். ஒரு ஜனபதத்தின் ஆஸ்திகளில் மிகச் சிறந்தது அதன் குழந்தைகளே. குழந்தைகளே ஜனபதத்துக்குப் பெருநிதி. ஆரோக்கியமான தேகத்தோடு பிறக்கும் உரிமை ஒவ்வொரு குழந்தைக்கும் உளதன்றோ. அவ்வுரிமை எவராலும் மறுக்கவொண்ணாதது, மாற்றவொண்ணாதது; அது பிறப்புரிமையாகும். ஆதலால் ஒவ்வொருவனும் ஒவ்வொருத் தாயும் ஒரு வழக்கத்தை மேற்கொள்ளுமுன் அவ்வழக்கத்தின் பயன் தன் ஸந்தானத்தின்மீது எப்படித்தாக்கும், தன்வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளையும் தன் வம்சத்திலுதிக்கும் பரம்பரையாரையும் எவ்வண்ணம் பாதிக்கும் என்று தீர்க்கமாக பரியாலோசனை செய்யவேண்டும். இந்த பரியாலோசனை செய்யாமல் எவ்வழக்கத்தையும் கைக்கொள்வதற்கு எவனுக்கும் எவளுக்கும் உரிமையில்லை.

(Alcohol deadens sensation) மதுஸாரம் உணர்ச்சியைப் போக்குகின்றது:—உணர்ச்சியைக்கெடுக்கும் அரியதிறமை மதுஸாரத்திற்கு இருக்கின்றது. ஸ்தூலதேஹத்து உணர்ச்சியைக் கெடுப்பதல்லாமல் அதுவேறு பல வுணர்ச்சிகளையும் கெடுக்கின்றது. உதாரணமாக, மலை நாடார் அபாயகரமான வேலைகளைச்செய்ய வேண்டியிருக்குங்கால் மதுஸாரத்தை உட்கொள்ளார் (கட்குடியார்;) ஏனெனில் பகுத்தறிவும் நுண்ணுணர்ச்சிகளும் அதனாற் சீர்குலைந்து திமிர்த்துப்போமென்பது அவர்களுக்குத் தெரியும். மற்றும், ஒருவன் பசியாயிருக்கையில் மதுஸாரத்தை உட்கொண்டு அது உணவுக்கு ஈடாயிற்று என்றான். உண்மையில் அது உணவுக்கு ஈடாகவில்லை. ஆனால், உணவு புசிப்பதற்கு அவனுக்குத் தோன்றிய ஆவசியகத்தை ஒளித்ததே யன்றி, புஷ்டி தருவதற்கேனும் உணவின் பரிமாணத்திற்குத் தக்கவாறு ஊக்கமுண்டாவதுபோல ஊக்கமூட்டுவதற்கேனும் அஃது ஒன்றும் செய்யவில்லை. அதே மாதிரியாக, களைப்பு மேலிட்டவனொருவன் மதுஸாரத்தை உட்கொண்டு சிறிது நேரம் அந்தச் சோர்வுணர்ச்சியற்று இருக்கக் கூடும்; ஆனால் மதுஸாரத்தினால் அவனுக்குப் பலம் அதிகப்படவில்லை; அவன் அமர்ந்திருந்த கஷ்டமான காரியத்தைச் சாதிக்கவும், அவன் விடுவிக்க முயன்ற கடினப் பிரசினங்களை (Problems) விடுவிக்கவும் அவனுக்குச் சக்தி குறைந்துபோயிற்று; ஏனெனில் அவனது மூளையிற் சிற்சில பாகங்கள் மதுஸாரத்தினால் திமிர்த்து உணர்ச்சியற்றுப் போயின.

உத்தராபேக்ஷை (Outlook, prospect) என்பது எல்லார்க்கும் உள்ளது. அஃதாவது இனி வரத்தக்கதை விரும்புவதாம். சுகப்பிராப்தியும் துக்க நிவர்த்தியுமே எல்லாரும் விரும்புவார்கள். நோயணுகா திருக்கவேண்டுமென்பதையே எல்லாரும் விரும்புவார்களன்றோ? மதுஸாரம் அப்படிப்பட்ட உத்தராபேக்ஷையைக் கெடுத்து வக்கிரப்படுத்துகின்றது. சீதளத்தினால் விளையும் பற்பல நோய்களும் மதுஸாரம் உட்கொண்டக்கால் எளிதில் அணுகுகின்றன வென்றும், மதுஸாரம் உட்கொள்ளாவிடத்து அவ்வாறு அணுகுவதில்லையென்றும், பலவிடங்களிற் பலரைப் பற்பல ஸந்தர்ப்பங்களிற் பரீக்ஷித்துப் பார்த்து நிரூபித்திருக்கின்றார்கள். மானிடவுடலுக்கு நேரத்தக்க நோய்களுள் முக்கால் வாசியை எளிதில் ஏற்குந்தன்மை மதுஸாரத்தினால் ஏற்

படுகின்றது; எனவே அத்தனை நோய்களுக்கு மதுஸாரம் ஆஸ்பதமாகின்றதென்க. எந்த மாகாணத்தில் கட்குடி அதிகமாகின்றதோ அந்த மாகாணத்தில் க்ஷயரோகத்தினால் மரணங்களும் (Tuberculosis death-rate) அதிகமாயிருக்கின்றன; நுரையீரற் கொதிப்பு (க்லோமபாகம், * Pneumonia) என்னுங் கொடிய நோயோவெனின், மதுபானிகளை முக்கியமாகப் பொறுக்கி யெடுக்கின்றது.

மதுஸாரத்தின் அவகுணங்களுள் (1)பக்ஷித்தல் (தேய்த்தழித்தல்), (2) சீர் குலைத்தல், (3) உடலையும் ஆவியையும் நாசம்செய்தல் என்பன மூன்றும் முதன்மையானவை. இந்தகேடுகளை யெண்ணுமிடத்து மதுஸாரத்தினால் விளையும் பொருட் கேடு முதலியன மிக அற்பமெனவே சொல்லலாகும். தேகத்தின் மீது மதுஸாரத்தாக்கத்தினால் விளையும் பயனின் கொடுமை பொன்றே போதும். தாய்தந்தையரின் தேகத்தாலும், குழந்தைகளின் தேகத்தாலும் அது விளைக்கும் கேட்டை மாத்திரம் எண்ணினாலுமே இந்த பாபிஷ்டவியாபாரத்தை அடியோடொழிப்பதற்குப் போதிய பிரேரணைகளைச் செய்ய முயற்சிப்பதே முதறிவு எனத் தெரியவரும். (தொடரும்.)

* க்லோமா என்பது Pancreas என்னும் அவயவத்தின் பெயர்; ஆகவே ந்யுமோனியா என்பதற்கு க்லோமபாகம் என்று வழங்குவது எங்ஙனம்? புப்புஸபாகம் என்று அதைக் கூறுவது ஒருவாறு பொருந்தும்; ந்யுமோனியாவை "அட்ந்யாஸ ஜ்வரம்". என்று கூறுவது ஆயுர்வேத வைத்தியப்படி தகுந்த பரிபாஷையாகும். ப-ர்.

## APPLES AS A FOOD.

## சீமையிலந்தை ஓர் உணவு.

BY. M. S. AIYANGAR,
*Medical Practitioner.*

சீமையிலந்தையை பழங்களின் அரசன் என்று வழங்குவது மிகவும் பொருத்தமானது. அநேகம் பெயர்கள், சீமையிலந்தையை அதன் இனிய சுவைக்காகவும், அருமையான நறுமணத்திற்காகவும் வெகு விருப்புடன் உபயோகிக்கிறார்களாயினும், அதன் உபயோககரமான பற்பல சிறந்த குணங்களை நன்கு அறிந்திருப்பவர் மிகவும் அரிது. வைத்திய நூல்கள் எழுதிய வியாபகர்களான சாஸ்திரஞ்ஞர்கள் சீமையிலந்தை ஆரோக்கிய நிலைமையிலும் வியாதிநிலைமையிலும் உபயோகிக்கத் தகுந்த உத்தமமான உணவுப்பொருள் என்று சிலாகித்து எழுதியிருக்கிறார்கள். நியூயார்க்கில் கார்னெல் யூனிவெர்ஸிடி மெடிகல் காலேஜின் ஒளஷத சிகித்ஸை விஷயங்களுக்கு ஆசிரியரான (Professor of Medicine) W. G. தாம்ப்ஸன், M. D., அவர்கள் இயற்றியுள்ள "பிராக்டிகல் டயெடிடிக்ஸ்" என்னும் நூலில் "நன்றாகக் கனிந்த சீமையிலந்தை மிகவும் ஆரோக்கியகரமாகவும், எளிதில் நன்றாக ஜீர்ணமாகுந்தன்மையுடையதாகவும் இருக்கின்றது" என்று எழுதியிருக்கிறார். பத்தியாபத்தியங்களை நன்கு விமர்சம் செய்யும் வைத்தியர்கள் அனைவருமே இதே கொள்கையுடையவர்கள் என்றும் நம்பலாம்.

சீமையிலந்தையில் மிக்க நிர்மலமான தண்ணீர் மிகுதியாய் அடங்கியிருக்கின்றது. இதர கனிவர்க்கங்களோடு ஒத்துப் பார்த்தால், இதில் உணவுக்குரிய கெட்டிப்பொருட்கள் வெகு சொற்பமாகத்தான் அடங்கியிருக்கின்றன. அப்படிக்கு இருந்தும் இக்கனியானது உடலைப் போஷிக்கும் விஷயத்தில் மற்றக்கனிகளிலும் எவ்விதத்திலும் குறைந்ததாகக் கருதக்



கூடியதல்ல. இயற்கையாகவே சீமையிலந்தையில் அடங்கிய கூட்டு வஸ்துக்கள் அளவில் வெவ்வேறு வகையாகக் காணப்படுகின்றன. சில கனிகளில் தண்ணீரே மிகவும் அதிகமாகக்கூடியிருக்கும்; வேறு சிலவற்றில் சர்க்கரையும், மாப்பொருளும், அம்லவஸ்துக்களும், க்ஷார வகைகளும் அபரிமிதமாய் அடங்கியிருக்கும். அநேகம் இரஸாயனசாஸ்திரஞ்ஞர்கள் செய்த பலவிதமான பரிசோதனைகளைக்கொண்டு சீமையிலந்தையில் அடியில் குறிக்கப்படும் அளவாக வஸ்துக்கள் சேர்ந்திருக்கின்றனவென்று தெரியவருகிறது:—

| | | |
|---|---|---|
| ஜலம் | 100-க்கு | 80 முதல் 85 பங்கு. |
| ப்ரோடீட் என்னும் தார்க்கியகர வஸ்துக்கள். | ,, | 5 ,, 6 ,, |
| மாப்பொருள், சர்க்கரை முதலிய கறிப்பண்டங்கள். | ,, | 10 ,, 15 ,, |
| அம்லவஸ்துக்களும் க்ஷார வஸ்துக்களும். | ,, | 1 ,, 15 ,, |

ஒவ்வொரு இனமான புதிய கனியில் சர்க்கரைமட்டும் 100-க்கு 6-முதல் 10 பங்கு வரையில் கலந்திருப்பதுண்டு. இது பாண்டுரோகம், துர்ப்பலம் முதலியவற்றில் உபயோகிக்கக்கூடிய சிறந்த கனிகளில் ஒன்றாகும்.

சீமையிலந்தையில் அநேகம் வகைகளை நாம் பார்க்கிறோம். அவற்றுள் சில மிகவும் இனிப்பாகவும், பற்களுக்கு வன்மையளிக்கக் கூடியவையாகவும் இருக்க, வேறு வகையான சில கனிகள் ஒருவாறு புளிப்பாகவும், அநேகம் பெயருக்கு உண்ணப் பிடிக்காதவைகளாகவும் இருக்கின்றன. எல்லாச் சீமையிலந்தையிலும் பிராணி ஸம்பந்தமான அம்லவஸ்துக்களும், முக்கியமாய் மாலிக் ஆஸிட் (Malic acid) என்னும் அம்லமும் உண்டு. எல்லா விதமான சீமையிலந்தையிலும் பொட்டாஷியம் உப்பும், உழமண்ணுப்பும், காந்தமண்ணுப்பும், அய உப்பும், சுண்ணவுப்பும் அதிகமாய் அடங்கியிருக்கின்றன. ஸிட்ரிக் ஆஸிட், டார்டாரிக் ஆஸிட் முதலியவற்றின் கூட்டுவஸ்துக்களும் இதில் சேர்ந்திருக்கின்றன. நன்றாகக் கரைந்துள்ள பாஸ்வர தாது (Phosphorous) இந்த இலந்தையில் அடங்கியிருப்பதால், இக்கனியானது அவ்விஷயத்தில் மற்ற அநேக கனிவர்க்கங்களைவிட மேலானதென்றும், ஆகவே மூளையை உபயோகித்து வேலை செய்பவருக்கு இது உத்தமமான உணவுப்பொருளென்றும் கருதப்படுகிறது.

மிக்க மதுரமான சீமையிலந்தையில் அடங்கியுள்ள சர்க்கரையானது, இதர கனிவர்க்கங்களின் சர்க்கரைகளைப்போலவே வெகு எளிதில் ஜீர்ணமாய், இரத்தத்தில் சீக்கிரம் கலந்து உடலுக்கு அவசியமான உஷ்ணத்தையும் உழைப்புக்கு அவசியமான சக்தியையும் உண்டுபண்ணுவதற்குத் தயாராயிருக்கும். இக்கனியில் அடங்கிய உப்புவகைகளென்ன, மிகவும் நுட்பமாய் செறிந்துள்ள மாப்பண்டமென்ன இவை யாவும் மனிதருடைய சரீர தாதுக்களுக்கு அதிக வலிமையைப் புகட்டக் கூடியவையாகும். ஆனால் தேஹபோஷணைக்கு அவசியமான தார்க்கியகாஸத்துவம் (Nitrogenous Matter) — என்றால் கனிகளில் இருக்கக்கூடிய ஓஜஸ் என்னும் தாதுப் பொருள் முதலியது — சீமையிலந்தையில் 100-க்கு சுமார் 5-பங்கு வீதம் அவ்வளவு குறைவாகத்தான் இருப்பதாகக் காணப்படுகிறது. இதனால், இக்கனியானது தேய்வுறும் தேஹதாதுக்களைச் சீர்படுத்தி உடலைப் போஷிப்பிக்கத்தகுந்த குணத்தில் மற்றக்கனிகளினும் குறைந்ததென்று கூறவேண்டியிருக்கிறது. ஆகிலும் நன்றாகக் கனிந்து, சற்று உலர்ந்த நிலைமையிலுள்ள சீமையிலந்தையில் தார்க்கியகாஸத்துவம் அதிகமாயிருப்பதோடு, தேஹத்

திற்குத் தேவையான மற்ற உப்புமுதலிய ஸத்துவங்களும் விசேஷித்திருக்குமாகையால், ஒருவாறு சுஷ்கமான பழங்களை உண்பது சரீரபோஷணைக்கு ஏற்றதாகவே இருக்கும். "ஈரப்பசை ஆவியாகப்போய் ஒருவாறு வாடிய சீமையிலந்தையில் தண்ணீர் 100-க்கு 30-முதல் 40-பங்கு அளவாகவும், மாப்பொருளும் சர்க்கரையும் 100-க்கு 50-முதல் 60-அளவாகவும், தர்க்கியகரவஸ்து ஏராளமாகவும் அடங்கியிருக்குமாகையால், இக்கனியை இதர உணவுப்பொருட்களைப்போலவே தேஹ போஷணையின் நிமித்தம் உபயோகித்துவரலாம்" என்று டாக்டர் தாம்ப்ஸன் கூறுகிறார்.

---

## GERMAN MEASLES.*

### ஜெர்மன் சிறு மசூரிகை.

BY A. G. SIMMINS, M. B., M. R. C. S.

ஜெர்மன் சிறு மசூரிகை யென்பது அதிக தொந்தரவு உண்டுபண்ணாததும், சிறிது நாட்களில் தானே நிவ்ருத்தியாய்விடக்கூடியதுமான ஒருவித ஒட்டுவாரொட்டு வியாதி. ஜெர்மன் மீஸ—ல்ஸ் என்று கூறப்படுகிற இதற்கு ருபெல்லா என்றும் மற்றொரு பெயருண்டு. இதில் பொரி பொரியாயுள்ள விஸர்ப்பங்களைப் போன்ற சிறு கொப்புளங்கள் உண்டாவதோடு, தொண்டையில் புண்ணும், கண்களிலிருந்து நீர்வடிவதும், கழுத்திலுள்ள கிரந்திகள் வீங்குவதும் விசேஷக்குறிகளாகும்; இவை ஸாதாரணமான சிற்றம்மை அல்லது தட்டம்மைக்குக் காண்பதில்லை. சொற்ப அளவு ஜ்வரமும் உண்டாவது வழக்கம்.

யுத்தம் ஆரம்பமானது முதற்கொண்டு இது கப்பற்படைகளிலும், இதர ராணுவவேலைக்காரர்களிடமும், ஐரோப்பா தேசத்திலுள்ள மற்றப் பிரஜைகளிடமும் பரவிவரும் வெகு ஸாதாரண வியாதியாய்விட்டது. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாய் நூதனமாக நமது கவனத்திற்கு வரும் சில வியாதிகளில் இதுவும் ஒன்று; ஆனால் மற்றவைகளைப்போல இது அவ்வளவு தீமை விளைவிக்கக்கூடிய பிரபலமான வியாதியல்ல.

ஓரிடத்தில் பழகுகிற அநேகருக்கு ஒருவரிடமிருந்து மற்றவரிடத்தில் இது ஒட்டுவாரொட்டியாகப் (contagious) பரவுகின்றது. புஸ்தகங்கள், வஸ்திரங்கள், பாத்திரங்கள் முதலியவற்றின் மூலமாய் ஒரு இடத்திலிருந்து பல இடங்களுக்கு வியாபிக்கத்தகுந்த (infective) வியாதியாகவும் இருந்து வருகிறது. இவ்வியாதியை எப்பொழுதுமே அறியாத சில ஜில்லாக்களில் இது வெகு துரிதமாக இப்பொழுது பரவிவிட்டது. அநேகம்ஜில்லாக்களில் அளவற்ற மனிதர்கள் இந்த ரோகத்தினால் இப்பொழுது ஸமீபகாலந்தொட்டே மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். சுமார் 15 வயதுக்குமேற்பட்டு 30 வயதுக்கு உட்பட்ட மனிதர்களுக்கே இதுபெரும்பாலும் ஸம்பவிக்கின்றது; இளங் குழந்தைகளிடமும், மற்றும் சிறுவர்களிடமும், வயது முதிர்ந்தவர்களிடமும் இந்த ரோகம் பரவுவதில்லை.

இந்த வியாதி தேஹத்தில் தாக்கியதுமுதல் இரண்டு மூன்று வாரங்களளவும் முதற்குறிகள் உண்டாகின்றன. முதலில் சிறிதளவு ஜலதோஷம் தோன்றும்; நாசியிலிருந்து நீர் வடிதலும், கண்ணீர்ப்பெருக்கும், கொஞ்சம் தொண்டைப்புண்ணும் காணுவதுண்டு; இருமலும் சொற்பமாயிருக்கும்; கழுத்தின் பின்புறத்திலும் பாரிசங்களிலும் உள்ள நிணநீர்க் கிரந்திகள் வீக்கங்கொண்டு சிலையைப்போல கடினமாய் மாறும்; கழுத்தில் ஒருவாறு விறைப்பு உண்டாவதால், தலையும் கழுத்தும் ஸாதாரணமாய் அசைக்கமுடியாமலாய்விடும்; உடல் சோர்வுற்று எழுந்திருந்து நடமாட

* Reproduced and translated from "Good Health."



முடியவில்லை யென்று அப்பிணியாளி சொல்லிக்கொள்வான்; மிகச் சொற்பமாக ஜ்வரம் வருவதுமுண்டு. ஜ்வரம் முற்றிலும் இல்லாமலே யிருப்பதுமுண்டு. இந்த விதமான விகாரங்கள் தோன்றியவுடனே, விஸ்ப்போடங்கள் (rash) வெளிப்படையாய் உண்டாகாமலிருந்தாலும், அப்பிணியாளியினிடமிருந்து வியாதி மற்றவரிடம் அந்த நிலைமையில் வெகு எளிதில் பரவிவிடக்கூடுமாகையால், அக்குறிகளையெல்லாம் வைத்தியர் கருத்துடன் கவனித்து, அப்பிணியாளிக்குப் பிரத்தியேகமாய் ஓரிடத்தில் வஸதி யேற்படுத்தி மற்றவரிடம் சேராமற் செய்யவேண்டும். ஒரு யுவாவாவது சிறுவனாவது ஜலதோஷமும், கழுத்தில் விறைப்பும், கண்ணீர்ப் பெருக்குமுள்ளவனாகத் தென்படுவானானால், உடனே மற்ற யுவாக்களோடு அல்லது சிறுவர்களோடு சேராமல் அவனைப் பிரத்தியேகமான ஸ்தலத்தில் ஆறு நாட்கள் வரையிலுமாவது இருக்கச் செய்வது அவசியம்; அல்லது அவனை வீட்டிலிருந்து வெளியில் போகாமலிருக்கவாவது செய்யலாம்; அவனுக்கு ஜெர்மன் சிறு மசூரிகை உண்டாவதாயிருந்தால், கீழே குறிப்பிட்ட முற்குறிகள் கண்ட ஆறாவது தினத்திற்குள் விஸ்ப்போடங்கள் வெளியில் நன்றாகத் தோன்றிவிடும்.

சில ஸமயம் விஸ்ப்போடங்கள் இரண்டாவது முதல் ஐந்தாவது தினத்திற்குள் வெளிப்படுவதுண்டு. விஸ்ப்போடங்கள் தோன்றும்போது தலைவலியும், குமட்டலும், வாந்தியும் கூடவே உண்டாவது வழக்கம். முதலில் விஸ்ப்போடங்கள் முகத்தில் காணும்; அப்பொழுது முகத்தில் சிவந்த நிறமான சின்னஞ்சிறிய சினப்புகள் மாதிரி அவை தோன்றும். பிறகு இவை உடலிலும், அப்பால் கைகால்களிலும் கிரமமாகப் பரவும். அதன் பிறகு முகத்திலிருந்து விஸ்ப்போடங்கள் வாடிக்கொண்டுவரும். இந்த விஸ்ப்போடங்கள் இரண்டு முதல் நான்கு அல்லது ஐந்து நாட்கள் வரையில் தோன்றியிருந்து மறைந்துவிடும். விஸ்ப்போடங்கள் சாந்தமானபிறகு, சர்மமானது கொஞ்சம் செதிள் செதிளாகக் காணப்படும். அநேகம்பேருக்கு இந்த நிலைமையில் சொரி அல்லது தினவு அதிகமாயிருக்கும். சில ஸமயங்களில் வாயில் சிறிய புண்கள் உண்டாவதுமுண்டு.

ஸந்நிபாத ஸம்பந்தமான கஷ்டங்கள் இதில் உண்டாவது மிகவும் அரிது. இந்த வியாதி பெரும்பாலும் எவ்வித அபாயத்தையும் விளைவிப்பதில்லை. இது உண்டாவதாகத் தெரிந்தவுடனே சைத்தியம் முதலியது தேஹத்தைத் தாக்காமல் முன் ஜாக்கிரதையுடன் இருந்துவந்தால் ஏழெட்டு நாட்களில் பிணியாளி முற்றிலும் சுகமடைவான். ஜெர்மன் சிறு மசூரிகைக்கும், ஸாதாரணமான சிறு மசூரிகைக்கும் பேதம் கண்டுகொள்வது அவ்வளவு கஷ்டமல்ல. அடியில் வரையப்படுவதைக் கொண்டு பேதத்தை அறியலாம்:—

ஜெர்மன் சிறு மசூரிகை.

ஜலதோஷமும் சைத்தியமும் சொற்பம்.
கழுத்து விறைத்துக்கொள்ளும்.
ஜ்வரம் மிகவும் சொற்பம்.
சொற்ப நாட்கள் தொடரும்.
ஸந்நிபாதம் கிடையாது.
சிறு குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் உண்டாகாது.
கழுத்தில் கிரந்திகள் வீங்கும்.

ஸாதாரண சிறு மசூரிகை.

ஜலதோஷமும் சைத்தியமும் மிகவும் அதிகம்.
கழுத்தில் விறைப்பு இராது.
ஜ்வரம் தீவ்ரமாயிருக்கும்.
அதிகநாள் தொடரும்.
ஸந்நிபாதம் உண்டாகலாம்.
சிறுவர்களுக்கும் முதியவர்களுக்குங்கூட உண்டாகும்.
கிரந்திகள் வீங்குவதில்லை.

ஜெர்மன் சிறு மசூரிகை வந்தவர்களை, விஸ்ப்போடங்கள் ஆரம்பித்த தினம் முதற்கொண்டு பத்துநாட்கள் வரையில் மற்ற ஜனங்களோடு

ஸம்பந்தப்படாமல் ஒதுக்கான வாஸஸ்தானங்களில் இருக்கச்செய்வது நலம். இப்பிணியாளி இருக்கும் அறையில் ஒரே ஒரு மனிதனை அல்லது இருவரைமட்டும் உபசாராதிகளின் பொருட்டுப் போய்வர இடங்கொடுக்கவேண்டும். அப்பிணியாளியின் வஸ்திரங்களையும் படுக்கையையும் கிருமிஹரமான சரக்குகளைப்போட்டு, வெந்நீரில் தோய்த்து முற்றிலும் சுத்தம் செய்யவேண்டும். பத்து நாட்கள் கழிந்தபின்பு, அவன் படுத்திருந்த கட்டில், அறை முதலிய எல்லாவற்றையும் கிருமிஹரமான வஸ்துக்களால் சுத்தம் செய்து, அறைக்கு வெள்ளையடிக்கவும் வேண்டும். இதற்கு விசேஷமாய் சிகித்ஸையொன்றும் அவசியமில்லை. விஸ்போடங்கள் தோன்றுவதற்கு முன்பு, ஆஹாரம் இலகுவானதாயிருந்தால் நல்லது; தேஹத்தில் உஷ்ணம் குறைந்தபிறகு, ஸாதாரணமாய் வழக்கத்திலுள்ள உணவுகளைக் கொடுக்கலாம். வாயிலும் தொண்டையிலும் புண் ஏதாவது உண்டாயிருந்தால், கறியுப்புநீர் முதலியவற்றால் வாய்க்கொப்பளிக்கச் செய்யலாம்.

இந்த வியாதி தீர்ந்ததும் பலஹீனம் சிறிது உண்டாவது இயல்பு; தகுந்த உணவுகளையெடுத்துக்கொண்டு, உடம்பையும் உடுப்பு முதலியவற்றையும் நிர்மலமாய் வைத்துக்கொண்டால், அத்துர்ப்பல நிலைமையும் ஒரு வாரத்திற்குள்ளாகவே ஸாதாரணமாய் நிவ்ருத்தியாய்விடும்.

இறுதியில் நான் கூறுவது என்னவென்றால்—ஜெர்மன் சிறு மசூரிகையென்பது இப்பொழுது பிற தேசத்தியவரால் புதிதாகக் குறிப்பிட்டு கவனிக்கக்கூடிய வியாதியாகும் என்பதே. 1916-ம் ௵ ஜனவரி௴ முதற்கொண்டு இங்கிலாந்தில் சுகாதார உத்தியோகஸ்தர், இவ்வியாதி உற்பத்தியாகும் நபர்களையெல்லாம் கவனித்துவருவதுடன், இவ்வியாதி பரவாமலிருப்பதற்கு வேண்டிய எச்சரிக்கைகளையும் செய்துவருகிறார். இதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் கட்டாயமான நியமங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வியாதி பரவாமலிருப்பதற்கு வேண்டிய காரியங்களை நிர்வஹிக்கும் கடமையானது, அப்பிணியாளிகளை மேற்பார்வை பார்க்கும் வைத்தியாதிகாரிகளுடைய பொறுப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது.

# வைத்திய கலாநிதி.

பிங்கள ௵ வைகாசி-ஆனி௴.

## HÆMOPTYSIS.

### க்ஷத - காஸம்.

காஸம் என்னும் இருமலால் தொண்டை மூலமாய் வெளிறிய சிவப்பு நிறமான இரத்தம் தனிப்படவோ கோழை முதலியவற்றோடு கலந்தோ வெளிப்படுமானால், அது க்ஷத-காஸம் என்று வழங்கப்படுகிறது. இதற்கு உற்பத்திஸ்தானம் ச்வாஸாசயம் அல்லது ச்வாஸ நாளங்களின் ச்லேஷ்மகலைதான் (bronchial mucosa) முக்கியமாகும்; எப்பொழுதேனும் சில தடவைகளில் புப்புஸங்களின் உட்குழியின் அல்லது அவற்றின் பித்திகளுடைய இரத்தக் குழாய்கள் ஏதேனும் காரணங்களால் சிதைவடைந்தாலும் இவ்வாறு இருமும்போது இரத்தம் வெளிப்படுவதுண்டு; ச்வாஸ நாளங்களின் பெரிய கிளைகளிலிருந்தும், ச்வாஸ நாளத்திலிருந்தும், ஸ்வர யந்திரத்திலிருந்தும் (larynx) இரத்தம் இவ்வியாதியில் வருவது மிகவும் அரிது. இந்த வியாதியினால் பிராணாபாய முண்டாகக்கூடிய அவஸ்தை நேரிடும் தருணமாயிருந்தாலும், ச்வாஸாசயங்களை அதிநுட்பமாகப் பரீக்ஷித்துப் பார்த்தாலும் இரத்தக் கசிவுக்கு ஆசயம் யாதென்று அறிந்துகொள்வது எப்பொழுதுமே எளிதல்ல.

ஏதை மூலமாகக் கொண்டாவது புப்புஸங்களில் எந்த பாகமாவது, அல்லது ச்வாஸமார்க்கத்தில் எந்த பாகமாவது கிரண்டு தேய்வுறுவதால் க்ஷத-காஸம் ஸம்பவிக்கலாம். இதனால் நஷ்டமாகும் இரத்தம் சில ஸமயங்களில் மிகவும் சொற்பம். க்ஷத-காஸம் உண்டாகுமாறு ச்வாஸாசயங்களின் தசை முதலியவை உறைவ



தற்குக் காரணங்கள் அநேகம் உண்டு. மிக்க உஷ்ணமான அல்லது விஷக்காற்று ஸம்பந்தமுள்ள வாயுவை ச்வஸிப்பதாலும், அழற்சியுண்டாக்கும் வஸ்துக்களை உறிஞ்சுவதாலும், சக்திக்கு மிஞ்சி வெகு பலமான வியாயாமங்களைச் செய்வதாலும், தாது பாகங்கள் அல்லது நுண்ணிய இரத்தக் குழாய்கள் உறைந்து சிதைவுற்று இரத்தங் கசியக்கூடும். ச்வாஸாசய ஸம்பந்தமான ஸந்நிபாத ஜ்வரத்தில், அல்லது அபிந்யாஸ ஜ்வரத்தில், புப்புஸங்களினுள் மிக நுட்பமான இரத்தக்குழாய்கள் வெடித்துப்போய், அவற்றிலிருந்து துருப்பிடித்த நிறமாக இரத்தம் வெளியாகும். ச்வாஸாசயக் கழலையென்னும் புப்புஸ ஸம்பந்தமான க்ஷயரோகம் இதற்குக் காரணமாவது வெகு ஸாதாரணம். க்ஷய ஸம்பந்தமான விஷக் கிருமிகளாலும், அவ்வியாதியினால் அவயவம் தேய்வுற்றுச் சிதைவதாலும் இவ்விதம் இரத்தக்கசிவு நேரிடுவது வழக்கம். "முதலில் பெரும்பாலும் சின்னஞ்சிறிய ச்வாஸக் குழல்களிலிருந்து க்ஷயகாஸத்தில் இரத்தம் வெளியாவதாகத் தெரியவருகிறது; பிறகு அந்த வியாதிக்கு மூலஸ்தானமான புப்புஸத்தின் அடிப்புறத்திலுள்ள இரத்தக் குழாயில் ஒருவித சிறங்குபோன்ற விரணம் உண்டாய், அதிலிருந்து இரத்தக்கசிவு நேரிடக்கூடும்." என்றும் தற்காலத்திய வைத்தியர்கள் கூறுகின்றனர். பெரிய ச்வாஸக் குழல்களின் ஸம்பந்தமான, அல்லது ஸ்வரயந்திர ஸம்பந்தமான செவ்விரத்தக் குழாய்களில் ஏதாவது விரணத்தினால் சிதைவுற்றால், அதிலிருந்து இரத்தம் வெளிவருவதால் பிராணாபாயம் ஸம்பவிப்பதும் உண்டு என்று அறியப்படுகிறது. நீடித்த காஸரோகத்தினால் வருந்திய ஒருவனுடைய ச்வாஸாசயத்தினுள் வாயுப்பைகளின் நுண்ணிய கலைகளில் (air cells) புண்கள் உண்டாய் (இது ஆங்கிலத்தில் Emphysema என்றும், ஆயுர்வேதத்தில் உரக்ஷதம் என்றும் கூறப்படும்) அதனால் ஏற்பட்ட இரத்த காஸத்தினால் ஒரு பிணியாளி மரணமடைந்தான் என்று டாக்டர் ஓஸ்லெர் கூறுகிறார். காஸரோகத்தில், கபம் மிதமிஞ்சிப்போக, அதனால் ச்வாஸக் குழலின் உட்சவ்வு மிகவும் அழன்றும் இருமுவதால் தேய்ந்தும் போவதால், அந்த ஸாதாரண காஸமே க்ஷத-காஸமாய் விடக்கூடும். ச்வாஸாசயங்களைப் பற்றிய அபசி யென்னும் வியாதியினாலும் (Carcinoma or Cancer of the lungs) க்ஷத காஸம் ஸம்பவிக்கும். இருதய ஸம்பந்தமான முக்கியமாய் இருதயத்தின் இடதுபக்கத்துக் குழியினிடையிலுள்ள கபாட ஸம்பந்தமான—வியாதியும் புப்புஸத்து தாது நெருக்கங்களோடு ஸம்பந்தப் பட்டாலும் க்ஷத-காஸம் உண்டாகலாம். பாண்டுரோகமும், பித்த ஜ்வரமும், மற்றும் சில தொற்று வியாதிகளும் க்ஷத-காஸத்திற்குக் காரணமாவதுண்டு. மார்பின்மேல் பலமான அடி ஏதாவது தாக்குமானால், அநேக நாள் வரையில் க்ஷத-காஸம் மாதிரி இரத்தக்கசிவு நேரிடலாம். மூளை அதிகமாய் உழைப்பதும், சில ஸமயம் இவ்வியாதி யுண்டாவதற்குத் தூண்டுதலாயிருக்கலாம்.

"லாங் ஐலண்ட் மெடிகல் ஜர்னெல்" என்னும் பத்திரிகையின் 1917-ஜனவரி ஸஞ்சிகையில் இதைப்பற்றி அடியில் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:—"க்ஷத-காஸம்(hæmopthysis) என்னும் வியாதி பிராணாபாயம் விளைவிப்பது அரிது. சில ஸமயம் சவசரீரங்களைப் பரிசோதனைசெய்து பார்த்ததில், க்ஷத-காஸத்திற்கு ஆஸ்பதமாயிருந்த ச்வாஸாசயத்தின் ஒரு பகுதியில், ச்வாஸ மார்க்கங்கள் பெரும்பாலும் இறுகிப்போன இரத்தத்தினால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, க்ஷத-காஸத்தினாலேயே அப்பிணியாளிக்கு மரணம் ஸம்பவித்ததென்று நிச்சயிக்கப்பட்டது. அவ்விடத்திய சிலேஷ்ம சவ்வானது வீங்கிப்போய், கறுஞ்

சிவப்பாக மாறியிருந்தது; இரண்டொரு கேஸில் அவ்விடம் வெளிறி இரத்தமில்லாமல் காணப்பட்டது. ச்வாஸப் பைகளிலும் (air cells), ச்வாஸக் குழல்களிலுங்கூட இரத்தங்கள் இறுகிக் கட்டியிருந்தன. இவ்விதம் இறுகிக்கொள்ளும் இரத்தம் காஸத்தினால் (இருமலால்) வெளிப்படுத்தப் படுவதாலும், அவை அவ்வவயவங்களிலேயே ஊறிப் போய் தாதுவோடு தாதுவாகக் கலந்துவிடுவதாலும் பிணியாளிக்கு ச்வாஸம் விடுவதற்கு ஸௌகரியம் ஏற்படும். இல்லாவிட்டால், இறுகிய இரத்தங்கள் தங்கியிருக்கும் இடங்களில் வேறு சில புண்களும் புதிதாக உண்டாய் பிராணாபாயம் ஸம்பவிக்கத் தகுந்த குறிகள் ஏற்படும்."

ச்வாஸாசயக் கழலையினால் க்ஷத-காஸம் விசேஷமாய் உண்டாவதை நாம் நேரில் கண்டிருப்பதாலும், சாஸ்திரமும் அவ்விதமே கூறுவதாலும் அதைப்பற்றி இங்கே சிறிது கவனிப்போம். ச்வாஸாசயக் கழலையின் ஆரம்பதசையில் திடீரென்று க்ஷத-காஸம் உண்டாவது ஒரு ஸாதாரணமான ஸம்பவமாகும்; இருமலோடு அப்பொழுது இரத்தம் கசிய ஆரம்பிக்கையில், வாயில் ஒருவித உப்பின் சுவையும் சூடுமுள்ள உணர்ச்சிபோன்று தோன்றும்; இதைப் போக்குவதற்காக இருமலை நன்றாக உண்டாக்குவதற்குப் பிணியாளி பிரயத்தனப் படவேண்டியிருக்கும்; அப்பொழுது நல்ல சிவந்த நிறமாகவும் சிறிது வெப்பமுள்ளதாகவும் நுரைத்துள்ள திரவத்துடன் கலந்ததாகவும் இரத்தம் வாயாலும் நாசியினாலும் வெளிவரும். இந்த இரத்தம் க்ஷாரத்தின் சுவையுள்ளதாகவும், வாயுவோடும் கபத்தோடும் கலந்ததாகவும் இருக்கும். இதனால் வெளியாகும் இரத்தம் ஒரு அவுன்ஸ் முதல் பத்துப்பதினைந்து அவுன்ஸ் அளவு வரையில்வெவ்வேறு ரீதியாகக் காணும். இரத்தத்தைக் கண்ணால் பார்த்ததும், பிணியாளியானவன் திகைத்து, கடும் பயம் அடைந்து, சில ஸமயங்களில் மூர்ச்சையடைவதுமுண்டு. கை கால்களில் சைத்தியம் உண்டாகும்; வியர்வை மிகவும் அதிகரிக்கும்; இரத்தத்தின் அளவு அதிகமாயிருந்தால், அமைதியின்மையும் நடுக்கமும் ஏற்படும்; ஜ்வரமும் தொடரக் கூடும். அரைமணி நேரம் முதல் நாலைந்து மணி ஸாவகாசம் இது நீடித்திருக்கும்; பிறகு அடிக்கடியும் இவ்விதமே ஸம்பவிக்கும். இரத்தப்பெருக்கோடு, சிறிது ஜ்வரமும், சொற்ப மார்வலியும் உண்டாகும். இரத்தக் கசிவு நேரிட்ட மூலஸ்தானத்தில் வீக்கம் குறைந்து வரும்; ஆனால், இரத்தம் உறைந்துவிடுமானால் கபஜ்வரம் அல்லது அபிந்யாஸஜ்வரம் காணும். மார்பறையினுள் சிதைவுண்ட பிரதேசத்திற்கு நேராக மேலே காதுவைத்துப் பரீக்ஷித்தால், நுரைகள் உண்டாய் உடைவதுபோன்ற சப்தம் கேட்கப்படும். இரத்தம் வெளியாகும்போது அல்லது இரத்தம் வெளியானவுடனே இருதயத்தில் இயற்கைக்கு மாறுபாடான துடிப்பு நேரிடுவது துர்லபம்.

சிகித்ஸை :—இரத்தம் வெளிப்படுவதை நிறுத்துவதற்கும், இரத்தம் நஷ்டமானதினால் உண்டான தீமைகளைப் போக்குதற்கும் முயல்வதே இதற்குச் சிகித்ஸையாகும். இரத்தம் வெளியாவதை உடனே நிறுத்துவதென்பது எப்பொழுதுமே எளிதில் ஸாத்தியமானதென்று சொல்வதற்கில்லை; ஏனெனில், பெரிய இரத்தக்குழாயில் புண்கள் வெகுதூரம் பரவியிருந்தால், அதற்குப் பரிஹாரமுறை ஏதாவது தேடுவதற்கு முன்பாகவே பிணியாளி உயிரிழக்கும்படியும் நேரிடும். க்ஷத-காஸத்தினால் வருந்தும் பிணியாளியை எப்பொழுதும் படுக்கையிலேயே படுத்திருக்கச் செய்வதுடன், அவன் சாரீர வேலையாவது மானஸிக வேலையாவது ஒன்றுமே செய்யக் கூடாதென்றும் ஏற்பாடு செய்யவேண்டும். ஒன்றும் பேசாமல் — ஸாத்தியமான வரையில் மௌன



மாயிருந்துகொண்டு—வருவது நலம். முதுகைக் கீழேவைத்துத் தலை நிமிர்ந்து விரித்த கையும் விரித்த கால்களுமாய் அமர்ந்துப் படுப்பது அவசியமாகும். அவன் அமர்ந்து சிறிதும் உடம்பை அசைத்துப் புரட்டிக்கொள்ளாமலிருக்கும்படி எச்சரிக்கைசெய்து வருவதோடு, வைத்தியனும் அவன் தேஹத்தைப் பரீக்ஷிக்கையில் உடம்பை அதிகமாய் அசைக்காமல் ஜாக்கிரதையாகப் பரிசோதிக்க வேண்டும். இருமல் அடிக்கடியும் அதிக கிலேசமுண்டுபண்ணுவதாயிருந்தால், ஆங்கில வைத்தியர்கள் சர்மத்தினுள் அபினிச்சத்தை ஸூசிகாபரணம் (injection) என்னும் முறையில் குத்திச் செலுத்துவார்கள்; இவ்வித சிகித்ஸையினால் பிணியாளிக்கு வியர்வை அதிகமாய் உண்டாகாமலும், நாடி நடை மந்தப்பட்டும், மனதைப்பற்றிய சிந்தை முதலிய துர்க்குணங்கள் குறைந்தும் வருமாகையால், இருமலுடன் இரத்தக் கசிவும் பெரும்பாலும் சாந்தமாகும். வாஸாதி க்வாதத்தில்* அரை குன்று மணி யெடை அபினியைச் சேர்த்து, தினத்திற்கு மூன்று வேளை கொடுக்கலாம்.

இவனுக்கு அதிக உஷ்ணமில்லாததும், அதிக சீதளத்தைக் கொடுக்காததுமான உணவைக் கொடுத்து வரவேண்டும்; உணவு திரவமாகவும், அளவில் சொற்பமாகவும் இருப்பது நலம். நன்றாகக் கொதிக்கவைத்து, மட்பாத்திர முதலியவற்றில் சேர்த்துக் குளிரச்செய்த ஜலத்தைக் குடிப்பதற்கு உபயோகிக்கலாம். உத்தீபனகுணமுள்ள (stimulants) குடிவகைகளை, மிகவும் அவசியமான நிலைமை யேற்பட்டாலே யொழிய உபயோகிக்கக்கூடாது. பனிக்கட்டியை ஒரு பையில் கட்டி, மார்பில் இரத்தக்கசிவுக்கு ஆதாரமான ஸ்தலத்திற்கு நேராக வைப்பதும் இக்காலத்திய வைத்தியர்களுடைய முறையாகும். எர்காட் என்னும் ஔஷதத்தை இவ்வியாதியில் சில ஆங்கில வைத்தியர்கள் உபயோகிப்பதுண்டு; ஆனால், ஔஷதக்ரியைகளிலும் பிரயோகங்களிலும் நிபுணர் என்று பிரஸித்திபெற்ற டாக்டர் H. A. ஹேர் என்பவர், அதை உபயோகிக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கூறுகிறார்; அவ்வௌஷதம் இரத்தக் குழாய்களைத் தூண்டி, நன்மைக்குப் பதிலாகத் தீமையையே விளைவிக்கும் என்பது ஹேர் என்பவரின் கொள்கை.

ஹரீதக்யாதி சூர்ணம்.

| | | |
|---|---|---|
| கடுக்காயின் சூர்ணம் | 10 | குன்றுமணி யெடை. |
| காசுக்கட்டியின் சூர்ணம் | 2 | ஷை |
| அதிமதுரத் தூள் | 8 | ஷை |
| கோரைக்கிழங்கின் தூள் | 5 | ஷை |
| தான்றிக்காயின் தூள் | 5 | ஷை |

தேன் போதுமான அளவுகூட்டவும்.

மேற்கூறிய ஔஷதத்தை தினத்திற்கு மூன்று நான்கு வேளை உட்கொள்ளச் செய்து வரலாம். "கண்ட கார்யாதி அவலேஹம்" என்கிற *லேஹ்பத்தை (அந்த முறையின் ஔஷதச் சரக்குகளில் அடங்கிய சித்திர மூலத்தையும் த்ரிகடுவையும் விலக்கிவிட்டு) இப்பிணியாளிக்குக் கொடுப்பதால் குணம் உண்டாவதாகவும் தெரியவருகிறது.

க்ஷத-காஸ ரோகிகளுக்கு ஆனூபமான பிரதேசங்களைவிட (மிகவும் சதுப்பான இடங்களை விட) ஜாங்கலம் என்னும் (சதுப்பில்லாத) பிரதேசங்களே வாஸயோக்யமாயிருப்பதால், அவர்களை உன்னதமான மலைப்பிரதேசங்களில் வஸிக்கச் செய்வதாலும் சில ஸமயம் நல்ல பயனுண்டாகும்.

*ஆடா தோடை, திராக்ஷை, கடுக்காய் இவற்றை ஸமயெடையாகச் சேர்த்து, 8 பங்கு ஜலம் சேர்த்து, 1/16 இல் பங்காகச் சுண்டும்படிக் காய்ச்சி வடிகட்டி யெடுத்துக்கொள்ளவும். இது வாஸாதிக்வாதம் எனப்படும். இதில் பிறகு கொஞ்சம் தேனும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும்.

*கண்டகார்யாதி அவலேஹம் - இந்த முறை "வைத்தியகலாநிதி" ஆபீஸில் வெளியாயுள்ள சார்ங்கதர ஸம்ஹிதையில 114-வது பக்கத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது.

## GIDDINESS.
### தலைச்சுற்றல்.

"சிரோப்ரமணம்" என்றும் "தலைச்சுற்றல்" என்றும் கூறப்படும் இவ்விகாரம் அனைவருக்கும் ஸாதாரணமாகத் தெரிந்ததே. இது சிரஸ்ஸில் இயற்கைக்கு விரோதமாக இரத்த வோட்டம் நேரிடுவதால் அடிக்கடி ஸம்பவிக்கின்றது என்றும், ஆனால் தத்துவத்தை மிகக் கவனித்துப் பரீக்ஷித்தால், ஸாதாரணமாய் இரத்தவோட்டம் மூளையில் மாறண்படுவதால் அல்லது அளவில் மிகக்குறைவதால் ஸம்பவிப்பதாகத் தெரிய வருகிறதென்றும் பாமிலி டாக்டர் (Family Doctor) என்னும் பத்திரிகை கூறுகிறது; என்றால் மூளையில் இரத்தவோட்டக் குறைவினால் பாண்டு ரோகம் போன்ற கோளாறு உண்டாவதால் தலைச்சுற்றல் அடிக்கடியும் ஏற்படக்கூடும் என்று அறியப்படுகிறது. தேஹம் இங்குமங்கும் தள்ளாடிவிழாத ஒரு ஒழுங்கான சீர்தூக்கிய நிலைமையில் காக்கும் சக்தி (balancing power) குறைவு படுவதாலேயே வெகு ஸாதாரணமாய் தலைச்சுற்றல் உண்டாவது வழக்கம்; அப்பொழுது அம்மனிதன் நிற்க முடியாமல் (அல்லது தேஹத்தைத் தாங்கிக் கொள்ளும் திறமையிழந்து) பூமியில் விழுவான்.

இந்த நிலைமை பாண்டுரோகத்தைக் காரணமாகக்கொண்டு ஸம்பவித்ததானால், தலையைச் சாய்த்து, உடல் தலையைவிட சிறிது உயர்ந்து இருக்குமாறு செய்யவேண்டும்; மூளைக்கு இரத்தம் சுறுசுறுப்பாய் ஓடும்படி ஸௌகரியம் செய்வது அவசியம்; அப்படிச் செய்தால், மூளை தனது இயற்கையான வேலையைச் செய்யமுயன்று, தலைச்சுற்றலும் நிவ்ருத்தியாகும்.

இருதயம் பலங்குன்றி துடித்து வருவதும் தலைச்சுற்றலுக்கு ஒரு காரணமாகும்; அப்பொழுது இருதயம் மூளைக்கு இரத்தத்தை ஒழுங்கீனமாக மூளையின் இரத்தக் குழாய்களின் மூலமாய் இறைக்கும்; ஆகவே தலைச்சுற்றல் இதனால் உண்டாவது வழக்கம்.

வயிற்றுப் பொருமலால் இரைப்பை மேற்புறமாகத் தள்ளப்பட்டு, இருதயத்தின் செயலுக்கு ஒருவாறு இடையூறு நேரிடுவதும் உண்டு; அப்பொழுதும் தலைச்சுற்றல் ஸம்பவிக்கக்கூடும்.

திடீரென்று ஒரு மனிதன் தலையைக் குனிந்து கீழ்நோக்கிப் பார்த்தாலும் (அவன் பலக்குறைவாயிருந்தால்) அவனுக்கு, தற்காலம் மூளையில் இரத்தவோட்டம் குறைந்து இவ்விகாரம் உண்டாவது வழக்கம்.

எக்காரணத்தினால் தலைச்சுற்றல் உண்டானாலும், உடனே தலையைச் சாய்த்து கீழே படுத்துக்கொள்வதும் அவசியம். உடனே வெந்நீரைக்குடிப்பதும், குளிர்ந்த ஜலத்தால் தலையை நனைப்பதும் நன்மையுண்டாக்கும்.

வெயிலில் அதிகமாகத் திரிவதால் நேரிடக்கூடிய தலைச்சுற்றல் பலபேருக்கு உண்டு. அவர்கள் உடனே நிழலில் வந்து, தரையில் படுத்துக்கொள்ள வேண்டும்.

---

### ஒரு பெண்ணின் இரைப்பையில் மயிர்ச்சுருள்.

"அகாடமி ஆப் மெடிஸின்" என்னும் வைத்திய ஸங்கத்தில் டாக்டர் டௌரியாக் என்பவர் ஒரு அரிய விஷயத்தை அதன் அங்கத்தினரின் முன்பு அடியில் வருமாறு வெளியிட்டார்:—"சுமார் 13-வயதுள்ள ஒரு பெண்ணின் இரைப்பையில் அபரிமிதமான மயிர்ச்சுருள்கள் நிரம்பியிருந்தன. குழந்தைப் பருவத்தில் அச்சிறுமி தன்னுடைய தலை மயிர்களையும் மற்றும் ஆங்காங்கு காணப்படும் மயிர்களையும் சுருட்டி விழுங்கிவிடுவது வழக்கம் என்று தெரியவந்தது. இரைப்பைக் குழியும் கிரஹணீ (deodenum) என்கிற சிறுகுடலின் ஆரம்ப பாகத்தையும் மயிர்ச்சுருள்கள் அடைத்திருந்தன. ஜீர்ண சக்தி ரொம்பவும் இடையூறு அடைந்தது. பிணியாளி மிகவும் பலஹீனப்பட்டிருந்தாள். நான் பலவித பரீக்ஷைகள்செய்து பார்த்தும் விவரம் விளங்காமையால், இரைப்பையை சஸ்திர சிகித்ஸையினால் திறந்து பார்க்க நேர்ந்தது. அப்பொழுது இம்மயிர்ச் சுருள்கள் இருக்கக் கண்டு அவற்றை வெளிப்படுத்தியதில் அப்பெண் சுகமடைந்தாள்."



## FIRST AID IN ACCIDENTS.
### அபாயங்களில் பிரதம உதவி.

அக்னிதாஹமும், வெந்நீர் முதலியவற்றால் சுடப்படுவதும்:—நெருப்புத் தாக்குவதாலாவது, வெந்நீர் முதலியது மேலே கொட்டுவதாலாவது உண்டாகும் அபாயம் அதன் நிலைமையில் மூன்று வகைப்படும். (1) நெருப்பாவது வெந்நீர் முதலியதாவது தேஹத்தில் சொற்பமாகத் தாக்கியதால் சர்மம் சிவந்து வீக்கங்கொள்ளும். (2) கடும் வெப்பத்தினால் சர்மம் அதிகமாக அழன்று மிகவும் கொப்புளித்து விடும். (3) சர்மமாவது, அதற்கு அடியிலிருக்கும் தாதுக்களின் கட்டடமாவது மிகவும் சிதைவுற்று, அவ்விடங்கள் கறுப்பாகவோ மஞ்சள் நிறமாகவோ மாறுபாடு அடைந்து, அவ்விடத்திலுள்ள ஜீவசக்தி அழிவடையும்.

நெருப்பு சொற்பமாகத் தாக்கியிருந்தால், தேங்காயெண்ணெயில் நனைத்த நூற்சிலும்பையாவது (Lint), அல்லது அவ்விதமே எண்ணெயில் நனைத்த துணியையாவது, வாழையிலையையாவது வெந்துபோன இடத்திற் போடலாம். சுத்தமான பஞ்சை மேலே பரப்பி, கட்டுத்துணியினால் பந்தநம் செய்யலாம். இவ்விதம் செய்வதில் முக்கியமான உத்தேசம் என்னவென்றால்-வெந்துபோன அவயவத்தில் காற்று ஸம்பந்திக்காமல் செய்யவேண்டும் என்பதேயாம். சுண்ணாம்புத் தெளிவு நீரையும் நல்லெண்ணெயையும் கலந்து நன்றாகக் குலுக்கி, மேலே தடவி பந்தநம் செய்துவிடலாம்.

நெருப்பு அதிகமாகத் தாக்குவதானது, பெரும்பாலும் உடுத்தியிருக்கும் வஸ்திரத்தில் பற்றிக் கொண்டு ஸம்பவிப்பதாயிருக்கும். அப்படி உடுப்புகளில் நெருப்புப் பற்றியபோது, இங்குமங்குமாய் ஓடவே கூடாது; ஓடும்போது காற்றின் அசைவால் தீயானது வெகு வேகமாகப் பற்றியெரியும். நெருப்புப்பற்றிக் கொண்டதும் பூமியில் படுத்துப் புரள வேண்டும்; அப்பொழுது கோணி அல்லது சணற்றுணியையாவது, கனமான துப்பட்டிகளையாவது, இரத்தின கம்பளம் முதலியவற்றையாவது — வேறு ஏதேனும் கனமான துணிகளை அல்லது கம்பளங்களையாவது—உடம்பில் போர்த்துப் புரளலாம். இவ்விதம் செய்வதால் ஜ்வாலை அடங்கிவிடும். அவ்விதமான துப்பட்டி முதலியவை அகப்படாவிட்டால், ஜ்வாலை அடங்குகிறவரையில் தரையில் இங்குமங்குமாய் புரள வேண்டும். அருகில் இருப்பவர் ஜலத்தை வாரி தீப்பற்றியவன்மேல் இறைக்கலாம். ஜ்வாலை அவிந்ததும் பிறகு அவ்வபாயத்திற்குள்ளான மனிதனை படுக்கையில் சயனிக்கச் செய்யவும். அம்மனிதன் உடல் நடுக்கமுற்று, திகைத்துப்போய் மயக்கமடையக்கூடும்; அப்பொழுது அதிக அழற்சியும், குளிரும், நடுக்கமும் உண்டாகும். அந்த ஸமயத்தில் சூடான பானவகைகளில் (காப்பி-டீ-சுக்கு நீர் இவை முதலியவற்றுள்) எதையாவது கொஞ்சம் உட்கொள்ளக் கொடுக்க வேண்டும். புட்டிகளில் வெந்நீரைப் போட்டு பாதங்களில் அணைத்தாற்போல் வைத்திருக்கலாம். முதல் அதிர்ச்சி நிவ்ருத்தியானதும், அவரவருடைய வயதுக்குத் தகுந்த அளவில் சிறிது அபினியைக் கொடுத்தால், வேதனைகள் உணரப்படாமல் அடங்கியிருக்கும். தீப்பற்றிய உடுப்புகளை, தீயினால் தாக்கப்பட்ட அவயவங்களுக்கு வேறு விதமான சிதைவுகள் நேரிடாதபடி அவ்வவ்விடத்தில் கத்தரித்து விலக்கியெடுத்து விடவேண்டும். தீயினால் தாக்கப்பட்ட ஏதேனும் அவயவங்களில் துணி சர்மத்தோடு கெட்டியாகப் பற்றியிருந்தால், அதை அப்படியெ விட்டு விட்டு, சுற்றிலுமுள்ள பாகங்களைக் கத்தரித்து விலக்கிவிடவேண்டும். பிறகு துணி ஒட்டிக்கொண்டுள்ள இடங்களில் சுண்ணாம்புத் தெளிவு நீரோடு கலந்த எண்ணெயைத் ததும்ப விடவும். கொதிக்கும் வெந்நீர் முதலியதாவது நெருப்பாவது கைகளில் அல்லது பாதங்களில் தாக்கியிருந்தால், ரப்பர் அல்லது தோலால் செய்த மெல்லிய மிருதுவான பையில் அக்கையை அல்லது காலை நுழைத்து, அதை குளிர்ந்த ஜலத்தில் வைத்திருப்பது நல்ல முறையாகும். பிறகு சுண்ணாம்பு நீருடன் கூட்டி எண்ணெயை முற்கூறியவிதமாய் மேலே பூசவும். குளிர்ந்த ஜலத்தை வெந்துபோன அவயவங்களில் நேராக ஊற்றுவது அபாயம் விளைவிக்கக் கூடியதாம். சுண்ணாம்புத் தெளிவுநீர்-எண்ணெயைத் தடவிய பிறகு, நூற்சிலும்புகளையும் (Lints) பஞ்சுகளையும் மேலே பரப்பி, பந்தநம் செய்துவிடவேண்டும். குறைந்தது இரண்டு நாட்கள் வரையில் இக்கட்டுகளை அவிழ்க்கக்கூடாது. பிறகு முன்போலவே எண்ணெயைத்தடவி (கொஞ்சம்-5 முதல் எழெட்டு கிரைன் வரையில்பொராஸிக் ஆஸிட்டையும் கூட்டிக் கொள்வதும் நலம்) தினந்தோறும் அவிழ்த்து புதிதாக பந்தநம் செய்து வரவேண்டும். பிரதிதினமும் பிறகு அவிழ்க்கும்போது, கொதிக்கவைத்து இளஞ்சூடாக ஆறிய ஜலத்தை மெதுவாக அவ்விடங்களில் விட்டு, அழுக்குகளை முற்றிலும் பஞ்சுனால் கழுவி சுத்தம செய்து வரவேண்டும்; அவ்வாறு கழுவும்போது, எற்கனவே அழன்று போயுள்ள சர்மம் புரண்டு சிதைவடையாமலிருக்கும்படி ஜாக்கிரதையாக அவ்வேலையைச் செய்யவேண்டும். கொப்புளித்து மேலெழும்பிய சர்மங்களை மட்டும் மெதுவாகக் கத்தரித்து விலக்கிவிடுவது நலம். உடம்பில் அதிகபாகம் வெந்து போயிருந்தால், கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு பாகத்திலுள்ள கட்டுகளை மெதுவாக விலக்கி, அவ்விடங்களுக்கு பந்தநம் செய்து, பிறகு மற்றொரு பாகத்தை அவிழ்த்துக்கட்டுவது நல்லமுறை; எல்லாப் பாகங்களையும் ஒருமிக்க அவிழ்த்து, வெளிக் காற்று அவற்றின் மீது படும்படி வைத்தால், அல்லது குளிர்ந்த ஜலம் படும்படியாகச்செய்தால், சீழ்முதலியது பிடித்து அபாயம் விளைவது நிச்சயம். வெந்துபோன பாகத்திலுள்ள சர்மம் ஒருவிதமாகச் சிவப்பு நிறங்கொண்டு, சுத்தமாகவும் ஆரோக்கிய நிலைமையைப் பெறுவதாகவும் காணப்படும்போது, முன்போலவே சுண்ணாம்புநீர்-

எண்ணெயில் மெல்லிய துணியை நனைத்து அதை மாத்திரம் மேலே சுற்றியிருத்தல் போதுமானது. விரணங்கள் ஆறிப்போய், புதிய சதை வளர்ந்து வரும்போது, படிக்காரத் தூளைக் கொஞ்சம் அவ்விடங்களில் தூவி வரலாம்.

ஸாதாரணமாய் சர்மத்தின்மேல் தீப்பற்றியதற்குத் தேவையான விஷயங்கள் மட்டும் சுருக்கமாக இங்கு விவரிக்கப்பட்டன. தீயானது அதிகமாகப்பற்றி தேஹத்தில் உட்புற அவயவங்களுக்கும் தீங்குண்டாகுமாறு ஏதாவது கொடிய அபாயம் நேர்ந்திருந்தால், உடனே முற்கூறிய சில சிகித்ஸைகளை மேற்புறத்தில் மாத்திரம் பிரயோகித்து விட்டு, தாமதம் செய்யாமல் ஸமீபத்திலுள்ள வைத்திய சாலைக்கு அம்மனிதனை ஜாக்கிரதையாகக் கொண்டு போகவேண்டும்.

---

## DRUGS AND MEDICINES.

## ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

### முந்திரிகை.

இச்சிறிய மரம் இந்தியாவில் மணற்பாங்கான பிரதேசங்களிலெல்லாம் வளர்ந்திருப்பதும், இவற்றின் கனிக்காகவும், அக்கனிகளின் முனையில் வெளிப்புறமாய் உற்பத்தியாகும் கொட்டைக்காகவும் இம்மரம் பெயர் போன்றதாயிருப்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே.

(1) இதன் பழம் இரத்த-பித்தத்தையும், ச்வாஸ காஸத்தையும் சமநம் செய்வதற்கு உபயோகப்படும்; ஆகவே இதை அப்பிணியாளிகளுக்கு விசேஷமாய் புஜிக்கக் கொடுக்கலாம். (2) ஸ்தம்பந குணமுள்ள இக்கனியின் சாறு மஹோதர ரோகத்திலும் உபயோகிக்கத் தகுந்ததென்று சில வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். (3) இதன் வித்திலிருந்து இறக்கப்படும் தைலமானது போஷண குணமும், ஸ்நிக்தத்தன்மையும் அல்லது செழுமையுண்டாக்கும் தன்மையும் உடையதாகையால், தேஹம் குளிர்ந்து போஷிக்கப்படுவதற்காக, சர்க்கரை முதலிய இனிய வஸ்துக்களையும் கலந்து பாலைப்போல் செய்து உட்கொள்ளக் கொடுக்கலாம். (4) கொட்டையின் ஓட்டினுள் ஒருவித தைலம் அடங்கியிருக்கிறது; அதை யெடுத்து ஔஷதமாய் உபயோகித்ததில், அது பட்டவிடங்களில் தாஹகாரியாக (Rubefacient) வேலை செய்து, கொப்புளிக்கச் செய்வதாகவும் தெரியவந்தது; வாதரக்தம் எனப்படும் குஷ்டத்திலும், சர்மதளம் எனப்படும் குஷ்டத்திலும் இது உபயோகித்துப் பரீக்ஷிக்கக்கூடிய தைலமாகும். கடுமையான சிரங்குகளையும், பருக்களையும் கொப்புளிக்கச் செய்து ஸ்வஸ்தப்படுத்தவும் உபயோகப் படக்கூடியதென்று தெரியவருகிறது. இத்தைலம் பாதங்களில் நேரிடும் வெடிப்புகளையும் குழிகளையும் ஸ்வஸ்தம் செய்வதற்கும் உபயோகிக்கக் கூடியதாகும்.

---

### தாளிஸாதி சூர்ணம்.

| | | |
|---|---|---|
| தாளிஸப் பத்திரி | பாகம் | 1 |
| மிளகு | ,, | 2 |
| சுக்கு | ,, | 3 |
| திப்பிலி | ,, | 4 |
| மூங்கிலரிசி | ,, | 5 |
| இலவங்கப்பட்டை | ,, | ½ |
| ஏலக்காய் | ,, | ½ |

மேற்குறிப்பட்ட அளவில் இச்சரக்குகளை யெடுத்துப் பொடிசெய்து, வஸ்திரகாளிதம் செய்துகொண்டு, 32 பங்கு சர்க்கரையைச் சேர்த்து குப்பியில் எடுக்கவும். இது "தாளிஸாதி சூர்ணம்" எனப்படுகிறது, இது மிகவும் சிலாக்கியமான ஔஷதம் என்று கிரந்தங்களிலும் வைத்தியர்களுடைய அநுபவத்திலும் காணப்படுகிறது. இதை சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறப்படுகிறபடி காஸத்தினாலும், ச்வாஸத்தினாலும், ஜல தோஷத்தினாலும், அஜீர்ணத்தினாலும் வருந்திய அநேகம் பிணியாளிகளுக்குக் கொடுத்ததில் சீக்கிரத்திலேயே ஒவ்வொரு ரோகிக்கும் குணமுண்டானதாகத் திருக்கழுக்குன்றத்து வைத்தியர் மிஸ்டர் தேவராஜமுதலியார் அவர்கள் நமக்கு எழுதுகிறார்.

வயது முதிர்ந்தவர்களுக்கு ½ தோலா எடையும், சிறுவர்களுக்கு ⅛ தோலா எடையும், தேனில் கலந்து உட்கொள்ளக் கொடுக்கலாம். ஆஹாரத்தில் விருப்பமில்லாமலிருக்கும் போது இதை தினத்திற்கு மூன்று வேளை வீதம் உபயோகித்தால் தீபந சக்தியும் உண்டாகும்.

---

### கஞ்ஜா இருமலுக்கு.

பல காரணங்களால் உண்டாகிற காஸம் அல்லது கோழையினால் ஏற்படும் இருமல் நீடித்த நாட்களாயுண்டானதாயிருந்தாலும், அதிக உபத்திரவங்களைக் கொடுக்கக் கூடியதா யிருந்தாலும் அடியில் குறிப்பிடப்படுகிற ஔஷதயோகம் (Prescription) அவ்வித இருமலை நிவ்ருத்தி செய்யத் தகுந்தது:—

| | | |
|---|---|---|
| கஞ்ஜாவின் திரவச்சத்து | 1 | ட்ராம் |
| இபிகாக் ஷர்பத்து (Syr. ipecac) | 1 | அவுன்ஸ் |
| டோலு ஷர்பத்து (Syr. tolu) | 2 | ,, |
| சுத்தமான ஜலம் சுமார் | 1 | ,, |

கஞ்ஜாவின் அளவை அந்தந்த பிணியாளியின் வயதுக்கும் வியாதி நிலைமைக்கும் தகுந்தவாறு சிறிது குறைத்தும், அல்லது சிறிது அதிகப்படுத்தியும் உபயோகித்துக் கொள்ளலாம். இதனால் எவ்வித இருமல்களிலும் வெகு சீக்கிரத்தில் குணம் உண்டாகிறது.—Therapeutic Record.

---



### பழச்சாறு மலபந்தத்திற்கு.

மலபந்தத்தினால் சிசுக்களுக்கு அநேகவிதமான வியாதிகள் வருவது ஸஹஜம்; வாந்தியாவது, வயிற்றுப்பொருமல், பசியின்மை, மாந்தக்கட்டி, இசிவு முதலிய கோளாறுகளில் பெரும்பாலும் மலபந்தமே குழந்தைகளுக்கு மூல காரணமாகும். இதைப் போக்குவதற்கு தீக்ஷ்ணவீர்யமுள்ள பேதி மருந்துகளைச் சிறு குழந்தைகளுக்குக் கொடுப்பது விவேகக்குறைவென்றே சொல்லவேண்டும். ஒருமாதம் முதல் 3-வது மாதம் வரையில் தினந்தோறும் கமலாக் கிச்சிலியின் சாற்றை இரண்டொரு தேக்கரண்டி யளவு குழந்தைக்குக் கொடுத்தால் மலபந்தம் உண்டாவதில்லை. பசியும் நன்றாய் உண்டாய் உணவும் ஜீர்ணமாகும். இரண்டாவது அல்லது மூன்றாவது மாதம் முதற்கொண்டு அத்திப்பழச்சாறு அல்லது கமலாக் கிச்சிலியின் சாறு 2 முதல் 4 தேக்கரண்டி அளவு வீதம் கொடுத்து வரலாம். அத்திப்பழச்சாறு குழந்தைகளுக்கு மிக்க உபயோககரமான தீபந ஔஷதமாகும்.—Family Doctor.

---

### அடுப்புக்கரி பற்களைச் சுத்தம்செய்ய.

கொஞ்சம் சுத்தமான அடுப்புக்கரியை நன்றாகப் பொடிசெய்து, அதைக்கொண்டு பல் துலக்கினால் பற்கள் வெண்மையாகக் காணப்படுவதோடு, அவற்றின் துர்நாற்றமும் விலகும்.

---

## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### வினா-71. கோஷ்டபாகம் அல்லது குடல் வேக்காடு.

"ஐயா, நான் ஒரு சிறுவனுக்கு வைத்தியம் செய்ய நேர்ந்தது. அவனுக்கு வயது 12 இருக்கும். 'உஷ்ண மேஹத்தினால்' நேர்ந்த வியாதியென்று நினைத்து ஒரு விதம் சிகித்ஸை செய்ய முயன்றேன். அவர்கள் இதற்குமுன் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆங்கில வைத்தியரிடம் பரீக்ஷித்ததில் அவர் இதை, 'ஸ்ப்ரூ' என்னும் வியாதி யென்று சொன்னாராம். 'ஸ்ப்ரூ' என்றால் அதை ஆயுர்வேத வைத்தியர் என்னென்று வழங்குவர்? அதற்கு ஸாதாரணமாய் செய்யப்படும் சிகித்ஸை யென்ன? தயவுசெய்து "வைத்திய கலாநிதியின்" மூலமாய் பதில் கூறி ஸந்தேஹத்தைத் தீர்க்கும்படி பிரார்த்திக்கிறேன்." சே. கனகசபை ஆசாரி.

விடை:—தாங்கள் கூறுகிற விஷயத்தைக் கவனித்தால், ஆமதோஷம் அதிகரித்ததாலும், மலபந்தத்தினாலும் அச்சிறுவனுக்குக் 'குடல் வேக்காடு' உண்டாயிருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறோம். அதை "கோஷ்டபாகம்" என்றும் வழங்கலாம். ஆங்கிலத்தில் "ஸ்ப்ரூ" (Sprue) என்று கூறப்படும் வியாதி உஷ்ணதேசங்களில் உண்டாகக்கூடிய குடல் முதலிய உட்புற அவயவங்களைப்பற்றிய அழற்சியோடுகூடிய ரோகம். குடலின் உட்புறத்து சிலேஷ்மகலை (Mucous Membrane) வீக்கங்கொள்ளும். வாயில் புண்கள் உண்டாகும். அஜீர்ணமும், அதிஸாரமும் தொடரும். வயிற்றில் எரித்தலும் வேதனையும் இருக்கும். எழுந்து வேலை செய்ய உத்ஸாஹமாவது சக்தியாவது இராது. தாங்கள் "உஷ்ணமேஹம்" என்று சொல்லுகிற வியாதி இன்னதென்றும் எந்த வைத்திய நூலில் எழுதப்பட்டிருக்கிறதென்றும் எமக்குத் தெரியவில்லை. "உஷ்ணமேஹம்" என்பது சாஸ்த்ரீயமாய் இங்கே பொருத்தமானதல்ல.

சிகித்ஸை: ஆமணக்கெண்ணெயை (சுமார் ½ அல்லது ¾ பலம் அளவு) இரண்டு மடங்கு தேங்காய்ப் பாலில் கலந்து உட்கொள்ளக் கொடுக்கலாம். இதனால் இரண்டு மூன்று முறை விரேசனம் ஆகும்; குடலில் அழற்சியும் சிறிது குறைவடையும். கபித்தாஷ்டக சூர்ணத்தை' வேளைக்கு 15 அல்லது 20 குன்றுமணியெடைவீதம் தினத்திற்கு இரண்டு வேளை கொடுத்து வரலாம். சவ்வரிசிக் கஞ்சியும் பாலும் ஆஹாரமாகக் கொடுத்து வரலாம். ஏதாவது நல்ல பழங்களின் ஸ்வரஸமும் இவ்வியாதில் கொடுக்கத்தகுந்தது. பாலை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு, அதில் சிறிதளவு எலுமிச்சம் பழச் சாற்றைப் பிழிந்தால், சில நிமிஷங்களில் கட்டியும் தண்ணியுமாய் மாறும்; அதை வடிக்கட்டி உட்கொள்ளக் கொடுக்கலாம். பிணியாளியைப் படுக்கையிலேயே இருக்கச் செய்யவேண்டும். குளிர்ந்த ஜலத்தையாவது, காரமும் புளிப்புமான உணவுகளையாவது உபயோகிக்கக்கூடாது. ஈரத்தில் நடமாடுவதும் தகாது.—ப-ர்.

---

### வினா-72. ஒரு வைத்திய கிரந்தம்.

"ஐயா, எனக்கு "ரஸரத்நாகரம்" என்னும் வைத்தியக் கிரந்தம் அவசியம் தேவை. அது எவ்விடத்தில் கிடைக்கும்? தேவநாகர லிபியிலாவது தெலுங்கு லிபியிலாவது இருந்தால் (தெலுங்கு அக்ஷரத்தில் இருந்தால் உத்தமம்) அது கிடைக்கக்கூடிய விவரத்தை அறிவிக்கக் கோருகிறேன். தங்களுக்குத் தெரியுமானால் தயவுசெய்து விலை விவரத்தையும் குறிப்பிட்டு எழுதுவது நலம்."

V. G. N.

விடை:—"ரஸரத்நாகரம்" தேவநாகர லிபியில் ஹிந்தி பாஷையிலுள்ள மொழிபெயர்ப்போடு பம்பாயில் பிரபல புஸ்தகவியாபாரிகளான 'வெங்கடேச

சாபகானு' என்கிற அச்சுக்கூடத்தாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் விலை விவரம் நமக்குத் தெரியாது. ரஸரத்நாகரத்தில் ரஸாயந கண்டம் என்கிற பாகம் மாத்திரம் மிஸ்டர் யாதவஜீத்ரிகம்ஜீ ஆசார்ய என்பவரால் தேவநாகர லிபியிலேயே அச்சிடப்பட்டிருக்கிறது. அதன் விலை 8 அணா. இப்புஸ்தகத்தை மேற்கூறிய கனவான் பெயருக்கு (372, Bora Bazar St., Fort, Pombay) என்று எழுதி வரவழைத்துக் கொள்ளலாம். தெலுங்கெழுத்தில் "ரஸரத்நாகரம்" அச்சிடப்படவில்லை.—ப-ர்.

---

## NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### லெப்டினெண்ட் கர்னல் கீர்திகர் காலஞ்சென்றார்.

மேமாதம் 9-ம் தேதியன்று லெப்டினெண்ட் கர்னல் K. R. கீர்த்திகர், I. M. S. (retired,) M. R. C. S., L. R. C. P., F. I.. and S. அவர்கள் காலஞ்சென்ற விஷயத்தைக் குறிப்பிட நாம் மிகவும் வருந்துகிறோம். இவர் புத்திவன்மையிலும் பல சாஸ்திரங்கள் ஸம்பந்தமான அறிவிலும் மிகப்பிரஸித்தி பெற்றவர். இவர் முதலில் பம்பாயில் பள்ளிக்கூடத்திலும் கலாசாலைகளிலும் படித்துத் தேர்ந்த பிறகு, 1874-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்குச் சென்றார். லண்டன் யூனிவர்ஸிடி காலேஜில் கல்விகற்று வருகையில், மிகவும் சாதுர்யம் வாய்ந்த மேதாவியென்று அங்குள்ள அதிகாரிகளால் மிகவும் புகழப்பட்டு, ஒரு வெள்ளிப் பதக்கத்தை வெகுமானமாகப் பெற்றார். மூளை ஸம்பந்தமான வியாதிகளின் தத்துவங்களை மிகத் திறமையுடன் அறிந்த புத்திமான் என்று சில வெகுமானங்களையும், ஆரோக்கிய சாஸ்திரத்தில் நிபுணர் என்பதற்காக வேறு சில வெகுமானங்களையும் அடையும்படியான பெருமையைப் பெற்றார். "பம்பாய் மாகாணத்திலுள்ள விஷப்பூண்டுகள்" (Poisonous plants of the Bombay Presidency) என்னும் நூலும், "இந்திய ஔஷதமூலிகைகள்" (Indian Medicinal Plants) என்னும் நூலும் வேறு சில நூல்களும் அவரால் இயற்றப்பட்டு, அநேக வைத்திய சாஸ்திரஞ்ஞர்களால் பெரிதும் புகழப்பட்டன. நாம் இக்கனவானைப்பற்றிக் குறிப்பிடவேண்டிய முக்கியமான விஷயம் மற்றொன்றுண்டு; அதாவது—ஆயுர்வேத வைத்தியத்தின் முற்போக்கில் அதிக சிரத்தையெடுத்துக் கொண்டவர் என்பதேயாம். 1913-ம் வருஷம் வடமதுரையில் (Muttra) நடந்தேறிய அகில - பாரத ஆயுர்வேத மஹாமண்டலத்தின் நான்காவது மஹாஸபையில் அக்கிராஸநாதிபதியாக இருந்து, "சென்ற நூற்றாண்டில் வைத்திய சாஸ்திரம் எவ்வளவுதூரம் விருத்தியாயிருக்கிறது" என்பதைப்பற்றி சிறந்ததோர் உபந்யாஸம் செய்தார். இக்கனவான் இறந்ததானது தேசத்திற்கும் முக்கியமாய் ஆயுர்வேதத்திற்கும் பெரிய நஷ்டமென்றே கூறுவோம்.

---

### ஒரு பெரும் புலிக்கு சஸ்திர சிகித்ஸை.

டெல்லியில் அவ்விடத்திய காட்சித்தோட்டத்தில் ஒரு பெரிய ஸைபேரியா நாட்டுப்புலி, அதன் கால் நகங்கள் மிகவும் பெரிதாக வளைவாக வளர்ந்து பாதங்களுக்குள் குத்தி இரணமுண்டாய் விட்டதனால், இப்பொழுது சஸ்திர சிகித்ஸை செய்யப்பட்டது. இருப்புக் கதவுகளுள்ளதாய் கெட்டியான ஒரு பெரிய பெட்டி அப்புலியிருக்கும் அறையினுள் மெதுவாகச் செலுத்தப்பட்டது. இதனுள் ஒரு இறைச்சித் துண்டு போடவே, அப்பெட்டியினுள் அவ்விலங்கு பிரவேசித்துவிட, இப்பெட்டியின் கீல் கதவு மூடிக்கொண்டது. பெட்டியில் விசேஷமாகக் காற்றுப்புகாதபடி அவ்வளவுகெட்டியாக அது அமைக்கப்பட்டிருந்தது. கிளோரோபாரம் அப்பெட்டியினுள் பீச்சிடும் குழலால்செலுத்தப்பட்டது. மிருகவைத்தியம்செய்யும் நிபுணர்,பெட்டிக்கு மேற்புறமாயிருந்துகொண்டு, அதன்மேல் அமைத்திருந்த கண்ணாடியின்வழியாக அப்புலிமயக்கம் வந்து விழுவதைக் கவனித்து வந்தார். நன்கு மயக்கமுண்டாய்விழுந்ததும், அச்சிகித்ஸகர் மெதுவாகப் பக்கக் கதவை கொஞ்சம் மேலே உயர்த்தி, அதன் விரணமுண்டானகாலை மெதுவாக இழுத்து, நகங்களையும் சீழ்க்கட்டிகளையும் அறுத்து, அவ்விடங்களைச் சுத்தம்செய்து, மருந்துகளைத் திணித்து கட்டுகளையும் கட்டி எளிதில் சிகித்ஸை செய்து விட்டார்.—Practical Medicine.

---

### ஆண்கொசுவும் பெண்கொசுவும்.

கொசுக்களில் ஆண் இனங்கள் எப்பொழுதுமே ஸாதாரணமாய் தீங்குண்டுபண்ணாத நல்ல ஜந்துக்கள். ஸஹஜமாகவே ஆண்கொசுக்கள் சாகபக்ஷிணிகள். செடி கொடிகளுடைய சாறுகளை உறிஞ்சு வளர்ந்து வருகின்றன. ஆனால் பெண் கொசுக்களோவென்றால் எப்பொழுதுமே மாம்ஸாஹாரங்களால் பிழைத்து வருகின்றன. பெண்கொசுவானது மிருகங்களுடையவும், பக்ஷிகளுடையவும், ஊர்வனவற்றினுடையவும், மனிதருடையவும் சதையைக்குத்தி இரத்தத்தை உறிஞ்சுகின்றது. பெண்கொசு நமது அறைகளில் நமக்குத் தொந்தரவை யுண்டு பண்ணிக்கொண்டு நம்மைச் சுற்றிலும் திரிவது வழக்கம். இவ்வாறு நமது இரத்தத்தைக் குடித்துக்கொண்டே, இடையில் சிலநாள் தண்ணீரில் சென்று, முட்டையிடும். ஒரு கொசு ஒரு தடவையில் நூற்றுக்கணக்கான முட்டைகளையிடும். மறுபடி மனிதர் முதலிய பிராணிகளிடம் வந்து இரத்தத்தைக் குடித்துவிட்டு, சிலநாட்களுக்கு ஒரு முறை ஜலத்தில் சென்று முன்போலவே முட்டையிடும். இப்படி ஒரே கொசு எண்ணிறந்த கொசுக்களை உண்டுபண்ணும்.

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

EDITOR:
Ayurveda Bhushan
**Pandit M. Duraiswami Aiyangar,**
Senior Physician,
S. K. P. D. Hospital.

பத்திராதிபர் :
ஆயுர்வேத பூஷணம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்திரியின்
பிரதான டாக்டர்.

புஸ்தகம் 4. Vol. IV. | பிங்களஹ ஆனி—ஆடிமீ. JULY—1917. | ஸஞ்சிகை 11. No. 11.

## COMMON SENSE AND CONSUMPTION.

## ச்வாஸாசயக் கழலையும் ஸாதாரண அறிவும்.

By R. NARAYAN, L. M. S.,
*Physician and Surgeon.*

ச்வாஸாசயக் கழலையென்பது புப்புஸங்கள் என்கிற நுரையீரலைப்பற்றிய க்ஷயரோகம். க்ஷயரோகங்களைப் பரீக்ஷிக்கும் முறைகளின் விஷயமாக டாக்டர் ஜான் B. ஸாவெஸ் என்பவர் சில முக்கியமான விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்; அவற்றைக் கவனித்து வருவது முக்கியமாய் வைத்தியத் தொழில் புரிபவருக்கு அவசியமாகும். பிணியாளியிடம் போகும் போது க்ஷயரோகம் அவனிடம் பற்றியிருப்பதாக அல்லது பற்றியில்லை யென்பதாக முன்னடியே நாம் ஒரு எண்ணத்திற்கு இடம் கொடுத்து விடலாகாது. அவஸர புத்தியே கூடாது. ஒரு தடவையில் ச்வாஸாசயக் கழலையின் பரிசோதனைக்கு வேண்டிய கோழை அல்லது காறித் துப்பப்படும் கழிவுப்பொருள் போதுமானவளவு கிடைக்காவிட்டாலும், அல்லது முற்றிலும் இல்லாமற் போனாலும் இரண்டு மூன்று தடவையோ அல்லது அநேகந்தடவையோ பிணியாளியைப் பரீக்ஷிக்க வேண்டும், சில அஸாதாரணமான கேஸுகளில், ச்வாஸாசயத்தில் வியாதிக் குறிகள் காணமுடியாதவையாயிருக்கையிலும், தேஹத்தின் பொதுவான நிலைமைகளைப் பரிசோதனை செய்வதும், மற்றும் வியாதிக்கு ஸம்பந்தமானவையென்று தோற்றும் விஷயங்களைக் கேட்டறிந்து கொள்வதும் அவசியமானவையாம். ச்வாஸாசயங்களைப் பற்றிய குறிகளைக் கொண்டே இந்த க்ஷயரோகத்தைப் பரிசோதித்து விஷய நிர்த்தாரணம் செய்வது அவ்வளவு சரியானதென்று சொல்லுவதற்கில்லை; பொதுவில் சரீரத்தைப்பற்றிய மற்றக்குறிகளைக் கவனிப்பதும் இதில் முக்கியமான பரிசோதனை முறையாகும். ஆனால் ஒவ்வொரு கேஸிலும் ச்வாஸாசயங்களைத் தீரவும் பரீக்ஷித்து வரவேண்டும். ஜ்வரம், நாடிநடை படபடத்திருத்தல், உடல் வறண்டும் நிறையில் குறைந்தும் வருவது, பலம் குன்றிப்போதல் முதலியவை க்ஷயத்தில் உடலைப்பற்றிய பொதுக் குறிகளாகும். தேஹத்தின் மேற்புறங்களில் (அதாவது சிரஸு தொண்டை முதலிய அவயவங்களில்) தோன்றும் இது ஸம்பந்தமான இலக்ஷணங்கள், அவற்றிற்கு எதிரிடையான குறிகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியாதவரையில், க்ஷயரோகத்திற்கு ஸம்பந்தப்பட்டவையென்று பாவிக்கலாம். அவ்விதமே

கீழ் அவயவங்களில் (வயிறு முதலானவைகளில்) க்ஷயத்திற்கு ஸம்பந்தப்பட்டவை போன்ற குறிகள் உண்டாயிருப்பதாகத் தோற்றிலும், நன்கு ஸித்தாந்தத்திற்கு வரத்தக்க இதர விசேஷ லக்ஷணங்கள் காணப்படாதவரையில் அவை க்ஷயரோகத்திற்கு ஸம்பந்தப்பட்டவையல்ல வென்றே சொல்ல வேண்டும். இப்பொழுது எக்ஸ்-ரே (x-ray) என்கிற ஒருவித புதிய உபகரணம் இவ்வியாதியைப் பரீக்ஷிப்பதற்கு உபயோகிக்கப் படுகின்றது; ஆனால் அப்பரீக்ஷையினால் ரோக விஞ்ஞான விஷயத்தில் விசேஷ இலாபம் உண்டாவது அரிது. ட்யுபர்குலின் டெஸ்டு (tuberculin test) என்னும் நவீன பரிசோதனை முறையினால் பிரயோஜனம் கிடையா தென்பதோடு, அதனால் தேஹத்திற்குக் கெடுதியும் ஸம்பவிப்பதுண்டு. காறி உமியப்படும் அல்லது இருமும்போது வெளியாகும் கோழையில் மெல்லிய இரத்ததாரை இரண்டொன்று காணப்படுவதைத் தவிர்த்து, தனியாக வாயிலிருந்தாவது நாசியிலிருந்தாவது இரத்தக் கசிவு திடீரென்று உண்டானால், அதற்கு எதிரிடையான குறிகள் தோன்றினாலே யொழிய அதை க்ஷயமென்றே சொல்லவேண்டும். உடற்சூட்டையும் நாடி நடையையும் தினம் ஒன்றுக்கு மூன்று நான்கு தடவை ஐந்தாறு நாள்வரையில் வரிசையாகப் பரீக்ஷித்து வரவேண்டியது அவசியம். இவ்வியாதியைப் பரீக்ஷித்து விஷய நிர்த்தாரணம் செய்வதற்கு முக்கியமான விஷயங்கள் என்னவென்றால்— வெகு ஜாக்கிரதையாகவும், நுட்பமாகவும் பிணியாளியின் ஒவ்வொரு வெளிப்புற உட்புற அவயவங்களைப் பரீக்ஷிப்பதும், அவனுடைய குடும்பத்தில் அல்லது ஸந்ததியில் இவ்வித வியாதி ஸம்பவித்ததுண்டா யென்கிற விவரமும், அவனுடைய பழக்கவழக்கங்கள், அவன் இருப்பிடங்களைப்பற்றிய நிலைமைகள், அவனுடைய வேலை, அல்லது உத்தியோகத்தின் தன்மை என்றும் இவைகளுமேயாம். சுருங்கச் சொன்னால், ச்வாஸாசயக் கழலையைப் பரீக்ஷிப்பதில் பொறுமையும், ஊக்கமும், தைரியமும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பொதுவான ஸாதாரண அறிவும் முக்கியமானவை.

## HABITS AND THEIR EFFECTS.

### பழக்கத்தின் பயன்.

By. T. A. AGASTYA SARMA.
*Physician and Surgeon.*

தீனியும் குடியும்:—தின்னும் உணவுக்கும் மதுபானத்திற்கும் நெருங்கிய ஸம்பந்தம் உண்டு. சாப்பாட்டுக்குங் கட்குடிக்கும் அவ்வளவு ஸம்பந்த மிருக்கிற தென்பது பெரும்பாலாருக்குத் தெரியாது. பசியைத் தணித்துப் புஷ்டி தருவதற்கு எவ்வளவு உண்ண வேண்டுமோ அதற்கு அதிகமாக ஒருவன் உணவருந்தினால், அஃதாவது, தீனி தின்பதில் தனக்கு இருக்கும் விருப்பத்தினால் அதிகமாகத் தின்றால், அந்தத் தீனிக்குத் துணையாகச் சாராயங்குடிக்க வேண்டியது அவனுக்கு அவசியமாயிருக்கின்றது. அப்படிக் குடியாவிடின், தின்ற உணவு ஜீர்ணமாகாதென்று அவன் எண்ணுகிறான். அதிகத் தீனியினால் விளையத்தக்க உபத்திரவங்களும் ஸங்கடங்களும் சிறு தொல்லைகளும் நோய்களும் மதுபானத்தினால் நீங்கிப் போகின்றன வென்று அவன் அனுபவத்திற் காண்கிறான். அதனால் ஸந்தோஷங் கொண்டு அவன் மிதமிஞ்சித் தின்று சாராயத்தைத் தாராளமாகக் குடிக்கத்தலைப்படுகிறான். சாராயத்தினால் மீதூணின் தீமை விலகிப் போகிறதென்று அனுபவத்தில் தெரிந்தவன் அதிகத்தீனி தின்பதற்கேனும், தாராளமாகக் குடிப்பதற்கேனும் பின் வாங்குவனோ? அந்த ஸ்வானுபவ ஞானத்தைக்கொண்டு, சாராயம் அவனுடைய தேகத்திற்கு ஒத்திருக்கிற தென்றும், அம்மட்டே யல்லாமல் அஃது அவனுக்கு நன்மையைத் தருகிற தென்றும் அவன் ஸித்தாந்தப் படுத்திக்கொள்கிறான்.

அங்ஙனம் அவன் தீர்மானித்துக் கொள்வது மடமை. நுட்பமான சாஸ்திர ஆராய்ச்சி



யின்மையால் அவன் தனக்குத் தோன்றிய பொதுவுணர்ச்சியைக் கொண்டு சாராயம் நன்மை செய்கிறதென்று எண்ணினான். ஆயாஸ பரிகாரமும், ஆரோக்கிய வுணர்ச்சியும், மனக்கிளர்ச்சியும் அவனுக்கு உண்டாயின. அவையனைத்தும் போலியே, உண்மையல்ல, வெறும் பிரமை. அந்தப் பிரமையும் நீடித்து நில்லாது. உணர்ச்சிகளைக் கெடுக்குந் தன்மையும், உணர்ச்சிக் கருவிகளைத் திமிர்க்கச் செய்யுந்திறமையும் சாராயத்திற்கு உண்டென்று இதுவரையிலே தெரிந்து கொண்டிருக்கிறோமல்லவா? மதுஸாரத்திற்குள்ள அந்தப் பெரும் பிரபாவத்தினால் சில்லறைத் தொல்லைகளும், குத்து, வலி, குடைச்சல், விவரித்துச் சொல்ல மாட்டாத ஸங்கடங்கள் ஆகிய இவையனைத்தும் அந்நேரத்திற்குத் தெரியாமற் போகின்றன; அவைகளை உணருஞ்சக்தி இல்லாமற் போகின்றது. பெருந்தீனியின் பல தொல்லைகளும் ஒழிந்து போயினவென்று அவன் எண்ணினான். ஸாதாரணமாக, எண்ணமெழுவது விருப்பத்தினாலே யன்றோ? இவ்விடத்தும் அவனுடைய விருப்பத்திற் கிசைந்தவாறு நோவில்லையென்னு மெண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. உண்மையை விசாரித்துப் பார்த்தால், அந்த மதுஸாரத்தினால் தீமைகள் அப்பொழுது வெளிக்கிளம்பாமல் பின்னால் பெருங்கேடு விளைப்பதற்காக ஒளித்துக் குவித்து வைக்கப்படுகின்றன. நாள்தோறும் இந்தத் தீமைக்குவியல் மேன்மேலும் வளருகின்றது. இவ்வாறு தீமைகள் பலப்படவே, ஒருநாள் திடீரென்று அவனுக்கு ஏதோ ஒருவிதமான கொடிய நோய் காண்கின்றது.

இயனிலையை (Nature) ஏமாற்றி விடலாமென்றும், தான் செய்யும் அவிவேகமான காரியங்களுக்கும், தினந்தோறுஞ் செய்யும் தேக துர்விநியோகத்திற்கும் உற்ற தண்டனையில்லாமல் தப்பிக்கொள்ளலாமென்றும் மனிதன் நினைக்கக்கூடும். அந்த நினைவு தவறு. ஏமாற்றிவிட்டதாகச் சிறிது காலம் நினைக்கலாம்; அதனால் விளையுங் கேடு மிகப் பெரிது. ஏமாற்றுகிற எண்ணம் முதிர்வதற்கேற்றவாறு கேடும் முதிரும்; முடிவில் பரிஹரிக்கமுடியாததாகும். இது திண்ணம்.

மிதமின்மையும் மதுபானமும்:—உலகத்தில் மனிதர் அனுபவிக்கக்கூடிய பற்பல வகைகளிலும் மிதமின்மையும் எங்கெங்கே அகப்படுகின்றதோ அங்கே மதுபானமும் உடனிகழ்ந்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. நீதி நெறியைக் கெடுக்கத்தக்க வியாபாரங்களிலும், சரீரத்தின் சீரைக் குலைக்கத்தக்க வியாபாரங்களிலும் மிதமின்மையுண்டானால், மதுபானமும் அதிகமாகின்றது. மிதமிஞ்சி அனுபவிப்பதில் அனேகருக்குப் பிரியம் அதிகம். அப்படிப்பட்டவர்களெல்லாரும் மதுபானத்திலும் பிரியங்கொண்டவர்களாக இருக்கிறார்கள். மீதூணும் மதுபானமும் எவ்விடத்தும் இணைபிரியாது கூடியே இருக்கின்றன. மீதூண் இருக்குமிடத்து மதுபானம் இல்லாதிருப்பது அருமை. அஃதாவது, பெருந்தீனி தின்பவர்கள் சாராயங் குடியாதிருப்பது அருமை. அதுபோலவே, தேகத்தைக் கெடுக்கத்தக்க வேறு பல தூர்த்தத்தனங்கள் இருக்குமிடங்களிற் பெரும்பாலும் மதுபானம் வழங்குகின்றது.

கண்விழித்தல், இரவில் நேரஞ்சென்று உணவருந்தல், இரவிற்கூடும் சல்லாபச் சபைகள், நீதியைக் கெடுக்கத்தக்க பலவகைக் காட்சிகள், கூத்துகள், நாடகங்கள், லீலாநடனங்கள், சிங்கார விலாசக்கச்சேரிகள் முதலிய ஆட்டபாட்டங்களும் வேடிக்கைகளும் உண்டானால், அவைகளுடன் மதுபானமும் கூடிக்கொள்கின்றது. அவைகளுக்கும் மதுபானத்திற்கும் இணக்கம் அதிகம். மதுபானம் இல்லையெனின், மேற்சொல்லிய வேடிக்கைகளெல்லாம் சுவையற்றுப் போகின்றன, அவைகளில் இன்பம் நாடுகிறவனுக்கு மதுபானம் இன்றியமையாத வியஞ்சனமென்று அவன் எண்ணுகிறான். இவ்வகைச் சிற்றின்பங்களோடு வியவகாரம் முடிவதில்லை. ஏனெனில், கொண்டாட்டமாகக் கூடியுண்டு குடித்துக் கொண்

தளிப்பதனால் காமாதுரமும் நீதிக்கேடான காரியங்களும் ஏற்படுகின்றன. மிதமின்மையினால் மதுபானமும், மதுபானத்தினால் மனமகிழ்ச்சியுடும் மெய்ம்மறதியும், அதனால் மிருகத் தன்மையான காமாதுரமும், அதனாற் பல வகை அக்கிரமங்களும் பரம்பரையாக உண்டாகின்றன.

மேற்சொல்லிய கொண்டாட்டங்களினாற் சிற்றின்ப வாசை திடப்படுகின்றது. அந்த அவா அதிகரிக்கின்றது, மேலும் மேலும் அனுபவிப்பதற்குத் தீவிரம் தடையின்றி ஏற்படுகின்றது. சிற்றின்பத்தின் ஆசை என்பதொரு பெரிய சாலை. அதனைத் திருப்தி செய்யத் தலைப்படுவது மிருகத்தன்மை. சிற்றின்பச் சாலை வெகு விசாலமானது; அதனில் நடத்தல் மிக்க எளிது. அந்தச்சாலையில் இறங்கி நடக்கத் தலைப்பட்ட பிறகு, மிருகத்தன்மையை அடக்கியாள முடியாது. அவ்வகன்ற சாலையில் மூர்க்கமாக ஓடிக்கொண்டிருக்கும் மிருகத்தைத் தடுத்து அடக்கி, நீதிநிதானம் என்னும் ஒடுக்கமான பாதைக்குத் திருப்புவது அஸாத்தியமான காரியம். காமசாரம் இறக்கமான பாதை; அதுவே அதோ கதி. இறங்குவது எளிது, ஏறுவது கஷ்டமன்றோ? நீதிநெறி ஏற்றமானபாதை; அஃது அகலமில்லாதது, ஒடுக்கமான வழி; அதனிற் செல்வது கஷ்டம். கஷ்டமான காரியத்தைச் சாதிப்பதே மனிதனுக்குப் பெருமை.

நிதானம் என்பது சொஸ்தபுத்தியினால் ஏற்படும். நிதானம் உள்ளவிடத்தில் நீதியும் மிதமும் தவறாதிருக்கும். இங்கே மிதம் என்பது நல்ல வஸ்துக்களை யனுபவிப்பதிலும் ஆகும். இவைகளிலேயே மிதமென்றால், கெட்ட விஷயங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? உண்பதிலும் குடிப்பதிலும் ஒறுப்புடையவன் வேறு எவ்வகையான அக்கிரமத்திற்கும் அமிதத்திற்கும் ஆளாகமாட்டான். மிதமின்மையால் நேரும் மோசம் அவனை ஒருபோதும் சாராது.

(தொடரும்.)

## BEWARE OF FLIES.*

### ஈக்கள் விஷயமான எச்சரிக்கை

A. B. OLSEN, M. D., D. P. H.

ஈக்களை அழிப்பதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு இது ஏற்ற தருணம். ஒவ்வொரு ஈயும் இப்பொழுது 150-க்கு மேற்பட்ட முட்டைகளை இடக்கூடும்; அம்முட்டைகள் பதினைந்து நாட்களுக்குள்ளாகவே குஞ்சுகளாகப்போய் பெரிதாகவும் வளர்ந்துவிடும். ஆகவே முதலில் ஈக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே காணப்பட்டபோதிலும், அவற்றை முடியவும் உடனே அழித்துவிடுவது நலம்.

அனைவருக்கும் அவசியமான காரியம்:—ஸர் ப்ரெடரிக் ட்ரீவ்ஸ் என்னும் மிகப் புகழ்பெற்ற வைத்தியர் ஈக்களின் மூலமாய் வியாதி பரவுவதைப் பற்றற ஒழிப்பதற்குக் கண்டிப்பான சில எச்சரிக்கைகளைச் செய்திருக்கிறார். "ஒவ்வொரு ஈயும் வியாதிகளைப் பரவச்செய்யும் கருவியேயன்றி வேறல்ல வென்பதை அனைவரும் கருத்துடன் கவனிக்கவேண்டும். இவ்வபாயத்தைப் பரிஹரிப்பதற்கான முறை ஜனங்களின் வசம் இருக்கிறது; ஆனால் அவர்களுக்கு இவை பொல்லாத சத்துருக்கள் என்று விஷயங்களை விளங்கச் செய்து அறிவு புகட்டவேண்டியதாயிருக்கிறது. ஈ என்ன செய்யக்கூடும், அல்லது என்ன செய்து வருகிறது என்பதை அவர்கள் நன்குணர்ந்தார்களானாலும் பிறகு அதற்குப் பரிஹாரம் செய்வதும் எளிதாகும். இவ்விஷய முணர்ந்தவர் அவ்விதம் செய்வது வெகு எளிதென்றாலும், இம்முயற்சி யென்னவோ மிகவும் சிலாக்கியமானது. வியாதிகளைத் தடுப்பதற்கான இம்முயற்சி மிகவும் ஸுலபமாயிருப்பதைக் கருதி, தாழ்மையான வேலையென்று பாவிக்காமல், இதை நிறைவேற்றுவதில் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறார்."

* Reproduced and translated from "Herald of Health."



சிறியோர் பெரியோர் உட்பட ஒவ்வொரு மனிதனும், ஒரு ஈயாவது தப்பிப் பிழைக்காதபடி செய்து, அதில் ஸமயங்களில் கவனம் செலுத்தி வந்தால், நாம் வியாதியின்றி, பெரும்பாலும் முன்னிருந்ததைவிட அதிக ஆரோக்கிய நிலைமையைப் பெற்றுவிடுவோம்; பெருவாரிவியாதிகள் நமதிடம் அணுகுவதும் குறைந்துவிடும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஈக்கள் பரவியுள்ள விடங்களில் தெளிப்பதற்கு சில திராவகங்கள் உண்டு; அவை ஈக்களிடம் மட்டும் விஷத்தன்மையைக் காட்டுமேயன்றி மற்ற ஜந்துக்களுக்கு எவ்வித தீங்கையும் உண்டுபண்ணுவதில்லை. ஈக்களைப் பிடித்து விடுவதற்கான ஒட்டுக்காகிதங்களும் உண்டு. அவையும் கடைகளில் சொற்பவிலைக்குக் கிடைக்கும்.

ஈக்களைக் கொல்லுவதற்கு முயல்வது அவசியமானாலும், அவை உண்டாவதற்கும் விருத்தியாவதற்கும் இடங்கொடுக்காமல் முன்னதாகத் தடுப்பது எவ்வளவோ மேலான காரியம்; வீட்டில் எதுவும் மிகவும் நிர்மலமாயிருக்கப் பார்ப்பதே அதற்கு அவசியமானது. ஈக்கள் சமையற்கட்டுகளிலும், முக்கியமாய் குப்பைகள் குவிந்திருக்கும் இடங்களிலும் வளர்ந்து, ஒன்று நூறாக விருத்தியாகின்றன. வீட்டுக்கு அருகிலுள்ள குப்பைத் தொட்டிகளில் கிருமிஹரமான (antiseptic) திராவகங்களை அப்போதைக்கப்போது தெளித்து வருவதோடு, அக்குப்பைகளை வாரந்தோறும் பயிரிடும் நிலம் முதலியவற்றிற்கு எடுத்துப்போய் கொட்டிவிடவேண்டும். இப்படிச் செய்துவந்தால் குப்பைகளில் ஈக்கள் விருத்தியாகமாட்டா. உபயோகமில்லாத எந்த வஸ்துவையும், முக்கியமாய் ஈரப்பசையுள்ள வஸ்துக்களை வீட்டில் கண்டவிடங்களிலும் எறிந்துவிடக் கூடாது. ஈரப்பசையுள்ள கழிவுப்பொருட்களில் ஈக்களுக்கு நாட்டம் அதிகம். ஸாதாரண கழிவுப்பொருட்களை அப்போதைக்கப்போது ஒரு கூடையில் போட்டு, தகுந்த மூடியால் மூடி வைத்து, காலையிலும் மாலையிலும் வெளியில் குப்பைத் தொட்டிகளில் கொண்டு எறிந்துவிடவேணும். ஸாத்தியமான ஸமயங்களிலெல்லாம் இக்குப்பைகளை எரித்துவிடுவது மேலான காரியம். குப்பைத் தொட்டிகள் சரியானபடி சுத்தம் செய்யப்படுகின்றனவாவென்று முனிஸிபல் அதிகாரிகளும் கிராமத் தலைவர்களும் நன்கு கவனித்துப் பரிசோதித்து வரவேண்டும்.

உணவுகளை மூடிவையுங்கள்:—இந்த நாகரிக காலத்திலும், ஜனங்கள் உணவுப்பொருட்கள் (அன்னம், கறிமுதலியவை) அடங்கியுள்ள பாத்திரங்களை மூடிவைப்பது அவசியமாயிற்றே யென்பதைக் கவனியாமல், அவ்வுணவுகளை ஈக்கள் மொய்க்கும்படி திறந்து வைத்திருப்பதை நாம் பார்த்து வருகிறோம். பக்ஷணக்கடைகளில் செய்யும் அநியாயம் இவ்விஷயத்தில் மன்னிக்கத் தகுந்ததல்ல. ஈக்கள் முதலிய ஜந்துக்கள் தொடாதபடி அப்பாத்திரங்களை நன்றாக மூடியிடவேண்டிய விஷயத்தில் அதிகாரிகள் கடுமையான சட்டங்களை யேற்படுத்தவேண்டும்.

கொடிய அபாயங்கள்:—ஸந்நிபாத ஜ்வரம், கபஜ்வரம், விஸர்ப்பஜ்வரம், ஈளை, விஷாதிஸாரம், சீதபேதி, க்ஷயம் முதலிய நுண்ணுயிர் ஸம்பந்தமான வியாதிகளைப் பரவச்செய்ய ஈக்களும் பேன்களும் கருவிகளாயிருக்கின்றன. ஒருவனுடைய தேஹத்திலுள்ள புண்களிலிருந்து சீழ் ஸம்பந்தமான நுண்ணுயிர்களை வேறு மனிதனிடம் பரவச்செய்வதற்கும் ஈக்கள் காரணமாகின்றன.

ஸர் ப்ரெடரிக் ட்ரீவ்ஸ் இது ஸம்பந்தமாய் மற்றொரு விஷயமும் சொல்லுகிறார்; அதாவது:—தென்னாப்பிரிக்காவில், யுத்தம் நடக்கிற ஸமயங்களில், பீரங்கிக்குண்டுகள் அல்லது துப்பாக்கி இரவைகளால் நேர்ந்த மரண விகிதத்தைவிட ஈக்களின் தொந்தரவால் நேர்ந்த மரணவிகிதம் அதிகமானது. ஈக்கள், பேன்கள், மூட்டுப்பூச்சிகள் முதலிய இஜ்ஜந்துக்கள் வியாதிகளை யுண்டுபண்ணும் நுண்ணுயிர்களைப் பரவச்செய்வதற்கு முக்கிய ஸாதனங்களாயிருக்கின்றன வென்பது அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆகவே இவைகளைக் கொன்றுவிடுவதற்கும், அவற்றை விருத்தியாகாமல் ஆரம்பத்திலேயே தடுத்து விடுவதற்கும் ஒவ்வொரு மனிதனும் முயன்றுவந்தால் நாம் அநேகம் வியாதிகளையும் வேரறுத்தவறுவோம். பொதுஜனங்களின் ஆரோக்கிய நிலைமையும் சுகவாழ்க்கையும் சிறப்படையும்.

# வைத்திய கலாநிதி.

பிங்கள௵ ஆனி—ஆடிமீ.


## THE RIGHT ROAD TO HEALTH.

## ஆரோக்கியத்தைக் கடைபிடிக்கும் நேர் வழி.

வைத்தியர்களிடம் சிகித்சைக்குப் போகும் ஒவ்வொரு பிணியாளிக்கும் நாம் சில விஷயங்களை உபதேசிக்க வேண்டியது கடமையென்று எண்ணி அடியில் வருமாறு எழுதுகின்றோம். வெகு நீடித்த வியாதிகளால் வருந்தும் பிணியாளிகளின் கஷ்டங்களை நிவ்ருத்தி செய்வது என்பது பலவிதமான தர்மங்கள் ஆகிற பர்வதத்தின் உச்சியில் இரத்தின தீபம்போல விளங்கக்கூடியது.

எந்த வியாதிக்கும் சிகித்சை செய்ய முயல்வதற்குமுன் வைத்தியனுக்கும் பிணியாளிக்கும் எவ்விதத்திலும் ஒற்றுணர்ச்சியும் அபிமான புத்தியும் ஏற்படவேண்டியதோடு, பிணியாளியின் தேஹ நிலைமையைப்பற்றிய எல்லா விஷயங்களும் வைத்தியனால் அறியப்படவேண்டும். நீங்கள் சில காலமாய் வியாதிக்கிரஸ்தர்களாயிருந்து வரக்கூடும்; அநேகம் சிகித்சைகள் செய்து கொண்டும் இருப்பீர்கள். உங்களுடைய வியாதிக்குத் தகுந்த ஔஷதம் கிடைப்பதற்குப் பாடுபட்டும் உங்களுடைய முயற்சி நிஷ்பிரயோஜனமாயிருக்கலாம். வைத்தியத்தொழில் புரிபவர், உங்களுடைய வியாதிக்குத் தகுந்த பரிஹார முறையைத் தெரிந்து சொல்வதற்கு முன்பு, ஸாத்தியமான வரையில், உங்களுடைய வியாதி நிவாரணத்திற்கான வழியில் இடையூறாக நிற்கும் மனக்கோளாறுகளை முற்றிலும் விலக்கிக் கொள்ளவேண்டும். ஆனால் அவ்விதம் செய்வது சுலபமல்ல; இதற்குக் காரணம், நீங்கள் உங்களுடைய மனம் முதலியவற்றை அடக்கி ஆள்வதில் எவ்வளவு சக்தியுடையவர்களாயிருந்த போதிலும், வியாதியினால் பீடிக்கப்படும் தேஹமானது சீக்கிரமாகவோ நாளடைவிலோ மனதையும் வியாதியுள்ளதாகச் செய்துவிட வல்லது என்பதேயாம். எண்ணங்கள் வியாதிக்கிரஸ்தனுக்கேற்ற எண்ணங்களாயிருக்கும். உடம்பில் உண்டான கோளாறுகள் மனதைக் கெடுப்பதற்கு முக்கிய காரணமாயிருக்கின்றன. இவ்விஷய தத்துவங்களை உங்களுக்கு நாம் விளங்கக் கூறினோமாயின் உங்களுக்கு சிகித்சை செய்ய ஆரம்பிப்பதும் எளிதாகும்.

நீடித்த காலமாய் வியாதியால் வருந்துகிறவர்கள், தம்மை ஸ்வஸ்த்தம் செய்யக்கூடிய ஔஷதங்கள் சிலரிடம் இருப்பதாகக் கருதி, அதற்காக அலைந்தோடவதிலுண்டாகும் விருப்பம் வியாதியினால் தாக்கப்பட்டு விகாரமடைந்த மனதின் எண்ணங்களுள் ஒன்றாகும். ஒரு சரியான டாக்டரைத் தெரிந்தெடுத்து, அவரிடம், விஷபங்களை அறிவித்தால், அவர் தங்களுக்கு ஏதாவது ஔஷதத்தைக் கொடுக்கக்கூடும் என்றும், அல்லது தமது ரோகங்களை நிவ்ருத்திசெய்து மீண்டும் பழைய ஆரோக்கிய நிலைமையைப் பெறுவதற்கு அவசியமான சில விதிகளை அவ்வைத்தியன் தெரியச் சொல்வான் என்றும் இப்பிணியாளிகளுக்கு எண்ணமுண்டாகிறது. இந்த எண்ணம் சில பிணியாளிகளின் விஷயத்தில் சரியானதென்று சொல்லக்கூடுமாயினும், பெரும்பான்மையான ரோகிகள், தமது தேஹத்தின் சீர்கேட்டைத் தாங்க முடியாதவர்களாய் விஷய விவேசனம் செய்யத் திறமையற்றவர்களாய் வீணில் அவ்வித எண்ணத்திற்கு மனதை வசப்படுத்துவதாகவே கூறவேண்டும்.

நாம் கூறுவது உங்களுக்குப் புதுமையாகத் தோன்றும்; ஆகிலும் நாம் உண்மையைக் கூறுவதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. கூடுமானவரையில் பிணியாளி தனக்குத்தானே ஒரு வைத்தியனைப்போல் இருக்கவேண்டும். ஸமயங்கள் நேர்ந்தபோது பிணியாளிகள் தமக்கு உதவி செய்வதற்கு ஆரோக்



கிய மார்க்கங்களைப் போதிக்கும் திறமையுள்ளவர்களையோ, கசடறக்கற்ற வைத்திய ச்ரேஷ்டர்களையோ அழைத்து யோசனை செய்வது உசிதமாகும்; ஆனால் உண்மையைக் கவனித்துப் பார்த்தால், அவ்வைத்தியர்களோ ஆரோக்கிய சாஸ்திர போதகர்களோ சுதந்திரமாய் ஏதும் செய்யக்கூடாதவர்களாய் உங்களுக்கு நீங்கள் நிச்சயித்துள்ள காரியத்தில் உதவி செய்ய வந்தவர்களாகவே இருக்கவேண்டும்; அப்படித்தான் இருக்கவும் நேரிடும்; பிணியாளிகள், வைத்தியனை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு தமது வியாதியை நிவ்ருத்தித்துக்கொள்ள தங்களுடைய சொந்த முறையின் தோரணைப்படி நடந்து சிகித்சையை நிறைவேற்றுவார்கள். அதற்கு முன் நீங்கள் அடியில் வருமாறு சில விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

நீங்கள் எவ்வளவு காலமாய் வியாதிக் கிரஸ்தர்களாயிருந்து வருகிறீர்கள்? உம்முடைய வாழ்நாட்களில் கடந்து போன தினங்களைக் கவனித்துப் பாரும்; இப்பொழுதுள்ள வியாதி நிலைமையைப் பரிஹரித்து மறுபடியும் எவ்வித நிலைமையைப் பெறவேண்டுமென்று விரும்புகிறீரோ, அப்படிப்பட்ட ஆரோக்கிய நிலைமையுடன் வாழ்ந்து வந்த காலத்தின் கடைசி நாட்களை நினைப்பில் கொண்டுவாரும். முதன்முதல் ஆரோக்கியம் தவறிப்போன ஸமயத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளும். அவ்விதம் முதலில் உமது ஆரோக்கியம் கெடுவதற்கு ஆதாரமாக ஸம்பவித்ததென்ன? நாம் குறிப்பிட்டுக் கேட்பது நீர் இப்பொழுது அடைந்துள்ள நிலைமையைப்பற்றியதாகும்; இதன் ஆரம்பத்தில் என்ன நேர்ந்தது? நீர் வியாதியாய் விழுவதற்கு முன்பு உம்முடைய பழக்க வழக்கங்கள் எப்படிப்பட்டவையென்று நாம் உம்மைக் கேட்கிறோம்; என்றால் எவ்வித வேலைகளைச் செய்வதில் பழக்கம்? எவ்விதம் விளையாடுவது வழக்கம்? எவ்விதமான உணவுகளைப் புஜிப்பது வழக்கம்? எவ்விதமான தேஹவுழைப்புகள் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது? இவை வழக்கத்திலிருந்துவந்தபொழுது உமது காரியங்கள் எத்தகையவை.?

ஆனால் வியாதியானது கிரமக்கிரமமாக மெதுவாய் உண்டானதாயிருந்தால், உமக்கு வியாதி ஆரம்பித்த நாளையாவது வாரத்தையாவது விளங்கத் தெரிந்துகொள்ள முடியாமற்போகும் ; ஆனால் ஸாத்தியமானவரையில் வியாதி ஆரம்பித்ததற்கு ஸமீப காலத்தையாவது ஞாபகத்திற்குக் கொண்டுவருவது அவசியம். நீர் வியாதிக்கிரஸ்தராகப் போவதற்கு முன்பும் பிறகு வியாதியினால் வருந்தும் போதும் அநுஷ்டானத்திலிருந்த பழக்க வழக்கங்களுக்குள்ள ஸம்பந்தத்தைக் கண்டுபிடிக்கக்கூடுமானால் அது எம்மைப்போன்ற வைத்தியர்களுக்கு ரோக நிதானமறிவதில் மிகவும் அவசியமாகும். இவ்விதம் பின்னாட்களில் உமது பழக்க வழக்கங்களைக் கவனித்து நினைவுக்குக் கொண்டுவந்த பிறகு உமது வியாதி பெரும்பாலும் அவ்விதமான பழக்கங்களுக்கு ஸம்பந்தப்பட்டதா யிருக்குமென்று நீரே நிச்சயித்துக்கொள்வீர்.

உம்முடைய பழைய பழக்கங்களை, வியாதி வந்த பிறகு சீர்திருத்த முயல்வதைவிட, அதே பழக்கங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது நலம். நீங்கள் இப்பரிஹாரங்களைத் தேடிக்கொள்வதற்காக வைத்தியர்களிடம் உங்களுடைய தேஹத்தை ஒப்புவித்து விடுகிறீர்கள். வைத்தியர்களோ உம்முடைய பழக்கங்களை விசாரித்தறிவதில்லை; ஆனால் பெரும்பான்மையோர் நீர் அறிவித்த தற்காலமுண்டாயுள்ள சில குறிகளைப் பார்த்து, அத்துடன் வியாதி நிதானம் நிச்சயிக்கப்பட்டதாக பாவனை செய்து, வெளியில் காணப்படும் அக்குறிகளை ஸ்வஸ்த்தம் செய்வதற்கென்று ஏதேனும் ஔஷதங்களைக் கொடுத்துவிடுவது வழக்கம். இதனால் உமது வியாதிக்குக் காரணமாயேற்பட்ட பழக்கத்தையே இன்னும் நீர் அநுஸரிப்பவராகிறீர். வைத்தியர் உபதேசித்தஔஷதம் உம்மை ஸ்வஸ்த்தப்படுத்த யோக்கியதை இல்

லாததாய் விடுகிறது; உமது தேஹத்தில் வியாதிக்குக் காரணமாயிருப்பவை தங்கியிருக்கும் வரையில் ஔஷதம் ஒரு குணத்தையும் உண்டுபண்ண முடியாததாயிருப்பது ஸஹஜமேயாம். பிறகு காலக்கிரமத்தில் இந்த ஔஷதாதிகள்பயனற்றவையென்றுநீங்களே தெரிந்துகொண்டு, எவ்விதமான பழக்கங்களால் தற்காலம் அநுபவிக்கும் வியாதி ஸம்பவித்ததோ, அப்பழக்கங்களையும் பரிஹரித்து, பழைய பழக்கங்களை மீண்டும் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியமென்று நினைப்பீர். இவ்வளவு நாட்கள் தேஹத்தில் ஊன்றிவந்த கோளாறுகள் பலம் பெற்று நன்கு நிலைத்து நிற்கக்கூடிய ஸ்திதியை அடைந்து விடுகின்றன. என்றால் வியாதி நிலைமையில் நேரிட்ட கோளாறுகள் பழக்கத்திற்கு வந்து அவை மீண்டும் விலக்கமுடியாதவைகளாய் விடுகின்றன.

இந்த ஸ்திதியில் யக்ருத் என்னும் கல்லீரலானது, தன்னை அடிக்கடியும் தூண்டுவதற்கு உபயோகமானவற்றை ஏற்றுக்கொள்வதற்குப் பழகிவிடுகிறது. அவ்விதமே இரைப்பையும், விருக்கங்களும், குடல்களும் புதிதான தீயப் பழக்கங்களுக்கு உட்பட்டு விடுகின்றன. தேஹத்தில் வெளிப்புற உட்புற அவயவங்களில் ஒவ்வொன்றும் பெரும்பாலும் மருந்துண்ணும் பழக்கத்திற்கு பவ்யப்பட்டு விடுகின்றது. மருந்துண்ணும் பழக்கத்திற்கு மாத்திரமேயல்ல, ஆனால் அநேகவிதமான அநாரோக்கியத்திற்கு அடிப்படையான அப்யாஸங்களுக்கு அவயவங்கள் யாவும் அடிமைகளாகி விடுகின்றன. மூளை நித்திரையுற முடியாத நிலைமை யென்னும் பழக்கத்தைப்பெற்று விடும். ஆகவே இம்மனிதன் படுக்கையில் சயனித்தாலும், தூக்கமின்றி வீழ்ந்திருப்பான், உடலுக்கு உதவாத உத்தீபன வஸ்துக்களைக் கிரஹிப்பதற்கு இரைப்பை எப்பொழுதும் அப்யாஸம் பெறும். குடல் அடிக்கடியும் விரேசந மருந்துகளைக் கிரஹித்துக்கொண்டே மலத்தை வெளிப்படுத்தக்கூடிய பழக்கத்தைப் பெற்று, அவ்வௌஷதமில்லாமல் தனக்குத் தானே மலத்தை வெளிப்படுத்த யோக்கியதை யற்றதாயாகும். மதுவகைகள் விருக்கங்களைத் தூண்டி மூத்திரத்தை வெளிப்படுத்தும்; சில காலம் சென்றபிறகு, இந்த அப்யாஸத்திற்கு உட்பட்ட விருக்கங்கள், மீண்டும் மதுபானமின்றியே மூத்திரத்தைச் சுரப்பிக்கத் திறமையற்றவைகளாய் விடுகின்றன. இப்படியே மற்ற அவயவங்களும் துர்வழக்கங்களுக்கு உட்பட்டு, அததற்கு இயற்கையில் ஏற்பட்ட வேலைகளைச் செய்யமுடியாதவைகளாய் விடுகின்றன. இவ்விதமே உம்முடைய வியாதிக்குக் காரணமான தீய வழக்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களை ஆலோசித்துப் பார்த்து வருவீரானால், உம்முடைய தேஹத்தில் வியாதி எப்பொழுது ஆரம்பித்ததென்றும், அது ஏன் எந்த ஔஷதத்திற்கும் வசப்படாமல் தொடர்ந்து வருகிறதென்றும் தெரிந்துக்கொள்ள ஸௌகரிய மேற்படும்.

உமக்கு நீரே யோசித்துப் பார்த்து இதை நிர்த்தாரணம்செய்து கொள்ளவேண்டும். உம்முடைய டாக்டர் இவ்விஷயங்களை உமக்காகப் பரியாலோசித்துப் பரீக்ஷிப்பது எளிதல்ல. உம்முடைய தேஹத்தில் எங்கெந்த அவயவங்கள் கோளாறடைந்திருக்கின்றனவென்றும், எவ்வெவ்வாறு கோளாறடைந்திருக்கின்றனவென்றும் வைத்தியர் பரீக்ஷித்துச் சொல்லக்கூடும். ஆனால் உம்முடைய வாழ்நாட்களில் முன்னால் உமது வியாதிக்குக் காரணமாயேற்பட்ட ஆசார விவஹாரங்களின் அப்யாஸாதிகள் ஸம்பந்தமான சரித்திரங்களைப் புறட்டிப் பார்ப்பதற்கு வைத்தியரால் முடியாது. அது உம்முடைய வேலையாகும்.

கடந்துபோன வாழ்நாட்களில் இடையில் வந்த சில புதிய அப்யாஸங்களையும், அவற்றை ஆரம்பித்த நாட்களையும், அவற்றால் நேர்ந்த ஸங்கடங்களின் வகைகளையும் விவரித்து உமது வைத்தியரிடம் ஒப்புவிக்கவேண்டியது



*விஷ குணமுமுள்ள அட்டைகளாலுண்டாகும் தீங்குகளும், பரிஹாரமும்.*

அவ்வித விஷகுணமுள்ள அட்டைகளைப் பிரயோகிப்பதால் சொரி, சிறங்குகள், அழற்சி, ஜ்வரம், தலைச்சுற்றல் என்னும் இவ்விகாரங்கள் ஸம்பவிக்கும். அவ்வித நிலைமையில் விஷஹரமாகவும் இரத்தபித்த விகாரங்களைப் பரிஹரிக்கத் தகுந்ததாகவும் உள்ள சிகித்ஸையைச் செய்யவேண்டும். $37\frac{1}{4}$.

*உபயோகிக்கக்கூடிய சுத்தமான அட்டைகள்.*

சுத்தமான ஜலத்தில் உற்பத்தியான அட்டைகளோவென்றால் விஷத்தன்மை நீங்கியவைகளாய், பாசிபோல் ஒருவாறு கறுநிறமுள்ளவைகளாகவும், திரண்டுருண்டு நீலமான மேல்வரிகளுடன் கூடியவையாகவும், ஒருவாறு மங்கல் நிறமான பிருஷ்டபாக முடையவையாகவும், வயிற்றில் மட்டும் சிறிதளவு பொன்னிறமாகவும், மெலிந்த தேஹமுள்ளவையாகவும் இருக்கும். 38, $38\frac{1}{2}$.

*இரத்த மதங்கொண்ட அட்டைகள்.*

சுத்தமான அவ்வித அட்டைகளையும் அவை குடித்த இரத்தத்தை நன்றாகக் கக்கச் செய்யாமல் விடுவதாலும், அடிக்கடியும் அவற்றையே இரத்த முறிஞ்சுவதற்குப் பிரயோகிப்பதாலும் ஜலத்தில் விடும்போது அவை கஷ்டப்பட்டு உறங்கி அசையக் கூடாமலிருக்கும்; அத்தகைய ஜந்துக்கள் இரத்தத்தினால் மதமேறிவிட்டதாக அறிந்து அவற்றை உபயோகிக்காமல் பரிஹரிக்க வேண்டும். $39\frac{1}{2}$.

*சுத்தமான அட்டைகளைப் பிரயோகிக்கும் வகை.*

எவ்வித தோஷமுமில்லாத மற்ற அட்டைகளை, மஞ்சள் அரைத்துக் கரைத்த ஜலத்தில் மிதக்கவிடவும்; அல்லது காடியிலாவது, மோரிலாவது விடவேண்டும்; மறுபடியும் எடுத்து சுத்த ஜலத்தில்விட்டு அவற்றிற்குத் தேறுதலுண்டு பண்ணவும். பிறகு அட்டைவிடவேண்டிய இடத்தில் நெய்யைத் தடவி, சஸ்திரத்தினால் கீண்டு இரத்தத்தை ஒரு சிறிது கசியச்செய்து, அட்டைகளை அவ்விடத்தில் கடிக்கவிடவும். அவை தலையை நீட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சும்; அப்பொழுது மிருதுவான வஸ்திரத்தினால் அவற்றை மறைத்துவைக்கவும்.[1] 40—$41\frac{1}{2}$.

*சுத்த ரத்தத்தை விட்டு அசுத்தத்தைமாத்திரம் அட்டைக் கிரஹிப்பது.*

அன்னப்பறவை ஜலங்கலந்த பாலிலிருந்து பாலைமட்டும் பிரித்துக் குடிப்பதுபோல, தேஹத்தில் அசுத்த ரத்தத்தோடு கூடவே சுத்த ரத்தமும் கலந்திருந்தபோதிலும், அதிலிருந்து அட்டை அசுத்தமான இரத்தத்தை மாத்திரம் முதலில் பிரித்துக் குடித்துவிடும். $42\frac{1}{2}$.

*அட்டையை விடுவிக்கவேண்டிய ஸமயமும் அதைக் கக்கச் செய்வதும்.*

கடித்த இடத்தில் குத்தல் வலியாவது, தினவாவது உண்டானால், உடனே அட்டையை இழுத்துவிட்டு, அதன் முகத்தில் சிறிது உப்பையும் எண்ணெயையும் தடவி, மிகவும் மிருதுவான அரிசிமாவால் ரூக்ஷமாகவும் செய்து இரத்தத்தைக் கக்கச் செய்யவும் வேண்டும். $43\frac{1}{2}$.

*ஒருமுறை இரத்தம் உறிஞ்சிய அட்டையை மீண்டும் உபயோகிப்பது.*

அவ்வாறு ஒரு முறை இரத்தங்குடித்து விடுவித்த அட்டைகளுக்கு இரத்த வெறி உண்டாகாமல் இருப்பதற்காக, அவற்றைப்பிடித்து மறுபடியும் ஏழு நாட்கள் வரையில் இரத்தம் உறிஞ்சுவதற்கு விடக்கூடாது. 44.

1. இரத்தத்தைக் குடிக்கும்போது பிணியாளி முதலியவர் மனதில் அச்சங்கொள்வர் என்று அட்டையை மூடவேண்டும் எனப்படுகிறது.

*ஸம்யக் வாந்த-அதிவாந்த-துர்வாந்தமான அட்டைகளின் இலக்ஷணங்கள். 1*

அட்டைகள் குடித்த துஷ்ட ரத்தத்தை நன்றாகக் கக்கியபிறகு, அவற்றிற்கு மீண்டும் முன்மாதிரியாகவே சுறுசுறுப்பும், பலமும் உண்டாகும். மிதமிஞ்சி இரத்தத்தைக் கக்கினால் அதிக வாட்டமுண்டாகும், அல்லது அவை இறந்துவிடும். வேண்டியவளவு துஷ்ட இரத்தத்தைக் கக்காவிட்டால் அட்டைகள் திமிர்த்துப்போய் மதங்கொண்டும் இருக்கும். 45.

*அட்டைகளைக் காப்பாற்றும் வகை.*

அட்டைகளின் வாயிலிருந்து ஊறும் சொள்ளு நீரும், மற்றும் ஏதேனும் வஸ்துக்களும் ஜலத்தில் விழுந்து அழுகிப் பதன்கெட்டுப்போய் அவற்றிற்குக் கெடுதி யுண்டுபண்ணுமலிருப்பதன் பொருட்டு, அந்த அட்டைகளை, மண்ணும் தண்ணீரும் நிரம்பிய வெவ்வேறு தொட்டியில் அப்போதைக்கப்போது மாற்றி மாற்றி விட்டுவரவேண்டும்; இல்லையேல், அவ்வாறு பதன்கெட்ட ஜலத்தின் ஸம்பந்தத்தினால் அட்டைகள் விஷப்பற்றுள்ளவைகளாய் விடும். 46.

*அட்டைகளை விட்டும் இரத்தம் அசுத்தமாயிருந்தால் செய்யவேண்டிய உபசாரம்.*

இரத்தம் இன்னும் அசுத்தமாயிருப்பதாகத் தெரியவந்தால், மஞ்சள், வெல்லம், தேன் இவற்றைக் கடித்த விடத்தில் நன்றாகத் தேய்த்து, அவ்விடத்திலிருந்தும் இரத்தம் நன்கு வெளிப்படும்படி செய்யவும். அப்பால், "சததௌத க்ருதம்" என்னும் நெய்யைக்கொண்டு[1] ஒற்றடம் கொடுத்து, சீதளமான களிம்புகளையும் அக்கடிகளின்மேல் பூசலாம். 47.

*அசுத்த ரத்தம் வெளியானதும் உண்டாகும் குணங்கள்.*

அசுத்தமான இரத்தம் வெளிப்படுத்தப்பட்டதும், உடனே வியாதியும் நிவ்ருத்தியாகும், உடம்பிலுண்டான வலி முதலியவைகளும் சாந்தமாய்விடும். $47\frac{1}{2}$.

*ஸ்த்தானம் விட்டுப் பெயர்ந்த இரத்தத்தை நன்கு வெளிப்படுத்தல்.*

அசுத்தமான இரத்தம் அதன் ஸ்த்தானத்திலிருந்து கிளப்பப்பட்டு, விரணத்தின் முகத்தில் வந்து நின்றுவிடுமானால், அப்பொழுது அந்த இரத்தம் பழகிப்போய் அம்லமாக ஆய்விடும். அவ்வாறு நேரிடாமலிருப்பதன்பொருட்டு அந்த இரத்தத்தை மறுபடியும் வடியச்செய்யவேண்டும். $48\frac{1}{2}$.

*அலாபு-கடிகைகளை உபயோகிக்கக்கூடாத நிலைமைகள்.*

சுரைக் குடுக்கைகளையாவது, கடிகைகள் என்னும் குடுவைகளையாவது, இரத்தம் பித்தத்தினால் தூஷிக்கப்பட்டிருக்கும்போது இரத்தத்தை வெளிப்படுத்துவதற்காக உபயோகிக்கக்கூடாது; அக்கருவிகளில் அக்னியைச் சேர்த்து உபயோகிக்க வேண்டியிருப்பதால், அவை இந்த நிலைமையில் தகாதவைகளாம்.[2] ஆனால் இரத்தம் கபத்தினாலாவது வாயுவினாலாவது கோளாறடைந்திருக்கும் நிலைமையில் அக்கருவிகளை உபயோகிக்கலாம். $49\frac{1}{2}$.

1. ஸம்யக் வாந்தம்—நன்றாக வமனம் செய்விக்கப்பட்டது. அதிவாந்தம்—அதிகமாக (மிதமிஞ்சிய) வமனம் செய்விக்கப்பட்டது; துர்வாந்தம்—போதுமாறு வமனம் செய்விக்கப்படாதது.

1. நூறுதடவை ஏதேனும் கஷாய வகைகளில் கடைந்தெடுத்த நெய்.

2. பித்தத்தை உஷ்ணவீர்யமான பதார்த்தங்கள் அல்லது சிகித்ஸைகள் விருத்திசெய்யுமாகையால், அக்னி ஸம்பந்தமுள்ள அலாபு-கடிகைகள் தகாதவை யென்று கூறப்பட்டது.



*ச்ருங்கத்தினால் இரத்தம் வெளிப்படுத்தக்கூடாத நிலைமைகள்.*

கபத்தினால் கோளாறடைந்த இரத்தம் இறுகிப்போகுமாதலால், அதை ச்ருங்கம் என்னும் பீச்சாங்குழலால் வெளிப்படுத்தக்கூடாது. ஆனால் வாத-பித்தங்களால் கோளாறடைந்துள்ள இரத்தத்தை ச்ருங்கத்தினால்[1] வெளிப்படுத்தலாம். $50\frac{1}{2}$.

*துஷ்ட இரத்தத்தை வெளிப்படுத்தும் பலவித முறைகள்.*

இரக்த மோக்ஷணம் செய்யவேண்டிய அவயவத்திற்குச் சிறிது மேலே கயிற்றாலாவது வஸ்திரத்தினாலாவது மேடுபள்ளமில்லாமல் கெட்டியாகக் கட்டி, இரத்தம் வெளிவருமாறு கீண்டு விடவும்; ஸ்நாயுக்கள்,[2] ஸந்திகள், எலும்புகள், மர்மஸ்த்தானங்கள் இவற்றில் சஸ்திரம் படக்கூடாது. கொந்தும் வாட்டமானது மேலிருந்து கீழ்முகமாகச் சாய்ந்ததுபோலவும், முதலில் கீழே ஆரம்பித்து கிரமமாக மேலேயும் சஸ்திரத்தினால் கொந்திக்கொண்டு போகவேண்டும்; கொந்துதல் அதிக ஆழமாகவாவது, ஒன்றுக்கொன்று வெகு நெருக்கமாகவாவது, நீளத்தில் குறுக்காகவாவது விழக்கூடாது; மேலும் ஒருமுறை கொந்திய இடத்திலேயே மற்றொரு முறை கொந்துவதும் தகாது. ஒரே இடத்தில் தங்கியுள்ள துஷ்ட இரத்தத்தைக் கொந்தியெடுத்துவிடலாம்; கட்டிப்போய் அல்லது தோய்ந்துள்ள இரத்தத்தை அட்டைகளைக் கொண்டு வெளிப்படுத்தலாம்; உணர்ச்சியற்ற அவயவத்திலுள்ள இரத்தத்தைப் பீச்சாங்குழலால் வெளிப்படுத்திவிடலாம்; உடலெங்கும் வியாபித்துள்ள துஷ்ட இரத்தத்தை விராவ்யதைகளால்[1] வெளிப்படுத்தலாம்; ஓரிடத்தில் அதிகமாகச் சேர்ந்துள்ள இரத்தத்தையும் கொந்தியெடுத்துவிடலாம்; ஆழமான ஸ்த்தலங்களிலுள்ள இரத்தத்தை அட்டைகளால் வெளியிடலாம்; சர்மத்தை ஆச்ரயித்துள்ள இரத்தத்தை ச்ருங்கத்தினாலாவது, குடுவையினாலாவது, சுரைக்குடுக்கையினாலாவது வெளிப்படுத்தலாம்; அகில சரீரத்திலும் வியாபித்துள்ள துஷ்ட இரத்தத்தை வெளிப்படுத்துவதற்குமட்டும் விராவ்யதை ஒன்றே சிறந்த சிகித்ஸையாகும். அல்லது வாத-பித்த கபஸ்த்தானங்களிலுள்ள துஷ்ட இரத்தத்தை முறையே ச்ருங்கத்தினாலும், அட்டைகளாலும், சுரைக்குடுக்கைகளாலும் வெளிப்படுத்தவுங்கூடும். 51-55.

*இரத்த ஸ்ராவத்தில் உண்டாகும் உபத்திரவத்திற்குப் பரிஹாரம்.*

எவனுடைய தேஹத்திலிருந்து இரத்தம் வெளிப்படுத்தப்பட்டதோ, அவனுக்குக் குளிர்ச்சியான பலவித பூச்சுகளால் வாயு பிரகோபம் அடையும்; அதனால் இரத்தம் வெளிப்படுத்தப்பட்டவிடத்தில் குத்தலும், தினவும், வீக்கமும் ஸம்பவிக்கும். அவ்வாறு கோளாறு ஸம்பவிக்கும் இடத்தை உஷ்ணமாகச்செய்து நெய்யால் ஒற்றிடம் கொடுத்து மெதுவாக நனைக்கவேண்டும். 56.

1. ச்ருங்கம்—184-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

2. ஸ்நாயு—190-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

1. விராவ்யதை—காரிரத்தக்குழாய்களைக் கொந்தி இரத்தம் வெளிப்படுத்துதல்.

## இருபத்தைந்தாவது அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள யந்திரங்களின் உருவங்களைக்காட்டும் படங்கள்.



1. ஸ்வஸ்திக யந்திரம் அல்லது ஸிம்ஹமாஸ்ய யந்திரம். (181-வது பக்கம்.)



2. ஸந்தம்ச யந்திரம்—பெரிது. (181-வது பக்கம்.)



3. ஸந்தம்ச யந்திரம்—சிறியது. (181-வது பக்கம்)



4. தாள யந்திரங்கள்—ஒற்றைத்தகடு ஒன்று இரட்டைத்தகடு ஒன்று. (181-வது பக்கம்.)



5. நாடீ யந்திரங்கள். (181-வது பக்கம்)



6. சல்ய நிர்க்காத நாடீ யந்திரம். (182-வது பக்கம்)



7. அர்சோயந்திரங்கள்—சிறியதும் பெரிதும் ஆக இரண்டு. (182-வது பக்கம்)



8. சமீயந்திரம். (182-வது பக்கம்,



9. அங்குலித்ராணக யந்திரம். (183-வது பக்கம்)



10. யோனிவ்ரணேக்ஷண யந்திரம். (183-வது பக்கம்)



11. கர்ப்ப சங்கு யந்திரம். (185-வது பக்கம்)



12. ஸர்ப்பபாண யந்திரம் என்னும் சலாகை. (185-வது பக்கம்)





13. சரபுங்க முகசலாகைகள். (185-வது பக்கம்)



14. படிச யந்திரம். (185-வது பக்கம்)



15. அச்மர்யாஹரண சலாகை. (185-வது பக்கம்)



16. ஸாதாரண சலாகை. (185-வது பக்கம்)



17. ஸர்ப்பபண யந்திரங்கள் என்னும் சங்கு யந்திரங்கள். (185-வது பக்கம்)



18. மார்ஜந சலாகை. (186-வது பக்கம்)



19. ஜலோதர யந்திரம் வயிற்றிலிருந்து (மஹோதரத்தை யுண்டுபண்ணும்) நீரை வெளியில் வடியச்செய்யும் யந்திரம்.



20. வஸ்தியந்திரம். (186-வது பக்கம்)



21. ச்ருங்க யந்திரம்.



22. ருக்ஷமுக யந்திரம் (கரடி வாயைப்போன்று பற்களமைந்த யந்திரம்.)



23. கங்காஸ்ய யந்திரம் (கழுகின் வாயைப்போன்ற முகமுடைய யந்திரம்.)



24. காகாஸ்ய யந்திரம் (காக்கையின் மூக்கு போன்ற முகமுடைய யந்திரம்.)



25. தரக்ஷுமுக யந்திரம் (சிவங்கி முகம்போன்ற யந்திரம்.)

## இருபத்தேழாவது அத்தியாயம்.

இனி ஸிராவ்யதவிதி[1] என்னும் விஷயத்தை விவரிக்கும் அத்தியாயம் கூறப்படுகிறது :—

*சுத்த இரத்தத்தின் இலக்ஷணங்கள்.*

சுத்தமாக இயற்கை நிலைமையிலுள்ள இரத்தம் சிறிது மதுரமும் சிறிது இலவணரஸமும் கலந்த சுவையுள்ளதாகவும், சீதமுமில்லாமல் உஷ்ணமுமில்லாமல் நடுத்தரமாகவும், தோய்ந்துபோகாமல் திரவமாகவும் இருக்கும் ; செந்தாமரைப்பூ, பட்டுப்பூச்சி, செம்பொன், முயல் ரத்தம் இவற்றைப் போல் சிவந்த நிறமுள்ளது. இவ்வித இரத்தத்தினாலேயே தேஹம் நிலைத்திருக்கின்றது. 1½.

*இரத்தம் கெட்டுப்போவதற்கான முகாந்தரங்கள்.*

அவ்வித சுத்தமான இரத்தம் பித்தகபங்களைக் கோளாறடையச்செய்யும் வஸ்துக்களால் அல்லது அவ்வித விஷயங்களால் பெரும்பாலும் தூஷிக்கப்படுகின்றது. 2.

*தூஷிக்கப்பட்ட இரத்தத்தினால் உண்டாகும் வியாதிகள்.*

அவ்வாறு தூஷிக்கப்பட்ட இரத்தமானது விஸர்ப்பம், வித்ரதி யென்னும் சீழ்க்கட்டி, மண்ணீரலின் வீக்கம், குன்மம், அக்னிமாந்தியம், ஜ்வரம், முகரோகம், நேத்திரரோகம், சிரோரோகம், வெறி, நாவறட்சி, வாயில் ஒருவகையான உப்புநீர் சுரத்தல், குஷ்டம், வாதரக்தம், இரத்தபித்தம், கார்ப்பும் புளிப்புமாக ஏப்பம் விடுதல், பிரமம் என்னும் தலைச்சுற்றல் என்கிற வெவ்வேறு விதமான இவ்வியாதிகளை ஸாதாரணமாய் உண்டுபண்ணுவது வழக்கம். மேலும் சீதளசிகித்ஸை, உஷ்ணசிகித்ஸை, ஸ்நிக்த்த சிகித்ஸை, ரூக்ஷசிகித்ஸை இவை முதலியவற்றை முறைதவறாமல் செய்தும், நன்கு ஸாத்தியமான நிலைமையிலிருப்பதாகத் தெரிந்தும் எவை நிவ்ருத்தியாவதில்லையோ அந்த வியாதிகளும் இரத்தம் பிரகோபித்ததால் ஸம்பவித்தவையாகும். 3-4½.

*விருத்தியான இரத்தத்தைக் குறைக்க ஸிராவ்யதை.*

முற்குறிப்பிட்ட வியாதிகளில் இரத்தம் பிரகோபித்திருக்குமாகையால், அவ்வாறு விருத்தியடைந்துள்ள இரத்தத்தை வெளியில் வடியச்செய்வதற்கு ஸிரையைக் கீறிவிடவேண்டும். 5.

*ஸிராவ்யதைக்குத் தகாதவர்களும் தகாத நிலைமைகளும்.*

பதினாறு வயதுக்குக் குறைந்த வயதினர், எழுபது வயதுக்கு மேற்பட்டவர், இரத்தமோக்ஷணம் ஏற்கனவே செய்துகொண்டவர், ஸ்நேஹ சிகித்ஸையை முன்னதாகச் செய்துகொள்ளாதவர்; அவ்விதமே ஸ்வேத சிகித்ஸை செய்துகொள்ளாதவர், மிதமிஞ்சி ஸ்வேத சிகித்ஸை செய்துகொண்டவர், வாதரோகமுள்ளவர், கர்ப்பிணிகள், பிரஸவித்தவர்கள், அஜீர்ணரோகிகள், இரத்தபித்தரோகிகள், ச்வாஸகாஸ ரோகிகள், அதிஸாரம்-உதரரோகம்-சர்த்தியென்னும் வாந்தி - பாண்டு - ஸர்வதேஹமும் வியாபித்த சோகை இவ்வியாதிகளால் பீடிக்கப்படுபவர் இவர்கள் யாவருக்கும் ஸிராவ்யதை செய்யக்கூடாது. மேலும் ஸ்நேஹபானம் செய்திருக்கையிலும், அவ்விதமே பஞ்சகர்மங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கையிலும் ஸிராவ்யதை செய்வது பிசகு. 6-7½.

*ஸிராவ்யதை செய்வதற்கு முன் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.*

ஸிராவ்யதை செய்யவேண்டிய விடத்தைத் தகுந்தவாறு கட்டாமல் ஸிராவ்யதை செய்யக்கூடாது ; குறுக்குவாட்டிலும் செய்யக்கூடாது ; ஸிரை யென்னும் இரத்தக்குழாய் கையில் அகப்படும்படி பருத்துக்கொள்ளாதிருக்கையிலும் அதைக் கீறக்கூடாது. அதிக குளிரும் அதிக சூடுமுள்ள காலங்களிலும், விசேஷமாகக் காற்று வீசும்போதும், மேகங்களால் ஆகாயம் மூடப்பட்டிருக்கையிலும் அபாயகரமான வியாதியாயிருந்தாலேயொழிய ஸிராவ்யதை செய்யக்கூடாது. 8, 8½.

*வியாதிகளுக்கு ஏற்றவாறு ஸிராவ்யதை செய்வதற்கான ஸ்தானங்கள்.*

சிரஸ்ஸைப்பற்றிய வியாதிகளிலும், நேத்திர ரோகங்களிலும் நெற்றியிலுள்ள ஸிரையையாவது, கன்னத்து ஸிரையையாவது, நாசிக்கு அருகிலுள்ள ஸிரையையாவது கீண்டுவிடவேண்டும். செவியிலுண்டாகும் வியாதிகளில் காதிலுள்ள ஸிரையையும், நாசியிலுண்டாகும் வியாதிகளில் மூக்கின் முனையிலுள்ள ஸிரையையும், பீநஸத்தில் நாசியிலுள்ள அல்லது நெற்றியிலுள்ள ஸிரையையும், வாயினுள் உண்டாகும் வியாதிகளில் நாக்கு-உதடு-முகவாய்க்கட்டை-தவடை இவற்றிலுள்ள ஸிரைகளில் ஏதேனும் ஒன்றையும் கீண்டு இரத்தத்தை வடியச்செய்யவேண்டும். தோளுக்கு மேற்பட்டுள்ள கிரந்திகள் கோளாறடைந்தால், அவற்றில் கழுத்திலும், காதிலும், கன்னத்திலும், சிரஸ்ஸிலும் உள்ள ஸிரைகளைக் கீண்டு இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். உன்மாதம் என்னும் பைத்தியரோகத்தில் மார்பிலும் கடைக்கண்ணிலும் நெற்றியிலுமுள்ள ஸிரைகளைக் கீறவேண்டும். அபஸ்மாரரோகத்தில் ஹநுஸந்தி யென்னும் முகவாய்க்கட்டையின் பூட்டிலாவது, முகவாய்க்கட்டையில் வேறெந்த விடத்திலாவது ஸிராவ்யதை செய்யவேண்டும் ; புருவங்களுக்கு இடையில் ஓடும் ஸிரையையாவது கீண்டு இரத்தத்தை வடியச் செய்யலாம். வித்ரதி யென்னும் சீழ்க்கட்டியிலும், பக்கச்சூலையிலும் தேஹத்தின் வலது இடது பாரிசங்களிலும், அக்குளிலும் மார்பின் மத்தியிலுள்ளதுமான ஸிரைகளைக் கீண்டுவிடவேண்டும். த்ருதீயகம் என்னும் ஒருநாள் விட்டு மூன்றாவது நாள் உண்டாகும் முறைக்காய்ச்சலில் தோள்களுக்கு நடுவில் இரத்தஸ்ராவம் செய்யவேண்டும். இடையில் இரண்டு நாட்கள் விட்டு நான்காவது நாள் உண்டாகும் சாதுர்த்திகம் என்கிற ஜ்வரத்தில் தோளுக்குக் கீழே இரத்தத்தை வெளிப்படுத்தலாம். சீதபேதியிலும், வயிற்றுவலியிலும் இடுப்பின் பின்புறத்தில் இரண்டு அங்குலத்தில் இரத்தஸ்ராவம் செய்விக்கலாம். சுக்ரமோஹம் என்கிற வெள்ளை நோயிலும், ஆண்குறியிலுண்டாகும் வியாதிகளிலும் ஆண்குறியின்மேலேயே இரத்தஸ்ராவம் செய்யலாம். கலகண்டம், கண்டமாலை இவற்றில் தொடையிலுள்ள ஸிரையைக் கீண்டு இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். க்ருத்ரஸீ என்னும் காலிலுண்டாகும் வாதரோகத்தில்[1] முழங்காலுக்கு நாலு அங்குலம் கீழேயாவது மேலேயாவது இரத்தஸ்ராவம் செய்வது முறை. அபசீயென்கிற வியாதியில்[2] இந்திரவஸ்தி யென்னும் காலிலுள்ள மர்மஸ்தானத்திற்கு இரண்டு அங்குலம் கீழே இரத்தஸ்ராவம் செய்யவேண்டும். தொடையில் நோயுண்டானால் கணுக்காலுக்கு நாலு அங்

1. ஸிராவ்யதவிதி—ஸிரை என்றால், காரிரத்தக் குழாய் ; அவ்வித இரத்தக்குழாய்களைக் கீறி இரத்தம் வெளிப்படுத்தும் முறைகளைக் கூறும் அத்தியாயம் எனப் பொருள்.



1. க்ருத்ரஸீ—காலில் முழங்காலுக்கு மேல் தொடையிலுண்டாகும் வியாதி.

2. அபசீ—ஒன்றன்பின் ஒன்றாக உண்டாகும் கிரந்திகள் போன்ற கட்டிகள்.

குலம் மேலே இரத்தமோக்ஷணம் செய்ய வேண்டும். க்ரோஷ்டுகசீர்ஷம் என்னும் முழங்காலிலுண்டாகும் வாதவியாதியிலும்[1] அவ்வாறே கணுக்காலுக்கு மேலே இரத்த ஸ்ராவம் செய்யவேண்டும். பாததாஹம் என்னும் உள்ளங்காலிலுண்டாகும் எரித்தலி லும், குடம்,[2] ஹர்ஷம்[3] என்கிற வாதரோகங் களிலும், பாதவெடிப்பிலும், வாதகண்டகத் திலும்,[4] சிப்பத்திலும்[5] க்ஷிப்ரமர்மத்திற்கு இரண்டு அங்குலம் மேலே இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். விச்வாசீ யென்னும் கையிலுண்டாகும் வாதவியாதியில்[6] க்ருத்ரஸீ யென்னும் வியாதிக்குச் செய்ததுபோலவே இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். 9-16¼.

குறிப்பிட்ட ஸிரை புலப்படாவிட்டால் இரத்தமோக்ஷணம் செய்யும் விதி.

சாஸ்திரத்தில் எந்த ஸிரையைக்[7] கீறி இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறதோ அந்த ஸிரை புலப்படாவிட்டால், மர்மஸ்தானமல்லாததும், குறிப்பிட்ட இடத்திற்கு ஸமீபத்தில் இருப்பதுமான வேறொரு ஸிரையைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தலாம். 17, 17½.

ஸிராவ்யதை செய்வதற்கு முன் அவசியமான ஏற்பாடு.

அப்பால் பிணியாளி தனது தேஹத்தை ஸ்நிக்த்தமாகச் செய்துகொள்ளவேண்டும்; முன்னதாகவே ஸிராவ்யதைக்கு வேண்டிய எல்லா உபகரணங்களையும் ஸந்நத்தம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இரத்த மோக்ஷணம் செய்துகொள்பவன் பலசாலியாயிருப்பதும் அவசியம். அப்பிணியாளிக்கு முன்னதாய் ஸ்வஸ்திவாசநம் முதலிய மங்களச்சடங்குகளையும் செய்துவைத்து, ஸ்நிக்த்தமான மாம்ஸரஸமென்ன அன்னமென்ன இவற்றையும் புஜிக்கச்செய்யவும். பிறகு அக்னிதாபத்தினாலும் வெயிலாலும் வியர்வை யுண்டாகும்படி ஸ்வேத சிகித்ஸையைச் செய்து, முழங்காலளவு உயரமான ஆஸநத்தில் உட்காரச்செய்யவும். மிருதுவான பட்டு வஸ்திரத்தினால் அப்பிணியாளியின் கேசமுனையைக் கட்டி, முழங்காலின் மேல் தனது முழங்கையை வைத்துக்கொள்ளச்செய்து, வஸ்திரமடங்கிய இரண்டு முஷ்டிகளாலும் மந்யா என்னும் நாடிகளைக்[1] கெட்டியாக அழுத்திப் பிடிக்கச் சொல்லவேண்டும். அந்த ஸமயத்தில் பற்களைக் கடிப்பதும், வலி யில் இரும்புவதும், கண்டத்தைப் பருக்கச் செய்வதும் அநுகூலமாகும். தோள்களின் மேல் வஸ்திரத்தைவிட்டு, அதைப் பின்புறமாக இழுத்து, இடதுகையின் ஆள்காட்டி விரலால் இடையில் அதைக் கௌவச்செய்து பின்புறத்தில் கட்டிவிடவேண்டும். வாயின் உட்புறத்திலுள்ள ஸிரைகளைத்தவிர மற்ற வெளிப்புறத்து ஸிரைகளைக் கட்டுவதற்கான முறை இங்ஙனம் கூறப்பட்டதாகும்.[2] 18-22.

1. க்ரோஷ்டுக சீர்ஷம்—முழங்காலிலுண்டாகும் வீக்கம்; இது தமிழில் நரித்தலைவாயு என்றும் கூறப்படும்.

2. குடம்—முடமாகப்போதல்.

3. ஹர்ஷம்—அல்லது பாதஹர்ஷம்; கால் மரத்துப்போய் உண்டாகும் சிலிர்க்கை.

4. வாதகண்டகம்—குதிகால்களை ஊன்றி நடக்க முடியாமலுண்டாகும் நோய்.

5. சிப்பம்—இதை நகச்சுற்று என்பார்கள்.

6. விச்வாசீ—தோளில் ஆரம்பித்து முழங்கையிலும் அதற்குக் கீழேயும் பரவும் ஒருவித வலியுடன் கூடிய வாதநோய்.

7. ஸிரை—காரிரத்தக்குழாய்.

1. மந்யா—கழுத்தின் பின்புறத்தில் காதுக்குக் கீழே இருபுறங்களிலும் ஓடும் ஸிரைகள். இவ்விடத்தைக் கெட்டியாகப் பிடித்தால், இந்த ஸிரைகளில் இரத்த வோட்டம் தடுக்கப்பட்டு அவை பருத்துக் காணும்.

2. ஸிரைகளை உத்தாபநம் (பருத்து எழும்பச்) செய்வதற்காக இவ்வாறு பந்தநம் அவசியமென்று கூறப்பட்டது.



ஸிராமோக்ஷம் செய்யவேண்டிய பொதுவிதி.

பிறகு வைத்தியன் தனது பெருவிரலால் நடுவிரல் முனையை இழுத்து வேகமாய் அந்த ஸிரையின் மேல் தாக்கும்படி அடிக்க வேண்டும். அப்பால் ஸிரையைப் பெருவிரலால் அழுத்தியோ அல்லது ஸாதாரணமாகப் பரிசித்தோ அது பருத்திருப்பதாகத் தெரிந்துகொண்டு, இடது கையில் குடாரீயென்னும் ஆயுதத்தை யெடுத்து, அதன் கருக்கு முனையினால் பருத்துக்காணும் ஸிரையின் மத்தியபாகத்தைக் கைநடுங்காமல் கீண்டுவிடவும். மறுபடியும் வ்ரீஹிமுகம் என்னும் சஸ்திரத்தினால் அந்த ஸிரையைத் தட்டி நன்றாகக் கீறிவிடவும் வேண்டும். 23-24½.

வெவ்வேறு அவயவங்களிலும் செய்யக்கூடிய ஸிராமோக்ஷண முறைகள்.

நாசிமுனையைப் பெருவிரலால் உயர நிமிர்த்தி, உபநாஸிகை யென்னும் நாசியில் உட்புறத்து அவயவத்திலுள்ள ஸிரையைக் கீறவேண்டும். நாக்கின் முனையை உயரத்தூக்கிப் பல்லால் அழுத்திப் பிடித்துக்கொண்டு, அதன் கீழுள்ள ஸிரையைக் கீறவேண்டும். கழுத்திலுள்ள ஸிரையைக் கீறவேண்டுமானால் மார்பில் ஸ்தநங்களுக்கு மேற்புறத்தில் பந்தநம் செய்யவேண்டும்; கையினுள் சிலையை அடக்கிக்கொண்டு முழங்காலின்மேல் கையை நன்றாக நீட்டிவிடவும்; வயிறு முதற்கொண்டு மார்புவரையில் கிரமமாக அழுத்திப் பிடித்து வந்து, மார்பின்மேல் வஸ்திரத்தைக் கட்டி விடவும்; இவ்வாறு கட்டியபிறகே கழுத்திலுள்ள ஸிரையைக் கீறவேண்டும். கையிலுள்ள ஸிரையில் இரத்தமோக்ஷணம் செய்ய வேண்டுமானால், முழங்கையை மடிக்காமல் புயத்தை நன்றாக நீட்டி, பிணியாளியை அமைதியாக உட்காரச்செய்து, பெருவிரலை உள்ளடக்கி முஷ்டிபந்தநம் செய்வித்து, சஸ்திரம் பிரயோகிக்கவேண்டிய இடத்திற்கு நான்கு அங்குலம் மேலே வஸ்திரத்தினால் பந்தநமிட்டு, அப்பால் புயத்திலுள்ள ஸிரையைக் கீறவேண்டும். [illegible]ரத்தில் எதையாவது இரண்டு புயங்களாலும் பிடித்துக்கொண்டு பிணியாளியைத் தொங்கச்செய்து, அப்பால் தேஹத்தின் பாரிசங்களிரண்டிலுமுள்ள ஸிரைகளைக் கீறவேண்டும். ஆண்குறியானது நிமிர்ந்து எழும்பியிருக்கையில் அதிலுள்ள ஸிரையைக் கீறவேண்டும். முழங்காலுக்குக் கீழேயுள்ள பாகத்தில் ஏதாவது ஸிரையைக் கீறவேண்டுமானால், முழங்காலை மடிக்காமலே செய்யவேண்டும். பாதத்தில் ஸிராவ்யதை செய்யவேண்டுமானால், பாதத்தை நன்றாகப் பூமியில் ஊன்றிவைத்து, இரு கரங்களாலும் முழங்கால் முதற்கொண்டு கணுக்கால் வரையில் அழுத்தமாகப் பிடித்து உருவிவிட்டு, அக்காலின்மேல் மற்றொரு பாதத்தை ஒருவாறு மடிக்கி வைத்துக்கொள்ளவேண்டும்; பிறகு புயத்தில் பந்தநம் செய்து ஸிராவ்யதையை நிறைவேற்றுவதற்குக் கூறியவிதமாகவே காலிலும் ஸிராவ்யதையைச் செய்ய வேண்டும். உபாயங்களை நன்குணர்ந்த வைத்தியன், இன்னும் இங்கு குறிப்பிடாத விடங்களிலும் அததற்கேற்றவாறு பந்தநங்களையிட்டு, ஸிராவ்யதையை நிறைவேற்றவேண்டும். 25—32.

வ்ரீஹிமுகமும் குடாரிகையும் பிரயோகிக்க வேண்டிய அளவுகள்.

வ்ரீஹிமுகம் என்னும் சஸ்திரத்தின் முனை நன்கு சதைபருத்த அவயவத்தில் நெல் அளவு மாத்திரம் பிரவேசிக்கும்படியாகவும், குடாரிகை யென்னும் சஸ்திரத்தின் முனை எலும்புகளின்மேல் அரை யவப்பிரமாணம் புதையும்படியாகவும் பிரயோகிக்கப்பட்டு ஸிராவ்யதையை நிறைவேற்ற வேண்டும். 33.

ஸிராவ்யதை நன்கு நிறைவேறியதன் குறிகள்.

ஸிராவ்யதை வேண்டியவளவு நன்றாகச் செய்யப்படுமானால், தாரை போல் இரத்தம் நன்றாக வெளிவரும்; பந்தநத்தை அவிழ்த்துவிட்டால் இரத்தமும் தானே நின்றுவிடும். 33½.

*தாறுமாறாக அல்லது மிதமிஞ்சி ஸிராவ்யதை செய்வதனாலான தீமைகள்.*

வேண்டியவளவு நன்கு ஸிராவ்யதை நிறைவேற்றப் படாமற்போனால், இரத்தம் சொற்பமாக வெளிவருவதுடன் சொற்பநேரமே கசிந்துவரும்; தைலம் அல்லது ஏதேனும் சூர்ணத்தை அவ்விடத்தில் தடவினாலும் அந்த இரத்தப்பெருக்கு சீக்கிரம் நின்றுவிடும். மிதமிஞ்சிய ஸிராவ்யதையினால் இரத்தம் ஒருவிதமான சப்தத்தோடு வெளிவரும்; அதை மிகவும் கஷ்டப்பட்டுத் தடுக்கவேண்டிவரும். 34½.

*ஸிராவ்யதையில் இரத்தம் நன்றாக ஸ்ரவிக்காததற்குக் காரணங்கள்.*

பயம், மூர்ச்சை, கட்டுத்தளர்ந்துபோதல், கூர்மையில்லாத சஸ்திரங்களைப் பிரயோகித்தல், பிணியாளி அதிக திருப்தியடைந்து இன்பமுற்றிருத்தல், இளைத்துப்போயிருத்தல், மல-மூத்திராதி விஸர்க்கங்களைச் செய்யவேண்டிய நிலைமையிலிருத்தல், ஸ்வேத சிகித்ஸையைச் செய்யாமலே ஸிராவ்யதையைச் செய்தல் என்னும் இவை இரத்தம் நன்றாகப் பெருகாமற் போவதற்குக் காரணங்களாம். 35½.

*ஸிராவ்யதையில் இரத்தம் நன்கு வெளிவராமலிருக்கையிலும் வெளிவருகையிலும் செய்யும் சிகித்ஸை.*

இரத்தம் தகுந்தவளவு நன்றாகப் பெருகாமற்போனால் அப்பொழுது வாய்விடங்கம், த்ரிகடுகம், மஞ்சள், புலியுகிர், ஒட்டடை, உப்பு, தைலம் இவற்றை ஒன்றாகக் குழப்பி, கீறப்பட்டுள்ள ஸிரையின் வாயில் தேய்க்கவும். இரத்தம் நன்றாக வெளிவருமானால் இளஞ்சூடான தைலத்தினாலும் இலவணத்தினாலும் அவ்விடத்தைத் தேய்க்கலாம். 36, 37.

*துஷ்டரத்தம் சுத்தரத்தங்கள் வெளிவருவதன் குறிகள்.*

குஸும்ப புஷ்பத்திலிருந்து முதன்முதல் மஞ்சள்நிறமான திரவம் வெளிவருவதுபோல, ஸிராவ்யதையில் முதலில் கெட்டுப்போன இரத்தமே வெளியாகும். இரத்தம் நன்றாகக் கசிந்து அப்பால் அது தனக்குத்தானே நின்றுவிடுமாயின், அசுத்தரத்தம் நின்றுபோய் சுத்தரத்தமே இனி மிகுந்திருப்பதாய் அறிந்துகொண்டு, அதை அதற்குப் பிறகு வெளிப்படுத்தக்கூடாது. 38.

*ஸிராவ்யதையில் மூர்ச்சையுண்டானால் அதை நிறைவேற்றும் வகை.*

இரத்த ஸ்ராவம் செய்யப்படுகையில் மூர்ச்சை உண்டானால், கட்டியுள்ள பந்தநத்தை அவிழ்த்துப்போட்டு, விசிரிகளால் வீசியபின்பு, மறுபடியும் இரத்தத்தை வெளிப்படுத்தவேண்டும். அப்பொழுது மீண்டும் மயக்கமுண்டாய்விட்டால் அன்றையதினம் அதைச்செய்யாமல் அதற்கு மறுநாளாவது மூன்றாவது நாளாவது செய்யலாம். 39.

*வாதாதி தோஷங்களால் விகாரமடைந்த இரத்தத்தின் குறிகள்.*

வாததோஷத்தினால் இரத்தம் விகாரப்பட்டிருந்தால், அந்த இரத்தம் ஒருவாறு கறுஞ்சிவப்பாகவும், தடிப்பின்றி நுரைத்தும், ரூக்ஷமாகவும் இருப்பதுடன், வேகமாகவும் வெளியாகும். பித்தத்தினால் விகாரப்பட்டிருந்தால் இரத்தம் கருமஞ்சள் நிறமாகவும், வஸநாற்றமுடையதாகவும், உஷ்ணத்தினால் தோய்ந்து விடுந்தன்மை யற்றதாகவும், சந்த்ரகங்கள் என்னும் பலவிதமான புள்ளிகளுடன் கூடியதாகவும் இருக்கும். கபத்தினால் கோளாறடைந்த இரத்தம் ஸ்நிக்த்தமாகவும், வெளிறிய நிறமுடையதாகவும், நூலிழைகளைப்போன்ற தோஷங்களுடன் கூடியதாகவும், பிசுபிசுப்புடன் தடித்த நிலையைப் பெற்றதாகவும்



இருக்கும். ஸம்ஸர்க்க தோஷங்களால் கோளாறடைந்த இரத்தத்தில், விகாரமடைந்த இரண்டு தோஷங்களுடைய அந்தந்தக் குறிகளும் கலந்திருக்கக் காணலாம். ஸந்நிபாத தோஷத்தினால் கோளாறடைந்த இரத்தம் மூன்று தோஷங்களுடைய இலக்ஷணங்களையும் பெற்றதாயிருக்கும். 40, 40½.

*வெளிப்படுத்த வேண்டிய இரத்தத்தின் அளவு.*

இரத்தம் அசுத்தமாயிருக்கையில், பிணியாளி நல்ல பலசாலியாயிருந்தபோதிலும், ஒரு பிரஸ்தப் பிரமாணத்திற்குமேல் அதை வெளிப்படுத்தக்கூடாது. 41½.

*மிதமிஞ்சி இரத்த ஸ்ராவம் செய்வதாலான அபாயமும் அதற்குப் பரிஹாரமும்.*

இரத்தத்தை அளவுமீறி வெளிப்படுத்திவிட்டால், மரணமாவது ஸம்பவிக்கும்; மிகக் கடுமையான வாத ரோகங்களாவது உண்டாகும். அபாயகரமான அவ்வித நிலைமையில் அப்யங்கம் செய்வித்தலும், மாம்ஸரஸம்-பால்-இரத்தம் இவற்றைப் பானம் செய்வித்தலும் ஏற்ற சிகித்ஸையாகும். 42.

*இரத்த மோக்ஷணமானதும் செய்யவேண்டிய சிகித்ஸை.*

இரத்தமோக்ஷணம் தகுந்தவளவு செய்து முடிந்தபிறகு, கட்டியிருக்கும் பந்தநத்தை மெதுவாக அவிழ்த்து, கீறப்பட்ட ஸிரையின் முகத்தைக் குளிர்ந்த ஜலத்தினால் நன்றாகக் கழுவி, தைலத்தில் நனைத்த வஸ்திரத்தினால் அதன்மேல் ஒரு பந்தநம் செய்யவேண்டும். 43, 43½.

*மிச்சமுள்ள அசுத்த ரத்தத்தைமீண்டும் வெளிப்படுத்துங்காலம்.*

ஒருமுறை ஸிராவ்யதை செய்தபிறகும் இரத்தத்தில் அசுத்தம் மிச்சமிருக்குமானால், அவ்வித இரத்தத்தை மறுபடியும் மாலை நேரத்திலாவது, மறுநாளாவது வெளிப்படுத்திவிடலாம். இரத்தம் ஒருவனுக்கு மிகவும் கெட்டுப்போயிருந்தால், அவனுடைய தேஹத்திற்கு ஸ்நேஹ சிகித்ஸையினால் ஸம்ஸ்காரங்களைச்செய்து, பதினைந்து நாட்கள் கழித்தாவது ஸிராவ்யதையை முறைப்படி நிறைவேற்றலாம். 44½.

*சொற்பம் மிச்சமுள்ள துஷ்ட ரத்தத்தைச் சுத்தம்செய்யும் வகை.*

தோஷமுள்ள இரத்தம் சொற்ப அளவு மிச்சமிருந்தால், ரோகம் அதிக்ரமித்துவிடாது. ஆகவே துஷ்ட இரத்தம் மிச்சமிருக்கும்படி விட்டுவிட்டாலும் விடலாம்; ஆனால் இரத்தத்தை அதிகமாக மாத்திரம் வெளிப்படுத்தக்கூடாது. சொற்பம் மிச்சமுள்ள இரத்தத்தை ச்ருங்கம் முதலியவற்றால் வெளிப்படுத்திவிடலாம். அல்லது சீதோபசாரத்தினாலாவது, இரத்தபித்த சிகித்ஸையினாலாவது, சோதந சிகித்ஸையினாலாவது, இலங்கநாதி சோஷண சிகித்ஸையினாலாவது சுத்தமாகச் செய்யலாம். மிதமிஞ்சிக் கெட்டுப்போகாத நிலைமையிலுள்ள அசுத்த ரத்தத்தையும் இவ்விதமே நிர்மலமாகச் செய்யவேண்டும். 45-47.

*இரத்த மோக்ஷணத்தில் தடுக்கமுடியாமல் பெருகும் இரத்தத்தைத் தடுக்கும் வகை.*

இரத்தஸ்ராவம் செய்கையில் வெளியாகும் இரத்தம் நிற்காமலே ஸ்ரவித்துக்கொண்டிருந்தால், சீக்கிரத்தில் ஸ்தம்பந சிகித்ஸையைச் செய்யவேண்டும். 47½.

*ஸிராவ்யதை செய்தவிடத்து விரணத்தில் உபயோகிக்கும் ஔஷதம்.*

வெள்ளிலோத்தி, ஞாழல், செஞ்சந்தனம், உளுந்து, அதிமதுரம், காவிக்கல், மண்ணாலாகிய வறட்டோடு, இருந்தை, பட்டு, அஞ்ஜநம், பாலுள்ள மரங்களின் சர்மம்-அவற்றின் குருத்து அல்லது விழுதுமுனை இவற்றை உலர்த்தி, சூர்ணம்செய்து, கீறி விரணமாக்கியவிடத்தில் தூவவேண்டும். பிறகு பத்மகாதி கணத்திற்[1] கூறியுள்ள சரக்குகளால் பக்குவம்

1. பத்மகாதிகணம் என்கிற ஔஷதச் சரக்குகளின் வகுப்பின் விவரத்தை 124-வது பக்கத்தில் காண்க.

செய்த ஹிமகஷாயத்தைப்[1] பானம் செய்ய வேண்டும். அப்படியும் இரத்தப் பெருக்கு நிற்காவிட்டால், அதே ஸிரையை, முன்கீறிய விடத்திற்கு அடுத்தாற்போல் கீறலாம். உடனே ஒரு சலாகையைக் காய்ச்சி, அந்த ஸிரையின் முகத்வாரத்தைச் சுட்டுவிடவேண்டும். 48—50.

*ஸிராவ்யதையில் பத்தியமாயிருக்க வேண்டிய கால அளவு.*

யந்திரணம் என்னும் பந்தநம் முதலியவற்றால் இரத்தத்திலுள்ள தோஷங்கள் அதனதன் ஸ்த்தாநத்தைவிட்டு வேறு மார்க்கங்களிலும் சென்றிருக்குமாகையால், அத்தோஷங்கள் மீண்டும் அதனதன் ஸ்த்தாநத்தில் எதுவரையில் வந்து சேரவில்லையோ, அவ்வளவு நாட்கள் வரையில் பத்தியமான ஆஹாரங்களையும் ஆசாரங்களையும் செய்துவரவேண்டும். 51.

*இரத்த மோக்ஷணம் செய்கையில் பத்தியமான அன்ன பானங்கள்.*

இரத்த மோக்ஷணம் செய்தபிறகு அதிக உஷ்ணமல்லாததும், அதிக குளிர்ச்சியாயிராததும், இலகு குணமும் தீபநீய குணமுமுள்ளதுமான அன்னபானங்கள் பத்தியங்களாம். இரத்தமோக்ஷணம் செய்துள்ள ஸமயத்தில் சரீரத்தில் இரத்தத்தின் நிலைமை சீர்குலைந்திருக்கும்; ஆகவே இதைக் கருதி ஜாடராக்னியை நிலைகுலையாவண்ணம் பாதுகாக்கவேண்டும். 52.

*இரத்த மோக்ஷணம் நன்கு நிறைவேறிய தன் குறிகள்.*

தேஹநிறமும் இந்த்ரியங்களும் பிரஸன்னமாயிருக்கும்; இந்த்ரியங்களால் அவ்வவற்றிற்கு இயல்பான விஷயங்கள்[1] நன்கு விரும்பப்படும்; ஜீர்ணசக்தியின் நடை தடைபடாமலிருக்கும்; தேஹம் ஆரோக்கிய நிலைமையடைந்து, புஷ்டியும் பலமும் பெற்றிருக்கும். இவ்வித நிலைமையிலுள்ள புருஷன் ஆரோக்கியமாயிருப்பதாகக் கூறப்படுவான். 53.

## இருபத்தெட்டாவது அத்தியாயம்.

இனி சல்யாஹரண விதி[2] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது:—

*சல்யங்கள் ஐந்து விதமாய் தேஹத்தில் பிரவேசித்தல்.*

சல்யங்கள் தேஹத்தில் வக்ரமாகவும், நேராகவும், குறுக்காகவும், மேல் நோக்கியும், கீழ்நோக்கியும் ஐந்து விதமாகப் பிரவேசிக்கக் கூடும். ½.

1. ஹிமகஷாயம்—இதையே சீதகஷாயம் என்றும் கூறுவர். அவசியமான சரக்குகளைப் பொடித்து, ஒன்றுக்கு ஆறுமடங்கு ஜலம் சேர்த்து, ஓர் இரவு முடிய ஊறவைத்து, அப்பால் வடிக்கட்டி யெடுக்கப்படும் திரவம் ஹிமகஷாயம் எனப்படுகிறது.

2. சல்யம் என்பதால் தேஹத்தினுள் எவ்விதமாகிலும் பிரவேசித்துத் துன்பம் விளைவிக்கும் எப்பொருளும் குறிக்கப்படும்; அவ்வித வஸ்துவை வெளிப்படுத்துவதற்கான காரியம் சல்யாஹரணம் எனப்படும்.

*உள்ளே சல்யத்துடன்கூடிய விரணத்தின் குறிகள்.*

கன்றிப்போன வீக்கமுள்ளதும், வலியுடன் அடிக்கடி இரத்தப்பெருக்குடையதும், குமிழியைப்போல மேலெழுந்து அநேகம் சிறிய கொப்புளங்களுடன் கூடியதும், மிருதுவான மாம்ஸத்தையுடையதுமான விரணம் உள்ளே சல்யத்துடன் கூடியதென்று அறிக. 1, 2.

*சர்மம் முதலியவற்றில் சல்யம் தங்கியிருக்கும் விசேஷக் குறிகள்.*

சல்யம் சர்மத்தில் அடங்கியிருந்தால், அவ்விடத்திலுள்ள வீக்கம் ஒருவாறு கறுநிறமாகவும், கடினமாகவும், விஸ்தாரமாகவும் இருப்பது விசேஷக்குறியாகும். அவ்வாறே சல்யம் மாம்

1. நேத்திரத்திற்கு பார்வையும், செவிக்குக் கேள்வியும், நாசிக்கு வாஸனையும், நாக்குக்குச் சுவையும், சர்மத்திற்கு பரிசமும் விஷயங்கள் ஆகும்.



ஸத்தைப்பற்றியிருந்தால், அங்கு அழற்சியும், பரிசித்துப் பிடிக்கமுடியாத வலியும் இருப்பதோடு பழுத்தும் இருப்பதாக வீக்கம் காணப்படும்; சல்யம் உட்புகுந்துள்ள வழியானது எளிதில் ஆறுவதில்லை. தசைநார்களுடைய உள்ளே சல்யம் ஊடுருவிச் சென்றுவிட்டால், மாம்ஸத்தில் பிரவேசித்ததாலுண்டாகும் குறிகளே உண்டாகும்; ஆனால், வீக்கம் மாத்திரம் தென்படாது. ஸ்நாயு[1] வென்னும் அஸ்த்தி பந்தந நார்களில் பிரவேசித்துவிட்டால், அவ்வித நார்களில் இசிவு பலமாய் உண்டாகும்; பொறுக்க முடியாத ஒருவித வேதனையும், பரபரத்துத் தீவ்ரமான உணர்ச்சியும், அசைக்கமுடியாத நிலைமையும் ஸம்பவிக்கும்; அதில் அகப்பட்டுக் கொண்ட சல்யத்தைப் பிடுங்கி யெடுப்பதும் கஷ்டம். ஸிரையினுள்[2] பிரவேசித்திருந்தால், அந்த ஸிரை ஊதிப்பொருமலடையும். தொண்டை, காது முதலியவை ஸ்ரோதஸ்ஸுகளில் பிரவேசித்துவிட்டால், அந்தந்த ஸ்ரோதஸ்ஸின் காரியங்களுக்கும் குணங்களுக்கும் ஹானியுண்டாகும். சல்யம் தமனியில்[3] தங்கியிருந்தால், வாதமானது நுரையுடன் இரத்தத்தை வேகமாக வெளிப்படுத்தும்; இரத்தம் ஒருவித சப்தத்தோடு வெளிப்படும்; இருதயத்தில் இயற்கையினும் அதிகமான துடிப்பும், உடம்பில் வேதனையும் உண்டாகும். எலும்புகளின் இடையில் சல்யம் புகுந்திருந்தால் மிகவும் பலமான தேய்வும், இரண்டு எலும்புகளுக்கும் இடையில் அஸ்த்தி நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சியும் உண்டாகும். எலும்பிலேயே சல்யம் பிரவேசித்துவிட்டால், சொல்லமுடியாத பலவிதமான வேதனையும் வீக்கமும் ஸம்பவிக்கும். அஸ்த்திகளுடைய பூட்டில் சல்யம் அகப்பட்டிருந்தால், எலும்பில் பிரவேசித்ததுபோன்ற வலி முதலியது உண்டாவதோடு, பூட்டு அசைக்க முடியாமலும் போய்விடும். சல்யம் குடலில் பற்றியிருந்தால் வயிற்றில் சப்தமும், பொருமலும் உண்டாய், விரணத்தின் முகத்தில் உணவு-மலம்-மூத்திரம் இவை வெளிப்படுவதும் உண்டு. மர்மஸ்த்தாநங்களில் சல்யம் பிரவேசிக்குமாயின், மர்மஸ்த்தாநங்களில் அபிகாதமுண்டாவதால் ஏற்படக்கூடிய குறிகள்[1] உண்டாகும் என்றும் அறிக. அங்கங்கிருந்து ஸ்ரவிக்கும் நீர்களைக்கொண்டு, சர்மம் முதலிய விடங்களில் சல்யம் தங்கியிருப்பதாகவும் ஒருவாறு அறியலாம். 3—9½.

1. ஸ்நாயு—எலும்புகளை ஒன்றோடொன்று இணைத்துக்கட்டும் நார். ஆங்கிலத்தில் லிகமெண்டு எனப்படும்.

2. ஸிரை - காரிரத்தக்குழாய்; ஆங்கிலத்தில் வைன்ஸ் என்பார்கள்.

3. தமனி—செவ்விரத்தக் குழாய்; ஆங்கிலத்தில் ஆர்டரி யென்பார்கள்.

*அநுகூலமார்க்கத்தில் தங்கியுள்ள சல்யமும் அதை அறியும் உபாயமும்.*

அச்சல்யமானது குறுக்காயில்லாமல் ஸ்ரோதஸ் முதலியவற்றில் நேர்மையாக நெடுகவே தங்கியிருந்தால், சோதநசிகித்ஸை முதலியவற்றால் சுத்தியடைந்த தேஹமுடையவருக்கு அப்பாகம் தானே ஆறிப்போய், சல்யமிருப்பதாய் ஓர் உணர்ச்சியும் அற்றுப்போகும். ஆனால் தோஷங்கள் பிரகோபிப்பது, அபிகாதமுறுதல் முதலிய க்ஷோபத்தினால் அச்சல்யம் மறுபடியும் தொந்தரவளிக்கும். 10½.

*சர்மத்தில் சல்யம் மறைந்திருப்பதை அறிதல்.*

சல்யம் சர்மத்தில் எவ்விடத்திலேனும் மறைந்து இருக்கிற விடம் அறியமுடியாமலிருந்தால், அப்போது அப்யங்கம், ஸ்வேதநம், மர்த்தநம் இவற்றால் எவ்விடத்தில் சிவப்பும், வலியும், அழற்சியும், விசேஷகடுப்பும் உண்டாகின்றதோ, எவ்விடத்தில் நெய் உருகிவிடுமோ, பூசப்படும் லேபநௌஷதம் எவ்விடத்தில் சீக்கிரம் உலர்ந்துவிடுகின்றதோ அவ்விடம சல்யமுடையது என்று கூறப்படும். 11, 12.

*மாம்ஸத்தில் மறைந்துள்ள சல்யத்தை அறிதல்.*

மாம்ஸத்தில் எங்கேயாவது சல்யம் மறைந்துகிடக்குமானால் சோதநம் செய்வதாலும், தேஹத்தை இளைக்கச்செய்து அதை இடம் விட்டு நழுவச்செய்வதாலும், அவ்விடத்தில் க்ஷோபமுண்டு பண்ணி சிவப்பு முதலியவை ஏற்படுவதாலும் அச்சல்யம் இன்னவிடத்தில் இருக்கிறதென்று அறியலாம். 13.

*தசைநார் முதலியவற்றில் ஆழ்ந்துள்ள சல்யங்களை அறிதல்.*

தசைநார்களிலும், எலும்புகளுடைய பூட்டுகளிலும், குடல்களிலும் மறைந்துள்ள சல்யங்களின் இருப்பையும் மாம்ஸத்தில் மறைந்துள்ளதற்கான பரீக்ஷைகளைக் கொண்டே அறியவேண்டும். 13¼.

*அஸ்திகளில் மறைந்துள்ள சல்யத்தை அறிதல்.*

எலும்புகளில் சல்யம் மறைந்திருந்தால், அவ்வஸ்திகளில் சேர்ந்துவிடுமாறு அப்யஞ்ஜனம் செய்வது, ஸ்வேதநம் செய்வது, பந்தநம் செய்தல், மர்த்தநம் செய்தல், பிடித்தல், நீட்டுதல், மடக்குதல் இக்காரியங்களைச் செய்து அச்சல்யம் மறைந்துள்ள பாகத்தைக் கண்டறியலாம். 14, 14½.

*ஸ்நாயு முதலியவற்றில் மறைந்துள்ள சல்யத்தை அறிதல்.*

ஸ்நாயு, ஸிரைகள், ஸ்ரோதஸ்ஸுகள், தமனிகள் இவற்றில் மறைந்திருந்தால் பிணியாளியைப் பற்களுள்ள சக்கிரம் பூட்டிய வண்டியில் ஏற்றிவைத்து, குதிரையைக் கட்டி மேடும் பள்ளமுமான மார்க்கத்தில் அவ்வண்டியை வேகமாகச் செலுத்த வேண்டும்; அப்பொழுது எவ்விடத்தில் கடுப்பும் வலியும் உண்டாகின்றதோ அவ்விடத்தில் சல்யம் இருப்பதாகக் கூறலாம். 15, 16.

*மர்மஸ்தாநங்களில் மறைந்துள்ள சல்யங்களை அறிதல்.*

மர்மஸ்தாநங்களில் மறைந்துள்ள சல்யங்களை அறியும்வகை இங்குப் பிரத்தியேகமாகக் கூறப்படவில்லை; ஏனெனில் அந்த மர்மஸ்தாநங்கள் மாம்ஸம் முதலியவற்றை ஆச்ரயித்தே இருக்கின்றன. 16½.

*சல்யமிருப்பதை அறிய பொதுவான பரீக்ஷை.*

பொதுவாகக் கூறுமிடத்து, சல்யத்துடன் கூடிய பிரதேசத்தில் தேய்ப்பது முதலிய க்ஷோபமுண்டு பண்ணும் காரியத்தினால் வலியுண்டாவது வழக்கம். காணக்கூடாதவாறு தேஹத்தில் எங்கேயாவது தங்கியிருக்கும் சல்யத்தினுடைய நிலைமையை, வட்டமாகவும், பருத்துப்பிதுங்கியும், நாலுகோணமாகவும், முக்கோணமாகவும் ஸம்பவித்துள்ள விரணங்களின் உருவங்களைக் கொண்டு உணரவேண்டும்; இவையே காணமுடியாத சல்யங்களின் இருப்பை அறியக்கூடிய சுருக்கமான குறிகளாகும். 17, 18.

*சல்யங்களை வெளிப்படுத்துவதற்கு இரண்டு உபாயங்கள்.*

அச்சல்யங்களை வெளிப்படுத்துவதற்கு இரண்டு உபாயங்கள் உண்டு; அவற்றுள் ஒன்று—சரீரத்தில் எவ்வழியாய் சல்யம் பிரவேசித்ததோ அவ்வழியாகவே அதை எடுத்தல்; மற்றொன்று, அது பிரவேசித்தவழியால் எடுக்காமல் ஸுலபமாயுள்ள வேறு ஏதேனும் எதிரிடையான வழியால் வெளிப்படுத்தல். இவற்றுள் முதலிற் கூறியவகைக்கு பிரதிலோமமான உபாயமென்றும், இரண்டாவதற்கு அநுலோமமான உபாயமென்றும் பெயர். சல்யம் மேல்நோக்கிச் சென்று அவ்வாறே மேல்முகமாக அமைந்திருந்தால், அதை பிரதிலோமமாகவும், சல்யம் கீழ்நோக்கியிருந்தால் அதை அநுலோமமாகவும் எடுக்கவேண்டும். குறுக்காகப் பாய்ந்துள்ள சல்யத்தை, எவ்வழியினால் எடுத்தால் எளிதில் வெளிப்படுத்தலாமோ அவ்வழியி



னால், அவசியமானால் மாம்ஸபேசி முதலியதை அறுத்து வெளிப்படுத்தவேண்டும். 19, 19½.

*இடிக்கக் கூடாததும், அறுத்தெடுக்கக்கூடியதுமான சல்யங்கள்.*

மார்பு, அக்குள், துடையிடுக்கு, பக்கம் இவற்றில் தங்கியுள்ள சல்யத்தை இடித்து அல்லது குத்தியெடுக்கக்கூடாது. பிரதிலோமமாகவும், வெளியில் அநேக முகமுள்ளதாகக் காணப்படுவதும், விசாலமான முகமுடையதாகத் தோற்றுவதுமான எச்சல்யம் உண்டோ அதை அறுத்து எடுக்கவேண்டும். 20½.

*வெளிப்படுத்தத் தகாத சல்யங்கள்.*

விசல்யக்நம்[1] என்கிற சல்யத்தையாவது, ஏதேனும் அவயவத்தில் உட்புகுந்து மறைந்து உள்ளே ஒரு வெளிப்பொருள் இருப்பதாகவே உணரப்படாமலிருப்பதையாவது களைந்தெடுக்கவேகூடாது. 21.

*கையால் எடுக்கக்கூடிய சல்யமும் ஸிம்ஹமுகம் முதலியதால் எடுக்கக் கூடியதான சல்யமும்.*

அப்பால், கையினால் களைந்தெடுக்கக்கூடிய சல்யத்தைக் கையாலேயே எடுத்துவிடலாம்; அப்படிக்கன்றி வேறுவிதமாய் உடலிற் பாய்ந்துள்ளதும், வெளியில் காணப்படுவதுமான சல்யத்தை ஸிம்ஹமுகம், ஸர்ப்பமுகம், மத்ஸ்யமுகம், கிருமிமுகம், கர்க்கடகமுகம் என்னும் ஆயுதங்களால் வெளிப்படுத்தவேண்டும். 22.

*கண்ணுக்குப் புலப்படாமலிருக்கும் சல்யத்தை வெளிப்படுத்தும் முறை.*

கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்துள்ள சல்யத்தை விரணத்தின் நிலைமைக்குத் தகுந்தவாறு கங்கமுகம், காகமுகம், குரரமுகம், சராரீமுகம் என்னும் ஆயுதங்களில் எதனால் வெளிப்படுத்துவது எளிதாயிருக்குமோ அவ்வாயுதத்தினால் எடுக்கவேண்டும். 23.

*சர்மம் முதலியதிலுள்ள வெவ்வேறுவித சல்யங்களை யெடுக்கும் முறை.*

சர்மம் முதலியவற்றில் பிரவேசித்துள்ள சல்யத்தை ஸந்தம்ச யந்திரங்களால் வெளிப்படுத்தவேண்டும். அதே இடங்களில் பிரவேசித்துள்ள சல்யம் த்வாரமுள்ளதாயிருந்தால், தால யந்திரங்களால் எடுக்கலாம். த்வாரமுள்ள பிரதேசங்களில் பாய்ந்துள்ள சல்யத்தை நலகம் என்னும் ஆயுதங்களால் எடுக்கவேண்டும். மற்ற சல்யங்களை அதனதன் தன்மைக்குத் தகுந்த வேறு ஆயுதங்களைக் கொண்டு வெளிப்படுத்தலாம். 24.

*சல்யத்தை அறுத்து எடுத்தல்.*

சல்யம் புகுந்துள்ள பாகத்தில் சஸ்திரத்தினால் முதலில் அறுத்து சஸ்திரத்தை வெளிப்படுத்தி, அப்பால் விரணத்தில் இரத்தப்பெருக்கு இல்லாதபடி அதைச் சுத்தம்செய்து, கிருதத்தினால் ஸ்வேதநம் செய்வித்து, பந்தநம்செய்து விடவேண்டும். அதன் பிறகு அநுகூலமான ஆஹாராதிகளை உபயோகித்து வரவேண்டும். 25.

*ஸிரையிலும் ஸ்நாயுவிலும் பற்றியுள்ள சல்யத்தை எடுத்தல்.*

ஸிரைகள் என்னும் காரிரத்தக் குழாய்களிலும், ஸ்நாயுக்களிலும் பற்றியுள்ள சல்யத்தை மெதுவாகச் சலாகையினால் அசைத்து, வெளிப்படுத்துவது நலம். 25½.

*மார்பிலும் மற்ற அவயவங்களிலுமுள்ள சல்யங்களை யெடுத்தல்.*

மார்பினுள் பற்றியுள்ள சல்யத்தை யெடுப்பதற்கு அப்பிணியாளியின் மீது குளிர்ந்த ஜலத்தைத் தெளித்துத் திடுக்கிடச் செய்யவும்; அவ்விதம் செய்வதால் அச்சல்யம் இடம்விட்டுப் பெயர்ந்து வேறிடத்தில் நெகிழ்ந்துவிடும்; அப்பால் எந்த மார்க்கத்தினால் வெளிப்படுத்துவது அநுகூலமாயிருக்குமோ அவ்வழியினால் வெளிப்படுத்தி விடவேண்டும். வேறு அவயவங்களிலும் இங்ஙனமே எளிதில் வெளிப்

1. விசல்யக்நம்—உட்புகுந்துள்ள சல்யத்தைச் சில விடங்களிலிருந்து வெளிப்படுத்தும்போது, அப்படி வெளிப்படுத்துவதாலேயே மரணம் ஸம்பவிக்கும்; அவ்விதமான இடங்களில் பாய்ந்துள்ள சல்யம் விசல்யக்நம் எனப்படுகிறது.

டுக்கமுடியாத சல்யத்தை, எந்த வழியினால் எளிதில் கொண்டுவரக் கூடுமோ அவ்வழியினால் வெளிப்படுத்திவிடலாம். 26, 27.

அஸ்த்தியில் பிரவேசித்த சல்யத்தை யெடுத்தல்.

எலும்பில் பிரவேசித்திருப்பதாகக் காணப்படும் சல்யத்தை, பிணியாளியை வைத்தியன் தனது பாதங்களால் அழுத்தி அமுக்கிக்கொண்டு வெளிப்படுத்தலாம். இப்படியும் ஸாத்தியப்படாவிட்டால், மிகவும் பலசாலிகளான வேலைக்காரர்களைக்கொண்டு பிணியாளியைப் பிடித்துக்கொள்ளச் செய்தாகிலும் சல்யத்தை எலும்பிலிருந்து இழுக்கவேண்டும். அவ்விதம் செய்தும் இழுக்க முடியாவிட்டால், அஸ்த்தியில் பிரவேசித்துள்ள சஸ்திரம் முதலியதின் முனையை ஒருவாறு வளைத்து, ஞாண்கயிற்றின் ஒருமுனையை அவ்வாறு வளைத்த சல்யமுனையில் கட்டி, அக்கயிற்றின் மற்றொரு முனையை வெகு ஜாக்கிரதையாகக் குதிரையின் கடிவாளத்தில் முடிந்துவிடவும்; அக்குதிரையையும் நான்கு கால்களிலும் கழுத்திலும் கட்டி ஓடவொட்டாமல் செய்யவேண்டும். அவ்விதமுள்ள குதிரையின் கடிவாளத்தில் ஞாண்கயிறைக் கட்டியதும், கசையினால் குதிரையை ஓங்கி அடிக்கவும், அப்பொழுது வேகமாக அது தன் தலையை நிமிர்த்தித்தூக்கி விடுமாகையால், அதனால் சல்யமும் வெளிப்படுத்தப்படும். இவ்வாறே குதிரையின் கடிவாளத்திற்குப் பதிலாக ஒரு மரக்கிளையையாவது மெல்லென இழுத்து, அதில் அந்த ஞாண்கயிறின் மற்றொரு முனையைக் கட்டிவிட்டுக் கிளையை உயரக் கிளம்பிவிடும்படியாகச் செய்யலாம். உட்புகுந்துள்ள சல்யம் அவ்வளவு வலிவுள்ளதாயிராவிட்டால் அதன் முனையைத்தர்ப்பங்களால் கட்டி சல்யத்தை வெளியில் இழுத்துவிடலாம். 28—31.

வீக்கத்தினால் கவரப்பட்ட சல்யத்தை வெளிப்படுத்தல்.

சஸ்திரரூபமான சல்யம் வீக்கத்தினால் கவரப்பட்டிருக்குமானால், முறைப்படி வீக்கத்தை அழுத்திப் பிதுக்க, அதன் உள்ளே அடங்கியுள்ள சல்யம் வெளியாய் விடும். 31½.

கிரஹிக்கக் கூடாத விடங்களில் ஒடிந்துள்ள சல்யங்களை வெளிப்படுத்தல்.

கருவி முதலியவற்றிற்குப் பிடிபடாமல் ஒடிந்து உள்ளே தங்கியிருக்கும் சல்யத்தின்மீது நாடீயந்திரத்தை வைத்து, அதைக் கொட்டாப்புளியினால் அடித்து, மெதுவாக அச்சல்யத்தை அசைத்து அசைத்து வெளிப்படுத்தவேண்டும். கிரஹிப்பதற்கு அநுகூலமில்லாத வழிகளில் பிரவேசித்துள்ள சல்யத்தையும் அநேக உபாயங்களால் வெளிப்படுத்திவிடலாம். 32, 32½.

காதுகளுள்ள சல்யங்களை வெளிப்படுத்தும் முறை.

காதுகளைப்போன்ற அவயவங்களுடைய சல்யங்கள் உட்புகுந்திருந்தால், அச்சல்யங்களின் காதைக் கெட்டியாகப் பிடித்து நசுக்கியோ, நாடீயந்திரத்தின் முகத்தினால் கெட்டியாகப் பற்றிக்கொண்டோ அவற்றை வெளிப்படுத்தவும். 33.

காதுகளில்லாத சல்யங்களை வெளிப்படுத்தும் முறை.

காதுகளில்லாமல், வாயைத் திறந்துகொண்டு, நேராகப் பாய்ந்திருக்கும் சல்யத்தை அயக்காந்தமென்னும் இரும்பையிழுக்கும் லோஹக்கருவியினால் வெளிப்படுத்தவேண்டும். 33½.

பக்வாசயத்திலுள்ள சல்யத்தை வெளிப்படுத்தும் முறை.

பக்வாசயமென்னும் ஜீர்ணகோசத்தினுள் பிரவேசித்துள்ள சல்யத்தை விரேசநத்தைக்கொண்டு வெளிப்படுத்திவிடலாம். 34.

நச்சுக்காற்று, நீர்ப்பொருள் முதலியதை வெளிப்படுத்தல்.

கெட்டுப்போன நச்சுக்காற்று, விஷப்பொருள், விஷமித்த முலைப்பால், இரத்தம், ஜலம் முதலியதை வாயால் உறிஞ்சி வெளிப்படுத்தவேண்டும். 34½.



தொண்டைக்குள் புகுந்துள்ள சல்யத்தை வெளிப்படுத்தும் உபாயங்கள்.

தொண்டையினுள் சல்யம் பிரவேசித்திருந்தால், தாமரைத்தண்டின் நூல்களையெடுத்துத் தொண்டையினுள் விடவேண்டும்; அப்பால் அந்தநூல் சல்யத்தில் பற்றிக்கொண்டதும், நூலையும் சல்யத்தையும் ஒருமிக்கச்சேர்த்து இழுக்கவேண்டும். தொண்டையில் சிக்கியுள்ள சல்யம் அரக்கு ஸம்பந்தமான வஸ்துவாயிருந்தால், நெருப்பிற்காய்ச்சிய சலாகா யந்திரத்தை ஒருநாடீ யந்திரத்தின் மூலமாகத் தொண்டையினுள் விட்டு, அப்பால் ஜலத்தை விட்டு அந்த அரக்கை அல்லது அரக்குபோன்ற வஸ்துவை கெட்டியாகச்செய்து வெளியில் இழுக்கவேண்டும். அரக்குமாதிரியில்லாத சல்யத்தை சலாகை முதலியவற்றில் அரக்கைப் பூசி வெளிப்படுத்தலாம். தொண்டையினுள் ஏதாவது முள் அகப்பட்டிருந்தால், மயிர்ச்சுரணையை ஒரு நூலில் கட்டி, அந்நூலின் மற்றொரு முனையைக்கையில் பிடித்துக்கொண்டு, மயிர்ச்சுரணையை ஜலம் முதலிய திரவப்பொருட்களோடு விழுங்கிவிடவும்; உடனே வாந்தி செய்யும்போது, அம்மயிர்ச்சுரணையில் சிக்கிக்கொண்ட சல்யத்தை அச்சுரணையோடு பலமாக இழுத்து வெளிப்படுத்தவேண்டும். அவ்விதமே தொண்டையில் அகப்பட்டுள்ள மயிரை முள்ளினால் வெளிப்படுத்துக. 35—37½.

முகம் முதலியதில் வெளிப்படுத்த முடியாத சல்யத்தை வெளிப்படுத்தல்.

முகத்திலிருந்தாவது, நாசியிலிருந்தாவது இழுத்து வெளிப்படுத்த முடியாத சல்யத்தை அவ்வவயவங்களுக்குப் பின்புறமாகத் தள்ளிவிடவேண்டும். 38.

தொண்டையிற் சிக்கிய கபளத்தை உட்செலுத்தல்.

அன்னம் முதலியவற்றின் கபளம் அன்னவாஹியென்னும் நாளத்தினுள் சிக்கிக்கொண்டால், அவ்விதமான சல்யத்தை ஜலங்குடித்தாவது, தோளில் குத்தி அடித்தாவது உட்செலுத்திவிடலாம். 38½.

நேத்திரத்திலும் விணத்திலுமுள்ள ஸூக்ஷ்மமான சல்யங்களை யெடுத்தல்.

நேத்திரத்திலும் விரணத்திலும் உள்ள ஸூக்ஷ்மமான சல்யங்களைப் பட்டு நூல், மயிர், ஜலம் இவற்றைக்கொண்டு வெளிப்படுத்தலாம். 39.

உடலில் புகுந்துள்ள ஜலத்தை வெளிப்படுத்தல்.

வயிறு நிரம்பவும் மார்பு நிரம்பவும் தண்ணீரைக் குடித்த மனிதனைத் தலைகீழாகவெடுத்து, உடலை நீட்டிக் குலுக்கவும்; அல்லது வாந்தியாவது செய்விக்கலாம்; பெரிய சாம்பர்க்குவியலில் வாயளவும் அவனைப் புதைத்தாவது வைக்கலாம். 40.

காதில் புகுந்த ஜலத்தை வெளிப்படுத்தல்.

செவியினுள் ஜலம் புகுந்து நிரம்பிவிட்டால், கையால் குடைந்து தைலத்தையும் ஜலத்தையும் உட்செலுத்தி வெளிப்படுத்தலாம்; அல்லது காதைக் கவிழ்த்தும் குலுக்கலாம்; அல்லது அதை உறிஞ்சும்விடலாம். 41.

காதிற் புகுந்துள்ள பூச்சியை வெளிப்படுத்தல்.

செவியினுள் ஏதாவது பூச்சி புகுந்துவிட்டால், உப்புக்கரைத்த ஜலத்தைச் செவியினுள்விட்டு நிரப்பலாம்; அல்லது இளஞ்சூடான காடியையாவது உட்செலுத்தலாம். இவ்வாறு செய்து பூச்சி அழிந்துவிட்டால், பிறகு க்லேதஹரமான [1] சிகித்ஸையைச் செய்யவேண்டும். 42.

அரக்கு ஸம்பந்தமான சல்யமும், பொன் வெள்ளி முதலிய தாதுப்பொருட்கள் ஸம்பந்தமான சல்யமும் தேஹத்திலேயே வெகு நாட்களளவும் தங்கியிருந்தால், அவை உடலின் இயற்கைச்சூட்டின் ஸம்பந்தத்தினலேயே பெரும்பாலும் உருகி உருமாறிப்போய் விடும். 43.

அரக்கு, பொன் முதலிய சல்யங்கள் தேஹத்திலிருந்து அழிவது.

மண், மூங்கில், மரம், மாடு முதலியவற்றின் கொம்பு, எலும்பு, பல், மயிர், கல் என்னும் இவ்விதமான சல்யங்கள் சரீரத்தில் தங்கியிருந்தால், அவை எப்பொழுதும் தானகவே அழிவதில்லை; மண்ணுற்செய்த ஓடு செங்கல் முதலியவற்றின் சல்யங்களும் அப்படிப்பட்டவையேயாம். கொம்பு, மூங்கில், இரும்பு, மயிர், மரம் இவை முதலிய சல்யங்கள் வெகுநாட்கள் சென்ற பிறகுகூட பெரும்பாலும் சிதறி உருமாறுவதில்லை; அவ்வித சல்யம் சீக்கிரத்தில் மாம்ஸத்தையும் இரத்தத்தையும் அழுகச்செய்து தின்றுவிடும். 44, 45.

மண், மரம் முதலியவற்றின் சல்யங்களின் தன்மை.

ஏதாவது சல்யம் மாம்ஸத்தினுள் புகுந்து மறைந்துகிடந்தால், அவ்விடம் எரிக்கப்படுவதில்லை. ஆகவே அவ்விடத்தில் மர்த்தநம் செய்வித்து, ஸ்வேத சிகித்ஸையென்ன, சோதந சிகித்ஸையென்ன, லங்கந சிகித்ஸையென்ன, ப்ருஹ்மண சிகித்ஸையென்ன இவற்றுள் ஏதேனும் ஒன்றாலாவது, தீக்ஷ்ணமும் சூடுமுள்ள வஸ்துக்களால் உபநாஹஸ்வேதம் செய்தாவது, தீக்ஷ்ணமும் உஷ்ணமுமான அன்னபானதிகளை உபயோகித்தாவது, ஆழமாக சஸ்திரத்தினல் குத்தியாவது அவ்விடத்தைப் பக்குவம்செய்து சல்யத்தை வெளிப்படுத்தலாம்; அல்லது அவ்விடத்தைக் கீண்டும், ஏஷணீ யந்திரத்தினல் துளாவியும், அறுத்தும் சல்யத்தை வெளியில் கொண்டுவரலாம். 46, 47.

மாம்ஸத்தில் புகுந்து மறைந்துள்ள சல்யத்தை வெளிப்படுத்தல்.

சல்யங்களும், அவை பிரவேசிக்கும் அவயவங்களும், யந்திரங்களும் அநேகவிதமான உருவங்களுள்ளவை யென்பதைக் கண்டறிந்து, விசேஷ அறிவுள்ள வைத்தியன் முற்குறிப்பிட்டவைகளைத் தவிர இன்னும் பலவாறன அந்தந்த உபாயங்களால் சல்யம் தங்கியிருக்கும் நிலைமையைத் தெரிந்துகொண்டு, அதை வெளிப்படுத்துவதற்கும் உபாயம் தேட வேண்டும். 48.

பலவாறன சல்யங்களின் நிலைமையும் அவற்றை வெளிப்படுத்துவதும்.

1. க்லேதஹரம்—க்லேதம் என்றால் பூச்சி அல்லது தேஹதாதுக்கள் பதனழிந்து மாறுவதாலுண்டாகும் ஒருவிதமான துர்நீர்; அவ்வித தோஷத்தை அகற்றும் சிகித்தை அல்லது ஔஷதம் க்லேதஹரம் எனப்படும். இதை ஆங்கிலத்தில் Desinfectent என்பார்கள்.



# இருபத்தாருவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள சஸ்திரங்களின் உருவங்களைக்காட்டும் படங்கள்.



1. மண்டலாக்ரம். (188-வது பக்கம்)



2. நீண்ட முனையுள்ள விருத்திபத்திரம். (188-வது பக்கம்)



3. பின்புறமாக வளைந்த விருத்திபத்திரம். (188-வது பக்கம்)



4. உத்பலபத்திரம். (188-ம் பக்கம்)



5. அத்யர்த்ததாரை. (188-ம் பக்கம்)



6. ஸர்ப்பமுக சஸ்திரம். (188-ம் பக்கம்)



7. கண்டூபதமுகம் (மண்ணுணிப் பாம்புபோன்ற) ஏஷணீ. (188-ம் பக்கம்)

8. ஸூசிமுக ஏஷணீ. (188-ம் பக்கம்)



9. வேதஸபத்திரம். (188-ம் பக்கம்)



10. சராரீ முக சஸ்திரம். (189-ம் பக்கம்)



11. கஜம் என்னும் சஸ்திரம். (191-ம் பக்கம்)



12. த்ரிகூர்சகம். (189-ம் பக்கம்)



13. குசாடா. (குசபத்திரம்.) (189-ம் பக்கம்)



14. அந்தர்முசசஸ்திரம்.
(189-ம் பக்கம்)



15. அர்த்த சந்திரமுகம்.
(189-ம் பக்கம்)



16. வ்ரீஹிமுகம். (189-ம் பக்கம்)



17. குடாரீ. (189-ம் பக்கம்)



18. த்விமுகசலாகை. (189-ம் பக்கம்)



19. அங்குலி சஸ்திரம். (189 ம் பக்கம்)



20. படிசம். (190-ம் பக்கம்)



21. கரபத்திரம். (190-ம் பக்கம்)



22. கர்த்தரீ. 1



23. கர்த்தரீ. 2



24. கர்த்தரீ. 3 (190-ம் பக்கம்)



25. நகசஸ்திரம். (190-ம் பக்கம்)



26. ஸூசி. 1



27. ஸூசி. 2





28. ஸூசி. 3 கூர்ச்சம்.



29. ஸூசி. 4 (190, 191-ம் பக்கங்கள்)



30. யூதிகா. (191-ம் பக்கம்)



31. ஆரா. (191-ம் பக்கம்)



32. வேறு ஒருவித ஏஷணீ.



33. மற்றொருவித ஏஷணீ.



34. சஸ்திரகோசம் என்னும் சஸ்திர-யந்திரங்கள் வைக்கும் பெட்டி

(192-ம் பக்கம்.)

## இருபத்தொன்பதாவது அத்தியாயம்.

அப்பால் சஸ்திர கர்மவிதி[1] யென்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது:—

*விரணமும் அதைப் பனதுகாஸ்தும்.*

விரணமென்பது பெரும்பாலும் முன்னதாக வீக்கம் ஸம்பவித்து, அப்பால் அது பழுத்து ஏற்படும் ஒருவித கோளாறு. மிகவும் குளிர்ச்சி பொருந்திய லேபங்கள் என்ன, ஜலம் முதலியதை ஊற்றுவதென்ன, இரத்த மோக்ஷணம் செய்வதென்ன, சோதந சிகித்ஸையென்ன இவை முதலியவற்றைக் கொண்டு அந்த விரணத்தைப் பழுத்துப் பதன் கெடாதவாறு பாதுகாத்து சிகித்ஸை செய்துவர வேண்டும், 1. 1½.

*ஆமமான வீக்கத்தின் குறிகள்.*

பழுக்காமல் ஆமமாயிருக்கும் விரணம்[2] அற்ப வீக்கமுள்ளதாய், அற்ப சூடும் வலியும் உள்ளதாயிருக்கும்; அதற்குச் சுற்றுப்புறத்திலுள்ள ஸாதாரண நிறத்திற்கு ஸமானமான நிறமுடையதாய், கடினமாகவும், உள்ளே சீழ் முதலியதால் அசைவு கொடுக்காததாகவும் இருக்கும். 2.

*பழுத்துவரும் வீக்கத்தின் குறிகள்.*

பழுத்து வருகிற நிலைமையிலுள்ள வீக்கம், ஒருவாறு மங்கல் நிறமுடையதாகவும், சிவப்பாகவும், காற்று நிறைந்த துருத்தியைப்போல் திரண்டு நான்கு பக்கமும் பரவியும் இருக்கும்; குத்தலும், பரபரப்பான வேதனையும், விரிந்து உடைந்துவிடுவது போன்ற உணர்ச்சியும் உண்டாகும்; உடம்பில் பலவிதமான ஸங்கடமும், அருவருப்பும், தாபமும், அழற்சியும், ஜ்வரவேகமும், நித்திரையின்மையும் அநுஸரித்துவரும். தோய்ந்துபோன நெய்யை அவ்விடத்தில் விட்டால் நன்றாக உருகிவிடும்; விரணத்தைப்போல் பரிசித்தாலும் பொறுக்கக்கூடாத வலியுண்டாகும். 3, 4.

*நன்றாகப் பழுத்த வீக்கத்தின் குறிகள்.*

வீக்கம் நன்றாகப் பழுத்துவிட்டால் அதிலுண்டாயிருந்த வேதனை முதலியது குறைந்துவிடும்; அவ்விடத்தில் வாட்டமுண்டாகும்; வெளுத்துப்போய் அப்பாகம் சுருக்கங்கொள்ளும்; சுற்றிலும் விளிம்புகளில் பள்ளம் விழுந்து நடுவில் மேலெழுந்து நிற்கும்; அரிப்பும் வீக்கமும் மற்றுமுள்ள வேதனைமுதலியதும் மந்தப்படும்; அவ்விடத்தைப் பரிசித்தால் உட்புறமுள்ள சீழானது, துருத்தியில் அடங்கிய ஜலத்தைப்போல இங்குமங்குமாய் அசைந்தாடுவதாகக் காணப்படும். 5, 5½.

*வீக்கம் பழுப்பதற்கு ஆதாரமான கூறுகள்.*

வாயுவின் ஸம்பந்தமில்லாமல் வலி அல்லது குத்தல் உண்டாகாது; பித்த ஸம்பந்தமின்றி அழற்சி ஸம்பவிக்காது; கபத்தின் ஸம்பந்தமில்லாமல் வீக்கம் உண்டாவதில்லை; இரத்தத்தின் ஸம்பந்தமின்றியே சிவப்புநிறமும் ஏற்படுவதில்லை. ஆகவே மூன்று தோஷங்களும் இரத்தமும் ஒருமிக்கச் சேருவதாலேயே வீக்கம் பழுத்துவரும். 6½.

*மிதமிஞ்சிப் பழுத்துப் பதன் கெடுவதாலான குறிகள்.*

பழுத்த நிலைமை உபேக்ஷிக்கப்பட்டு அதிக்ரமித்துவிட்டால், அவ் வீக்கமுண்டானவிடத்தில் த்வாரம் விழுந்து புரையோட ஆரம்பிக்கும்; அவ்விடத்திலுள்ள சர்மம் மிருதுவாய்விடும்; அப்பிரதேசத்தைத் தோஷங்கள் தின்று வரும்; பலவாறு சுருக்கங்கொண்டு, மங்கல் நிறமாக மாறிவிடும்; அவ்விடத்தில் மயிர்கள் உதிர்ந்து வரும். 7½.

1. சஸ்திர கர்மவிதி—சஸ்திரங்கள் எனப்படும் கருவிகளைக்கொண்டு செய்யப்படும் சிகித்ஸாமுறையைக் கூறுவதற்கான அத்தியாயம்.

2. ஆமம்-என்றால் பழுக்காத நிலைமையிலுள்ளது எனப் பொருள்.



*வீக்கத்தில் இரத்தபாகம் என்னும் நிலைமை.*

கபத்தினால் உண்டாகும் வீக்கங்களில் இரத்தமானது வெகுதூரம் வரையில் ஆழத்தில் பழுக்க ஆரம்பிக்கும்; ஆகவே அதில் வீக்கம் பழுப்பதற்கான குறிகள் நன்றாகப் புலப்படமாட்டா. ஆனால் அவ்விடத்தில் வீக்கம் சூடாயிருப்பதற்குப் பதிலாகக் குளிர்ச்சியுள்ளதாகவும், மற்ற சர்மத்திற்கு ஸமானமான நிறமுடையதாகவும், வலி குறைவாகவும், கல்லைத் தொடுவதுபோல் பரிசிப்பதற்குக் கெட்டியாகவும் இருக்கும். தத்துவமறிந்த வைத்தியர் அதை ஸந்தேஹமின்றி "இரத்தபாகம்"[1] எனக்கூறலாம். 8, 9½.

*உடைப்பதற்கும் கீண்டுவிடுவதற்கும் ஏற்ற வீக்கங்களும் பிணியாளிகளும்.*

மனோதைரியம் குறைந்தவர்களுக்கும், பலஹீனர்களுக்கும், பாலர்களுக்கும், பழுத்த நிலைமை மிகவும் அதிகரித்த பிணியாளிகளுக்கும், மர்மஸ்தானங்களிலும் ஸாந்திகளிலும் மற்றும் அவைபோன்ற விடங்களிலும் உண்டான வீக்கமுடையவர்களுக்கும் வீங்கிய பாகத்தை உடையச் செய்வதும், மற்றதில் சஸ்திரங்களால் கீண்டுவிடுவதும் தகுந்த முறைகளாகும் 10½.

*ஆமமானவீக்கத்தை அறுப்பதாலான அவக்குறிகள்.*

ஆம நிலைமையிலுள்ள வீக்கத்தை சஸ்திரத்தினால் கீண்டுவிட்டால் ஸிரைகளும் ஸ்நாயுக்களும் சேதமடையலாம்; இரத்தம் அதிகமாக வெளிவந்துவிடும்; வலியும் அதிகமாய் உண்டாகும்; வீக்கத்தில் தகாத விதமாய் பிளவையும் ஏற்படும்; அல்லது அறுத்த விடத்திலுள்ள விரணத்திலிருந்து, அங்குள்ள தோஷங்களின் ஸம்பந்தத்தினால் விஸர்ப்பம் என்னும் விஷப் புண்கள் ஸம்பவிக்கும். 11½.

*சீழ் உள்ளேயே தங்கியிருப்பதாலான தீமைகள்.*

உள்ளேயே சீழ் அடிக்கடியும் அதிகமாகத் தங்கியிருக்குமானால், அது கிரமமாக விருத்தியாய், அக்னியானது உலர்ந்த புற்குவியலை எரிப்பதுபோல ஸிரைகளையும் ஸ்நாயுக்களையும் மாம்ஸங்களையும் எளிதில் எரித்துவிடும். 12½.

*ஆம சோதையைஅறுப்பதும், பழுத்திருப்பதை உபேக்ஷிப்பதும் தப்பாம்.*

எவனொருவன் அறியாமையினால் ஆமமான வீக்கத்தை அறுத்துவிடுகிறானோ, எவன் பழுத்துப் பக்குவமான வீக்கத்தை அறுக்காமல்உபேக்ஷித்திருக்கிறானோ அவ்வாறு ஆலோசனையின்றியே சஸ்திரசிகித்ஸை செய்யும் அவ்விருவரும் சண்டாளரென்று கருதக்கூடியவராவர். 13½.

*சஸ்திரப் பிரயோகத்திற்கு முன் உணவுண்பதும் மதுபானம் செய்வதும்.*

சஸ்திரசிகித்ஸை செய்வதற்குமுன்பு பிணியாளியை அவனுக்குப் பிரியமானதைப் புஜிக்கச் செய்யலாம். சஸ்திர சிகித்ஸையினாலுண்டாகும் வலியைத் தாங்க முடியாதவன் மதுபானம்செய்யும் வழக்கமுள்ளவனாயிருந்தால், அவனை தீக்ஷ்ணவீர்யமுள்ள மதுவைப் பருகச் செய்யலாம். ஏனெனில், அன்னம் புஜித்தால் அவனுக்கு சஸ்திரசிகித்ஸை செய்கையில் மூர்ச்சையுண்டாகாது; மதுபானத்தினால் மதிமயக்கங்கொண்டவன் வேதனை அறியான். 14, 15.

*சஸ்திர சிகித்ஸையில் மயக்கமுண்டுபண்ணத் தகாதவர்.*

ஆனால் மூடகர்ப்பத்தினால்[1] வருந்துபவரும், அச்மரீயென்னும் மூத்திர மார்க்கத்திலுண்டாகும் கல்லடைப்பினால் வருந்துபவரும், வாயிலுண்டான வியாதிகளால் கஷ்டப்படுபவரும்,

1. இரத்தம் ஆழமான விடத்தில் தோய்ந்து கட்டியைப்போல் பக்குவமாய் வீக்கமுண்டானால் அது இரத்தபாகம் எனப்படுகிறது.

1. மூடகர்ப்பம்—ஸ்த்ரீகளுடைய கருப்பையிலிருந்து சிசு வெளியாகும்போது இயற்கைநிலைமைக்கு மாறாகக் கைகால்கள் முன்னதாக வெளிப்பட்டாலும், சிசுவின் உடல் குறுக்காகத்தங்கி வெளிவரமுடியாமலிருந்தாலும் மூடகர்ப்பம் எனப்படும்.

உதாரோகத்தினால் துன்பப்படுபவரும் மதுபானம் முதலியவற்றால் மயக்கமுண்டாக்குவதற்குத் தகுந்தவராகார். 15½.

சஸ்திரத்தைப் பிரயோகிப்பதற்கான பொதுவிதி.

பிறகு வைத்தியன் பிணியாளிக்குவேண்டிய உபகரணங்களையெல்லாம் ஆயத்தமாயிருக்கும்படி ஏற்ற ஏற்பாடுகளைச் செய்வித்து, அவனைக் கிழக்குமுகமாக உட்காரச்செய்து, தான் அவனுக்கு எதிர்முகமாய் நின்றுகொண்டு, மர்மஸ்தானங்கள் எனப்படும் பிரதேசங்களையும் அவற்றைப்போன்ற வேறு இடங்களையும் விலக்கிவிட்டு, பந்தனம்செய்து, சஸ்திரத்தை அநுலோமமாக வீக்கத்தினின் சீழ் நன்கு வெளிப்படுமாறு ஜடிதியில் [illegible] அதை ஒரே தடவையில் வேண்டியவளவு உட்செலுத்தியெடுத்துவிடவேண்டும். 16—17¼.

மிகப்பெரிய வீக்கங்களில் சஸ்திரப்பிரயோகம் செய்யுமுறைகள்.

மிகவும் பெரிதாகப் புறப்பட்டுப் பழுத்துள்ள வீக்கத்தில் நன்றாக இரண்டு அங்குலம் ஆழம் வரையில் சஸ்திரத்தை உட்செலுத்தி, அப்பால் இரண்டு மூன்று அங்குலதூரத்தில் மற்றொரு தடவை அவ்வாறே கீண்டுவிடவும். அவ்விதம் கீண்டுள்ள விரணத்தினுள் ஏஷணீயென்னும் கருவியைச் செலுத்தி விரணத்தின் உட்புறம் எவ்வளவுதூரம் வியாபித்துப் புரையோடி யிருக்கிறதென்பதை நன்றாக அறிந்து கொள்ளவும்; விரணம் உண்டாயிருக்கிற இடங்களுக்கும் அதன் உட்புறங்களில் ஏற்பட்டுள்ள குழிபோன்ற த்வாரங்களுக்கும் தகுந்தவாறு ஏஷணிகளைக்கொண்டோ, அல்லது விரல்களையிட்டோ, ஏதாவது நாளங்கள் அல்லது கனமான மயிர்களை உட்செலுத்தியோ புரையோடும் மார்க்கங்களைத் துளாவிப் பார்க்கலாம், அவ்வாறு உட்செலுத்தப்படும் ஏஷணீ முதலியது எவ்வெவ்விடங்களில் தாராளமாகப் பிரவேசிக்கின்றதோ அவ்வவ்விடங்களிலெல்லாம் விரணம் புரையோடியிருப்பதாய் அறியவும். எங்கெங்கே வீக்கம் மேலெழுந்து நிற்கிறதோ அவ்வவ்விடங்களில் நன்றாக தோஷங்கள் வெளிவருமாறு வகுத்துக் கீறி விரணமுண்டுபண்ணவேண்டும்; அந்த விரணத்தை எவ்வளவு விசாலமாகவும் ஆழமாகவும் செய்தால் உள்ளே அழுக்குகள் நிற்காமல் வெளியாய்விடுமோ அவ்வாறு செய்து, குழிப்புண்ணுக்கு அவகாசமில்லாமலும் சஸ்திரத்தினால் அறுத்து விரணசிகித்ஸையைச் செய்யவேண்டும். 18—20½.

சஸ்திரசிகித்ஸையில் வைத்தியனுக்கும் சஸ்திரத்திற்கும் அவசியமான குணங்கள்.

சஸ்திர சிகித்ஸையை நன்றாக நிறைவேற்றும் விஷயத்தில் வைத்தியனுக்கு தைரியமும், வெகு சீக்கிரத்தில் எளிதாகக் காரியத்தைச்செய்து முடிக்கும் திறமையும், உடம்பில் வியர்வையாவது நடுக்கமாவது உண்டாகாமலிருக்கக்கூடிய தன்மையும், மனதில் கலவரமுண்டாகாத நிஸ்ஸம்சயமான அறிவும் அவசியமாகும். உபயோகிக்கப்படும் சஸ்திரமோ ஏற்றவாறு கூர்மையாய் அமைந்திருக்கவேண்டும். 21½.

சஸ்திரத்தைக் குறுக்காகப் பிரயோகிக்கத்தகுந்த அவயவங்கள்.

நெற்றிக்கட்டு, புருவம், பல்லீறு, தோள், வயிறு, அக்குள், நேத்திரத்தின் கீழ்மேற்புறங்கள், உதடுகள், கன்னம், கழுத்து, துடையிடுக்கு இவ்விடங்களில் சஸ்திரம் பிரயோகிக்கவேண்டி நேரிட்டால், குறுக்கு வாட்டில் பிரயோகிக்கவேண்டும். இவ்விடங்களைத் தவிர்த்து மற்ற விடங்களில் குறுக்குவாட்டில் சஸ்திரப்பிரயோகம் செய்தால் விரைகளும் ஸ்நாயுக்களும் அறுந்துவிடக்கூடும். 22, 23.



சஸ்திரத்தினால் கீண்ட விரணத்தைக் கழுவுவதும் தூபமிடுவதும்.

சஸ்திரப் பிரயோகம் செய்து முடித்ததும், உபசார வார்த்தைகளைச் சொல்லியும், குளிர்ந்த ஜலத்தை முகத்தில் தெளித்தும், பிணியாளிக்குத் தேருதல் சொல்லி, அப்பால் சஸ்திரத்தினால் கீண்ட விரணத்தை விரலால் நாற்புறமும் அழுத்தி, கஷாயத்தினால் கழுவி [1], ஈரமில்லாத மிருதுவான வஸ்திரத்தினால் ஜலத்தை நன்றாகத் துடைத்துவிடவும். குங்கிலியம், அகிற்கட்டை, வெண்கடுகு, காயம், மட்டிப்பால், இந்துப்பு, திப்பிலி, வேப்பிலை இவற்றை நெய்யால் நனைத்து அக்னியிலிட்டு தூபம் போடவேண்டும்; அந்த தூபம் விரணத்தின் மேல் படியும்படிச் செய்யவேண்டும். [2] 24—25½.

விரணத்தில் வர்த்தியிட்டு பந்தனம் செய்யுமுறை.

திலகல்கம் என்னும் அரைத்த எள், நெய், தேன் இவற்றுள் ஏதேனும் ஒன்றிலோ, அல்லது அனைத்திலுமோ, அல்லது வேறு ஔஷதத்திலோ யுக்தப்படி ஒரு வர்த்தியை நனைத்து, அதை அந்த விரணத்தினுள் செலுத்தி, அதைக்கொண்டே விரணத்தை மறைத்துவிடவும். அதன்மேல் நெய்யிற் பிசைந்த ஒருவித பிஷ்டத்தை வைத்து, அதன்மேல் பருமனாக ஒரு கவலிகையை[3] யிட்டு, வஸ்திரத்தினால் பிணியாளிக்கு ஸௌகரியமாயிருக்குமாறு, எளிதில் தளராதவிதமாய் முறைப்படி யோசித்து பந்தனமிடவேண்டும்; அந்த பந்தனத்தின் முடியை விரணத்திற்கு வலது புறமாகவாவது இடது புறமாகவாவது இடவேண்டுமேயன்றி, அதற்குக் கீழோ அல்லது மேலோ அதற்கு நேர் இரேகையில் முடியக்கூடாது. 26—28.

விரணபந்தனத்திற்கான வஸ்திரங்கள் இருக்கவேண்டியவகை.

பந்தனம் செய்வதற்கான பட்டை வஸ்திரங்கள் நிர்மலமாகவும், மெல்லிதாகவும், கெட்டியாகவும் இருக்கவேண்டும். கவலிகையென்பவை மயிர் முனைகளைப்போன்ற மிருதுவான பஞ்சுகளையுடையவைகளாகவும், தூபங்களால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவையாகவும், மிருதுவாகவும், மழமழப்பாகவும், மடிப்புகளில்லாதவையாகவும் இருந்தால் விரணங்களில் உபயோகிக்க ஹிதமானவையாகும்.[1] 29.

சஸ்திர சிகித்ஸையில் ரக்ஷாக்நவிதி.

அதன்பிறகு அப்பிணியாளிக்கு இரக்ஷஸ் என்னும் பூதங்களைத் தூரவிலக்குவதற்காக இரக்ஷை செய்யவேண்டும்; [2] அவ்விதம் பூதங்களுக்கு ஏற்றவாறு பலியையும் படைக்கவேண்டும். ஓரிலைத்தாமரை, பெருமல்லி, மோர்மல்லி, ஜடாமாம்ஸி, பிரஹ்மயஷ்டியென்னும் ஔஷதி, வசம்பு, சதகுப்பி, குடைபோன்ற ஒருவித புல், அறுகம்புல், வெண்கடுகு இவற்றையும் சிரஸ்ஸில் எப்பொழுதும் அணிந்திருக்கலாம். 30, 31.

1. பாலுள்ள மரங்களான ந்யக்ரோதாதி கணத்திற் கூறியுள்ளவைகளின் கஷாயத்தினால் அல்லது அவ்வித வேறு வஸ்துக்களின் கஷாயத்தினால் கழுவவேண்டும். இவ்விதம் கழுவுவதால் விரணம் சீக்கிரம் ஆறிவிடும்.

2. இவ்வாறு தூபம்போடுவது, விரணத்தில் சீழ் முதலியது பிடிக்காதபடி அதில் தோஷங்கள் சேராமலிருப்பதற்காகவென்று அறிக. இச்சிகித்ஸை Antiseptic treatment என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும்.

3. கவலிகை—பஞ்சு, லிண்டு (Lint) எனப்படும் பஞ்சுத்துணி, இவற்றைக்கொண்டு செய்யப்படும் மெத்தைபோன்ற பந்தனத்திற்கு உபயோகமான வஸ்திரம்.

1. இங்கு கூறப்பட்டுள்ள இம்முறை தற்காலத்திய ஆங்கில வைத்தியர்களால் கைகொள்ளப்பட்ட Antiseptic woollen dressing என்னும் பந்தன முறையை விவரிக்கின்றது.

2. இரக்ஷஸ் என்னும் பூதங்கள் என்பவை சில ஸூக்ஷ்மசரீரிகளான ஜீவவர்க்கங்களைக் குறிப்பிடுகின்றன. அவையே ஆங்கிலத்தில் Microbes எனப்படும். இவை அருகில் (விரணங்களின்மேல்) அணுகாதபடி செய்வதற்கான ஸம்ஸ்காரம் ரக்ஷாக்நம் எனப்படும்.

*விரண சிகித்ஸைசெய்துகொண்டவனுக்கு ஏற்ற ஆசாரம்.*

பிறகு, ஸ்நேஹபானம் செய்த தினத்தன்று நிறைவேற்ற வேண்டியதென்று கூறப்பட்டுள்ள ஆசாரத்தையே இப்பிணியாளியும் அநுஸரித்து நடக்கவேண்டும். விரணசிகித்ஸை செய்துகொண்டிருக்கையில் பகலில் தூங்குவதால், விரணத்தில் அரிப்பும், சிவப்பும், வலியும், வீக்கமும் உண்டாகும். ஸ்த்ரீகளை நினைப்பதாலும், பரிசிப்பதாலும், பார்ப்பதாலும் சுக்ரம் என்னும் தாது அதன் இடம்விட்டுப் பெயர்ந்து வெளியாய்விட்டாலும், ஸ்த்ரீகளோடு சேர்க்கையில்லாமலிருக்கையிலும் புணர்ச்சியினா லுண்டாகக்கூடிய தோஷங்களைப் பெறுவான். 32,33.

*விரணம் ஆறுவதற்கு அநுகூலமான பத்தியாஹாரம்.*

யவதானியம், கோதுமை, கார் அரிசி, சிறு கடலை, பயறு, துவரை, சிறு பாலை, ஆரை, முதிர்ச்சிபெறாத முள்ளங்கி, கத்திரி, அம்மான் பச்சரிசி, சிறுகீரை, பாகல், வெள்ளரி, புடல், தேக்கமரக் கீரை, இந்துப்பு, மாதுளை, கடுக்காய், நெய், கொதித்து ஆறிய ஜலம், பழைய சம்பா அரிசியினாலான அன்னம் இவற்றை ஸ்நிக்த்தமாகவும், அளவிற் குறைவாகவும், உஷ்ணமாகவும், அதிக திரவமாகவும்[1] உள்ள நிலைமையில் ஜாங்கல மாம்ஸங்களோடு உட்கொண்டு வருபவனுக்கு விரணம் சீக்கிரம் ஆறிவிடும். ஏற்ற காலத்தில் அளவறிந்து அவரவருடைய தேஹ நிலைமைக்கு அநுகூலமான ஆஹாரத்தை உபயோகித்துவந்தால் அது ஸுகமாய் ஜீர்ணமாகும். 34—37.

1. திரவோத்தரம் என்கிற மூலத்திலுள்ள பதத்திற்கு, முதலில் ஸாதாரண உணவும், முடிவில் திரவமான உணவும் உபயோகிப்பது என்றும் பொருள்கூறலாம்; ஆனால் பிணியாளிகளுக்குப் பொதுவாகத் திரவமான உணவே எப்பொழுதும் பத்தியமாகும்.

*விரணமிருக்கையில் அஜீர்ணமுண்டாவதாலானகெடுதிகள்.*

சஸ்திரசிகித்ஸை செய்திருக்கையில் அஜீர்ணமுண்டானால், வாயுமுதலிய தோஷங்கள் பலமாகக் கலக்கமடைந்துவிடும். அதனால் பிறகு விரணத்தில் வீக்கமும், வலியும், பதனழியக் கூடியவாறு அழன்ற பரிணாமமும், எரித்தலும், பொருமலும் உண்டாகும். 38.

*விரணமுள்ளவர் உபயோகிக்கத்தகாத நவதான்யாதி வர்க்கம்.*

புதிதானதானியம், எள், உளுந்து, மது, ஆநூபமாம்ஸம், பாலால் உண்டாகும் வஸ்துக்கள்,[1] கருப்பஞ்சாறாலான வஸ்துக்கள்,[2] புளி, உப்பு, காரம் இவற்றை விரணத்துடன் இருப்பவர் விலக்கி விடவேண்டும். மேலும் வேறு எந்தெந்த வஸ்து வயிற்றுப் பொருமலுண்டாக்கக் கூடியதாகவும், தக்த்தபாகம் அடையக்கூடியதாகவும்,[3] குருவாகவும், சீதளமாகவும் இருக்கின்றதோ அதையும் உபயோகிக்கக்கூடாது. நவதானியம்[4] முதலிய இவ்வகுப்பைச்சேர்ந்த வஸ்துக்கள் விரணமுடையவருக்கு எல்லாத் தோஷங்களையும் கோளாறடையச்செய்யும் இயல்புடையன. மதுவானது தீக்ஷ்ணகுணமும், உஷ்ணவீர்யமும், ரூக்ஷத்தன்மையும், அம்லரஸமுமுடையதாகையால், அது விரணத்தை வெகு சீக்கிரத்தில் கெடுத்துவிடும். 39—40½.

1. தயிர், வெண்ணெய், நெய் முதலியன.

2. வெல்லம், கற்கண்டு, சர்க்கரை முதலியன.

3. தக்த்தபாகம்—மிகவும் அம்லமாகவும் குடலில் முறிவையும் பெறும் உணவின் தகாத பாகவிசேஷம்.

4. நவதானியம் என்றால் இங்கே புதியதானியம் எனப் பொருள்; ஒன்பதுவிதமான தானியங்கள் என்கிற பொருள் இங்கே குறிப்பிடப்படவில்லை.



*விரண சிகித்ஸைக்குப் பின் அதைக்காப்பாற்றும் முறை.*

அந்த விரணத்தை வெட்டிவேராலான சிற்றாலவட்டங்களால் மெதுவாக வீசவும்; அதை அசைக்கவுங் கூடாது; குத்தவுங்கூடாது; சொரிதலும் பிசகு; அசைந்து வேலை செய்யும்பொழுது அதற்கு அதிர்ச்சியுண்டாகாவண்ணம் அதைக் காப்பாற்றவேண்டும். நண்பர்களாயும், வயோதிகர்களாயும், பிராம்மணர்களாயுமுள்ளவர்கள் மனதுக்கு இன்பமாகக் கூறும் கதைகளைக் கேட்டுக்கொண்டு, வியாதி நிவ்ருத்தியாய் விடுமென்று ஆசையுடன் இருந்துவருபவன் சீக்கிரத்தில் விரணத்தைப் போக்கிக்கொள்கிறான். 41—42½.

*விரணத்தை மீண்டும் சுத்தம்செய்து சிகித்ஸைசெய்யும் தினம்.*

மறுபடியும் மூன்றாவது தினத்தன்று முன் செய்ததுபோலவே கழுவுதல் முதலிய விரணசிகித்ஸையைச் செய்யவேண்டும்; ஆனால் இரண்டாவதுநாள் விரணங்களைக் கழுவுவது முதலிய காரியங்களைச் செய்யக்கூடாது; அவ்வாறு செய்தால் வலி தீவ்ரமாகப்போய், விரணமும் கரடுகட்டி வெகு மெதுவாக ஆறி வரும். 43, 44.

*நூற்சிலும்பை-கல்கங்களை முறைதவறாக உபயோகிப்பதாலான தீங்குகள்.*

ஸ்நிக்த்தமாகவோ அதிக ரூக்ஷமாகவோ உள்ள நூற்சிலும்பையும்,[1] கல்கத்தையும விரணத்திற்குள் உபயோகிக்ககூடாது; மேலும் அவற்றை வெகு கெட்டியாகவோ அல்லது தளரவாகிலும்விரணத்தினுள் வைப்பது தகாது; அவற்றை வேறு எவ்விதத்திலும் முறைகேடாகப் பிரயோகிக்கக்கூடாது. அவை அதிக ஸ்நிக்த்தமாயிருந்தால் விரணத்தில் ஊன் தண்ணீர்முதலிய கசிவுகள் விருத்தியாகும். அவை அதிக ரூக்ஷமானால் தசைநார்கள் அறுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சியும், அதிகவலியும், வெடிப்பும், இரத்தப்பெருக்கும் ஸம்பவிக்கும். நூற்சிலும்பை முதலியவை அதிக தளர்ச்சியாகவோ அதிக கெட்டியாகவோ இருந்தாலும், அவை முறைதவறாகச் செலுத்தப்பட்டாலும் விரணத்தினுள்ளுள்ள மார்க்கத்தில் தேய்வு உண்டாய் வலியதிகரிக்கும். 45,46.

*விகேசிகை விரணத்தினுள் தங்கியிருப்பதாலான குணங்கள்.*

விகேசிகை யெனப்படும் நூற்சிலும்பையானது விரணத்தினுள் இருந்துவந்தால் துர்நாற்றம்வீசும் மாம்ஸத்துடன் கூடியதும், கொப்புளம்போல் பிதுங்கி வந்திருப்பதும், உள்ளே புரையோடிக்கொண்டிருப்பதும், சீழை உள்ளடக்கிக் கொண்டிருப்பதுமான விரணத்தைத் துரிதமாய் ஆற்றிவிடும். 47.

*தக்த்தபாகமான வீக்கத்திற்கு சிகித்ஸை.*

வீக்கம் விதக்த்தபாகமடைந்திருக்கையில்[1] விரணங்களுக்கு விரோதமில்லாத பாசநகுணமுள்ள போஜநவகைகளாலும், அவ்விதமான உபநாஹ ஸ்வேதங்களாலும் சிகித்ஸை செய்யவேண்டும். 48.

*உடனே தைக்கவேண்டிய விரணங்கள்.*

அடிமுதலியவை தாக்குவதால் திடீரென்று ஸம்பவிக்கும் ஸத்யோவ்ரணங்கள்[2] என்னும் புண்கள் வாய் திறந்து இருக்கையில், அவற்றை உடனே தைத்துவிடவேண்டும். மேலும் மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரித்து உண்டாகும் கிரந்திகளைச் சஸ்திரத்தினால் கீறி உடனே தைக்கவேண்டும். காதுகளிலுண்டாகும் சிறிய பாளீவ்ரணங்கள் என்னும பிளவுபட்ட விரணங்

1. நூற்சிலும்பை — இதுவே விகேசிகையென்று ஸம்ஸ்கிருதத்தில் வழங்கப்படும். ஆங்கிலத்தில் Lint எனப் பெயராம்.

1. விதக்த்தபாகம்—விரணத்தை ஏற்ற காலத்தில் சஸ்திரத்தினால் அறுக்காமற்போவதால் மிதமிஞ்சி முதிர்ந்து விடுதல்.

2. ஸத்யோவ்ரணம் அப்பொழுதே ஸம்பவித்த விரணத்திற்குப் பெயர்.

களையும், சிரஸ், நேத்திரங்களின் வரம்பு, நாசி, உதடு, கன்னம், செவிகள், துடைகள், புயங்கள், கழுத்து, நெற்றி, பீஜங்கள், பிருஷ்டபாகங்கள், ஆண்குறி, குதபாகம், வயிறுமுதலிய மிகக்கதுப்பான கனமுள்ள அவயவங்கள் இவற்றிலும் அவ்வாறே சஸ்திரத்தினால் கீண்டு உடனே அவற்றைத் தைத்துவிடவேண்டும். 49—50½.

*தைக்கத்தகாக விரணங்கள்.*

அற்ப தசைநார்களை யுடையவையும் அசையக்கூடியவையுமான வங்க்ஷணம் என்னும் துடையிடுக்கு, அக்குள் முதலிய விடங்களிலுள்ளவையும், வாயு ஸஞ்சரிக்கக்கூடிய அவயவங்களை ஆச்ரயித்தவையும், உள்ளடங்கிய சல்யங்களை யுடையவையும், க்ஷாரங்கள்-விஷங்கள்-அக்னி இவற்றால் எரிக்கப்பட்டவையுமான விரணங்களைத் தைக்கக்கூடாது. 51½.

*விரணங்களைத் தைப்பதில் விசேஷவிதிகள்.*

சிதைவுற்று இடம்விட்டு வேறிடத்தில் விழுந்துள்ள சிறிய எலும்புச் சில்லியையும், உலர்ந்து கெட்டியாகப்போன இரத்தத்தையும், மற்றும் புற்பூண்டுகளோ மயிர்களோ உள்ளடங்கியிருந்தால் அவற்றையும் வெளிப்படுத்திவிட்டு, அறுபட்டுத்தொங்கும் தசைகளையும், ஸந்திகளிலிருந்து விலகிய அல்லது ஒடிந்த எலும்பையும் அதனதன் ஸ்த்தாநத்தில் தகுந்தவாறு அமையச்செய்து, இரத்தப்பெருக்கும் நின்றபிறகு, நூலினாலாவது, நார்களாலாவது, நரம்புகளாலாவது தைக்கவேண்டும்; தையல்களை ஒன்றுக்கொன்று தூரத்திலாவது, வெகு நெருக்கத்திலாவது போடக்கூடாது; மேலும் சதைகளை வெகு ஓரத்திற் பிடித்தாவது, வெகு அதிகமாகப் பிடித்தாவது தைக்கக்கூடாது. 52—53½.

*விரணங்களைத் தைத்தபிறகு செய்யவேண்டிய உபசாரம்.*

பிறகு வியாதிக்ரஸ்தனுக்குத் தேறுதல் கூறி, அஞ்ஜநம், வெண் பட்டு எரித்தெடுத்த மை, குப்பமேனி, ஆனைவணங்கியின் கனி, வெள்ளிலோத்தி, அதிமதுரம் இவற்றைத் தேனிலாவது நெய்யிலாவது குழைத்து விரணத்தின்மேல் தடவிவிட்டு, முன் போல பந்தநம் முதலியதைப் பிரயோகிக்க வேண்டும். 54, 55.

*இரத்தக்கசிவு இல்லாத விரணங்களைத் தைத்தல்.*

விரணத்தின் உதடுகளில் இரத்தக்கசிவு இல்லாமலிருந்தால், அதைச்சிறிது மாத்திரம் கீறி, அங்கு இரத்தம் கசிந்ததும் அதைத் தைத்துவிடவேண்டும்; ஏனெனில் அவ்விடத்தில் விரணத்தின் உதடுகளை ஒன்றுகூட்டி ஆறச்செய்வது இரத்தமேயாம். 56.

*தேசகாலாதிகளை அநுஸரித்து பந்தநம் பிரயோகித்தல்.*

அந்தந்த தேச காலாதிகளின் தன்மைகளைக் கவனித்து, அந்த விரணங்களில வெவ்வேறுவிதமான வஸ்துக்களைக் கொண்டு பந்தநங்களைப் பிரயோகிக்க வேண்டும். 56½.

*விரண பந்தநத்திற்கான பலவித வஸ்திரங்கள்.*

ஆட்டுரோமத்தினாலான வஸ்திரங்கள், சர்மங்கள், நூற்சிலும புகளுள்ள ஒருவகையான வஸ்திரங்கள் என்னும இவை உஷ்ணகுணமுள்ளவை. பட்டுத்துணிகள் சீதளகுணமுள்ளவையாம். இலவம் பஞ்சுத்துணி, பருத்திப்பஞ்சுத்துணி, நரம்புகளாலான ஒருவித துணி, மரவுரி இவற்றாலான பந்தநங்கள் சீதளமாகவும உஷ்ணமாகவும் இருக்கும். 57½.

*சில விரணங்களில் லோஹ சலாகையும் அஸ்திபங்கத்தில் பலகை முதலியதும் உபயோகிக்கும் முறை.*

மேதஸ்ஸாவது கபமாவது அல்லது இரண்டுமாவது எந்தவிரணத்தில அதிகரித்திருக்கின்றனவோ அதல் செப்பு, அயம, பித்தளை, ஈயம் இவற்றாலாகிய சலாகை அல்லது சஸ்திரங்களைப் பிரயோகிக்க வேண்டும். அஸ்திபங்கம எனப்படும எலும்பு முறிவடைந்திருக்கையில் அவ்வவயவங்களைத்தாங்கி பந்தநம செய்வதற்காகப் பலகையையும, தர்ப்பம முதலியவற்றையும் பிரயோகிக்கவேண்டும். 58½.



*பதினைந்து விதமான பந்தந முறைகள்.*

அதனதன் பெயருக்குத் தகுந்த உருவங்களை யுடையவைகளாய் பதினைந்து வகையான பந்தந முறைகள் உண்டு. அவையாவன: கோசபந்தனம், ஸ்வஸ்திகபந்தனம், முத்தோலீபந்தநம், சீநபந்தநம், தாமபந்தநம், அநுவேல்லிதபந்தநம், கட்வாபந்தநம், விபந்தபந்தநம், ஸ்த்தகிகாபந்தநம், விதாநபந்தநம், உத்ஸங்கபந்தநம், கோபணபந்தநம், யமகபந்தநம், மண்டலபந்தநம், பஞ்சாங்கபந்தநம் என்பனவாம். புத்திமானுள்ள வைத்தியன், மேற்கூறிய பந்தநமுறைகளில் எது எந்த அவயவத்தில் நன்றாக அமைந்து நிற்கக்கூடுமோ அவ்வவயவத்தில் அதைப் பிரயோகிப்பானாக.[1] 59—61.

1. கோசபந்தநம் - வஸ்திரத்தைப் பைபோலச் செய்து விரல்களில் பிரயோகிக்கும் பந்தநம். ஸ்வஸ்திகம்—ஒன்றன்மேல் ஒன்றாகக்குறுக்சாகப் பிரயோகிக்கப்படும் கட்டு; துடையிடுக்கு மற்றுமுள்ள ஸந்திபாகங்கள்முதலியவற்றில் பிரயோகிக்கப்படுவது. முத்தோலீ ஸாதாரணமாகச் சுற்றிக்கட்டும் பந்தநம்; இது கழுத்திலும் ஆண்குறிமுதலியவற்றிலும் பிரயோகிக்கத் தகுந்தது. சீநபந்தநம்— பந்தநவஸ்திரத்தை இடையில் இழித்து கண்முதலியவற்றைச் சுற்றிலும அமையும்படி செய்யப்படும் ஒருவிதபந்தநம். தாமபந்தநம்—முறுக்கிக் கட்டும் பந்தநம; இது பெரியதமனிகள் முதலியது அறுபட்டுப்போயிருக்குமிடங்களில பிரயோகிக்கததகுந்தது. அநுவேல்லிதம்—மரங்களில் ஒரு கொடியேறிப் படருவதுபோல கை கால்களில் கட்டப்படும் பந்தந முறை. கட்வாபந்தநம்—ஏந்தானம்போன்ற கட்டு; இது முகவாய்க்கட்டை முதலியதில் பிரயோகிக்கப்படுவது. விபந்தபந்தநம்—மிக்க விசாலமாகப் பரப்பிக்கட்டும் பந்தநம்; இது வயிற்றிலும், மார்பிலும், முதுகிலும் உபயோகிக்கத்தகுந்தது. ஸ்த்தகிகாபந்தநம — த்வாரங்களை அடைக்கும்படியான பந்தநம்; இதை மூத்திரவஸ்திக்கு அடிப்புறத்திலும் குதத்திலும பிரயோகிக்கலாம். விதாநபந்தநம் —பரவுனாறம்பால் கட்டும்பந்தனம்; இது சிரஸ்ஸின்மேல் பிரயோகிக்கத்தகுந்தது. உத்ஸங்கபந்தநம —பலவித மடிப்புகள்விழும்படியாகத் தோள் முதலியவிடங்களில் பிரயோகிக்கப்படுவது. கோபணம்— பசுவின்முகம் அல்லது ஸர்பபத்தினை படம்போல் பிரயோகிக்கப்படுவது; இதை நாசிமூனை உதடுமுதலிய அவயவங்களில் பிரயோகிப்பார்கள். [எலும்புகள் ஒடிந்தாலும், விரணங்கள்ஸம்பவித்தாலும் அவற்றின் சிகித்ஸைக்காக இந்த பந்தநங்கள் பிரயோகிக்கப்படும்.]

*காட - ஸம - ச்லத பந்தநங்களைப் பிரயோகிக்கும் அவயவங்கள்.*

துடையிலும், பிருஷ்டபாகத்திலும், அக்குளிலும், துடையிடுக்கிலும், சிரஸ்ஸிலும் பந்தநங்களை காடம் அல்லது கெட்டியாகப் பிரயோகிக்கவேண்டும். சாகைகள் என்னும் கைகால்களிலும், முகத்திலும், காதுகளிலும், மார்பிலும், பிருஷ்டபாகத்திலும், பக்கங்களிலும், கன்னங்களிலும், வயிற்றிலும், ஆண்குறியிலும், பீஜத்திலும் ஸமபந்தநம் என்னும் அதிக கெட்டியாக இல்லாத பந்தநத்தைப் பிரயோகிக்க வேண்டும். நேத்திரத்திலும், ஸந்திகளிலும் ச்லதம் என்னும் தளர்ந்திருக்கும் பந்தநங்களை யிடவேண்டும்.[1] 62, 62½.

*வாத கபவிரணங்களில்காட-ஸம-சிதில பந்தநங்கள் இடவேண்டிய தில் சில விசேஷ விதிகள்.*

சிதிலம் என்கிற தளர்ச்சியான பந்தநம் இடுவதற்கான அவயவங்களில் வாதத்தினாலாவது கபத்தினாலாவது விரணம ஸம்பவித்தால் அவ்விடங்களில ஸமபந்தநத்தைப் பிரயோகிககவேண்டும். ஸமபந்தனம் இட வேண்டிய அவயவங்களில் அத்தோஷங்களாலேயே விரணமுண்டானால் அவ்விடங்களில் காடபந்தநத்தையே பிரயோகிக்கவேண்டும். காடபந்தனம இடவேண்டிய அவயவங்களில் அதே தோஷங்களால் விரணம் ஸம்பவித்தால், அவ்விடங்களில் அதிக கெட்டியாகப் பிரயோகிக்கவேண்டும். 63½.

*வாத - கபங்களாலானவிரணங்களின் பந்தநங்களை அவிழ்க்கும் காலம்.*

வாத-கபங்களால் ஸம்பவிக்கும் விரணங்களின்மீது இடப்பட்டபந்தநங்களை ஹேமந்த-சிசிருதுக்களிலும வஸந்தருதுவிலும் மூன்று நாட்களுக்கு ஒரு முறையாக அவிழ்க்கவேண்டும. 64.

1. காடபந்தநம்— கெட்டியான பந்தநம். ச்லத பந்தநம்— இதையே சிதிலபந்தநம் என்றும் கூறலாம்; என்றால் தளர்ச்சியான பந்தநம். ஸமபந்தநம்- அதிககெட்டியாகவுமில்லாமல் அதிக தளர்ச்சியாகவும் இல்லாமல் நடுத்தரமாகப் பிரயோகிக்கும் பந்தநம்.

*பித்த-ரத்தவிரணங்களில் காட-சிதில-ஸமபந்தநங்களிடுதல்.*

காடபந்தநம் இடம்வேண்டிய அவயவத்தில் பித்தத்தினாலாவது இரத்தத்தினாலாவது விரணம் ஸம்பவித்தால், அவ்விடத்தில் ஸமபந்தநத்தைப் பிரயோகிக்கவேண்டும். ஸமபந்தநமிடவேண்டிய அவயவத்தில் அத்தோஷங்களால் விரணம் உண்டானால் அவ்விடத்தில் சிதிலபந்தநத்தையிடலாம். சிதில பந்தநத்திற்கான அவயவத்தில் அத்தோஷங்களாலேயே விரணம் ஸம்பவித்தால், அவ்விடத்தில் பந்தநமிடவே கூடாது. 65.

*பித்த - இரத்தங்களாலான விரணங்களில் பிரயோகித்த பந்தநங்களை அவிழ்த்தல்.*

அவ்வித பந்தநங்களை கிரீஷ்மருதுவிலும் சரத்ருதுவிலும் காலையிலும் மாலையிலும் ஆக தினத்திற்கு இரண்டுமுறைவிதம் அவிழ்க்கவேண்டும். 65½.

*விரணங்களை பந்தநம் செய்யாவிட்டால் நேரிடும் கெடுதிகள்.*

விரணங்களை பந்தநங்களைக் கொண்டு கட்டாமல் விட்டுவிட்டால், ஏதேனும் பூச்சிகளும் கொசுக்களும் அவற்றைக் கடிக்கநேரிடுமாகையால் அதனாலும், வாயு முதலிய வற்றாலும் விரணங்கள் பீடிக்கப்பட்டுப் பதனழியத்தலைப்படும். அவற்றில் உபயோகிக்கப்படும் ஸ்நேஹவஸ்துவாவது வேறு ஔஷதமாவது வெகு நேரம் நிலைத்திருக்கமுடியாது. அந்த விரணங்கள் பிறகு சுத்தியடைவதும் கஷ்டம். ஆகவே எளிதில் ஆறுவதுமில்லை. ஒருக்கால் ஆறினாலும் அவ்விடம் நிறவேறுமையடைந்து ஒருவாறு விகாரமாய்விடும். 66, 67.

*விரணங்களை பந்தநம் செய்வதாலான குணங்கள்.*

எலும்புமுதலியவை பலவாறு உடைந்து சிதம்பியிருந்தாலும், முறிவுபட்டிருந்தாலும், இடம்விட்டு நழுவினாலும், தசைநார் முதலியது அறுபட்டிருந்தாலும், ஸிரைகளும் ஸ்நாயுக்களும் அறுந்திருந்தாலும் பந்தநத்தினால் அவை எளிதில் சேர்ந்து ஆறிவிடும். மேலும் எழுந்திருத்தல், சயனித்தல் முதலிய எல்லாவிதமான காரியங்களிலும் அவ்விடங்களுக்கு அதிக தீங்கு நேரிடாமல் பந்தநங்கள அந்த விரணங்களைக் காப்பாற்றும். மேலும் உதடுகள் பிதுங்கித் தடித்திருப்பதும், கொப்புளம்போல் மேலெழுந்து நிற்பதும், மேடுபள்ளமாயிருப்பதும், கடினமானதும், அதிகவலியுடன் கூடியதும், குமலுக்கு ஒரேஸமமாயிருப்பதும், மிகவும் மிருதுவானதும், வலியில்லாததும் ஆக இவ்விதமான கோளாறுகளையுடைய விரணமும் எளிதில் பந்தநத்தினால் சுத்தமாக்கப்பட்டு ஆறிவிடும். 68—69½.

*சிலவிரணங்களின் மேல் இலைகளை உபயோகித்தல்*

கடினமாகவும், அற்பமாம்ஸமுள்ள அவயவங்களில் ஸம்பவித்ததும், ரூக்ஷத்தன்மையினால் எளிதில் ஆறாததுமான விரணங்களில் ஔஷதமிட்டு அந்தந்ததோஷங்களுக்கும் அந்தந்த ருதுக்களுக்கும் ஏற்றவாறு பழமுண்ணிப்பாலை, பூர்ஜமரம், மருதமரம், கடப்பமரம் இவற்றின் இலைகளால் நாற்புறமும் நன்கு மூடிவிடவும்; அந்த இலைகள் முதிர்ந்தவையாகவும், த்வாரங்களுடன் சிதைந்தவையாகவும், தடித்துக் கடினமாகவும் இராமல் நடுத்தரமாய் முதிர்ந்திருப்பதுடன், நன்றாகக கழுவப்பட்டும் இருக்கவேண்டும். 70—71½.

*பந்தனமிடத்தகாத விரணங்கள்.*

குஷ்டரோகிகள், அக்னியினால் தேஹம் எரிக்கப் பட்டவர், பிடகையென்னும் பிளவைகளும் மதுமேஹ ரோகமுள்ளவர்கள் இவர்களுக்கு விரணங்களின் மேல் பந்தநம் செய்யக்கூடாது; மூஞ்சுறுவின் விஷத்தினால் வட்டமாயுண்டாகும் தடிப்புகளையும், க்ஷாரத்தினால் எரிக்கப்பட்டு உண்டாகும் விரணங்களையும், விஷப் பற்றுள்ளவையும், சிதைவுற்று அறுந்துவிழுபவையும், வலியும் எரித்தலுமுள்ளவையும், வீக்கங்கொண்டு விஸர்ப்பங்களுடன் கூடியவையுமான விரணங்களையும் பந்தநம் செய்யக்கூடாது. தசைநார்கள் அழன்றுபோய் எரிக்கப்படுகையிலும் குதத்தில் கடுமையாய் உண்டாகும் அழன்ற விரணத்திலும் பந்தநம்செய்வது தகாது. 72—73½.



*பாதுகாக்கப்படாத விரணத்தில் ஈக்களாலுண்டாகும் தீமை*

தகுந்தவாறு பாதுகாக்காமையால் எந்த விரணத்தில் ஈயானது கிருமிகளைக் கொண்டுவைக்கின்றதோ, அக்கிருமிகளால் பக்ஷிக்கப்பட்டு வலியையும், வீக்கத்தையும், இரத்தம்முதலியவற்றின் பெருக்கையும் உண்டுபண்ணும். 74½.

*விரணங்களில் கிருமிகளைப்போக்கும் சிகித்ஸை*

அவ்வாறு கிருமிகளால் கெட்டுப்போகும் விரணத்தைக் கழுவுவதற்கும், விரணத்வாரத்தை நிரப்புவது அல்லது பூரணம் செய்வதற்கும்[1] ஸுரஸாதி கணத்திலுள்ள [2] சரக்குகளை உபயோகிக்கலாம். எழிலம்பாலை, புங்கமரம், எருக்கு, வேம்பு, பழமுண்ணிப்பாலை இவற்றின் பட்டைகளைப் பசுமூத்திரத்தினால் ஆட்டி அந்த விரணத்தின் மேல் லேபநம் செய்யலாம். க்ஷாரங்கள் என்னும் உப்புவகைகளை ஜலத்திற்கரைத்து, அந்த திரவத்தைக் கிருமிகளுடன் கூடியவிரணத்தில் தெளித்து வருவதும் ஹிதமாகும்; அல்லது தசைநார்களால் விரணத்தை மறைத்து, க்ஷார ஜலத்தினால் நனைத்துவருவதும் நலம். இவ்வித சிகித்ஸைகளால் கிருமிகளை சீக்கிரம் அழித்துவிடவேண்டும். 75—76½.

*தோஷம் மிச்சமிருக்கையில் விரணத்தை ஆற்றக் கூடாது.*

விரணத்தினுள் தோஷம் மிச்சம் இருக்கையிலேயே ஏதோ துரிதப்பட்டு விரணத்தை ஆற்றிவிடக்கூடாது; ஏனெனில், உள்ளடங்கிய அத்தோஷமானது பிரதிகூலமான சொற்பகாரணத்தினாலும் மறுபடியும் தீங்குண்டுபண்ணும். 77½.

*விரணம் ஆறியபிறகு அவசியமான உபசாரமும் அதன் கால அளவும்.*

விரணம் நன்கு ஆறியபிறகுகூட அஜீர்ணபோஜநம், வியாயாமம், புணர்ச்சி முதலியவற்றையும், அமிதமான மனக்களிப்பு, கோபம், பயம் இவற்றையும் சரீரத்தில் திடனுண்டாகும் வரையில் விலக்கி விடவேண்டும். விரணம் ஆறிவருவதுமுதற்கொண்டு ஆறு அல்லது ஏழு மாஸங்கள் வரையில் அப்பிணியாளியை ஆதரவுடன் உபசரித்து வரவேண்டும். விரணசிகித்ஸைக்கான பொதுவாயுள்ள விதி இதுவேயாம். 78, 79.

*விரணசிகித்ஸையைப் பற்றிய முடிவுரை.*

இன்னும் பலவாறாக உற்பத்தியாய்வரும் அந்தந்த நிலைமைகளில் வாதாதி தோஷங்களுடைய அல்லது விரணமுண்டாவதற்கான குறிகள் ஸம்பவிக்கையில் சிகித்ஸை செய்பவர், பிறகு உத்தரஸ்தாநத்தில் கூறப்போகிற விவரத்தைப்பற்றி நன்றாக ஆலோசித்து, வெகு கருத்துடன் இன்னும் வெவ்வேறாக பலவிதமான முறைகளைக் கொண்டு சிகித்ஸை செய்க.—80.

1. பூரணம்— விரணம் குழிப்புண்ணாக விருந்தால் அதனுள் ஆற்றுங்குணமுடைய திரவத்தை நிரப்புதல்.

2. ஸுரஸாதிகணம்—இந்த கணத்தைப்பற்றிய விவரங்களை 126-வது பக்கம் பார்க்க.

## முப்பதாவது அத்தியாயம்.

இனி க்ஷாராக்னி கர்மவிதி[1] யென்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது :—

*க்ஷாரப்பிரயோகத்தின் மேன்மை.*

சஸ்திரங்களென்ன அநுசஸ்திரங்களென்ன இவையெல்லாவற்றினும் க்ஷாரம் சிரேஷ்டமானது. ஏனெனில் எவ்வித ஒழுங்கீனமான அவயவங்களிலும் க்ஷாரப்பிரயோகம் செய்தே அறுத்தல் உடைத்தல் முதலிய காரியங்களைச் செய்யலாம். மேலும் மிகவும் சிரமப்பட்டு சஸ்திரங்களைப் பிரயோகிக்க வேண்டிய அவயவங்களிலும், சஸ்திரத்தினால் பயனில்லாமற் போய்விடுகையிலும், மிகவும் கஷ்டஸாத்தியமான வியாதிகளிலும் க்ஷாரப் பிரயோகம் பயன் தரக்கூடியதாம். அன்றியும் உட்கொண்டு வியாதிநிவாரணம் செய்து கொள்ளவும் இது ஏற்றதாயிருக்கிறது. 1, 2.

*க்ஷாரமுட்கொள்வதற்கான வியாதிகள்.*

அர்சோ ரோகம், அக்னிமாந்தியம், அச்மரீ, குன்மம், மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகள், கிருத்ரிமவிஷப் பற்றுதலான கோளாறுகள் முதலியவற்றில் க்ஷாரம் உட்கொள்ளத் தகுந்ததாம். $2\frac{1}{2}$.

*க்ஷாரத்தை நேராகமேலுக்கு உபயோகிக்கும் வியாதிகள்.*

மஷகம், வெண்குஷ்டம், வெளிப்புறத்தில் உண்டாயிருக்கும் அர்சஸ்ஸுகள், குஷ்டம், ஏதேனும் அவயவம் சுரணையற்றுப் போதல், பகந்தரம், அர்புதம், கிரந்தி, கெட்டுப்போன நாடீவ்ரணம் முதலியவற்றில் க்ஷாரத்தை நேராகவே அந்தந்த வீட்டிற் பிரயோகிக்கலாம்.[1] $3\frac{1}{2}$.

*க்ஷாப் பிரயோகம் செய்யத்தகாத நிலைமைகள்.*

பித்தக் கோளாறு, இரத்தத்தின் கோளாறு, வேண்டியவளவு பலம்பெற்றிருத்தல், துர்ப்பலத்தன்மை, ஜ்வரம், அதிஸாரம், ஹ்ருதயரோகம், சிரோரோகம், பாண்டுரோகம், அரோசகம், திமிரம் என்னும் நேத்திரவியாதி, சோதநசிகித்ஸை செய்துகொண்டிருக்கும் நிலைமை, ஸர்வாங்கசோகை இவற்றில் க்ஷாரத்தை முற்கூறிய இருவகைகளாலும் உபயோகிக்கக் கூடாது; மேலும் பயந்தவன், கர்ப்பிணீ, ருதுமதீ, நாதக்குழல்களின்கோளாறால் நிலைகுலைந்த கருப்பையுடையவள், சிசுக்கள், கிழவர் இவர்களும் க்ஷாரப்பிரயோகத்திற்கு ஏற்றவர்களல்லர்; அன்னம்ஜீர்ணமாகாமலிருக்கையிலும் பிரயோகிக்கக் கூடாது; தமனிகளென்னும் செவ்விரத்தக்குழாய்கள், அஸ்த்தி முதலியவற்றின் ஸந்திகள், மர்மஸ்தானங்கள்,[2] தருணாஸ்திகளென்னும் முருந்துகள், காரிரத்தக் குழாய்கள், ஸ்நாயுக்கள்,[3] ஸேவநீ,[4] தொண்டை, நாபி அற்ப தசைநார்களையுடைய பிரதேசம், ஆண்குறி, பீஜம், ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் நாசிமுதலிய த்வாரங்கள், நகங்களின் உட்புறங்கள் இவற்றிலும் க்ஷாரம் பிரயோகிக்கக் கூடாது; வர்த்மரோகம் இருந்தாலேயொழிய நேத்திரங்களிலும் க்ஷாரம் பிரயோகிப்பது பிசகு; ஹேமந்த-சிசிரருதுக்களிலும், வர்ஷருதுவிலும், கிரீஷ்மருதுவிலும் க்ஷாரம் எவருக்கும் உபயோகிக்கத் தகுந்ததல்ல. 4—$7\frac{1}{2}$.

1. க்ஷாரம் என்பதையே காரம் என்பார்கள். அழற்சிதரும் வஸ்து. அவ்வித க்ஷாரத்தையும் அக்னியையும் பிரயோகித்துச் செய்யும் சிகித்ஸை க்ஷாராக்னி கர்மவிதி எனப்படும்.

1. இங்கு குறிக்கப்பட்டுள்ள வியாதிகளைப் பற்றிய விவரங்களை நிதானஸ்த்தானத்திற் காண்க.

2. மர்மங்கள்—8-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

3. ஸ்நாயு—205-வது பக்கம் டிப்பணியைப்பார்க்க.

4. ஸேவநீ—நாக்கின் அடிப்புறம், பீஜகோசத்தின் மத்தியபாகம் முதலியவற்றில் தைக்கப்பட்டதுபோன்ற குறிகளடங்கிய பாகம்.



*மத்தியமக்ஷாரம் பக்குவம் செய்யப்படும் முறை.*

காட்டுப்பருத்தி, கொன்றை, வாழை, வேம்பு, மாமரம், கள்ளி, முருக்கமரம், விஷ்ணுக்ராந்தி, மருதமரம், வெட்பாலை, எருக்கு, மணிப்புங்கை, புங்கை, அலரி, தக்காளி, நாயுருவி, அரணி, சித்திரமூலம், வெள்ளிலோத்தி இவற்றை வேர் கிளைகள் முதலியவற்றோடு ஈரமாகவே கிரஹித்து, சிறு துண்டுகளாகத் துண்டித்து, நான்கு பங்கு புடல்களையும், யவதானியத்தின் சுணையென்னும் முட்களையும் காற்றோட்டமில்லாத பிரதேசத்தில், ஒரு கற்பாறையின்மேல் காட்டுப்பருத்தியைப் பரப்பி, அதிலவற்றைத் தனித்தனியே குவித்து, சுண்ணாம்புக் கற்களை அவற்றின்மீது போட்டு, எள்ளுத் தாள்களையிட்டு எரித்துவிடவேண்டும். அவற்றிற் பற்றிய அக்னி ஆறியபிறகு, எரிந்துள்ள வஸ்துக்களைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்துக்கொள்ளவும். இவற்றுள் சுண்ணபஸ்மம் மட்டும் ஒரு திரோணப் பிரமாணமும்[1], மற்றவையெல்லாம் சேர்ந்து ஒரு திரோணப் பிரமாணமும் இருக்கவேண்டும்; ஆனால் காட்டுப்பருத்தியின் பஸ்மம் இரண்டு திரோணம் அளவில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். பிறகு அரை பாரம்[2] அளவில் ஜலத்தையும் அவ்வளவு பசுவின் மூத்திரத்தையும் எடுத்து அவற்றில் சுண்ணாம்புநீறுகளுடன் மேற்கூறிய பஸ்மங்களைக் கொட்டி நன்றாகக்கலக்கி, விசாலமான வஸ்திரத்தினால் அச்சாம்பர்க் குழம்பை வடிக்கட்டவும். அந்த திரவம் பிசுபிசுப்பும் சென்னிறமும் பெற்றுத் தெளியும் வரையில் வடிக்கட்டிவந்து, அது தீக்ஷ்ணகுணம் அடைந்திருப்பதாகத் தெரியவந்ததும், ஒரு இரும்புக் கடாஹத்தில் சேர்த்துத் துடுப்பினால் துளாவிக்கொண்டே அக்னியிட்டு பக்குவம் செய்ய வேண்டும்; இவ்வாறு பக்குவமாய் வருகையில் முதலிற்கூறியுள்ள சுண்ணபஸ்மக் கற்களையும், நத்தையோடு, யவக்ஷாரம் இவற்றின் குழம்பையும், சங்கின் உட்புறத்து நாபிபோன்ற பாகத்தையும்ஒருஇரும்புப்பாத்திரத்திலிட்டு, அக்னிவர்ணமுண்டாகுமாறு அநேகமுறை எரித்து, முற்றிலும் க்ஷாரமாவதற்கு ஏற்ற நிலைமையடைந்திருக்கையில், நத்தையோடு முதலியவற்றின் குழம்பை ஒரு குடவப்[1] பிரமாணம் முற்கூறிய சாம்பர்க்குழம்பில் கல்கமாகச் சேர்த்துக் கலக்கவும்; பிறகு கள்ளிக்காக்கை, மயில், கழுகு, பருந்து, புறா இவற்றின் மலங்களையும், நாற்கால் ஜந்துக்களுடைய பித்தத்தையும், தாளகத்தையும், மனச்சிலையையும் இந்துப்பையும் நுண்ணிய சூர்ணமாகச்செய்து அவற்றுடன் கலந்து, எல்லாம் ஒருமிக்கக் கலந்துவிடும்படி ஒரு துடுப்பினால் நாற்புறமும் நன்றாகக் கலக்கிக் குழப்பவேண்டும். ஆவியும் குமிழிகளும் உண்டாய் கெட்டியாய் லேஹ்யம்போல் அக்குழம்பு மேல்நோக்கிப் பொங்கி வருகையில் அதை இறக்கிவிடவும்; ஆறிய பிறகு அதை இருப்புப்பாத்திரத்தில் இட்டு, யவதானியக் களஞ்சியத்தில் பழகுவதற்காகச் சேமித்து வைக்கவேண்டும். இவ்வாறு பக்குவம் செய்யப்படுவது மத்திமக்ஷாரம் எனப்படும். 8—$19\frac{1}{4}$.

*மிருதுக்ஷாரம் பக்குவம் செய்யு முறை.*

மிருதுக்ஷாரம் பக்குவம் செய்யவேண்டுமானால் முற்கூறிய திரவ்யங்களைக் கல்கமாக அரைத்துச் சேர்க்கக்கூடாது; ஆனால் அதில் ஸாதாரணமாகச் சேர்த்து, அப்பால் அவற்றை அப்புறப்படுத்தி விடவேண்டும். $19\frac{3}{4}$.

1. திரோணம்—32 சேர்கள் கொண்டஅளவு.

2. பாரம்—2000 பலங்கள் கொண்ட அளவு.

1. குடவம்—அரைச்சேர், அல்லது4-பலங்கொண்ட அளவு.

*தீக்ஷ்ணக்ஷாரம் பக்குவம் செய்யு முறை.*

தீக்ஷ்ணக்ஷாரம் பக்குவம் செய்யப்படுமானல், அதற்கு மத்திமக்ஷாரத்தில் கூறியிருப்பதுபோலவே சரக்குகளைக் கல்கமாகச் செய்து உபயோகிக்கவேண்டும்; மேலும் நீர்த்திப்பிலி, நேபாளம், சித்திரமூலம், அதிவிடயம், வசம்பு, ஸர்ஜக்ஷாரம், பிரம்மதண்டு, காயம், புங்கந்தளிர், தாளிசப்பத்திரி, கல்லுப்பு இவற்றையும் அச்சரக்குகளோடு சேர்த்து க்ஷாரத்தைப் பக்குவம் செய்யவேண்டும். பிறகு ஏழு நாட்கள்வரையில் பழகியபின் அதை சிகித்ஸைகளில் உபயோகிக்கலாம்.[1] 20—21½.

*தீக்ஷ்ண - மத்திம - மிருதுக்ஷாரங்களைப் பிரயோகிக்கக்கூடிய வியாதிகள்.*

வாதம், கபம், மேதஸ் என்னும் கொழுப்பு இவற்றினல் உண்டாகும் அர்புதம் முதலிய வியாதிகளில் "தீக்ஷ்ண க்ஷாரத்தையும்," அதே தோஷங்களால் அதிக உக்கிரமில்லாமல் உண்டாகும் வியாதிகளில் "மத்திம க்ஷாரத்தையும்," பித்தத்தினலும் கபத்தினலும் உண்டாகிற அர்சோரோகங்களில் "மிருது க்ஷாரத்தையும்" பிரயோகிக்கலாம். 22, 22½.

*திரவக்ஷாரத்தில் குறைந்த ஜலத்தை மீண்டும் சேர்ப்பது.*

திரவமாயுள்ள க்ஷாரத்தில் ஜலபாகம் வற்றிப்போகுமானல், அதற்கு வீர்யத்தை விருத்தி செய்வதன்பொருட்டு மறுபடியும் க்ஷாரஜலத்தை[2] அதில் தகுந்தளவு ஊற்றலாம். 23.

*க்ஷாரங்களின் இயற்கைத் தன்மைகள்.*

அதிக தீக்ஷ்ணமல்லாதது,[1] மிருது, ச்லக்ஷ்ணமானது,[2] பிசு பிசுப்புள்ளது, சீக்ரம் உடலில் வியாபிக்குந்தன்மையது, வெளுப்பானது,[3] சிகரம்போல் மேடான வரம்புகள் கட்டிக்கொள்ளுந் தன்மையது,[4] எளிதில் குளிரச்செய்யத் தகுந்தது, நீர்க்கசிவுகளை யுண்டாக்காதது, அதிக வலியையும் உண்டுபண்ணுதது; இவ்வாறு க்ஷாரம் பத்து விதமான இயற்கைக்குணங்களையுடையதாகும். ஆகவே சஸ்திரத்தினுடையவும் அக்னியினுடையவும் காரியங்களை க்ஷாரம் ஒன்றைக்கொண்டே நிறைவேற்றலாம். 24, 24½.

*க்ஷாரங்களின் பொதுவான செய்கைகள்.*

க்ஷாரமானது பிரயோகித்த ஸமயத்தில் விசேஷமான க்ஷோப முண்டுபண்ணி அது ஸம்பந்தப்பட்ட அவயவத்தை உறிஞ்சு விடுவதுபோலவும், அவ்விடத்தை அழுத்தி நசுக்குவதுபோலவும் வேலைசெய்து, அவ்வவயவமெங்கும் பரவி, தோஷங்களையெல்லாம் வேருடன் களைந்துவிடும்; அப்பால் தனது வேலையைச்செய்து, பிணியாளிக்கு நோய் நீங்கியதும், இதன்செய்கை தனக்குத் தானே தணிவடைந்து விடுகின்றது. 25, 26.

*க்ஷாரத்தைப் பிரயோகிக்கும் முறை.*

க்ஷாரப்பிரயோகத்தினல் நிவாரணம் செய்யக்கூடிய வியாதியில் எந்தவிடத்தில் க்ஷாரத்தை உபயோகிக்கவேண்டுமோ அங்கு ஒரு சிறிது அறுத்தோ, கீறியோ, அல்லது இரத்தங்கசியுமாறு கீண்டிவிடவோ

1. க்ஷாரங்கள் திரவமாகவும் இருப்பதுண்டு; உப்புகளைப்போல் திரவமில்லாத நிலைமையிலும் இருக்கும். வீர்யத்தில் அதிக காரமாயிருப்பது தீக்ஷ்ணக்ஷாரம் என்றும், குறைவான காரமாயிருப்பது மிருதுக்ஷாரம் என்றும், நடுத்தரமான காரமுள்ளது மத்திமக்ஷாரம் என்றும் சொல்லப்படுகிறது.

2. க்ஷாரஜலம்—முறைப்படி க்ஷாரங்களிலிருந்தோ க்ஷாரங்களைக் கலந்தோ செய்யப்படும் திரவம்.

1. சஸ்திரப் பிரயோகத்தினல், அல்லது அக்னி ஸம்பந்தத்தினல் ஏற்படும் தீக்ஷ்ணமான வலியைப் போல் க்ஷாரப்பிரயோகத்தினல் ஏற்படாது.

2. ச்லக்ஷ்ணமானது — பட்டு முதலியதைப்போல் மழமழப்பானது.

3. க்ஷாரங்கள் பொதுவாகச் சற்றேறக்குறைய வெண்மையாயிருக்கும்.

4. உப்புகள் உண்டாகும்போது நீறுபூத்து அப்பால் கட்டி கட்டுவதுபோல் க்ஷாரங்களிலும் சிகரங்கள் உண்டாவது இயல்பு.



வேண்டும்; பிறகு உலர்ந்த சல்லாத்துணியினல் சுற்றப்பட்ட சலாகையினல் க்ஷாரத்தையெடுத்து அவ்விடத்தில் பிரயோகிக்கவேண்டும். பிறகு அதுமுதல் நூறு மாத்திராகாலம்[1] அவ்விடத்தை ஒன்றும் செய்யாமல் சும்மாயிருக்கவேண்டும். 27¼.

*க்ஷாரத்தை எந்தெந்த அவயவத்தில் எவ்விதம் பிரயோகிப்பது?*

அவற்றுள் "அர்சஸ்" என்னும் மூலமுளைகளில் க்ஷாரத்தைப் பிரயோகித்ததும், குதத்தில் வைத்திருக்கிற யந்திரத்தின் முகத்தை[2] நன்றாகக் கையினல் மறைத்துப்பிடித்துக்கொண்டு, நூறு மாத்திராகாலம் அமைதியாயிருக்கவேண்டும். "வர்த்ம ரோகங்களில்," இவைகளை வெளிப்புறமாக மடித்துப் பிடித்துக்கொண்டு, கருவிழி முதலிய மற்ற பாகத்தைப் பஞ்சு முதலியதால் நன்கு மறைத்துவிட்டு, தாமரை யிதழளவு மெல்லிதாகப்படும்படி வர்த்மங்களினுள்[3] தடவலாம். நாசியினுள் உண்டாகும் "கிராணர்புதம்" என்கிற பிளவைகளிலும் வர்த்மரோகத்தில் பிரயோகித்ததுபோலவே தடவவேண்டும். சூரியனிருக்கும் திசையைநோக்கிப் பிணியாளியை உட்காரச்செய்து, நாசிமுனையை நிமிர்த்திப் பிடித்துக்கொண்டு, க்ஷாரத்தை நாசியினுள் தடவிவிட்டு, ஐம்பது மாத்திராகாலம் அமைதியாயிருக்கவேண்டும். "செவியினுள்" உண்டாகும் அர்சஸ் என்னும் முளையைப் போக்குவதற்கும் அவ்விதமே க்ஷாரப்பிரயோகம் செய்யவேண்டும். 28—30.

*க்ஷாரம் பிரயோகித்தவிடத்தில் அழற்சி முதலியதைத் தணிக்கு முபாயம்.*

அவ்வாறு பிரயோகித்தபிறகு மிருதுவான வஸ்திரம் முதலிய துடைக்கும் கருவியினல் க்ஷாரத்தைத் துடைத்து, அவ்விடம் முறைப்படி நன்றாகச் சுடப்பட்டதாயென்பதை அறிந்துகொண்டு, அவ்விடத்தில் நெய்யையும் தேனையும் தடவி, பாலையும், கழுவு நீரையும், காடியையும் ஊற்றி அவ்விடத்திலுண்டான அழற்சியைத் தணியச்செய்யவும்; பிறகு இனிப்பும் குளிர்ச்சியுமுள்ள வஸ்துக்களோடு நெய்யையும் கலந்து லேபநம் பண்ணவேண்டும். 31, 31½.

*க்ஷாரப்பிரயோகத்திற்குப் பிறகு உட்கொள்ளத்தகுந்த உணவுகள்.*

அபிஷ்யந்திகள் என்னும் நீர்க்கசிவுகளை உண்டுபண்ணும் உணவுகளை, சுட்டவிடத்திலிருந்து நீர்க்கசிவு உண்டாய் அவ்விடம் ஆறும்பொருட்டு உட்கொள்ளலாம். 32.

*க்ஷாரதக்தப் பிரதேசம் ஸாதாரணமாய் ஆறுவிட்டால் செய்யும் சிகித்ஸை.*

க்ஷாரத்தினல் சுடப்பட்ட இடத்தில் விரணமானது வேரூன்றிப்போய் எளிதில் ஆறி உதிராமற்போனல், காடி, கொடிமாதுளை, அதிமதுரம், எள் இவற்றைக் கல்கம்போல் கூட்டி அதன்மேல் லேபநம் செய்யலாம். அதிமதுரத்தையும் எள்ளையும் கல்கமாக அரைத்து நெய்யிற்கலந்து உபயோகித்தாலும் விரணத்தை ஆற்றும். 33, 33½.

*க்ஷாரப்பிரயோகத்தில் ஸம்யக்தாஹ துர்த்தாஹ - அதிதாஹக் குறிகள்.*

க்ஷாரத்தினல் நன்றாகச் சுடப்பட்ட பிரதேசம் நன்கு கனிந்த நாவற்பழம்போல் கறுநிறமாகவும், ஒருவாறு குழி விழுந்திருப்பதாகவும் காணப்படும். தகுந்தவாறு சுடப்படாமற்போனல், அவ்விடம் சிவந்தும், குத்தல் வலி தினவுமுதலிய துர்க்குணங்களோடு கூடியதாகவும் இருக்கும்; அவ்வாறு நன்றாகச்

1. மாத்திராகாலம்—173-வது பக்கத்தில் 32½-வது பத்தியத்தின் மொழிபெயர்ப்பில் கவனியுங்கள்.

2. யந்திரம் என்பதால் யந்திரவிதி அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள அர்சோயந்திரம் எனக்கருத்து.

3. வர்த்மா—கண் இமைகளின் உட்புறத்திலுள்ள மாம்ஸபாகம்.

சுடப்படாத விடத்தை மறுபடியும் சுடவேண்டும். மிதமிஞ்சி ஓரிடத்தை க்ஷாரத்தினால் சுட்டால் இரத்தப் பெருக்கு எடுப்பதுடன், மூர்ச்சையும் அழற்சியும் ஜ்வரம் முதலிய வேறு துர்க்குணங்களும் உண்டாகும். இவற்றுள் முதலிற்கூறியது "ஸம்யக்தக்த்தம்" என்றும், இரண்டாவது கூறியது "துர்த்தக்த்தம்" என்றும், மூன்றாவது கூறியது "அதிதக்த்தம்" என்றும் வழங்கப்படும். 34, 35.

*க்ஷாரதாஹங்களால் ஒவ்வொரு அவயவத்திலுண்டாகும் விசேஷக் குறிகள்.*

விசேஷமாக குதத்தைச் சுடும்போது அது அதிதக்த்தமாகப்போனால், மல-மூத்திரங்கள் இறுகிக்கட்டப்படும்; அல்லது அவை அதிகமாகவாவது இறங்கும்; ஆண்தன்மையாவது போய்விடும்; அல்லது மரணமாவது ஸம்பவிக்கும். நாசியில் க்ஷாரப்பிரயோகத்தினால் அதிதக்த்தம் செய்யப்படுமானால் மூக்கில் பிளவுகள் ஸம்பவிக்கலாம்; அவ்வவயவம் சுருக்கங்கொள்ளலாம்; மணமறியும் உணர்ச்சியும் போய்விடும். செவி முதலிய அவயவங்களிலும் அதிதக்த்தத்தினால் நாசியிலுண்டான கோளாறுகளைப்போலவே கெடுதிகள் ஸம்பவிக்கும். 36, 37.

*க்ஷாரத்தினால் அதிதக்த்தமானதில் விசேஷ சிகித்ஸை.*

க்ஷாரப்பிரயோகத்தினால் இவ்வாறு மிதமிஞ்சி சுடப்பட்ட விடத்தை ஏதேனும் அம்லரஸமுள்ள காடி முதலியவற்றால் நனைக்கலாம்; தேன், நெய், எள் இவைகளைக் கல்கமாய் அரைத்து லேபம் செய்யலாம். மேலும் வாத-பித்தஹரமான சீதோபசாரமுள்ள எல்லாவித சிகித்ஸையும் செய்வது அனுகூலமானதாகும். இந்நிலைமைக்கு இவ்விதம்செய்வது விசேஷ சிகித்ஸையாம். 38.

*க்ஷார தக்த்தத்தை அம்லத்தினால் ஆற்றுவதன் காரணம்.*

அம்லரஸமானது இயற்கையில் பரிசிப்பதற்குக் குளிர்ச்சியாயிருக்கும்; அத்துடன் க்ஷாரம் ஒன்று கூடுமானால் உடனே சுவையில் இனிப்பாக ஆய்விடுகிறது. ஆகையால் க்ஷாரதக்த்தமான பிரதேசங்களை அம்லரஸமுள்ள பதார்த்தங்களால் குளிரச்செய்து நன்றாக ஆற்றிவிடலாம். 39.

## அக்னியினால் சுடும் முறை.

*அக்னியினால் சுடுவதும் அதன் மேன்மையும்.*

க்ஷாரத்தைவிட அக்னியினால் சுடுவதானது சிரேஷ்டமாகும்; ஏனெனில் அக்னியினால் சுடப்படும் வியாதிகள் மீண்டும் ஸம்பவிக்காதபடி பற்றறவே ஒழிந்துவிடுகின்றன; மேலும் ஔஷதங்களைக் கொடுப்பதாலும், க்ஷாரங்களைப் பிரயோகிப்பதாலும், சஸ்திரசிகிச்சையை செய்வதாலும் பரிஹரிக்க முடியாத வியாதிகளும் அக்னியைக்கொண்டு சுடுவதால் நிவ்ருத்தியாகின்றன. 40.

*அக்னியினால் சுடுவதற்கான தாதுக்கள்.*

அக்னிதாஹம் என்னும் சுடும் சிகித்ஸையை சர்மத்திலும், மாம்ஸத்திலும், ஸிரைகளிலும், ஸ்நாயுக்களிலும், ஸந்திகளிலும், எலும்புகளிலும் பிரயோகிக்கலாம். $40\frac{1}{2}$.

*சர்மத்தில் சூடு இடக்கூடிய பிணிகளும் உபகரணங்களும்.*

மஷம் என்னும் ஒருவிதமான பரு, தேஹ வாட்டம், சிரஸ்ஸைப்பற்றிய நோய், அதிமந்தம் என்னும் நேத்திரவியாதி, கீலம் என்னும் குதத்தில் உண்டாகும் பிளவை, திலம் என்கிற மறு இவை முதலியவற்றில் சர்மத்தில் சூடு போடவேண்டும்; வர்த்தி, பசுவின்பால், ஸூரியகாந்தக்கல், அம்புமுனை முதலியவைகளைக் காய்ச்சி சர்மத்தைச் சுடலாம். $41\frac{1}{2}$.



*மாம்ஸத்தில் சூடுவதற்கான பிணிகளும் உபகரணங்களும்.*

அர்சஸ், பகந்தரம்,[1] கிரந்தி, நாடீவிரணம், கெட்டுப் போன விரணம் முதலியவைகளில் மாம்ஸபாகத்தில்சுடவேண்டும்; அதில்தேன், ஸ்நேஹவஸ்து, ஜாம்பவோஷ்டம் என்னும் கருவி,[2] வெல்லம் இவை முதலியவற்றைக் காய்ச்சி அவற்றால் சுடவேண்டும். $42\frac{1}{2}$.

*ஸிரைகளைச் சுடுவதற்கான பிணிகளும் உபகரணங்களும்.*

கண்களின் இமைப்பைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்கையிலும், இரத்தப் பெருக்கு நேரிட்டிருக்கையிலும், நீலிகாவென்னும் சர்மவியாதியிலும், ஸிரைமுதலியவற்றைச் சுடவேண்டும்; மாம்ஸதாஹத்திற்கூறியுள்ள உபகரணங்களையே ஸிரைகளைச் சுடுவதற்கும் உபயோகிக்கவேண்டும். $43\frac{1}{4}$.

*அக்னிதாஹத்திற்குத் தகாதவர்கள்.*

க்ஷாரப்பிரயோகத்தினால் தாஹமென்னும் சூடு இடுவது எவர்களுக்குத் தகாதென்று கூறப்பட்டிருக்கிறதோ அவர்களே அக்னி ஸம்பந்தமான சூடு பிரயோகிப்பதற்கும் தகாதவராவர்; மேலும் இரத்தமோ அல்லது வேறு சல்யமோ உள்ளே தங்கியிருக்கும்போது அவ்விடத்தையும், சிதைவுண்ட குடல்களையும், அநேகம் விரணங்களால் பீடிக்கப்படுகிறவர்களுடைய அவயவங்களையும் அக்னி தாஹத்தினால் சிகித்ஸை செய்யக் கூடாது. 44.

*அக்னியினால் சுடப்பட்ட அவயவத்தில் லேபனம் செய்தல்.*

அக்னிப் பிரயோகத்தினால் நன்றாகச் சூடு இடப்பட்டு நிறைவேறியிருந்தால், அவ்விடத்தில் தேனையும் நெய்யையும் தடவி, ஸ்நிக்தமும் குளிர்ச்சியும் பொருந்திய லேபநவஸ்துக்களால் பூசிடவேண்டும். $44\frac{1}{2}$.

*நன்றாக ஆறும் அக்னிதாஹத்தின் குறிகள்.*

இரத்தக்கசிவு முற்றிலும் நின்றுபோய், ஒருவிதமான சப்தமும் நிணநீரும் உண்டாய், கனிந்த பனம்பழம் அல்லது மாடப்புறாவின் நிறமுடையதாய், அதிக வேதனையில்லாததாகவும் இருந்தால் அது நன்கு ஆறக்கூடிய விரணம் என்பதற்கு ஏற்ற குறிகளாம். $45\frac{1}{2}$.

*பிரமாத தக்த்தத்தின் குறிகள்.*

நன்கு சூடு நிறைவேறாததற்கும், மிதமிஞ்சி சுடப்பட்டதற்கும் குறிகள், அஜாக்கிரதையினால் சுடப்படும்போது ஸம்பவிக்கும் குறிகளைப்போலவே முற்றிலும் உண்டாகும். அஜாக்கிரதையினால் சுடப்படுவதை "பிரமாத தக்த்தம்" என்பார்கள். 46.

*பிரமாததக்த்தம் நான்குவிதம்.*

அஜாக்கிரதையினால் ஸம்பவிக்கும் பிரமாத தக்த்தம் என்பது துர்த்தக்த்தம் என்னும் சூட்டையும் கூட்டினால் நான்குவிதமாகப் பகுக்கப்படும்; அதாவது:— துத்ததக்த்தம், துர்த்தக்த்தம், அதிதக்த்தம், ஸம்யக்தக்த்தம்[1] என்பனவாம். $46\frac{1}{4}$.

*துத்த தக்த்தக் குறிகள்.*

துர்த்தக்த்தம் என்பது அஜாக்கிரதையினால் சுடப்பட்ட ஒருவித சூட்டின் அவக்குறியாகும்; அதன் இலக்ஷணமாவது:— சர்மம் மங்கல் நிறமாயிருக்கும்; அழற்சி மிகுதியாயுண்டாகும்; அவ்விடம் கொப்புளிக்கமாட்டாது. 47.

*துர்த்தக்த்தக் குறிகள்.*

துர்த்தக்த்தத்தின் குறிகளாவன:— சுடப்பட்ட விடம் கொப்புளித்திருக்கும்; எரித்தல் அதிகம் உண்டாகும்; தாபம் மிகுதியாயிருக்கும். $47\frac{3}{4}$.

1. பகந்தரம் முதலியவற்றின் இலக்ஷணம் முதலியவற்றை நிதாநஸ்தாநத்திற் காண்க.

1. ஸம்யக்தக்த்தம் என்பது, முறைப்படி சுடப்பட்டு நன்குநிறைவேறிய தாஹசிகித்ஸையைக் குறிப்பிடுவதாயிருந்தும், அஜாக்கிரதையினால் செய்வதில் ஒரு ஸமயம் முறைப்படியும் சுடப்படலாம் ஆகையால், இவ்வாறு ஸம்யக்தக்த்தமும் பிரமாத தக்த்தத்தில் சேர்க்கப்பட்டது என்று அறிக.

*அதிதக்த்தக் குறிகள்.*

அதி தக்த்தம்' என்னும் மிதமிஞ்சிய சூட்டைப் பிரயோகிப்பதால் உண்டாகும் குறிகளாவன:—தசைநார் அறுபட்டுத் தொங்குதல், ஓர் அவயவம் அல்லது தசைநார் சுருக்கங்கொள்ளல், அழற்சி யுண்டாதல், புகைந்து வெப்பம் அதிகரிப்பது போன்ற உணர்ச்சி யேற்படுதல், வேதனை அதிகரித்தல், விரைமுதலிய இரத்தக் குழாய்கள் சிதைவுறுதல், நாவறட்சியும் மூர்ச்சையும் உண்டாதல், விரணம் மிகவும் ஆழமாய் ஏற்பட்டுவிடுதல், மரணம் ஸம்பவித்தல் என்பனவாம். 48, 48½.

*துர்த்தக்த்த சிகித்ஸை.*

தகாத விதமாகச் சுடப்பட்ட துர்த்தக்த்தம் என்னும் சூடு இடப்பட்ட விடத்தில், மறுபடியும் அக்னியினால் அவ்விடத்தை நன்றாகச் சுடவேண்டும், உஷ்ணகுணமுள்ள ஔஷதத்தையும் உபயோகிக்க வேண்டும். 49.

*இரத்தக்கட்டியிருந்தாலும் கரைந்தாலும் உண்டாகும் குறிகள்.*

சுடப்பட்ட அவயவத்தில் அல்லது அபிகாதப்பட்ட அவயவத்தில் இரத்தம் கட்டிக்கொண்டிருந்தால் வேதனை மிகவும் அதிகரிக்கும். அவ்வாறு கட்டிக்கொண்ட இரத்தமானது கரைந்துபோனால் வேதனையும் குறைவடையும். 49½.

*துர்த்தக்த்த சிகித்ஸை.*

முறைதவறாகச் சுடப்பட்ட துர்த்தக்த்தத்தில் முதலில் சீதளமும் உஷ்ணமுமான குணங்களையுடைய ஔஷதத்தை உபயோகித்து, பிறகு சீதளமான ஔஷதத்தையே உபயோகிக்க வேண்டும். 50.

*ஸம்யக்தகதத் சிகித்ஸை.*

முறைப்படி நன்றாகவே தாஹசிகித்ஸை நிறைவேறி யிருந்தால், மூங்கிலுப்பு, கல்லாலமரம், சந்தனம், காவி இவற்றைச் சூர்ணம் செய்து, நெய்யையும் சீந்திற் கொடியின் சாற்றையும் விட்டு நன்றாக ஆட்டி, அவ்விடத்திற் பூசவேண்டும்; பிறகு பித்தவித்ரதிக்கு செய்யப்படுவது போன்ற கிகித்ஸையையும்[1] செய்ய வேண்டும். 51.

*அதிதக்த்த சிகித்ஸை.*

மிதமிஞ்சி சுடப்பட்ட அதிதக்த்தம் என்பதில் பித்தஸம்பந்தமான விஸர்ப்பத்திற்கேற்றசிகித்ஸையை[2] யெல்லாம் வெகு சீக்கிரம் செய்யவேண்டும், 51½.

*காய்ச்சிய ஸ்நேஹத்தினால் சுடப்பட்டதற்கு சிகித்ஸை.*

காய்ச்சிய எண்ணெய் முதலிய ஸ்நேஹம் ஏதாவது தேஹத்தில் விழுந்து அழன்று விட்டால், மிகவும் ரூக்ஷகுணமுள்ள ஔஷதத்தை அதில் பிரயோகிக்க வேண்டும். 52.

*ஸூத்திரஸ்த்தாநத்தின் முடிவுரை.*

அருமையான இரஹஸ்யார்த்தங்கள் அடங்கிய ஹ்ருதயத்தின் ஒரு பாகம் போன்ற "அஷ்டாங்க ஹ்ருதயம்" என்னும் இக்கிரந்தத்தின் ஸூத்திரஸ்த்தாநமானது இத்துடன் முடிவுபெறுகின்றது. இந்த ஸ்த்தாநத்தில் நுட்பமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களே மற்ற எல்லா வைத்தியக் கிரந்தங்களிலும் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றன. 53.

1. பித்தவித்ரதி சிகித்ஸை, சிகித்ஸா ஸ்த்தாநத்தில் விவரிக்கப்படும்.
2. பித்த விஸர்ப்ப சிகித்ஸை, சிகித்ஸா ஸ்த்தாநத்தில் விவரிக்கப்படும்.

ஸூத்திர ஸ்த்தாநம் முற்றிற்று.

# சாரீர ஸ்த்தாநம்.

## முதல் அத்தியாயம்

இது முதலாக ஆத்திரேயர் முதலிய மஹர்ஷிகள் மொழிந்துள்ள விதமாய் கர்ப்பாவக்ராந்தி சாரீரம்[1] என்னும் பெயரையுடைய அத்தியாயத்தை விவரித்துக் கூறுவோம்:—

*சுக்ரார்த்தவமும் ஜீவனும் சேர்ந்து கர்ப்பமாதல்.*

தோஷம் நீங்கி நிர்மலமாயுள்ள சுக்ரமும்,[2] அதே விதமான ஆர்த்தவமும்[3] ஒன்று கூடும்போது, ஜீவாத்மாவானது பூர்வஜன்மத்தில் தான் செய்த சுபாசுப கர்மங்களாலும், அவித்யை முதலிய கிலேசங்களாலும்[4] ஏவப்பட்டு, அகிற்கட்டையில் அக்னியைப்போல, ஸாதனங்களின் கூட்டு முறைக்கு இணங்க[5] கர்ப்பமாகப் பரிணமிக்கின்றது. 1.

*பஞ்ச பூதங்களின் கூட்டுறவால் கர்ப்பம் வளருதல்.*

மிகவும் ஸூக்ஷ்மமாகவும், சுக்ரார்த்தவ ரூபமாகவும், மனஸ்தத்துவத்துடன்கூட அதைப் பின்பற்றியவையாகவும், மாதாவினுடைய அஹாரத்தின் ஸாராம்சங்களால் உண்டானவையுமான பஞ்ச மஹா பூதங்களின் கூட்டுறவினால் அந்த ஜீவாத்மா, மாதாவின் வயிற்றில் கிரமமாக கர்ப்ப ரூபமாய் வளர்ந்து வருகின்றது. 2.

*ஜீவாத்மா கர்ப்பாசயத்தினுள் பிரவேசிக்கும் வகை.*

சூரிய கிரணங்களின் ஒளியானது ஒரு படிக மணியினால் மறைக்கப்பட்டபோதிலும், கட்டை முதலியதில் பற்றி எரிவதுபோல் ஒரு விதமான குறியும் காணமுடியாமல் அப்படிக மணியினுள் ஊடுருவிப்பாய்வதுபோலவே, ஜீவாத்மாவும் கர்ப்பாசயத்தினுள் பிரவேசித்து விடுகின்றது.

*ஜீவாத்மா மனித வுருவம் முதலியதை யெடுப்பதற்குக் காரணம்.*

காரியங்கள் யாவும் காரணங்களை அநுஸரித்தே[1] ஏற்படவேண்டியிருப்பதால், அக்காரியங்களுக்குக் காரணங்களின் தன்மையே உண்டாகின்றது; அதையால் உருக்கி வார்க்கப்படும் உலோஹமானது வந்தந்த அச்சின் உருவங்களுக்கேற்றவாறு பற்பல ரூபங்களை அடைவதுபோல, ஜீவாத்மாவும் எந்தெந்த பிராணியின் கர்ப்பத்தில் பிரவேசிக்கின்றதோ அவ்வகைக்கேற்ற உருவங்களையே பெற்றுவிடுகின்றது. 4.

1. சுக்ரம், ஆர்த்தவம், ஜீவாத்மா இவற்றின் சேர்க்கையினால் ஏற்படும் வஸ்து கர்ப்பம் எனப்படுகிறது; அதன் உற்பத்தி வகையைக் கூறுவது சர்ப்பாவக்ராந்தி அத்தியாயம் எனப்படும். "சாரீரம்" என்றால் சரீர ஸம்பந்தமான தத்துவத்தைக் கூறுவதென்று பொருள். கர்ப்பாவக்ராந்தி யென்றும் சரீர தத்துவம் இவ்வத்தியாயத்தில் விவரிக்கப்படுகிறது.
2. சுக்ரம்—புருடர்களுடைய ஏழாவது தாது.
3. ஆர்த்தவம்—ருதுகாலத்தில் ஸ்திரீகளுக்கு உண்டாகும் ஏழாவது தாது; இதுவே இரஜஸ் என்றும் கூறப்படும்.
4. அவித்யை, அஸ்மிதை, இராகம், த்வேஷம், அபிநிவேசம் இவை "கிலேசங்கள்" என்று பதஞ்ஜலி யோகஸூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.
5. அகிற்கட்டையும், சடையுங் கருவியும், சடையும் வேலையும் சேர்ந்தால் அக்னியுண்டாவதுபோல கர்ப்பமும் உண்டாகின்றது.

1. இங்கு காரியம் கர்ப்பம்; அந்தந்தப் பிராணியின் சுக்ரார்த்தவங்கள் காரணம்.

*கர்ப்பம் ஆண் பெண் முதலிய உருவங்களைப் பெறுதல்.*

காரியம் காரணத்திற்கு அநுரூபமாயிருக்கு மென்னும் விதியை அனுஸரித்தே, சுக்ரம் அதிகமானல் ஆணும், ஆர்த்தவம் அதிகரித்தால் பெண்ணும், அவ்விரண்டும் ஸமமாக விருந்தால் நபும்ஸகமான கர்ப்பமும் ஸம்பவிக்கின்றன. $4\frac{3}{4}$.

*கர்ப்பத்தில் அநேக சிசுக்கள் உண்டாவது.*

வாயுவின் சக்தி விசேஷத்தினல் சுக்ரார்த்தவங்கள் பலவாறு சிதறிப் பிரிக்கப்படுமானல், அந்தந்த நிலைமைக்கு ஏற்றவாறு கர்ப்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சிசுக்களும் உற்பத்தியாவதுண்டு. $5\frac{1}{2}$.

*உருவத்தில் விகாரமான கர்ப்பங்கள் உண்டாவது.*

ஸ்திரீ-புமான்களுடைய சுக்ரார்த்தவங்கள், கோளாறடைந்த வாதாதி தோஷங்களால் விகாரமடைந்து விட்டால், வெவ்வேறு விதமான பிராணிகளின் உருவங்களும் அல்லது விகாரமான ஸ்வரூபங்களும் கர்ப்பத்திற்கு உண்டாகின்றன. 6.

*ஆர்த்தவம் வெளிப்படும் காலநியமம்.*

ஸ்திரீகளுக்கு அவர்களுடைய உணவின் ஸத்துவத்தினல் உண்டாகும் "இரஜஸ்" என்னும் தாதுவானது சோணிதம் என்னும் இரத்தத்தின் உருவமாக மாதந்தோறும் மூன்று நாட்கள் வெளிப்படுகின்றது. இவ்வாறு பன்னிரண்டாவது வயதில் அல்லது அதற்கு மேல் ஆர்த்தவம் வெளிப்பட ஆரம்பித்து, ஐம்பதாவது வயதுக்குமேல் வெளிப்படாமல் நின்றுவிடுவது இயல்பு. 7.

*வீர்யவானை பிள்ளையைப் பெறுவதற்கு ஆதாரமான விஷயங்கள்.*

நன்றாகப் பதினறு வயது நிரம்பிய ஸ்திரீயானவள், இருபது வயது நன்றாகநிரம்பியபுருஷனுடன் கூடி அப்பொழுது கர்ப்பாசயமும், ஸ்திரீபுமான்களுடைய மர்மஸ்தான மார்க்கங்களும், இரஜஸ்ஸும், சுக்ரமும், வாததோஷமும், ஹ்ருதயமும் நிர்மலமாயிருக்குமானல் பிறக்கும் பிள்ளை நல்ல வீர்யமுள்ளவனயிருப்பான். $8\frac{1}{4}$.

*யுக்த வயது வராத தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தையின் தன்மை.*

மேற் கூறியதற்குக் குறைந்த வயதுள்ள தம்பதிகள் கூடினர்களானல், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை ரோகியாகவாவது, அற்பாயுளாகவாவது, எவ்வித சிறப்புமில்லாத துர்ப்பாக்கியனகவாவது இருப்பான்; அல்லது கர்ப்பமுண்டானலும் உண்டாகலாம், உண்டாகாமலேயும் இருந்து விடலாம். 9.

*சுக்ரார்த்தவங்களின் ஒன்பது விததோஷங்கள்.*

சுக்ரதோஷம் ஒன்பது விதம். அது பின்வருமாறு: வாதசுக்ரம்,[1] பித்த சுக்ரம்,[2] கபசுக்ரம்,[3] குணபசுக்ரம்,[4] கிரந்தி சுக்ரம்,[5] பூய சுக்ரம்,[6] க்ஷீணசுக்ரம்,[7] மல சுக்ரம்,[8] மூத்திர சுக்ரம் என்பனவாம். இவ்விதமாகவே வாதார்த்தவம், பித்தார்த்தவம், கபார்த்தவம, குணபார்த்தவம். கிரந்த்யார்த்தவம், பூயார்த்தவம், க்ஷீணர்த்தவம், மலார்த்தவம், மூத்திரார்த்தவம்,[9] என்று ஒன்பதுவிதமான தோஷங்கள் ஆர்த்தவத்திற்கும் உண்டாகலாம்.[10] இந்த தோஷங்களையுடைய சுக்ரமும் ஆர்த்தவமும் கர்ப்பத்தை உற்பத்திசெய்வதில் சக்தியற்றவைகளாகும். $9\frac{3}{4}$.

---

1. வாதசுக்ரம்—வாத தோஷத்தினல் கெட்டுப்போன சுக்ரம்.
2. பித்த சுக்ரம்—பித்ததோஷத்தினல் கெட்டுப்போன சுக்ரம்.
3. கபசுக்ரம்—கபதோஷத்தினல் செட்டுப்போன சுக்ரம்.
4. குணபசுக்ரம்—குணபம் என்றல் சவம்; சவத்தைப்போன்ற நாற்றமுள்ள சுக்ரம் எனப் பொருள்.
5. கிரந்தி சுக்ரம்—கட்டிக் கட்டியாகத் தோய்ந்து போன சுக்ரம்.
6. பூயசுக்ரம்—சீழ்மாதிரியான சுக்ரம்.
7. க்ஷீணசுக்ரம்—அளவில் குறைந்து வற்றிப் போன சுக்ரம்.
8. மலசுக்ரம்—மலம்போன்ற நாற்றமுள்ள அல்லது அவ்வித உருவமுள்ள சுக்ரம்.
9. மூத்திர சுக்ரம்—மூத்திரம்போன்ற உருவமும் அதற்கு ஸமானமான நாற்றமும் உடைய சுக்ரம்.
10. சுக்ரங்களுக்குக் கூறப்பட்டுள்ள விவரங்களே இங்கு ஆர்த்தவத்திற்கும் பொதுவென்று அறிக.



*சுக்ரார்த்தவ தோஷங்களின் இலக்ஷணங்கள்.*

வாத-பித்த-கபங்களுக்கு இயற்கையாக என்ன குணங்கள் உண்டோ அக்குணங்களையே அவற்றல் விகாரப்பட்ட சுக்ரார்த்தவங்களுக்கும் கூறவேண்டும்.[1] குணபதோஷமுள்ள சுக்ரார்த்தவங்கள் இரத்தம் கெட்டுப்போவதால் ஸம்பவிக்கும். கிரந்தியைப் போன்ற சுக்ரார்த்தவங்கள் வாத கபங்களுடைய பிரகோபத்தினலும், பூயம் போன்ற சுக்ரார்த்தவங்கள் இரத்த பித்தங்களின் பிரகோபத்தினலும், க்ஷீண சுக்ரார்த்தவங்கள் வாத-பித்தங்களின் பிரகோபத்தினலும் கோளாறடைந்தவை யென்றறியவும்; ஆகவே குணபசுக்ரம் குணபார்த்தவம் முதலிய கோளாறடைந்த சுக்ரார்த்தவங்களில் அந்தந்த தோஷங்களுக்கு இயல்பான குறிகளையும் அவ்வவற்றில் காணலாம். மூத்திரம் போலவும் மலம் போலவும் உள்ள சுக்ரார்த்தவங்கள் ஸந்நிபாத தோஷத்தினல் கோளாறடைந்ததாகக் கருதுக. 10, 11.

*சுக்ரார்த்தவ தோஷங்களில் ஸாத்தியா ஸாத்தியங்கள்.*

வாத சுக்ரம் முதல் க்ஷீணசுக்ரம் வரையிலுமுள்ள ஏழுவிதமான சுக்ரதோஷங்களும் கிருச்சிரஸாத்தியங்கள்[2]. ஸந்நிபாததோஷங்களால் கோளாறடைந்த மூத்திரசுக்ரமும் மலசுக்ரமும் அஸாத்தியங்களாகும். இவ்விதமே ஆர்த்தவ தோஷங்களிலும் ஸாத்தியாஸாத்தியத்தன்மைகளை அறிந்துகொள்ளவேண்டும். $11\frac{1}{2}$.

*சுக்ர தோஷங்களுக்கு சிகித்ஸை.*

வாத-பித்த-கபங்களால் கோளாறடைந்த சுக்ர தோஷங்களில், அந்தந்த தோஷத்திற்குப்பரிஹாரமான சிகித்ஸையைச் செய்யவேண்டும்.[1] குணபசுக்ரத்திற்கு காட்டாத்திப்பூ, கருங்காலி, மாதுளை, மருதை இவற்றல் பக்குவம் செய்யப்பட்ட கிருதத்தையாவது, அஸநாதிகணத்தைச் சேர்ந்த[2] வஸ்துக்களால் பக்குவம் செய்த கிருதத்தையாவது உட்கொள்ளச் செய்யவேண்டும். கிரந்தி சுக்ரத்தில் பலாசங்கட்டையின் பஸ்மத்தையும் கல்லுறுவியையும் உபயோகித்து சிகித்ஸை செய்யவேண்டும். பூய சுக்ரத்தில் பருஷகாதி கணத்திலும்[3] நியக்ரோதாதிகணத்திலும்[4] கூறப்பட்டுள்ள பதார்த்தங்களால் பக்குவம் செய்யப்பட்ட கிருதத்தைப் பருகசெய்யவேண்டும். க்ஷீணசுக்ரத்தில், சுக்ரம் நன்றாகச் செழிக்கக்கூடிய சிகித்ஸையைச் செய்யவேண்டும்; மேலும் இப்பிணியாளிக்கு ஸ்நேஹசிகித்ஸை, வமநசிகித்ஸை, விரேசநசிகித்ஸை, நிரூஹவஸ்தி, அநுவாஸநவஸ்தி இவற்றைச் செய்வித்து, அப்பால் உத்தரவஸ்தியையும் அவனுக்கு நன்றாகப் பிரயோகிக்கவேண்டும். மலசுக்ரத்தில் பிணியாளிக்கு முதலில் சோதந சிகித்ஸைகளைச் செய்து, பிறகு பெருங்காயம் ஏலுமிச்சைவேர் இவற்றல் பக்குவம் செய்த கிருதத்தைப் பானம்செய்து வரச்செய்யவும். $12—15\frac{1}{2}$.

*ஆர்த்தவ தோஷ சிகித்ஸை.*

கிரந்திகளைப்போல ஆர்த்தவம் விகாரமடைந்தால், அப்பிணியாளிக்கு வட்டத்திருப்பி, த்ரிகடுகம்[5], வெட்பாலரிசி இவற்றல் பக்குவம் செய்த கஷாயத்தைக் கொடுக்கலாம்.

---

1. வாதாதிதோஷங்களால் கோளாறடைந்த சுக்ரார்த்தவங்களுக்கு 3-வது பக்கத்திற் கூறப்பட்ட (ஸூத்திரஸ்தானம் 1-வது அத்தியாயம்) வாதாதிகளின் இலக்ஷணங்களே உண்டாகும்.
2. கிருச்சிரஸாத்தியம்—மிகவும் சிரமப்பட்டு சிகித்ஸை செய்யக்கூடியது.

1. வாதாதி தோஷங்களுக்கு எதிரிடையான குணமுள்ள வஸ்துக்களால் சிகித்ஸை செய்யவேண்டும் எனக் கருத்து.
2. அஸநாதிகணம் 125-ம் பக்கம் பார்க்க.
3. பருஷகாதிகணம்—124-ம் பக்கம் பார்க்க.
4. நியக்ரோதாதிகணம்—127-ம் பக்கம் பார்க்க.
5. த்ரிகடுகம்—சுக்கு, திப்பிலி, மிளகு இவற்றின் கூட்டு.

குணபார்த்தவம் என்னும் சவநாற்றமுள்ள ஆர்த்தவ தோஷத்திலும், பூயார்த்தவத்திலும் சந்தநம் சேர்த்து பக்குவம்செய்த கஷாயத்தை யும், குஹ்யரோகப்ரதிஷேதாத்தியாயத்தில்[1] கூறப்போகிற எல்லாவிதமான சிகித்ஸையை யும் உத்தரவஸ்தியோடுகூடவே பிரயோகிக்க வேண்டும். 16, 17.

*சுத்த சுக்ரத்தின் இலக்ஷணங்கள்.*

சுக்ரமானது, வெண்ணிறமாகவும், குருகுண முள்ளதாகவும், ஸ்நிக்த்தமாக வும், பெரும்பாலும் மதுரமாக வும், அளவில் அதிகமாகவும், நெய் - தேன் - தைலம் இவற் றைப் போன்றதாகவும் இருந்தால் அதுவே நல்ல கர்ப்பத்தை உண்டுபண்ணக்கூடியதா கும். 18.

*சுத்த ஆர்த்தவத்தின் இலக்ஷணங்கள்.*

ஆர்த்தவமோ வென்றால், செவ்வரக்குநீர், முயலின் இரத்தம் இவற்றிற் கேற்ற நிறமுள்ளதாகவும், கழு வப்படும்போது வஸ்திரம் முத லியவற்றில் எவ்வித சாயமு முண்டுபண்ணுமல் நன்கு விலக்கக்கூடியதாக வும் இருக்குமானல், அது நல்ல கர்ப்போற் பத்திக்குத் தகுந்ததாகும். $18\frac{1}{2}$.

*கர்ப்பாதாநம் செய்யவேண்டிய தம்பதிகளுக்குப் பொதுவான சோதநசிகித்ஸை.*

சுக்ரம் - ஆர்த்தவம் இவை சுத்தமாய், ஆரோக்கிய நிலைமையைப் பெற்று, ஒருவருக்கொருவர் மனமொப்பி அன்பு மேலிட் டுள்ள தம்பதிகளுக்கு அவரவ ருடைய விருப்பத்தின்படி ஆ ண்கர்ப்பமோ பெண் கர்ப்ப மோ உண்டாவதற்கு அநுகூல மான பிரபாவம் வாய்ந்த[2] ஸ்நேஹ வஸ்துக் களால் அவர்களை ஸ்நிக்த்தமாகச் செய்துவை த்து, வமந-விரேசநங்களாலும், வஸ்தி கர்மங் களாலும் அவர்களுடைய தேஹத்தைச் சுத்தி செய்யவேண்டும். $19\frac{1}{2}$.

*ஸ்த்ரீ புருஷர்களுக்கு சுக்ரார்த்தவ சோதநத்திற்கான விசேஷோபசாரங்கள்.*

புருஷனுக்கு விசேஷமாகச் செய்யக்கூடிய உபசாரமாவது : மதுரரஸ முள்ள ஔஷதங்களால் பக்கு வம் செய்யப்பட்ட பால்-நெய் இவைகளை அதிகமாய் உப யோகிக்கவேண்டும். ஸ்த்ரீக்கு விசேஷமாகத் தைலத்தினுலும் பித்தத்தை விருத்தி செய்யக் கூடிய உளுந்து முதலியவற்ருலும் உபசாரம் செய்யவேண்டும். $20\frac{1}{2}$.

*ருதுமதியின் இலக்ஷணங்கள்.*

ஒருவாறு இளைத்தும் தெளிவுற்றதுமான முகமுடையவளாகவும், பிரு ஷ்டபாகமும் ஸ்தநங்களும் துடித்தும் பருத்துமிருக்க, சிறிது தளர்ந்து மடிப்புவிழுந்த கண் இமை களென்ன வயிறென்ன இவற்றையுடைய வளும், புருஷரிடம் விருப்பம் மேலிட்டவளு மான ஸ்த்ரீயை ருதுமதீ யென்றறிக.[1] $21\frac{1}{2}$.

*ருதுகாலம்முதலியவற்றில் ஸ்த்ரீகளுடையமர்மஸ்த்தாநத்தின் நிலைமை.*

பகற்பொழுது போய் இராக்காலம் வருகை யில் தாமரைப்பூவானது எவ் வாறு மூடிக்கொண்டுவிடு மோ, அவ்விதமே ஸ்த்ரீக்கு ருதுகாலம் அதிக்ரமித்ததும் மர்மஸ்த்தாநம் சுருக்கங்கொள் ளும்; ஆகவே அதன்பிறகு அவ்வவயவம் சுக்ரத்தை அவ்வளவாய் ஏற்றுக் கொள்வதில்லை.[2] $22\frac{1}{2}$,

1. குஹ்யரோக ப்ரதிஷேதம் என்பது உத்தரஸ்த் தாநத்தில் கூறப்படப்போகிற 34-வது அத்தியாயத் தின் பெயர்.

2. சில ஒஷதிகளாலும், ஒஷதிகளால் பக்குவம் செய்யப்பட்ட ஸ்நேஹங்களாலும் ஸ்த்ரீபுருஷர் களுக்கு ஸம்ஸ்காரம் செய்தால், அவற்றின் பிரபாவத் தினல் அவரவர்களுடைய விருப்பப்படி ஸ்த்ரீ ப்ரஜை யாவது புருஷப்ரஜையாவது பிறக்கக்கூடுமென்று சாஸ்திரம்.

1. பிறகு 27, 28 இப்பத்தியங்களில் குறிப்பிடும் வண்ணம் ருதுவான தினம் முதல் 12 நாட்கள் வரையில் ருதுகாலம் எனப்படுகிறபடியால், அத் தருணத்தில் ஸ்த்ரீக்கு இவ்வித இலக்ஷணங்கள் ஸம்ப விக்கும் என்றறிக. இக்குறிகள் இருந்தால் அது கர்ப் போற்பத்திக்கு ஏற்ற நிலைமையாகும்.

2. ருதுகாலம் தப்பினபிறகு ஸ்த்ரீ புருஷர்கள் கூடினுலும், அதனுல் கர்ப்பம் ஜனிக்காதென்று இத னுல் அறியவேண்டும்; அப்பொழுது கர்ப்பாசயத்தின் முகம் ஸங்கோசம் அடைகிறதென்றறிக.



*ஆர்த்தவஸம்பந்தமான இரத்தம் வெளிவரும் முறை.*

ஆர்த்தவ ஜநகங்களான இரண்டு குழாய் களின் மூலமாய்[1] ஒருமாதகா லத்தில் மேன்மேலும் அபிவ் ருத்தியடைந்து, சிறிது கரு நிறமாகவும் ஒருவித துர்நாற்ற முடையதாகவுமிருக்கிற இரத் தத்தை வாயுவானது மர்மஸ்த்தாநத்திலிருந்து வெளியில் கொண்டு செலுத்துகின்றது.[2] $23\frac{1}{2}$.

*ருதுவானது முதல் மூன்றுதினங்களில் பிரஹ்மசர்யவிரதம்.*

அவ்வாறு புஷ்பமென்னும் ஆர்த்தவம் வெளி வந்ததைக் கண்டபிறகு, அந்த ஸ்த்ரீ மூன்று நாட்கள்வரை யில் மங்களகரமான விஷயங் களையே மனத்தில் நினைத்துக் கொண்டு, தேய்த்துக் குளித் தலையும் அலங்காரங்களையும் விலக்கி, தர்ப்பை களைப் பரப்பி அதன்மேல் படுத்துவரவேண் டும். குடல்களைச் சுத்திசெய்து, அதிகபோ ஷணையைத்தராததான பால், வாற்கோதுமை இவற்ருலான உணவை, ஏதேனும் இலையிலா வது அகலிலாவது கரத்திலாவது மிதமாகக் கிரஹித்து, உட்கொண்டு வரவேண்டும். அத் தினங்களில் பிரஹ்மசாரிணீயாகவும் இருந்து வரவேண்டும். $24—25\frac{1}{2}$.

*ருதுமதி நான்காவது தினம் செய்யவேண்டிய விதி.*

பிறகு நான்காவது தினத்தில் ஸ்நானஞ் செய்து, வெண்மையான வஸ் திரத்தையும் புஷ்பத்தையும் அணிந்துகொண்டு, உள்ளும் புறமும் பரிசுத்தமாயிருந்தவ ளாய், தன் கணவனுக்கொப் பான புத்திரனைப் பெறவேண்டுமென விரும்பி, முதன்முதல் பர்த்தாவைப் பார்ப்பாளாக. $26\frac{1}{2}$.

*ருதுகாலமும் கூடுவதற்கேற்ற தினங்களும்.*

ஸ்த்ரீகள் ஒவ்வொருமுறையும் ருதுவாகும் போது, அவர்களுக்கு ஆர்த்த வம் வெளியானது முதல் பன் னிரண்டு நாட்களும் ருது காலம் எனப்படும். அவற் றுள் முதலில் மூன்று நாட்களும், பிறகு பதி னேராவது தினமும் அதற்குப்பிறகும் தம்பதி கள கூடுவதற்குத் தகாதவைகள்; மற்ற நாட் களில் அவர்கள் சேருவதால் பயனுண்டாகும். அவற்றிலும் ருதுகாலத்தில இரட்டைப்பட்ட நாட்களில் கூடுவதால் புத்திரனும், ஒற்றைப் பட்ட நாட்களிலானுல் பெண்ணும் பிறக்கு மெனப்படுகிறது.[1] $27\frac{1}{2}$.

*தம்பதிகள் சேருவதற்கான ஸம்ஸ்காரமுறை*

அப்பால், புரோஹிதரானவர், ஸ்த்ரீக்கு புத் திரோற்பத்திக்கு அநுகூல மான சடங்குகளைச் சாஸ்த்திர முறை தவறுமல் செய்துவைக் கவேண்டும். முதல் மூன்று வர்ணங்களைத் தவிர நான்காவது வர்ணமான சூத்திரஸ்த்ரீயை நமஸ்காரம் செய்யச் செய்து, மந்திரமின்றியே மற்றச்சடங்குகளை அவளுக் குச்செய்விக்கவேண்டும். இவ்விதம்செய்வதால் தம்பதிகளின் சேர்க்கை ஸபலமாவதுடன், அவரவருக்குப் பிரியமான ஆண்பிள்ளையோ பெண்பிள்ளையோ பிறக்கக்கூடும். தம்பதிகள் முறைப்படி ஏகாந்தத்தில் இங்ஙனம் மக்கட் பேறை விரும்பி ஒன்று சேரவேண்டுமென்று சான்றோரும் கூறுகின்றனர். மிகச் சிறப்புற்ற குலத்திலும் அஸத்தான பிள்ளையொன்று பிறக்குமானுல், அது அக்குலத்திற்குக் கொடிய

1 இந்த இரண்டு குழாய்களுக்கும் ஆர்த்தவ வாஹி தமனிகள் என்று ஸம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்தில் பெல்லோபியன் ட்யூப்ஸ் Fallopian tubes என்றும் பெயர்.

2. கர்ப்பாசயத்து தசைநார் முதலியவற்றின் அசைவு முதலிய வேலையைச் செய்விக்கும் நரம்புகளின் சக்தி வாயுவென்று இங்கு கூறப்படுகிறது.

1. ஸ்த்ரீகளுடைய சோணிததாது அதிகமானுல் பெண்குழந்தையும், புருஷர்களுடைய சுக்ரதாது அதி கமானுல் ஆண்குழந்தையும் பிறக்குமென்று கூறப்படு கிறதல்லவா? ஸ்த்ரீ ருதுவானதினம் முதல் 5, 7, 9, 11 இந்த ஒற்றைப்பட்ட நாட்களில் கூடுவதால், அவர் களுக்கு இயற்கையிலேயே சோணிதம் அந்த நாட்க ளில் அதிகரித்திருக்குமாதலால் ஸ்த்ரீப்ரஜையும், 4, 6, 8, 10, 12 இவற்றில் சோணிதம் குறைவதால் சுக் ராதிக்யத்தால் புருஷ ப்ரஜையும் பிறக்குமாம்.

தீமை விளைவிப்பதற்கு ஹேதுவாயாகும். தம்பதிகளுக்கு எவ்விதமான குழந்தை வேண்டுமென்று விருப்பம் உண்டாகின்றதோ, அதேவிதமான ரூபமும் நடத்தையுமுடைய மனிதரை அவர்கள் கூடும்போது மனதில் நினைத்துக்கொள்ளவேண்டும்; அவ்விதமான பரிஜன பரிவாராதிகளையும் ஆசார விவஹாரங்களையுமுடைய தேசத்து ஜனங்களையும் அவர்கள் மனத்தில் வைக்கவேண்டும். தம்பதிகளுக்கு முதலிற் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள் முடிவுபெற்றதும், புருஷன் நெய்யும் பாலும் கலந்த சம்பா அரிசியினாலான அன்னத்தைப் புஜித்துவிட்டு, ஜ்யோதிச் சாஸ்திர வல்லோருடைய அநுமதியைப் பெற்று, முதலில் வலதுகாலை வைத்துக்கொண்டு சயனத்தில் ஏறவேண்டும். ஸ்த்ரீயானவள் எண்ணெயும் உளுந்தும் அதிகமாகக் கலந்த உணவை உட்கொண்டுவிட்டு, முதலில் இடது காலை வைத்து அவளது கணவனுக்கு இடதுபக்கமாகச் சயனத்திற் சென்று உட்காரவேண்டும். அதன்பிறகு அடியில் வரும் மந்திரத்தைப் பிரயோகிப்பாராக. 28—33.

*தம்பதிகள் சர்ப்பாதாந காலத்தில் ஓதும் மந்திரம்.*

"அஹிரஸி ஆயுரஸி ஸர்வதஃ ப்ரதிஷ்டாஸி,
தாதா த்வாம் ததாது, விதாதா
த்வாம் ததாது, ப்ரஹ்மவர்ச்சஸா பவேதி. ப்ரஹ்மா ப்ருஹஸ்பதிர் விஷ்ணுஸ் ஸோமஸ்
ஸூர்யஸ் ததாச்விநௌ.
பகோத மித்ராவருணௌ வீரம் ததாது மே
ஸுதம்."

*தம்பதிகளின் ஸம்யோகமுறை*

பிறகு தம்பதிகள் ஒருவரோடொருவர் ப்ரியவசனங்களைக் கூறி, மனமகிழ்ச்சியோடு சயனிக்கவேண்டும். ஸ்த்ரீயானவள் அங்கங்களை ஏற்றவாறு அமைதியாக அமர்த்திக்கொண்டு நிமிர்ந்த நிலையில் படுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான், அதற்கு இயல்பான ஸ்தானங்களில் நிற்கும் வாதாதி தோஷங்களின் மூலமாய் சுக்ரமென்னும் பீஜத்தை கர்ப்பாசயம் கிரஹிக்கின்றது. 34, 34½.

*கருத்தரித்தக்ஷணத்தில் உணரக்கூடிய குறிகள்.*

கர்ப்பாதாநம் நிறைவேறி கருத்தரிக்கப்படுமானால், அப்பொழுது உடனே ஸம்பவிக்கும் குறிகளாவன: யோனியானது பீஜம் அல்லது சுக்ரத்தை நன்றாகக் கிரஹித்துக் கொள்ளும்; அச்சமயம் செய்த செயலில் திருப்தியுண்டாகும்; வயிற்றில் உடனே ஏதோ ஒருவாறு பாரமுண்டானதுபோன்ற உணர்ச்சியும் துடிப்பும் உண்டாகும்; சுக்ரமும் சோணிதமும் கருப்பையைவிட்டு மீண்டும் வெளிப்படாமல் ஒருமிக்கச் சேர்ந்துவிடும்; இருதயம் துடிக்கும்; சோம்பலுண்டாகும்; நாவறட்சியும், தேஹவாட்டமும், மயிர்ச்சிலிர்க்கையும் காண்பதுண்டு. 35, 36.

*முதல் மாஸத்தில் கர்ப்ப நிலைமை.*

கர்ப்பந்தரித்த முதல்மாஸத்தில், ஒரு வாரத்திற்குப் பிறகு கர்ப்பமானது "கலலம்" என்னும் நிலைமையைப் பெறுகின்றது;[1] ஆனால் ஒரு வாரத்திற்குமுன் அதன் உருவம் இன்னவிதமானதென்று விளங்காததாயிருக்கும். 37.

*பலமான புருஷப்பிரயத்தனம் தைவச் செயலையும் மீறலாம்.*

புருஷப் பிரயத்தனமானது பலமானதாயிருந்தால், துர்ப்பலமான தைவச்செயலையுமீறி தனது காரியத்தை நிறைவேற்றுவதுண்டு.[2] அதற்கான ஸம்ஸ்காரம் பின்வருமாறு. 37½.

1. கலலம்—சுக்ரார்த்தவ ஸம்யோகத்தினால் ஒரு வாரத்திற்குப்பின்பு சிறிது கனமாகப் பரிணமமடைந்த கர்ப்ப பிண்டம்.

2. ஜன்மாந்தரத்திற்செய்த சொற்பமான வினைப் பயன்களை முறைப்படி நிறைவேற்றப்படும் ஸம்ஸ்கார விசேஷங்களால் வென்றுவிடலாம் எனக் கருத்து. அடுத்துவரும் விஷயம் அந்த ஸம்ஸ்காரமுறைகளையே விவரிக்கின்றது.



*ஆண் அல்லது பெண் குழந்தை பிறப்பதற்கும் கர்ப்பம் பலம்பெறுவதற்கும் ஏற்ற சிகித்ஸை.*

புஷ்யநக்ஷத்திரத்தில் பொன்னாலாவது, வெள்ளியினாலாவது, செப்பினாலாவது, அதுவுமில்லாவிட்டால் இரும்பினாலாவது புருஷனைப்போன்ற ஓர் உருவத்தை நிர்மித்து, அதை அக்னியிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி, பாலில் தோய்க்கவும்; பிறகு அதில் ஒரு அஞ்ஜலியளவு எடுத்து கர்ப்பிணி உட்கொள்வது நலம். ஸுவர்ண கதளீயென்னும் பொன்னிற வாழையின் தண்டு, நாயுருவி, ஜீவகம், ருஷபகம், மருதோன்றி இவற்றில் ஏதேனும் ஒன்றையோ, இரண்டுச் சரக்குகளையோ, அனைத்தையும் ஒருமிக்கவோ ஜலத்தில் அரைத்து, புஷ்யநக்ஷத்திரங்கூடிய தினத்தில் உட்கொள்ளலாம். ஆண்குழந்தை வேண்டுமானால் வெள்ளைக் கண்டங்கத்திரிவேரைப் பாலில் அரைத்து, வலது நாசியினுள் கணவன் பிழியவேண்டும். பெண்குழந்தை வேண்டுமென்றால், அதையே இடது நாசியினுள் பிழியவேண்டும். கண்டங்கத்திரிவேரைப் பாலில் அரைத்து, நாசியினால் உறிஞ்சாலும், வாயால் பருகினாலும் கர்ப்பம் புருஷபிரஜையாக ஆவதுடன், தகுந்தவாறு பலத்தையும் பெறும். அவ்விதமே ஆலமரத்து எட்டு மொட்டுகளை எடுத்துப் பாலில் அரைத்து மூக்கினாலாவது வாயாலாவது உட்கொள்வதும் நலம். ஜீவநீய கணத்திற் கூறியுள்ள[1] மூலிகைகளையும் தேஹத்தின்மேலும் உட்புறமும் உபயோகித்து வரலாம். 38—42.

*கர்ப்பிணிக்குச் செய்யவேண்டிய உபசாரம்.*

கர்ப்பிணிக்குப் பிரியமாகவும் ஹிதமாகவுமுள்ள உபசாரத்தை அவளது கணவனும் வேலைக்காரர்களும் நன்றாகச் செய்துவந்தால், அக்காரியம் கர்ப்பத்திற்கு வன்மையைக் கொடுத்துத் தாங்கக்கூடியதாம். வெண்ணெய், நெய், பால் இவற்றைக்கொண்டு எப்பொழுதும் கர்ப்பிணியைப் போஷித்து வரவேண்டும். 43.

*கர்ப்பிணிக்கு ஆகாத வஸ்துக்களும் காரியங்களும்.*

கர்ப்பிணிக்கு அடியில்வருபவை ஆகாத விஷயங்களாம். அதிகமான புணர்ச்சி, வியாயாமம், ஆயாஸம், சுமையெடுத்தல், கனமான போர்வை அல்லது உடுப்பு, அகாலத்தில் கண்விழித்தல், அகாலநித்திரை, கடினமான ஆஸனத்தில் உட்காருதல், நிர்ப்பந்தமாய் உடலை ஒடுக்கிக்கொண்டு உட்காருதல், மனத்துயரம், கோபம், பயம், திகில், மலவிஸர்க்கம் முதலிய வேகங்களை அடக்குதல், ஆசை முதலியவற்றை அடக்குதல், உபவாஸம், வழிநடத்தல், தீக்ஷ்ணமும் உஷ்ணவீர்யமும் குருகுணமும் மலமூத்திராதிகளைக் கட்டக்கூடியதுமான உணவுகளைப் புஜித்தல், ஒருவருமில்லாத ஏகாந்த ஸ்தானத்தில் வஸித்தல், ஆழமான பள்ளம் கிணறு இவற்றைக் கவிழ்ந்துப்பார்த்தல், மதுபானம் செய்தல், இறைச்சியுண்ணுதல், மல்லாந்துப்படுத்தல் என்னும் இவைகளேயாம்; மேலும் அநுபவசாலிகளான ஸ்த்ரீகள் வேறு எவை ஆகாதவையென்று அபிப்பிராயப் படுகிறார்களோ அவற்றையும் விலக்கிவிடவேண்டும்; அன்றியும் இரத்தமோக்ஷணம், வமநவிரேசநம் முதலிய சோதநசிகித்ஸைகள், வஸ்திகர்மம் இவற்றையும் எட்டாவது மாதம்வரையில் செய்யக்கூடாது. முற்கூறியவற்றை ஒரு கர்ப்பிணிக்குச் செய்தால், அவற்றால் கர்ப்பம் பக்குவமாகாமலே ஸ்ரவித்துவிடும்; வயிற்றிலேயே சுஷ்கித்தும் வரலாம்; அல்லது இறந்துவிடவுங்கூடும். வாயுவை விருத்தி செய்யக்கூடிய வஸ்துக்களால் அல்லது செய்கைகளால் கர்ப்பமானது கூன்விழுந்தும், குருடாகவும், சுறுசுறுப்பற்றதாகவும், குள்ளமாகவும் ஆகும்; பித்தம் விருத்தியாகக் கூடியவைகளால் கர்ப்பத்தின் தலையில் மயிர்கள் உண்டாகாமலும், பொன்னிறமாகவும் இருக்கும்; கபம் விருத்தியாகக்கூடியவற்றால் கர்ப்பம் வெண் குஷ்டமுள்ளதாகவும், மிகவும் வெண்ணிறமாகவும் ஆய்விடும். 44—48.

1. ஜீவநீயகணம்—இதைப்பற்றிய விவரத்தை 124-வது பக்கத்தில் பார்க்க.

*கர்ப்பிணிக்கு உபயோகிக்கத் தகுந்த ஔஷதத் தன்மை.*

கர்ப்பிணிக்கு ஸம்பவிக்கும் வியாதிகளைப் போக்குவதற்கு மிருதுவாகவும், ஸுகமாகவும், தீக்ஷ்ண குணமில்லாதவையுமான ஔஷதங்களை உபயோகிக்கவேண்டும். 48½.

*கநம் - பேசீ - அர்புதம் என்னும் கர்ப்பத்தின் மூன்று பரிணாமங்கள்.*

இரண்டாவது மாஸத்தில் கலலம் என்கிற நிலைமையிலுள்ள கர்ப்பமானது கநமாகவோ, பேசியாகவோ, அர்புதமாகவோ பரிணாமம் அடையும்;[1] இவற்றுள் கர்ப்பம் கநம் என்கிற பரிணாமத்தை அடைந்தால் புருஷக் குழந்தையும், பேசியாக ஆனால் பெண்குழந்தையும், அர்புதமானால் இரண்டுமில்லாமல் நபும்ஸகமாகவும் பிறக்குமென்று அறிக. 49¼.

*கர்ப்பம் வெளிப்படையா யுண்டானதன் குறிகள்.*

அதில் கர்ப்பம் நன்றாக ஏற்பட்டிருப்பதற்கான குறிகள் பின்வருமாறு: உடம்பில் ஒருவித வாட்டம், வயிற்றில் மாத்திரம் பாரம் அதிகரித்தல், மயக்கமாயிருத்தல், வாந்தி, அரோசகம், கொட்டாவி, வாயில் உமிழ்நீர் ஊறுதல், இளைத்தல், வயிற்றில் உரோமம் கொடிபோல் பிரகாசமாகத் தோற்றல், அம்லரஸத்தில் விருப்பம், ஸ்தநங்கள் பருத்துப் பாலுடன் கூடியவைகளாய் முனையிற் காம்புகளில் கறுத்துவருதல், பாதங்களில் வீக்கமுண்டாதல், உணவு தக்கபாகம் அடைதல், பலவிதமான விருப்பங்கள் மேலிடுதல் என்பவையாம். 50—51½.

*கர்ப்பிணியின் விருப்பத்தை அடக்கக் கூடாதென்பதற்கு முகாந்தரம்.*

கர்ப்பத்திலுள்ள சிசுவின் தேஹத்தில் ஹ்ருதயம் என்னும் அவயவமானது தாயாருடைய தாதுக்களின் அம்சங்களால் முக்கியமாய் அமைக்கப்பட்டுளது; மேலும் தாயாருடைய ஹ்ருதயத்துடன் சிசுவின் ஹ்ருதயமும் ஒருவாறு பிணைக்கப்பட்டிருக்கிறது[1]; அதனால் கர்ப்பிணியினுடைய விருப்பங்களை அடக்கச்செய்தல் சரியல்ல. 52½.

*கர்ப்பிணிக்கு அஹிதமானதையும் கொடுத்தல்.*

அவள் ஏதேனும் அஹிதமான வஸ்துவை விரும்பினால் அதையும் சொற்ப அளவில் ஹிதமான வஸ்துவோடு கலந்து அவளுக்குக் கொடுத்து வரலாம். 53.

*மசக்கையைத் தடுப்பதாலான கெடுதிகள்.*

மசக்கை யெனப்படும் விருப்பத்தைத் தடுத்து அடக்கி வருவதால், கர்ப்பத்திற்கே ஏதேனும் விகாரமுண்டாகலாம்; அல்லது அது அகாலத்தில் வெளிப்பட்டுவிடக்கூடும். 53½.

*மூன்றாவது மாஸத்தில் கர்ப்பத்தின் அபிவ்ருத்தி.*

மூன்றாவது மாஸத்தில் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கு சிரஸ்ஸு, இரண்டு கால்கள், இரண்டு கைகள் என்னும் இவ்வைந்து பெரிய அவயவங்களும், மற்றுமுள்ள அவயவங்களின் ஸூக்ஷ்மமான பாகங்களும் உற்பத்தியாகின்றன. சிரஸ்ஸு முதலிய அவயவங்களோடு இன்ப-துன்பங்கள் அறிவதற்கான உணர்ச்சியும் உண்டாகின்றது. 54,55.

*நாபிக்கொடியின் மூலமாய் கர்ப்பம் போஷிக்கப்படுதல்.*

கர்ப்பத்தின் நாபியிலுள்ள தொப்புட்கொடியானது தாயாருடைய ஹ்ருதயத்தோடு ஒருவாறு பிணைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலமாய், சிசுவானது, வாய்க்காலால் வயல்களைப் போல் போஷிக்கப்படுகின்றது.[1] 56.

1. கநம் என்றால் பிண்டரூபமான ஒருவித உருவம்; பேசியென்றால் நாற்சதுரமான உருவம்; அர்புதம் என்றால் திரளாக நீண்ட உருவமுள்ள கர்ப்பம்.

1. கர்ப்பிணியினுடைய இரத்தக்குழாய்கள் மாயையெனப்படும் அபரையில் கலந்து, அங்கிருந்து நாபிக்கொடி மூலமாய் சிசுவின் உடம்பில்—முக்கியமாய் இரத்தக்குழாய்களோடு கலப்பதால் இங்ஙனம் கூறப்பட்டதென்றறிக.



*நான்காவது முதல் ஏழாவது மாஸம் வரையில் கர்ப்பவிருத்தி.*

நான்காவது மாஸத்தில் அவயவங்கள் நன்கு விளங்கும்படி விருத்தியாகின்றன. ஐந்தாவது மாஸத்தில் உணர்ச்சியும் வியக்தமாய் உண்டாகின்றது. ஆறாவது மாஸத்தில் ஸ்நாயுக்கள், விரைகள், உரோமங்கள், வன்மை, நிறம், நகம், சர்மம் இவைகள் விருத்தியாகும். ஏழாவது மாஸத்தில் எல்லாவித வஸ்துக்களாலும், எல்லா அவயவங்களும் பூர்த்தியாய் புஷ்டியடைந்து வருகின்றன. 57,57½.

*கர்ப்பிணிக்கு எட்டாவது மாஸத்தில் உண்டாகும் சில குறிகள்.*

அந்த ஸமயத்தில் வாதாதி தோஷங்கள் கர்ப்பத்தினால் நெருக்கப்பட்டு, கர்ப்பிணியின் ஹ்ருதயத்தை அடைந்து, தினவையும் ஒருவித அழற்சியையும் உண்டு பண்ணுகின்றன; அப்பொழுது ஸ்தநங்களைச் சுற்றிலும் துடைகளிலும் கறுப்பான சில இரேகைகளையும் அத்தோஷங்கள் உண்டாக்குகின்றன. 58.

*கர்ப்பிணிக்கு எட்டாவது மாஸத்தில் உண்டாகும் விகாரங்களுக்கு சிகித்சை.*

அப்பொழுது தினவு முதலியதைப் போக்குவதற்கு வெண்ணெய் ஹிதமான வஸ்துவாம்; புளியாரையினாலும் மதுரமான ஔஷதங்களாலும் பக்குவம் செய்யப்பட்டு, சிறிதளவு உப்பும் ஸ்நேஹமும் கலந்துள்ள இனியசுவை பொருந்தியதும், எளிதில் ஜீர்ணமாகக் கூடியதுமான உணவை உட்கொள்ள வேண்டும். சந்தனம், வெட்டிவேர் இவற்றைக் கல்கமாக ஆட்டியெடுத்துத் துடையிடுக்குகளிலும் ஸ்தனங்களின் இடையிலும் பூசவேண்டும். மேலும் வெள்ளைமான், கருப்புமான், முயல் இவற்றின் இரத்தத்தினால் ஆட்டிய த்ரிபலாகல்கத்தையும் அவ்விடங்களில் பூசலாம். அலரியிலைகளைச் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தினால் அவ்வவயவங்களைத் தேய்த்து நன்றாகப் பிடித்து மர்த்தநம் செய்யலாம். மறுபடியும் பேய்ப்புடல், வேம்பு, மஞ்ஜிஷ்டை, கருந்துளஸி இவற்றின் கஷாயத்தினால் அவ்வவயவங்களைத் தேய்த்துக் கழுவ வேண்டும். 59—61½.

*எட்டாவது மாஸத்தில் பிரஸவிப்பதன் கெடுதி.*

எட்டாவது மாஸத்தில் ஓஜஸ் என்னும் தாதுவானது[1] மாதாவினிடமும் சிசுவினிடமும் மாறிமாறி அடிக்கடியும் கிரமமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அதனால், அவர்கள் மாறி மாறி அடிக்கடி வாடியும் களிப்புடன் செழித்தும் வருவதால், அந்த நிலைமையில் சிசு வெளிப்பட்டால் ஜீவிக்கமாட்டாது. ஓஜஸ் மாதாவினிடமிருந்து சிசுவினிடமும் மாறிப் பிரவேசிக்கக் கூடுமாகையால், அத்தருணத்தில் பிரஸவமானால் ஸ்த்ரீ ஜீவித்திருப்பதும் ஸந்தேஹமாம். 62,63

*கர்ப்பிணிக்கு எட்டாவது மாஸத்தில் செய்ய வேண்டிய உபசாரம்.*

இத்தருணத்தில் நெய் கலந்த பால் ஸம்பந்தமான பேயா என்னும் திரவாஹாரமே[2] விசேஷமாகப் பருகத் தகுந்தது. திராக்ஷை முதலிய மதுர ரஸமுள்ள வஸ்துக்களால் பக்குவம் செய்த கிருதத்தை அநுவாஸநவஸ்தியாக உபயோகிக்கலாம். அங்ஙனமே, உலர்ந்த

1. தாயாருடைய ஹ்ருதயத்திலிருந்து உணவின் ஸாரமான சில அம்சங்கள் தமனிகளின் மூலமாய் அபராயென்னும் மாயையினுள் சேர, பிறகு அங்கிருந்து நாபிக்கொடியினூடே சிசுவின் வயிற்றிற் சென்று, அங்கிருந்து அநேகம் சிறிய இரத்தக்குழாய்களின் மூலமாய் சிசுவின் தேஹமெங்கும் பரவி அதைப் போஷிக்கின்றது எனக் கருத்து.

1. ஓஜஸ்—இதைப்பற்றிய விவரத்தை 88-வது பக்கத்தில் டிப்பணியில் காண்க.

2. சுமார் ஒருபலம் அளவான கோதுமைமுதலியதைப் பொடித்து, அறுபத்திநான்கு பலம் ஜலத்தில் பக்குவம் செய்து, அரைப்பங்கு நீர் குறைந்தபிறகு, அடுப்பிலிருந்து இறக்கி யெடுத்துக் கொள்ளப்படும் ஒருவித திரவமான உணவு பேயா எனப்படும்.

முள்ளங்கியென்ன, இலந்தம்பழமென்ன, புளியென்ன இவற்றைக் கஷாயமாகக் காய்ச்சி அதில் சதகுப்பியைக் கல்கமாகச் சேர்த்து, தைலம், நெய், இந்துப்பு இவற்றையும் கூட்டி, பழைய மலங்களை வெளியாக்கிக் குடலை சுத்தம் செய்வதற்காக நிரூஹவஸ்தியையும் பிரயோகிக்கலாம். 64, 65.

*பிரஸவத்திற்கு உசிதமான காலம்.*

எட்டாவது மாஸம் முடிந்து ஒருநாள் கழிந்தபோதிலும், அதன் பிறகு எந்த தினமும் பிரஸவத்திற்கு ஏற்றகாலமாகவே கருதப்படும்.[1] $65\frac{1}{2}$.

*ஒரு வருஷத்திற்கு மேல் பிரஸவிக்காவிட்டால் உண்டாகும் தீமை.*

கர்ப்பமானது, பிரகோபமடைந்த வாததோஷத்தினால் வெளிவரக் கூடாமல் அடக்கப்பட்டு, ஒரு வருஷத்திற்குப் பிறகும் பிரஸவமாகாமற்போனால், வயிற்றினுள் அக்கர்ப்பம் கோளாறுகளை யுண்டுபண்ணும். 66.

*கர்ப்பிணிக்கு ஒன்பதாவது மாஸத்தில் உபசார க்கிரமம்.*

ஒன்பதாவது மாஸத்தில் ஸ்நிக்த்த குணமுள்ள மாம்ஸரஸங் கலந்த அன்னத்தை உபயோகிப்பது நலம்; அல்லது அதிஸ்நேஹ வஸ்துக்கள் கலந்த யவாகூ என்னும் கஞ்சியையாவது[2] உபயோகிக்கலாம். அத்துடன் முற்கூறியுள்ள அநுவாஸந வஸ்தியையும் பிரயோகிக்கவேண்டும். பிறகு மிருதுவான சிறியதுணித் துண்டுகளாலான நிர்மலமாயுள்ள பிசு என்னும் நூற்சிலும்பை யோனியில் தினந்தோறும் வைத்துவரவேண்டும்; மேலும் வாதஹரமான இலைகளை அல்லது தழைகளைப் போட்டுக் காய்ச்சப்பட்டு, அப்பால் தானே குளிர்ந்த ஜலத்தைப் பிரதிதினமும் ஸ்நாநத்திற்கு உபயோகிப்பது உசிதமாம். ஒன்பதாவது மாஸம் முதற்கொண்டு கர்ப்பிணியின் தேஹத்திற்கு ஸ்நேஹோபசாரம் இல்லாமல் அவளை ரூக்ஷசரீரமுடையவளாக இருக்கச் செய்யக்கூடாது. 67—$68\frac{1}{2}$.

*ஆண்-பெண்-நபும்ஸகக் குழந்தைகள் பிறப்பதற்கான முற்குறிகள்.*

முதலில் வலது பக்கத்து ஸ்தநத்தில் பால் ஊற ஆரம்பித்தாலும், அதே பக்கத்தில் அசைவு முதலியவை யேற்பட்டாலும், ஆண்பாலான பெயர்களையுடைய பதார்த்தங்களில் மசக்கையுடையவளா யிருந்தாலும், புருஷர்களை ஸ்வப்னத்திற் கண்டாலும், வயிற்றின் வலது பக்கம் உயர்ந்திருந்தாலும், கர்ப்பம் வட்டமாகப் பருத்திருந்தாலும் அக்கர்ப்பிணி ஆண்பிள்ளையைப் பெறுவள். இதற்கு எதிரிடையா யிருந்தாலும், புருஷருடன் சேருவதில் விருப்பமுள்ளவளாயினும், நர்த்தநம், வாத்தியம், நாகரிகமான சிருங்கார வேஷம், நறுமணமுள்ள வஸ்து, புஷ்பம் இவற்றில் விருப்பமுள்ளவளா யிருந்தாலும் அவள் பெண் குழந்தையைப் பெறுவள். முற்கூறிய இரண்டு வகையான குறிகளும் கலந்து கண்டால் பிறக்கும் குழந்தை நபும்ஸகமாயிருக்கும். 69—71.

*இரட்டைப் பிள்ளைப் பிறப்பதற்கான முற்குறிகள்.*

வயிற்றின் இருபுறங்களும் தாழ்ந்து செரிந்து, மத்தியபாகம் உயர்ந்து பருத்திருந்து, அது ஒருசாலைப் போல் காணப்படுமானால், அப்பொழுது இரட்டைப் பிள்ளைப் பிறப்பதாய் அறியலாம். 72.

*ஸூதிகாக்ருஹமும் அதில் பிரவேசமும்.*

ஒன்பதாவது மாஸத்திற்கு முன்பாகவே கர்ப்பிணியானவள் ஸூதிகாக்ருஹம் எனப்படும் பிரஸவ அறையில் பிரவேசித்து, அவ்விடத்திலேயே இருந்துவரவேண்டும். அந்த கிருஹம் எவ்விதத்திலும் மிகச் சிறந்ததாகவும், பிரஸவகாலத்திற்கு

1. எட்டாவது மாஸம் கழிந்ததும் ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு இவற்றுள் எதுவும் பிரஸவகாலமேயாம்.

2. நாலு பலங்கொண்ட அரிசிமுதலியவற்றை அறுபத்திநான்கு பலம் ஜலத்தில் சேர்த்து அரைவாசி வற்றுகிறவரையில் காய்ச்சி யெடுக்கப்படும் கஞ்சி.



வேண்டிய எல்லா உபகரணங்கள் அல்லது ஸாமக்ரிகளால் நிரம்பியதாகவும் இருக்க, அதில் சிறந்த சுபதினத்தில் கர்ப்பிணி பிரவேசிக்கவேண்டும். அவ்விடத்தில் பிரஸவிக்கப் போகிற ஸ்த்ரீயானவள், ஸகல உபசாரமும் செய்வதில் திறமைவாய்ந்த பரிசாரிகைகளால் சூழப்பட்டு, பிரஸவம் சீக்கிரம் உண்டாகப் போகிறதென்று எதிர்பார்த்த வண்ணம் இருந்து வரவேண்டும். 73, $73\frac{1}{2}$.

*பிரஸவிக்கும் போது உண்டாகும் குறிகளும் வேதனையும்.*

இன்றைக்கோ நாளைக்கோ பிரஸவம் நேரிடுமென்று இருக்கையில், உடம்பில் வாட்டமும் அசக்தியும் உண்டாகும்; கண்களும் வயிறும் தளர்ந்துவிடும்; அடிவயிற்றில் பாரம் அதிகரிக்கும்; அரோசகமும், வாயில் உமிழ்நீரும் உண்டாகும்; மூத்திரம் அதிகரிக்கும்; தொடைகள், வயிறு, இடுப்பு, பிருஷ்டபாகம், ஹ்ருதயம், மூத்திரப்பை, துடையிடுக்குகள் இவற்றில் வேதனையுண்டாகும்; அடுத்தாற்போல யோனி அகன்று, அதில் குத்தலும் வலியும் எடுத்து, துடிக்க ஆரம்பித்து, அதிலிருந்து சில திரவமும் கசியத் தொடங்கும். அப்பால் பிரஸவத்திற்கு இயல்பான வேதனைகள் உண்டாய், பிறகு கர்ப்பாசயத்திலிருந்து ஒருவித நீரும் பெருகி வெளிவரும். 74—76.

*பிரஸவிப்பதற்கு முன்னால் செய்ய வேண்டிய உபசாரம்.*

கர்ப்பத்திலுள்ள சிசு வெளியாகப் போகிறதென்கிற விஷயம் தெரிந்தவுடனே, அவளுக்கு ரக்ஷாபந்தநம் முதலிய மங்களகரமான சடங்குகளைச் செய்வித்து, அவளுடைய கையில் ஆண்பாலான பெயர்களையுடைய கனி வர்க்கங்களைக் கொடுத்து, நன்றாக அப்யஞ்ஜநம் செய்து உஷ்ண ஜலத்தினால் குளிப்பாட்டி, நெய்கலந்த பேயா யென்னும் திரவமான உணவைப் பருகச் செய்யவேண்டும். $77\frac{1}{4}$.

*பிரஸவிக்கும் போது ஸ்த்ரீ இருக்க வேண்டியநிலைமை முதலியது.*

பிரஸவிக்கும் ஸ்த்ரீயை, பூமியிற் பரப்பிய மிருதுவான படுக்கையில் தொடைகளை உயர்த்தி மடக்கிக் கொண்டு மல்லார்ந்து சயனிக்கச் செய்து, நாபிக்குக் கீழே தைலம் முதலியதைத் தடவி திரும்பத் திரும்ப உருகிவிடுவதோடு; மூச்சை அடக்கிப் பொருமலுடன் வயிற்றில் அழுக்கத்தை உண்டுபண்ணி, இங்குமங்குமாய் உடம்பைப் புரட்டச் செய்யவேண்டும். $78\frac{1}{2}$.

*கர்ப்பம் முதலில் இடம் விட்டுப் பெயர்கையில் உண்டாகும் குறிகள்.*

முற்கூறியவாறு செய்ய, கர்ப்பமானது தலைகீழாக மேலிருந்து கீழ்நோக்கி வரும். இக்காரியம் நடக்கும் போது ஸம்பவிக்கும் குறிகளாவன:— மாதாவுக்கும் சிசுவுக்கும் இருந்துவந்த ஹ்ருதயப்பற்றுதல் விடுபட்டுப் போக,[1] அப்பால் கர்ப்பமானது அடிவயிற்றில் இறங்கி மூத்திரப்பைக்கு மேற்புறமாய் நிற்கும். $79\frac{1}{2}$.

*பிரஸவவேதனை யுண்டான பிறகு செய்யவேண்டிய முயற்சிகள்.*

பிறகு பிரஸவத்திற்கு இயல்பான வேதனைகள் ஸ்த்ரீயைத் துரிதப்படுத்தித் தூண்டும்; அப்பொழுது மெதுவாக மஞ்சத்தின்மீது ஏற்றிவிடவேண்டும். அப்பால் கர்ப்பம் பலமாக அழுத்தப்படும்போது, அவளுடைய யோனியில் தைலம் முதலியவற்றைப் பிரயோகித்து அவ்விடத்தை ஸ்நிக்த்தமாக்கவேண்டும். முதலில் மெதுவாகவும், சிசுவானது சிறிது வெளிப்பட ஆரம்பித்ததும் பிரஸவம் முடியும்வரையில் வெகு பலமாகவும் அழுக்கி அழுக்கவேண்டும். 'உனக்கு அருமைப் புதல்வன் இதோ பிறந்து விட்டான்' என்று சொல்லியும், ஜலத்தினால் முகத்தைக் கழுவியும், சிற்றாலவட்டத்தினால் வீசியும் அடிக்கடி அவளை உத்ஸாஹப்

1. கர்ப்பிணியின் கருப்பையிலுள்ள இரத்தக்குழாய்களின் மூலமாய், அபராயென்னும் மாயைக்கும் ஸ்த்ரீயின் ஹ்ருதயத்திற்கும் ஒரு பற்றுதல் உண்டு. சிசு வெளிப்படுகையில் அப்பற்றுதல் விலகிவிடுவதுஇயல்பு.

படுத்தவும் வேண்டும். அவ்விதம் செய்வதால், பிரஸவிக்கும்போது உண்டாகும் கிலேசத்தினால் களைத்துப்போன உடலில் மீண்டும் தருந்தவாறு சக்தியுண்டாகும். 80—82.

*வெளி வரும் கர்ப்பம் தடையுறுவதற்குப் பரிஹாரம்.*

கர்ப்பம் வெளிவராமல் தடையுறுமானால், கருநாகத்தின் உரிந்த மேற்புறணிகளால் யோனியில் தூபம் போடவேண்டும். ஹிரண்யபுஷ்பியென்னும் செடியின்[1] வேரை கைகால்களில் வைத்துக் கட்டலாம்; ஸூர்யகாந்தி யென்னும் மூலிகையையாவது, விசல்யை யென்னும் மூலிகையையாவது அவ்விதம் செய்யலாம்; மாயைமுதலியது வெளியில் விழாமற்போனால் அப்பொழுதும் இந்த மூலிகைகளை இவ்வாறு உபயோகிக்கலாம். மேலும் அவளைக் கைகளில் ஏந்தி ஒருவாறு குலுக்கலாம். இடுப்பில் மெதுவாக அடிக்கடியும் முஷ்டியினால் குத்தலாம்; பிருஷ்டபாகங்களை கைகளால் நன்கு அழுத்தி உருகலாம்; மயிர்ச்சுரணையினால் வாயையும் தொண்டையையும் பரிசிக்கலாம்; சிரஸ்ஸில் எருக்கம்பாலைத் தடவலாம்; பூர்ஜப்பட்டை, நீர்த்திப்பிலி, சுரைவேர், பாம்புத்தோல், கோஷ்டம், கடுகு இவற்றைத் தனித்தனியாகவோ, இரண்டிரண்டாகவோ, அனைத்தையும் ஒருமிக்கச் சேர்த்தோ கல்கமாக அரைத்து, யோனியில் லேபநம் செய்யலாம்; அல்லது அவற்றைக்கொண்டு தூபம்போடலாம்; அல்லது கோஷ்டம், தாளிசபத்திரி இவற்றைக் கல்கமாகச் செய்து தெளிந்த கள்ளோடு உட்கொள்ளச் செய்யலாம்; அல்லது அதே கல்கத்தைக் கொள்ளுக் கஞ்சியோடாவது, பில்வப்பழத்தினால் செய்த ஆஸவத்தோடாவது உட்கொள்ளச் செய்யலாம். 83—87.

*அபரா யென்னும் மாயை வெளிவராவிட்டால் செய்ய வேண்டிய பரிஹாரம்.*

அபராயென்கிற மாயை வெளிவருவது தடையுறுமானால், அடியில் வரும் சிகித்ஸையைச் செய்யவேண்டும்:— சதகுப்பி, கடுகு, ஓமம், முருங்கை, மிளகு, சித்திரமூலம், பெருங்காயம், கோஷ்டம், மருக்காரை இவற்றைப் பசுவின் மூத்திரத்திலும் பாலிலும் சேர்த்துக் காய்ச்சி, அதில் கடுகெண்ணெயைச் சேர்த்துப்பக்குவம் செய்யவும்; இத்தைலத்தை குதத்திலாவது, யோனியிலாவது அநுவாஸநமாக அல்லது உத்தரவஸ்தியாகப் பிரயோகிக்கலாம். சதகுப்பி, வசம்பு, கோஷ்டம், திப்பிலி, கடுகு இவற்றைக் கல்கமாகச்செய்து பக்குவம் பண்ண கஷாயத்தில் ஸ்நேஹவர்க்கங்களையும் இந்துப்பையும் சேர்த்து, நிரூஹவஸ்தியைப் பிரயோகித்தால், அபரா யென்பது சீக்கிரம் வெளியாய்விடும்; கோளாறடைந்த வாயுவானது மாயையின் தடைக்குக் காரணமாயிருக்கும்; இச்சிகித்ஸைகளால் வாயு கண்டிக்கப்பட்டுப் போகுமாதலால், மாயையும் பிறகு தானே வெளியாய்விடும். அல்லது பிரஸவிக்கச் செய்யும் வேலையில் திறமையுள்ளவள், தன் கைவிரல்களிலுள்ள நகங்களையெடுத்துக் கொண்டு, தைலம் பூசுவதைக் தடவிக்கொண்டு, மெதுவாக மாயையைக் கையினாலும் இழுத்துவிடலாம். 88—90½.

*சிசுவும் அபரையும் வெளியானதும் செய்யவேண்டிய ஸ்நேஹோபசாரம்.*

சிசுவும், அபரையென்னும் மாயையும் கர்ப்பாசயத்தையும் யோனியையும் விட்டு வெளியாய்விட்ட பிறகு, யோனியையும், மற்ற அவயவங்களையும் தைலத்தைத் தடவி மெதுவாக உருவிவிடுவது நலம். 91.

*மக்கல்லமும் அதற்குப் பரிஹாரமும்.*

இந்த நிலைமையில் பிரஸவித்த ஸ்த்ரீக்கு மக்கல்லம் என்கிற ஒருவித நோய்[1] உண்டாவதுண்டு: அதில் தலைவலி, மூத்திரப்பை வலி, குடலில் விசேஷமான வேதனை இவை ஸம்பவிக்கும். அப்பொழுது யவக்ஷாரத்தை நன்றாகப் பொடிசெய்து, நெய் அல்லது ஜலத்தில் அநுபானமாக உட்கொள்ளச் செய்யவேண்டும். த்ரிகடு,[2] த்ரிஜாதகம்[3] இவற்றின் சூர்ணத்தையும் வெல்லத்தையும் சிறிதளவு காடியில் சேர்த்து உபயோகிக்கச் செய்யலாம். 92, 92½.

*பாலனைப் பரிபாலித்தல்.*

பிறகு குழந்தையை ஓர் அநுபவசாலியான ஸ்த்ரீ யெடுத்து, பாலர்களுக்குரிய முறைப்படியேற்பட்ட உபசாரத்தினால்[1] அதைப் பரிபாலித்து வரவேண்டும். 93.

*ஸூதிகைக்கு வாயு பிரகோபமடையாமலிருக்கச்செய்யும் சிகித்ஸை.*

பிரஸவித்த ஸ்த்ரீ ஸூதிகையெனப்படுவள்; ஸூதிகைக்கு நல்ல பசியுண்டானதும், தைலத்தையாவது கிருதத்தையாவது யெடுத்து, அதில் பஞ்சகோலங்களை[2] பொடித்துச் சேர்த்து, உத்தம மாத்திரையெனப்படும் பெரிய அளவில்[3] அதை உபயோகித்து, அதற்கு அநுபானமாகச் சூடான வெல்லம் கரைத்த நீரை உட்கொள்ளச் செய்யலாம். அல்லது வாதஹரமான வஸ்துக்களால் பக்குவம் செய்யப்பட்ட கஷாயத்தையாவது பருகச்செய்யலாம்; அவ்விதம் செய்வதால வாதம் பிரகோபமடையாமலிருக்கும்; கெட்டுப்போன இரத்தமும் நன்றாக வெளிவந்து கருப்பை சுத்தமாகும். இம்முறையை இரண்டு மூன்று நாள் தொடர்ந்து நடத்தவேண்டும். ஸ்நேஹபானம் செய்யத்தகாதவள், தைலம் கிருதங்கள் இவற்றைத் தவிர்த்து மற்றப்படி இச்சிகித்ஸா முறையையே செய்துகொள்ளலாம். இவ்வாறு கஷாயாதிகளைப் பானம் செய்தபிறகு அவளுடைய வயிற்றை யமகஸ்நேஹத்தில[4] நனைத்த வஸ்திரத்தினால் சுற்றிக்கட்டிவைக்கவேண்டும். 94—96.

*ஸூதிகைக்கு ஹிதமான ஆஹாரங்களும் அவற்றிற்கு ஏற்றகாலங்களும்.*

உட்கொண்ட ஸ்நேஹம் அல்லது கஷாயம் முதலியது நன்கு ஜீர்ணமான பிறகு, ஸ்நானம் செய்து, முற்கூறிய ஔஷதச் சரக்குகளால்[1] பக்குவம் செய்யப்பட்ட பேயாயென்னும் திரவமான ஆஹாரத்தை உட்கொள்ள வேண்டும். மூன்றுநாள் சென்றதும் விதார்யாதி கணத்திற்[2] கூறிய வஸ்துக்களாலான கஷாயத்தில் பக்குவம் செய்த யவாகூ யென்னும் கஞ்சியில் ஸ்நேஹவஸ்துக்களையும் வேண்டியவளவு சேர்த்து அருந்துவது ஹிதமாயிருக்கும்; அல்லது அவரவருடைய வழக்கம் அல்லது தேஹக்கூறை அநுஸரித்து, பாலிலேயே பக்குவம்செய்த யவாகூவையாவது உட்கொள்ளலாம். ஏழாவதுநாள் சென்றதும், இவளுக்குக் கிரமமாக ப்ருஹ்மணசிகித்ஸையைச் செய்வது ஹிதமாயிருக்கும். பன்னிரண்டு நாட்கள் கழிவதற்கு முன்பாக மாம்ஸாஹாரத்தை உபயோகிக்கக் கூடாது. 97—98½.

*ஸூதிகைக்குக் கருத்துடன் உபசாரம் செய்யாமற் போனால் உண்டாகும் கெடுதிகள்.*

ஸூதிகைக்குக் கருத்துடன் ஜாக்கிரதையாக உபசாரம் செய்யவேண்டும்; ஏனெனில் கர்ப்பம் விருத்தியாவதாலும், அது பிரஸவத்தில் வெளிவரவேண்டியதாகையாலும், பிரஸவவேதனையினாலும், பலவிதமான நீர்கள் கசிவதாலும், இரத்தப்பெருக்காலும், அழுக்கம் அல்லது முக்கல் அதிகரிப்பதாலும் அவளுக்குண்டாகும் வியாதிகள் எளிதில் பரிஹரிக்கக் கூடாதவைகளாய் விடுகின்றன. 99½.

*ஸூதிகை யென்னும் நிலைமையின் காலஅளவு முதலியது.*

இங்ஙனம் முற்கூறியவாறு ஒன்றரைமாஸம் வரையில் உபசரிக்கப்பட்டு, அப்பால் கிரமமாக ஆஹாரம் முதலியவற்றைப் பற்றிய நிர்பந்தங்களை மெதுவாக விலக்கிவிடலாம். இதன்பிறகு ஸூதிகையென்னும் நிலைமை ஸ்த்ரீக்கு நீங்கிவிட்டதாகக் கருதப்படும்; ஆனால் மறுபடியும் மாதவிடாய் உண்டாகும் வரையில் அவளுக்கு ஸூதிகையெனகிற விவஹாரம் உண்டென்றும், மறுபடி ஆர்த்தவம் காணப்பட்ட பிறகே அந்த நிலைமையிலிருந்து அவள் நீங்கியவளாவாள் என்றும் சிலரது கொள்கை. 100.

---

1. ஹிரண்யபுஷ்பீ—இதை சிலர் சவிந்தியென்றும் கூறுவர்.

1. மக்கல்லம்—பிரஸவித்த ஸ்த்ரீக்குக் கருப்பையிலிருந்து அழுக்குகள் நன்கு வெளிப்படாமையால் உண்டாகும் ஒருவித நோய்.

2. த்ரிகடு—64-வது பக்கம் பார்க்க.

3. த்ரிஜாதகம்—63-வது பக்கம் பார்க்க.

1. உத்தரஸ்த்தாநத்தில் 'பாலோபசரணீயம்' என்கிற முதல் அத்தியாயத்தில் பாலோபசாரத்தைபற்றிய விவரங்கள் விஸ்தாரமாகக் கூறப்படுகின்றன.

2. பஞ்சகோலம்—64-வது பக்கம் பார்க்க.

3. ஸ்நேஹத்திற்கு உத்தமமாத்திரை, மத்திம மாத்திரை, ஹ்ருஸ்வ மாத்திரைகளைப்பற்றி 131-வது பக்கம் பார்க்க.

4. யமகஸ்நேஹம்—129-வது பக்கத்தில், 3-வது பத்தியத்து மொழிபெயர்ப்பைப் பார்க்க.

1. முற்கூறிய ஔஷதச் சரக்குகள் என்பதால் பஞ்சகோலம் முதலியவை குறிப்பிடப்படுகிறன.

2. விதார்யாதிகணம்—124-வது பக்கம் பார்க்க.

கர்ப்பமுண்டாவதற்கு முன்பு கருப்பையிருக்கும் நிலைமையையும், ருதுவாகிறதற்கும் கருத்தரிப்பதற்கும் அவசியமாயுள்ள அவயவங்களையும் விளக்கும் படம்.



1. ஸ்த்ரீயின் மர்மஸ்த்தானத்தின் மேற்புறம். 2, 2. கர்ப்பாசயத்தின் வலது இடது பித்திகைகள். 3. கர்ப்பாசயத்தின் மேற்புறம் அல்லது மேற்புற பித்திகை. (2, 2, 3. இக்குறிப்புள்ள பாகங்களால் கர்ப்பாசயமானது முக்கோணவடிவமுள்ளதென்பதும், இவ்வரம்புகளுக்கு உட்பட்ட பாகம் ஒருவாறு முக்கோணவடிவமான குழியென்பதும் விளங்குகின்றது.) 4, 4. ஆர்த்தவ தமனிகள். (வலது பக்கத்திலும் இடது பக்கத்திலுமுள்ள இவ்விரண்டு குழாய்களால் பிரதிமாதமும் ஸ்த்ரீகளுக்கு இரஜஸ் அல்லது ஆர்த்தவம் என்கிற மாதவிடாய்க்குக் காரணமான வித்துகள் கிரஹிக்கப்பட்டு கர்ப்பாசயத்திற்குக்கொண்டு செலுத்தப்படுகின்றன.) 5, 5. பூங்கொத்து அல்லது அங்குலி முனைகளைப்போன்ற ஏந்தும் அவயவங்கள். (ஒவ்வொரு ஆர்த்தவ தமனியிலும் முனையில் அமைந்துள்ள இவ்வவயவங்கள் பலக்கிரந்தியிலிருந்துவரும் இரஜஸ் என்னும் வித்தை ஏந்தி தமனியின் மூலமாய் கர்ப்பாசயத்திற்குச் செலுத்துகின்றன.) 6, 6. பலக்கிரந்திகள் அல்லது பலங்கள். (இவற்றிலிருந்து ஆர்த்தவம் அல்லது இரஜஸ் என்கிற வித்துகள் உற்பத்தியாகின்றன.) 7, 7. ஆர்த்தவ தமனிகள் கர்ப்பாசயத்துடன் இணைந்து, அவற்றின் உட்புறத்வாரங்கள் ஒன்றோடொன்று கூடும்பாகங்கள். 8. கர்ப்பாசயம் என்னும் கருக்குழி.

புருஷர்களுக்கு பீஜங்களைப்போல ஸ்த்ரீகளுக்கு பலங்கள் என்னும் கிரந்திகள் ஏற்பட்டிருக்கின்றன. புருஷர்களுக்கு பீஜங்களிலிருந்து சுக்ரம் உற்பத்தியாவதுபோல ஸ்த்ரீகளுக்கு பலங்களிலிருந்து இரஜஸ் என்னும் வித்துகள் உற்பத்தியாகின்றன.

கர்ப்பம் தரித்திருக்கையில் கர்ப்பாசயம் என்னும் கருப்பையும் அதனுள் கர்ப்பம் அல்லது சிசுவும் இருக்கும் நிலைமைகளை விளக்குவதற்கான படம். ஏழாவது அல்லது எட்டாவது வாரத்தில் கர்ப்பம் கருப்பையினுள் வ்ருத்தியாயிருக்கிற நிலைமை இதில் காட்டப்பட்டிருக்கிறது.



1, 1, 1. கர்ப்பாசயக்குழி. (இந்த பாகம் ஜராயு என்னும் சவ்வுக்கவசத்தால் கவரப்பட்டிருக்கிறது.) 2, 2, 2. தாத்காலிகமான டிம்பகலையென்னும் மேற்புறத்துச் சிறிய ஜராயு அல்லது சவ்வுக்கவசம். 3, 3. தாத்காலிகமான ஜராயு ஆவரணம் என்னும் சவ்வுக்கவசம். 4, 4, 4, 4. தாத்காலிகமான கர்ப்பாவரண கலை, அதாவது சிசுவை அடுத்தாற்போலுள்ள சவ்வுக்கவசம். 5. நாபி நாடியென்னும் தொப்புட்கொடி. (இக்கொடியின் மூலமாய் அபராயென்னும் மாயையிலிருந்து சிசுவின் தேஹத்திற்கும், சிசுவினிடமிருந்து அபராவுக்கும் இரத்தம் ஓடுகிறது.) 6. ஏழெட்டு வாரத்திய கர்ப்பத்தின் உருவம். 6 என்கிற இலக்கம் சிசுவின் மத்திய உடலைக் குறிப்பிடுகிறது. 7. சிசுவின் மஸ்திஷ்கம் என்கிற மூளையின் பாகம். 8. சிசுவின் கண். 9. சிசுவின் காது.



# இரண்டாவது அத்தியாயம்.

இதன்பிறகு கர்ப்பவ்யாபத் சாரீரம்[1] என்னும் அத்தியாயம் விவரித்துக் கூறப்படுகிறது:—

மூன்று மாஸங்களுக்கு மேல் கர்ப்பிணிக்கு ஆர்த்தவம் வெளிவந்தால்செய்யும் பரிஹாரங்கள்.

கர்ப்பிணியான ஸ்த்ரீக்கு பரிஹரிக்கத் தகுந்த வஸ்துக்களை உபயோகிப்பதாலோ, அவ்வித வேலைகளைச் செய்வதாலோ, அல்லது ஏதேனும் வியாதியினாலோ புஷ்பம் என்னும் மாதவிடாய் தோன்றக்கூடும்; சூலம் என்கிற வேதனையாவது உண்டாகக்கூடும். அப்பொழுது தேஹத்திற்கு உள்ளும் புறமும் ஸிக்த்தமும் சீதளமுமாயுள்ள வஸ்துக்களைக்கொண்டு உபசாரம் செய்யவேண்டும். விளாமிச்சை, தாமரை, பனிநீர், பாலுள்ள மரங்களின் பட்டைகள் இவற்றைக் கல்கமாய் அரைத்து, நெய்விட்டுக் குழப்பி, பிசுவென்னும் நாற்சிலுப்புகளையும் மிருதுவான சிறிய சீலைகளையும் அக்கல்கத்தில் தோய்த்து, ஈரம் கசியக்கசிய அவற்றை யோனியிலும் மூத்திரப்பையின்மீதும் வைத்திருக்கவேண்டும். மேலும் ஸ்த்ரீயின் உடம்பில் சததௌதக்ருதத்தைப்[2] பூசி, முற்கூறிய விளாமிச்சை முதலியவற்றாலான கஷாயஜலத்தில் ஸ்நாநம் செய்விக்கவும். சர்க்கரை, தேன், ஆம்பல்மலர், தாமரைப்பூ, நெய்தல், நாககேஸரம் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய பாலை நன்றாய்க் கடைந்தெடுத்து, அதிலிருந்துவரும் நெய்யை உட்கொள்ளலாம். தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு முதலியதையும் மென்று விழுங்கலாம். வாஸனைப்புல், தாமரை, அல்லி முதலியவற்றின் கிழங்குகள், அத்தியின் இளங்காய் இவற்றால் பக்குவம் செய்த பாலையாவது பருகலாம். சம்பாப்பயிர், காகோலியென்கிற மூலிகை, சிற்றுமுட்டி, பேராமுட்டி, அதிமதுரம், கரும்பு இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய பாலை சிவப்புச்சம்பா அரிசியிலான அன்னத்துடன் கலந்து புஜிக்கலாம்; அல்லது அதே அன்னத்தை தேன், சர்க்கரைகளோடும், ஜாங்கலமாமஸரஸத்தோடும் கூட்டி உண்ணலாம். சோதநம் செய்வதைத் தவிர்த்து இரத்தபித்தத்திற்குக் கூறப்படும், விதிகளை அநுஸரித்து உபசாரங்களைச் செய்யலாம்.[1] மூன்று மாஸங்கள் பூர்த்தியாகாத கர்ப்பிணியையும்,[2] அதற்கு மேற்பட்ட மாஸங்களில்கூட ஆமதோஷத்துடன்கூடிய ஆர்த்தவம்[3] வெளிவரும் கர்ப்பிணியையும் விலக்கி, மற்றவருக்கே முற்கூறிய சிகித்ஸைகளைச் செய்யலாம். 1—6¼.

கர்ப்பிணிக்கு ஆமதோஷமுள்ள ஆர்த்தவம் வெளியாகையில் செய்யும் பரிஹாரம்.

அவ்வாறு ஆமதோஷத்துடன்கூடிய ஆர்த்தவம் வெளிப்படும்போது அடியிற் கூறப்படும் சிகித்ஸை ஹிதமாயிருக்கும்: ரூக்ஷகுணத்துடன் கூடியதும் சீதவீர்யமுள்ளதுமான சிகித்ஸை அநுகூலமானது; லங்கநம் செய்ய வேண்டும்; கோரைக்கிழங்கு, வெட்டிவேர், சீந்தில், பெருவாகை, கொத்து

1. கர்ப்பத்திற்கு உண்டாகும் அபாயம் கர்ப்பவ்யாபத் எனப்படும்; அதுவிஷயமான தத்துவங்களும், அவ்வித அபாயங்களுக்குப் பரிஹாரமுறையும் விவரிக்கப்படும் அத்தியாயம் எனப்பொருள்.

2. வெளிப்புற சீதோபசாரம்—குளிர்ந்த பூச்சுகள், ஸ்நாநம் முதலியது; உட்புற சீதோபசாரம்—சீதளமான வஸ்துக்களைப் புஜிப்பது பாநம்செய்வது முதலியது.

1. சிகித்ஸாஸ்த்தானத்தில் இரண்டாவது அத்தியாயத்திற் கூறப்போகிற இரத்தபித்த சிகித்ஸையில் இவ்விவரங்களைக் காணலாம்.

2. மூன்று மாஸம் பூர்த்தியாவதற்குள் ஆர்த்தவம் வெளியானால், சிகித்ஸை செய்தாலும் கர்ப்பம் நிலைநிறுத்தப்படுவது அஸாத்தியமாகையால், அதற்கு முன்னால் இச்சிகித்ஸைகள் பயன்படமாட்டாவெனக் கருத்து.

3. இங்கு ஆமதோஷம் என்றால், வெண்மையான பெரும்பாடு போன்ற தோஷம் குறிப்பிடப்படுகிறது.

மல்லிவிதை, காஞ்சோறி, பர்ப்பாடகம், சந்தனம், அதிவிடையம், சிற்றாமுட்டி இவற்றை ஜலத்தில் சேர்த்துக் கஷாயமாகக் காய்ச்சி உட்கொள்ளலாம்; இச்சிகித்ஸையைச் செய்து கொண்டு வருகையில், திருணதானியம் முதலியவற்றை[1] ப் பயறு முதலானவைகளின்[2] யூஷங்களோடு[3] கலந்து புஜித்துவரவேண்டும். ஆமதோஷம் இவற்றால் பரிஹரிக்கப்பட்டதும், முன்போலவே ஸ்நிக்த்தம் முதலிய குணங்களையுடைய வஸ்துக்களை உபயோகித்து வரலாம். 7—8½.

*கர்ப்ப பாதத்தில் செய்யு முபசார முறைகள்.*

கர்ப்பம் பதநமாய்விட்டால்,[4] அப்பொழுது செய்யவேண்டிய பரிஹாரம் பின்வருமாறு: கர்ப்பாசயம் எனப்படும் கருப்பை சுத்தியாவதற்காகவும், அப்பொழுது உண்டாகும் வேதனையை உணராமலிருப்பதற்காகவும கூடுமானவரையில் மதுவை அருந்தலாம். பிறகு லகுபஞ்சமூலத்தினால்[5] பக்குவம் செய்யப்பட்டு ரூக்ஷமாயுள்ள பேயாவைப் பருகவேண்டும். மதுபானம் செய்யாத ஸ்த்ரீ பஞ்சகோலகல்கத்தில்[6] பக்குவம் செய்த பேயாவை உட்கொள்வது நலம்; அவ்விதமே மஹாபஞ்சமூலகஷாயத்தில்[7] எள், உத்தாலகம் என்னும் ஒருவித நெல்[8] ஸாதாரண சம்பா அரிசி இவற்றைப் பக்குவம்செய்து புஜித்துவரலாம். இவ்வாறு இலகு குணமுள்ளதும், ஸ்நேஹமாவது உப்பாவது கலக்காமல் தீபநசக்தியுள்ள வஸ்துக்களுடன் கூடியதுமான பேயாமுதலிய ஆஹாரமுறையே ஒருமாஸகாலம் வரையில் கர்ப்பம் பதிதமான ஸ்த்ரீக்கு ஹிதமானதாம். கோளாறடைந்த வாதாதி தோஷங்களென்ன, இரஸாதிதாதுக்களென்ன, மற்றுமுள்ள துர்நீர்களின் கசிவென்ன இவற்றைச் சோஷணம் செய்வதற்கு இந்த முறை இங்ஙனம் விதிக்கப்பட்டதாகும். இதன் பிறகு பல்யமாகவும், ஜீவநீய குணமுள்ளவையாகவும், தீபநகுணமுள்ளவையுமான ஸ்நேஹங்களையும், ஆஹாரங்களையும், வஸதிகர்மங்களையும் பிரயோகிக்கவேண்டும். 9—13.

*உபவிஷ்டக கர்ப்பம்.*

கர்ப்பத்திற்கு நன்றாக பலம் உண்டாய் பருத்திருந்தும், ஆர்த்தவம் முதலியது கசிந்துகொண்டிருந்தால் கர்ப்பமானது நன்கு விருத்தியடையாமல், கருப்பையிலேயே ஒருவாறு துடித்துக்கொண்டு இருக்கும். இவ்விதமான கர்ப்பத்தை உபவிஷ்டகம் என்பார்கள்; இதனால் வயிறு கர்ப்பிணிகளுக்குள்ள இயற்கைப்படி நன்றாகப் பருத்து வருவதில்லை. 14, 14½.

*நாகோதர கர்ப்பம்.*

மனத்துயரம், லங்கநம், ரூக்ஷமான ஆஹாரவிஹாரங்கள் இவைமுதலியவற்றால், அல்லது யோனியிலிருந்து அதிகமாய் நீர்கள் கசிவதால் வாததோஷம் பிரகோபமடைந்து விட, கர்ப்பம் கிருசமாகப் போய் சுஷ்கித்துவரும். முதலில் வயிறு இந்த நிலைமையில் பெருத்துக் காணப்பட்டாலும், பிறகு தானே குறைந்துவிடும். வயிற்றிலுள்ள சிசுவின் சலனம் அல்லது துடிப்பு வெகு நீடித்த காலத்திலேயே காணும். இவ்வித கர்ப்பத்திற்கு நாகோதரம் என்று பெயர். 15,16.

1. சென்னெல், சாமை, கேழ்வரகு முதலிய தானியங்கள் குறிப்பிடப்படுகின்றன.

2. பயறு முதலிய என்பதால் கடலை, காராமணி முதலியவைகளும் கிரஹிக்கப்படுகின்றன.

3. யூஷம்—23-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

4. கர்ப்ப பதநம் அல்லது கர்ப்ப பாதம்—மூன்றுவது மாஸத்திற்குப்பிறகு 6-வது மாஸத்திற்குமுன் வெளியாகும் அகாலப்பிரஸவம்.

5. லகுபஞ்சமூலம்—64-வது பக்கம் பார்க்க.

6. பஞ்சகோலம்—64-வது பக்கம் பார்க்க.

7. மஹாபஞ்சமூலம்—64-வது பக்கம் பார்க்க.

8. உத்தாலகம்—44-வது பக்கம் 7, 8 இந்த ச்லோகங்களின் மொழிபெயர்ப்பைப் பார்க்க.



*உபவிஷ்டக-நாகோதரங்களுக்கு சிகித்ஸை.*

உபவிஷ்டகம், நாகோதரம் என்கிற நிலைகளில் ப்ருஹ்மணமாகவும் வாதஹரமாகவும் மதுரமாகவுமுள்ள வஸ்துக்களைச் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட கிருதங்களாலும் பால்களாலும் தர்ப்பணசிகித்ஸை செய்யவேண்டும்; மிருகங்களுடைய பக்குவநிலைமையடையாத கருக்களையெடுத்து அவற்றையும் புஜிக்கச்செய்ய வேண்டும். இவற்றால் நன்றாகத் திருப்தியடைந்த பிறகு வண்டி முதலியவற்றிலும் இதர வாஹநங்களிலும் ஏற்றி உடம்பு குலுங்கும் வண்ணம் அவற்றை ஓட்டலாம். 17, 17½.

*லீந கர்ப்பமும் அதன் சிகித்ஸையும்.*

துடிப்பு அல்லது எவ்வித அசைவுமற்றதான லீநம் என்கிற கர்ப்பவிகாரத்தில்[1] பருந்து, மத்ஸியம், அழுங்கால் பக்ஷி இவற்றின் மாம்ஸத்தை வேண்டியவளவு நெய் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம்; அவ்விதமே உளுந்து முள்ளங்கி இவற்றை ஜலத்தில் பக்குவம் செய்தெடுத்த இரஸத்தையும் நெய்கலந்து உட்கொள்ளக் கொடுக்கலாம். பில்வப்பிஞ்சு, எள், உளுந்து, ஸக்துஎன்னும் மாப்பண்டம் இவற்றை அனைத்தையுமோ தனித்தனியாகவோ பாலில் கலந்து உட்கொள்ளலாம். கொழுப்பை விருத்திசெய்யக்கூடிய மாம்ஸத்தையும் தேனையும் உபயோகிக்கலாம். இடுப்பில் தைலம் முதலியதைப் போட்டு நன்றாகத் தேய்த்து உருகச் செய்யலாம். 18—19½.

*உபவிஷ்டக-நாகோதர-லீநகர்ப்பங்களுக்குப் பொதுவான சிகித்ஸை.*

இவ்வாறு உபவிஷ்டக-நாகோதர-லீநங்களென்கிற கர்ப்பவிகாரங்கள் ஏதேனும் உண்டாயிருக்கையில் அவளை எப்பொழுதும் ஸந்தோஷப்படுத்தி வரவேண்டும்; இவ்வாறு செய்தால் கர்ப்பம் விருத்தியடையும். 20.

*உபவிஷ்டகாதி கர்ப்பங்களில்சிகித்ஸை செய்யாவிட்டால் உண்டாகும் கெடுதிகள்.*

முற்கூறிய சிகித்ஸைகளைச் செய்யாமல் உபவிஷ்டகாதி கர்ப்பங்கள் பல வருஷங்கள் வரையில் வயிற்றில் ஏதோ ஒருவாறு வளர்ந்துகொண்டு, வெகுகஷ்டப்பட்டு பிறந்தாலும் பிறக்கும்; பிறக்காமலே இருந்துவிடவும் கூடும். 20½.

*கர்ப்பிணிக்கு உண்டாகும் உதாவர்த்தம்.*

கர்ப்பிணிக்கு உதாவர்த்தம்[1] உண்டானால், அதை ஸ்நேஹங்களாலும், அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்த ஸ்நேஹவஸ்திகளாலும் அவ்விகாரத்தைப் போக்கவேண்டும். இல்லையேல், அவ்வுதாவர்த்தமானது கர்ப்பத்தையும் கர்ப்பிணியையும் ஆக இருவரையும் கொன்றுவிடும். 21½.

*கருப்பையில் சிசு இறந்து விடுவதும் அதன் குறிகளும்.*

கருப்பையிலுள்ள சிசுவானது தோஷங்கள் மேன்மேலும் விருத்தியாவதாலும், அபத்தியமான ஆஹாராதிகளை உபயோகிப்பதாலும், தைவச் செயலாலும் இறந்துவிடுமானால், ஸ்த்ரீயின் வயிறு குளிர்ச்சியதிகரித்ததாகவும், அசைவற்றதாகவும், பொருமலுள்ளதாகவும், அதிகவேதனையுடையதாகவும் ஆய்விடும்; சிசு துடிப்பதும் நின்றுவிடும்; நாவறட்சியும், உடல்வாட்டமும், அலத்தல் புரட்டலும் தலைச்சுற்றலும் அதிகரிக்கும்; மூச்சுவிடுவதும் சிரமமாயிருக்கும்; கண்கள் குழி விழுந்து சோர்ந்துவிடும்; பிரஸவத்திற்கு இயல்பான வேதனைகளும் உண்டாகா. 22,23½.

*இறந்துபோன சிசுவை வெளிப்படுத்தும் உபாயங்கள்.*

முதலில் இளஞ்சூடான ஜலத்தை அந்த ஸ்த்ரீயின்மேல் தெளிக்கவும்; பிறகு வெல்லம், மக்யத்தின் அடிவண்டல், உப்பு இவற்றை ஒன்றாகப் பிசைந்து யோனியின்மேல் லேபநம் செய்யலாம். மேலும், இலவம்பிசின், காசாம்பிசின், இவற்றை நன்றாக அட்டியெடுத்து நெய்கலந்து

1. லீநகர்ப்பம்—வாதத்தினால் கர்ப்பமார்க்கம் முதலிய ஸ்ரோதோமார்க்கங்கள் அடைபட்டுப்போக, கருப்பையினுள் கர்ப்பம் விருத்தியாக முடியாமல் வயிற்றில் ஒட்டிக்கிடக்கும்; அதற்கு லீநம் என்று அஷ்டாங்கஸங்கிரஹத்தில் கூறப்படுகிறது.

1. உதாவர்த்தம்—25-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

அடிக்கொருமுறையாக யோனியினுட் செலுத்தலாம்; அந்தநிலைமைக்குப் பரிஹாரமுண்டு பண்ணும் பிரபாவமுள்ள மந்திரங்களையும் பிரயோகிக்கலாம். இப்பரிஹார முறைகளைச் செய்தும் மூடகர்ப்பம்[1] வெளிவராவிட்டால், வைத்தியன் அதிகாரிகளுடைய உத்தரவைப்பெற்று, தன் கையிலும் யோனியிலும் இலவம்பிசின் நெய் இவற்றைத் தடவிக்கொண்டு, வெகு ஜாக்கிரதையாக, ஸாத்தியமானால் கையை உட்செலுத்தி கர்ப்பத்தை மெதுவாக வெளிப்படுத்திவிடவும். 24—26½.

*மூடகர்ப்பத்தைக் கையில் வெளிப்படுத்தும் முறை.*

இயற்கைக்கு மாறாக முரண்பட்டு நிற்கும் சிசுவின் தேஹத்தை ஒழுங்காக நீட்டியும், தகுந்தவாறு மேற்புறமாக உயர்த்தித் தள்ளியும், அதை நாற்புறமும் அழுத்திக் குறுகச்செய்தும், குறுக்கு நெடுக்காகத் திருப்பி வசப்படுத்தியும் வெளியில் வருவதற்குத்தகுந்த நிலைமையில் நிறுத்தி, யோனி மார்க்கத்திற்கு நேர் வழியில் ருஜுவாக வந்திருக்கையில் வெளியில் இழுத்துவிடவேண்டும். 27, 28.

*விஷ்கம்பங்கள் என்னும் மூடகர்ப்பங்கள்.*

சிசுவின் உடல் வளைந்து அதன் கையாவது காலாவது சிரஸ்ஸாவது அல்லது மூன்றுமாவது யோனியில் பிரவேசித்து வெளிவர முடியாமல் அடைபட்டிருந்தாலும், சிசுவின் தேஹம் வளைந்து அதன் ஒரு காலும் ஒருகையும் யோனியில் பிரவேசித்து வெளிவரமுடியாமல் அவ்விரண்டும் விஷ்கம்பங்கள் எனப்படுகின்றன.[2] இவ்விதமான மூடகர்ப்பங்களில் சிசுக்கள் சஸ்திரங்களால் அறுத்தே வெளிப்படுத்த வேண்டியவையாம். 29, 29½.

1. மூடகர்ப்பம்—கர்ப்பாசயத்தில் சிசுவானது இறந்துபோய்விட்டாலும், அல்லது உயிருடன் இருந்து இயற்கைக்கு மாறான நிலைமையில் ஒழுங்கீனமாக நின்றாலும் மூடகர்ப்பம் எனப்படுகிறது.

2. விஷ்கம்பம் — உழல்மரம்போல் குறுக்காகத் தடையுண்டுபண்ணுவதால் இப்பெயர் வந்தது.

*விஷ்கம்ப கர்ப்பங்களைச் சேதிப்பதற்கான கருவிகள்.*

விஷ்கம்பம் என்கிற நிலைமையில் செய்ய வேண்டிய சஸ்திரசிகித்ஸை யில் மண்டலாக்ரம் [1], அங் சஸ்திரம்[2] என்னும் களைப் பிரயோகிக்கவேண்டு மிகக் கூர்மையான முனை யுடைய விருத்திபத்திரம்[3] என்கிற சஸ் ரத்தை யோனியில் பிரயோகிக்கக்கூடா 30½.

*மூடகர்ப்பத்தில் சிசுவின் அவயவங்களைச் சேதித்துவெளிப்படுத்தும் முறைகள்.*

முதலில் நிபுணனை வைத்தியன் சிரஸ்வி கபாலங்களைப்பிளந்து,வழி தடையுண்டுபண்ணாமல் தப்படுத்தவேண்டும். ; பிற அக்குள், மார்பு, தவடை, முகவாய்க்கட்டை இவ்வவயவங்களில் ஏதேனும் ஒன்றைக் கெட்டியாக கர்ப்பசங்குவினால்[4] பற்றிக்கொண்டு இழுக்கவேண்டும். சிரஸ்வின் கபாலம் உடைக்கப்படாவிட்டால், கண்களின் மூலைகளிலும் கன்னங்களிலும் பற்றியிழுக்கலாம். தோள்கள் குறுக்காக மாட்டிக்கொண்டிருந்தால் கையை அறுத்து கர்ப்பத்தை வெளிப்படுத்தவேண்டும் ; வாதத்தினால் சிசுவின் வயிறு பொருமிப் பெருத்திருந்தால் அதன் வயிற்றைக் கீறி, குடல்களை வெளியில் இழுத்து, அதன்பிறகாவது சிசுவின் மற்ற அவயவங்களையும் வெளிப்படுத்தவேண்டும். சிசுவின் இடுப்புத் தடையுண்டுபண்ணால், அவ்விடத்திலுள்ள எலும்புகளை அவ்வாறே வெட்டியெடுத்துவிடவேண்டும். வாயுவின் கதிக்குத் தக்கபடி கர்ப்பத்தினுடைய எந்தெந்த அவயவம் கர்ப்பாசயத்தில் தடையாக நிற்கின்றதோ அந்தந்த அவயவத்தையும் துண்டுதுண்டாக வெட்டி முற்றிலும் வெளிப்படுத்தி வெகு ஜாக்கிரதையாயிருந்து ஸ்த்ரீயை இரக்ஷிக்கவேண்டும். 31—35.

1. மண்டலாக்ரம்—?11-வது பக்கம் பார்க்க.

2. அங்குலிசஸ்திரம்—212-வது பக்கம் பார்க்க.

3. விருத்திபத்திரம்—211-வது பக்கம் பார்க்க.

4. கர்ப்பசங்கு—1?6-வது பக்கம் பார்க்க.



*பிரஸவகாலத்தில் கர்ப்பம் பலவிதமாகத் திரும்புதல்.*

ஒழுங்கீனமான வாயுவானது, பிரஸவகாலத்தில் கர்ப்பத்தை முறைகேடாய் அநேகவிதமாகத் திரும்புமாறு செய்கின்றது. ஆகையால் அதில் விசேஷமான அறிவும் அநுபவமுமுள்ள வைத்தியன், அந்தந்த நிலைமைக்கு ஏற்றவாறு சிசுவை வெளிப்படுத்துவதற்கான சிகித்ஸையைச் செய்யவேண்டும். 36.

*உயிருடனுள்ள சிசுவை சேதிக்கக்கூடாது; உயிரிழந்ததைஉடனே வெளிப்படுத்தல்.*

சிசு உயிருடன் இருந்தால், அதைச் சேதநம்செய்து வெளிப்படுத்த முயலக்கூடாது ; அப்படிச் செய்தால், அது தன்னோடுகூட தாயாரையும் கொன்றுவிடும். ஆனால் உயிரிழந்த சிசுவை ஒரு க்ஷணங்கூட கருப்பையிலிருந்து வெளிப்படுத்தாமல் உபேக்ஷிக்கக்கூடாது. 37.

*பிரஸவகாலத்தில் அபாயகரமான குறிகள்.*

யோனிமார்க்கம் மறைக்கப்படுதல், யோனி நெகிழ்ந்து வெளிவருதல், மக்கல்லம் என்னும் வியாதி, [1] சுவாஸரோகம் இவற்றால் பீடிக்கப்படுபவளும், தூர்க்கந்தமாக ஏப்பம் விடுபவளும், தேஹம் மிகவும் குளிர்ந்துபோயிருப்பவளும், மூடகர்ப்பமுடையவளுமான ஸ்த்ரீக்கு பிரஸவம் பிராணாபாயமுண்டுபண்ணுவதாயிருக்கும். 38.

*தடையுண்ட அபரா முதலியதை வெளிப்படுத்தும் முறை முதலியது.*

அப்பால், அபராவானது வெளிவராவிட்டால், அதை முற்கூறிய முறைப்படி வைத்தியன் வெளிப்படுத்துவானாகை இவ்வாறு கருப்பையில் ஒழுங்கீனமாய் சல்யம்போலிருந்த அபரா முதலியது[2] வெளிப்படுத்தப்பட்ட பிறகு, உஷ்ணஜலத்தை முகம் முதலியவற்றில் தெளிக்கவேண்டும். பிறகு தேஹத்தில் தைலம் தேய்த்து, யோனியில் ஸ்நேஹ பிசு என்கிற தைலத்தில் நனைத்த துண்டுச்சீலையை வைக்கவேண்டும் ; அதனால் மர்மஸ்தாநம் மிருதுவாக ஆவதோடு, பிரஸவத்தினால் ஏற்பட்டிருந்த வலியும் நிவ்ருத்தியாகும். 39, 40.

*மூடகர்ப்பத்திற் செய்யவேண்டிய ஔஷதப் பிரயோகங்கள்.*

குராஸானி ஓமம், அதிவிடயம், சிற்றரத்தை, பெருங்காயம், ஏலம், பஞ்சகோலம்[1] இவற்றைச் சூர்ணம் செய்துஸ்நேஹத்துடன் உட்கொள்ளக்கொடுக்கலாம் ; அச்சரக்குகளையே கல்கமாகச் செய்தும் உபயோகிக்கலாம்; அவற்றை க்வாதமாகக் காய்ச்சியும் பருகச் செய்யலாம். கடுகரோஹிணீ, அதிவிடயம், வட்டத்திருப்பி, தேக்கமரப்பட்டை, பெருங்காயம், மூங்கிலுப்பு இவற்றையும் முன்போலவே சூர்ணமாகவாவது, கல்கமாகவாவது, க்வாதமாகவாவது பக்குவம் செய்து, கருப்பையிலிருந்து தோஷங்கள் வெளிப்படுவதற்காகவும், வேதனைகள் நிவ்ருத்தியாவதற்காகவும் உபயோகிக்கலாம். இவ்விதம் மூன்று நாட்கள் செய்து, பிறகு ஏழு நாட்கள் வரையில் கஷாயாதிகளைத் தவிர்த்து ஸ்நேஹத்தை மாத்திரம் உட்கொள்ளச்செய்யலாம் ; மாலை நேரத்தில் ஏதேனும் அரிஷ்டத்தையாவது, அல்லது நன்றாகப் பக்குவம்செய்துள்ள ஆஸவத்தையாவது பானம் செய்யலாம். காட்டுவாகைப்பூவின் க்வாதத்தில் நனைத்த பிசுவென்னும் சீலைகளை மர்மஸ்தாநத்தில் வைக்கலாம். அபரா வெளிவருவதற்குத் தடையுறுவதைத் தவிர்த்து வேறு எந்த உபத்திரவங்கள்[2] உண்டானபோதிலும், அவற்றிற்கும் அதனதன் நிலைமைகளுக்குத் தகுந்தவாறு சிகித்ஸை செய்யவேண்டும். 41—44.

1. மக்கல்லம்—242-ம் பக்கம் மூலமும் டிப்பணியும் பார்க்க.

2. தேஹத்திற்குக் கெடுதி செய்யுமாறு உடலுக்குள் தங்கியிருக்கும் எவ்வஸ்துவும் சல்யம் என்று விவஹரிக்கப்படுமாகையால், இங்கு ஒழுங்கீனமான நிலைமையிலுள்ள அபராவும் சிசுவுங்கூட சல்யங்களாகவே கருதப்படுகின்றன.

1. பஞ்சகோலம்—126-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

2. உபத்திரவம்—8-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

*மூடகர்ப்பத்தில் ஹிதமான உணவு முதலியவை.*

பிறகு வாதஹரமான வஸ்துக்களால்[1] பக்குவம் செய்யப்பட்ட பாலை, போஜனத்தில் பத்து நாட்கள் உபயோகித்துவர வேண்டும்; அதற்குப் பிறகு மாம்ஸரஸம் பத்து நாட்கள் உபயோகிக்கத் தகுந்தது. அப்பால் அந்த ஸ்த்ரீ இலகுவாகவும், ஹிதமாகவும் உள்ள ஆஹாரங்களைச் சொற்பமாக உபயோகித்துக்கொண்டுவந்து, ஸ்வேத சிகித்ஸையைச் செய்துகொண்டு, அப்யஞ்ஜநமும் பண்ணியவளாய், அடியிற் கூறப்படும் பலா தைலம் முதலிய ஸ்நேஹங்களை உட்கொள்ளலாம். நான்கு மாஸங்களுக்குமேல் அந்த ஸ்த்ரீ கிரமமாக அன்ன - பான - விஹாராதி ஸுகங்களைத் தடையின்றி அநுபவிக்கலாம். 45,46.

*பலா தைலம் பக்குவம் செய்யு முறை.*

சிற்றுமுட்டிவேரின் கஷாயம் ஆறு பங்கு; பால் ஆறு பங்கு; யவதானியம், இலந்தை, கொள் இவற்றினுடையவும், தசமூலங்களுடையவும்[2] கஷாயம் ஒரு பாகம்; தைலம் பதினான்கில் ஒரு பங்கு; மேதா, மஹாமேதா, தேவதாரு, மஞ்ஜிஷ்டை, காகோலீ, க்ஷீரகாகோலீ, செஞ்சந்தனம், நன்னாரி, கோஷ்டம், தகரவேர், ஜீவகம், ருஷபகம், இந்துப்பு, கல்மரப்பட்டை, கருஞ்சந்தனம், வசம்பு, அகில், சாறடை, அமுக்கிறுங்கிழங்கு, தண்ணீர்விட்டாங்கிழங்கு, வெளுத்த இரளி, அதிமதுரம், த்ரிபலை, போளம், சதகுப்பி, நரிப்பயறு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி இவற்றை வெகு மிருதுவாக இடித்து கல்கமாகச் செய்து, முற்கூறிய தைலத்திற் சேர்த்து, சிறுகச் சிறுக எரித்தல்போட்டு, தைலத்தைப் பக்குவஞ்செய்யவும்.[1] இது எல்லாவிதமான வாதரோகங்களையும் போக்கும்; ஸூதிகைகளுக்கும், பாலர்களுக்கும் பிரசஸ்தமானது; மர்மரோகங்களிலும், அஸ்தி ஸம்பந்தமான கோளாறுகளிலும், க்ஷதகாஸத்துடன்கூடிய க்ஷயரோகத்திலும் இது ஹிதமானது; மேலும் ஜ்வரம், குன்மம், கிரஹாவேசம்[2], உன்மாதமென்னும்

1. வாதஹரமான வஸ்துக்கள்—123-வது பக்கம் பார்க்க.

2. தசமூலம்—64-வது பக்கத்திற் கூறப்பட்டுள்ள இலகு பஞ்சமூலங்களுடையவும் மஹா பஞ்சமூலங்களுடையவும் சேர்க்கை.

1. தைலம் 1-பங்கானால், சிற்றுமுட்டியின் கஷாயம் அதைப்போல் 6-பங்கு இருக்கவேண்டும்; அவ்விதமே பாலும் 6-பங்கு; யவதானியம் முதலியவற்றின் கஷாயம் 1-பங்கு. தைலத்தைத் தவிர மற்றவை 13-பங்கும், தைலம் 1-பங்கும் (அதாவது 14-வது பங்கும்) ஆகிறது இவ்விஷயத்தையே இன்னும் நன்கு விவரித்துக் கூறுகிறோம்:—தைலம் 16 பலம் காய்ச்சவேண்டுமானால், 24-பலம் சிற்றுமுட்டி வேரை 384-பலம் ஜலத்தில் சேர்த்துக் கஷாயம் காய்ச்சவேண்டும், அக்கஷாயத்தை ¼ பங்காகச் சுண்டக் காய்ச்சியெடுத்தால், 96-பலம் கஷாயம் தேறுகிறது. இவ்விதமே பாலும் 96-பலம் சேர்க்கவேண்டும். பிறகு யவதானியம் முதலியதை வகைக்கு 4-பலமும், அதில் 64-பலம் ஜலமும் சேர்த்து, அதை ¼ பங்காக வற்றும்படிக் காய்ச்சி யெடுக்க, அக்கஷாயம் 16-பலம் ஆகிறது. மேதா, மஹாமேதா முதலிய கல்கத்திரவ்யங்களில் ஒவ்வொன்றும் ⅛ பலம் தேவையானது; இவற்றைச் சேர்த்து பலா தைலம் பக்குவம் செய்யப்படுகிறது. இதில் யவம், இலந்தங்கொட்டை, கொள் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலமும், தசமூலத்தில் ஒவ்வொரு சரக்கும் ஒவ்வொரு பலமும் ஆக மொத்தம் 13-பலம் சேர்க்கவேண்டியது முறை. "கல்பபேத் ஸத்ருசாங்பாகாந் ப்ரமாணம் யத்ர நோதிதம்" (எவ்விடத்தில் வஸ்துக்களுக்குக் குறிப்பிட்டு அளவுகள் சொல்லப்படவில்லையோ, அங்கு ஒவ்வொரு பதார்த்தமும் ஒரே அளவாகப் பிரயோகிக்கப்படும்) என்கிற பிரமாணத்தைக்கொண்டு, தசமூலம் இவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லையாதையால், மற்றச் சரக்குகள் எவ்வளவு இந்த யோகத்தில் சேர்க்கப்படுகிறதோ அதே அளவில் தசமூலத்தில் அடங்கிய ஒவ்வொரு வஸ்துவும் பிரயோகிக்கப்படவேண்டும் என்று அறிக.

2. கிரஹாவேசம்—பேய்ப்பிடித்தல் என்று வழங்கப்படும் விகாரங்கள் பெரும்பாலும் மனதைப்பற்றிய வியாதிகளாகவே இருக்குமாதலால், அவற்றில் வாதஸம்பந்தமான சேஷ்டைகள் விசேஷமாய் உண்டாவது இயல்பு; ஆகவே வாதஹரமான பலாதைலம் கிரஹாவேசத்திற்குத் தகுந்தது என்று கூறப்பட்டது.



பித்துப்பிடித்தல், மூத்திராகாதம் என்கிற மூத்திரம் தடையுறும் வியாதி, அந்த்ரவிருத்தியென்னும் குடலிறக்கம் இவற்றையும் நிவ்ருத்தி செய்யவல்லது; யோனிரோகங்களையும், க்ஷயரோகங்களையும் தீர்க்கவல்லது; இது தன்வந்தரியினால் கொண்டாடப்பட்டதாகும். 47—52.

*பிரஸவ ஸமயத்தில் இறந்தவளுடைய வயிற்றிலிருந்து சிசுவை யெடுத்தல்.*

பிரஸவ ஸமயத்தில், கர்ப்பிணி திடீரென்று இறந்துவிட்டு, அப்பொழுது வஸ்தி யென்னும் மூத்திரப்பைக்கு நேராக வயிறு மாத்திரம் துடிக்குமானால், அப்பொழுது உடனே தாமதம்செய்யாமல், அவ்விடத்தை சஸ்திரத்தினால் கீண்டு சிசுவை வெளிப்படுத்தி விடவேண்டும். 53.

*கர்ப்பஸ்ராவத்தில் ஏழுமாஸங்களுக்கும் ஏழு வகையான ஔஷதங்கள்.*

முதல் மாஸம் முதற்கொண்டு ஏழாவது மாஸம் வரையில் எப்பொழுதாவது கர்ப்பஸ்ராவம் எனப்படும் கர்ப்பம் கரைந்து வெளிப்படுதல் நேரிடுமானால், அடியில் கூறப்படும் ஔஷத யோகங்களை முறையே ஏழு மாஸங்களிலும் பிரயோகிக்கவேண்டும்:—(1) அதிமதுரம், வானுவை, க்ஷீரகாகோலீ, தேவதாரு இவற்றின் கூட்டு முதல்யோகமாம். (2) கல்லுருவி, கறுப்பு எள், மஞ்ஜிஷ்டை, தண்ணீர்விட்டாங்கிழங்கு இவற்றின் கூட்டு இரண்டாவது யோகம். (3) சிந்திற்கொடி, க்ஷீரகாகோலீ, ஞாழல், கருநெய்தல் இவற்றின் கூட்டு மூன்றாவது யோகமாகும். (4) அறுகம்புல், நன்னாரி, சிற்றரத்தை, ஓரிலைத் தாமரை, அதிமதுரம் இவற்றின் கூட்டு நான்காவது யோகமாகும். (5) கண்டங்கத்திரி, வெள்ளைக் கண்டங்கத்திரி, குமிழன், பாலுள்ள மரங்களின் மொட்டுகளுடைய பட்டை, நெய் இது ஐந்தாவது யோகமாம். (6) சிறுமல்லி, சிற்றுமுட்டி, முருங்கை, நெருஞ்சி, சிறுகுமிழன் இவை ஆறாவது யோகமாகும். (7) சவுட்டுக்கோரைக் கிழங்கு, தாமரைக்கிழங்கு, திராக்ஷை, சிறு கோரைக்கிழங்கு, அதிமதுரம், சர்க்கரை இவை ஏழாவது யோகமாகும். இவற்றிற்குப் பாலை அநுபானமாய் உட்கொள்ளவேண்டும். 54—57½.

*எட்டு-ஒன்பது-பத்து இம்மாஸங்களில் உபயோகிக்கக்கூடிய சரக்குகள்.*

விளா, பில்வம், கண்டங்கத்திரி, பேய்ப்புடல், கரும்பு, வெள்ளைக் கண்டங்கத்திரி இவற்றின் வேர்களைச் சேர்த்துக் காய்ச்சிய பாலை எட்டாவது மாஸத்தில் உட்கொள்ளச் செய்யலாம். நன்னாரி, அறுகம்புல், க்ஷீரகாகோலீ, அதிமதுரம் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய பாலை ஒன்பதாவது மாஸத்திற் பருகக் கொடுக்கலாம். க்ஷீரகாகோலியையாவது, அதிமதுரம், சுக்கு, தேவதாரு இவற்றையாவது சேர்த்துக் காய்ச்சிய பாலைப் பத்தாவது மாஸத்தில் உட்கொள்ளச் செய்யலாம். 58-60.

*கர்ப்பமல்லாததை கர்ப்பமென்றும், அது பூதத்தினால் அபஹரிக்கப்படுகிறதென்றும் ப்ரமித்தல்.*

கோளாறடைந்த வாதத்தினால், ஸ்த்ரீக்கு ஆர்த்தவம் என்னும் மாதவிடாயில் வரும் இரத்தமானது வெளிப்படாமல் தேஹத்திலேயே தங்கியிருந்து விடுமானால், அதை அறியாதவர்கள் கர்ப்பம் எனக் கூறுவர். ஏனெனில் அப்பொழுது கர்ப்பமுண்டாயிருப்பதற்கான குறிகள் ஏற்பட்டிருக்கும். காரம், உஷ்ணவீர்யம், தீக்ஷ்ணம் இக்குணங்களையுடைய வஸ்துக்களை யுபயோகிப்பதால் மறுபடியும் ஸாதாரண ஆர்த்தவஸம்பந்தமான இரத்தமே வெளிப்படுமாயின, மூடர்கள் கர்ப்பத்தை பூதங்கள் அபஹரித்துவிட்டதாகக் கூறுவர். எவ்வுருவம் பூதங்களால அபஹரிக்கப்படுவதாகக் கூறுகின்றனரோ, அவ்வித உருவமே காணப்படாமலிருக்க, அதை பூதங்கள் அபஹரிப்பதெனபதற்கு ஆதாரமேயில்லை. அல்லாமலும், வ்யவஸ்தையற்றவையான அவ்வித பூதங்கள் ஓஜஸ எனனும உத்தம தாதுவைப் பக்ஷிக்குந்தன்மை யுள்ளவையாதலால, அவை சிசுவை அபஹரித்து மாதாவைமட்டும உபேக்ஷித்து விட்டுவிடவேண்டிய அவசியமில்லையே[1]. 61,62.

1. சிசுவுக்கு 9-வது மாஸத்திற்கு முன்பு ஓஜஸ என்னும் தாது உற்பத்தியாவதில்லை யாதலால, ஓஜஸ் அற்ற சிசுவை அப்பூதங்கள் அபஹரிக்கவேண்டிய அவசிய மில்லையெனப்படுகிறது.

## மூன்றாவது அத்தியாயம்.

அப்பால் அங்க-விபாகசாரீரம்[1] என்கிற அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது:—

*ஷடங்கங்களும் பிரத்யங்கங்களும்.*

சரீரமானது சிரஸ், உடல், இரண்டு கைகள், இரண்டு கால்கள் என்று ஷடங்கமாய ஆறு அங்கங்களாகப் பிரிக்கப்படும். அவ்விதம் பிரிக்கப்பட்ட அங்கத்திற்கு நேத்திரம், ஹ்ருதயம் முதலியவை பிரத்யங்கங்களாக ஏற்பட்டிருக்கின்றன. 1.

*பஞ்சபூதங்களும் அவற்றின் குணங்களும்.*

ஆகாயம், வாயு, அக்னி, ஜலம், பூமி எனனும் ஐவகைவந்த பூதங்களுக்கும் முறையே சப்தம், பரிசம், ரூபம், இரஸம், கந்தம் இவை இயற்கைக் குணங்களாகும்.[2] இவற்றுள் முதலில் கூறப்பட்ட பூதத்திலிருந்து ஐந்தாவது பூதம் வரையிலும் ஒவ்வொன்றிலும் கிரமமாக ஒவ்வொரு குணம் அதிகமாகச் சேர்ந்திருக்கும்.[3] 2.

*தேஹமும் பஞ்சபூதமயமானது.*

(1) அந்த பஞ்சபூதங்களுள் ஆகாயத்திலிருந்து இந்தத் தேஹத்திலுள்ள எல்லா த்வாரங்களும், ப்ரசன்னமும், சப்தத்தைக் கிரஹிக்கும் சக்தியும், குணமயமாகத் தோன்றும் பாகங்களும் உண்டாகின்றன. (2) வாயுவிலிருந்து பரிச உணர்ச்சியும், சர்மமும், ச்வாஸ வேலையும் உற்பத்தியாகின்றன. (3) அக்னியிலிருந்து நேத்திரமும், ரூபக்கிரஹண சக்தியும், பசனம் எனனும் ஜீரணம் அல்லது எரித்துப் பக்குவம் செய்யும் வேலையும் ஏற்படுகின்றன. (4) ஜலத்திலிருந்து நாக்கும், சுவையறியும் சக்தியும், திரவப்பொருட்களும் உண்டாகின்றன. (5) ப்ருதிவியிலிருந்து நாசியும், வாஸனையறியும் உணர்ச்சியும், எலும்பும் உற்பத்தியாகின்றன. 3, 3½.

*தேஹத்தில் மாதா - பிதாக்களுடையவும் ஜீவாத்மாவி னுடையவும் அம்சங்கள்.*

இந்தத் தேஹத்திலுள்ள இரத்தம், மாம்ஸம், மஜ்ஜை, குதம் முதலிய மிருதுவான அம்சமெல்லாம் மாதாவின் தேஹாம்சங்களிலிருந்து உண்டானவையாம். சுக்ரதாது, தமனி எனனும் இரத்தக்குழாய் முதலியது எலும்பு, உரோமம் முதலிய கடினமான பாகங்கள் யாவும் பிதாவின அம்சங்களாம். மனது, இந்திரியங்கள், பற்பல வகையான ஜீவராசிகளின் வயிற்றில் பிறப்பது எனனும் இவை ஜீவாத்மாவின் ஸம்பந்தத்தினால் ஸம்பவிப்பவையாம். 4, 5.

*ஸாத்மியத்தினும் இரஸத்தினும் ஏற்படும் அம்சங்கள்.*

ஆயுள், ஆரோக்கியம், சுறுசுறுப்புடன் காரியங்களில் பிரவ்ருத்தி, காந்தி, தேஹபலம் இவை ஸாத்மியத்தால்[1] ஏற்படுபவை.[2] தேஹத்திலுள்ள எல்லா அவயவங்களின் உற்பத்தியும், ஜீவிதகாலம் நடைபெறுதலும், சரீரத்தின் அபிவிருத்தியும், சஞ்சலத்தன்மையின்றி ஒழுங்கான நிலைமையில் இருத்தலும் ஆஹாரரஸத்தினால் ஏற்படுபவையாம்.[1] 6.

*தேஹத்தில் ஸத்வ- இரஜஸ்- தம ஸஸ்ஸுகளா ல் உண்டாகும் அம்சங்கள்.*

(1) தேஹம்-வாக்-மனது இவற்றில் சுத்தமாயிருத்தல், ஆஸ்திகனாயிருத்தல்,[2] சிறந்த தர்மங்களில் விருப்பம், புத்தி இவை ஸத்வ குணத்தின் அம்சங்களாம். (2) மிதமிஞ்சி எப்பொழுதும் பேசுதல், கர்வம், கோபம், டம்பம், த்வேஷம் இவை இரஜோ குணத்தினால் உண்டான அம்சங்களாகும். (3) பயம், அஞ்ஞானம், நித்திரை, சோம்பல், துயரம் இவை தமோகுணத்தின் அம்சங்களாம். 7, 7½.

*ஏழுவித சர்மங்கள்.*

தேஹம் மேற்கூறியவாறு பஞ்சபூதமயமானது. அத்தேஹத்தில் தாதுக்களுடைய சூட்டினால் பக்குவம் செய்யப்படுகிற இரத்தத்திலிருந்து ஏழுவகையான சர்மங்கள்,[3] பாலிலிருந்து ஆடையைப்போல்[4] உண்டாகின்றன. 8½.

*ஏழுவித கலைகள்.*

தாதுக்களுடைய ஆசயங்கள் என்னும் பைபோன்ற பாகங்களின் உட்புறத்தில் இயற்கையிற் சேர்ந்துள்ள ஒருவகையான கசிவு நீரானது அந்தந்த ஸ்தானத்து வெப்பத்தினால் பக்குவம் செய்யப்பட்டும், ஒருவகையான கபமென்ன, நரம்புகளைப்போன்ற வஸ்துவென்ன, சவ்வுப்போர்வையென்ன இவற்றால் மறைக்கப்பட்டுமுள்ளபாகம் கலையென்று வழங்கப்படும்; அது மரங்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள ஸாரமென்னும் வைரத்திற்கு ஒப்பானது. அந்த கலைகள் ஏழாம்.[1] 9½.

*ஏழுவித ஆசயங்கள்.*

ஏழுவிதமான ஆசயங்கள் உண்டு; அவையாவன:—இரத்தாசயம், கபாசயம், ஆமாசயம், பித்தாசயம், பக்வாசயம், வாதாசயம், மூத்ராசயம் என்பனவாம.[2] மேலும் ஸ்திரீகளுக்கு கர்ப்பாசயம என்கிற எட்டாவது ஆசயமும் ஒன்று உண்டு; அது பித்தாசய பக்வாசயங்களுக்கு இடையில் அமைந்துளது. 10, 11.

*கோஷ்டாங்கங்கள்.*

முற்கூறிய ஏழு ஆசயங்களிலும் கோஷ்டாங்கங்கள் எனப்படும் அடியிற் கூறப்படும் அவயவங்கள் அடங்கியிருக்கின்றன; அவையாவன:—ஹ்ருதயம், க்லோமா, புப்புஸம்,

---

1. சரீரம் ஆறு அங்கங்களுடையதென்றும், அங்கம் பிரத்யங்கங்களுடையதென்றும், இரஸ ரக்தாதி தாதுக்கள் அடங்கியதென்றும், தத்துவங்களைக் குறிப்பிட்டு விவரிக்கும் அத்தியாயம் "அங்கவிபாக சாரீரம்" எனப்படுகிறது.

2. சரீரம் பஞ்சபூதங்களினால் ஆக்கப்பட்டதென்று குறிப்பிடப்பட்டபடியால், பஞ்சபூதங்களுடைய விவரமும் சிறிது விளக்கப்படுகிறது.

3. மேன்மேலும் ஒவ்வொரு பூதத்திலும் ஒவ்வொரு குணம் அதிகமாயிருக்கின்றன: ஆகாயத்திற்கு சப்தமொன்றே குணமாம்; வாயுவுக்கு சப்தமும் பரிசமும் குணமாம்; அக்னிக்கு சப்தம்-பரிசம்-ரூபம் மூன்று குணங்களாம்; ஜலத்திற்கு சப்த-பரிச-ரூப-ரஸங்களாகிய நான்கு குணங்கள்; பூமிக்கு ஐந்து குணங்களும் உண்டு.

1. ஸாத்மியம்-வழக்கத்தில் தேஹத்திற்கு அநுகூலமாகும் பதார்த்தமும் காரியமும் ஸாத்மியம் எனப்படுகிறது. [ஸாத்மியம் என்பதால் வியாதிஸாத்மியம், தேச ஸாத்மியம், தேஹஸாத்மியம் என்கிற மூன்றும் கிரஹிக்கப்படுமாயினும், பிறந்தவுடனே தேஹத்தின் இயற்கையிலமைந்த நிரூபிக்கப்படுவது அவசியமாதலால், இயற்கைக்கு விரோதமான வியாதிஸாத்மியத்தைத் தவிர்த்து மற்ற இரண்டு ஸாத்மியங்களுமட்டும் இங்கு குறிக்கப்பட்டனவென்றறிக.]

2. மேற்கூறியவை திருஷ்டாந்தத்திற்காகவாதலால், ஸாத்மியஜம் என்பதினால் இந்திரியங்கள் தெளிவுடனிருத்தலும், ஸ்வரம், வர்ணம், வாயம், மனக்களிப்பு முதலியவையும் கிரஹிக்கப்படுகின்றனவென்று அறிக.

1. ஆஹாரமில்லாவிட்டால் பஞ்சபூதாம்சமான தேஹம அழிந்துவிடுமாகையால், ஆஹார ரஸத்தினாலும தேஹம உற்பத்தி விருத்திகளைப் பெறுகிறதென்று கூறப்படுகிறது.

2. ஆஸ்திக்யம-கடவுளும் லோகாந்தரமும் உணடென்கிற எண்ணம.

3. ஏழுசர்மங்கள்—(1) முதல்சர்மம் 1/18 நெல் அளவு உடையது; அதற்கு அவபாஸினீ எனப் பெயர். (2) லோஹிதா என்னும் இரண்டாவது சர்மம் நெல்லில் 1/16 பங்கு பருமனுள்ளது. (3) ச்வேதாவென்கிற மூன்றாவது சர்மம 1/12 நெல்லளவு உள்ளது. (4) தாம்ராவென்கிற நான்காவது சர்மம $\frac{1}{8}$ நெல்லளவு உள்ளது. (5) வேதினீயென்னும் ஐந்தாவது சர்மம் $\frac{1}{5}$ நெல்லளவுள்ளது. (6) ரோஹிணீயென்கிற ஆறாவது சர்மம் 1 நெல்லளவுடையது. (7) மாம்ஸதராவென்கிற ஏழாவது சர்மமானது இரண்டு நெல்லளவுள்ளது.

4. காய்ச்சப்படுகிற பாலில் ஆடை படிவதுபோலவே, தேஹோற்பத்தி ஸமயத்தில பக்குவம செய்யப்படுகிற இரத்தத்திலிருந்து சர்மங்கள் உண்டாகின்றன எனக் கருத்து.

1. மாம்ஸதரா, ரக்ததரா, மேதோதரா, சிலேஷ்மதரா, புரீஷதரா, பித்ததரா, சுக்ரதரா என்று கலைகள் ஏழாம்.

2. இரத்தத்திற்கு ஆதாரமானது இரத்தாசயம் எனப்படுகிறது; இவ்விதமே கபாசயம் முதலியவற்றிற்கும் அறிக. இரத்தாசயமென்பது ஹ்ருதயம்; கபாசயம் என்பது புப்புஸங்கள் என்னும் நுரையீரல்கள்; ஆமாசயம் என்பது இரைப்பை; பித்தாசயம் என்பது பித்தப்பை; பக்வாசயம் என்பது இரைப்பைக்குக் கீழுள்ள சிறுகுடல்; வாதாசயம் என்பது குதத்திற்கு மேற்பட்டுள்ள அபானஸ்த்தானம்; மூத்ராசயம் என்பது வஸ்தி யெனனும் மூத்திரப்பை.

யக்ருத், ப்லீஹம், உந்துகம், வ்ருக்கங்கள், நாபி, சிசு, குடல், வஸ்திஎன்பவைகளாம்.[1] 12.

*உயிருக்கு ஆதாரமான பத்து ஸ்தாநங்கள்.*

சிரஸ், நாக்கின் பந்தனபாகம், தொண்டை, இரத்தம், ஹ்ருதயம், நாபி, வஸ்தியென்னும் மூத்திராவயவம், சுக்ரம், ஓஜஸ் என்னும் தாதுவிசேஷம், குதம் இந்த பத்து ஸ்தாநங்களும் ஜீவனுக்கு ஆதாரமான அவயவங்களாம். 13.

ஜாலங்கள்[2] பதினாறு; கண்டரங்கள்[3] பதினாறு; கூர்ச்சங்கள்[4] ஆறு; ஸீவநீகள்[5] ஏழு; இந்த ஸீவநிகளில் ஆண்குறியில் ஒன்றும்,

*ஜால-கண்டர-கூர்ச்ச-ஸீவநீ-அஸ்த்தி-அஸ்த்தி ஸங்காதங்களின் ஸங்க்யை.*

நாக்கில் ஒன்றும், சிரஸ்ஸில் ஐந்தும் அமைந்திருக்கின்றன; இந்த ஸ்தாநங்களில் சஸ்திரங்களைப் பிரயோகிக்கக் கூடாது. மாம்ஸரஜ்ஜுக்கள்[6] நான்கு; அஸ்த்தி ஸங்காதங்கள்[7] பதினான்கு; ஸீமந்தங்கள்[8] பதினெட்டு; அஸ்த்திகளும்பற்களும் நகங்களும் சேர்ந்து மொத்தத்தில் மூன்னூற்று அறுபது எண்ணிக்கையுள்ளன.[9] 14, 15.

---

1. கோஷ்டாங்கங்கள்—ஏதாவது இரத்தம் முதலியவை தங்கியிருப்பதற்கு ஆதாரமாய் உட்புறம் குழியுடன்கூடிய அவயவங்கள் கோஷ்டங்கள் எனப்படும்; அவையே ஹ்ருதயம் முதலியவையாம். ஹ்ருதயம் அல்லது இருதயம்; க்லோமா—கணையம்; புப்புஸம்-நுரையீரல்; யக்ருத்—கல்லீரல்; ப்லீஹம்—மண்ணீரல்; உந்துகம்—குடலின் ஒரு பாகமான மலாசயம் அல்லது பெருங்குடல் எனப்படுகின்றது; வ்ருக்கங்கள்—மூத்திர குண்டிக்காய்கள்; நாபியெனபதால் நாபி நாடியென்னும் தொப்புட்கொடியும், சிசு என்பதால் கர்ப்பாசயத்தில் அடங்கிய சிசுவும் குறிக்கப்படுவதாய் அறிக; குடல் என்பதால் சிறுகுடல்பெருங்குடல் எல்லாம் கிரஹிக்கப்படுகின்றன; வஸ்தி—மூத்திரப்பை.

2. மாம்ஸஜாலங்கள், ஸிராஜாலங்கள், ஸ்நாயுஜாலங்கள், அஸ்த்தி ஜாலங்கள் என்கிற இந்த நான்கு வகையான ஜாலங்களுள் ஒவ்வொன்றும் நான்கு ஆகையால் பதினாறு ஜாலங்கள் ஆகும். அந்த ஜாலங்கள் மணிக்கட்டிலும், குதிகாலிலும் சேர்ந்து ஒன்றோடொன்று பின்னப்பட்டு, ஒன்றோடொன்று சிக்கிக் கொண்டிருக்கின்றன. [ஜாலம் என்றால் வலையென்ப் பொருள்; வலையைப்போல் மணிக்கட்டு முதலியவிடங்களில் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பதால் இப்பெயர் வந்தது.]

3. கண்டரங்கள்—மாம்ஸபேசிகளை அஸ்த்திகளோடு பிணைப்பதற்கு உபயோகமான டந்தநவஸ்துக்கள். அவற்றுள் பாதங்களில் நான்கு; கைகளிலும், தொண்டையிலும், ப்ருஷ்ட பாகத்திலும் தனித்தனியே நான்கு; ஆகப் பதினாறு. கைகால்களிலுள்ள இக்கண்டரங்களின் முனைகளே க்ரமக்ரமமாக நகங்களாக மாறி முளைக்கின்றன என்று ஸுச்ருதர் கூறுகிறார்.

4. கூர்ச்சங்கள்—ஒவ்வொரு கையிலும் ஒவ்வொன்று, ஒவ்வொரு காலிலும் ஒவ்வொன்று, கழுத்தில் ஒன்று, ஆண்குறியில் ஒன்று ஆக ஆறு கூர்ச்சங்கள். [மாம்ஸபேசிகள் அநேகம் ஒரு கத்தையைப்போல்கூடி கைகளின் முனையிலும், பாதங்களின் முனையிலும் குச்சுகளைப்போல் அமைந்து இருக்கும்; கழுத்திலும், ஆண்குறியிலுங்கூட அவ்விதமேயிருக்கும்; ஆகவே அவ்வித குச்சுகள் இங்கு கூர்ச்சங்கள் எனப்படுகின்றன.]

5. ஸீவநீ—சிரஸ்ஸில் ஒவ்வொரு கபாலாஸ்த்தியும் ஒன்றோடொன்று சேருமிடங்களிலும், நாக்கின் அடிப்புறத்து மத்தியபாகத்திலும், ஆண்குறியின் அடிப்புறத்திலும் தைக்கப்பட்டதுபோல் காணப்படும் இரேகை.

6. மாம்ஸரஜ்ஜுக்கள்—முதுகிலும் மற்ற பாகங்களிலுமுள்ள எல்லா மாம்ஸ பேசிகளுக்கும் பலமுண்டு பண்ணுவதற்காக முள்ளந்தண்டுக்கு இருபுறமும் உட்பக்கமாகவும் வெளிப்பக்கமாகவும் அமைநதுள்ள மிகப் பெரிய கயிறுகள்போன்ற தசைநார்கள்.

7. அஸ்த்தி ஸங்காதங்கள்—ஒவ்வொரு கணுக்கால், முழங்கால், வங்க்ஷணஸந்தியென்னும் துடையிடுக்கு இவற்றிலும், ஒவ்வொரு மணிக்கட்டு, முழங்கை, தோள் இவற்றிலும், பிடறிலும், சிரஸ்ஸிலுமாகப் பதினான்கு ஸஙகாதஙகள். அநேகம் அஸ்த்திகள் ஓரிடத்திற் கூட்டமாகச் சேருவதால் ஸங்காதம் எனப் பெயர் வந்தது.

8. எங்கெங்கு அஸ்த்தி ஸங்காதங்கள் உண்டோ அங்கெல்லாம், அவை சேருமிடங்களுக்கு இடையில் சில ரேகைகள் உண்டு; அவை ஸீமநதம எனப்படும். [அஸ்த்தி ஸங்காதம் 14-ஆக இருப்பதால், ஸீமந்தங்களும் 14-என்பது ஸுச்ருதருடைய அபிப்பிராயம்.]

9. தற்காலத்திய மேனாட்டு வைத்தியர்களின் அபிப்பிராயபபடி 2ı0 எலுமபுகளே தேஹத்தில் உண்டென்று அறியப்படுகிறது. ஆகிலும் பற்கள், முருந்துகள் முதலியவற்றையும கூட்டினால் 300 அஸத்திகளாகும். ஸுச்ருதருடைய அபபிராயப்படி அஸ்த்திகள் 300, ஸுச்ருதருடைய அபிப்பிராயமே தன்வந்தரியின் அபிப்பிராயமுமாகும்.



தன்வந்தரியானவர் மூன்னூறு அஸ்த்திகளே உண்டென்று கூறுகிறார்.[1] இருநூற்றுப்பத்து

*அஸ்த்தி ஸந்திகளின் ஸங்க்யை.*

ஸந்திகள் என்னும் பூட்டுகள் உண்டென்றும் அவர் கூறுகிறார். ஆத்ரேயர் இரண்டாயிரம் ஸந்திகள் இருப்பதாகக் கூறுகிறார்.[2] 16½.

ஸ்நாயுக்கள் தொள்ளாயிரம்[1]; மாம்ஸபேசிகள் என்னும் தசைநார்கள்

*ஸ்நாயு-பேசிகளின் ஸங்க்யை.*

புருஷர்களுக்கு ஐந்நூறு[2]; ஸ்த்ரீகளுக்கு ஐந்நூறு மாம்ஸ பேசிகளோடு யோனியிலும் ஸ்தநங்களிலும் ஆக இருபது மாம்ஸபேசிகள் அதிகமாய் ஏற்பட்டிருக்கின்றன. 17½.

---

1. மூன்னூறு அஸ்த்திகள்—காலில் நான்குவிரல்களில் ஒவ்வொன்றிலும் 3 எலும்புகள். பெருவிரலில் இரண்டு எலும்புகள். கணுக்காலில் 7 எலும்புகள். ஜங்காயென்னும் காலில் இரண்டு. முழங்காலில் ஒன்று. துடையில் ஒன்று. பாதத்தில் 5. ஆக ஒருகாலில் 30 எலும்புகள். இவ்விதமே மற்றொரு காலில் 30 எலும்புகள். ஒவ்வொரு கையிலும் 30. ஆக கை, கால்களில் மொத்தம் 120 எலும்புகள் உண்டு. இடுப்பில் ச்ரோண்யஸ்த்தி ஒவ்வொன்றும் 3. ஆக அவை ஆறு. த்ரிகாஸ்த்தியென்பது 10. வம்சாஸ்த்திகள் என்னும் முள்ளந்தண்டெலும்புகள் 33. தோளில் 4-எலும்புகள். விலா எலும்புகள் 24. மார்பு எலும்பு ஒன்று. விலா எலும்பு முனைகளிலுள்ள தருணாஸ்த்திகள் என்னும் முருந்தெலும்புகள் 18. நாக்குக்குக்கீழே ஒரு எலும்பு. முகத்தில் 14 எலும்புகள். மண்டையெலும்புகள் 9. மார்பு எலும்பு 5 பிரிவுகள் உள்ளதாகக் காணப்படுவதால் அவை 5 என்றும், நாசியில் 3 தருணாஸ்த்திகள் உண்டென்றும் சில ஆயுர்வேத நூல்கள் சொல்லுகின்றன. அப்பொழுது இதுவரையில் மொத்தம் 248 எலும்புகள் ஆயின. பற்கள் 32. நகங்கள் 20. ஆகமொத்தம் ஆயுர்வேத நூல்களின் இலக்கப்படி 300 அஸ்த்திகள் விவரிக்கப்பட்டன.

2. இருநூற்றுப்பத்து ஸந்திகள் என்பது எலும்புப்பூட்டுகளை மாத்திரம் குறிப்பிடும். இரண்டாயிரம் ஸந்திகள் என்றால், ஸ்நாயு, பேசி முதலியவற்றின் ஸந்திபாகங்களும் குறிக்கப்படுகின்றனவென்று அறிக.

1. தொள்ளாயிரம் ஸ்நாயுக்கள்:—ஒவ்வொரு விரலிலும் 6 ஸ்நாயுக்கள்; ஆக அவை 30. பாதத்தின் மேற்புறத்திலும் அடிப்புறத்திலுமாக 20 கணுக்காலில் 10. ஆக இவை 30. ஜங்கையென்னும் காலில்10, முழங்காலில் 10, துடையில் 40, துடையிடுக்கில் 10. ஆக ஒருகாலில் 150. இவ்விதமே மற்றொரு காலிலும் கைகளிலும் இருக்கின்றன ஆகமொத்தம் கைகால்களில் இருப்பவை 600. இடுப்பில் 40. பீஜம், குடல்கள், ஆண்குறி. மூத்திரப்பை இவற்றில் 20 முதுகில் 80. விலாப்புறங்களில் 60, அக்குள்களில் 4. மார்பில் 18. தோளில் 8. இவ்வாறு உடலில் 230 ஸ்நாயுக்களாம். பிடரியில் ஒவ்வொரு பக்கத்திலும் 4. நேத்திரத்தில் 2. தவடையில் 2, உதட்டில் ஒவ்வொன்றிலும் 2, தோளில் 3, முகவாய்க்கட்டையில் 4. நாக்கில் 5. பற்களின் அடிப்புறத்தில் 12, தலையில் 6. இவ்விதம் ஸ்நாயுக்கள் 400.

2. ஐந்நூறு பேசிகள்—காலில் ஒவ்வொரு விரலிலும் 3 வீதம் 5 விரல்களிலும் 15; பாதத்தின் அடியிலும் மேற்புத்திலும் தனித்தனியே 10; ஆக அவை 25. கணுக்காலில் 10,காலில் 20,முழங்காலில் 5, துடையில் 20; இவ்வாறு ஒரு காலில்மட்டும் 100 பேசிகள் உண்டு இவ்விதமே மற்றொரு காலிலும், இரண்டு கைகளிலுமாக மொத்தம் 400 பேசிகள் ஆகின்றன. ஆண்குறியில் ஒருபேசி; ஸீவநீயென்னும் குறியுள்ள விடத்தில் ஒருபேசி; பீஜங்களில் இரண்டு; பிருஷ்ட பாகத்தில் 10; குதத்தில் 3; மூத்திரப்பையின்மேல் 2; குடலில் 4; நாபியில் 1, ஹ்ருதயத்தில் 1, இரைப்பையில் 6, கல்லீரல், மண்ணீரல், உந்துகம் இவற்றில் 4, முதுகில் 10,விலாப்பக்கத்திலும் மார்பிலும் 10, தோள் பக்கத்தில் 4, இவ்விதம் உடலில் 60 பேசிகள் இருக்கின்றன. கழுத்தில் 10 பேசிகள், கன்னத்தில் 8, முகவாய்க்கட்டையின் பக்கத்தில் 8, தவடையில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொன்று, நாக்கில் 1, தலையில் 1. தொண்டையில் 2, நெற்றியில் 1, உட்புறத்தவடையில் ஒவ்வொன்று, உதடுகளில் 2, காதுகளில் 2, நாசியில் 2, ஸ்த்ரீகளுக்கு ஒவ்வொரு ஸ்தநத்திலும் 5, கருப்பையில் 10.

*ஸிரைகளின் ஆரம்ப பாகம்.*

பத்து மூலஸிரைகள் ஹ்ருதயத்திலிருந்து ஆரம்பித்து, உடம்பெங்கும் பரவி, இரஸரூபமான ஓஜஸ் என்னும் தாதுப்பொருளை யெல்லாம் அங்கங்களுக்கிலும் பரப்புகின்றன. ஸிரைகளின் மற்ற பாகங்களுக்குண்டான அசைவானது இந்த மூலஸிரைகளை ஆதாரமாயுடையது. இந்த மூலஸிரைகள், இலைகளில் அநேகம் நாடிநரம்புகள் படர்ந்திருப்பதுபோல அடியிற் பருத்து, மேலே போகப்போகக் கிரமமாகச் சிறுத்து, மிக ஸூக்ஷ்மமான நுனிகளை யுடையவைகளாய், அநேகம் கிளைகளாகப் பிரிந்துவிடுகின்றன; அவ்விதம் எழுநூறு கிளைகளாகப் பிரிந்திருப்பதாய் எண்ணப்படுகிறது. 18—19½.

*கை-கால்களில் உள்ள ஸிரைகள்.*

அவற்றுள் கை-கால்களில் ஒவ்வொன்றிலும் நூறு ஸிரைகள் உண்டு. அவைகளில் ஜாலந்தராவென்னும் ஸிரை ஒன்று[1]; இந்த ஜாலந்தரா என்னும் ஸிரையிலும், அம்மானப் பிரதேசத்தில் உள்ள வேறு மூன்று ஸிரைகளிலும் இரக்தமோக்ஷணம் முதலியது செய்வதற்காகச் சஸ்திரப் பிரயோகம் செய்யக்கூடாது. 20½.

*ச்ரோணி ஸிரைகளும், அவற்றில் சஸ்திரத்தினால் பரிசிக்கத் தகாதவையும்.*

ச்ரோணியென்னும் இடுப்பில் முப்பத்திரண்டு ஸிரைகள் உண்டு. அவற்றுள் குண்டிக்கின் இரண்டு பாகத்திலுமுள்ள இரண்டிரண்டு ஸிரைகளும், கடிகதருணம்[2] என்னும் மர்மஸ்தானங்களிலுள்ள இரண்டிரண்டு ஸிரைகளும் சஸ்திரப்பிரயோகத்திற்குத் தகுந்தவையல்ல. 21½.

*விலாப்பக்கத்து ஸிரைகளும் அவற்றில் சஸ்திர சிகித்ஸையில் பரிஹரிக்கத் தகுந்தவையும்.*

விலாப்பக்கங்களில் பதினாறு ஸிரைகள் உண்டு. அவற்றுள் ஒவ்வொரு பக்கத்திலும் மேல்நோக்கிச் செல்லும் இரண்டு ஸிரைகளையும் சஸ்திரப்பிரயோக ஸமயத்தில் விலக்கிவிடவேண்டும். 22.

*முதுகிலுள்ள ஸிரைகளும் அவற்றில் சஸ்திரப்பிரயோகத்திற்குத் தகாதவையும்.*

முதுகுப் பக்கத்தில், இருபத்திநாலு ஸிரைகள் இருக்கின்றன. முள்ளந்தண்டுக்கு இருபுறங்களிலும் மேல்நோக்கிச் செல்லும் இரண்டிரண்டு ஸிரைகள் சஸ்திரத்தினால் பரிசிக்கத் தகாதனவாம். 23.

*வயிற்று ஸிரைகளும் அவற்றில் சஸ்திரப்பிரயோகத்திற்குத் தகாதவையும்.*

முதுகில் இருப்பதுபோலவே வயிற்றிலும் இருபத்திநான்கு ஸிரைகள் இருக்கின்றன. அவற்றுள் ஆண்குறிக்கு மேலே வயிற்றில் உரோமரேகைக்கு இருபுறங்களிலும் உள்ள இரண்டிரண்டு ஸிரைகளில் சஸ்திரத்தைப் பிரயோகிக்கக்கூடாது. 24.

*மார்பிலுள்ள ஸிரைகளும் அவற்றில் சஸ்திரப்பிரயோகத்திற்குத் தகாதவையும்.*

மார்பில் நாற்பது ஸிரைகள் உண்டு; அவற்றுள் ஸ்தநரோஹிதம்[1], ஸ்தநமூலம்[2], ஹ்ருதயம் இந்த மர்மஸ்தானங்களில் ஒவ்வொன்றிலும் தனித்தனியே இரண்டு ஸிரைகளும், இரண்டு அபஸ்தம்பங்களில்[3] இரண்டு ஸிரைகளும், இரண்டு அபலாபங்களில்[4] இரண்டு ஸிரைகளும் ஆகப் பதினான்கு ஸிரைகள் மார்பில் சஸ்திரசிகித்ஸைக்குத் தகாதவையாம். 25, 25½.

---

1. ஜாலந்தரா—அநேகம் ஸிரைகளின் ஸமூஹம் ஒன்றுகூடியிருப்பதால் இப்பெயர் வந்தது.

2. கடிகதருணம்—முள்ளந்தண்டுக்கு இரண்டு பக்கங்களிலும் இடுப்பிலுள்ள எலும்பின் சில பாகங்கள்.

1. ஸ்தநரோஹிதம்—முலைக்காம்பின் இரண்டு பக்கங்களிலுமுள்ள மர்மங்கள்.

2. ஸ்தநமூலம்—ஸ்தநங்களின் அடிப்பாகத்திலுள்ள மர்மஸ்தாநங்கள்.

3. அபஸ்தம்பம்—மார்பினுள் வலது பக்கத்தில் ஒன்றும், இடது பக்கத்தில் ஒன்றும் ஆக இரண்டு மர்மஸ்தாநங்கள் எனப்படும் ச்வாஸக்காற்றை உட்செலுத்தி வெளிப்படுத்தும் இரண்டு நாடிகள்.

4. அபலாபம்—தோள்பட்டைக்குக் கீழே விலாப் பக்கங்களில் இருபுறத்திலும் உள்ள மர்மங்கள்.



*கழுத்திலுள்ள ஸிரைகளும் அவற்றில் சஸ்திரப் பிரயோகத்திற்குத் தகாதவையும்.*

கழுத்திலும் முதுகில் இருப்பதைப்போலவே இருபத்திநான்கு ஸிரைகள் உண்டு. அவற்றுள் நீலா இரண்டு,[1] மந்யா இரண்டு,[2] க்ருகாடிகா இரண்டு,[3] விதுரா இரண்டு,[4] மாத்ருகைகள் எட்டு,[5] ஆகப் பதினாறு ஸிரைகள் சஸ்திரப் பிரயோகத்திற்குத் தகாதனவாம். 26½.

*முகவாய்க்கட்டை ஸிரைகளும் அவற்றில் பரிஹரிக்கத் தகுந்தவையும்.*

முகவாய்க்கட்டையின் இரு புறங்களிலும் பதினாறு ஸிரைகள் உண்டு. அவற்றுள் முகவாய்க்கட்டையின் பூட்டுகளைக் கட்டுவதற்கான இரண்டு ஸிரைகளில் சஸ்திரம் பிரயோகிக்கக் கூடாது. 27.

*நாக்கிலுள்ள ஸிரைகளும் அவற்றில் பரிஹரிக்கவேண்டியவைகளும்.*

நாக்கிலும் பதினாலு ஸிரைகள் உண்டு. அவற்றுள் சுவை யுணரும் பொருட்டு நாக்கின் அடியில் அமைந்துள்ள இரண்டு ஸிரைகளையும், பேசும் வேலையை நடத்துபவையான இரண்டு ஸிரைகளையும் சஸ்திரப் பிரயோகத்தினின்றும் விலக்கிவிடவேண்டும். 27¾.

*நாசியின் ஸிரைகளும் அவற்றில் சஸ்திரத்தினால் பரிசிக்கத் தகாதவையும்.*

நாசியில் இருபத்திநான்கு ஸிரைகள் இருக்கின்றன. அவற்றுள் மணம் அறிவதற்கான இரண்டு ஸிரைகளும், தாடையிலுள்ள ஒரு ஸிரையும் சஸ்திரப்பிரயோகத்திற்குத் தகாதவையாம். 28, 28½.

*கண்களிலுள்ள ஸிரைகளும் அவற்றில் சஸ்திரத்தினால் பரிஹரிக்கத் தகுந்தவையும்.*

கண்களில் ஐம்பத்தாறு ஸிரைகள் உண்டு. அவற்றுள் கண்களை மூடித் திறப்பதற்கு உபயோகமான நான்கு ஸிரைகளிலும், கடைக்கண்களிலுள்ள இரண்டு ஸிரைகளிலும் ஆக ஆறு ஸிரைகளில் சஸ்திரப்பிரயோகம் செய்யக் கூடாது. 29½.

*நெற்றியிலுள்ள ஸிரைகளும் அவற்றில் சஸ்திரத்தினால் பரிசிக்கத் தகாதவையும்.*

நெற்றியில் கண்களுக்கும் நாசிக்கும் ஸம்பந்தப்பட்டுள்ள ஸிரைகள் அறுபது. அவற்றுள் ஸ்த்தபநீயென்னும்[1] மர்மஸ்தாநத்திலுள்ள ஒரு ஸிரையையும், ஆவர்த்தங்கள்[2] என்கிற மர்மஸ்தாநங்களிலுள்ள இரண்டு ஸிரைகளையும், செவியின் பக்கத்திலுள்ள நான்கு ஸிரைகளையும் ஆக ஏழு ஸிரைகளைச் சஸ்திரப் பிரயோகத்தினின்றும் விலக்கிவிடவேண்டும். 30, 30¾.

*காதுகளிலுள்ள ஸிரைகளும் அவற்றில் சஸ்திரப்பிரயோகத்திற்குத் தகாதவையும்.*

காதுகளில் பதினாறு ஸிரைகள் உண்டு. அவற்றுள் ஓசை யறிவிப்பவையான இரண்டு ஸிரைகளும், சங்கமென்கிற கன்னங்களிலுள்ள இரண்டு ஸிரைகளும், அச்செவிகளிலேயே கன்னம் காது இவற்றின் ஸந்திகளைப்பற்றியுள்ள வேறிரண்டு ஸிரைகளும் சஸ்திரத்தினால் பரிஹரிக்கத்தக்கவையாம். 31, 31¾.

---

1. நீலா—கண்டநாடியென்னும் நாளத்திற்கு இருபுறத்திலுமுள்ள கறுநிறமான இரத்தக்குழாய்கள் இரண்டுக்குப் பெயர்.

2. மந்யா—நீலாவுக்குப் பக்கத்திலுள்ள செந்நிற இரத்தக்குழாய்களுக்குப் பெயர்.

3. க்ருகாடிகா — சிரக்கபாலமும், கழுத்திலுள்ள முள்ளந்தண்டு எலும்பும் கூடுகிற பாகம்.

4. விதுரா—செவிகளுக்குப் பின்புறமாய் சிறிது கீழேயுள்ள மர்மஸ்த்தாநங்கள்.

5. மாத்ருகா—கழுத்தில் இரண்டு பாரிசங்களிலுமுள்ள மர்மஸ்த்தாநங்களுக்குப் பெயர்.

1. ஸ்த்தபநீ—இரண்டு புருவங்களுக்கும் நடுவிலுள்ள ஒரு மர்மஸ்த்தாநம்.

2. ஆவர்த்தம்—புருவங்களுக்கு மேலே அடுத்தாற்போல் நெற்றியிலுள்ள மர்மங்கள்.

*சிரஸ்ஸின் ஸிரைகளும் அவற்றில் சஸ்திரத்தினால் பரிஹரிக்கத் தகுந்தவையும்.*

சிரஸ்ஸில் பன்னிரண்டு ஸிரைகளாம். அவற்றுள் உத்க்ஷேபம்,[1] ஸீமந்தம்,[2] அதிபதி[3] என்னும் மர்மஸ்த்தானங்களின் ஸம்பந்தமான ஒவ்வொரு ஸிரையும் சஸ்திரசிகித்ஸை செய்யாமல் பரிஹரிக்கத் தகுந்ததாகும். 32½.

*சஸ்திரப் பிரயோகத்திற்குத் தகாத ஸிரைகளின் மொத்தம்.*

சஸ்திரப்பிரயோகம் செய்யத்தகாதவைகளைப் பகுத்தறிவதன்பொருட்டு இவ்வாறு ஒவ்வொரு அவயவத்திலுமுள்ள ஸிரைகள் விவரிக்கப்பட்டன. சரீரத்திலுள்ள ஸிரைகளில் மொத்தம் தொண்ணூற்றெட்டு ஸிரைகளில் சஸ்திரம் பிரயோகிக்கக்கூடாதென்று இதுவரையில் கூறப்பட்டது. மேலும், சஸ்திர சிகித்ஸைக்குத் தகாத ஸிரைகளோடு கலந்திருப்பவையும், கிரந்திகளைப்போல கரடுமுரடாயிருப்பவையும், மிகவும் சிறியவையும், ஸந்திகளில் இருப்பவையுமான இதர ஸிரைகளுங்கூட சஸ்திரப் பிரயோகத்திற்குத் தகாதனவாம். 33,34.

*நான்குவிதமான ஸிரைகள்.*

முற்கூறப்பட்ட எழுநூறு ஸிரைகளுள் நூற்றெழுபத்தைந்து ஸிரைகள் வாததோஷம் கலந்த இரத்தத்தைச் செலுத்துகின்றன; மற்றொரு நூற்றெழுபத்தைந்து ஸிரைகள் பித்தம் கலந்த இரத்தத்தையும், வேறு நூற்றெழுபத்தைந்து ஸிரைகள் கபம் கலந்த இரத்தத்தையும் செலுத்துகின்றன. மிச்சமுள்ள நூற்றெழுபத்தைந்திலும் தோஷங்களுடைய கலப்பில்லாத சுத்தமான இரத்தம் ஓடுகின்றது. தோஷங்கள் இவ்வாறு தேஹத்தில் பரவியிருந்தவைகளாய் உடலைப் போஷிக்கச் செய்கின்றன. இத்தோஷங்களும் இரத்தமும் இயற்கைக்கு மாறான நிலைமையையடைந்தால் தேஹத்தை வருந்தச்செய்கின்றன. 35,35½.

*தோஷங்கலந்த இரத்தம் ஓடுகிற நான்குவித ஸிரைகளின் குறிகள்.*

அவற்றுள் (1) இரத்தத்தில் வாததோஷ ஸம்பந்தமுள்ள ஸிரைகள் ஒருவாறு கறுநிறங்கலந்த சிவப்பாகவும், கனத்திற் சிறியவையாகவும், க்ஷணத்திற்கு க்ஷணம் இரத்தம் நிரம்பி உடனே இரத்தம் வற்றியவையாகவும், விசேஷமாக நெகிழ்ந்தோடுபவையாகவும் இருக்கின்றன. (2) பித்ததோஷங்கலந்த இரத்தத்துடன்கூடிய ஸிரைகள் பரிசிப்பதற்குச் சூடாகவும், வேகமாய் இரத்தத்தைச் செலுத்துபவையாகவும், கறுநிறங்கலந்த பொன் வர்ணமுள்ளவையாகவும் இருக்கும். (3) கபதோஷம் கலந்த இரத்தத்துடன்கூடிய ஸிரைகள் வெண்மையாகவும், ஸ்நிக்த்தங்களாகவும், அதிக வேகமில்லாதவையாகவும், குளிர்ந்தவையாகவும் இருக்கும். (4) மேற்குறிப்பிட்ட குறிகளில் அநேகம் ஒன்றோடொன்று கலந்திருக்குமானால், அவை இரண்டுவிதமான அல்லது மூன்றுவிதமான தோஷங்கள் ஒன்றோடொன்று கலந்திருப்பதாய் அறிக. 36—37½.

*சுத்த ரத்தம் ஓடுவதற்கான ஸிரைகள்.*

சுத்தரத்தம் ஓடுவதற்கான ஸிரைகள் ஸமமாகவும், கெட்டியாகவும், ஸ்நிக்த்தங்களாகவும், செந்நிறமாகவும் இருக்கும்; அவை ஆழமான பிரதேசங்களில் ஓடும்.[1] 38.

---

1. இங்கு வாக்படாசாரியர் சுத்த இரத்தம், காறிரத்தம், வாயு இவைகள் முறையே ஓடுவதற்கான செவ்விரத்தக்குழாய்களையும், காறிரத்தக்குழாய்களையும், நாடிகள் என்கிற நரம்புகளையும் ஒருமிக்க ஸிரைகள் என்றே கூறுகிறார். ஆனால் சுத்தரத்தம் ஓடும் குழாய்கள் தமனிகள் என்றும், கறுப்பு இரத்தம் ஓடும் குழாய்கள் ஸிரைகள் என்றும், வெண்மையான கபம்போன்ற திரவம் ஓடும் குழாய்கள் இரஸாயனிகள் என்றும், வாயு அல்லது வாதம் ஓடுவதற்கான கொடிகள் நாடி அல்லது நரம்புகள் என்றும் கூறப்படவேண்டும்.



*தமனிகள்.*

இருபத்திநாலு தமனிகள் நாபியில்[1] தொடுக்கப்பட்டிருக்கின்றன[2]. சக்கிரத்தின் நாபி யென்னும் மத்திய பாகம் ஆரக்கால்களால் சூழப்பட்டிருப்பதுபோல தமனிகளால் நாபியும் சூழப்பட்டிருக்கிறது. இத்தமனிகள் தேஹத்தில் மேலேயும், கீழேயும், குறுக்கிலும் எங்கும் வியாபித்து உடலனைத்தையும் போஷிக்கின்றன. 39, 39½.

*வெளிப்புற ஸ்ரோதஸ்ஸுகள்.*

நாசித்வாரங்கள் இரண்டு, இரண்டு செவிகள், கண்கள், குதம், முகம், ஆண்குறி அல்லது யோனி யென்பவை ஒன்பது ஸ்ரோதஸ்ஸுகள் எனப்படும். ஸ்தநங்கள் இரண்டும், ஆர்த்தவம் வெளிவரும் மார்க்கம் ஒன்றும் ஆக ஸ்த்ரீகளுக்கு வேறு மூன்று ஸ்ரோதஸ்ஸுகளும் உண்டு. 40½.

*உட்புற ஸ்ரோதஸ்ஸுகள்.*

சரீரத்திற்குள் உயிருக்கு மூலாதாரமாகப் பதின்மூன்று ஸ்ரோதஸ்ஸுகள் இருக்கின்றனவாம். அந்த ஸ்ரோதஸ்ஸுகள் பிராணனுக்கு ஆதாரமான ஸத்துவங்களையும், இரஸம் முதலிய தாதுக்களையும், மலங்களையும், மற்றும் நீர்ப்பொருளையும், அன்னத்தையும் செலுத்துவதற்கு உபயோகமாயிருக்கின்றன.[3] 41½.

*ஸ்ரோதஸ்ஸுகள் ரோகாரோக்கியங்களுக்கு ஆதாரமாயிருத்தல்.*

அஹிதமான ஆஹார விஹாரங்களால் அந்த ஸ்ரோதஸ்ஸுகள் கெட்டுப்போய் ரோகங்களையுண்டு பண்ணும். நன்கு சுத்தமாக இருந்தால் ஆரோக்கியத்திற்கு ஆதாரமாகும். 42.

*ஸ்ரோதஸ்ஸுகளின் பலவித உருவங்கள்.*

ஸ்ரோதஸ்ஸுகள், அவ்வவற்றில் ஓடும் தாதுப்பொருட்களுக்கு ஸமமான நிறங்களுடையவையாகவும், திரண்டுருண்டு பருத்தவையாகவும், சில விடங்களில் மெல்லியவையாகவும், சில விடங்களில் நீண்டவையாகவும், வேறு சில விடங்களில் கொடிகளைப்போல் கப்பும் கிளையுமாகப் படர்ந்தவையாகவும் இவ்வாறு உருவத்தில் பலவாறாகக் காணப்படும். 43.

*ஸ்ரோதஸ்ஸுகளைத் தூஷிப்பிக்கும் ஆஹார விஹாரங்கள்.*

எந்த ஆஹாரமும்[1] எந்த விஹாரமும்[2] தோஷங்களுடைய குணங்களுக்கு ஏற்ற குணமுள்ளதாயிருக்கின்றதோ, தாதுக்களுடைய குணங்களுக்கு எதிரிடையான குணமுள்ளதாகவும் ஆகுமோ, அவ்வித ஆஹாரமும் விஹாரமும்

---

1. நாபியென்றால் இங்கு தொப்புளல்ல; மூலஸ்த்தானம் எனப்பொருள்; ஆகவே தமனிகள் என்கிற இரத்தக்குழாய் ஆரம்பிக்கும் ஸ்த்தானமே இங்கு நாபியெனப்படுவதாய் அறிக.

2. தமனிகள்—இரத்தத்தை உடலெங்கும் இறைத்துப் பரப்புவதால் சுத்த இரத்தக்குழாய்கள் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. இதற்கு முன் அடுத்தாற்போல் கலப்பில்லாத சுத்த இரத்தமோடும் குழாய்களைக் கூறியதும், அடுத்தாற்போல தமனிகளின் விஷயம் குறிக்கப்படுவதால், இந்த தமனிகளே சுத்த இரத்தக்குழாய்கள் என்று அபிப்பிராயப்படுவதாய் அறிக.

3. பிராணவஹமான ஸ்ரோதஸ்ஸுகளுக்கு ஹ்ருதயம் மூலம்; மஹாஸ்ரோதஸ் என்னும் பெரிய மூல தமனியும் அதற்கு மூலாதாரமாம். வேறு நீர்ப்பொருள் ஓடும் ஸ்ரோதஸ்ஸுகளுக்கு (உமிழ்நீர் முதலியது) தாலுமூலத்திலுள்ள கிரந்திகள் மூலாதாரமாம். அன்ன வாஹியான ஸ்ரோதஸ்ஸுகளுக்கு ஆமாசயமும் மற்றக் குடல்களும் மூலாதாரமாம். இரஸவாஹியான ஸ்ரோதஸ்ஸுகளுக்கு ஹ்ருதயமும் வயிற்றிலுள்ள பெரிய கபவாஹியான குழாய்களும் மூலாதாரங்களாம். இரத்தத்திலுள்ள முக்கியமான சோணிதாம்சம் உண்டாவதற்கு மூலாதாரம் ப்லீஹம் என்னும் மண்ணீரலாம்; ஆனால் அக்குழாய்களுக்கு ஹ்ருதயம் மூலம். மாம்ஸவஹம், மேதோவஹம், அஸ்த்திவஹம், மஜ்ஜாவஹம் என்கிற ஸ்ரோதஸ்ஸுகளும் ஒவ்வொரு கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளன. சுக்ரவஹமான ஸ்ரோதஸ்ஸுகளுக்கு பீஜம் மூலஸ்த்தானம்.

1. ஆஹாரம் என்பதால் அன்ன பானாதிகள் குறிக்கப்படுகின்றன.

2. விஹாரம் என்பதால் தேஹம், வாக், மனது இவற்றின் ஸம்பந்தமான எல்லாக் காரியமும் குறிக்கப்படுகின்றது.

ஸ்ரோதஸ்ஸுகளைத் தூஷிப்பிக்கும் தன்மையுடையதாம்.[1] 44.

*ஸ்ரோதஸ்ஸுகள் கோளாறடைந்திருப்பதன் குறிகள்.*

எங்கெந்த ஸ்ரோதஸ்ஸிலிருந்து எங்கெந்த பதார்த்தம் வெளிவருவது வழக்கமோ[2] அதிலிருந்து அந்தந்த பதார்த்தம் மிதமிஞ்சி வெளியாவதும், அல்லது வெளிவராமல் கட்டப்படுவதும், அல்லது இயற்கையில் வெளிவரக்கூடிய மார்க்கத்தைவிட்டு வேறு மார்க்கத்தில் செல்வதும், ஸிரைகள் கிரந்திகளைப்போல கரடு கட்டுவதும் ஸ்ரோதஸ்ஸுகள் கோளாறடைந்திருப்பதன் அறுகுறிகளாம். 45.

*உட்புற ஸ்ரோதஸ்ஸுகளின் நிலைமையும் உபயோகமும்.*

தாமரைக் கொடிகளிலிருப்பதுபோல, ஸ்ரோதஸ்ஸுகளுடைய த்வாரங்கள் ஸூக்ஷ்மமாகவும், தேஹத்தில் வெகுதூரம் நீண்டு பரவியும் இருக்கின்றன. இந்த ஸ்ரோதஸ்ஸுகளின் மூலமாகவே இரஸம்[3] தேஹத்திற் செழித்துப் பரவுகின்றது. 46.

*ஸ்ரோதஸ்ஸுகள் அபிகாதப்பட்டால் உண்டாகும் தீமையும் பரிஹாரமும்.*

ஸ்ரோதஸ்ஸுகள் சல்யம் முதலியவற்றால் தாக்கப்படுமானால் மூர்ச்சை, நடுக்கல், பொருமல், வாந்தி, ஜ்வரம், பிதற்றல், வயிற்றுவலி, மலமூத்திரங்கள் கட்டப்படுதல் என்னும் இவ்வவஸ்தைகள் உண்டாகும்; மரணமாவது ஸம்பவிக்கும். ஆகையினால் வைத்தியன் ஸ்ரோதஸ்ஸினில் தாக்குண்ட பிணியாளியினிடம் அவனுக்குண்டாயுள்ள அவஸ்தை பிராணாபாய முண்டுபண்ணக்கூடியதென்றும், ஆகவே சிகித்ஸை செய்கையில் திடீரென்று பிராணாபாயம் நேரிடக்கூடுமென்றும் வெளிப்படையாகச் சொலி, அதன் பிறகே வைத்தியன் ஜாக்கிரதையாக சிகித்ஸை செய்ய முயலவேண்டும்; அப்பொழுது ஊக்கத்துடன் சல்யத்தை வெளிப்படுத்தி, அபிகாதத்தினால் அப்பொழுதே நேர்ந்த விரணத்திற்கு எவ்வித உபசாரம் செய்யப்படுமோ அவ்வித் உபசாரத்தையே இதற்கும் பிறகு செய்யவேண்டும்.[1] 47, 48.

*பாசகபித்தம்-பித்ததராகலா-கிரஹணீ-அவற்றின் சுருபங்களும் உபயோகங்களும்.*

உணவைப் பக்குவம் செய்வது பாசக பித்தமென்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது.[2] தோஷங்களுடையவும், தாதுக்களுடையவும், மலம் முதலியவற்றின் இயற்கைச் சூடு யாதொன்று உண்டோ அதுவே ஆஹாரத்தைப் பக்குவம் செய்யும் பித்தமாகும் என்று ஆத்ரேயருடைய அபிப்பிராயமாகும். அப்பாசக பித்தத்திற்கு ஆதாரமாயிருப்பது கிரஹணீயென்னும் அவயவமாம். ஆமாசயத்தில் பக்குவமாகிறவரையில் உணவு சிறு குடலுக்குள் போகாதபடி அதைப் பிடித்து வைக்குந்தன்மையுடையதாகையால் இதற்கு கிரஹணீ யென்கிற பெயர் வந்தது. தன்வந்தரியின் கொள்கைப்படி இக்கிரஹணியே[3]

1. ஸ்ரோதஸ்ஸுகள் என்பதால் இங்கு உட்புற ஸ்ரோதஸ்ஸுகள் குறிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் லாக்டியல்ஸ் (Lacteals) என்று கூறப்படுகிற குடலைச் சேர்ந்த இரஸாயனிகள் என்னும் ஸூக்ஷ்மமானகுழாய்களும், லிம்பாடிக் வெஸல்ஸ் (Lymphatic vessels) என்கிற பெரிய இரஸாயனிகளும் முக்கியமாய் இங்கு உட்புற ஸ்ரோதஸ்ஸுகளாகக் கொள்ளப்படுவதாய் அறிக.

2. குதத்திலிருந்து வெளிவருவது மலம், வஸ்தி த்வாரத்திலிருந்து வெளிவருவது மூத்திரம், தாலு மூலங்களிலிருந்து வெளிவருவது உமிழ்நீர்; என்று இவ்வாறு மற்ற ஸ்ரோதஸ்ஸுகளுக்கும் கவனித்துக் கொள்க.

3. இரஸம்—உணவின் ஸாராம்சமான வெண்ணிற திரவம்.

1. உத்தரஸ்த்தானத்தில் ஸத்யோவ்ரண ப்ரதிஷேதம் என்கிற 25-வது அத்தியாயத்தில் விரண சிகித்ஸாமுறை விவரிக்கப்படுகிறது.

2. பாசக பித்தத்தைப்பற்றியும், பொதுவில் பித்தத்தைப்பற்றியும் அவசியமான விவரங்கள் 101-வது பக்கத்தில் காணக்கூடியன.

3. கிரஹணீ—ஆங்கிலத்தில் பைலோரஸ் (Pylorus) என்றும், டிவோடீனம் (deodenum) என்றும் கூறப்படும் பாகங்கள்.



பித்ததராகலா யென்று வழங்கப்படுகிறது. இந்த கிரஹணீ யென்னும் அவயவம், ஆயுள்விருத்திக்காகவும், ஆரோக்கியாபிவிருத்திக்காகவும், வீர்யவிருத்தியின்பொருட்டும், ஓஜோதாது[1] விருத்தியாவதற்கும், பஞ்சபூதங்களின் அம்சம் அபிவிருத்தியாவதற்கும், பாசகபித்தம் செழிப்பதற்கும் பக்வாசயத்தின் வாயிலில், உணவு நெகிழ்ந்தோடவேண்டிய வழியைத் தடுத்துக்கொண்டு நிற்கின்றது. கிரஹணியானது பலமுள்ளதாயிருந்தால், உட்கொள்ளப்பட்ட உணவை ஆமாசயத்திலேயே தடுத்து, அவ்விடத்தில் ஏற்றவளவு பக்குவமாகச் செய்து, பிறகு கீழே சிறு குடலில் அவ்வுணவைப் பிரவேசிக்கச் செய்கின்றது. அக்கிரஹணியே தூர்ப்பலமாயிருந்தால், தனது இயற்கை வேலையைச் செய்ய வகையற்றதாய், உணவு பக்குவமாகாமலே சிறு குடலில் பிரவேசிக்குமாறு விட்டுவிடுகின்றது[2]. ஜாடராக்னியானது கிரஹணிக்கு வலிவையுண்டு பண்ணக்கூடியது; கிரஹணியும் ஜாடராக்னிக்கு வலிவைக் கொடுக்கின்றது. ஆகையினால் ஜாடராக்னி கோளாறடையுமானால், கிரஹணியும் விகாரப்பட்டு ரோகத்தை உண்டு பண்ணக்கூடியதாகும். எந்த உணவானது தேஹத்திலுள்ள ஸப்ததாதுக்களையும், ஓஜஸ்ஸையும் செழிக்கச்செய்து, தேஹபலம் தேஹநிறம் முதலியவற்றையும் விருத்திசெய்யக்கூடியதோ, அவ்வுணவு பக்குவமாவதற்கு ஜாடராக்னி முக்கிய ஹேதுவாயிருக்கின்றது; ஏனெனில், உணவானது பக்குவமாகாவிட்டால், அதிலிருந்து இரஸம் முதலிய தாதுக்கள் உண்டாகமாட்டாதல்லவா? 49—54.

*ஆஹாரம் குடலில் பக்குவமாய் சோஷிக்கப்பட்டு தேஹத்திற் சேரும் வகை.*

ஏற்ற காலத்தில்[1] உண்ணப்பட்ட ஆஹாரம் பிராண வாயுவால்[2] கோஷ்டத்திற்குக்[3] கொண்டுவரப்பட்டு, பலவிதமான திரவங்களால்[4] ஒருமித்து கெட்டியாயிருக்குந்தன்மை நீங்கி, நெய் முதலிய ஸ்நேஹ வஸ்துக்களால் மிருதுத்தன்மை யடைந்துவரும்; ஆமாசயத்தில் வந்திருக்கும் அவ்வித உணவை ஸமாந வாயுவினால்[5] தூண்டப்பட்ட ஜாடராக்னியானது, ஸாதாரணமாய் நெருப்பு ஒரு கலயத்தில் தண்ணீருடன் இருக்கும் அரிசியைச் சமைப்பதுபோல பக்குவம் செய்கின்றது. (1) முதலில் உட்கொள்ளப்படும்போது உணவு ஆறுவிதமான சுவையுள்ளதாயிருந்தபோதிலும், ஆமாசயம செல்லுகிறவரையில் மதுரமாகவும் நுரையுடன் கூடியதாகவும் ஆவதுடன், கபத்தின் தன்மையையும் அடைகின்றது. (2) பிறகு ஜாடராக்னியினால் அவ்வுணவு எரிக்கப்பட்டு அம்லத்தன்மையை அடைந்து, பித்தத்துடன் கூடி, ஆமாசயத்திலிருந்து நெகிழ்ந்து சிறு குடலுக்குள் வந்துகொண்டிருக்கையிலேயே பித்தத்திற்குள்ள தன்மைகளைப் பெறுகின்றது. (3) அப்பால் சிறு குடலில வந்துள்ள அவ்வுணவு அவ்விடத்திலுற்பத்தியாகும் பித்த வெப்பத்தினால் பக்குவமாய், சோஷணம் செய்யப்பட்டு ஜீர்ணமாவதுடன், அதன் திப்பியைப்போன்ற வஸ்து பிழியப்பட்டு இறுதியில் கடுரஸத்தையும் வாதத்திற்குள்ள தன்மையையும் பெறு

1. ஓஜஸ்—33-வது பக்கம் பார்க்க.

2. கிரஹணீ தூர்ப்பலமாயிருந்தால் அப்பொழுது கிரஹணீயென்கிற அஜீர்ணபேதி உண்டாகிறது.

1. ஏற்றகாலம் என்பதால்—81-வது பக்கத்தில் போஜனம் செய்வதற்கான காலநியமம் என்னும் விஷயம் குறிப்பிடப்படுகின்றது.

2. பிராணவாயு—100-வது பக்கம் பார்க்க.

3. கோஷ்டம் என்பதால் இவ்விடத்தில் குடல் குறிக்கப்படுகின்றது.

4. தண்ணீர், பால் முதலிய திரவாஹாரங்களும், உமிழ்நீர், பித்தநீர் முதலிய திரவங்களும் குறிக்கப்படுகின்றன.

5. ஸமாநவாயு—100-வது பக்கம் பார்க்க.

கின்றது. பின்னர் பார்த்திவ உஷ்ணம், ஆப்ய உஷ்ணம், ஆக்நேய உஷ்ணம், வாயவ்ய உஷ்ணம், நாபஸ உஷ்ணம்[1] என்னும் ஐந்துவித மான உஷ்ணங்களும், முறையே பார்த்திவாதி குணங்களைப் பெற்ற ஐந்துவித ஆஹாரரஸங்களையும் அததற்கேற்ற குணங்களின் ஸம்பந்தத்தினால் பக்குவம் செய்கின்றன. பஞ்ச பூதங்களுடைய அக்குணம்சங்களும் கிரமமாக அததற்குற்ற பூதகுணம்சங்களைப் பக்குவம் செய்து, தனித்தனியே ஒவ்வொன்றையும் தேஹத்தில் போஷிக்கின்றன. அதாவது பார்த்திவாம்சங்கள் பார்த்திவாம்சங்களையே போஷிப்பிக்கும்; மிச்சமுள்ள பூதாம்சங்களும் தேஹத்திலுள்ள மற்ற பூதங்களின் அம்சங்களையும் முறையே அவ்விதமே பக்குவம் செய்து போஷிப்பிக்கின்றன. 55—60.

*குடலிற் பக்குவமான உணவு, ஸாரம் கிட்டம் என்று இரண்டு விதமாகப் பிரிதல்.*

முற்கூறியவாறு பக்குவம் செய்யப்பட்ட உணவானது கிட்டம்,[2] ஸாரம்[3] என்று முக்கியமாய் இரண்டுவிதமாகப் பிரிகின்றது. அவற்றுள் அன்னத்தின்கிட்டமானது தெளிந்து திரவமாகவும், திப்பியாகவும் இரண்டு பிரிவுகளைப் பெறுகின்றது; தெளிந்த திரவாம்சம் மூத்திரமாகவும், கெட்டியான திப்பி மலமாகவும் மாறுகின்றன. 61.

*ஆஹாரத்தின் ஸாரம் ஏழுதாதுக்களாகப் பரிணமித்தல்.*

ஆஹாரத்தின் ஸாராம்சமானது ஏழு தாதுக்களிலுமுள்ள அந்தந்த வெப்பத்தினால் மறுபடியும் பக்குவம் செய்யப்பட்டு,[1] ஸப்ததாதுக்களின் பரிணாமத்தை அடைகின்றது. ஆகவே ஆஹாரத்தின் ஸாரம்சமான இரஸத்திலிருந்து இரத்தமும், அதிலிருந்து மாம்ஸமும், மாம்ஸத்திலிருந்து மேதஸ்ஸும், அதிலிருந்து எலும்பும், எலும்பிலிருந்து மஜ்ஜையும், மஜ்ஜையிலிருந்து சுக்ரமும் உற்பத்தியாகின்றன; இறுதியில் சுக்ரத்திலிருந்து கர்ப்பம் உற்பத்தியாகின்றது. 62, 62½.

*ஸப்த தாதுக்களுடைய மலங்கள்.*

கபம் இரஸதாதுவுக்கும், பித்தம் இரத்த தாதுவுக்கும், செவி - நாசி முதலிய த்வாரங்களில் உண்டாகும் அழுக்கு மாம்ஸத்திற்கும், வியர்வை மேதஸ்ஸுக்கும், நகம் எலும்புக்கும், உரோமங்கள் மஜ்ஜாவுக்கும், கண்-சர்மம்-மலம் முதலியவற்றிலுள்ள ஸ்நேஹபாகம் சுக்ரத்திற்கும் முறையே மலமாகக் கூறப்படும். எல்லா தாதுக்களுடையவும் ஸாரபூதமான மலம் ஓஜஸ் என்னும் தாது. இவ்வாறு தாதுக்கள் மேன்மேலும் பக்குவமாய் வெவ்வேறு தாதுக்களாக மாறி வருகையில், அவற்றிற்கும் ஸாராம்சமென்றும் கிட்டாம்சமென்றும் இரண்டு நிலைமைகள் உண்டாகின்றன. 63, 64.

*தாதுக்களில் மேன்மேலும் ஸ்நேஹம் அதிகரித்தல்.*

ஸப்த தாதுக்களில் ஒவ்வொன்றும் மேன்மேலுமுள்ள தாதுக்களை விசேஷமாகப் போஷித்து வருவதால், தாதுக்களில் முதல் தாதுவிலிருந்து ஏழாவது

1. பார்த்திவம்—ப்ருதிவீ ஸம்பந்தமானது; அதாவது பூமி ஸம்பந்தமானது. ஆப்யம்—நீர் ஸம்பந்தமானது. ஆக்நேயம்—அக்னி ஸம்பந்தமானது. நாபஸம்-ஆகாய ஸம்பந்தமானது.

2. கிட்டம்—திப்பி அல்லது கோது.

3. ஸாரம்—தாதுக்களாகப் பரிணமமாகக் கூடிய ஸத்துவபாகம்.

1. முன்னம் ஜாடராக்னியினாலும், பஞ்சபூதங்களின் உஷ்ணத்தினாலும் பக்குவம் செய்யப்பட்டிருந்தும் தாதுக்களுடைய உஷ்ணத்தினாலும் பக்குவம் செய்யப்படவேண்டியிருப்பதால், மறுபடியும் என்று கூறப்பட்டது.



தாதுவரையில் ஸ்நேஹாம்சம் மேன்மேலும் செழித்திருக்கும்.[1] 64½.

*உணவு சுக்ராந்தமான தாதுக்களாகப் பரிணமமடையுங்கால பேதம்.*

புஜிக்கப்படும் உணவானது[2] ஓர் இராப்பகலிலேயே சுக்ரம் வரையிலுமுள்ள தாதுக்களாகப் பக்குவமாய் மாறிவிடுவதாகச் சில ஆசாரியர்கள் கூறுகின்றனர். வேறு சிலர் ஆறு தினங்களில் அவ்விதம் முற்றிலும் கிரமமாகப் பரிணமிப்பதாகக் கூறுகின்றார்கள். சுக்ரமாக மாறுவதற்கு ஒரு மாதகாலம் ஆகும் என்கிறார்கள்.[3] இவ்விதமாக புஜிக்கப்படும் பதார்த்தங்களும் தாதுக்களும் மேன்மேலும் சக்கிரம்போல இடைவிடாமல் திரும்பத் திரும்பபரிணமம் அடைந்து சுழன்றுவருகின்றது. 65,66.

*சில சரக்குகளுக்கு தாதூற்பத்தியை உடனே செய்வதற்கான விசேஷ குணங்கள்.*

ஆனால் விருஷ்யம் முதலிய குணங்களையுடைய பதார்த்தங்கள்[1] அவ்வவற்றிற்குள்ள ப்ரபாவத்தினால்[2] சுக்ரம் முதலிய தாதுவை உடனே உற்பத்தி செய்கின்றன. வேறு சில ஔஷதங்கள் ஓர் இராப்பகலுக்குள் பெரும்பாலும்[3] அவ்வவற்றின் காரியங்களைச் செய்ய வல்லவைகளாயிருக்கின்றன. 67.

*இரஸதாது முதலியவை குறிப்பிட்ட ஓரிடத்தில் விகாரமுண்டுபண்ணும் காரணம்.*

இரஸ தாதுவானது, வீசித்தள்ளுமியல்புடைய வியாநவாயுவினால்[4] தேஹமெங்கும் எப்பொழுதும் ஒரே ஸமயத்தில் வீசித்தள்ளப்படுகின்றது. அவ்வாறு தள்ளிப்பரப்பப் படும்போது, ஸ்ரோதஸ்ஸுக்கு ஏற்பட்டுள்ள கோளாறால் அந்த இரஸம் எவ்விடத்தில் தங்கிவிடுகின்றதோ, அவ்விடத்தில், வாயு வேகத்தினால் மேகம் ஆகாயத்தில் மழை பொழிவதுபோல, ஏதேனும் விகாரத்தை உண்டுபண்ணுகின்றது. இதே வகையில் தோஷங்களுக்கும் தேஹத்தில் ஏதேனும் ஒரு பாரிசத்தில் பிரகோபம் ஸம்பவித்து விகாரமுண்டாகக்கூடும். 68—69½.

*மூன்றுவித அக்னிகளின் காரிய நிர்ணயத்தின் முடிவுரை.*

இங்ஙனம் ஆஹாரத்தினுடையவும், பஞ்சபூதங்களுடையவும், தாதுக்களுடையவும் அக்னிகளுக்கு

1. இரஸத்தைவிட இரத்தத்திலும், அதைவிட மாம்ஸத்திலும், மாம்ஸத்தினும் மேதஸ்ஸிலும், மேதஸ்ஸைவிட அஸ்த்தியிலும். அதைவிட மஜ்ஜையிலும், மஜ்ஜையைவிட சுக்ரத்திலும் ஸ்நேஹபாகம் முறையே அதிகரிக்கும்.

2. தாதுக்களிலேயே ஒரு தாது மற்றொரு தாதுவை உண்டுபண்ணுவதால், ஒன்று மற்றொன்றுக்கு புஜிக்கப்படும் வஸ்துவாயுளதென்றும் அறிக.

3. முதல்நாள் உபயோகிக்கப்பட்ட உணவின் ஸாரமானது மறுநாள் (அதாவது 60-நாழிகையில்) இரஸமாகவும், அதற்கு அப்பால் 60-வது நாழிகையில் இரத்தமாகவும், நான்காவது நாள் மாம்ஸமாகவும், ஐந்தாவதுநாள் மேதஸ்ஸாகவும், ஆறாவது நாள் அஸ்த்தியாகவும், ஏழாவது நாள் மஜ்ஜாவாகவும், எட்டாவது தினத்தில் சுக்ரமாகவும் பரிணமமடைகின்றது என்று பராசரர் கூறுகிறார். ஆகவே உட்கொண்ட உணவு எட்டாவது தினத்தில் சுக்ரமாக மாறுகிறது என்பது பராசரரின் கொள்கை.

1. விருஷ்யம்—2-வது பக்கத்தில் வாஜீகரணம் என்பதையும், 28-வது பக்கத்தில் விருஷ்யயோகம் என்பதையும் கவனிக்க.

2. ப்ரபாவம்—86-வது பக்கம் பார்க்க.

3. பெரும்பாலும் என்பதால் சில சரக்குகள் இராப்பகலுக்குப் பிறகும், சில அதற்குள்ளேயும் அதனதன் காரியத்தை நிறைவேற்று மெனக் கருத்து.

4. வியாநவாயு—100-வது பக்கம் பார்க்க.

இயல்பான காரியம் நிர்ணயித்துக் கூறப் பட்டது.[1] 70.

ஜாடராக்னியே அக்னிகள் அனைத்திலும் முக்கியமென்பதின் முகாந்தரம்.

சரீரத்தில் ஒவ்வொன்றையும் பக்குவம் செய்வதற்கான அக்னிகள் அனைத்திலும் ஆஹாரத்தைப் பசநம்செய்யும் ஜாடராக்னியே மேலானதென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், மறற எல்லா அக்னிகளும் ஜாடராக்னியை மூலமாகப் பெற்று,[2] அதன் விருத்திக்கும் க்ஷயத்திற்கும் தகுந்தவாறு முறையே விருத்தியையும் க்ஷயத்தையும் அடையக்கூடிய சுபாவமுடையவைகளாயிருக்கின்றன. ஆகையால் முறைதவறாமல் ஹிதமான அன்னபானங்களாகிற விறகுகளை உபயோகித்து, வெகு ஊக்கத்துடன் அவ்வக்னியைக் காத்துவரவேண்டும். ஜாடராக்னி நல்ல நிலைமையில் இருந்தால் ஆயுளும் தேஹ வலிமையும் நிலைத்திருக்கும்.[3] 71, 72.

ஸமானவாயுவின் நிலைமைக்கு ஏற்றவாறு ஜாடராக்னியின் நிலைமையின் மாறுதல்கள்.

ஸமானவாயு அதன் சுய ஸ்தானத்தில் இருக்கும்போது ஜாடராக்னியும் ஸமமான நிலைமையில் ஒழுங்காயிருக்கும்; அவ்வாயு தன் ஸ்தானம் விட்டு வேறு மார்க்கத்திற் பரவுமானால் அக்னியும் ஒழுங்கற்ற நிலைமையைப் பெறும்; அதே வாயு பித்தத்துடன் கலந்துவிடுமானால் ஜாடராக்னி தீக்ஷ்ணமான நிலைமையைப் பெறும்; அவ்வாயு கபத்தினால் தாக்கப்படுமானால் ஜாடராக்னி மந்தமாய் விடும். 73.

ஜாடராக்னியின் நான்குவித நிலைமைகள்.

அக்னியானது ஸமம், விஷமம், தீக்ஷ்ணம், மந்தம் என்று நான்கு வகைப்படும். எந்த அக்னியானது, யுக்தப்படி புஜித்த ஆஹாரத்தை நன்றாகப் பக்குவம் செய்துவிடுமோ அது ஸமாக்னி என்று வழங்கப்படும். முறைதவறாக உபயோகித்த உணவையும் எது சீக்கிரம் ஜீர்ணம் செய்துவிடுமோ, முறைப்படி உபயோகித்ததையும் எது வெகு மெதுவாகப் பக்குவம் செய்யுமோ அது விஷமாக்னி யென்று கூறப்படும். முறைகேடாக மிதமிஞ்சி உட்கொள்ளப்படும் உணவையும் எது எளிதில் பக்குவம் செய்து விடுகிறதோ அது தீக்ஷ்ணாக்னி யெனப்படும். யுக்தப்படி உபயோகித்த ஆஹாரத்தையும் வெகு மெதுவாகப் பக்குவம் செய்வதோடு, அதற்கு முன் நாவறட்சியையும், வயிற்றுப் பொருமலையும், வயிற்றில் இரைத்தலையும், வயிற்றில் பாரத்தையும் உண்டுபண்ணுவதான ஜாடராக்னியே மந்தாக்னி யென்று கூறப்படும். 74-76.

தேஹபலம் மூன்றுவிதம்.

ஸஹஜம் என்றும், காலத்தினால் ஏற்பட்டதென்றும், யுக்தியினால் ஆனதென்றும் இவ்வாறு தேஹ பலம் மூன்றுவிதமாகும். அவற்றுள் ஸத்வ-ரஜஸ்-தமஸ் என்னும் குணங்களால் தேஹத்தில் உற்பத்தியாயிருக்கும் பிரக்

1, இதற்குமுன் 55-வது ச்லோக மொழிபெயர்ப்பிற் கூறியவாறு காலத்திலுபயோகித்த உணவின் பசநசக்தியும், 59-வது ச்லோகத்தின்படி பார்த்திவாதி பூதங்களின் சூடும், 64-வது ச்லோகத்தின்படி தாதுக்களுடைய சூடும் ஆக மூன்று சூடுகள் குறிக்கப்பட்டன.

2. மூலம் என்பதால், ஒரு மரத்தின் வேரானது அந்த மரம் உற்பத்தியாய் வளருவதற்கும் நிலைத்து பலமாக நிற்பதற்கும் எவ்வளவு முக்கியமோ, ஜாடராக்னியும் மற்றவைகளுக்கு அவ்வளவு முக்கிய ஆதாரமானது என்று அறியப்படுகிறது.

3. "அக்னிமூலம் பலம் பும்ஸாம் பலமூலம் ஹி ஜீவிதம்"—"மனிதர்களுக்கு தேஹவலிமை ஜாடராக்னியை முக்கியாதாரமாயுடையது; அவர்கள் ஜீவித்து சுகமாய் வாழ்வதற்கு உடல்வலிமை மூலகாரணமாகும்" என்கிற விஷயம் இதனால் விவரிக்கப்பட்டதாகும்.



ருதி ஸம்பந்தம் பெற்றதான பலம் ஸஹஜ பலம் எனப்படும். வயதினாலும் ருதுக்களுடைய மாறுதல்களாலும் ஸம்பவிப்பது காலஜ பலம் எனப்படும். தகுந்த ஆஹாரவிஹாரங்களாலுண்டானதும், அங்ஙனமே பல்யமான ஔஷதங்களை உபயோகிப்பதால் ஸம்பவிப்பதும் யுக்திக்ருத பலம் எனப்படும். 77,78.

தேசம் மூன்றுவிதம்.

ஜலம் மரங்கள் மலைகள் இவற்றை மிகச் சொற்பமாயுடைய பிரதேசம் ஜாங்கலம் எனப்படும்; அது அதிக ரோகமுண்டுபண்ணுவதில்லை. அதிக ஜலத்துடன் கூடியதாய், விசேஷ மலைகளும் மரங்களும் அடர்ந்ததாயுள்ள பூமி ஆநூபம் என்று சொல்லப்படும்; இப்பிரதேசம் அதிகரோகங்களை யுண்டுபண்ணக்கூடியது. மரங்களும் மலைகளும் நடுத்தரமா யேற்பட்டு, மிதமிஞ்சாத ஜலத்துடன் கூடிய பிரதேசம் ஸமபூமி யெனப்படும். 79.

தேஹத்திலுள்ள அநேக தாதுக்களின் அளவுகள்.

மனித தேஹத்திலுள்ள மஜ்ஜை, மேதஸ், வஸா யென்னும் ஒருவித நிணநீர், மூத்திரம், பித்தம், கபம், மலம், இரத்தம், இரஸம், ஜலம் என்னும் ஒவ்வொரு பதார்த்தமும் ஒவ்வொரு அஞ்ஜலிப்பிரமாணம்[1] மேன்மேலும் அளவில் அதிகரித்ததாகும். ஓஜஸ், மஸ்திஷ்கம் என்கிற மூளை, சுக்ரம் இவை தனித்தனியே ஒவ்வொன்றும் அவரவருடைய கையளவின்படி ஒவ்வொரு பிரஸ்ருதமாகும்.[2] ஸ்த்ரீகளுக்கு முலைப்பால் இரண்டு அஞ்ஜலிப்பிரமாணமும், இரஜஸ் என்னும் ஆர்த்தவரத்தம் நான்கு அஞ்ஜலிப் பிரமாணமும் உண்டாகும். ஏழு தாதுக்களும் மூன்றுதோஷங்களும் எவருக்கு இயற்கையான ஆரோக்கிய நிலைமையில் ஸமமாயிருந்து வருகின்றனவோ, அவர்களுடைய தேஹத்திலேயே தாதுக்கள் முதலியவை முற்கூறிய நிலைமையில் இருந்துவருகின்றன வென்றும், இவற்றைக்கொண்டு மேற்கூறிய தாது முதலியவை விருத்தி க்ஷயங்களை அடையும் வகைகளையும் தெரிந்துகொள்ளக்கூடுமென்றும் அறிக. 80-82.

ஏழுவித பிரக்ருதிகள்.

சுக்ரம், ஆர்த்தவம் இவைகளிலும், கர்ப்பிணியின் தேஹத்திலும், அவள் புஜிக்கும் உணவிலும், அவள் செய்யும் காரியத்திலும், கருப்பையிலும், வஸந்தாதி ருதுவிலும் எந்த தோஷம் அதிகரித்திருக்குமோ அவ்வித தோஷத்தை ஆதாரமாகப் பெற்று ஏழுவிதபிரக்ருதிகள் உண்டாகும். 83.

வாததோஷம் அனைத்திலும் பிரபலமானது.

ஸர்வவியாபியாயிருப்பதாலும், வேலைகளை வெகு துரிதமாகச் செய்வதாலும், விசேஷ வலிமையைப் பெற்றிருப்பதாலும், இதர தோஷம் முதலியவற்றைப் பிரகோபிக்கச் செய்வதாலும், சுதந்திரமாயிருப்பதாலும், அதிக ரோகங்களை உண்டுபண்ணுந் தன்மையுடையதாலும் வாயுவே தோஷங்களுக்குள் பிரபலமானதாம்.[1] 84.

1. அஞ்ஜலியென்றால் 4-பலம்கொண்ட ஓர் அளவு; மஜ்ஜை ஒரு அஞ்ஜலியானால் மேதஸ் இரண்டு அஞ்ஜலியாகும். வஸா மூன்று அஞ்ஜலியாம். இவ்விதமே ஒவ்வொன்றும் ஒவ்வொரு அஞ்ஜலிவிதம் அளவில் அதிகரித்து, கடைசியிற்கூறிய ஜலம் 12 அஞ்ஜலியளவானதென்று அறிக.

2. பிரஸ்ருதம் என்பதற்கு இரண்டுபலம் அளவென்பது அர்த்தமானாலும், இங்கே ஒரு கை நிரம்பிய அளவென்பதே பொருளாம்; ஆகையினாலேயே 'அவரவருடைய கையளவின்படி' என்று கூறப்பட்டது.

1. தேஹத்தில் உள்ளும் புறமும் எல்லாப் பாகங்களிலும் வியாபித்திருப்பதாலேயே வாயுவை விபு என்பார்கள். பித்தமும் கபமும் வேலையில் மந்தமாயிருப்பதும், வாயு வெகுவலிவுடன் சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்வதும் வைத்தியசாஸ்திரம் அறிந்தவருக்குத் தெரிந்தவிஷயமே. "பித்தம் பங்கு கப: பங்கு: பங்கவோ மலதாதவ:. வாயுநா யத்ர நீயந்தே தத்ர கச்சந்தி மேகவத்" என்னும் பிரமாணப்படி வாயு மற்றத் தோஷங்களைப் பிரகோபிக்கச்செய்வதாகவும் சுதந்திரம்பெற்றதாகவும் இருப்பதாகக் கூறப்பட்டது. கபம் இருபது வியாதிகளையும், பித்தம் நாற்பது வியாதிகளையும், வாயு எண்பது வியாதிகளையும் உண்டுபண்ணும்.

ஆகையினாலேயே, வாததோஷத்தை இயற்கையிலேயே அதிகமாகப் படைத்த மனிதர்கள் பொல்லாத குணமுடையவராகவும், உடலும் உரோமங்களும் வெடித்து மலினமாய் விகாரமடைந்தவராகவும், குளிர்ச்சியான வஸ்துக்களை வெறுப்பவராகவும், தைரியம் - நினைவு-புத்தி-நடத்தை-நட்பு-பார்வை - மனப்போக்கு அல்லது வெளிக்காரியத்தின் போக்கு இவற்றில் நிலையற்றவராகவும், மிகவும் அதிகமாகப் பேசுமியல்பினராகவும் இருப்பர். மேலும் வாதப்ரக்ருதியா யிருப்பவருக்கு பித்தம், தேஹவலிமை, ஆயுள், நித்திரை இவை சொற்பமாயிருக்கும் ; அவர்கள் அற்பமாகவும், அடிக்கடி நிறுத்தி நிறுத்தியும், சிதறி முன்பின் ஸம்பந்தமற்றும் பேசுவார்கள். நாஸ்திகர்களாகவும், அதிக உணவுகளைப் புஜிப்பவராகவும், களித்து விளையாடுபவராகவும், ஸங்கீதம்—ஹாஸ்யம்-வேட்டை-பாபக்ருத்யங்கள் இவற்றில் மனதைச் செலுத்துபவராகவும் இருப்பர். மதுரரஸம், இலவணரஸம், கடுரஸம், உஷ்ணவீர்யம், மற்றும் ஸாத்மியமான விஷயங்கள் இவற்றில் விருப்பமுள்ளவர்களாகவும், இளைத்து ஒல்லியாக நீண்ட உருவங்களுள்ளவர்களாகவும், உரத்த சப்தமுண்டாகுமாறு நடந்துச் செல்லுபவராகவும் காணப்படுவர். அவர்களுக்கு உடலில் திடம் இராது. இந்த்ரியங்களை அடக்கியாளக்கூடாதவராயிருப்பர். ஆர்யர் எனத்தகுந்த குணங்களும் அவர்களிடம் காணமுடியாது. ஸ்த்ரீகளால் காதலிக்கக் கூடியவர்களாகவாவது, விசேஷமாகப் பிரஜைகளைப் பெறுபவர்களாகவாவது இருக்கமாட்டார். இவர்களுடைய கண்கள் பசையற்று மலினமாகவும், வட்டமாகவும், பார்ப்பதற்குப் பிரியபடாதவையாகவும், இறந்தவர்களுடைய கண்களுக்கு ஒப்பிடக்கூடியவையாகவும், நித்திரையுறும்போது விழித்திருப்பவை போலவே தோற்றுந் தன்மையனவாகவும் இருக்கும். தூங்கும்பொழுது பர்வதங்களின்மீதும், மரங்களின்மீதும், ஆகாயத்திலும் ஸஞ்சரிப்பதாக ஸ்வப்னங்களைக் காணுவர். மேலும் வாதப்பிரக்ருதியுள்ளவர், சீர்மையற்றவராகவும், பொறாமையுள்ளவராகவும், களவாடுபவராகவும், திரண்டுருண்டு மிகவும் கரடுகட்டிய ஆடுச் சதையுள்ளவராகவும் இருப்பர். நாய், நரி, ஒட்டகம், கழுகு, பெருச்சாளி, காகம் இவற்றின் இனத்தைச் சேர்ந்தவருமாவர். 85-89.

*வாதப்பிரக்ருதிகளின் இலக்ஷணங்கள்.*

பித்தம் என்பதே தேஹத்தில் அக்னியென்று வழங்கப்படுகிறது ; அல்லது பித்தம் அக்னியிலிருந்து உண்டாகும் அதன் அம்சமான ஒரு தாதுவாகவும் கருதப்படுகிறது. அப்பித்தத்தைப் பிரதான தோஷமாகக்கொண்டு பிறந்தவன் பித்தப்பிரகிருதி யெனப்படுவான். அவ்விதமான பிரக்ருதியுள்ளவனுக்கு நாவறட்சியும் பசியும் தீவ்ரமாயுண்டாகும் ; அவனுடல் ஒருவாறு மஞ்சள் நிறமாகவும், சூடாகவும், செந்நிறமான கை கால் முகங்களுடன்கூடியதாகவும் இருக்கும்; அவனுடைய உரோமங்கள் சொற்பமாகவும் பொன்னிறமாகவும் இருக்கும்; அவன் சூரனாகவும் மானியாகவும் இருப்பான். புஷ்பங்கள், நறுமணமுள்ள பூச்சுகள், அலங்காரங்கள் இவற்றில் விருப்பமுள்ளவனாகவும், நன்னடக்கையுடையவனாகவும், பரிசுத்தனாகவும், தன்னை அடுத்திருப்பவரிடம் அன்பு பாராட்டுபவனாகவும், ஐச்வர்யம்-ஸாஹஸமான காரியங்களில் பிரவ்ருத்தி - புத்திவன்மை இவற்றுடன்கூடியவனாகவும், ஆபத்து நேரிடும் ஸமயங்களில் பகைவரையும் காத்து இரக்ஷிக்குந் தன்மையனாகவும் இருப்பான். மேதாவியாகவும், தளர்ச்சியடைந்த ஸந்திபந்தங்களையும் தசைநார்களையுமுடைய தேஹத்துடன் கூடியவனாகவும் இருப்பான். அவனுக்கு சுக்ரமும் காமமும் சொற்பமாயிருக்கும்; ஆகவே அவனை ஸ்த்ரீகள் காதலுடன் விரும்பமாட்டார்கள். நரை திரைகளென்ன, மச்சைகள் என்கிற மருக்களென்ன இவற்றிற்கு இருப்பிடமானவன். இனிப்பாகவும் துவர்ப்பாகவும் கைப்பாகவுமுள்ள உணவுகளைப் புஜிப்பதில் விருப்பமுள்ளவனாயிருப்பன். தர்மத்தில் வெறுப்புள்ளவனாகவும், விசேஷமாய் வியர்க்குமியல்பினனாகவும், சவர் நாற்றமுடையவனாகவும், பேசுதல் - கோபித்தல் - பானம்செய்தல் - உண்ணுதல் இவற்றில் அதிகமாகப் பிரவ்ருத்தியுள்ளவனாகவும், அமித பொறாமைக்காரனாகவும் இருப்பன். நித்திரை போகும்போது சரக்கொன்றை, பலாசு முதலிய மரங்களையும், திசைகள் எரிவதையும், கொள்ளிக்கட்டைகளையும், மின்னலையும், சூரியனையும், அக்னியையும் அவன் காண்பான். பித்தப் பிரக்ருதியான மனிதர்களுடைய கண்கள் சிறியவையாகவும், பென்னிறமாகவும், எப்பொழுதும் நிலையற்று அசைபவையாகவும், குட்டையான சொற்ப இமை மயிர்களையுடையவையாகவும், குளிர்ச்சியை விரும்புபவையாகவும், கோபம் மதுபானம் சூரியவெளிச்சம் இவற்றால் எளிதில் சிவந்து விடுபவையாகவும் இருக்கும். பித்தப் பிரக்ருதிகளுக்கு ஆயுள் காலம் அதிகமாகவுமில்லாமல் குறைவாகவுமில்லாமல் மத்திமமாயிருக்கும் ; தேஹவன்மையும் அவ்விதமே மத்திமமாயிருக்கும் ; இவர்கள் பண்டிதர்களாகவும், கிலேசங்களைக் கண்டு அஞ்சுந்தன்மையராகவும் இருப்பர். குணத்தில் புலி, கரடி, குரங்கு, பூனை, காகம் இவற்றின் இனத்தைச் சேர்ந்தவராவர். 90—95.

*பித்தப்பிரக்ருதிகளின் குணங்கள்.*

கபமானது ஸோமஸ்வரூபமானது[1] ; ஆகவே கபப்பிரக்ருதியாயிருப்பவன் ஸௌம்யகுணமுள்ளவனாயிருப்பன்.[2] இவனுடைய தேஹத்திலுள்ள பூட்டுகளும், எலும்புகளும், தசைநார்களும் முன்னுக்குப் பிதுங்கிவராமல் உள்ளடங்கியும், ஸ்நிக்த்தமாகவும், ஒன்றோடொன்று நன்கு இணைந்தவையாகவும் இருக்கும். பசி, தாஹம், துயரம், மற்றுமுள்ள கிலேசம் முதலிய தீவினைகளால் இவனுக்குத் துன்பமுண்டாவதில்லை; நற்புத்தியினால் நன்கு விளங்குவன் ; ஸாத்விககுணமுள்ளவன்; ஸத்தியந்தவறாதவன். ஞாழல், அறுகம் புற்றண்டு, வழற்றண்டு, நன்றாகத்தீட்டிய ஆயுதம், கோரோசனை, தாமரைப்பூ, பொன் இவற்றிற்கு ஸமானமான நிறமுடையவனாய், கைகள் நீண்டு, பருத்து விசாலமான மார்பையும், அகன்ற நெற்றியையும், கறுத்து அடர்த்தியான தலைமயிரையும் உடையவனாயிருப்பான். அவனுடைய அவயவங்கள் மிருதுவாயிருக்கும்; உடம்பு மேடுபள்ளமில்லாமல் மிகவும் அழகாயிருக்கும்; ஓஜஸ் மிகவும் செழித்திருக்கும் ; புணர்ச்சியில் ஆசையும், சுக்ரமும் அதிகமாயிருக்கும் ; ஸந்தான விருத்தியையும் ஸேவகஸமூஹத்தையும் விசேஷமாகப் பெற்றிருப்பான்; அவன் தர்மாத்மாவாகவும் இருப்பன் ; ஒருக்காலும் கடுமையாகப் பேசமாட்டான்; ஒருவரிடம் த்வேஷமுண்டானால் அது திடமாகவும் ஒருவரும் அறிய முடியாததாகவும் அவனுடைய மனதில் வெகுநாள் நிலைத்திருக்கும். நன்கு மதங்கொண்ட மிகப் பெரிய யானையைப்போல நடப்பான். மேகம், கடல், மிருதங்கம், சிங்கம் இவற்றிற்கு இருப்பதுபோல கம்பீரமான தொனியுடையவன்; சிறந்த ஞாபகசக்தி யுடையவனாயிருப்பன் ; பகைவரைத் தாக்குவதில் மிகத் திறமையுள்ளவன்; வணக்கமும் அதிகமாய் உண்டு; இளங் குழந்தைப் பருவத்திலும் அதிகமாய் அழுவது அரிது ; சபலபுத்தியுள்ளவனாகவும் இருக்கமாட்டான். கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு, இச்சுவைகளும் உஷ்ண வீர்யமும் தீக்ஷ்ண குணமுமுள்ள உணவுகளைச் சொற்பமாகப் புஜிப்பான்; ஆகிலும் நல்ல தேஹவலிமையுள்ளவனாயிருப்பான். இவனுடைய நேத்திரம் ஓரங்களிற் சிவந்தும், மிகவும் ஸ்நிக்த்தமாகவும், விசாலமாகவும், நீண்டும், மிகத் தெளிவுற்றதாகவும், வெண்ணிறம் பொருந்தியதாகவும், அடர்த்தியாகக் கறுத்து வளர்ந்த புருவமயிர்

*கபப் பிரக்ருதியின் குணங்கள்.*

1. ஸோமஸ்வரூபம்—குளிர்ந்த சுபாவம். [ஸோமன் என்றால் சந்திரன்; குளிர்ந்த குணம் சந்திரனுக்கிருப்பதால் அவ்வித குணமுள்ள மற்றவையும் இங்கு ஸௌமஸ்வரூபங்கள் எனப்படுகின்றன.]

2. ஸோமஸம்பந்தமானது ஸௌம்யம்; குளிர்ச்சியும் இன்பமும் பொருந்தியதெனப் பொருள்.

களை யுடையதாகவும் இருக்கும். பேசுவது, கோபிப்பது, பானம் செய்வது, உண்பது, ஆசைப்படுவது இவை இவனிடம் சொற்பமாயிருக்கும்; ஆயுளும செல்வமும் மிகவும் ஏராளமானது; வரப்போகிற விஷயங்களையெல்லாம் நன்றாக யோசித்து அறியுமியல் புடையவன்; நல்ல கொடையாளியாயிருப்பான்; செய்யவேண்டிய வேலைகளில் சிரத்தையுள்ளவன்; கம்பீரக்கொள்கையும், அதிக தானம் செய்வதில் ஆசையும், பொறுமையும் விசேஷமாய் உண்டு; ஆர்யன் என்று சொல்லக்கூடிய குணங்களுடையவனாகவும், அதிகமாய் நித்திரை யுறுபவனாகவும், வெகு மெதுவாக வேலைகளைச் செய்யுமியல்பினனாகவும், நன்றியறிவுள்ளவனாகவும் இருப்பான். ருஜுவான மார்க்கத்திற் செல்பவன். நல்ல படிப்பாளியாயிருப்பான். ஸௌபாக்யம் நிறைந்தவன்; விசேஷ லஜ்ஜையுமுள்ளவன்; ஆசார்யர்களிடத்தில் பக்தியுள்ளவன்; நிலைகுலையாத நட்பு பாராட்டுபவன்; ஸ்வப்னத்தில தாமரைப்பூக்களும் நீர் வாழும் பக்ஷிகளும் நிரம்பிய நீரோடைகளையும் மேகங்களையும் காண்பான். கபப்பிரக்ருதியான மனிதர் குணத்தில் பிரம்மதேவன், சிவன், இந்திரன், வருணன், கருடன், அன்னப்பறவை, யானை, சிங்கம், குதிரை, விருஷபம் இவற்றின் இனத்தைச் சேர்ந்தவராவர். 96—103.

*ஸம்ஸர்க்க-ஸந்நிபாதப் பிரக்ருதிகளின் குணங்கள்.*

இரண்டிரண்டு தோஷங்களுடைய குணங்கள் எவரிடமாகிலும் ஒருமிக்கக் காணப்படுமாயின், அவர்களை த்வந்தவதோஷங்களாலான பிரக்ருதிகள் என்றும்,[1] எல்லாத்தோஷங்களின் குணங்களும் காணப்படுமானல் அவர்களை ஸந்நிபாதப்பிரக்ருதிகள் என்றும் அறிக. 103½.

1. வாத-பித்தப்பிரக்ருதி, வாத-கபப்பிரக்ருதி, பித்த-கபப்பிரக்ருதி என்பவை த்வந்தவ தோஷங்களாலான மூன்று பிரக்ருதிகள் : வாத-பித்த-கபங்களாலானது ஸந்நிபாதப் பிரக்ருதியாம்.

*ஸாத்விக ராஜஸ தாமஸப் பிரக்ருதிகள்.*

மனோவாக் காயங்களால் பரிசுத்தமா யிருத்தல், ஆஸ்திகனாயிருத்தல் முதலிய குணங்களாலும், அங்ஙனமே ஸாத்விக-ராஜஸ-தாமஸ குணங்கள் மயமான பிரக்ருதிகளையும் கூறவேண்டும்.[1] 104.

*வயதின் மூன்றுவித நிலைமைகளும் தாதுக்களின் விருத்திக்ஷயங்களும்.*

பதினறுவது வயதுவரையில் மனிதர் பாலர் எனப்படுவர்; அவ்வயதில் தாதுக்களுக்கும், இந்த்ரியங்களுக்கும், ஓஜஸ்ஸுக்கும் விருத்தியுண்டாகும். எழுபதாவது வயதுவரையில் மத்திம வயதினர் எனப்படுவார்கள்; அவ்வயதில் தாது முதலியவைகள் விருத்தியாகமாட்டா. அந்திம வயதான எழுபதுவயதுக்குமேல் தாதுமுதலியவை க்ஷீணித்துவரும். 105.

*ஆயுளாரோக்கியங்களுக்கு ஆதாரமான உடலின் அளவு.*

ஒவ்வொருவருடைய தேஹமும் அவரவருடைய கையால் மூன்றரை முழம் உயரமுள்ளதாயிருக்கும். அதுதேஹமே சுகத்திற்கும், ஆயுளுக்கும் ஆதாரமாகின்றது. 105½.

*ஆயுளாரோக்கியங்களுக்கு அநுகூல மாகாத உடலின் நிலைமை.*

நிந்திக்கப்பட்ட எட்டுவிதமான மிதமிஞ்சிய இயற்கை இலக்ஷணங்கள் முற்றிலும் உரோமங்கள் இல்லாததும், அதிக உரோமங்களைப் பெற்றதும், அதிக கறுப்பானதும், அதிக வெண்மையானதும், அதிக ஸ்தூலமானதும், மிகவும் மெலிந்ததும், அதிக உயரமானதும், அதிக குட்டையாயிருப்பதுமான யாதொரு தேஹமுண்டோ அது சுகத்திற்காவது ஆயுளுக்காவது அநுகூலமானதல்ல. 106½.

1. வாதாதிப்பிரக்ருதிகளைப் போலவே, ஸாத்விகாதிப் பிரக்ருதிகளும் எழுவிதமாம். ஸாத்விகப் பிரக்ருதி, ராஜஸப்பிரக்ருதி, தாமஸப்பிரக்ருதி, ஸாத்விக-ராஜஸப்பிரக்ருதி, ஸாத்விக தாமஸப்பிரக்ருதி, ராஜஸ-தாமஸப்பிரக்ருதி, ஸாத்விக ராஜஸ தாமஸப்பிரக்ருதியென்பனவாம்.



*ஆரோக்கியநிலைமையில் அவயவங்கள் அமைந்திருக்கும் ஒழுங்குகள்.*

தலைமயிர்கள் மிகவும் ஸ்நிக்த்தங்களாகவும், மிருதுவாகவும், மெல்லியனவையாகவும், அநேகம் வேர்களுடையவையாகவும், உதிர்ந்துவிடாமல் நன்கு நிலைபொருந்தியவையாகவும் இருக்கும். நெற்றியானது உயர்ந்து, கன்னங்கள் வரையில் நீண்டு, கன்னங்களிற்பள்ளமில்லாமல், எட்டாம்பிறைச் சந்திரனைப் போன்றதாயிருக்கும். காதுகள் அடியிற் சிறுத்து, மேற்புறம பருத்து, பின்பக்கத்தில் அகன்று, கன்னத்துடன் அழகாய் இணைந்து, சதைபருத்திருக்கும். கண்கள் நன்கு விளக்கமான கறுத்த பாகத்தையும் வெளுத்த பாகத்தையும் பெற்று, ஸந்திகளில நன்றாக இணைக்கப்பட்டு, அடர்த்தியான இமைமயிர்களையும் புருவங்களையும் பெறறிருக்கும். நாசியானது உன்னதமான முனையையுடையதாகவும், தாராளமாகப் பெருமூச்சுவிடக்கூடியதாகவும், நேர்மையாகச் சதைபருத்து நீண்டு மேடு பள்ளமற்றதாகவும் இருக்கும. உதடுகள் சிவந்து, அதிகமாகப் பிதுங்கி வெளிவராதவையாய் அழகாய் அமைந்திருக்கும். தவடைகள் விசாலமாகவும், அதிக உயரமில்லாமல் பருத்தும் ஒழுங்காகக் காணப்படும். வாய் நன்கு விசாலமாயிருக்கும். பற்கள் கெட்டியாகப் பருத்தவையாகவும், ஸ்நிக்த்தங்களாகவும், வழுழுண்டவையாகவும், வெண்மையாகவும், மேடுபள்ளமில்லாதவையாகவும் அமைந்திருக்கும். நாக்கு சென்னிறமாகவும், நீண்டதாகவும், மெல்லியதாகவும் இருக்கும். முகவாய்க்கட்டையானது சதைபருத்து விசாலமானதாயிருக்கும். கழுத்து அதிக உயரமில்லாமல் நன்றாகப் பருத்து வட்டமாயிருக்கும். தோள்கள் உயர்ந்து மிகச் சதைபருத்துக் காணும். வயிறனது வலதுபுறமாகச் சுழன்று ஆழமாய் அமைந்த நாபியுடன்கூடியதாய் மேலெழுந்து உயர்ந்து நிற்கும். கை கால்கள் மெல்லிதாகவும், சிவந்தும் உன்னதமுமான நகங்களுடன் கூடியவையாகவும், ஸ்நிக்த்தமாகவும், ஒருவாறு சிவந்தவையாகவும், சதை பெருத்தவையாகவும், நீண்டு இடையிடையில் த்வாரங்களில்லாமல் ஒழுங்காய் அமைந்துள்ள விரல்களுடன் கூடியவையாகவும், பெரிதாகவும் அமைந்திருக்கும். முள்ளந்தண்டு எனப்படும் வம்சாஸ்தியானது மேலுக்குத்தெரியாமல் மறைந்து, முதுகு விசாலமாகச் சதைபெருத்துக் காணும். ஸந்திபாகங்கள் யாவும் திடமாகவும் மேடுபள்ளம் தெரியாமல் மறைந்துமிருக்கும். 107—113.

*மனிதனுக்கு வேறுசிலசிறந்த இயற்கைக் குணங்கள்.*

குரலானது கம்பீரமாகவும், எதிரொலியுண்டாக்குந் தன்மையதாகவும் இருக்கும். தேஹநிறம் ஸ்நிக்த்தமாகவும, நிலையான ஒளியுள்ளதாகவும் ஏற்பட்டிருக்கும். இயற்கையிலுண்டான தேஹமனோபலமானது அழிவுறாததாகவும், ஆபத்துக்களிலும் விகாரமடையாததுமாயிருக்கும். 114.

*சிறந்ததேஹத்திற்குள்ள தாரதம்யம்.*

முற்கூறிய குணங்களுள் மேன்மேலுமுள்ள எல்லாக் குணங்களும் ஒருவனுக்குக் கிரமமாகக் கூடியிருந்தால், அவனுடைய தேஹம் மிகச் சிறந்ததாகும[1] ; அவ்வி

1. சிறந்த தேஹம் சுபமானது, சுபதரமானது, சுபதமமானது என்று மூன்றுவிதமாகப் பகுக்கப்படும். அவற்றுள் 106 - வது ச்லோகத்தின் மொழிபெயர்ப்பில் "ஒவ்வொருவருடைய தேஹமும் அவரவருடைய கையால் மூன்றரை முழம்" என்பது முதலாகக் கூறப்பட்ட விதமாய் அமைந்துள்ள தேஹம சுபம் என்றும், 107-வது முதல் 113-வது ச்லோகத்து மொழிபெயர்ப்பு வரையில் "தலைமயிர்கள் மிகவும் ஸ்நிக்த்தங்களாகவும்" என்பதுமுதலியதால் விவரிக்கப்பட்ட இலக்ஷணங்களும் முற்கூறிய குணங்களோடு சேர்ந்திருந்தால் அத்தேஹம சுபதரம் என்றும், 114-வது ச்லோகத்தின் மொழிபெயர்ப்பான "குரலானது கம்பீரமாகவும், எதிரொலி யுண்டாக்கும் தனமையதாகவும்" என்பதுமுதலியதால் விவரிக்கபபட்ட இலக்ஷணங்களும் முற்கூறிய எல்லாக்குணங்களோடும் கூடியிருந்தால் அத்தேஹம் சுபதமமானது என்றும் வழங்கப்படும் என்பதே இதன் கருத்தாகும்.

தமே கர்ப்பவாஸம் முதற்கொண்டு எப்பொழுதும் பிணியற்றிருக்கும் தேஹமும், உருவத்தில் உயர்வு-உலக அறிவு, சாஸ்திரஞ்ஞானம் இவை எவருக்குக் கிரமமாக மெள்ளமெள்ள விருத்தியாகின்றதோ அவர்களுடைய தேஹமும் மிகவும் சிறந்ததாகும். 115.

ஸகலசிறப்பும் வாய்ந்ததேஹத்திற்குள்ளமேன்மை.

முற்கூறியவாறு ஒருவனுடைய தேஹத்தில் ஸகல குணங்களும் நிரம்பியிருக்குமாயின், நூறுண்டௗவும் ஆயுளும், ஐச்வர்யமும், மற்றும் இஷ்டமான ஸகல விஷயங்களும் அவனுக்குப் பொருந்தி யிருக்கும். 116.

எட்டுவிதஸாரங்களைப்பெற்றவனுக்குள்ளமேன்மை.

பிராணிகளின் சர்மம் இரத்தம் இவை முதலாக ஸத்துவம் வரையிலுமுள்ள எட்டுவிதமான ஸாரங்களும்[1] மேன்மேலும் சிரேஷ்டமானவையாம்; தேஹவன்மையென்ன, ஆயுளின் அளவென்ன இவற்றை அறிவதன்பொருட்டு இவை இவ்வாறு விவரிக்கப்பட்டன. இந்த ஸாரங்கள் அனைத்தையும் ஏற்றவாறு பெற்றிருப்பவன் மிகவும் கௌரவசாலியாய், எல்லாமுயற்சிகளிலும் ஆசையுடையவனாய், பெறுமையுள்ளவனாய், மதியிற் சிறந்தவனாய், செய்யும்காரியங்களில் திடமான நோக்கமுள்ளவனாய் விளங்குவான். 117, 118.

ஸாத்விக-ராஜஸ- தாமஸர்களின் விசேஷகுணங்கள்.

ஸத்வ குணமுள்ளவன் தனக்கு ஸுகம் நேரிட்டதானால் அதை அஹங்கார மின்றியும், துன்பம் ஸம்பவித்ததானால் அதை எளிமையை விளக்காமலும் அநுபவிப்பான். இரஜோகுணமுள்ளவனோ ஸுகத்தை அஹங்காரத்தோடும், துக்கத்தை மிகவும் ஸந்தோஷத்தோடும் அநுபவிப்பான். தாமஸகுணமுள்ளவனோஇன்பத்தை இன்பமாகவும் துன்பத்தைத் துன்பமாகவும் நினைத்து அநுபவிக்க வல்லவனல்ல.[1] 119.

ஆயுளையும்புண்ணியத் தையும் விருத்திசெய்யுங் குணங்கள்.

கொடை, நன்னடக்கை, மனவிரக்கம், உண்மையுரைத்தல், பிரம்மசர்யவ்ரதம், நன்றியறிதல், இரஸாயநங்களை[2] உபயோகித்தல், அன்பு என்னும் இவையெல்லாம் அததற்குத் தகுந்தவாறு மனிதனுக்குப் புண்ணியத்தையும், ஆயுளையும் விருத்திசெய்யக் கூடிய குணங்களாகும். 120.

---

1. சர்மம் இரத்தம், மாம்ஸம், மேதஸ் என்னும் கொழுப்பு, அஸ்த்தி, மஜ்ஜை, சுக்ரம், ஸத்துவம் என்பவை எட்டுவித ஸாரங்கள். ஸத்துவம் என்று இங்கு சொல்லப்படுவது ஓஜஸ் என்னும் தாதுவாகும்.

1. ஸாத்விகன் ஸுகத்தை ஸுகமாய் அறிந்து அனுபவித்தும் அதனால் அஹங்காரமடையமாட்டான். துன்பத்தில் தனது எளிமையையும் காட்டமாட்டான். இராஜஸப்பிரக்ருதி இதற்கு நேர் எதிரிடையான சுபாவமுள்ளவனாய் இருப்பன். தாமஸப்பிரக்ருதியே இன்பத்தை இன்பமாகவும் துன்பத்தைத் துயரமாகவும் கருதி அநுபவிக்கத்தெரியாதவனா யிருப்பான்.

2. கிழத்தனத்தைப் போக்கி வியாதிகளை அகற்றி ஆயுளை அபிவிருத்தி செய்யும் சிகித்ஸைகள் அல்லது ஔஷதங்கள் இரஸாயநங்கள் எனப்படும்.



## மூன்றுவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட விஷயங்களுக்கு அவசியமான சித்திரப்படங்கள்.




சர்மத்தைக் குறுக்காக வெட்டி பூதக்கண்ணாடியில் பார்த்தால் தோன்றும், வகையைக் காட்டும் படம்.

சர்மத்தைப் பொதுவாக பாஹ்யசர்மம், ஆந்தரசர்மம் (உள்தோல், மேல்தோல்) என்று இரண்டுவிதமாக இக்காலத்தியவர் கூறுவர். ஆனால் ஆயுர்வேதத்திற் கூறப்பட்டபடி சர்மத்தில் ஏழுவிதமான பாகங்கள் உண்டு: அவபாஸிநீ யென்னும் நிறப்பொருள் அடங்கிய வெளியில் அவனவனுடைய இயற்கை நிறங்களை விளக்கும் பாகம் ஒன்று. இரண்டாவது இரத்தக்குழாய்கள் வியாபித்துள்ள லோஹிதா என்கிற பாகம். மூன்றுவது கொழுப்பு அடங்கிய ச்வேதா என்கிற பாகம். நான்காவது வெண்சிவப்பான தாம்ராயென்னும் கலையடங்கிய பாகம். ஐந்தாவது நரம்புகளின் இழைகள் அடங்கிய வேதிநீயென்னும் பாகம். ஆறுவது மேன்மேலும் புதிய சர்மங்களைக் கிளப்பி வெளித்தள்ளுவதும் உரோமங்களை முளைக்கச்செய்வதுமான ரோஹிணீயென்னும் பாகம். ஏழாவது மாம்ஸபேசிகளுக்கு மேலே ஆவரணமாய் அமைந்துள்ள மாம்ஸதராயென்னும் சர்மமாகும்.

1. மயிர்களின் வேர்கள். 2. ஒருவித ஸ்நேஹகோளங்கள். 3. ஸ்வேதக்கிரந்திகள் (அல்லது வியர்வைக்கோளங்கள்.) 4. ஸ்வேதக்கிரந்திகளின் மேற்புறம் சர்மத்தின்மேல் வாய் திறக்கும் வகை. 5. 5. பரிசத்திற்கான கணங்கள். 6. வர்ணத்திரவ்யபடலம் (அல்லது மைப்படை). இந்த நிறப்பொருள் பாஹ்பசர்மமும் ஆந்தரசர்மமும் ஒன்று கூடுமிடத்தில் சேர்ந்திருக்கிறது. 7. தமனிகளின் கேசநாளங்கள். 8. ஸிரைகளின் கேசநாளங்கள். 9. 9. கொழுப்புக்கணங்கள். 10. உரோமங்களை நிமிர்த்தித்தள்ளும் தசைநார்கள்.



கங்காளம் அல்லது எலும்புக்கூடு.

உட்புறமாகவும் வெளிப்புறமாகவுமுள்ள அநேகம் தாதுக்களும் அவற்றாலான அவயவங்களும் தங்கிநிற்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ள மனிதனுடைய முழு எலும்புச்சட்டத்தின் கோவை இப்படத்தினால் குறிக்கப்படுகின்றது.



கரோடியென்னும் மண்டையெலும்புக்கூட்டையும், முகாஸ்த்தி மண்டலத்தையும், அதன் கீழ் முதுகுப்பக்கமாய் அமைந்துள்ள வம்சாஸ்த்தியென்னும் முள்ளந்தண்டு எலும்புகளையும் விளக்கும் படம். மண்டையெலும்புக்கூட்டில் 8 கபாலாஸ்த்திகளும், முகாஸ்த்தி மண்டலத்தில் 14 எலும்புகளும், முள்ளந்தண்டில் கசேருகங்கள் என்னும் 33 எலும்புகளும் சேர்ந்திருக்கின்றன.



கசேருகங்கள்.

முள்ளந்தண்டெலும்புகளில் முதல் கசேருகமும் இரண்டாவது கசேருகமும் இப்படத்தில் குறிக்கப்படுகின்றன. முதல் கசேருகாஸ்த்தியின் நடுவிலுள்ள த்வாரம் எல்லாவற்றினும் விசாலமானது. இரண்டாவது கசேருகத்தில் நீண்டதோர் முளை காணப்படும். அந்த முளை முதல் கசேருகத்தின் பெரிய த்வாரத்தில் நுழைக்கப்பட்டு, சிரஸ்ஸை நாலாப் பக்கங்களிலும் அசைக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது.





வங்க்ஷண ஸந்தியைக் காட்டும் படம்.

தொடையெலும்பின் குமிழ்போன்ற மேல் முனையும், ச்ரோணிபலகமென்கிற கூபகாஸ்த்தியின் குழிபோன்ற பாகமும் ஒன்றுகூடும் இடத்திற்கு வங்க்ஷணஸந்தியெனப் பெயர். தேஹத்தில் அநேகம் ஸந்திகள் உண்டு. அவற்றுள் திருஷ்டாந்தத்தின் பொருட்டு இந்த ஸந்தி ஒன்றுமாத்திரம் இங்கே காட்டப்பட்டது.



தாமரை மொக்குபோன்ற இருதயம் சவ்வுக் கவசம் எனப்படும் கலையினால் மூடப்பட்டு, சில பெரிய இரத்தக்குழாய்களுடன் கூடியிருக்கும் வகை இதில் விளக்கப்பட்டிருக்கிறது. இதில் மஹாதமனீயென்னும் பெரிய செவ்விரத்தக் குழாய் மேல்நோக்கியேறி, மீண்டும் வளைந்து கீழே இறங்கியிருப்பதையும், மேலிருந்து ஒரு மஹாஸிரையும் (காரிரத்தக்குழாய்), கீழிருந்து ஒரு மஹாஸிரையும் இதில் வந்து சேருவதையும், மஹா தமனியிலிருந்து முக்கியமான இரண்டு கிளை தமனிகள் பிரிந்து மேல்நோக்கிச் செல்வதுபோல் குறிக்கப்பட்டிருப்பதையும் காண்க. ஒவ்வொரு மஹாஸிரையிலும் சில கிளைகளும் காணப்படுகின்றன.

ஹ்ருதயம், (இருதயம்.)
(அல்லது இரத்தாசயம்)



குறுக்காக அறுக்கப்பட்ட இருதயத்தினுடைய வலது பாகத்தின் தோற்றம்.

[இருதயம் மாம்ஸபேசியினாலான ஒரு ஆசயம். இதனுள் மேலே இரண்டு அறைகளும், கீழே இரண்டு அறைகளும், மேல் அறைகளுக்கு ஆதார கோசங்கள் என்றும், கீழ் அறைகளுக்கு விஸர்க்க கோசங்கள் என்றும் பெயர். அவை முறையே கர்ணங்கள் என்றும் ஜடரங்கள் என்றுங்கூட விவஹரிக்கப்படும். வலது ஆதார கோசத்திற்கும் வலது விஸர்க்க கோசத்திற்கும் இடையிலுள்ள த்வா

ரத்தை மூடுவதற்கு "த்ரிபுட கவாடம்" ஒன்றுண்டு. இடது ஆதார விஸர்க்க கோசங்களுக்கு நடுவிலுள்ள த்வாரத்தை மூடுவதற்கு "த்விபுட கவாடம்" ஒன்று இருக்கிறது. ஆதார கோசத்திலிருந்து விஸர்க்ககோசத்திற்கு இரத்தம் போவதற்கு இக்கவாடங்கள் வழிவிடுமேயன்றி, விஸர்க்க கோசங்களிலிருந்து ஆதாரகோசங்களுக்கு இரத்தம் திரும்பிப்போகாமல் அவ்வழிகளை இவை இறுக அடைத்துவிடும். அவ்வாறு அடைக்கும்போது கவாடங்கள் ஆதார கோசத்தின் பக்கமாய் முற்றிலும் மடிந்துவிடாதபடி இழுத்துப் பிடிக்க இவைகளிலிருந்து சில நரம்புகளைப்போன்ற ஸூத்திரங்கள் இருதயத்தினுள்ளிருக்கும் பேசி சிகரங்களில் இணைந்திருப்பதைக் கவனிக்க.]

1, ஊர்த்வ மஹா ஸிரை. 2, அதோ மஹா ஸிரை. 3, வலது ஆதாரகோசம்; வலது 4, வலது விஸர்க்க கோசத்தின் உட்புறம்; இங்கிருந்து புப்புஸ தமனீ புறப்படுகிறது; இந்த தமனிபுறப்படுமிடத்தில் அர்த்தசந்திரகவாடம் இருப்பதைக் காணலாம்; 4-வது விஸர்க்க கோசத்திற்குள் இருக்கும் மாம்ஸ பேசிகளின் சிகரம். 5, த்ரிபுட கவாடத்தின் பிறைகள். 6, புப்புஸ தமனீ. 7, வலது இடது புப்புஸங்களுக்குத் தனித்தனியே கிளைகளாகப்பிரியும் புப்புஸ தமனியின் ஒரு பகுதி. 8, மஹா தமனீ. 9, மஹா தமனியின் மேற்புறத்துப் பெரிய கிளைகள். 10, இடது ஆதாரகோசத்தின் ஓரம். 11, இடது விஸர்க்ககோசம்.

சுத்த இரத்தம். இந்த வலப்புறத்திலிருப்பவை தமனிகளின் மெல்லிய முனைகளான கேசநாளங்கள்



அசுத்த இரத்தம் இந்த இடது புறத்திலிருப்பவை ஸிரைகளின் மெல்லிய ஆரம்ப பாகங்களான கேசநாளங்கள்.

கேசநாளங்கள் என்னும் மிகவும் ஸூக்ஷ்மமான இரத்தக்குழாய்கள்.

இருதயத்திலிருந்து புறப்பட்ட பெரிய தமனிகள் போகப்போகச் சிறியவையாகப்போய், இறுதியில் தாதுக்களில் கண்களால் பார்க்க முடியாதவளவு ஸூக்ஷ்மமாக மாறி, மறுபடி கிரமமாகப் பெரிய ஸிரைகளாக மாறி இருதயத்தை நோக்கிச் செல்லுகின்றன.

இரத்தத்தில் மிதந்தோடும் மஹா ஸூக்ஷ்மமான கணிகைகள்.



மேலே சுருள்சுருளாகக் காண்பவை சோணிதகணிகைகள் என்னும் சிவந்த இரத்தாணுக்கள். இவை செங்குறுகடங்கள் என்றும் கூறப்படும். இச்செங்குறுகடங்களுக்கு இடையில் சற்றுப் பெரிய கணங்கள் இரண்டு காணப்படுகின்றன. அவை ச்வேத கணிகைகள் அல்லது வெண்குறுகடங்கள் எனப்படும். சோணித கணிகைகளைப் பெரிதாயிருப்பதாகக் கீழே காட்டப்பட்டிருப்பதைக் கவனிக்க. இவற்றின் தட்டையான அகன்ற மேற்புறம் இரண்டு கணிகைகளிலும், ஓரத்திற் பார்க்கும் பாவனை தனியாக ஒரு கணிகையிலும், ஐந்தாறு வரிசையாகச் சேர்ந்துள்ள கணிகைகளிலும் விவரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. 140,000 சோணித கணிகைகளை ஒன்றன்மேல்ஒன்றாக அடுக்கினால், சுமார் 1 அங்குலம் நீளமாகும். ஆகவே இக்கணிகைகள் ஸாதாரணமாகக் கண்ணால் பார்க்கமுடியாத அவ்வளவு ஸூக்ஷ்மமானவை. ச்வேதகணிகைகள் சோணித கணிகைகளினும் உருவத்திற் பெரியவை; ஆனால் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவை. இக்கணிகைகள் யாவும்



லஸீகா என்கிற இரத்தநீரில் மிதக்கின்றன. சோணித கணிகைகள் அளவற்றவை லஸீகையில் சேர்ந்திருப்பதாலேயே இரத்தம் செந்நிறமாயிருக்கிறது.



ச்வாஸாசயங்கள் அல்லது புப்புஸங்கள்.

மார்புக்கூட்டில் புப்புஸங்கள் இரண்டும் ஒருவாறு நிறைந்திருக்கின்றன. வலது பக்கத்தில் ஒன்றும், இடது பக்கத்தில் ஒன்றுமாக இரண்டு புப்புஸங்களும், அவற்றிற்கு இடையில் இருதயமும் அமைந்திருக்கின்றன. இரண்டு புப்புஸங்களுக்கும் காம்புபோல் கழுத்தில் ச்வாஸநாளத்தைக் காணலாம். ச்வாஸநாளம் முருந்துகளாலான குழாய். இருதயத்திலிருந்து உடம்பெல்லாம் இரத்தம் பரவுவதுபோல் புப்புஸங்களுக்குள்ளும் புப்புஸ தமனிகளின் மூலமாய் அசுத்தரத்தம் பரவி அங்கே சுத்தம் செய்யப்பட்டு, மீண்டும் புப்புஸ ஸிரைகளின் மூலமாய் சுத்தரத்தம் இருதயத்திற்குள் வருகிறது.

ஸ்வரயந்திரத்திற்குக் கீழிருந்து ஒரு அங்குல கனமாகவும் நாலு அங்குலம் நீளமாகவும் ச்வாஸநாளம் கீழே சென்று, அப்பால் பக்கத்திற்கு ஒரு கிளைவீதம் இரண்டு கிளைகளாகப் பிரியும்; இவ்விரண்டு கிளைகளுக்கும் அபஸ்தம்பம் எனப்பெயர். இந்த அபஸ்தம்பங்கள் அநேகம் சின்னஞ்சிறிய கிளைகளாப் பிரிந்து, இறுதியில் திராக்ஷைக்குலைகளைப்போல ஆய்விடுகின்றன; அந்த நிலைமையில் அவற்றிற்கு ச்வாஸகோச குச்சங்கள் என்று பெயர். இதை இங்கு கீழுள்ள படத்திற் கவனித்துப் பார்க்கலாம்.




புப்புஸங்களும் ச்வாஸ நாளங்களும்.

வலதுபக்கத்தில் புப்புஸத்தின் ஆவரணமும், மற்ற சர்மமும், உட்புற கவசமான கலையும் நீக்கப்பட்டு, ச்வாஸகோசகுச்சங்கள் மாத்திரம் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில்தான் ச்வாஸ வாயுவிலிருந்து பிராணவாயு இரத்தத்திலும், இரத்தத்திலுள்ள அசுத்தவாயு ச்வாஸக்காற்றிலும் சேருகின்றன.

இடது பக்கத்து புப்புஸம் ஆவரணம் நீக்கிய இரண்டு கண்டங்களுடன் கூடியதாயுளது.



முகத்தினுள்ளேயும் (வாயில்), கழுத்தினுள்ளேயும் அடங்கிய சில அவயவங்களைக் காட்டும் படம்.

1. உபஜிஹ்வா அல்லது உள்நாக்கு. 2. ஜிஹ்வாமூலம் அல்லது அடி நாக்கு. 3. ஜிஹ்வா அல்லது நாக்கு. 4. 4. 4. லாலாக்கிரந்திகள் என்னும் உமிழ்நீர்க்கோளங்கள். 5. வாயின் பின்புறம். 6. அன்னவாஹினீ அல்லது அன்னநாளம். 7. ச்வாஸநாளம். 8. ஸ்வரயந்திரத்திலுள்ள நாதகலையென்னும் தொனிச்சவ்வின் ஓரங்கள்; இடையில் காற்று ஓடுகிற வழி அமைந்திருககிறது. 9. வம்சாஸ்த்தி அல்லது முள்ளந்தண்டின் எலும்பு வரிசை; அதாவது கசேருகங்களின் வரிசை. 10. நாஸாஸ்த்திகள் அல்லது நாசியெலும்புகள். 11. ஊர்த்வதாலு அல்லது மேல்வாய்; இதற்கு அண்ணம் என்றும் பெயர்.



புப்புஸங்களும், விதாநம் அல்லது மஹாப்ராசீரிகையும்.

பர்சுகாஸ்த்திகள் அகன்று மேலுக்குத் தூக்கப்படும்போது புப்புஸங்கள் பக்கவாட்டில் விரிந்து அகன்றுவிடும்; அதே ஸமயத்தில், வயிற்றுக்கு மேலே மார்புக்குழிக்குக் கீழே உட்புறத்தில் மார்புக்குழிக்கும் வயிற்றுக்குழிக்கும் எல்லையாய் அமைந்துள்ள குடைபோன்ற மாம்ஸபேசி முதலியதாலானவிதாநம் அல்லது மஹாப்பிராசீரிகையும், வயிற்றுப் பக்கமாய் அசைந்து குடைபோன்ற உருவத்தைவிட்டு, (படத்தில் புள்ளிகளால் குறிப்பிட்ட விதமாய்) தட்டையாக ஆகின்றது. அப்பொழுது புப்புஸங்கள் உயரவாட்டில் பெருத்து விகாஸம் அடைகின்றன. இவ்விதம் புப்புஸம் விசாலிக்கையில் ச்வாஸவாயு வேகமாய் உள்ளே பிரவேசிக்கின்றது. நிமிஷத்திற்கு சுமார் 17 தடவை இவ்வேலை நடந்தேறி வரும். விதாநம் அல்லது மஹாப்பிராசீரிகை அமர்ந்திருக்கையில் புப்புஸங்களின் பக்கமாய் குடையைப்போல் நிலைத்திருக்கும் வகையானது புள்ளிகளுக்கு மேற்புறமாக உட்கவிந்த வரியினால் காட்டப்பட்டிருக்கிறது.





நாக்கு

1. உபஜிஹ்வா அல்லது உள்நாக்கு. அநேகம் புள்ளிகளாகக் காட்டப்பட்டவை (2. 2. 2. 2. என்கிற எண்களால் குறிக்கப்பட்டவை) சுவையுணர்வதற்கான இரஸநேந்த்ரியகணிகைகள். பொதுவில் நாக்கின் ஒவ்வொரு பாகமும எல்லாச் சுவைகளையும் உணருமென்றாலும், மதுரரஸம் அறியும் கணிகைகள் நாக்கின் முனையிலும், கசப்பை யறிபவை நாக்கின் அடியிலும், புளிப்பை அறிபவை நாக்கின் பக்கங்களிலும் மிகுதியாக அமைந்திருக்கின்றன. மேலே ஜிஹ்வா அல்லது நாக்கின உருவத்தை விளக்கும் படத்தைப்பார்க்க.

முகத்தில் இட்டு விழுங்கிய ஆஹாரம் அன்னவாஹி என்னும் குழாயின் மூலமாய் இரைப்பையில் சென்று, சிறுகுடலில் விழுந்து ஜீர்ணமாய்க் கொண்டுபோய், உணவுகளிலுள்ள ஸத்துவங்கள் சிறுகுடலில் (ஸூக்ஷ்மாந்த்ரத்தில்) சோஷணமடைந்து, பெருகுடலிலும் (ஸ்த்தூலாந்த்ரத்திலும்) மிச்சமுள்ள ஸத்துவம் சோஷணமடைந்து, திப்பியான பாகம் மலமாக இறுதியில் மலாசயத்தில் தங்கி, அப்போதைக்கப்போது குதத்வாரத்தினல் வெளி வந்து விடுவதற்கான உடலிலுள்ள மிகப் பெரிய குழாய்போன்ற அவயவமே கோஷ்டம் என்றும், அந்த்ரம் என்றும், குடல் என்றும், மஹாஸ்ரோதம் என்றும் கூறப்படுகிறது. இப்பெரிய குழாயின் உட்புறத்தினூடே அம்புகளால் உணவு செல்லும் மார்க்கம் குறிக்கப்பட்டிருப்பதை அடுத்தப்படத்தில் பார்க்க.




முகம்முதல் குதம்வரையிலுமுள்ள மஹாஸ்ரோதஸ்.

1. அன்னவாஹி யென்னும் குழாய்; இது ஒன்பது அங்குலம் நீளமானது. இதற்கு அடியில் துருத்திப்பை போன்றது ஆமாசயம் என்னும் இரைப்பை. 2. என்கிற பாகம் 'கிரஹணீ' எனப்படும். கிரஹணிக்கு வலது புறத்தில் யக்ருத்என்னும் கல்லீரலும் அதைச் சேர்ந்தாற்போல் பித்தாசயமும் அமைந்திருக்கின்றன. ஆமாசயத்திற்கு அடுத்துள்ள குடலின் பாகத்திற்கு கிரஹணி யெனப்பெயர். அதற்கு அடியில் ஸூக்ஷ்மாந்த்ரம் என்னும் சிறு குடல் சுருள்சுருளாக மடிந்திருக்கிறது. 3. இந்த எண்ணிக்கை உள்ள இடத்தில் ஸூக்ஷ்மாந்த்ரம், ஸ்த்தூலாந்த்ரத்துடன் கூடுகின்றது. வலது

பக்கத்தில் மேலே ஏறும் ஸ்த்தூலாந்த்ரம், ஊர்த்வ காண்டம் என்றும், மேலே குறுக்காய் நிற்கும் பாகம் திர்யக் காண்டம் என்றும், கீழே இறங்கும் பாகம் அதஃகாண்டம் என்றும் கூறப்படும். இறுதியில் மலாசயமும் குதமும் அமைந்திருக்கின்றன. ஆமாசயத்திற்கு அடியில் குறுக்காயிருக்கும் நீளமான கிரந்தி க்லோமா எனப்படும். கிரஹணிக்கு வலது புறத்தில் பெரிய கிரந்தி யக்ருத் என்னும் கல்லீரல் இருக்கிறது. கல்லீரலில் கிரஹணியின்பக்கமாய் பித்தாசயம் அமைந்திருக்கிறது.



1. ஸூக்ஷ்மாந்த்ரத்தின் உட்புறத்தோற்றமும்
2. இரஸாயநாங்குரமும்.

இடது பக்கத்திலுள்ளது, ஸூக்ஷ்மாந்த்ரம் என்னும் சிறுகுடலின் ஒருதுண்டு. அதை நெடுக வெட்டியிருப்பதாகக் காட்டியிருக்கிறது; ஆகவே ஸூக்ஷ்மாந்த்ரத்தின் உட்புறம் மடிப்பு மடிப்பாயிருப்பதாகத்தெரியவருகிறது. ஸூக்ஷ்மாந்த்ரச் சுவரில் வெட்டியுள்ள பாகத்தின் ஓரத்தில் சின்னஞ்சிறிய முளைகளாக இரஸாயநாங்குரங்கள் காணப்படுகின்றன. குடலுக்குள் இவ்வளவு மடிப்புகள் இருப்பதால், உணவுகள் குடலில் வேகமாய் நெகிழ்ந்தோடாமல் மெதுவாக நெகிழும்படி நேரிடுகிறது; அதனால் உணவிலுள்ள ஸத்துவங்கள் குடலுக்குள் சோஷணமாவதற்கு ஸாவகாசம் ஏற்படுகிறது.

வலது பக்கத்தில் இரண்டு இரஸாயநாங்குரங்கள் மிகப் பெரிதாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இவை $\frac{1}{50}$ அங்குலம் முதல் $\frac{1}{40}$ அங்குலம் வரையில் அளவில் நீண்டிருக்கும். இந்த அங்குரங்கள், மேதஸ் முதலிய ஸ்நேஹப் பொருட்களடங்கிய ஆஹார ஸத்துவத்தை உறிஞ்சுகின்றன. கேசநாளங்கள் என்னும் இரத்தக் குழாய்கள் ஒரு இரஸாயநாங்குரத்தின் இடையில் காட்டப்பட்டிருக்கின்றன. இரஸாயநாங்குரங்களின் ஓரச்சுவர்களில் புள்ளி புள்ளியாகத் தோற்றும அறைகள் ஸ்நேஹவஸ்துக்களை உறிஞ்சமியல்புடையன.




இரஸாயனிகள் என்னும் ஸ்ரோதஸ்ஸுகள்.



கேச நாளங்கள் என்னும் ஸூக்ஷ்மமான இரத்தக்குழாய்களின் மெல்லிய சுவரின் வழியாக லஸீகா என்னும் நிணநீர் கசிந்து எப்பொழுதும் தாது போஷணைக்காக வெளிப்பட்டுக்கொண்டே யிருக்கும். தாதுக்களின் போஷணைக்குச் செலவானதுபோக மிச்சமுள்ள கசிவு நீரெல்லாம் அங்கங்கே ஏற்பட்டுள்ள குழாய்த் தொகுதிகளின் மார்க்கமாய் இருதயத்தை நோக்கி ஓடுகின்றன. இந்த நீர் ஓடும்வழிகளில் அநேகம் கிரந்திகள் உண்டு. இவ்விதமான குழாய்கள் அநேகம் ஒன்றுகூடி, வயிற்றிலும் மார்பறையிலும் ஒருமிக்கச் சேர்ந்து, இருதயத்தின் அருகில் பெரிய ஸிரைகளில் விழுந்து இரத்தத்தோடு கலந்துவிடுகின்றன. குடலில் ஜீர்ணிக்கப்பட்டு இரஸாயநாங்குரங்களால் உறிஞ்சப்பட்ட ஆஹார ரஸமும் இந்த ஸ்ரோதஸ்ஸுகளில் சேர்ந்து இரத்தத்துடன் கலக்கின்றது. வயிற்றிலிருந்து பெரிய ஸ்ரோதஸ்ஸுகள் இரண்டு மேலே சென்று வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் தனித்தனியே பெரிய ஸிரைகளில் பிரவேசிப்பதை மேற்குறித்த சித்திரத்திற் பார்க்கலாம். உதரத்திலும் உரஸ்ஸிலுமுள்ள பெரியஸ்ரோதஸ்ஸுகளில் ஆஹார ரஸம் மிகுதியாகச் சேருகின்றது.



இதற்குமுன் விளக்கிய சித்திரப்படங்களில் அடங்கிய அவயவங்களின் தொகுதி.

1. சிரஸ் (அல்லது நெற்றி) 2. கழுத்து. 3. மார்பு அல்லது உரஸ். 4. வயிறு அல்லது உதரம். 5. அன்ன வாஹினீ. 6. ச்வாஸநாளம். 7. புப்புஸங்கள். 8. இருதயம். 9. ஆமாசயம் என்னும் இரைப்பை. 10. ப்லீஹம் என்னும் மண்ணீரல். 11. க்லோமா என்கிற கணையம். 12. விருக்கங்கள். 13. யக்ருத் என்னும் கல்லீரல். 14. பித்தாசயம். 15. ஸூக்ஷ்மாந்த்ரம் என்னும் சிறுகுடல். 16. ஸ்த்தூலாந்த்ரம் என்னும் பெருங்குடல். 17. வஸ்தியென்னும் மூத்திராசயம்.




மஸ்திஷ்கமும் நாடீமண்டலமும்

(அல்லது மூளையும் நரம்புத் தொகுதியும்.)

1. 1. 1. மஸ்திஷ்கம் (அல்லது முன்புறத்து மூளை.) 2. அநுமஸ்திஷ்கம் (அல்லது பின்புறத்து மூளை.) 3. ஸுஷும்நாசீர்ஷகம் (அல்லது முள்ளந்தண்டு நரம்புக்கொடிகளின் மூலம்). 4. முள்ளந்தண்டின் கசேருகங்கள். (கசேருகங்கள் என்னும் எலும்பு வரிசைகள் பக்கவாட்டில் நெடுக வெட்டப்பட்டிருப்பதால், இரண்டு வரிசையாக அவைகள் காணப்படுகின்றன. அக்கசேருகங்களின் இடையில் நெடுக அமைந்திருக்கும் த்வாரத்தினூடே நரம்புத் தொகுதிகள் பிரவேசித்திருக்கும்). 5. ஸுஷும்நா காண்டம். (அல்லது நரம்புக்கொடி).

சிரஸ்ஸின் ஒரு பக்கத்து கபாலாஸ்த்தி நெற்றியிலிருந்து பின்புறம் வரையில் வெட்டப்பட்டு, உட்புறத்திலுள்ள மஸ்திஷ்கம் முதலியதின் தோற்றம் காட்டப்பட்டிருக்கிறது.



உச்சியில் இருப்பது ஸுஷும்நாசீர்ஷகம். மற்ற நீண்டபாகம் ஸுஷும்நா காண்டம் என்னும் ஒரு தொகுதியான நரம்புக்கொடி. இக்காண்டத்திலிருந்து இரு பக்கங்களிலும் பார்ச்வ நாடிகள் வெளிப்படுகின்றன. இடது பக்கத்தில் காட்டியிருப்பது, நரம்புகளுக்கு ஒன்றோடொன்று ஸம்பந்த முண்டு பண்ணும் ஸாம்யோகிக நாடிகள். இவை ஒற்றுணர்வு நரம்புகள் என்றும் கூறப்படும். வலது பக்கத்திலும் இவ்விதம் உண்டு.

ஸுஷும்நா காண்டம்

(அல்லது முள்ளந்தண்டு நரம்புக்கொடி).



வம்சாஸ்த்தியன் குறுக்கு வெட்டுத் தோற்றம்.

இப்படம், குறுக்காக வெட்டப்பட்ட முள்ளந்தண்டின் ஒரு துண்டு. வம்சாஸ்த்தியிலிருந்து (முள்ளந்தண்டிலிருந்து) நாடிகள் அல்லது நரம்புகள் வெளிப்படும் வகை இப்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. வம்சாஸ்த்தித்வாரங்களை விட்டு வெளியாவதற்கு முன்பே, ஸம்ஜ்ஞாவஹ நாடிகளும், சேஷ்டாவஹ நாடிகளும் (உணர்ச்சி நரம்புகளும் சலந நரம்புகளும்) ஒருமிக்கச் சேர்ந்துவிடுகின்றன. படத்தில் காட்டப்பட்டிருப்பது வம்சாஸ்த்தியின் (வயிற்றுப் பக்கமாயுள்ள) முன் பக்கம். முன் பக்கமாயுள்ளவை சேஷ்டாவஹ நாடிகளின் இழைகள்: பின்பக்கமாயுள்ளவை ஸம் ஜ்ஞாவஹநாடிகளின் இழைகள். இவ்விரண்டும் கூடுமிடங்களில் ஸம்ஜ்ஞாவஹநாடி ஸூத்திரங்களின் ஸம்பந்தமான சிறிய கிரந்திகள் இருப்பதைக் காணலாம்.



## கழுத்திலும், மார்பிலும், வயிற்றிலும் அடங்கியுள்ள முக்கியமான அவயவங்களை விளக்கும் படம்.

1. தொனியந்திரம் (அல்லது ஸ்வரயந்திரம்)
2. ச்வாஸநாளம்
3. அக்ஷகாஸ்த்தி (அல்லது காறையெலும்பு)
4. புப்புஸம் (வலதுபக்கம்) (அல்லது ச்வாஸாசயம்)
5. யக்ருத் (அல்லது கல்லீரல்)
6. பித்தாசயம் (அல்லது பித்தப்பை)
7. வ்ருக்கம் (வலதுபக்கம்)
8. மூத்திரஸ்ரோதஸ் (வலது பக்கம்)
9. ஸ்த்தூலாந்திரம் (பெருங்குடல்)
10. ஊர்த்வமுகஸ்த்தூலாந்திரம்
11. வர்மி (அல்லது லம்பிகா)




12. கண்ட தமநீ (அல்லது கழுத்தின் செவ்விரத்தக்குழாய்)
13. கண்ட விரை (அல்லது கழுத்தின் காரிரத்தக் குழாய்)
14. புப்புஸம் (இடது பக்கம்) (அல்லது ச்வாஸாசயம்)
15. இருதயம் (அல்லது இரத்தாசயம்)
16. ஆமாசயம் (அல்லது இரைப்பை)
17. வ்ருக்கம் (இடது பக்கம்)
18. மூத்திர ஸ்ரோதஸ் (இடது பக்கம்)
19. ஸூக்ஷ்மாந்திரம் (அல்லது சிறுகுடல்)
20. வஸ்தி (அல்லது மூத்திராசயம்)

வயிற்றினுள் அடங்கிய அவயவங்களைக் காட்டுவதற்காக, அவற்றிற்கு ஆவரணமாயுள்ள வயிற்றின் சர்மம் கிழிக்கப்பட்டு, தொடைகளின் பக்கமாய் மடித்துத் தள்ளப்பட்டிருப்பதுபோல் விளக்கியிருக்கிறது.

கழுத்துக்குக் கீழிருந்து பெருங்குடல் வரையில் இரு புறங்களிலும் பொட்டுப்பொட்டாகக் காணும் வெள்ளைக்குறிகள், பர்சுகாஸ்த்திகளின் (விலா எலும்புகளின்) அறுபட்ட முனைகள்; மார்புமுதலான அறைகளுக்குள் அடங்கிய அவயவங்களைக் காண்பதற்காக, அவற்றிற்கு ஆவரணமாயிருந்த அஸ்த்திகள் அறுக்கப்பட்டிருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## தேஹத்தில் இரத்தக்குழாய்கள் வியாபித்துள்ள வகையை விளக்கும் படம்.



இப்படத்தில் சிவப்பாயிருப்பவை தமனிகள் என்கிற செவ்விரத்தக் குழாய்களையும், கருநிறமானவை ஸிரைகள் என்னும் காரிரத்தக் குழாய்களையும் காட்டுகின்றன.

இச்சித்திரத்தில் ஸௌகரியத்தின்பொருட்டு ஒரு பாரிசத்தில் தமனிகளும், மற்ருெரு பாரிசத்தில் ஸிரைகளும் வியாபித்திருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது; ஆனல் தமனிகளும், ஸிரைகளும் உடலில் எல்லாப் புறங்களிலும் ஒரே அளவாய் வியாபித்திருக்கின்றன.



## நான்காம் அத்தியாயம்.

இனி மர்ம-விபாக சாரீரம்[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படும்:—

*மர்மங்கள் நூற்றேழு.*

மனித தேஹத்தில் நூற்றேழு மர்மங்கள் உண்டு. அவற்றுள் ஒவ்வொரு காலிலும் ஒவ்வொரு கையிலும் தனித்தனியே பதினேரு மர்மங்கள் இருக்கின்றன; கோஷ்டத்தில் மூன்றும், மார்பில் ஒன்பதும், முதுகில் பதினன்கும், தோளுக்கு மேலுள்ள அவயவங்களில் முப்பத்தேழும் உண்டு. 1, 1½.

*கால்களின் மர்மங்களும், அவற்றின் அபிகாதத்தால் நேரிடும் அபாயங்களும்.*

பாதத்தின் உட்புறத்து மத்தியபாகத்தில் நடுவிரல் வரையில் அப்பாகங்களைச் சுற்றிலுமுள்ள மர்மம் தலஹ்ருதயம்[2] என்று வழங்கப்படும்; அந்த மர்மத்தில் அபிகாதமுண்டானல், வலி தாங்கக்கூடாமல் மரணம் ஸம்பவிக்கும். பெருவிரலுக்கும் ஆள்காட்டிவிரலுக்கும் இடையில் க்ஷிப்ரம்[3] என்கிற மர்மம் இருக்கிறது; இதில் அபிகாதமுண்டானல் ஆக்ஷேபகம் என்னும் இசிவு உண்டாய் அம்மனிதன் இறந்து விடுவான். க்ஷிப்ரமர்மத்திற்கு இரண்டு அங்குலம் மேலே கூர்ச்சம்[4] என்கிற மர்மம் உண்டு; அவ்விடம் அடியுண்டால் பாதம் சுழன்று நடுங்கும். கணுக்காலின் பூட்டிற்குக் கீழே அடுத்தாற்போல் [1]கூர்ச்சசிரஸ் என்னும் ஸந்தியிருக்கின்றது; அவ்விடத்தில் அபிகாதமுண்டானல் வீக்கமும் வலியும் அதிகமாயுண்டாகும். ஜங்கையென்னும் முழங்காலுக்குக் கீழுள்ள காலும் பாதமும் சேருமிடத்தில் குல்பம்[2] என்னும் மர்மம் இருக்கின்றது; அவ்விடம் தாக்கப்படுமானல் வலியுண்டாய் பாதம் அசைவற்றுப்போய் காலின் வேலையும் மந்தப்பட்டுவிடும். முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையில் இந்திரவஸ்தி என்னும் மர்மம் உண்டு; அவ்விடம் அடியுண்டால், இரத்தப் பெருக்கு அபரிமிதமாய் எடுத்து மரணமுண்டாகும். காலும் துடையும் கூடுமிடத்திலுள்ளது ஜாநு[3] என்னும் மர்மம்; அவ்விடம் அபிகாதப்பட்டால் உயிருக்கு அபாயமின்றியே முடவனுக ஆய்விடுவான். முழங்காலுக்கு மூன்று அங்குலம் மேலே ஆணீ என்னும் மர்மம் உண்டு; அது அடியுண்டால் துடை அசைக்க முடியாமற் போவதுடன் வீக்கமும் உண்டாகும். துடையின் மத்தியிலுள்ள மர்மம் உர்வீ யெனப்படும். இதில் அபிகாதமுண்டானல், இரத்தம் அபரிமிதமாய் வெளியாகுமாதலால், துடை மிகவும் சுஷ்கித்து அபாயம் நேரிடும். துடையின் அடிப்புறத்திலிருக்கும் மர்மம் லோஹிதம் எனப்படும்; அது தாக்கப்படுமானல் இரத்தப்பெருக்கு விசேஷமாயுண்டாய், பக்ஷவதம் என்னும் பாச்வவாயு அவ்வவயவத்திற்கு ஸம்பவிக்கும். வங்க்ஷணம் என்னும் துடையிடுக்குக்கும் பீஜகோசத்திற்கும் இடையில் விடபம் என்கிற ஸந்தியிருக்கின்றது; அதில் அபிகாதமுண்டானல் அம்மனி

1. அபிகாதத்தினல் அபாயம் விளைவிக்கக்கூடிய அவயவம் மர்மம் எனப்படும். ஸிரைகள், தமனிகள், நாடிகள் முதலியவற்றின் முக்கியமான பாகங்கள் ஒன்றுகூடும் ஸ்த்தலம் மர்மஸ்த்தாநமாகும் என்று ஸுச்ருதம் முதலியதிலும், இவ்வத்தியாயத்திலேயே இதன் பிறகும் கூறப்படுகிறது. அவ்வித மர்மங்கள் தேஹத்தில் எவ்வெவ்விடங்களில் பரவியிருக்கின்றனவென்பதை விளக்கும் அத்தியாயம் மர்மவிபாகசாரீரம் ஆகும்.

2. தலஹ்ருதயம்—உள்ளங்காலின் மத்தியபாகக் குழி.

3. அதிசீக்கிரத்தில் பிராணபாய முண்டுபண்ணுவதால் க்ஷிப்ரம் எனப்படுகிறது.

4. கூர்ச்சம்—குச்சுபோன்ற அவயவம் எனப்பொருள்.

1. கூர்ச்சசிரஸ் கூர்ச்சத்தின் தலைப்பிரதேசம்.

2. குல்பம்—கணுக்காலின் பெயர்.

3. ஜாநு—முழங்கால்.

தன் நபும்ஸகனாய் விடுவான். கால்களில் உள்ள மர்மங்கள் இவையேயாம். 2—7½.

கைகளிலுள்ள மர்மங்களும் அவற்றின் அபிகாதத்தினால் உண்டாகும் அபாயங்களும்.

கால்களில் இருப்பதுபோலவே கைகளிலும் மர்மங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் பேதமென்னவென்றால்—கணுக்கால் குல்பம் எனப்படுவதுபோல அதற்குப் பதிலாக மணிக்கட்டு மணிபந்தம் எனப்படும்; முழங்கால் ஜாநுவென்று சொல்லப்படுவதுபோல முழங்கை கூர்ப்பரம் எனப்படும். இவ்விரண்டு மர்மங்களிலும் அபிகாதமுண்டானால் கைகள் மொண்டியாய்விடும். தொடையிடுக்கில் விடப மர்மம்போல அக்குளில் கக்ஷாதரம் என்னும் மர்மம் அமைந்திருக்கிறது; அவ்விடம் தாக்கப்பட்டாலும் கை மொண்டியாய்விடும்.[1] 8,9.

உடலிலடங்கிய மர்மங்களும் அவற்றின் அபிகாதத்தால் ஸம்பவிக்கும் அபாயங்களும்.

ஸ்த்தூலாந்த்ரம் என்னும் பெருங்குடலில், அபாந வாயு, மலம் இவற்றை வெளிப்படுத்துவதற்காக இணைக்கப்பட்டிருக்கும் மர்மம் குதம் எனப்படும்; அதில் அபிகாதமுண்டானால் உடனே உயிருக்கு அபாயம் நேரிடும். வில்லைப்போல வளைந்துள்ள மூத்திரம் தங்கியிருப்பதற்கு அவசியமானதும், இரத்தம் மாம்ஸம் இவற்றைச் சொற்பமாயுடையதும், அடிப்புறத்தில் ஒரு முகம் அல்லது த்வாரத்தையுடையதுமான வஸ்தி என்னும் மர்மம் அமைந்திருக்கிறது; அது அபிகாதமுண்டால் உடனே பிராணாபாயமுண்டாகும்; ஆனால் அச்மரீயென்னும் மூத்திரக்கற்களால் சிதைவுண்டால் அவ்வாறு அபாயம் ஸம்பவிக்காது; அதிலும் இருபுறங்களிலும் வஸ்தி சிதைவுறுமானால் பிராணாபாயம் ஸம்பவிக்கும்; ஒரு புறத்தில் அபிகாதமுண்டானால் மூத்திரம் ஸ்ரவித்துக் கொண்டு பெருமுயற்சியின்மேல் விரணம் மெதுவாக ஆறும். தேஹத்திற்கு மத்திய பாகத்தில், அதிலும் ஆமாசய-பக்வாசயங்களுக்கு இடையில், விரைகளுக்கெல்லாம் ஆதாரமாய் நாபியென்னும் மர்மம்[1] அமைந்திருக்கின்றது; இதுவும் அபிகாதத்தினால் உடனே பிராணாபாயம் விளைவிக்கக்கூடியது. ஆமாசயத்தின் த்வாரத்திற்கு அருகில் இருப்பதும்,[2] மார்பறையினுள் இரண்டு ஸ்தநங்களுக்கும் இடையில் அமைந்துள்ளதும், ஸத்துவாதிகளுக்கு உறைவிடமாயுள்ளதும் ஹ்ருதயம் என்னும் மர்மம்; இந்த மர்மமும் அபிகாதத்தினால் உடனே உயிருக்கு அபாயம் விளைவிக்குந் தன்மையது. ஸ்தநங்களுக்கு இரண்டு அங்குலம் மேலே ஸ்தநரோஹிதங்கள் என்னும் மர்மங்களும், ஸ்தநங்களுக்கு இரண்டு அங்குலம் கீழே ஸ்தநமூலங்கள் என்னும் மர்மங்களும் உண்டு; ஸ்தநரோஹிதங்களில் அபிகாதமுண்டானால் மார்பறையினுள் இரத்தம் நிரம்பி மரணமுண்டாகும்; ஸ்தநமூலாபிகாதத்தினால் மார்பறையில் கபம் அதிகரித்து பிராணாபாயம் உண்டாகும். மார்பினுள் இரு புறங்களிலும், வாயு உட்சென்று வருவதற்குபயோகமான இரண்டு குழாய்கள் அபஸ்தம்பங்கள் என்று கூறப்படும்; இதில் அபிகாதமுண்டானால் மார்பறையில் இரத்தம் நிரம்பி, ச்வாஸமும் காஸமும் அதிகரித்து மரணம் ஸம்பவிக்கும். முள்ளந்தண்டுக்கும் மார்புக்கும் இடையில் அவற்றிற்கு இரு புறங்களிலும், தோள்களுக்குக் கீழே அபலாபங்கள் என்கிற மர்மங்கள் உண்டு; அவற்றில் அபிகாதமுண்டானால்

1. கையிலுள்ள மர்மங்கள்:— தலஹ்ருதயம், கூர்ச்சம், கூர்ச்சசிரஸ், மணிபந்தம், இந்த்ரவஸ்தி, கூர்ப்பரம், ஆணி, உர்வீ, லோஹிதாக்ஷம், விடபம் என்பனவாம்.

1. சிசு கர்ப்பத்திலிருக்கையில் நாபியில் நாபிக்கொடியின் மூலமாகவே இரத்தக்குழாய்கள் சிசுவின்தேஹமெங்கும் பரவுவது இயல்பாகையால், அதை ஆதாரமாகக்கொண்டு விரைகளுக்கெல்லாம் நாபி ஆதாரமானது என்று கூறப்படுவதாய் அறிக.

2. ஆமாசயத்தின்மேல்த்வாரம் இருதயத்தின் முனைக்கு அருகிலிருப்பதால் இங்ஙனம் கூறப்பட்டது என்று அறிக.



மார்பறையில் இரத்தம் நிரம்பி, சீழ் பிடித்து மரணமுண்டாகும். முள்ளந்தண்டுக்கு இரண்டு பக்கங்களிலும் கூபகச் செவிகள் என்னும் இடுப்பின்பக்கப்பிதுக்கங்கள் இரண்டு அமைந்திருக்கின்றனவல்லவா? அதாவது பிருஷ்டங்களுக்கு மேலே அடுத்தாற்போல் முள்ளந்தண்டுக்கு இரு புறங்களிலும் அதைப் பற்றிக்கொண்டிருக்கும் பாகங்களில் கடீகதருணங்கள் என்கிற இரண்டு மர்மங்கள் இருக்கின்றன; இவ்விடங்களில் அபிகாதமுண்டானால் அபரிமிதமாய் இரத்தப்பெருக்கு எடுத்து, பாண்டுரோகமுண்டாய், இயற்கையுருவம் அழிந்து உயிர்துறப்பான். இடுப்பின் பக்கங்களில் முள்ளந்தண்டுக்கு இருபுறங்களிலுமுள்ள பூட்டுகளில் பிருஷ்டங்களுக்கு வெளியில் குகுந்தரங்கள் என்னும் மர்மங்கள் அமைந்திருக்கின்றன; இவை தாக்கப்படுமானால் கீழே கால்கள் அசைக்கமுடியாமற் போவதுடன் பரிசவுணர்ச்சியும் போய்விடும். கூபகச்செவிகளுக்குமேல் இருபுறங்களிலும் உட்பக்கமாய் முருந்துகளை ஆச்ரயித்தவைகளாய் அவ்விடத்திலுள்ள ஆசயங்களையும் மறைத்துக்கொண்டு இருக்கும் மர்மங்கள் நிதம்பங்கள் எனப்படும்; இவற்றில் அபிகாதமுண்டானால், இவ்விடத்திற்குக் கீழுள்ள அவயவங்களில் வீக்கமுண்டாய், தேஹவலிமை குன்றிப்போய் மரணம் ஸம்பவிக்கும். பிருஷ்டபாகங்களுக்கும் உடலின் பக்கங்களுக்கும் இடையில் பாரிசங்களுக்கு உட்புறமாய் குறுக்காகவும் மேல்நோக்கியவாறு அமைந்துள்ளவை பார்ச்வஸந்திகள் என்னும் மர்மங்களாம்; அவை தாக்கப்படுமானால் அவ்விடத்திலுள்ள கூபகக்குழியில் இரத்தம் நிரம்பி மரணமுண்டாகும். முற்கூறிய ஸ்தநமூலங்கள் என்னும் மர்மங்களுக்கு நேர் இரேகையில் முள்ளந்தண்டுக்கு இரு புறங்களிலும் அதைச் சார்ந்தாற்போல இரண்டு மஹாஸிரைகள் உண்டு; அவற்றிற்கு ப்ருஹதீ எனப்பெயர்; இந்த மர்மஸ்தானங்கள் தாக்கப்பட்டால், அபரிமிதமாய் இரத்தப்பெருக்கு உண்டாய் இறந்துவிடுவான். முள்ளந்தண்டுக்கு இரண்டு பக்கங்களிலும், புஜமூலங்களில் அமைந்துள்ள அம்ஸபலகங்கள் என்னும் மர்மங்களில் அபிகாதமுண்டானால் புஜங்களில் பரிசவுணர்ச்சியிழந்துபோய் அவை சுஷ்கித்துப் போகும். 10—24½.

தோளிலும் அதற்கு மேற்பட்டுமுள்ள மர்மங்களும் அவற்றின் அபிகாதத்தினாலுண்டாகும் அபாயங்களும்.

கழுத்துக்கு இரு புறங்களிலும் கழுத்து, புஜம், சிரஸ் இம்மூன்றுக்குமிடையில், கழுத்தின் அடிப்புறத்தையும் தோள்பட்டையையும் இணைத்துச் சேர்ப்பவையான இரண்டு ஸ்நாயுக்கள் அம்ஸங்கள் என்கிற மர்மங்களாம்; இவற்றில் அபிகாதமுண்டானால் புஜங்கள் அவற்றின் வேலையை இழந்துவிடநேரிடும். கண்டநாடியென்னும் பெரியநரம்புக் கொடிக்கு இரண்டு பக்கங்களிலும் முகவாய்க்கட்டையின மூலப்பிரதேசங்களைப் பற்றிக்கொண்டு நான்கு மர்மங்கள் இருக்கின்றன; அவற்றுள் இரண்டு நீலா என்றும் இரண்டு மந்யா என்றும் வழங்கப்படும்; இவற்றில் அபிகாதமுண்டானால் குரல் கம்மிப்போய் அல்லது வேறுவித மாறுதலடைவதுடன், சுவையறியும் உணர்ச்சியும் குன்றிப்போகும். கழுத்திலுள்ள நாடிக்கொடியின் இருபுறங்களிலிருந்தும் நாக்குக்கும் நாசிக்கும் தனித்தனியே இரண்டிரண்டாகப்போகிற நான்கு நாடிகள் மாத்ருகைகள் என்றும் மர்மங்களாம்; இவை அபிகாதப்பட்டால் தக்ஷணமே பிராணாபாயமுண்டாகும். சிரஸ்ஸும் கழுத்தும் கூடுமிடத்திலுள்ள இரண்டு மர்மங்கள் க்ருகாடிகைகள் எனப்படும்; அவ்விடம் அபிகாதமுண்டால் தலை நிற்கமுடியாமல் ஆடிப்போகும். செவிகளுக்குக் கீழே அடுத்தாற்போல இரண்டு பக்கங்களிலும் விதுரைகள் என்கிற இரண்டு மர்மங்கள் உண்டு; அவை தாக்கப்படுமானால் சப்தமுணரும் சக்தி யிழக்கப்படும். நாசியின் உட்புறப் பாதைக்கு இரண்டு பக்கங்களிலும், காதுகளுக்குச் செல்லும் பாதைகளை அநுஸரித்து ஓடுபவையான இரண்டு மர்மங்கள் தொண்டை

யினுள் மேற்புறமாய் அமைந்திருக்கின்றன ; அவ்விரண்டுக்கும் பணங்கள் எனப்பெயர் ; இவற்றின் அபிகாதத்தினால் நாசியானது மணமறியும் சக்தியை இழந்துவிடும். கண்களுக்கு வெளியில், புருவங்களுடைய வால்முனைகளுக்குக் கீழே அபாங்கங்கள் என்று இரண்டு மர்மங்களும், அவ்விதமே அவற்றிற்கு மேலே சிறு குழிபோன்றவையாய் ஆவர்த்தங்கள் என்று இரண்டுமர்மங்களும் உண்டு ; இந்த நான்கு மர்மங்கள் அபிகாதப்பட்டால் கண்கள் பார்க்கும் சக்தியை இழந்துவிடும். நெற்றிக்கட்டின் முனைகளில், செவிகளின் பக்கமாய் ஒவ்வொரு பக்கத்திலும் சங்கங்கள் என்று இரண்டு மர்மங்கள் உண்டு ; அவற்றில் அபிகாதமுண்டானால் உயிருக்கு உடனே அபாயம் நேரிடும். சங்கங்களுக்கு மேலே முன்னெற்றிமயிர்களின் இரேகைக்கு நேரில் உத்க்ஷேபங்கள் என்கிற இரண்டு மர்மங்களும், புருவங்களுக்கு நடுவில் ஸ்த்தபநீ என்கிற ஒரு மர்மமும் உண்டு ; இந்த மூன்று மர்மஸ்த்தானங்களிலும் ஏதாவது சல்யம் உட்புகுந்தால் அச்சல்யம் வெளிப்படுத்தப் படாமலிருந்தால் அல்லது சல்யம் தானாகவே பழுத்து வெளிப்படுமானால மனிதனுக்கு அபாயமொன்றுமிராது ; அச்சல்யத்தை வலிய இழுத்து வெளிபபடுததினால் பிராணாபாயம் நேரிடும்.[1] தொண்டையாகிய மேல்வாயின் அடிப்புறத்தில், நாக்கு-நேத்திரம்-நாசி-செவி இவற்றின் த்வாரங்கள் ஒன்றுகூடும் பிரதேசத்தில், இந்த நான்கு ஸ்ரோதஸ்ஸுக்களாகிற ச்ருங்காடகங்கள் என்னும் மர்மங்களின் நான்கு வாயில்கள் அமைந்திருக்கின்றன. அவற்றில் அபிகாதமுண்டானால் உடனே பிராணாபாயம் நேரிடும். சிரக்கபாலத்தில் குறுக்காகவும நெடுகவும் ஐந்து கூட்டுப் பாகங்கள் உண்டு ; அவ்வைந்துக்கும் ஸீமந்தங்கள் எனப் பெயர் ; அவை அபிகாதப்படுமானால் தலைச்சுற்றலும், பித்துப்பிடித்தலும், மதிமயங்கிப்போவதும் ஆக இவ்வித விகாரங்கள் ஸம்பவித்து உயிரிழுக்கநேரிடும். சிரஸ்ஸின் உச்சியில் ஸிரைகள்[1] ஒன்றுகூடுமிடத்தில் மயிர்ச்சுழியுள்ள மத்தியபாகத்தின் உட்புறமாக அதிபம் என்கிற மர்மம் அமைந்திருக்கிறது;[2] அது தாக்கப்படுமானால் உடனே உயிர்நீங்கிவிடும். 25-36½

**மர்மத்தின் இலக்ஷணம்.** தேஹத்தில் எவ்விடம் விஷமமாகத் துடிக்குமோ, எவ்விடம் அழுத்தப்படுவதால் விஷமமான வலியுண்டாகின்றதோ அது மர்மஸ்த்தாநம் ஆகும்.[3] 37.

**மர்மங்கள் ஆறு விதம்.** மாம்ஸபேசிகள், அஸ்த்திகள், ஸ்நாயுக்கள், தமனீகள், ஸிரைகள், ஸந்திகள் இவற்றின் சேர்க்கை எங்கெங்கு இருக்கின்றதோ அவ்

1. சல்யம் வலிய இழுத்து வெளிப்படுத்தப்படுவதால் பிராணாபாயமுண்டாவதாலே இந்த மர்மங்கள் "விசல்யக்நங்கள்" என்று வழங்கப்படும் விசல்யக்நம் என்றால்—சல்யம் வெளிப்படுவதால் பிராணனைப் போக்குவது எனப்பொருள்.

1. ஸிரைகள் என்பதற்கு இவ்விடத்தில் காரிரத்த குழாய்கள் என்று பொருளல்ல; இந்த மர்மஸ்த்தானத்திற்குள்ள பிராதான்யத்தை உற்று நோக்கினால்,கிரந்த கர்த்தா ஸிரைகள் என்பதால் நரம்புகள் என்னும் நாடிகளின் தொகுதிகளைக் குறிப்பிடுவதாகக் கூறவேண்டும்.

2. அதிபம்—இதுவே மஸ்திஷ்கம் என்னும் மூளையின் முக்கியமான பாகமாகும். தேஹத்தில் ஸ்த்தூலமும் ஸூக்ஷ்மமுமான எல்லா அவயவங்களுடையவும் அகில காரியங்களையும் இவ்வவயவம் தனது அதிகாரத்தில் வைத்து நடத்து மியல்புடையதாகையால் இதற்கு அதிபம் எனப் பெயரிடப்பட்டதென்று அறிக. [இவ்வாறே முற்கூறிய மர்மங்களுக்கும் அவ்வவற்றின் தன்மைகளுக்குத் தகுந்தவாறு பெரும்பாலும் பெயரிடப்பட்டிருக்கின்றன.]

3. விஷமமான துடிப்புகளைக் கொண்டு சில மர்மங்களையும், விஷமமான நோவைக்கொண்டு வேறு சிலமர்மங்களையும் அறியலாம் எனக்கருத்து.



வவ்விடமும் மர்மமாகும்[1] ; ஆகையினாலேயே இவ்விடங்கள் உயிருக்கு ஆதாரமானவையாம். முதலில் மர்மங்கள் வெகு விதமாக விவஹரிக்கப்பட்டபோதிலும்,[2] இங்கு கூறப்பட்ட விதமாக அவற்றை ஆறுதொகுதிகளாகப் பிரித்து எண்ணலாம். அல்லது மர்மங்கள் அனைத்துமே உயிர்நிலைகளாயமைந்துள்ளவை யென்னும் பொதுவான இலக்ஷணத்தைக்கொண்டு, அவையனைத்தையும் ஒரே தொகுதியாகவும் குறிப்பிட்டு எண்ணலாம். 38, 39.

**மாம்ஸமர்மங்கள்.** நான்கு இந்திரவஸ்திகள், நான்கு தலஹ்ருதயங்கள், இரண்டு ஸ்தநரோஹிதங்கள் ஆக இப்பத்தும் மாம்ஸ மர்மங்களாம். 39½.

**அஸ்த்தி மர்மங்கள்.** எட்டு விதமான அஸ்த்தி மர்மங்கள் உண்டு; அவையாவன : சங்கங்கள் இரண்டு ; கடீகதருணங்கள் இரண்டு, நிதம்பங்கள இரண்டு; அம்ஸபலகங்கள் இரண்டு இவைகளாம. 40¼.

**ஸ்நாயு மர்மங்கள்.** இருபத்திமூன்று ஸ்நாயு மர்மங்கள் இருக்கின்றன; அவையாவன : ஆணிமர்மங்கள நான்கு, கூர்சங்கள் நானகு, கூர்ச்சசிரஸ்ஸுகள் நான்கு, அபாங்கங்கள் இரண்டு, க்ஷிப்ரங்கள் நானகு, உத்க்ஷேபங்கள் இரண்டு, அம்ஸபலகங்கள் இரண்டு, வஸதி ஒன்று; ஆக இவைகளேயாம். 41.

**தமனீ மர்மங்கள்.** குதம் ஒன்று, அபஸ்தம்பங்கள் இரண்டு, விதுரை இரண்டு, ச்ருங்காடகங்கள் நான்கு; ஆக இவ்வொன்பதும் தமனீமர்மங்கள் எனப்படும். 41¾

**ஸிராமர்மங்கள்.** முப்பத்தேழு ஸிராமர்மங்கள் உண்டு; அவையாவன: இரண்டு ப்ருஹதிகள், எட்டு மாத்ருகைகள், இரண்டு நீலைகள், இரண்டு மந்யைகள், இரண்டு கக்ஷாதரங்கள், இரண்டு பணங்கள், இரண்டு விடபங்கள், ஒரு ஹ்ருதயம், ஒரு நாபி, இரண்டு பார்ச்வஸந்திகள், இரண்டு ஸ்தநமூலங்கள், இரண்டு அபலாபங்கள், ஒரு ஸ்த்தபநீ, நான்கு உர்வீக்கள், நான்கு லோஹிதாக்ஷங்கள் என்பனவாம். 42—43½.

**ஸந்தி மர்மங்கள்.** இருபது விதமான ஸந்திமர்மங்கள் உண்டு. அவையாவன : ஆவர்த்தங்கள் இரண்டு, மணிபந்தங்கள் இரண்டு, குகுந்தரங்கள் இரண்டு, ஐந்து ஸீமந்தங்கள், இரண்டு கூர்ப்பரங்கள், இரண்டு குல்பங்கள், இரண்டு க்ருகாடிகைகள், இரண்டு ஜாநுக்கள், ஒரு அதிபதி ஆக இவைகளேயாம். 44, 44½.

**சில மர்மங்களுக்குப் பெயரில் விவஹார பேதம்.** இதர வைத்தியாசாரியர்களுடைய[1] கொள்கைப்படி குதம மாம்ஸமர்மமாகவும், கக்ஷாதரங்கள்-விடபங்கள் - விதுரங்கள் இவை ஸ்நாயுமர்மங்களாக ளாகவும, ச்ருங்காடகங்கள் ஸிராமர்மங்களாகவும், கருதப்படுகின்றன ; மேலும அபஸ்தம்பங்களும் அபாங்கங்களும தமனீமர்மங்களாகவும அவ்வாசாரியர்களால கருதப்படவில்லை.[2] 45, 46.

1. மாம்ஸபேசிமுதலியது அததற்குச் சொந்தமான இனத்துடன் தனித்தனியாகக் கூடும பாகம் மர்மம் என்று குறிக்கப்படுவதாகக் கருத்து. அதாவது—மாமஸபேசிகள் அநேகம் ஒருமிக்கக் கூடுமிடம் மாமஸமர்மமாகும் ; இவ்விதமே அஸ்த்திமர்மம், ஸ்நாயுமர்மம், தமனீமர்மம், ஸிராமர்மம், ஸந்திமர்மம் இவற்றையும் கவனிக்கவேண்டும். ஸந்திமர்மம் என்றால், இரண்டு அஸ்திகள் கூடுமிடமல்ல; இரண்டுக்கு மேற்பட்ட எலும்புகளின் பலவிதமான கூட்டுகள் உள்ள இடம் ஸந்தி மர்மமாகும்.

2. வெகு விதமாக என்பதால் நூற்றேழு விதமாகப் பிரிக்கப்பட்டவிஷயம் குறிக்கப்படுகிறது.

1. தன்வந்தரி அல்லது ஸுச்ருதர் முதலியவர் இதரவைத்தியாசாரியர்கள் என்று குறிக்கப்படுகிறார்கள்.

2. வாக்படர் அபாங்கமர்மத்தை தமனீமர்மமாகத் தாமே கூறாமலிருக்க (இவரால் ஸ்நாயுமர்மமாகக்கூறப்பட்டிருக்க) இதரர் அதை தமனீமர்மமாகக் கூறவில்லையென்பதன் கருத்து விளங்கவில்லை.

*மாம்ஸமர்மம் அபிகாதப் படுவதனுலுண்டாகும் அபாயம்.*

மாம்ஸபேசி ஸம்பந்தமான மர்மம் தாக்கப்படுமானல் இறைச்சி கழுவிய நீர்போல் ஒருவாறு தெளிவுள்ளதாய் இரத்தம் இடைவிடாமல் கசிந்துகொண்டிருக்கும் ; உடலெங்கும் ஒருவாறு வெளிறிவிடும் ; புலன்கள் விஷயமுணரும் சக்தியை இழக்கும்; இறுதியில் சீக்கிரத்திலேயே மரணம் ஸம்பவிக்கும்.[1] 47.

*அஸ்த்திமர்மம் அபிகாதப்படுவதால் உண்டாகும் அபாயம்.*

அஸ்த்திமர்மத்தில் அபிகாதமுண்டானல் அதில் ஏற்படும் இரத்தக்கசிவானது மஜ்ஜையுடன் கூடியதாகவும், தெளிவாகவும் இடைஇடையே விட்டுவிட்டும் பெருகிவரும் ; வலியும் விசேஷமாயுண்டாகும். 47½.

*ஸ்நாயுமர்மம் அபிகாதப் பட்டால் உண்டாகும் அபாயம்.*

ஸ்நாயு ஸம்பந்தமான மர்மத்தில் அபிகாதமுண்டானல் அவ்விடத்தில் விறைப்பும், கொறுக்குவலியும், அசைக்கமுடியாமையும், அதிகமான வலியும் உண்டாகும் ; வாஹநங்களில் ஏறுவதற்கும், நிற்பது அல்லது படுத்திருப்பதற்கும், உட்காருவதற்கும் திறமையில்லாமற் போகும் ; அவயவங்கள் உருவத்திலும் வேலையிலும் ஒழுங்கீனமடையும் ; அல்லது மரணமாவது நேரிடும். 48½.

*தமனீமர்மம் அபிகாதப் படுவதால் உண்டாகும் அபாயம்*

தமனீ ஸம்பந்தமான மர்மம் தாக்கப்படுமானல், தமனியிலிருந்து இரத்தம் ஒருவித சப்தத்தோடு உஷ்ணமாக நுரைத்துக் கொண்டு விசேஷமாய் வெளியாகும் ; அம்மனிதனுக்கு மூர்ச்சையு முண்டாகும. 49.

*விராமர்மம் அபிகாதப் படுவதால் உண்டாகும் அபாயம்.*

விராமர்மத்தில் அபிகாதமுண்டானல், விரைகளிலிருந்து இரத்தம் தடிப்பாகவும், இடைவிடாமலும், அதிகமாகவும்பெருகும். அவ்விதம் இரத்தம் தேஹத்திலிருந்து வெளிப்பட்டுவிடுவதால் நாவறட்சியும், தலைச்சுற்றலும், மேல்ச்வாஸமும், மூர்ச்சையும், விக்கலும் கிரமமாக ஏற்பட்டு; இறுதியில் மரணமும் உண்டாகக்கூடும். 50.

*ஸந்தி மர்மம் அபிகாதப்பட்டால் உண்டாகும் அபாயம்.*

ஸந்திகள் ஸம்பந்தமான மர்மம் தாக்கப்படுமானல், தாக்கப்பட்ட இடத்தில் சூகங்கள் என்னும் சிறு முளைகள் வியாபித்திருப்பது போன்ற இலக்ஷணம் காணப்படும் ; அவ்விடம் ஆறிவிடுமாகில் அவ்விடம் முடமாகப்போய்விடும் ; அவ்வவயவத்தின் இயற்கை வன்மையும் சலனவேலையும் இழக்கப்படும் ; மற்ற பாகம் சுஷ்கித்து, அபிகாதமுண்டானபூட்டில் மட்டும் வீக்கம் நிலைத்துநிற்கும். 51.

*ஸத்யப்பிராணஹர மர்மங்கள்.*

நாபி, இரண்டு சங்கங்கள், அதிபம், குதம், இருதயம், நானகு ச்ருங்காடகங்கள், வஸ்தி, எட்டு மாத்ருகைகள் என்னும் இப்பத்தொன்பதும் ஸத்யப் பிராணஹர மர்மங்கள் எனப்படும்;[1] ஒருக்கால் ப்ராணபாயம் உடனே உண்டாகாமற் போகிலும் அபிகாதமுண்டான பிறகு ஏழுநாட்களுக்குள் உயிருக்கு அபாயமுண்டாகும். 52, 52½.

*காலாந்தரப் பிராணஹர மர்மங்கள்.*

இரண்டு அபஸ்தம்பங்கள், நான்கு தலஹ்ருதயங்கள், இரண்டு பார்ச்வஸந்திகள், இரண்டு கடீகதருணங்கள், ஐந்து ஸீமந்தங்கள், இரண்டு ஸ்தநமூலங்கள், நான்கு இந்திரவஸ்திகள், நான்கு க்ஷிப்ரங்கள்,

1. இரத்தம் எப்பொழுதும் இடைவிடாமற் கசிந்து இரத்தம் தேஹத்தில் குறைந்துவிடுவதால் உடல் வெளிறிவிடும். தேஹம் வெளுத்துப்போவதால் பலம் குன்றிப்போய் இந்த்ரியங்கள் அவற்றின் சக்தியை இழக்க நேரிடுகிறது ; இவ்வாறு தேஹபலங் குன்றிப் போய் இந்த்ரியங்களும் சக்தியிழக்கவே சீக்கிரம் உயிர் துறப்பதும் அந்தநிலைமைக்கு இயல்பானதேயாம்.

1. ஸத்யப் பிராணஹரமர்மங்கள்—உடனே (அபிகாதப்பட்டஉடனேயாவது ஒருவாரத்திற்குள்ளாவது) பிராணபாயமுண்டாக்கும் உயிர்நிலைகள்.



இரண்டு அபலாபங்கள், இரண்டு ப்ருஹதீக்கள், இரண்டு நிதம்பங்கள், இரண்டு ஸ்தநரோஹிதங்கள் என்னும் இம்முப்பத்து மூன்றும் காலாந்த்ரப் பிராணஹரமர்மங்கள்[1] எனப்படும் ; என்றுல் இவற்றில் அபிகாதமுண்டானல் ஒரு மாஸத்திலாவது ஒன்றரைமாஸத்திலாவது மரணம் ஸம்பவிக்கும். 54½.

*விசல்யப்பிராணஹர மர்மங்கள்.*

இரண்டு உத்க்ஷேபங்களென்ன, ஸ்த்தபநீயென்ன இம்மூன்றும் விசல்யப்பிராணஹர மர்மங்கள் என்று கூறப்படும்[2] ; இந்த மர்மங்ககளில் எதிலேனும் சல்யம் ஏதாவது பிரவேசித்துவிட்டால், அவ்விடத்தில் வாயுவானது மாம்ஸபேசிகளையும், வஸையென்னும் ஒருவித இரத்தநீரையும், மஜ்ஜையையும், நரம்பு நிணங்களையும்[3] சோஷணம் செய்து, அவ்விடத்தில் வாயு மாத்திரம் சேர்ந்திருக்குமாகையால், சல்யத்தை வெளிப்படுத்தியதும், அவ்வாயுவும் வெளிப்பட்டு, ச்வாஸ-காஸங்களை உண்டாக்கி, உயிரைப் போக்கிவிடுகிறது. 55, 56.

*வைகல்யகரமர்மங்கள்.*

இரண்டு பணங்கள், இரண்டு அபாங்கங்கள், இரண்டு விதுரங்கள், இரண்டு நீலைகள், இரண்டு மந்யகள், இரண்டு க்ருகாடிகைகள், இரண்டு அம்ஸங்கள், இரண்டு அம்ஸபலகங்கள், இரண்டு ஆவர்த்தங்கள், இரண்டு விடபங்கள், நான்கு உர்வீக்கள், இரண்டு குகுந்தரங்கள், இரண்டு ஜாநுகள், நான்குலோஹிதாக்ஷங்கள், நான்குஆணிகள், இரண்டுகக்ஷாதரங்கள், நான்கு கூர்ச்சங்கள், இரண்டு கூர்ப்பரங்கள் என்னும் இந்தநாற்பத்துநான்கும் வைகல்யகர மர்மங்கள் எனப்படும் ;[1] இவற்றிலும் அபிகாதம் மிக்க வலிவாகத் தாக்கினுல் அவையும் சில ஸமயம் பிராணனைப் போக்கும். 57-58½.

*ருஜாகர மர்மங்கள்.*

கூர்ச்ச சிரஸ்ஸுகள் நான்கு, குல்பங்கள் இரண்டு, மணிபந்தங்கள் இரண்டு ஆக இவ்வெட்டும் ருஜாகர[2] மர்மங்கள் என்று வழங்கப்படும். 59.

*மர்மங்களின் அளவுகள்.*

அவற்றுள் விடபங்கள், கக்ஷாதரங்கள், உர்வீக்கள், கூர்ச்ச சிரஸ்ஸுகள் என்னும் இப்பன்னிரண்டு மர்மங்களில் ஒவ்வொன்றும் விஸ்தீர்ணத்தில் ஒவ்வொரு அங்குலம் அளவுடையதாகும். மணிபந்தங்கள், குல்பங்கள், ஸ்தநமூலங்கள் இவற்றில் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு அங்குலம் அளவான விஸ்தீர்ணமுடையன. ஜாநுக்களும் கூர்ப்பரங்களும் தனித்தனியே மும்மூன்று அங்குலம் அளவுடையவையாம். குதம், வஸ்தி, இருதயம், நாபி, நீலைகள், ஸீமந்தங்கள், மாத்ருகைகள், கூர்ச்சங்கள், ச்ருங்காடகங்கள், மந்யைகள் என்னும் இவ்விருபத்தொன்பது மர்மங்களும் அவரவருடைய கையால் ஒவ்வொரு உள்ளங்கை அளவுடையவையாம். மிச்சமுள்ள ஐம்பத்தாறு மர்மங்களும் அவரவருடைய கையால் அரை அங்குலம் அளவுள்ளவையாகும் ; வேறு சில வைத்தியாசாரியர்களின் அபிப்பிராயப்படி இவை எள் அல்லது நெல் அளவுள்ளதாம். 62, 62¾.

1. காலாந்த்ரப் பிராணஹரமர்மங்கள்—அபிகாதமுண்டான சில காலங்கழித்து (ஒன்று அல்லது ஒன்றரை மாஸத்தில்) பிராணபாய முண்டாக்கக்கூடிய உயிர்நிலைகள்.

2. விசல்யப் பிராணஹாரம்— தேஹத்திற் பாய்ந்துள்ள சல்யத்தை வெளிப்படுத்துவதால் பிராணபாய முண்டாக்கும் உயிர்நிலையெனப் பொருள். இதுவே விசல்யக்நம் என்றும் கூறப்படும்.

3. மஸ்துலுங்கம் என்பதால் மூளையும், மூளைஸம்பந்தமான நரம்புகளின் அம்சமாயுள்ள நிணங்களும் குறிக்கப் படுகின்றன.

1. வைகல்யகர மர்மங்கள்—அபிகாதத்தினுல் அந்தந்த அவயவம் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வகையில் ஸ்த்திரமான கோளாறை யடைந்து விடுமாகையால் இப்பெயர் வந்தது.

2. ருஜாகரங்கள்—அபிகாதத்தினுல் வேறு எவ்வித விகாரமுமுண்டாகாமல் வலிமாத்திரம் எப்பொழுதும் நிலைத்திருக்கும் உயிர் நிலைகளாம்.

*மர்மங்கள் தாக்கப்படுவதால் மரணமுண்டாகும் வகை.*

முன்னால் நான்கு விதங்களாக விவரிக்கப்பட்டுள்ள யாதொரு விரைகள் உண்டோ[1] அவை தேஹம் அனைத்தையும் போஷித்துத் திருப்தியுறச் செய்கின்றன. அதே விரைகள் மர்மங்களையும் ஆச்ரயித்திருக்கின்றன; அவை தாக்கப்பட்டு விட்டால், இரத்தம் மிதமிஞ்சி வெளிப்படுமாகையால் அப்பொழுது தாதுக்கள் விரைவில் க்ஷயமடைய நேரிடும்; அதனால் வாயு விருத்தியடைந்து கடுமையான வலியையும் வேதனையையும் உண்டுபண்ணும்; அப்பொழுது பித்தமும் தூண்டப்பட்டு விருத்தியடைய, அப்பித்த வெழுச்சியால் நாவறட்சி, தாதுக்ஷயம், வெறி, தலைச்சுற்றல் இவை உண்டாகும்; அப்பால் அவனுடைய தேஹத்தில் வியர்வை அதிகரித்து, அளவற்ற சிரமமும் தளர்ச்சியும் உண்டாய், இறுதியில் அவன் இறந்துவிடுகிறான். 63—65½.

*மர்மம் தாக்கப்பட்டதும் செய்ய வேண்டிய சிகித்ஸை.*

மர்மஸ்த்தானத்தில் அபிகாத முண்டானால், சீக்கிரம் அதற்கு ஸமீபத்திலுள்ள ஸந்திவரையில் அவ்வவயவத்தை அறுத்து விலக்கிவிடவேண்டும்; ஏனெனில், ஸந்திப் பிரதேசம் வரையில் அறுக்கப்படுமானால், விரைகள் சுருங்கிக்கொள்ளும்; ஆகவே இரத்தப் பெருக்கு நின்றுபோய்விட, அதனால் பிராணாபாயத்தினின்றும் பிணியாளி தப்பிவிடுவான். 66, 67.

*மர்மஸ்த்தானங்களைக் காக்கவேண்டியதன் முக்கியம்.*

மர்மஸ்த்தானமல்லாத விடத்தில் அபிகாதம் பலமாகத் தாக்கியபோதிலும் அம்மனிதன் பிழைப்பான்; பிராணஹரமெனக் கூறப்பட்டுள்ள மர்மத்திலோ சிறிதளவு தாக்கினாலும் பிழைக்கமாட்டான். எவனாவது ஒருவன் வைத்தியனுடைய திறமையினாலாவது, அபிகாதம் மிகச்சொற்பமாகத் தாக்கியதாலாவது பிழைத்துவிட்டபோதிலும், தாக்கப்பட்ட இடத்தில் ஏதேனும் நிலையான கோளாறு உண்டாய்விடும். மர்மஸ்த்தானங்கள் இவ்வளவு அபாயகரமாயிருப்பதால், அவ்விடங்களில் க்ஷாரப்பிரயோகம், விஷகுணமுள்ள ஒளஷதங்களின் பிரயோகம், அக்னிப் பிரயோகம் இவை முதலியவற்றைச் செய்யாமல் ஜாக்கிரதையோடிருந்து சிகித்ஸை செய்ய வேண்டும். மர்மஸ்த்தானங்களில் தாக்கிய அபிகாதம் மிகச்சொற்பமா யிருந்தபோதிலும் பெரும்பாலும் அதிக துன்பமளிக்கும்; மர்மங்களைப்பற்றிய வியாதிகளும் அவ்விதமே பெருமுயற்சியோடுசிகித்ஸிக்கப்பட்டும் விசேஷமான கஷ்டங்களை யுண்டுபண்ணுகின்றன. 68—70.

## ஐந்தாம் அத்தியாயம்.

இனி விக்ருதி விஞ்ஞாநசாரீரம்[2] என்னும் அத்தியாயம் விவரித்துக் கூறப்படும்.

*ரிஷ்டத்தின் விவரம்.*

இனி யுண்டாகும் கனிக்கு மலர் போலவும், அக்னிக்குப் புகைபோலவும், மழைக்கு மேகம் போலவும், ஸம்பவிக்கப்போகிற மரணத்துக்கு ரிஷ்டம்[1] என்பது நிச்சயமான குறியாகக் கருதப்படுகிறது. ரிஷ்டமன்றியில் மரணம் உண்டாவதுமில்லை, உயிருடன் நீண்ட காலம் ஜீவித்திருக்கவேண்டியவனிடம் ரிஷ்டம் காணக்கூடியதுமில்லை. திறமையின்மையினால் ரிஷ்டமில்லாததை ரிஷ்டமாகவும், ரிஷ்டத்தை ரிஷ்டமல்லாததாகவும் பிரமிப்பதுண்டு. 1, 2.

*ரிஷ்டங்கள் இரண்டு விதம்.*

சிலர் ரிஷ்டத்தை இரண்டுவிதமாகப் பிரித்துக் கூறுவர்; அவற்றுள் ஒன்று ஸ்த்தாயி ரிஷ்டம் என்றும் மற்றொன்று அஸ்த்தாயி ரிஷ்டம் என்றும் கூறப்படும். தோஷங்கள் அதிகமாகச் சேர்ந்து வியாதி ஸம்பவித்தால், போலிரிஷ்டமும் உண்டாகக்கூடும்; இதுவே அஸ்த்தாயி ரிஷ்டம் என்றும் ரிஷ்டாபாஸம் என்றும் கூறப்படும்; விகாரமடைந்த தோஷங்கள் அடங்கிவிட்டால் அந்த அஸ்த்தாயி ரிஷ்டமும் அடங்கி மறைந்து விடும். ஸ்த்தாயி ரிஷ்டம் என்பது அவசியம் மரணம் உண்டாகுமென்பதைக் குறிப்பிடுவதாகும். 2½-3½

*ரிஷ்டத்தின் ஸங்கிரஹமான இலக்ஷணம்.*

உருவம் அல்லது நிறம், இந்த்ரியங்கள், குரல், சாயை, பிரதிச்சாயையென்னும் பிரதிபிம்பம், செய்கை இவை முதலியவற்றிலும், மற்றுமுள்ள இயற்கைத் தன்மைகளிலும், காரணமறியமுடியாமலே விகாரம் உண்டானால், அதுவே ஸங்க்ஷேபமாய் ரிஷ்டம் எனப்படுவதாய் அறிக. 4, 5

*ஒவ்வொரு அவயவத்தைப் பற்றிய ரிஷ்டக் குறிகள்.*

உடலிலும் சிரஸ்ஸிலுமுள்ள மயிர்கள் எண்ணெய்முதலிய ஸ்நேஹவஸ்து சேராமலே எண்ணெய்ப்பூசியதுபோல் காணப்படும். கண்கள் மிகவும் உருண்டுருண்டு ஆடிக்கொண்டு அல்லது அசையாமல் இருந்துகொண்டு பள்ளத்தில் விழுந்து நிற்கும்; அல்லது கண்கள் மிகவும் அதிகமாய் வெளியிற் பிதுங்கி வந்திருப்பதாகத் தோற்றும்; வக்கிரமா யிருப்பதாகக் காணப்படும்; கண்கள் மூடப்படாமலே திறந்த நிலைமையிலும், மூடிய கண்கள் திறக்கப்படாமல் மூடிய நிலைமையிலும் நிற்கும்; வஸ்துக்களை நன்றாகப் பார்க்கமுடியாமல் தத்தளித்தப் பார்வையும், மந்தமான பார்வையும் ஏற்படும்; கீரிப்பிள்ளையின் கண்களைப்போலவும், மாடப்புறாவின் கண்களைப்போலவும், கொள்ளிக்கட்டையின் சாயலாகவும் தோற்றக்கூடும்; கண்களிலிருந்து அடிக்கடி ஜலம் பெருகும்; இமைமயிர்கள் உதிர்ந்துவிடும். நாசியானது மிகவும் விரிந்த த்வாரங்களோடு கூடியதாகவும், மிகவும் சுருங்கிய த்வாரங்களுள்ளவை போலவும், கொப்புளங்கள் நிரம்பியதாகவும், மிகவும் விரிந்து வீங்கியதாகவும், வடிப்புள்ளதாகவும், வாடியதாகவும் காணப்படும். உதடுகளோ மேலிருப்பது கீழே தொங்கியும், கீழிருப்பது மேலுக்கு உயர்ந்தும் நிற்கும்; இரண்டு உதடுகளும் கனிந்த நாவற்பழங்களைப் போன்றவைகளாயிருக்கும். பற்களில் சர்க்கரை யென்னும் காரை கட்டும். நாக்கு வக்கிரமாகவும், விஸர்ப்பம் என்னும் புண்களுடன் கூடியதாகவும், மிக வெளுத்தும், உலர்ந்தும், தடித்துப் பெருத்தும், கறுத்தும், ஏதோ மாப்பாண்டம் முதலியதால் பூசப்பட்டது போலவும், எப்பொழுதும் நீரொழுகிக்கொண்டும், முள்ளுகள்போன்ற முளைகளுடன் கூடியதுபோலவும் காணப்படும். கழுத்தானது சிரஸ்ஸைச் சுமந்து நிற்கமுடியாததாகவும், முதுகு தேஹத்தைத் தாங்கிக்கொண்டிருக்க வல்லமையற்றதாகவும் இருக்கும். தவடைகள் அல்லது முகவாய்க்கட்டையின் பாரிசங்கள் வாயில் இடப்பட்ட கபளத்தைத் தாங்கி மெல்லுவதற்குத் திறமையற்றதாகும். அவயவங்கள் யாவும் திடீரென்று அதிகருவாகவோ இலகுவாகவோ ஆய்விடும்; விஷப்பற்றுதல் எதுவும் இல்லாமலே நாசி, செவி முதலிய த்வாரங்களிலிருந்து இரத்தப்

1. நான்கு விதமான விரைகளின் விவரத்தைப் பற்றி 2:8-ம் பக்கத்தில் விவரம் காண்க.

2. இயற்கை நிலைமை பிரக்ருதி எனப்படும்; பிரக்ருதியின் மாறுபட்ட நிலைமை (அதாவது பிரக்ருதத்தில் மனிததேஹத்தின் இயற்கைக்கு மாறானநிலைமை) விக்ருதி யெனப்படுகிறது. அவ்விகாரங்களை அறிவதற்கான இலக்ஷணங்களை விளக்கும் அத்தியாயம் "விக்ருதி விஞ்ஞாநம்" என்று கூறப்படுகிறது.

1. ரிஷ்டம்—தேஹத்திற்கு வியாதி முதலியதால் உண்டாகப்போகிற அபாயங்களை அறிவிக்கும் முற்குறி.

பெருக்கு உண்டாகும். ஆண்குறியில் துர்நீர்க் கசிவு உண்டாகும். பீஜகோசங்கள் அதிகமாகத் தாழ்ந்து தொங்கும். மேற்கூறிய, குறிகளுக்கு விபரீதமான தோற்றங்கள் உண்டானால் அவையும் மிருத்யுவினால் ஏவப்பட்டு ஸம்பவித்த அவக்குறிகளேயாகும்.[1] 6-13¼.

*பல இந்த்ரிய ஸம்பந்தமான ரிஷ்டங்களுடைய குறிகளின் விவரங்கள்.*

ஒருவனுக்கு ஸிரைகள் என்னும் இரத்தக் குழாய்கள் நெற்றியிலாவது, வஸ்தியின் சிரஸ்ஸிலாவது கொடிகளைப் போலவாவது, சந்திரனின் இளம்பிறையைப் போலவாவது, அதற்கு முன் காணப்படாத வகையில் விளக்கமாகக் காணப்பட்டால், அவன் ஆறு மாதங்களுக்கு மேல் ஜீவித்திருக்கமாட்டான். ஒருவனுக்கு தேஹத்தில் விழுந்த ஜலமானது தாமரையிலையிலிருந்து நழுவுவதுபோல் சரீரத்தில் ஒட்டாமல் விழுந்துவிடுமானால் அவனும் ஆறுமாதங்களளவுமே ஜீவத்திருப்பான். எவனொருவனுக்கு ஸிரைகள் இலைப் பசுமை நிறமாகவும், மயிர்க் கால்களின் முகங்கள் மூடப்பட்டவையாகவும் ஆய்விடுகின்றனவோ, அவன் பித்தப் பிரகோபமடைந்து, அம்லரஸத்திலும் விருப்பமதிகரித்தவனாய் சீக்கிரம் உயிர் துறப்பான். ஒருவனுக்கு முகத்திலாவது சிரஸ்ஸிலாவது எண்ணெய்ப் பசையுடன் கூடியதும் வறட்டிப் பொடியைப் போன்றதுமான சூர்ணம் உண்டாய் உதிருமானால், தலையிலிருந்து தூமமாவது கிளம்புமானால் அவனுக்கு உயிர் வாழ்வு ஒருமாத காலமேயாம். ஆரோக்கிய நிலைமையிலுள்ள ஒருவனுடைய சிரஸ்ஸிலாவது புருவங்களிலாவது புதிதாக ஸீமந்தங்கள் எனப்படும் வடுக்களும் சுழிகளும் உண்டாகுமானால், அவனுக்கு ஆறு தினங்களிலும், அதே குறிகள் வியாதிக் கிரஸ்தனுக்கு உண்டானால் மூன்று நாட்களிலும் மரணம் ஸம்பவிக்கும். ஒருவனுக்கு நாக்குக் கறுநிறமடைந்து, வாய் துர்க்கந்தம் வீசி, இடது கண் பள்ளத்தில் ஆழ்ந்துவிடுமானால், பக்ஷிகளாவது தலையின் மீது விழுந்தோடுமானால் அத்தகைய பிணியாளிக்கு சிகிச்சை செய்யாமல் அவனைக் கைவிடவேண்டும். ஒருவன் ஸ்நானம் செய்து, சரீரமெங்கும் சந்தனம் முதலியதைப் பூசிக் கொள்ள, அவனுடைய தேஹத்தில் மார்பிலுள்ள பூச்சு மாத்திரம் மிகவும் உலர்ந்துவிட்டு, மற்ற அவயவங்களிலுள்ள லேபம் மாத்திரம் மிகவும் ஈரமாகவே இருக்குமானால், அவன் அரை மாஸத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டான். ஒருவனுடைய தேஹத்தில் திடீரென்று இயற்கை நிறமும் இயற்கைக்கு மாறான நிறமும் ஒரே காலத்தில் உண்டானாலும், அப்படியே தேஹத்தில் சில அவயவங்களுக்குப் புஷ்டியும் வேறு சிலவற்றிற்கு இளைப்பும் ஒரே ஸமயத்தில் ஸம்பவித்தாலும் அவை ஸமீபத்தில் மரணமுண்டாவதைக் குறிப்பிடுபவையாம். எவனுடைய விரல்கள் இழுத்துச் சுடிக்கப்படும்போது சுடிக்கமுடியாமலிருக்கின்றனவோ அவனும் நீண்ட காலம்பிழைக்கமாட்டான். அப்படியே க்ஷயம், காஸம் முதலிய சில வியாதிகளிலும் விரல் சுடுங்காமலிருப்பது மரணக்குறியாகும். ஒருவனுக்கு இயற்கைக்கு விரோதமாக கண்டத்வனி யுண்டாவது, சுவாஸம் மிகக் குறுகி அல்லது நீண்டதாயிருப்பது, அல்லது நல்ல வாஸனையுள்ளதாகவோ துர்நாற்றமுள்ளதாகவோ இருப்பது, சரீரம் ஈரப்பசை யுடையதாக அல்லது முற்றிலும் ஈரப்பசையற்றதாகக் காணப்படுவது, தேஹத்திலும், மலம் வஸ்திரம் விரணம் முதலியவற்றிலும் மனிதனுக்கு இயல்பில்லாத ஒருவித

1. நேர் விபரீதமான தோற்றங்கள் என்பதால்-மயிர்களில் ஸ்நேஹம் பூசாமலே ஸ்னிக்த்தத் தன்மை முதலியவை காணப்படுவதற்கு நேர் எதிரிடையாக ஸ்நேஹம் பூசியும் ரூக்ஷமாகக் காணப்படுதல் முதலியவை குறிக்கப்படுகின்றன.



மணம் உண்டாவது என்னும் இக்குறிகளைக் கொண்டு அம்மனிதனுடைய ஜீவிதகாலம் ஒரு வருஷத்திற்குமேல் நீடித்திராது என்று அறியலாம். ஒருவனுடைய தேஹத்தில் நற்சுவையொன்று அதிகமாயேற்பட்டு ஈக்களும் பேன்களும் அதிகமாகச் சேர்ந்தாலும், அதிகமாக தேஹத்தில் அருசியுண்டாய், ஈக்களும் பேன்களும் இவனைவிட்டு விட்டாலும் அவனும் ஒருவருஷகாலத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டான். எப்பொழுதும் சூடாகவே இருந்துவரும் அவயவங்களில் திடீரென்று சைத்தியம் ஸம்பவித்தாலும், அவ்விதமே எப்பொழுதும் குளிர்ச்சியாகவே இருந்துவரும் அவயவங்களில் திடீரென்று அபரிமிதமான உஷ்ணம் உண்டானாலும், வியர்வை-தேஹம் அசைக்கமுடியாமற்போதல் இவை நிஷ்காரணமாய் திடீரென்று ஏற்பட்டாலும் அம்மனிதனும் ஒரு வருஷத்திற்குமேல் பிழைத்திருக்கமாட்டான். எவனொருவன் சைததியததை அதிகமாயுண்டாக்கக்கூடிய கட்டிகள் ஸம்பவித்தும் தேஹமே மிகக் குளிர்ச்சியாயிருப்பதாகக் காணப்படும் அதிக அழற்சியை அநுபவிக்கின்றானோ, குளிர்ச்சியினால் வருந்தும் நிலைமையிலும் சூட்டில் வெறுப்புள்ளவனாயிருக்கிறானோ அவன் சீக்கிரத்தில் இயமனுக்கு வசமாவான். எவனொருவனுக்கு மார்பில் உஷ்ணமும், வயிற்றில் அமிதமான குளிர்ச்சியும் ஏற்படுகின்றதோ, மலம் உடைந்து வெளியாவதுடன் நாவறட்சியும் உண்டாகின்றதோ அவன் சவத்திற்குச் சமானமானவனேயாம். மூத்திரமாவது, மலமாவது, சுக்ரமாவது ஜலததில் விடப்பட்டு அமிழ்ந்து விடுமானாலும், நாசியிலிருந்து வெளியாகும் கபமானது அநேக வர்ணமாயிருந்தாலும் அவன் ஒரு மாஸத்திற்குமேல் ஜீவித்திருக்கமாட்டான். ஸமீபத்தில் மரிக்கப்போகும் மனிதன் ஆகாயம் ஸ்த்தூலமாகப் போய் குரு பதார்த்தமாக மாறியிருப்பது போலவும், ஸ்த்தூலமான பூமிமுதலியது ஆகாயத்தைப்போல மாறியிருப்பது போலவும் காண்பான்; உருவமில்லாத வாயுமுதலிய வஸ்துவை உருவமெடுத்ததுபோலவும், உருவமுள்ளதை உருவமில்லாத வஸ்துபோலவும் காண்பான்; ஒளியுடன் பிரகாசிப்பதை ஒளியற்றதாகவும், அவ்விதமே வெண்மையானதைக் கறுப்பாகவும், இல்லாத வஸ்து ஒன்று எதிரில் இருப்பதாகவும் அவனுக்குத் தோற்றும்; நேத்திர ரோகமில்லாமலிருந்தும் ஒரு சந்திரனை அநேக சந்திரனாகவும் களங்கமற்றதாகவும் இருக்கக் காண்பதுண்டு. நித்திரையின்றி விழித்திருக்கையிலேயே இராக்ஷஸர்களையும்; கந்தர்வர்களையும், பிரேதங்களையும், மற்றும் அவைபோன்ற வேறு ரூபங்களையும் காண்பான். சீக்கிரம இறக்கப்போகிற மனிதனுக்கு பயங்கரமான உருவங்கள் கண்களில் புலப்படும். ஸப்த ருஷி நக்ஷத்திரங்களுக்கு ஸமீபத்திலுள்ள அருந்ததீ நக்ஷத்திரத்தையாவது, த்ருவநக்ஷத்திரத்தையாவது, ஆகாசகங்கையையாவது எவனொருவன் காணமுடியாதவனாகிறானோ, அவன் ஒரு வருஷ காலத்திற்குமேல் பிழைத்திருக்கமாட்டான். ஒருவித சப்தமும் இல்லாத தருணத்தில் மேககர்ஜனை, நீரோட்டத்தின் தொனி, வீணை, மேளம், புல்லாங்குழல் இவற்றின் ஒலி, மற்றும் பலவிதமான சப்தங்கள் இவற்றைக் கேட்பான்; இவ்வித சப்தங்களில் ஏதாவது இருந்தால் அத்தருணத்தில் அது கேட்கப்படாமலும் போய்விடும்; காதுகளை விரல்களால் மர்த்தனம் செய்யும்போது "துக துக" என்கிற சப்தமும் கேட்காது; அவ்விதமே கந்தமென்ன, சுவையென்ன, பரிசமென்ன இவற்றையும், இருப்பவற்றை இராதவையாகவும், இராதவற்றை இருப்பவையாகவும் விபரீதமாக உணர்வான்; அல்லது முற்றிலும் உணரவேமாட்டான்; அவிந்துபோகிற தீபத்தின் வாஸனையையும் முகர்

தறிய முடியாதவனாயிருப்பான்; சாஸ்திர முறைப்படி உபயோகிக்கப்பட்ட இரஸங்கள் தேஹத்திற்குத் துர்க்குணமுண்டாக்கக்கூடியவையாகவும், முறைதவறாக உபயோகிக்கப்பட்டவை ஆரோக்கிய கரமாகவும் இருப்பதுண்டு. உடம்பில் புழுதி படிந்ததுபோல் தோற்றும். தேஹத்தில் அடி முதலியது தாக்குவதையும் அவன் உணரமாட்டான். கடுமையான தவம் புரியாமலும், சாஸ்திர முறைப்படி யோகாப்யாஸம் செய்யாமலும், இந்திரியங்களுக்கு அகோசரமான விஷயத்தை ஒருவன் அறிந்து விடுவானானால் அவனுக்கும் சீக்கிரம் மரணமுண்டாகுமெனக் கூறலாம். 14—37½.

குரல் வித்தியாஸங்களாலான ரிஷ்டங்களின் குறிகள்.

எவனுடைய குரலானது ஹீனஸ்வரமாகவாவது, தீனமாகவாவது, நன்கு விளங்காததாகவாவது, தழுதழுத்ததாகவாவது இருக்கின்றதோ, எவனொருவன் ஏதோ சொல்ல விரும்பியும் திடீரென்று பேச முடியாமல் பிரமித்துவிடுகிறானோ அவன் நீடித்தநாள் ஜீவித்திருக்கமாட்டான். குரல் துர்ப்பலமடைந்தாலும், தேஹவன்மையாவது நிறமாவது ஹீனமானாலும், தகுந்த காரணங்களின்றியே வியாதியுண்டானாலும் அவ்விதக் குறிகளைக் கண்டு மரணம் ஸமீபத்திருப்பதாகக் கூறலாம். தனக்கு அந்திமகாலம் நேரிட்டிருப்பதாக இயற்கைக்கு விரோதமான தொனியோடு பேசுபவனும், அவ்விதமான சப்தமொன்று உண்டாவதாகச் செவியுறுபவனும் சிகித்ஸைக்குத் தகாதவனென்று நிச்சயித்து வைத்தியன் அவனைப் பரிஹரிக்கவேண்டும். 38—40½.

பலவிதமான சாயைகளும் அவற்றின் ஸம்பந்தமான ரிஷ்டங்களும்.

எவனுடைய சாயையானது அவனது இயற்கையான உருவமைப்பு என்ன, உருவத்தின் பிரமாணமென்ன, நிறமென்ன, ஒளியென்ன, இவைகள் விபரீதமாயிருப்பதாக ஸ்வப்னத்தில் தோற்றியபோதிலும் அம்மனிதன் பிரேதமாகவே ஆய்விடுவான். வெயில், கண்ணாடி, தண்ணீர் இவை முதலியவற்றில் அந்தந்த தேஹத்தின் உருவமைப்புக்கும் உருவ அளவுக்கும் ஏற்றவாறு சாயை ஒன்று உண்டாகின்றதோ அதுதான் பிரதிபிம்பம் எனப்படும். நிறமும் ஒளியும் எந்த நிழலில் இயற்கைப்படியே பிரதிபலிக்கின்றனவோ அது சரீரத்தின் ஸம்பந்தமான ஸாக்ஷாத் சாயையென்றே கூறப்படும். ஒருவனுடைய பிரதி பிம்பமானது அறுபட்ட உருவமுள்ளதாகவாவது, மூளியா யிருப்பதாகவாவது, இயற்கையுருவத்தினும் அதிகமாகவாவது, தலையில்லாததாகவாவது, இரண்டு தலைகளுள்ளதாகவாவது, பயங்கரமான நிலைமையுள்ளதாகவாவது, அல்லது வேறு எவ்விதமான விகாரத்தைப் பெற்றிருப்பதாகவாவது காணப்படுமானால்— அவ்விதமான சாயையின் உருமாறுட்டம் அதற்கு இலக்ஷியமாயுள்ள கண்ணாடி முதலிய வஸ்துவின் விகாரத்தைக் காரணமாகக் கொண்டு ஏற்படாததாயிருக்குமாயின் — அம்மனிதனுக்கு ஆயுள் முடிவடைந்ததாய் அறியலாம். பிரதிச் சாயாரூபமான கன்னிகை எவனுடைய கண்களுக்குப் புலப்படுவதில்லையோ அவன் சீக்கிரம் இறந்துவிடுவான். 41—45.

பஞ்சபூத ஸம்பந்தமான சாயைகளும் அவற்றினாலான ரிஷ்டங்களும்.

ஆகாயம் முதலிய ஐந்து பூதங்களுக்கும் அததற்கேற்றவாறு பற்பல இலக்ஷணங்களையுடைய ஐந்து விதமான சாயைகள் உண்டு; அவையாவன :— ஆகாய ஸம்பந்தமான சாயையானது நிர்மலமாகவும், மிகவும் நீல நிறமாகவும், ஸ்நிக்த்தமாகவும், ஒளி வீசுவதுபோலவும் இருக்கும். வாதத்தினாலான சாயையானது புழுதிகளால் ஒருவாறு சிவந்ததாகவும், கறுநிறமாகவும், பஸ்மம் பூசியதுபோல ரூக்ஷமாகவும், ஒளியற்றதாகவும் இருக்கும். அக்னிஸம்பந்தமான



சாயையானது மிகவும் செந்நிறமாகவும், தேஜோமயமாகவும், பார்ப்பதற்கு இரமணீயமாகவும் இருக்கும். ஜலஸம்பந்தமான சாயையானது சுத்தமான வைடூர்யக் கல்லுபோல் நிர்மலமாகவும், மிகவும் ஸ்நிக்த்தமாகவும் இன்பந்தரக்கூடியதாகவும் இருக்கும். பூமிஸம்பந்தமான சாயையானது அசைவற்றதாகவும், ஸ்நிக்த்தமாகவும், குருகுணமுள்ளதாகவும், நிர்மலமாகவும், கறுஞ்சிவப்பாகவும் இருக்கும். வாயுஸம்பந்தமான சாயைமட்டும் வியாதிகள், மரணம், மற்றுமுள்ள அநேகவிதமான துன்பங்கள் இவற்றை உண்டுபண்ணும்; மற்ற பூதங்களின் சாயைகள் ஸுகமுண்டுபண்ணத் தகுந்தவையாம். எல்லாவிதமான பிரபையும் தேஜோமயமானது; அந்த பிரபையானது சிவந்தது, பொன்னிறமானது, வெண்மையானது, கறுநிறமுள்ளது, பசுமையானது, வெளிறியது, வெண்மையல்லாத ஒருவித நீலநிறமானது என்று ஏழுவகைப்படும். அவற்றுள் நாற்புறமும் மலர்ந்து பரவக்கூடியவையும், ஸ்நிக்த்தமானவையும், நிர்மலமா யிருப்பவையுமான பிரபைகள் சிறந்தவையாம்; மலினமாகவும், ரூக்ஷங்களாகவும், மலர்ச்சியின்றி சுருங்கியவையாகவுமுள்ள பிரபைகள் சிறந்தவையல்ல. 46—50½.

சாயைக்கும் பிரபைக்குமுள்ள பேதம் முதலிய விசேஷங்கள்.

சாயையானது தேஹம் முதலியவற்றின் நிறத்தைத் தான் கவர்ந்து கொள்ளும்; பிரபையோ நிறங்களைப் பிரகாசிக்கச்செய்யும். மேலும் சாயையை அருகில் வந்தால்தான் காணலாம்; பிரபையையோ தூரத்திலேயே நன்கு விளங்கக் காணலாம். சாயையற்றவனாகவாவது, பிரபையற்றவனாகவாவது ஒரு மனிதனும் இரான். சாயைகளை ஆதாரமாயுடைய விசேஷங்கள் யாவும் அந்தந்த காலத்தில் மனிதர்களுக்கு ஸம்பவிக்கக்கூடிய சுபாசுபங்களைக் குறிப்பிடக் கூடியவைகளா யிருக்கின்றன. 51—52½.

பலவகையான ரிஷ்டங்கள்.

தோள் சரிந்து பாதங்களைத் தேய்ப்பது போல எவனொருவன் நகர்ந்துச் செல்கிறானோ, எவன் ஹிதமான உணவை வேண்டியவளவும் புஜிப்பவனாயிருந்தும் அடிக்கடி வன்மையிழந்து வருகிறானோ, எவனொருவன் சொற்பமாக உணவு எடுத்துக்கொண்டும் அதிகமாக மல மூத்திர விஸர்க்கம் செய்கிறானோ, அதிக உணவுகளை யுட்கொண்டும் சொற்பமாக மல மூத்திர விஸர்க்கம் செய்கிறானோ, எவன் சொற்பமாகப் புஜித்து —கபம் விருத்தியாய் அதனால் வருந்தி பெருமூச்சுவிட்டு இங்குமங்குமாகப் புரண்டு வருந்துகிறானோ, எவன் முதலில் மேன்மேலும் பெருமூச் செறிந்து அப்பால் குறுகிய ச்வாஸங்களை விட்டுக் கொண்டு பரிதவிப்பானோ, எவன் குறுகிய ச்வாஸங்களை விட்டுக்கொண்டு மிகவும் முறைகேடாக நாடிகள் துடிக்கக் கஷ்டப்படுகிறானோ, எவன் கரதலங்களை உதறிக்கொண்டு மிகவும் சிரமப்பட்டு சிரஸ்ஸை அசைக்கின்றானோ, எவன் எழுப்பப்படும்போது நெற்றியிலிருந்து வியர்வை வடிய ஸந்திபந்தங்கள் தளர்ந்துபோக மூர்ச்சையடைகிறானோ, எவன் பலிஷ்டனாக அல்லது துர்ப்பலனாக இருந்து நிமிர்ந்த நிலைமையிலேயே நித்திரை செய்கிறானோ, எவன் பாதங்களை இயற்கைக்கு விரோதமாக அநேகவகையில் அசைக்கிறானோ, எவன் படுக்கையிலும் ஆஸனத்திலும் சுவர் முதலியவற்றிலும் இல்லாத வஸ்துவை இருப்பதாகக் கருதி கிரஹிக்க முயற்சி செய்கிறானோ, சிரிக்கவேண்டிய அவசியமில்லாமலிருக்கையில் எவன் சிரிக்கிறானோ, உதடுகளை எப்பொழுதும் எவன் நாக்கினால் துடைத்துக்கொள்கிறானோ, மேல் உதட்டை நாக்கினால் தடவிக்கொண்டு எவனொருவன் துப்புகிறானோ, கறுப்பாகவோ, பொன்னிறமாகவோ, சிவப்பாகவோ காணப்படும் சாயையானது எவர்களை பின்

பற்றி துன்பப்படுத்துகின்றதோ, வைத்தியர் - ஆசாரியர் - ஔஷதம் - அன்னபானங்கள் - தோழர்களின் சேர்க்கை முதலியவற்றை எவர் பகைக்கிறார்களோ இவர்கள் அனைவரும் சீக்கிரம் யமனுக்கு வசப்படுவார்கள். எவனுக்குக் கழுத்தும், நெற்றியும், மார்பும் வியர்த்து மிகவும் குளிர்ந்து மற்ற அவயவங்கள் மிகச் சூடாக இருக்கின்றனவோ அவனுக்கு தெய்வமே கதியாம். எவனுக்கு உடலின் இயற்கையொளியானது மிகவும் சொற்பமாக மழுங்கிப் போய், மனதும் குழப்பமுற்று எப்பொழுதும் வருத்தங்கொண்டு சாயையும் கோளாறடைந்து விடுகின்றதோ, எவனால் அளிக்கப்பட்ட பலியை வாயஸம் முதலியவை தின்காமல் விட்டு விடுகின்றனவோ, எவன் தகுந்த காரணமின்றியே நல்ல புத்தி விசேஷத்தையும் - காந்தியையும் - தேஹச் செழிப்பையும் - செல்வத்தையும் திடீரெனப் பெறுகிறானோ அல்லது இழந்து விடுகிறானோ அம்மனிதன் சீக்கிரம் மரித்து விடுவான். ஆரோக்கியநிலைமையிலிருப்பவனுக்காவது பிணியாளிக்காவது ஸத்வாதி குணமயமான அல்லது வாதாதி தோஷமயமான பிரக்ருதியெனப்படும் இயற்கைத் தன்மையானது அதற்குற்ற நிலைமையினும மாறுபாடடைந்தால், அவன் ஆறு மாதங்கள் வரையில் ஜீவித்திருக்கமாட்டான். பக்தி, நன்னடக்கை, ஞாபகசக்தி, ஔதார்யம், புத்தி, தேஹவன்மை இந்த ஆறும் காரணமின்றியே போய்விடுமானால் அவன் ஆறுமாதக்களில் மரித்து விடுவான். நடந்து செல்லும்போதும் பேசும்போதும் வெறிபிடித்தவன்போல நடுக்கமுண்டாய் மூர்ச்சையும் ஸம்பவித்தால் அவன் ஒரு மாதத்தில் இறந்துவிடுவான். மயிர்களை வேருடன் பிடுங்கும்போது வலியொன்றும் உணரப்படாவிட்டால் அவன் ஆறு நாட்களில் இறப்பான். எவனுக்குத் தொண்டை வியாதியின்றியே உணவு தொண்டையினுள் செல்லுவதில்லையோ, ஊழியம் செய்பவர் எதிர்த்து விரோதம் பாராட்டுகிறார்களோ, எவனுக்குப் பிரேதத்தின் உருவம் உண்டாகின்றதோ, எவனுக்கு இடைவிடாமல் எப்பொழுதும் நித்திரையுண்டாகின்றதோ, அல்லது முற்றிலும் நித்திரையுண்டாவதில்லையோ அவன் வெகு நாள் பிழைத்திருக்கமாட்டான். கண்ணீர் வரும் த்வாரம் அந்த நீரால் அடிக்கடியும் நிரப்பப்படுமானாலும், கால்கள் மிகவும் வியர்க்குமானாலும், கண்ணும் வியாகுலப்பட்டு அசைந்தாலும் அவன் சீக்கிரம் உயிரிழப்பான். முன்னால் எவ்விஷயங்களால் மனங்களித்து வந்தானோ அதேவிஷயங்களால் பிற்காலத்தில் கிலேசமுண்டானால் அவனும் அதிக நாள் ஜீவித்திருக்கமாட்டான். 53-6-9½.

**வியாதிகளைப் பற்றிய ரிஷ்டங்கள்.**

எவனுக்கு ஒரு வியாதியானது திடீரென்று ஸகல லக்ஷணங்களோடேயும் ஸம்பவிக்கின்றதோ, அவ்விதமே திடீரென்று எவனுக்கு அத்தகைய வியாதி நிவ்ருத்தியாகின்றதோ அம்மனிதன் திடீரென்று மரணமடைவான். ஜ்வரமானது அதிக தீவ்ரமாகவும், எல்லா தாதுக்களையும் ஆச்ரயித்ததாகவும், வெகு நீடித்த நாட்களாகத் தொடருவதாகவும், வாய்ப் பிதற்றல் - தலைச்சுற்றல் - ச்வாஸவேகம் இவற்றோடு கூடியதாகவும் இருந்து, பிணியாளியும் இளைத்து அல்லது வீங்கிப்போய், ஜாடராக்னியும் அழிவுற்றவனாயிருந்தால், அல்லது பலசாலியாகவும் - வாய் பேசமுடியாதவனாகவும் - இருதயத்தில் குத்தல் வலியுள்ளவனாகவும் இருந்தால் அவனுக்குக் கபமின்றியே இருமலுடன் கூட காலையிலாவது மாலையிலாவது அவ்வித ஜ்வரம் உண்டாகுமானால், தேஹவன்மையும் தசை நார்களும் சுஷ்கித்துப் போய் - கபம் அதிகரித்து - ச்வாஸத்துடன் கூட ஜ்வரம் விருத்தியானால் அம்மனிதன் திடீரென்று இறப்பான். இரத்தபித்த



ரோகத்தில் வெளிவரும் இரத்தமானது மிகவும் சென்னிறமாகவும், கறுப்பாகவும், இந்திர தனுஸ்ஸு போன்ற நிறமுள்ளதாகவும், செம்பின் நிறமுடையதாகவும், மஞ்சளாகவும் காணப்படுமானாலும், மயிர்க் கால்களிலிருந்தும் கழுத்திலிருந்தும் மார்பிலிருந்தும் இரத்தம் வெளிப்படுமானாலும், இரத்தம் வஸ்திரத்தில் சாயமுண்டுபண்ணுமானாலும், துர்வாஸனையுடையதானாலும், வேகத்துடன் அமிதமாக வெளிப்பட்டாலும், பாண்டுரோகம் - ஜ்வரம் - வாந்தி - காஸம் - சோகை - அதிஸாரம் இவற்றால் பீடிக்கப்படுபவருக்கு இரத்தமும் அதிகமாய் வெளிப்பட்டாலும் அவை ரிஷ்ட லக்ஷணங்களாம். காஸரோகமும், ச்வாஸரோகமும் ஜ்வரம் - வாந்தி - நாவறட்சி - அதிஸாரம் - சோகை இவற்றுடன் கூட ஸம்பவித்தால் அப்பிணியாளிகளும் சீக்கிரம் உயிர்துறப்பர். க்ஷயரோகமானது பார்ச்வசூலை, வயிற்றுப்பொருமல், இரத்தம் வாந்தியாதல், அதிஸாரம் இவற்றோடு உண்டாயிருந்தால், அதுவும் பிராணபாயம் விளைவிக்கத் தகுந்ததாம். சர்த்தி யென்னும் வாந்தியானது அதிக வேகமாகவும், மலமூத்திரங்களின் துர்வாஸனையோடும் - சந்திரிகைகளென்னும் பலநிறமான பிந்துக்களோடும் கூடிய பதார்த்தங்கள் வெளிவருமாறும் ஏற்பட்டிருந்தால், இரத்தம் - மலம் - சீழ் இவற்றை வெளிப்படுத்துவதோடு, வலி - ச்வாஸம் - காஸம் இவற்றுடன் கூடியதாய் வெகு நாட்கள் தொடருமாயின் அப்பிணியாளி வெகுநாட்கள் ஜீவித்திருக்கமாட்டான். வேறு ரோகங்களால் பீடிக்கப்பட்டு இளைத்துப் போயிருப்பவனுக்கும், நாக்கை வெளியில் தொங்கவிட்டு கஷ்டப்படுபவனுக்கும், பிரஞ்ஞையற்றவனுக்கும் உண்டான திருஷ்ணையென்னும் நாவறட்சியானது ஆயுளை திடீரென்று அழிக்கும். மிகவும் சைத்தியத்தினால் பீடிக்கப்படுபவனும், இளைத்திருப்பவனும், தைலம் உபயோகித்தது போல் முகம் கசிந்து விகாரமடைந்தவனுமான மதாத்யயரோகியானவன் வெகு நாள் பிழைத்திருக்கமாட்டான். அர்சோ ரோகத்தில் கைகள் - பாதங்கள் - நாபி - குதம் - பீஜகோசங்கள் - முகம் - இவை வீங்கியும், இருதயம் - விலாப்பக்கங்கள் - மற்றுமுள்ள இதர அவயவங்கள் இவற்றில் வலியும், வாந்தியும், குதம் அழன்றும், ஜ்வரமும் உண்டாய் கஷ்டப்படுவானால் அப்பிணியாளி பிழைக்கமாட்டான். அதிஸாரத்தில் வெளிவரும் மலமானது கல்லீரலின் துண்டுகளைப்போலவும், இறைச்சி கழுவிய நீர் போலவும் ஒருவாறு கறுஞ்சிவப்பாகவும், தைலம்-நெய்-பால் - தயிர் - மஜ்ஜை - வஸை- ஆஸவம் - மூளை - மை - கஞ்சி - வேஸவாரம் - தண்ணீர் - தேன் இவற்றைப் போன்றதாகவும் காணப்படுமானால் அதுவும் அவக்குறியாகும்; அந்த மலம் மிகவும் சிவப்பாகவும், மிகக் கறுப்பாகவும், மிகவும் துர்க்கந்தமாகவும், அதிக தெளிவாகவும், மிக்க வேதனையைக் கொடுப்பதாகவும், பலவித நிறமுடையதாகவும், தாதுக்களை அறுத்து வெளிப்படுத்துவதாகவும், இயற்கையான கழிவுப்பொருளற்றதாக அல்லது அதிக கழிவுப்பொருளுடன் கூடியதாகவும் இருந்தாலும், ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தாலும், நூலிழைபோன்ற வஸ்துக்களென்ன - பலவித இரேகைகளென்ன இவற்றுடன் கூடியதாயிருந்தாலும், குதத்தினுள் உள்ள மூன்றுவித வளிகள் என்னும் மடிப்புகள் சிதைவுற்று - நாளம் என்கிற இரத்தக்குழாய் அறுபட்டு - கணுக்களிலும், எலும்புகளிலும் வேதனையுண்டாய், குதம் நெகிழ்ந்து - முற்றிலும் பலமிழந்து - உணவு ஜீர்ணமாகாமல் அவ்விதமே வெளிவந்தாலும், பிணியாளிக்கு நாவறட்சி - பெருமூச்செறிதல் - ஜ்வரம் - வாந்தி - எரித்தல் - வயிற்றுப் பொருமல் - வயிற்றுக்கடுப்பு இவை உண்டாயிருந்தாலும் அவன் இறந்து விடுவான். அச்மரீ யென்னும் மூத்திரத்தின்

தாதுப்பெருள் உறைந்துவிடும் வியாதியில் ஆண்குறி வீங்கி அழன்றுபோய், மூத்திரம் வெளிவரமுடியாமற் கட்டப்பட்டு, வேதனை அபரிமிதமாயுண்டாய் வருந்தும் பிணியாளியும் பிழைக்கமாட்டான். பிரமேஹத்தில் நாவறட்சியும், தேஹ அழற்சியும், பிடகைகள் என்னும் கட்டிகளும், தேஹத்தில் மாம்ஸபேசிகள் பதனழிதலும், அதிஸாரமும் உண்டானால் அவனும் இறந்துவிடுவான். பிடகைகள் என்னும் கட்டிகள் மர்மஸ்தானங்களில், முக்கியமாய் இருதயத்திலும், பிருஷ்டபாகத்திலும், முலைகளிலும், தோள்களிலும், குதத்திலும், சிரஸ்ஸிலும், கணுக்களிலும், உள்ளங்காலிலும், உள்ளங்கையிலும் உண்டானாலும், பிணியாளி உத்ஸாஹமிழந்தவனாய் பிரமேஹமுள்ளவனாயிருந்தாலும் உயிர் துறப்பான்; மாம்ஸபேசிகள் சுருக்கங்கொள்ளுதல், அழற்சி, நாவறட்சி, வெறி, ஜ்வரம், விஸர்ப்பம், மர்மஸ்தானங்கள் தாக்கப்படுதல், விக்கல், ச்வாஸம், தலைச்சுற்றல், உடல் சோர்ந்துபோதல் இவ்வித கோளாறுகளுடன் கூடிய பிடகைகளும் பிராணாபாயம் விளைவிக்கும். குன்மரோகமானது திரண்டுருண்டு மிகப் பருமனாகவும், கனமாகவும், ஆமையைப்போல் முதிர்ந்து மேலோங்கிக் கிளம்பியதாகவும், விரைகளால் வியாபிக்கப்பட்டதாகவும் ஜ்வரம் - வாந்தி - விக்கல் - பொருமல் - வலி இவற்றுடன் கூடியதாகவும், காஸம் - பீநஸம் - இயற்கைக்கு விரோதமான இருதயத்துடிப்பு - ச்வாஸம் - அதிஸாரம் - உடல் வீக்கம் இக்கோளாறுகளை யுடையதாகவும் இருந்தால் பிராணாபயம் விளைவிக்கக் கூடியதாகும். மஹோதரமானது மலமூத்திரச் சிக்கலோடும், ச்வாஸத்தோடும், வீக்கத்தோடும், விக்கலோடும், ஜ்வரத்தோடும், தலைச்சுற்றலோடும் கூடியிருந்தால், மூர்ச்சையும் வாந்தியும் அதிஸாரமும் உண்டாயிருந்தால் அது உயிரைப் போக்கிவிடும்; மேலும் அவ்வியாதியில் கண்கள் வீங்கியும், ஆண்குறி வக்கிரமாகவும், உடம்பில் எங்கும் சர்மம் வியர்த்துக் கசிந்ததாகவும், விரேசனௌஷதங்களால் வயிறு தளர்ந்திருந்தும், மீண்டும் அடிக்கடியும் வயிற்றுப்பொருமல் அதிகமாய் உண்டாவதுமான மஹோதரம் பிராணாபாயம் விளைவிப்பதாகும். பாண்டு ரோகத்தில் வீக்கம் அதிகரித்து, கண்களும் நகங்களும் பார்வையும் மஞ்சள் நிறமாகப் போயிருந்தால் அவக்குறியான ரிஷ்டமாகும். சோம்பல், அழற்சி, அரோசகம், வாந்தி, மூர்ச்சை, வயிற்றுப்பொருமல், அதிஸாரம், மற்றும் பலவிதமான உபத்திரவங்கள் இவற்றுடன் கூடிய சோபை யென்னும் சோகை அபாயகரமானது; இரத்தக்குழாய் முதலியவை மேலே கோடுகோடாய் பரவியிருப்பதாய்க் காணப்பட்டாலும், ஊனீர் முதலியது கசிந்தாலும், வாந்தி, ஜ்வரம், ஸ்வாஸம், அதிஸாரம் இவை அனுஸரித்திருந்தாலும் ஆகாது; வீக்கம் புருஷர்களுக்குப் பாதங்களில் ஆரம்பித்து மென்மேலும் உடலிற் பரவினாலும், ஸ்த்ரீகளுக்கு சிரஸ்ஸிலிருந்து உடலெங்கும் கீழ்நோக்கி வியாபித்தாலும் அவக்குறிகளாம்; வயிற்றிலும் ஆண் பெண் குறிகளிலும் ஆரம்பித்துப் பரவும் வீக்கம் இருபாலருக்கும் ஆகாது; சோபை அடங்கிய ஸமயத்தில் ஜ்வரமும் அதிஸாரமும் உண்டானாலும், ஜ்வராதிஸாரங்கள் தணிந்திருக்கையில் சோகை யுண்டானாலும், அதிலும் முக்கியமாய் பலஹீனனுக்கு அவ்வித நிலைகள் உண்டாகுமானால், அவை பிராணாபாயத்திற்குக் காரணமாகும். எவனொருவனுக்கு வீக்கம் பாகத்தில் மட்டும் உண்டாகுமோ, ஆட்டுச்சதையென்னும் முழங்காலுக்குக் கீழே பின்புறமாயுள்ள சதைகள் இடம் விட்டு நகர்ந்து முரண்படுகின்றனவோ, கால்களும் இளைத்துவிடுகின்றனவோ அவனை வைத்தியன் சிகித்ஸைக்கு உதவாதவன் என்று விலக்கிவிடவேண்டும்;



உடலில் மற்றப் பாகங்களைத் தவிர்த்து முகமும், கை கால்களும் எவனுக்கு சுஷ்கமாய் விடுகின்றனவோ, அல்லது திடீரென்று வீங்கிவிடுகின்றனவோ அவன் ஒருமாஸ காலத்தில் மரித்துவிடுவான். விஸர்ப்பரோகத்தில் காஸம், நிறம் மாறுபடுதல், ஜ்வரம், மூர்ச்சை, தேஹம் சோர்வடைதல், தலைச்சுற்றல், வாய் உலர்ந்துபோதல், இருதயம் இயற்கைக்கு மாறாக நடுங்குதல், உடல் வாடிப்போதல், அதிஸாரம் இவ்வுபத்திரவங்கள் உண்டாயிருந்தால் அவனுக்கு வியாதி ஸ்வஸ்தமாகாது. குஷ்டத்தில் அங்கங்கள் சிதைவடைந்து, கண்கள் மிகவும் சிவத்தல், குரல் விகாரமுறுதல், ஜாடராக்னி குறைதல், விரணங்களில் கிருமிகள் உற்பத்தியாதல், நாவறட்சி யுண்டாதல், அதிஸாரம் முதலிய இவ்விகாரங்களில் ஏதாவது ஏற்படுமாயின் அவன் வியாதியிலிருந்து நிவ்ருத்தியடையமாட்டான். வாதரோகத்தில் அடியில்வரும் குறிகள் காணப்பட்டால் அப்பிணியாளி உயிர் துறந்துவிடுவன்; அவையாவன: சர்மம் உணர்ச்சியிழத்தல், சரீரம் சக்தியற்று விழுந்துபோதல், கபம் - சோபையென்னும் சோகை இவ்வியாதிகளால் வருந்துதல், வாதரக்தம், பிராந்தி, மூர்ச்சை, வெறி, அதிநித்திரை, ஜ்வரம், கழுத்துப்பிடிப்பு, அரோசகம், ச்வாஸரோகம், அவயவம் சுருங்கிப்போதல், கொப்புளித்தல், அழுகிப்பதனழிதல், இவைகளாவது, தலைநோய், அரோசகம், ச்வாஸம், பிராந்தி, அதிஸாரம் இவைகளாவது உண்டாயிருப்பதேயாம். எல்லா வியாதிகளுமே குரல் இழந்து, தேஹபலம் இழந்து, ஜாடராக்னி அழிந்து வருந்துகிற மனிதனைக் கொன்றுவிடும். வாதரோகம், அபஸ்மாரம், குஷ்டம், இரத்தபித்தம், மஹோதரம், க்ஷயம், குன்மம், பிரமேஹம் இந்த ரோகங்களால் வருந்துபவருக்கு தேஹம் மிகவும் இளைத்து வன்மையிழந்திருந்தால், அவர்களுக்கு மற்ற விகாரங்கள் சொற்பமாயிருந்தபோதிலும் சிகித்ஸைக்குத் தகாதவர்களென்று அவர்களைக் கைவிடவேண்டும். எந்த ரோகமுமே மேன்மேலும் விருத்தியாய் வருகையில், சரீர வன்மையும் தசைநார்களும் மிகவும் அதிகமாய் க்ஷயித்துவந்து, அரோசகமும் அதிகரித்தால் அப்பிணியாளி மூன்று பக்ஷங்களுக்குள்ளாக இறந்துவிடுவான். வாததோஷம் அதிகரித்து உண்டான அஷ்டீலா என்கிற வியாதி மிகவும் அதிகரித்து, இருதயத்திற்கு அருகில் சென்று கடுமையாகத் தொந்தரவு அளித்துவந்தால், நாவறட்சியும் உண்டாயிருந்தால் உடனே உயிர் இழந்துவிடுவான். முழங்காலுக்குக் கீழே பின்புறத்திலுள்ள ஆட்டுச் சதையென்னும் தசைநார் அதன் இயற்கைச்சக்தியை இழந்து, வாயுவானது நாசியையும் வக்கிரமாகச் செய்திருந்தால், தேஹம் இளைத்துப்போய் மந்யா என்னும் கழுத்து நரம்புகளிலும் இசிவு கண்டால் அவன் உடனே உயிரிழப்பான். பலம் பெற்றுப் பிரகோபமடைந்த வாயுவானது நாபிக்கும் குதத்திற்கும் இடையில் பிரவேசித்தாவது, வங்க்ஷணங்கள் என்னும் துடையிடுக்குகளில் பிரவேசித்தாவது, குதத்தையும் இருதயத்தையும் பற்றிக் கொண்டாவது, தேஹம் இளைத்துப்போயிருப்பவனுக்கு மலங்களைக் கட்டி, வஸ்தியென்னும் மூத்திராசயத்தின் மேற்பாகத்தையும் நாபியையும் அடைத்து, வலியை விருத்திசெய்து, துடையிடுக்குகளில் குத்தலையும் உண்டுபண்ணி, நாவறட்சியையும் பேதியையும் உண்டாக்கி, குதத்தையும் வங்க்ஷணம் என்கிற துடையிடுக்கையும் இழுத்துப்பற்றிக்கொண்டு, ச்வாஸத்தையும் அதிகரிக்கச் செய்தால் பிணியாளி சீக்கிரம் இறந்துவிடுவான். வாயுவானது பர்சுகங்கள் என்னும் விலாப்பக்கத்து எலும்புகளை இழுத்து விரிவாகச்செய்து, மார்பிலும் பிடிப்பை யுண்டுபண்ணி, கண்களை விழித்தவண்ணம் பேச்சுமூச்சின்றி நிலைத்து நிற்கச்செய்தால் மனிதன்

உடனே உயிர் துறப்பான். திடீரென்று ஜ்வரத்திஞல் அதிகதாபமும், நாவறட்சியும், மூர்ச்சையும், தேஹபலக்ஷயமும், ஸந்திபந்தங்களுக்குத் தளர்ச்சியும் உண்டாவது சீக்கிரம் இறந்துவிடுவதற்கான குறிகளாம். விடியற்காலத்தில் கபஜ்வரத்திஞல் வருந்துகிற ஒருவனுக்கு, முகத்திலிருந்து வியர்வை மிகவும் கசியுமாஞல், அவன் உயிருடன் இருப்பது அரிது. எவனுடைய தேஹத்தில் மஸூரிகைகள் பெரும் பவளங்களைப்போலே சிவந்து உறுட்சியாய் உண்டாய் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடுகின்றனவோ, அவன் வெகுநாள் பிழைத்திருக்கமாட்டான். எவனுடைய உடம்பில் விஸ்ப்போடங்கள் என்னும் கொப்புளங்கள் மொச்சைப்பருப்பின் அளவுள்ளவையாகவும், பவளங்கள்போன்ற நிறமுள்ளவையாகவும், உட்கவிந்து வளைந்தவையாகவும், முதிர்ந்த காய்ப்புகள் போன்றவையாகவும் இருக்கின்றனவோ அம்மனிதன் அக்கொப்புளங்களால் மாண்டுவிடுவன். ஒருவனுக்குக் கண்களில் காமாலையின் குறி காணப்படும்போது, முகம் ஊதிப்பெருத்தும், கன்னங்கள் இளைத்தும், மனது திகிலடைந்தும், உடல் உஷ்ணமாகவும் இருக்குமாஞல் சிகித்ஸைசெய்யாமல் அவனைக் கைவிடவேண்டியதே. திடீரென்று சர்மம் கிறப்பட்டு இரத்தப்பெருக்கு உண்டாவதாகக் காணப்பட்டால் அம்மனிதனும் மரித்துவிடுவான். விரணங்கள் வாதத்திஞல் உண்டாயிருக்கையில் வலியேற்படாமற்போவதும், பித்தத்திஞல் உண்டாயிருக்கையில் அழற்சியில்லாமலிருப்பதும், கபத்திஞல் உண்டாயிருக்கையில் சீழுண்டாகாமலிருப்பதும், மர்மஸ்தாநத்தில் உண்டாயிருப்பதில் நோவில்லாமற்போவதும், மேலே எவ்விதமான சூர்ணமும் போடாமலிருக்கையிலும் ஏதோ சூர்ணம்தூவப்பட்டிருப்பதுபோலவும், ஈட்டி-த்வஜம் முதலியவற்றைப்போன்ற உருவமுள்ளதாகவும் காரணம் அறியமுடியாமலே காணப்படுமாஞல், அவ்வித விரணங்கள் யாவும் சிகித்ஸைக்கு வசப்படாதவையென்று விட்டுவிட வேண்டியவையாம். பகந்தரம் என்னும் குதத்தில் உண்டாகும் பிளவையிலிருந்து மலமாவது, மூத்திரமாவது, வாயுவாவது வெளிவந்தாலும், கிருமிகள் உண்டாயிருந்தாலும் அப்பிளவைக்கும் சிகித்ஸை செய்வதில் பிரயோஜனமில்லை. எவனொருவன், முழங்காலோடு மற்றொரு முழங்காலை இடித்துக்கொண்டும், கால்களைத் தூக்கித்தூக்கி சப்தமுண்டாகுமாறு பூமியில்போட்டு நடந்துகொண்டும், அடிக்கடியும் காலைக் கோணலாக உதறியுதறி வைத்துக்கொண்டும் ஸஞ்சரிக்கிருனே[1] அப்பிணியாளியும் பிழைக்கமாட்டான். நகங்களுடைய முனைகளைப் பற்களால் கடிப்பவனும், நகங்களால் மயிர்களையும் துரும்புகளையும் கிள்ளுபவனும், குச்சியிஞல் பூமியைக் கீறுபவனும், ஓட்டால் ஓடுகளை அடிப்பவனும், அடிக்கடி மயிர்ச்சிலிர்க்கை யுண்டாகும் தேஹமுடையவனும், தெளிவில்லாமல் தோய்ந்திருப்பதுபோல் காணப்படும் மூத்திரம் விடுபவனும், கபம் முதலியவையின்றியே சுஷ்கமாக இரும்புபவனும், ஜ்வரமுள்ளவனும், அடிக்கொருமுறை சிரிப்பவனும், அடிக்கடியும் கர்ஜனை செய்பவனும், காலால் படுக்கையை அடிப்பவனும், அடிக்கடியும் தவறுதல் அல்லது துன்பம் விளையக்கூடிய ஹேதுக்கள் இருப்பதாக ஆலோசிப்பவனும் பிழைத்திருக்கமாட்டான். ஒரு பிணியாளிக்கு முகத்தில் திடீரென்று திலசங்கள் என்னும் பறுக்களும், வியங்கங்கள் என்கிற வங்குகளும் உண்டாய் உபத்திரவம் விளை

1. "கட்டயந் ஜாநுநா ஜாநு பாதாவுத்யம்ய பாதயந், யோபாஸ்யதி முஹுர் வக்ரமாதுரோ ந ஸ ஜீவதி" இதில் முஹுர்வக்ரம் என்பதை முஹுர்வக்த்ரம் என்று தவறுதலாகப் படித்து, வக்த்ரம் என்றே குறிப்பிட்டு அதற்கு முகம் என்றும் அருணதத்தன் ஆலோசனையின்றி வியாக்கியானம் வரைந்திருக்கிருன்,



162067

வித்தாலும், பற்களிலும் நகங்களிலும் புஷ்பம் போன்ற பிந்துக்கள் உண்டாஞலும், வயிற்றின்மேல் பலவிதமான இரேகைகளைப்போல ஸிரைகள் என்னும் இரத்தக்குழாய்கள் வியாபித்தாலும் அவன் வெகுநாள் ஜீவித்திருக்கமாட்டான். ஊர்த்வச்வாஸம் விடுபவனையும், உடற்சூடு இழந்தவனையும், துடையிடுக்குகளில் நோயுண்டாய் வருந்துபவனையும், சுகமின்றி அமைதியற்று கஷ்டப்படுபவனையும் புத்திமானை வைத்தியன் சிகித்ஸைக்கு ஏற்றுக்கொள்ளலாகாது. எவனுக்கு விரைவில் விகாரங்கள் விருத்தியடைந்து இயற்கை நிலைமைகள் குறைந்து வருகின்றனவோ, அவன் பிராணனையும் விரைவில் இழந்துவிடுவான். 70—122½.

ரிஷ்ட விசேஷங்கள்.

வைத்தியனுனவன், எப்பிணியாளிக்காக ஔஷதம் ஸம்பாதிக்கமுயன்று, அதைப் பெறுவதற்கு முடியாதவனுய்விடுகிருனே, அப்பிணியாளி உயிருடன் இருப்பது அரிதாம். முறைதவருமல் பக்குவம் செய்யப்பட்டு, அநேகம் வியாதிக்ரஸ்தர்களுக்கு உபயோகித்து நற்பயன் விளைவிக்கக் கூடியதென்று நிச்சயிக்கப்பட்டுள்ள ஔஷதம், எவனுக்குப் பலன் கொடுப்பதில்லையோ அப்பிணியாளிக்கு சிகித்ஸையே கிடையாதாம். எவனொருவன் பொருட்டு ஔஷதமாவது அன்னமாவது முறைப்படி பக்குவம் செய்யப்படுகையில் காரணமின்றியே அவற்றின் நிறம் மணம் முதலியது இயற்கையினும் மாறுபாடு அடைகின்றதோ அம்மனிதன் ஆரோக்கியநிலைமையிலிருப்பினும் வெகுநாள் பிழைத்திருக்கமாட்டான். எந்த ரோகியின் கிருஹத்தில் சிறந்த விறகு இட்டு எரிக்கப்பட்டும் அக்னியானது பெருங்காற்று வீசாமலிருக்கையிலேயே அவிந்துவிடுகின்றதோ, பாத்திரங்கள் அடிக்கடியும் தவறிவிழுகின்றனவோ அல்லது உடைந்து விடுகின்றனவோ, அம்மனிதன் பிழைத்திருப்பது அரிது. மிகவும் பலஹீனமான ஒருவனுக்கு உண்டாயிருந்த வியாதியானது திடீரென்று அவனை விட்டுவிடுமாஞல், அம்மனிதன் ஜீவித்திருப்பது ஸம்சயம் என்று ஆத்ரேயமுனிவர் கருதுகிருர். 123—128.

ரிஷ்டக் குறிகளுடன் கூடிய வனை வைத்தியன் பரிஹரிப்பதேன்?

ஒருவனுக்கு மரிக்குங்காலம் கிட்டியிருந்தால், அவனுடைய பந்துமித்திரர்களால் வினவப்பட்டும் வைத்தியனுனவன், செவியுறத்தகாத மரணவார்த்தையைத் திடீரெனக் கூறக்கூடாது,[1] அவன் அப்பிணியாளிக்கு சிகித்ஸை செய்யவும்கூடாது.[2] ஆயுள்முடிவடைந்த மனிதனுக்கு அருகில் யமதூதர்கள்-பிசாசங்கள் முதலிய பூதகணங்கள், அவனுக்குப் பிரயோகிக்கப்படும் ஔஷதங்களுடைய வீர்யங்களை அழித்துக்கொண்டு வஸிப்பதால், அப்பிணியாளிக்கு சிகித்ஸை செய்யக்கூடாது. 129—130.

ரிஷ்ட ஸம்பந்தமான அறிவில் ஆதரவு அவசியம்.

ஆயுளின் காலம் முதலிய தத்துவங்களையறிந்த வைத்தியனிடம் ஆயுர்வேதத்தின் அகில பலனும் நன்கு ஸ்த்தாபிதமாகுமாதலின், எப்பொழுதும் வைத்தியன் ரிஷ்டஸம்பந்தமான தத்துவஞ்ஞானத்தில் ஆதரவுள்ளவனு யிருக்கவேண்டும். 131.

1. "மரணவார்த்தையைக் கூறமாட்டார்' என்றும் சொல்லலாம்.

2. "சிகித்ஸை செய்யவும் மாட்டார்" என்றும் சொல்லலாம்.

மரணத்திற்கான முகாந்தரங்கள்.

பிராணிகளுக்கு ஆயுளாவது, புண்ணியமாவது, அவ்விரண்டுமாவது க்ஷயமடையுங்கால் மரணம் உண்டாவதாக அறியப்படுகிறது.[1] ஆயுளுக்காவது புண்ணியத்திற்காவது க்ஷயமுண்டாகாமலேயே, விஷமங்களை[2] விலக்கி நிற்க முடியாதவர்களுக்கும் திடீரென்று மரணமுண்டாவதைக் கண்டிருக்கின்றோம். 132.

## ஆருவது அத்தியாயம்.

அப்பால் தூதாதி விஞ்ஞாந சாரீம்[3] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது:—

1. ஸகலஸௌகரியங்களும் ஸௌக்கியமும் ஆரோக்கியநிலைமையும் பொருந்தியுள்ள மனிதனுக்கு, நன்கு உபயோகப்படுத்தப் பட்டுவருகிற ரதம்போல், காலக்கிரமத்தில் தேஹதாதுக்கள் இயற்கையிலேயே சிதைவுற்று ஸம்பவிக்கும் மரணம் "ஆயுளின் க்ஷயத்தினுல் உற்பத்தியாவது" என்று கூறப்படுகிறது. ஆரோக்கிய நிலைமையிலிருந்தும், தௌர்ப்பாக்கியத்தினுல் சுகவாழ்க்கைக்குத் தகுந்த ஸௌகரியங்களின்மையால் அகாலத்திலேயே தேஹம் தளர்ந்து அல்லது வியாதிகளுக்குட்பட்டு மரணமடைவது "புண்ணியக்ஷயத்தினுல் ஸம்பவிக்கும் மரணம்" எனப்படுகிறது. வயது முதிர்ச்சிபெற்று ஆயுள் காலமும் புண்ணியமும் ஒருமிக்க க்ஷயிக்கும்போது உண்டாகும் மரணம் "உபய க்ஷயத்தால் உண்டாகும் மரணம்" எனப்படும்.

2. துஷ்டகுணமுள்ள குதிரை, விருஷபம், யானை முதலிய ஜந்துக்களுடைய, அல்லது வாஹநாதிகளுடைய ஸம்பந்தம் இங்கே விஷமம் என்பதால் குறிக்கப்படுகிறது; அவ்வித ஸம்பந்தம் விலக்க முடியாமல் அவற்றால் சிலருக்கு அகாலத்தில் நேரிடும் மரணம் இதனுல் குறிக்கப்படுகிறது.

3. வியாதிக்ரஸ்தனால் வைத்தியனை அழைத்துவர அனுப்பப்படுபவன் இங்கே தூதன் எனப்படுகிறன். வைத்தியன் வீட்டிலிருந்து புறப்படுவது முதல் பிணியாளியைப் பார்த்துவருவது வரையில் நடக்கும் அல்லது காணப்படும் சுபாசுப சகுனம், ஸ்வப்னம் என்னும் வேறுவிசேஷங்கள் "தூதாதி" என்பதால் குறிக்கப்படுகின்றன. அவ்வித விஷயங்களின் தத்துவங்களை அறிவிக்கும் அத்தியாயம் "தூதாதி விஞ்ஞாநம்" எனப்படும்.

தூதர்கள்-ஸமான வர்ணுச்ரம ஜாதியனராயிருக்கவேண்டும்.

பாஷண்டர்களென்ன,[1] பிரஹ்ம சர்யம் முதலிய ஆச்ரமங்களென்ன, பிராம்மணர் முதலிய வர்ணத்தார்களென்ன இவர்களுக்கு ஸமான ஜாதியினராகவோ, ஸமான ஆச்ரமமுள்ளவராகவோ, ஸமான வர்ணத்தாராகவோ தூதர்கள் ஏற்பட்டால், அவ்வித தூதர்கள் கார்யம் ஸித்தியடைவதற்கு ஏற்றவராவர்; இவர்களுக்கு எதிரிடையான இனத்தைச் சேர்ந்தவர்களானுல் அத்தூதர்கள் கார்யம் கெட்டுப்போவதற்குக் காரணமாவார். 1.

எவ்வித தூதர்கள் வைத்தியனை அழைக்கப் பிணியாளியைப் பார்க்கப் போகலாகாது.

இதனடியில் குறிப்பிடப்படும் தன்மையுடைய தூதர் வந்து அழைத்தால், வைத்தியன் ரோகியைப் பார்ப்பதற்கு அவர்களுடன் செல்லக்கூடாது; அத்தூதர்களாவன:—தீனமான நிலைமையில் இருப்பவன், பயந்தவன், ஓடுபவன், திகிலடைந்தவன், ரூக்ஷகுணமுடையவன், அமங்களவார்த்தைகளைச் சொல்லுபவன், ஆயுதம் தரிப்பவன், கழியேந்திக்கொண்டிருப்பவன், நபும்ஸகன், மீசையைச் சிறைத்துக்கொண்டிருப்பவன், ஜடை தரிப்பவன், அமங்களகரமான பெயரையுடையவன்,

1. பாஷண்டர்கள் —வேதம் முதலியதைப் பிரமாணமாகக் கொள்ளாத தொண்ணூற்ருறு உட்பிரிவுகளையுடைய கீழ் ஜாதியார்.



கொடிய வேலைகளைச் செய்பவன், அழுக்கடைந்திருப்பவன், ஸ்த்ரீ, அநேகம் பிணியாளிகளின் பொருட்டு அழைக்கவந்திருப்பவன், அங்க[illegible]வன், சிவந்த புஷ்பமென்ன சிவந்த பூச்சுகளென்ன இவற்றை அணிந்திருப்பவன், எண்ணெய் அல்லது சேற்றைப் பூசிக்கொண்டிருப்பவன், சிதைந்து அழுக்கடைந்த ஒரே ஒரு பழைய ஈர வஸ்திரத்தை உடுத்திருப்பவன், தூரத்திலே நின்றுகொண்டு அழைப்பவன் இவர்களேயாம். $2—4\frac{1}{2}$.

தூதர் வருகையில் ரோகியின் க்ஷேமத்துக்குத் தகாத விதமாய் வைத்தியன் இருக்கும் நிலைமை.

வைத்தியன் அமங்களமான விஷயமாய்ஏதோ சிந்திக்கையிலும், அமங்களமாகப் பேசிக்கொண்டிருக்கையிலும், வஸ்திரமில்லாமல் இருக்கையிலும், வஸ்திரம் முதலியதை ஏதோ மனக்கோளாறுடன்கிழிக்கையிலும், பாத்திரம் முதலியதை உடைக்கையிலும், அக்னியில் ஹோமம் செய்கையிலும், பித்ருக்களுக்குப் பிண்டங்களிட்டு தர்ப்பணம் செய்கையிலும், நித்திரை செய்கையிலும், தலைமயிர்களை விரித்துக்கொண்டிருக்கையிலும், எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கையிலும், அழுகையிலும், ஜாக்கிரதையற்ற நிலைமையைப் பெற்றிருக்கையிலும்[1] தூதர்கள் வைத்தியனிடம் ரோகிகளைப் பார்ப்பதற்காக அழைக்கச் சென்றால், அப்பிணியாளிகள் பிழைப்பது அரிது. $5—6\frac{1}{2}$.

ரோகிக்குத் தகாத காலதேசங்களில் தூதன் வைத்தியனிடம் வருதல்.

தேசமாவது, காலமாவது வியாதிக்கு ஸமானமான குணமுள்ளதாயிருக்கும்போது ரோகியைப் பார்ப்பதற்காகத் தன்னை அழைக்க தூதன் வருவதைக் கண்ட வைத்தியன், அந்த ரோகிக்கு சிகித்ஸை செய்ய ஒப்புக்கொள்ளாமலிருப்பானுக. $7\frac{1}{2}$.

வைத்தியனிடம் முதலில் வரும்போது ரோகிக்கு அசுப ஸூசகமாய் தூதன் காணப்படுதல்.

தூதர்கள் முதன்முதல் வைத்தியனைப் பார்ப்பதற்கு வரும்போது, நாபி-நாசி-வாய்-தலைமயிர்-உடம்பில் மற்ற பாகங்களிலுள்ள மயிர்-நகம்-பற்கள் இவற்றைப் பரிசித்துக்கொண்டிருந்தாலும், ஆண்குறி - பிருஷ்டபாகம் - ஸ்தனம்-கழுத்து-வயிறு -பவித்திரவிரல் இவற்றைத் தொட்டுக்கொண்டிருந்தாலும், பஞ்சு-வைக்கோல்களின் குவியல்-காரீயம்-எலும்பு-மண்டையோடு அல்லது மட்கலயம்-உலக்கை-கல்-துடைப்பம் - முறம்-வஸ்திரமுனை-சாம்பர்-நெருப்புத்தழல் - வஸ்திரத்தினுலான வர்த்தி-உமி-கயிறு-பாதரக்ஷை-திராசு-அதன் கயிறு இவற்றையாவது, நழுவி உடைந்துபோன வேறு எவ்வஸ்துவையாவது பரித்துக்கொண்டிருந்தாலும், அவ்வித தூதர்கள் எந்தரோகியின்பொருட்டு வைத்தியனிடம் வந்தார்களோ, அந்த ரோகியின் மரணத்தை ஸூசிப்பவராவர். $8—10\frac{1}{2}$.

தூதனை வைத்தியனிடம் அனுப்பத்தகாத காலங்கள்.

அங்ஙனமே நடுநிசியிலும், நடுப்பகலிலும், காலை மாலை யென்கிற ஸந்தி காலங்களிலும், முற்பகலிலும், ஷஷ்டி-சதுர்த்தி-நவமீ இத்திதிகளிலும், இராஹு[illegible]-கேதுக்கள் உதிக்கும் நேரங்களிலும், மற்றும் அவைபோன்ற வேறு ஸமயங்களிலும், பரணீ-கிருத்திகை-ஆச்லேஷம்-பூரம்-பூராடம்-பூரட்டாதி- ஆருத்ரை-மகம் - மூலம் இந்த நக்ஷத்திரங்களிலும் தூதன் வைத்தியரிடம் செல்வது ரோகிக்கு சுபமாகாது. 11,12.

அசுப சகுனங்கள்.

ஒரு ரோகியின் பொருட்டுத் தனதிடம் வந்திருக்கிற தூதன், அந்த ரோகி விஷயமாகப் பேசும்போது, அசுபமான சகுனம்

1. தூதர்கள் வைத்தியரிடம் வரும்போது அவ்வித ஸம்பவங்கள் தோன்றியிருக்குமானுல், உத்தேசிக்கப்பட்ட ரோகிக்கு ஆயுள் அழிந்துவிடும் எனக் கருத்து.

காணப்படுமாயின், அத்தூதனோடு வைத்தியன் ரோகியினிடம் செல்லக்கூடாது. அந்த அசுப ஸூசகமான சகுனங்களாவன :—சவத்தையும் சவக்கோலமுள்ளவர்களையும் காண்பது, ஏதாவது அறுபடுதல், ஏதாவது உடைதல், எரிந்துபோதல், துலைந்துவிடுதல், அல்லது அறுபடுதல் முதலியவற்றின் ஸம்பந்தமான வார்த்தைகள், மிகக் கடுங்காரமான சுவையாவது, அதிக சவநாற்றமாவது, மிகக்கடுமையான பரிசமாவது, அல்லது அவைபோன்ற வேறுவிஷயமாவது உணரப்படுதல், இவ்விஷயங்கள் ஸம்பந்தமான வார்த்தைகள் வைத்தியனைச்சுற்றிலும் நடைபெற்றாலும், வைத்தியரிடமே நடைபெற்றாலும் அத்தருணத்தில் தூதன் தன்னிடம் வந்தால், அதைப் பார்த்துவிட்டு ரோகியை சிகித்ஸை செய்வதற்கு வைத்தியன் அத்தூதனுடன் செல்லக்கூடாது. மேலும் ஹா ஹா என்று கூக்குரலிடுதல், ஆத்திரத்துடன் உறத்துக்கூச்சலிடுதல், அழுகை, தடுத்தல், தும்மல், வஸ்திரம்-குடை-பாதரக்ஷை இவை காணாமற்போதல், துன்பப்படுபவரைக்காணுதல், யாகசாலை முதலியவற்றில் கட்டியுள்ள த்வஜங்களும்-பூர்ணகும்பங்களும் கீழேவிழுந்துபோதல், அழிந்துபோனது முதலிய அநிஷ்டமான பேச்சுகள் காதில் விழுதல், சாம்பரும் புழுதியும் தேஹத்திற் படிந்து விகாரமுண்டுபண்ணுதல், ஸர்ப்பம்-பூனை-உடும்பு-அரணை-குரங்கு இவை வழியில் குறுக்கிடுதல், ஒவ்வொரு திக்கும் எரிந்துகொண்டிருப்பதையும்-துஷ்டவிலங்குகளையும்-அவ்விதபக்ஷிகளையும்-கறுப்புதானியங்களையும், வெல்லம்-மோர்-உப்பு-மதுவகைகள்-சர்மம்-கடுகு-கொழுப்பு-எண்ணெய்-புல்-சேறு-வறகு இவற்றையும், நபும்ஸகன்-துஷ்டன்-சண்டாளன்-வலையன்-ஜாலக்காரன் இவர்களையும், பார்க்கவழங்காத மலம்-வாந்தி செய்த வஸ்து, துர்க்கந்தமான பதார்த்தம்முதலியவற்றையும், பஞ்சு முதலிய ஸாரமில்லாத வஸ்துவையும், உயர்ந்துநிற்கும் படுக்கை-ஆஸநம்-வாஹநம் இவற்றையும்-கூன்விழுந்தவர்களையும், கவிழ்ந்தபாத்திரங்களையும் காணுதல், இவையெல்லாம் அசுபஸூசகங்களாம். பும்லிங்கமான பெயர்களையுடைய பக்ஷிகள் இடதுபுறமாகவும், ஸ்த்ரீலிங்கமான பெயர்களையுடைய பக்ஷிகள் வலதுபுறமாகவும் ஓடுவது சுபசகுனங்களாம். பக்ஷிகளும் மிருகங்களும் பிரதக்ஷிணமாகச் செல்வதும், நாய்-நரிகள் அப்பிரதக்ஷிணமாகச் செல்வதும், ஒற்றைப்பட்ட மிருகங்களாகக் காணப்படுவதும் நன்மை பயக்கக்கூடியவையாம். காடை, வலியன், குருவி, கள்ளிக்காக்கை, கீரிப்பிள்ளை, மயில் இவற்றைப்பார்ப்பதும் நலம். ஆந்தை அல்லது கோட்டான், பூனை, ஓணான் இவற்றைக் காண்பது அசுபமாகும். பன்றி, பல்லி, ஸர்ப்பம், முயல், சென்னாய் இவற்றின் பெயரைக் கூறுவதும் நலம். குரங்கு, கரடி, இவற்றைக் காண்பதும், இவற்றின் சப்தத்தைக் கேட்பதும் சுபம்; ஆனால் குரங்கு, கரடி இவற்றை பார்ப்பதையும், அவற்றின் சப்தத்தைக் கேட்பதையும், தவிர்த்து மற்றவைகளைக்காண்பதும் கேட்பதும் அசுபமாம். இந்திரதனுஸ் முன்புறத்தில் தோன்றியிருப்பது அசுபம்; அதுவே வேறு பக்கங்களில் இருந்தால் அது சுபமாகும். அக்னி நிரம்பிய பாத்திரங்களை எதிரில் காண்பதும், பாத்திரங்கள் எதிரில் உடைந்துபோவதும், சூன்னியமான பாத்திரங்களை முன்புறத்தில் பார்ப்பதும் அசுபம். 13—27.

வைத்தியன் ரோகியின் வீட்டில் பிரவேசிக்கையிலும்வெளிவருகையிலும் சுபாசுப சகுனங்கள்.

வைத்தியன் பிணியாளியின் வீட்டில் பிரவேசிக்கும்போது சுபகரமானவை யென்று கருதப்படும் அடியில் விவரிக்கப்போகிற தயிர் அக்ஷதை முதலான எந்த சகுனங்கள் உண்டோ, அவையே வைத்தியன் பிணியாளியின் வீட்டிலிருந்து



வெளியில் திரும்பும்போது எதிரில் தோன்றுமானால், அசுபங்களாகும். அசுபஸூசகமான தூதன் முதலானவர் இவ்விதம் நேரிடக் கண்டதும் வைத்தியன் பிணியாளிக்குச் சிகித்ஸை செய்யப்போகாமல் அவனைக் கைவிட வேண்டியதே; அப்படிக்கல்லாமல் அவை சுபஸூசங்களாயிருந்தால், ரோகியினிடம் கருணை பாராட்டி, அதனால் கள்ளம் கபடற்ற நிர்மலமான மனதுடையவனாய், பெருமுயற்சி யெடுத்துக்கொண்டு சிகித்ஸை செய்யவேண்டும். முற்கூறியபடி சுபாசுபசகுன விசேஷங்கள் இதனடியில் விவரிக்கப்படுகின்றன :—தயிர், அக்ஷதை, கரும்பு, நிஷ்பாவம் என்னும் ஒருவித தானியம், கம்பு, தேன், நெய், செம்பஞ்சுக் குழம்பு, மை, பொன்கெண்டி, மணி, தீபம், தாமரைப் பூ, அறுகம்புல், ஈரமான மத்ஸியம் முதலியமாம்ஸங்கள், நெற்பொரி, கனிவர்க்கங்கள், பக்ஷணங்கள், இரத்தினங்கள், யானை, பூர்ணகும்பம், கன்னிகை, தேர், தனதானிய ஸம்ருத்தனாய் தர்மிஷ்டனாய் எவ்வகையிலும் விருத்தியடைந்து வருகிற மனிதன், தேவதைகள், அரசன், வெண்மையான புஷ்பங்கள், வெளுத்த சாமரம், வெளுப்பான வஸ்திரம், வெண்ணிறமான குதிரை, சங்கு, ஸாத்விக குணமுள்ள பிராம்மணர், தலைப்பாகை, தோரணம், மங்களவசநம்சொல்பவன், உன்னதமான பூப்பிரதேசம், நன்கு ஜ்வலிக்கும்அக்னி, மனோஹரமான அன்னபானங்கள், மனிதர் நிரம்பிய வண்டி, கன்றுக்குட்டியுடன் கூடிய பசு, பெண் குதிரை, ஸ்த்ரீ, சகோரபக்ஷி, சாதகபக்ஷி, ஸாரஸபக்ஷி, இன்பமாகப் பேசுபவர், கையில் அணியும் வலயம் முதலிய ஆபரணங்கள், கண்ணாடி, வெண்கடுகு, கோரோசனை இவற்றைக் காண்பது சுபசகுனமாகும்; மிகவும் பரிமளம் வீசும் மணம், மிக்க வெண்மையான நிறம், மதுரரஸம், இவற்றை அநுபவிக்கும்படி நேரிடுவதும், சாந்தகுணமுள்ள மஹா விருஷபத்தினுடையவும் பசுக்களுடையவும் சப்தத்தைக் கேட்பது, உயர்த்துப் பிடிக்கப்பட்ட குடை, த்வஜம், சிறிய கொடிகள் இவற்றைக் காண்பதும், துதி செய்வது, பேரி-மிருதங்கம் சங்கு இவற்றின் சப்தங்களையும் புண்ணியாஹவாசநம் சொல்பவரின் சப்தங்களையும், வேதாத்யயந சப்தத்தையும் கேட்பது, பிரதக்ஷிணமாக ஸுகமாய் வாயு வீசுதல் இவை யாவும் வழியிற் செல்லுகையிலும், ரோகியின் வீட்டிற் பிரவேசிக்கையிலும் ஸம்பவித்தால், அந்த ரோகி ஆரோக்கிய நிலைமையை அடையக் கூடும் என்பதற்கு அறிகுறிகளாம். குணத்திற்பலவகைப்பட்டவாறு தூதர்களென்ன சகுனங்களென்ன இவை ஸம்பந்தமான விஷயங்கள் இங்ஙனம் கூறப்பட்டன; இனி ஸ்வப்ன ஸம்பந்தமான சுபாசுப விஷயங்கள் விவரிக்கப்படும். 28—39.

வெவ்வேறு வியாதி ஸூசகமான துஸ்வப்னங்கள்.

யாதொரு மனிதன், ஸ்வப்னத்தில், பிரேதங்கள் என்னும் பூதங்களோடு மதுபானம் செய்துகொண்டு, நாயால் வலித்து இழுக்கப்படுகிறானோ, அவன் ஜ்வரரூபமான மிருத்யுவினால் சீக்ரம் கொண்டுபோகப்படுவான். சிவந்த மாலையையும், சிவந்த தேஹத்தையும், அவ்வித வஸ்திரத்தையும் பெற்று, ஸ்த்ரீயினால் இழுக்கப்படுவதாக ஸ்வப்னம் காண்பவன் இரத்தபித்த ரோகத்தினால் மரணமடைவான். எருமை, நாய், பன்றி, ஒட்டை, கழுதை இவற்றில் ஏதேனும் ஒன்றில் ஏறிக்கொண்டு, எவனொருவன் தென்திசை நோக்கிச் செல்வதாக ஸ்வப்னம் காண்கிறானோ, அவன் இராஜயக்ஷ்மாவினால் மரணம் அடைவான். எவனுடைய மார்பில் முள் அடர்ந்த கொடியாவது, பனஞ்செடியாவது உண்டாவதாக ஸ்வப்னம் காணப்படுகிறதோ, அவனுக்கு குன்மரோகம் ஸம்பவித்து மரணமுண்டாகும். எவன் ஜ்வாலையில்லாத நெருப்பில் ஹோமம்

செய்துகொண்டு, நெய்யைப் பூசிக்கொண்டு, வஸ்திரமில்லாமல் இருக்க, மார்பில் தாமரை உண்டாவதாக ஸ்வப்னத்தில் காண்கிறானோ, அவன் குஷ்டரோகம் உண்டாய் மரித்து விடுவான். ஸ்வப்னத்தில் சண்டாளர்களோடு அநேகவிதமான ஸ்நேஹங்களைப் பருகுபவன் பிரமேஹத்தினுல் இறந்துவிடுவன். இராக்ஷஸர்களோடு நர்த்தனம் செய்துகொண்டு ஜலத்தில் அமிழ்ந்து விடுவதாகக் கனவு காண்பவன் உன்மாதத்தினுல் உயிர் துறப்பான். எவன் கழுதை, ஒட்டகம், பூனை, குரங்கு, புலி, பன்றி, பிரேதம், நரி இவற்றில் ஏறிக்கொண்டு போவதாக ஸ்வப்னம் காண்கிறானோ, அவன் மிருத்யுவின் வாயில் அகப்பட்டிருப்பதாய் அறிக. அப்பம், முறுக்கு இவற்றைத் தின்றுக் கொண்டிருப்பதாக ஸ்வப்னம் கண்டு, விழித்துக்கொண்டபிறகு அவ்விதமே வாந்தி செய்பவன் பிழைக்கமாட்டான். சூரியக் கிரஹணம், சந்திரக்கிரஹணம் இவற்றை ஸ்வப்னத்தில் காண்பவனுக்கு நேத்திரரோகம் உண்டாகும். சூரிய சந்திரர்கள் ஆகாயத்திலிருந்து விழுவதாக ஸ்வப்னம் கண்டால், நேத்திரம் அவிந்துபோகும். 40—47½.

*பலவகையான துஸ்வப்னங்கள்.*

சிரஸ்ஸில் மூங்கில், கொடி முதலியவை முளைப்பது, பக்ஷிகள் சிரஸ்ஸில் தாக்குவது, தலை மொட்டையாதல், காகம் - கழு முதலியவற்றால் சுற்றிக்கொள்ளப் படுதல், பிரேதம்-பிசாசம்-ஸ்த்ரீ-திராவிடர்கள், ஆந்த்ரர், கோமாம்ஸ பக்ஷிணிகள் இவற்றின் ஸம்பந்தம், பிரம்பு- கொடிகள்-மூங்கில்-புல் .முள் இவற்றின் புதர்களில் சிக்கிக்கொள்ளுதல், பள்ளத்திலும் மயானத்திலும் படுத்துக் கொள்ளுதல், புழுதியிலும் சாம்பரிலும் வீழ்தல், ஜலம் சேறு முதலியவற்றில் மூழ்கிவிடுதல், வேகமான வெள்ளத்தினுல் அடித்துக்கொண்டு போதல், நர்த்தன மாடுதல், வாத்தியம் வாசித்தல், பாடுதல், சிவந்த மாலையையும் அவ்வித வஸ்திரத்தையும் அணிதல், வயதும் அவயவங்களும் விரைவில் விருத்தியாதல், அப்யங்கஸ்நாநம் செய்தல், விவாஹம் செய்துகொள்ளுதல், மீசையை யெடுத்துவிடுதல், சமைத்த அன்னத்தையும் ஸ்நேஹங்களையும் மதுவையும் உட்கொள்ளுதல், வமன விரேசனங்களைச் செய்தல், பொன் இரும்புகளைப் பெறுதல், ஏதோ துன்பமுண்டாதல், ஏதேனும் பந்தனம் ஏற்படுதல், அபஜயம் பெறுதல், இரண்டு பாதரக்ஷைகள் தொலைந்துவிடுதல், பாதங்களிலுள்ள சர்மம் முற்றிலும் சிதைவுற்று விழுதல், மிகுந்த ஸந்தோஷம், பித்ருக்கள் சினங்கொண்டு விரட்டுதல், தீவர்த்தி-கிரஹங்கள்-நக்ஷத்திரங்கள்-பற்கள்-தேவதைகள் - கண்கள் இவை கீழே வீழ்தல் அல்லது முற்றிலும் நாசமுறுதல், பர்வதம் பிளந்துவிடுதல், சிவந்த புஷ்பங்கள் பூத்த அடவியிலும்-பாவச்செயல்களைச் செய்பவர்களுடைய இருப்பிடத்திலும்-சவப்படுக்கையிலும் - கனத்த அந்தகாரத்திலும்-தாயாரிடத்திலும் பிரவேசித்துவிடுதல், உப்பரிகை யென்ன-மலையென்ன இவை முதலியவற்றிலிருந்து விழுதல், மத்ஸியம் விழுங்கிவிடுதல், காஷாயம் உடுத்திருப்பவர்-ஸௌம்ய குணமில்லாதவர்-வஸ்திரமில்லாமல் இருப்பவர்-வன்மையுள்ள கழிகளை யேந்தியிருப்பவர்-சிவந்த கண்களுடையவர் - கறுத்த தேஹமுள்ளவர் இவர்களைக் காண்பது என்னும் இவற்றை ஸ்வப்னத்தில் காண்பது ஒருபொழுதும் சுபமாகமாட்டாது. கறுத்த வர்ணமும், பாவ ஸ்வரூபமான முகமும், அவ்வித ஆசாரமும், நீண்ட மயிர்களும், நீண்ட நகங்களும், தொங்குகிற ஸ்தனங்களும், நிறமற்ற புஷ்பமும், அத்தகைய வஸ்திரமும் உடையவளான ஸ்த்ரீயை ஸ்வப்னத்திற் கண்டால், அந்த இரவு மரணகாலத்து இராத்ரி யெனக் கருதக் கூடியதாம். 48-58,



*துஸ்வப்னவிதானமும் அதனுலான அபாயமும்.*

மனஸ் ஸம்பந்தமான விஷயங்களோடு வதற்கு ஆதாரமான நாடிகள், பிரபலமான தோஷங்களால் நிரம்பிவிடுவதால், பயங்கரமான துஸ்வப்னங்கள் உண்டாகின்றன ; இவற்றால் ரோகியானவன் மரணமடைய நேரிடுகிறது; ஆரோக்கிய நிலைமையில் இருப்பவர்கள் இவ்வித ஸ்வப்னங்களால் பிழைத்திருப்பதே ஸந்தேஹிக்கக்கூடியதாகும். அவ்வித நிலைமையை அடைந்துள்ளவர்களில் எவரேனும் ஒருவரே பிராணாபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்வார். 59, 59½.

*எழுவித ஸ்வப்னங்களும் அவற்றின் பலாபல பேதங்களும்.*

ஸ்வப்னமானது எழுவகைப்படும்; அவை யாவன :—திருஷ்ட ஸ்வப்னம்[1], ச்ருத ஸ்வப்னம்[2], அநுபூத ஸ்வப்னம்[3], பிரார்த்தித ஸ்வப்னம்[4], கல்பித ஸ்வப்னம்[5], பாவிக ஸ்வப்னம்[6], தோஷஜ ஸ்வப்னம்[7] என்பனவாம். இவற்றுள் முதலிற் குறிப்பிட்ட ஐந்துவித ஸ்வப்னங்களும் அவற்றிற்கு ஏற்றவாறு பலன் அளிப்பதில்லை ; அவ்விதமே அவனவனுடைய பிரக்ருதிதோஷ ஸம்பந்தமான ஸ்வப்னங்களுக்கும், பகலில் காணப்படுகிற ஸ்வப்னத்துக்கும், மறந்துபோன ஸ்வப்னத்திற்கும், வெகு நீண்ட அல்லது மிகவும் குறுகிய ஸ்வப்னத்திற்கும் எவ்வித பலனும் உண்டாகாது. இரவின் முற்பகுதியில் காணப்படும் கனவுக்கு பலன் வெகு காலத்திற்குப் பிறகும் சொற்பமாகவும் உண்டாகும். விடியற்காலத்தில் காணப்பட்ட கனவுக்கு அதே தினத்தில் பலன் உண்டாகும்; அப்பலன் மஹத்தாவும் இருக்கும். ஸ்வப்னம் கண்டபிறகு கண் விழித்தவனுக்கு மறுபடி நித்திரையுண்டாகாமல் இருந்தால், அந்த ஸ்வப்னத்திற்கும், காணப்பட்ட ஸ்வப்ன விஷயங்களுக்கு எதிரிடையாகப் பிறர் நிடரென்று கூறும் வார்த்தைகளால் மறுக்கப் படாத ஸ்வப்னத்திற்கும் அவ்விதமே அதே தினத்தில் மஹத்தான பலன்கள் ஸம்பவிக்கக் கூடும். 60—63½.

*துஸ்வப்னங்களுக்குப் பரிஹாரம்.*

அசுபஸ்வப்னம் கண்டால் தானம், ஹோமம், ஜபம் முதலியவற்றால் அதற்கு இயற்கையில் உண்டாகக்கூடிய பலன் குறைந்துவிடுகின்றது. எவன் அசுபஸ்வப்னத்தைக் கண்டாலும், அடுத்தாற்போல், இரம்யமான ஸ்வரூபமுள்ள சுபஸ்வப்னத்தைக் காண்கிறானோ, அவனுக்கு சுபமான பலனே உண்டாகும்.[1] 64, 65.

1. திருஷ்ட ஸ்வப்னம்—ஸாதாரணமான விழித்திருக்கும் நிலைமையில் கண்களால் காணப்படும் விஷயமே ஸ்வப்னத்தில் தோன்றுதல்.

2. ச்ருத ஸ்வப்னம்—காதுகளால்மட்டும் கேட்கப் பட்ட விஷயம் ஸ்வப்னத்தில் தோன்றுதல்.

3. அநுபூத ஸ்வப்னம்—விழித்திருக்கையில் அந்தந்த புலன்களால் நன்கு உணரப்பட்டு, அநுபவிக்கவும் பட்டு, அதே பிரகாரம் நித்திரையில் அநுபவிக்கப் படும் தோற்றம்.

4. பிரார்த்தித ஸ்வப்னம் — விழித்திருக்கையில் கண்களால் பார்க்கப்பட்டோ, காதுகளால் கேட்கப் பட்டோ, அல்லது வேறு விதமாகக் கவனிக்கப்பட்டோ, அதை அடைய வேண்டுமென்று கோரிக்கையுண்டாய், அவ்விதமே அதை அடைவதாகத் தோற்றும் ஸ்வப்னம்.

5. கல்பித ஸ்வப்னம்—பிரத்தியக்ஷ அநுமானுதிகளால் காணப்படாததும், புலன்களால் உணரப்படாததுமான அபூர்வவிஷயம் ஒன்றை மனதில் கல்பித்துக்கொண்டு, அவ்விதம் ஸ்வப்னத்தில் காணுதல்.

6. பாவிக ஸ்வப்னம்-காணப்பட்டும் கேட்கப்பட்டு முள்ள விஷயங்களுக்கு விபரீதமாகத் தோற்றும் ஸ்வப்னம்.

7. தோஷஜம்—கோளாறடைந்த வாதாதி தோஷங்களால் ஸம்பவிக்கும் ஸ்வப்னம்.

1. அசுப ஸ்வப்னத்திற்கு அடுத்தாற்போல சுபஸ்வப்னம் கண்டால், அசுபஸ்வப்ன பலன்கள் உண்டாகாமல் சுபம் உண்டாவதுபோலவே, சுபஸ்வப்னத்திற்கு அடுத்தாற்போல அசுபஸ்வப்னம் காணப்பட்டால், சுபமான பலன்கள் உண்டாகாமல் அசுபபலன்களே ஸம்பவிக்கும் என்றும் அறிக;

*சுபஸ்வப்னங்கள்.*

தேவர்கள், பிராம்மணர்கள், ஜீவித்திருக்கும் பசு-எருதுகள், நண்பர்கள், அரசர்கள், ஸாதுக்கள், கீர்த்திமான்கள், ஜ்வலிக்கும் அக்னி, நிர்மலமான நீரோடைகள், கன்னிகை, வெண்ணிறமுள்ளவர்களாய் வெளுத்த வஸ்திரம் தரித்துக் காண்பதற்கு நல்ல பொலிவுள்ளவர்களான சிறு பிள்ளைகள், தனக்கு நாற்புறங்களிலும் இரத்தம் சிந்தியிருக்க மிகப் பிரகாசமான தேஹமுடைய நரமாம்ஸபக்ஷிணி இவர்களை எவன் பார்க்கிறானோ, குடை, கண்ணாடி, விஷம், மாம்ஸம், வெளுத்த புஷ்பங்கள், வஸ்திரம், அபரிசுத்தமான வஸ்துக்களால் பூசப்பட்ட பழம், பர்வதம், உப்பரிகை, கனியுடன் கூடிய விருக்ஷம், சிங்கம், மனிதர், யானை இவற்றை எவன் அடைகிறானோ, விருஷபம், குதிரை முதலிய வாஹனங்களில் எவன் ஏறுகிறானோ, ஆறு, நீரோடை, கடல் இவற்றை எவன் நீந்தித் தாண்டுகிறானோ, கீழ்த்திசையையாவது வடதிசையையாவது நோக்கி எவன் செல்லுகிறானோ, சேரத்தகாத இடத்தில் சேருகிறானோ, மரிப்பதாகக் கருதுகிறானோ, எவன் நெருக்கமான கூட்டம் முதலியவற்றிலிருந்து வெளிப்படுகிறானோ, தேவர்களாலும் பித்ருக்களாலும் எவன் கொண்டாடப்படுகிறானோ, அழுதல், விழுந்து எழுந்திருத்தல், பகைவரை அழித்தல் இவற்றையும் ஸ்வப்னத்தில் எவன் காண்கிறானோ அம்மனிதன் தீர்க்காயுளையும், ஆரோக்கிய நிலைமையையும், அதிக செல்வத்தையும் அடைவான். 66—71.

*ஆரோக்கியமடைவதற்கான நற்குறிகள்.*

பிணியாளியானவன், மங்களகரமான ஆசாரங்களை நன்றாகச் செய்து வரும் பரிவாரங்களைப் பெற்று வியாதி பரிஹரிக்கப்படும் என்று நம்பிக்கையுள்ளவனாய், ஹிதகாரியங்களைச் செய்வதில் அநுகூலமாயிருந்து, வேண்டியவளவு பொருளுள்ளவனாய், தேஹவன்மையும் வியாதி நிவாரணமாகக் கூடிய அநுகூல இலக்ஷணமுமுள்ளவனாய், வைத்தியரிடமும் பிராம்மணரிடமும் பக்தியுள்ளவனாய், சிகித்ஸை செய்துகொள்வதில் மனம் சலிக்காதவனாயிருந்து வருவானானால், அக்குறிகள் ஆரோக்கியமடைவதற்கு ஏற்றவைகளாகும். 72, 73.

*சாரீர ஸ்த்தாநத்தின் முடிவுரை.*

இந்த ஸ்த்தாநத்தில் சரீரத்தினுடைய உற்பத்திக் கிரமம் என்ன, அதன் மரணபர்யந்தமான இயற்கை அல்லது சில கோளாறடைந்த நிலைமையென்ன இவை நன்றாக இங்ஙனம் கூறப்பட்டன; இவ்வாறு சரீர ஸம்பந்தமான தத்துவார்த்தங்களை விவரித்திருப்பதால், இது "சாரீர ஸ்த்தாநம்" என்று வழங்கப்படும். 74.

சாரீரஸ்த்தாநம் முற்றிற்று.

# நிதாந ஸ்த்தாநம்.

## முதல் அத்தியாயம்.

இங்கு ஆரம்பத்தில் ஸர்வரோக நிதாநம்[1] என்கிற அத்தியாயத்தை ஆத்திரேயர் முதலிய மஹர்ஷிகள் மொழிந்துள்ளபடியே விவரித்துக் கூறுவோம்:—

*வியாதியின் பொதுப் பெயர்கள்.*

ரோகம், பாபம், ஜ்வரம், வியாதி, விகாரம், துக்கம், ஆமயம், யக்ஷ்மா, ஆதங்கம், கதம், ஆபாதம் என்னும் இப்பெயர்கள் யாவும் பிணியைக்குறிப்பிடுவதற்கான ஓர் இனத்தைச் சேர்ந்த சப்தங்களாம்.[2] 1.

*பஞ்சலக்ஷணங்கள்.*

நிதாநம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்கிற இவை ரோகங்களைப் பகுத்தறிவதற்கான ஐந்து லக்ஷணங்கள்[3] எனப்படும். 2.

*நிதாநம்.*

நிமித்தம், ஹேது, ஆயதநம், பிரத்யயம், உத்தாநம், காரணம் என்கிற இச்சப்தங்கள் நிதாநம் என்பதைக் குறிப்பிடுவதற்கான ஓரினப் பெயர்களாகும்.[4] 2¾.

---

1. எல்லா ரோகங்களுக்கும் பொதுவான பஞ்சலக்ஷணங்கள் முதலிய நிதாந விஷயங்களை விவரிப்பதால் இவ்வத்தியாயத்திற்கு 'ஸர்வரோக நிதாநம்' என்கிற பெயர் வந்தது.

2. ரோகம்—துன்பத்தைவிளைவிப்பதால் 'ரோகம்' என்று பிணிக்குப் பெயர். பாபம்—எல்லா வியாதிகளுமே பாவத்தைக் காரணமாகக்கொண்டு ஸம்பவிப்பதால் வியாதிக்கும் 'பாபம்' என்று பெயர் வந்தது. ஜ்வரம்—எந்த வியாதியிலும் தேஹமாவது மனதாவது இரண்டுமாவது தாபப்படுவது இயல்பாகையாலும், பெரும்பான்மையான வியாதிகளில் ஜ்வரமும் ஒரு குறியாக உண்டாவதாலும் ரோகம் என்பதற்கு ஜ்வரமும்பொதுப் பெயராக ஆயிற்று. வியாதி—சரீரத்திலும் மனத்திலும் பலவிதமான துன்பம் விளைவிப்பதால 'வியாதி' என்கிற பெயர் வந்தது. விகாரம்-தேஹம் மனது, புத்தி, புலன்கள் இவற்றிற்கு இயற்கைக்கு விரோதமான நிலைமைகளை உண்டுபண்ணுவதால 'விகாரம்'—எனப்படுகிறது. துக்கம்—சரீரதுக்கும் மனதுக்கும் துன்பம் விளைவிப்பதால் வியாதியானது 'துக்கம்' எனப்படுகிறது. ஆமயம்—வியாதிகள் பெரும்பாலும் ஆமதோஷத்தினால் உண்டாவதால் 'ஆமயம்' என்று கூறப்படுகிறது. யக்ஷ்மா—அநேக வியாதிகளின் தொகுதியைக் குறிப்பிடுவதால், 'யக்ஷ்மா' என்பது வியாதிக்குப் பொதுப் பெயராகவும் கருதப்படுகிறது. ஆதங்கம்—வெகு கஷ்டப்பட்டு ஜீவிக்க வேண்டியிருப்பதால 'ஆதங்கம்' என்று கூறப்படுகிறது. கதம்—அநேக காரணங்களால் விகாரங்களை யுண்டுபண்ணுவதால் கதம் எனப்படும். ஆபாதம்—பலவகையிலும் துன்பம் அல்லது கெடுதி விளைவிப்பதால் வியாதிக்கு இப்பெயர் வந்தது.

3. பஞ்சலக்ஷணங்களுக்கு பஞ்சநிதாநம் அல்லது நிதாந பஞ்சகம் என்றும் பெயர் உண்டு.

4. நிதாநம் என்றால் வியாதிக்குக் காரணம் எனப் பொருள். ஆனால் பஞ்சலக்ஷணங்களுக்கும் பொதுவாக நிதாநம என்று பெயர் உண்டு. ஆகவேதான் இந்த ஸ்த்தாநத்திற்கு 'நிதாநஸ்த்தாநம்' என்றும் பெயர் வந்தது. வியாதிக்குக் காரணம் என்பதைக் குறிப்பிடும் இந்த நிதாநம 'ஸந்நிக்ருஷ்டம்' என்றும், 'விப்ரக்ருஷ்டம' என்றும் இரண்டுவிதமாகப் பிரிக்கப்படும். (ஸந்நிக்ருஷ்டம் என்றால் ஸமீபித்தது, விப்ரக்ருஷ்டம என்றால் தூரத்திலிருப்பது என்று பொருள்.) தேஹத்திலேயே வியாபித்துள்ள வாதாதி தோஷங்கள் தமக்குள் கோளாறடைந்து வியாதியை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகத் தோன்றினால் அதுவும அதுபோன்றவையும ஸந்நிக்ருஷ்ட நிதாநமாகும். தகாத உணவு முதலியவை முதலில தேஹத்தில பிரவேசித்து, அப்பால் பரிபாககாலத்தில் வாதாதி தோஷங்களுக்குக் கோளாறை உண்டுபண்ணி, அவற்றின் மூலமாய் வியாதியுண்டானால், அவ்வியாதியின ஹேது விப்ரக்ருஷ்ட நிதாநம் என்று கூறப்படும். மேலும சிகரம் ஜீரணமாகக் கூடாத உணவுகளை உபயோகிக்க அதனால் ஆமதோஷம் உண்டாகலாம; ஆமதோஷத்தினால் ஜ்வராதி வியாதிகள் உண்டாகும; இவற்றுள் அஜீரணமுண்டாக்கக்கூடிய பதார்த்தங்களைப புஜிப்பது ஆமதோஷத்திற்கு ஸந்நிக்ருஷ்ட நிதாநமாகவும, ஜ்வராதி வியாதிகளுக்கு விப்ரகருஷ்ட நிதாநமாகவும ஆகின்றது.

**பூர்வரூபம்.** வியாதி ஸம்பவிப்பதற்கு ஆதாரமாயுள்ள ஒரு குறிப்பிட்ட தோஷத்தின் குறிகளைப் பெறாதவேறு எந்த இலக்ஷணத்தினால் இனி உண்டாகப்போகிற வியாதியானது அறிவிக்கப்படுமோ, அந்த இலக்ஷணமே பூர்வரூபம் என்று வழங்கப்படுகிறது. அதாவது—பூர்வரூபாவஸ்தையில் வியாதிகள் சொற்பமான நிலைமையில் இருப்பதால், வியாதியின் இயற்கையான இலக்ஷணம் விளங்கக் காணமுடியாததாயிருக்கும்; இப்பூர்வரூபக் குறியும் அந்தந்த வியாதிகளின் இயற்கை இலக்ஷணங்களின் தன்மைக்குத் தகுந்தவாறு ஸம்பவிக்கும்.[1] 3, 4.

**ரூபம்.** முற்கூறிய ‘பூர்வரூபம்’ என்கிற உண்டாகப்போகிற வியாதி ஸூசகமான குறியானது விளங்கத் தோன்றிவிட்டால், அதுவே ரூபம் என்று சொல்லப்படும்.[2] இந்த ‘ரூபம்’ என்பதற்கு ஸம்ஸ்தாநம், வியஞ்ஜநம், லிங்கம், இலக்ஷணம், சின்ஹம், ஆக்ருதி என்பவை பர்யாய நாமங்களாகும். 5.

**உபசயமும் அநுபசயமும்.** வியாதியின் காரணத்திற்காவது, வியாதிக்காவது நேர் எதிரிடையாயிருப்பவையான, அல்லது அவற்றிற்கு எதிரிடையாகக் காரியங்களையாவது செய்யக்கூடியவையான ஔஷதமென்ன, உணவென்ன, வேலையென்ன இவற்றின் பிரயோகத்தினால் வியாதிநிவாரணரூபமான சுகத்தை உண்டுபண்ணும் யாதொரு உபயோகம் உண்டோ, அதுதான் உபசயம் என்று அறிக; இவ்வுபசயமே வியாதிக்கு ‘ஸாத்மியம்’ என்று கருதப்படுகிறது[1]. அப்படிக்கின்றி ஔஷதாதிகளின் உபயோகம் வியாதியை நிவ்ருத்திக்காமற்போனால், அச்செயல் அநுபசயம் என்றும், வியாதிக்கு அஸாத்மியம் என்னும் கூறப்படுகிறது. 6, 7.

1. பூர்வரூபம் என்பதை பிராக்ரூபம் என்றும் கூறுவர்; அதாவது உண்டாகப்போகிற வியாதியின் தன்மையைக் குறிப்பிடும் ஸூக்ஷ்மக்குறியாம். ஒருவனுக்கு ஜ்வரம் உண்டாகப்போகிறதென்றால், அதற்கு முன்பாக தேஹம் பாரமாயிருப்பது, திமிர்ப்பு, இடுப்புவலி, தலைவலி, குளிர் முதலியவை உண்டாகுமல்லவா? இக்குறிகளே உண்டாகப்போகிற ஜ்வரத்திற்குப் பூர்வரூபங்களாகும். அதிஸாரம் உண்டாகப் போகிறதென்றால் வயிற்றில் வேதனை, வயிறுப் பொருமல் முதலியவை பூர்வரூபங்களாக உண்டாகும். இப்படியே அந்தந்த வியாதிக்குத் தகுந்தவாறு வெவ்வேறு வகையான பூர்வரூபங்கள் உண்டாகும். பூர்வரூபம் சாரீரம் என்றும், மானஸிகம் என்றும் இருவகைப்படும்; ஜ்வரத்தில் திமிர்ப்பு அரோசகம், தேஹபாரம், தலைவலி முதலிய சரீரத்தைப்பற்றி யுண்டாகுபவை ‘சாரீர பூர்வரூபங்கள்’ என்றும், அந்த வியாதியில் மனக்கவலை, கலவ வார்த்தை முதலியவற்றில் பிரியமின்மை முதலான மனதைப்பற்றி யுண்டாகுபவை ‘மானஸிக பூர்வரூபங்கள்’ என்றும் கூறப்படும்.

2. ரூபம்—ஒவ்வொரு வியாதிக்கும் இயற்கையில் ஏற்படும் குறி.

1. உபசயம் என்றால் வியாதிநிவ்ருத்தியாதல். இதையே சிறிது விளங்கக் கூறுவோம்:—நிதானம் எனப்படும் ரோககாரணத்திற்காவது, ரோகத்திற்காவது எதிரிடையான ஔஷதத்தையும் உணவையும், வேலையையும் உபயோகிப்பதால் வியாதிக்கு உபசயம் (உபசாந்தி) உண்டாகும்; என்றால்—ஹேதுவிபரீதமான அல்லது வியாதி விபரீதமான ஔஷதான்ன விஹாரங்களால் உண்டாகும் உபசயமாகும். நிதானத்திற்காவது வியாதிக்காவது எதிரிடையல்லாத குணமுள்ளவைகளாகத் தோற்றுபவையும், இறுதியில் பலனால் அவற்றிற்கு எதிரிடையான காரியங்களைச் செய்யும் ஔஷதான்னவிஹாரங்கள் ஹேதுவிபரீதார்த்தகாரிகள் என்றும், வியாதிவிபரீதார்த்தகாரிகள் என்றும் கூறப்படும். இவற்றுள் (1) ஹேதுவிபரீதமான ஔஷதம்—குரு ஸ்னிக்த்த சீதங்கள் என்னும் காரணங்களால் உண்டான வியாதியில், இலகு ரூக்ஷ உஷ்ணங்கள் என்கிற குணங்களையுடைய பதார்த்தங்களை முறையே பிரயோகித்தல். (2) ஹேது விபரீதமான அன்னம்—ஸந்தர்ப்பணத்தினால் உண்டான வியாதியில் அபதர்ப்பணமான (இலங்கனம் முதலிய) சிகித்ஸையைச் செய்தல். (3) ஹேதுவிபரீதமானவிஹாரம்—மிதமிஞ்சி உழைத்ததால் ஏற்பட்ட வியாதியில் உடம்பு அசையாமல் அமைதியாயிருத்தல். (4) கபத்தினால் உண்டான ஜ்வரத்தில் ஸூருதபானம் செய்வித்தல் வியாதி விபரீதமான ஔஷதமாகும். (5) அந்த கபஜ்வரத்தில் பேயா என்னும் கஞ்சிவகைகளை உபயோகித்தல் வியாதிவிபரீதமான அன்னமாம். (6) அந்த ஜ்வரத்தில் அமைதியாகப் படுத்திருப்பது வியாதி விபரீதமான விஹாரமாம். (7) ஹேது விபரீதார்த்த காரியான ஔஷதம்—பித்தப்பிரதானமான வீக்கத்தில் பித்தகரமான உஷ்ணமாயுள்ள பசுமுதலிய ஒற்றடங்களை உபயோகித்தல். (8) ஹேது விபரீதார்த்த காரியான



**ஸம்ப்ராப்தி.** தோஷம் முதலில் கோளாறடைந்த வகைகளையும், அப்பால் அத்தோஷம் தேஹத்தில் வியாபிக்கும் விதங்களையும், அதனால் வியாதியுண்டாகும் கிரமத்தையும் அறிவிக்கக் கூடிய முறையானது ஸம்ப்ராப்தி எனப்படும்; இதற்கே ஜாதியென்றும், ஆகதியென்றும் பெயராம்.[1] இது ஸங்க்யா ஸம்ப்ராப்தி யென்றும், விகல்பஸம்ப்ராப்தி யென்றும், பிரதான ஸம்ப்ராப்தி யென்றும், பல ஸம்ப்ராப்தி யென்றும், கால ஸம்ப்ராப்தி யென்றும் அநேக வகைப்படும். இதன் பிறகு இந்த ஸ்தாநத்திலேயே ஜ்வரம் எட்டுவிதம் என்று ஆரம்பித்து ஒவ்வொரு வியாதியின் உட்பிரிவுகளைப் பகுத்து, அவற்றின் எண்ணிக்கைகளைக் குறிக்கப்போகிற விஷயம் ஸங்க்யா ஸம்ப்ராப்தி எனப்படும்.[2] பல தோஷங்கள் சேர்ந்து வியாதியை யுண்டாக்கையில், பிரகோபமடைந்த அத்தோஷங்களுக்குள்ள தாரதம்யங்களை அல்லது தோஷங்கள் பிரகோபிப்பதற்குக் காரணமான ரூக்ஷாதி குணங்களைப் பகுத்தறிந்து, அவற்றின் அம்சங்களாகவோ அல்லது அவ்வம்சங்களின் சில பகுதிகளாகவோ கல்பனைசெய்து நிர்ணயிக்கப்படும் விகற்பம் விகல்ப ஸம்ப்ராப்தி யெனப்படும்.[1] சுதந்த்ர வியாதியென்றும், பாரதந்த்ர வியாதியென்றும் பகுத்து, வியாதிக்குப் பிராதான்யத்தைக் கூறுவது பிரதான ஸம்ப்ராப்தி யென்று வழங்கப்படும்.[2] ஒரு வியாதிக்குக் காரணம் முதலிய பஞ்சலக்ஷணங்கள் முற்றிலும் ஸம்பவித்திருப்பதையும், அல்லது அவற்றில் சில இலக்ஷணங்கள் மாத்திரம் ஏற்பட்டிருப்பதையும் கொண்டு ரோகம் பலமானது அல்லது துர்ப்பலமானது என்று பேதம் கூறுதல் பல ஸம்ப்ராப்தியா

அன்னம்—அதே பித்தவீக்கத்தில் உஷ்ணவீர்யமான விதாஹிகுணமுள்ள உணவுகளை உபயோகித்தல். (9) சர்த்தியில் விரல் குச்சி முதலியவற்றைத் தொண்டையில் செலுத்தி சர்த்தியையே உண்டுபண்ணுதல் ஹேதுவிபரீதமான செயல் அல்லது விஹாரமாகும். (10) சர்த்தியென்னும் வாந்தியில் அதையே உண்டாக்கக்கூடிய உப்பு முதலியதை உபயோகித்தல் வியாதி விபரீதார்த்தகாரி ஔஷதமாம். (11) அதிஸாரத்தில் விரேசனமுண்டுபண்ணும் பாலையே உட்கொள்ளுதல். வியாதிவிபரீதார்த்த காரியான அன்னம். (12) உட்புகுந்து துன்பமளிக்கும் சல்யத்தை வெளிப்படுத்தவண்டியில் ஏற்றி மேடுபள்ளங்களில் இழுப்பது வியாதிவிபரீதார்த்தகாரியாம்.

1. ஜ்வரத்தில் வாதாதி தோஷங்கள் அதற்குக் காரணமான பிரதிகூல பதார்த்தங்களால் அல்லது செயல்களால் கோளாறடைய, (ஆமதோஷாதிகளால் வாதாதிகள் விகாரமடைய) அதனால் தேஹத்தில் ஸ்ரோதோமுகங்கள் என்னும் நீர்க்குழாய முதலிய த்வாரங்களில் ஆமதோஷம் அபிவிருத்தியாய், அதனால் தாதுக்களில் இயற்கையில் ஸம்பவிக்கும் பாசகவேலை திமிதப்பட்டு, உட்புற உஷ்ணவேகம் வெளியில் பரவவே ஜ்வரம் ஸம்பவிக்கிறது என்பது இவ்வியாதியில் ஸம்ப்ராப்தியாகும்.

2. ஸங்க்யா ஸம்ப்ராப்தி—ஜ்வரம் எட்டுவிதம் என்றும், காஸம் ஐந்துவிதம் என்றும், குன்மம் எட்டுவிதம் என்றும் இவ்வாறு ஒவ்வொரு வியாதிக்கும் எண்ணிக்கையில் கூறப்படும் பேதம் ஸங்க்யா ஸம்ப்ராப்தியாம்.

1. விகல்ப ஸம்ப்ராப்தி—வாதாதி தோஷங்கள் தனித்தனியாகவோ, இரண்டிரண்டாகவோ, மூன்றும் ஒருமிக்கச் சேர்ந்தோ வியாதியை யுண்டுபண்ணுகையில் ஒவ்வொரு தோஷத்திற்குமுள்ள ஏற்றக்குறைவான அளவுகளைக் குறிப்பிடும் விஷயமாம். அல்லது வாதாதிதோஷங்கள் அததற்குள்ள காரணகுணங்களில் (ரூக்ஷ-இலகு-சீதாதிகளில்) எந்தெந்த அம்சத்தினால் கோளாறடைந்தனவென்று குறிக்கப்படும் விஷயமாம்.

2. பிரதான ஸம்ப்ராப்தி—வியாதி சுதந்திரமானதென்றும், பரதந்திரமானதென்றும் இருவகைப்படும்; சுதந்திரமான காரணங்களால் உண்டாகும் வியாதிகள் சுதந்திரங்கள்; ஒவ்வொருவியாதியையே காரணமாகக் கொண்டு உண்டாகும் மற்றொரு வியாதி பரதந்திரமாகும். சுதந்திரமான காரணத்தினால் அஜீர்ணம் உண்டாகும். அஜீர்ணத்தினால் அதிஸாரம் உண்டாகலாம்; இவற்றுள் அஜீர்ணம் ஒரு ஸமயத்தில் சுதந்திர வியாதியாகவும், அதிஸாரம் பரதந்திரவியாதியாகவும் கருதப்படுகின்றன. இவ்வாறு வியாதிகளுக்கு சுதந்திர பாரதந்திர (பிரதான அப்பிரதான) பேதங்களைக் குறிப்பிட்டு விவரிக்கப்படும் விஷயமே ஸம்ப்ராப்தியாம்; ஆகவே இதுபிரதான ஸம்ப்ராப்தியென்பது போலவே அப்பிரதான ஸம்ப்ராப்தி யென்றும் இதில் மற்றொன்று உண்டு.

கும்.[1] வியாதியானது இரவிலாவது, பகலிலாவது, ஒவ்வொரு ருதுவிலாவது, ' ஆஹாரம் உட்கொண்டபொழுதாவது—இவ்வாறு ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்தில் அந்தந்த தோஷத்தின் தன்மைகளை அநுஸரித்து ஸம்பவிக்கும் வகையைக்கொண்டு, வியாதியின் காலநிர்ணய முறையானது கால ஸம்ப்ராப்தியென்று வழங்கப்படும்.[2] 8—11.

*வியாதிக்குப் பொதுக்காரணங்கள்.*

இங்ஙனம் மேற்கூறியவாறு நிதாநஸம்பந்தமான[3] விஷயம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. இனி இவ்விஷயமே விவரித்துக் கூறப்படும்.[4] எல்லா வியாதிகளுக்குமே, பிரகோபமடைந்த தோஷங்கள் காரணமாகும். அத்தோஷங்கள் பிரகோபமடைவதற்குக் காரணம் ஹிதமல்லாத ஆஹாரங்களை உபயோகிப்பதும், அஹிதமான காரியங்களைச் செய்வதுமேயாம். காலம், விஷயம், காரியம் என்கிற இம்மூன்றுக்கும் ஹீன-மித்தியா - அதிமாத்திரைகள் என்கிற மூன்று கூறப்பட்டுள்ள மூன்றுவித சேர்க்கைகளும் அஹிதமானவையாம்.[1] 12, 13.

*வாதம் பிரகோப மடைவதற்கான காரணங்கள்.*

கைப்பு - கார்ப்பு, - துவர்ப்பு, - இச்சுவைகளுள்ள வஸ்துக்களாலும், ரூக்ஷமான உணவினாலும், ஆஹாரத்தை அற்பமாகவும் அகாலத்திலும் புஜிப்பதாலும், மலம் முதலியவற்றை பலாத்காரமாக வெளிப்படுத்த முயலுவதால் அல்லது அவற்றை அடக்குவதாலும், இரவிற் கண் விழிப்பதாலும், மிகவும் உரத்துப் பேசுவதாலும், அதிக வேலைகளைச் செய்வதாலும், பயத்தினாலும், மனத்துயரத்தினாலும், சிந்தையினாலும், வியாயாமம் என்னும் தேஹவுழைப்பாலும், புணர்ச்சியினாலும், கிரீஷ்மருதுவாலும், பகற்பொழுது—இரவு இவற்றின் முடிவுநேரங்களிலும், உணவு ஜீர்ணமான ஸமயத்திலும் வாததோஷம் பிரகோபமடையும். 14, 15.

*பித்தம் பிரகோபமடைவதற்கான காரணங்கள்.*

கடுரஸம், அம்லரஸம், இலவணரஸம், இவற்றாலும், தீக்ஷ்ணகுணத்தினாலும், உஷ்ணவீர்யத்தினாலும், கோபத்தினாலும், அழற்சியுண்டுபண்ணும் வஸ்துக்களாலும், சரத்ருதுவிலும், நடுப்பகலிலும், நடுநிசியிலும், உணவு ஜீர்ணமாகும் ஸமயத்திலும் பித்தம் பிரகோபம் அடையும். 16.

*கபம் பிரகோபமடைவதற்கான காரணங்கள்.*

மதுரரஸம், அம்லரஸம், இலவணரஸம் இவற்றாலும், ஸ்நிக்த்தமாகவும் குருவாகவும் அபிஷ்யந்தியாகவும் சீதளமாகவும உள்ள வஸ்துக்களாலும், உட்கார்ந்திருப்பது நித்திரையுறுதல் சுகவாழ்க்கை-அஜீர்ணம்-பகலில் தூங்குவது-அதிக பிருஹ்மண சிகித்ஸை

1. பல ஸம்ப்ராப்தி—ஒவ்வொரு வியாதிக்கும் என்னென்ன காரணங்கள் உண்டோ, அவ்விதமே பூர்வரூப-ரூபாதிகள் எவ்வளவு உண்டோ அவையெல்லாம் அந்தந்த வியாதியில் பூர்ணமாகக் கண்டிருந்தால் அது பலமான வியாதியாயிருக்குமாகையால், அதுபல ஸம்ப்ராப்தி யென்றும், அவற்றில் ஏதாவது சில பாகங்கள் மாத்திரம் காணப்படுமானால் அந்த ஸம்ப்ராப்தி துர்ப்பலமானதென்றும் கருதப்படும்.

2. எந்த தோஷம் பிரகோபமடைய எது அநுகூலமான காலமோ அக்காலத்தில் அத்தோஷம் வியாதியை உண்டுபண்ணலாம் அல்லது விருத்திபண்ணலாம். எப்படியென்றால்—கபஜ்வரம் இரவின் ஆரம்பத்திலும், விடியற்காலத்திலும், புஜித்தஸமயத்திலும், வஸந்தருதுவிலும் விருத்தியாகும் அல்லது உண்டாகும்.

3. நிதாநம் என்பதால் பஞ்சலக்ஷணங்கள் என்னும் காரண-பூர்வ ரூபாதிகள் ஐந்தும் குறிக்கப்படுகின்றன.

4. இனி ஜ்வர நிதாநம் முதலிய பிரகரணங்களில் விவரிக்கப்படும் விஷயம் எனக் கருத்து.

2. இது விஷயமாக 5-வது பக்கத்தில் "ரோகாரோக்கிய காரணங்கள்" என்னும் தலையங்கத்தையும், 103, 104-ம் பக்கங்களில் விவரித்துள்ள விஷயங்களையும் கவனித்துப் பார்க்க.



யைச் செய்துகொள்வது என்னும் இக்காரியங்களாலும், சர்த்தநம் என்னும் வமந சிகித்ஸை நன்கு நிறைவேறாமையினாலும், உணவு உட்கொண்ட ஸமயத்திலும், வஸந்த ருதுவிலும், காலையிலும், மாலையிலும் கபம் பிரகோபமடையும். 17, 17¾.

*தோஷங்களின் த்வந்த்வ-ஸந்நிபாதப் பிரகோபங்களுக்குக் காரணங்கள்.*

தோஷங்கள் த்வந்த்வங்களாகப் பிரகோபமடைவதற்கு,வாத-பித்தகபங்களுள் இரண்டிரண்டு தோஷங்களுக்குக் கூறப்பட்டுள்ள அஹிதங்கள் காரணமாகும். அங்ஙனமே எல்லாத்தோஷங்களுக்கும் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஒருமிக்கக் கலந்து ஸம்பவித்தால் ஸந்நிபாதம் உண்டாகும்; அதாவது பின்வருமாறு: நாநாவிதமான பதார்த்தங்கள்-அல்லது நல்லவை பொல்லாதவை யென்னும் பதார்த்தங்கள்-கலந்ததும், அஜீர்ணம் செய்யக்கூடியதும், ஏற்றக்குறைவானதும், விருத்தமானதும், அளவில் அதிகமாயிருப்பதுமான உணவுகளை உண்பதாலும், கெட்டுப்பதனழிந்த மதுவையும்- அத்தகைய தண்ணீரையும்-உலர்ந்துபோன காய்கறிகளையும்-அவ்விதமான கிழங்குகளையும் - பிண்ணாக்குகளையும் - மண்ணையும்-யவதானியங்கள் சேர்ந்த ஸுரா எனப்படும் மதுவையும்-அழுகி உலர்ந்த மெலிய இறைச்சிகளையும் உண்பதாலும், மூன்று தோஷங்களையும் பிரகோபிக்கச்செய்யும் மற்றுமுள்ள அந்தந்த வஸ்துக்களாலும், வெவ்வேறு உணவுகளை அடிக்கடி மாற்றுவதாலும், தாதுக்கள் கெட்டுப்போவதாலும், எதிர்காற்றாலும், துஷ்டக் கிரஹங்களின் ஆவேசத்தினாலும், விஷத்தினாலும், கிருத்ரிமவிஷத்தினாலும், கெட்டுப்போன அன்னத்தினாலும், மலைப்பிராந்தங்களில் சில ஸமயம் வஸிப்பதாலும், கிரஹங்களால் ஜன்மநக்ஷத்திரம் பாதிக்கப்படுவதாலும், பலவகையான மித்தியாயோகத்தினாலும்[1], பாவச்செயல்களைச் செய்வதாலும், ஸ்த்ரீகளுக்குப் பிரஸவஸமயத்தில் உண்டாகும் கோளாறுகளாலும், சிகித்ஸைகள் முறை தவறாகச் செய்யப்படுவதாலும் மூன்று தோஷங்களும் ஒருமிக்கப் பிரகோபமடைந்து ஸந்நிபாதம் உண்டாகும். 18—22½.

*ஒவ்வொரு ரோகத்திலும் தோஷங்கள் விகாரமடைதல்.*

தோஷங்கள் ஒவ்வொரு ரோகத்திலும் இவ்விதம் பிரகோபமடைந்து, வியாதியுண்டாவதற்கு ஆதாரமான ஸ்த்தாநங்களை நோக்கிச் செல்லுகிற இரஸாயனிகள் என்னும் குழாய்களில் பிரவேசித்துச் சென்று, அப்பால் தேஹத்தில் சீக்கிரம் விகாரமடைகின்றன. 23½.

1. மித்தியாயோகம்—இதன் விவரத்தைப்பற்றி 104-ம் பக்கத்தில் மூலமும் டிப்பணியும் பார்க்க.

# இரண்டாவது அத்தியாயம்.

இதன் பிறகு ஜ்வரநிதானம்[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது:—

*ஜ்வரமும் அதன் எட்டுவிதமான பேதமும்.*

ஜ்வரம் என்பதற்கு ரோகபதி,[2] பாபம்,[3] மிருத்யு,[4] ஓஜோசநம்,[5] அந்தகம்,[6] க்ரோதம்,[7] தக்ஷாத்வரத்வம்ஸீ என்னும் வேறு பெயர்கள் உண்டு. அது ருத்திரனுடைய நெற்றிக்கண்ணிலிருந்து உண்டானது;[8] ஜன்ம காலத்திலும் மரண காலத்திலும் மயக்கம் உண்டுபண்ணு மியல்புடையது ; ஸந்தாபஸ்வரூபி; ஒழுக்கத்தவறுதலால் உற்பத்தியாகக்கூடியது; குரூரமானது ; மேலும் வெவ்வேறுவிதமான பிராணிகளுக்கும் வெவ்வேறு வகையான பெயருடன் உண்டாய்வருகிறது.[1] அவற்றுள் மூன்று தோஷங்களால் தனித்தனியே மூன்றும், இரண்டிரண்டு தோஷங்களால் மூன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், ஆகந்துக ஜ்வரம் என்பது ஒன்றும் ஆக எட்டுவிதமாம்.[2] 1—2½.

*ஜ்வர - ஸம்ப்ராப்தி.*

அந்த எட்டுவிதமான ஜ்வரத்திலும் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமான வாதாதி தோஷங்கள் அதற்கு ஏற்ற ஹேதுக்களால் கோளாறடைந்து, ஆமாசயத்தில் ஊடுருவிப் பாய்ந்து, ஆமதோஷத்துடன்[3] கலந்துகொண்டு, ஸ்ரோதோமார்க்கங்களை[4] அடைத்து, உணவுகளும் தாதுக்களும் பக்குவமாய் மேன்மேலும் தாதுக்கள் விருத்தியாவதற்கு அவசியமான அக்னியை (உஷ்ணத்தை) வெளிப்

1. ஜ்வரநிதாநத்தியாயம்—ஜ்வரம் உற்பத்தியாவது, அதன் இலக்ஷணங்கள் இவை முதலியவற்றை விவரிக்கும் அத்தியாயம்.

2. ரோகபதி-பெரும்பான்மையான வியாதிகளிலும் ஜ்வரம் ஒரு குறியாயிருப்பதாலும், மற்ற வியாதிலும் இது ஜனங்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் அதிகமாய் உண்டாவதாலும் இப்பெயர் வந்தது.

3. பாபம்-பாவத்தினால் ஏற்படுவதால் இவ்வியாதிக்கே பாபம் எனப்பெயர் வந்தது.

4. மிருத்யு—மற்ற வியாதிகளைக் காட்டிலும் எப்பொழுதுமே ஜ்வரத்தினாலேயே மரண விகிதம் உலகில் விசேஷமாய் உண்டாவது இயற்கையாயிருப்பதால் இவ்வாறு பெயர் வந்தது.

5. ஓஜோசநம்—ஓஜஸ் என்கிற தாதுவை முக்கியமாய் ஜ்வரம் அழித்துவிடும்; ஆகையினாலேயே ஜ்வரத்தினால் வருந்துபவன் மிகவும் துர்பலமாகவும், ஒளி மழுங்கியும், இரத்தம் வெளுத்து முகம் வெளிறியும் போய்விடுகிறான் என்றறிக (33-வது பக்கத்தில் ஓஜஸ் என்னும் தாதுவைப்பற்றிய விவரத்தைப் பார்க்க.)

6. அந்திம காலத்தில் அவசியம் இது வருவதால் 'அந்தகம்' என்று பெயர்.

7. சிவனுடைய கோபமே ஜ்வரமாகப் பிறிணமம் அடைந்ததாம்; ஆகவே இதற்குக் க்ரோதம் என்று பெயர். (க்ரோதம் என்றால் கோபம்.)

8. தக்ஷப்பிரஜாபதி ஒரு மஹத்தான யாகத்திற்குத் தன்னைப் பிரார்த்தித்து வரவழைக்காமையால் அவரிடம் சிவனுக்கு அடங்காக் கோபம் உதிக்க, அப்பொழுது, தமது நெற்றிக்கண்ணைத் திறந்து தக்ஷருடைய யாகத்தை அழிக்க, அச்சமயம் ஜ்வரம் என்றும் வியாதி அக்கோபத்திலிருந்து உற்பத்தியானதாக ஒரு புராண கதையுண்டு.

1. யானைக்கு உண்டாகும் ஜ்வரத்துக்கு 'பாகலம்' என்றும், குதிரைகளின் ஜ்வரத்திற்கு 'அபிதாபம்' என்றும், பசுக்களின் ஜ்வரத்திற்கு 'கோகர்ணகம்' என்றும், பக்ஷிகளின் ஜ்வரத்திற்கு 'மகரம்' என்றும் பெயர். இவ்வாறே விருக்ஷம் முதலியவற்றிற்கும் ஜ்வரம் உண்டாவதுண்டு.

2. வாதஜ்வரம், பித்த ஜ்வரம், கபஜ்வரம் ; வாதபித்தஜ்வரம். வாத கபஜ்வரம், பித்த கபஜ்வரம்; வாதபித்த கபஜ்வரம்; ஆகந்துகம் என்பவையுமாம். ஆகந்துமுதலிய ஜ்வரங்களுடைய விவரம் பிறகு கூறப்படுகின்றன.

3. ஆமதோஷம்-இதைப்பற்றி 33-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

4. ஸ்ரோதஸ்ஸுகள் என்பதால், இரஸவஹமாகவும், மூத்திரம் முதலிய கழிவுப் பொருட்கள் செல்லுவதற்கு அவசியமாயிருப்பவையுமான குழல்கள் குறிக்கப்படுகின்றன.



படுத்தி,[1] அவ்வெப்பத்தோடு அத்தோஷங்களும் உடலெங்கும் வியாபித்து, தாபத்தையும் உண்டுபண்ணி, உடலை மிகவும் சூடாகச் செய்து அவை ஜ்வரத்தை உண்டுபண்ணுகின்றன ; ஜ்வரம் உண்டாயிருக்கையில் ஸ்ரோதோமார்க்கங்கள் அடைக்கப்பட்டிருப்பதாலேயே, அப்பொழுது வியர்வை உடம்பில் சிறிதும் உண்டாவதில்லை.[2] 3-5½.

அந்த ஜ்வரத்திற்குப் பொதுவான பூர்வரூபங்கள் பின்வருமாறு :—

*ஜ்வர-பூர்வரூபம்.*

சோம்பல், மனதுக்கு நிலையில்லாத் தன்மை, தேஹம் குருவாகப்போதல், வாயில் ஏதோ விகாரமான இரஸம் ஏற்படுதல், அன்னாதிகளில் பிரியமில்லாமை, கொட்டாவி விடுதல், கண்ணீருடன் கண்கள் வியாகுலப்படுதல், அங்கங்களில் வேதனை, உணவு முதலியது ஜீர்ணமாகாமற் போதல், தேஹவன்மை குறைந்துவிடுதல், அதிக நித்திரை, மயிர்ச்சிலிர்க்கை யுண்டாதல், உடல் நிலைத்து நிற்கமுடியாமற் போதல், முழங்காலுக்குக் கீழுள்ள ஆடுச்சதையென்னும் தசைகளில் கொறுக்குவலி யுண்டாதல், ஆயாஸம், ஹிதமான உபதேசங்களில் கோபமுண்டாதல், அம்லம்-இலவணம்-கடுரஸம் இச்சுவைகளில் விருப்பம், இனிப்பான தின்பண்டங்களில் வெறுப்பு, குழந்தைகளிடம் வெறுப்பு, அதிக நாவறட்சி, பலவிதமான ஓசைகள்-அக்னி-குளிர்ச்சி-காற்று-ஜலம்-நிழல்-சூடு இவைகளில் திடீரென்று விருப்பமும், அவற்றில் திடீரென்று வெறுப்பும் உண்டாவது என்னும் இவைகளேயாம். இவை உண்டான பிறகு ஜ்வரம் வியக்தமாய் ஸம்பவிக்கும். 6-9½.

*வாத ஜ்வரக் குறிகள்.*

ஜ்வரம் உண்டாவதிலும், விடுவதிலும், தேஹத்தில் பலவாறு கலவரமுண்டுபண்ணுவதிலும், ஜ்வரவேகம் மிருதுவாயிருக்கும் தன்மையிலும், வேதனை அதிகரிப்பதிலும், சூடு விருத்தியாவதிலும் திடீரென்று ஏற்றத்தாழ்வு அல்லது ஒழுங்கீனம் ஏற்படும் ; அவயவங்களில் ஆங்காங்கு ஒவ்வொரு விதமான வேதனை உண்டாவதும் மறைவதுமாயிருக்கும் ; பாதங்கள் உணர்ச்சியற்று விறைத்துப் போகும் ; ஆடுச்சதையில் கொறுக்குவலி யுண்டாகும் ; சிரமம் அதிகரிக்கும் ; தேஹத்திலுள்ள பூட்டுகள் கழன்று விலகுவதுபோல் ஆய்விடும் ; துடைகள் சுருங்கிவிடும் ; இடுப்பில் பிடிப்பும், பிருஷ்டபாகம் நசுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சியும் உண்டாகும் ; வயிறு பிழியப்படுவது போலிருக்கும் ; அஸ்திகளும், விசேஷமாக விலாப்பக்கத்து அவயவங்களும் வெட்டப்படுவதுபோல் வேதனையுண்டாகும் ; இருதயப் பிடிப்பும், மார்பு குடையப்படுவது போன்ற குத்தலும், தோள்கள் கடையப்படுவதுபோன்ற கடுப்பும், கைகள் பிளக்கப்படுவதுபோன்ற வேதனையும், முதுகின் மேற்புறத்து இருபாரிசங்களும் நசுக்கப்படுவதுபோன்ற உணர்ச்சியும் உண்டாகும்; உணவுகளை மெல்லுவதற்குத் தவடைகளில் சக்திக் குறைவு நேரிடும் ; கொட்டாவி யுண்டாகும்; காதுகளில் ஏதோ சப்தம் கேட்கும் ; கன்னங்களில் வலியுண்டாகும் ; தலைநோய் அதிகரிக்கும் ; வாய் விரஸமாக அல்லது துவர்ப்பான சுவையுடன் கூடியதாயிருக்கும் ; மலங்கள் வெளிவராமல் கட்டப்படும் ; சர்மம், வாய், கண்கள், நகங்கள், மூத்திரம், மலம்

1. உணவு பக்குவமாகிற விடத்திலும், தாதுக்கள் பக்குவமாய் விருத்தியாகவேண்டிய பாகங்களிலும் நடைபெறும் உஷ்ணத்திற்கான வேலையானது ஆமதோஷத்தினால் தடுக்கப்படவே, அவ்விடங்களிலிருந்து இயற்கையிலுண்டாகும் சூடு தேஹத்தின் மேற்புறத்துக்கு ஒருமிக்கக்கூடி வருவதாலே, தேஹத்தின் மேற்புறத்தில் சூடு அதிகரிக்கின்றது.

2. ஆமதோஷத்தினால் ஸ்வேதவஹமான ஸ்ரோதஸ்ஸுகளும் அடைபட்டு விடுகின்றன.

இவை ரூக்ஷமாகவும், சிவப்பாகவும் ஆய்விடும்; வாயில் துர்நீர் ஊறும்; அரோசகம், வேலைகளில் சிரத்தையின்மை, உணவு முதலியவை ஜீர்ணமாகாமை, வியர்வையின்மை, நித்திரையின்மை இவ்விகாரங்கள் விருத்தியாகும்; தொண்டையும், உதடுகளும் அடிக்கடி உலர்ந்துவிடும்; நாவறட்சியும், கபம் முதலியவையின்றியே வாந்தியும், இருமலும் உண்டாகும்; மனம் துன்பமுறும்; மயிர்ச் சிலிர்க்கையும், பற்களில் கூச்சமும் ஏற்படும்; உடல் நடுக்கங்கொள்ளும்; தும்மல் உண்டாகாது; தலைச்சுற்றலும், வாய்ப்பிதற்றலும், உஷ்ணத்தில் விருப்பமும் உண்டாகும்; தேஹம் நிலைத்து நிற்கமுடியாமல் சோர்ந்துபோகும்; இவையெல்லாம் வாதஜ்வரத்தின் குறிகளாகும். 10-17½.

*பித்த ஜ்வரக் குறிகள்.*

தேஹமெங்கும் கடும் வெப்பம் ஒருமிக்க வியாபிக்கும்; வாய்ப்பிதற்றல் உண்டாகும்; வாய் கடுரஸமுள்ளதாயிருக்கும்; நாசியும் வாயும் அழன்றுவிடும்; குளிர்ச்சியில் விருப்பம் உண்டாகும்; தலைச்சுற்றும்; மயக்கமும், வெறியும், ஆறுதலின்மையும் ஏற்படும்; மலம் திரவித்து விரேசநமாகும்; வாந்தியில் பித்தத் திரவம் வெளியாகும்; இரத்தம் கக்கப்படும்; வயிற்றில் புளிப்பு அதிகரிக்கும்; இரத்தக் கோளாறால் உண்டாக்கக்கூடிய சிவப்பான படைகள் ஸம்பவிக்கும்; சர்மம் முதலானவற்றில் மஞ்சள் அல்லது பச்சைநிறம் ஏற்படும்; வியர்வை விசேஷித்துண்டாகும்; ச்வாஸம் துர்க்கந்தமாயிருக்கும்; நாவறட்சி அதிகமாகும்; இவையெல்லாம் பித்த ஜ்வரத்தின் குறிகளாம். 18—20.

*கபஜ்வரக் குறிகள்.*

விசேஷமான அரோசகம், திமிர்த்துப்போதல், ஸ்ரோதஸ்ஸுகள் அடைபடுதல், ஜ்வரத்தின் வேகம் அற்பமாயிருத்தல், உமிழ்நீர் அதிகமாய் ஊறுதல், வாயில் இனிப்பான சுவையுண்டாதல், மார்பில் எண்ணெய்ப் பசை முதலியதால். பூசப்பட்டதுபோன்ற உணர்ச்சி, ச்வாஸம், பீநஸம், இருதயம் இயற்கையிலும் அதிகமாகத்துடித்தல், வாந்தி, இருமல், அங்கங்கள் ருசைவற்றுப்போதல், சர்மம் முதலியவற்றில் வெண்ணிறம் அதிகரித்தல், சைத்தியம் அதிகரிப்பதால் அங்கங்களில் கட்டிகள் உண்டாதல், சோம்பல், உதர்தம் என்னும் ஒருவித சர்மவியாதி [1] இவைகளும் கபஜ்வரத்தின் குறிகளாம் 21—22.

*ஜ்வரத்திற்கு ஏற்ற காலம், உபசயம், அநுபசயம் முதலிய பொது இலக்ஷணங்கள்.*

ஒவ்வொரு தோஷமும் பிரகோபமடைவதற்கு அநுகூலமான காலங்களில் அந்தந்த தோஷஸம்பந்தமான ஜ்வரம் உற்பத்தியாவது அல்லது விருத்தியாவது இயல்பு. ஜ்வரம் உற்பத்தியாவதற்குக் காரணங்கள் எவை கூறப்படுகின்றனவோ அவ்வித காரணங்களின் ஸம்பந்தத்தினால் வியாதிக்கு அநுபசயமும்,[2] அக்காரணங்களுக்கு எதிரிடையாயுள்ளவற்றின் ஸம்பந்தத்தினால் வியாதிக்கு உபசயமும்[3] உண்டாகும். இரண்டு மூன்று தோஷங்களுடையவும் தனித்தனிக் குறிகள் ஒரு வியாதியில் கலந்திருப்பதாகக் காணப்படுமானால் அந்த வியாதியானது, எந்தெந்த தோஷங்களுடைய இலக்ஷணங்களையும் உடையதாகக் காணப்படுகிறதோ அவ்விதமான இரண்டு அல்லது மூன்று தோஷங்களுடைய சேர்க்கையினால் அந்த வியாதி ஸம்பவித்ததாயிருக்கும். 23.

1. உதர்தம்—அதிக அரிப்பும் வீக்கமும் விரணக் குறியும் உடையதான ஒருவித படை.

2. அநுபசயம்—வியாதி உபசாந்தி அல்லது விவ்ருத்தி அடையாமை.

3. உபசயம் — வியாதி உபசாந்தி அல்லது விவ்ருத்தி அடைதல்.



*வாத-பித்த ஜ்வரத்தின் குறிகள்.*

தலைவலி, மூர்ச்சை, வாந்தி, எரித்தல், புத்தி மந்தப்படுதல், தொண்டையும் வாயும் உலர்ந்துவிடுதல், ஓரிடத்தில் நிலைத்திருக்க முடியாத ஆறுதலற்ற நிலைமை, பூட்டுக்களில் வேதனை, தூக்கமின்மை, நாவறட்சி, தலைச்சுற்றல், மயிர்ச்சிலிர்க்கை, கொட்டாவி, அதிகமாக வாய்ப்பிதற்றல் என்னும் இவையெல்லாம் வாத-பித்தங்களால் உண்டான ஜ்வரத்தின் இலக்ஷணங்களாம். 24.

*வாத-கப ஜ்வரத்தின் குறிகள்.*

ஸந்தாபக்குறைவு, அரோசகம், பூட்டுகளில் வேதனை, தலைநோய், பீநஸம், ச்வாஸம், இருமல், மலபந்தம், சைத்தியம, திமிர்ப்பு, கண்கள் இருளடைதல், தலைச்சுற்றல், சோம்பல் என்னும இக்குறிகள் யாவும வாதமும் கபமும் சேர்ந்து உண்டான ஜ்வரத்தைச் சேர்ந்தவையாம். 25.

*பித்த-கப ஜ்வரத்தின் குறிகள்.*

சைத்தியம், திமிர்ப்பு, வியர்வை, அழற்சி இவை நியமமின்றி ஸம்பவித்தல், நாவறட்சி, இருமல், கபமும் பித்தமும் வெளிப்படுதல், புத்திமயக்கம், சோம்பல், வாயின் உட்புறம் சாம்பர்ப்பூசினமாதிரியாகவும் கசப்பாகவும் இருத்தல் என்னும் இக்குறிகள் யாவும் கபமும் பித்தமும் சேர்ந்து உண்டான ஜ்வரத்தைச் சேர்ந்தவையாம். 26.

*ஸந்நிபாத ஜ்வரத்தின் குறிகள்.*

ஸர்வதோஷங்களாலும் உண்டாகும் ஜ்வரம் மூன்று தோஷங்களுடைய எல்லா இலக்ஷணங்களோடும் கூடியதாயிருக்கும். இதில் அடிக்கடியும் தாபம் மேமலெழுந்துண்டாகும்; அப்படியே சைத்தியமும் அடிக்கொருமுறை ஸம்பவிக்கும்; பகலில் தூக்கம் மிக்க அதிகமாகவும் இரவில் நித்திரையுண்டாகாமலும் இருக்கும்; அல்லது எப்பொழுதுமே தூக்கமிருக்கக்கூடும்; முற்றிலும் எப்பொழுதுமே நித்திரையில்லாமலும் போவதுண்டு. வியர்வை மிகுதியாய் உண்டாவதும் அல்லது முற்றிலும் உண்டாகாமற் போவதுமுண்டு. பாடுதல், கூற்றாடுதல், நகைத்தல் முதலிய இயற்கைக்கு விரோதமான சேஷ்டைகளைச் செய்ய முயலுதல், கண்கள் நீர்வடிந்து கலங்கி நிறத்திற் சிவந்து இடுங்கி இரெப்பை மயிர்கள் சிதைந்தவைகளாகப் போதல், காலின் ஆடுசதைகளிலும் விலாப்பக்கங்களிலும் தலையிலும் தேஹக்கணுக்களிலும் எலும்புகளிலும் வலியுண்டாதல், காதுகளில் விசேஷ சப்தமும் வலியும் ஸம்பவித்தல், தொண்டையில் ஏதோ முளைகள் உண்டாய் அவ்விடத்தைப் போர்த்திருப்பதுபோலத் தோற்றுதல், நாக்கு அதிகமாய் அழன்று ஈரப்பசையற்றிருத்தல், உடல் குருவாகவும் பூட்டுகள் தளர்ந்து ஸ்வாதீனமிழந்தவையாகவும் போதல், இரத்தம் பித்தம் கபம் இவற்றைக் கக்குதல், தலையில் அதிக வலியுண்டாய் அதை இங்குமங்கும் உருட்டியசைத்தல், கறுஞ்சிவப்புநிறமான கோடங்கள் என்கிற அதிக தினவுடன்கூடிய படையும் வெண்சிவப்பு நிறமான மண்டலம் என்னும் கனமான படையும் உண்டாதல், இருதயத்தில் வலியேற்படுதல், மலம் முற்றிலுமாவது கட்டிப்போதல், அல்லது அதிகமாய் வெளிப்படுதல், அல்லது சொற்பமாக வெளியாதல், வாய் ஸ்நிக்தமாயிருத்தல், தேஹபலம் குன்றுதல், கண்டத்வனி அடங்குதல், வாய்ப்பிதற்றல், வெகு நீடித்து தோஷங்கள் ஒருவித பரிணாமத்தை யடைதல், சோம்பல், எப்பொழுதும் கூக்குரலிடுதல் இவையெல்லாம் ஸந்நிபாத ஜ்வரத்தின் குறிகளாம்; இந்த ஸந்நிபாதத்திற்கே அபிந்யாஸம் என்றும், ஹதௌஜஸ் [1]

1. ஹதௌஜஸ்—ஓஜஸ் அழிவுற்ற வியாதியென்பொருள்.

என்றும் வேறு பெயர்களுமுண்டு. தோஷங்கள் ஆங்காங்கு கட்டப்பட்டு, ஜாடராக்னி முற்றிலும் அழிந்து, ஸகலலக்ஷணங்களோடும் கூடிய ஜ்வரமாயிருந்தால் அவ்வித ஸந்நிபாதம் அஸாத்தியமாய்விடும்; அவ்விதமில்லாமல் சில குறிகள் மட்டும் காணப்பட்டால் அது க்ருச்ச்ரஸாத்தியமாக[1] இருக்கலாம்; அல்லது சிலவேளை சிகித்ஸைக்கு வசப்படக் கூடியதாகவும் சிலஸமயம் சிகித்ஸைக்கு வசப்படாததாகவும்—இவ்வாறு விகற்பமடையும். 27—34.

ஸந்நிபாத ஜ்வரத்தில் சில விசேஷங்கள்.

மேலும் ஸந்நிபாதத்தினால் உண்டான ஜ்வரத்தில் பித்தமானது தனியாக உடலின் மேற்புறத்தில் சர்மத்தை ஆச்ரயித்து நின்றால், உடலின் மேற்புறத்தில் தாபத்தையும், அது கோஷ்டத்தைப்பற்றி[2] நின்றால் உட்புறமாகக் குடலில் தாபத்தையும் உண்டுபண்ணும். இதில், இந்த தாபமானது முதலிலேயே உண்டானாலும் உண்டாகலாம்; அல்லது பிறகாவது உண்டாகலாம்.[3] அவ்விதமே வாத-கபங்கள் சைத்தியத்தை யுண்டுபண்ணும்.[4] இவ்விரண்டில் முதலில் தாபமும் பிறகு சீதமும் உண்டாகிற ஜ்வரம் க்ருச்ச்ரஸாத்தியமாம். முதலில் குளிர்ச்சி அதிகரித்த ஸந்நிபாத ஜ்வரத்தில், கபமானது பித்தத்தினால் உருக்கவும் உலர்த்தவும்பட்டு, சைத்தியம் அல்லது குளிர் அடங்கிவிட்டால்,[1] புளிப்பான வாந்தியும், மூர்ச்சையும், வெறியும், நாவறட்சியும் உண்டாகும். முதலில் தாபம் உண்டாகும் ஸந்நிபாதத்திலோ வென்றால்[2] கடைசியில் சோம்பலும், உமிழ்நீர்க்கசிவுடன் கூடிய வாந்தியும், தேஹவாட்டமும் ஸம்பவிக்கும். 35—37.

ஆகந்து ஜ்வரங்கள் - நான்கு விதம்.

அப்பால் ஆகந்து ஜ்வரம்[3] அபிகாதத்தினாலும், அபிஷங்கத்தினாலும், சாபத்தினாலும், அபிசாரத்தினாலும்— இங்ஙனம் நான்கு விதமான காரணங்களால் உண்டாகின்றது. இவற்றுள் வலுத்த அடி தாக்குவதென்ன, உடலை அறுப்பதென்ன, எரிப்பதென்ன, களைத்துப்போவதென்ன இவை முதலானவற்றால் அபிகாத ஜ்வரம்[4] உண்டாகின்றது. இதில் வாயுவானது பெரும்பாலும் இரத்தத்தைக் கெடுத்து, வலியையும் வீக்கத்தையும் நிறமாறுபாட்டையும் இறுதியில்மிக்க வேதனையோடுகூடிய ஜ்வரத்தையும் உண்டுபண்ணும். துஷ்டக்கிரஹங்களின் ஆவேசம், சில ஔஷதங்கள், விஷம், கோபம், பயம, துய

1. க்ருச்ச்ரஸாத்தியம்—என்பதைப்பற்றிய விவரங்களை 9-வது பக்கத்தில் காண்க.

2. கோஷ்டம்—குடல்.

3. முதலில் உடலில் உஷ்ணம் அதிகரித்து, பிறகு அது கிரமமாகக் குறைந்து, அப்பால் குளிர் உண்டாவதும், அதற்கு எதிரிடையாக முதலில் குளிர் அதிகமாக உண்டாய் கிரமமாக அது குறைந்து, பிறகு உஷ்ணம் அதிகரிப்பதும் இங்கே குறிக்கப்படுகின்றன.

4. வாதமாவது, கபமாவது, அல்லது இரண்டுமாவது தனியாக சர்மத்தை ஆச்ரயித்து நின்றால் அதில் சைத்தியம் முதலில் அல்லது பிறகும் உண்டுடாகும். கோஷ்டத்தை இவ்வாத-கபங்கள் ஆச்ரயித்தவையானால் குடலிலும் அவ்விதமே சைத்தியத்தை உண்டுபண்ணும்.

1. குளிர் அடங்கிவிட்டால்—என்பதால் தாபம் அதிகரிப்பதும் குறிக்கப்படுகிறது.

2. குளிர் உண்டாவதற்கு முன் முதலில் தாபம் உண்டாவது என்று பொருள்.

3. ஆகந்துகம் என்றால்—திடீரென்று அடிமுதலியது தாக்குவதாலும் சாபம் முதலியவற்றாலும் (இவ்வித வெளிக்காரணங்களால்) ஸம்பவிக்கும் தற்செயலான ஜ்வரம்.

4. அபிகாதஜ்வரம்—அடி முதலியது தாக்குவதும் சிரமப்படுவது முதலானதும் அபிகாதம் எனப்படும்; அவ்வித அபிகாதங்களால் உண்டாவது "அபிகாத ஜ்வரம்" ஆகும்.



ரம், காமம் இவற்றின் ஸம்பந்தத்தினால் அபிஷங்கஜ்வரம்[1] உண்டாகிறது. இதில் துஷ்டக்கிரஹங்கள் ஒருவரிடம் ஆவேசித்தால் காரணமின்றியே திடீரென்று அழுவதும், திடீரென்று சிரிப்பதும் வழக்கம்; ஔஷதங்களுடைய வாஸனையை முகருவதால் உண்டாகும் ஜ்வரத்தில் மூர்ச்சை, தலைநோய், நடுக்கம், தும்மல் இவையுண்டாகும்; விஷஸம்பந்தத்தினால் மூர்ச்சையும், அதிஸாரமும், வாய் கறுத்துப்போவதும், உடலில் அழற்சியும், இருதயத்தைப்பற்றிய நோய்களும் ஸம்பவிக்கும். கோபத்தினால் உண்டாகும் அபிஷங்க ஜ்வரத்தில் உடல் நடுக்கமும், தலைவலியும் உண்டாகும். பயத்தினாலாவது சோகத்தினாலாவது ஸம்பவிக்கும் அபிஷங்க ஜ்வரத்தில வாய்ப்பிதற்றல் விசேஷமாய் உண்டாகும்; காமத்தினாலுண்டாகும் அபிஷங்க ஜ்வரத்தில் புத்திமாறாட்டம், அரோசகம், அழற்சி, வெட்கம், நித்திரையின்மை, புத்திமழுக்கம், தைரியநாசம் இவை உண்டாகும். கிரஹாபிஷங்க ஜ்வரத்திலும், ஔஷதி கந்தத்தினால் உண்டாகும் அபிஷங்க ஜ்வரத்திலும், விஷாபிஷங்க ஜ்வரத்திலும் மூன்று தோஷங்களும் பிரகோபமடையும்; பயாபிஷங்க ஜ்வரத்திலும், சோகாபிஷங்க ஜ்வரத்திலும், காமாபிஷங்க ஜ்வரத்திலும் வாதம் பிரகோபமடைகிறது; கோபாபிஷங்க ஜ்வரத்தில் வாதம் பித்தம் இரண்டும் பிரகோபிக்கும்; சாபத்தினால்[2] உண்டாகிற ஜ்வரமும், அபிசாரத்தினால்[3] உண்டாகிற ஜ்வரமும் ஸந்நிபாத ஸம்பந்தமானவை; இவ்விரண்டும் ஸஹிக்கக்கூடாத கொடிய ஜ்வரங்களாகக் கருதப்படுகின்றன. அபிசார ஜ்வரத்தில் அடியில் வருவது ஸம்ப்ராப்தியாகும்:—அபிசாரக்கிரியைக்கு ஸம்பந்தமான மந்திரங்களால், ஒருமனிதனைக் குறிப்பிட்டு ஹோமம் செய்யப்படுகையில், குறிப்பிட்ட அம்மனிதனுக்கு முதலில் மனம் தாபமுற்று வருந்தும்; பிறகு தேஹத்தில் தாபம் உண்டாகும்; அதன் பிறகு கொப்புளங்களும், நாவறட்சியும், தலைச்சுற்றலும், அழற்சியும், மூர்ச்சையும் உண்டாய், ஜ்வரமும் பிரதிதினமும் அதிகமாய் வரும். 38—45

சாரீர-மானஸிகாதி பேதங்களால் ஜ்வரம் இரண்டு இரண்டு வகைப்படும்.

மேற்கூறியவைகளால் ஜ்வரம் எட்டுவிதமென்று[1] அறியப்படும். ஆனால் அந்த ஜ்வரங்களை இரண்டிரண்டு விதமாகச் சுருக்கமாகவும் பிரிக்கலாம். அவையாவன:—சாரீர ஜ்வரம் மானஸிகஜ்வரம் என்றும்,[2] ஸௌம்யஜ்வரம் தீக்ஷ்ணஜ்வரம் என்றும்,[3] ஆந்தரஜ்வரம் பாஹ்யஜ்வரம் என்றும்,[4] பிராக்ருதஜ்வரம் வைக்ருதஜ்வரம் என்றும்,[5] ஸாத்யஜ்வரம் அஸா

1. அபிஷங்கஜ்வரம்—கோபம், துஷ்டக்கிரஹம் முதலியவற்றால் மனம் தாக்கப்படுவது அபிஷங்கமாகும்; இக்காரணங்களால் உண்டாவது அபிஷங்க ஜ்வரமாம்.

2. சாபஜ்வரம்—ருஷிகள், ஆசாரியர்கள், தேவதைகள் முதலியவர்களால் இடப்படும் சாபத்தினால் உண்டாகும் ஜ்வரம்.

3. அபிசாரம் என்பது சூன்னியமிடுதல் என்று வழங்கப்படும் கிரியை; அவ்வித கிரியைகளால் உண்டாகும் ஜ்வரத்திற்கு அபிசாரஜ்வரம் எனப்பெயர்.

1. வாதஜ்வரம், பித்தஜ்வரம், கபஜ்வரம், வாதபித்தஜ்வரம், வாத கபஜ்வரம், பித்த கபஜ்வரம், ஸந்நிபாதஜ்வரம், ஆகந்துகஜ்வரம் என்று ஜ்வரம் எட்டுவிதம்.

2. சரீரத்தைப்பற்றியது சாரீரம், மனதைப்பற்றியது மானஸிகம் என்று வழங்கப்படும்.

3. ஸௌம்யம்—குளிர் அதிகரித்தது, தீக்ஷ்ணம்—கடுமையான உஷ்ண முண்டுபண்ணுவது.

4. ஆந்தரம்—உட்புறத்தைப்பற்றியது, பாஹ்யம்—வெளிப்புறத்தைப்பற்றியது.

5. பிராக்ருதம்—இயற்கையில் ஏற்பட்டது, வைக்ருதம்—இயற்கையன்றியில் வேறு விகாரங்களால் உண்டாவது.

த்யஜ்வரம் என்றும்,[1] ஸாமஜ்வரம் நிராமஜ்வரம் என்றும்[2] வழங்கப்படும். சாரீர ஜ்வரத்தில் முதலில் தேஹத்திலும், அப்பால் மனதிலும் தாபம் உண்டாகும்; மானஸிக ஜ்வரத்தில் முதலில் மனதிலும் பிறகு சரீரத்திலும் தாபம் உண்டாகும். வாயுவானது யோகவாஹியென்னும் சக்தியை[3] உடையதாகையால், அது கபத்துடன் கூடும்போது சைத்தியத்தை விருத்தி செய்து, ஸௌம்ய ஜ்வரத்தை உண்டுபண்ணும்; அவ்விதமே அது பித்தத்துடன் கூடினால் உஷ்ணத்தை விருத்திசெய்து தீக்ஷ்ணஜ்வரத்தை உண்டுபண்ணும். தோஷங்கள் ஒன்றோடொன்று மிச்ரமாகப்போனால், அவை மிச்ர ஜ்வரத்தை யுண்டுபண்ணும்.[4] ஆந்தர ஜ்வரத்தில் தாபம் உட்புறத்து அவயவங்களை ஆச்ரயித்து உண்டாவதோடு, ஜ்வரஸம்பந்தமான விகாரங்கள் அதிகரித்து, உட்புறத்தில் குழப்பமும், மலபந்தமும் உண்டாகும். பாஹ்ய ஜ்வரத்தில் வெளிப்புறத்திலேயே தாபமும் ஜ்வரஸம்பந்தமான மற்ற விகாரங்களும் உண்டாகும்; ஜ்வரமும் எளிதில் சிகித்ஸிக்கக்கூடியதாம். வர்ஷ ருதுவில் வாத தோஷத்தினாலும், சரத் ருதுவில் பித்தத்தினாலும், வஸந்த ருதுவில் கபத்தினாலும் பிராக்ருத ஜ்வரங்கள் உண்டாகும்; இதர ருதுக்களில் இத்தோஷங்களால் உண்டாகுமவை வைக்ருத ஜ்வரங்கள் எனப்படும்; வைக்ருத ஜ்வரமானது கிருச்சிர ஸாத்தியமாகும்;[1] வாதத்தினால் உண்டாகிற பிராக்ருத ஜ்வரமும் பெரும்பாலும் கிருச்சிர ஸாத்தியமாயிருக்கும். வர்ஷா காலத்தில் வாயுவானது கோளாறடைந்து பித்த கபங்களோடும் கூடிக்கொண்டு ஜ்வரத்தை உண்டுபண்ணும். சரத் ருதுவில் பித்தம் விகாரமடைந்து, ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; அந்த பித்தத்திற்குத் தூண்டுதலாக கபமும் ஸஹாயம் செய்யும்; அவ்வர்ஷ ருது சரத் ருதுக்களில் முறையே வாத-பித்தங்கள் கோளாறடைவது இயற்கையானதாலும், அவை விஸர்க்ககாலமாயிருப்பதாலும், அவற்றில் உபவாஸமிருப்பதால் பிணியாளிக்கு யாதொரு தீங்கும் நேரிடுவதில்லை. வஸந்தருதுவில் கபம் விகாரமடைந்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; அதற்கு அநுஸரணையாக வாதமும் பித்தமும் பிறகு அந்த ஜ்வரத்தை விருத்திபண்ணும். நல்ல பலசாலிகளுக்கு உண்டாகும் ஜ்வரமும், சொற்ப தோஷங்களால் உண்டாகும் ஜ்வரமும்; உபத்திரவங்களைப் பெறாத[2] ஜ்வரமும் ஸுகஸாத்தியமாகும். அஸாத்தியம் எனப்படும் ஜ்வரத்தின் தன்மை முன்னால் விக்ருதி விஞ்ஞானீயாத்தி

1. ஸாத்தியம் — சிகித்ஸைக்கு வசப்படக்கூடியது, அஸாத்தியம்—சிகித்ஸைக்கு வசப்படாதது.

2. ஸாமஜ்வரம் — ஆமதோஷத்துடன் கூடியது, நிராமஜ்வரம் ஆமதோஷமற்றது. [ஆமதோஷம் என்பதைப்பற்றி 75-வது பக்கம் "ஆமவிஷம்" என்னும் தலையங்கத்தைப் பார்க்க.]

3. யோகவாஹி—ஒருதாது அல்லது தோஷம் மற்றொரு தாதுவோடு அல்லது தோஷத்தோடு சேர்ந்தாலும், மற்ற தாதுக்களுடைய அல்லது தோஷங்களுடைய குணங்களைப் பெற்று அவ்வித காரியங்களைச் செய்வது.

4. பல தோஷங்கள் அல்லது ஸௌம்ய தீக்ஷ்ணாதி குணங்களைப் பெற்ற த்ருதீயகாதி ஜ்வர விசேஷங்களின் தன்மை குறிக்கப்படுகின்றது.

1. விக்ருதி விஞ்ஞானீயாத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் விதமாய் வர்ஷாகாலத்திலும் பிராக்ருத ஜ்வரம் கூட அஸாத்தியமாகவே ஆகுமல்லவா? இங்கு கூறப்பட்ட விஷயம் விக்ருதி விஞ்ஞானீயத்தில் கூறியுள்ளதற்கு விரோதமா யிருப்பதாகத் தோற்றும்; ஆனால் அது அப்படியல்ல. இங்கே கூறப்படும் விஷயம் ஸாமாந்ய விதியாகும்; விக்ருதிவிஞ்ஞானீயத்து விஷயம் விசேஷ விதியாகும்; இவ்விஷயத்தையே திடப்படுத்துவதற்காக அடுத்த பத்தியத்தில், விக்ருதி விஞ்ஞானீயாத்தியாயத்தில் கூறப்பட்ட அஸாத்திய விஷயமும் குறிக்கப்படுகிறது.

2. உபத்திரவம்—இதன் விவரத்தைப்பற்றி 8-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.



யாயத்தில்[1] கூறப்பட்டிருக்கிறது. ஆமஜ்வரத்தில் அந்த ஜ்வரத்திற்கு உபத்திரவங்களும், தீக்ஷ்ணத்தன்மையும், தேஹத்தில் வாட்டமின்மையும், மூத்திரம் அதிகமாகச் சுரப்பதும், மலம் பக்குவமாகாமல் அல்லது வெளிவர முடியாமல் இருத்தலும், பசியின்மையும் ஸம்பவிக்கும். ஜ்வரத்தில் தோஷங்கள் பக்குவநிலைமையடைந்து வரும்போது, ஜ்வரத்தின்வேகம் விருத்தியடைந்து நாவறட்சியும், வாய்பிதற்றலும், ச்வாஸமும், தலைச்சுற்றலும், மலம் வெளியாவதும், வாய்க்குமட்டலும் உண்டாகும். ஜ்வரம் உண்டான நாள் முதல் ஏழுநாட்கள் வரையில் இலங்கநம் செய்வதால்,[2] ஆமஜ்வரத்திற்குக் கூறிய இலக்ஷணங்களுக்கு நேர் எதிரிடையான குறிகள் உண்டாகக் காணலாம்; இதுவே நிராமஜ்வரத்தின் நிலைமையாகையால்[3] பக்வாவஸ்த்தை யடைந்த ஜ்வரம் என்று வழங்கப்படும். 46—55½.

ஐந்துவித ஜ்வரங்கள்.

ஸந்ததம், ஸததம் அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சாதுர்த்திகம் என்று வேறு ஐந்து விதமான ஜ்வரங்களும் வழங்கப்படுவதுண்டு. தோஷங்களுடையவும் காலங்களுடையவும் பலாபலங்களை அநுஸரித்து இந்த ஜ்வரங்கள் உண்டாகின்றன.[1] இந்த ஐந்து ஜ்வரங்களும் பெரும்பாலும் ஸந்நிபாதத்தினால் ஸம்பவிக்கின்றன.[2] ஆனால் ஒவ்வொரு ஜ்வரத்திலும் எந்த தோஷம் அதிகரித்திருக்குமோ அந்த தோஷத்தின் பெயரைக்கொண்டே அந்த ஜ்வரம் விவஹரிக்கப்படும்.[3] 56, 57.

ஸந்தத ஜ்வரம்.

தாதுக்களின் போஷணைக்கு அவசியமான திரவங்களும், மூத்திரமும், மலமும் செல்லுவதற்கான ஸ்ரோதஸ்ஸுகளில் வியாபித்துள்ள வாத பித்த கபங்கள், அவற்றிற்குத் துல்லியமான தாதுக்கள் முதலானவைகளால்[4] விருத்தி

1. ஜ்வரத்தின் அஸாத்தியக் குறிகள் விக்ருதி விஞ்ஞானீயாத்தியாயத்தில் (2?6-வது பக்கம்) 'வியாதிகளைப் பற்றிய ரிஷ்டங்கள்' என்கிற தலையங்கத்தின்கீழ் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. இலங்கநம்—இதனால் உபவாஸம் மாத்திரம் குறிக்கப்படவில்லை; ஆனால் ஆமதோஷ பரிஹாரத்தின்பொருட்டு செய்யப்படும் கர்ஷண சிகித்ஸையும் குறிக்கப்படுகிறது.

3. நிராமஜ்வரம்—ஆமதோஷம் நீங்கி, சிகித்ஸைக்கு அநுகூலமான நிலைமையை அடைந்த ஜ்வரம். [சொற்ப தோஷங்களை ஆதாரமாகக்கொண்டு உண்டாகும் ஸாதாரண ஜ்வரங்களுக்கு இலங்கநத்தினால் ஏழு நாட்களில் நிராமாவஸ்த்தை உண்டாவதாகக் கூறப்படுகிறதென்பதும், பலமான காரணங்களால் உண்டாகும் ஸந்நிபாத ஜ்வரம் முதலிய இதர ஜ்வரங்கள் அவ்வளவு சீக்கிரத்தில் நிராமாவஸ்த்தையை அடையாமல் இரண்டு மூன்று வாரங்களுக்குமேல் நிராமாவஸ்த்தையை அடையக்கூடும் என்று இனி அநேகவிடங்களில் கூறப்படும் என்பதும் கவனிக்கத் தகுந்தது.]

1. பூமியில் ஏற்ற காலத்தில் சிறந்த விதைகளைப் போட்டால், அவை நன்றாக முளைத்து விருத்தியாவது போலவே, தேஹத்தில் அந்தந்த காலக்கிரமத்தை அநுஸரித்து, பலமான தோஷங்களால் அல்லது துர்ப்பலமான தோஷங்களால் ஜ்வரம் உண்டாகும்; ஆகையினால் தோஷாதிகளின் பலாபலங்களுக்கு ஏற்றவாறு ஸந்ததம், ஸததம் முதலிய ஜ்வரங்கள் ஸம்பவிக்கின்றன என்று அறிக.

2. பெரும்பாலும் என்றதால், இரண்டு அல்லது ஒரு தோஷத்தினாலும் இந்த ஜ்வரங்கள் உண்டாகலாம் என்பது கருத்து; மேலும் இவற்றுள் ஸந்ததமும், சாதுர்த்திகமும் ஸந்நிபாதத்தினாலேயே உண்டாகின்றன. ஸந்நிபாதத்திலும் தோஷப்ரகோபங்களில் தாரதம்யமுண்டு.

3. ஸந்நிபாதத்தில் மூன்று தோஷங்களும் பிரகோபமடைந்திருக்கையில், அந்த நிலைமையிலும் தாரதம்யமிருக்கக் கூடுமாகையால், அவற்றுள் எந்த தோஷம் எல்லாவற்றினும் மேலாக அதிகமாகப் பிரகோபித்திருக்குமோ, அத்தோஷத்தைக்கொண்டே அந்த வியாதியும் விவஹரிக்கப்படும்; அதாவது வாதாதிக ஸந்நிபாதம், பித்தாதிக ஸந்நிபாதம், கபாதிக ஸந்நிபாதம் என்றவாறு கூறப்படும்.

4. வாதத்திற்குத் துல்லியமான தாது அஸ்த்தி முதலியது; பித்தத்திற்குத் துல்லியமானது இரத்தம் முதலியது; கபத்திற்குத் துல்லியமானது மேதஸ் முதலியது.

செய்யப்பட்டு, முழுபலத்தையும்பெற்று, குருகுணமடைந்து, விறைத்துப்போய், முக்கியமாக இரஸதாதுவை மட்டும் ஆச்ரயித்தவைகளாய்,[1] உடலெங்கும் தாபத்தைப் பரவச்செய்து, தட்டுத்தடை யில்லாதவைகளாய் மிகவும் ஸஹிக்கக்கூடாத ஸந்தத ஜ்வரத்தை[2] உண்டுபண்ணுகின்றன. அந்த ஜ்வரத்தின் கடும் வெப்பமானது மலத்தை சீக்கிரத்தில் அழித்து, அப்பால் தாதுக்களையும் அவ்விதமே சிதைவுறச் செய்யும். அக்காரணத்தினாலேயே,[3] வாத-பித்த-கபங்களை ஒருமிக்க ஆதாரமாகக்கொண்டு ஸம்பூர்ண லக்ஷணங்களுள்ளதாய் ஸம்பவித்த ஸந்தத ஜ்வரமானது இரஸாதி தாதுக்களையும் மலத்தையும் முற்றிலும் சுத்தம் செய்வதாலும்,[4] அசுத்தமாக்குவதாலும் முறையே ஏழு நாட்கள் வரையிலுமோ, பத்து நாட்கள் வரையிலுமோ, பன்னிரண்டு நாட்கள் வரையிலுமோ நீடித்திருந்து[1] நிவ்ருத்தியாகக்கூடும், அல்லது மரணத்தையாவது உண்டுபண்ணும். இது அக்னிவேசருடைய கொள்கை.[2] ஹாரீதருடைய கொள்கை பின்வருமாறு: ஸந்நிபாத ஸம்பந்தமான ஜ்வரத்தில் வாத-பித்த-கபங்களால் முறையே ஏழு நாட்களிலும், பதினெட்டு நாட்களிலும், இருபத்தினான்கு நாட்களிலும் ஜ்வர நிவ்ருத்தியாவது மரணமாவது ஸம்பவிக்கும். இது மூன்று தோஷங்களுக்கும் வரையறுக்கப்பட்ட கால நியமம். இரஸாதி தாதுக்களையும் மலத்தையும் மாற்றி மாற்றி சுத்திசெய்தும் அசுத்த நிலைமையில் இருக்கச்செய்தும் வருவதால், ஜ்வரமானது முன் வரையறுத்ததைவிட இன்னும் நீண்டகாலமளவும் அநுஸரித்து தேஹத்திற் பற்றியிருக்கக்கூடும். 58—63.

விஷம ஜ்வரம்.

மெலிந்துபோன தேஹமுள்ளவர்களுக்கும், வியாதியிலிருந்து அப்பொழுதே நிவ்ருத்தியானவர்களுக்கும், மித்தியாஹாரங்களையும் மித்தியா விஹாரங்களையும்[3] ஸேவிப்பவர்களுக்

1. குருகுணமும், விறைத்துப்போவதும், இரஸதாதுவை முக்கியமாய் ஆச்ரயித்திருப்பதும் ஜ்வரத்திற்குள்ள ஆமதோஷத்தினால் என்றறிக.

2. ஸந்தத ஜ்வரம் என்றால் விடாமல் தொடர்ந்து வருந்தச்செய்யும் ஜ்வரம்.

3. ஜ்வர வேகத்தினால் மல மூத்திராதிகள் தகுந்தவாறு விபாக முறைப்படி பிரிந்து விடாமலோ, அல்லது தாதுக்களோடு தாதுவாய் லீனமாகவோ இருக்குமாகையால் அந்த நிலைமையே மலத்திற்கு அழிவு என்று குறிப்பிடப்பட்டதாகும். தாதுக்களோ வென்றால் உஷ்ணவேகத்தில் ஆதியிலும், ஸந்நிபாதத்தின் இயற்கைப்படி உணவு ஏற்றுக்கொள்ள முடியாமையால் போஷணையின்மையினால் பிறகும் ஸந்ததஜ்வரத்தில் க்ஷயமடைந்து விடுவது இயல்பு.

4. உஷ்ண வேகத்தினால் தாது முதலியவை எரிக்கப்படுவதால் உண்டாகும் நிலைமை சுத்தியென்றும், அவ்விதம் எரிக்கப்படாமல் ஆமாவஸ்த்தையிலிருப்பது அசுத்தியென்றும் ஸம்ஸ்கிருத வியாக்யானங்களில் ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது; ஆனால் உண்மையில் விஷயம் அதுவல்ல; ஸந்தத ஜ்வரத்தின் தன்மைக்குத்தகுந்த பாசக சிகித்ஸையினால் அல்லது இலங்கந சிகித்ஸையினால் செய்யப்படும் சோதனமானது சுத்தியென்றும், அவ்விதம் செய்யாமல் ஆமதோஷம் விருத்தியாகும்படி விட்டுவிடுவது அசுத்தியென்றும் கருதப்படுவதாக நமது அபிப்பிராயம். மேலும் "முறையே" என்கிற வார்த்தையை இதற்கும் ஸம்பந்தித்துக் கொண்டு, சுத்தியினால் ஜ்வரநிவ்ருத்தியும், அசுத்தியினால் மரணமும் உண்டாகும் என்று பொருள் கூறுவதும் பொருத்தமா யிருக்கும்.

1. வாதாதிக ஸந்நிபாதத்திற்கு ஏழு நாட்களும், பித்தாதிக ஸந்நிபாதத்திற்கு பத்துநாட்களும், கபாதிக் ஸந்நிபாதத்திற்குப் பன்னிரண்டு நாட்களும் முறையே காலவரையறையாகும்.

2. அக்னிவேசர்—சரக ஸம்ஹிதையின் ஆசிரியரான இருஷி; அக்னிவேசருடைய நூல் சரகரால் திருத்தியமைக்கப்பட்டதால் அதற்கு சரக ஸம்ஹிதையெனப் பெயர் வந்துவிட்டது.

3. ஆஹாரங்களின் மித்தியாயோகமும், விஹாரங்களின் மித்தியாயோகமும் இதனால் குறிக்கப்படுகின்றன. மித்தியா சாரங்களைப்பற்றி ஸூத்திர-நான்காம் அத்தியாயத்தையும், மித்தியாஹாரங்களைப்பற்றி ஸூத்திர-ஆறும் அத்தியாயத்தையும் பார்க்கவும்; மித்தியாயோகம் என்பதைப்பற்றிய விவரங்களை 104-வது பக்கம் பார்க்க; விஹாரம என்பதை ஆசாரம் என்றும் கூறலாம்.



கும் ஜ்வரத்திற்குக் காரணமான தோஷமானது சொற்பமாயிருந்தபோதிலும், தூஷ்யம் முதலியவற்றில்[1] ஏதேனும் ஒன்றினிடமிருந்து[2] வேண்டிய பலத்தைப் பெற்று, தனக்கு எதிரிடையான குணங்களுள்ள தாது முதலியவற்றோடு கூடி,[3] க்ஷயத்தையும் விருத்தியையும் மாறிமாறி அடைந்து விஷமஜ்வரத்தை உண்டுபண்ணும்.[4] முற்கூறிய நிலைமையிலுள்ளவர்களுடைய தேஹத்தில் தோஷமானது, அதன் அபிவிருத்திக்கு அநுகூலமான காலத்தில் பலம் பெற்று ஜ்வரத்தை யுண்டுபண்ணி, அதற்கு எதிரிடையான குணமுள்ள தாது முதலியவற்றின் பலத்தினால் தாக்கப்பட்டு துர்ப்பலமடைந்து, மீண்டும் வியாதி யுண்டுபண்ணுவதிலிருந்து திரும்பிவிடுகின்றது.[5] தோஷமானது மிகவும் குறைந்த நிலைமைக்கு வந்திருக்கும்போது, ஜ்வரமானது இரஸாதி தாதுக்களிலேயே மறைந்திருக்கும்; அவ்விதம் ஜ்வரம் ஸூக்ஷ்மமான நிலைமையில் மறைந்திருப்பதாலே அந்த ஜ்வரம் உடலுக்கு இளைப்பையும், நிறமாறுபாட்டையும், திமிர்ப்பையும் உண்டுபண்ணிவரும். இரஸம் ஓடுவதற்கான ஸ்ரோதஸ்ஸுகள் ஸமீபத்திலிருப்பதாலும், அவற்றின் முகத்வாரங்கள் விசாலமாகத் திறந்திருக்குமாகையாலும் தேஹத்தில் எல்லாவிடத்திலும் தோஷம் விரைவில் வியாபிக்கும்; அதனால் "ஸந்த ஜ்வரம்" உண்டாகும். அப்படிக்கின்றி நேர் எதிரிடையாக ஸ்ரோதஸ்ஸுகள் குறுகிய முகங்களையுடையவைகளாய் தூரத்திலும் இருந்தால், அப்பொழுது தோஷம் மெதுவாகவும் காலதாமதத்தோடும் பரவுமாகையால், அந்த நிலைமையில் ஸததஜ்வரம் உண்டாகும். தேஹத்தில் பரவி ஆரம்பிப்பதிலும், காரியத்திலும், காலத்திலும் ஒரே நிலைமையைப் பெறாமல் விஷமமாயிருந்து, பற்றற ஒழியாமல் நீடித்து ஜ்வரம் உண்டாவதால் பொதுவில் விஷமஜ்வரம் என்று இவை வழங்கப்படும்.[1] 64—68½.

1. தூஷ்யம் என்றால் தாதுக்களுக்குப் பெயர். இதைப்பற்றி 4-வது பக்கம் "ஸப்த தாதுக்கள்" என்பதைப் பார்க்கவும்.

2. ஏதேனும் ஒன்றினிடமிருந்து என்று லக்ஷணையாகக் கூறப்பட்டது; இரண்டு மூன்று அல்லது அதிகமான தாதுக்களிடமிருந்தும் தோஷம் பலம்பெறலாம்.

3. வாதத்திற்கு எதிரிடையான குணமுள்ளது மேதஸ் முதலியது; பித்தத்திற்கு எதிரிடையானவை இரஸம் மேதஸ் முதலியன; கபத்திற்கு எதிரிடையானது அஸ்தி முதலியது.

4. தோஷம், தனக்கு ஸமான குணமுள்ளவைகளோடு சேருவதால் அப்பொழுது விருத்தியையும், எதிரிடையான குணமுள்ளவைகளோடு சேருவதால் க்ஷயத்தையும் மாறி மாறி அடைகிறது; இவ்வாறு தோஷம் மாறி மாறி விருத்தி க்ஷயங்களை அடிக்கடி அடைவதால், ஜ்வரம் ஏற்றக்குறைவான நிலைமைகளைப் பெற்று 'விஷமஜ்வரம்' என்று வழங்கப்படுவதாயிற்று.

5. எப்பொழுது தோஷமானது தனக்கு ஸமான குணமுள்ள தாது முதலியவற்றின் பலத்தைப் பெறுகின்றதோ அப்பொழுது ஜ்வரம் மேலோங்கிக் கிளம்பும்; எப்பொழுது தோஷத்திற்கு எதிரிடையான குணங்கள் விருத்தியாகின்றனவோ, அப்பொழுது ஜ்வரம் குறைந்துவிடும் என்பது இதனால் விளங்கக் கூறப்பட்டது.

1. விஷமம் என்றால் ஸமமல்லாதது, அதாவது ஒழுங்கற்றது எனப் பொருள். இவ்விஷமத் தன்மை மூன்று வகைப்படும்; ஆரம்பவிஷமம், க்ரியாவிஷமம், காலவிஷமம் என்பனவாம். (1) ஆரம்பவிஷமம் என்றால் தேஹத்தில் ஆச்ரயம் பெற்று உண்டாவதில் விஷமம்; உதாரணம்: முதலில் ஜ்வரம் சிரஸ்ஸில் உண்டாகும், அதே ஜ்வரம் கீழ் உடம்புகளில் உண்டாய் கிரமமாக மேலே பரவும் (2) க்ரியையில் விஷமமாயுண்டாதல்: முதலில் சைத்தியமுண்டுபண்ணி, பிறகு தாபத்தையுண்டாக்குதல்; முதலில் தாபமும் பிறகு சைத்தியமும் ஏற்படுதல். (3) காலஸம்பந்தமான விஷமம்: ஜ்வரம் முதலில் காலையில் உண்டாகலாம்; அதே ஜ்வரம் பிறகு பகலில் ஸம்பவிக்கலாம்; அப்பால் அது மாலையிலோ இரவிலோ உண்டாகலாம். இந்தவிதமான ஜ்வரங்கள் ஒருமுறை கீழிறங்கிய பிறகு ஜ்வரம் முற்றிலும் விட்டுவிட்டதென்று நிச்சயிக்கமுடியாது; பிறகு முற்கூறிய கிரமத்தில் அடிக்கடியும் தோஷம் பலத்தைப் பெறும்போதெல்லாம் ஜ்வரம் தொடரும்.

**ஸததஜ்வரம்.**

ஜ்வரத்திற்குக் காரணமான தோஷம், இரத்தத்தைப்பற்றியதாயிருந்தால், அது பெரும்பாலும்[1] ஸதத ஜ்வரத்தை[2] உண்டுபண்ணும். ஸததஜ்வரமானது இராப்பகல்கொண்ட ஒரு தினத்தில் இரண்டுமுறை உண்டாகும். 69¼.

**அந்யேத்யுஷ்க ஜ்வரம்.**

தோஷமானது, மாம்ஸ ஸம்பந்தமான ஸ்ரோதஸ்ஸுகளை ஆச்ரயித்திருந்தால், பெரும்பாலும் அந்யேத்யுஷ்கம் என்கிற ஜ்வரம்[3] ஸம்பவிக்கும். இந்த ஜ்வரம் ஒரு தினத்தில் ஒரே முறை உண்டாகக்கூடியது. 69½.

**த்ருதீயக ஜ்வரம்.**

தோஷம், மேதஸ் என்கிற தாதுவையே பெரும்பாலும் ஆச்ரயித்து த்ருதீயகம் என்கிற ஜ்வரத்தை[4] உண்டாக்கும். இந்த ஜ்வரம் எந்த தினத்தில் உண்டாகிறதோ, அதற்கு மறு தினம் இல்லாமல் மூன்றுவது நாள் மீண்டும் உண்டாகும். (1) இது வாத-பித்தங்களால் உண்டானதாயிருந்தால் முதலில் தலையில் வேதனையையும் வேகத்தையும் காட்டும்; (2) அதுவே பித்த-கபங்களால் உண்டாகுமானால் பிடர் என்னும் கழுத்துக்குக்கீழுள்ள பாகத்தில் வேதனையையும் வேகத்தையும் உண்டு பண்ணிக்கொண்டு ஆரம்பிக்கும்; (3) அதுவே வாத-கபங்களால் ஸம்பவிக்குமானால் பிருஷ்ட பாகத்தைப் பற்றிக்கொண்டு உண்டாகும். த்ருதீயகஜ்வரத்தில் இவ்விதம் மூன்று வகைகள் உண்டு. 70—71.

**சதுர்த்தக ஜ்வரம்.**

தோஷமானது பெரும்பாலும் மேதஸ், அஸ்த்தி, மஜ்ஜை என்கிற மூன்று தாதுக்களில் எதையாவது ஆச்ரயித்து சதுர்த்தகம் என்கிற ஜ்வரத்தை[1] உண்டுபண்ணும். மஜ்ஜையையே ஆதாரமாகக்கொண்டு இந்த ஜ்வரம் உண்டாகும் என்று வேறு சிலரது கொள்கை. வாயுவைப் பிரதானமாகப் பெற்ற சதுர்த்தக ஜ்வரம் சிரஸ்ஸை முதலில் பற்றிக்கொண்டு ஆரம்பிக்கும்; கபத்தைப் பிரதானமாகப் பெற்றிருந்தால் கால்களில் முதலில் வேதனை முதலியதை யுண்டுபண்ணிக்கொண்டு ஆரம்பிக்கும்; இவ்வாறு சதுர்த்தகஜ்வரம் இரண்டு வகையான பிரபாவத்தைக் காட்டக் கூடியதாம். 72, 72½.

**சதுர்த்தக விபர்யய ஜ்வரம்.**

ஜ்வரத்திற்குக் காரணமான தோஷமானது, அஸ்த்தியையும் மஜ்ஜையையும் ஆச்ரயித்து சதுர்த்தகவிபர்யயம்[2] என்கிற ஜ்வரத்தை உண்டுபண்ணும்; அது வாத-பித்த-கபங்களால் தனித்தனியே உண்டாகக் கூடுமாகையால் மூன்றுவிதமாகும்.[1] இதில் ரோகிக்கு இரண்டு நாட்கள் அடுத்து ஜ்வரம் விடாமல் அடித்து, அப்பால் ஒரு நாள் தணிந்து, மறுபடியும் இரண்டுநாள் அவ்விதமே அடுத்து ஜ்வரம் உண்டாய்வரும். 73½.

1. பெரும்பாலும் என்பதால், விஷமஜ்வரங்கள் எல்லாத்தாதுக்களையும் ஆச்ரயித்து உண்டாகக்கூடுமென்றும், ஆனால் ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு தாதுவை விசேஷமாகப் பற்றியுண்டாவது வழக்கமென்றும் குறிக்கப்படுகிறது.

2. ஸததஜ்வரம்—ஒரு தினத்தில் பெரும்பான்மையான ஸமயங்களிலும் தொடர்ந்திருப்பதால் இப்பெயர் வந்தது.

3. அந்யேத்யுஷ்கம்—ஜ்வரம் ஒருநாள் வந்து, அன்றையதினமே விட்டுப்போய் மீண்டும் மறுநாள் வருவதால் இப்பெயர் இடப்பட்டது.

4. த்ருதீயகம்—முதல்நாள் ஜ்வரம் உண்டாய், அன்றையதினம் குறைந்து, மறுநாள் ஜ்வரமே இல்லாமல், மறுபடியும் மூன்றுவதுநாள் (அதாவது ஒன்று விட்டு ஒருநாள்) உண்டாவதால் த்ருதீயகம் எனப் பெயரிடப்பட்டது.

1. சதுர்த்தகம் — நான்காவது நாள் உண்டாகிற ஜ்வரம் எனப் பொருள்; ஜ்வரம் என்றையதினம் வந்ததோ அன்றையதினம் விட்டுப்போய், நடுவில் இரண்டு நாட்களிலும் ஜ்வரமேயில்லாமல் நான்காவது நாள் உண்டாகிற ஜ்வரம்.

2. சதுர்த்தக விபர்யம்—சதுர்த்தக ஜ்வரத்திற்கு எதிரிடையாக உண்டாகும் ஜ்வரம் எனப் பொருள்.



**விஷமஜ்வராதிகளில் கால வேற்றுமைகளுக்கு வேறு சில முகாந்தரங்கள்.**

தோஷங்களுக்கு ஆஹார ஆசாரங்களால் ஏற்படும் பலா பலங்களாலும், மனதின் பலாபலங்களாலும், ஜன்மாந்தரத்து வினையின் பலாபலங்களாலும் ஜ்வரமானது அப்போதைக்கப்போது உண்டாகின்றது. அல்லது-தோஷங்களுடையவும், தாதுக்களுடையவும், ருதுக்களுடையவும், இராப்பகல்களுடையவும் பலத்தை அநுஸரித்தும், மனதினுடையவும், அதன் விஷயங்களினுடையவும் பலத்தை அநுஸரித்தும் ஜ்வரமானது ஒவ்வொரு ஸமயத்தில் ஸம்பவிக்கின்றது.[1] 74—75½.

**ஜ்வரம் விடும்போது உண்டாகும் குறிகள்.**

தோஷமானது, தாதுக்களுக்கு க்ஷோபத்தையுண்டுபண்ணி, பிறகு ஜ்வரம் விடுகிற ஸமயத்தில் மறைந்து விடுகின்றது. அதன் பிறகு பிணியாளி பெருமூச்செறிந்துகொண்டு, வியர்த்து, ஒருவாறு கூக்குரலிட்டு, வாந்தியும் செய்வான்; ஓரிடத்தில் இருக்க முடியாதவனாய் புரண்டலைவான்; நடுங்குவான்; வாயால் பிதற்றுவான்; உஷ்ண வேகத்தினாலும் சைத்தியத்தினாலும் ஒளி மழுங்கியவனாய் விடுவான். ஜ்வர வேகத்தினால் பிடிக்கப்பட்டவனாய், சோர்வுற்று, ஞாபக சக்தி யிழந்து, கடுஞ்சினங் கொண்டவனைப் போல் காணப்படுவான். வேகமாகவும் சப்தத்தோடும் திரவமாக சீதம் எனப்படும் ஆமத்துடன் கூடியதாக மலவிஸர்க்கம் செய்வான். 76—78.

**ஜ்வரம் முற்றிலும் நிவ்ருத்தியானதன் குறிகள்.**

தேஹம் இலகுவாயிருத்தல், சிரமமும் மூர்ச்சையும் தாபமும் நீங்குதல், வாயில் அழற்சி யுண்டாதல், இந்திரியங்கள் நிர்மலமாய் அதனதன் வேலையில் திறமையுள்ளதாதல், வேதனையெல்லாம் ஒழிதல், வியர்வை விடுதல், மனது இயற்கை நிலைமையடைதல், உணவில் விருப்பமுண்டாதல், தலையில் தினவு ஏற்படுதல் என்னும் இவை ஜ்வரம் முற்றிலும் நிவ்ருத்தியானதன் அறிகுறிகளாம். 79.

2. அஷ்டாங்க ஸங்கிரஹத்திலும் மாதவநிதானம் முதலிய வேறு சில கிரந்தங்களிலும் இரஸம் முதலிய ஏழு தாதுக்களையும் ஆச்ரயித்த வேறு ஏழு விதமான ஜ்வரங்களுக்கும் தனித்தனியே இலக்ஷணங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் "வாதபலாஸகம்," "ப்ரலேபகம்" முதலிய வேறு சில விசேஷ ஜ்வரங்களுடைய ஸ்வரூபாதிகளும் அஷ்டாங்க ஸங்கிரஹத்தின் சுருக்கமான இக்கிரந்தத்தில் விவரிக்கப்படவில்லை.

# மூன்றுவது அத்தியாயம்.

இனி இரத்தபித்த-காஸநிதாநம்[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படும்:—

*இரத்த-பித்தத்தின் நிதாநமும் ஸம்ப்ராப்தியும்.*

மிகவும் உஷ்ண வீர்யமும், தீக்ஷ்ணகுணமும், கடு-அம்ல-லவண ரஸங்களும், மற்றும் இவை போன்ற தன்மைகளுமுடைய அழற்சி யுண்டாக்கும் சுபாவமுள்ள வஸ்துக்களையும், அத்தகைய பித்தத்தை விருத்தி செய்யும் குணமுடைய பதார்த்தங்களோடு கலந்து, வரகு தானியமென்ன உத்தாலக தானியமென்ன[2] இவற்றின் அன்னங்களையும் அதிகமாய் உபயோகிப்பதால், திரவரூபமான பித்தமும்[3] இரத்தமும் பிரகோபமடைந்து, இரண்டும் ஒன்றாகக் கலந்து ஒன்றோடொன்று பேதமின்றி துல்ய ரூபத்தைப் பெற்று உடம்பில் எல்லா விடத்திலும் பரவிவிடுகின்றன. 1, 2.

*பித்தத்திற்கும் இரத்தத்திற்குமுள்ள விசேஷ ஸம்பந்தம்.*

பித்தமானது இரத்தம் திரிபடைந்துண்டான தோஷமா யிருப்பதாலும், இரத்தத்தோடு கலப்புள்ளதா யிருப்பதாலும், இரத்தத்தை விரைவில் தூஷிக்கக் கூடியதா யிருப்பதாலும், இரத்தத்திற்குள்ள மணமும் நிறமும் இதற்கும் இருப்பதாலும் பித்தமானது இரத்தத்தோடு ஸமானமாகவே வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இரத்தம் உற்பத்தியாவதற்கு ஸ்தானங்களாயுள்ள ப்லீஹம் என்கிற மண்ணீரல் என்ன, யக்ருத் என்னும் கல்லீரல் என்ன இவற்றிலிருந்தே பித்தமும் உற்பத்தியாகின்றது.[1] 3, 3½.

*இரத்த-பித்த பூர்வ ரூபங்கள்.*

இரத்த-பித்தரோகம் உண்டாவதற்கு முன்பு அடியில் வரும் குறிகள் உண்டாகும்:—சிரோபாரம், அரோசகம், குளிர்ச்சியில் விருப்பம், உடலில் அனல் எழுச்சி, புளித்த ஏப்பம், வாந்தி, வமநம் என்றால் வெறுப்பு, காஸம், ச்வாஸம், தலைச்சுற்றல், உடலில் வாட்டம், அயத்தினுடையவும் சுறாமீனுடையவும் ஆமதோஷத்தினுடையவும் வாஸனை முகத்தில் உண்டாதல், தொண்டைக்கம்மல், நேத்திரம் முதலிய அவயவங்களில் சிவப்பு-மஞ்சள்-இலைப்பச்சை என்னும் இந்த நிறங்கள் ஸம்பவித்தல், நீலம் - சிவப்பு-மஞ்சள் இந்த நிறங்களைப் பகுத்துணர முடியாமற்போதல், கனவில் இரத்த நிறமான வஸ்துக்களைப் பார்த்தல் என்பவையாம். 4—6½.

*இரத்த-பித்தம் மூன்றுவிதம்.*

உடலின் ஊர்த்வபாகத்தில் இரத்த-பித்தம் பிரகோபமடைந்தால் அது நாசித்வாரங்களாலும், நேத்திரமார்க்கங்களாலும், செவிகளாலும், வாயாலும் வெளியாகும். தேஹத்தின் அதோ பாகத்தில்

1. இரத்த-பித்தம்—இரத்தமும் பித்தமும் ஸம்பந்தித்து உண்டாகும் வியாதி; காஸம்—இருமல்; இவ்வியாதிகளின் காரண-ரூபாதிகளை விவரிக்கும் அத்தியாயம்,

2. உத்தாலக தானியம்—41-வது பக்கத்தில் 7, 8-வது இலக்கமுள்ள வாக்கியத்தைப் பார்க்க.

3. திரவரூபமான பித்தம்—பித்தாசயத்திலிருந்து வெளியாகும் பித்தம் எனக் கருத்து; ஆகவே தோஷரூபமான பித்தம் அல்லவென்று அறியப்படுகிறது.

1. பித்தம் யக்ருத்திலிருந்தும், இரத்தத்தின் முக்கியமான சில அம்சம் ப்லீஹத்திலிருந்தும் உற்பத்தியாவதாய் தற்காலத்திய மேனாட்டுசரீர தத்துவஞ்ஞர்களும் கூறுகிறார்கள்; ஆனால் யக்ருத்திலிருந்து இரத்தமும் ப்லீஹத்திலிருந்து பித்தமும் கூட உற்பத்தியாவதாக மேனாட்டு வைத்தியர்கள் கூறுவதில்லை; அநுபவத்திலும் இவ்வாறு ஸம்பவிப்பதில்லை. என்றாலும் இன்னும் ஆராய்ச்சி செய்தால் இதன் உண்மை விளங்கும்.



இரத்த-பித்தம் பிரகோபமடைந்தால் ஆண்குறி பெண் குறிகளாலும், குதத்தினாலும் வெளிப்படும். உடலெங்கும் அது பிரகோபமடைந்தால், எல்லா மயிர்க்கால்களாலும், மற்றும் முற்கூறிய எல்லா மார்க்கங்களாலும் வெளியாகும்.[1] 7½.

*இரத்த-பித்தத்தில் ஸாத்திய லக்ஷணம்.*

ஊர்த்வ பாகத்தினால் வெளிவரும் இரத்த-பித்தம் எளிதில் சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக்கூடியதாம். ஏனெனில், அது அதிக கபமும் ஸஹாயமாகச் சேர்ந்து ஸம்பவிக்கின்றது;[2] அதை விரேசநத்தினால் ஸுலபமாய் நிவ்ருத்தி செய்யலாம்;[3] அல்லாமலும் அநேகவகையான சிகித்ஸைகள் இதற்கு உண்டு; பித்தத்திற்குச் சிறந்தது விரேசந சிகித்ஸையே; இந்த வியாதியில் கபமும் பித்தத்தைப் பின்பற்றிய தோஷமாயிருப்பதால், அக்கபத்தையும் விரேசநம் நன்றாகச் சுத்தி செய்யும். கபம் சுத்தியானதும், இப்பிணியாளிக்கு இனிய சுவையுள்ள கஷாயங்களும்[4] அநுகூலமானவை யென்றால், இயற்கையாகவே கபத்தைப்போக்கக்கூடிய குணமுள்ள திக்தரஸமும் துவர்ப்பு என்னும் துவர ரஸமும் அடங்கிய கஷாயவகைகள் அநுகூலமுண்டுபண்ணும் என்பதைக் கேட்கவும் வேண்டுமோ? 8—10.

*இரத்த-பித்தத்தில் யாப்ய லக்ஷணங்கள்.*

அதோபாகத்தை ஆச்ரயித்த இரத்த-பித்தம் யாப்யமாகும்; ஏனெனில் அது வாயுவின் ஸம்பந்தத்தை அதிகமாகப் பெற்றிருப்பதோடு, வமந சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக்கூடியதா யிருக்கிறது;[1] அல்லாமலும் இதற்குப் பரிஹார முறைகளும் சொற்பமேயுண்டு; மேலும் பித்தத்திற்கு வமந சிகித்ஸையானது சிறந்த பரிஹாரமல்ல; இந்த இரத்த-பித்தத்தில் பின்பற்றிய ஸஹாய தோஷமோ வாதம்; அவ்வாயுவை வமநமும் நிவ்ருத்திக்கக் கூடியதல்ல; இதில் மதுர ரஸமுள்ள கஷாய வகைகள் மட்டுமே ஹிதமானவையாம். 11, 12.

*இரத்த-பித்தத்தில் அஸாத்திய லக்ஷணங்கள்.*

இரண்டு மார்க்கங்களாலும்[2] வெளிவரும் இரத்த-பித்தத்திற்கு சிகித்ஸைசெய்வது ஸாத்தியமில்லை; ஏனெனில் அது, கபம் வாதம் இவ்விரண்டு தோஷங்களோடும் கலந்து ஸம்பவிக்கின்றது; மேலும் அதை எதிரிடையான மார்க்கத்தில் திருப்புவதும் சக்கியமில்லை;[3] இதற்குப் பரி

1. இங்கே மயிர்க்கால்களாலும் இரத்த-பித்தம் வெளிவரும் என்று கூறியிருந்தாலும், அவ்விதம் உண்டாவது மிகவும் அரிது. ஊர்த்வபாகத்தினால் வெளிவருவது ஒன்று, அதோபாகத்தினால் வெளிவருவது ஒன்று, இரண்டு பாகங்களாலும் வெளிப்படுவது ஒன்று; ஆக மூன்றுவித இரத்த-பித்தங்கள்.

2. உடலின் ஊர்த்வபாகம் கபஸ்தானமாகையால், ஊர்த்வபாக ஸம்பந்தமான இரத்த - பித்தத்தில் கபமும் கோளாறடைந்து பற்றுதலைப் பெறுவது ஸஹஜம்; ஆகையால் இரத்த-பித்தத்தில் கபத்திற்கும் ஸம்பந்தம் கூறப்பட்டது.

3. இதில் கபத்திற்கு வமநம் தகுந்த சிகித்ஸையானாலும், வியாதி முக்கியமாய் பித்த ஸம்பந்தமுள்ளது பற்றி, பித்தத்திற்குத் தகுந்தவாறு விரேக சிகித்ஸை கூறப்பட்டது. அல்லாமலும் மேல்நோக்கிய வேகத்தை நிறுத்தவேண்டுமென்றால், அந்த வேகத்தைக் கீழ் நோக்கும்படி செய்வதுதான் கிரமமாக யுக்தியுக்தமான சிகித்ஸையாகும். இந்த நியாயத்தைக் கொண்டே அதோபாகத்திய இரத்த பித்தத்திற்கு வமநம் செய்விப்பது உசிதமான சிகித்ஸை எனப்படுகிறது.

4. கஷாயங்கள்—இதனால் க்வாதம், பாண்டம், ஸ்வரஸம், கல்கம், ஹிமம் என்கிற ஐந்து விதமான கஷாயவகைகளும் கிரஹிக்கப்படுகின்றன.

1. கீழ் நோக்கிய இரத்த-பித்தத்தைப் பிரதிலோமமாகக்கொண்டு வருவதற்கு வமநம் செய்விப்பது அவசியம்; ஆனால் வாதத்திற்கு வஸ்தி முதலியது யுக்தமேயன்றி வமநம் முற்றிலும் தகுந்ததல்ல.

2. இரண்டு மார்க்கங்கள்—மேலே வாய், நாசி, செவி முதலியவற்றாலும், கீழே மூத்திரமார்க்கம், குதம் முதலியவற்றாலும் வெளிவருவது.

3. கீழ் மார்க்கங்களாலும் மேல் மார்க்கங்களாலும் இரத்த-பித்தம் ஸ்ரவிப்பதால், அதற்கு எதிரிடையான மார்க்கம் வேறு ஒன்றும் கிடையாது.

ஹார முறையும் கிடையாது.[1] இந்த இரத்த-பித்தத்தை, அது எந்த மார்க்கத்தினால் வருகிறதோ அதற்கு எதிரிடையான வழியினால் திருப்புவதற்குத் தகுந்த சோதந சிகித்ஸை ஒன்றும் இல்லை; ஏனெனில் இரத்த-பித்தத்தில் சோதந சிகித்ஸையும், எந்த வழியினால் அது வருகிறதோ அதற்கு எதிரிடையான வழியில் அதைத் திருப்புவதுமே முக்கியமாய் உபயோகப்படக்கூடிய பரிஹார முறையென்று நிச்சயிக்கப்பட் டிருக்கிறது. இவ்விதமே இதற்கு சமந சிகித்ஸையும் எவ்விதத்திலும் கிடையாது; ஏனென்றால்:—ஒன்றோடொன்று மூன்று தோஷங்களும் மிச்ரமா யிருக்கும் போது ஸர்வ தோஷங்களையும் சமநம்செய்யக்கூடிய சிகித்ஸையல்லவோ ஹிதமானது? 13—15.

இரத்த-பித்தத்தின் தோஷக் குறிகளும் உபத்திரவங்களும்.

இரத்த-பித்த வியாதியில் தோஷங்களின் ஸம்பந்தத்தால் உண்டாகும் குறிகள், இரத்தமோக்ஷணத்தில் விரைகளிலிருந்து வெளியாகும் இரத்தத்திற்கு வாதாதி தோஷ ஸம்பந்தங்களால் உண்டாகும் இலக்ஷணங்களுக்கு ஸமானமாயிருக்குமென்றும்[2], இதற்கு விக்ருதி விஞ்ஞானத்தில்[3] கூறப்பட்டுள்ளபடி உபத்திரவங்களும்[4] உண்டாகுமென்றும் அறிக. அந்த உபத்திரவங்களுக்குள் காஸமானது அதிக விரைவில் பிராணபாயம் விளைவிக்கக்கூடியது; ஆகையால் இப்பொழுது காஸ விஷயமே இதனடியில் கூறப்படும். 16, 16½.

## காஸ ரோக விவரணம்.

காஸம் ஐந்து விதம்.

காஸம் ஐந்து விதம்; அவையாவன:—வாத காஸம், பித்தகாஸம், கபகாஸம், க்ஷதகாஸம், க்ஷயகாஸம் என்பனவாம்.[1] காஸங்களை உபேக்ஷித்தால், அவையெல்லாம் க்ஷய காஸமாக மாறும். இந்த ஐந்து காஸங்களில் மேன்மேலும் ஒன்றைவிட மற்றொன்று முறையே பலமான வியாதியாகும். 17, 17½.

காஸத்தின் பூர்வரூபங்கள்.

காஸ ரோகங்கள் உற்பத்தியாகையில் தொண்டையில் தினவும், அரோசகமும், தொண்டையில் சூகங்கள் என்னும் முளைகள் கிளம்பி நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சியும் பூர்வ ரூபங்களாக உண்டாகும். 18¼.

1. வாதம் கபம் என்கிற இவ்விரண்டுக்கும் ஒரு மிக்க சோதநாதிகளால் நிவ்ருத்தி யுண்டுபண்ணுவது ஸாத்தியமில்லை; மேலும் பித்தமும் இதில் பிரதான தோஷமாகையால் ஸந்நிபாதமாகவும் ஆய்விட்டதால் இன்னும் கஷ்டம்; இரண்டு வழிகளாலும் வெளிப்படுவதை பிரதி லோமம் செய்வதற்கான உபாயமும் இல்லை; ஆகையால் பரிஹாரமுறை கிடையாது எனப்படுகிறது.

2. வாதாதி தோஷங்களால் விகாரமடைந்த இரத்தத்தின் குறிகளைப்பற்றிய விவரத்தை விராவ்யதவிதி அத்தியாயத்தில் (202-வது பக்கத்தில்) பார்க்க.

3. இரத்த-பித்தத்தின் உபத்திரவங்கள் அல்லது ரிஷ்டங்களின் விவரத்தை 296-297-வது பக்கங்களில் காண்க.

4. உபத்திரவம்—இதன் விவரத்தைப்பற்றி 8-வது பக்கத்தில் டிப்பணியில் விவரம் பார்க்க.

1. இங்கே ஐந்து காஸங்கள் என்றும், வாத-பித்த கபங்களால் தனியாக மூன்று காஸம் மட்டும் உண்டாகின்றனவென்றும் கூறப்பட்டது. பிறகு இந்த அத்தியாயக் கடைசியில் "வாத-பித்த-கபங்களால் தனித்தனி யுண்டாகும் காஸங்கள் சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக்கூடியவை; இரண்டிரண்டு தோஷங்கள் சேர்ந்து உண்டாகும் காஸங்கள் யாப்யங்கள் + +" என்று கூறப்போவதால், அவ்விதமாகக் கவனித்தால் எட்டு வகையான காஸங்கள் உண்டென்று தெரியவருகிறது; இது முன் பின் விரோதமாகத் தோற்றுகிறதே-என்றால் இவ்விரண்டு விஷயங்களும்சரிதான்; முதலில் தனித்தனி தோஷத்தினால் ஆரம்பிக்கப்பட்டு விருத்தியான காஸம், பிறகு அன்னபானாதிகளின் மூலமாகவும் ஆசாரக்கேட்டின் மூலமாகவும் ஏற்படுகிற அபத்தியாதிகளால் இதர தோஷங்களுக்கும் பிரகோபமுண்டாய் இரண்டிரண்டு மிச்ரதோஷங்களுடைய ஸம்பந்தத்தையும் பெறக்கூடும். ஆனால் முதலில் ஆரம்பிக்கும்போது தனித்தனியான தோஷத்தினாலேயே காஸம் ஸம்பவிப்பது இயல்பு.



காஸத்தின் பூர்வ ரூபம்.

அதில் வாயுவானது அதோபாகத்தில் தடுத்துத் தள்ளப்பட்டு, மேலெழும்பி வந்து மார்பினுள் பிரவ்ருத்தித்து, அவ்விடத்தையும் தொண்டையையும் தாக்கிக் கிளம்பியதாய், சிரஸ்ஸிலுள்ள ஸ்ரோதோமார்க்கங்களை நிரப்பி, அப்பால் அவயவங்களைத் தூக்கி யெறிவதுபோலவும், கண்களைப் பெயர்த்து வீழ்த்துவதுபோலவும், பிருஷ்டபாகத்தையும் மார்பையும் பாரிசங்களையும் அழுத்திப் பிடிப்பதுபோலவும் தொந்தரவுகளை யுண்டுபண்ணிக்கொண்டு, வெண்கலம் உடைந்து உண்டாகும் சப்தத்தைப்போன்ற தொனியோடு வாயிலிருந்து அவ்வாயுவின் வேகம் காஸமாகக் கிளம்புகின்றது. வெவ்வேறு காரணங்களால் பலமான வேகத்தோடு வாயு காஸமுண்டுபண்ணிக்கொண்டு கிளம்புகையில், அவ்வேகம் தாக்குதலின் எதிர்ப்பினால் ஏற்படும் சப்தமும் வெவ்வேறு வகையில் பேதமடையும்; அதனால் காஸங்களில் வேதனையும் சப்தமும் பலவகைப்படுவது வழக்கம்.[1] 19—21½.

வாத காஸக் குறிகள்.

வாதத்தை விருத்திசெய்யும் காரணங்களால் வாயுவானது பிரகோபமடைந்து, மார்பின் உட்புறத்தையும் தொண்டையையும் வாயையும் வறண்டுபோகச் செய்யும்; இருதயத்திலும் விலாப்பக்கங்களிலும் மார்பிலும் சிரஸ்ஸிலும் வலியை உண்டுபண்ணும்; மூர்ச்சை, அதிர்ச்சி, கண்டத்தொனிக்கு க்ஷயம் இவற்றையும் உண்டாக்கும்; அதிக வேகத்தோடும் சப்தத்தோடும் கூடிய வறட்டு இருமலைத் தூண்டி, உடலைச் சிலிர்க்கச்செய்துகொண்டு, மிகக் கஷ்டப்படுத்தி வறண்டுபோன கபத்தை வெளிப்படுத்தி, அப்பால் வேகத்தில் குறைவடைந்து தணியும். 22—23½.

பித்த காஸக் குறிகள்.

பித்தத்தினால் உண்டாகும் காஸக்குறிகள் பின்வருமாறு:—கண்களும், இருமலால் வெளியாகும் கபமும் மஞ்சள் நிறமாயிருக்கும்; வாயில் கைப்பு அதிகரிக்கும்; ஜ்வரமும், தலைச் சுற்றலும் உண்டாகும்; பித்தமும் இரத்தமும் கக்கப்படும்; தாவறட்சி, குரல் மாறிப்போதல், புகைவதுபோல் வெகு வெப்பத்துடன் மூச்சு விடுதல், வெறி இவை உண்டாகும்; அடிக்கடியும் காஸத்தின் வேகத்தினால் நெருப்புப் பொரிகளைப்போன்ற ஒளிகள் கண்களுக்கு எதிரில் தோற்றுவதுண்டு. 24, 25.

கப காஸக் குறிகள்.

கபத்தினால் உண்டாகும் காஸரோகக்குறிகள் பின்வருமாறு:—மார்பிலும் சிரஸ்ஸிலும் சொற்பவலி யுண்டாகும்; இருதயம் அதிக படபடப்பின்றி ஒருவாறு குருவாகவும் இருப்பதாகத்தோற்றும்; தொண்டையில் எப்பொழுதும் கோழை சூழ்ந்திருக்கும்; சரீரம் இளைக்கும்; பீனஸமும், வாந்தியும், அரோசகமும், மயிர்ச்சிலிர்க்கையும் உண்டாகும்; திடித்துத் தோய்ந்துபோனதும், அதிக ஸ்நிக்தமும், வெண்மையுமாயுள்ள கபம் வெளிப்படும். 26, 26½.

க்ஷத காஸத்தின் நிதானம் முதலியவை.

கைச்சண்டை முதலிய அந்தந்த ஸாஹஸ வேலைகளை அவரவருடைய சக்திக்குமீறி வலுவிற் செய்வதால், மார்பினுட்புறம் தாக்கப்பட்டு ஒருவித க்ஷதம்[1] உண்டாய், வாயுவும் நல்ல பலம் பெற்றதாய்

1. காஸங்களில் (இருமலில்) சில ஸமயம் மார்பில் அதிக வலியும், சில ஸமயம் குறைந்த வலியும், சில ஸமயம் ஊசி முதலியவற்றால் குத்தப்படுவது போன்ற வலியும், சில ஸமயம் அழற்சி அதிகரிப்பதும் இவ்வாறு வேதனைகள் பலவகைப்படும். இருமலின் தொனியும் அவ்விதமே அநேகவிதமாக மாறக்கூடும்.

1. க்ஷதம்—என்றால் அபிகாதம் முதலியவற்றால் உண்டாகும் விரணம்; மார்பினுள் ஏதாவது ஸ்ரோதஸ் அறுபட்டு, அதிலிருந்து இரத்தம் வெளிவருமாகையால், இது க்ஷதகாஸம் (விரணத்துடன் கூடிய இருமல்) எனப்படுகிறது.

பித்தத்துடன்கூடி பிரகோபமடைந்து காஸத்தையுண்டுபண்ணும். அதனால் அப்பிணியாளி இரத்தத்துடன் கூடியதும், மஞ்சளும் கறுப்புங்கூடிய நிறமுடையதும், வறண்டு தோய்ந்து கெட்டியாயிருப்பதும், பதனழிந்ததுமான கபத்தை அதிகமாகக் கக்குவான்[1]; அவ்விதம் இருமலுண்டாகும்போது தொண்டையில் வலியுண்டாகும்; பிளந்துபோவதுபோலவும், கூர்மையான ஊசிகளால் தைக்கப்படுவதுபோலவும், உணரக்கூடிய சூலை மார்பில் உண்டாயிருக்கும்; பூட்டுகள் தோறும் வேதனையும், ஜ்வரமும், ச்வாஸமும், தாவறட்சியும், அரோசகமும், உடல் நடுக்கமும் ஸம்பவிக்கும்; அந்த நோயாளி மாடப்புறாவைப்போல் கூக்குரலிட்டவனாய், விலாப்பக்கத்துவலியோடு வருந்துவான்; அப்பால் இவனுக்கு வீர்யமும், நல்ல வஸ்துக்களை உண்பதில் சுவையும், உணவு ஜீர்ணமாகும் சக்தியும், தேஹவன்மையும், இயற்கையான நிறமும் குறைந்துவரும்; இவ்விதம் க்ஷீணநிலைமை அடைந்துவரும் இப்பிணியாளிக்கு மூத்திரத்தில் இரத்தமும் கலந்து வெளியாகும்; முதுகிலும் இடுப்பிலும் பிடிப்புபோன்ற ஓர் அஸௌகர்யமான உணர்ச்சியுண்டாகும். 27—31½.

க்ஷயகாஸ நிதானாதிகள்.

இராஜயக்ஷ்மா என்கிற க்ஷயரோகத்தினால் சிறிது வருந்துகிற மனிதனுக்கு வாயுமுதலான தாதுக்கள் இராஜயக்ஷ்ம நிதானத்தில் கூறப்போகிற ஸாஹஸ காரியம் முதலிய காரணங்களால்[2] பிரகோபமடைந்து காஸத்தை உண்டுபண்ணும்; அதனால் நோயாளிக்கு துர்நாற்றமுள்ள சீழைப்போன்றதும், மஞ்சள் நிறமானதும், சில ஸமயம் இலைப்பசுமை அல்லது சிவந்த நிறமுடையதுமான கபம் வெளியாகும்; இந்த காஸத்தில் இரண்டு விலாப்பக்கங்களும் அறுத்துவீழ்த்தப்படுவதுபோலவும், இருதயம் பெயர்ந்து நழுவிவிடுவதுபோலவும் அவ்வளவு கடுமையான உணர்ச்சியுண்டாகும்; திடீரென்று உஷ்ணத்திலும் குளிர்ச்சியிலும் விருப்பம் ஏற்படும்; அதிக உணவுகளைப்புஜிப்பான்; தேஹவன்மை குறையும்; முகம் ஸ்நிக்த்தமாகவும் தெளிவுள்ளதாகவும் தோன்றும்; பற்களும் கண்களும் மிகப் பொலிவுள்ளவைகளாய் துலங்கும்; அதன் பிறகு க்ஷயரோகத்தின் எல்லாக்குறிகளும் உண்டாகும். 32—35.

காஸத்தில் ஸாத்யாஸாத்யாதி விவரணம்.

இங்ஙனம் க்ஷயகாஸமுண்டானால், அது ஏற்கனவே இளைத்து துர்ப்பலமாயிருப்பவருக்கு உடலை அழித்திவிடும்; அதுவே வேண்டியவளவு தேஹபலம் உள்ளவர்களுக்கு ஸம்பவித்தால் யாப்யமாகும்[1]. அவ்விதமே க்ஷதகாஸமும் பலஹீனர்களுக்கு அஸாத்தியமாகவும், பலசாலிகளுக்கு யாப்யமாகவும் ஆகும். க்ஷதகாஸம் க்ஷயகாஸம் இரண்டும் நான்கு பாதங்களின்[2] ஸௌகரியங்கள் பூர்ணமாயிருந்தால் ஒருக்கால் சிகித்ஸைக்கு வசப்படக்கூடும். மூன்று தோஷங்களாலும் தனித்தனியே உண்டாகிற காஸங்கள் மூன்றும் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியவையாம். இரண்டிரண்டு தோஷங்களால் உண்டாகிற காஸங்களும், வயது முதிர்ந்தவனுக்கு உண்டாகும் எல்லா காஸ ரோகங்களும் யாப்யமாகும். 36—37.

காஸத்தின் உபத்திரவங்கள்

காஸத்தை உபேக்ஷித்தால் ச்வாஸரோகம், க்ஷயம், சர்த்தி யென்னும் வாந்தி, குரல் க்ஷீணமாதல் முதலிய ரோகங்கள் ஸம்பவிக்கும்; ஆகையால் காஸம் உண்டானதும் அதை சீக்கிரம் ஸ்வஸ்த்தம் செய்ய முயலவேண்டியது மிகவும் அவசியம். 38.

1. இங்கே வாதம், பித்தம், கபம் இம்மூன்று தோஷங்களுடைய கோளாறடைந்த நிலைமை குறிக்கப்பட்டிருப்பதைக்கொண்டு க்ஷதகாஸம் ஸந்நிபாத ஸம்பந்தமானது என்று அறிந்துகொள்ளலாம்.

2. இராஜயக்ஷ்மநிதாநம் என்னும் அடுத்து வருகிற 5-வது அத்தியாயத்தில் 4-வது பத்தியத்தின் மொழி பெயர்ப்பைப் பார்க்க.

1. யாப்யம்—இதைப்பற்றிய விவரத்தை 9-வது பக்கத்தில் பார்க்க.

2. நான்கு பாதங்கள்—இதன் விவரங்களை 8-வது பக்கத்தில் பார்க்க.



## நான்காவது அத்தியாயம்.

அப்பால் ச்வாஸ-ஹித்மா நிதாநம்[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது:—

ச்வாஸரோகம் ஐந்துக்கும் நிதாநங்கள்.

காஸம் விருத்தியாவதாலும், முன்னால் ஸர்வரோக நிதாநத்தில் தோஷங்கள் பிரகோபமடைவதற்குக் கூறப்பட்டுள்ள காரணங்களாலும், ஆமாதிஸாரத்தினாலும்,[2] அதிகமாய் வாந்தி ஆவதாலும், விஷ ஸம்பந்தத்தினாலும், பாண்டு ரோகத்தினாலும், ஜ்வரத்தினாலும், புழுதி-புகை-பெருங்காற்று இவற்றாலும், மர்ம ஸ்த்தானங்கள் தாக்கப்படுவதாலும், அதிக குளிர்ந்த நீரை உபயோகிப்பதாலும், க்ஷுத்ர ச்வாஸம், தமக ச்வாஸம், சின்ன ச்வாஸம், மஹாச்வாஸம், ஊர்த்வ ச்வாஸம் என்கிற ஐந்து விதமான ச்வாஸ ரோகங்கள் உண்டாகின்றன. 1, 2.

ச்வாஸத்தின் ஸம்ப்ராப்தி.

வாயுவானது, கபத்தினால் மார்க்கம் தடுக்கப்படுவதால் தேஹத்தில் மற்றப் பிரதேசங்களில் பாய்ந்து ஆங்காங்கு பரவி விகாரமடைந்ததாய்,[3] பிராணவாயு செல்லும் ஸ்ரோதஸ்ஸுகளையும், உணவு உட்செல்லும் மார்க்கத்தையும், இரஸம் செல்வதற்கான ஸ்ரோதஸ்ஸுகளையும் விகாரமடையச் செய்து, மார்பறையிலேயே தங்கியதாய், ஆமாசயத்தில் ஆரம்பித்து[1] ச்வாஸரோகத்தை உண்டுபண்ணும். 3, 3½.

ச்வாஸத்தின் பூர்வ ரூபங்கள்.

அவ்வாறு உண்டாகும் ச்வாஸரோகத்திற்கு அடியில் குறிப்பிடப்படுபவை பூர்வ ரூபங்களாகும்:—இருதயத்தில் வேதனை, பக்கசூலை, பிராணவாயு இயற்கை மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்தில் பிரவேசித்தல், வயிற்றுப் பொருமல், கன்னம் பிளக்கப்படுவதுபோன்ற வலி இவைகளேயாம். 4¼.

க்ஷுத்ர ச்வாஸம்.

அவற்றுள் க்ஷுத்ரச்வாஸமானது[2] ஆயாஸமுண்டாகக்கூடிய காரியங்களைச் செய்வதாலும், அதிகமாய் போஜனம் செய்வதாலும் கிளப்பப்பட்ட வாயுவால் உண்டுபண்ணப்படுகிறது; இந்த ச்வாஸம் பிறகு தானே தணிந்துவிடும். 5.

தமக ச்வாஸமும் பிரதமக ச்வாஸமும்.

வாயுவானது கபத்தை மேலாகக் கிளப்பி, இயற்கைக்கு ஒவ்வாத மார்க்கத்தில் சென்று, சிரஸ்ஸையும் கழுத்தையும் வலித்து அவ்விடங்களில் பிடிப்பை யுண்டுபண்ணி, விலாப்பக்கங்களைப் பீடித்து, குர்க்குருவென்கிற சப்தத்தோடுகூடிய. இருமலையும், உயிருடன் போராடக்கூடிய கடுந்துன்பத்தை விளைவிக்கும் மிகவும் பலமான ச்வா

1. ச்வாஸம்—மூச்சு அடைப்பால் உண்டாகும் வியாதி; ஹித்மா-விக்கல்; இவற்றைப்பற்றிய நிதாநாதிகளை விவரிக்கும் அத்தியாயம்.

2. ஆமாதிஸாரம்—அதிஸார - கிரஹணீ நிதாநம் என்னும் வரப்போகிற 8-வது அத்தியாயத்தில் 13, 14-வது பத்தியங்களின் மொழிபெயர்ப்பில் இதன் விவரம் காண்க,

3. ச்வாஸ வாயு இயற்கைப்படி உட்செல்லவும் வெளிவரவும் தடங்கல் ஏற்படுவதால் ச்வாஸ வாயுவும் வாத தோஷமும் விகாரமடைந்துவிடுகின்றன.

1. ச்வாஸாசயத்திற்குக் கீழே அடுத்தாற்போல ஆமாசயம் இருப்பதால் ஆமாசயத்தில் ச்வாஸம் ஆரம்பிப்பதுபோல் தோற்றுவதைக் கொண்டு இவ்வாறு கூறப்பட்டதென்று அறிக.

2. க்ஷுத்ரச்வாஸம்—காரணங்களும், இலக்ஷணங்களும், நிவ்ருத்திப்பதில் சிரமமும் மிகச் சொற்பமாயிருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது.

ஸத்தையும் உண்டுபண்ணும்; மேலும் மூர்ச்சை, அரோசகம், பீநஸம், நாவறட்சி இவையும் ஸம்பவிக்கும். இந்த ச்வாஸத்தின் வேகத்தைத் தாங்காதவனாய் அப்பிணியாளி மிகவும் துன்பமனுபவிப்பான்; கபம் சிறிது வெளியானதும் க்ஷணநேரம் சுகமாயிருப்பான். இந்த ரோகி படுத்துக்கொண்டால் மிகவும் கஷ்டத்துடன் ச்வாஸம்விடுவான்; உட்கார்ந்தால் ஒருவாறு சுகம் பெறுவான். நிமிர்ந்து ஆகாயத்தைநோக்கி யுட்கார்ந்தவனாய், நெற்றிக்கட்டு வியர்க்க, மிகவும் வேதனையதிகரிக்க, வாயுலர்ந்து, அடிக்கடியும் ச்வாஸமதிகரித்து, உடல் நடுங்க, உஷ்ணத்தை அபேக்ஷித்து நிற்பான். மேகத்தினாலும், ஜலத்தினாலும், குளிர்ச்சியினாலும், கீழ்த்திசை வாயுவாலும், கபத்தைப் பிரகோபிக்கச்செய்யும் காரணங்களாலும் இந்த வியாதி விருத்தியடையும். இது தமகச்வாஸம் எனப்படும். இது யாப்ய[1] வியாதியாகும்; இது சொற்பகாலத்திற்குள் உண்டானதாயிருந்தாலும், நல்ல தேஹதிடனுள்ளவனுக்கு ஸம்பவித்ததாயிருந்தாலும் ஒருக்கால் சிகித்ஸைக்கு வசப்பட்டாலும் வசப்படலாம். தமக ச்வாஸத்திற்குக் கூறிய இலக்ஷணங்களோடு ஜ்வரமும் மூர்ச்சையும் விசேஷமாகத் தொடர்ந்திருந்தால், அது பிரதமக-ச்வாஸம் என்று வழங்கப்படும். அது சீதளமான பதார்த்தங்களாலும் சிகித்ஸைகளாலும் நிவ்ருத்தியடையும். 6—10½.

**சின்ன ச்வாஸம்.** சின்ன ச்வாஸத்தினால் பிணியாளிக்கு இடையிடையில் விட்டுவிட்டு ச்வாஸம் அதிகரிக்கும். மர்மங்கள் அறுந்து விடுவதுபோன்ற வலியினால் அவன் துன்பப்படுவான். வியர்வையும் மூர்ச்சையும் உண்டாகும். வயிற்றுப் பொருமலும்; வஸ்தியென்னும் மூத்திரப்பையில் அடைப்பும் அழற்சியும் ஸம்பவிக்கும். கண்ணைக் கவிழ்ந்துகொண்டு, இங்குமங்குமாய் அலைந்து நோக்கியவனாய், மூர்ச்சையடைந்து, ஒரு நேத்திரம்மட்டும் சிவந்திருக்க, வாயும் உலர்ந்து, ஏதேதோ பிதற்றுவான்; அப்பிணியாளி வக்கமுற்றவனாய், தேஹவொளி மழுங்கிப்போக, நினைவு தடுமாறியிருப்பான். 11—12½.

**மஹா ச்வாஸம்.** பிணியாளியானவன் மஹத்தான சப்தத்தோடு கத்திக்கொண்டு, வக்க ச்வாஸம் முற்று ச்வாஸம் விடுவான். மிகவும் கலக்கமடைந்து உடல் நடுங்க, எப்பொழுதுமே கொழுத்த விருஷபம்போல மூச்சுவிடுவான். எல்லாவித அறிவும் மலினமடையும். கண்களும் முகமும் பள்ளத்தில் ஆழ்ந்துவிடும். மார்பு இழுத்துப் பிடித்துக்கொள்ளும். மலமூத்திரங்கள் கட்டப்படும். பேசிக்கொண்டிருக்கையில் வார்த்தைகள் தடைப்படும். தொண்டை உலர்ந்துவிடும். அடிக்கொருமுறை மயக்கமுறுவான். காதுகளிலும் கன்னங்களிலும் சிரஸ்ஸிலும் வலியுண்டாய் வருந்துவான். இந்த இலக்ஷணங்களுடன்கூடிய வியாதி மஹாச்வாஸம் எனப்படும். 13—15.

**ஊர்த்வ ச்வாஸம்.** மேல்நோக்கிவரும் ச்வாஸம் மிகவும் நீண்டிருக்கும்; மேல் நோக்கிவந்த மூச்சை மறுபடியும் உள்ளுக்கு இழுக்கத் திறமையற்றவனாவான். வாயும் தொண்டைமுதலிய உட்செல்லும் மார்க்கமும் கபத்தினால் சூழப்பட்டிருக்கும். வாயு பிரகோபமடைய அதனால் மிகவும் வருந்துவான். இங்கு மங்குமாய்க் விழித்து மேல்நோக்கிப் பிரமையுடன் பார்ப்பான். மர்மஸ்தானங்கள் கத்தரிக்கப்படுவதுபோன்ற வேதனையைத் தாங்காமல் புலம்புவான். பேசமுடியாமற்போகும். இக்குறிகள் உள்ள வியாதி ஊர்த்வச்வாஸம் என்று சொல்லப்படும். 16, 17.

1. யாப்யம்—9-வது பக்கம் பார்க்க.



**ச்வாஸரோகத்தில் ஸாத்தியாஸாத்தியக் குறிகள்.** தமகச்வாஸம் முதற்கொண்டு ஊர்த்வச்வாஸம் வரையிலுமுள்ள ச்வாஸ வியாதிகளுக்குக் கூறப்பட்டுள்ள குறிகள் முற்றிலும் வெளிப்படையா யுண்டாகாமலிருந்தால் சிகித்ஸைக்கு வசப்படக் கூடியவையாம். அவற்றின் குறிகள் யாவும் வெளிப்படையாக உண்டானால், அந்த வியாதிகள் நிச்சயமாய் சிகித்ஸைக்கு வசப்படமாட்டா. 17½.

## ஹித்மா.

**ஹித்மா விதானங்கள் முதலியன.** ஹித்மா அல்லது ஹித்மா எனப்படும் விக்கலானது ச்வாஸ ரோகத்திற்குக்கூறிய காரணங்களாலேயே உண்டாகின்றது; இதற்குப் பூர்வரூபங்களும், ஸங்க்யாஸம்ப்ராப்தியும்,[1] தன்மைகளும், உற்பத்திஸ்தானங்களும் ச்வாஸரோகத்திற்குக் கூறப்பட்டவைகளேயாம். 18.

**ஹித்மா ஐந்து விதம்.** ஹித்மாவானது அன்னஜஹித்மா, க்ஷுத்ர ஹித்மா, யமளஹித்மா, மஹா ஹித்மா, கம்பீரஹித்மா என்று ஐந்து வகைப்படும். 18½.

**அன்னஜ ஹித்மா.** ரூக்ஷமாகவும், தீக்ஷ்ணமாகவும், கரமாகவும், அஸாத்மியமாகவுமுள்ள அன்னபானங்களை ஒன்றாகக் கூட்டி வெகு துரிதமாக உட்கொள்வதால், நெருக்கி அழுத்தப்பட்ட வாயுவானது அன்னஜஹித்மாவை உண்டுபண்ணும்;[2] இது ஒருவித வேதனையையும் உண்டுபண்ணாது; சப்தம் மெதுவாயிருக்கும்; இத்துடன் தும்மலும் உண்டாகலாம். பிறகு ஸாத்மியமான அன்னபானங்களை உபயோகித்தால் இந்த ஹித்மா தானே நிவ்ருத்தியாகும். 19-20½.

1. ஸங்க்யா ஸம்ப்ராப்தி—311-வது பக்கம் பார்க்க.
2. ஆஹாரமுண்பதால் உண்டாவது அன்னஜ ஹித்மா.

**க்ஷுத்ரஹித்மா.** ஆயாஸகரமான வியாயாமம் முதலியவற்றால் சிறிதளவு பிரகோபமடைந்த சொற்பவாயுவானது க்ஷுத்ரஹித்மாவை உண்டுபண்ணும்;[1] கழுத்துக்கு அடிப்புறத்திலிருந்து கிளம்பி மேல்நோக்கியதாய், சொற்ப வேகத்தோடு மிருதுவாக வெளிவரும். ஆயாஸமுண்டாகக்கூடிய வேலைகளைச்செய்தால் இந்த ஹித்மா விருத்தியடையும். போஜனம் செய்ததும் விக்கல் குறைந்துவிடும். 21, 22.

**யமளஹித்மா அல்லது பரிணாம ஹித்மா.** உட்கொண்ட உணவானது வெகு மெதுவாக ஜீர்ணமாகும் ஸமயத்தில் உற்பத்தியாய், உணவு ஜீர்ணமான பிறகு விருத்தியடைந்து, இரட்டையாகத்தோன்றும் விக்கல் யமளஹித்மா எனப்படுகிறது.[2] இந்த விக்கல் உண்டாகும்போது சிரஸ்ஸும் கழுத்தும் நடுக்கங்கொள்ளும்; வயிற்றுப் பொருமலுண்டாகும்; அதிக நாவறட்சி யேற்படும்; வாய்ப்பிதற்றல்; வாந்தி, அதிஸாரம், கண்களால் இங்குமங்கும் திகைத்துப் பார்த்தல், கொட்டாவி இவைகளும் உண்டாகும். இரட்டை வேகத்துடன் உண்டாகும் இந்த விக்கலுக்குப் பரிணாமஹித்மா[3] என்றும் வேதிநீ என்றும் பெயருண்டு. 23—24½.

**மஹா ஹித்மா.** புருவங்களும் கன்னங்களும் அசைவற்று நிலைத்திருக்க, கண்கள் விரண்டு அவற்றில் நீர் ததும்ப, சரீரத்தை ஸ்தம்பிக்கச்செய்து, பேச்சுக்குத் தடையை யுண்டுபண்ணி, ஞாபகசக்தியையும் உணர்ச்சியையும் போக்கி,

1. க்ஷுத்ர ஹித்மா—வெகு ஸாதாரணமாய் மிகச் சொற்ப வேகத்தோடு உண்டாகும் விக்கல்.
2. யமளஹித்மா—ஒவ்வொரு தடவையிலும் இரட்டையான வேகத்தோடு தோன்றும் விக்கல்.
3. பரிணாமஹித்மா—உணவு ஜீர்ணமாகும்போது அல்லது ஜீர்ணமானவுடனே உண்டாகும் விக்கல்.

உணவின் வழியை அடைத்து, மர்மஸ்தானங்கள் இடிக்கப்படுவதுபோன்ற நோவையுண்டுபண்ணி, உடலைப் பின்புறமாக விறைத்து வளையச்செய்து, தேஹத்தை இளைக்கப் பண்ணி யாதொரு விக்கல் உண்டாகின்றதோ அது மஹாஹித்மா எனப்படும்;[1] இது மிகவும் ஆழமான பிரதேசத்திலிருந்து பெருத்தத் தொனியோடும், மஹாவேகத்தோடும், வெகுவலுத்ததாய் ஸம்பவிக்கும். 25—27.

**கம்பீர ஹித்மா.**

பக்வாசயத்திலாவது நாபியிலாவது ஆரம்பித்து யாதொரு விக்கலானது மஹாஹித்மாவைப் போலவே அதேவிதமான இலக்ஷணங்களோடும் மிகவும் தீர்க்கமான அநுசப்தத்தோடும்[2] உண்டாய், அடிக்கடியும் கொட்டாவியை உண்டுபண்ணி, அங்கங்களையும் விரியச்செய்கின்றதோ, அது கம்பீரஹித்மா என்று கூறப்படும்.[3] 28, 28¾.

**ஹித்மாவின் ஸாத்யா ஸாத்ய நிலைமைகள்.**

அவற்றுள் முதலிற்கூறிய இரண்டு ஹித்மாக்களும் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியவையாம். இறுதியிற் கூறிய இரண்டு ஹித்மாக்களும் அஸாத்யங்களாகும்; எல்லாக்குறிகளோடும்கூடிய யமளஹித்மாவும் அஸாத்யமாகும். ஆமதோஷம் அதிகமாயிருப்பவனுக்கும், கிழவனுக்கும், சிற்றின்பத்தில் அதிகமாகப் பிரவ்ருத்திப்பவனுக்கும், ஏற்கனவே இதர வியாதிகளால் தேஹம் இளைத்துப் போனவனுக்கும், உணவின்மையினால் துர்ப்பலமானவனுக்கும் எந்த ஹித்மா உண்டானபோதிலும் அஸாத்யமாகவே ஆய்விடும். 29, 30.

**ச்வாஸ-ஹித்மாக்களுக்கு மற்ற வியாதிகளினும் விசேஷம்.**

எந்த ரோகங்களுமே சரீரத்திற்கு-ஹானியையுண்டுபண்ணும்; ஆனால் ச்வாஸரோகமென்ன, ஹித்மா என்ன இவைகளைப்போல அவ்வளவு சீக்கிரத்தில் மற்றவை அபாயம் விளைவிப்பவையல்ல. இவ்விரண்டும் மரணகாலத்தில் அனைவருக்கும் அவசியம் ஸம்பவிக்கின்றன. 31.

## ஐந்தாவது அத்தியாயம்.

இனி இராஜயக்ஷ்மாதி நிதானம்[4] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது:—

1. மஹா ஹித்மா—மற்றவைகளைவிட இலக்ஷணங்களிலும், தீங்கு விளைவிப்பதிலும் மஹத்தாயிருப்பதால் இப்பெயர் வந்தது.

2. அநு சப்தம்-வெண்கலம் முதலியதை தாக்கும்போது முதலில் கணீர் என்று உதித்த தொனியைத் தொடர்ந்தாற்போல் அடுத்தடுத்து உண்டாகும் சப்தம்.

3. கம்பீர ஹித்மா—கம்பீரப் பிரதேசத்திலுண்டாவதால் இப்பெயர் வந்தது.

4. இராஜ யக்ஷ்மாதி நிதானம்-க்ஷயம் முதலிய வியாதிகளுடைய உற்பத்தி காரணம், குறிகள் இவை முதலான வற்றைக் கூறும் அத்தியாயம். இங்கே அரோசகம், வாந்தி, ஹ்ருதய ரோகம், த்ருஷ்ணை இவைகளும் விவரிக்கப்படுவதால் "இராஜ யக்ஷ்மாதி..." என்று கூறப்படுகிறது.

**இராஜயக்ஷ்மா.**

அநேக ரோகங்களால் பின் தொடரப்பட்டதும், முன் செல்லும் அநேகம் வியாதிகளையுடையதுமான இராஜ யக்ஷ்மாவானது க்ஷயம் என்றும், சோஷம் என்றும், ரோகராஜன் என்றும் வழங்கப்படும். 1.

**இராஜயக்ஷ்மாவின் வரலாறும் விற்பத்தியும்.**

இந்த வியாதியானது ஆதியில் நக்ஷத்திரங்களுக்கும் பிராம்மணர்களுக்கும் அரசனான சந்திரனுக்கு உண்டானதாலும், வியாதிகளுக்கெல்லாம் அரசன் எனத் தகுந்ததாயிருப்பதாலும், யக்ஷ்மா என்னும் பெயரால் முதலில் குறிப்பிடக் கூடியதாயிருப்பதாலும் "இராஜயக்ஷ்மா" என்று விவ



ஹரிக்கப் படுகின்றது. தேஹத்திற்கும் ஔஷதங்களுக்கும் க்ஷயமுண்டுபண்ணுந் தன்மையுடையதாகையாலும், அவ்விதம் அவை க்ஷயிப்பதால் இவ்வியாதி உற்பத்தியாவதாலும் இவ்வியாதி "க்ஷயம்" என்றும் கூறப்படுகிறது. இரஸம் முதலிய தாதுக்களை சுஷ்கமாகச் செய்வதால் "சோஷம்" என்றும் சொல்லப்படுகிறது. ரோகங்களுக்குள் முக்கியமாக விளங்குவதால் "ரோகராஜன்" என்றும் கருதப்படுகின்றது. 2, 3.

**இராஜயக்ஷ்மாவின் ஹேதுக்கள்.**

ஸாஹஸமான காரியங்களைச் செய்வது, வேகங்களை அடக்குவது, சுக்ரம்-ஓஜஸ்-ஸ்நேஹம் இவை க்ஷயமடைவது, அன்ன-பானங்களை உபயோகிப்பதற்கான விதிகளை யுக்தப்படி நிறைவேற்றுமை ஆக இந்த நான்கு காரணங்களால் இராஜயக்ஷ்மா உண்டாகும். 4.

**இராஜயக்ஷ்மாவின் ஸம்ப்ராப்தி.**

அக்காரணங்களால் தூண்டப்பட்டு பிரகோபமடைந்த வாதமானது பித்த-கபங்களையும் தூண்டி, அவற்றுடன் தேஹத்திலுள்ள எல்லா ஸந்திபாகங்களிலும் பிரவேசித்து, அப்பிரதேசங்களையும் விரைகளையும்[1] அழுத்திப் பிடித்து, ஸ்ரோதஸ்ஸுகளின் முகத்வாரங்களை யெல்லாம் அடைத்து அல்லது அவற்றை அதிக விரிவாகச் செய்து, அப்பால் தேஹத்தின் மேற் புறங்களிலும் கீழ்ப் புறங்களிலும் குறுக்குப் பக்கங்களிலும் பரவியதாய், அந்தந்த நிலைமைகளுக்கும், கால-தேச-பிரக்ருதி ஸ்வபாவங்களுக்கும் ஏற்றவாறு பிணிகளை யுண்டுபண்ணும். 5, 6.

1. விரைகள் என்று குறிப்பிட்டது உபலக்ஷணம்; ஆனால் இதனால் இரத்தக் குழாய்கள் அனைத்துமே குறிக்கப் பட்டதென்று அறிக.

**இராஜ யக்ஷ்மாவின் பூர்வ ரூபங்கள்.**

இராஜ யக்ஷ்மா உண்டாகும்போது ஸம்பவிக்கும் பூர்வ ரூபக்குறிகள் அடியில் வருமாறு:—பிரதிச்யாயம்,[1] அதிக தும்மல், வாயில் உமிழ்நீர் அதிகமாகக் கசிதல், வாயில் ஒருவாறு இனிப்பு உண்டாதல், அக்னி மாந்த்யம், தேஹம் இளைத்துப் போதல், பாத்திரங்கள்-தட்டு முட்டுகள்-அன்னபானங்கள் இவை முதலியவை நிர்மலமாயிருக்கையிலும் அசுத்தமா யிருப்பதாகத் தோற்றுதல், அன்னபானங்களிலேயே பெரும்பாலும் ஈக்களும் துரும்புகளும் மயிர்களும் மற்றும் அசுத்தங்களும் விழுவதாகக் காணுதல், இயற்கைக்கு விரோதமான இருதயத்துடிப்பு, வாந்தி, அரோசகம், வேண்டியவளவு உணவுகளைப் புஜித்து வருகையிலும் தேஹவலிமை க்ஷயித்துப்போதல், அடிக்கடியும் தன் கைகளை உற்றுப்பார்த்தல், பாதத்தில் வீக்கம், கண்கள் மிகவும் வெளிறிப்போதல், புயங்களின் அளவுகளை அறியவேண்டு மென்கிற விருப்பம், சரீரம் நன்றா யிருக்கையிலேயே அதில் ஏதோ அருவருப்பான விகாரங்கள் உண்டாயிருப்பதாகக் காணுதல், ஸ்த்ரீகளிடத்திலும் மதுபானத்திலும் இறைச்சி யுண்பதிலும் விருப்பம், அதிக இரக்கமுள்ளவனாயிருத்தல், தலையில் முக்காடிட்டுக் கொள்ளுதல், நகங்களும் மயிர்களும் அதிகமாய் வளர்ந்து போதல், வண்டுகள் ஓணான்-ஸர்ப்பம்-குரங்கு-மற்றுமுள்ள காட்டு விலங்குகள்-பக்ஷிகள் இவற்றால் துன்பப்படுத்தப் படுவதாகவும், மயிர்க் குவியல்களின் மீதும்-எலும்புக் குவியல்களின் மீதும்-உமிப்போர்களின் மேலும்-சாம்பர்க் குவியலின் மேலும் ஏறிப்போவதாகவும், கிராமங்களும் தேசங்களும் பிராணிஸஞ்சாரமற் றிருப்பதாகவும், ஜலம் வற்றிப்

1. பிரதிச்யாயம்-ஒருவகை நாஸாரோகம். (பீநஸபேதம்).

போவதாகவும், பர்வதங்களைப் போன்ற தேஜோராசிகள் கீழே விழுவதாகவும், விருக்ஷங்கள் எரிந்துகொண் டிருப்பதாகவும் ஸ்வப்னங்களில் தோற்றுதல் என்னும் இவைகளே யாம். 7—12½.

*இராஜ யக்ஷ்மாவில் பதினொரு விதமான பொதுக் குறிகள்.*

க்ஷயத்திற்குக் காரணமான தோஷம் தேஹத்தில் மேற்புறங்களைப் பற்றியதா யிருந்தால்[1] பீநஸம், ச்வாஸம், காஸம், தோளிலும் சிரஸ்ஸிலும் பேசும் போது தொண்டையிலும் வலி, அரோசகம் இவை ஸம்பவிக்கும். தோஷம் கீழ் அங்கங்களில் எதையாவது ஆச்ரயித்திருந்தால் அதிக மலக் கழித்தலும் அல்லது மலம் சுஷ்கித்துப் போவதும் இயல்பு. தோஷம் குடலை அல்லது மத்திய காயத்தைப் பற்றியதா யிருந்தால் வாந்தி அதிகமா யுண்டாகும், தோஷம் குறுக்காகப் பக்கங்களை ஆச்ரயித்ததாயிருந்தால் பக்கச் சூலை யுண்டாகும். அதுவே ஸந்திகள் என்னும் பூட்டுகளைப்பற்றி யிருந்தால் ஜ்வரம் ஸம்பவிக்கும். இராஜயக்ஷ்மாவினால் வருந்துகிற பிணியாளிக்கு இவ்விதம் பதினொரு விதமான வியாதிக்குறிகள் தோன்றும். 13—14½.

*இராஜ யக்ஷ்மாவின் உபத்திரவங்கள்.*

அப்பதினொரு விதமான குறிகளுக்கும் அடியில் குறிப்பிடப்படுபவை உபத்திரவங்களாகும்[2] :—தொண்டை பேசமுடியாமற் போதல், மார்புவலி, கொட்டாவி, உடல் முழுமையும் நோவுண்டாதல், கபம் அதிகமாய் ஊறுதல், பசியின்மை, வாயில் துர்நாற்ற முண்டாதல் என்பனவாம். 15½.

*இராஜயக்ஷ்மாவில் வாத-பித்த-கபங்களால் உண்டாகும் குறிகள்.*

இராஜயக்ஷ்மாவில் வாதம் அதிகரிக்குமானால் தலைவலி, பக்கவலி, மாம்ஸங்களிலும் மற்ற அவயவங்களிலும் நசுக்கப்படுவது போன்ற வேதனை, தொண்டையடைப்பு, குரல் கம்மிப் போதல் இக்கோளாறுகள் உண்டாகும். பித்தம் அதிகரிக்குமானால் பாதங்களிலும் தோள்களிலும் கைகளிலும் அழற்சியும், அதிஸாரமும், இரத்த வாந்தியும், வாயில் ஒருவித துர்க்கந்தமும், ஜ்வரமும், வெறியும் ஸம்பவிக்கும். கபம் அதிகரித்தால் அரோசகம், வாந்தி, காஸம், முக்கியமாய் தலையிலும் ஸாதாரணமாய் உடம்பில் எங்கும் பாரம் அதிகரித்ததாகத் தோற்றுதல், வாயில் நீர் ஊறுதல், பீநஸம், ச்வாஸம், குரல் கம்மிப்போதல், அக்னி மாந்த்யம் இவை உண்டாகும். 16-18.

*இராஜயக்ஷ்மாவில் தாது க்ஷயத்திற்குக் காரணங்கள்.*

மலினமான கசிவுகளுடன் கூடியவையும், கபத்தின் அம்சத்தை அதிகமாக பெற்றவையுமான தோஷங்களால் ஸ்ரோதஸ்ஸுகளின்[1] த்வாரங்கள் அடைக்கப்படுவதாலும், அக்னிமாந்தியத்தினால் தாதுக்களுடைய இயற்கைச் சூடு குறைந்துபோய் அற்பமா யிருப்பதாலும் இரஸமானது தனது ஸ்தானத்திலேயே[2] ஒருவாறு தஹிக்கப்பட்டு, அந்தந்த உபத்திரவங்களை உண்டுபண்ணும்; இரத்தமும் மாம்ஸம்

1. க்ஷய ரோகத்திற்குக் காரணமான தோஷம், தேஹத்திற்கு முற்றிலுமே பொதுவாகக் கெடுதி யுண்டுபண்ணுவதா யிருந்தாலும், குறிப்பிட்ட சிற்சில பாகத்தையே முக்கியமாகத் தாக்கிவரும் என்று இதனால் ஏற்படுகிறது.

2. உபத்திரவம்-இதைப்பற்றி 8-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

1. ஸ்ரோதஸ்ஸுகள்—314-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

2. கோஷ்டத்திலேயே இயற்கைக்குத் தகாதவிதமாய் ஒருவித பாகத்தையடைந்து, இரத்தம் முதலிய தாதுக்களாக இரஸம் அவ்வளவாய் மாறுமல் மலத்துடன் மலமாகச் சேர்ந்துவிடக் கூடிய ஒருவித நிலைமையைப் பெற்று வரும்.



முதலிய தாதுக்களைப் போஷிப்பதற்குப் போகாமல் மேல் நோக்கி ஓடும். இப்பிணியாளியின் குடலிலேயே பாசகாக்னியினலேயே அன்னம் பக்குவம் செய்யப்படுகின்றதாகையால், அவ்வுணவு பெரும்பாலும் மலமாகவே மாறிவிடுவதால், தாதுக்களைப் போஷிப்பதற்குப் போதுமானதே யல்ல.[1] இந்த ரோகியின் தேஹத்தில் இரஸ தாதுவானது இரத்தமாகவே பரிணமமடையாம லிருக்கும்போது, மாம்ஸம் முதலியதாகப் பக்குவமாவ தெங்ஙனம்? க்ஷயரோகமுள்ளவன், கேவலம் மலத்தினல் மட்டும் ஒருவாறு திடன் பெற்று ஏதோ ஒருவிதமாய் உயிருடன் இருந்து வருவான். 19—22.

*இராஜயக்ஷ்மாவில் ஸாத்தியாஸாத்திய நிலைமைகள்.*

இராஜ யக்ஷ்மாவுக்குக் கூறப்பட்டுள்ள இலக்ஷணங்கள் சொற்பமா யுண்டாயிருக்கையிலேயும் க்ஷீணித்துப்போய், வியாதியின் வேகத்தையும் ஔஷத பலத்தையும் தாங்க முடியாதவனன ரோகிக்கு வியாதி அஸாத்தியமானது என்று அவனைப் பரிஹரித்துவிடலாம். அவ்விதமான குறிகள் உண்டாகாமலிருந்தால் எல்லா நிலைமையிலும் தகுந்த சிகித்ஸைகளைச் செய்துவரலாம். 23.

### ஸ்வரபேதம்.[2]

*ஸ்வரபேதம் ஆறுவிதம்.*

மூன்று விதமான தோஷங்களால் தனித்தனியே மூன்றுவித ஸ்வரபேதங்களும், ஸந்நிபாதத்தினல் ஒன்றும், க்ஷயத்தினல் ஒன்றும், மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிப்பதால் ஒன்றும் ஆக ஆறுவிதமான ஸ்வரபேதங்கள் உண்டு. அவற்றுள் வாதத்தினல் உண்டான ஸ்வரபேதத்தில் பிணியாளியின் குரலானது மழுக்கங்கொண்டும், ரூக்ஷமாகவும், நிலையற்றதாகவும் இருப்பதுடன், தொண்டையில் ஏதோ முளைகள் நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சியும், ஸ்நிக்த்தமும் உஷ்ணமுமான சிகித்ஸையினல் உபசாந்தி யடையக்கூடிய தன்மையும் உடையதா யிருக்கும். பித்தத்தினல் உண்டாகும் ஸ்வரபேதத்தில் தவடைகளிலும் தொண்டையிலும் அழற்சியும், உடலிளைப்பும், பேசுவதில் வெறுப்பும் உண்டாகும். கபத்தினல் உண்டான ஸ்வரபேதத்தில் தொண்டையானது கபத்தினல் பூசப்பட்டது போன்ற உணர்ச்சி யுண்டாகும்; குரகுர என்னும் சப்தத்தோடு குரலானது மந்தமாகவும், தொண்டைக் கட்டுடன் கூடியதாகவும் இருக்கும். ஸந்நிபாதத்தினல் உண்டாகும் ஸ்வரபேதத்தில் முற்கூறிய மூன்று தோஷங்களால் உண்டாகும் குறிகளும் காணப்படும். க்ஷயத்தினல் உண்டாகிற ஸ்வரபேதத்தில் கண்டத்தின் தொனி மிகச் சிரழியும்; தொண்டையில் வெக்காடு மிகவும் அதிகரித்துக் காணும். மேதஸ்ஸினல் உண்டாகும் ஸ்வரபேதத்தில் பேசும்போது உச்சரிக்கப்படும் எழுத்துக்கள் நன்கு விளங்காதவையா யிருக்கும், கபஜ ஸ்வரபேதத்தின் மற்றக்குறிகளும் உண்டாகும். இவற்றுள் ஸந்நிபாத ஸ்வரபேதமும், இறுதியிற் கூறப்பட்ட ஸ்வரபேதமும் சிகித்ஸைக்கு வசப்படாதவையாம். 24—27.

### அரோசகம்.[1]

*அரோசகம் ஐந்து விதம்*

நாக்கையும் மனதையும் ஆச்ரயித்துள்ள தோஷங்களால் அரோசகம் உண்டாகும். அவற்றுள் வாத பித்த - கபங்களால் தனித்தனியே மூன்று விதமான அரோசகங்களும்,

1. தாதுக்களைப் போஷிக்கப் போதுமானதல்ல என்பதால், தேஹம் முற்றிலும் சிதைந்து திடீரென்று மரண முண்டாகாமல் நீடித்த காலம் வியாதியுடன் போராடிக்கொண்டு ஜீவித்திருக்கும்படி செய்யப் போதுமானதல்ல என்று கூறப்படுகிறது.

2. ஸ்வரபேதம்—குரல் இயற்கைப்படி யில்லாமல் வெவ்வேறு வகையில் வித்தியாஸப்பட்டுக் காணுதல். க்ஷயரோகத்திற்கு ஸ்வரபேதம் உபத்திரவமாகையால், அது இங்கேயே விவரிக்கப்படுகிறது.

1. அரோசகம் - ருசி அல்லது சுவையை உணர்வதில் நாக்குக்கு உண்டாகும் கோளாறு.

ஸந்நிபாதத்தினால் நான்காவது அரோசகமும், மனோ வேதனையால் ஐந்தாவது அரோசகமும் உண்டாகும். வாதத்தினால் உண்டாகும் அரோசகத்தில் வாயில் துவர்ப்பு அதிகரிக்கும். பித்தத்தினால் உண்டாவதில் வாயில் கசப்புமேலிட்டிருக்கும். கபத்தினால் உண்டாவதில் வாய் இனிப்பாயிருக்கும். ஸந்நிபாதத்தினால் உண்டான அரோசகத்தில் வாயில் எவ்விதமான சுவையும் உணரக்கூடாததாகும். மானஸிக தோஷத்தினால் உண்டாகும் அரோசகத்தில் சோகம், கோபம் முதலிய விகாரங்களின் தன்மைக்குத் தகுந்தவாறு எந்தெந்த தோஷங்கள் கோளாறடைகின்றனவோ, அத்தோஷங்களுக்கு ஏற்றவிதமான குறிகள் காணப்படும். 28, 29.

## சர்த்தி.[1]

*சர்த்தி ஐந்து விதம்.*

வாத - பித்த - கபங்களால் தனித்தனியே மூன்றுவிதமான சர்த்திகளும், ஸந்நிபாதத்தினால் நான்காவது சர்த்தியும், சில விஷயங்களைக் காண்பதால் ஐந்தாவது சர்த்தியும் உண்டாகும். உதாந வாயுவானது[2] கோளாறடைந்ததாய் எல்லாத் தோஷங்களையும் மேல் நோக்கித் தள்ளுகின்றது.[3] 30.

*சர்த்திகளின் பூர்வரூபங்கள்.*

தோஷங்கள் அவற்றின் ஸ்தாநங்களிலேயே சிறுகச் சிறுக ஊறி வருதல், வாய் உப்புக் கரித்தல், வாயில் உமிழ் நீர்க் கசிதல், அரோசகம் இவை சர்த்திகளின் பூர்வரூபங்களாம். 30½.

*வாதத்தினாலுண்டாகும் சர்த்தி.*

வாததோஷமானது நாபியிலும் பிருஷ்டபாகத்திலும் பாரிசங்களிலும் வலியை யுண்டுபண்ணிக் கொண்டு, வயிற்றிற் சென்றுள்ள உணவை மேல் நோக்கித் தள்ளி, இடையிடையில் விட்டுவிட்டு, மிகச் சொற்ப அளவாகவும், துவர்ப்பாகவும், நுரைத்ததாகவுமுள்ள உணவுப் பொருளை வமநம் பண்ணச் செய்யும்; அவ்வமனத்தில் வரும் வஸ்து கறுநிறமாகவும் கலக்கமற்றதாகவும் இருக்கும்; அப்பொழுது வாந்தியாகும் சப்தமும், ஏப்பமும், வமநவேகமும், வெகு பலமாயுண்டாவதோடு, மிகவும் சிரமப்பட்டும் வாந்தியுண்டாகும். இருமல், வாய் உலர்ந்து போதல், இருதய நோக்காடு, சிரோ வேதனை, பேசும்போது தொண்டைவலி, உடல் வாட்டம் இவையும் தொடர்ந்து உண்டாகும். 31—32½.

*பித்தத்தினாலுண்டாகும் சர்த்தி.*

பித்தத்தினால் உண்டாகும் சர்த்தியில் வெளிவரும் வஸ்துவானது க்ஷாரங் கலந்த ஜலத்திற்கு ஒப்பிடக் கூடியதாகவும், கறுஞ்சிவப்பு நிறமாகவும், அல்லது இலைப் பசுமை அல்லது மஞ்சட்பசுமை நிறமுடையதாகவும், இரத்தத்தோடு கூடியதாகவும், அம்லமாகவும், காரப்புள்ளதாகவும், நாவறட்சியும், கொதிப்பு அல்லது அழற்சியுடையதாகவும் இருக்கும். 33½.

*கபத்தினாலுண்டாகும் சர்த்தி.*

கபத்தினால் வெளியாகும் வஸ்துவானது ஸ்நிக்தமாகவும், தடிப்பாகவும், குளிர்ச்சியாகவும், நூல் போன்ற கபக் கோடுகளால் சூழப்பட்டதாகவும், சுவையில் ஒருவாறு இனிப்புடன் கூடியதாகவும், அதிக அளவாகக் கசிவதாகவும் இருக்கும். இவ்வமநம் உண்டாகும்போது மயிர்ச் சிலிர்க்கையும், வாயில் கொப்புளங்களும், வாயில் ஒருவித இனிய

1. சர்த்தி - வாந்தி அல்லது வமநம்.

2. உதாநவாயு - 100-வது பக்கத்தில் பஞ்ச வாயுக்கள் என்னும் தலையங்கத்தைப் பார்க்க.

3. சர்த்திகளில் வாதத்தினால் உண்டாகும் சர்த்தி மாத்திரமன்றி, பித்தாதிகளால் உண்டாகும் சர்த்திகளிலும் வாதத்தின் செயல் முக்கியமானது என்பதைக் குறிப்பிடவே "எல்லாத் தோஷங்களையும்" எனப்படுகிறது.



சுவையும், சோம்பலும், இயற்கைக்கு விரோதமான இருதயத்துடிப்பும், காஸமும் தொடர்ந்துண்டாகும். 34, 35.

*ஸந்நிபாதத்தினாலுண்டாகும் சர்த்தி.*

ஸந்நிபாதத்தினால் உண்டாகும் சர்த்தியானது எல்லாக் குறிகளோடும் கூடியதாயிருக்கும்; மேலும் ரிஷ்ட ப்ரகரணத்திற் கூறப்பட்டுள்ள இலக்ஷணங்கள் எவையுண்டோ அவையும் தோன்றும்;[1] இந்த சர்த்தியானது சிகித்ஸைக்கு வசப்படாதாகையால், இதை அஸாத்தியம் என்று பரிஹரித்துவிட வேண்டும். 35½.

*அருவருப்பான விஷயங்களைப்பற்றிய சர்த்தி.*

துர்க்கந்தங்களையும், மலம் முதலிய அசுத்தங்களையும், மற்றும் அருவருக்கத்தகுந்தவைகளையும் பார்த்து கேட்பது முதலியவற்றால் மனம் தாக்கப்படுவதாலும், அல்லது இருதயம் கிலேசப்படுமானாலும் அருவருப்பான விஷயங்களின் ஸம்பந்தமாய் சர்த்தியுண்டாகும். 36, 36½.

*வேறுவிதமான சர்த்திகள்.*

கிருமிகள் வயிற்றில் சேருவதாலும், த்ருஷ்ணையென்னும் நாவறட்சியினாலும், ஆம தோஷத்தினாலும், கர்ப்பம் தரிப்பதாலும் நேரிடுவதாகக் கருதப்படும் சர்த்திகளையும் வாதாதி தோஷங்களால் ஸம்பவிக்கும் சர்த்திகளிலேயே சேர்ந்தவைகளென்று அறிய வேண்டும். வயிற்றுவலி, நடுக்கம், இருதயத்தின் இயற்கைக்கு மாறான துடிப்பு இவ்விசேஷக் குறிகளைக் கொண்டும், கிருமிகளாலுண்டாகும் ஹ்ருத்ரோகக் குறிகளைக் கொண்டும் கிருமியினால் ஸம்பவிக்கும் சர்த்தியைக் குறிப்பிட்டுக் கூறலாம். 37, 37¾.

1. சாரீர ஸ்த்தானத்தில், விக்ருதி விஞ்ஞாநாத்தியாயத்தில் "வியாதிகளைப்பற்றிய ரிஷ்டங்கள்" என்கிற தலையங்கத்தின் கீழே (297-ம் பக்கம்) சர்த்தி ஸம்பந்தமான ரிஷ்ட விவரங்களைக் காண்க.

## ஹ்ருத் ரோகங்கள்.[1]

*ஹ்ருத்ரோகம் ஐந்து விதம்.*

ஹ்ருத்ரோகங்கள் ஐந்து வகைப்படும். இவ்வியாதிகள் குல்ம நிதாநத்தில் கூறப்படுகிற காரணங்களால்[2] உற்பத்தியாகின்றன. 38½.

*வாத ஹ்ருத்ரோக லக்ஷணங்கள்.*

வாத தோஷத்தினாலுண்டாகும் ஹ்ருத்ரோகத்தில், இருதயத்தில் குத்தலும் வலியும் உண்டாகும்; அது வெடித்துப் போவது போலவும் பிளக்கப் படுவது போலவும், சுஷ்கித்துப் போவது போலவும் தாங்கமுடியாத நோயுண்டாகும்; மேலும் இருதயம் அசைவற்றதாகவும், உட்புறம் சூனியமாய்விட்டது போலவும், அல்லது அதிகவேகமாய் ஓடுவதாகவும் காணப்படும். திடீரென்று தீரத்தன்மையும், துயரமும், பயமும், சப்தங்களைத் தாங்கமுடியாத நிலைமையும், உடல் நடுக்கமும், சில அவயவங்களில் கொறுக்கு வலியும், மயக்கமும், மூச்சடைப்பும், தூக்கக் குறைவும் ஸம்பவிக்கும். 39—40½.

*பித்த ஹ்ருத்ரோக லக்ஷணங்கள்.*

பித்தத்தினாலுண்டாகும் ஹ்ருத்ரோகத்தில் அடியில் வரும் இலக்ஷணங்கள் தோன்றும்:—நாவறட்சி, தலைச்சுற்றல், மூர்ச்சை, அழற்சி, வியர்வை அதிகரித்தல், புளித்த ஏப்பம், தேஹ வாட்டம், அம்லமான பித்தம் வாந்தியாதல், நெஞ்செரிவு, உடல் ஒருவாறு மஞ்சள் நிறமாக மாறுதல், ஜ்வரம் என்பனவாம். 41½.

1. ஹ்ருத்ரோகங்கள் - இருதயத்தைப்பற்றிய வியாதிகள்.

2. மேலே 11-வது அத்தியாயத்தில் 31-வது முதலுள்ள ச்லோகங்களின் மொழி பெயர்ப்புகளை (குல்மநிதாந விஷய ஸம்பந்தமாய்) கவனித்துப் பார்க்க.

**கப ஹ்ருத்ரோக லக்ஷணங்கள்.**

கபத்தினுலுண்டாகும் ஹ்ருத்ரோகத்தில் அடியில் வரும் குறிகள் காணப்படும்:—இருதயம் அசைவற்றது போலத் தோற்றுதல், உட்புறத்தில் கல் இருப்பது போல குருவாகப் போதல், காஸம், அக்னிமாந்த்யம், உமிழ்நீர் ஊறுதல், அதிக நித்திரை, சோம்பல், அரோசகம், ஜ்வரம் என்பனவாம். 42½.

**ஸந்நிபாத ஹ்ருத்ரோக லக்ஷணங்கள்.**

மூன்று தோஷங்களும் ஒருமிக்கச் சேர்ந்து உண்டாகும் ஸந்நிபாத ஹ்ருத்ரோகத்தில், முற்கூறிய மூன்று வகையான ஹ்ருத்ரோகங்களுடைய குறிகளும் உண்டாகும். 42¾.

**கிருமி ஹ்ருத்ரோக லக்ஷணங்கள்.**

கிருமிகளால் உண்டாகும் ஹ்ருத்ரோகத்தில்[1] அடியில்வரும் குறிகள் காணப்படும்:--கண்கள் கறுத்துப்போதல், பார்வை இருளடைதல், இயற்கைக்கு விரோதமான இருதய சலனம், உடல் இளைத்துப்போதல், சொறி, கபம் ஊறிக்கொண்டிருத்தல், அடிக்கடியும் இருதயம் வாளால் அறுக்கப்படுவதுபோல் தாங்கமுடியாத உணர்ச்சியுண்டாதல் என்பனவாம். இக்கொடிய வியாதி வெகு சீக்கிரத்தில் பிராணாபாயம் விளைவிக்குந் தன்மையதாகையால், வெகு துரிதமாய் இதற்குச் சிகித்ஸை செய்யவேண்டும். 43—44½.

## த்ருஷ்ணாரோகம்.[2]

**த்ருஷ்ணா ரோகம் ஆறு விதம்.**

வாதத்தினாலும், பித்தத்தினாலும், கபத்தினாலும் தனித்தனியே ஒவ்வொரு த்ருஷ்ணாரோகமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரஸம் க்ஷயிப்பதால் ஒன்றும், உபஸர்க்கத்தினால் ஒன்றும் ஆக ஆறுவித த்ருஷ்ணைகள் உண்டு. 45¼.

**த்ருஷ்ணா ஸம்ப்ராப்தி.**

த்ருஷ்ணாரோகம் அனைத்துக்குமே வாத-பித்தங்கள் முக்கிய காரணங்கள்; அத்தோஷங்களும் தேஹத்திலுள்ள ஸௌம்யதாதுக்கள் வற்றிப்போவதால் பிரகோபிக்கின்றன; அவ்விதம் அவை பிரகோபிப்பதால் தேஹமெங்கும் தாபமும், தலைச்சுற்றலும், நடுக்கமும், நாவறட்சியும், எரித்தலும், மூர்ச்சையும் உண்டாகும். நாக்கின் அடிப்பிரதேசம், தொண்டை, க்லோமா,[1] தவடைகள் இவற்றிலடங்கிய நீர்ப்பொசிக்கும் குழல்கள்[2] வற்றிப்போய் பலவிதமான த்ருஷ்ணைகள் உண்டாகின்றன. 46—47½.

**த்ருஷ்ணையின் பொதுவான இலக்ஷணங்கள்.**

எல்லாவித த்ருஷ்ணைகளுக்கும் பொதுவான இலக்ஷணங்கள் பின்வருமாறு:—வாய் உலர்ந்துபோதல், தண்ணீரைக் குடிக்கக்குடிக்க திருப்தியுண்டாகாமை, அன்னத்வேஷம், தொண்டைக்கம்மல், தொண்டையும்-உதடுகளும்-நாக்கும் சுறசுறத்துப்போதல், நாக்கு வெளியில் பிதுங்கி அல்லது தொங்கி இருத்தல், தேஹவாட்டம், வாய்ப்பிதற்றல், மனம் சோர்ந்துபோதல், அங்ஙனமே நாவறட்சியை அடக்குவதால் உண்டாகக் கூடியவையென்று கூறப்பட்ட வேறு விகாரங்கள்[1] என்பவையேயாம். 48, 49.

1. குடலில் கிருமிகள் உற்பத்தியாய் அதிகமாகச் சேர்ந்திருப்பதால், அருகிலே மார்பறையிலிருக்கும் ஹிருதயத்தின் இயற்கைச் செயல்கள் ஒருவாறு கோளாறடைவது வழக்கமாகையால், கிருமிகளால் உண்டாகும் ஹ்ருத்ரோகம் எனக் கூறப்பட்டது.

2. த்ருஷ்ணா—நாவறட்சி; தேஹத்தில் நீர்ப்பொருட்கள் சுஷ்கித்துப்போவதால் உண்டாகும் வியாதி.

1. க்லோமா—இரைப்பைக்கு அடியில் ப்லீஹத்துக்கும் யக்ருத் என்னும் கல்லீரலுக்கும் இடையில் நீண்டிருக்கும் ஒருவித கிரந்தி. இது ஆங்கிலத்தில் பாங்க்ரியஸ் (Pancreas) எனப்படும்.

2. நீர்ப்பொசிக்கும் குழல்கள் — உமிழ் நீர் முதலியதை ஸ்ரவித்துவரும் கிரந்திகள்.



**வாதத்ருஷ்ணை.**

வாததோஷத்தினாலான த்ருஷ்ணையில் தேஹம் இளைத்துப்போதல், தீனமான நிலைமை, கன்னத்தில் குடைத்தல், தலைச்சுற்றல், மணமறியமுடியாமை, வாயில் அருவருப்பு, கம்மல், அதிகமான நித்திரை, தேஹவன்மை க்ஷயித்துப்போதல், குளிர்ந்த ஜலத்தைக் குடிப்பதால் வியாதி விருத்தியாதல் என்கிற குறிகள் உண்டாகும்.[2] 50¼.

**பித்த த்ருஷ்ணை.**

பித்தத்தினாலுண்டாகிற த்ருஷ்ணா ரோகத்தில் மூர்ச்சை, வாயில் விரணமுண்டாதல், கண்கள் சிவந்துவிடுதல், அடிக்கடியும் நாக்கு முதலியது உலர்ந்துவிடுதல், அழற்சி, தேஹத்தினுள்ளிருந்து தூமம் கிளம்புவதுபோன்ற உஷ்ணமான உணர்ச்சி இவை உண்டாகும். 51.

**கப த்ருஷ்ணை.**

கபம் பிரகோபமடைந்து நீர்ப்பொசிக்கும் குழல்களுக்குள் வாயுவைத் தடுத்துவிடும்; அதனால் குழல்களுள் கபம் சேற்றைப்போல உலர்த்தப்படும். தொண்டையில் முளைகளால் வியாபித்திருப்பதுபோல் வேதனை உணரப்படும்; நித்திரை அதிகமாயுண்டாகும்; வாய் இனிப்பாயிருக்கும்; வயிறு பொருமிக்கொள்ளும்; தலை பாரமாகும்; உடல் சலனமற்றது போல் விறைத்துக்கொள்வதாகத் தோற்றும்; வாந்தியுண்டாகும்; அரோசகமும், சோம்பலும், உணவு முதலியது ஜீர்ணமாகாமற்போதல் இவையும் உண்டாகும். 52—53¼.

**ஸந்நிபாத த்ருஷ்ணை.**

வாத-பித்த-கபங்கள்சேர்ந்து ஸம்பவிக்கும் ஸந்நிபாத த்ருஷ்ணையில், அத்தோஷம் ஒவ்வொன்றாலும் உண்டாகும் த்ருஷ்ணைகளுக்கு ஸம்பவிப்பதாக முற்கூறிய குறிகள் யாவும் காணப்படும். 53½.

**த்ருஷ்ணா விசேஷங்கள்.**

உணவுகளால் ஸ்ரோதோமார்க்கங்கள் தடுக்கப்படுவதால், வாத-பித்தங்கள் பிரகோபமடைந்து ஆமதோஷ ஸம்பந்தமான த்ருஷ்ணை உண்டாகின்றது. உஷ்ணத்தினால் வாடி சிரமப்பட்டு துரிதமாகக் குளிர்ந்தநீரை உபயோகிப்பவனுக்கு, உடற்சூடு தடுக்கப்பட்டு குடலிற்சென்று யாதொரு நாவறட்சியை உண்டுபண்ணுகிறதோ அது பித்தத்தினாலேயே உண்டாகின்றது; மதுமுதலிய பானவகைகளை அதிகமாகக் குடிப்பவருக்கு யாதொரு த்ருஷ்ணை உண்டாகின்றதோ, தீக்ஷ்ணாக்னியென்கிற தீவ்ரமான பசியுள்ளவனுக்கு ஸ்நேஹவஸ்துக்களின் உபயோகத்தால் யாதொரு த்ருஷ்ணை ஸம்பவிக்கின்றதோ அவையும் பித்தத்தினாலேயே உற்பத்தியாகின்றன. ஸ்நிக்த்தமாகவும், குருகுணமுள்ளதாகவும், அம்ல-லவண ரஸங்கள் கலந்ததுமான உணவைப் புஜிப்பதாலும் கபஸம்பந்தமான த்ருஷ்ணையே உண்டாகும்.[1] 54—56.

1. இதன் விவரத்தை 26-வது பக்கத்தில் "நாவறட்சியைத் தடுப்பதாலுண்டாகும் விகாரங்கள்" என்கிற தலையங்கத்தைப் பார்க்க.

2. த்ருஷ்ணை ஸாதாரணமாய் வாத-பித்தங்களின் சேர்க்கையால் உண்டாவதாக அடியில் கூறப்பட்டது; ஆகிலும் வாத-பித்தங்களுள் எத்தோஷம் பிரமாணத்தில் அதிகமாகிறதோ, அத்தோஷத்தைக்கொண்டு வாதத்ருஷ்ணா முதலியவை வழங்கப்படுகின்றன.

1. ஆமதோஷஜ த்ருஷ்ணை முதலியவை ஆமதோஷம் முதலியவற்றால் உண்டானாலும், வாதாதிகளின் ஸம்பந்தம் விசேஷித்திருப்பதால், இவற்றையும் உண்டாக்குவதற்கு முதற்கூறிய தோஷங்களே ஸம்பந்தப்பட்டவையாம்.

*இரஸக்ஷயத்தினாலுண்டாகும் த்ருஷ்ணை.*

இரஸதாது க்ஷயிப்பதால் எவ்வித இலக்ஷணங்கள் உண்டாவதாக முன்னால் கூறப்பட்டிருக்கின்றனவோ,[1] அவ்வித இலக்ஷணங்களே இரஸக்ஷயத்தினால் உண்டாகும் த்ருஷ்ணையிலும் உண்டாகின்றன. 56½.

*உபஸர்க்கத்தினாலுண்டாகும் த்ருஷ்ணை.*

க்ஷயம், மூர்ச்சை, ஜ்வரம் முதலியவற்றுள் ஏதாவது நீண்ட காலம் தொடர்ந்து வருந்தச்செய்வதால் யாதொரு கடுமையான தாவறட்சி யுண்டாகின்றதோ, அது உபஸர்க்கத்தினால் உண்டாகிறதென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. 57½.

---

## ஆறாவது அத்தியாயம்.

இனி மதாத்யய நிதானம்[2] என்னும் அத்தியாயத்தை விவரிக்கப்போகின்றோம்:—

*மதுவின் தீய குணங்கள்.*

தீக்ஷ்ணம், உஷ்ணம், ரூக்ஷம், ஸௌக்ஷ்மம், அம்லம், வ்யவாயி, ஆசுகாரி, இலகு, விகாஸி, விசதம் என்கிற இக்குணங்கள்[3] மதுவுக்கு உண்டு; ஓஜோதாதுவில் இவற்றிற்கு நேர் எதிரிடையான குணங்கள்[4] அடங்கியிருக்கின்றன. மனதை நிலைகுலையச்செய்யும தீக்ஷ்ணாதி குணங்கள் விஷத்திலும் இருப்பதாகக் கூறப்படுகிறது; ஆனால், விஷத்திலடங்கிய அக்குணங்கள் அதிக வலிவுள்ளவைகளாகையால், உயிரை மாய்க்கக்கூடியவைகளா யிருக்கின்றன. 1, 2.

*மதத்தின் முதல் நிலைமை.*

மதுவானது முதலில் தீக்ஷ்ணம் முதலிய தனது பத்து குணங்களால் ஓஜஸ்ஸின் மந்தம் முதலிய பத்து குணங்களையும்முறையே சீர்குலையச் செய்து, மனதுக்குச் சொற்பம் கோளாறை யுண்டுபண்ணும்; இது மதம் என்கிற வெறியின் முதல் நிலைமையாகும். 3.

*மதத்தின் இரண்டாவது நிலைமை.*

மதத்தின் இரண்டாவது நிலைமையோ ஸாவதான மதியைப்போக்கி,ஸாஹஸங்களைச்செய்யத் தூண்டுவதற்கு ஆதாரமானது; அவ்வெறிகொண்ட நிலைமையிலுள்ள மனிதன் பற்பல விகற்பத்தோற்றங்களால் கேடுண்டு விவேகமற்றவனாய், முதலில் அந்த நிலைமை இன்பம் தரக்கூடியது என்று நினைத்து, சுகமிழந்து விடுகிறான். 4.

*மதத்தின்மிகத் தீங்கு விளைவிக்கும் நிலைமை.*

இராஜஸகுணம் அல்லது தாமஸகுணமுள்ள மனிதன் மத்திமமான இரண்டாவது மதத்திற்கும் உத்தமமான மூன்றாவது மதத்திற்கும் இடையிலுண்டான நிலை

1. இதைப்பற்றி 95-வது பக்கம் பார்க்க.

2. மதம் என்றால் வெறி; வெறியினாலுண்டாகும் தீங்குகளும், மதுவின் தீய குணங்களும், அவை ஸம்பந்தமான வியாதி விவரங்களும் இவ்வத்தியாயத்தில் கூறப்படுவதால், இது "மதாத்யய நிதானம்" என்று சொல்லப்படுகிறது.

3. தீக்ஷ்ணம் (38-ம் பக்கம் 39-ம் பக்கம்), உஷ்ணம், ரூக்ஷம், ஸௌக்ஷ்மம் (38-ம் பக்கமும் பார்க்க), வ்யவாயி (38-ம் பக்கமும் பார்க்க), இலகு, விசதம் இவற்றைப்பற்றி 5-வது பக்கம் பார்க்க. ஆசுகாரி-வெகு சீக்கிரத்தில் பிராணனைப் போக்குவது முதலிய வேலை செய்யக்கூடியது. விகாஸி - ஸந்திபந்தங்களை நெகிழச்செய்து, ஓஜஸ்ஸை உடலிலிருந்து விலக்கி விடும் குணம்.

4. மந்தம், சீதளம், ஸ்நிக்தம், ஸ்தூலம், மதுரம், ஸ்திரம், சிரகாரி, குரு, ச்லக்ஷ்ணம், பிச்சிலம் என்பவை முறையே தீக்ஷ்ணாதிகளுக்கு எதிரிடையான குணங்கள்.



மையைப் பெற்று, ஜடஸ்வரூபியாய், கட்டுக்கடங்காத வெறிகொண்ட யானைபோல எதையும் செய்யத்துணிவான். இந்த நிலைமை எத்தீங்குகளுக்கும் இருப்பிடமானது; துர்நடத்தைக்கு இதுவே ஆஸ்பதம்; பொல்லா வினைப் பயன்களால் ஸம்பவிக்கும் பலவிதமான துர்க்கதிகளை அடையும் உபாயத்தை உபதேசிப்பதற்கு இந்த நிலைமையே பரமாசிரியனாகும். 5, 6.

*மதத்தின் மூன்றாவது நிலைமை.*

மனிதன் மதத்தின் மூன்றாவது நிலைமையில்,[1] மிகவும் பாபாத்மாவாய், மரணத்தைக் காட்டிலும் அதிக கேடான விகார நிலைமையை யடைந்து, சவத்தைப் போல அசைவற்றவனாய் பூமியில் சாய்கிறான். 7.

*மதுவினாலுண்டாகும் தீமைகள்.*

மதுபானம் செய்வதில் பற்றுள்ளவன் தர்மாதர்மங்களையும், சுகதுக்கங்களையும், அநுகூலப் பிரதிகூலங்களையும், பிரயோஜனப் பிரயோஜனங்களையும் பகுத்தறிய வல்லமையற்றவனாய் விடுகிறானென்றால், கற்றறிவுள்ளவன் அதை எங்ஙனம் உபயோகிப்பான்? மோஹம், பயம், துயரம், கோபம், மரணம், உன்மாதம் என்னும் பித்துப்பிடித்தல், வெறி, மூர்ச்சை, அபஸ்மாரம், அபதானகம்[2] இவையெல்லாம் மதுவினால் ஸம்பவிக்கக்கூடியவை; சுருங்கச்சொல்லில், ஸ்மரணையிழந்து விழுதல் ஒன்று எதிலேனும் இருந்தால், அவ்வஸ்துவிலுள்ள மற்ற குணங்கள் அனைத்தும் நன்றன்று. முறைதவறாக உபயோகித்த உணவானது பிணியை அல்லது மரணத்தையாவது உண்டுபண்ணும்; மத்யமோவென்றால் அத்துடன் நிற்காமல், அறம்பொருள் இன்பங்களையும், புத்தியையும், தைரியத்தையும், இலஜ்ஜையையும், மற்றுமுள்ள சீர்மைகளையும் அழித்து விடக்கூடியது. 8—10½.

*மதுபானத்தினால் அதிகமதம் பெறாமலிருப்பவர்கள்.*

நல்ல தேஹவலிமையுள்ளவர்களுக்கும், உணவு உட்கொண்ட பின்பு மதுபானம் செய்பவருக்கும், அதிக தீனிகளைத் தின்பவருக்கும், ஸ்நிக்தமானவர்களுக்கும், மனோதிடனுள்ளவர்களுக்கும், வழக்கமாய் மதுபானம் செய்பவருக்கும், மதுபானம் செய்பவருடைய குடியில் பிறந்தவர்களுக்கும்,மேதஸ் என்னும் கொழுப்பும் கபமும் அதிகரித்த தேஹமுள்ளவர்களுக்கும், வாத-பித்தங்கள் குறைந்தவர்களுக்கும், பலமான ஜாடராக்னி யுள்ளவர்களுக்கும் மதுபானத்தினால் அதிகமாக வெறியுண்டாவதில்லை. 11, 12.

*மதுபானத்தினால் அதிகமதம் பெறுவார்கள்.*

முற்கூறியவர்களுக்கு நேர் எதிரிடையான நிலைமையுள்ளவர்களுக்கும்,[1] அதையே முக்கிய பானமாகக் கருதி அதே நினைவாயிருப்பவர்களுக்கும், கோபித்துக் கொள்ளும் இயல்புள்ளவர்களுக்கும் வெறி அதிகரிக்கும்; மேலும் புளிப்பும் ரூக்ஷகுணமுமுள்ள மத்யத்தினாலும், அதை அமிதமாய் உட்கொள்வதாலும், அஜீர்ணமாயிருக்கையில் அதை உபயோகிப்பதாலும் வெறி அதிகமாயுண்டாகும். 13.

1. மாதவநிதானம் முதலிய இதர நிதானக் கிரந்தங்களில் மதத்திற்கு நான்கு நிலைமைகள் கூறப்பட்டிருக்கின்றன; இங்கே மூன்றாம் நிலைமையை 3-வதுக்கும் 4-வதுக்கும் இடையிலுண்டாகும் ஒரு அவஸ்தையாகக் கூறி, 4-வது நிலைமையையே 3-வதாகக் கூறியிருக்கிறார்.

2. அபதானகம்—மேலே 15-வது அத்தியாயத்தின் 20-வது ச்லோகமொழி பெயர்ப்பைப் பார்க்க.

1. தேஹவலிமை குன்றியவர்கள், உணவின்றி மதுவையே அருந்துபவர், ரூக்ஷதேஹிகள், மனோதிடனில்லாதவர், குழந்தைகள் அல்லது கிழவர்கள் என்று இவ்வாறு முற்கூறியதற்கு எதிரிடையானவர்களை யுணர்க.

மதாத்யயம் நான்குவிதம்.

மதாத்யயமானது வாதத்தினுலும், பித்தத்தினுலும், கபத்தினுலும், ஸந்நிபாதத்தினுலும் ஆக நான்கு முகாந்தரங்களால் உண்டாகின்றன. எல்லா மதாத்யயங்களும் மூன்று தோஷங்களாலேயே உண்டாகின்றனவென்றுலும், எதெதில் எந்தெந்த தோஷம் மற்றதைவிட அதிகரித்திருக்குமோ, அவ்வ அந்தந்த தோஷத்தின் பெயரால் விவஹரிக்கப்படும்.[1] 14.

மதாத்யயத்தின் பொதுக் குறிகள்.

மதாத்யங்களின் பொதுக்குறிகள் பின்வருமாறு:—விசேஷமான மயக்கம், இருதயத்தில் வேதனை, மலம் உடைந்து கழிதல், அடிக்கடியும் நாவறட்சி, சீதளத்தையும் உஷ்ணத்தையும் மாறிமாறி யுண்டாக்கும் ஜ்வரம், அரோசகம், சிரஸ்ஸென்ன-விலாயெலும்புகளென்ன-இருதயமென்ன இவற்றில் நடுக்கம், மர்மங்கள் பிளக்கப்படுவது போன்ற வேதனை, இடுப்புப்பிடிப்பு, மார்புப்பிடிப்பு, கண்கள் இருளடைதல், காஸம், ச்வாஸம், நித்திரையின்மை, வியர்வை அதிகரித்தல், வயிறு ஸ்தம்பித்துப்போதல், வீக்கம், மனத்தடுமாற்றம், புலம்புதல், வாந்தி, வாயில் நீரூறுதல், தலைச்சுற்றல், துஸ்வப்னங்களைக் காணுதல் என்பவையேயாம். 15—17.

வாதமதாத்யக் குறிகள்.

வாதஸம்பந்தமான மதாத்யயத்தில் நித்திரையின்மையும், ச்வாஸமும், நடுக்கமும், தலைவலியும் உண்டாகும்; மேலும் நித்திரையில் இங்குமங்கும் ஓடுவதாகவும், எழும்பிக்குதிப்பதாகவும், பிரேதங்கள் என்னும் பூதங்களோடு பேசுவதாகவும் அவனுக்குத்தோன்றும். 18.

பித்த மதாத்யயக்குறிகள்.

பித்த மதாத்யயத்தில் உடலில் அழற்சி, ஜ்வரம், வியர்வை அதிகரித்தல், மயக்கம், அதிஸாரம், நாவறட்சி, தேஹம் பச்சை நிறமாகவும் மஞ்சள் நிறமாகவும் ஆதல், கண்களும் தவடைகளும் சிவந்துபோதல் என்னும் இக்குறிகள் உண்டாகும். 19.

கபமதாத்யயக் குறிகள்.

கபமதாத்யயத்தில் வாந்தியும், இயற்கைக்கு விரோதமான இருதயத் துடிப்பும், நித்திரையும், உதர்த்தம் என்கிற சர்மவியாதியும், தேஹத்தில் பாரமதிகரிப்பதும் குறிகளாகும் 19½.

ஸந்நிபாத மதாத்யயம்.

வாத-பித்த-கபங்களால் உண்டாகும் ஸந்நிபாத மதாத்யயத்தில்,[1] முற்கூறிய மூன்றுதோஷ ஸம்பந்தமான எல்லாக்குறிகளும் ஒருமிக்கக் காணும். 19¾.

மதுபானங்களை திடீரென்று மாற்றுவதால் உண்டாகும் தீங்குகள்.

மதுபானத்தை நடுவில் வெகுநாள் விட்டிருந்து, அதை மறுபடியும் திடீரென்று உபயோகிப்பவனுக்கும், திடீரென்று ஏற்கனவே உபயோகித்துவந்த ஒருவித மதுவைப் பரிஹரித்து அப்யாஸத்திலில்லாத மற்றொரு விதமான மதுவை உபயோகிப்பவனுக்கும், முக்கியமாய் துர்ப்பலமானவனுக்கும் வாத தோஷத்தினுல் "த்வம்ஸகம்", "விக்ஷயம்" என்கிற கஷ்டம் விளைவிக்கும் வியாதிகள் உண்டாகின்றன. 20, 21.

த்வம்ஸக வியாதியின் குறிகள்.

கபத்தை அதிகமாகச் சிந்துவதும், தொண்டை வற்றிப்போவதும், அதிக நித்திரையும், சப்தங்களைத் தாங்கிக் கேட்பதை ஸஹிக்காமற் போவதும், சோம்பலும் த்வம்

1. வாத மதாத்யயத்தில் பித்த-கபங்களைவிட வாதம் மேலிட்டிருக்கும்; அவ்விதமே பித்த மதாத்யயத்தில் வாத-கபங்களைவிட பித்தம் மேலோங்கியும், கபமதாத்யயத்தில் வாத-பித்தங்களைவிட கபம் மேலோங்கியும் காணும்.

1 ஸந்நிபாத மதாத்யயத்தில் மூன்று தோஷங்களும் ஸமமாகப் பிரகோபித்திருக்கும். மற்ற மூன்றிலும் ஒவ்வொரு தோஷம்மட்டும் மற்றவைகளைவிட அதிகமாகப் பிரகோபித்திருக்கும்.



ஸகம் என்கிற வியாதியில் உண்டாகும் குறிகளாம். 21¾.

விக்ஷய வியாதியின் குறிகள்.

தேஹத்திலும் சிரஸ்ஸிலும் அதிக வேதனையும், இருதயத்தையும் தொண்டையையும் பற்றிய பிணிகளும், மயக்கமும், இருமலும், நாவறட்சியும், வாந்தியும், ஜ்வரமும் விக்ஷயம் என்னும் வியாதியில் காணும் குறிகளாம். 22, 22½.

மதுபானத்தை விலக்குவதாலான பயன்.

புத்தி பூர்வகமான பிரவ்ருத்தியோடு எவனொருவன் மனோநிக்கிரஹம் செய்து மத்யங்களைப் பானம் பண்ணுவதிலிருந்து விலகிக் கொள்கிறானே, அவன் சரீர ஸம்பந்தமான விகாரங்களாலும், மனோவிகாரங்களாலும் ஒருக்காலும் தாக்கப்படமாட்டான். 23½.

மதுபானத்தினுல் உண்டாகும் மூன்று ரோகங்கள்.

இரஜோகுணத்தைப் பிரதானமா யுள்ளவனுக்கும், மோஹம் என்னும் மனோவிகார முடையவனுக்கும், அபத்நியமான உணவுகளை விசேஷமாய் உபயோகிப்பவனுக்கும் இரஸதாதுவின் குழல்களென்ன - இரத்தக் குழாய்களென்ன-உணர்ச்சிக்கு ஆதாரமான நரம்புகளென்ன இவற்றின் அடைப்பினுல் "மதம்", 'மூர்ச்சை' "ஸந்நியாஸம்" என்கிற மூன்று ரோகங்கள் ஸம்பவிக்கின்றன;[1] இவற்றுள் கீழிருப்பவைகளைவிட மேலிருக்கும் ஒவ்வொன்றும் பலத்தில் உயர்ந்தவையாம்.[2] 24, 25.

மதம் ஏழு விதம்.

இவற்றுள் மதம் என்பது வாதமதம், பித்த மதம், கபமதம், ஸந்நிபாத மதம், இரத்தமதம், மதுமதம், விஷமதம் என்று ஏழு வகைப்படும். வாதமதத்தில் அம்மனிதன் அதிகமாகவும் படபடப்பாகவும் பேசுவதில் பற்றுள்ளவனுகவும், தள்ளாடி விழுபவனுகவும், தட்டுத் தடுமாறி வேலை செய்பவனுகவும், ரூக்ஷமாகவும் கறுப்பாகவுமுள்ள தேஹமுடையவனுகவும் இருப்பான். பித்த மதத்தில் அவன் கோபிக்கும் சுபாவ முடையவனுகவும், சிவந்த நிறமும் பொன்னிறமும் உள்ளவனுகவும், கலஹத்தில் விருப்பமுள்ளவனுகவும் இருப்பான். கப மதத்தில் சொற்பமாயும் முன்பின் விரோதமாயும் பேசக்கூடியவனுகவும், வெளுத்த நிறமாகவும், ஏதோ மனதில் தியானிப்பவனுகவும், சோம்பலுள்ள வனுகவும் காணப்படுவான். ஸந்நிபாத மதத்தில் முற்கூறிய மூன்று மதங்களின் குறிகளும் சேர்ந்துண்டாகும். இரத்த மதத்தில் கண்களும், மற்ற அங்கங்களும் அசைவற்று நிற்பதோடு, பித்த மதக்குறிகளும் காணும். மது மதத்தில் விகாரமான சேஷ்டைகளும், இயற்கைக்கு விரோதமான குரலும், அங்கங்களில் இயற்கைக்கு மாறுன குறிகளும் காணப்படும். விஷ மதத்தில் உடல் நடுக்கமும், அதிக நித்திரையும், மற்ற மதங்களைக் காட்டிலும் அதிக கடுமையான இலக்ஷணமும் உண்டாகும். இரத்தமதம் முதலியவற்றிலும் அந்தந்தக் குறிகளின் மேம்பாட்டை அநுஸரித்து வாதம் முதலானவைகளின் ஸம்பந்தத்தினுல் ஏற்பட்ட பேதங்களைக் கண்டறிக. 26-29½.

மூர்ச்சை நான்கு விதம்.

ஆகாயமானது சிவப்பாகவாவது, கறுப்பாகவாவது, நீல நிறமாகவாவது இருப்பதாகப் பார்த்துக்கொண்டு, கண்கள் சிறிது

1. அபத்திய உணவுகளால் இரஸதாது விகாரமடைந்து மதமும், இரஜோ குணத்தினுல் இரத்தம் விகாரமடைந்து மூர்ச்சையும், மோஹவிகாரத்தினுல் உணர்ச்சி நரம்புகள் விகாரமடைந்து ஸந்நியாஸமும் முறையே உண்டாகும் என்பது சிலரது கொள்கை.

நேரம் இருளடைந்துவிட, அப்பால் சீக்கிரம் ஞாபகசக்தியைப் பெற்று விழித்துக் கொள்வதோடு, இருதயத்தில் வேதனையும், நடுக்கமும், தலைச்சுற்றலும், சரீரவாட்டமும், கறுஞ்சிவப்பான தேஹநிறமும் ஸம்பவிக்குமானல், அது வாத மூர்ச்சையாகும். பித்த மூர்ச்சையிலோ ஆகாயத்தில் சிவந்த நிறமாவது பொன்னிறமாவது இருப்பதாகப் பார்த்துக் கொண்டே கண்கள் இருளடையும்; பிறகு விழித்துக்கொள்ளும்போது உடம்பெல்லாம் வியர்க்க, தேஹதாபத்தினாலும், நாவறட்சியினாலும் பீடிக்கப்பட்டவனாய், மலம் உடைந்து பேதியாக, நீலமும் பொன்னிறமுமான தேஹத்துடன், சிவந்தும் பொன்னிறமுமான வியாகுலப்பட்ட நேத்திரங்களுடன் கூடியவனாயிருப்பான். கப மூர்ச்சையில் மேக நிறத்தை ஆகாயத்தில் பார்த்துக் கொண்டே கண்கள் இருளடைந்து விடும்; வெகுநேரம் கழித்து அவனுக்குத் தெளிவு உண்டாகும்; இயற்கைக்கு விரோதமான இருதயத்துடிப்பும், வாயில் அதிக உமிழ்நீர் ஊற்றும், உடலெல்லாம் ஸ்திமிதமாகவும் பாரமுள்ளதாகவும் ஈரத்துணியினால் சுற்றிக் கட்டப்பட்டதுபோன்ற உணர்ச்சியும் உண்டாகும். ஸந்நிபாத மூர்ச்சையில், தனித்தனியே மூன்று தோஷங்களால் உண்டாகும் மூர்ச்சைகளுக்குக் கூறப்பட்டுள்ள குறிகள் எல்லாம் காணப்படுவதோடு, பயங்கரமான வலிப்புமுதலிய சேஷ்டைகளைத் தவிர அபஸ்மாரத்தின் மற்றக் குறிகள் கண்டு, ஆகவே வேறொருவிதமான அபஸ்மாரமோ வென்று பிரமிக்கும்படி அசைவற்று பூமியில் விழுவான். 30-35.

*ஸந்நியாஸ ரோகம்.*

பிராணிகளுடைய தேஹத்தில் மதமூர்ச்சைகளின் ஸம்பந்தமான தோஷங்கள் அவற்றின் வேகங்களை உண்டுபண்ணிய பிறகு, அவ்வியாதிகள் தானே உபசாந்தியடையும்; ஸந்நியாஸம் என்கிற வியாதியானது ஔஷதங்களை உபயோகிக்காமல் நிவ்ருத்தியாவதில்லை. மூன்று தோஷங்களும் ஒருமிக்கப் பிரகோபமடைந்து—ஸந்நிபாத நிலைமையைப் பெற்று—மிகவும் வலிவுடன் வாக்கினுடையவும் தேஹத்தினுடையவும் மனதினுடையவும் வேலைகளையெல்லாம் அடக்கி, ஜீவாதாரமான இருதயம் முதலிய அவயவங்களை ஆச்ரயித்து ஸந்நியாஸம் என்னும் இவ்வியாதியை உண்டுபண்ணுகின்றன; இதனால் அம்மனிதன் கட்டையைப் போலவே சவத்திற்கு ஸமானமாய் விழுந்துவிடுவான்; இவ்வியாதிக்கு உடனே ஏற்ற சிகித்ஸையைச் செய்யாவிட்டால் பிணியாளி சீக்கிரம் உயிர் துறப்பான். மிகவும் ஆழமாகவும், விசேஷமாய் முதலை முதலிய ஜந்துக்களால் சூழப்பட்டதாகவும், கரைகாண முடியாததுமான கடல் நீர் எனக் கூடியதான ஸந்நியாஸம் என்கிற இவ்வியாதியில் மூழ்கி விடுகிற மனிதனை வெகு சீக்கிரத்தில் மீட்பதற்கு முயலவேண்டும். 36-39.

*முறை தவறிய மதுபானத்தினால் உண்டாகும் கெடுதிகள்.*

முறைதவறாக மதுவை உபயோகிப்பதால் மதம், கர்வம், கோபம், ஸந்தோஷம் முதலான தனக்கிடமே ஸம்பவிக்கும் சத்ருக்களால் மனிதன் அணைத்துக் கட்டப்பட்டவனாய் விடுகிறான்; மேலும் யுக்தங்களும் அயுக்தங்களும் அவனிடம் பேதமின்றி ஒரே சீராய் விடும். 40.

*முறைப்படி மது பானம் செய்வதாலான நன்மை.*

தனது தேஹபலம், காலம்,[1] தேசம்,[2] ஸாத்மியம்,[3] பிரக்ருதி,[4] தனக்குள்ள ஸஹாயம்,[5] வியாதி, வயது இவைகளின் கூறுபாடுகளைப் பகுத்தறிந்து, அவற்றிற்கு ஏற்றவிதமாய் ஜாக்கிரதையாக ஒருவன் மதுபானம் செய்வானானல், அது அமுதபானம் எனத்தகுந்ததாம். 41.

1. காலம்—வஸந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது முதலிய காலங்கள் அல்லது ஆதாந விஸர்க்க காலங்கள்.

2. தேசம்—அநூபம் ஜாங்கலம் என்கிற பிரதேசங்கள்.

3. ஸாத்மியம்—வழக்கமாய் உபயோகிக்கப்பட்டு தேஹத்திற்கு ஒத்துப்போன விஷயங்கள்.

4. பிரக்ருதி—வாதப் பிரக்ருதி, பித்தப் பிரக்ருதி, கபப் பிரக்ருதி முதலியவை.

5. மதுபானம் செய்யும்போது, அதனல் ஏதாவது தீமைகள் ஸம்பவிக்காவண்ணம் கவனிப்பதற்கு அருகில் ஸஹாயம் தேவை யென்று கருதி இங்ஙனம் கூறப்பட்டதென்று அறிக.



# ஏழாவது அத்தியாயம்.

இனி அர்சோநிதாநம்[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது :—

*அர்சஸ்வின் விவரணம்.*

மாம்ஸமுளைகள், குதமார்க்கத்தை அடைத்து, பிராணிகளை "அரியைப்போல் விசஸநம்" செய்வதால்[2] அவை "அர்சஸ்ஸுகள்" என்று வழங்கப்படுகின்றன. வாத-பித்த-கபங்கள் சர்மத்தையும், மாம்ஸத்தையும், மேதஸ்ஸையும் மிகவும் கோளாறடையச் செய்து, அபாநத்வாரம் முதலியவைகளில் பலவித உருவமுள்ள மாம்ஸ முளைகளை உண்டுபண்ணும் ; அம்முளைகளே அர்சஸ்ஸுகள் ஆகும். 1, 2.

*அர்சஸ்வின் சுருக்கமான பேதங்கள்.*

அர்சஸ்ஸுகள் "ஸஹஜங்கள்"[3] என்றும், "உத்தரகாலஜங்கள்"[4] என்றும் சுருக்கமாய் இருவகைப்படும். மேலும் இதை 'சுஷ்கார்சஸ்'[5] என்றும், "ஸ்ராவ்யர்சஸ்"[6] என்றும் வேறு இரண்டு வகையாகவும் பிரிக்கலாம். $2\frac{3}{4}$.

*குதத்வாரத்தின் விவரணம்.*

"குதம்" என்னும் அவயவம் ஸ்தூலாந்த்ரம் என்கிற பெருங்குடலை ஆதாரமாயுடையது; அது மொத்தம் நாலரை அங்குலம் நீளமானது; அவ்வவயவத்தில் ஒன்றரை யொன்றரை அங்குல நீளத்தில் மூன்று வலிகள் என்னும் மடிப்புகள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் உட்புறமாயுள்ள வலி அல்லது மடிப்புக்கு "பிரவாஹிணீ" என்றும்,[1] நடுவில் இருப்பதற்கு "விஸர்ஜநீ" என்றும்,[2] வெளிப்புறத்தி லிருப்பதற்கு "ஸம்வரணீ"[3] என்றும் பெயர். அந்த ஸம்வரணீ யென்னும் வலிக்கு வெளிப்புறத்தில் ஒரு அங்குலம் தூரத்தில் ஒன்றரை யவதானியத்தின் அளவில் "குதோஷ்டம்" என்கிற ஆஸன த்வாரத்தின் உதடு அமைந்திருக்கிறது. குதோஷ்டத்திற்கு வெளியில் உரோமங்கள் அடர்ந்திருக்கும். 3-5.

*ஸஹஜார்சஸ்ஸுக்குக் காரணமும் இலக்ஷணங்களும்.*

குதத்தில் முற்கூறிய வலிகள் உற்பத்தியாவதற்கான சுக்ரார்த்தவ பீஜங்கள் கோளாறடைவதே ஸஹஜார்சஸ்ஸுகள் உண்டாவதற்குக் காரணமாகும். தாய் தந்தைகளுடைய துர்நடத்தையாலும், தைவச்செயலாலும் ஆக இரண்டு முகாந்தரங்களால் தோஷங்கள் மூன்றும் ஸந்நிபாதமாகப் பிரகோபமடைந்து, குதத்தின் உற்பத்திக்கு அவசியமான சுக்ரார்த்தவ பீஜங்களுடைய அம்சங்களைக் கோளாறடையச் செய்கின்றன. ஆகவே. ஸஹஜார்சஸ்ஸு அஸாத்ய வியாதியெனப்படுகின்றது. இங்ஙனமே வம்சபரம்பரையி லுண்டாகும் எல்லா ரோகங்களுமே அஸாத்ய வியாதிகளென்று கருதப்படுகின்றன. ஸஹஜார்சஸ்ஸுகள் என்கிற பிறப்பிலுண்டாகும் இந்த மூல முளைகள் விசேஷமாய் ரூக்ஷங்களாகவும்

1. மூலரோகம் "அர்சஸ்" எனப்படும் ; அப்பிணியைப்பற்றி விவரிக்கும் அத்தியாயம் "அர்சோநிதாநம்" என்று கூறப்படும்.

2 அரி—சத்ரு; விசஸநம்—ஹிம்ஸித்தல்.

3. ஸஹஜார்சஸ்—பிறந்தது முதலுள்ள மூலரோகம்.

4. உத்தர காலஜார்சஸ்—பிற்காலத்திலுண்டான மூலம்.

5. சுஷ்கார்சஸ்—இரத்தக்கசிவு முதலியது இல்லாத மூலம்.

6. ஸ்ராவ்யர்சஸ்—இரத்தப்பெருக்கு முதலியதோடுகூடிய மூலரோகம்.

1. பிரவாஹிணீ—மலத்தை வெளியில் தள்ளுவது அல்லது நெகிழச் செய்வது எனப் பொருள்.

2. விஸர்ஜநீ—மலம் வெளிப்படுவதற்கு வழிவிடுவதால் இப்பெயர் வந்தது.

3. ஸம்வரணீ—மலம் வெளிப்பட்ட பிறகு குதத்வாரத்தை மூடிவிடுவதால் இப்பெயரிடப்பட்டது.

பார்ப்பதற்கு அருவருப்பும் அச்சமும் உண்டாகும்படி கோரமான உருவங்களுள்ளவையாகவும், உட்புறமாய் அமைந்த முகங்களோடு கூடியவை யாகவும், நிறத்தில் வெண்மையாகவும், கடுமையான உபத்திரவங்களோடு[1] கூடியவை யாகவும் இருக்கும். 6—8.

**ஆறுவித அர்ஸஸ்ஸுகள்.**

இதர அர்சஸ்ஸுகள்[2] ஆறுவிதம். வாத-பித்த-கபங்களால் தனித்தனியே உற்பத்தியாகுபவை மூன்று; இரண்டிரண்டு தோஷங்கள் விகாரமடைவதால் ஏற்படும் ஸம்ஸர்க்க தோஷத்தினால் ஒன்று; ஸந்நிபாதத்தினால் ஒன்று; இரத்தத்தினால் ஒன்று. ஆக ஆறு வகைகள். $8\frac{1}{2}$.

**சுஷ்கார்சஸ்ஸுக்கும் ஆர்த்ரார்சஸ்ஸுக்கும் காரணம்.**

கோளாறடைந்த வாத-கபங்களின் சேர்க்கையினால் சுஷ்கார்சஸ்ஸுகளும், விகாரமடைந்த இரத்தத்தினுடையவும் பித்தத்தினுடையவும் சேர்க்கையினால் ஆர்த்ரார்சஸ்ஸுகளும் உண்டாகும். 9.

**அர்சஸ்ஸின் ஸம்ப்ராப்தி.**

தோஷங்கள் பிரகோபமடைவதற்குக்காரணம் முன்னால் கூறப்பட்டிருக்கிறது.[3] அக்காரணத்தினால் ஜாடராக்னி மந்தப்பட்டு, மலமும் அதிகமாகச் சேர்ந்து விடுகையில், அப்பால் அமித புணர்ச்சியினாலும், அப்பொழுது வாஹனங்களில் ஏறிச்சென்று அதிர்ச்சியுறுவதென்ன மேடும் பள்ளமுமாய் அல்லது கடினமான ஆஸனங்களில் கை கால்களைக் கட்டிக்கொண்டு நிர்ப்பந்தமாய் உட்காருவதென்ன - வஸ்தி நேத்திரம், கல், ஓடு, பூமி, வஸ்திரமுனை இவை தாக்குவதென்ன-அதிகமாய் குளிர்ந்த ஜலம் ஸம்பந்திப்பதென்ன-அடிக்கடியும் அதிகமாய் முக்குவதென்ன-அபானவாயு, மூத்திரம், மலவிஸர்க்கம் இவற்றின் வேகங்களைத் தடுப்பதென்ன-அபானவாயு முதலியவற்றை வலுவில் வெளிப்படுத்த முயல்வதென்ன - இக்காரணங்களாலும், ஜ்வரம் - குல்மம்-அதிஸாரம் - ஆமதோஷம் - கிரஹணீ - சோகை - பாண்டுரோகம் இவற்றால் தேஹதாதுக்கள் இளைத்துப்போவதாலும், விஷமமான தேஹச்செயல்களாலும், ஸ்த்ரீகளுக்கு அகாலத்தில் கர்ப்பம் வெளியாவதாலும், கர்ப்பம் விருத்தியாய் அதனால் குதபாகம் அழுத்தப்படுவதாலும், இவ்விதமான வேறு சில காரணங்களாலும் அபானவாயுவானது பிரகோபமடைந்து, குதத்வாரத்திலுள்ள முற்கூறிய வலிகள் என்கிற மடிப்புகளில் மலத்தை அதிகமாகச் சேர்த்து விடுவதால், அவ்விடங்களில் தூர்நீர்க்கசிவுகள் ஏற்பட்டு அர்சஸ் என்னும் மூல முளைகள் உண்டாகின்றன. $10—14\frac{3}{4}$.

**அர்சஸ்ஸின் பூர்வ ரூபங்கள்.**

அர்சஸ்ஸுக்கு அடியில் குறிப்பிடப்படுபவை பூர்வ ரூபங்களாகும்:— அக்னி மாந்தியம், வயிற்றுப் பொருமல், தொடைகள் இளைத்துப்போதல், ஆடுச்சதை இசிவு, தலைச்சுற்றல், உடம்பு இளைத்தல், கண்களில் வீக்கம், மலம் உடைந்து பேதியாதல் அல்லது மலச்சிக்கல், வாயுவானது மிகுதியாகச் சேர்ந்து வெளிப்படமுடியாமல் அடைபட்டு, நாபிக்கு அடியில் உலாவிக்கொண்டு, வேதனையையும் கடுப்பையும் உண்டுபண்ணி, சப்தித்துக்கொண்டே வெகு கஷ்டத்துடன் வெளியாவது; குடலில் இரைத்தலும், ஏதோ ஆரவாரமும் உண்டாவது; தேஹம் இளைத்தல்; அதிக ஏப்பம்; மூத்திரம் மிகுதியாயிறங்குதல்; மலம் சொற்பமாயிருத்தல்; அதுவும் இறுகிக்கிட்டுதல்; புகைந்து புளித்த ஏப்பம் வருதல்; சிரஸ்ஸிலும், முதுகிலும், மார்பிலும் வலியுண்டாதல்; சோம்பல்; தேஹ நிறம் மாறுதல்; இந்த்ரியங்கள் தூர்ப்பலமடைதல்; கோபம் அதிகரித்தல்; மனத்தென்பில்லாமை; பாண்டுரோகம் - கிரஹணீ தோஷம்-குல்மம் - உதரஸம்பந்தமான வியாதிகள் இவை உண்டாயிருப்பதாக மனதில் ஸந்தேஹமுண்டாதல் என்பவையேயாம். $15—19\frac{1}{2}$.

---

1. இந்த அர்சஸ்ஸில் பிறகு உண்டாகக் கூடிய உபத்திரவங்கள் பகந்தரம், குல்மம் முதலியவைகளாம்.

2. இதர அர்சஸ்ஸுகள் என்பதில் உத்தர காலஜார்சஸ்ஸுகள் எனக் கருத்து.

3. தோஷ ப்ரகோபத்திற்குக் காரணங்கள் முன்னால் ஸர்வரோக நிதானத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றன.



**அர்சஸ்ஸின் உபத்திரவங்கள்**

அர்சஸ்ஸுகள் என்கிற மூல முளைகள் நன்கு உண்டானபிறகு முற்கூறிய பூர்வரூபக்குறிகளே நன்கு வெளிப்படையாக விருத்தியாகின்றன. அர்சஸ்ஸுகளால் கீழே ஆஸனத்வாரம் அடைபட்டுவிடுவதால் அபானவாயுவானது கீழே தடுக்கப்பட்டு மீண்டும் மேல்நோக்கிச் சென்று, எல்லா இந்த்ரியங்களையும் எல்லா அவயவங்களையும் ஆச்ரயித்துள்ள மற்ற வாயுக்களுக்கும் கலக்கமுண்டுபண்ணி, அவ்விதமே மூத்திரம்-மலம்-பித்தம் - கபம் இவற்றையும் தாதுக்களையும் ஆசயங்களையும் மர்த்தனம் செய்வதுபோல் பிடித்து, ஜாடராக்னியையும் கோளாறடையச் செய்துவிடுவதால் அர்சோரோகம் அனேகருக்கும் பெரும்பாலும் உண்டாவது வழக்கம். அர்சோரோகமுள்ளவன் மிகவும் மெலிந்திருப்பான்; உத்ஸாஹமிழப்பான்; வாடி எளிய நிலைமையுடையவனாவான்; வாடியுலர்ந்து ஒளிமழுங்கிக் கிடப்பான்; புழுக்களால் அரிக்கப்பட்ட விருக்ஷம்போல ஸாரமற்றவனாகவும், சாயாஹீனனாகவும்[1] ஆய்விடுவான்; இவ்வாறு மர்மஸ்தானங்களைப் பிடிப்பனவையான உபத்திரவங்களோடு காஸம், பிபாஸம், வாயில் அரோசகம், ச்வாஸம், நாவறட்சி, உடல்வாட்டம், தேஹம் சோர்ந்து விழுதல், வாந்தி, தும்மல், வீக்கம், ஜ்வரம், ஆண்மையிழத்தல், செவிட்டுத்தனம், திமிரம் என்னும் கண்நோய், சர்க்கரை அச்மரீ என்னும் மூத்திர ரோகங்கள்[1] இவ்வுபத்திரவங்களாலும் பிடிக்கப்படுவான்; குரல் மந்தப்பட்டு வேறுபாடடையும்; ஏதோ கவலையுடன் யோசித்துக்கொண்டிருப்பான்; அடிக்கடியும் மூக்கைச் சிந்துவான்; அரோசகமுள்ளவனாவான்; எல்லாக் கணுக்களிலும், எலும்புகளிலும், இருதயத்திலும், குதமார்க்கத்திலும், தொடையிடுக்குகளிலும் வலியுண்டாகும்; அன்னம் கழுவிய நீரைப்போன்ற ஒருவிதமான பசை குதமார்க்கத்தில் பொசிந்துவரும்; சில ஸமயம் கட்டப்பட்டும், சில ஸமயம் தானே வெளிவருவதும், சில ஸமயம் இறுகிப்போனதும், சில ஸமயம் இளகியதும், ஒருக்கால் பக்குவமானதும், மறுவேளை ஆமமானதும் இவ்விதம் இடையிடையே பலவித நிலைமைகளோடு கூடியதாக மலம் வெளியாகும்; மேலும் அவன் வெளிவிடும் மலம் வெண்மையாகவும், சில ஸமயம் பொன்னிறமாகவும் பசுமையாகவும், செந்நிறமாகவும், ஒருவித பசைபோன்ற கசிவுடன் கூடியதாகவும் இருக்கும். $20—27\frac{1}{2}$.

**வாதார்சஸ்.**

மூல முளைகள் வாததோஷத்தினால் உண்டானவையானால் பசையற்று, ஒருவித அரிப்புடன் கூடியவைகளாகவும், வாடி வதங்கியும், கறுஞ்சிவப்பு நிறமுள்ளவையாகவும், திமிர்த்து அசைவற்றவையாகவும், கரடுமுரடாகவும், ரூக்ஷத்தன்மையுடையவையாகவும், ஒன்றுக்கொன்று ஏற்றக்குறைவான உருவங்களோடு கூடியவையாகவும், வக்கிரங்களாகவும், தீக்ஷ்ணங்களாகவும், வெடித்த முகங்களோடு கூடியவையாகவும், கோவை-பேரீச்ச-

---

1. ஸாரம் என்றால்—தேஹவன்மை, விருக்ஷத்தின் வைரபாகம்; சாயை யென்றால் — உடலின் தேஜஸ், மரத்தின் நிழல், புழுக்களால் அரிக்கப்பட்ட மரத்தில் வைரம் அழிந்து, இலைகள் சிதைந்து நிழலற்றுப்போவதுபோல், அர்சோரோகியும் பலம் குன்றி ஒளி மழுங்கி ஸாரமற்றவனாவான் எனக் கருத்து.

1. சர்க்கரை என்னும் வியாதி அடுத்துவரும் 9-வது அத்தியாயத்தில் 18, 19-வது ச்லோகங்களின் மொழி பெயர்ப்பிலும், அச்மரீ என்பது 6-வது முதல் 18-வது ச்லோக மொழி பெயர்ப்புகளிலும் விவரிக்கப்படுகின்றன.

இலந்தை-இலவன் இவற்றின் கனிகளைப் போன்ற உருவமுள்ளவையாகவும் இருக்கும்; அவற்றுள் சில முளைகள் கடப்பம்பூக்களைப் போன்றவையாகவும், வேறு சில முளைகள் வெண்கடுகுக்கு ஒப்பானவையாகவும் இருக்கும். அர்சோரோகிக்கு சிரஸிலும், விலாப் பக்கங்களிலும், தோள்களிலும், இடுப்பிலும், துடைகளிலும், துடையிடுக்குகளிலும் அதிக வேதனையுண்டாகும். தும்மல், ஏப்பம், வயிறுவிம்மல், இருதயப்பிடிப்பு, அரோசகம், காஸம், ச்வாஸம், ஜாடராக்னி வைஷம்யமடைதல், காதிரைத்தல், தலைச்சுற்றல் இவையுமுண்டாகும். இந்த ரோகத்தினால் பீடிக்கப்படுபவன் கெட்டியாகவும், சொற்ப அளவாகவும், சப்தத்தோடு கூடியதாகவும், கடுப்புண்டாக்குவதுமான மலத்தை வெளிவிடுவான்; மேலும் மலமானது நுரைத்தும் பசையுள்ளதுமான ஒருவித கசிவோடு கூடியதாகவுமிருக்கும். அம்மனிதனுடைய சர்மமும், நகங்களும், மலமும், மூத்திரமும், கண்களும், முகமும் கறுநிறங்கொள்ளும்; அம்மூல முளைகளாலேயே குல்மம், ப்லீஹம் என்கிற மண்ணீரலின் வீக்கம், மஹோதரம்,[1] அஷ்டீலா என்கிற ஒருவித நோய்[2] இவையும் ஸம்பவிக்கும். 28—33½.

**பித்தார்சஸ்.**

அர்சஸ்ஸுகள் பித்தம் அதிகரித்து உண்டானவையானால் கறுத்த முகங்களும், சிவந்தும் மஞ்சளுமான நிறமுடையவையாகவும், சிறுகச்சிறுக இரத்தக் கசிவோடு கூடியவையாகவும், ஒருவித துர்நாற்றமுள்ளவையாகவும், மெல்லியவையாகவும், மிருதுவாகவும், தளர்ந்து அசையக் கூடியவையாகவும் இருக்கும்; கிளியின் நாக்கு, கல்லீரல், அட்டையென்னும் ஜந்துவின் முகம் இவற்றிற்கு ஸமானமாகவும் காணப்படும்; அழற்சி, வெந்துபோதல், ஜ்வரம், வியர்த்தல், நாவறட்சி, மூர்ச்சை, அரோசகம், சித்தப்பிரமை இவற்றையும் உண்டுபண்ணும்; மூல முளைகள் மிகச் சூடாயிருக்கும். இவனுடைய மலம் திரவமாகவும், கறுநிறமாகவும், உஷ்ணமாகவும், மஞ்சள் நிறமாகவும், அல்லது சிவந்த நிறமாகவும், ஆமதோஷத்துடன் கூடியதுமாயிருக்கும். முளைகளின் மத்தியபாகம் யவம் என்கிற வாற்கோதுமையின் அளவுள்ளவைகளாயிருக்கும். 34—36½.

**கபார்சஸ்.**

அர்சஸ்ஸுகள் கபப்பிரகோபத்தினால் உண்டானவையானால் அவற்றின் அடிப்புறம் மஹத்தாகவும், கனமாகவும், அதிக வேதனையுண்டு பண்ணுதலவையாகவும், வெண்மையாகவும், பருத்து வீங்கியவையாகவும், ஸ்நிக்த்தங்களாகவும், வட்டமாகப் பருத்து குருவாக ஸ்தம்பித்தவையாகவும், பசையுள்ள நீர்க்கசிவுள்ளவையாகவும், நிலைத்து நிற்பவையாகவும், வழுவழுப்புண்டவையாகவும், தினவுள்ளவையாகவும் இருக்கும். மூங்கிற் குருத்து, பலாக்கொட்டை, பசுவின் முலை இவற்றிற்கு ஸமானமானவையாகவும் இருக்கும். துடையிடுக்குகள் இவ்வியாதியில் வலித்திழுக்கப்படும்; குதம், வஸ்தியென்னும் மூத்திரப்பை, நாபி இவற்றில் கடுப்பு உண்டாகும். காஸம், ச்வாஸம், இருதயத்தில் இயற்கைக்கு விரோதமான துடிப்பு, வாயில் உமிழ் நீர் அதிகமாய் ஊறுதல், அரோசகம், பீநஸம், பிரமேஹம், மூத்திரக்ருச்சிரம் என்னும் நீர்ச்சுருக்கு, தலையில் உணர்ச்சிக்குறைவு, குளிர் ஜ்வரம், நபும்ஸகத்தன்மை, அக்னிமாந்தியம, சாத்தியென்னும வாந்தி, ஆமதோஷத்தை அதிகமாகப் பெற்ற அநேகம் கோளாறுகள் என்னும் இவ்விகாரங்கள் உண்டாகும். மலம் வஸையென்னும் வெண்ணிறத்திணநீரைப் போலவும், கபத்துடன் கூடியதாக

1. மஹோதரம்—வயிற்றில் ஒருவித நீர் சுரந்து வயிறு மிகப் பெருத்துப்போகும் வியாதி; இதையே ஜலோதரம் என்பார்கள்.

2. ஒருவித நீண்டு அகன்ற சிலைக்கு அஷ்டீலா என்று பெயர்; அதுபோன்ற வயிற்றலுண்டாகும் கட்டி அல்லது கிரந்தி அஷ்டீலா எனப்படுகிறது.



வும், அளவில் மிக்க அதிகமாகவும், வெளிவரும்போது அதிக கடுப்பை யுண்டுபண்ணுவதாகவும் இருக்கும். அம்முளைகள் தாரளமாய் நீர்களைப் பொசிப்பதுமில்லை, உடைந்துவிடுவதுமில்லை; அப்பிணியாளியின் சர்மம் முதலியவை வெளுத்தும், ஸ்நிக்த்தமாகவும் காணப்படும். 37—41½.

**ஸம்ஸர்க்க-ஸந்நிபாதார்சஸ்ஸுகள்.**

இரண்டிரண்டு தோஷங்களால் உண்டாகும் அர்சோரோகங்களில் எந்த இரண்டு தோஷங்கள் சேர்ந்திருக்கின்றனவோ அவற்றின் இலக்ஷணங்களும், ஸந்நிபாதத்தினால் உண்டாகும் அர்சஸ்ஸில் மூன்று தோஷங்களுக்கு இயல்பான இலக்ஷணங்களும் ஒருமிக்கச் சேர்ந்தும் காணப்படும். 42.

**இரத்தார்சஸ்.**

இரத்த தோஷத்தினால் உண்டாகும் மூல முளைகள் பித்தார்சஸ்ஸைப் போன்றவையாயிருக்கும்; ஆலம் விழுதின் முனைபோன்றவையாகவும், குன்றுமணி, பவளம் இவற்றிற்கு ஸமானமாகவும் காணப்படும். மலம் இறுகப்போய் வெளியாகும்போது அதனால் குதமார்க்கத்திலுள்ள அர்சஸ்ஸுகள் அழுத்தப்பட்டு, அவற்றிலிருந்து அதிக உஷ்ணமாகவும் கெட்டுப்போனதுமான இரத்தம் திடீரென்று விசேஷமாகக் கசியும்; அவ்விதம் அதிகமாய் இரத்தம் வெளியாவதால் தேஹத்தில் இரத்தக்குறைவு நேரிட்டு, தவளையைப் போன்ற நிறமும் குரலுமுடையவனாய் பிணியாளி பீடிக்கப்படுவான; தேஹத்தின் இயற்கைநிறமும பலமும் உத்ஸாஹமும் இழந்தவனாய், ஓஜஸ் க்ஷயமடைந்தவனாய், இந்திரியங்களும கலக்கமுற்று வருந்துவான். 43—45.

**அர்சஸ்ஸில் உதாவர்த்த உபத்திரவம்.**

பயறு, வரகு, சில புல்வகைகள், மூங்கிற் குருத்து, கடலை முதலிய ரூக்ஷமும் ஸங்க்ராஹி குணமும்[1] உடைய பதார்த்தங்களின உபயோகத்தால் வாயுவானது தன் ஸ்தானத்திலேயே பிரகோபமடைந்து மிகவும் பலம் பெற்று, கீழே மலத்தை மிகச் சுஷ்கமாகச் செய்து, கீழ் நோக்கி ஸ்ரோதஸ்ஸுகளை அடைத்து, அபானவாயு, மலம், மூத்திரம் இவற்றைக் கடுமையாக மேன்மேலும் சேர்த்துவிடும்; அதனால் குடல்களிலும், முதுகிலும், இருதயத்திலும், விலாப்பக்கங்களிலும் தீவ்ரமான வலியுண்டாகும்; வயிற்றுப்பொருமல், வயிறுளைத்தல், இயற்கைக்கு விரோதமான இருதயத்துடிப்பு, ஆஸநத்வாரத்தில் கத்தரிப்பதுபோன்ற கடுப்பு, மூத்திரப்பையில் விசேஷமான வலி, கிரந்திவீக்கம்போன்ற கட்டி, ஸாதாரணவீக்கம் இவை ஸம்பவிக்கும்; பிறகு அடியில் குதமார்க்கத்தில் தடையுண்ட வாயுவானது மேல்நோக்கிச் சென்று, அதனால் வாந்தி, அரோசகம், ஜ்வரம், இருதய வியாதி, கிரஹணீரோகம், மூத்திரம் வஸ்தியில் அடைபட்டுச் சேருதல், பிரவாஹிகை யென்னும் வயிற்றுக்கடுப்பு, செவிட்டுத்தனம், கண்பார்வை குறைதல், ச்வாஸரோகம், தலைவலி, காஸம், பீநஸம், சித்தப்பிரமை, நாவறட்சி, இரத்த-பித்தம், குல்மம், பலவிதமான உதரவியாதிகள் முதலியவைகளும், மிகக் கடுமையான இன்னும் அந்தந்த வாதவியாதிகளும் உண்டாகின்றன. அர்சஸ் என்கிற மூலரோகமுள்ளவர்களுக்கு இவ்விதமாய் உதாவர்த்தம் என்கிற மிகவும் துன்பமளிக்கவல்ல உபத்திரவம் உண்டாவது வழக்கம். வாதத்தினால் கோளாறடைந்த குடலையுடையவர்களுக்கு, அர்சஸ்ஸுகள் இல்லாமலே மேற்கூறிய உதாவர்த்தம் உண்டாவதுண்டு. 46-52.

**அர்சஸ்ஸுகளில் அஸாத்தியங்களும் யாப்யங்களும்.**

ஸஹஜார்சஸ்ஸுகளும், ஸந்நிபாதத்தினாலுண்டான அர்சஸ்ஸுகளும், ஆப்யந்தரவலியென்கிற உட்புறமாயுள்ள மடிப்பில் உண்டான அர்சஸ்ஸுகளும் அஸாத்தியங்களாகும்; ஜாடராக்னி முதலியவை நல்ல பலமுள்ளவைகளாயிருந்தால், அவைகளே யாப்யங்களாகும். 53.

1. ஸங்க்ராஹீ—இதைப்பற்றி 35-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

1. உதாவர்த்தம்—இதைப்பற்றி 25-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

அர்சஸ்வில் க்ருச்சிர ஸாத்தியங்கள்.

த்வந்த்வ தோஷங்களால்[1] உண்டான அர்சஸ்ஸுகளும், இரண்டாவது வலி யென்கிற நடுவிலிருக்கும் மடிப்பில் உண்டான முளைகளும், வருஷக்கணக்காயிருந்துவரும் அர்சஸ்ஸுகளும் க்ருச்ரஸாத்தியங்களாகும். 54.

அர்சஸ்வில் ஸுகஸாத்தியங்கள்.

வெளிப்புறத்து மடிப்பிலுண்டான அர்சஸ்ஸுகளும், ஒரு தோஷத்தினால் மட்டும் உண்டானவையும், சொற்பகாலத்திற்குள் ஸம்பவித்தவையுமான அர்சஸ்ஸுகள் எளிதில் சிகித்ஸைக்கு வசப்படக் கூடியவையாம். 55.

வேறு அவயவங்களிலுண்டாகும் அர்சஸ்ஸுகள்.

ஆண்குறி முதலியவற்றில் உண்டாகும் அர்சஸ்ஸுகளைப்பற்றிய விவரங்களும் அப்பால் அந்தந்த பிரகரணங்களில் கூறப்படும்.[2] நாபியில் உண்டாகும் அர்சஸ்ஸுகள் மண்ணுணிப் பாம்பின்முகத்தைப்போன்ற உருவங்களுடையவையாகவும், பசையுள்ளவையாகவும், மிருதுவாகவும் இருக்கும். 56.

சர்மகீலம்.

வியாநவாயுவானது கபத்தைப்பற்றியதாய், வெளிப்புறத்திலுள்ள சர்மத்தில் திடமானதும் கடினமானதுமாயுள்ள கெட்டியான முளைபோன்ற ஒருவித வளர்ச்சியை உண்டாக்கும்; அதை சர்மகீலம்[1] என்பார்கள். இது வாதத்தினால் உண்டானதானால் குத்தலும், பசையற்று கடினமாகவும், பித்தத்தினால் உண்டானதானால் கறுஞ்சிவப்பான இரத்தத்துடன் கூடியதாகவும், கபத்தினால் உண்டானதானால் ஸ்நிக்த்தமாகவும், கறுகெட்டியதாகவும், சர்மத்திற்கு ஸமானமான நிறமுடையதாகவும் இருக்கும். 57, 58.

அர்சஸ்ஸை உபேக்ஷிப்பதாலான உபத்திரவம்.

அறிவிற் சிறந்த வைத்தியன் அர்சஸ்ஸுகளை நிவ்ருத்திசெய்ய சீக்கிரம் முயற்சி செய்யவேண்டும்; ஏனெனில், மூலமுளைகள் குதம் என்கிற ஆஸனமார்க்கத்தை அடைத்து "பத்தகுதோதரம்"[2] என்கிற வியாதியை உண்டுபண்ணிவிடும். 59.

## எட்டாவது அத்தியாயம்.

இனி அதிஸார-கிரஹணீ ரோகநிதாநம்[3] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படுகின்றது:—

1. த்வந்த்வ தோஷங்கள்—வாத-பித்தங்கள், வாத-கபங்கள், பித்த-கபங்கள், என்று இவ்வாறு இரட்டையாகச்சேர்ந்துள்ள தோஷங்கள்.

2. பிறகு உத்தரஸ்த்தாநத்தில் ஆண்குறி முதலியவற்றிலுண்டாகும் அர்சஸ்ஸுகளைப்பற்றி குஹ்ய ரோக விஞ்ஞாநீயாத்தியாயத்திலும், வேறுவித அர்சஸ்ஸுகள் கர்ணரோகவிஞ்ஞாநீயாத்தியாயத்திலும், நாஸாரோக விஞ்ஞாநீயாத்தியாயததிலும் விவரம் கூறப்படும்.

3. அதிஸாரம்—மலம் மிகவும் திரவமாகப் போய் வெளியாகும் வியாதி; கிரஹணீ - ஆமாசயத்திற்கு அடுத்துள்ள கிரஹணீ என்கிற குடலின் பாகம் கோளாறடைந்து ஸம்பவிக்கும் ரோகம்; இவற்றைப் பற்றி விவரிக்கும் அத்தியாயம் எனப்பொருள்.

அதிஸாரம் ஆறுவிதம்.

அதிஸாரரோகமானது வாத-பித்த-கபங்களால் தனித் தனியே ஒவ்வொரு வகையும், ஸந்நிபாதத்தினால் ஒருவிதமும், பயத்தினால் ஒருவிதமும், சோகத்தினால் ஒருவிதமும் ஆக ஆறுவிதமாய்உற்பத்தியாகும். $\frac{1}{2}$.

1. சர்மகீலம்—சர்மத்தின்மேல் முளையைப்போல உண்டாகும் ஒருவித அர்சஸ்.

2. பத்தகுதோதரம்—இதைப்பற்றி விவரங்கள் அடுத்த 12-வது அத்தியாயத்தில் காண்க.



அதிஸாரவஸம்ப்ராப்தி.

தண்ணீரை அதிகமாய் உட்கொள்வதாலும், மிக்க மெலிந்து உலர்ந்துபோன இறைச்சி-அஸாத்மியமான உணவுகள் - எள்-மாப்பண்டங்கள் - முளைத்த தானியங்கள் இவற்றாலும், மதுபானத்தினாலும், ரூக்ஷகுணமும் மிதமிஞ்சியதுமான அன்னத்தினாலும், அர்சஸ்ஸாலும், ஸ்நேஹ சிகித்ஸையில் நேரிடும் தவறுதல்களாலும், கிருமிகள் குடலிற் சேருவதாலும், மலவிஸர்க்கம் முதலிய வேகங்களைத் தடை செய்வதாலும், மற்றும் அவ்விதமான வேறு காரணங்களாலும் வாதம் பிரகோபபடைந்து, ஜலஸம்பந்தமான தாதுவைச் சுரப்பித்து கீழே நெகிழச் செய்து, அத்தாதுவைக் கொண்டே ஜாடராக்னியை அழித்து, குடலில் மலாசயத்திற்கு அருகிலுள்ள பாகங்களைக் கெடுத்து, மலத்தைத் திரவமாகச் செய்து, அதிஸாரத்தை உண்டுபண்ணும். 1-$3\frac{3}{4}$

அதிஸார பூர்வரூபம்.

அதிஸாரம் உண்டாகப்போகிறதென்றால் காணக்கூடிய குறிகள் பின்வருமாறு: இருதயத்திலும், குதத்திலும், குடலிலும் வலியுண்டாதல், தேஹம் இளைத்துப்போதல், மலபந்தம், வயிற்றுப் பொருமல், ஆஹாரம் ஜீர்ணமாகாமை என்பனவாம். 4, $4\frac{3}{4}$.

வாதாதிஸாரம்.

அவற்றுள் வாதத்தினால் உண்டாகும் அதிஸாரத்தில் மலம் பெரும்பாலும் ஜலபாகம் குறைந்ததாகவும், சொற்ப அளவாகவும், சப்தம் வலி இவற்றோடு கூடியதாகவும், இறுகியதாகவும் வெளியாகும்; மேலும் அந்த மலம் ரூக்ஷமாகவும், நுரைத்ததாகவும், சில ஸமயம் மலமின்றி முற்றிலும் நீருருவமாகவும், அல்லது அடிக்கடி இறுகிய மலமும் நீருமாகவும், காந்திப்போன வெல்லத்திற்கு ஸமானமாகவும், பிசின்போன்றதாகவும், ஆஸனத்வாரத்தில் கடுப்புண்டாக்குவதாகவும் இருக்கும்; பிணியாளி மல விஸர்க்கம் செய்யும்போது வாயுலர்ந்து, குதம் என்கிற குடலின் முனை வெளியில் நழுவ, மயிர்ச்சிலிர்க்கையுண்டாய் வருந்துவான். 5—7.

பித்தாதிஸாரம்.

பித்தத்தினால் உண்டாகும் அதிஸாரத்தில் மலமானது பொன்னிறமாகவும், கறுப்பாகவும், இலைப்பசுமை நிறமாகவும் அல்லது பசும்புற்களைப்போன்றதாகவும், இரத்தம் கலந்ததாகவும், அதிக துர்நாற்றமுடையதாகவும் இருக்கும்; நாவறட்சியும், மூர்ச்சையும், வியர்வையும், அழற்சியும் அதிகமாய் உண்டாகும்; வலியையும், குதத்தில் எரித்தலையும் உண்டுபண்ணி, அவ்விடத்தில் இரணமும் உண்டாகும். 8, $8\frac{3}{4}$.

கபாதிஸாரம்.

கபத்தினால் உண்டாகும் அதிஸாரத்தில் மலம் பிசுபிசுப்பாகவும், நூல் போன்ற விகாரங்கள் ஸம்பவிக்குந்தன்மையதாகவும், வெண்மையாகவும், குதம் முதலியவற்றின் மாம்ஸபேசிகளை ஸ்நிக்த்தமாகச் செய்யக் கூடியதாகவும், கபத்துடன் சிக்கியதாகவும், குருகுணமுள்ளதாகவும், துர்க்கந்தமாகவும், ஒருவாறு இறுகியதாகவும், இடைவிடாமல் வலியையுண்டுபண்ணுவதாகவும் காணப்படும்; அப்பிணியாளி விசேஷமாய் நித்திரையுறுபவனாகவும், சோம்பலுள்ளவனாகவும், அன்னத்தில் வெறுப்புடையவனாகவும் இருப்பான்; மலம் மிகச் சொற்பமாகவும், கடுப்புடன் கூடியதாகவும், மயிர்ச்சிலிர்க்கை யுண்டாக்குவதாகவும், வாயில் உமிழ்நீர் அதிகமுண்டாக்குவதாகவும், மூத்திரப்பையிலும் குதத்திலும் வயிற்றிலும் குருத்தன்மை தோன்றுவதற்குக் காரணமாகவும், மலவிஸர்க்கம் செய்தும் செய்யப்படாமலிருப்பதுபோன்ற உணர்ச்சியை யுண்டாக்குவதாகவும் இருக்கும். 9-$10\frac{3}{4}$.

ஸந்நிபாதாதிஸாரம்.

வாத பித்த கபங்கள் ஒருமிக்கச்சேர்ந்துண்டாகும் ஸந்நிபாதாதிஸாரத்தில், மூன்று தோஷங்களால் தனித்தனியே ஸம்பவிக்கும் அதிஸாரங்களுடைய இலக்ஷணங்கள் அனைத்தும் காணும். 11.

*பயாதிஸாரம்.* பயத்தினால் மனது கலக்கமடைந்துவிட்டால் வாயுவானது பித்தத்துடன் சேர்ந்து பிரகோபமடைந்து, மலத்தைத் திரவமாகச் செய்யும்; அதன்பிறகு சீக்கிரம் உஷ்ணமாகவும், திரவமாகவும் இலகுவாகவுமுள்ள மலம் அதிஸாரத்தில் வெளியாகும். 12.

*சோகாதிஸாரம்.* பயாதிஸாரத்தில் நேரிடுவதுபோலவே சோகத்தினாலும் வாதபித்தங்கள் பிரகோபமடைந்து, முற்கூறிய குறிகளையுண்டுபண்ணி மலத்தைத் திரவமாக்கி அதிஸாரரூபமாய் வெளிப்படுத்தும். $12\frac{1}{2}$.

*இரண்டிரண்டு விதமான அதிஸாரங்கள்.* அதிஸாரத்தை ஆமாதிஸாரம் என்றும், நிராமாதிஸாரம் என்றும், இரத்தத்துடன் கூடிய அதிஸாரம் என்றும், இரத்தமில்லாத அதிஸாரம் என்றும் இவ்விதம் சுருக்கமாய் இரண்டிரண்டு வகையாகப் பிரிக்கலாம். $13—13\frac{1}{4}$.

*ஆமாதிஸாரம்.* அவற்றுள் முதலாவது அதிஸாரத்தில் வெளியாகும் மலம் குருகுணமுடையதாகையால் அந்த மலம் ஜலத்தில் விட்டதும் அமிழ்ந்துவிடும்; துர்நாற்றமுள்ளதாயிருக்கும்; வயிற்றில் இரைத்தலும், பொருமலும், வலியும், வாயில் உமிழ்நீர் அதிகமாய் ஊறுவதும் உண்டு. 14.

*பக்வாதிஸாரம்.* முற்கூறிய குறிகளுக்கு எதிரிடையான இலக்ஷணங்களுள்ளதான அதிஸாரம் நிராமாதிஸாரம் எனப்படும்;[1] கபத்தினால் உண்டான அதிஸாரத்தில் மலம் பக்குவமான நிலைமையடைந்திருந்தாலும் ஜலத்தில் அமிழ்ந்திவிடும். $14\frac{1}{2}$.

1. நிராமாதிஸாரம்—ஆமம் என்றால் உணவு மலம் முதலியது பக்குவமாகாததால் ஸம்பவிக்கும் தோஷம்; நிராமம் என்ப ஆஹாரமோ மலமோ பக்குவமான நிலைமையில் இருப்பது. ஆகவே நிராமாதிஸாரம் என்றால் - பக்வாதிஸாரம் என்றே பொருள் என்றறிக.

## கிரஹணீ ரோகம்.[1]

*கிரஹணிக்குக் காரணம்.* அதிஸாரங்களில் ஏற்ற சிகித்ஸைகளை வேண்டியவளவு செய்யாமலிருந்துவிடுவதாலும், ஜாடராக்னியை அழிக்குங்குணமுடைய உணவுகளை உபயோகிப்பதாலும் கிரஹணீ ரோகம் உண்டாகின்றது. $15\frac{1}{2}$.

*கிரஹணியைப்பற்றிய விசேஷங்கள்.* ஆஹாரம் ஜீர்ணமானதாகத் தோற்றிய பிறகுகூட மலம் ஆமமாகவோ பக்குவமாகவோ எவனுக்கு அதிஸாரரூபமாய் வெளியாகின்றதோ, அவனுக்கு அதிஸாரம் அதிகமாயிருக்குமாகையால், அவ்வியாதி இயற்கையிலேயே சீக்கிரம் பிராணாபாயமுண்டாக்கக்கூடும். உணவு ஜீர்ணமாகாமலிருக்கையில் வெளிவரும் மலம் ஆமதோஷத்தோடும் பக்குவமாகாத அன்னத்தோடும் கலந்திருக்கும்; உணவு ஜீர்ணமான பிறகு வெளியாகும் மலம் பக்குவமாகவோ பக்குவமில்லாமல் - ஆமமாகவோ - இருக்கும். திடீரென்று அடிக்கடியும் மலம் இறுகிப்போய் அதிஸாரமாக வெளியாவதும், அல்லது திடீரென்று அடிக்கடி உடைந்து திரவமாக வெளியாவதும் உண்டு. இவ்வித கிரஹணீ ரோகத்தில் மலம் குடலில் அதிகமாகச் சேர்ந்து விடும்போது அதிஸாரமுண்டாவதுடன், இவ்வியாதி வெகு நீடித்தும் போராடும். 16—18.

*கிரஹணி நான்குவிதம்.* கிரஹணீ ரோகமானது வாத-பித்த-கபங்களால் தனித்தனியே மூன்றுவிதமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆக நான்குவிதமாக ஸம்பவிப்பது வழக்கம். $18\frac{1}{2}$.

1. கிரஹணீ என்றால் இரைப்பையின் கீழ்ப்பக்கத்து கபாடத்துடன் கூடிய முகத்வாரம்; அதைப்பற்றிய வியாதி கிரஹணீரோகம் எனப்படுகிறது.



*கிரஹணியின் பூர்வரூபம்.* அக்னிமாந்த்யம், உணவு வெகு மெதுவாக ஜீர்ணமாதல், புளித்த ஏப்பம், உமிழ்நீர் அதிகமாய் ஊறுதல், வாயில் சுவை கெட்டுப்போதல், அரோசகம், நாவறட்சி, தேஹவாட்டம், தலைச்சுற்றல், வயிறுகட்டிப்போய் விம்மிக்கொள்ளுதல், வாந்தி, காதிரைத்தல், குடலில் இரைத்தல் இக்குறிகள் கிரஹணீ ரோகத்தின் பூர்வரூபங்களாகும். 19—20.

*கிரஹணியின் பொதுக் குறிகள்.* தேஹம் இளைத்துப்போதல், மூச்சு மிகப் புகைந்தாற்போல் உஷ்ணமாயிருத்தல், தமகச்வாஸம் உண்டாதல், ஜ்வரம், மூர்ச்சை, தலைவலி, வயிறு விம்மிக்கொள்ளுதல், கைகால்களில் வீக்கம் என்னும் இக்குறிகள் கிரஹணீரோகத்தின் பொதுவான இலக்ஷணங்களாம். 21.

*வாத-கிரஹணீ.* அவற்றுள் வாத தோஷத்தினால் உண்டாகும் அதிஸாரத்தில் அடியில் வரும் குறிகள் காணப்படும்:- வாய் உலர்ந்துவிடுதல், கண் மழுக்கங்கொள்ளுதல், காதுகளில் இரைத்தல், விலாப்பக்கங்களிலும் துடைகளிலும் துடையிடுக்குகளிலும் வேதனை, அடிக்கடியும் விஷூசியைப்போல் பேதி முதலியவையுண்டாதல், எல்லாச்சுவைகளிலும் விருப்பம், பசியதிகரித்தல், நாவறட்சி, குதத்தில் அறுக்கப்படுவதுபோன்ற கடுப்பு, உணவு ஜீர்ணமான பிறகும் ஜீர்ணமாகும்போதும் வயிற்றில் பொருமல், உணவைப் புஜித்தும் பொருமல் நீங்குதல், வாதரோகமென்றும், இருதயரோகம் என்றும், குல்மமென்றும், அர்சஸ்ஸென்றும், ப்லீஹமென்கிற மண்ணீரல் வியாதியென்றும், பாண்டுரோகம் என்றும் இவ்வாறு பலவிதமான பிராந்தியுண்டாதல், திரவமாகவும், சிலஸமயம் சுஷ்கமாகவும், தெளிவாகவும், ஆமதோஷத்துடன் கூடியதாகவும், நுரைத்ததாகவுமுள்ள மலத்தை வெகுநேரம் சிரமப்பட்டு அபானவாயுமுதலிய சப்தம் அதிகரிக்க வெளிவிடுதல் என்பனவாம். மேலும் குதத்தில் வலியுண்டாக, ச்வாஸமும் காஸமும் தோன்ற, சில ஸமயம் அடிக்கடியும் மலவிஸர்க்கம் செய்வான். $22—24\frac{1}{2}$.

*பித்த-கிரஹணீ.* பித்த ஸம்பந்தமான கிரஹணியில் மலம் கருநிறமாகவும், சில ஸமயம் மஞ்சளாகவும், திரவமாகவும் இருக்கும்; பிணியாளி மஞ்சள் நிறமாகவும் காணப்படுவான்; துர்நாற்றமும், புளிப்புமுள்ளதான ஏப்பம் வெளிவரும்; மார்பிலும் தொண்டையிலும் அழற்சியுண்டாகும்; அரோசகம், நாவறட்சி இவைகளும் ஏற்படும். $25\frac{1}{2}$.

*கப-கிரஹணீ.* கபத்தினால் உண்டாகும் கிரஹணியில் புஜிக்கப்படும் உணவு மிகவும் சிரமப்பட்டு பக்குவமாகும்; வாந்தியும் அரோசகமும் உண்டாகும்; வாயில் கோழை சிக்கிக்கொண்டு அடிக்கடி கபம் ஸ்ரவித்து துப்பப்படும்; காஸம், இருதயத்தின் இயற்கைக்கு விரோதமான சலனம், பீநஸம் இவையுமுண்டாகும்; மார்பினுள் ஏதோ திரண்டு அடைபட்டிருப்பதாக ஓர் உணர்ச்சியுண்டாகும்; வயிறு பொருமலடைந்தும் குருவாகவும் இருக்கும்; ஏப்பம் ஒருவாறு கெட்டுப்போன இனிப்பான சுவையுடன் கூடியதாயிருக்கும்; ஜாடராக்னி மந்தப்படும்; ஸ்த்ரீகளிடம் விருப்பமுண்டாகாது; உடைந்தும், ஆமதோஷமுள்ளதும், கபத்துடன் கூடியதும், குருகுணமுள்ளதுமான மலம் வெளியாகும்; தேஹம் இளைக்காமலிருந்தும் துர்ப்பலம் அதிகரித்திருக்கும். $26—28\frac{1}{4}$.

*ஸந்நிபாத கிரஹணீ.* வாத-பித்த-கபங்களாலுண்டாகும் ஸந்நிபாத கிரஹணீ ரோகத்தில் ஒவ்வொரு தோஷத்தாலும் ஸம்பவிக்கிற மூன்று கிரஹணிகளிலும் உண்டாவதாகக் கூறியுள்ள இலக்ஷணங்கள் ஒருமிக்கச் சேர்ந்திருக்கக் காணும். $28\frac{1}{2}$.

*கிரஹணியில் வேறு சில பேதங்கள்.*

அங்கங்களைப் பகுத்து விவரிக்குமிடத்தில் விஷமம்முதலிய எந்த மூன்றுவித நிலைமையுள்ள ஜாடராக்னிகள் கூறப்பட்டனவோ[1] அவையும் கிரஹணீ தோஷங்களாகவே கருதப்படுகின்றன. ஸமாக்னியானது கிரஹணீ முதலிய கோளாறுகள் இன்றியே ஆரோக்கியத்திற்குக் காரணமாகும். 29½.

*எட்டு விதமஹாரோகங்கள்.*

வாத ரோகங்கள், அச்மரீ, குஷ்டம், மேஹ ரோகங்கள், உதரரோகங்கள், பகந்தரம், அர்சஸ், கிரஹணீ என்னும் இவ்வெட்டும் மிகவும் சிரமப்பட்டு நிவ்ருத்திக்கக் கூடிய மஹா ரோகங்கள் ஆகும். 30.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

இதன் பிறகு மூத்திராகாத நிதாநம்[2] என்கிற அத்தியாயம் விவரித்துக் கூறப்படும்:—

*மூத்திராகாதாதிகளின் பொதுவான ஸம்ப்ராப்தி.*

வஸ்தி யென்னும் மூத்திரப்பை, வஸ்திசிரஸ் என்கிற மூத்திர நாளங்கள், ஆண்குறி பெண்குறிகள், இடுப்பு, பீஜங்கள், குதம் இவையனைத்தும் குதஸ்தானத்தைச் சுற்றிலும் எல்லாப் புறங்களையும் கவிந்து அமைந்துள்ள எலும்புகளின் குழியில் இணைக்கப்பட்டிருப்பதால், இவை ஒரே இடத்தை ஆதாரமாயுடையவையென்று கூறப்படுகின்றன. வஸ்தியானது தலைகீழாக அமைந்திருக்கிறது; அதில் பாரிசங்களில் ஸூக்ஷ்மமான மூத்திர நாளங்களால் எப்பொழுதும் மூத்திரம் கசிந்துகொண்டேயிருக்கும்; அவ்விதமான மூத்திர நாளங்களின் மூலமாகவே தோஷங்கள் வஸ்தியில் பிரவேசித்து மர்மஸ்தானங்களைப் பீடித்து மிகவும் சிரமஸாத்தியமாயுள்ள இருபது விதமான மூத்திராகாதங்களையும், இருபது விதமான பிரமேஹங்களையும் உண்டுபண்ணும். 1—3.

*மூத்திர க்ருச்சிரம்.*

வஸ்தியிலும், துடையிடுக்குகளிலும், மூத்திரத்வாரத்திலும் வலியையுண்டுபண்ணிக் கொண்டு, துளித் துளியாகவும், அடிக்கடியும் வாதத்தினால் உண்டான மூத்திர க்ருச்சிரத்தில்[1] மூத்திரம் வெளியாகும்; பித்தத்தினால் உண்டாகும் மூத்ர க்ருச்சிரத்தில் மூத்திரமானது அழற்சியையும் வலியையும் உண்டு பண்ணிக்கொண்டு, மஞ்சள் நிறமாகவாவது சென்னிறமாகவாவது வெளியாகும். கபத்தினால் உண்டாகும் மூத்திர க்ருச்சிரத்தில் வஸ்தியிலும் ஆண்குறியில் அல்லது பெண் குறியிலும் குருத்வமும் வீக்கமும் ஏற்பட்டு, மூத்திரமானது பிசுபிசுப்புடன் கூடியதாய் அதிகமாகக் கட்டப்பட்டு மெதுவாக வெளியாகும். மூன்று தோஷங்களும் ஒருமிக்கப் பிரகோபமடைந்து ஸம்பவிக்கும் ஸந்நிபாத மூத்திரக்ருச்சிரத்தில் முற்கூறிய எல்லாக்குறிகளும் கலந்து காணும். 4. 5.

*அச்மரியின் ஸம்ப்ராப்தி.*

வாயுவானது எப்பொழுது வஸ்தியின் முகத்தை அடைத்து மூத்திரத்தைத் தனியாகவாவது, பித்தத்துடன்கூடிய மூத்திரத்தையாவது, கபத்தோடுகூடிய மூத்திரத்தையாவது, சுக்ரத்தோடுகூடிய மூத்திரத்தையாவது சோஷணம் செய்கின்றதோ அப்பொழுது பசுவின் வயிற்றில் பித்தத்திலிருந்து கோரோசனைபோல அச்மரீ[1] உண்டாகின்றது; அவற்றுள் ஸாதாரண வாதாச்மரியைவிட பித்தாச்மரியும், அதைவிட கபாச்மரியும், அதைவிட சுக்ராச்மரியும் மேன்மேலும் கடுந்துன்பம் விளைவிப்பவையாம். எல்லா அச்மரிகளுமே கபத்தை முக்கியமாய் ஆதாரமாகக் கொண்டு உண்டாகின்றன. 6,6½.

1. ஜாடராக்னியின் இந்த நிலைமைகளைப் பற்றிய விவரங்களை 264-வது பக்கத்தில் "ஜாடராக்னியின் நான்குவித நிலைமைகள்" என்னும் தலையங்கத்தின் கீழ் காண்க.

2. பற்பல காரணங்களால் மூத்திரம் வெளிப்படுவதில் தடையுண்டாகும் வியாதிகளை விவரிக்கும் அத்தியாயம்.

1. மூத்திர க்ருச்சிரம்-நீர்ச்சுருக்கு வியாதி.



*அச்மரியின் பூர்வரூபம்.*

அச்மரியின் பூர்வரூபக்குறிகள் பின்வருமாறு:—வஸ்தி யென்னும் மூத்திரம் விம்மிக் கொள்ளுதல், அதற்கு அடுத்தப் பிரதேசங்களில் நாற்புறமும் அதிகவேதனை, மூத்திரம் ஆட்டு மூத்திரத்தின் வாஸனையும் தோற்றமும் உடையதாயிருத்தல், நீர்ச்சுருக்கும் ஜ்வரமும் ஸம்பவித்தல், அரோசகம் என்பனவாம். 7, 8.

*அச்மரியின் ஸாதாரணரூபங்கள்.*

நாபியிலும், ஸேவநீயிலும்,[2] வஸ்தியின் மேற்புறத்திலும் வலி, மூத்திரம் வெளியாகும் மார்க்கம் தடுக்கப்படும்போது மூத்திரம் தாரையைப் போல வெளிவராமல் இடையிடையில் நின்று நின்று வெளியாதல், தடை நீங்கியபிறகு நீர் தாராளமாய் எளிதில் இறங்கும்; அது அப்பொழுது நிர்மலமாகவும், கோமேதகக் கல்போன்றதாகவும் தோற்றும். அதிர்ச்சியையுண்டுபண்ணி அதைத் தாக்கினால் மூத்திரம் இரத்தத்தோடு வெளியாகும்; சிரமமுண்டாகும்படி ஏதாவது வேலை செய்வதால் அச்மரீ உண்டாயிருக்குமிடத்தில் வலி அதிகரிக்கும்; இவை அச்மரியின் ஸாதாரண இலக்ஷணங்களாம். 9, 10.

*வாதாச்மரீ.*

அவற்றுள் வாதாச்மரியினால் உண்டாகக் கூடிய குறிகள் பின்வருமாறு:—வேதனை மிகவும் அதிகமாதல்; பற்களைக்கடிப்பான்; நடுங்குவன்; மர்மஸ்தானத்தை அழுத்திப் பிசைந்து கொள்வான்; அடிக்கடியும் கூவிக்கொண்டு நாபியைப் பிடித்துப் பிசைவான்; அபானவாயுவை விசேஷமாய் விட்டுக்கொண்டே மலவிஸர்க்கம் செய்வான்; அடிக்கடியும் துளித்துளியாக மூத்திரம் விடுவான். அச்மரீயென்னும் மூத்திரக்கல்லானது கறுப்பாகவும், ரூக்ஷமாகவும், சிறிய முட்களைப் போன்ற அவயவங்களுடன்கூடியவையாகவும் இருக்கும். 11, 12.

*பித்தாச்மரீ.*

பித்தாச்மரியில் வஸ்தியானது சமைக்கப்படுவதுபோல் அவ்வளவு வெப்பமுடையதாய் தஹிக்கப்படும். இந்த அச்மரியானது சேராங்கொட்டை போன்றதாய், சிவந்தும் மஞ்சள் நிறமாகவும் கறுநிறமாகவும் காணப்படும். 13.

*கபாச்மரீ.*

கபத்தினால் உண்டாகும் அச்மரியில் வஸ்தியானது சீதளமாகவும், குருவாகவும், குத்தப்படுவது போலவும் இருக்கும். அச்மரியானது பெரிதாகவும், வழுமுண்டதாகவும், தேன் வர்ணமானதாகவும் அல்லது வெண்மையாகவும் காணப்படும். 14.

*மூன்று அச்மரிகளின் விசேஷம்.*

இம்மூன்று அச்மரிகளும் பெரும்பாலும் பாலர்களுக்கே உண்டாகின்றன; இந்த அச்மரிகள் உண்டாவதற்கு ஆதாரமான இடங்களும், அச்மரிகளின் விருத்தியும் சொற்பமாயிருக்குமாகையால், அவ

1. அச்மரீ—மூத்திரத்திலுள்ள உப்புவகை முதலியவை வாதாதி தோஷங்களால் இறுகிப்போய் கோரோசனையைப்போல பரிணமிக்கும் வியாதி விசேஷம்.

2. ஸேவநீ—ஆண் குறியின் அடிப்புறத்தில் அதாவது பின்புறமாய் தைக்கப்பட்டது போல் நெடுக அமைந்திருக்கும் வடு.

ற்றைக் கிரஹிப்பதற்கும் வெளியில் எடுப்பதற்கும் எளிது. 15.

**சுக்ராச்மரீ.**

சுக்ரவேகத்தை அடக்குவதால் சுக்ராச்மரீ உற்பத்தியாகின்றது; அது சிறு பிராயம் நீக்கியவர்களுக்கே உண்டாகும். சுக்ரம் ஸ்த்தானத்திலிருந்து நழுவியபிறகு அதை வெளியில் விடாமல் அடக்கினால், வாயுவானது பீஜ கோசங்களுக்குள்ளேயே அச்சுக்ரத்தை அடக்கி சுஷ்கமாகச் செய்துவிடும்; அவ்விதம் வறண்டு சுக்ரம் இறுகிப் போமானால், அதுவே "சுக்ராச்மரீ" எனப்படும். வஸ்தியில் வேதனையும், நீர்க்கடுப்பும், பீஜவீக்கமும் உண்டாகும்; சுக்ராச்மரீ உற்பத்தியானவுடனே அவ்விடத்தை அழுத்தினால், சுக்ரம் வெளியாய், அச்மரியும் மறையும். 16-17½.

**சர்க்கரா.**

அச்மரியே வாயுவால் அநேகமாக அணுப்பிரமாணமாய் உடைக்கப்படுமானால் சர்க்கரா என்று வழங்கப்படும்; அந்த சர்க்கரையானது, வாயு கீழ் நோக்கி அசையும்போது மூத்திரத்துடன் வெளியாகின்றது; வாயு பிரதிகூலமாய் மேல் நோக்கிய நிலைமையிலிருந்தால் அச்சர்க்கரை உட்புறத்திலேயே கட்டப்பட்டுப் போம். 18, 19.

**வாதவஸ்தி.**

வெளியிட வேண்டிய ஸமயங்களில் மூத்திரத்தை வெளிவிடாமல் அடக்கும் வழக்கமுள்ளவனுடைய வஸ்தியின் முகத்வாரத்தை வாயுவானது அடைத்து, மூத்திரத்தை மேன்மேலும் வஸ்தியினுள் சேர்த்து, வலியையும், தினவையும் உண்டுபண்ணி, சில ஸமயம் வஸ்தியை அதன் இயற்கை ஸ்த்தானத்திலிருந்து நழுவச்செய்து, மீண்டும் மேற்புறமாகப் புரட்டி, கர்ப்பம் தரித்திருப்பதுபோல அதைப் பருமனாகவும் ஒருவாறு அசையும்படியாகவும் செய்து விடுகிறது. அதில் வலியும், அழற்சியும், மூத்திரக்கசிவும் ஏற்பட்டு, மூத்திரம் மேல்நோக்கித் திருப்பியிழுக்கப்படுவதுமுண்டு; மூத்திரம் துளித்துளியாக வெளியாகும்; வஸ்தியைப் பிடித்து அழுத்தும்போது தாரையாகவும் வெளிப்படும். இவ்விரண்டும் வாதவஸ்தி யென்று கருதப்படுகிறது; இவற்றுள் முதலிற் கூறிய வாதவஸ்தி கிருச்சிர ஸாத்தியமானது; இரண்டாவது வாதவஸ்தியில் வாதம் மிகப் பிரபலமாயிருப்பதால், அதுமுதலிற் கூறியதைவிட இன்னும் கஷ்டஸாத்தியமானது. 20—22½.

**வாதாஷ்டீலா.**

வாயுவானது மலாசயத்திற்கும் வஸ்திக்கும் இடையிலிருந்துகொண்டு, அஷ்டீலையைப் போல திரண்டு அசைவற்று மேலோங்கிக் கிளம்பியுள்ள கிரந்தியை உண்டுபண்ணும்; அது வாதாஷ்டீலா என்று கூறப்படும்; அது விம்மலையும், மலம் - மூத்திரம் - அபானவாயு இவற்றிற்கு அடைப்பையும் உண்டாக்கிவிடும். 23, 24.

**வாத குண்டலிகா.**

வஸ்தியினுள் வாயுவானது இயற்கைக்கு மாறாக மேல்நோக்கி அசைந்து, தீவ்ரமான வலியை யுண்டுபண்ணிக்கொண்டு மூத்திரத்திற் பிரவேசித்து, சுழன்றோடும்; அப்பொழுது அவ்வஸ்தியானது ஸ்தம்பித்து அல்லது மேல்நோக்கிப் புரண்டு அசைந்தும், குருகுணத்துடன்கூடியது மாயிருக்கும். அல்லது மல விஸர்க்கம் செய்யும்போது மூத்திரம் துளித் துளியாக வெளியிடப்படும்; இதை வாத குண்டலிகா[1] என்பார்கள். 25, 25¾.

**மூத்திராதீதம்.**

மூத்திரம் வெகு நேரம் அடைக்கப்பட்டுப் போமானால், அது வெளியிட முடியாததா யிருக்கும்; அல்லது உள்ளே தடுக்கப்பட்டு

1. வாத குண்டலிகா—வாயு கீழும் மேலுமாய் சுழன்று குண்டலம் போல் ஓடியுண்டாகும் வியாதி யெனப் பொருள்.



சிறுகச் சிறுகவாவது வெளியாகும்; இதனால் சொற்பவலியுண்டாகும். இதற்கு மூத்திராதீதம்[1] எனப் பெயர். 26½.

**மூத்திர ஜடரம்.**

வெளியிடவேண்டிய ஸமயங்களில் மூத்திரத்தை வெளிவிடாமல் அடக்குவதால், அந்த நீர் கீழே தடுக்கப்பட்டுப் போய், எப்பொழுது வாதத்தினால் மேலே எதிரிடையாகத் திருப்பிச் செலுத்தப்படுகிறதோ, அப்பொழுது நாபிக்குக் கீழே வயிற்றில் மூத்திரம் நிரம்பிவிடும்; அதனால் தீவ்ரமான வலியும், வயிற்றுப் பொருமலும், அஜீர்ணமும், மேன்மேலும் மலத்தின் சேர்க்கையும் உண்டாகும். இது மூத்திர ஜடரம்[2] என்று கூறப்படும் 27-28½.

**மூத்திரோத்ஸங்கம்.**

மூத்திர மார்க்கத்தில் நேரிட்டுள்ள கோளாறால் அல்லது வாயுவினால் மேலுக்குக் கவர்ந்திழுக்கப்பட்ட சொற்ப மூத்திரமானது வஸ்தியிலாவது, மூத்திரநாளத்திலாவது, மர்மஸ்த்தானத்தின் முனைக்குக் கீழேயாவது தங்கிப்போய், மெதுவாக வெளியாகும்; பிறகு மீண்டும் அம் மூத்திரம் தடுக்கப்பட்டு மிச்சமுள்ளது மர்மஸ்த்தானத்தினுள் தங்கிப்போய் அவ்வவயவத்திற்கு அதனால்குருத்வம் அதிகமாய்விடும். இந்த வியாதி மூத்திரோத்ஸங்கம்[3] எனப்படுகிறது. 28—30.

**மூத்திரக் கிரந்தி.**

உள்ளே வஸ்தியின் முகத்வாரத்தில் உருண்டையாய் அசைவற்றதான ஒரு சிறிய கிரந்தியானது திடீரென்று ஸம்பவிப்பதுண்டு; அச்மரியைப்போலவே இதுவும் வலியையுண்டுபண்ணும். இது மூத்திரக்கிரந்தி[1] யென்று கூறப்படும். 31.

**மூத்திர சுக்ரம்.**

மூத்திரம் வெளியிடவேண்டிய அவச்யம் ஏற்பட்டிருக்கையில், அதை அடக்கிக்கொண்டு ஸ்த்ரீயுடன் புணர்பவனுக்கு, வாயுவினால் சுக்ரம் விசரப்பட்டு, அதன் ஸ்த்தானத்திலிருந்து நழுவி, மூத்திர விஸர்க்கம் செய்யும்போது அதற்கு முன்னதாகவாவது பிறகாவது சாம்பர்க் கரைத்த ஜலம்போல சுக்ரம் கலந்த மூத்திரம் வெளியாகும். அது மூத்திரசுக்ரம்[2] என்று கூறப்படுகிறது. 32, 32½.

**விட்விகாதம்.**

ரூக்ஷமான தேஹ நிலைமையுள்ளவர்களுக்கும், துர்ப்பலமானவர்களுக்கும் வாதத்தினால் மலமானது எப்பொழுது இயற்கைக்கு மாறாக மேல்நோக்கிச் செலுத்தப்பட்டு மூத்திர ஸ்ரோதஸ்ஸுகளைச் சுற்றிலும் வியாபிக்கின்றதோ, அப்பொழுது மூத்திரம் மலத்தின் அம்சங்களால் கவரப்பட்டதாய், மலத்திற்கு ஸமானமான நாற்றமுடையதாகும். அவ்வியாதியை விட்விகாதம்[3] என்றுகூறவேண்டும். 33, 34.

**உஷ்ண வாதம்.**

வியாயாமம் என்னும் தேஹவுழைப்பு, தீக்ஷ்ணமாகவும் உஷ்ணமாகவுமுள்ள போஜநம், வழி நடத்தல், வெயிலில் இருத்தல் முதலிய காரணங்களால் விருத்தியடைந்த பித்தம் வாயுவினால் கீழே தள்ளப்பட்டு, வஸ்

1. மூத்திராதீதம்—வெகுநேரம் மூத்திரம்அடக்கப்படுவதாலும், அது மிகவும் நீடித்து மெதுவாக வெளியாவதாலும் இப்பெயர் வந்தது.

2. மூத்திர ஜடரம்—வயிற்றில் மூத்திரம் நிரம்புகிற வியாதி. (வயிறு என்றால் இங்கே வஸ்தி யென்றே கருத்து).

3. மூத்திரஸங்கம்—மூத்திரம் மேன்மேலும் சேருதல்.

1. மூத்திரக்கிரந்தி—மூத்திரத்தினால் ஏற்பட்ட கிரந்தி.

2. மூத்திர சுக்ரம்—மூத்திரத்துடன் கூடிய சுக்ரம்.

3. விட் விகாதம்—மலம் அடைபடுதல் எனப் பொருள்; என்றால் அநுலோமமானமார்க்கம் தடுக்கப்படு பிறகு குடலில் ஊறி பலவித ஸ்ரோதஸ்ஸுகளின் மூலமாய் மலத்தின் அம்சங்கள் மூத்திரத்தில் ஸம்பந்திக்கும்படி நேரிடும் வியாதி.

தியிலும் ஆண்குறி அல்லது பெண்குறிகளிலும் வலியையும் எரிதலையும் உண்டுபண்ணிக் கொண்டு, மஞ்சள் நிறமாகவும், இரத்த நிறமாகவும் உஷ்ணமுமாயுள்ள மூத்திரத்தை அல்லது இரத்தத்தையே யாவது அடிக்கடியும் பிணியாளிக்கு மிகவும் கஷ்டத்தை யுண்டு பண்ணி வெளிப்படுத்தும். இதை உஷ்ணவாதம் [1] என்பார்கள். 35, 36.

*மூத்திரக்ஷயம்.*

ரூக்ஷமாகவும் வாட்டங்கொண்டு முள்ள தேஹமுடைய மனிதனின் வஸ்தியில் அடங்கியிருக்கும் பித்தமும் வாயுவும் சேர்ந்து வலியையும் அழற்சியையும் தந்து மூத்திரத்தை க்ஷயிக்கச் செய்து, மூத்திர க்ஷயம் என்னும் வியாதியை உண்டுபண்ணும். 37.

*மூத்திரஸாதம்.*

பித்தமாவது, கபமாவது, அல்லது இரண்டுமாவது வாதத்தினால் தாக்கி இறுக்கப்படுமானால் அப்பொழுது மூத்திரம் மஞ்சள் நிறமாகவும், சென்னிறமாகவும், வெண்மையாகவும், தடிப்பாகவும் வெகு கஷ்டப்பட்டு வெளியிடப்படும்; மேலும் அம்மூத்திரம் சுஷ்கித்து, அழற்சி யுண்டுபண்ணுவதாகவும், கோரோசனை சங்கு இவற்றின் சூர்ணங்களுக்கு ஸமான நிறமாகவும், அல்லது ஸகல வர்ணங்களோடு கூடியதாகவும் இருக்கும். இதை மூத்திரஸாதம் [1] என்பார்கள். 38, 39.

*அத்தியாய முடிவுரை.*

இங்ஙனம் மூத்திரம் வெளியாவதற்குத் தடை யுண்டாக்கும் வியாதிகள் நிதாந-லக்ஷணங்களோடு விரிவாகக் கூறப்பட்டன. மூத்திரம் அதிகமாய் வெளியாவதால் உண்டாகும் ரோகங்கள் நிதாந-லக்ஷணங்களோடு இதன் பிறகு விரிவாகக் கூறப்படும். 40.

---

## பத்தாவது அத்தியாயம்.

இனி பிரமேஹ நிதாநம்[2] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படும்:—

*பிரமேஹம் இருபதுவிதம்.*

பிரமேஹம் என்கிற வியாதி இருபதுவிதம்; அவற்றுள் கபத்தினால் பத்துவித பிரமேஹங்களும், பித்தத்தினால் ஆறு பிரமேஹங்களும், வாதத்தினால் நான்கு பிரமேஹங்களும் ஸம்பவிக்கும். $\frac{3}{4}$.

*பிரமேஹத்தின் பொதுக்காரணங்கள்.*

மேதஸ் என்னும் தாதுவென்ன, மூத்திரமென்ன, கபமென்ன இவற்றை விருத்தி செய்யக்கூடிய உணவுகளும், பானவஸ்துக்களும், வேலைகளும் அந்தப் பிரமேஹங்களை உண்டுபண்ணக் கூடியவையாம். இனிப்பு, புளிப்பு, ஸ்நிக்த்தம், குரு, பசை, குளிர்ச்சி என்னும் இக்குணங்களும், நூதனமான தானியங்களும், கட்குடியும், ஆநூப தேசத்திலுண்டான மிருகம் முதலியவற்றின் இறைச்சியும், கரும்பும், வெல்லமும், மோரும், ஒரே இடத்தில் வாஸம்செய்வதும், ஒரே ஆஸ

1. உஷ்ணவாதம்—பித்தமும் வாயுவும் சேர்ந்து உண்டாவதால், அதற்கேற்றவாறு இப்பெயர் இடப்பட்டது.

2. மிதமிஞ்சி மூத்திரம் பலவாறாக வெளிப்படும் ரோகம் "பிரமேஹம்" எனப்படுகிறது; பிரமேஹ ரோகத்தின் காரண-லக்ஷணாதிகளை விவரிக்கும் அத்தியாயம் "பிரமேஹநிதாநம்" எனப்படுகிறது.

1. மூத்திரஸாதம்—மூத்திரம் குறைந்து விடும் வியாதியெனப் பொருள்.



னத்தில் உட்கார்ந்திருப்பதும், நியமமில்லாத சயனமும் பிரமேஹரோகங்களை விருத்தி செய்யக்கூடியன. 1—3.

*கபப்பிரமேஹ ஸம்ப்ராப்தி.*

சீர்குலைந்த கபமானது வஸ்தியை ஆச்ரயித்து, உடல், திரவக்கசிவுகள், முக்கியமாய் வியர்வை, கொழுப்பு, இரஸதாது, மாம்ஸம் இவற்றைத் தூஷிப்பித்து பிரமேஹ ரோகங்களை உண்டுபண்ணுகின்றது. 4.

*பித்தப்பிரமேஹ ஸம்ப்ராப்தி.*

கபம் முதலிய ஸௌம்யதாதுக்கள் க்ஷீணித்திருக்கையில், பித்தமானது, மூத்திரத்தைப்பற்றிய இரத்தத்தைச் சீரழித்து, ஆறுவித பிரமேஹரோகங்களை யுண்டு பண்ணும் $4\frac{1}{2}$.

*வாதப் பிரமேஹ ஸம்ப்ராப்தி.*

தாதுக்கள் க்ஷயமடைகையில், அந்த தாதுக்களை, வாயுவானது வஸ்தியிற்கொண்டு சேர்த்து, அவை க்ஷயிக்கையில் வாதஸம்பந்தமான பிரமேஹத்தை நான்கு விதமாய் உண்டுபண்ணும். 5.

*ஸாத்தியாஸாத்திய நிர்ணயம்.*

கபத்தினாலும், பித்தத்தினாலும், வாதத்தினாலும் உண்டாகிற பிரமேஹங்களுக்கு முறையே எளிதான ஸமசிகித்ஸையும்,[1] விஷமசிகித்ஸையும்,[2] அபாயகரமான நிலைமையும்[1] இயல்பாகையால், அவை முறையே சிகித்ஸைக்கு எளிதில் வசப்படக்கூடியவையாகவும், யாப்யங்களாகவும், அஸாத்தியங்களாகவும்[2] ஆகின்றன. 6.

*பிரமேஹத்தின் பொதுக் குறிகள்.*

மூத்திரம் அளவில் அதிகமாயிருப்பதும், பலவிதமான கழிவுப்பொருட்களால் கலங்கியிருப்பதும் பிரமேஹங்களுக்குப் பொதுவான குறிகளாம். $6\frac{1}{2}$.

*பிரமேஹத்தில் பேதம் கற்பிக்கும் முகாந்தரம்.*

பிரமேஹங்களில் தோஷங்களுக்கும் தாதுக்களுக்கும் தன்மையில் பேதமில்லாமலிருந்தும், அவை ஒன்றோடொன்று சேருவதிலுள்ள ஏற்றக்குறைவுகளைக் கொண்டும், மூத்திரங்களுக்கு உண்டாகும் நிறம் முதலியவற்றால் பிரமேஹங்களில் பேதங்கள் கற்பிக்கப்படுகின்றன. $7\frac{1}{2}$.

*உதகமேஹம்.*

சிறுநீரானது தெளிவாகவும், அளவில் அதிகமாகவும், வெண்மையாகவும், குளிர்ந்ததாகவும், வாஸனையற்றதாகவும், அல்லது சிறிது கலங்கியதுபோலவும், கொஞ்சம் பிசு பிசுப்புள்ளதாகவும், ஜலத்தைப் போன்றதாகவும் காணப்படுமானால் அது உதகமேஹம்[2] என்று கூறப்படும். $8\frac{1}{2}$.

1. ஸமசிகித்ஸை — ஸமஸ்வரூபமான தோஷங்களும் தாதுக்களும் கோளாறடைந்தால், அவற்றிற்கு எதிரிடையான குணங்களைச் செய்யக்கூடிய சிகித்ஸை ஸமசிகித்ஸையாகும். [உ-ம். கபமும், அவ்விதமான நீர்மயமாயுள்ள தாதுக்களும் சீர் கெடுவதால் ஸம்பவிக்கும் பிரமேஹத்துக்கு லங்கநம் முதலிய கர்ஷண சிகித்ஸை செய்யவேண்டியது அவசியம்; இது ஸமசிகித்ஸையாகும்.]

2. விஷமசிகித்ஸை—அநுகூலமில்லாத சிகித்ஸை. [உ-ம். பித்தத்துக்கு சீத-மதுராதி குணமுள்ள சிகித்ஸை ஏற்றது; ஆனால் பிரமேஹத்தில் தீக்ஷ்ணம் கடுரஸம் முதலிய குணங்களே தருந்தவை; இவ்வித சிகித்ஸையால் குணமுண்டாவது அரிதாகையால் விஷமசிகித்ஸையாம்.]

1. பிரமேஹத்தில் நீர்மயமான தாதுக்கள் பிரகோபமடைவதால், அதற்கு இலங்கன சிகித்ஸை அல்லது கர்ஷணசிகித்ஸை செய்யவேண்டியிருக்க, வாதப்பிரகோபத்தினால் இப்பிரமேஹம் ஏற்பட்டிருப்பதால் அதற்கு ஏற்ப, பிருஹ்மணசிகித்ஸை அவசியமாயிருப்பதால், இவ்வியாதியில் கர்ஷணமாவது பிருஹ்மணமாவது செய்வதற்கு முடியாதாகையால், இது அபாயகரமானதென்றும், ஆகவே அஸாத்தியம் என்றும் கூறப்பட்டது.

2. உதகமேஹம்—உதகம் என்றால் ஜலம்; மேஹம் நீர் அதிகம் இறங்குதல்; ஆகவே தண்ணீரைப போன்ற மேஹம் எனப் பொருள்.

**இக்ஷுமேஹம்.**

மூத்திரமானது மதுரமான சுவையுள்ளதாகவும், ஆகவே எவ்விதத்திலும் கருப்பஞ்சாறைப் போன்றதுமான பிரமேஹம் இக்ஷுமேஹம்[1] என்று கூறப்படும். 9.

**ஸாந்த்ர மேஹம்.**

ஸாந்த்ரமேஹம்[2] என்னும் பிரமேஹமுள்ளவனாயிருந்தால், சிலநேரம் மூத்திர வேகத்தை இடக்கியிருக்க, அந்த நீர் அறுகியது போலத் திரிபடைந்து வெளியாகும். 9½.

**ஸுராமேஹம்.**

ஸுரை யென்னும் ஒருவித மதுவைப்போல மேலே தெளிவாகவும் அடியில் கலங்கிய கனமான வஸ்துக்கள் அடங்கியதுமாயிருந்தால், அது ஸுராமேஹம்[3] எனப்படும். 10.

**பிஷ்டமேஹம்**

மாக்கரைத்த ஜலத்தைப்போல வெண்மையாகவும், அளவில் அதிகமாகவும் மயிர்ச் சிலிர்க்கையுடன் கூட மூத்திரம் வெளியிடப்படுமானால் அது பிஷ்டமேஹம்[4] என்று கூறப்படும். 10½.

**சுக்ரமேஹம்.**

சுக்ரமேஹம்[5] உள்ளவன் சுக்ரத்தைப் போன்றதாக அல்லது சுக்ரம் கலந்ததாக மூத்திரம் வெளிவிடுவான். 11.

**ஸிகதா மேஹம்.**

ஸிகதாமேஹம்[1] என்கிற வியாதியுள்ளவன், மணல்களைப்போன்ற உருவமுள்ள மூர்த்திர ஸம்பந்தமான அணுக்களாகும் மலங்களை மூத்திரத்தோடு வெளிவிடுவான். 11½.

**சீதமேஹம்.**

சீதமேஹம்[2] என்கிற ரோகமுள்ளவன், இனிப்பான சுவையுள்ளதாகவும், மிகவும் குளிர்ச்சி பொருந்தியதாகவும், அளவில் அதிகமுமான மூத்திரத்தை வெளிவிடுவான். 12.

**சனைர்மேஹம்.**

சிறுநீர் ஒருவனுக்கு அடிக்கடியும், மிகச் சொற்பம் சொற்பமாகவும் இறங்குமானால், அது சனைர்மேஹம்[3] என்று கூறப்படும். 12½.

**லாலாமேஹம்.**

நூலிழைபோன்ற சொள்ளு நீருக்கு ஒப்பாகவும், பசையுள்ளதாகவும் மூத்திரம் வெளியிடப்படுமானால், அது லாலாமேஹம் என்று கூறப்படும். 13.

**க்ஷாரமேஹம்.**

மணத்தினாலும், நிறத்தினாலும், சுவையினாலும், பரிசத்தினாலும் க்ஷாரத்திற்கு ஸமானமாக மூத்திரம் வெளிவருமானால், அது க்ஷாரமேஹம்[5] என்று கூறப்படும். 13½.

1. இக்ஷுமேஹம்—இக்ஷு என்றால் கரும்பு; அதுபோன்ற நீரிறக்கம் "இக்ஷுமேஹம்" எனப்படுகிறது.

2. ஸாந்த்ரம் என்றால் இறுகுதல் அல்லது தோய்ந்து போதல்; அவ்விதமுள்ள நீர் இறக்கம் "ஸாந்த்ர மேஹம்" ஆகும்.

3. ஸுரா யென்றால்-கள்; அதுபோன்ற மேஹம் ஸுரா மேஹம்.

4. பிஷ்டம் என்றால்-மா; அதாவது அரிசி மா முதலியது; அது போன்றது பிஷ்ட மேஹம்.

5. சுக்ரம்-புருஷர்களுடைய எட்டாவது தாது; அதுபோன்றது சுக்ர மேஹம் எனப்படும்.

1. ஸிகதா-என்றால் மணல்; அதுபோன்ற மேஹம் ஸிகதா மேஹம் எனப்படுகிறது.

2. சீதம்-என்றால் குளிர்ச்சி; அவ்விம்தமிகக் குளிமையாக மூத்திர விஸர்க்கம் செய்தல் சீதமேஹம் ஆகும்.

3. சனைர்-என்றால் சிறுகச்சிறுக அல்லது மெதுவாக எனப்பொருள்; அவ்வித மேஹம் சனைர் மேஹம் எனப்படும்.

4. லாலா என்பது-வாயிலிருந்து ஒழுகும் சொள்ளு நீர்; அதுபோன்ற மேஹம் லாலா மேஹம் ஆகும்.

5. க்ஷாரம்-ஒருவித தீக்ஷணவீர்யமுள்ள உப்பு; அதுபோன்ற மேஹம் க்ஷாரமேஹம் ஆகும்.



**நீலமேஹமும் காலமேஹமும்.**

சிறுநீரானது நீலநிறமாயிருந்தால் நீலமேஹம்[1] என்றும், அஞ்ஜனத்தைப்போல் கறுநிறமாயிருந்தால், காலமேஹம்[2] என்றும் கூறப்படும். 14.

**ஹாரித்ர மேஹம்.**

கடுரஸமுள்ளதும், அழற்சியை யுண்டுபண்ணுவதும், மஞ்சள் நிறமானதுமான மூத்திரம் வெளிவருமானால்அது ஹாரித்ரமேஹம்[3] என்று கூறப்படும். 14½.

**மாஞ்ஜிஷ்ட மேஹம்.**

மஞ்ஜிஷ்டி யென்கிற நிறப்பொருள் கலந்த தண்ணீரைப் போன்றதும், ஒருவித துர்நாற்றமுள்ளதுமாகிய மூத்திரம் வெளியாகுமானால், அது மாஞ்ஜிஷ்டமேஹம்[4] எனப்படும். 15.

**இரத்தமேஹம்.**

சிறு நீரானது ஒருவித சவர்நாற்றமும், உஷ்ணமும், உப்புச்சுவையும், இரத்தநிறமும் உள்ளதாயிருந்தால் அது இரத்தமேஹம் எனப்படும். 15½.

**வஸாமேஹம்.**

வஸாமேஹம் என்கிற ரோகமுள்ளவனுக்கு நீரானது வஸையென்னும் கொழுப்பு நீரோடு கலந்தாவது, அல்லது வஸையாகவேவாவது அடிக்கடியும் வெளியாகும். 16.

**மஜ்ஜமேஹம்.**

மஜ்ஜமேஹம்[5] என்கிற மூத்திரரோகமுள்ளவன், மஜ்ஜையென்னும் தாதுவைப்போன்ற அல்லது மஜ்ஜையோடுகூடிய நீரை அடிக்கடியும் வெளிவிடுவான். 16½.

**ஹஸ்திமேஹம்.**

மதங்கொண்ட யானையைப்போல எப்பொழுதும் வேகமில்லாமல், நிணநீரோடு கூடியதாய், மூத்திரத்தை அடிக்கடி நடுவில் தடுக்கப்பட்டு வெளியிடுவானானால், அது ஹஸ்திமேஹம்[1] எனப்படும். 17½.

**மதுமேஹம்.**

மது மேஹரோகியின் நீர் தேனைப்போன்றதாயிருக்கும்;[2] இந்த மதுமேஹமானது, தாதுக்கள் க்ஷீணிப்பதால் வாதம் பிரகோபமடைந்தும், மற்ற தோஷங்களால் வாதத்தின் மார்க்கம் மறைத்துத் தடுக்கப்பட்டும் ஆக இரண்டுவித காரணங்களாலும் ஸம்பவிக்கும்.[3] இதர தோஷங்களால் ஆவரணம் செய்யப்பட்ட அவ்வாயுவானது திடீரென்று ஆவரண தோஷங்களுடைய[4] குறிகளை விளங்கச்செய்யும்; இந்த நிலைமையிலுள்ள வாயு ஒருக்ஷணத்தில் க்ஷீணித்துப்போய், க்ஷணத்திற்கெல்லாம் மறுபடியும் விருத்தியாய், கிருச்சிர ஸாத்தியமாகும். 18—19½.

**பிரமேஹங்களுக்கெல்லாம் மதுமேஹம் என்கிற பொதுப்பெயர்.**

எல்லா மேஹங்களுமே சிகித்ஸையின்றி உபேக்ஷிக்கப்படுமானால், காலக்கிரமத்தில் மதுமேஹமாய் மாறுவதாலும், பெரும்பாலும் எல்லா மேஹங்களிலும் மூத்திரம் மதுவைப்போல் இறங்குவதாலும், மேஹங்களிலெல்

1. நீலம் - தெளிவான ஆகாயநிறம்; அதைப் போன்ற மேஹம் நீல மேஹமாம்.

2. காலம்-மையைப்போல் மங்கலான கறுப்பு; அது போன்றது கால மேஹமாம்.

3. ஹாரித்ரா-என்றால் மஞ்சள்; மஞ்சள் கரைத்த நீர்போன்றது ஹாரித்ரமேஹம் ஆகும்.

4. மஞ்ஜிஷ்டி-ஒருவித நிறப்பொருள்: அது போன்ற மேஹம் மாஞ்ஜிஷ்ட மேஹமாகும்.

5. மஜ்ஜா—என்பது எலும்புக்குள் அடங்கியிருக்கும் கொழுப்பு ஸம்பந்தமான ஏழாவது தாது; அது ஸம்பந்தமான அல்லது அதுபோன்றது "மஜ்ஜ மேஹம்" ஆகும்.

1. ஹஸ்தி—என்றால் யானை; அதைப்போல் மூத்திரவிஸர்க்கம் வெகு அதிகமாகச் செய்யப்படுமானால் "ஹஸ்திமேஹம்" எனப்படும்.

2. தேனைப்போல் அதிக இனிப்பாக இருக்குமாகையால் இது மதுமேஹம் எனப்படுகிறது.

3. தேஹத்தில் தாதுக்கள் க்ஷீணித்துவந்தால், வாததோஷம் பிரகோபிப்பது இயல்பு; வாததோஷம் தேஹத்தில் ஸஞ்சரிக்கும் மார்க்கங்கள் வேறுதோஷம் முதலியவற்றால் மறைக்கப்படுமானால், அல்லது அடைக்கப்படுமானால் அப்பொழுதும் வாதம் பிரகோபமடையும். "வாயோர்தாதுக்ஷயாத் கோபோ மார்கஸ்யாவரணேந ச" என்கிற பிராசீன வைத்தியாசாரியர்களுடைய கொள்கையின்படி இங்கே விவஹரிக்கப்படுகிறது.

4. ஆவரணதோஷங்கள் என்பதால், மார்க்கத்தை மறைக்கும் இதரதோஷங்களும் இவ்வியாதியில் ஸம்பந்தம் பெற்றதாய் அறிக.

லாம் தேஹத்தில் இனிப்பு அதிகரிப்பதாலும் பேஹங்கள் அனைத்துமே மதுமேஹம் என்கிற பெயரால் வழங்கப்படுகின்றன. 20, 21.

*கபப்பிரமேஹங்களின் உபத்திரவங்கள்.*

உணவு ஜீர்ணமாகாமற்போதல், அரோசகம், வாந்தி, அதிக நித்திரை, காஸம், பீநஸம் இவை கபப்பிரமேஹங்களில் ஸம்பவிக்கும் உபத்திரவங்களாகும். 22.

*பித்தப்பிரமேஹங்களின் உபத்திரவங்கள்.*

வஸ்தியிலும் லிங்கத்திலும் குத்தல் அல்லது வலியுண்டாதல், பீஜம் வெடித்துப்போதல், ஜ்வரம், அழற்சி, நாவறட்சி, புளித்த ஏப்பம், மூர்ச்சை, மலம் உடைந்து வெளியாதல் என்னும் இவை பித்தப்பிரமேஹங்களின் உபத்திரவங்களாம். 23.

*வாதப்பிரமேஹங்களின் உபத்திரவங்கள்.*

உதாவர்த்தம்,[1] கழுத்திலும் இருதயத்திலும் பிடிப்பு, சபலபுத்தி, வஸ்தி முதலியவிடங்களில் வலி, நித்திரையின்மை, உடல் சுஷ்கித்துப்போதல், காஸம், ச்வாஸம் இவை வாதப்பிரமேஹங்களின் உபத்திரவங்களாகும். 24.

*பிரமேஹ பிடகைகள் பத்து.*

பிரமேஹரோகங்களுக்கு ஏற்ற சிகித்ஸையைச்செய்யாமல் உபேக்ஷித்துவந்தால், ஸந்திகளின் மர்மஸ்தானங்களிலும், சதைபருத்த இடங்களிலும் அடியிற் குறிப்பிடப்படும் பத்துவிதமான பிடகைகள் என்னும் பிளவைக்கட்டிகள் உண்டாகும்; அவையாவன:-- சராவிகா, கச்சபிகா, ஜாலிநீ, விநதா, அலஜீ, மஸூரிகா, ஸர்ஷபிகா, புத்ரிணீ, விதாரிகா, வித்ரதி என்பனவாம். 25, 26.

*சராவிகா.*

ஓரங்களில் உயர்ந்தும், மத்தியப்பிரதேசத்தில் குழிவிழுந்தும், கறுஞ்சிவப்பு நிறமாகவும், ஏதேனும் திரவப்பொசிவுடன் கூடியதும், வலியை யுண்டுபண்ணுவதும், அகல் என்னும் கலத்தைப் போன்றதுமாயிருக்கும் சிலந்திக்கு சராவிகா என்று பெயர். 27.

*கச்சபிகா.*

ஆழ்ந்தப் பிரதேசத்தில் வலியை யுண்டுபண்ணுவதும், குத்தலுடையதும், அதிக ஆழமான பிரதேசங்களைப்பற்றியதும், பரிசிப்பதற்கு வழுவழுப்பானதும், ஆமையின் முதுகைப்போல் தோற்றுவதுமான சிலந்தி கச்சபிகா என்று கருதப்படும். 28.

*ஜாலிநீ.*

அசைவற்றதாகவும், கொடி கொடியாகத் தோற்றும்படி விரைகள் படர்ந்ததாகவும், ஸ்நிக்த்தமான துர்நீர்க்கசிவுகளை யுடையதாகவும், மிகவும் ஆழமாகப் புரையோடுந் தன்மையதாகவும், அதிக குத்தல்வலிகளை யுண்டுபண்ணுவதாகவும், நுட்பமான வெளித்வாரத்தை யுடையதுமான பிளவை ஜாலிநீ எனப்படும். 29.

*விநதா.*

ஆழமான பிரதேசத்தில் வலியும் துர்நீர்ச்சுரப்பும் பெற்றதாகவும், கறுநிறமாகவும், பூசிணைற்போலத் தாழ்ந்ததும், விசாலமுமாய் முதுகிலாவது வயிற்றிலாவது உண்டாகும் சிலந்தியை விநதா[1] என்பார்கள். 30.

*அலஜீ.*

அலஜீ[2] யென்னும் பிளவையானது வளர்ந்து எழும்பிவருகையில் சர்மத்தை எரிக்கும்; உண்டானவிடத்தில் சுற்றிலும் பரவும்; ஆகவே மிகத் துன்பந்தரக்கூடியது; சிவப்பும் கறுப்புங்கலந்த நிறமுடையது; அதிக நாவறட்சியை யுண்டுபண்ணும்; கொப்புளங்களையும், அழற்சியையும், மயக்கத்தையும், ஜ்வரத்தையும் உண்டுபண்ணும். 31.

*மஸூரிகா.*

அளவினாலும் உருவத்தினாலும் கடலைக்குத் துல்லியமாயிருப்பதான சிலந்தியானது மஸூரிகா[1] எனப்படும். $31\frac{1}{2}$.

1. உதாவர்த்தம்—இதன் விவரத்தை 25-வது பக்கம் டிப்பணியில் பார்க்க.

1. விநதா — ஆழ்ந்து தாழ்ந்த பிளவை யெனப் பொருள்.

2. அலஜீ—அநேகம் சிறிய சிவந்திகளால் சூழப்பட்டது.



*ஸர்ஷபிகா.*

கடுகின் அளவான உருவத்தையுடையதும், சீக்கிரம் பக்குவமாய் மஹத்தான வலியை யுண்டுபண்ணுவதும், கடுகைப்போன்ற அநேகம் கொப்புளங்களால் சூழப்பட்டதுமான சிலந்தியானது ஸர்ஷபிகா[2] எனப்படும். $32\frac{1}{2}$.

*புத்ரிணீ.*

மிகவும் சிறிய அநேகம் பிளவைகளால் சூழப்பட்ட பெரிய சிலந்தியானது புத்ரிணீ[3] யெனப்படுகிறது. 33.

*விதாரிகா.*

அமுக்கிருங்கிழங்குபோல வட்டமாகப் பருத்து, கடினமாகவுமுள்ள பிளவையானது விதாரிகா என்று கூறப்படும். $33\frac{1}{4}$.

*வித்ரதி.*

அடுத்துவரப்போகிற அத்தியாயத்தில் வித்ரதி யென்னும் பிளவையின் விஷயம் விரித்துக் கூறப்படும். $33\frac{3}{4}$.

*அதிக வேதனையும் வேதனைக்குறைவான வையுமான பிரமேஹ பிடகைகள்.*

முதலிற்கூறிய மூன்று பிளவைகளும், புத்ரிணியும், விதாரிகாவும் அதிக மேதஸ் உள்ளவனுக்கு உண்டாவதால், தாங்கக்கூடாதவேதனையுண்டுபண்ணுபவையாம். பித்தத்தினாலான மற்றப் பிரமேஹ பிடகைகளும் சொற்ப மேதஸ்ஸுள்ளவனுக்குப் பொறுக்கக்கூடிய வேதனையுள்ளவைகளாய் உண்டாகின்றன. அப்பிளவைகளில் அந்தந்த தோஷ ஸம்பந்தமான மேஹங்களுக்கு ஏற்றவாறு அந்தந்த தோஷமும் அதிகரித்திருக்கும். 34—$35\frac{1}{2}$.

*பிரமேஹபிடகைகளைப் போன்ற வேறு பிளவைகள்.*

மேதஸ் என்னும் தாது கோளாறடைந்திருந்தால், பிரமேஹம் இல்லாமற்கூட மேற்கூறிய பிளவைகள் உண்டாகின்றன. ஆனால் அப்பிளவைகள் ஓரிடத்தை நன்றாக ஆச்ரயித்து வெளிப்படையாகப் பருத்துக் கிளம்பும் வரையில் அவை உண்டாவதாகத் தெரியவருவதில்லை. 36.

*மேஹம் என்கிற பிரமையுண்டாக்கும்வியாதி.*

மேஹத்திற்குள்ள பூர்வரூபங்கள் காணாமலே மஞ்சள் நிறமாகவாவது செந்நிறமாகவாவது ஒருவனுக்கு சிறுநீர் வெளிவருமானால் அது மேஹரோகம் அல்லவென்றும் இரத்தபித்தம், என்றும் அறியவேண்டும். 37.

*மேஹத்தின் பூர்வ ரூபங்கள்.*

அதிக வியர்வையுண்டாதல், தேஹத்தில் ஒருவித நாற்றம் தோன்றுதல், அவயவங்கள் தளர்சியடைதல், படுக்கையில் சயனித்துத் தூங்குவதிலும் ஆஸநங்களில் அமர்வதிலும் மற்றும் அவைபோன்ற ஸுகங்களிலும் பற்றுதலாயிருத்தல், மார்பிலும் கண்களிலும் நாக்கிலும் செவிகளிலும் பசையினால் பூசப்பட்டதுபோன்ற உணர்ச்சி, அவயவங்கள் கனமாகப்போதல், மயிர்களும் நகங்களும் மிகவும் வளர்ந்துவிடுதல், குளிர்ச்சியை விரும்புதல், தொண்டையும் வாயும் சுஷ்கித்துப்போதல், வாயில் இனிய சுவையுண்டாதல், பாதங்களிலும் உள்ளங்கைகளிலும் அழற்சியேற்படுதல், மூத்திரத்தில் எறும்புகள் மொய்த்துக்கொள்ளுதல் இவை யாவும் மேஹரோகங்கள் உண்டாகப்போகின்றன வென்பதற்கு அறிகுறிகளாகும். 38, 39.

1. மஸூரம்—ஒருவித கடலை; அதைப்போன்ற பிளவை-மஸூரிகா.

2. ஸர்ஷபம்—கடுகு; அதைப்போன்ற சிலந்தி.

3. புத்ரிணீ—தனக்குப் புத்திரனைப்போன்ற சிறிய சிலந்திகளுடன் கூடிய பெரிய சிலந்தி.

மதுரமாகவும், பசையுங்கூடியதும், ஆகவே தேனைப்போ லிருப்பதுமான பிரமேஹத்தைக்கண்டு, அது தர்ப்பணம் என்கிற போஷணம் மிதமிஞ்சி செய்யப்பட்ட தன் காரணமாய் கபத்தினால் உண்டானதா வென்றும், அல்லது இதரதோஷங்கள் க்ஷீணித்துப் போய்வாதம் பிரகோபமடைந்ததால் ஸம்பவித்ததாவென்றும் ஆக இவ்ரண்டுவித மான விஷயங்கள் விசாரத்திற்கு இடமுண்டாக்கும். 40.

மேஹத்தில் இரண்டுவித விசேஷங்கள்.

கபமேஹங்களும், பித்தஸம்பந்தமான மேஹங்களும் எல்லாப் பூர்வரூபங்களோடும் உண்டானால், அவை சிகித்ஸைக்கு வசப்படமாட்டா ; பித்தத்தினால் உண்டாகும் மேஹரோகங்களில் பூர்வரூபங்கள் இல்லாமலிருந்தாலும் அவை யாப்யங்களாகும் ; மேஹரோகங்களில், முக்கியமாய் பித்தவாதஸம்பந்தமான மேஹங்களில் மேதஸ் அதிகமாகக் கெட்டுப்போகாமலிருந்தால், பிரமேஹங்கள் சிகித்ஸைக்கு எளிதில் வசப்படக் கூடியன. 41.

பிரமேஹத்தில் ஸாத்தியா ஸாத்திய நிலைமைகள்.

## பதினொன்றாவது அத்தியாயம்.

பிறகு வித்ரதி-வ்ருத்தி-குல்மநிதாநம்.[1] என்னும் அத்தியாயம் விவரிக்கப்படும் :—

வித்ரதியின் காரணங்களும் பிரிவுகளும்.

பழகிப்போனவையும், அதிக உஷ்ணமானவையும், ரூக்ஷமானவையும், உலர்ந்தவையும், அழற்சியுண்டுபண்ணுபவையுமான உணவுகளாலும், மேடுபள்ளமான படுக்கைகளில் படுத்துப் புறளுவதாலும், மற்றும் இரத்தத்தைக் கெடுக்கக்கூடிய அந்தந்த காரணங்களாலும் கெட்டுப்போன சர்மமென்ன - மாம்ஸபேசிகளென்ன - மேதஸ் என்ன - எலும்புகளென்ன - ஸ்நாயுவென்ன - இரத்தமென்ன-கண்டரைகளென்ன-இவற்றை ஆதாரமாகப்பற்றியதாய் அதிக ஆழமான ஸ்தாநங்களில் பரவி, விசேஷ வேதனையைக் கொடுத்துக்கொண்டு, வட்டமாகச் சிறிது பிரதேசத்திற் பரவியாவது, அதிக விசாலமாக பரவியாவது யாதொரு சிலந்தி உண்டாகின்றதோ, அதுதான் வித்ரதி எனப்படுகின்றது. வாத - பித்த - கபங்களால் தனித்தனியாகவும், மூன்றும் சேர்ந்து ஸந்நிபாதமாகவும், இரத்த தோஷத்தைப் பெற்றும், வெளியிலிருந்து அடிதாக்குவதைக் காரணமாகக் கொண்டும் ஆக ஆறுவிதமாக வித்ரதி உண்டாகும். இந்த வித்ரதிகள் உட்புறத்து அவயவங்களையாவது, வெளிப்புற அவயவங்களையாவது ஆச்ரயித்து முறையே அந்தர்வித்ரதியென்னும் பெயராலாவது பாஹ்யவித்ரதியென்னும் பெயராலாவது வழங்கப்படுமாறு உண்டாகின்றன. 1—3.

பாஹ்யவித்ரதியும் அந்தர்வித்ரதியும்.

அவற்றுள் பாஹ்ய வித்ரதியானது, தேஹத்தின் வெளிப்புற அவயவங்களில் ஆங்காங்கு ஸம்பவிக்கக்கூடும் ; இது கடுந்துன்பம் விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கும். முடிகளுண்டாய் உயர்ந்து பருத்துக்காணும் அந்தர்வித்ரதியானது பாஹ்யவித்ரதியினும் அதிக துன்பந்தரக் கூடியதாகவும், அதிகஆழத்தில் உண்டாய்,குல்மத்தைப்போல் திரண்டும், புற்றுபோலக் குவிந்துயர்ந்தும், அக்னி அல்லது சஸ்திரங்களைப்போல் சீக்கி

1. வித்ரதி-விப்புருதி யெனப்படும் சீழ்க்கட்டி ; வ்ருத்தி-பீஜம் பலகாரணங்களால் வீங்கிப்போதல் ; குல்மம்-குடலைப்பற்றிய பிரஸித்தமான வியாதி ; இவற்றைப்பற்றிய இலக்ஷணாதிகளை விவரிக்கும் அத்தியாயம்.



ரத்தில் பிராணாபாயம் விளைவிப்பதுமாய் உண்டாகும் ; இந்த அந்தர் வித்ரதியானது நாபி, வஸ்தி யென்னும் மூத்திரப்பை, யக்ருத் என்னும் கல்லீரல், ப்லீஹம் அல்லது மண்ணீரல், க்லோமா என்கிற கணையம், இருதயம், இரைப்பை, தடையிடுக்குகள், விருக்கங்கள், குடலின் இறுதியிலுள்ள அபாநஸ்தலம் இவற்றில் எதிலாவது உண்டாகும். 4—5¼.

வாத வித்ரதி.

அவற்றுள் வாதத்தினால் உண்டாகும் வித்ரதியானது அதிக கடுமையான வலியையுண்டுபண்ணும்; கறுஞ்சிவப்பாயிருக்கும் ; அது உண்டாவதற்கும் வளர்ந்து பழுப்பதற்கும் வெகுநாள் செல்லும்; உருவத்தில் காடுமுரடாயிருக்கும்; குத்தலும், வலியும், தலைச்சுற்றலும், வித்ரதியுள்ள விடத்தில் விம்மலும், துர்நீர்ப்பெருக்கும், வித்ரதி மற்றவிடங்களில் பரவுவதும், விண் என்கிற சப்தத்தை யுண்டுபண்ணுவதுமாயிருக்கும். 6½.

பித்த வித்ரதி.

பித்தத்தினால் உண்டாகும் வித்ரதியானது சிவந்து இரத்தமாகவோ கறுநிறமாகவோ இருக்கும்; நாவறட்சியையும், மயக்கத்தையும், ஜ்வரத்தையும், எரித்தலையும் உண்டுபண்ணும் ; சீக்கிரத்தில் உண்டாய் பழுத்துவிடும். 7¼.

கப வித்ரதி.

கபத்தினால் உண்டாகும் வித்ரதியானது தினவுள்ளதாயிருக்கும் ; வாந்தி யுண்டாவதுபோன்ற உணர்ச்சியையுண்டுபண்ணும்; குளிர்ச்சியதிகரிக்கும் ; வித்ரதியுண்டான இடம் விறைத்துக்கொள்ளும் ; கொட்டாவியுண்டாகும் ; அரோசகமும், குருத்தன்மையும் ஸம்பவிக்கும் ; இது புறப்பட்டு வளர்வதற்கும் பழுப்பதற்கும் வெகுநாட்கள் செல்லும். 8¼.

ஸந்நிபாத வித்ரதி.

வாத-பித்த-கபங்கள் சேர்ந்து உண்டாகும் ஸந்நிபாத வித்ரதியில் மூன்று தோஷங்களாலும் தனித்தனியே உண்டாகும் வித்ரதிகளுக்குக் கூறிய இலக்ஷணங்கள் யாவும் காணப்படும். 8½.

பாஹ்ய-அந்தர் வித்ரதிகளில் வாதாதி பேதங்கள்.

இவற்றுள் பாஹ்யவித்ரதிகளுக்கும், அந்தர் வித்ரதிகளுக்கும் வாதாதி தோஷ ஸம்பந்தமான இலக்ஷணங்களை வைத்தியர் தமது புத்தித்திறமையைக் கொண்டு பகுத்தறிந்துகொள்ளவும். 9.

இரத்த வித்ரதி

இரத்தத்தின் கோளாறால் உண்டாகும் வித்ரதியானது கறுத்த கொப்புளங்களால் சூழப்பட்டிருக்கும்; அது ஒருவாறு மங்கல்நிறமான கறுப்பாயிருக்கும் ; கடுமையான அழற்சியும் வலியும் ஜ்வரமும் உண்டாகும் ; பித்தவித்ரதியின் குறிகள் காணப்படும் ; இவை இரத்த ஸம்பந்தமான பாஹ்ய வித்ரதியின் குறிகளாகும் ; இரத்த ஸம்பந்தமான அந்தர் வித்ரதியிலும் முற்கூறிய குறிகள் ஸம்பவிக்கும் ; ஆனால் அவ்விதமான அந்தர்வித்ரதியானது ஸ்த்ரீகளுக்குத்தான் உண்டாகும்.[1] 10.

க்ஷதவித்ரதி.

ஆயுதங்கள் முதலியவற்றால் அடியுண்டாலும், அல்லது விரணத்தில் அபத்தியமாயிருந்தாலும் வாயுவால் நாற்புறமும் வீசப்பட்ட விரணத்தின் உஷ்ணமானது இரத்தத்துடன்கூட பித்தத்தையும் தூண்டி, பித்தத்தினாலும் இரத்தத்தினாலும் உண்டாகிற வித்ரதிகளின் குறிகளையுடையதும், அநேகவிதமான உபத்திரவங்களோடு கூடியதுமான ஒருவித வித்ரதியை உண்டாக்கும். இது க்ஷத வித்ரதி[2] யெனப்படும். 11, 11½.

1. ஸ்த்ரீகளுக்கு உண்டாகும் மாதவிடாய் தடையுண்டு அச்சோணிதம் கருப்பையில் திரண்டு வித்ரதியை உண்டாக்கும் என்பது கொள்கை. ஆகவே அந்த அந்தர்வித்ரதி புருடருக்கு உண்டாகாது எனக் கூறப்பட்டது.

2. க்ஷத வித்ரதி—காயம்பட்டு உண்டாகும் விப்புருதி.

*வித்ரதிகளில் அவற்றிற்கு ஆச்ரயமான அவயவங்களின் தன்மைக்கேற்ற இலக்ஷணங்கள்.*

அவற்றுள் எந்தெந்த வித்ரதி எவ்வெவ் விடத்தை ஆச்ரயித்து உண்டாகின்றதோ அவ்வவ்விடத்திற்குத் தகுந்த மாதிரியாய் உபத்திரவங்களும் ஸம்பவிப்பதாகக்கருதப்படுகிறது. வித்ரதியானது நாபியினுட்புறத்தில் உற்பத்தியானல் விக்கல் உண்டாகும். வஸ்தியினுள் உற்பத்தியானல் மூத்திரமானது மிகக் கஷ்டப்பட்டும், துர் நாற்றத்துடன் கூடியதாகவும் வெளிவரும். யக்ருத் என்னும் கல்லீரலில் உற்பத்தியானல் ச்வாஸம் வெகு கஷ்டப்பட்டு வெளிவிடப்படும். ப்லீஹம் என்கிற மண்ணீரலில் வித்ரதி புறப்பட்டால் மூச்சுவாங்குவது தடைப்படும். க்லோமா என்னும் கணையத்தில் வித்ரதியுண்டானல் நாவறட்சியும், தொண்டைக்கட்டலும் ஏற்படும். இருதயத்தில் வித்ரதிபுறப்பட்டால் எல்லா அங்கங்களிலும் பிடிப்பு உண்டாகும்; மேலும் மயக்கமும், தமகச்வாஸமும், காஸமும், இருதயத்தில் இடிக்கப்படுவதுபோன்ற வேதனையும் உண்டாகும். வயிற்றினுள் புறப்படுமானல் வயிற்றிலும், விலாப்பக்கங்களிலும், அவற்றின் இடைகளிலும், தோள்களிலும் கடும் வலியுண்டாகும்; வயிற்றினுள் பொருமலுடன் கூடிய ஒருவித சப்தமும் தோன்றும். துடையிடுக்குகளில் உண்டானல் துடைகள் அசைக்கக் கூடாமலாய்விடும். வ்ருக்கங்கள் என்கிற மூத்திரக் கிரந்திகளில் உண்டானல் இடுப்பும் பிருஷ்டபாகங்களும் அசைக்க முடியாமலிருக்கும். ஆஸநத்வாரத்தினுள் உண்டானல் விலாப்பக்கங்களில் வலியும், அபாநவாயுவுக்குத் தடங்கலும் ஏற்படும்.[1] 13—15½.

*வித்ரதியின் ஆம-பக்வ- விதக்த்த ஸ்வரூபங்கள்.*

அவ்வித்ரதிகளுக்கு ஆமமான நிலைமையென்ன,[1] பக்வமான நிலைமையென்ன,[2] விதக்த்தமான நிலைமையென்ன,[3] இவற்றின் தன்மைகள் வீக்கத்திற் கூறிய[4] இலக்ஷணங்களைப் போன்றவை யென்றே அறிக. 16.

*அந்தர் வித்ரதிகளிலிருந்து கழிவுகள் வெளிவரும் வழிகள்.*

நாபிக்கு மேற்புறங்களில் உண்டான வித்ரதிகள் பழுத்து உடைந்தால் அக்கழிவுகள் வாயின் மூலமாய் வெளியாகும். நாபிக்குக் கீழே உண்டான வித்ரதிகள் பக்வமாய் உடைந்தால் குதமார்க்கத்தினுல் கழிவுகள் வெளிப்படும். நாபியிலேயே உண்டான வித்ரதியின் கழிவுகள் இரண்டு மார்க்கங்களாலும் வெளியாகும். 16¾.

*வித்ரதியின் கழிவுப்பொருட்களின் தன்மைகளால் தோஷ பேதங்களை அறிதல்.*

வித்ரதியிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்களின் தன்மைகளைக் கவனித்து, அததற்குத் தகுந்தவாறு விரணங்களுக்குக் கூறப்போகிறபடியே[5] வாதாதி தோஷங்களுடைய ஸம்பந்தத்தையும் அறியலாம். 17¼.

*வித்ரதிகளில் அஸாத்தியமானவை.*

அவற்றுள் ஸந்நிபாத ஸம்பந்தமான வித்ரதியும், இருதயம் - நாபி-வஸ்தி இவற்றில் உண்டாய் நன்றாகப் பழுத்திருக்கும் வித்ரதியும், வெளியிலோ உட்புறமாகவோ உடைந்த அவ்வித வித்ரதியும், உட்

1. இங்கு குறிக்கப்பட்டுள்ள நாபி முதலிய பத்து அவயவங்களும் தேஹத்தின் உட்புறத்தில் அடங்கினவை ; ஆகவே இவற்றை ஆச்ரயித்து உண்டாகும் வித்ரதிகள் யாவும் அந்தர் வித்ரதிகளாம்.

1. ஆமம்—214-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

2. பக்வநிலைமை —பழுத்தநிலைமை.

3. விதக்த்த நிலைமை—மிதமிஞ்சிப் பழுத்துப் பதனழியும் நிலைமை.

4. 214-வது பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ள வீக்கம் ஸம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க.

5. விரணப்ரதிஷேதம் என்கிற உத்தரஸ்த்தானத்தின் அத்தியாயத்தில் 5-வது முதல் 10½ ச்லோகம் வரையில் விவரம் காண்க.



புறத்தில் உடைந்து முகத்திலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்தும் வித்ரதியும், மிக்க மெலிந்த தேஹமுள்ளவனுக்கு உண்டான வித்ரதியும், உபத்திரவங்களோடு கூடிய வித்ரதியும் சிகித்ஸைக்கு வசப்படாதவையாம். 18½.

*ஸ்தநவித்ரதி.*

இவ்விதமே பிரஸவித்திருக்கிற அல்லது கர்ப்பிணிகளாயுள்ள ஸ்த்ரீகளுக்கு ஸ்தநங்களில், ஊதி விசாலித்த ஸிரைகளை ஆதாரமாகக்கொண்டு கெட்டியான வீக்கம் ஒன்று உண்டாகும். ஸ்தநம் பாலுள்ளதானலும், பாலில்லாததானலும் அதில் பாஹ்ய வித்ரதியின் குறிகளுக்கு ஏற்ற இலக்ஷணங்களோடு இவ்வித்ரதி உற்பத்தியாகிறது. கன்னிகைகளுடைய ஸ்தநங்களில் ஸிரைகளுடைய முகங்கள் மிகவும் நுட்பமாயிருப்பதால் அவர்களுக்கு இவ்வித்ரதி யுண்டாவதில்லை. 19—20½.

## வ்ருத்தி.[1]

*வ்ருத்தியின் பொது விஷயம்.*

வாயுவானது வயிற்றில் மேலேவழி தடுக்கப்பட்ட, அதனல் பிரகோபமடைந்து, வீக்கத்தையும் வலியையும் உண்டு பண்ணிக்கொண்டு அசைந்து, வங்க்ஷணம் என்கிற துடையிடுக்கின் உட்புற வழியாய், பீஜகோசங்களுக்குள் சென்று, அங்குள்ள வித்துகளுக்குச் செல்லும் தமனிகளை அழுத்தி வருந்தச்செய்து, அக்கோசங்களில் வ்ருத்தியை யுண்டு பண்ணும். மூன்று தோஷங்களால் தனித்தனியாகவும், இரத்தத்தினலும், மேதஸ் என்னும் கொழுப்பாலும், மூத்திரத்தினலும், அந்த்ரம் என்னும் குடல் இறங்குவதாலும் ஆக ஏழு முகாந்தரங்களால் வ்ருத்தியென்னும் ரோகம் உண்டாகின்றது. மூத்திர வ்ருத்தியும், அந்த்ர வ்ருத்தியுங்கூட வாயுவாலேயே உண்டாகின்றன வாயினும், ஸாதாரணமான இலக்ஷணங்களைக்கொண்டு வேறு முகாந்தரங்களால் உண்டாவதாகக் கூறியது உபலக்ஷணமாகும். 21—23.

*வாதவ்ருத்தி.*

வாதஸம்பந்தமான வ்ருத்தியில், பீஜகோசங்களைப் பரிசிக்கும்போது காற்று நிரம்பிய துருத்தியைப் போன்றதாய் உணரப்படும்; ரூக்ஷமாகவும், திடீரென்று வலியையுண்டு பண்ணுவதாகவும் இருக்கும். 23½.

*பித்தவ்ருத்தி.*

பித்த ஸம்பந்தமான வ்ருத்தியில் பீஜகோசம் நன்றாகக் கனிந்த அத்திப்பழத்திற்கு ஒப்பானதாகவும், அழற்சியோடும் சூட்டோடும் கூடியதாகவும், சமைக்கப்படுவதுமான வேதனையுள்ளதாகவும் இருக்கும். 24.

*கப வ்ருத்தி.*

கபத்தினல் உண்டாகும் வ்ருத்தியில் பீஜகோசம் அதிக குளிர்ச்சியுள்ளதாகவும், குருவாகவும், ஸ்நிக்த்தமாகவும், தினவு உள்ளதாகவும், கடினமாகவும், சொற்ப நோவுள்ளதாகவும் இருக்கும். 24½.

*இரத்த வ்ருத்தி.*

இரத்த தோஷத்தினல் உண்டாகும் வ்ருத்தியில் பீஜகோசத்தில் கறுத்த கொப்புளங்கள் வியாபித்திருக்கும்; பித்த ஸம்பந்தமான வ்ருத்தியின் இலக்ஷணங்களும் இதில் காணப்படும். 25.

*மேதோ வ்ருத்தி.*

கொழுப்பு அதிகரிப்பதால் உண்டாகும் வ்ருத்தியில் கபவ்ருத்தியின் குறிகள் காணப்படுவதோடு, மிருதுவாகவும், பனம்பழம் போன்றதாகவும் பீஜ கோசம் பருத்துக் காணும். 25½.

*மூத்திர வ்ருத்தி.*

மூத்திரத்தை அடக்கும் வழக்கமுள்ளவனுக்கு மூத்திரவ்ருத்தி யென்பது உண்டாகும்; அதில் பீஜகோசமானது நடக்கும்போது ஜலம் நிரம்பிய துருத்தியைப்போல் குலுங்கியசையும் ; மிருதுவாகவும் வலியுடன் கூடியதாகவும் இருக்கும்; நீர்ச்சுருக்கு உண்டாகும்; பீஜங்களின் அடிப்புறங்களில் வலயம் போன்ற குறியும் காணப்படும். 26, 27.

1. வ்ருத்தி—பீஜகோசம் என்னும் அண்டம் பருத்து அல்லது வீங்கிப்போகும் பலவித வியாதிகள்.

*அந்த்ர வ்ருத்தி.*

வாத தோஷத்தைப் பிரகோபிக்கச் செய்யும் ஆஹாரங்களாலும், குளிர்ந்த ஜலத்தில் முழுகுவதாலும், வேகங்களை அடக்குவது அல்லது பலாத்காரமாய் அவ்வேகங்களை ஏவுவது என்னும் இயற்கைக்கு ஒவ்வாத காரியங்களாலும், பெருஞ்சுமைகளைச் சுமப்பதாலும், நெடுந்தூரம் வழி நடப்பதாலும், விஷமமாக அங்கங்களை உபயோகித்து வேலைகளைச் செய்வதாலும், மற்றும், அதிர்ச்சியுண்டு பண்ணும் காரியங்களாலும் பிரகோபமடைந்த வாயுவானது எப்பொழுது க்ஷுத்ராந்த்ரம் என்கிற சிறு குடலின் ஒரு பாகத்தைச் சுருக்கி முறுக்குண்டுபண்ணி, அது இருக்க வேண்டிய ஸ்தானத்திலிருந்து கீழே செலுத்துகின்றதோ அப்பொழுது துடையிடுக்கில் கிரந்தியைப் போன்ற வீக்கத்தை உண்டுபண்ணும். இவ்விதமான அண்டவ்ருத்தியை ஏற்ற பரிஹாரமின்றி உபேக்ஷித்து வந்தால், வாயுவானது அவ்வவயவத்தில் விம்மலையும், வலியையும், பிடிப்பையும் உண்டுபண்ணும; பீஜகோசத்தை மெதுவாக அழுத்தினால் ஒருவித சப்தத்தோடு மேல் நோக்கி குடல் உட்சென்றுவிடும்; அதை அழுத்தாமல் விட்டவுடனே பீஜ கோசத்தைப் பெருக்கச்செய்து கொண்டு மறுபடியும் குடல் கீழே இறங்கிவிடும். வாத வ்ருத்திக்குத் துல்லியமான குறிகளையுடைய இந்த அந்த்ர வ்ருத்தியானது ஸாதாரண சிகித்ஸைக்கு வசப்படாத அஸாத்திய வியாதியாகும். 28-30½.

## குல்மம்.[1]

*குல்மத்தின் பொதுக் குறிகள்.*

ரூக்ஷமாகவும், கறு நிறமாக அல்லது செந்நிறமாகவும் காணப்படும் நால்வலைகளைப் போன்ற விரைகள் என்னும் இரத்தக் குழாய்களால் சூழப்பட்ட குல்மம் என்னும் வியாதி யுண்டாகும். 31.

*குல்மங்கள் எட்டுவிதம்.*

குல்மரோகம் எட்டு விதம். அதாவது— வாத-பித்த-கபங்களால் தனித்தனியே மூன்று விதமான குல்மங்களும், த்வந்த்வ தோஷங்களால் மூன்று குல்மங்களும், ஸந்நிபாதத்தினால் ஒரு குல்மமும் ஆக ஏழு குல்மங்கள் உண்டாகின்றன; ஸ்த்ரீகளுக்கு மாதவிடாய் ஸம்பந்தமான உதிரதோஷத்தினால் எட்டாவதான குல்மம் உற்பத்தியாகும். 32.

*குல்ம - ஸம்ப்ராப்தியும் பூர்வ ரூபமும்.*

ஜ்வரம், வாந்தி, அதிஸாரம் முதலியவற்றாலும், வமநம் முதலான சிகித்ஸைகளாலும் இளைத்துப் போயிருப்பவனுக்கும், வாயுவைப் பிரகோபிக்கச் செய்யும் உணவுகளைப் புஜிப்பவனுக்கும், பசியுள்ளவன் குளிர்ந்த ஜலத்தைக் குடித்துவிட்டு உடனே அன்னத்தைச் சாப்பிடுபவனுக்கும், இலங்கநமிருப்பவனுக்கும், தேஹத்திற்கு அதிர்ச்சியுண்டு பண்ணக்கூடிய நீந்துதல்முதலிய வேலைகளைச் செய்பவனுக்கும், வாந்தியுண்டாகாமலிருக் கையில் பலாத்காரமாய் வாந்தியுண்டாவதற்கு முயல்பவனுக்கும், தானே வெளியாகப் போகிற அபாநவாயு முதலியவைகளை வலுவில் அடக்குபவனுக்கும், ஸ்நேஹ சிகித்ஸையையும ஸ்வேத சிகித்ஸையையும் செய்து கொள்ளாமலே சோதநம் என்னும் வமந-விரேசநாதிகளைச் செய்து கொள்பவனுக்கும், சோதந சிகித்ஸை செய்து கொண்டபிறகு உடனே விதாஹியென்னும் குணத்தை அல்லது ஸ்யந்தநம் என்னும் குணத்தையாவது பெற்றுள்ள உணவுகளை உபயோகிப்பவனுக்கும் வாததோஷம் முக்கியமாய் மேலோங்கிநிற்க மற்ற தோஷங்களும் தனித்தனியே பிரகோபமடைந்தோ, அல்லது இரண்டிரண்டாகப் பிரகோபித்தோ, மூன்றும் ஒருமிக்க விருத்தியடைந்தோ, இரத்தமும் இவற்றோடு பிரகோபித்து கோளாறடைந்தோ, மஹாஸ்ரோதஸ் என்னும் குடலை மேற்கூறிய தோஷங்கள் ஆதாரமாகப் பெற்று, கீழும் மேலும் வழிகளை மறைத்து, மேலும் கீழுமாய் ஏறியிறங்கக்கூடியதும, பரிசித்து உணரக்கூடியதும், கிரந்தியைப் போன்ற உருவமுடையதுமான குல்மம் என்கிற வியாதியை உண்டாக்குகின்றன; இந்த வியாதிக்குப் பூர்வ ரூபமாய் சூலையென்னும் வயிற்றுவலி யுண்டாகும். 33-37½.

1. குல்மம் என்றால் [illegible] என்பது பொருள்; பலவிதமான தோஷங்களைக் [illegible] கொண்டு அநேகம் நாடி நரம்புகளால் [illegible] கொள்ளப்பட்ட தாதுவை ஆச்ரயித்த இவ்வியாதி ஒருவித புதர்போன்றதாயிருப்பதைக் [illegible] குல்மம் என்று பெயரிடப்பட்டதென்று அறிக. இது ஸாதாரணமாய் குடலுக்குள்ளேயே ஸம்பவிக்கும் வியாதி.

162069
500 008